
அன்பான விநாயகர்

இந்து சமயத்தின் நேயமான
ஆனைமுகக் கடவுள்



உலகில் இருக்கும் பல்வேறு கலாச்சாரங்களில் முதன்மையான விண்ணுலக தெய்வமாகவும், கலை மற்றும் அறிவியலின் காப்பாளனாகவும் இருக்கும் தயாள குணமுள்ள தர்மத்தின் தலைவனைப் பற்றிய ஒரு பயனுள்ள புத்தகம்

சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி



அன்பான விநாயகர்

இந்து சமயத்தின் நேயமான
ஆனைமுகக் கடவுள்

प्रेमवान् गणेशः
सनातनधर्मवल्लभो
गजाननमहादेवः प्र

சனாதன தர்ம வல்லபோ
கஜானன மகாதேவ :



மூன்றாவது பதிப்பு, 2019

பதிப்புரிமை © 2000
சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

லவிங்க் கணேஷா: இந்துயிசம்ஸ் என்டியரிங்க் எலிஃபண்ட்-பேஸ்ட் காட் (Loving Gaṇeśa: Hinduism's Endearing Elephant-Faced God) புத்தகத்தின் முதல் ஆங்கிலப் பதிப்பு 1996 ஆம் ஆண்டு இமாலயன் அகாடெமி மூலம் பிரசுரிக்கப்பட்டது. அதன் இரண்டாவது பதிப்பு 2008 ஆண்டும், மூன்றாவது பதிப்பு 2019 ஆம் ஆண்டும் பிரசுரிக்கப்பட்டன. அனைத்து உரிமைகளும் காப்புடைமையானவை. ஆன்மீக பாதையில் இருக்கும் மற்ற அன்பர்களுடன் இந்த புத்தகத்தை பகிரலாம் என்றாலும், பதிப்பாளரிடம் இருந்து எழுத்து வடிவத்தில் முன் அனுமதி பெற்ற பிறகே பிரதி செய்யவேண்டும். சைவ சித்தாந்த யோக சமூகத்தின் *சந்நியாசி சுவாமிகள்* மூலம் வடிவமைப்பு, டைப்செட் மற்றும் வரைபடங்கள் துணையுடன் விளக்கப்பட்டது மற்றும் இமாலயன் அகாடெமி, 107 ககோலலேலே சாலை, காபா, ஹவாய் 96746-9304 USA மூலம் வெளியிடப்பட்டது. www.HimalayanAcademy.com.

பதிப்பாளர்
இமாலயன் அகாடெமி
யு.எஸ்.ஏ.

மலேசியாவில் ஏ. செல்வம் மூலம் அச்சிடப்பட்டது

ISBN: 978-1-934145-78-4 (அச்சுப் பதிப்பு)
ISBN: 978-1-934145-79-1 (மின்னூல்)

வரைப்பட விளக்கங்கள்

அட்டைப்பட ஓவியம்: ஓவியர் எஸ். இராஜம் நம்மை அழைத்துச் செல்லும் ஒரு தென்னிந்திய கோயிலில், பக்தர்கள் விநாயகரின் அருளை வேண்டி நிற்கிறார்கள். சிலர் நைவேத்திய பொருட்களை கொண்டு வருகிறார்கள், மற்றவர்கள் நமஸ்காரம்

செய்கிறார்கள் அல்லது தங்களுக்கு பிரியமான கடவுளை புகழ்ந்து பாடி புனிதமான மந்திரங்களை ஓதுகிறார்கள்.

சிறிய தலைப்புப் பக்கம்: விநாயகர் மற்றும் அவரது சகோதரனான முருகனையும் ஒன்றாக ஏ. மணிவேல் வரைந்து இருக்கிறார்.


முன்புறம் மற்றும் பின்புற இறுதித் தாள்கள் வரைந்து இருப்பது எஸ். ராஜம்

அன்பான விநாயகர்

இந்து சமயத்தின் நேயமான
ஆனைமுகக் கடவுள்

प्रेमवान् गणेशः
सनातनधर्मवल्लभो
गजाननमहादेवः


சத்குரு சிவாய
சுப்பிரமுனியசுவாமி



சூசிபத்ர

सूचिपत्र

பொருளடக்கம்



சமர்ப்பணம்
பொருளடக்கம்
முன்னுரை
ஆசிரியர் அறிமுகம்
முகவுரை: விநாயகர் பால் குடித்த அதிசயம்

1. விநாயக பெருமானின் இயல்பு
2. விநாயக பெருமான் அனுப்பிய கடிதங்கள்
3. விநாயகரின் ஐந்து சக்திகள்
    ஐந்து பாதாளங்கள்
    விநாயகரின் ஐந்து சக்திகள்
4. அறிவியலிலும் அதை கடந்த நிலையிலும்
5. விநாயகரின் உருவங்கள்
    விநாயகரின் முப்பத்தி இரண்டு உருவங்கள்
    விநாயகர் உருவப்படம்
6. புனிதமான சின்னங்கள்
7. சுவஸ்திக் சின்னம்

8. ஓம் கணேஷா
    முப்பத்தி ஏழு ஓம்காரங்களின் வரைப்படத் தொகுப்பு
9. பிருகஸ்பதி
10. ஜபம்
    விநாயகர் மந்திரங்களின் ஒரு விஷேசத் தொகுப்பு
11. விநாயகர் பிரார்த்தனைகள்
    ஸ்ரீ கணேஷ உபநிடதம்
    மகா கணேஷ பஞ்சரத்தின ஸ்தோத்திரம்
    விநாயகர் ஆவாகனம்
    போஜன மந்திரம்
    சாந்தி மந்திரம்
    தூபமந்திரம்
12. விநாயகர் வழிபாடு
    விநாயகர் பூஜை
13. உலகம் முழுவதும்
    விநாயகர் தரிசனங்கள்
    மகாராஷ்ட்ராவில் பிரபலமான கடவுள்
    உலகெங்கும் பிரபலமாக இருக்கும் விநாயகர் கோயில்கள்
14. கேள்வி பதில்கள்
15. புனிதமான பண்டிகைகள்
    விநாயகர் சதுர்த்தி
    விநாயகர் விசர்ஜனம்
    விநாயக விரதம்
    மார்கழி பிள்ளையார்
    பஞ்ச கணபதி
16. இனிய நெய்வேத்திய பொருட்கள்
17. தவப்பெண் ஔவையார்
18. பிள்ளையார் துதிப்பாடல்கள்
19. விநாயகர் பஜனை
    மகாதேவர்களை போற்றிப் பாடுதல்: ஆவாகனம் செய்வதற்கான
        இந்து பாடல்கள்
    விநாயகர் பாடல்களின் ஒரு விசேஷமான தொகுப்பு
        கீதை
        தியானம்
        பஜனை
        நற்சிந்தனை
20. விநாயகர் பற்றி குறுக்கெழுத்து புதிர்
    பாரத நாட்டு பாதுகாவலர் பற்றிய குறுக்கெழுத்து புதிர்
21. இந்து மதம்: உலகின் தலைசிறந்த மதம்
22. ஒரு இந்துவாக மாறுவது எப்படி
    சொற்களஞ்சியம்

சமஸ்கிருத உச்சரிப்பு
முடிவுரை
விநாயகர் தொடர்பான கூடுதல் புத்தகங்கள்
புத்தகக் குறிப்பு
ஆசிரியர் குறிப்பு





முன்னுரை

Pūrvaraṅga

பூர்வரங்க

நாம் வாழும் இந்த இணையதள யுகத்தில், விநாயகப் பெருமானைப் பற்றி இணையத்தில் ஏராளமான தகவல்கள் உள்ளன. "கணேஷா" என்று கூகிளில் தேடும் போது, அது 169 மில்லியன் முடிவுகளை வழங்குகிறது. உதாரணமாக அவரைப் பற்றி குறிப்பிடும் ஒரு விக்கிப்பீடியா கட்டுரை: "கணபதி அல்லது கணேஷா என்று வேறு பல பெயர்களாலும் விநாயகர் அழைக்கப்படுகிறார். அவர் இந்து சமயத்தின் முப்பத்தி முக்கோடி தேவர்களில் மிகவும் பிரபலமாகவும், மக்கள் அதிகம் வழிபடும் தெய்வமாகவும் இருக்கிறார். அவரது திருவுருவம் இந்தியா, இலங்கை, பிஜி, தாய்லாந்து, பாலி (இந்தோனேசியா), வங்கதேசம் மற்றும் நேபாளம் முழுவதும் காணப்படுகிறது. விநாயகர் வழிபாடு சமணர்கள் மற்றும் பௌத்தர்கள் மத்தியிலும் பரவியிருக்கிறது," என்று தொடங்குகிறது.

இணையத்தில் ஏராளமான தகவல்கள் பரவியிருக்கும் போது, எனது குரு எழுதிய "அன்பான விநாயகர்" புத்தகத்தில் பிரத்யேகமாக என்ன இருக்கிறது? "ஒரு உண்மையான இருப்பாக இருக்கும் விநாயகர்" என்று கூகிளில் தேடும் போது, அது வழங்கும் 225 குறிப்புக்கள் தெள்ளந்தெளிவாக இருக்கிறது. கூகிள் வழங்கும் குறிப்புக்கள் பெரும்பாலும் இந்த புத்தகத்தில் இருந்து பெறப்பட்டுள்ளன. இது பெரும்பாலான இந்துக்கள் மத்தியில் ஒரு முக்கிய உண்மையாக இருந்தாலும், விநாயகர் ஒரு உண்மையான இருப்பாக இருக்கிறார் என்ற கருத்து அதிக நம்பிக்கையுடன் எழுத்து வடிவில் மிகவும் அரிதாகவே இடம்பெற்று இருக்கிறது. அதனால் இன்றைய வெளியீட்டு கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, இந்த புத்தகம் மற்றும் குருதேவாவின் மற்ற புத்தகங்களுக்கு மேற்கூறிய உள்நோக்கு பிரத்யேகமாக விளங்குகிறது. "கலியுகத்தின் இன்றைய காலக்கட்டத்தில் (இது தாய்மார்கள் தங்கள் ஸ்த்ரீ தர்மத்தை துறந்ததும் தொடங்கியது மற்றும் ஸ்த்ரீ தர்மத்தை கடைப்பிடிக்கும் தாய்மார்களால் மட்டும் அடுத்த சத்யுகத்தை அறிவிக்க முடியும் என்று விநாயகர் எச்சரிக்கிறார்), பல மரபுசாரா இந்துக்கள் மற்றும் மேற்கத்திய கருத்துக்களின் தாக்கத்தில் இருக்கும் இந்துக்கள், ஒரு உண்மையான இருப்பாக விநாயகரை

கருதுவது இல்லை. அவர்களுக்கு விநாயகர் ஒரு சின்னமாக, ஒரு மூடநம்பிக்கையாக, குழந்தைகள் மற்றும் படிப்பறிவு இல்லாதவர்களுக்கு தத்துவத்தை விளக்கும் ஒரு வழியாக காட்சி அளிக்கிறார். ஆனால் அந்த அன்பான தெய்வத்திடம் எனக்கு ஏற்பட்ட அனுபவம் அவ்வாறு இல்லை. நான் அவரை கண் கூடாக பார்த்து இருக்கிறேன். அவர் எனக்கு பல முறை காட்சி அளித்து, தனது யதார்த்தத்தின் மீது எனது கீழ்நிலை மனதின் சம்மதத்தை பெற்று இருக்கிறார். இரக்க குணமுள்ள நமது மகாதேவர் வாழ்ந்துக்கொண்டு, அன்பை பொழியும் யதார்த்தமே உங்கள் கைகளில் இருக்கும் இந்த புத்தகத்தின் அடிப்படை ஆகும்," என்று மேற்கூறிய கருத்தை தொடக்கத்தில் குருதேவா முன் வைக்கிறார். இந்த முக்கிய கருத்தை அறிமுகப்படுத்தியப் பிறகு, விநாயகரை வாசகர் தனது பிரார்த்தனைகள் மூலமாகவும் தொடர்புக்கொள்ளலாம் என்று அந்த கருத்திற்கு குருதேவா மேலும் விளக்கம் அளிக்கிறார். அவர் அதன் பிறகு அவற்றை செய்வதற்கு படிப்படியான பரிந்துரைகளை வழங்குகிறார்.

தொடக்கத்திலும் ஏழாவது அத்தியாயத்திலும், மனிதனின் உட்புற உடல்களில் அமைந்து இருக்கும் நரம்பியல் வலைப்பின்னல்கள் அல்லது விசை மற்றும் உணர்வின் மையங்களாக இருக்கும் சக்கரங்களைப் பற்றி குருதேவா தன்னுடைய பிரத்யேகமான அணுகுமுறையை பகிர்ந்து இருக்கிறார். அந்த ஏழு அடிப்படை சக்கரங்களை மனோஉணர்வுடன் பார்க்கும் போது, அவை பல இதழ்களுடன் வண்ணமயமான சக்கரங்கள் அல்லது தாமரைகளாக காட்சி அளிக்கின்றன. அவை முதுகுத்தண்டிற்கு அருகில், அடிப்பகுதியில் இருந்து மண்டை ஓடு வரை அமைந்துள்ளன. அதுமட்டுமில்லாமல் ஏழு சக்கரங்கள் முதுகுத்தண்டின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ளன. அவை உள்ளுணர்வின் இருப்பிடமாக விளங்குகின்றன. சக்கரங்களைப் பற்றி விளக்கும் போது, வழக்கமாக தொண்டைப்பகுதியில் இருக்கும் விசுத்த சக்கரம் (தெய்வீக அன்பு) மற்றும் தலை உச்சியில் இருக்கும் சகஸ்ரஹார சக்கரம் (தெய்வீக பார்வை மற்றும் ஞானோதயம்) ஆகிய உயர்நிலை சக்கர அனுபவங்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் குருதேவா கீழ்நிலையில் இருக்கும் ஏழு சக்கரங்ககள் மூடுவதைப் பற்றி தொடக்கத்தில் முக்கியத்துவம் அளித்து, இதை சாதிக்க விநாயகர் வழிபாடு எவ்வாறு துணைபுரிகிறது என்பதை விளக்குகிறார். அந்த விநாயகரை வழிபடுவதன் மூலம் கோபம் மற்றும் கழிகாமம், பொங்கி எழும் கோபம், பழிவாங்க தூண்டுதலாக இருக்கும் பொறாமை, நீடித்த மனக்குழப்பம், சுயநலம், மனசாட்சியின்மை மற்றும் (கீழ்நிலை சக்கரத்தை மையமாக கொண்ட) கொலை மற்றும் தீய எண்ணங்களை நம்மால் வெற்றிக்கொள்ள முடியும்.



மூன்றாவது அத்தியாயத்தில் வழங்கப்பட்டிருக்கும் விநாயகரின் சக்திகள் பற்றி கோட்பாடு, குருதேவாவின் மூன்றாவது பிரத்யேக அன்பளிப்பாக இருக்கிறது. இந்த அமைப்பில், ஒவ்வொரு சக்தியும் அதற்கு முந்தைய சக்தியில்

வெற்றிகரமாக வாழ்வதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சக்திகள் அங்கம் வகிக்கும் ஐந்து முற்போக்கான கவனமையங்கள், குடும்பத்தில் மதத்தை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு அடிப்படையாக விளங்குகின்றன.


1. குடும்பத்தில் அன்பு மற்றும் ஒற்றுமை
2. சொந்தங்கள், அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் மற்றும் நண்பர்களிடம் நட்புணர்வை வெளிப்படுத்துதல்
3. அதே அன்புணர்வை தொழில்முறை சகாக்கள், ஒரு சாதாரண வியாபாரி மற்றும் பொதுமக்கள் என்று ஒருவருக்கு இருக்கும் வெளியுலக தொடர்புகள் அனைவரிடமும் வெளிப்படுத்துதல்.
4. கலாச்சாரம் மற்றும் அத்துடன் வருகை தரும் மத சம்பிரதாயங்கள் மற்றும் ஒழுக்கத்தின் மீது இருக்கும் மரியாதை மற்றும் புரிதலின் மீது அன்பு.
5. இந்த மகாதேவரிடம் இருந்து பெருக்கெடுத்து வரும் அன்பால் பெறப்படும் அற்புத உணர்ச்சிகள்

குருதேவா விநாயகரைப் பற்றிய விரிவான பாரம்பரிய தகவலுக்கு வழங்கிய பிரத்யேகமான பங்கை, நீங்கள் படித்து மகிழ்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த லோகம் மற்றும் அந்தர்லோகங்களில் இருந்து உங்களுக்கு அன்பும் ஆசிகளும்,



நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த கைலாச பரம்பரையின்
163 ஆவது ஜகதாச்சார்யா
குரு மகாசன்னிதானம்
கவாய் ஆதீனம், ஹவாய், யு.எஸ்.ஏ.



ஆசிரியர் அறிமுகம்

கிரந்தகாரபூமிகா

ग्रन्थकारभूमिका

காலம் தொடங்கிய நாள் முதல் விநாயக பெருமான் ஏதாவது ஒரு வடிவில் பிரார்த்திக்கப்பட்டு, வழிபடப்பட்டு போற்றப்பட்டு வருகிறார். காலமும் அவர் படைப்புடன் தொடங்கியுள்ளது. மகாதேவராக இருக்கும் அவரை ஒரு செயல் தொடங்குவதற்கு முன்பாக வணங்கி வேண்டிக்கொள்ள வேண்டும் மற்றும் நாம் பழைய பாரம்பரிய வழக்கங்களில் இருந்து புதுமைகளை நோக்கி செல்வதால் நமது வாழ்க்கைகளில் மாற்றங்கள் நிகழ்வும் போது அவரை வழிபட்டு பிரார்த்தனை செய்ய வேண்டும். நாம் பக்குவமடைந்து முன்னேறும் போது நமது மனங்களை உறுதிப்படுத்தி, முறையான கதவுகளை திறக்க விநாயக பெருமான் எப்போதும் தயாராக இருக்கிறார். அவர் என்றும் தனது கடமையில் இருந்து தவறுவது இல்லை. அவர் நமக்கு தேவைப்படும் போதெல்லாம் உதவி செய்ய காத்து இருக்கிறார்.

விநாயகர் நம்மை விவசாயம் சார்ந்த யுகத்தில் இருந்து தகவல் தொழில்நுட்ப யுகங்கள் மற்றும் புதிய விண்வெளி யுகத்திற்கு வழிநடத்தி செல்லும் இந்த காலகட்டத்தில், உலகெங்கும் இருக்கும் இந்துக்கள் உதவி மற்றும் வழிகாட்டலை வேண்டி அவரை பிரார்த்தனை செய்கின்றனர். இன்றும் பலர் வயல்களில் வேலை செய்து வருகின்றனர், சிலர் அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றனர், மற்றும் சிலர் நிலவில் தங்கள் கால்தடங்களை பதிக்கின்றனர் மற்றும் சிலர் விண்வெளியை வலம் வருகின்றனர். உலகில் ஒன்றாக இணைந்து இருக்கும் மிகவும் சிக்கலான கணினிகளைக் காட்டிலும் அதிக நுணுக்கமாகவும், அதே சமயத்தில் மின்விசை இயக்கி போல எளிமையாகவும் இருக்கும் மனதை உடைய விநாயகர், ஒரு யுகத்தில் இருந்து இன்னொரு யுகத்திற்கு செல்லும் போது ஏற்படும் இந்த மாற்றங்களின் அனைத்து அம்சங்களையும் தொடர்ச்சியாக அறிந்து இருக்கிறார். தனது வீட்டில் இருக்கும் தாய், தனது வயலில் இருக்கும் விவசாயி, இந்த கிரகத்தை சுற்றி வரும் விண்வெளி வீரர், தனது மேசையில் இருக்கும் கூட்டு நிறுவன தொழிலாளி மற்றும் தொழிற்சாலையில் தனது பணிகளை

செய்யும் தொழில்நுட்ப பணியாளர் மீதும் அவர் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார்.

விநாயக பெருமான் எல்லோரது வாழ்விலும் ஒரு வலுவான மற்றும் மிகவும் நெருக்கமான இருப்பாக, வேதகாலத்தின் இந்திய கிராமங்களில் ஆயிரம் ஆண்டுகாலமாக இருந்துள்ளார் மற்றும் பல நாடுகளின் சிறிய மற்றும் பெரிய நகரங்களில் தற்போது இருந்தும் வருகிறார். மக்கள் எந்தத் தொழில் அல்லது நிறுவனத்தை தொடங்கும் போதும், அவரையே வணங்கி வந்தனர் மற்றும் தற்போதும் வணங்கி வருகின்றனர். இன்று தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்கள் தங்கள் பணிகளில் தடைகள் ஏதும் ஏற்படாமல் இருக்க, அவர்கள் தினமும் தங்கள் தினசரி வேலையை தொடங்கும் முன்பாக, அந்த விநாயகருக்கு என்று தனியாக அர்ப்பணிக்கப்பட்ட இடத்திற்கு சென்று அவரது ஆசிகளை பெறுகின்றனர். பங்கு சந்தையை தங்களுக்கு சாதகமாக மாற்றி அமைக்க வேண்டும் என்று அவரிடம் வணிகர்கள் கெஞ்சுகிறார்கள், மற்றும் விவசாயிகள் தங்கள் நிலத்தில் விதைகள், நெல், மற்ற பயிர்கள் அல்லது செடிகளை விதைக்கும் போது அவருடைய 108 திருநாமங்களை பாடுகிறார்கள். மழை பெய்யாத போது, அவரது பரந்த மனதில் மக்களின் முக்கிய தேவைகள் பதியவேண்டும் என்பதற்காக, இரக்க குணம் படைத்த நமது கடவுளின் சிலைகள் பாரத நாடு முழுவதும் கடலில் அல்லது நதியில் விசர்ஜனம் செய்யப்படுகின்றன. வீட்டில் பாட்டிக்கு உடல்நலம் சரியாக இல்லாத போதும் அல்லது பயிர்கள் நல்ல விளைச்சலை தராத போதும், குழந்தைகள் மற்ற கலாச்சாரங்களை பின்பற்றி தவறான வழியில் செல்லும் போதும், தங்கள் வாழ்க்கைகள் மீண்டும் நல்வழியில் செல்ல வேண்டும் என்று இந்துக்கள் நமது அன்பான மகாதேவரிடம் சிரத்தையுடன் வேண்டிக்கொள்கின்றனர். அவர் தர்மத்தின் முதன்மைக் கடவுளாக இருக்கிறார் மற்றும் நாம் நமது வாழ்க்கைகள் செல்லும் பாதையில் வழிகாட்டலை வேண்டி அவரை பிரார்த்திக்கிறோம்.

தாங்கள் மனப்பூர்வமாக விநாயகரை தெய்வங்களின் பரமனாக கருதுவதாகவும், அவரை வழிபடுவதன் மூலமாகவே நமது பரமேசுவரனான சிவபெருமானின் திருவடிகளை அடைந்து, அவரது ருத்திர அம்சத்தை தவிர்க்க முடியும் என்று கருதுவதாகவும், சமீபகாலத்திலும் 1940 களின் இறுதியில் எனக்கு இலங்கையில் ஏற்பட்ட முதல் சந்திப்புக்களின் போதும் சைவ பண்டிதர்கள் விளக்கம் அளித்தார்கள். எல்லையில்லாத அன்புடன் சிறப்பாகவும் இரக்க குணத்துடனும் இருக்கும் விநாயகரின் தெய்வீகபண்பில் முதலில் பிரவேசித்து, பின்னர் அவர் வாயிலாக அவருடைய தந்தையை பாதுகாப்பாக அடைய முடியும் என்று அந்த பண்டிதர்கள் அனுபவ அறிவுடன் விளக்கினார்கள்.

ஆனால் கலியுகத்தின் இன்றைய காலக்கட்டத்தில் (இது தாய்மார்கள் தங்கள் ஸ்த்ரீ தர்மத்தை துறந்ததும் தொடங்கியது மற்றும் ஸ்த்ரீ தர்மத்தை கடைப்பிடிக்கும் தாய்மார்களால் மட்டுமே அடுத்த சத்யுகத்தை அறிவிக்க முடியும் என்று விநாயகர் எச்சரிக்கிறார்), பல மரபுசாரா இந்துக்கள் மற்றும் மேற்கத்திய கருத்துக்களின் தாக்கத்தில் இருக்கும் இந்துக்கள், ஒரு உண்மையான இருப்பாக

விநாயகரை கருதுவது இல்லை. அவர்களுக்கு விநாயகர் ஒரு சின்னமாக, ஒரு மூடநம்பிக்கையாக, குழந்தைகள் மற்றும் படிப்பறிவு இல்லாதவர்களுக்கு தத்துவத்தை விளக்கும் ஒரு வழியாக காட்சி அளிக்கிறார். ஆனால் அந்த அன்பான தெய்வத்திடம் எனக்கு ஏற்பட்ட அனுபவம் அவ்வாறு இல்லை. நான் அவரை கண் கூடாக பார்த்து இருக்கிறேன். அவர் எனக்கு பல முறை காட்சி அளித்து, தனது யதார்த்தத்தின் மீது எனது கீழ்நிலை மனதின் சம்மதத்தை பெற்று இருக்கிறார். இரக்க குணமுள்ள நமது மகாதேவர் வாழ்ந்துக்கொண்டு, அன்பை பொழியும் யதார்த்தமே உங்கள் கைகளில் இருக்கும் இந்த புத்தகத்தின் அடிப்படை ஆகும். நான் கூறுவது உண்மை. இதை நம்புங்கள்.

விநாயகர் வழிபாடு உடனடியாக தொடங்குகிறது. அவரை வழிபடும் பக்தர், நித்தியமாக இருக்கும் அவருடைய மனதை தொடர்புகொள்ள அவரது உருவத்தைப் பற்றி சிந்தித்தால் போதும். உங்கள் கண்களை மூடிக்கொண்டு, அவருடைய பெரிய ஆனைமுகத்தை கற்பனை செய்துக்கொண்டு, உடனடியாக தொடங்கிய நேரடி தொடர்பை அனுபவியுங்கள். ஒரு தனிநபர் கணினியில் ஒரு குறியீட்டை பஞ்ச் செய்ததும், அந்த வலைப்பின்னலில் இருக்கும் பெரிய மற்றும் சிறிய கணினியில் அந்த தகவலை உடனடியாக அணுக முடிவதைப் போன்று இந்த தெய்வீக தொடர்பு விளங்குகிறது. இந்த அற்புதமான மற்றும் பொதுவான இன்னர்நெட்டில், விநாயகருடன் நேரடி தொடர்பை பெறுவதன் மூலம், தெளிவற்ற மற்றும் தேவையான தகவல்கள் மற்றும் ஒவ்வொரு கேள்விக்கான பதில்களும் தற்போது கிடைக்கின்றன. நாம் எங்கே இருந்தாலும், நாம் எந்த செயலை செய்துக்கொண்டு இருந்தாலும், நாம் நமது சொந்த மூளையின் கணினியை பயன்படுத்தி, விநாயகரின் தெய்வீக உருவத்தை குறியீட்டை உள்ளிட்டு, கணினி போன்ற விரிவான விநாயகரின் மனதிற்கு முழு அனுமதியை பெறவேண்டும். விநாயகரின் மனமானது பல யுகங்களின் அனுபவ அறிவால் நிரலாக்கம் செய்யப்பட்டு இருப்பதால், அது இயல்பாகவே பிரபஞ்ச நுணுக்கங்கள் மற்றும் வாழ்க்கை வழங்கும் சிக்கலான விளைவுகள் மற்றும் எளிமைகளின் சுழற்சிகளை உள்ளடக்கியுள்ளது. நமது மாபெரும் விநாயக பெருமான் *மூலாதார* சக்கரத்தின் மீது அமைதியான ஆனந்தத்துடன் அமர்ந்து இருக்கிறார். இந்த சக்கரம் ஒவ்வொரு உயிரினத்தினுள் இருக்கும் நினைவாற்றல் சக்திகளை கட்டுப்படுத்துகிறது. அவர் வழிபடும் போது உங்கள் நினைவாற்றல் வலுப்படுத்தப்பட்டு, நற்பண்புகள் உருவாக்கப்பட்டு உள்ளிருக்கும் அறிவு வெளிவருகிறது. அது *மூலாதாரத்திற்கு* கீழே பலர் அறியாத சக்கரங்களில் வாசம் செய்யும் கீழ்நிலை சக்திகளிடம் இருந்து பாதுகாப்பும் அளிக்கிறது. இந்த கீழ்நிலை சக்கரங்கள் அச்சம், கோபம், பொறாமை மற்றும் சுய பாதுகாப்பை மையமாகக் கொண்ட குழப்பம் நிறைந்த சிந்தனையை நிர்வகிக்கிறது.

மூலாதாரத்திற்கு கீழிருக்கும் முதல் சக்கரமானது அச்சம் மற்றும் கழிகாமத்தின் மனநிலையை நிர்வகிக்கிறது. அதற்கு கீழிருக்கும் சக்கரமானது

பொங்கி எழும் கோபத்தை நிர்வகிக்கிறது. அந்த கோபம் விரக்தி அல்லது ஒருவரது பிடிவாதத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல்களில் இருந்து தோன்றுகிறது மற்றும் இதனால் மக்கள் இறைவனிடமும் கோபத்துடன் இருக்கக்கூடும். *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் மூன்றாவது சக்கரமானது போதாமை, தாழ்வு மனப்பான்மை மற்றும் ஆதரவின்மை உணர்வுகளுடன் தொடர்புடைய பழிவாங்கும் பொறாமை, தற்பெருமை மற்றும் அகந்தையை நிர்வகிக்கிறது. இந்த நிலையில் சுயநலமற்ற *சேவை* செய்யும் கர்ம யோகம் மட்டுமே பாதுகாப்பான *சாதனாவாக* விளங்குகிறது. இதனை சிறப்பாக செய்வதன் மூலம், குணத்தில் மாற்றம் ஏற்படுகிறது. இந்த சக்கரத்தின் உணர்வில் வாழ்பவர்கள் பெரும்பாலும் இறைவனின் இருப்பை மறுத்து, மற்றவர்களுடன் வாதாடி சண்டையிடும் இயல்புடன் இருக்கிறார்கள். கீழிருக்கும் நான்காவது சக்கரமானது நீடித்த குழப்பம் மற்றும் பிறருக்கு வழங்குவதை காட்டிலும் பெறுவதற்கு ஆசைப்படும் உள்ளுணர்வு சார்ந்த பிடிவாதத்தை நிர்வாகம் செய்கிறது. இந்த மனதின் பகுதியில் இருப்பவர்கள் பொருள்முதல்வாத வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள். இங்கே தீங்கிழைக்கும் *வாசனாக்கள்* ஒன்றோடு ஒன்று சேரும் போது வெறுப்பு தோன்றுகிறது. *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் ஐந்தாவது சக்கரமானது, உள்ளுணர்வு மனதின் இரக்கமற்ற சுயநலத்திற்கு இருப்பிடமாக விளங்குகிறது. இந்த சக்கர உணர்வில் இருப்பவர்கள், மனசாட்சியின்றி செயல்படும் திறமையுடன் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் நலனில் அதிக அக்கறை செலுத்தி "நான், எனக்கு, என்னுடையது" என்பதை மட்டுமே சிந்திக்கிறார்கள். மனசாட்சி இல்லாத லோகத்தை கீழிருக்கும் ஆறாவது சக்கரம் குறிக்கிறது. இது திருட்டு, மோசடி மற்றும் மற்ற நேர்மையற்ற செயல்களுக்கு காரணமாக அமைகிறது. உலகம் தங்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்க கடன்பட்டு இருப்பதாகவும், தாங்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப யாரிடம் இருந்தும் எதையும் எடுத்துக்கொள்ளலாம் என்றும் இந்த மனநிலையில் இருப்பவர்கள் நம்புகிறார்கள். மூலாதாரத்திற்கு கீழே இறுதியாக இருக்கும் ஏழாவது சக்கரம் தீய எண்ணம், மனசாட்சி இல்லாமல் பழிவாங்குவது, தான் மகிழ்ச்சி அடைவதற்கு மற்றவர்களை துன்புறுத்துவது, கொலைக்கு பழிவாங்க இன்னொரு கொலை, மற்றவர்கள் பொருள் அல்லது மனம் அல்லது தூல உடலை அழிப்பது ஆகியவற்றை நிர்வகிக்கிறது. இந்த மனநிலையில் இருப்பவர்களுக்கு காரண விளக்கங்கள் புரிவது இல்லை.

இந்த கீழ்நிலை சக்கரங்கள் மற்றும் அவற்றால் விடுவிக்கப்படும் எதிர்மறை கர்மவினைகளை தடை செய்வதற்கு ஆண்களும் பெண்களும் சிரத்தையுடன் முயற்சி செய்கிறார்கள். மூலாதார சக்கரத்தில் அமர்ந்து இருக்கும் விநாயகரை வழிபடும் போது, இந்த கீழ்நிலை மனநிலைகளை மெதுவாக மூடிவிட்டு, விலங்கு உணர்வுகளின் தாக்கம் இல்லாமல் சாட்சியை உயர்ந்தநிலையில் வைத்திருக்க முடியும்.

விநாயகரின் பக்தர்கள் தங்கள் வீடு, தொழிற்சாலைகளில், அலுவலகங்களில், மருத்துவமனைகளில், சந்தைகளில் இருந்தாலும் அல்லது விண்வெளியில் சுற்றிக்கொண்டு அல்லது வயலில் உழுதுக்கொண்டு இருந்தாலும், அவர் எப்போதும் அவர்கள் அருகில் இருந்துக்கொண்டு இருக்கிறார். அன்புள்ளம் கொண்ட விநாயகரின் வலுவான உருவத்தை உங்கள் மனதில் தக்கவைப்பதன் மூலம் அவருக்கு அருகில் செல்ல முடிகிறது. மிகவும் கவனமாக அவருடைய பெரிய தலை மற்றும் காதுகள், நீளமான துதிக்கை, மிகப்பெரிய உடல், பருத்த தொந்தி மற்றும் பல கைகளில் அவர் பிடித்திருக்கும் பொருட்களை கற்பனை செய்து பாருங்கள். அவரது கண்களை பாருங்கள். உங்கள் கண்களை மூடிக்கொண்டு மனதில் அவரைக் காண உங்களை பழக்கிக்கொள்ளுங்கள். இது தான் முக்கியம். கற்பனை சக்தி மூலம் உங்கள் மனதில் அவர் உருவத்தை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். இனி அவருடன் உங்களால் பேசமுடியும். உங்களது வேண்டுதலை அவரது காதில் மானசீகமாக சொல்லுங்கள். அவர் கேட்டுக்கொண்டு இருக்கிறார். அவர் பதில் பேசாவிட்டாலும், அவர் உங்கள் பிரார்த்தனையை தனது விரிவான மனதில் ஏற்றுக்கொண்டு, அதற்கு மெதுவாக தீர்வு காண்கிறார். உங்கள் கேள்விகள் மற்றும் பிரச்சனைகளை அவருடைய வலது காதில் கூறினால் போதும். உங்கள் வேண்டுதலை அவரிடம் சொல்லி முடித்ததும், உங்கள் கண்களை திறந்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு உங்கள் அன்றாட பணிகளை தொடருங்கள். நீங்கள் எங்கே இருந்தாலும், விநாயகருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் இந்த எளிய வழியை நினைவில் வைத்து இருந்து, ஒரு நல்ல சாதகனாக இந்த *சித்தியில்* பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

இன்றில் இருந்து தொடங்கி வரவிருக்கும் நாட்களில், உங்களது அன்றாட வாழ்வில் அவர் எவ்வாறு கேள்விகளுக்கு பதில் அளிக்கிறார் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு அளிக்கிறார் என்பதை நீங்கள் பார்க்கத் தான் போகிறீர்கள். கண்களுக்கு புலப்படாத வகையில் அவர் நிகழ்வுகள் மற்றும் முடிவுகளில் மெதுவாகவும் நுணுக்கமாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகிறார் என்பதை நீங்கள் கவனிக்கப் போகிறீர்கள். நீங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகள் மாற்றம் பெறும், எதிர்பாராத பாதைகள் திறந்துக் கொண்டு வழக்கமான பாதைகள் மூடிக்கொள்வதால், நீங்கள் அவரது அருளின் மூலம் உறுதியான மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி இழுக்கப்படுகிறீர்கள். விநாயகரை உடனடியாக அணுக உதவ முன்னர் குறிப்பிட்ட சூத்திரம் உங்கள் அடிமனது நினைவு வழக்கங்களில் நன்றாக பதியும் வரை அதை தொடர்ந்து படித்துக்கொண்டு இருங்கள் மற்றும் அதன் பிறகு நீங்கள் எங்கிருந்தாலும், எந்த செயலில் ஈடுபட்டு இருந்தாலும் ஒரு நாளில் அவ்வப்போது அவரை தொடர்புக்கொள்ள தொடங்குங்கள். ஆமாம்! விநாயகர் அருகில் தான் இருக்கிறார், மற்றும் அவரை நீங்கள் உடனடியாக அணுக முடியும். நீங்கள் எங்கே இருந்தாலும் இதை நினைவில் வைத்து இருங்கள் மற்றும் வாழ்க்கை வழங்கும்

அனுபவங்களின் பாதையில் ஒரு சாதகராக இருக்கும் நீங்கள் இந்த *சித்தியை* பயன்படுத்துங்கள். அவ்வாறு செய்வது உங்கள் உரிமையாகவும் விளங்குகிறது.

விரைவாக இயங்கும் இந்த தொழில்நுட்ப யுகத்தில் தங்கள் ஆன்மீக சமூகம் தங்கள் மக்களுக்கு சேவை செய்யும் வகையில் இருக்கவேண்டும் என்று அதைப்பற்றி ஆய்வு செய்து, அதற்கு புதிய வடிவத்தை கொடுப்பதோடு புதுபிக்கும் நோக்குடன் இந்து சமயம் உட்பட உலகின் முக்கிய சமயங்கள் அனைத்தும் சங்கங்கள் மற்றும் சமூகங்களை அமைத்துள்ளன. பெரும்பாலும் உலகில் இருக்கும் ஒவ்வொரு நாட்டிலும், தங்கள் உறுப்பினர்கள் தங்கள் மதத்திற்கு நெருக்கமாக இருக்கவேண்டும் என்றும், அந்த மதம் அவர்களின் அன்றாட வாழ்விற்கு பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்றும், இன்று இந்து சமயத்தின் பல்வேறு பிரிவினர் கோயில்கள் மற்றும் சங்கங்களை உருவாக்கி வருகின்றனர். தங்களின் நாடுகள் தொழில்மயமாகத் தொடங்கியதும் பண்ணைகள் மற்றும் கிராமத்து குழுக்கள், நெல் வயல்கள் மற்றும் பழத்தோட்டங்களில் பணிபுரிந்தவர்கள், அங்கிருந்து வெளியேறி அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள் என்பதை இந்துக்கள் அறிந்து இருக்கிறார்கள். அதனால் இந்த மறுமலர்ச்சியின் போது ஈடு செய்வதற்கு, ஒரு யுகத்தை நிர்மாணம் செய்வதற்கு, உலகில் பலவீனமாக இருக்கும் மக்களை கண்டறிந்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்று, தேவையான சீர்திருத்தங்களை செய்யும் நோக்குடன் தலைசிறந்த நமது மதத்திற்கு புதிய வடிவம் மற்றும் புதிய அம்சங்களை வழங்குவதற்கு பல்லாயிரக் கணக்கான இந்து சமயத்தலைவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர். வாழ்க்கைமுறை அதிக எளிமையாக இருந்த காலங்களைப் போல, இந்த யுகத்திலும் இந்து மதம் முக்கியமாகவும் யதார்த்தமாகவும் இருப்பதற்கும், வழிதவறிய நமது மதத்தினரை மீண்டும் மதத்தில் அழைத்து வருவதற்கும், பல தெய்வங்கள் புறக்கணிக்கப்பட்டு இருப்பதால் அவர்களை உயிர்பிப்பதற்கும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கும் மக்களின் கருத்துக்களை மட்டுமே குறிக்கும் புதிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகள் மற்றும் தொடர்ந்து விரிவாக்கம் பெற்றுவரும் அறிவுத்துறையில் மனிதன் வளர்ச்சி பெற்று வருவதால் மகாதேவர்களின் தேவை குறைந்துவிட்டது என்ற ஊகம் துரதிஷ்டவசமானது மற்றும் முற்றிலும் தவறானது. நமது மகாதேவர்கள் அறிவின் சாரமாக விளங்குகிறார்கள் என்பதை ஒவ்வொரு உண்மையான இந்துவும் அறிந்து இருக்கிறார். அவர்கள் அறிவியல் ஆய்வுடன் ஆன்மீக இயலுணர்வை கலந்து அதிக நுணுக்கமான உட்பார்வைகளை வெளிக்கொண்டு வருவதற்கு நமக்கு உதவி செய்கிறார்கள். அந்த அறிவை மனித நேயத்திற்கு பயன்தரும் வகையில் விவேகமாக பயன்படுத்துவதற்கு, அவர்கள் நமக்கு தொடர்ந்து உதவி செய்து வருகிறார்கள். பழங்கால சனாதன தர்மமாக இருக்கும் இந்து சமயத்தின் மகிமையை, நாம் உலக இளைஞர்களுக்கு கற்றுத் தரவேண்டும். கேட்கத் தயாராக இருக்கும் எல்லோருக்கும் நாம் நமது தகவலை வழங்க வேண்டும். அவர்கள் நாம் சொல்வதை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரித்து நம்மை திருப்பி அனுப்பிவிடலாம். நமது வயதில் வெறும் முப்பத்தி ஒரு நாட்கள் வித்தியாசம் இருந்தாலும், நம்மை பின்பற்றுபவர்களுக்கு நமது அறிவை கற்றுத் தருவது நமது கடமை ஆகும். உலகில் உள்ளவர்களுக்கு அவர்களின் உயிர் பிரியும் நேரம் துல்லியமாக தெரியாது என்பதால், நம்மை விட வயதில் சிறியவர்களுக்கு தகவலை வழங்குவதும், மற்றவர்களுக்கு தெரியாமல் நமக்கு தெரிந்து இருக்கும் அறிவை மற்றவர்களுக்கு கற்றுத் தருவதும் நமது *வர்ணாசிரம* தர்மம் ஆகும். அதனால் நமக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நாம் நமது கடமையை செய்துக்கொண்டு இருப்போம்.

ஆமாம் நாம் உலகில் வாழும் இந்து இளைஞர்களுக்கு அவர்களின் இந்து சமய மகிமையைப் பற்றி கற்றுத் தரவேண்டும். அறிவியல், அரசியல் அல்லது வேறுவகை புத்திசார் நாட்டத்திற்காக, அவர்கள் தங்களது மூதாதையர் மதத்தை விட்டு விலகவேண்டிய அவசியம் இல்லை என்பதை நாம் அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும். அனைத்து விஷயங்களிலும் விநாயகரின் விவேகமான உதவியை நாடவேண்டும் என்று நாம் அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும். அவர் அனைத்து பிரிவை சேர்ந்த இந்துக்களுக்கும் முதல் இஷ்ட தேவதையாக இருக்கிறார். பெரும்பாலும் விநாயகர் வழிபாடு, ஒரு பக்தரை இயல்பாகவே மற்ற மகாதேவர்களை நோக்கி அழைத்துச் செல்கிறது.

உங்களுக்கு இந்த லோகம் மற்றும் அந்தர்லோகங்களில் இருந்து அன்பும் அருளும் சித்தியாகட்டும்,




சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

நந்திநாத சம்பிரதாயத்தைச் சேர்ந்த கைலாச பரம்பரையின் 162 ஆவது ஜகதாச்சார்யா

குரு மகாசன்னிதானம், கவாய் ஆதீனம், ஹவாய், யு.எஸ்.ஏ.


விநாயகர் சதுர்த்தி, செப்டெம்பர் 13, 1999

இந்து வருடம் 5101, இந்திய பெருங்கடலில் இருக்கும்
மொரீஷியஸ் நாட்டில் அமைந்துள்ள
ஆன்மீக பூங்காவில் இருக்கும் பஞ்சமுக கணபதி பெவிலியன்
தொடங்கப்பட்டதை தேசிய அளவில் நினைவுக்கூரும் நாள்



CHAPTER ONE

The Nature of Lord Ganesha



Human-Tear-Drop_x10NormBaker



விநாயக பெருமானின் இயல்பு

ஸ்ரீ கணேசஸ்ய ஸ்வபாவ :

श्रीगणेशस्य स्वभाव:

சத்குருமார்கள், கோயில்கள் மற்றும் சாத்திரங்கள் என்று ஒன்றோடு ஒன்று தொடர்பில் இருக்கும் மூன்று பெரும் தூண்கள், பல நூற்றாண்டுகளாக இந்து சமயத்தை சிறப்பித்து வருகின்றன. அந்த தூண்கள் ஒன்றாக தர்மத்தின் அதிபதியாக, சிவபெருமானின் மகனாக இருக்கும் அன்புள்ளம் கொண்ட விநாயகரின் மகிமையை எதிரொலிக்கின்றன. நீண்டகாலமாக நமது ரிஷிகளும் முனிவர்களும் மனதின் ஆழத்தை வெளிப்படுத்தி வந்துள்ளார்கள். நம்மாலும் இறைவன் மற்றும் மகாதேவர்களை அடைய முடியும் என்பதை இது நமக்கு உறுதி அளிப்பதாக இருக்கிறது. வாழ்ந்துக்கொண்டு இருக்கும் இந்த சத்குருமார்கள் மற்றும் அவர்கள் வழங்கிய உபதேசங்கள், சனாதன தர்மத்தின் பாரம்பரிய பழக்கங்கள் மற்றும் அதன் தத்துவத்திற்கு புத்துணர்வை வழங்கியுள்ளது. இனி நாம் விநாயகரின் இயல்பு, அவரது தோற்றம், இந்த மகாதேவரின் பொறுப்புக்கள் மற்றும் ஒரு சாதகர் தனது அன்றாட வாழ்க்கை வழங்கும் அனுபவப் பாதையில் இந்த தெய்வத்தை எவ்வாறு ஒரு முக்கிய அங்கமாக்கிக் கொள்வது என்பதைப் பற்றி விசாரம் செய்வோம்.

கணங்களின் தலைவராகவும் விக்கினங்களை அழிப்பவராகவும் பல உருவங்களில் இருக்கும் விநாயகருடன் ஒரு ஆன்மீக தொடர்பு ஏற்பட்டதும், அந்த சாதகர் மெதுவாக சனாதன தர்மத்தின் மர்மங்களில் அழைத்துச் செல்லப்படுகிறார். ஒரு புதிய *சக்கரத்துடன்* தொடர்பு கிடைக்கும் போது, அந்த உணர்வுநிலையை நிர்வகிக்கும் தெய்வம் மற்றும் அதனோடு தொடர்பில் இருக்கும் கிரகத்தின் அறிமுகம் கிடைக்கும் என்பதால், உணர்வு போல நுணுக்கமாக, கனவு போல மெல்லியதாக அல்லது ஒரு தனிப்பட்ட சந்திப்புப் போல வெளிப்படையாகவும் இருக்கக்கூடிய அத்தகைய ஒரு அகத்தொடர்பு, புதன்கோள் நிர்வாகத்தில் இருக்கும் தனது *மூலாதார* சக்கரத்தில் ஒருவர் நுழைவதையும் குறிக்கிறது.

இன்று இந்து மதம் என்று அழைக்கப்படும் சனாதன தர்மம் மட்டுமே தனது தொடக்கம், சாத்திரம் அல்லது உத்வேகத்திற்கு ஒரு மனித ஸ்தாபகரை சார்ந்து இல்லாமல் பூமியில் துடிப்புணர்வுடன் இருக்கும் மதமாக விளங்குகிறது. அது காலத்தை கடந்து இளமையுடன் இருக்கிறது. மனித நேயத்தின் அடிப்படை மதமாக விளங்கும் சனாதன தர்மம், அகத்தில் இருக்கும் நுண்ணுலகத்தின் மிகவும் நுணுக்கமான மெய்ஞ்ஞான லோகத்திற்குள் தனது மூலத்தை

நாடுகிறது. அது அந்த லோகத்தை காரணலோகம், சிவலோகம் அல்லது மூன்றாவது லோகம் என்று அழைக்கிறது. இந்த தலைசிறந்த மதத்திற்கு பூலோகத்தில் முறைபடுத்தப்பட்ட தலைமைச் செயலகம் என்று எதுவும் இல்லை. அதற்கு அதிகார படிநிலையும் இல்லை. இந்து மதத்திற்கு யார் பொறுப்பு வகிக்கிறார்? இந்த பொறுப்பில் இருப்பவர், அன்புள்ளம் கொண்ட நமது விநாயகரைத் தவிர வேறு யாரும் இல்லை! அவர் ரோம் அல்லது சால்ட் லேக் சிட்டியில் வசிப்பது இல்லை. விநாயகர் இந்துக்கள் வழிபாடு நடத்தி தங்களுக்குள் பிரார்த்தனை செய்யும் இடமெங்கும் ஒரே சமயத்தில் வாசம் செய்கிறார். அவர் இந்த பணிக்காக படைக்கப்பட்ட போது, அவர் பல யுகங்களுக்கு முன்பாக நிரந்தரமாக நியமிக்கப்பட்டு இருப்பதால், அவரை அவ்வப்போது மறுநியமனம் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

சிறந்த வாயில்காவலானக இருக்கும் விநாயகர்



ஆமாம் உலகின் மிகவும் பழமையான மதத்தின் சாதகர்களுக்கு விநாயக பெருமான் நுழைவாயிலாக விளங்குகிறார். அகத்தின் அதிகாரியாகவும் பாதுகாவலனாகவும் இருக்கும் அவர், சனாதன தர்மத்தின் ஆன்மீக மர்மங்களுக்கு அனுமதியை வழங்குகிறார். தாங்கள் எந்த பிரிவு அல்லது தத்துவத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும், இந்துக்கள் அனைவரும் அவரை வழிபடுகின்றனர். அவர் உண்மையில் தனது அன்பின் மூலம் எல்லோரையும் பிணைத்து வைக்கிறார். இந்த மகாதேவர் இந்து மதத்தின் தொடக்கமாகவும், அதை பின்பற்றும் அன்பர்கள் எல்லோருக்கும் பொதுவாகவும் விளங்குகிறார். விநாயகர் லௌகீக பிரபஞ்சத்தின் ஆளுருவகமாக இருப்பதால், அந்த பொதுத்தன்மை முறையாகத் தான் இருக்கிறது. பல்வேறு வகையில் பிரம்மாண்டமாக வெளிப்பட்டு இருக்கும் பிரபஞ்சம் முழுவதும், உற்சாகமாக இருக்கும் இந்த தொந்திப் பிள்ளையாரைத் தான் குறிக்கிறது.

எல்லோரது முதுகுத்தண்டின் அடியில் இருக்கும் நரம்புக்கொத்தில், *மூலாதார* சக்கரத்தின் சூட்சுமமான தாமரை மீது விநாயகர் அமர்ந்து இருக்கிறார். இந்த சக்கரமானது காலம், பருப்பொருள் மற்றும் நினைவாற்றலை நிர்வகிக்கிறது. ஒரு ஆன்மீக சாதகன் அச்சம் மற்றும் குழப்பத்தில் இருந்து எழுச்சிப் பெற்று சரியான சிந்தனை, சரியான வாக்கு மற்றும் சரியான செயலின் விழிப்புணர்வுக்குள் நுழையும் போது, *மூலாதார* சக்கரம் செயல்படத் தொடங்குகிறது. அப்போது இதயம் நிறைய அன்புடன் இருக்கும் சாதகன்,

விநாயகரின் திருவடிகளை அடைகிறான். அன்புள்ளம் கொண்ட ஆனைமுகக் கடவுளை ஆன்மீக சாதகர் வழிபடும் போது, அவர் இயல்பாக மற்றும் மெதுவாக அறிவூட்டம் தரும் இந்து சமயப்பாதையில் நுழைந்து அதிக தெளிவான மனதை பெறுகிறார். பக்தனுக்கும் விநாயகருக்கும் ஒரு வலுவான தொடர்பு உருவானதும், பக்தரின் மனம் மற்றும் உடலில் இருக்கும் ஓட்டங்கள் அனைத்தும் இணக்கத்தை பெறுகின்றன. வலுவான தொடர்பு உருவானதும், அவர் ஆன்மீக பாதையில் தவறாமல் இருக்க, தெய்வீக பாதுகாப்பை பெற்று விடுகிறார்.

ஆனால் சாதகர் ஒன்றை இழந்து விடுகிறார். அவர் சுதந்திரமாக செயல்படும் தனது உள்ளுணர்வு பிடிவாதத்தை இழக்கிறார். அதை நிரந்தரமாக இழந்தாலும், அது ஒரு பெரிய இழப்பாக இருப்பது இல்லை. விநாயகரின் தெய்வீக விருப்பத்திற்கு முன்பாக மனிதனின் தனிப்பட்ட பிடிவாதமாக இருக்கும் அவனது விலங்குணர்வு சுய-விருப்பம், ஒரு பலவீனமான மற்றும் முக்கியமில்லாத சக்தியாக இருக்கிறது. விநாயகரை தரிசித்து அவரது விருப்பத்துடன் இணக்கம் ஏற்படும் அளவிற்கு அகப்பூர்வமாக விழிப்புணர்வை பெற்றதும், உள்ளுணர்வு விருப்பம் இயல்பாகவே தலை வணங்கி ஒதுங்கிவிடுகிறது. சுய விருப்பு வெறுப்புக்கள் மறைக்கின்றன. மாபெரும் விருப்பம், பிரபஞ்ச விருப்பம் மற்றும் தர்மத்தின் விருப்பம் மூலம் காரணம் மற்றும் ஆராய்ச்சியின் பலவீனமான புலன்கள் ஆதிக்கம் செலுத்துப்பட்டு வெற்றிக்கொள்ளப்படுகின்றன. போதிய அளவு அடக்கம் விழித்த பிறகு, தர்மத்தின் மாபெரும் துணை மெய்ஞ்ஞான விருப்பத்திற்கு முன்பாக தனிப்பட்ட உள்ளுணர்வு பிடிவாத்தை துறப்பது எளிதாகிறது. அது மிகவும் இயல்பாகவும் மெதுவாகவும் நடைபெறுகிறது, ஏனென்றால் எண்ணற்ற தெய்வங்களில் ஒருவரான விநாயகர் திட்டமிட்ட சிந்தனையுடன் முன்னேறுகிறார். அவர் அனைத்து சாதகர்களின் ஆன்மீக பாதையில் அன்பு மற்றும் கவனத்துடன் செயல்படும் வழிகாட்டியாக இருக்கிறார்.

அற்புத சக்தி படைத்த இந்து தெய்வங்களில், லௌகீக உணர்வு லோகத்திற்கு மிகவும் அருகாமையில் இருக்கும் விநாயகரை மிகவும் எளிதாக தொடர்புக்கொள்ள முடிகிறது மற்றும் அவரால் நமது அன்றாட வாழ்க்கை மற்றும் கவலைகளில் சிறப்பாக உதவ முடிகிறது. விநாயகர் தனது கைகளில் பாசம் மற்றும் அங்குசத்தை கொண்டிருக்கிறார். அவர் பாசத்தை பயன்படுத்தி உங்களை தனக்கு அருகில் வைத்து இருக்கவும் முடியும் அல்லது தடைகளை தனக்கு அருகில் வைத்து இருக்கவும் முடியும். விநயாகரால் அருளையும் தடைகளையும் கையகப்படுத்தி கட்டுப்படுத்தவும் முடியும். விநாயகர் அங்குசத்தை பயன்படுத்தி தடைகளை தாக்கி திருப்பி அனுப்புகிறார். இவர் தடைகள் அல்லது விக்கினங்களை அழிக்கும் விக்னேசுவரன் என்று அழைக்கப்படுகிறார் என்றாலும் அன்பர்கள் தவறான வழியில் சென்றால், அவர்கள் முன்னேற்றத்தை தடுத்து மெதுவாக அவர்களை தர்மத்தின் நேரான பாதையில் மீண்டும் கொண்டு வருவதற்கு, அவர்களின் பாதைகளில் சிலசமயங்களில் தடைகளையும் வைக்கிறார். உள்ளுணர்வு பிடிவாதம்

காரணமாக சாதகன் தர்மத்தின் வரம்புகளை கடக்க முடிவு செய்யும் போது, பாதைகளில் தடைகளை ஏற்படுத்த விக்னேசுவரன் தயாராக நிற்கிறார். சுவஸ்திக் அவருடைய சின்னமாக விளங்குகிறது. அது சாதகரை வாழ்க்கையின் குழப்பமான அனுபவங்கள் வழியாக வழிகாட்டும் அவருடைய சுற்று வளைவான பாதையை குறிப்பிடுகிறது.

விநாயகரின் வழிபாடு மூலமாகவே நாம் பூஜிக்கத்தக்க முருகப்பெருமானையும், இறுதியாக அந்த சகோதரர்களின் தந்தையாகவும் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தலின் இறைவனாகவும், நமது தந்தை-தாய் கடவுளாகவும் இருக்கும் பரமேசுவரனான சிவபெருமானையும் அறியத் தொடங்குகிறோம்.

ஆனைமுகக் கடவுளால் தத்து எடுக்கப்பட்டவர்கள்

மெய்ப்பொருளை நாடுபவர்கள் பல்வேறு பின்னணிகள், பல்வேறு சமயங்கள் மற்றும் பல்வேறு பாதைகளை கடந்து வந்து இருக்கிறார்கள். விநாயகருடன் பரிச்சயம் ஏற்பட்ட பிறகு, தங்களது கடந்தகாலம் சம்பவங்கள் எவ்வாறு நிகழ்கால விருப்பங்களுக்கு துணை புரியமுடியும் என்ற சந்தேகத்தில் இருப்பார்கள். "நான் எவ்வாறு ஒரு ஆனைமுகக் கடவுளை அன்புடன் வணங்கிக்கொண்டு இருக்கிறேன்?" என்று அவர்கள் வியப்பில் இருக்கக்கூடும். "நான் முன்பு பெற்ற வளர்ப்புமுறையை, இந்த விரிவாக்கத்துடன் பொருத்துவதற்கு என்ன செய்ய வேண்டும்?"

இந்த அடியுணர்வு குழப்பத்தை சரி செய்வதற்கு ஒரு வழி இருக்கிறது. அந்த குழப்பத்தை மக்கள் வழக்கமாக செய்வதைப் போல வெறுத்து ஒதுக்காமல், இந்த ஆன்மீக விழிப்புணர்வை நாம் எதிர்கொள்ள வேண்டும். இந்து சமயத்தில் ஒரு முக்கிய கடவுளாக இருக்கும் அன்பான விநாயகர், உண்மையில் ஒரு நண்பனாக துணை நிற்கிறார். அதனால் நீங்கள் எப்போதும் தனியாக இருப்பது இல்லை. பூமியில் இருக்கும் 1.25 பில்லியன் மக்கள் அல்லது மனித இனத்தில் இருபத்தி ஐந்து சதவீத மக்கள் விநாயகர் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் மற்றும் அந்த எண்ணிக்கை வருடத்திற்கு வருடம் அதிகரித்து வருகிறது.

பூமியில் இருக்கும் மிகவும் பழமையான மதத்தின் ஆழத்திற்குள், அன்பான விநாயகர் தனது பக்தர்களை அழைத்து செல்கிறார். இந்து மதத்தில் நுழைவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. முதலாவது பாதையில், ஒருவர் இந்து மதத்தில் பிறந்து, தனது தாயின் தோளில் சாய்ந்தபடியே கோயிலுக்கு சென்று, அங்கே நமது அன்பான விநாயகருடன் ஆன்மீகம் மற்றும் மனோஉணர்வு ரீதியான தொடர்பைப் பெறுகிறார். இந்த ஆரம்பகால பதிவுகள் மற்றும் *சம்ஸ்காரங்கள்* மிகவும் வலுவாக இருப்பதால், அவை வாழ்நாள் முழுவதும் உங்களை வழிநடத்தி செல்கின்றன. இந்து மதத்தில் முறையாக நுழையும் அளவிற்கு இயல்பாக விரிவாக்கம் பெற்று, அந்த மகத்தான பழம்பெரும் பாரம்பரியத்தில் நீங்கள் அங்கம் வகிப்பதற்கு, அந்த மதத்தின் காவல்

தேவதைகளிடம் மன்றாடி நேர்மையுடன் பிரார்த்தனை செய்வது இன்னொரு பாதை ஆகும். விநாயக பெருமான் உங்களை லௌகீக உணர்வுள்ள மனதில் இருந்து உயர்த்தி, உங்களுடன் ஒரு தொடர்பு மற்றும் உறவை உருவாக்குவதற்கு, உங்களிடம் இந்து மதத்திற்கு மாறவேண்டும் என்ற விருப்பம் மிகவும் வலுவாகவும் அதிக நேர்மையுடனும் இருக்க வேண்டும். இது அந்த தெய்வத்துடன் இருக்கும் ஒரு தனிப்பட்ட உறவை குறிக்கிறது. இந்த உறவில் நீங்களும் விநாயகரும் மட்டுமே இருப்பீர்கள். உங்களுக்கு மத்தியில் யாரும் இருப்பதில்லை. இதை ஒரு வகையில் தத்து எடுத்துக்கொள்வது என்றே சொல்லலாம். சா பாலோ அல்லது மெட்ராஸ் அல்லது உலகில் சிறுவர்கள் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டு இருக்கும் தெருக்களில் நீங்கள் ஒரு அனாதையாக அல்லது கைவிடப்பட்டவராக இருந்தால், நீங்கள் "சுதந்திரமாக" இருப்பீர்கள். நீங்கள் யார் சொல்வதையும் கேட்காமல் கட்டுப்பாடு இல்லாமல் சுய உள்ளுணர்வு விருப்பத்தை பயன்படுத்திக்கொண்டு வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு இருப்பீர்கள். நீங்கள் ஒரு முதிர்ந்த புத்தியை பெற்று இருந்தால், உங்களால் புத்திசார் விருப்பத்தை பயன்படுத்தி, உங்களுக்கு விருப்பமானது எதுவாக இருந்தாலும், அதை செய்ய முடியும். நீங்கள் உங்கள் ஆசைகளை பூர்த்தி செய்ய முயற்சிக்கும் போது, உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் இருக்கும் இயற்கை சக்திகள் மூலம் நீங்கள் கட்டுப்படுத்தப்படுவதையும் சிலசமயங்களில் தடுக்கப்படுவதையும் உங்களால் நிச்சயம் உணர முடியும். ஆனால் உங்களால் எந்த விஷயத்திலும் முயற்சி செய்ய முடியும்.

நீங்கள் அதிஷ்டசாலிகளாக இருந்தால், வளர்ப்புப் பெற்றோர்கள் உங்களுக்கு உதவக்கூடும். அவர்கள் உங்களை தத்து எடுத்துக்கொண்டு, தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். உங்களுடைய புதிய தாய் உங்களுக்கு அன்புடன் வழிகாட்டத் தொடங்கி உங்கள் வாழ்க்கைப் பாதையை இயக்குவாள். "நீ உன் இஷ்டம் போல இந்த அறையில் விளையாடலாம் ஆனால் மற்றவர்கள் அறையில் கூடாது," அவள் உங்களுக்கு அறிவுரை வழங்குவாள். விவேகமாக இருக்கும் அந்தத் தாய், நீங்கள் உங்கள் சொந்த வழியில் இயங்குவதற்கு பழகி இருப்பதை அறிந்து இருப்பதால், உங்களது அறைக்குள் சுதந்திரமாக விளையாடுவதற்கு அனுமதி வழங்குகிறாள். ஆனால் நீங்கள் இன்னொரு அறையில் விளையாடுவதை அவள் கவனித்தால், "நீ உன் அறையில் விளையாடு, இந்த அறையில் விளையாடக் கூடாது," என்று கடிந்துக் கொள்வாள். நீங்கள் ஒரு தாய் மற்றும் தந்தை மூலம் தத்து எடுத்துக்கொள்ளப்பட்டதால், நீங்கள் உங்கள் "சுய விருப்பத்தை" இழந்து விடுகிறீர்கள். நீங்கள் தற்போது ஒரு குடும்பத்தின் உறுப்பினராக இருக்கிறீர்கள். உங்களது பொதுநலம், கல்வி, பயிற்சி என்று அனைத்தும் அவர்களின் விருப்பத்திற்கு உட்பட்டு இருக்கிறது என்பதால் நீங்கள் உங்கள் பழக்கங்களை மாற்றி அமைத்துக்கொண்டு கீழ்படிந்து இருக்கவேண்டும். அவர்கள் உங்களை கண்காணித்து நாள் முழுவதும்

ஒழுங்குப்படுத்துவார்கள். நீங்கள் உங்கள் "சுய விருப்பத்தின்" மூலம் பிரச்சனையில் சிக்காமல் இருக்க, அவர்கள் வேண்டிய பாதுகாப்பை வழங்குவார்கள். சுதந்திரம் என்கிற நவீன கோட்பாடு, *மூலாதார* சக்கரத்தின் கீழ் இருக்கும் இருண்ட சக்கரங்களுக்கு வழிநடத்தி செல்கிறது. அங்கே கடுந்துயரம் குடிக்கொண்டு இருக்கிறது.

ஒரு தனிப்பட்ட உறவை வளர்த்தல்

நீங்கள் விநாயக பெருமானுடன் ஒரு தனிப்பட்ட உறவை வளர்க்கும் போது, அவரும் தத்து எடுத்த பெற்றோரைப் போலவே நடந்துக்கொள்கிறார். நீங்கள் உங்கள் சுய விருப்பத்தை பயன்படுத்தி பிரச்சனைகளில் சிக்குவதற்கு அவரும் அனுமதிப்பது இல்லை. வாழ்க்கை முழுவதும் உங்களுக்கு கவனமாக வழிகாட்டி, உங்கள் பாதையில் இருக்கும் உங்களது இயல்பான கர்மவினையில் இருந்து பாதுகாப்பு அளிப்பதில் அவர் அக்கறையுடன் இருக்கிறார். "நான் சிவபெருமானை வழிபடுகிறேன், முருகப்பெருமானை வழிபடுகிறேன், ஆனால் எனக்கு விநாயகரின் அறிமுகம் என்றுமே கிடைத்ததில்லை," என்று ஒருவர் என்னிடம் கூறினார். "நீங்கள் சிவபெருமானையும் முருகப்பெருமானையும் வழிபடுவது நல்ல விஷயம் தான். ஆனால் நீங்கள் விநாயக பெருமானுடன் ஒரு தனிப்பட்ட தொடர்பை உருவாக்கிக் கொள்ளவில்லை என்றால், மற்ற தெய்வகளின் வழிபாடு உங்களின் எண்ணங்கள் மற்றும் விருப்பங்களை மட்டுமே சார்ந்து இருக்குமே தவிர, அது ஒரு உண்மையான வழிபாடாக இருக்காது. நீங்கள் விநாயகருடன் ஒரு நல்லுறவை வளர்த்துக்கொள்ளவில்லை என்றால், வரையறுக்கப்பட்ட உங்கள் கோட்பாடுகளை கடந்து கிருஷ்ணர், ஐயப்பன், அம்மன், விஷ்ணு, ராமர், அனுமார், லட்சுமி, சீதை, ராதை, சிவன் அல்லது முருகப்பெருமானுடன் உங்களால் உறவை ஏற்படுத்திக்கொள்ள முடிவதில்லை. விநயாகரால் மட்டுமே உங்களை, இந்து சமயத்தின் முப்பத்தி முக்கோடி தேவர்களிடம் அறிமுகம் செய்துவைக்க முடியும். அது தான் சரியான பலனை வழங்கும்," என்று நான் பதில் அளித்தேன்.

மிகவும் மெதுவாக பக்தருக்கும் ஆனைமுகக் கடவுளுக்கும் இடையே, இந்திரியங்களுக்கு புலப்படாமல், அன்பே உருவான தனிப்பட்ட உறவு மலர்கிறது. அதன் பிறகு அவர் மனோஉணர்வு, உடல், மனம் மற்றும் உணர்ச்சி சார்ந்த பாதுகாப்பை வரங்களாக கொடுக்கிறார். அவரது பக்தர்கள் தங்களிடம் இருக்கும் சுதந்திரமான உள்ளுணர்வு சுய விருப்பத்தை பயன்படுத்தி, சிக்கல்களில் சிக்கி அதன் மூலம் மேலும் *குக்கர்மாக்கள்* செய்வதை அவர் அனுமதிப்பது இல்லை. அதற்கு பதிலாக தனது பக்தர்கள் தங்களது இயல்பான பிறவி கர்மவினைகளை அனுபவித்து, நேர்மையான வாழ்க்கையின் மூலம் *சுகர்மா* உருவாக வேண்டும் என்பதற்காக அவர் தொடர்ந்து அவர்களுக்கு கவனமாக வழிகாட்டி, பாதுகாப்பை வழங்குகிறார். அதுவே அவரது முக்கிய கடமையாக இருக்கிறது. விநாயகர் தனது பக்தர்கள் மீது அன்பையும் அக்கறையும் செலுத்துகிறார். *மூலாதார*

சக்கரம் விழித்துக்கொண்டு பக்தனுக்கு விநாயகரின் தொடர்பு கிடைத்ததும், தனியாக இருக்கும் உணர்வு எப்போதும் ஏற்படுவது இல்லை.

விநாயகர் உண்மையில் ஒரு அற்புதமான மற்றும் அன்பான கடவுளாக இருக்கிறார். குழப்பமான சூழ்நிலைகளில் இருக்கும் சிக்கல்களை நீக்கி, அவற்றை எளிமையாக்கும் ஒரு விசேஷமான திறமை அவரிடம் இருக்கிறது. அவர் பக்தர்களின் கர்மவினை சிக்கலில் இருந்து அவர்களை விடுவித்து, அவர்களின் வாழ்க்கைகளை எளிதாக்கி, சுத்தம் செய்யும் வல்லமை பெற்று இருக்கிறார். ஆனால் அவர்கள் விநாயகருடன் ஒரு தனிப்பட்ட உறவை உருவாக்கிய பிறகே இந்த நிகழ்வு நடைபெறுகிறது. அதன் பிறகு அவர்கள் வாழ்க்கைகளில் மாற்றங்கள் நிகழத் தொடங்குகின்றன மற்றும் அவர்கள் இக்கட்டான சூழ்நிலைகளை அனுபவிக்கும் போது, அவர்களுக்கு கோபம் வருவதும் இல்லை அல்லது அவர்கள் அச்சம் அல்லது கவலையுடன் வாழ்வதும் இல்லை. இக்கட்டான சூழ்நிலைகள் வரும் போது, அதற்கு தாங்கள் சேகரித்த நெரிசலான கடினமான கர்மவினைகளில் இருந்து விடுவிக்கப்படுவது அல்லது ஒரு முற்றிலும் புதிய பாதையில் அழைத்து செல்லப்படுவதே காரணம் என்பதை அவர்கள் அறிகிறார்கள். அத்தகைய சமயங்களில் அவர்கள் தங்களிடம் இருக்கும் சுதந்திரமான உள்ளுணர்வு சுய விருப்பத்தை மனப்பூர்வமாக துறந்துவிட்டு, தெய்வீக நிகழ்வுகளுடன் சண்டையிடாமல், தங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காக இறைவனின் தெய்வீக விருப்பத்திற்கு அனுமதி அளிக்கவேண்டும். அவ்வாறு ஆன்மீக பாதையில் முழுமையாக சரண் அடைவதே *பிரபத்தி* என்று அழைக்கப்படுகிறது.

அருளின் பொருள்

"தெய்வத்தின் அருள் என்றால் என்ன?" என்று அன்பர்கள் கேட்கிறார்கள். நீங்கள் உங்கள் வழிபாடு, ஒழுக்கம், பக்தி மற்றும் அர்ப்பணிப்பில் உறுதியாக நிலைத்து இருக்கும் போது உங்களுக்கு இறைவனின் அருள் சித்திக்கிறது. உங்கள் வாழ்க்கையில் அத்தகைய ஒரு வலுவான அடிப்படை இருக்கும் போது, ஒரு மாபெரும் சக்தி அல்லது ஆற்றல் விநாயகரிடம் இருக்கும் உங்களுக்கு கிடைக்கிறது. அது தான் அருள். அது உங்களுக்கு உற்சாகம் தந்து மேம்படுத்துகிறது. அது எதிர்பாராத விதமாக வருகிறது. உங்களுக்கு அருள் கிடைக்கும் போது, உங்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டு இதயமும் உருகக்கூடும். உங்கள் பார்வை தெளிவையும் கூர்மையையும் பெறக்கூடும். "அனைத்து வஸ்துக்களையும் மாறுபட்ட கண்ணோட்டத்தில் பார்க்க நாங்கள் அருளப்பட்டு இருக்கிறேன்," என்று நீங்கள் சொல்வீர்கள். உங்களுக்கு புதிய பாதைகள் திறந்துக்கொள்ளத் தொடங்கும், மற்றும் அதன் வழியாக நீங்கள் பயணிக்கும் போது, உங்கள் வாழ்க்கை அதிக முழுமையாகவும் அதிக அற்புதமாகவும் மாறிவிடும். அதன் அருள் உங்களுக்கு கிடைத்து இருப்பது ஒரு சாதாரண சம்பவமாக இருக்க வாய்ப்பில்லை.

"மகாதேவர்களின் அருள் மற்றும் அவர்கள் வழங்கும் ஒரு வரத்திற்கும் என்ன வித்தியாசம்?" என்று அன்பர்கள் விசாரிக்கிறார்கள். அருள் என்பது ஒரு வரம் ஆகாது. ஒரு வரம் என்பது நீங்கள் வேண்டிக்கொண்டதற்கு பலனாக கிடைப்பதை குறிக்கிறது. ஒரு வரம் என்பது நன்கு வரையறுக்கப்பட்டதாக இருக்கிறது. அருள் என்பது தனது குறிப்பிட்ட கர்மவினையுடன் ஆன்மா இணைந்து இருக்கும் நிலை மூலம் தோன்றுகிறது. அது ஒரு குறிப்பிட்ட காலம் வரை, நமது செயல்களை எல்லாம் தர்மத்தின் விதிகளை பின்பற்றி முறையாக செய்து இருப்பதன் மூலம் தோன்றுகிறது. அதன் பிறகு இறையருள் தோன்றுகிறது. இறையருள் என்பது ஒரு வரத்தைப் போல, உங்கள் வாழ்வில் ஒரு குறிப்பிட்ட தேவை அல்லது நிகழ்வாக இருப்பது இல்லை. அருள் என்பது அதிக பக்குவமடைந்த ஒரு முழுமையான மாற்றத்தை குறிக்கிறது. ஒரு பக்தனுக்கு இறையருள் கிடைத்த பிறகு, அவன் முன்பு போல இருப்பதும் இல்லை, அவன் தனது வாழ்க்கையின் பழைய பாதையை திரும்பிப் பார்ப்பதும் இல்லை.

நாம் அருளின் மூலம், சரியான திசையை சுட்டிக்காட்டுகிற ஆன்மீக வாழ்வில் ஆழமாக அழைத்துச் செல்லப்பட்டு, பரம்பொருளை நோக்கி செல்லும் நேரான பாதையாக இருக்கும் சன் மார்க பாதையில் கவனமாக வழிகாட்டப்படுகிறோம். அருளை பெற்ற பிறகு, நமது சிந்தனைகள் உயிரூட்டப்பட்டு, நமது வாழ்க்கை உற்சாகம் மற்றும் சக்தியின் மூலம் ஊக்குவிக்கப்படுகிறது, மற்றும் எல்லாம் சரியாகத் தான் இருக்கிறது, நம்மை சுற்றி நிகழ்வது அனைத்தும் நமது கர்மவினை, நமது தர்மம் மற்றும் கருணை நிறைந்த தெய்வீக விருப்பத்திற்கு ஏற்ப நடைபெறுகிறது என்ற மகிழ்ச்சிகரமான அறிவுடன் தினமும் வாழ்கிறோம்.

மகாதேவர்கள் வெறும் சின்னங்களாக இல்லாமல் உண்மையான தெய்வீக இருப்பாக இருக்கிறார்கள்

பலர் மகாதேவர்களை வெறும் சின்னங்கள், விசைகள் அல்லது மனதில் இருக்கும் பகுதிகளின் சித்தரிப்பாக கருதுகிறார்கள். உண்மையில் இருப்பாக இருக்கும் மகாதேவர்களை சராசரி ஆண்கள் மற்றும் பெண்கள், மகான்கள் மற்றும் முனிவர்கள், அனைத்து கலாச்சாரங்களை சேர்ந்த தீர்க்கதரிசிகள் மற்றும் சூட்சும ஞானிகள் தங்கள் அகத்தில் பார்த்தும், அவர்கள் பேசுவதை கேட்டும் இருக்கிறார்கள் மற்றும் அவர்கள் மீது இந்த மெய்ஞ்ஞான, அந்தர்லோக, உட்புற-அண்டத்தின் சக்திகள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதைப்போன்ற ஒரு இருப்பதாகத் தான் விநாயகரும் இருக்கிறார். நம்மை போல அவராலும் சிந்திக்க முடிகிறது. அவரால் பார்த்து, புரிந்துக்கொண்டு முடிவுகளை எடுக்க முடிகிறது. அந்த முடிவுகளின் உட்குறிப்புக்கள் மற்றும் நுணுக்கங்கள் அதிகமாக இருப்பதால், வரையறைக்கு உட்பட்ட நமது மனித புலன்களை பயன்படுத்தி அவற்றை நம்மால் என்றுமே புரிந்துக்கொள்ள முடியாது.

இந்து தெய்வங்கள் உண்மையான இருப்புக்கள் இல்லை என்றும், அவை வெறும் சின்னங்கள் தான் என்றும் சமீபகாலத்தில் மேற்கத்திய கலாச்சாரத்தின் சமயப்பணியாளர்கள் மற்றும் மற்றவர்கள், இந்து மக்களிடம் தொடர்ந்து கூறி வந்துள்ளனர். அதனால் துரதிஷ்டவசமாக, இதை உண்மை என்று நம்பிய பலர், தங்கள் தெய்வங்களை அந்த முறையில் நினைக்க ஆரம்பித்துள்ளனர். இந்துக்களிலும் சிலர் அந்தர்லோக சக்திகளை உண்மை என்று நம்புவது இல்லை. அவர்கள் இந்த பூலோகத்தில் பார்க்கும் மக்களை மட்டும் உண்மை என்று நம்புகிறார்கள். நீங்கள் அவர்களிடம் மாறுபட்ட கருத்தை சொல்ல முயற்சிக்க வேண்டாம். வழிபாடு, தியானம், ஆன்மீக ஒழுக்கம் மற்றும் மெய்ப்பொருளின் தேடலை மையமாகக் கொண்ட தலைசிறந்த தத்துவத்தை அவர்களுக்கு அறிமுகம் செய்வது சாத்தியம் என்றாலும் மிகவும் கடினமாக இருக்கும். ஆனால் தினமும் லௌகீக உணர்வில் வாழ்பவர்களுக்கு, இது மிகவும் உயரிய குறிக்கோள்களாக இருக்கிறது. அந்தர்லோகங்கள் பற்றிய அறிவு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஒரு தனிப்பட்ட உணர்தல் கிடைக்க வேண்டும். இது லௌகீக ஈடுபாட்டுடன் இருப்பவருக்கு மிகவும் மெதுவான செய்முறையாக இருக்கும். இந்த செய்முறையில் விநாயகரால் மட்டுமே உதவமுடியும். விநாயகரிடம் முதலில் அறிமுகம் கிடைப்பதற்கு, அவருடைய கோயில்கள் அல்லது சந்நிதிகளில் ஏதாவது ஒன்றிற்கு லௌகீகவாதி சென்று தரிசனம் செய்து வரவேண்டும். அவரது அறிமுகத்திற்கு முதல் தரிசனம் மட்டுமே போதுமானதாக இருக்கும்.

தெய்வத்தை எவ்வாறு அணுகுவது

நீங்கள் தெய்வத்தை அணுகும் போது, விநாயகர் உங்கள் இருப்பை உணர்கிறார் என்றும், நீங்கள் அவரை பார்ப்பதைப் போன்று அவரும் உங்களை பார்க்கிறார் என்றும் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். நீங்கள் அவரை இவ்வாறு மனித கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது, நீங்கள் அவரை நன்றாக புரிந்துக் கொள்வீர்கள். நீங்கள் அவருடன் ஒரு இயல்பான மனித உறவை உருவாக்கிக் கொள்வீர்கள். விநாயகருடன் இந்த உறவை வளர்த்துக் கொள்வது, குறிப்பாக உங்களுக்கு முக்கியமானதாக இருக்கும். நமது உள்ளுணர்வு-அறிவுணர்வு மனநிலையை நிர்வகிக்கும் தெய்வமாக விநாயகர் இருப்பதால், அவருடன் நட்புணர்வை வளர்த்துக் கொள்வது கடினமாக இருக்காது. அவர் விலங்குகள், பூச்சிகள், பறவைகள் மற்றும் மீன்களின் உள்ளுணர்வு மனதை நிர்வகிக்கிறார். அத்துடன் அவர் இயற்கை என்கிற *பிரக்ரிதியின்* சக்திகளையும் நிர்வகிக்கிறார். அறிவியல் மற்றும் ஆழமான அறிவைக் குறிக்கும் உயர்நிலை அறிவுணர்வு மனதின் தெய்வமாகவும் விநாயகர் விளங்குகிறார். இதன் காரணமாக அவர் கணங்களின் அதிபதியாக கணபதி என்று அழைக்கப்படுகிறார். அவர் கணங்களின் தலைவராக இருப்பதால், சிந்தனை உருவாகும் பல்வேறு பகுதிகள் வழியாக சாட்சி தடையில்லாமல் பயணம் செய்ய வேண்டும் என்பதற்காக, அவர்

அறிவுணர்வு மனதை ஒழுங்குப்படுத்தி தெளிவை ஏற்படுத்துகிறார். அவர் விக்கினங்களின் தலைவராக இருப்பதால், தொடர்ச்சியான வாழ்க்கை அனுபவங்கள் காரணமாக வாழ்முறையில் முன்னேற்றம் ஏற்படும் போது, கர்மவினை அதிக முழுமையை அடைவதற்காக அவர் விக்கினங்களை உருவாக்கி நீக்கவும் செய்கிறார்.

இந்திய கோயில்களில் நாள் முழுவதும் பக்தர்கள் உண்டியலில் காணிக்கையாக செலுத்திய வெள்ளி, தங்கம் மற்றும் அனைத்து வகை பரிசுகளும் கூட, அந்தி சாயும் நேரத்தில் தெய்வத்திற்கு முன்பாக கணக்கிடப்படுகின்றன. அவரும் இந்த நடவடிக்கையை கண்காணிக்கிறார். இறுதியில் காணிக்கையாக பெறப்பட்ட கணக்கு அவருக்கு தெரிவிக்கப்படுகிறது. அவர் இதைப்பற்றி அறிந்து இருக்கிறார். இரவு நேரத்தில் தெய்வம் சம்பிரதாய முறைப்படி உறங்க வைக்கப்படுகிறார். கோயில் நிர்வாகிகள் அவரை ஒரு மனிதராகவே கருதுகிறார்கள். காலையில் திருப்பள்ளி எழுச்சி மூலம் அவரை விழிக்க வைத்து, பின்னர் நீராட்டி வஸ்திரம் அணிவிக்கப்படுகிறது. ஆகவே தெய்வத்திற்கு ஒரு மனிதரைப் போலவே உபசாரம் செய்யப்படுகிறது. இத்தகைய தீவிர பக்தியை மூன்றாவது லோகம் கண்காணித்து பாராட்டுகிறது.

மூன்று லோகங்களை தொடர்புப்படுத்தும் இந்து சமய மாயம்

"அந்தர்லோகங்கள் எங்கே உள்ளன?" என்று நீங்கள் யோசிக்கக்கூடும். நீங்கள் அங்கே கருத்தரிப்பதற்கு முன்பாக இருந்தீர்கள். அந்த லோகங்கள் இந்த பேரண்டத்தில், தூல வடிவில் இல்லாத நுண்ணுலத்தில் உள்ளன. நீங்கள் கருத்தரித்த போது, நீங்கள் உங்கள் தாயின் வயிற்றில் ஒரு புதிய தூல உடலுடன் வளர ஆரம்பித்தீர்கள். அந்த சமயத்தில் நீங்கள் உங்கள் சூட்சும உடலுடன், தூல வடிவில் இல்லாத நுண்ணுலகத்தில் வாழ்ந்து வந்தீர்கள். உங்களுக்கு இருப்பு உறுதியாக இருந்தது என்றாலும், நீங்கள் இந்த தூல பேரண்டத்தில் இருக்கவில்லை.

தூல வடிவில் இல்லாத அந்த நுண்ணுலகில் தேவர்களும் கடவுள்களும் இருக்கின்றனர். தூல உலகிற்குள் பல உலகங்கள் அல்லது இருப்பின் லோகங்கள் இருப்பதால், அவர்கள் லௌகீக இருப்பிற்குள் உண்மையில் இருக்கிறார்கள். நீங்கள் தூல நுண்ணுலகத்தில் நுழைந்து, ஒரு உயிரணு மற்றும் ஒரு அணுவில் தொடர்ந்து உட்புறமாக சென்றால், நீங்கள் மகாதேவர்களின் பேரண்டத்தில் நுழைவீர்கள். இது சிவலோகம் அல்லது மூன்றாவது உலகம் என்று அழைக்கப்படுகிறது. அவர்களின் பேரண்டம் நமது பேரண்டத்தைக் காட்டிலும் பெரிதாக இருக்கிறது.

இந்த உட்புற ஆகாச தத்துவம் நமது சாதாரண கற்பனை சக்தியில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. அவர்களின் பேரண்டம் இந்த பேரண்டத்திற்குள் இருந்தாலும், அது இந்த பேரண்டத்தை காட்டிலும் பெரிதாக இருக்கிறது. அந்த

பரந்தவெளி இன்னொரு பரிமாணத்தில் இன்னொரு உலகில் இருக்கிறது. ஒவ்வொரு லோகமும் இன்னொரு லோகத்தை காட்டிலும் பெரிதாக இருக்கிறது. இந்த தூல உலகை காட்டிலும் உயிர் துறந்த ஆன்மாக்களின் பிரேதலோகம் பெரிதாக இருக்கிறது, மகாதேவர்களின் லோகம் சொர்க்க லோகங்களை காட்டிலும் மிகவும் பெரிதாக இருக்கிறது. அதனால் இந்த தூல உலகின் ஒரு சிறிய இடத்தில் பல்லாயிரக்கணக்கான தேவர்கள் இருக்கிறார்கள்.

பூஜையின் மூலம் தொடர்பை உருவாக்குதல்

ஒரு கோயில் பூசாரி தனது கோயிலில் அந்தர்லோகங்கள் மற்றும் அங்கிருக்கும் உயிர் சக்திகளை ஆவாகனம் செய்யும் போது, அவர் மனப்பூர்வமாக ஒரு தொடர்புப் பாதையை உருவாக்குகிறார். அவர் அதில் வெற்றி பெற்றதும், இந்த தூல உலகிற்கு *தெய்வீக* பேரண்டத்துடன் தொடர்பு கிடைக்கிறது. கோயிலில் இருக்கும் தெய்வத்தின் கற்சிலை மீது இறைவன் அல்லது மகாதேவரின் உருவம் பக்தர்களுக்கு தெரியும் அளவிற்கு, அந்த பூசாரி அந்தர்லோகங்கள் மற்றும் வெளிப்புற லோகங்களுக்கு மத்தியில் தொடர்பை ஏற்படுத்த சிரத்தையுடன் முயற்சி செய்கிறார் என்றும் சொல்லலாம். இறைவன் அதர்லோகத்தில் இருப்பதைப் போலவே பக்தர்களுக்கு தென்படுகிறார். ஞானோதயம் பெற்ற எண்ணற்ற ஆன்மாக்கள் இறைவனின் கண் அசைவுகளைப் போன்ற சம்பவங்களை பார்த்து இருக்கிறார்கள் மற்றும் இறைவன் தங்களிடம் பேசுவதை சில குருமார்கள் உண்மையில் கேட்டு இருக்கிறார்கள். இது நடைபெறும் போது, இறைவன் அந்தர்லோகத்தில் தான் இருக்கிறார். அந்த கோயில் அவரது லோகத்தின் மீது விழிப்புணர்வை உருவாக்கிக்கொள்கிறது அல்லது ஒரு தொலைக்காட்சியைப் போன்று தன்னை ட்யூன் செய்துக்கொள்கிறது என்று சொல்லலாம். ஒரே தொலைக்காட்சி நிலையத்துடன் ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிப் பெட்டிகளை ட்யூன் செய்து, உண்மை சம்பவங்கள் நடைபெறும் போது அதை நம்மால் காண முடிகிறது.

அதனால் இறைவன் ஒரு கோயிலின் சந்நிதியில் இருந்து இன்னொரு கோயிலின் சந்நிதிக்கு செல்வது இல்லை. இது தொலைப்பேசி மூலம் உங்கள் நண்பருக்கு டயல் செய்து, அவரது குரல் வெகு தூரத்தில் இருந்து உங்கள் காதுகளுக்கு வந்தடையும் செய்முறையை போன்றது ஆகும். உங்கள் நண்பரின் குரல் தெளிவாக கேட்கிறது என்றாலும், அவர் தனது இடத்தை விட்டு நகரவில்லை. பூலோகம் அல்லது ஆன்மாவின் லோகங்கள் அல்லது *ஆகாசத்தை* குறிக்கும், பருமனான மற்றும் சூட்சும லோகங்களுக்கு மத்தியில் இருக்கும் தொடர்பை ஒரு தொலைபேசியுடன் ஒப்பிடலாம்.

நாம் "இறந்ததும்" எங்கே செல்கிறோம்?

ஒருவர் இறந்த பிறகு அவர் ஆன்மா எங்கே செல்கிறது? அது நுணுக்கமான நுண்ணுலகத்தில் நுழைகிறது மற்றும் அதன் பிறகு ஒரு பெரிய பேரண்டம் அல்லது ஒரு பெரிய உலகில் நுழைகிறது. அது ஒரு தூல உடலுடன்

வாழ்வதில்லை என்பதால் இந்த பருமனான பேரண்டத்தில் சில காலத்திற்கு செயல்படாமல் இருக்கிறது. ஆன்மா மரணத்தின் போது, தனது தூல உடலை கைவிட்டு, சூட்சும லோகங்களின் ஆழத்திற்கு தொடர்ந்து பயணிக்கிறது. உள்பொருள் அல்லது இருப்பின் அந்த அந்தர்லோகங்களுக்கு என்று தனிப்பட்ட விரிவான பரவெளி, தனிப்பட்ட பேரண்டம் இருக்கிறது.

உணர்வுள்ள அல்லது வெளிப்புற மனதின் கற்றறிந்த யதார்த்தத்தில் அதிகம் மூழ்காமல் இருந்து, பேசத் தெரிந்த நான்கு அல்லது ஐந்து வயது சிறுவர்கள், தாங்கள் பிறந்த தேதி மற்றும் அதற்கு முந்தைய வாழ்க்கையைப் பற்றி தங்கள் பெற்றோர்களிடம் அவ்வப்போது சொல்லிக்கொண்டு இருப்பார்கள். "நான் இங்கே வருவதற்கு முன்பாக இருந்த உலகம், இந்த உலகை காட்டிலும் பெரிதாக இருந்தது," என்று கூறும் குழந்தைகளை நான் பார்த்து இருக்கிறேன். அவர்கள் அங்கே தொடர்ந்து நடக்கும் நடவடிக்கைகளைப் பற்றி பேசி, அங்கே வாழும் மக்களைப் பற்றி விளக்கினார்கள். ஆனால் அவர்கள் பெரியவர்களாகி வெளியுலக சிந்தனை செய்முறைகளில் அதிகம் ஈடுபடத் தொடங்கியதும், இந்த நினைவுகள் மறந்து விடுகின்றன. இத்தகைய அனுபவ அறிவு காரணமாக மதம் நமக்குள் புத்துணர்வை பெற்று, அதிக யதார்த்தமாகவும் பயனுள்ளதாகவும் விளங்குகிறது. உண்மையான மதம் என்பது நமது வாழ்நாள் முழுவதும் அதிக யதார்த்தமாக, உறுதியாக மற்றும் நிச்சயமானதாக இருக்கவேண்டும். நாம் இந்த அந்தர்லோகங்களைப் பற்றி விசாரம் செய்யும் போது, அந்த லோகங்களுக்கு மத்தியில் இருக்கும் தனிப்பட்ட மற்றும் பரஸ்பர தொடர்பைப் பற்றி நாம் நமது உட்புறத்தில் இருந்து கற்றுக்கொள்கிறோம்.

தாங்கள் அனுபவிப்பதாக தீர்க்கதரிசிகள் விவரித்த எண்ணற்ற காட்சிகள், தங்களது இருப்பு மற்றும் தங்களது முன்னறிவிப்புகள் மூலம் மனித நேயத்திற்கு அருளை வழங்கிய தேவதைகள் அல்லது தேவர்களைப் பற்றி சிந்தித்து பாருங்கள். பகுத்தறிவினால் போதிய விளக்கம் அளிக்க முடியாத மறைஞான மனித சம்பவங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அவை அனைத்தையும் இருப்பின் அந்தர்லோக கண்ணோட்டத்துடன் சிந்தித்துப் பார்த்தால் எல்லாம் தெளிவாகிவிடும். ஆமாம் அது ஒரு நாள் உங்கள் அகத்தில் இருந்து வெளியுலக புத்திக்கு தெளிவாகும். இதுவே உண்மையான அறிதல் ஆகும். இதுவே சமயத்தின் கட்டமைப்பு ஆகும். இது உண்மையான இந்து சமயமாக விளங்கி, தினசரி வாழ்க்கையின் அடிப்படையாக விளங்குகிறது. இந்த அறிதல் உங்கள் உணர்வில் அறிந்த நிலையின் ஆழத்தில் இருந்து வெளிவரும் போது, மகாதேவர்கள் வாசம் செய்யும் இடமாக கோயில் உங்களுக்கு காட்சி அளிக்கும்.



விநாயகரை வழிபட்டு தியானம் செய்தல்

வழிபாடு என்கிற பக்தி யோகமானது, பக்தனின் இயல்பிற்கு ஏற்ப முழுமை பெறவேண்டிய ஒரு உறுதியான ஒழுங்குமுறை மற்றும் பயிற்சி ஆகும். குளித்துவிட்டு உங்கள் மனதை தயார் செய்துக்கொண்ட பிறகு, விநாயகரின் திருவடிகளில் வைப்பதற்கு ஒரு சிறிய பாதகாணிக்கை அல்லது பூக்களுடன் அவரது சந்நிதி அல்லது கோயிலுக்கு செல்லுங்கள். உலகில் மிகவும் முக்கியமான நபரை சந்திக்கப் போகிறோம் என்ற எண்ணத்துடன் அவரை தரிசிக்க செல்லுங்கள். அவருக்கு உங்கள் காணிக்கையை செலுத்தி நமசுகாரம் செய்யுங்கள். நீங்கள் நமசுகாரம் செய்யும் போது, உங்கள் முதுகுத்தண்டில் இருந்து பாய்ந்து வரும் அன்பு மற்றும் பக்தியின் சக்திகள் உச்சந்தலை வழியாக வெளிவந்து வீட்டு பூஜை அறை அல்லது கோயிலின் கருவறையில் நுழைவதை உணர்ந்து, விநாயகருக்கு அந்த சுத்தமான ஆன்மீக சக்திகளை சமர்ப்பணம் செய்யுங்கள். அதன் பிறகு நிமிர்ந்து நின்று அந்த கருவறை பிரகாரத்தை மெதுவாக மூன்று முறை வலம் வரவும்.

தியான யோகமானது வழிபாட்டிற்கு பிறகு நீங்கள் செய்யக்கூடிய ஒரு ஒழுங்குமுறை ஆகும். இதனை சிரத்தையுடன் தொடர்ந்து செய்து வந்தால், அது அதற்கேற்ற பலன்களை தருகிறது. அந்த தெய்வத்தின் முன்பாக அமர்ந்து, உங்கள் தந்தை மற்றும் தாய் மற்றும் அதன் பிறகு குருவை கற்பனை செய்து, இறுதியாக ஆனைமுகக் கடவுளை *தரிசனம்* செய்யுங்கள். இனி அவரது உருவம், கண்கள், காதுகள், துதிக்கை, தந்தங்கள் மற்றும் இந்த உலகமே வாசம் செய்யும் அவரது வயிற்றை தியானம் செய்யுங்கள். தொடக்கத்தில் உங்கள் மனம் வழக்கம் போல அன்றாட வாழ்க்கையின் சிந்தனைகளில் சுற்றிக்கொண்டு இருக்கும். அதன் கவனத்தை மீண்டும் உங்கள் பெற்றோர்கள் மற்றும் உங்கள் குரு மீது திசை திருப்பி முழுமுதற்கடவுளை வழிபட்ட பிறகு, நமது பழமையான சனாதன

தர்மத்தின் முப்பத்தி முக்கோடி தேவர்களில் உங்களுக்கு விருப்பமான ஒரு தெய்வத்தை வழிபடவேண்டும்.

தொடர்ச்சியான சிந்தனையை பராமரித்து, இறைவனின் *தரிசனத்தில்* இருந்து மனம் விலகாமல் இருக்க வைப்பதே இதன் நோக்கம் ஆகும். நீங்கள் இந்த தியானத்தை, வழிபடப்படும் சிலையின் தூல அம்சங்கள் பற்றிய விசாரத்துடன் தொடங்கலாம். அது கற்சிலையாக இருந்தால், கல்லைப் பற்றி சிந்தியுங்கள். அது எவ்வளவு பெரியதாக இருக்கிறது? அது எங்கிருந்து தோண்டி எடுக்கப்பட்டு, எவ்வாறு செதுக்கப்பட்டது? தெய்வத்தின் பல்வேறு அங்கங்களின் பெயர்கள் மற்றும் அவை உணர்த்தும் பொருள் என்ன? அவர் பயன்படுத்தும் சின்னங்கள் மற்றும் அவற்றின் பொருள் என்ன? அவற்றை நினைவுக்கூருங்கள். ஆனால் அது விநாயகரின் உருவப்படமாக இருந்தால், அந்த படம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்று சிந்தியுங்கள். உங்கள் மனதில் விநாயகரைப் பற்றி தொடர்ந்து சிந்தியுங்கள். அதன் பிறகு நீங்கள் தூல பண்புகள் அதிகம் இல்லாத அம்சங்கள் மீது கவனத்தை திருப்பலாம். உங்கள் சாட்சி அல்லது மனமானது முற்றிலும் தொடர்பில்லாத பகுதிகள், நேற்றைய கவலைகள் மற்றும் நாளைய சந்தேகங்களில் சுழன்று கொண்டிருப்பதை உங்களால் அறிய முடியும். அது அவ்வாறு சுழன்றுக்கொண்டு இருக்கும் போது, சாட்சியை மீண்டும் நீங்கள் கவனம் செலுத்தும் விநாயகர் சிலையின் மீது திருப்புங்கள். அவர் மீது மீண்டும் சிந்தனை ஓட்டங்களை திருப்புங்கள் மற்றும் மனம் மீண்டும் அலைந்து திரியும் போது, உங்கள் மனஉறுதியை பயன்படுத்தி மீண்டும் அதை அவரது *திவ்ய தரிசனத்தின்* மீது திருப்புங்கள்.


இது தொடக்கத்தில் கடினமாக இருக்கலாம் என்றாலும், தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் உங்கள் அகத்தில் இருந்து புதிய அறிவு விரிவாக்கம் பெறும். அந்த அறிவு உங்களிடம் இருப்பது உங்களுக்கும் தெரியாது மற்றும் அதை நீங்கள் வெளியுலகில் படித்தும் இருக்கமாட்டீர்கள். அது நடைபெறும் போது ஒருமுகச்சிந்தனை வலுவடைந்து தியானத்திற்கு வழி வகுக்கிறது. உங்களது சாட்சி வெளிப்புற மனதின் பகுதிகளில் கவனத்தைத் திருப்பாமல், அன்பான விநாயகரைப் பற்றி வரிசையாக இருபது, முப்பது அல்லது ஐம்பது சிந்தனைகளுடன் இருக்க முடியும். இந்த பயிற்சிகளின் போது திரைத்தசை மூலம் சுவாசிக்கக் கற்றுக்கொண்டால், உங்களுக்கு பயன் தருவதாக இருக்கும். நலிசோர்வு அல்லது முயற்சி இல்லாமல் இயல்பான முறையில் ஆழமாக சுவாசிக்கவும். நாம் சுவாசத்தின் பிராண சக்திகளை கட்டுப்படுத்தும் போது, அங்கும் இருக்கும் அசையாமல் உறுதியாக நிலைத்து இருக்குமாறு அத்துடன் சாட்சியையும் கட்டுப்படுத்துகிறோம். படபடப்பு இல்லாமல் நிலையாக அமர்ந்து இருப்பதைப் பற்றி, உங்கள் உடலுக்கும் நீங்கள் கற்றுத் தரவேண்டும். இவை அனைத்தும் உடனடியாக இல்லாமல், காலப்போக்கில் கைக்கூடும். அதனால் பொறுமையாக இருங்கள். கவனச்சிதறல்கள் தோன்றும் போது, வருத்தம் அடைவதால் மேலும் தீவிர கவனச்சிதறல் ஏற்படும் என்பதால், அவ்வாறு

வருத்தம் அடைவதை தவிர்க்க வேண்டும். கவனச்சிதறல் ஏற்படும் ஒவ்வொரு தருணமும், நீங்கள் வலுவடைந்து அதிக ஒருமுகப்பட்ட மனதோடு இருப்பதற்கு உங்களுக்கு கிடைத்த ஒரு வாய்ப்பாக கருதி, அமைதி அடைந்து சாட்சியை மீண்டும் விநாயகர் மீது உறுதியாக திசை திருப்புங்கள்.

நீங்கள் இந்த எளிமையான தியானத்தை உங்கள் குழந்தைகளுக்கு கற்றுத் தரவேண்டும், மற்றும் இதன் மூலம் நமது சமயத்தின் மகாதேவர்களைப் பற்றி குடும்பத்தினர் அனைவரும் அதிக தகவல்களை தெரிந்துக் கொள்வார்கள். இதனால் அந்த மகாதேவர்களைப் பற்றி படிக்க, அவர்கள் கதைகளை படித்து தெரிந்துக்கொள்ள மற்றும் அவர்களைப் பற்றிய மந்திரங்களை மனப்பாடம் செய்ய எல்லோருக்கும் உத்வேகம் கிடைக்கும். சின்னங்கள் மற்றும் கதைகளைப் பற்றி அலசி ஆராய்ந்து, தெய்வீக அம்சங்களின் உண்மையான இயல்பைப் பற்றி தெரிந்துக்கொள்ளும் போது, உங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினரின் மனங்களில் மகாதேவர்கள் உற்சாகத்தை பெறுகிறார்கள். இந்த தியானத்தை தினமும் பல மணி நேரங்கள் தொடர்ந்து செய்யவேண்டிய அவசியம் இல்லை. தினமும் சில நிமிடங்கள் செய்தால் போதும். நீங்கள் சுருக்கமான தியானத்தை முடித்த பிறகு, அவரை தரிசித்துக்கொண்டே அமைதியாக அமர்ந்து, அவரது சக்திகளுடன் உங்களது பிராண சக்தி வெளியீடுகள் ஐக்கியமாவாதை ரசியுங்கள். கோயிலை விட்டு வெளியேறும் போது, அந்த தரிசனம் மற்றும் அன்பை வெளியே எடுத்துச் சென்று, உலக மக்களுக்கு பரப்புங்கள். இதன் மூலம் இந்து சமயத்தின் அன்பான கடவுளைப் பற்றி அவர்களும் அறிந்து தங்களது அன்பை செலுத்தட்டும்.




CHAPTER TWO
Letters from
Lord Gaṇeśa
Toad Egg Gautier



விநாயக பெருமான் அனுப்பிய கடிதங்கள்

ஸ்ரீ கணேஷஸ்ய பத்ராணி

श्रीगणेशस्य पत्राणि



ரிஷிகளுக்கு மிகவும் மங்களகரமான நாட்களில், நேரடி தொடர்பின் மூலம் ஒரு கடவுளிடம் இருந்து ஆசிகள் கிடைக்கின்றன. மகாதேவர்களிடம் இருந்து கிடைக்கும் இத்தகைய மறைஞான தகவல்கள் சுருதி என்று அழைக்கப்படுகின்றன. வடக்கு பசிபிக் கடலுடன் கவாய் தீவின் வாய்லுவா நதி இணைகின்ற இடத்தில், பல நூறு வருடங்களுக்கு முன்பாக *லோனோ* என்ற பெயரில் ஹவாய் நாட்டு பூசாரி மூலம் விநாயகர் ஆவாகனம் செய்யப்பட்ட ஒரு பழங்கால கோயிலுக்கு அருகில், 1970 களின் தொடக்கத்தில் எனது மூன்றாவது கண்ணாக இருக்கும் *ஆக்ஞா சக்கரம்* வழியாக நான் மனோஉணர்வுடன் கூர்ந்து நோக்கிக்கொண்டு இருந்த போது, எனது சத்குருவான சிவ யோகசுவாமி ஆசான் வழங்கிய அருளின் மூலம், எனக்கு இந்த பாடத்தில் எழுத்து வடிவில் இடம்பெற்றுள்ள காட்சி தோற்றமளித்தது. *ஆகாசத்தில்* தோன்றிய ஒரு மிகப்பெரிய சுருள்வடிவ சுவடியில் எழுதப்பட்டு இருந்த பொன்னிற எழுத்துக்களை நான் வியப்புடன் கூர்ந்து நோக்கி புரிந்துக்கொள்ள ஆரம்பித்தேன். உதவியாளர் எழுதுவதற்கு அந்த எழுத்துக்களை என்னால் வாசிக்க முடிந்த போது, அவை நன்றாக தென்பட ஆரம்பித்து இருந்தன. விநாயகரிடம் இருந்து கடிதங்களாக வெளிப்பட்ட அந்த மூன்று சுருள்வடிவ சுவடிகள், உங்களுடன் பகிர்வதற்கு இங்கே வெளியிடப்பட்டுள்ளன. ஆன்மீக தத்துவம் பற்றிய இந்த விசேஷமான தகவல்கள், ஏற்ற இறக்கத்துடன் கூடிய உரைநடையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் கவனமாக படிக்கும் போது, இந்த மகாதேவர் நம்மையும் பூலோகத்தையும் எவ்வாறு பார்க்கிறார் என்பதைப் பற்றிய ஒரு வலுவான புரிதல் நமக்கு கிடைக்கிறது.

விநாயகரிடம் இருந்து வந்த முதல் கடிதம்



உங்கள் கோயில்களுக்கு பளபளப்பு, மினுமினுப்பு மற்றும் ஒளிர்வை கொடுங்கள்.
அவற்றை நன்றாக சுத்தம் செய்யுங்கள். இந்த மினுமினுப்பு
காண முடியாதவர்கள் கண்களுக்கு காட்சி அளிக்கின்றன.
சிவபெருமான் சந்நிதியில் இருக்கும் பொன்னிற அரியணைக்கு காவலாக இருங்கள்.
அங்கே விளக்கேற்றி திறந்து வைத்து இருங்கள். அவரது
திரு உருவ மேனியில் இரவு தென்படுவதில்லை.
அவர் குளிர்ச்சி மற்றும் வெப்பத்துடன் இருக்கும் சூரியனாக இருக்கிறார்.
அகத்தின் ஆழத்தில் சுழலும் சக்கரங்களின்
கூர்மையான பார்வை
உங்கள் கோயில் ரங்கராட்டின சக்கரங்களின் மினுமினுப்பு மற்றும் சலசலப்பு
வழியாக ஊடுருவிச் செல்கிறது.
இவை பெருக்கெடுத்து வரும் தரிசனத்தை ரசிக்கின்றன. சங்கிலியைப் போன்ற
அறியாமை இருளின் வட்டத்தகடுகளில் சிக்கியவர்களுக்கு பளபளப்பு மற்றும் பூக்களுள்
மட்டுமே தென்படுகின்றன.

நாங்கள் பூஜையில் அழைக்கப்பட்டதால் வருகை தரும் போது,
பார்க்க முடியாதவர்கள் எங்களுக்கு தென்படுவதில்லை. எங்களை பார்க்க
முடிந்தவர்களை, நாங்கள் கோயிலில் வண்டு போன்ற அவர்களின் உருவங்கள்
அன்புடன் தரைகளை அலங்கரித்து இருப்பதை தெள்ளந்தெளிவாக காண்கிறோம்.

அழகுக்கு அழகு சேர்ப்பதில் சைவ பிராமண ஆன்மாக்கள்
என்றும் தயங்குவதில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.
கோயில் புதிதாக காட்சி அளிக்க பொன்னிற உருவங்களுக்கு

தங்க முலாம் பூசுங்கள். ஒவ்வொரு சக்கரத்தின் கவனத்தையும் கோருங்கள்;
ஒன்று இன்னொன்றை சுழற்றிய பிறகு இன்னொன்றை சுழற்றுகிறது.

பொன்னிறத்தில் இருக்கும் அவற்றின் அடிப்பகுதி, சுக்கான், நங்கூரன்
மற்றும் ஒருவர் கேட்கும் ஒலி மற்றும் சுரப்பிகளை கட்டுப்படுத்தும் வாசனை
தூண்டுதலை வழங்குகின்றன.
அதன் பிறகு சக்கரங்கள் அனைத்தும் சுற்ற தொடங்கியதும்,
உங்கள் கோயில் என்றும் புதிதாக காட்சி அளிக்கும்.

சிலர் பார்க்கிறார்கள் என்பதையும், மற்றும் சிலர்
தலைகுனியாமல் வியப்புடன் அபிஷேக வடிகால் வழியாக
வெளிவரும் ஒலியையும் காட்சியையும் நின்று பார்த்துக்கொண்டு இருப்பதையும்
நீங்கள் உணர்ந்ததும், கதவை திறக்க
தயங்க வேண்டாம். உள்ளே நுழைபவர்கள்
உறுதியாக தரையில் விழுந்து நமசுகாரம் செய்வார்கள்.

அதை தங்க முலாம் பூசி சுத்தமாகவும் புதிது போல பளபளப்பாகவும் வைத்து இருங்கள்.
அது தான் நீங்கள் செய்யவேண்டிய வேலை.

அன்புடன்,
விநாயகப் பெருமான்

விநாயகப் பெருமானிடம் இருந்து வந்த இரண்டாவது கடிதம்



உங்கள் நடைப்பயணம் சுவடுகளை விட்டு செல்வதால்,
உங்கள் நடைவேகத்தில் கவனமாக இருங்கள்.

ஒவ்வொரு அடிச்சுவடும் ஒரு வெகுமதி அல்லது
ஒரு தடையாக இருக்கிறது. நீங்கள்
நடந்து வந்த பாதை மற்றும் இதுவரை
நடக்காத பாதையை கவனிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இது
உங்களை எனக்கு அருகில் அழைத்து வருகிறது. நான் எதையும் செய்யவில்லை.
நான் ஒரு இடமாக இருந்தால், நான் இருப்பதில்லை. நீங்கள் ஒரு இடமாக இருந்து,
ஒரு செயலை செய்கிறீர்கள். நீங்கள் இருப்பதில்லை.

உன்னிடத்தில் எனது சாயல் சிறிதளவு இருக்கிறது என்பது
உண்மையாக இருப்பதாலும், உங்களது வெளித்தோற்றம் நீங்களாக
இருப்பது இல்லை என்பதாலும், நீங்கள் உங்கள் மனதில் உங்கள் பாதையின்
பின்பகுதி மற்றும் முன்பகுதியை நினைவில் வைத்து இருக்கும் போது,
கர்மத்தின் மூலம் தர்மத்தை சுலபமாக சமன் செய்யலாம்.

எப்போதும் வெறுமையில் வாழ்ந்தால், உங்கள் குறிக்கோள்
உடனடியாக பூர்த்தியாகும். நீங்கள் நீண்டகாலம் வாழவேண்டிய அவசியமில்லை,
ஆனால் வாழும் போது முழுமையாக வாழ வேண்டும். எப்போதும் நீங்கள்
முழுமையாக இருங்கள்.

மனம் வழியாக நாம் பயணம் செய்கிறோம் என்கிற எண்ணம்,
அல்லது அதுவாகவே இருக்கிறோம் என்கிற எண்ணம், உண்மை இல்லை.
எந்த விழிப்புணர்வுடன் நீங்கள் பயணம் செய்வதாக நினைக்கிறீர்களோ,
அல்லது எது விழிப்புடன் இருப்பதாக நினைக்கிறீர்களோ, அது உண்மை இல்லை.
அப்படியென்றால் இருப்பது என்ன?

அது மனதிற்கு, சாட்சிக்கு ஒரு மர்மமாக இருக்கிறது,
ஆனால் நாம் இருவரும் நெருங்கி வருவதன் மூலம்
அதற்கு ஒன்றாக தீர்வு காணலாம். அதை நாம் இப்போதே தொடங்கலாம்.

அன்புடன்,
உமாகணேஷ்வரன்.

விநாயகரிடம் இருந்து வந்த மூன்றாவது கடிதம்



தெளிவான ஒருமுகப்பட்ட மனது மற்றும்
சிக்கன உணர்வுடன் இருக்கும் போது
உங்களுக்குள் இரக்க உணர்வு தோன்றுகிறது.
ஒரு நுணுக்கமான அறிவின் பயன்பாட்டிற்கு காரணமாக இருக்கும்
வளர்க்கப்பட்ட விசாலமான திறமையில் இருந்து
அறிவை ஒருமுகப்படுத்த முடிகிறது. அதனால் இந்த வழிகளின் மூலம்,
மனதில் இரக்கத்துடன் வாழ்க்கை மற்றும் சகாக்களிடம் அடக்கமான தோற்றம்
மற்றும் அணுகுமுறையை வளர்க்க வேண்டும்.

நீங்கள் அறிவுப்பூர்வமாக மற்றவர்களிடம் இரக்கத்தை
வெளிப்படுத்தவில்லை என்றால் பேசுவது மற்றும் சிந்திப்பதை தவிர்த்திடுங்கள்.
ஏனென்றால் உண்மையான அறிவு என்பது அகத்திலும்,
உங்களுக்குள் அந்த அறிவு தோன்றுவதற்கு அகத்தில் தூண்டுதலை வழங்கும்
குருவின் உபதேசத்தை கேட்பதன் மூலமாகவும் வளர்க்கப்படுகிறது.

இதில் கீழ்படிதல் முக்கிய அங்கம் வகிக்கிறது, மற்றும் உணர்ச்சிப்பூர்வமான
அழிக்கும் சக்திகள் நிராகரிக்கப்படுகின்றன. எனது பார்வையை கடந்த
லோகத்தில் இருக்கும் அரக்க உலகங்களில் நீங்கள் பின்வாங்கும் போது திகைத்து
நிற்கும் நான், நீங்கள் திரும்புவீர்கள் என்ற நம்பிக்கையுடன் காத்து இருக்கிறேன்.

நான் இங்கே இருப்பதால், அவை எல்லாம் இருக்கின்றன.
நான் சுற்றி இருக்கும் ஆசை எனும் காற்றில் ஆடுகின்ற
இறகுகளை தாங்கிய கம்பமாக இருக்கிறேன்.

அதனால் அடக்கமான தோற்றம், தெளிவு மற்றும்
தன்முனைப்பு நீக்கத்தையே நாங்கள் விரும்புகிறோம். மற்றதை நீங்கள் அறிவீர்கள்.
நீங்கள் திரும்புவீர்கள் என்ற நம்பிக்கையுடன் நான் காத்து இருக்கிறேன்.

நான் வாயில்காவலனாக இருப்பதால், மற்ற தெய்வங்களுக்கு முன்பாக
என்னை முதலில் தரிசிக்கிறீர்கள். தாய்ப்போல உங்களது மீது அக்கறை செலுத்தி,
தந்தைக்கு ஏற்ற தனையனாக உங்களை மாற்றுகிறேன்.
உங்களை எதிர்காலத்திற்கு தயார் செய்யும் நிகழ்காலமாக நான் இருக்கிறேன்.
நீங்கள் உங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கும் தர்மத்தில் அறியாமை
காரணமாக தோன்றும் அனுகூலமற்ற சம்பவங்களை அச்சுறுத்தும்
கடல்நாகமாக நான் இருக்கிறேன்.

உங்கள் கர்மவினையில் நான் புதுமையாக இருக்கிறேன்.
மற்றும் இங்கே இப்போதே நீங்கள் என்னை நாடி வந்தால்,
எனது தெய்வீக சக்தியை உங்கள் சக்தியாக மாற்றுகிறேன்.


நான் சொல்வதை கேளுங்கள். உங்களுக்கு ஆணையிடுகிறேன். கெஞ்சுகிறேன்.
நான் எனக்கு முன்பாக இருக்கும் எனது சிறிய மணியை அடித்து,
இனிப்பு கொழுக்கட்டையை சாப்பிட்டு,
எனது தலை மீது எனது தந்தையான சிவனின் அக்னியை ஏற்றி
உங்களுக்கு பூஜை செய்கிறேன்.

எனது தலை, உங்களது தலை மீது நிலையற்று எரியும் சுடரானது
உங்கள் தர்மத்தின் தூய்மையற்ற சக்திகளே ஆகும்.
உங்கள் உச்சந்தலை, எனது உச்சந்தலை,
நமது உச்சந்தலை மீது இந்த பிறவியில் நீங்கள் செய்த கர்மவினை எரிகிறது.

இந்த தகவல் உங்கள் அதிஷ்டத்தின் மூலம் அருளபட்டது என்றும்,
இது எனது மற்றும் உங்கள் பரமாத்துமாவின் ஒப்புதலை பெற்றது என்றும்,
நான் இப்பொழுதே உங்களது வரையறுக்கப்பட்ட பார்வையை கடந்த
லோகங்களுக்கு உங்களை அறிமுகம் செய்வேன் என்பதையும்
உபதேசிக்கப்பட்ட, கேட்ட, பார்த்த அல்லது வாசித்த அதிஷ்டசாலிகளான
உங்களது பாதையில் வெற்றி உறுதியாக கிடைக்கும்.


அன்புடன்,
விநாயகப் பெருமான்





CHAPTER THREE


Ganesha's Five Powers



விநாயகரின் ஐந்து சக்திகள்

ஸ்ரீ கணேஷஸ்ய பஞ்சக்த்யாஹ்ரா

श्रीगणेशस्य पञ्चशक्तय:



நாம் எல்லோரும் இனி விநாயகரின் ஐந்து சக்திகள் மீது நமது கவனத்தை செலுத்தலாம். இந்த மகாதேவர் அந்தர்லோகங்களில் இருந்து நமக்கு ஐந்து வலுவான வழிகளின் மூலம் உதவி செய்வதைப் பற்றி தங்களுக்கு விளக்க வேண்டும் என்று அன்பர்கள் கேட்டுக்கொண்டார்கள். கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளில் இருக்கும் பல இந்துக்களுக்கு, விநாயகரின் ஐந்து நேர்மறை சக்திகள் மற்றும் அதற்கு முரணான ஐந்து வலுவான அசுர எதிர்ப்புசக்திகள் பற்றிய புரிதலே, பக்தனின் வாழ்கையில் ஒரு இயங்கும் அங்கமாகவும் சொந்தங்கள், நண்பர்கள், சமூக சான்றோர்கள் மற்றும் நெருக்கமான தொழில் சகாக்கள் என்ற விரிவான குடும்பத்தில் ஒரு நிலைப்படுத்தும் சக்தியாகவும் சமயம் விளங்குவதற்கு காரணமாக அமைகிறது. இந்த அறிவு மற்றும் நடைமுறை அனுபவம் மூலமாக நமது லௌகீக வாழ்க்கையில் தினமும் விநாயகர் எவ்வளவு நெருக்கமாக செயல்புரிகிறார் என்பதை அவர்களால் புரிந்துக்கொள்ள முடிகிறது.

தன்னிடம் ஐந்து மாபெரும் சக்திகள் இருப்பதாக விநாயகரே விளக்கியுள்ளார். அவற்றின் நேர்மறை அதிர்வுகளை உங்கள் சூட்சும மற்றும் தூல உடல் மூலமாக உணர முடியும் மற்றும் அவை எப்போதும் உங்களுடன் இருக்கவேண்டும். "இந்த சக்தி எத்தகையது?' என்று உங்களுக்கு தோன்றலாம். இது தெய்வீக சந்நிதியில் இருப்பதை குறிக்கிறது. சக்திகளில் வேறுபாடு இருந்தாலும், தெய்வீக பண்புடைய அனைத்து ஆண்களும் பெண்களும் இந்த சக்திகள் அனைத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். அவற்றை உங்களாலும் வெளிப்படுத்த முடியும். மூன்றாவது உலகில் தொடங்கும் சக்தி என்கிற தெய்வீக கதிர் இயக்கம் இரண்டாவது உலகம் வழியாக பூலோகம் வந்தடைகிறது. இரண்டாவது உலகில் இருக்கும் சூட்சும உடல், தூல உடலில் வாசம் செய்கிறது. சூட்சும உடல் மூலமாக அந்த சக்தி உணரப்படுகிறது. மூன்றாவது உலகில் இருந்து தொடங்கும் சக்தி, இரண்டாவது உலகில் இருக்கும் சூட்சும உடலுக்குள் ஊடுருவுகிறது. இதன் காரணமாகவே, சில சமயங்களில் அகத்தின் ஆழத்தில் சக்தி "நிரம்பி இருந்து", அது நமது சருமத்தின் உட்புறம் வரை ஊடுருவதாக தூல

உடலுக்கு தோன்றுகிறது. வலுவான விழிப்புணர்வை பெற்ற ஆன்மாக்கள் அதிக தெய்வீக சக்தியால் நிரம்பி இருப்பதால், அது சருமம் வழியாக வண்ணமயமான ஒளியின் மென் படலமாக உடலை சுற்றி இருக்கும் ஒளிஉடலின் புற எல்லை வரை அண்டக்கதிர்களாக ஊடுருவுகிறது. இதை மற்றவர்கள் உணர்கிறார்கள் மற்றும் இது ஒரு தனிநபர் *தரிசனமாக* கருதப்படுகிறது.

இதனால் விநாயகர் தனது இருப்பில் ஐந்து அம்சங்களை கொண்டிருக்கிறார் என்று சொல்லலாம். இரக்ககுணத்துடன் நன்மை பயக்கும் விநாயகபெருமானின் இருப்பு எங்கும் இருக்கிறது என்கிற உணர்வு, ஒவ்வொரு ஆன்மாவும் அடைய விரும்பும் நிலைக்கு ஒரு சிறந்த முன்உதாரணமாக விளங்குகிறது. நாம் அவரது திருவடிகளின் முன்பாக அமர்ந்து வழிபாடு நடத்தி நமது வீடு, நமது சொந்தங்கள் மற்றும் பந்தங்கள் மற்றும் வியாபார சகாக்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்த்து, நமது வாழ்கையில் கலாச்சாரம், ஆக்கத்திறன் மற்றும் மதத்தை கொண்டு வருகிறோம் என்பதால், அவருடைய ஐந்து சக்திகளை "இறைவனின் திருவடிகள்" என்றும் அழைக்கலாம். அதன் பிறகு நாம் வெளிப்படுத்தும் மனப்பூர்வமான இறையன்பு மகுடமாக அமைய, நம்மால் அதன் பிறகு தானங்கள் செய்யவும் முடிகிறது, அடுத்த தலைமுறைக்கு பிரம்மாண்ட கோயில்களை நிர்மாணம் செய்யவும் முடிகிறது. இதனை தனிப்பட்ட முறையில் அனுபவிப்பதற்கு தினமும் தியானம் செய்ய வேண்டும்.

முதல் சக்தி

முதல் சக்தியானது ஒரு நல்ல மனிதர் தனது சொந்த குடும்பத்தின் மீது இயல்பாக வெளிப்படுத்தும் அன்பு மற்றும் இரக்கத்தை குறிக்கிறது. இந்துக்களுக்கு தனிக்குடித்தனம் அல்லது கூட்டுக் குடும்பத்தில் மிகவும் முக்கியமானதாக அன்பு மற்றும் ஒற்றுமை விளங்குகிறது, மற்றும் அந்த குடும்பத்தில் நிலவும் அருமையான உணர்வு விநாயகரின் முதல் சக்தியை குறிக்கிறது. வீட்டில் அன்பு நிறைவாக இருந்து நற்பண்பு வலுவாக இருக்கும் போது, வீடு நிறைவாக இருக்கிறது மற்றும் அதன் தேவைகள் பூர்த்தியாகின்றன.

இரண்டாவது சக்தி

இரண்டாவது சக்தியானது அதே உணர்வை குறிப்பிட்டாலும், விரிவான குடும்பத்தின் அங்கமாக இருக்கும் சொந்தங்கள், அக்கம்பக்கத்து வீட்டார்கள் மற்றும் நண்பர்களுக்கு அந்த உணர்வு விரிவுப்படுத்தப்படுகிறது. இணக்கமற்ற சூழ்நிலை அவ்வப்போது தோன்றும் என்பதால், இதை தக்கவைப்பது அதிக கடினமாக இருக்கிறது. இவை *அசுர* சக்திகள் என்று அழைக்கப்பட்டு, மக்களுக்கு மத்தியில் தோன்றி கருத்து வேறுபாடு மற்றும் எரிச்சலை உருவாக்குகின்றன. முதல் சக்தியை பிரார்த்தனைகள் மற்றும் வழிபாட்டின் மூலம், சொந்த குடும்ப எல்லையை கடந்து சகாக்கள், சொந்தங்கள் மற்றும் நண்பர்களுக்கு விரிவுப்படுத்தலாம். இந்த நல்லிணக்க சூழல் புலப்படும் போது, முதல் சக்தியும்

இரண்டாவது சக்தியும் ஐக்கியமாவதால், இறைவனின் ஆற்றல் முழுவதும் உங்களுக்குக் கிடைத்து, மூன்றாவது சக்தி அதிக அளவில் பெருக்கெடுத்து வருகிறது.


மூன்றாவது சக்தி

விநாயகரின் மூன்றாவது சக்தியானது அதே அன்பை தொழில்முறை சகாக்கள், பரிச்சயமில்லாத வியாபாரி மற்றும் பொதுமக்கள் என்று வெளியுலகில் ஒருவர் சந்திக்கும் அனைவர் மீதும் விரிவுப்படுத்துவதை குறிக்கிறது. இது வியாபாரம் மற்றும் பொருட்கள், நிதி பரிவர்த்தனைகள் மற்றும் உலகில் இருக்கும் செல்வத்தின் பங்கீட்டில் நேர்மையான மற்றும் இணக்கமான உறவுகளை பராமரிப்பது ஆகும். மிகவும் முக்கியமான சூழல்களில் ஒன்றான இதனை, தொடர்ந்து உணர்ந்துக்கொண்டு இருக்கவேண்டும். பொதுவாக இத்தகைய ஒரு இணக்கத்தை லௌகீக மற்றும் பொருள்முதல்வாத சக்திகள் தடுக்க முயற்சிக்கும் என்பதால், இந்த இறைசக்தியை தக்க வைப்பது கடினமாக இருக்கும். ஆனால் இந்த கீழ்நிலை சக்திகள் மீது வெற்றி கொண்ட பிறகு, கவலைகள் முடிவுக்கு வந்து, வேதனைகள் குறைந்து மனதில் மகிழ்ச்சி பொங்கும் அளவிற்கு அன்பான விநாயகரின் அருள் வலுவாக இருக்கிறது.

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்." *திருக்குறள்* (120).

நான்காவது சக்தி

முதல் மூன்று சக்திகளை மிகவும் வலுவாக தக்க வைத்து இருந்ததால் வெளிப்படுவதே நான்காவது சக்தி ஆகும். முதல் இரண்டு சக்திகளின் கலவையாக விளங்கும் இந்த சக்தி, மூன்றாவது சக்தி மூலம் நிலைப்படுத்தப் படுகிறது. கலாச்சாரத்தின் மீது அன்பு மற்றும் அதனோடு சேர்ந்து வரும் சமயச் சடங்குகள் மற்றும் ஒழுக்கத்தின் மீது மதிப்பும் மரியாதையும் தோன்றக் காரணமாக இருக்கும் ஆக்கபூர்வமான-இயலுணர்வு மனதை விநாயகரின் நான்காவது சக்தி வெளிக்கொண்டு வருகிறது. இங்கே நாம் காணும் சமய உணர்வு காரணமாக இசை, ஓவியம், நாடகம் மற்றும் நடனத்தில் படைப்பாற்றல் ஒரு வரமாக வெளிப்படுகிறது. சுத்தம் செய்யும் இந்த கதிர்கள் மூலமாகவே சமய வாழ்க்கை கடைப்பிடிக்கப்பட்டு, ஒரு ஒளி பொருந்திய எதிர்காலத்திற்கு நெரிசலான சக்திகள் ஒரு இணக்கமான முறையில் பின்னப்படுகின்றன. இந்த நான்காவது சக்தி மூலமாகவே சமய வழக்கங்கள் தொடர்ந்து அனுட்டானம் செய்யப்பட்டு, கடந்தகால சீர்திருத்தங்கள் எதிர்காலத்தில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்த சக்தி ஒருவரது பித்ருக்கள் மீது பக்தி மற்றும் அனைத்து வகையான நேர்மறை சமூக ஈடுபாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.



ஐந்தாவது சக்தி

விநாயகரின் ஐந்தாவது சக்தியின் அதிர்வை பொறுத்தவரை முதல் மற்றும் மூன்றாவது சக்தியின் கலவையாக இருக்கிறது, மற்றும் அது இந்த கடவுள் பொழியும் அன்பின் மூலம் கிடைக்கும் அற்புத உணர்வுகளுக்கு விரிவாக்கம் பெறுகிறது. உங்களது முழு ஈடுபாட்டுடன் இந்த ஐந்து சக்திகள் ஐக்கியமான கலவையாக அன்பான விநாயகப் பெருமான் இருக்கிறார். கடவுள் மீது அன்பு செலுத்துபவர்கள் தானம் செய்து, சிறிய மற்றும் பெரிய கோயில்களை நிர்மாணம் செய்து, தங்களிடம் இருக்கும் வளங்களை பயன்படுத்தி தாராள

மனதுடன் பங்குபெற்று, இந்த பிறவி மற்றும் வருங்கால பிறவிக்கும் மிகுதியான புண்ணியத்தை சேகரிப்பதால், இந்த சக்தி தானதர்மம் செய்யும் கூடுதல் வரத்தையும் வழங்குகிறது. இரக்ககுணமுள்ள அன்பான இந்த கடவுளிடத்தில் வெளிப்படச் செய்வதற்கு மற்றும் அவரது பொருள், உணர்ச்சி, புத்தி மற்றும் ஆன்மீக செல்வதைப் பெறுவதற்கு, சொந்த குடும்பத்தில் இருக்கும் ஒற்றுமை மற்றும் தொழில்முறை சகாக்களுக்கும் விரிவாக்கம் பெறும் ஒற்றுமையானது தனிநபர் மற்றும் குழுவில் இருக்கும் ஆன்மீக ஆற்றலை உருவாக்குகிறது.

தான் தானம் வழங்கவில்லை, தான் வழங்குவதற்கு ஒரு பாதையாக மட்டுமே விளங்குகிறோம் என்பதை விக்னேசுவரனின் மீதான பக்தியில் மூழ்கியிருக்கும் இந்து ஆன்மா அறிந்து இருக்கிறார். அவர் தனது இருப்பில் இருக்கும் மாயையை அறிந்து இருந்தாலும், முதல் ஐந்து சக்திகள் வழியாக இந்த ஈசுவரனுடன் ஒன்றாக கலந்த தனது இயல்பான, பேரானந்த நிலையை பகிர வேண்டிய அவசியத்தை நன்றாக அறிந்து இருக்கிறார். அத்தகைய ஒரு பக்தன் கோயிலுக்கு ஒரு தூண் போலவும், *சாதகனுக்கு* பாதுகாவலனாகவும், பூசாரிகளுக்கு மதிப்பு அளித்து வேதங்கள் சொற்படி நடக்கும் அடிமையாகவும் இருந்து, எல்லோர் கண்களுக்கும் தயாள குணம் படைத்தவனாக தென்படுகிறான். உள்ளம், உணர்ச்சி மற்றும் உடல்ரீதியாக சுதந்திரமாக இருந்து விநாயகரின் ஐந்து சக்திகளை சார்ந்து இருக்கும் குடும்பம் தினமும் பூஜைகளை செய்து, வருடம் ஒரு முறை யாத்திரை சென்று, இந்துக்கள் கடைபிடிக்க வேண்டிய *பஞ்ச நித்திய* கர்மவினைகளை மகிழ்ச்சியுடன் சுலபமாக செய்து முடிக்கிறது.

ஆறாவது, ஏழாவது மற்றும் எட்டாவது சக்திகள்

முதல் ஐந்து அதிர்வு விகிதங்களை கடந்து இருப்பது என்ன என்று நீங்கள் யோசிக்கலாம். அவற்றை கடந்து விரிவாக்கம் செய்வதற்கு மேலும் மூன்று சக்திகள் உள்ளன. அவற்றைப் பற்றி இங்கே சுருக்கமாக காணலாம்.

முருகப்பெருமானின் பொறுப்பில் இருக்கும் ஆறாவது சக்தி, குண்டலினியை விழிக்க வைக்கும் இராச யோகத்தை குறிக்கிறது. கடவுளின் முதல் ஐந்து அதிர்வு விகிதங்களை பராமரித்து, அவை ஒருவரது வாழ்க்கையின் அங்கமாக மாறும் வரை, இதில் முயற்சி மேற்கொள்ளக்கூடாது. யோகம் கலந்த தியானத்தில் மட்டுமே ஆறாவது சக்தி உணரப்படுகிறது. உச்சந்தலை கோயிலாக மாறி, அங்கே கோயில்மணி ஓசைப்போல "ஈஈஈ" ஓசை உரக்க ஒலிக்க, கற்பூரம் பிரகாசமாக எரிவதைப் போல குண்டலினி விழித்துக்கொள்கிறது. இவ்வாறு தன்னை ஒருமுகப்படுத்தும் கவசத்தில் பூட்டப்பட்டு இருக்கும் யோகி, மற்ற நான்கு தாமரை இதழ்களின் ஆதரவுடன் தான் ஐந்தாவது சக்தியில் அமர்ந்து இருப்பதை உணர்கிறார். அவர் பிறகு இந்த யோக நிலையில் ஞானத்துடன் ஐக்கியமாகிறார், மற்றும் அவர் மனதின் *ஆகாசத்தில்* ஏழாவது சக்தி ஊடுருவும் போது, அவருக்கு இருக்கும் ஆழமான தத்துவக் கேள்விகளுக்கு பதில்கள் தெள்ளந்தெளிவாக தோன்றுகின்றன.

ஏழாவது சக்தி என்பது சிவபெருமானும் அவரது மகனான முருகப்பெருமானும் ஐக்கியமாகும் இடமாக இருக்கும் முழுமுதற்பொருளின் எல்லையில் இருந்து உபதேசமாக வழங்கும் ஆன்மீக போதனைகளின் சிறந்த ஒளிக்கதிர் ஆகும். இந்த மாபெரும் சக்தி நமது மதத்தின் ரிஷிகள் மற்றும் மகான்களிடம் தென்படுகிறது. முருகப்பெருமான் நமது மதத்தில் இருக்கும் எல்லோருக்கும் சத்குரு போன்று இருக்கிறார். ஏழாவது மற்றும் எட்டாவது சக்திகள் மாபெரும் பிரபஞ்ச நடனமான சிவ-சக்தியை குறிக்கிறது. பரமாத்துமா என்கிற பரம்பொருளை விட்டு வெளிவந்து மனம் தனது சுய கட்டுபாட்டை பெற்று, ஏழாவது சக்தியாக இருக்கும் வெளிப்பட்ட அறிவாக மாறும் போது ஊற்றாக உணரப்படும் ஆற்றலே எட்டாவது சக்தியாகும்.

விநாயகரின் வழிபாடு மூலம் முதல் ஐந்து சக்திகள் மீது தியானம் செய்து கதிர்களை வெளிக்கொண்டு வரவேண்டும் என்பதால் நாம் ஆறாவது, ஏழாவது மற்றும் எட்டாவது சக்திகள் மீது அதிக கவனம் செலுத்தப்போவது இல்லை. முழுமையாக இல்லாவிட்டாலும், இந்த ஐந்து சக்திகளும் உலகிலுள்ள அனைத்து மதங்களுக்கும் அடிப்படையாக விளங்குகின்றன. இன்று நாம் அறிந்த விநாயகர் வழிபாடு என்பது, பல யுகங்களாக கடைப்பிடிக்கப்படும் பழங்கால சமய வழக்கமாக இருக்கிறது மற்றும் இது உலகின் பதினொன்று மதங்கள் மற்றும் எண்ணற்ற இறைநம்பிக்கைகளில் காணப்படுகிறது. சமூகம் நிலையாகவும் செழிப்பாகவும் இருப்பதற்கு, இந்த ஐந்து சக்திகளை நிலை நிறுத்துவதே, பல மதங்களில் உயரிய சமய அனுபவமாக இருக்கிறது. ஒருவரது வாழ்வில் மதம் என்பது உறுதி அடைந்ததும், அகத்தில் இருக்கும் கோயிலை தேடிப்பிடித்து, அந்த கோயிலுக்குள் சென்று, விநாயகரின் தந்தையான பரமேசுவரனுடன் கருவறையில் ஐக்கியமாகும் இராச யோகமே அடுத்த மிகவும் இயல்பான விரிவாக்கம் என்பதால், இது அடிப்படையில் பெரும்பாலான உலக மதங்களின் எல்லையாக விளங்குகிறது.

சிவபெருமானின் மகனாகவும், அனைத்து யோகத்தின் கடவுளாகவும் இருக்கும் முருகப்பெருமானின் லோகங்களில் அடியெடுத்து வைக்கும் இந்து, முதல் ஐந்து சக்திகளின் வலுவான அடிப்படையை சார்ந்து இருக்கலாம். அவருக்கு விநாயகருடன் இருக்கும் தனிப்பட்ட தொடர்பின் மூலம், அவருக்குள் இந்த ஐந்து சக்திகள் பராமரிக்கப்படுகின்றன. அதனால் அவர் யோகப்பயிற்சியில் தவறு செய்தால், அவர் ஒரு பாதாளத்தில் விழுவது இல்லை. ஒருவர் தனது வாழ்வில் ஐந்து சக்திகளை உறுதிப்படுத்தவில்லை என்றால், அவர் அதிக கடினமான யோக ஆசனங்களை செய்யக்கூடாது. அதை மீறி அவர் செய்தால், அவர் அதற்கு முன்பு செய்த நல்ல முயற்சிகளை தடுத்து பயனற்றதாக்கும் ஆற்றல்கொண்ட கீழ்நிலை லோகங்களின் அசுர சக்திகளை விழிக்க வைத்து அவற்றை வரவழைக்கக்கூடும்.

கீழ்நிலை லோகங்களை மூடிவிடுதல்

உண்மைப்பொருளின் உச்சத்தை நோக்கி ஒருவர் ஏறும் போது, அவர் தனது பாதையில் இருந்து தவறி கீழே விழுந்தால், கீழிருக்கும் பாதாளமும் அதிக ஆழமாக இருக்கிறது. வாழ்க்கைப் பாதையில் முன்னேறிக்கொண்டு இருக்கும் சாதகன் பாதை தவறி கீழ்நிலை லோகங்களில் விழுந்து, தன்னிடமும் மற்றவர்களிடமும் இழிவாக நடந்துக்கொண்டால் என்னவாகும்? குறைவான சுய-மரியாதை, தனிமை, அச்சம், ஆதாரமற்ற குற்ற உணர்வு மற்றும் மனஉளைவு ஆகியவை கீழ்நிலை பாதாள உணர்வின் அறிகுறிகள் ஆகும். இவற்றைக் கண்டு தேவர்களும் மனிதர்களும் அதிகம் அஞ்சுகிறார்கள், மற்றும் இதற்கு சாத்திரங்களில் விளக்கமும் உள்ளன மற்றும் இவற்றில் இருந்து ஆன்மீக குருமார்கள் பாதுகாப்பையும் வழங்குகிறார்கள். தீவிர யோகப் பயிற்சியை செய்ய விரும்புவதற்கு அல்லது செய்வதற்கு முன்பாக, *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் சக்கரத்தை உறுதியாக மூடவேண்டும் என்பது இதன் மூலம் மிகவும் தெளிவாக தெரிகிறது.

ஐந்து பாதாளங்கள்

பாதாளம் என்றால் என்ன? இது *அதர்மத்தின்* பாதையாகவும், சமய வழக்கங்களை புறக்கணித்தவர்கள் அல்லது வாழ்க்கையில் தாங்கள் எடுத்த விரதங்களை கைவிட்டவர்களின் விதியையும் குறிக்கிறது. ஐந்து பாதாளங்கள் இருக்கின்றன மற்றும் அவை விநாயகப்பெருமானின் மிகவும் கவனமான காவலில் இருக்கும் முதல் ஐந்து சக்திகளின் அதிர்வுகளுக்கு முற்றிலும் முரணாக இருக்கின்றன.

முதல் பாதாளம்

முதல் பாதாளமானது வீட்டில் இருக்கும் இணக்கமற்ற சூழ்நிலைகள் மற்றும் மிகவும் நெருக்கமாக இருப்பவர்களுடன் சண்டை சச்சரவுகள் நிலவுவதை குறிக்கிறது. இது அடிமனதில் வலுவான *சம்ஸ்க்காரங்கள்* அல்லது தழும்புகளை உருவாக்கி, மதம் சார்ந்த வாழ்வில் அனைத்து வகையான முன்னேற்றத்தையும் தடுக்க ஒரு அடியுணர்வை தயார் செய்யத் தொடங்குகிறது. அதனால் முதலாவது அதிக ஆழமான பாதாளமாக இருக்கிறது மற்றும் அதில் இருந்து எழுவது மிகவும் கடினமாக இருக்கிறது.

இரண்டாவது பாதாளம்

இரண்டாவது பாதாளம் என்பது சொந்த வீட்டில் சேர்ந்து வாழாத சகாக்கள், நண்பர்கள் மற்றும் சொந்தங்களுக்கு மன்னிப்பு வழங்குதல், சமாதானம் செய்துகொள்ளுதல் மற்றும் இழப்பீடு செய்தல் போன்றவற்றிற்கு அனுமதி வழங்காமல் கருத்து வேறுபாடுகளுடன் இருக்கும் இணக்கமற்ற சூழ்நிலைகளை குறிக்கிறது. இந்த பாதாளத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கு பணிவு மற்றும்

சிறிதளவு புரிதல் மற்றும் அன்பு போதும் என்பதால், இதிலிருந்து வெளிவருவது மிகவும் சுலபமாக இருக்கும். இந்த மகாதேவர் உணர்வுள்ள மற்றும் அடியுணர்வு மனநிலைகளின் தலைவனைப் போல இருப்பதால், தன்னிடம் வழிகாட்டலை வேண்டும் ஆன்மாக்களை காப்பாற்றுவதில் விநாயகர் வல்லுனராக இருக்கிறார். அதனால் லௌகீக விஷயங்கள் தொடர்பாக இந்துக்கள் அவரை நாடி செல்கிறார்கள். கீழ்நிலை சூட்சும லோக அமைப்புக்கள் மூலம் தூண்டப்படும் இந்த *அசுர* சக்தி, வீட்டிற்கு வெளியே குடும்பம் மற்றும் சமூக உறவுகள் பற்றிய மோசமான வதந்திக்கு காரணமாக அமைகிறது. இதன் காரணமாக ஒரு மனைவி தனது பக்கத்து வீட்டு தோழியிடம் தனது கணவனைப் பற்றி அவதூறாக பேசக்கூடும். ஒரு சமூக அமைப்பில் இருந்து ஒருவரை ஒதுக்கி வைப்பதற்கு, அவரைப்பற்றி பொய்யான தகவலை பரப்புவதற்கு இது தூண்டுதலாக அமையும்.

மூன்றாவது பாதாளம்

மூன்றாவது பாதாளம் என்பது கவலை மற்றும் பிரச்சனை பற்றியது ஆகும். இதனோடு சேர்த்து கடன் வசூல் முகமையங்கள் மற்றும் அதிருப்தி வாடிக்கையாளர்களை நீதிமன்றங்கள் கையாளுகின்றன. வணிக விவகாரங்களில் மரியாதை இல்லாத சூழல், வணிக உலகில் கடன் வாங்கும் மற்றும் கொடுக்கும் நடவடிக்கைகள் ஆகியவை இணக்கமற்ற சூழ்நிலைகளுடன் ஒரு பகட்டான, வசதியான மற்றும் ஆடம்பரமான பாதாளத்தை உருவாக்குவதில் தங்களை முழுமையாக ஈடுப்படுத்திக்கொள்கின்றன. இந்த *அசுர* சக்தி ஒரு நிறுவனம் வழங்கிய நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையை சாதகமாக பயன்படுத்தி நேர்மையற்ற வணிக விவகாரங்களை தூண்டுகிறது. தேவைப்படும் போது பொறுப்புக்களை மதிக்காமல் இருக்கும் அசுர சக்தி பகையுணர்வை உருவாக்குகிறது. இந்த சக்தி கருத்து வேறுபாட்டின் மூலம் மக்களை பிரித்து, அவர்களுக்குள் வெறுப்பை ஏற்படுத்துகிறது. இந்த பாதாளத்தில் பலர் தங்கள் வாழ்நாள் முழுவதும் வாழ்கின்றனர். அன்போடு வரவேற்கும் இந்த பெரிய குழியை நோக்கி தீவிர ஆசை, ஒருவரை தொடர்ந்து இழுத்துச்செல்கிறது. அதனுள் உபசரித்துக் கொண்டே சித்ரவதை செய்வதற்கு அசுர குணம் படைத்த பலர் இருப்பார்கள். ஆனால் தனது வணிக விவகாரங்களை கவனமாக கையாண்டு, தொடர்ந்து சமய அனுட்டானங்களை செய்து, முழுமையாக விநாயகரின் உதவியை நாடுவோருக்கு இந்த பாதாளத்தில் இருந்து விமோசனம் கிடைக்கும். இந்த முதல் மூன்று குழிகளில் இருக்கும் கீழ்நிலை சூட்சும லோகத்தின் அசுர குணம் படைத்த மக்கள், இரவு நேரங்களில் வேதனையான கனவுகளுக்கு காரணமாக இருக்கிறார்கள் மற்றும் இந்த பாதாளக்குழிகளின் சூழல் திகிலூட்டுவதாக இருக்கும்.

நான்காவது பாதாளம்

நான்காவது பாதாளம் அதிக ஏமாற்றம் தருவதாக இருக்கும். சிலர் முதல் மூன்றில் விழுவதை தவிர்த்து இருந்தாலும் கலாச்சாரம், பாண்டித்தியம், கருத்தார்ந்த இலக்கியம் மற்றும் தத்துவத்தை புறக்கணிப்பது மற்றும் இசை, கலை, நாடகம் மற்றும் நடனத்தை நிந்திப்பது மற்றும் மதத்தில் ஈடுபாடு இருப்பவர்களையும் அவர்களின் வழக்கங்களையும் பரிகாசம் செய்வது மற்றும் ஒழுங்குமுறையின்றி மந்தமான உற்சாகமில்லாத லௌகீக விஷயங்களில் திருப்தி அடைவதன் மூலம் இதில் சிக்குவதற்கு வாய்ப்புள்ளது. இங்கே சோம்பல் மற்றும் கர்வத்துடன் முதல் மூன்று சக்திகளும் கட்டுபாட்டில் இருக்கின்றன என்கிற தற்பெருமையும் குடிக்கொண்டு இருக்கும். இந்நிலையில் இருப்பவர்களின் புத்தியும் பணமும் அவர்களுக்கு கடவுளாக காட்சி அளிப்பார்கள். இந்த பாதாளத்தில் இருக்கும் போது புத்தி மற்றும் செல்வத்தை சார்ந்து இருப்பதால், பரமாத்துமா என்று ஒருவர் இருப்பதை அறிவது கடினமாகிறது. கல்வி அறிவு மற்றும் செல்வம் அருளப்பட்டு, ஆழமாகவும் இல்லாமல் மனப்பூர்வமான புரிதலும் இல்லாமல் மேலோட்டமான சமய ஈடுபாடு மற்றும் ஆக்கத்திறன், நாகரிக உணர்ச்சிகள் மற்றும் இறையன்பு இல்லாமை ஆகியவை ஆன்மா மீது நான்காவது பாதாளம் உரிமை கோருகிறது என்பதை அறிய துணைபுரிகிறது. இந்த லௌகீக பாதாளமானது ஆசைகள் மற்றும் அவற்றின் நிறைவேற்றத்திற்காக மட்டுமே, ஒன்றன் பின் ஒன்றாக ஆசைகளின் தொடர் நிறைவேற்றமாக மாறக்கூடும்.

சமூகம் முன்னேற வேண்டும் என்ற ஆசை சிறிதும் இல்லாத உட்புற மற்றும் வெளிப்புற லோகங்களில் இருக்கும் இந்த *அசுர* சக்தி மற்றும் அதன் பிரதிநிதிகள், ஆன்மீக கிளர்ச்சியாளர்கள் மற்றும் மோசமான கூலிப்படை தீவிரவாதிகள் ஆகியோர் சமயப்பற்று, கலை, கலாச்சாரம் மற்றும் கடந்தகால பாரம்பரியத்தை சீர்குலைக்கிறார்கள். நன்கு பயிற்சி பெற்ற அமைப்புக்களாகவும் புத்திசாலிகளாகவும் அந்தர்லோகங்களில் வாழும் இவர்கள் அபிசார கர்மங்களில் தேர்ச்சி பெற்று, மனிதநேயத்தின் பண்பை அடிமட்டத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று தங்களுக்கு உதவியாக இருக்கும் மனிதர்களுடன் சேர்ந்து சதித்திட்டம் தீட்டுகிறார்கள். இவர்கள் அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அழிவிற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இந்த பாதாளத்தில் நுழைந்து இந்த பண்புகளுடன் இருக்கும் மற்றவர்களின் சகவாசத்தை பெற்றால், நீங்கள் அவர்களால் கட்டுப்படுத்தப்பட்டு அவர்களின் மாணவர்களாகி விடுவீர்கள். இந்த ஆற்றல் ஒழுக்கமற்ற பாலுறவை வளர்த்து, மனித இருப்பை வலுவிழக்கச் செய்து, ஒருவருக்கு விலங்குணர்வை வலுவாக வழங்குவதால் அவருக்கு மனசாட்சி இழப்பு நேரிடுகிறது. அவர் தன் மனசாட்சியை இழந்த பிறகு, அவர் தான் செய்த தவறுகளுக்கு மனம் வருந்துவது இல்லை, மற்றும் அதில் ஈடுபடுபவர்களிடத்தில் ஒரு *அசுர* கலாச்சாரம் தோன்றுகிறது. தன்னை சுத்திகரித்துக்கொண்டு கடந்தகால கலைகளை பாதுகாப்பாக வளர்த்து, அவற்றை நிகழ்காலத்திற்கு கொண்டு வந்து, அவற்றை எதிர்காலத்திற்கு

பாதுகாக்க யாரிடமும் நேரமில்லை என்பதால் பரம்பரை மறக்கப்பட்டு கடந்தகால வழக்கங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.



ஐந்தாவது பாதாளம்

ஆன்மீக வழங்கல், வழிபாடு மற்றும் சமயம் சார்ந்த சேவையில் ஒரு குழந்தையைப் போன்ற தன்னிச்சை இல்லாத போது ஒருவர் ஐந்தாவது பாதாளத்தின் அவல நிலையை அனுபவிக்கிறார். இந்த பாதாளம் ஆன்மாவை பற்றிக்கொண்டு அதை மூடிமறைத்து இருக்கும் போது, சமயம் சார்ந்த திருவிழாக்கள் மற்றும் நிகழ்வுகளில் தனிச்சையாக பங்குபெறுவதற்கு வருடங்கள் முழுவதும் வாய்ப்புக்கள் கிடைக்கும் போதெல்லாம், அந்த பாதாளம் அந்த நபருக்கு தடையாக விளங்குகிறது. கோயிலில் எதையும் விசேஷமாக உணராமல், கோயில் சிலையை வெறும் கல் அல்லது உலோகமாக பார்த்து, தன்னை சுற்றி இருப்பவர்களை கண்காணித்து அவர்களின் தவறுகளை சுட்டிக்காட்டும் நபர் உணரும் எதிர்மறை அதிர்வானது, அவருக்கு அருகில் இறையன்பு காரணமாக கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் நின்று இருக்கும் ஒரு பக்தரின் உணர்வைப் போல வலுவானது. இதுவே ஐந்தாவது சக்தி மற்றும் அதனோடு தொடர்பில் இருந்து மூடி மறைக்கும் பாதாளம் பற்றிய மர்மம் ஆகும்.

ஐந்து சக்திகளுடன் மனப்பூர்வமான இணக்கத்தை பெறுதல்

ஒருவரது வாழ்க்கையின் அங்கமாக மதம் விளங்குவதற்கு விநாயகர் வழிபாடு மற்றும் தினமும் இந்த ஐந்து மகாசக்திகளுடன் இணக்கத்தைப் பெறுவது அவசியம் ஆகும். இந்த வழிபாட்டின் மூலம் நமது வீட்டில், நமது சொந்தங்கள் மற்றும் பந்தங்கள் மற்றும் தொழில்முறை நண்பர்கள் மத்தியில் ஒற்றுமை பிறக்கிறது. இது நமது வாழ்வில் கலாச்சாரம், ஆக்கத்திறன் மற்றும் சமய ஈடுபாட்டை கொண்டு வருகிறது. இவை அனைத்திற்கும் மகுடமாக அமையும் மனப்பூர்வமான இறையன்பை நம்மால் பிறருக்கு வழங்க முடிகிறது. நம்மால் தானதர்மங்கள் செய்ய முடிகிறது மற்றும் மிகுதியான செல்வத்தின் மூலம் அடுத்த தலைமுறைக்கு பிரம்மாண்ட கோயில்களை நிர்மாணம் செய்ய முடிகிறது. இவற்றை நமது வாழ்க்கைகளில் வெளிப்படுத்துவதற்காகவே நாம் தினமும் செய்யும் பூஜைகள் மற்றும் தியானம், நமது யாத்திரைகள் மற்றும் நமது சமய அனுட்டானங்கள் இருக்கின்றன.

விநாயகரின் ஐந்து சக்திகள்

ஒரு சைவ பரமாச்சாரியார் பாடிய துதிப்பாடல்

அன்பான விநாயகர்! சிவபக்தர்களுக்கு பிரியமானவர்,

அவரது உருவத்தில் உருவ உலகம் வாசம் செய்கிறது,

சமயோசித புத்தியின் மூலம் ஞானப்பழத்தை பெற்று,

நிலவின் துணையால் கடலில் ஏற்ற இறக்கங்களை உருவாக்கியவர்.

ஓம் விநாயகா! மகான்கள் மற்றும் முனிவர்களால் நேசிக்கப்பட்டு,
சாதகனின் ஆயுதம், விவசாயின் செழிப்பான நிலமாக இருந்து,
அறியாமை நிரம்பிய இந்த யுகத்தில் மக்களை வழிகாட்ட திறமையான
இவரது கைகள் ஐந்து வலுவான சக்திகளை பிரயோகம் செய்கின்றன.

ஓம்! விநாயகரின் முதல் சக்தியாக விளங்குவது வீட்டு வாழ்க்கை,
பாதுகாப்பு, ஒற்றுமை, செழுமை.
மரியாதை ஆணாகவும், அன்பாக மனைவியும், அவர்களுக்கு
விருப்பமான குழந்தையின் புன்னகை கீழ்படிதலாகவும் இருக்கின்றன.


ஓம்! இரத்தம், திருமணம் மற்றும் நெருக்கத்தின் மூலம் உருவான
குடும்பம் விநாயகரின் இரண்டாவது சக்தி ஆகும்.
வாக்கும் சிந்தனையும் கட்டுப்பாட்டில் இருக்க, மனங்கள் ஒத்து இருக்க,
நம்பகமான நண்பர்கள் சமூகத்தை பாதுகாக்கின்றனர்.

ஓம்! விநாயகரின் மூன்றாவது சக்தியாக இருக்கும் சந்தையில்
பூமியின் நிலைத்தன்மையை வர்த்தகம் சம்பாதிக்கிறது,
இங்கே வெளிப்படையான, சுயநலமற்ற வணிகர்கள், கடன் சுமையின்றி,
வளத்தை திட்டமிட்டு, உருவாக்கி பரிமாற்றம் செய்கிறார்கள்.


ஓம்! விநாயகரின் நான்காவது சக்தியானது
இசை, நடனம், கவிதை மற்றும் சிற்பத்தில் அல்லது
மனப்பூர்வமாக செய்யும் பொது நடத்தையில் தெளிவான வெளிப்பாடு,
நேர்த்தியான கலைநயம் கலந்த கலாச்சாரத்தை கொண்டு வருகிறது.


ஓம்! விநாயகரின் ஐந்தாவது சக்தியாக
நல்லொழுக்க தொண்டில் காணப்படும் புண்ணியமாக இருக்கும்
தர்மத்தில் இறையன்பு பழைய கர்மா மீது வெற்றிக்கொள்கிறது மற்றும்
சிவனின் தொண்டர்கள் அரிய அருளை பெறுகிறார்கள்.

ஜெய் கணேஷா! இங்கே வருகை தந்து வீட்டில் இருக்கும் முரண்பாடு, நண்பருடன் இருக்கும் பூசல், வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டம், கலையின் புறக்கணிப்பு, ஆன்மாவை சூழ்ந்த இருளில் இருந்து எமது இதயங்களை பாதுகாத்து, இந்த அசுர வேதனைகளை நிறுத்தவேண்டும்.






CHAPTER FOUR
In Science and Beyond
Butterfly Wing 10x Charles B. Krebs



அறிவியலிலும் அதை கடந்த நிலையிலும்

விஞ்ஞானே பரதஷ்ச

विज्ञाने परतश्च



தர்மம், சனாதன தர்மம், யாண்டும் உள்ள நம்பிக்கை என்று அழைக்கப்படும் இந்து மதமானது மிகவும் பழமையான மதமாக மட்டுமில்லாமல், மற்ற மதங்களுக்கு ஆதாரமாக இருப்பதால், இதை நான் பூமியில் தலைசிறந்த மதமாக கருதுகிறேன். அது மிகவும் ஆழமாகவும் சூட்சுமமாகவும் இருப்பதால் தலைசிறந்து விளங்குகிறது. நமது பிரபஞ்சத்தின் நுணுக்கமான செயல்பாடுகளைப் பற்றி இத்தகைய நுண்ணறிவை வேறு எந்த மதமும் வழங்கவில்லை. மிகவும் முக்கியமாக நமக்குள்ளும் நமக்கு வெளியேயும் இருக்கும் அனைத்து வஸ்துக்களிலும், சகுண பிரம்மமாக உருவத்திலும், நிர்குண பிரம்மமாக உருவமில்லாமலும், இந்த பிறவிலேயே சிரத்தையுள்ள சாதகன் மூலம் அறியக்கூடியதாகவும் இருக்கும் இறையருளை வேறு எந்த மதமும் வழங்குவதில்லை. காலத்தின் அழிவுகளை தாங்கி, இன்று பூமியில் தத்துவம் மற்றும் பக்தியில் மிகவும் மேம்பட்ட அமைப்பாக சனாதன தர்மம் விளங்குவதில் அதிசயம் ஒன்றுமில்லை. இது 21 ஆம் நூற்றாண்டு அறிவியலின் முன்னேற்றங்களுடன் முழுமையாக பொருந்தி இருக்கிறது மற்றும் இந்த முன்னேற்றங்களை இந்து தர்மத்தின் முனிவர்கள் தெளிவாக முன்பே கணித்தும் இருந்தார்கள். இன்று இந்து மதம் கிராமத்து சமூகம் மற்றும் நகரத்தில் வாழும் குடும்பத்திற்கு பொருத்தமான மதமாக, எல்லா காலங்களிலும் எல்லா மனிதர்களுக்கும் உகந்த அறிவூட்டம் வழங்கும் மதமாக விளங்குகிறது. சிவன்-சக்தியின் மகனாக, 900 மில்லியன் இந்துக்களுக்கு பிடித்தமான தெய்வமாக இருக்கும் விநாயகர், இந்து மதத்திற்குள் மிக முக்கியமான ஒருங்கிணைக்கும் சக்தியாக விளங்குகிறார்.

நாம் அவருக்கு மரியாதை கலந்த அன்பை வழங்கி போற்றிப்பாடுகிறோம். விநாயகர் வெறும் ஒரு சின்னமாக இல்லாமல் உண்மையான இருப்பாக இருக்கிறார் என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது. அவர் வலுவான பிரபஞ்ச சக்திகளின் பிரதிநிதியாக இல்லாமல், பிரபஞ்சத்தில் ஒரு வலுவான சக்தியாக இருக்கிறார். பருத்த உடலுடன் இருக்கும் விநாயகர் தனக்குள் அனைத்து வஸ்த்து, அனைத்து மனதையும் கொண்டிருப்பதாக கருதப்படுகிறது. அவர் லௌகீக இருப்பிற்கு மிகவும் பொருத்தமான ஆளுருவகமாக கருதப்படுகிறார். நாம் இந்த தூல உலகை விநாயகரின் உடலாக

கருதுகிறோம். தூல பிரபஞ்சத்தில் செயல்படும் பல்வேறு சக்திகளை பார்த்து புரிந்துக்கொள்ளும் போது, நாம் விநாயகரின் சக்திகள் மற்றும் இருப்பையும் பார்த்து புரிந்துக்கொள்கிறோம். இந்த லௌகீக உலகில் நடப்பது அனைத்தும், சிவனின் சித்தமாகவும் அவரது அன்புக்குரிய மகனான விநயாகரால் மிகவும் நுணுக்கமாக திட்டமிட்டு தேர்வு செய்யப்பட்டதாகவும் இருக்கின்றன. நாம் இதை அறிந்ததும் வாழ்க்கை என்பது தினமும் ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமாக இருக்கிறது, ஏனென்றால் அருள்பாலிக்கும் தர்மத்தின் கடவுளாக இருக்கும் நமது அன்பான விநாயகரின் விவேகம் மற்றும் கருணையில் இருந்தே இந்த உலக நிகழ்வுகள் அனைத்தும் தோன்றியுள்ளதால், அவை இன்பத்தை தந்தாலும் துன்பத்தை தந்தாலும், அது நடக்கவேண்டும் என்று நாம் விரும்பினாலும் விரும்பவில்லை என்றாலும், நடப்பது அனைத்தும் சரியாகவும் நன்மை செய்வதாகவும் இருக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். பரமாத்துமாவின் சித்தமே எங்கும் மேலோங்கி இருக்கிறது என்பதையும் தினமும் ஒவ்வொரு மணிநேரமும் ஒவ்வொரு நிமிடமும் நடைபெறும் ஒவ்வொரு தகவலின் மீது ஆனைமுகக் கடவுள் அக்கறை செலுத்தி வருகிறார் என்பதையும் முழுமையாக அறிந்து, நடப்பது அனைத்தும் நன்மைக்கே என்பதில் முழுமையாக நம்பிக்கை வைக்கும் இந்த அற்புத உணர்வை இந்துக்கள் அனைவரும் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்த முயற்சி செய்கிறார்கள். இந்து மதம் அறிவியலின் இதயமாக விளங்குகிறது என்றாலும் அதற்கு இருக்கும் பிரபஞ்சம் பற்றிய புரிதல் விஞ்ஞானியின் மிகவும் மேம்பட்ட கருத்தாக்கத்தை கடந்து இருக்கிறது. பிரபஞ்சம் முழுவதும் ஏதாவது ஒரு வடிவில் ஆற்றலாக இருக்கிறது என்று நவீன அறிவியலும் வேத காலத்து ரிஷிகளைப் போல விளக்குகிறது. ஐன்ஸ்டீன் வழங்கிய பிரபல சூத்திரமான E=MC2 சூட்சும சுருக்கத்துடன் அறிவிப்பதைப் போல, பருப்பொருள் வெறும் ஒடுங்கிய ஆற்றலாக இருக்கிறது.

ஆற்றலின் மூன்று வடிவங்கள் மற்றும் மகாதேவர்கள் மீது ஒரு தியானம்

பிரபஞ்சத்தில் ஈர்ப்பு சக்தி, மின் காந்தவியல் சக்தி மற்றும் அணுசக்தி என்று மூன்று வலுவான சக்திகள் செயல்படுகின்றன. நாங்கள் பின்வரும் பக்கங்களில் இந்த மூன்று சக்திகளை விநாயகர், முருகன் மற்றும் சிவபெருமானின் ஆற்றல்களுடன் ஒப்பிட்டு ஒரு தியானப் பயிற்சியை வழங்கி இருக்கிறோம். இந்த பொதுவான ஒப்புமை, தெய்வங்களின் பிரத்யேகமான அம்சங்களை புரிந்துக்கொள்வதற்காக பணிவுடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒப்புமை இறையியல் ஆய்வுரீதியாக சரியாக இருக்க வாய்ப்பில்லை.

வட இலங்கையின் அளவெட்டி நகரில் அமைந்துள்ள கும்பழாவளை விநாயகர் கோயிலுக்கு அருகில், என்னை 1948 ஆம் ஆண்டு தத்து எடுத்துக்கொண்ட செட்டியார் வீட்டில் நான் பாதி உறக்கத்தில் இருந்த போது, விநாயகப்பெருமான் எனக்கு காட்சி அளித்து, தோட்டக்காரன் தோட்டத்தை கத்தரிக்கும் போது தேவையில்லாமல் ஒரு கிளையை உடைத்து விட்டதாகவும், அது உடனடியாக பிரபஞ்சம் முழுவதையும் பாதித்து இருப்பதாகவும்

சுட்டிக்காட்டினார். இவ்வாறு உடனடியாக செயல்படும் விநாயகரின் அணுகுமுறையையும், அவரது குறியீட்டின் மிகப்பெரிய செயற்பரப்பையும் நாம் விரைவில் காண இருக்கிறோம். பூமியின் ஒரு பகுதி ஈர்ப்பு சக்திக்கு ஆளாகும் போது, அதன் தாக்கம் உடனடியாக பிரபஞ்சத்தில் வெகு தொலைவில் இருக்கும் மற்ற அனைத்து பகுதிகளிலும் தாக்குகிறது என்பதால், நாம் அவரது இயல்பை ஈர்ப்பு சக்தியுடன் ஒப்பிடலாம். சூரிய மண்டலத்தில் இருக்கும் ஒன்பது கிரகங்களின் பெயர்ச்சி மனிதர்கள் மற்றும் தாவரங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதைப் போல, கர்மம் மற்றும் தர்மத்தின் கடவுளாக இருக்கும் விநாயகரின் மனம் மிகவும் துல்லியமாக இருக்கிறது.

அளவெட்டி நகரில் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமத்திற்கு நான் ஒரு பழைய கட்டிடத்தை வாங்க முற்பட்ட போது, அதன் உரிமையாளர்களிடம் இருந்து கடும் எதிர்ப்பு வந்தது என்றாலும் இறுதியில் நாங்கள் வெற்றிக்கண்டோம். அதன் பிறகு எனக்கு அதிகாலையில் காட்சி அளித்த விநாயகர், எனது மடியில் குட்டிப் பிள்ளையாராக அமர்ந்து இருந்தார். அவருடைய மென்மையான முகம் எனது கண்ணத்தோடு ஒட்டி இருக்க, "அடைய முடியாததை நாம் அடைந்துவிட்டோம்" என்று என்னிடம் கூறினார். அந்த கட்டிடம் மற்றும் அதில் சேர்ந்த பொருட்கள் அனைத்திற்கும் அன்புடன் அவர் வழங்கிய அருளே காரணம் என்பதை நான் அறிந்து இருந்தேன். இது உண்மை என்பது அதற்கு பிந்தைய வருடங்களில் நிரூபணம் ஆனது. பெரும்பாலும் உலகில் இருக்கும் எல்லா நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து இருந்த தமிழர்களுடன், தங்கள் மதத்தைப் பற்றி தெரிந்துக்கொண்டவர்கள் சேர வேண்டியிருந்ததால், அதன் பிறகு எங்கள் ஆசிரம கதவுகளும் சன்னல்களும் எல்லா கண்டங்களிலும் திறக்கப்பட்டன. பல வருடங்களுக்கு முன்பாக இருந்ததைப் போல, நமது சிறிய ஆசிரமத்தில் கற்றதை எல்லாம் அவர்கள் இன்று வழக்கத்தில் கொண்டு வந்து, அந்த கல்வி அறிவை தற்போது அதிக உற்சாகத்துடன் செயல்படுத்தி வருகிறார்கள்.

நீங்கள் ஒரு நல்ல காரணத்திற்காக துரிதமாக முன்னேறி செல்லும் போது, சமூகம் உட்பட பிரபஞ்ச சக்திகள் அனைத்தும் உங்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்தாலும், உங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்பதை இதன் மூலம் நான் புரிந்துக்கொண்டேன். இதைப் பார்க்கும் போது, காடு வழியாக நடந்து செல்லும் ஒரு பெரிய யானை, தன்னை பின்தொடர்ந்து வருபவர்களுக்கு என்று பாதையில் இருக்கும் தடைகளை எல்லாம் சுத்தம் செய்வது போன்று இருந்தது. இத்தகைய ஆசிகள் விநாயகரை வழிபடுபவருக்கு கிடைக்கின்றன. மெதுவாக ஆற்றல்கள் தெளிவடைகிறது, மற்றும் எல்லோரும் அவரது அருளால் பயன் அடைகிறார்கள்.

ஈர்ப்பு சக்தி

விநாயகப்பெருமானின் பெரிய வயிற்றில் பிரபஞ்சம் முழுவதும் அடங்கி இருப்பதாக பாரம்பரியம் விவரிக்கிறது. இதனால் நாம் அவரை இந்த

தியானத்தில் லௌகீக பிரபஞ்சம், அண்டத் திணிவை கட்டுப்படுத்தும் அதிபதியாக பார்க்கிறோம். மேலும் அவரது ஆற்றல்களில் ஒன்றாக ஈர்ப்பு சக்தி விளங்குகிறது. இன்றும் விஞ்ஞானிகளுக்கு ஈர்ப்பு சக்தி ஒரு மர்மமான சக்தியாக இருக்கிறது. பெரிய அளவிலான திணிவை இழுத்து வைத்து, பேரண்டத்தில் ஒரு ஒழுங்குமுறையை வழங்கும் செயலை இந்த பால்வெளி மண்டலப் பசை செய்கிறது. இது உடனடியாக செயல்படும் விசையாக இருப்பதால், பால்வெளி மண்டலத்தின் ஒரு மூலையில் ஒரு விண்ணுலக பொருள் நகர்ந்ததும், வியக்கத்தக்க வேகத்துடன் இருக்கும் ஒளி அந்த தூரத்தை கடப்பதற்கு பல மில்லியன் வருடங்கள் ஆகும் என்றாலும், அந்த மண்டலத்தில் இருக்கும் மற்ற திணிவுகள் அனைத்தும் உடனடியாக தங்களை மாற்றி அமைத்துக்கொள்கின்றன. இது விஞ்ஞானிகளுக்கு பரவெளி மற்றும் காலம் ஒப்பீட்டு அளவிலான கோட்பாடுகள் என்றும், பிரபஞ்சம் முழுவதும் ஒரே சமயத்தில் "ஒரு பொருள்" இருக்கிறது என்றும் இந்துக்கள் தொடக்கத்தில் இருந்து அறிந்து இருந்ததை குறிப்பால் உணர்த்துகின்றன. ஈர்ப்பு சக்தியைப் போல, விநாயகரை முழுமையாக கணிக்க முடிகிறது மற்றும் அவர் தனது ஒழுங்குமுறைக்கு புகழ்பெற்று இருக்கிறார். ஈர்ப்பு சக்தி இல்லாமல், நமக்கு பரிச்சயமான பால்வெளி மண்டலங்கள் இருக்க வாய்ப்பில்லை. திணிவுகள் வழித்தவறி சுற்றித்திரிந்து இருக்கும் மற்றும் நமக்கு தெரிந்த வாழ்க்கையின் அனைத்து அமைப்புக்களும் சாத்தியமற்றதாக இருந்திருக்கும். பேரண்டத்தில் முறையான இருப்புக்கு அடிப்படையாக இருக்கும் ஈர்ப்பு சக்தியின் மர்மங்கள் மீது நமது அன்பான விநாயகர் ஆதிக்கம் செலுத்துகிறார்.

மின் கந்தவியல் சக்தி

நமது தூல பிரபஞ்சத்தில் அங்கம் வகிக்கும் அணுக்களுக்கு மத்தியில் இரண்டாவதாக மின் காந்தவியல் சக்தி ஆதிக்கம் செலுத்துகிறது. அணுவிற்குள் இருக்கும் துகள்களை ஒன்றாக பிணைத்து வைக்கும் சக்திகளை முருகப்பெருமான் அல்லது கார்த்திகேயன் நிர்வகிக்கிறார். மின்காந்தவியல் சக்தி ஈர்ப்பு சக்தியை காட்டிலும் பன்மடங்கு பெரிதாக இருந்தாலும், அது நுண்ணுலக இருப்பில் செயல்படுவதால், தினசரி வாழ்வில் அதன் தாக்கம் ஈர்ப்பு சக்தியை காட்டிலும் குறைவாகவே இருக்கிறது. அதைப்போல நமது தினசரி முக்கியத்துவங்களில் முருகப்பெருமானை காட்டிலும் விநாயகரின் ஈடுபாடு அதிகமாக இருக்கிறது. முருகப்பெருமானின் மின்சக்தி ஒழுங்குப்படுத்துவதைக் காட்டிலும் மாற்றத்திற்கும், கணிக்க முடிந்ததை காட்டிலும் ஊகிக்க முடியாததிலும் பயன்படுத்தப்படுகிறது. புரோட்டான்கள், நியூட்டிரான்கள், எலக்ட்ரான்கள், குவாண்டா, குவார்க்குகள் மற்றும் மற்ற அணுவிற்குள் இருக்கும் துகள்களின் அணு அமைப்புக்களை பிணைத்து வைக்கும் வலுவான சக்திகளைப் போன்று, முருகப்பெருமானின் சக்தி நமக்குள், நமது ஆன்மீக லோகத்திற்குள், மனதின் ஆழத்திக்குள் வலுவாக செயல்படுகிறது. அவரது மின்

சக்தி அவரிடம் இருக்கும் சக்தி *வேலில்* இருந்து வெளிவருகிறது. ரேடியோ, ரேடார் மற்றும் ஒளி அலைகள், எக்ஸ்-கதிர்கள், வெப்பக் கதிர்கள், காம்மா மற்றும் அண்டக்கதிர்கள் வடிவில் ஆற்றல் பிரபஞ்சம் வழியாக விரைந்து செல்வதைப் போல, முருகப்பெருமானின் மின்சக்தி நமது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இருள் மற்றும் வெளிச்சம், நேர்மறை மற்றும் எதிர்மறை அழுத்தங்களை நாம் அனுபவிப்பதை போல முருகப்பெருமானின் லோகத்தில் இருந்து தேவர்கள் மற்றும் அசுரர்களின் நேர்மறை மற்றும் எதிர்மறை பண்புகளுடன் மின்காந்த சக்திகள் வெளிவருகின்றன.

விநாயக பெருமான் ஈர்ப்பு சக்தியைப் போன்று நம்முடன் எப்போதும் இருந்து, நமது தூல இருப்பிற்கு ஆதரவு தந்து வழிகாட்டி வருகிறார். நிலைமின் சக்தியைப் போன்று முருகப்பெருமான் பெரும்பாலும் தென்படாமல், நாம் எப்போதும் விழிப்புடன் இல்லாத ஒரு லோகத்தில் செயல்பட்டு, பிரகாசமான சக்திகள் மற்றும் ஒளி வடிவில் நம் வாழ்க்கைகளில் இருந்தாலும், விநாயகரைப் போல தெளிவாக அறியப்படுவது இல்லை. பழங்கால *ஆகமங்கள்* மேலிருக்கும் தகவலை, அதிக தத்துவம் கலந்த ஒரு நுட்பமான சுருக்கமாக வழங்குகிறது. பதிமூன்று முதல் முப்பத்தி ஆறு *தத்துவங்கள்* வரையிலான காந்த லோகங்களின் பருமனான சக்திகளை குறிக்கும் *அசுத்த மாயை* மீது விநாயகர் ஆட்சி செய்வதாகவும், ஆறு முதல் பன்னிரண்டாவது *தத்துவங்கள்* வரையிலான ஆன்மீக காந்த சக்தியின் லோகங்களாக இருக்கும் *சுத்தஅசுத்த மாயையை* முருகன் நிர்வாகம் செய்வதாகவும். பிரபஞ்ச விரிவாக்கத்தில் முதலாவது முதல் ஐந்தாவது *தத்துவங்கள்* வரையிலான சுத்தமான ஆன்மீக லோகங்களின் *சுத்த மாயை* சிவபெருமானின் இராச்சியம் என்றும் அந்த *ஆகமங்கள்* அறிவிக்கின்றன.

அணு சக்தி

சிவபெருமான் கடவுள்களுக்கு கடவுளாகவும், பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்து சக்திகளின் மூலமாகவும் இருக்கிறார். அணுவிற்குள் இருக்கும் துகள்களுக்குள் இருக்கும் அணு சக்திகள் மற்றும் அதன் சாரமாக இருக்கும் சிவபெருமானின் லோகம் அதிக உட்புறமான லோகமாக இருக்கிறது. சக்திகளில் மிகவும் வலுவான சக்தியாக அணுசக்தி விளங்குகிறது மற்றும் இந்து சமயக் கடவுள்களில் சிவபெருமான் பரமனாக விளங்குகிறார். பருப்பொருளின் மையத்தில், நடராசர் ரூபத்தில் இருக்கும் சிவபெருமான் தனது பிரபஞ்ச நடனத்தை ஆடுகிறார். பிரபஞ்சத்தின் தெய்வீக செயல்பாடுகளை விளக்குவதற்கு இதைப்போன்ற ஒரு சிறந்த கருத்துருவத்தை ரிஷிகள் என்றுமே பார்த்திருக்கவில்லை. பிரபல இயற்பியல் வல்லுனர் மற்றும் ஆய்வாளரான ப்ரிட்சாப் காப்ரா எழுதிய *தி தாவு ஆப் ஃபிசிக்ஸ்* புத்தகத்தில் இருந்து ஒரு பகுதியை நாங்கள் இங்கே உங்களுடன் பகிர்கிறோம். "நடனமாடும் பிரபஞ்சமாக இருக்கும் சிவபெருமானின் நடனம், பல்வேறு வகை மாதிரிகள் வழியாக பாய்ந்து செல்லும் தொடர்ச்சியான சக்தியின் ஓட்டம் ஒன்றுக்குள் ஒன்று


உருகுவதை குறிக்கிறது. நான்கு பருவங்களின் சுழற்சி மற்றும் உயிரினங்களின் பிறப்பு மற்றும் இறப்பில் மட்டும் படைத்தல் மற்றும் அழித்தலின் மாதிரி வெளிப்படாமல், அது அசேதன பருப்பொருளின் சாரமாகவும் இருப்பதாக நவீன இயற்பியல் நிரூபித்துள்ளது. பருப்பொருளின் ஆக்கக்கூறுகளுக்கு மத்தியில் நடைபெறும் பரிமாற்றங்கள் அனைத்தும், மெய்நிகர் துகள்களை வெளியிடுவது மற்றும் ஈர்த்துக்கொள்வதன் மூலம் நடைபெறுகிறது என்று குவாண்டம் புலக்கோட்பாடு தெரிவிக்கிறது. அதைவிட முக்கியமாக, மூலப்பொருள் துகள்கள் அனைத்தும் மெய்நிகர் துகள்களை வெளியிடுவது மற்றும் மீண்டும் ஈர்த்துக்கொள்வதன் மூலமாக 'சுயமாக எதிர்ச்செயலாற்றுவதால்,' அந்த படைப்பு மற்றும் அழிவின் நடனம் பருப்பொருள் இருப்பதற்கான அடிப்படையாக விளங்குகிறது. அணுவிற்குள் இருக்கும் ஒவ்வொரு துகளும் ஒரு ஆற்றல் நடனத்தை மட்டும் ஆடுவதில்லை, ஆனால் அது படைப்பு மற்றும் அழிவின் ஒரு துடிப்பான செய்முறை என்று நவீன இயற்பியல் தெரியப்படுத்தியுள்ளது. அதனால் நவீன இயற்பியல் வல்லுனருக்கு, சிவபெருமானின் நடனமானது அணுவிற்குள் இருக்கும் பருப்பொருளின் நடனமாக, பிரபஞ்சம் முழுவதையும் உள்ளடக்கிய படைப்பு மற்றும் அழிவின் ஒரு தொடர் நடனமாக, இருப்பு மற்றும் இயற்கையின் நடவடிக்கை அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கிறது. அதனால் பிரபஞ்ச நடனத்தின் உருவகமானது பழங்கால புராணம், சமயம் சார்ந்த கலை மற்றும் நவீன இயற்பியலை இணைக்கிறது. 'இது கவிதை வடிவில் இருக்கும் இயற்பியல்' என்று குமாரசாமி கூறியது பொருத்தமாகத் தான் இருக்கிறது.”


ஈடு இணையற்ற இந்து சமய அண்டவியல்

இன்று காரண ஆய்வு மற்றும் அனுபவப்பூர்வமான நிரூபணத்தின் கடினமான செய்முறை மூலம் அறிவியலால் கண்டறியப்பட்டு பாராட்டப்படும் அண்டவியலை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பரிந்துரைத்த தங்களது மதத்தை நினைத்து இந்துக்கள் நியாயமாக பெருமைப்படலாம். நமது லௌகீக கண்ணோட்டம் முறையானது என்று நியூடன் மற்றும் ஐஸ்டீன் நிரூபிப்பதற்கு நீண்டகாலம் முன்பாகவே, அண்டத்தின் மூலம் மற்றும் அமைப்புப் பற்றிய உண்மையை இந்து மதம் அறிந்து இருந்தது. பல மேற்கத்திய சமய அமைப்புக்கள் அறிவியலை எதிர்க்கின்றன அல்லது மாறி வரும் அறிவியல் தீர்மானங்களுக்கு ஏற்ப தங்கள் மத நம்பிக்கைகளை மாற்றிக்கொள்ளாமல் இருக்கின்றன. ஆனால் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன், ஆன்மா மற்றும் பிரபஞ்சம் பற்றிய நமது ஆன்மீக உண்மைகள் முழு இணக்கத்துடன் இருப்பதோடு நவீன அறிவியலால் மறுக்க முடியாமல் இருப்பது இந்து சமய விவேகத்தின் மாபெரும் பாரம்பரிய சொத்தாக விளங்குகிறது.

பிரபஞ்சத்தின் விரிவடையும் மற்றும் ஒடுங்கும் பண்பை வானியல் இயற்பியலாளர் ஆய்வு செய்யும் போது, உள்பொருள் என்பது பிரம்மதேவரின் பகல் மற்றும் இரவாக இருப்பதாகவும், அது நேர்போக்கற்ற காலம் மற்றும் பரவெளியின் கருத்துருவமாக வெளிப்பட்டு, பிறகு *மகாபிரளயத்தின்* போது

முழுமையாக ஒடுங்கிக்கொண்டு, பிறகு மீண்டும் வெளிப்படுவது என்று முடிவில்லாத சுழற்சிகளை கொண்டிருப்பதாகவும் கருதும் இந்து கண்ணோட்டத்தைப் பற்றி அவர் ஆழ்ந்து சிந்திக்கிறார். அதே கருத்தியல் மற்றும் அறிவியல் சார்ந்த மனமானது, அந்த சுழற்சியில் ஒடுக்கத்தின் முடிவில் அனைத்து பருப்பொருள்-ஆற்றல் கலந்து இருக்கும் நிலையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் போது, அது இந்து அண்டவியலின் பிரம்மாண்டத்தைப் பற்றி சிந்திக்கிறது. 1970 களில் கலிபோர்னியா மாகாணத்தில் உலகின் மிகப்பெரிய மற்றும் அதிக ஆற்றல்கொண்ட துகள்முடுக்கியை உருவாக்க முடிவு செய்த உயர் ஆற்றல் தொழில்நுட்ப வல்லுனர்கள், அதற்கு ஒரு பொருத்தமான பெயரை வழங்கவேண்டும் என்று இந்தியாவின் கணேஷப்புரியில் வசித்த சுவாமி முக்தானந்தாவிடம் கேட்டுக்கொண்டார்கள். அவரும் அதற்கு பொருத்தமாக "சிவா" என்று பெயரிட்டார். இந்து மதம், இந்து மதத்தில் இருந்து தோன்றிய பௌத்த மதம், சீக்கிய மதம், சமணம் மற்றும் தோன்றிய மண்ணில் வழக்கத்தில் இருக்கும் பெரும்பாலான மதங்களும் அறிவியலுக்கு தகவல் மற்றும் நுண்ணறிவுகளை வழங்குகின்றன மற்றும் அறிவை நாடும் வேட்கையில் மதம் மீண்டும் அறிவியலுடன் இணைந்து செயல்படுகிறது. உலகில் தலைசிறந்த மதமாக இந்து மதம் விளங்குகிறது என்று நாம் தைரியமாக அறிவிப்பதில் எந்த அதிசயமும் இல்லை.




CHAPTER FIVE
Forms of Ganesha
FernSorus Rogelio Moreno Gill20x



விநாயகரின் உருவங்கள்

கணேஷ ஸ்வரூபாணி

गणशस्वरूपाणि



குடும்பம், சமூகம், வர்த்தகத்தின் சக்திகள் மற்றும் நமது வாழ்க்கைகளை வடிவமைக்கும் தர்மத்தில், நமது மற்றும் உலகின் அனைத்து கலாச்சாரங்களிலும், தூல பிரபஞ்சத்தில் மற்றும் நமது இதயத்தில் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும், பேரண்டத்தில் எங்கும் நமக்கு பிடித்தமான, கருணையுள்ளம் கொண்ட விநாயகர் இருக்கிறார். ஆனால் அவரது இருப்பு வலுவாக இருக்கும் ஒரு பிரதிஷ்டை செய்த கோயில் அல்லது தெருவோர மரத்தடி கோயிலில் வாயிலாக அவரது அருள் தேவலோகத்தில் இருந்து பிரகாசிக்கிறது. தொடக்கங்களின் கடவுளாக இருக்கும் விநாயகர், நாம் தர்மத்தை சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக நமது வாழ்க்கைகளின் யதார்த்தமான அம்சங்களில் வழிகாட்டுகிறார். இந்துவால் விநாயகரை எளிதில் தொடர்புக்கொள்ள முடிகிறது, மற்றும் அவர் நமது மனித இயல்பை நன்றாக புரிந்துக்கொண்டு, நமது தவறுகள் மற்றும் குறைபாடுகளை சகித்துக்கொள்வதாக கருதப்படுகிறார். விநாயகரின் தெய்வீக இயல்பு மிகவும் விரிவாக இருப்பதால், அவர் ஒரு கோட்பாட்டில் வரையறுக்கப்படாமல், பல ரூபங்களில் சித்தரிக்கப்படுகிறார். அவர் அவற்றில் ஒவ்வொன்றிலும் இருக்கிறார், மற்றும் அவை அனைத்திலும் இருக்கிறார்.

விநாயகரை குறிக்கும் *கணேஷா* என்ற சமஸ்கிருத சொல் கணம் என்ற சொல்லில் இருந்து தோன்றியது. இதற்கு "விருந்தளிப்பவர்கள்," "கூட்டம்," அல்லது "படை" என்று பொருள். கணங்கள் என்ற சொல் குறிப்பாக சிவபெருமானுக்கு துணையாக இருக்கும் உபதேவதைகளை குறிப்பிடுகிறது. இவர்களுக்கு *ஈஷா* அல்லது ஈசன் அல்லது "அரசர்" "தலைவர்" அல்லது "பதியாக" *கணேஷா* என்கிற விநாயகர் இருக்கிறார். *கணேஷா* என்ற சொல்லும் கணபதி என்ற சொல்லும் ஒரே பொருளையே தருகின்றன. கணபதி வடிவில் *கணங்களின்* தலைவராக இருக்கும் விநாயகர், தீங்கற்ற மற்றும் தீங்கிழைக்கும் அந்தர்லோக சக்திகள் மீது ஆட்சிபுரிந்து அவர்களை கட்டுப்படுத்துகிறார். இவர் முருகப்பெருமானைப் போல வீரம் மற்றும் வலிமையை பயன்படுத்தாமல், புத்தியை பயன்படுத்தி திட்டமிட்டு செயல்படுகிறார். நாம் நமது துன்பங்களுக்கு தீர்வு காண பகுத்தறிதல் மற்றும் சாமர்த்தியத்தை பயன்படுத்தும் போதும், நாம் தடைகளை கடந்து மெதுவாக, விவேகமாக திட்டமிட்ட முறையில் செல்லும்

போதும், நாம் விநாயகரின் பாதையை பின்தொடர்கிறோம். விநாயகர் அவசரமாக செயல்படாமல் கவனமாக இருக்கிறார். பொறுமையாக இருக்கும் அவர், சரியான நேரத்தில் சம்பவங்கள் நடக்க வேண்டும் என்பதற்காக காத்திருக்க தயாராக இருக்கிறார்.

விக்கினங்களின் கடவுளாக விக்னேசுவரனாக இருக்கும் விநாயகர், நாம் முன்னேறுவதற்கு நேரம் சாதகமாக இல்லையென்றால் துன்பங்கள் மற்றும் தடைகளை உருவாக்குகிறார் மற்றும் நமக்கு வெற்றி உறுதியாக இருக்கும் போது அந்த தடைகளை நீக்கி விடுகிறார். நாம் ஒரு பணியை தொடங்கும் போதும், நமது வாழ்வில் மாற்றத்தை விரும்பும் போதும் அல்லது மற்ற தெய்வங்களை வழிபடத் தொடங்கும் முன்பாகவும் விக்னேசுவரனைத் தான் வேண்டிக் கொள்கிறோம்.

ஏகாதந்தனாக ஒற்றை தந்தத்துடன் இலக்கிய ஆதரவாளராக இருக்கும் விநாயகர், வியாசர் சொல்வதைக் கேட்டு மகாபாரத காவியத்தை எழுதுவதற்கு ஒப்புக்கொண்டார். அவர் எழுதும் போது எழுத்தாணி உடைந்ததும், வேறு வழியில்லாமல் தனது தந்தத்தை உடைத்து மீண்டும் எழுத ஆரம்பித்தார். இதன் மூலம் அவர் நமது வாழ்வில் அறிவும் தர்மமும் மிகவும் முக்கியமானவை என்றும், தேவைப்பட்டால் அதற்காக பெருமை மற்றும் அழகையும் தியாகம் செய்யலாம் என்றும் உபதேசிக்கிறார்.

சித்தாந்தத்தின் படி, விநாயகர் வெற்றியை வழங்குபவராக இருக்கிறார் மற்றும் அவர் மிகுதியான விளைச்சல் மற்றும் பொதுவாக வாழ்வில் செல்வ வளத்துடன் தொடர்புடையவராக இருக்கிறார். சிவபெருமானின் மனம் அல்லது *மனசின்* லௌகீக வெளிப்பாடாக இருக்கும் விநாயகர் நிலம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களின் ஆளுருவமாக இருந்து பிரபஞ்சத்தில் ஒழுங்கை உருவாக்கி நிலைநிறுத்தும் அடிப்படை சக்திகளை வழிநடத்துவதாகவும் கூறப்படுகிறது.

விநாயகரைப் பற்றிய பழங்கால நூலான *முத்கல புராணம்*, மனிதனின் எட்டு பலவீனங்கள் அல்லது துர்தேவதைகள் மீது வெற்றிக்கொள்ளும் எட்டு விநாயக உருவங்களை குறிப்பிடுகிறது. ஏக்தந்தாவாக இருக்கும் விநாயகர், மத என்கிற அகந்தையை வெற்றிக்கொள்கிறார். தூம்ரவர்ணமாக (புகையின் நிறத்தில்) இருக்கும் விநாயகர் அபிமானத்தை வெற்றிக்கொள்கிறார். அவர் வக்ரதுண்ட (வளைந்த துதிக்கை) வடிவில் மாத்சர்யம் அல்லது பொறாமையை வெற்றிக்கொள்கிறார். அவர் மகோதரனாக (பெரிய தொந்தி) மோகத்தை வெற்றிக்கொள்கிறார். அவர் கஜானனனாக (ஆனைமுக) வடிவில் லோபம் என்கிற பேராசையை வெற்றிக்கொள்கிறார். அவர் லம்போதரனாக (பருத்த தொந்தி) கிரோதம் என்கிற கோபத்தை வெற்றிக்கொள்கிறார். அவர் விகட (மிகப்பெரிய) வடிவில் காமத்தை வெற்றிக்கொள்கிறார். அவர் விக்கினராஜனாக (தடைகளை அழிப்பவர்) மமதை மீது வெற்றிக்கொள்கிறார்.

அதனால் நமது அன்பான விநாயகர் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கும் துணைபுரிய இருக்கிறார் என்பதையும், எல்லோரும் நம்பிக்கையுடன் இருக்கலாம் என்பதையும், "இயல்பான தீமை" என்று எதுவும் இல்லை மற்றும் இளம் ஆன்மாவாக வாழ்ந்து வளர்த்து முதிர்வை பெற்ற பிறகு ரிஷி உணர்வுக்கு பக்குவம் அடைவதற்காக கடந்தகாலத்தில் கற்ற விஷயங்களில் இருக்கும் மேலோட்டமான மாறுபாடுகள் மட்டுமே இருக்கின்றன என்பதையும் இனி நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது. அவர் "நமக்காக காத்து இருக்கிறார்." ஆமாம், எல்லோரும் நம்பிக்கையுடன் இருக்கலாம், மற்றும் யாரும் நிரந்தர வேதனையை அனுபவிப்பது இல்லை. நமது அன்பான விநாயகர் தனது சகோதரனான முருகப்பெருமானிடம் நம்மை அறிமுகம் செய்து வைக்கிறார். முருகப்பெருமான் மனோபலத்தின் மையமாக இருக்கும் *மணிப்பூரக* சக்கரத்தில் அமர்ந்து இருக்கிறார்.

விநாயகரிடம் இருக்கும் இரண்டு சக்திகள்

வழக்கமாக விநாயகப்பெருமான் சித்தி மற்றும் புத்தி என்கிற தனது இரண்டு தேவியர்களுடன் சித்தரிக்கப்படுவதைப் பற்றி குழப்பம் நிலவுகிறது. புத்தி என்கிற விவேகம், அறிவை புத்திசாலித்தனமாக பாகுபடுத்த பயன்படுத்துவதை குறிக்கிறது. வெற்றியை குறிக்கும் சித்தி என்பது நிறைவேற்றம், சாதனை அல்லது முயற்சி செய்து அடைவதை குறிக்கிறது. வட இந்தியாவில் விநாயகருக்கு இரண்டு தேவியர் இருப்பதாக கருதப்பட்டாலும், தெற்கில் அவர் ஒரு *பிரம்மசாரியாக* கருதப்படுகிறார். மறைஞானரீதியாக மகாதேவர்களில் யாருக்கும் தேவியர்கள் இல்லை என்பதை வலியுறுத்தியாக வேண்டும். அவர்களின் தேவியர்கள் அவர்களில் இருந்து வேறுபட்டவர்களாக இல்லாமல், அவர்களின் இருப்பு அல்லது சக்தி அல்லது ஆற்றலாக இருக்கிறார்கள். மூன்றாவது லோகத்தின் உட்புறத்தில் வாழும் மகாதேவர்களை பூலோகத்தில் வாழும் மனிதர்களுடன் ஒப்பிட முடியாது. அவர்கள் நன்றாக முதிர்ந்த ஆனந்தமய கோசத்தில் இருப்பதால், அந்த உடல்களை பாலின அடிப்படையில் வேறுப்படுத்த முடியாது. தூய உணர்வு மற்றும் ஒளி வடிவமாக இருக்கும் அந்த தெய்வீக சக்திகள், ஆணாகவோ பெண்ணாகவோ இருப்பதில்லை. நாம் தெய்வீக பண்புடைய இந்த மகாதேவர்களை நன்றாக புரிந்துக்கொள்வதற்காக, சிலசமயங்களில் அவர்களின் தோற்றம் திடமாக இருந்தால் அவர்களை ஆணாகவும், ஆனால் அவர்களின் தோற்றம் மென்மையான இரக்ககுணத்துடன் இருந்தால் அவர்களை பெண்ணாகவும் பாவிக்கிறோம். இது உண்மையில் ஒரு தவறான கருத்து ஆகும். மூன்றாவது லோகமாக இருக்கும் சிவலோகத்தின் விரிவான மெய்ஞ்ஞான லோகங்களில் கணவன்மார்கள் மற்றும் மனைவிமார்கள் இருப்பதில்லை. அதனால் முறையாக பார்க்கும் போது, சித்தியும் புத்தியும் விநாயகரின் தேவியர்களாக இல்லாமல், விவேகம் மற்றும் வெற்றி என்ற இரண்டு சக்திகளை குறிக்கின்றன. இது அவரது பக்தர்கள் பெறும் பயன்கள் அல்லது வரங்களை குறிக்கின்றன. புராணங்களில்

முருகப்பெருமானின் தேவியர்களாக தோன்றும் வள்ளி மற்றும் தேவயானையைப் போன்று விநாயகரின் தேவியர்களாக இருக்கும் புத்தி மற்றும் சித்தியை ஆன்மீக கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது, அவர்கள் அவரது இருப்பினுள் உருவகம் செய்யப்பட்டு, பெண்ணின் மற்றும் ஆணின் பண்புள்ள *இடா* மற்றும் *பிங்கலா நாடிகளாக* இருக்கின்றன.

அகத்தின் அமைதி

அன்பான நமது விநாயகர் ஒரு ஆற்றல்மிக்க கடவுள் என்றாலும்,
நமது மிகப்பழைய கர்மா அனைத்தையும் அக்கறையுடன் வழிநடத்தி,
அதிக உன்னிப்பாகவும் நுணுக்கமாகவும் செயல்படும் அந்த ஆன்மாவின்
அமைதி உங்களுக்கு விசித்திரமாக தோன்றும்.

நாம் இவ்வாறு இந்த பிறவியில் வாழவேண்டும் என்பதற்காக,
அவர் மூலாதார சக்கரத்தை மிகவும் வலுவாக தாங்கி இருப்பதாலும்,
அவர் இல்லையென்றால் நாம் இல்லை என்பதாலும்,
அவர் மிக அருகில் இருப்பது பாக்கியமே.

நீங்கள் அன்போடு அவரை பிரார்த்தித்தால் அகஅமைதி என்பது உங்கள்
தெய்வீக பண்பின் குகை என்ற உண்மையையும்,
முயற்சி செய்து அடைதல், அகத்தில் அமைதியுடன் இருத்தல் என்பது
நீங்கள் பெறும் நற்பிறவிகளின் பாரம்பரியம் என்பதையும் அறிவீர்கள்.


முப்பத்தி இரண்டு விநாயகர் உருவங்கள்

மாஸ்கோ முதல் லண்டன் வரை மற்றும் டர்பன் முதல் கோலாலம்பூர் வரையில், பூமியில் இருக்கும் பெரிய மற்றும் சிறிய கோயில்களில், நாம் வழிபடும் விநாயகரின் *மூர்த்தி* பல உருவங்களில் தோன்றுகிறது. *முத்கல புராணம்* மேலே குறிப்பிட்ட எட்டு உருவங்கள் இல்லாமல், மேலும் முப்பத்தி இரண்டு உருவங்களை பட்டியலிடுகிறது. நாம் இதன் வரைப்படங்களை கீழே வழங்கியுள்ளோம். தென்னிந்தியாவின் இராமேசுவரத்தில் இருக்கும் ஸ்ரீ சங்கர மடத்தில் எட்டு முகப்புக்களுடன் ஒரு தேர் வடிவில் இருக்கும் மண்டபத்தில் ஷோடச கணபதி என்கிற முதல் பதினாறு மூர்த்திகள் உங்கள் ஆவலை தூண்டுவதாக இருக்கும். இந்த மண்டபம், காஞ்சி காமகோடி பீடத்தின் 68 ஆவது மடாதிபதியாக இருந்த ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆணைப்படி நிறுவப்பட்டது.

1

பால கணபதி

बालगणपति



பாலகணபதி பொன்னிறத்தில் “குழந்தையைப் போன்று" இருக்கிறார். அவர் தனது திருக்கரங்களில் பூமியின் செல்வவளம் மற்றும் செழிப்பை குறிப்பிடும் வாழைப்பழம், மாம்பழம், கரும்பு மற்றும் பலாப்பழத்தை வைத்து இருக்கிறார். அவரது துதிக்கை அவருக்கு பிடித்தமான மோகத்தை ஏந்தியிருக்கிறது.

2

தருண கணபதி

तरुणगणपति




“இளமையோடு" காட்சியளிக்கும் தருண கணபதி தனது எட்டு திருக்கரங்களில் பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவல் பழம், உடைந்த தனது தந்தம், நெற்கதிர் மற்றும் ஒரு கரும்புத் தண்டை வைத்து இருக்கிறார். அவருடைய பிரகாசமான சிகப்பு நிறம் துளிர்விடும் இளமையை பிரதிபலிக்கிறது.

3

பக்தி கணபதி

भक्ति गणपति




அறுவடை காலத்தில் பௌர்ணமி நிலவு போல பிரகாசித்து பூக்களால்
அலங்கரிக்கப்பட்டு இருக்கும் பக்தி கணபதி, பக்தர்களுக்கு
பிடித்தமானவராகவும், பார்ப்பதற்கு ரம்மியமாகவும் காட்சி அளிக்கிறார்.

அவர் தனது திருக்கரங்களில் ஒரு வாழைப்பழம், மாம்பழம், தேங்காய் மற்றும் ஒரு கிண்ணத்தில் *பாயசத்தையும்* வைத்து இருக்கிறார்..

4

வீர கணபதி

वीर गणपति




“வல்லமை வாய்ந்த போர்வீரனைப் போல" கம்பீரமான தோரணையில் வீர கணபதி காட்சி அளிக்கிறார். மனதின் சக்திகளை சித்தரிக்கும் வண்ணம் அவரது பதினாறு திருக்கரங்களில் அங்குசம், சக்கரம், வில், அம்பு, வாள், கேடயம், கதை, குந்தாலி, திரிசூலம் மற்றும் வேறு பல ஆயுதங்கள் நிறைந்து இருக்கின்றன.

5

சக்தி கணபதி

शक्तिगणपति




நான்கு கைகளுடன் தனது சக்திகளில் ஒன்றை தனது மடியில் அமர்த்தி இருக்கும் “ஆற்றல்மிக்க" சக்தி கணபதி, மஞ்சள் சிவப்பு நிறத்தில்

காட்சி அளித்து, கிருகஸ்தர்களை பாதுகாக்கிறார். அவர் ஒரு அங்குசம் மற்றும் ஒரு பூமாலையை வைத்துக்கொண்டு, *அபய முத்திரையில்* அருளை வழங்கிக்கொண்டு இருக்கிறார்.

6

துவிஜ கணபதி

द्विजगणपति




“இரு பிறப்பாளனாக” நான்கு தலைகளுடன் இருக்கும் துவிஜ கணபதி, நிலவைப் போன்ற நிறத்தில் காட்சி அளிக்கிறார். அவர் ஒரு பாசம், அங்குசம், ஒரு ஓலைச்சுவடி, ஒரு தண்டம், ஒரு கமண்டலம் மற்றும் அவரது ஜபமாலையுடன் காட்சி அளிக்கிறார். அவர் ஒழுக்கத்துடன் முயற்சி செய்யவேண்டிய அவசியத்தை எல்லோருக்கும் நினைவூட்டுகிறார்.

7

சித்தி கணபதி

सिद्धिगणपति



பொன்னிற மஞ்சள் நிறத்தில் இருக்கும் சித்தி கணபதி, சாதனை மற்றும் சுய கட்டுப்பாட்டின் சாரமாக விளங்குகிறார். ஒரு பூங்கொத்து, கோடாரி, மாம்பழம், கரும்பு மற்றும் அவரது துதிக்கையில் இனிப்பு கலந்த எள் உருண்டையை வைத்து இருக்கிறார்.

8

உச்சிஷ்ட கணபதி


उच्छिष्टगणपति



“படையளின் கடவுளாக” இருக்கும் உச்சிஷ்ட கணபதி கலாச்சாரத்தின் காப்பாளராக இருக்கிறார். நீலநிறத்தில் ஆறு கைகளுடன் தனது சக்தியுடன் அமர்ந்து இருக்கும் இவர் ஒரு வீணை, மாதுளை, நீலநிற தாமரை மலர், ஜபமாலை மற்றும் ஒரு சிறிய பச்சைநிற நெற்பயிரை வைத்து இருக்கிறார்.

விக்ன கணபதி

विघ्नगणपति




“தடைகளின் தலைவனாக” இருக்கும் விக்ன கணபதி, பிரகாசமான பொன்னிறத்தில் ஆபரண அலங்காரத்துடன் இருக்கிறார். அவர் தனது எட்டு திருக்கரங்களில் ஒரு பாசம் மற்றும் அங்குசம், தந்தம் மற்றும் மோதகம், சங்கு மற்றும் சக்கரம், பூங்கொத்து, கருப்பு, மலர்களால் செய்த அம்பு மற்றும் ஒரு கோடாரியை வைத்து இருக்கிறார்.

10

க்ஷிப்ர கணபதி

क्षिप्रगणपति




அழகான சிவப்பு நிறத்தில் “விரைவாக செயல்பட்டு" வரங்களை வழங்கும் க்ஷிப்ர கணபதி தனது உடைந்த தந்தம், ஒரு பாசம், அங்குசம் மற்றும் கற்பக விருட்சத்தின் கொடியுடன் காட்சி அளிக்கிறார். அவர் மேல்நோக்கி உயர்ந்து நிற்கும் தனது துதிக்கையில் இரத்தின கலசத்தை வைத்து இருக்கிறார்.

11

ஹேரம்ப கணபதி

हेरम्बगणपति




ஐந்துமுகங்களுடன் வெள்ளை நிறத்தில் “பலவீனமானவர்களின் காவலனாக” விளங்கும் ஹேரம்ப விநாயகர், ஒரு அச்சுறுத்தும் சிங்கத்தை தனது வாகனமாக கொண்டிருக்கிறார். அவர் பாசம், ஜபமாலை, கோடாரி, சுத்தியல், தந்தம், மலர்மாலை, பழம் மற்றும் மோதகத்தை வைத்துக்கொண்டு அபய மற்றும் வரத முத்திரைகளுடன் பாதுகாப்பு மற்றும் ஆசிகளை அளிக்கிறார்.

12

லட்சுமி கணபதி

लक्ष्मीगणपति



வெற்றியை வழங்கும் லட்சுமி கணபதியையை சித்தி மற்றும் புத்தி சூழ்ந்து இருக்க, அவர் வெள்ளை நிறத்தில் காட்சி அளிக்கிறார். வரத முத்திரையுடன் இருக்கும் அவர் தனது திருக்கரங்களில் ஒரு பச்சைக்கிளி, ஒரு மாதுளம், வாள், அங்குசம், பாசம், கற்பக விருட்சத்தின் சிறிய கொடி மற்றும் ஒரு கமண்டலத்தை வைத்து இருக்கிறார்.

13

மகா கணபதி

महागणपति




ஒரு சக்தியின் துணையுடன் இருக்கும் மகாகணபதி, சிவப்பு நிறத்தில் மூன்று கண்களுடன் காட்சி அளிக்கிறார். அவர் தனது திருக்கரங்களில் தனது தந்தம், மாதுளம், நீலநிற அல்லிமலர், கரும்பு வில், சக்கரம், பாசம், தாமரைமலர், நெற்கதிர், கதை மற்றும் இரத்தின கலசத்தை வைத்திருக்கிறார்.

14

விஜய கணபதி

विजयगणपति



நான்கு கைகளுடன் சிவப்பு நிறத்தில் இருக்கும் விஜய கணபதி, மூஞ்சூறை தனது வாகனமாகக் கொண்டு பக்தர்களுக்கு வெற்றியை வழங்குகிறார். அவர் தனது திருக்கரங்களில் உடைந்த தந்தம், யானைக்கு பயன்படும் அங்குசம், ஒரு பாசம் மற்றும் தனக்கு பிடித்தமான இனிப்பான பொன்னிற மாம்பழத்தை வைத்து இருக்கிறார்.

15

நிருத்த கணபதி

नृत्यगणपति




மகிழ்ச்சிகரமாக “நாட்டியமாடும்” நிருத்த கணபதி பொன்னிறத்தில் நான்கு கைகளுடன் விரல்களில் மோதிரங்களுடன் காட்சி அளிக்கிறார். அவர் தனது திருக்கரங்களில் ஒரு தந்தம், அங்குசம், பாசம், கோடாரி மற்றும் கொழுகட்டையை வைத்து இருக்கிறார். அவர் கற்பக விருட்சத்தின் கீழ் குதித்துக்கொண்டு, உற்சாகமான நடவடிக்கை மற்றும் மகிழ்ச்சிக்கு உதாரணமாக விளங்குகிறார்.

16

ஊர்த்துவ கணபதி

ऊर्ध्वगणपति




இடது மடியில் தனது சக்திகளில் ஒருவருடன் அமர்ந்து இருக்கும் ஊர்த்துவ கணபதி பொன்னிறத்தில் “மேன்மைப்பொருந்திய” கடவுளாக இருக்கிறார். அவர் தனது ஆறு திருக்கரங்களில் நெற்கதிர், ஒரு தாமரை, கரும்பு வில், ஒரு அம்பு, அவரது தந்தம் மற்றும் நீலநிற அல்லியை வைத்து இருக்கிறார்.

17

ஏகாட்சர கணபதி

एकाक्षरगणपति




மூன்று கண்கள், சிவந்த மேனி, சிவப்பு நிற ஆடை மற்றும் சிவப்பு நிற மலர்மலையை ஏகாட்சர கணபதி அணிந்து இருக்கிறார். இவர் தனது கிரீடத்தில் பிறைச் சந்திரனுடன் மூஷிக வாகனத்தில் வரத முத்திரையுடன் பத்மாசனத்தில் அமர்ந்து, ஒரு மாதுளம் பழம், பாசம் மற்றும் அங்குசத்தை வைத்து இருக்கிறார்.

18

வரத கணபதி

वरदगणपति




“வரம் அளிக்கும்” வரத கணபதி, நன்றாக தெரியும் விவேகத்தின் மூன்றாவது கண்ணுடன் திருக்கரங்களில் அமுத கிண்ணம், பாசம் மற்றும் அங்குசத்தை பிடித்துக்கொண்டு தனது துதிக்கையின் மூலம்

இரத்தின கலசத்தை பிடித்து இருக்கிறார். அவருக்கு அருகில் அவரது சக்தி அமர்ந்து இருக்க, தனது கிரீடத்தில் பிறை சந்திரனுடன் இருக்கிறார்.

19

த்ரயக்ஷர கணபதி

त्र्यक्षरगणपति




“மூன்று அட்சரங்களின் (அ-உ-ம்) தலைவனான” த்ரயக்ஷர கணபதியின் பெரிய நெகிழ்வான காதுகள் அவருக்கு சாமரம் வீசுகின்றன. அவர் தனது திருக்கரங்களில் உடைந்த தந்தம், பாசம், அங்குசம் மற்றும் மாம்பழம் மட்டுமில்லாமல் அவ்வப்போது தனது துதிக்கையில் ஒரு மோதகத்தையும் வைத்து இருக்கிறார்.

20

க்ஷிப்ரபிரசாத கணபதி

क्षिप्-प्रसादगणपति




“விரைவாக பலன் அளிக்கும்” க்ஷிப்ரபிரசாத கணபதி தர்பைப் புல் ஆசனத்தில் அமர்ந்து இருக்கிறார். அவருடைய பெரிய வயிறு தெளிவாக தெரியும் பிரபஞ்சத்தை குறிக்கிறது. அவர் ஒரு பாசம்,

அங்குசம், தந்தம், தாமரை, மாதுளம் பழம் மற்றும் கற்பக விருட்சத்தின் கிளையை தனது திருக்கரங்களில் வைத்து இருக்கிறார்.

21

ஹரித்ரா கணபதி

हरिद्रागणपति



மஞ்சள் நிறத்தில் இருக்கும் ஹரித்ரா கணபதி மஞ்சள் நிற ஆடைகளை அணிந்து ஆடம்பரமான அரியணையில் அமைதியாக அமர்ந்து இருக்கிறார். அவர் தனது திருக்கரங்களில் தனது தந்தம் மற்றும் ஒரு மோதகத்துடன், பக்தர்களை அருகில் வைத்து இருக்க

பாசக்கயிறையும், அவர்களை முன்னேற்றி செல்வதற்கு கூர்மையான அங்குசத்தையும் கொண்டிருக்கிறார்.

22

ஏகதந்த கணபதி

एकदन्तगणपति




“ஒற்றை தந்தத்துடன்” இருக்கும் ஏகதந்த கணபதிக்கு நீலநிற மேனியும் பெரிய வயிறும் அடையாளமாக விளங்குகின்றன. அறியாமை தளைகளை அறுக்க ஒரு கோடாரி, பிரார்த்தனை செய்வதற்கு

ஜபமாலை, ஒரு லட்டு மற்றும் உடைந்த வலது தந்தம் ஆகியவை இந்த *மூர்த்தியின்* அம்சங்கள் ஆகும்.

23

சிருஷ்டி கணபதி

सृष्टिगणपति




பணிவான மற்றும் அன்பான பெருச்சாளியை வாகனமாக
கொண்டிருக்கும் சிருஷ்தி கணபதி மகிழ்ச்சிகரமான “வெளிப்பாட்டின்”

கடவுளாக இருக்கிறார். சுறுசுறுப்பாக சிவந்த மேனியுடன் இருக்கும் இந்த தெய்வம் தன்னிடம் ஒரு பாசம், ஒரு அங்குசம், மாம்பழம் மற்றும் சுயநலமற்ற தியாகத்தை சித்தரிக்கும் தனது தந்தத்தை வைத்து இருக்கிறார்.

24

உத்தண்ட கணபதி

उद्दण्डगणपति



மனித இருப்பின் விதிகளாக இருக்கும் தர்மத்தை தைரியமாக “அமல்படுத்துவராக” இருப்பவர் உத்தண்ட கணபதி. அவரது பத்து திருக்கரங்களில் இரத்தின கலசம், நீலநிற அல்லி, கரும்பு, கதை, தாமரை, நெற்கதிர், மாதுளம் பழம், பாசம், மாலை மற்றும் உடைந்த தனது தந்தத்தை ஏந்தியிருக்கிறார்.

25

ருணமோசன கணபதி

ऋणमोचनगणपति




குற்ற உணர்வு மற்றும் பந்தத்தில் இருந்து மனித நேயத்தை ருணமோசன கணபதி விடுவிக்கிறார். அவர் வெண்பளிங்கு போன்ற மேனியுடன், சிவப்பு நிற பட்டு ஆடையை உடுத்தியிருக்கிறார். அவர் தனது கைகளில் ஒரு பாசம், அங்குசம், பாலைப் போன்று வெண்மையான தந்தம் மற்றும் அவருக்கு பிடித்தமான நாவல் பழத்தை தாங்கி இருக்கிறார்.

26

துண்டி கணபதி

ढुण्ढिगणपति




ஆன்மீக சிந்தனைகளை தூண்டி தங்கள் வாழ்க்கையை தூய்மைபடுத்துவதற்காக மக்கள் நாடும் துண்டி கணபதி சிவப்பு நிற மேனியுடன் காட்சி அளிக்கிறார். அவர் தனது கைகளில் ருத்ராட்சமாலை, உடைந்த தந்தம், ஒரு கோடாரி மற்றும் இரத்தின பாத்திரத்தை வைத்து இருக்கிறார். இந்த பாத்திரம் சிரத்தையுள்ள பக்தர்களுக்கு அவர் சேமித்து வைத்திருக்கும் தூண்டுதல்களை பிரதிபலிக்கிறது.

27

துவிமுக கணபதி

द्विमुखगणपति




துவிமுக கணபதி இரண்டு வெவ்வேறு முகங்களுடன் எல்லா திசைகளையும் பார்க்கிறார். இவர் சிவப்பு நிறத்தில் பட்டாடையை உடுத்தி, பசுமையான நீலநிறத்தில் தென்படுகிறார். அவர் இரத்தின கிரீடத்தை அணிந்துகொண்டு ஒரு பாசம், அங்குசம், தனது தந்தம் மற்றும் இரத்தின பாத்திரத்தை வைத்து இருக்கிறார்.

28

மும்முக கணபதி

त्रिमुखगणपति



ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் “மும்முக அல்லது த்ரிமுக கணபதி” சிவப்பு நிறத்தில் காட்சி அளிக்கிறார். அவர் செந்தாமரையில் அமர்ந்துகொண்டு, ஜபமாலையை ஜபித்துக்கொண்டு, தனது

கைகளில் ஒரு அங்குசம், பாசம், அமுத கிண்ணத்தை வைத்து இருக்கிறார். அவரது தனது வலது கையில் பாதுகாப்பு அளிக்கும் முத்திரையையும், இடது கையில் ஆசிகள் அளிக்கும் முத்திரையையும் தாங்கியவராக காட்சி அளிக்கிறார்.

29

சிங்க கணபதி


सिन्हंगणपति



வெள்ளை நிறத்தில் இருக்கும் சிம்ம கணபதி, ஒரு சிங்கத்தை வாகனமாக கொண்டு, இன்னொரு சிங்கத்தை கையில் பிடித்துக்கொண்டு வலிமை மற்றும் அச்சமின்மையை பிரதிபலிக்கிறார். அவர் தனது கைகளில் ஒரு கற்பக விருட்ச கொடியையும், வீணை, மலர்ந்த தாமரை, பூங்கொத்து மற்றும் இரத்தின கலசத்தையும் தாங்கி இருக்கிறார்.

யோக கணபதி

योगगणपति



மந்திர ஜபம் செய்துக்கொண்டு, கால்களை தியான நிலையில் வைத்து இருந்து, கைகளில் ஒரு யோக தண்டம், கரும்புப்த்தண்டு, ஒரு பாசம் மற்றும் ஜபமாலையை தாங்கி இருக்கிறார். இளஞ்சூரியன் நிறத்தில் காட்சி அளிக்கும் அவர் நீலநிற ஆடைகளை அணிந்து இருக்கிறார்.

31

துர்க்கா கணபதி

दुर्गगणपति




“வெல்ல முடியாத” துர்க்கா கணபதி, அறியாமை இருள் மீது வெற்றி பெறுவதற்கு துணை நிற்கிறார். இந்த அற்புதமான மூர்த்தி பசும் பொன் நிறத்தில், சிவப்பு நிற ஆடையை உடுத்தி, கைகளில் ஒரு வில் மற்றும் அம்பு, பாசம் மற்றும் அங்குசம், ஜபமாலை, உடைந்த தந்தம் மற்றும் ஒரு நாவற்பழத்தை வைத்து இருக்கிறார்.

32

சங்கடஹர கணபதி

संकटहरगणपति



“சங்கடங்களை அகற்றும்” சங்கடஹரகணபதி இளஞ்சூரியன் நிறத்தில், நீலநிற ஆடையை உடுத்தி, ஒரு செந்தாமரையில் அமர்ந்து இருக்கிறார். அவர்கள் தனது கைகளில் ஒரு பாயசக் கிண்ணம், ஒரு

பாசம், அங்குசத்தை வைத்துக்கொண்டு ஒரு கையில் வரம் தரும் *வரத முத்திரையுடன்* இருக்கிறார். .

விநாயகர் சிற்பசாத்திரம்

எழுதியவர் Dr. எல். எஸ். மாதவ ராவ்,

“கணேஷா அஸ் பிறைமஸ் இன்டர் பார்ஸ்” என்ற புத்தகத்தின் பகுதி

செப்டம்பர் 18, 1994 ஆர்கனைசர் பத்திரிகையில் வெளியிடப்பட்டது



வ்வொரு இந்து பண்டிகையிலும், விநாயகரின் அருளைப் பெற்று தடைகளை தவிர்ப்பதற்கு அவரது ஆவாகனத்திற்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது வேத காலங்களில் இருந்து பழக்கமாக இருந்து வந்துள்ளது. விநாயகரின் காது, மூக்கு, துதிக்கையை போன்று அவரது உடலின் ஒவ்வொரு அங்கமும் ஒரு முக்கியத்துவத்தை பெற்று இருக்கிறது. ஒருவர் அதை அறிந்து, அதில் நம்பிக்கை வைத்து அதை பின்பற்ற வேண்டும். அவர் புத்தி ஈடு இணையற்றதாக இருக்கிறது. தெய்வங்களின் பல்வேறு பெயர்களை நன்றாக ஆய்வு செய்யும் போது, நாம் மத வளர்ச்சியின் அம்சங்களை அறிந்து அவற்றை தேடிப்பிடிப்பதற்கும், மதம் பற்றி மக்களிடம் இருக்கும் மனப்போக்கைப் பற்றி புரிந்துகொள்வதற்கும் துணை புரிகிறது. பல்வேறு *பங்கிமாக்களில்* (தோரணை) இருக்கும் விநாயகர், எவ்வாறு *ஆகம* கோயில்களில் வழிபடப்படுகிறார் என்பதை விளக்குவதற்கு இங்கே ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. இரண்டு திருக்கரங்களுடன் தலைப்பாகை இல்லாமல் அமர்ந்து இருக்கும் உருவச்சிலைகளில் இரண்டு வேறுபாடுகள் உள்ளன. இதில் முதலாவதாக *உட்குடாசனம்* [தொடை மற்றும் பிட்டத்தில் அமர்ந்து ஒன்று அல்லது இரண்டு முழங்கால்களையும் உயர்த்தி இருக்கும் ஆசனம்]. இதைப்பற்றி 120 ஆவது பக்கத்தில் இருக்கும் விளக்கத்தை பார்க்கவும். இரண்டாவதாக விநாயகர் மிகவும் அரிதாக, இரண்டு கால்களையும் மடக்கி *பத்மாசனத்தில்* அமர்ந்து இருக்கிறார்.
2. இரண்டு திருக்கரங்கள் மற்றும் தலைப்பாகையுடன் இருக்கும் விநாயகரின் உருவச்சிலைகள் பெரும்பாலும் 9 மற்றும் 12 நூற்றாண்டு வரையிலான காலத்தில் உருவாக்கப்பட்டவை. இவை வழக்கமாக *உட்குடாசனத்துடன்* சித்தரிக்கப்பட்டு இருக்கும் மற்றும் இவற்றின்


துதிக்கை வலப்பக்கம் சுழித்துக்கொண்டு இடது கையில் இருக்கும் பாயசத்தை சாப்பிடுவதாக இருக்கும்.

3. *அலங்காரம்* மற்றும் சிலையை சுற்றியும் வளைவாக தென்படும் *திருவாசி* இல்லாமல், நான்கு திருக்கரங்களுடன் சிறிய அளவில் இருக்கும் உருவச்சிலைகள், ஆரம்பகால கணபதி சிற்பக்கலையின் சான்றுகளாக இன்று தென்படுகின்றன.
4. நான்கு திருக்கரங்களுடன் ரிப்பன் போன்ற *திருவாசி, ஜடாமுகுட* (மகுடமாக சடைமுடி) மற்றும் *உதரபந்தம்* [ஒட்டியாணம்] ஆகியவற்றுடன் இருக்கும் உருவச்சிலைகள் வழக்கமாக 9 மற்றும் 12 ஆவது நூற்றாண்டு வரையிலான காலத்தில் உருவாக்கப்பட்டவை. இவை பெரும்பாலும் கடினமான கருங்கற்களில் இருந்து செதுக்கப்பட்டு, மனதை மகிழ்விக்கும் வகையில் நேர்த்தியான உருவில் இருக்கும்.
5. நான்கு திருக்கரங்கள் மற்றும் கிண்ணத்தை போன்ற *கிரீடம்* அல்லது கூம்பு வடிவில் அல்லது *கரண்ட முகுடத்துடன்* இருக்கும் [கூடை போன்ற கிரீடம்] விநாயகர் உருவச்சிலைகள் 10, 11 அல்லது 12 நூற்றாண்டில் உருவாக்கப்பட்டவை. இந்த சிலைகளுக்கு வாகனம் அல்லது ஆடம்பர அலங்காரம் இருக்காது. இதன் *திருவாசி* அரைவட்ட நாடா அல்லது நெருப்பைப் போன்று காட்சி அளிக்கும்.
6. ஹொய்சலா பாணியை பிரதிபலிக்கும் கணபதி சிலைகள் ஆடம்பர அலங்காரம், நுணுக்கமான ரசனை மற்றும் நேர்த்தியான வடிவத்திற்கு புகழ்பெற்றவை.
7. வழக்கமான *நாகபந்தம், வாகனம், கரண்ட முகுடம்* மற்றும் பொதுவான அம்சங்களுடன் இருக்கும் விநாயகர் சிலைகள் 14 முதல் 18 ஆவது நூற்றாண்டு வரையிலான காலத்தில் உருவாக்கப்பட்டவை. இவை சிற்பசாத்திர பரிந்துரைக்கு ஏற்ப விநாயகரின் பல்வேறு வடிவங்களை பிரதிபலிக்கின்றன.
8. இதுவரை *த்ரிபங்க* தோரணையில் நிற்கும் நான்கு வெண்கல கணபதி உருவச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று 10 ஆம் நூற்றாண்டை சார்ந்தவை. [தமிழ்நாட்டின் மகாபலிபுரத்தில் ஒரு வகுப்பறை சுவரில் காணப்படும் ஒரு *ஸ்தபதியின்* வரைபடம், கீழ்காணும் *நிருத்ய* (நாட்டியம்) *த்ரிபங்க* தோரணை உதாரணமாக வழங்கப்பட்டுள்ளது.]
9. பழங்கால சிலைகளில் நாட்டிமாடும் வடிவில் அமைந்து இருக்கும் *நிரித்ய கணேஷா*, இது வரை இரண்டு மட்டுமே கண்டு எடுக்கப்பட்டுள்ளன. அதில் முதலாவதாக ஒரு சிறிய சிலை (20 செ.மீ. உயரம்) சுப்ரமணிய என்கிற இடத்தில் இருக்கும் ஹரிஹரக்ஷேத்திரத்திலும், இரண்டாவதாக ஒரு வெண்கல சிலை உடுப்பி ராகவேந்திரா மடத்திலும் கண்டெடுக்கப்பட்டது. இந்த வெண்கல சிலை சிற்பசாத்திர கண்ணோட்டத்தில் அதிக ஆர்வம்

தூண்டுவதாக இருக்கிறது. இது தனது அம்சங்களில் வழக்கமான உருவங்களை வெளிப்படுத்தினாலும், இதன் இறையியல் பின்னணி மிகவும் விசேஷமாக இருக்கிறது.



விநாயகர் அமர்ந்து மற்றும் நின்று இருக்கும் நிலைகள்



உட்குடாசனா இந்த ஆசனத்தில் ஒன்று அல்லது இரண்டு முழங்கால்களை உயர்த்திய வண்ணம், விநாயகர் வழக்கமாக அமர்ந்த நிலையில் இருக்கும் ஏழு வகைகள்.




லலிதாசனா: நிம்மதியாக மற்றும் (விளையாட்டுத்தனமான) தளர்வுடன் இருக்கும் நிலைகள்.



நிருத்ய: நாட்டியமாடும் மூன்று நிலைகள், இறுதியாக இருப்பது *த்ரிபங்க*.



உட்கார்ந்து இருக்கும் மற்ற நிலைகள்



ஆறு அரிய நிலைகள் *பத்மாசனத்தின்* நான்கு வகைகள்.




விநாயகரின் பழங்கால சிற்பசாத்திரத்தில் மிகவும் அரிதாக காணப்படும் மேலும் இரண்டு நிலைகள்.

விநாயகரின் தும்பிக்கை வளைந்து இருக்கும் நிலைகள்

பின்வரும் பக்கத்தில் தும்பிக்கையின் பல்வேறு நிலைகள் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த முதல் பிரிவில் (வலதுபுறமாக சுழித்து இருப்பது) வலம்புரி உதாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலான விநாயகர் உருவச் சிலைகள் (அந்த சிலையின் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது) இடதுபுறமாக தும்பிக்கையை சுழித்து இருக்கும். வலதுபுறமாக தும்பிக்கை சுழித்து இருக்கும் சிலைகளை பார்ப்பது மிகவும் அரிது.


வலம்புரி நிலை

தும்பிக்கை தெய்வத்தின் வலதுபுறமாக திரும்பி இருக்கும். இந்த உருவத்தை பார்ப்பது மிகவும் அபூர்வம்.



இடம்புரி நிலை

தும்பிக்கை தெய்வத்தின் இடதுபுறமாக திரும்பி இருக்கும். இது வழக்கமான உருவம் ஆகும்.







சமர்ப்பணம்


समर्पणम्

சமர்ப்பணம்


சாதகர்களின் பேரன்பிற்கு உரியவராகவும் மறையாற்றல் உடையவராகவும் இருக்கும் இந்த மகாதேவரைப் பற்றி ஒரு புத்தகம் வெளியேடவேண்டும் என்று எங்களிடம் சமீபகாலத்தில் சில சாதகர்கள் கேட்டுக்கொண்டார்கள். அந்த வேண்டுகோளின் நிறைவேற்றமே இந்த புத்தகம் ஆகும். அன்புக்குரிய ஒரு அன்பான விநாயகரை தற்போது உங்களிடத்தில் சமர்பிக்கிறோம். நாங்கள் பெயர்களில் சிறந்த பெயரை எதற்காக தேர்ந்து எடுத்தோம்? ஏனென்றால் பெரியவர் மற்றும் சிறியவர், மெலிந்த மற்றும் குறிப்பாக பருமனான உடல் வாகு உடையவர்களும் விநாயகர் மீது அன்பு செலுத்துகிறார்கள். அவர் எல்லோர் மீதும் அதிகமான அன்பை செலுத்துகிறார் என்பதில் சந்தேகமில்லை. அவர் அதிக முக்கியத்துவம், தண்டனை மற்றும் கர்மபலன்களைப் போன்ற மாறாத விதிகளின் தெய்வமாக இருக்கிறார். தீவிரம் குறைவாக இருக்கும் விவகாரங்களில், அவர் இனிமையான விஷயங்களின் மீது அன்பு செலுத்துபவராக இருக்கிறார். அவர் கலாச்சாரத்தின் இளவரசனாகவும், கலைகளின் காப்பாளனாகவும் இருக்கிறார். எல்லோரும் இசை, கலை, நாடகம் மற்றும் நடனத்தை விரும்புகிறார்கள். அவர் அதிக மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும் போது விக்கினங்களை நீக்குபவராக இருக்கிறார் மற்றும் *லவிங்க் கணேஷா* (இந்தப் புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பு) புத்தகத்தை அச்சிடும் போது நாங்கள் எதிர்கொண்ட சவால்களை நீக்கும் போதும், இந்த மூன்றாவது (ஆங்கில) பதிப்பை தயாரிக்கும் போது மற்றும் நீங்கள் இதை தேடிய போது எதிர்கொண்ட சவால்களை நீக்கும் போதும், அவர் விக்கினங்களை நீக்கும் விக்னேஸ்வரனாகவே செயல்பட்டார். முத்துப் போன்ற இந்த புத்தகத்தை படைக்க பல மாத ஆராய்ச்சி மற்றும் முயற்சி தேவைப்பட்டது. மடாதிபதிகள், ஆச்சார்யாக்கள், சுவாமிகள், பண்டிதர்கள், "விநாயக வல்லுனர்கள்", சமஸ்கிருத அறிஞர்கள், பிரம்மச்சாரிகள், பிரம்மச்சாரினிகள், இல்லத்தரசிகள், கணவன்மார்கள் மற்றும் குழந்தைகள் என்று ஒரு பணியை தொடங்கும் போது முதலாவதாக வழிபடவேண்டிய இந்து சமயத்தின்

ஆனைமுகக் கடவுளைப் பற்றிய அனைத்து அறிவுத்துறை வல்லுனர்களும் உதவிக்கரம் வழங்கி உள்ளனர். நான் இந்த புத்தகத்தை இலங்கையில் பெருமதிப்பைப் பெற்ற முனிவராகவும் எனது சத்குருவாகவும் விளங்கிய சத்குரு யோகசுவாமிக்கு அன்புடன் சமர்பிக்கிறேன். எனது சத்குருவின் கொழும்புத்துறை ஆசிரமம் இலங்கையின் வடக்கு தமிழ் பகுதியில் இருக்கும் வரசித்தி விநாயகர் கோயிலின் எதிர்புறத்தில் அமைந்து இருக்கிறது. பூஜிக்கத்தக்க சனாதன தர்மத்தை குறிக்கும் இந்து மதம் பற்றிய ஆழமான மற்றும் நுணுக்கமான புரிதலை உங்களுக்கு அன்பான விநாயகர் அருளட்டும்.

இலங்கை யாழ்பாணத்தில் வாழ்ந்த சத்குரு சிவ யோகசுவாமியின் (1872-1964) *வலுவான அருளை இந்திரா சர்மா சித்தரித்து இருக்கிறார். ஒவ்வொரு சைவரும் மதிப்பளிக்கும் திருநீரை பூசிக்கொண்டும், எப்போதும் போல கையால் நெய்த ஒரு எளிமையான துணியை அணிந்துக்கொண்டும் அவர் பெருமையுடன் காட்சி அளிக்கிறார்.*




CHAPTER SIX
Sacred Symbols



புனிதமான சின்னங்கள்

புண்ணியலக்ஷணானி

पुण्यलक्षणानि




ஒரு குறிப்பிட்ட மூன்றாவது லோக மகாதேவரின் வெளிப்படையான மனோசக்திகளை உருவகப்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு இந்து தேவர் மற்றும் தேவியருக்கும் பொருத்தமான அடையாளங்கள், சின்னங்கள் மற்றும் சிலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. சிவப்பு மற்றும் மஞ்சள் நிறப்பூக்களுக்கு தொடர்பு இருப்பதைப் போல, விநாயகருடன் "விவாதம் செய்யும்" *விதர்க முத்திரை* தொடர்புடையதாக இருக்கிறது. எங்கும் எப்போதும் வலிமை, புத்தி மற்றும் கம்பீரமான தோற்றத்திற்கு அடையாளமாக யானை விளங்குகிறது. மன்னராட்சி காலத்தில் அடுத்த அரசரை தேர்ந்தெடுக்க பயன்படும் அளவிற்கு, விலங்குகளில் யானைக்கு அதிக கௌரவம் அளிக்கப்பட்டது. பண்டையகால பாரதத்தில் ஒரு அரசரிடம் இருக்கும் யானைப்படையின் பலத்தை பொருத்து அவரது படைப்பலம் அளவிடப்பட்டது. இந்திய வரலாற்றில் இராசராச சோழனிடம் அதிகப்படியாக 5,000 யானைகள் இருந்தன. யானைகள் அளவில் பெரிதாக இருந்தாலும், சுத்த சைவ உணவையே உண்கின்றன. இந்தியாவில் வெள்ளை நிற யானைகள் தூய்மையின் அடையாளமாக இருப்பதோடு, அதன் பிறப்பு ஒரு சகாப்தம் முழுவதும் ஒரு நாட்டிற்கு செழுமை மற்றும் மிகுதியை தரும் என்று கருதப்படுகிறது. இளவரசன் சித்தார்த்தன் பிறப்பதற்கு முன்பாக அவன் தாய் கண்ட காட்சிகளை போன்று, வெள்ளை யானைகள் காட்சி தந்த கதைகள் பல உள்ளன. *அன்பான விநாயகர்* புத்தகத்தின் இந்த அத்தியாயத்தில், நாம் சில பாரம்பரிய சின்னங்கள் மற்றும் அதன் அர்த்தங்களைப் பற்றி சுருக்கமாக விளக்க இருக்கிறோம்.

"அவரது நான்கு திருக்கரங்கள் மனித நேயத்திற்கு உதவி செய்யும் பொருட்டு, அவரது மாபெரும் ஆற்றலுக்கு துணை நிற்கின்றன. அவர் தனது இரு திருக்கரங்களில் வைத்து இருக்கும் பாசம் மற்றும் அங்குசம், எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் அவர் பண்பு மற்றும் அருளை பிரதிபலிக்கின்றன. அவர் அனைத்திற்கும் புகலிடமாக விளங்குகிறார் என்பதை அவர் வலது கையில் இருக்கும் உடைந்த தந்தம் வெளிப்படுத்துகிறது. அனைத்து வஸ்துக்களும்,

பிரபஞ்சம் முழுவதும் அவருக்குள் அடங்கி இருக்கிறது என்பதையும், அவரது பொறுமையையும் அவரது பெரிய வயிறு தெரியப்படுத்துகிறது. முயற்சி செய்து ஆசைகள் மற்றும் அறிவு பெறுவதை குறிக்கும் *சித்தி* மற்றும் *புத்தியை* வழங்குவதற்காக அவரது திருவடிகள் துணை புரிகின்றன. அவரது திருக்கரங்களில் *ஞானத்தின்* அடையாளமாக விளங்கும் *மோதகம்* பேரானந்தத்தை வழங்குகிறது. ஒருவர் வெற்றிக்கொள்ள வேண்டிய லௌகீக ஆசைகளை, அவரது மூஷிக வாகனம் பிரதிநிதித்துவம் செய்கிறது." (ம. அருணாசலம், *பெஸ்டிவல்ஸ் ஆஃப் தமிழ்நாடு*, 1980, ப. 112).






சங்கு

விநாயகர் பூஜையில் சங்கின் உரத்த ஒலியை கேட்கும் போது, அது அவருக்கு வனத்தில் யானைகள் மகிழ்ச்சியுடன் பிளிறுவதை நினைவூட்டுகிறது. "எல்லோரும் என் அருகில் வந்து என்னை பிரார்த்தனை செய்யுங்கள்," என்று அவர் அழைக்கிறார்.



அங்குசம்


திட்டமிட்டு செயல்படும் விநாயகரின் மனமானது, மந்தமாக செயல்படுபவர்கள் தங்கள் பிறவிக் கர்மாக்களில் தாமதிக்கும் போது அவர்களை தூண்டி விடுகிறது. அவர் தனது அங்குசத்தின் மூலம், மிகவும் மெதுவாக இயங்கிக்கொண்டு இருக்கும் ஆன்மாக்களை முன்னேற தூண்டிவிடுகிறார்.



பரசு, கோடாரி

தனது பகதர்களில் சிலர் இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொள்கிறார்கள் என்பதை அறிந்த அன்பான விநாயகர், தனது கோடாரி மூலம் அவர்கள் ஈர்த்த தீய சக்திகளிடம் இருந்து அவர்களுக்கு கனிவோடு பாதுகாப்பு அளிக்கிறார்.

पाश



பாசம்

பாசத்தைப் போல, முன்யோசனை நிறைந்த அன்பான விநாயகரின் மனமானது, அடிப்படை தேவைகள் இல்லாதவர்களை அருகில் அழைத்துக் கொண்டு பாதை தவறியவர்களை விசேஷமான முறையில் சுற்றி வளைத்து பாதுகாப்பு வழங்க முயற்சிக்கிறது.

वज्रत्रिशूल



வஜ்ர திரிசூலம்

விநாயகர் தனது சகோதரன் முருகனைப் போல, வஜ்ர திரிசூலம் என்கிற உறுதியான ஆயுதத்தை பயன்படுத்தி, மனம் மீது ஆன்மாவையும், பருப்பொருள் மீது மனதையும் ஆதிக்கம் செலுத்த வைத்து, மேல்நிலை மற்றும் கீழ்நிலை சக்கரங்கள் மீது ஆட்சி செய்கிறார்.

चक्र



சக்கரம்

உணர்ச்சிகளின் சின்னமாக நிலவு இருப்பதைப் போல, சூரியன் மற்றும் மனதின் சின்னமாக இருக்கும் சக்கரத்தை அன்பான விநாயகர் ஏந்தி இருக்கிறார். இதை ஒரு ஆயுதமாக பயன்படுத்தும் போது, இது தெய்வீக ஆற்றலைப் பெற்ற புத்தியாக விளங்குகிறது.


मोदकपात्र



மோதக பாத்திரம்

அன்பான விநாயகர் இனிப்புக்கள் பிரியராக கருதப்படுகிறார். ஆனால் மோதகம் அவருக்கு மிகவும் பிடித்தமான முக்தி என்கிற மோக்ஷத்தின் சின்னமாக விளங்குகிறது. அந்த முக்தி இனிப்புக்களில் சிறந்த இனிப்பாக விளங்குகிறது.

गदा



தண்டாயுதம் அல்லது கதை

அவர் தனது ஆயுதமான கதையைப் போன்று, உறுதியாக ஆணையிடுபவராக இருக்கிறார். பக்தர்கள் அனுபவித்து கரைக்க வேண்டிய பழைய கர்மவினைகள் முழுநிறைவு பெறும் வரை, அவர் அவற்றை அவர்களுக்கு தொடர்ந்து வழங்கி வருகிறார்.

छुरी



சுறி, குத்துவாள்

விநாயகர் சிலசமயங்களில் குத்துவாளை ஏந்தி இருக்கிறார். மிகவும் கூர்மையாக இருக்கும் அந்த ஆயுதம் ஆன்மீக சாதகன் நடந்து செல்லவேண்டிய, குறுகலான மற்றும் சிலசமயங்களில் கடினமான பாதையை குறிப்பிடுகிறது.

रुद्राक्ष माला



ருத்திராட்ச மாலை

விநாயகர் தனது கைகளில் பிரார்த்தனை செய்ய பயன்படும் தனது ஜபமாலையுடன் சிவபெருமானின் திருவடிகளில் அமர்ந்து கொண்டு, மகாதேவர்களின் பரமனாக இருக்கும் தனது தந்தையின் அறிவுறுத்தலுக்காக காத்து இருக்கிறார்.

पुष्पशर



புஷ்பசர, மலர்களில் செய்த அம்பு

உண்மையான நிறைவேற்றத்தை வழங்கும் தர்மத்தின் பாதையில் இருந்து பக்தர்கள் அதிகம் விலகி செல்லாமல் இருக்க அவர்களை வழிகாட்டும் பொருட்டு, அவர் தனது கரும்பு வில்லில் இருந்து மலர்களில் செய்த அம்பு எய்கிறார்.

अमृतकुम्भ



அமிர்த கும்ப, அமுத கிண்ணம்

ஒரு பக்தர் தனது நெற்றியின் ஓரத்தில் கைமுட்டிகளால் குட்டிக்கொள்ளும் போதெல்லாம், அந்த பக்தரின் சஹஸ்ரஹாரத்தில் இருந்து அமுதம் வழிந்து விநாயகர் இருப்பிடமான *மூலாதாரத்திற்கு* இறங்கி வருவதால், விநாயகர் அந்த அமுதத்தில் நீராடுகிறார்.

पद्म



பத்ம, தாமரை மலர்

சேற்று மண்ணில் இருந்து மேலெழுந்து நீர்மட்டத்திற்கு மேல் மொட்டாக மலரும் தாமரை மலரின் ஆற்றலில் இருந்து பக்தர்கள் நம்பிக்கையை கற்றுக்கொள்ள வேண்டும் என்று விநாயகர் விரும்புகிறார்.

इक्षुकार्मुक



இக்ஷுகார்முக, கரும்பு வில்

பக்தர்களுக்கு நன்மை தரும் அனைத்தையும் வழங்கும் விநாயகர் தனது தாராள மனப்பான்மையை வெளிப்படுத்துகிறார். அவரது கரும்பு வில்லில் இருந்து ஏவப்படும் மிகவும் கனிவான அம்புகள், அவரது சிந்தனை வெளியீடுகளாக இருக்கின்றன.

शर



சர, அம்பு

சிந்தனை மீது விநாயகர் ஆதிக்கம் செலுத்துகிறார் மற்றும் அதில் ஒவ்வொன்றும் தனது இலக்கை அடைகின்றன. வில்லை நன்றாக வளைத்து, அம்பை குறிவைப்பதன் மூலம், செயல்கள் அனைத்தையும் நல்ல நோக்கத்துடன் தொடங்கவேண்டும் என்பதை அவர் நமக்கு உபதேசிக்கிறார்.



வீணா, வீணை


விநாயகர் அழகும் பொருளும் நிறைந்த ஒலிவடிவமாக இருக்கிறார். சிவபெருமான் கடலாகவும், விநாயகர் அதன் ஒலியாகவும் இருக்கிறார். சிவபெருமான் வாயுதேவதையாகவும், விநாயகர் அதன் ஒலியாகவும் இருக்கிறார். அகத்தில் இருக்கும் வீணையை காதுகொடுத்து கேளுங்கள்.

அசுர சக்திகள்

அதள சக்கரத்தில் அச்சத்துடன் வாழும் பக்தர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு, விநாயகர் தனது கணங்களை அனுப்பி அந்த பக்தர்களை அச்சுறுத்தவும் செய்கிறார். சிலசமயங்களில் பயமும் துணை புரிகிறது.

தண்டம்

விநாயகர் அதிகாரத்தின் சின்னமாக ஒரு சிறிய தண்டத்தை ஏந்திக்கொண்டு, யாரும் தர்மத்தின் உயர்வான பாதைகளில் தடைகளை உருவாக்கக்கூடாது என்று எச்சரித்து, அதைப்போன்ற தீய எண்ணங்கள் உடையவர்களை கட்டுப்படுத்தவும் செய்கிறார்.



சாமரம்

விநாயகர் அதிக விவேகத்துடன் இருப்பதால், அவர் எப்போதும் போல அமர்ந்து இளைஞர்கள் மற்றும் முதியவர்கள், பணக்காரர்கள் மற்றும் ஏழைகள், கல்வி அறிவுடையவர்கள் மற்றும் லௌகீகவாதிகளாக இருக்கும் பக்தர்கள் மனங்களில் இருந்து பழைய நினைவுகளை நீக்குகிறார்.

கமண்டலம்

சந்நியாசிகளுக்கு மிகவும் பிடித்தமான விநாயகர், எப்போதும் அவர்களின் கமண்டலத்தை நிரப்பி வைக்கிறார். எல்லா தேவைகளும் பூர்த்தியாகி நிறைவாக இருப்பதை குறிக்கும் கமண்டலம், நிரப்ப வேண்டிய அவசியம் எப்போதும் இல்லாமல் நிரந்தரமாக ஊற்றிக்கொண்டு இருக்கிறது.

தனு, வில்

விவேகமாக இருக்கும் விநாயகர் தனது வில்லை இழுத்து, தனக்கு பிடித்தமான பக்தர்களுக்கு மிகவும் பயனுள்ள உருவில் தனது சிந்தனைகளை மாற்றி அமைக்கிறார். அவர்கள் எல்லோரும் தங்களுக்கு வழங்கப்பட்ட அக்கறையை நினைத்து பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.

नाग



நாகம்

விநாயகர் நாகம் என்கிற பாம்பை செல்லப்பிராணியாக கொண்டிருக்கிறார். பலர் பாம்பை கண்டு அஞ்சுகிறார்கள். ஆனால் அது நம் எல்லோருக்குள்ளும் இருக்கும் குண்டலினி என்றும், எல்லோரும் துன்பத்தில் இருந்து விடுதலை பெறலாம் என்றும் அவர் நமக்கு தெரிவிக்கிறார்.

शालिपल्लव



சாலிப்பல்லவ, நெற்கதிர்

கிராமமக்கள் மற்றும் நகர மக்களின் வாழ்வாதாரமாக அரிசி விளங்குகிறது என்பதை அன்பான விநாயகர் அறிந்து இருக்கிறார். அவர் தனது கைகளில் நெற்கதிரை பிடித்துக்கொண்டு, நல்ல மழையும் நல்ல விளைச்சலும் கிடைக்கும் என்பதை உறுதி செய்கிறார்.

मुद्गर



முத்கர, சுத்தியல்

சமூகத்தின் நலனுக்காக தயாரித்து வடிவமைத்து, குடைந்து மற்றும் செதுக்குபவர்களின் பாதுகாவலராக, கலைகள் மற்றும் கைவினை தொழில்களின் ஆதரவாளராக இருக்கும் விநாயகர் தனது பணியின் சின்னமாக ஒரு சுத்தியலை பிரயோகம் செய்கிறார்.

शास्त्र



சாஸ்திர, சாத்திரம்

இந்த கிரகம் மற்றும் மற்ற கிரகங்களில் இருக்கும் சாத்திரங்களை அன்பான விநாயகர் சிரத்தையுடன் திருத்தி அமைக்கிறார். எப்போதும் தயாராக இருக்கும் அவருடைய எழுத்தாணி வாழ்க்கை சடங்குகளை தொகுத்து, அதன் பொருட்களுக்கு விளக்கங்களை வழங்குகிறது.


कल्पवृक्ष



கல்பவிருட்ச, கற்பகவிருட்சம்


நமது ஆசைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்பதை நமக்கு தெரிவிக்கும் வகையில், அன்பான விநாயகர் தனது கைகளில் கற்பகவிருட்சத்தின் ஒரு கிளையை வைத்து இருக்கிறார். நாம் நமது தேவைகளை அவரிடம் கூறினால் போதும்.

परशु



பரஸ்வத, குந்தாலி

ஒரு நேர்மையான இலக்கை அடைவதற்கு, ஒரு காட்டில் இருக்கும் தடைகளை தகர்த்திக் கொண்டு செல்வதைப் போல, சில சமயங்களில் வலுவான முயற்சிகள் தேவைப்படும் என்பதை அன்பான விநாயகர் அறிந்து இருக்கிறார். அவர் குந்தாலியை மனோசக்தியாக பிரயோகம் செய்கிறார்.



மகாபரசு


அன்பான விநாயகர் பெரும்பாலும் மகாபரசு ஆயுதத்தை பிரயோகம் செய்கிறார். இந்த வலுவான ஆயுதம் *அசுரர்களை* அச்சுறுத்துகிறது மற்றும் அவரது பக்தர்களுக்கு கெடுதல் விளைவிக்க நினைப்பவர்களின் தீய எண்ணங்களை விரட்டுகிறது.

திரிசூலம்

அன்பான விநாயகர் அன்பு, விவேகம் மற்றும் செயல்பாடு என்கிற தனது மூன்று ஆற்றல்களை பிரதிநிதித்துவம் செய்யும் *திரிசூலத்தின்* மூலம், பரந்து விரிந்த சிக்கலான மனதின் பகுதி வழியாக பயணம் செய்கிறார்.

நாரிகேல, தேங்காய்

விநாயகர் ஏந்தியிருக்கும் தேங்காய் ஆணவத்தை பிரதிநிதித்துவம் செய்கிறது. அது உட்புறம் மென்மையாகவும் இனிப்பாகவும், வெளியில் கடுமையாகவும் கரடு முரடாகவும் இருக்கிறது. நாம் அவருக்காக ஒரு தேங்காயை உடைக்கும் போது, நாம் நம்மீது இருக்கும் ஆணவத்தின் பிடியை உடைக்கிறோம்.



த்வஜ, கொடி

அன்பான விநாயகர் மகிழ்ச்சியின் சாரமாக இருக்கிறார். அவரது கோயில்களின் மீது பண்டிகை நாட்களில், குங்குமப்பூ நிறத்தில் பறக்கும் இந்துத்வ *துவஜ* அல்லது கொடி, நான்கு திசைகளில் இருந்தும் பக்தர்கள் கூட்டங்களை அழைத்து வருகிறது.

பக்னதந்த, உடைந்த தந்தம்

வியாசர் சொல்வதை கேட்டு மகாபாரதத்தை எழுதிய விநாயகர் ஒரு சமயத்தில் தியாக உணர்வுடன், தனது வலது தந்தத்தை உடைத்து தனது பணியை தொடர்ந்ததாக புராணங்கள் கூறுகின்றன. இதன் மூலம் நாம் தொடங்கிய பணியை அக்கறையுடன் முடிக்க வேண்டும் என்ற பாடத்தை அவர் நமக்கு புகட்டுகிறார்.

பாஷாணதாரன, கொத்துக் கோடாரி

பக்தர்கள் எதிர்கொள்ள இருக்கும் சோதனைகளை அனுபவமும் விவேகமும் நிறைந்த அன்பான விநாயகர் அறிந்து இருப்பதால், அவர்களின் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பொருட்டு, அவர்களின் மனதின் கழிவுகளை அவர் கொத்தி கொத்தி எடுக்கிறார்.


अग्नि



அக்னி

நாம் நமது தவறுகளை சுத்தம் செய்யும் தீச்சுடர்களிடம் சமர்ப்பித்தால், அன்பான விநாயகர் நமது மனதில் இருக்கும் கழிவுகளை கரைத்து, நமது முற்பிறவி கர்மவினைகளை அழிக்கும் வலிமைமிக்க தனது நெருப்பு சக்திகளை செயல்படுத்துகிறார்.


खड्ग



கட்க, வாள்

இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட வாள் ஒன்று அன்பான விநாயகரிடம் இருக்கிறது. குற்றம் செய்தால் அவரது பகையுணர்வையும், பிறருக்கு தீங்கிழைப்பதால் அவரது வெறுப்பையும் எதிர்கொள்ள வேண்டும் என்று பயத்திற்கு மட்டுமே மதிப்பளிப்பவர்களுக்கு, இந்த ஆயுதம் எச்சரிக்கை வழங்குகிறது.


फल



பழங்கள்

காட்டில் வசிக்கும் அன்பான விநாயகர், பூமியின் வாழ்வாதாரமாக விளங்கும் பல பழங்களை விரும்பி சாப்பிடுகிறார். பெற்றோர்களும் குழந்தைகளும் ஒன்று போல, உடலுக்கு வலிமை வழங்கும் பழங்களை நிறைய சாப்பிட்டு ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.


मूलक



மூலக, முள்ளங்கி

எளிமையான முள்ளங்கி அன்பான விநாயகருக்கு அதிகம் பிடித்து இருப்பதால், நமக்கு நலம் பயக்கும் அந்த உணவை நாம் வளர்ப்பதற்கு அவர் ஊக்குவிக்கிறார். பக்தர்கள் தன்னை திருப்திப்படுத்த, தேவைக்கு அதிகமாக இந்த காய்கறியை வளர்ப்பார்கள் என்பதை அவர் அறிந்து இருக்கிறார்.


खेटक



கேடக, கேடயம்

பாரம்பரியங்களை காக்கவும், ஆன்மீக பாதையில் இருக்கும் அனைத்து ஆன்மாக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவும், நேர்மையானவர்கள் வாழும் நிலங்களை பாதுகாக்க பயன்படும் தனது ஆற்றலின் சின்னமாக இருக்கும் தெய்வீக பாதுகாப்பு வழங்கும் கேடயத்தை அவர் ஏந்தி இருக்கிறார்.


आम्र



ஆம்ர, மாம்பழம்

“நான் முதன்முதலில் விவேகமாக செயல்பட்ட போது, எனக்கு இந்த ஞானப்பழத்தை சிவபெருமான் தனது திருக்கரங்களால் எனக்கு வழங்கினார். இது மிகவும் உயர்வான ஆன்மீக பலனாகும்” என்று அன்பான விநாயகர் மாம்பழத்தைப் பற்றி விளக்கம் அளிக்கிறார்.


तृतीयाक्षि



த்ரிதியாக்ஷி, மூன்றாவது கண்

நம்மைப் போல விநாயகருக்கு இரண்டு கண்கள் இல்லாமல் மூன்று கண்கள் இருக்கின்றன. அந்த மூன்றாவது கண், மனதின் கண்ணாக ஆன்மீக பார்வையாக இருக்கிறது. அவர் இந்த மூன்றாவது கண்ணின் மூலம், உண்மைப் போல தோன்றும் இந்த உலகின் பின்னணியாக இருக்கும் யதார்த்தத்தை காண்கிறார்.

रत्नकुम्भ



ரத்தின கும்ப, இரத்தின கலசம்

இரத்தினங்களில் பொதிந்து இருக்கும் மந்திர சக்திகளை அன்பான விநாயகர் அறிந்து இருக்கிறார். மனித ஆன்மாக்களைப் போல வைரம், மாணிக்கம் மற்றும் மரகத கற்களில் ஒவ்வொன்றும் ஒரு மாறுபட்ட நிறம், முகப்பு, அழகு மற்றும் மதிப்புடன் இருக்கின்றன.

गारित्र



காரித்ர, தானியங்கள்

மக்களில் பலவகை இருப்பதையும், அவர்களுக்கு பல்வேறு விதமான உணவுகள் தேவை என்பதையும் அன்பான விநாயகர் அறிந்து இருக்கிறார். அவர்கள் உடல்களுக்கு வலிமை வழங்கும் அனைத்து வகை தானிய சாகுபடியில் அவர் பாதுகாப்பு அளிக்கிறார்.

इक्षुकाण्ड



இக்ஷுகாண்ட, கரும்பு

அன்பான விநாயகருக்கு கரும்பு மற்றும் இனிப்பான தின்பண்டங்கள் அனைத்தும் பிடித்து இருக்கின்றன. அவர் அனைத்து குழந்தைகளும் வணங்கும் கடவுளாக இருப்பதால், அவர்கள் தனக்கு கரும்பை வழங்கும் போது, பிரகாசிக்கும் அவர்களின் கண்களைக் காண்பது அவருக்கு மகிழ்ச்சியை தருகிறது.


मधुकुम्भ



மதுகும்ப, தேன்கிண்ணம்

பக்தர்கள் நெய்வேத்தியம் செய்ய தனக்கு முன்பாக ஒரு கிண்ணத்தில் தேனை வைக்கும் போது, அன்பான விநாயகர் முகத்தில் புன்னகை மலர்கிறது. இது அவருக்கு மிகவும் பிடித்தமான நெய்வேத்தியமாக இருப்பதோடு *மோக்ஷித்தை* போல, இனிப்புக்களில் சிறந்த இனிப்பாக இருக்கிறது.

कदलीफल



கதலிபல, வாழைப்பழம்

அன்பான விநாயகர் தனது கையில் நன்றாக பழுத்த வாழைப்பழத்தை வைத்து இருக்கிறார். அவர் அதை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தாலும், அதன் வாசனையால் ஈர்க்கப்படும் பக்தனுக்கு அதை உடனடியாக வழங்கி விடுகிறார்.

योगदण्ड



யோக தண்டம்

அன்பான விநாயகர் பக்தர்களிடம் பேசும் போதும், ஆழமான சமாதிநிலையில் இருக்கும் போதும், தனது கையை ஒரு சிறிய தண்டத்தின் மீது வைத்து இருக்கிறார். இதனால் தன்னால் அதிக ஆழமாகவும், சுலபமாகவும் தியானம் செய்ய முடிவதாக அவர் கருதுகிறார்.


तृण



த்ருண, அருகம்புல்

பெரியவை சிறியவை என்று பலவகை உயிரினங்கள் இருப்பதையும், ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரத்யேகமான சுற்றுப்புறம் மற்றும் உயிரூட்டம் அளிக்கும் சில உணவுகள் தேவை என்பதையும் அன்பான விநாயகர் அறிந்து இருந்து அருகம்புல், சிறிய பூக்கள் மற்றும் விதைகளை பாதுகாத்து வருகிறார்.

तिलगोल



திலகோல, எள் உருண்டை

ஒருவர் உருவத்தில் பெரிதாக இருந்தாலும், மிகவும் சிறியதாக இருக்கிறது என்று எதையும் புறக்கணிக்கக்கூடாது என்று அறிவுறுத்தும் அன்பான விநாயகர், தனது துதிக்கையில் சிறிய எள்ளு விதையில் செய்த இனிப்பை ஏந்திக்கொண்டு, ஒரு சுண்டெலியை தனது வாகனமாக கொண்டிருக்கிறார்.

शुक



சுக, கிளி

கிளி பேசும் போதும், அது இன்பமாக தென்படும் போதும் அன்பான விநாயகர் மகிழ்ச்சி அடைகிறார். அது விநாயகரின் கைகளில் அமர்ந்து இருந்து, வருவோரை வரவழைத்து, தனியாக இருப்பவர்களிடம் தனது கருத்துக்களை பகிர்ந்துக்கொள்கிறது.


अनस



அனனச, அன்னாசிப் பழம்

அன்பான விநாயகர் தனது கையில் அன்னாசிப்பழத்தை வைத்து இருக்கிறார் மற்றும் தனது ஒளிஉடலுக்குள் நெருங்கி வரும் பக்தர்களுக்கு அதை பகிர்ந்து தருவதற்கு தயாராக இருக்கிறார். அவர் நமக்கு தரும் அன்னாசிப்பழத்தில் இருந்து நாமும் மற்றவர்களுடன் பகிர்ந்து வாழவேண்டும் என்ற பாடத்தை கற்கிறோம்.


मूषिक



மூஷிக, மூஞ்சூறு

விநாயகரின் துணையாக இருக்கும் மூஞ்சூறு, ஆனைமுகக் கடவுளின் எங்கும் எதிலும் வியாபிக்கும் தன்மைக்கு சான்றாக விளங்குகிறது. அவரது வாகனமாக இருக்கும் மூஞ்சூறு, அவரை மனதின் மூலை முடுக்கெல்லாம் அழைத்து செல்கிறது.


लम्बोदर



लम्बोदर, பெரிய தொந்தி உடையவர்

அன்பான விநாயகர் தனது பெரிய தொந்தியில் இந்த உலகம் மற்றும் எண்ணற்ற பால்வெளி மண்டலங்களை கொண்டிருக்கிறார். தெரிந்த மற்றும் தெரியாத பிரபஞ்சங்கள் அனைத்தும் அவரது மாபெரும் இடுப்புப் பட்டியில் அடங்கியுள்ளன.

स्वस्तिक



स्वस्तिक் சுவஸ்திக்

விநாயகர் வழங்கும் நல்வழி செல்வங்கள் அதிஷ்டம் மற்றும் மங்களத்தின் குறியீடான சுவஸ்திக் சின்னத்துடன் சித்தரிக்கப்படுகின்றன. மாற்றமும் வஞ்சனையும் நிறைந்த வாழ்க்கையை மேலிருந்து கீழாகவும், இடமிருந்து வளமாகவும் ஒன்றுக்கொன்று குறுக்காகவும் செல்லும் இந்த சுவஸ்திக் கோடுகள் காண்பிக்கின்றன.


जम्बीर



जम्बीर, எலுமிச்சைப் பழம்

ஒரு யதார்த்தமான கடவுளாக இருக்கும் அன்பான விநாயகர், தனக்கு பரிச்சயமான பக்தர்கள் அனைவரும் தனக்கு பிடித்தமான ஒரு பழச்சாற்றை பருகவேண்டும் என்று விரும்புகிறார். அவர்கள் ஆரோக்கியமாக இருந்து ஒரு ஆனந்தமான வாழ்க்கையை வாழவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

ॐ



ஓம், ஓங்காரம்

விநாயகப்பெருமான் ஓங்காரமாக இருக்கிறார். அவர் பிரபஞ்சத்தின் அடிப்படை ஒலியான அகாரமாக இருக்கிறார். அவர் பால்வெளிகளின் ஒலியான உகாரமாக இருக்கிறார். அவர் கிரகங்கள் மற்றும் சிறிய நட்சத்திரங்களின் ஒலியான மகாரமாக இருக்கிறார்.

शुण्डा



சுண்ட, துதிக்கை


விநாயகர் தன்னிடம் பலதிறமைகளைப் பெற்ற துதிக்கையை கொண்டு இருக்கிறார். அவர் அதை எப்போதும் தனது பக்தர்கள் மீது அன்பு செலுத்தும் தனது பொறுப்பின் சின்னமாக தெரியப்படுத்துகிறார். அவர் அதன் மூலமாக பக்தர்கள் ஒவ்வொருவரையும் தொட்டு அருள் வழங்குகிறார்.

नीलपद्म



நீலபத்ம, நீலநிறத்தில் இருக்கும் அல்லி

அன்பான விநாயகர் அல்லி மலர்கள் நிரம்பிய ஒரு குளத்தில் அமர்ந்து பிரபஞ்சத்தின் தற்போதைய நிலையைப் பற்றி சிந்திக்கிறார். அடுத்த *மகாபிரளயம்* வரை, அனைத்தும் ஒழுங்குமுறையுடன் இருக்கிறதா என்று கவனிப்பதே அவரது விசேஷமான பொறுப்பு ஆகும்.



பனசபல, பலாப்பழம்

அன்பான விநாயகருக்கு பிடித்தமான பலாப்பழம் ஒரு உருளைக்கிழங்கைப் போல காட்சி அளிக்கிறது. அதனுள் நன்றாக மென்று சாப்பிட ஒரு கொட்டை மற்றும் மஞ்சள் நிறத்தில் பழமும் இருக்கும். பலாப்பழத்தின் தண்டைப் போல, நமது பற்றுகளும் சிறியதாக இருந்தாலும் வலுவாக இருக்கவேண்டும்.


பிரபாவலி, திருவாசி

படைத்தல், காத்தல் மற்றும் அழித்தலை சித்தரிக்கும் ஒரு வளைவில் அன்பான விநாயகர் அமர்ந்து இருக்கிறார். இறுதியில் அனைத்தையும் ஒடுக்கிக்கொள்ளும் காலத்தின் கடவுளான மகாகால பைரவர் அதன் மேலே இருக்கிறார்.

தாடிம, மாதுளை

பலர் மாமிசம் விரும்பி சாப்பிடுவதையும், அது தங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு அவசியமானது என்று நம்புவதையும் அறிந்து இருக்கும் அன்பான விநாயகர் பக்தர்களுக்கு சிவப்பு நிற மாதுளையை வழங்குவது, “இதில் இருக்கும் இளஞ்சிவப்பு விதைகள், மாமிசத்தை விட சிறந்த ஆரோக்கியத்தை தரும்” என்பது போல இருக்கிறது.


नागपाश



நாகப்பாச, நாகப்பாசம்

நாம் அவரைப் போல நமது உள்ளுணர்வு, விலங்கின் மனதை கட்டுப்படுத்த வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வண்ணம், அன்பான விநாயகர் தனது உடலை சுற்றி ஒரு பாம்பை அணிந்து இருக்கிறார். இது இறையருளால் நிச்சயம் சாத்தியமாகும்.

कपित्थ



கபித்த, விளாம்பழம்

அன்பான விநாயகருக்கு பிடித்தமான விளாம்பழங்கள் சாப்பிடுவதற்கு இனிமையாக இருக்கும். அவை ஒரு கடினமான விதை உறையில் பொதிந்து இருக்கும். அவை ஆயுர்வேதத்தின் இரகசிய மருத்துவ ஆற்றல்களின் மருந்தகமாக விளங்குகின்றன.

लड्डू



லட்டு, ரவா லட்டு

பால், ரவை மற்றும் சர்க்கரை நிறைந்த லட்டுவை அன்பான விநாயகர் எப்போதும் வேண்டாம் என்று மறுத்தது இல்லை. சிறுவயதில் எல்லோருக்கும் இனிப்புக்கள் பிடிக்கும் என்பதால், இந்த லட்டு அவருக்கு அவரது சிறு வயதை நினைவூட்டுகிறது போலும்.


कवच



கவச, கவசம்

உலகெங்கும் உள்ள பெரிய மற்றும் சிறிய கோயில்களில் இருக்கும் அன்பான விநாயகர் சிற்பங்கள், பண்டிகை காலங்களில் பிரகாசமான வெள்ளி மற்றும் தங்க கவசங்களால் உறையிடப்பட்டு இருக்கும். அவருக்கு செழுமை, ஆடம்பரம் மற்றும் மிகமிஞ்சிய பாராட்டு மிகவும் பிடிக்கும்.


शशिकला



சசிகலா, பிறை சந்திரன்

அன்பான விநாயகர் தனது தந்தையைப் போல, தனது கிரீடத்தில் பிறை சந்திரனை சூடி இருக்கிறார். அது கடந்து செல்லும் காலத்தின் பண்பு, மங்களகரமான தருணங்கள், மனோ சக்திகளின் சின்னமாக விளங்குகிறது.

गं मन्त्र



கம் மந்திரம்

இந்த மகத்தான மந்திரத்தை பக்தர்கள் உச்சரிப்பதன் மூலம் அன்பான விநாயகர் ஆவாகனம் செய்யப்படுகிறார். இதை கேட்டதும், அவர் உடனடியாக செயல்புரிகிறார். சுலபமாக அணுகக்கூடியவராக இருக்கும் அவர், நமது பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் என்றுமே தாமதிப்பது இல்லை.

यज्ञोपवीत



யக்ஞோபவீதம், பூணூல்

அன்பான விநாயகர் தனது பெருத்த தோளில் அணிந்து இருக்கும் பூணூல், அவரது அருளினால் நாமும் இருபிறப்பாளர் ஆகலாம் என்பதையும், உயர்ந்தோர் அல்லது தாழ்ந்தோர் என்று யாரும் இல்லை என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது.

जम्बु



ஜம்பு, நாவல் பழம்

வேறு பல பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கு மத்தியில் அன்பான விநாயகருக்கு நாவல் பழம் மிகவும் பிடித்து இருக்கிறது. அவர் எல்லோர் மீதும் அன்பு செலுத்தி, உயிரினங்களை துன்புறுத்தாமல் நல்ல ஆரோக்கியமான வாழ்வை வாழ்வதற்கான பாதையை நமக்கு காண்பிக்கிறார்.

पायस



பாயாசம்

ஒருவர் தன் மீது அக்கறை செலுத்துவதைப் போல மற்றவர்கள் மீது செலுத்துவதால் வெளிப்படும் அன்பு மற்றும் இரக்கத்தை போன்ற இனிய ஜவ்வரிசி பாயசத்தை, அன்பான விநாயகர் அவ்வப்போது ருசித்து உண்பதாக தோன்றுகிறது.

शक्ति



சக்தி, விநாயகரின் துணைவி

அன்பான விநாயகர் பெரும்பாலும் இரண்டு தேவியர்கள் அல்லது சக்திகளுடன் காணப்படுகிறார். உணர்ச்சி மற்றும் புத்தியாக இருக்கும் அந்த சக்திகள், நம்மை பூலோகத்தில் கட்டுண்டு வைக்கும் *இடா* மற்றும் *பிங்கலா* என்ற இரண்டு உயிரோட்டங்களை பிரதிபலிக்கின்றன.

मूलाधार चक्र



மூலாதார சக்கரம்

மேலிருக்கும் ஆறு சக்கரங்களுக்கு வாயில் காவலனாகவும், கீழிருக்கும் ஏழு சக்கரங்களுக்கு காவலாகவும் இருக்கும் அன்பான விநாயகர், நான்கு இதழ் கொண்ட *மூலாதாரத்தின்* மீது அமர்ந்துகொண்டு நினைவாற்றல் மற்றும் அறிவின் மீது ஆட்சி புரிகிறார்.


वृक्ष



விருட்ச, மரங்கள்

அன்பான விநாயகர் காடுகளின் பாதுகாவலனாக, மூலிகை மரங்களில் இருந்து பரிசுகளை வழங்குபவராக, ஆயுர்வேத மருத்துவராக, மருத்துவ குணம் கொண்ட செடிகளில் இருந்து ஆரோக்கியம் தொடர்பான தகவலை நாம் பெறுவதற்கு துணைபுரியும் சிறந்த மருத்துவராக இருக்கிறார்.





CHAPTER SEVEN

Symbol of Auspiciousness

Sulpher crystals, Gafford



சுவஸ்திக் சின்னம்

சுவஸ்திகம்

स्वस्तिकम्



ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பாக, அரபிக்கடலில் இந்தியாவின் வடக்கு கடற்கரையில் அமைந்த லோதா துறைமுகத்தின் கப்பற்துறையில் பல டன் கணக்கில் சரக்குகள் காத்து இருக்க, டைகிரிஸ் நதியில் அமைந்து இருந்த சுமேரிய நகரங்களுக்கு செல்லும் தனது சரக்குகளை சோதனை செய்யும் ஒரு வணிகர், ஒரு அச்சு முத்திரையை எடுத்து அதன் அச்சு வடிவத்தை சரிப்பார்க்கிறார். அந்த அச்சில் மேலிருந்து கீழும் இடமிருந்து வலமாகவும் குறுக்காக சென்ற இரு கோடுகளும் முடிவில் இடதுபுறமாக தொண்ணூறு டிகிரி திரும்பி இருந்தன. அவர் விரைவாக அந்த அச்சை, ஒரு பருத்தித்துணியால் சுற்றப்பட்டு இருந்த ஒரு மென்மையான களிமண் அடையாள ஒட்டில் அழுத்துகிறார். அது உருவாக்கிய அச்சுப் பதிவு, அச்சு முத்திரையின் ஆடி எதிர் உருவமாக, வலப்புறம் வளைந்து இருந்தது. தொடர்ச்சியான மங்கள நிகழ்வுகளுக்கு தூண்டுதலாக இருக்கும் இந்த சின்னம், *இராமாயணத்தில்* விவரிக்கப்பட்டுள்ள ஒரு கப்பலின் பாய்மரத்தில் சுவஸ்திக் அலங்கரித்து இருந்ததைப் போல, அந்த வணிகரின் பாய்மரத்திலும் தைக்கப்பட்டு இருந்தது. அந்த வணிகர் இந்தியாவின் வடமேற்கு பகுதியில் அமைந்து இருந்த, இந்து சமயத்தின் மிகவும் பழமையான சிந்து சமவெளி நாகரீகத்தை சேர்ந்தவர். அன்று பயன்படுத்தப்பட்ட அந்த அச்சு இன்று ஒரு அருங்காட்சியகத்தில் ஒரு காட்சி பொருளாக இருக்கிறது. இந்த சமஸ்கிருத சொல்லுக்கு “நல்ல இருப்பு, அதிஷ்டம் அல்லது சகுனம்” என்று பொருள் அல்லது “நல்வாழ்விற்கு உகந்தது” என்றும் பொருள் கொள்ளலாம். இந்த சொல்லில் இருக்கும் *சு* என்பது “நல்ல” என்ற பொருளும், *அஸ்து* என்பது “அப்படியே ஆகட்டும்” என்றும் பொருள் தருகிறது.

இந்துக்களை பொறுத்தவரை சுவஸ்திக் சின்னம் என்பது விநாயகப் பெருமானால் வழங்கப்பட்ட அனுகூலமான சந்தர்ப்பங்களுடன் தொடர்புடையதாக இருக்கிறது. அது சூரியன் மற்றும் உயிரின் சுழற்சியையும் குறிப்பிடுகிறது. இன்று இந்த பழமையான மற்றும் புனிதமான சின்னத்தை இல்லத்தரிசிகள் தங்கள் வாசல் மற்றும் கதவுகளை பாதுகாக்கவும், பூசாரிகள் தாங்கள் செய்யும் சடங்குகள் மற்றும் நெய்வேத்தியங்களை சுத்தி செய்யவும்,

வணிகர்கள் ஒவ்வொரு புத்தாண்டு தொடக்கத்தில் தங்கள் கணக்குப் புத்தகங்களின் ஆரம்ப பக்கங்களுக்கு இறையருள் கிடைக்கவும் பயன்படுத்துகிறார்கள். அதற்கு துரதிஷ்டம் மற்றும் எதிர்மறை சக்திகளை விரட்டி அடிக்கும் ஆற்றல் இருப்பதாக கருதப்படுவதால், அது இல்லாமல் எந்த சடங்கு அல்லது வேள்வி முழுமை பெற்றதாக கருதப்படுவது இல்லை. தொடர்ச்சியான சிறிய சுவஸ்திக் சின்னங்கள், புடவைகளில் மிகவும் பிரபல பார்டராக விளங்குகிறது. இதற்கு மழைக்காலங்களின் போது மகாராஷ்டிரத்தில் விசேஷ மரியாதை செலுத்தப்பட்டு, பலவண்ண கோலப்பொடிகள் மற்றும் பூவிதழ்களுடன் தரையில் பெரிய கோலமிடுவது வழக்கமாக இருந்து வருகிறது.

நமது இலக்குகளை நோக்கி செல்லும் பாதை பெரும்பாலும் நேராக இல்லாமல், எதிர்பாராத திருப்பங்களுடன் இருக்கும் என்பதை சுவஸ்திக் சின்னத்தில் இருக்கும் செங்கோண கோடுகள் தெரியப்படுத்துவதாக மக்களிடம் நம்பிக்கை நிலவுகிறது. அவை தெய்வீகத்தன்மையை புத்தியால் அல்லாமல் இயலுணர்வால் அடையும் சுற்றுப்பாதையையும் குறிப்பிடுகின்றன. குறியீட்டு ரீதியாக, சுவஸ்திக் சின்னத்தில் குறுக்கே செல்லும் கோடுகள் இறைவன் மற்றும் படைப்பை குறிப்பிடுவதாக கருதப்படுறது. நான்கு செங்கோண கோடுகள் நான்கு *புருஷார்த்தங்களான* அறம், பொருள், இன்பம், வீடு அல்லது *தர்மம், அர்த்த, காம*, முக்தியை குறிப்பிடுகின்றன. இவ்வாறு இது சனாதன தர்மத்தின் வலுவான சின்னமாக விளங்குகிறது. இது இறைவன் என்கிற உறுதியான மையத்தை சுற்றி உலகச்சக்கரம் நிரந்தரமாக சுழல்வதையும் குறிப்பிடுகிறது. முதுகுத்தண்டின் அடியில் உணர்வின் மையமாக இருக்கும் *மூலாதார சக்கரத்துடன்* சுவஸ்திக் சின்னம் தொடர்புடையதாக இருக்கிறது மற்றும் வேறுசில யோகப்பிரிவுகளில் அது நெருப்பு அல்லது சூரியனின் மையமாக தொப்புளுக்கு அருகில் இருக்கும் *மணிப்பூரக சக்கரத்துடன்* தொடர்பில் இருக்கிறது.

உலக கலாச்சாரங்களில் சுவஸ்திக் சின்னம்



செழுமை மற்றும் மங்கள நிகழ்வுகளை குறிப்பிடும் புனிதமான சுவஸ்திக் சின்னம், உலக கலாச்சாரங்கள் மத்தியில் ஒரே பொதுவான சின்னமாக இருக்க வாய்ப்புள்ளது. “இது மெசபடோமிய காசுவகையில் ஒரு பிரபலமான சின்னமாக இருந்தது. இது (இதன் செங்கோண கோடுகள் கிரேக்க எழுத்து காமா Γ போன்று இருந்ததால், இது காம்மடியன் கிராஸ் என்ற பெயரை பெற்று) ஆரம்பகால

கிறித்துவ மற்றும் பைசண்டைன் ஓவியத்தில் இடம்பெற்றுள்ளது. இது தெற்கு மற்றும் மத்திய அமெரிக்கா (மாயன்களிடத்தில்) மற்றும் வட அமெரிக்காவில் (பெரும்பாலும் நவ்ஜோஸ் மத்தியில்) இடம் பெற்றுள்ளது. இது இந்தியாவில் இந்துக்கள், சமணர்கள் மற்றும் பௌத்த சமய மக்களிடத்தில் அதிக பயன்பாட்டில் இருக்கும் ஒரு மங்களகரமான சின்னமாக தொடர்ந்து இருந்து வருகிறது," என்று *என்ஸிலோபிடியா பிரிட்டானிகா* விளக்குகிறது.

இந்தியாவின் வற்றாத ஆன்மீக ஊற்றில் இருந்து பௌத்த மதம் தோன்றிய போது, அது செங்கோண சின்னத்தை மரபுரிமையாக பெற்றுக்கொண்டது. பௌத்த துறவிகள் மூலம் சுமக்கப்பட்டு, வடக்கே இமயமலையை கடந்து சீனாவிற்குள் நுழைந்த இந்த நற்பேறு நிறைந்த சின்னம், பெரும்பாலும் புத்தர் சிலையின் பாதங்களில் செதுக்கப்பட்டு, வளைந்து நெளிந்து அல்லது ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த சுவஸ்திக் சின்னங்களின் தொடர்ச்சியாக பரவி இருந்தது. பூமியின் மற்றொரு முனையில் வாழ்ந்த அமெரிக்க இந்தியர்கள், அதிஷ்டம் வழங்கும் ஆரம் சின்னத்தை சால்மன் மீன் நிறத்தில் இருக்கும் சிப்பிகள், ஹீலிங் ஸ்டிக்ஸ், மண்பாண்டங்கள், நெசவுத்துணிகள் மற்றும் போர்வைகளில் பதிவு செய்தனர். அங்கிருந்து இரண்டாயிரம் மைல்கள் தெற்கே யுகாடன் தீபகற்பத்தில் வாழ்ந்த மாயன் இனத்தவர்கள், அதை கோயில் ஓவியங்களில் செதுக்கினார்கள். அனத்தோலியா அல்லது ஆசியா மைனரின் பழங்கால மலைப்பகுதி கலாச்சாரங்களில் வேரூன்றிய பிறகு, அந்த சின்னம் எகிப்து மற்றும் கிரேக்க நாடு வழியாக மத்திய தரைக்கடலை சுற்றி வடக்கு நோக்கி சாக்சான் நிலப்பகுதிகள் மற்றும் ஸ்கேண்டினவியா மற்றும் மேற்கில் ஸ்காட்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்தது.

அமெரிக்க இந்தியர்களிடம் இருந்து இந்த சின்னத்தை பத்தொன்பதாவது நூற்றாண்டை சேர்ந்த அமெரிக்கர்கள் பெற்றுக்கொண்டார்கள். சாரண சிறுவர்கள் பித்தளை சுவஸ்திக் சின்னம் போதித்த பெல்ட் பக்கிள்களை அணிந்தனர், மற்றும் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நடந்த ஒரு US உலக கண்காட்சியில் சுவஸ்திக் சின்னம் பொதித்த பிரகாசமான நினைவு நாணயங்களை வெளியிடப்பட்டது. அது நகைகளில் பொருத்தப்பட்டது மற்றும் நினைவுப்பொருட்கள், விளக்கு சாதனங்கள், அஞ்சல் அட்டைகள் மற்றும் சீட்டு அட்டைகளில் பொறிக்கப்பட்டது. 1920 முதல் 1930 களின் தொடக்கத்தில் அமெரிக்காவின் 45 ஆவது காலாட்படை பிரிவின் அடையாளச் சின்னமாக விளங்கிய சுவஸ்திக் சின்னத்தை, சிகப்பு சதுர பின்னணியில் மஞ்சள் நிறத்தில் ஒரு பழங்கால அதிஷ்ட சின்னமாக போர்வீரர்கள் தங்கள் இடது தோளில் பெருமையுடன் அணிந்துக் கொண்டனர். 1930 களில் அந்த காலாட்படையின் அடையாளச்சின்னம், அமெரிக்காவின் தண்டர்பிர்டாக மாற்றப்பட்டது. கனடாவின் டொரன்டோவில் இருந்து 360 மைல்கள் வடக்கே சுவஸ்திகா என்ற ஒரு ஊர் இருக்கிறது. தங்க வளம் நிறைந்த சுரங்கம் இங்கே கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, இந்த ஊர் 1911 ஆம் ஆண்டு இந்த பெயரை பெற்றது. இரண்டாம்

உலகப்போர் தொடங்கிய போது, மத்திய அரசாங்கம் அந்த பெயரை வின்ஸ்டன் என்று மாற்ற வற்புறுத்திய போது, அதை ஊர்மக்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டனர்.

நாசி ஜெர்மானியர்கள் மூலம் தவறாக பயன்படுத்தப்பட்டது

1930 களில் ஜெர்மனி நாட்டில், அடால்ப் ஹிட்லரின் நாசி தேர்ட் ரைச் ஆட்சி செய்து, உலக நாடுகளை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்திய போது, சுவஸ்திக் சின்னத்தின் மதிப்பு சரிந்தது. செப்டம்பர் 1935 முதல் 1945 ஆம் ஆண்டு நாசியின் வீழ்ச்சி வரை, அது ரைச் ஆட்சியின் அதிகாரப்பூர்வமான கொடியில், ஒரு சிகப்பு நிற பின்னணியில் இருந்த ஒரு வெள்ளை நிற வட்டத்தில், ஒரு கருப்பு சுவஸ்திக் சின்னம் இடம்பெற்று இருந்தது. ஜெர்மன் நாட்டு படைவீரர்களும் தங்கள் சீருடைகளில் ஒரு கழுகின் கீழ் இருந்த ஒரு வட்டத்தில் ஹாகென்கிரேஸ் (“இரு குறுக்குக் கோடுகள்”) அணிந்துகொண்டு, அதை தங்கள் ஆயுதக் கிடங்கில் காட்சிக்கு வைத்து இருந்தனர். ஆசியாவைப் போல மேற்கத்திய நாடுகளில் சுவஸ்திக் சின்னத்தின் பயன்பாடு பரவலாக இருந்தாலும், மேற்கத்திய நாடுகளில் அந்த சின்னம் பாசிசம் மற்றும் யூத எதிர்ப்பு வாதத்தின் இழிவான மற்றும் வெறுக்கப்பட்ட சின்னமாக மாறியது மற்றும் அது போர்முனையில் நேச நாடுகளின் தலைமையகம் மூலம் தடை செய்யப்பட்டது.

சுவஸ்திக் சின்னத்தின் இடப்புறம் மற்றும் வலப்புறம் வளைந்து இருக்கும் வடிவங்களை கண்டறிதல்



சுவஸ்திக் சின்னம் தொடர்ந்து பல்வேறு உருவங்கள் மற்றும் அர்த்தங்களாக மாற்றம் பெற்றாலும், இடப்புறம் வளைந்த சின்னத்தை காட்டிலும் வலப்புறம் வளைந்த சின்னம் இந்து சமயத்தில் காலம் காலமாக அதிக பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

புத்தர் மனித வடிவில் இல்லாமல், எண்ணற்ற வலப்புறம் வளைந்த சுவஸ்திக் சின்னங்கள் சூழ்ந்து இருக்கும் அவரது பாதங்களாக மட்டுமே சித்தரிக்கப்பட்ட ஆரம்பகால பௌத்த சிற்பங்களில், சிந்து சமவெளி அச்சுகளுக்குப் பிறகு மிகவும் பழமையான இந்திய சுவஸ்திக் சின்னம் அதிகமாக காட்சி அளிக்கிறது. இதைப்போல சமண மதத்தின் ஏழாவது தீர்த்தங்கரரின் (பிறவிக்கடலை கடந்த ஞானி) அடையாள சின்னமாக சூரியன், வலப்புறம் வளைந்த சுவஸ்திகம்

விளங்குகிறது. மலேசியா நாட்டில் இருக்கும் சீக்கிய கோயில்கள் அனைத்தும் வலப்புறம் வளைந்த சுவஸ்திக் சின்னத்தை ஆன்மீக அலங்காரமாக கொண்டிருக்கிறது. சில இடங்களில் எந்தவகை சுவஸ்திக் சின்னத்திற்கும் ஒரு எதிர்மறை கருத்து வழங்கப்படாமல், வலப்புறம் வளைந்த முத்திரை வசந்தகாலம் அல்லது ஆண் சின்னமாகவும், இடப்புறம் வளைந்த முத்திரை இலையுதிர் காலம் அல்லது பெண் சின்னமாகவும் இருந்துள்ளது. சைவம் மற்றும் சாக்த சமயத்தின் தாந்த்ரீக அறிவியல்கள் இடதுகை மற்றும் வலதுகை பாதைகள் (*வாம* மற்றும் *தட்சிண*) என்று இரண்டாக பிரிந்ததால், சுவஸ்திக் சின்னமும் கருப்பு அல்லது வெள்ளை ஆன்மீகம் மற்றும் மந்திரவித்தையில் நுழைந்து இருக்கக்கூடும்.

சுவஸ்திக் முத்திரியைப் பற்றி இரண்டாம் உலகப்போருக்கு முந்தைய ஒரு நூலை தேடிய போது, அமெரிக்க தேசிய அருங்காட்சியகத்தின் காப்பாளராக இருந்த தாமஸ் வில்சன் என்பவர் எழுதிய *தி சுவஸ்திகா: தி ஏர்லியஸ்ட் நோன் சிம்பல் அண்டு இட்ஸ் மைகிரேடேஷன்ஸ்* என்ற புத்தகம் தங்கப்புதையல் போல கிடைத்தது. ஸ்மித்சொனியன் இன்ஸ்டிடயூட்டிற்காக 1894 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்த புத்தகத்தின் தலைப்புப் பக்கம் வலப்புறம் வளைந்த சுவஸ்திக் முத்திரையுடன் திறக்கிறது மற்றும் இது வட அமெரிக்காவின் நவஜோ ஆதிவாசிகள் முதல் எகிப்து வரை, பழைய டிராய் முதல் சீனாவின் தாவ் நெறியை பின்பற்றுபவர்கள் வரை, இந்த முத்திரை உலகெங்கும் பரவியது பற்றி ஒரு விரிவான ஆய்வை வழங்குகிறது.

இந்த புத்தகத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள கிழக்கத்திய அறிஞர்களில் ஒருவரான மாக்ஸ் முல்லர், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஜெர்மன் பேராசிரியராக பணிபுரிந்து *வேதங்களை* மொழிபெயர்த்து, ஐரோப்பிய கற்றரிவாளர்களுக்கு *ஆர்யன்* என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர். *ஆர்யன்* என்ற சொல் ஒழுக்கம், ஆன்மீக உயர்பண்பை குறிக்காமல் இனத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கருத்து முதல் முறையாக மனித மனங்களில் பதிவதற்கு முல்லர் காரணமாக இருந்தார். “முத்திரையில் இருக்கும் கோடுகள் வலது அல்லது இடதுபுறமாக வளைந்து இருப்பதன் அடிப்படையில், அதை பேராசிரியர் மாக்ஸ் முல்லர் வேறுபடுத்துகிறார். வலப்புறம் வளைந்த முத்திரை உண்மையான சுவஸ்திக் என்றும், இடப்புறம் வளைந்து இருப்பது *சுயவஸ்திகா* என்றும் அவர் கூறினாலும், அவர் அதற்கு ஆதாரம் எதையும் வழங்கவில்லை,” என்று வில்சன் எழுதி இருக்கிறார். இந்த முத்திரையின் நிலைகள் குறித்து பல அறிஞர்கள் வழங்கிய விளக்கங்களை ஆய்வு செய்த பிறகு, “வழக்கமாக சுவஸ்திக் முத்திரை வலதுபுறமாக திரும்பி இருக்கும்,” என்று வில்சன் தீர்மானிக்கிறார்.

வில்சனின் புத்தகம் சுவஸ்திக் சின்னத்தின் பல்வேறு பகுதிகளை வரைபடங்களுடன் ஆய்வு செய்கிறது. இந்த முத்திரை மனித சமூகத்தின் ஆரம்ப காலத்தில் மிகவும் பரவலாக பயன்படுத்தப்பட்டு இருப்பதால், சுவஸ்திக் சின்னத்தின் தொடக்கத்தை தெரிந்துகொள்வது சாத்தியமற்றதாக வில்சனுக்கு

தோன்றியுள்ளது. ஐரோப்பாவில் 1894 ஆம் ஆண்டிற்கு முன்பாக சுவஸ்திக் முத்திரை பயன்படுத்தப்பட்டு இருப்பதாக கண்டறிந்த வில்சனின் ஆய்வு ஒரு அதிசய தகவலாக இருக்கிறது. “ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியா” பகுதிகளில் (தற்போது அருங்காட்சியகங்களில் காட்சிப்பொருளாக இருக்கும்) சரிகை சித்திர திரையில் நாம் பார்க்கும் பத்து சுவஸ்திக் மாதிரிகள், ஈமத்தாழிகள் மற்றும் ஈட்டிமுனைகளை அலங்கரிக்கவும், துளையிடும் கருவி மற்றும் பின் ஜூவல்லரி உருவாக்கவும் பயன்படுத்தப்பட்டன. அவை இடது மற்றும் வலப்புறம் வளைந்து இருந்தாலும், வலப்புறம் வளைந்த சின்னங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மறைகுறி பயன்படுத்திய ஐரோப்பா முழுவதும் அலங்கரிப்பதில் மற்றும் சிறப்பாக பாதுகாக்கப்பட்ட அவர்களின் பழங்கால தெய்வங்களின் சில டியுடோனிக் கல்வெட்டுக்களில் சுவஸ்திக் சின்னங்கள் பயன்படுத்தப்பட்டு இருந்தன.

வலப்புறம் வளைந்த சுவஸ்திக்



சுவஸ்திக் சின்னம் வடிவியலில் நிறைவை பெற்று இருந்தது. இதனால் மனதின் கண்களில் நிலையாக இருக்கவும் முடியும் அல்லது சுருள் விண்மீன் மண்டலம் போல அதன் கோடுகள் ஒன்றன் பின் ஒன்றாக சுற்றி, சுழற்சியின் நிரந்தர இயக்கமாக இருக்கவும் முடியும். “மங்களம் உண்டாகட்டும்” என்பதை குறிக்கும் சுவஸ்திக் என்ற சொல், மிகவும் பழமையான மற்றும் அதிக பயன்பாட்டில் இருக்கும் இந்த சின்னத்துடன் எவ்வாறு பொருந்தியது என்பது ஒரு புதிராக இருக்கிறது. வலப்புறம் வளைந்த சுவஸ்திக் முத்திரையை பல வல்லுனர்கள் கடிகார முள் இயங்கும் திசையில், கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் சூரியனின் பாதையை வெளிப்படுத்தும் ஒரு சூரிய மண்டல சின்னமாக குறிப்பிடுகிறார்கள். அது பிரபஞ்சத்தின் வெளிப்படையான பகிர்வை

சித்தரிப்பதாக ஒரு கோட்பாடு கருதுகிறது. யாவும் கடந்த பரம்பொருள் மனம் என்கிற தத்துவத்தினால் நேரடியாக அடையப்படாமல், மறைமுகமாகவும் மறைபுதிராகவும் பிரபஞ்ச மனதின் மூலம் அடையப்படுகிறது என்பது அதன் அற்புத விளக்கங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்துக்கள் வழக்கமாக சுவஸ்திக் முத்திரையை நேர் மேலாகவும் கீழாகவும் பயன்படுத்துவார்கள், ஆனால் மற்ற கலாச்சாரங்கள் பல்வேறு கோணங்களில் திரும்பிய முத்திரைகளை பயன்படுத்துகின்றன.

இடப்புறம் வளைந்த சுவஸ்திக்



இடப்புறம் வளைந்த சுவஸ்திக் இந்து சமயம் உட்பட பல்வேறு கலாச்சாரங்களில் தோற்றம் அளிக்கிறது. பெரும்பான்மை இந்துக்கள் வலப்புறம் வளைந்த சின்னத்தை பயன்படுத்தினாலும், வழக்கமாக இடப்புறம் மற்றும் வலப்புறம் வளைந்த சின்னங்கள் ஒன்றுக்கு பதிலாக இன்னொன்று பயன்படுத்தப்படுகிறது. இந்த சுவஸ்திக் சின்னத்தின் முன்புறத்திற்கு குறுக்காக வீசும் காற்று, அதன் கோடுகளை பிடித்து வலப்புறமாக சுழற்றும் ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் இது வழக்கத்திற்கு மாறான விளக்கம் ஆகும். ஆனால் பெரும்பாலான மக்கள் அதன் கோடுகள் சுட்டிக்காட்டுவதைப் போல, அது இடது பக்கம் சுற்றுவதாகவே கருதுகிறார்கள். இது பிரபஞ்சம் தனது மூலத்திற்குள் ஒடுங்குவதை குறிப்பிடுவதாக சிலர் கருதுகிறார்கள். இது இரவு நேரத்தில் காளிதேவி மற்றும் மாந்த்ரீக பழக்கங்களின் துணையுடன், புலனின்ப வேட்கை மற்றும் வலுவான சாக்த சடங்குகளை பயன்படுத்தும் *வாமாச்சாரம்* என்கிற தாந்த்ரீக பாதையுடன் தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது. அது இலையுதிர் காலம் அல்லது செயலற்ற காலத்தை குறிப்பதாக இன்னொரு விளக்கமும் இருக்கிறது.

ஹிட்லருக்கு பிறகு சுவஸ்திக் சின்னம்

சுவஸ்திக் சின்னத்திற்கு தேர்ட் ரைச் அரசுடன் இருந்த பழிக்கப்பட்ட தொடர்பு காரணமாக, அது அன்றும் இன்றும் ஜெர்மனியிலும் அதற்கு வெளியேயும் பலரால் கடுமையாக வெறுக்கப்பட்டு, தொடர்ந்து இழிவுப்படுத்தப்பட்டு தவறாக புரிந்துகொள்ளப்படுவதன் காரணத்தை அறிய முடிந்தாலும் அவை அனைத்தும் அந்த சின்னத்தின் துர்பாக்கியத்தையே குறிக்கின்றன. இந்த சூழ்நிலை மாற்றம் பெற்று, இந்த சூரிய மண்டல சின்னம் மீண்டும் சுத்தமான மற்றும்

மகிழ்ச்சிகரமான தொடக்கங்களை நோக்கி திரும்புவதற்கான காலம் வந்துவிட்டது. ஆனால் ஜெர்மனியில் கோயில்களை நிர்வகிக்கும் இந்துக்கள் இன்றும் சுவர்கள் மற்றும் நுழைவாயில்களில் அன்பான விநாயகரின் பழங்கால சுவஸ்திக் சின்னத்தை காட்சிக்கு வைத்து இருக்கிறார்கள் மற்றும் சமீபத்தில் மக்களால் வெறுக்கப்பட்ட நாசிசத்தின் சின்னத்திற்கு அருகில், சிவபெருமான் மற்றும் முருகப்பெருமானின் மிகவும் பழமையான சின்னமாகவும், அதிக பழமையாக இல்லாமல் சில நூற்றாண்டுகளாக யூதர்களின் சின்னமாக மதிக்கப்படும் தாவீதின் நட்சத்திரமாகவும் ஆறு முனைகளுடன் இருக்கும் நட்சத்திரமான சட்கோணத்தையும் காட்சிக்கு வைத்து இருக்கிறார்கள்.

சுவஸ்திக் மற்றும் சக்கரங்கள்

ஆன்மீக மறைஞான கண்ணோட்டத்தில் சுவஸ்திக் என்பது எல்லோருக்குள்ளும் முதுகுத்தண்டின் அடியில் அமைந்திருக்கும் நான்கு இதழ் கொண்ட *மூலாதார சக்கரத்தை* ஒரு சூட்சுமமான வரைபடமாக சித்தரிக்கும் ஒரு வகை *யந்திரம்* ஆகும். சக்கரங்கள் என்பவை மனிதனின் உட்புற உடல்களில் அமைந்து இருக்கும் நரம்பு பின்னல்கள் அல்லது விசை மற்றும் உணர்வின் மையங்கள் ஆகும். தூல உடலில் அதனோடு தொடர்புடைய நரம்பு பின்னல்கள், நரம்பு முடிச்சுக்கள் மற்றும் சுரப்பிகள் உள்ளன. ஏழு முக்கிய சக்கரங்களை மனோஉணர்வுடன் பார்க்கும் போது அவை வண்ணமயமாக, பல இதழ்களை கொண்ட சக்கரங்கள் அல்லது தாமரைகளாக முதுகுத்தண்டை சுற்றி அமைந்துள்ளன. கண்களுக்கு புலப்படாத ஏழு சக்கரங்கள் முதுகுத்தண்டின் கீழே இருக்கின்றன.

முதுகுத்தண்டின் அடிப்பகுதிக்கு மேலிருக்கும் சக்கரங்கள்

14) *சஹஸ்ரஹாரம்*	உச்சந்தலை	ஞான திருஷ்டி
13) *ஆக்ஞா*	மூன்றாவது கண்	தெய்வீக பார்வை
12) *விசுத்த*	தொண்டை	தெய்வீக அன்பு
11) *அனாஹத*	இதய மையம்	நேரடி அறிவெழுச்சி

10) *மணிப்பூரகம்*	சூரிய பின்னல்	மன உறுதி
9)*ஸ்வாதிஷ்டானா*	தொப்புளுக்கு கீழே	காரண ஆய்வு
8) *மூலாதாரம்*	முதுகுத்தண்டின் அடிப்பகுதி	நினைவாற்றல்/ காலம்/பரவெளி

முதுகுத்தண்டின் அடியில் இருக்கும் சக்கரங்கள்

7) *அதள*	இடுப்பு	அச்சம் மற்றும் சிற்றின்பம்
6) *விதள*	தொடை	பொங்கி எழும் கோபம்
5) *சுதள*	முழங்கால்	பழிவாங்கும் பொறாமை
4) *தளாதள*	கொண்டைக்கால் பின்தசைகள்	நீடித்த குழப்பம்
3) *ரசாதள*	கணுக்கால்	சுயநலம்
2) *மகாதள*	கால்கள்	மனசாட்சியின்மை

1) *பாதாள*	உள்ளங்கால்கள்	தீய எண்ணம் மற்றும் கொலை

கோயில் மறைஞானத்தில் வல்லுனர்களாக விளங்கும் சிவாச்சாரியார்கள், தாங்கள் பூஜையின் தொடக்கத்தில் தங்களது நெற்றியின் ஓரத்தில் கைமுட்டிகளால் பலமுறை குட்டிக்கொள்ளும் போது, *அமிர்தம்* என்கிற தெய்வீகத் தேன் அவர்களின் உச்சந்தலையில் இருக்கும் *சஹஸ்ரஹார* சக்கரத்தில் இருந்து வழிவதால், அப்போது முதுகுத்தண்டின் அடியில் *மூலாதார* சக்கரத்தில் அமர்ந்து இருக்கும் விநாயகருக்கு அபிஷேகம் நடைபெறுகிறது என்று சான்றுறை வழங்குகின்றனர்.

சக்கரங்கள் மூலம் ஆன்மாவின் வளர்ச்சி



“மற்றவர்களை காட்டிலும் வெளிப்படையாக உயர்நிலையில் இருக்கும் சில ஆன்மாக்கள், கீழ்நிலை உணர்ச்சிகள் மற்றும் கீழ்நிலை சக்கரங்களின் பண்புகளில் குறைவான நாட்டத்துடன் இருப்பதற்கு காரணம் என்ன?” என்று அன்பர்கள் சிலசமயம் என்னிடம் கேட்கிறார்கள். அனைத்து ஆன்மாக்களும் ஒரே சமயத்தில் படைக்கப்படுவது இல்லை என்பதே அதற்கான பதில் ஆகும். சிவபெருமான் தொடர்ந்து ஆன்மாக்களை படைத்துக்கொண்டு இருக்கிறார். நீண்டகாலம் முன்பாக படைக்கப்பட்ட ஆன்மாக்கள் பழமையான ஆன்மாக்கள் என்றும், சமீபத்தில் படைக்கப்பட்டவர்களை இளம் ஆன்மாக்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். சுத்தமாக, சுயநலம் இல்லாமல், இரக்க குணம் மற்றும் நற்பண்புடன் இருந்து உடல், மனம் மற்றும் உணர்ச்சிகளில் கட்டுப்பாட்டை கடைப்பிடித்து சிந்தனை, சொல் மற்றும் செயலில் நன்மையை வெளிப்படுத்துபவர்களை நாம் பழமையான ஆன்மா என்று உணர்கிறோம்.

ஆன்மாக்கள் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு பொழுதும் இருந்துக்கொண்டு இருக்கிறார்கள். “உலகம் ஒரு பயிற்சி பள்ளியை போன்றது. அதில் சிலர் தொடக்கக் கல்வியை படிக்கிறார்கள். மற்றும் சிலர் கல்லூரிகளில் படிக்கிறார்கள்,” என்று எனது *சத்குருவான* யோகசுவாமி கற்றுத் தந்தார். ஒவ்வொரு ஆன்மாவும் மூன்றாவது லோகத்தில் படைக்கப்பட்டு, முதலாவது உலகமாக இருக்கும் தூல உலகில் ஒரு தூல உடலை பெற்று வாழும் வரை தொடர்ந்து பருமனான உடல்களை ஏற்றுக்கொண்டு வளர்ச்சி பெற்று வருகிறது. அதன் பிறகு அது பக்குவம் அடைந்ததும், அது பருமனான உடல்களை

நீக்கிக்கொண்டு மீண்டும் இரண்டாவது மற்றும் மூன்றாவது உலகங்களாக இருக்கும் சூட்சும மற்றும் காரண லோகங்களுக்கு திரும்புகிறது.


எண்ணற்ற பிறவிகள் மூலமாக நடைபெறும் இந்த பக்குவம் அடையும் செய்முறை, சக்கரங்கள் வழியாக உணர்வின் விரிவாக்கம் ஆகும். முதலில் இளம் ஆன்மாக்கள் *பாதாள, மகாதள, ரசதள* மற்றும் *தளாதள* சக்கரங்கள் வழியாக மெதுவாக பக்குவம் அடைகிறது. அத்தகைய நபர்கள் ஒழுங்கில்லாத தங்களது *அதர்ம* வழிகள் மூலம் நல்ல சமூகத்தில் வேதனைகளை உருவாக்குகின்றனர். அவர்கள் இரு பிறவிகளுக்கு மத்தியில், இயல்பாக அசுரர்களுடன் சேர்ந்து, தவறுகளை செய்து மற்றவர்களுக்கு வேதனைகளை வழங்கி மகிழ்ச்சி அடைகின்றனர். அவர்கள் *சுதள* சக்கரத்தில் இருக்கும் பொறாமைக்கு உயரும் போது, உணர்வின் மீது சிறிது கவனம் செலுத்தப்பட்டு, தீய ஆசைகள் குறைகின்றன. இறுதியில் *பாதாள* சக்கரம் உறங்குகிறது. அதன் பிறகு பொறாமைக்கு காரணமான *சுதள* சக்திகள் முறியடிக்கப்பட்டதும், இளம் ஆன்மா கோபத்தை வழங்கும் *விதள* சக்கரத்திற்கு உயர்ந்து, சிறிய தூண்டுதலுக்கும் பொங்கி எழும் கோபத்தை அனுபவிக்கப்படுகிறது. சமூக விதிகள் மற்றும் வழக்கங்கள் மூலம் ஒழுங்குப்படுத்தப்படும் நபர், தனது ஆற்றல்கள் மீது மெதுவாக கட்டுப்பாட்டை பெறுகிறார் மற்றும் மெதுவாக ஒரு மனசாட்சி வளர்ச்சிப்பெற தொடங்குகிறது. இந்த நிலையில் இறைவன் மற்றும் மகாதேவர்கள் மீது ஒரு அச்சம் வெளிப்படத் தொடங்குகிறது. இந்நிலையில் அந்த நபர் பதினான்கு விசை மையங்களில் ஏழாவதாக இருக்கும் *அதள* சக்கரத்திற்கு முழுமையாக உயர்த்தப்பட்டு, ஆனைமுகக் கடவுளின் இருப்பிடமான *மூலாதாரத்தின்* உணர்விற்குள் வெளிப்படுகிறார் மற்றும் கீழிருக்கும் பெரும்பாலான சக்கரங்கள் செயலிழக்கின்றன. இதன் பிறகு உயர்நிலை சக்கரங்கள் வழியாக விரிவாக்கம் பெறும் நீளமான செயல்முறை தொடங்குகிறது. இது *சரியை, கிரியை,* யோகம் மற்றும் ஞானம் என்கிற முற்போக்கான செய்முறையாக சைவ சித்தாந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இறுதியாக சிவபெருமானுடன் முழுமையான ஐக்கியம் என்ற *விஷ்வகிராசா* நடைபெறும் வரை, பல நூற்றுக்கணக்கான பிறவிகள் மற்றும் பிறவிகளுக்கு மத்தியில் நூற்றுக்கணக்கான காலகட்டங்கள் வாயிலாக அசுரன் தெய்வமாக மாறி, தெய்வம் மகாதேவராக மாறுகிறார். ஆன்மாவின் தன்னுணர்வு அழிந்த நிலையில் அது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதனம் மற்றும் அனுக்கிரகத்திற்கு காரணமாக விளங்கும் சிவபெருமானாக மாறுகிறது. தனிப்பட்ட அடையாளம் சர்வ வியாபகத்தில் விரிவடைகிறது.

சுவஸ்திக் முத்திரையுடன் *மூலாதார* சக்கரத்தில் அமர்ந்து இருக்கும் நமது அன்பான விநாயகர், நான்கு சக்கரங்களின் ஒரு தொகுப்பில் இருந்து அடுத்த தொகுப்பு மற்றும் மிகவும் உயர்வான அனைத்து ஏழு சக்கரங்களும் முறையாக செயல்பட்டு, நாம் முழுமையான பக்குவம் அடையும் வரை, அவர் “நமக்கு உதவி செய்ய காத்து இருக்கிறார்.” நம் எல்லோரையும் சிவபெருமானின் திருவடிகளுக்கு வரவழைத்து, அவரது இதயத்தில் இடம்பிடித்து, *ஜீவன்*

சிவனாகும் வரை, அவரும் அவருடைய சகோதரனான முருகப்பெருமானும் இணைந்து செயல்படுகிறார்கள்.






CHAPTER ELEVEN

Prayers to Lord Gaṇeśa

Algae releasing daughter colonies 100x, Jean-Marc Babalian


ॐ
卐
卐

விநாயகர் பிரார்த்தனைகள்

கணபதி பிரார்த்தனா

गणपतिप्रार्थना:



பக்தர்கள் மண்டியிட்டு இருந்தாலும் அல்லது நின்று இருந்தாலும், பத்மாசனத்தில் அமர்ந்து இருந்தாலும் அல்லது தனியாக நடந்தாலும், அந்தர்லோகங்களுடன் தொடர்புகொள்ளும் ஒரு வலுவான வடிவத்தை பிரார்த்தனையில் தெரிந்துக் கொள்கிறார்கள். *பாவ* என்கிற ஒருமுகப்படுத்தப்பட்ட உணர்ச்சியுடன் பிரார்த்தனை செய்வதன் மூலம், நாம் விநாயகருடன் நமது உள்ளத்தின் ஆழத்தில் இருக்கும் உணர்ச்சிகளை பகிர்ந்துக்கொள்ள முடியும். இவ்வாறு நாம் தெய்வத்துடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறோம். இந்து சமய கண்ணோட்டத்தில் பிரார்த்தனை பற்றிய ஒரு சிறப்பான விளக்கத்தை, இந்திய மாநிலம் உத்தரபிரதேசத்தில் இருக்கும் ரிஷிகேஷ் நகரில் வாழ்ந்த பிரபல சுவாமி சிவானந்தா வழங்கி இருக்கிறார்.

“ஆன்மீக ஏற்றத்தின் செய்முறை தொடக்கத்தில் இருந்து முடிவு வரை ஒரு தீவிர பயிற்சியாக விளங்குகிறது. அதற்கு *அபியாசத்தை* (உறுதியான முயற்சி மற்றும் பயிற்சி) தவிர வேறு எந்த வழியும் இல்லை. ஒருவரிடம் நல்ல சாமர்த்தியம், நல்ல இதயம், மிகவும் சிறந்த *பாவனை* இருந்தாலும், இதன் ஒவ்வொரு பகுதியையும் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை என்றால், நல்ல பலன் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. *சாதனையின்* வாழ்வில் *அபியாசம்* மிகவும் முக்கியம் ஆகும். அதன் துணை இல்லாமல், *சாதனை* தனது பலனாக இருக்கும் *அனுபூதி* என்கிற அனுவபத்தை நோக்கி முன்னேறாது. இதன் காரணமாக மகாதேவரின் நுழைவாயிலில் காத்து இருக்கும் தேவர்கள் அவரை போற்றி பாடுகிறார்கள், அவரை வழிபடுகிறார்கள். இதுவே நமது அடுத்த குறியாக இருக்கும். இனி நமது வாழ்க்கைப் பாதையில் பிரார்த்தனையின் விதிமுறை மட்டுமே ஒரே வழிகாட்டியாக விளங்குகிறது.

பிரார்த்தனை என்பது மிகவும் முக்கியமாக ஒரு உயர்ந்த சக்தியில் இருக்கும் நம்பிக்கையை குறிக்கிறது. இது விருப்பத்துடன் நமது *அபிமானம்* என்கிற ஆணவத்தை ஒரு உயர்ந்த சக்தியின் பாதங்களில் சமர்பிப்பதை குறிக்கிறது. இதனால் இனி சிரத்தையை பெற்று, நமது தனிப்பட்ட ஆணவத்தை சமர்பிப்பதும் நமது அடுத்தக்கட்ட நடவடிக்கைகளாக விளங்குகின்றன. அதன் இயல்பான தொடர்ச்சியாக இருக்கும் பூரண பணிவு என்கிற உயர்ந்த பண்பை வளர்ப்பதும்

இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. அசுரர்களை எதிர்த்து வெற்றிபெற தேவையான பலத்தை கொடுக்கவேண்டும் என்று தேவர்கள் பிரார்த்தனை செய்யவில்லை. தெய்வீக சக்தியின் முழுமையான வெளிப்பாடு தங்களுக்கு காட்சி அளித்து அருளை வழங்கி, தாங்கள் இறைவனது கருவியாக மாறி, அவர் அந்த அசுரர்களை எதிர்த்து நிற்கவேண்டும் என்பதற்காக விருப்பத்துடன் தன்னலம் இழந்து, பணிவுடன் விலகி நிற்கும் அணுகுமுறை அவர்களிடம் வெளிப்படுகிறது. இது தனிப்பட்ட ஆன்மா கர்த்தா இல்லை என்பதும், பரமாத்துமா மட்டுமே ஒரே உயர்ந்த கர்த்தவாக இருக்கிறார் என்று அறிவதையும் குறிக்கிறது. இது சாதகன் வெறும் ஒரு சாதனமாக மட்டுமே இருப்பதையும், இறைவன் தானே அந்த நபருக்குள் வாசம் செய்து உண்மையில் அந்த *சாதனை* செய்வதையும் குறிப்பிடுகிறது. இந்த *சாதனையையும்* தான் செய்யவில்லை என்றும், தனக்குள் இருக்கும் தெய்வீக சக்தி செயல்பட்டு சாதனை செய்ய உதவி செய்து, தெய்வீக விருப்பத்தின் முழுமையான நிறைவேற்றத்தை அடைகிறது என்றும் அந்த சாதகன் உணரத் தொடங்கியதும், அவன் வெற்றிகரமான தெய்வீகத் தன்மையை நோக்கி விரைவாக முன்னேறத் தொடங்குகிறான்.

"இவ்வாறு பிரார்த்தனையின் இரண்டாவது அம்சம் நமக்கு முன்பாக விரிவாக்கம் பெற்று, நமது ஆளுமைக்கு தெய்வம் பொறுப்பேற்பதற்கு நாம் அனுமதி வழங்குகிறோம். தன்னை முழுமையாக விலகிக்கொள்ளும் சாதகன், தெய்வீக விருப்பத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்கிறான். 'நான் எதையும் செய்யவில்லை. அந்த இறைவனின் விருப்பம் நிறைவேறும்.' இந்த சூத்திரம் அவரது இதயத்துடிப்புடன் மற்றும் அவர் உடலின் நாடித்துடிப்புடன் இசைந்து இருக்கிறது. அந்த சாதகன் ஒரு மாற்றம்பெற்ற இருப்பாக மாறுகிறான்." (*லார்டு சண்முகா அண்டு ஹிஸ் ஒர்சிப்* என்ற புத்தகத்தின் பகுதி, ப. xiii-xv)

பல்வேறு பிரார்த்தனைகளை பயன்படுத்துதல்

நாம் கோயிலுக்கு மனதில் துன்பத்துடன் சென்றாலும் அல்லது அதிக மகிழ்ச்சி மற்றும் நன்றியுணர்வுடன் சென்றாலும், நமது பிரார்த்தனைகள் நமது இதயங்களில் இருந்து தானாக வெளிவருகின்றன. தங்களது நன்றி, வழிபாடு அல்லது பிரச்சனைகளை விநாயகருக்கு வழங்கக்கூடிய வகையில் சொற்களாக சொல்வது சிலருக்கு மிகவும் சுலபமாக இருக்கிறது. வேறு சிலர் தங்கள் மனங்களில் எதை நினைப்பது என்று தெரியாமல் அப்படியே நின்று இருப்பார்கள். மற்றவர்கள் மகாதேவருடன் நெருக்கத்தை உணராவிட்டாலும், அந்த தெய்வத்துடன் சமயம் சார்ந்த தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள ஏங்கிக்கொண்டு இருப்பார்கள். சுருக்கமாக சொன்னால், பலர் எப்படி பிரார்த்தனை செய்வது என்று கற்க விரும்புகிறார்கள்.

நாம் இந்து சமய சுலோகங்கள் அல்லது பாடல்கள் மற்றும் சான்றோர்களின் பிரார்த்தனைகளை கேட்டு வளர்ந்து இருந்தால் அதை நமது பாக்கியம் என்றே கருதவேண்டும். அவை எழுதப்பட்ட மொழிகளில் இவற்றை சொல்லலாம்

அல்லது மற்ற மொழிகளில் மொழிபெயர்த்து சொல்லலாம். பிரார்த்தனைகளில் பலவகைகள் உள்ளன. வழிபாடு அல்லது முக்கிய செயல்களை செய்யும் முன்பாக இறைவனை ஆவாகனம் செய்யும் பிரார்த்தனைகள் உள்ளன. முடிவு எடுக்கவேண்டிய சூழ்நிலை, பிரச்சனை அல்லது குழப்பம் நிலவும் காலகட்டங்களில் தெய்வீக உதவியை நாடி பரிவோடு செய்யும் பிரார்த்தனைகள் உள்ளன. இறை அருள் வழங்கி தேவைகளை பூர்த்தி செய்ததற்கு நன்றி தெரிவிக்கும் துதிப்பாடல்கள் உள்ளன. மிகவும் முக்கியமாக குழந்தைகளுக்கு என்றே எழுதப்பட்ட பிரார்த்தனைகள், அவர்களுக்கு தெய்வத்திடம் இருக்கும் இயல்பான நெருக்கத்தை பற்றி தெரியப்படுத்தும் தகவல்களுடன் அமைந்து இருக்கின்றன. சமீபகாலத்தில் விநாயகருக்கு இயற்றப்பட்ட பல்வேறு ஆங்கில மொழிப் பிரார்த்தனைகளுடன் சமஸ்கிருத மொழியில் இருக்கும் சில பிரபல ஆவகான மந்திரங்களும் பின்வரும் பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

பிரார்த்தனைகளை மனப்பாடம் செய்வதன் மூலம், நாம் எந்த இடத்தில் இருந்தாலும் அவற்றை உடனடியாக பயன்படுத்த முடிகிறது. நம் கண் முன்னே இருக்கும் விநாயகர் கோயிலில் அல்லது நமது மனதில் விநாயகரை எண்ணிக்கொண்டு, நாம் அந்த பிரார்த்தனைகளை உறுதியாகவும் ஒருமுகப்பட்ட மனநிலையுடனும் தொடர்ந்து சொல்லும் போது, அவை நமது சிந்தனைகளை அந்தர்லோகங்களில் இருக்கும் மகாதேவர்களிடம் சுமந்து செல்கின்றன. நமது தெய்வ வழிபாடு அவருடன் ஒரு நல்ல உறவாக பக்குவம் அடையும் போது, இறைவனுடன் நாம் பேசுவதைப் போல இந்த பிரார்த்தனைகள் இயல்பாக நமது மனதில் தோன்றும். இவை குறிப்பாக இறைவன் நமக்கு அருகே இருந்து நாம் சொல்வதை கேட்டுக்கொண்டு இருக்கும் விநாயகர் பூஜையின் போதும், அதன் பிறகும் பயனுள்ளதாக இருக்கும். விநாயகர் மனதில் இருக்கும் நமது இருப்பைப் பற்றி நமக்கு நினைவூட்ட நேரம் காலம் பார்க்காமல் பிரார்த்தனை செய்யலாம். நாம் விநாயகரை நன்றாக புரிந்துகொள்ளும் போது, நமக்கு நெருக்கமானவர்கள், பெற்றோர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களுடன் பேசுவதைப் போன்று அவரிடம் பேச முடியும், மற்றும் நாம் இயல்பாக பயன்படுத்தும் சொற்கள் முறையான பிரார்த்தனைகளுடன் இயல்பாக கலந்து இருக்கும்.

ஆவாகனம் செய்யும் பிரார்த்தனைகள்

இந்த பிரார்த்தனைகள் மற்றும் பாடல்கள் மூலம் நாம் தெய்வத்தின் இருப்பை ஆவாகனம் செய்கிறோம். இதன் மூலம் இறைவன் அழைக்கப்படுகிறார். இறைவனும் பக்தரும் ஒன்று சேர்கிறார்கள். ஆவாகன பிரார்த்தனைகள் பெரும்பாலும் தெய்வத்தின் மகிமை, நாம் அறிந்த அவரது அம்சங்கள் மற்றும் பண்புகளைப் பற்றி பாடுகின்றன. வேத ரிஷிகள் மற்றும் பழங்காலத்து முனிவர்கள் ஆவாகனம் செய்வதில் தேர்ச்சி பெற்று இருந்தார்கள். அவர்கள் தங்களது மந்திரங்களின் வலிமையினால் உடனடியாக *தேவதையை* அழைக்க முடிந்தது. இந்த புத்தகத்தில் பூஜை மற்றும் ஜபம் பற்றிய பாடங்களில் இருக்கும்

பல மந்திரங்கள் வலுவான ஆவகான மந்திரங்களாகவும் விளங்குகின்றன. “ஓம் ஸ்ரீ கணேஷாய நம:” என்பது ஆவாகனம் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. நாம் பிரார்த்தனைகளின் இந்த பிரிவை சனாதன தர்மத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் ஆதார நூலாக விளங்கும் *வேதங்களில்* இருக்கும் பிரபல விநாயகர் சுலோகத்துடன் தொடங்குகிறோம். விநாயகரின் ஐந்து பண்புகளை உச்சரித்து, சர்வ வல்லமை படைத்த அவரது பாதுகாப்பை ஆவாகனம் செய்யும் இந்த சுலோகத்தை, பில்லியன் கணக்கான இந்துக்கள் பல யுகங்களாக சொல்லி வருகிறார்கள்.

ஓம் சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
பிரசன்னவதநம் த்யாயேத்
சர்வவிக்நோப சாந்தயே.

ஓம், வெள்ளை நிற உடை உடுத்தி எங்கும் வியாபித்து, பால் நிலா போன்ற நிறம் மற்றும் நான்கு கைகளுடன், ஒளிவீசும் முகத்துடன் இருப்பவர் தடைகளை நீக்கவேண்டும் என்று நாம் தியானம் செய்வோம்.

ஸ்ரீ ஆதி சங்கரர் இயற்றிய *கணேஷ புஜங்கத்தில்* அவர் பின்வரும் தொடக்க வழிபாட்டை பிரார்த்தனையாக வழங்கி இருக்கிறார். இது தனக்கு உவமை இல்லாமல் சிறந்த ஞானத்துடன் இருக்கும் விநாயகரை நினைத்து குறிப்பாக ஜபம் மற்றும் ஆழ்ந்த தியானம் செய்யும் முன்பாக பாராயணம் செய்வதற்கு பொருத்தமாக இருக்கிறது.

ஓங்காரவடிவமே தானெனும் தூயவர்

மாறுபாடற்றவர் முக்குணம்

நீங்கிய ஆனந்த வடிவமே தன்னுரு

நேர்ந்து வேறோரு வற்றவர் யாவரும்

ஏங்கியே அடைந்திடும் சிறப்பிடம் இதுவென

எண்ணிலா வேதமும் தோற்றிய காரணர்

பாங்குடன் தொன்மையும் திறமையும் கொண்டவர்

பண்பாளார் போற்றிடும் அவரையே துதிக்கின்றேன்.

வேண்டுதல் பிரார்த்தனைகள்

வேண்டுதல் பிரார்த்தனைகள் என்பது தனிப்பட்ட சரணாகதி மற்றும் அன்பு கலந்த பக்தியின் மனநிலையுடன் தெய்வத்தின் முன்பாக சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள், கெஞ்சல்கள் அல்லது மன்றாடல்கள் ஆகும். இறைவனிடம் விசேஷமாக ஏதாவது ஒன்று வேண்டிக்கொள்ளப்படுகிறது அல்லது இறைவனது திருவடிகளில் ஒரு விசேஷமான பிரச்சனை சமர்ப்பிக்கப்படுகிறது.

நாம் நினைப்பதே சிறப்பாக இருக்கவேண்டிய அவசியம் இல்லாமல், நமக்கு அந்த ஒற்றை தந்த தெய்வம் சிறந்ததையே செய்வார் என்ற முழு நம்பிக்கையுடன் அத்தகைய வேண்டுதல்கள் நிபந்தனையின்றி விடுக்கப்படுகின்றன. நாம் தெய்வத்திடம் கோரிக்கை வைப்பது இல்லை. நமக்கு பெற்றோர் போல இருக்கும் அவர், நாம் விரும்புவதை வழங்காமல், நமக்கு உண்மையில் தேவையானதை வழங்குகிறார். வேண்டுதல் பிரார்த்தனைகள் நமது இதயங்களில் இருந்து இயல் மொழியில் வெளிவரக்கூடும்.

அவரது திருவடிகளில் ஒரு பிரச்சனையை விட்டு செல்லும் போது, நாம் அதை வீட்டுக்கு சுமந்து செல்லாமல் அங்கேயே விட்டுவிடுகிறோம். அது எவ்வாறு கையாளப்படும், அதன் மீது எப்போது கவனம் செலுத்தப்படும் அல்லது அதன் மீது கவனம் செலுத்தப்படுமா என்ற சந்தேகிப்பதும் இல்லை. நாம் முழு நம்பிக்கையுடன் அந்த பிரச்சனையை அங்கே அவரது திருவடிகளில் சமர்பித்து, அதிலிருந்து விமோசனம் தொடங்கிவிட்டது மற்றும் அதற்கான தீர்வு வந்துகொண்டு இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் கோயிலில் இருந்து கிளம்புகிறோம். நமக்குள் மதம் செயல்புறிவதற்கு நம்மிடம் இதைப்போன்ற நம்பிக்கை வேண்டும். அதே பிரச்சனைகள், அச்சங்கள் மற்றும் கவலைகளை நாம் வீட்டிற்கு சுமந்து சென்றால், தெய்வத்திடம் கரைக்க வழங்கிய படையலை திரும்பப் பெறுவது போன்றதாகும். தாங்கள் கொடுத்த பரிசுக்கு பதிலாக அதிகம் பெறுவதற்கு சூழ்ச்சி செய்து பரிசுகள் மூலம் மக்களை விலைக்கு வாங்கும் செல்வந்தர்கள் மற்றும் பிரபலங்கள் உண்மையில் எதையும் வழங்காமல், புண்ணியத்தை காட்டிலும் பாபத்தை அதிகம் சம்பாதிக்கிறோம் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். அந்த தெய்வம் நமது முடிவான ஆன்மீக நலனுக்கு எவ்வாறு செயல்புரிகிறார் என்பதை எதிர்கால நிகழ்வுகள் மூலம் நாம் தெரிந்துக் கொள்ளலாம். நாம் பின்வரும் பிரார்த்தனைகளை சூழ்நிலைகளுக்கு ஏற்ப பயன்படுத்தலாம்.

முடிவு எடுக்கவேண்டிய தருணங்கள்

ஓம் ஸ்ரீ கணேஷாய நம:! ஞானத்தில் தலைசிறந்த தகவுளை எடுப்பதற்கு பல முடிவுகளும், செய்வதற்கு பல செயல்களுடன் குழம்பிய நிலையில் நான் உன் முன்னே நிற்கிறேன். எனக்கு அருள் புரியவேண்டும் என்று உன்னிடம் மன்றாடுகிறேன். நான் எனது குழப்பங்களை எல்லாம் உனது திருவடிகளில் வைத்து, என்னை உன்னிடம் முழுமையாக அர்ப்பணிக்கிறேன். எனக்கு தெளிவாக வேறுபடுத்தி நேர்மையாக முடிவெடுக்கும் திறனை வழங்குவாயாக. ஓம், கணேஷா *சரணம், சரணம்* கணேஷா.

லௌகீகத்தில் இருந்து விடுதலை

ஓம் ஸ்ரீ கணேஷாய நம:! விநாயக பெருமானே, பாவங்கள் அனைத்தையும் அழிக்கும் நீ, எனக்கு உதவுவாயாக. எதிர்கால குழந்தைகள் மீது அக்கறை செலுத்தாமல், லௌகீக நாட்டங்களில் மட்டுமே அதிகாலம் கழித்து விட்டேன். உனது நிரந்தர இருப்பை என்னால் எப்படி அடிக்கடி மறக்க முடிகிறது. உனது பாசக்கயிறால் என்னை உனது அருகில் வைத்துக்கொண்டு, உனது அங்குசம் மூலம் எனக்கு ஊக்கத்தை வழங்குவாயாக. எனக்கு இறைவன், மகாதேவர்கள் மற்றும் *சத்குருமார்கள்* மீது நம்பிக்கை வழங்குவாயாக. கணேஷா *சரணம், சரணம்* கணேஷா.

உதவி தேவைப்படும் தருணங்கள்

ஓம் ஸ்ரீ கணேஷாய நம:! கணங்களின் தலைவனாக இருக்கும் கணபதியே! நானும் உங்கள் கட்டுபாட்டில் இருக்கும் ஒரு தெய்வமாக இருக்கிறேன். பேரறிவுடைய நுணுக்கமான மனதில் இருந்து என்னை எப்போதும் பிரித்துக்கொள்ள முடியாது என்பதை நான் அறிவேன். தனது பக்தர்கள் எதிர்கொள்ளும் தடைகளை நீக்கும் இறைவனே, எனக்கு பாதுகாப்பு அளித்து, ஆதரவு தேவைப்படும் இந்த காலகட்டத்தில் எனக்கு உதவி வழங்குவாயாக. (பக்தன் தனது தேவை அல்லது பிரச்சனையை கூறுகிறார்.) ஓம், கணேஷா சரணம். எனக்கு அருள் வழங்குவாயாக, சரணம் கணேஷா.

குடும்ப நலன்

பாசக்கயிறு மற்றும் அங்குசம், இனிப்புகள், பழங்கள் மற்றும் கரும்பை தனது கரங்களில் ஏந்தியிருக்கும் விநாயகா, எனது குடும்ப நலன் மீது அக்கறை கொள்வாயாக. எங்கள் வீட்டிற்கு செழுமை மற்றும் செல்வத்தை வழிநடத்தி வருவாயாக. ஆனால் நாங்கள் காத்திருந்து, எங்கள் விருப்பங்கள் மற்றும் தேவைகள் மீது மட்டுமே கவனம் செலுத்தும் வேளையில், எந்த பேரிடராலும் மறைக்க முடியாத உனது நற்குணம் மற்றும் தெய்வீகத் தன்மையை எங்கள் வீட்டில் உணர்வதற்கு உதவி செய்வாயாக. கணேஷா *சரணம், சரணம்* கணேஷா.

அச்சம் மற்றும் கோபத்தில் இருந்து விடுதலை

எங்கும் நிறைந்திருக்கும் லம்போதரா, நல்லது அனைத்தையும் சுத்தமாகவும் அமைதியாகவும் செய்து முடிப்பவனே. எனக்கு எனது அச்சம் மற்றும் கோபத்தில் இருந்து விமோசனம் வழங்கு. நான் உன்னை எங்கும் எப்போதும் காண்பதற்கு அருள் செய். உள்ளார்ந்த தீமை என்று எதுவும் இல்லை என்பதை எனக்கு வெளிப்படுத்து. எனது மனதில் இருக்கும் தடைகளை எல்லாம்

நீக்கி புரிதல், உண்மையான நம்பிக்கை மற்றும் அன்பை வழங்கு. நான் எனது தர்மத்தை நிறைவேற்றும் போது ஒரு இணக்கமான வாழ்க்கை மற்றும் நேர்மையான வெற்றிக்கு என்னை வழிநடத்து. கணேஷா *சரணம், சரணம்* கணேஷா.

ஆணவத்தில் இருந்து விடுதலை

ஓம், ஸ்ரீ கணேஷாய நம:! சனாதன தர்ம வாழ்க்கையின் வாயில்காவலனே! அந்த கதவை எனக்காக திறந்து, அனைத்து வஸ்துக்களையும் மகாதேவர்களின் லோகத்தை நோக்கி இயக்கும் உனது நுணுக்கமான மனதை நான் உணர்வதற்கு அனுமதி வழங்கு. நான் தொடர்ந்து வழிபடும் வாழ்க்கையை வாழ்வதற்கு அந்த கதவை எனக்காக திறந்துவிடு. எனது ஆணவம் எனது கடவுளாக இல்லாத ஒரு புதிய உலகில் நுழைவதற்கு எனக்கு அனுமதி வேண்டும். நம்பிக்கை, அன்பு மற்றும் ஒற்றுமை கலந்த உனது ஆனந்தம் நிறைந்த உலகில் நான் நுழைய அந்த கதவை திறந்துவிடு. கணேஷா சரணம், சரணம் கணேஷா.

போற்றுதல், ஆராதனை மற்றும் நன்றியுணர்வு

விநாயகரை போற்றி, ஆராதனை செய்து நன்றியுணர்வு தெரிவிக்கும் பிரார்த்தனைகளில் நாம் எதையும் வேண்டிக்கொள்ளாமல், நமது இதயத்தில் அவர் அருள் நிரம்பி இருக்கும் போது, நாம் அவரை அன்புடன் பாராட்ட மட்டுமே செய்கிறோம். நாம் அதிகமாக வழிபட்டு அவரை புரிந்துகொள்ள தொடங்கியதும், நமது வாழ்வில் அவரது பணியின் மகிமையை நன்றாக உணர்ந்து, நம்மை சுற்றி அவரது இருப்பை காண்கிறோம். இந்த கண்ணோட்டத்துடன், கடந்தகாலத்தில் சிறந்து விளங்கிய பக்தர்கள் தாங்கள் இயற்றிய பல பாடல்களை இறைவனை நினைந்து பாடினார்கள். அத்தகைய பிரார்த்தனைகள் விநாயகருடன் நமது உறவை பலப்படுத்தி, நம்மை அவரது மனதிற்கு மேலும் நெருக்கமாக அழைத்து செல்கிறது.

மகிழ்ச்சியுடன் போற்றுதல்

ஓம், ஸ்ரீ கணேஷாய நம:! எனது வாழ்வில் அற்புதமான மனநிறைவை வழங்கிய உமாகணேஷா, உனக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நீ எனது பிரார்த்தனையை காதால் கேட்டு வேண்டியதை வழங்கிய கோயிலுக்கு, தாராளமாக *தானம்* வழங்கி எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உனது சக்தி அன்பு மலரும் மூலமாக இருக்கிறது. இனிமைகளின் ஆதாரமே போற்றி. நான் உனது திருவடியில் நன்றியுணர்வுடன் சரணடைகிறேன். ஓம், ஜெய் கணேஷா!

பரிசுகளை வழங்குதல்

ஓம், ஸ்ரீ கணேஷாய நம:! கம்பீரமாகவும் அழகாகவும் இருக்கும் கணேஷா. நான் இங்கே உனது நினைவாகவே இருக்கிறேன். உனது உற்சாக உணர்வு எனது உடலின் உயிராக இருக்கிறது. உனது அக்னி எனக்கு ஆறுதலை வழங்குகிறது. நாங்கள் பூஜையில் காண்பிக்கும் ஆரத்தியின் மூலம் உனக்கு அந்த அக்னியை திரும்பத் தருகிறோம். இந்த பூக்களும் பழங்களும் உன்னை மகிழ்விக்கவே வழங்கியுள்ளோம். நீ இயக்குவதற்காகவே எனது மனமும் இருக்கிறது. அமைதி வடிவானே போற்றி. இந்த நெய்வேத்தியங்களையும் ஏற்றுக்கொண்டு எனது எளிமையான வாழ்வில், எனது இதயத்தில் நீ வாசம் செய்ய வேண்டும். கணேஷா சரணம், சரணம் கணேஷா.

பாராட்டுதல்

ஓம், ஸ்ரீ கணேஷாய நம:! சுறுசுறுப்பாக செயல்பட்டு, எல்லோருக்குள்ளும் வாசம் செய்யும் ஈடு இணையற்றவனே! நாங்கள் உன்னை சூரிய வெப்பத்தில், பூமியில் வாழும் அனைத்து உயிர்களிடத்தில், சுழலும் கிரகங்களின் ஒழுங்குமுறையில் காண்கிறோம். அறிவின் தலைவனாகவும் காதலனாகவும் இருப்பவனே, நீ மக்களின் மனதில் மலரும் நுண்ணறிவாக இருக்கிறாய். உன்னை வழிபடும் பக்தர்களின் மனதை ஆட்சி செய்யும் தலைவனே, நீ இருக்கும் காரணத்தால் குழப்பம் என்றும் இருந்ததில்லை. கணேஷா சரணம், சரணம் கணேஷா.

கணபதி பிரதான தெய்வமாக இருக்கும் வீடுகளில், பல நூற்றாண்டுகளாக பின்வரும் பிரார்த்தனை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

பாரம்பரிய வந்தனை

கூர்மையான தந்தத்துடன் அறிவுக்கு அதீதமாக, மூன்று கண்கள் மற்றும் பெரிய தொந்தியுடன், அனைத்து உயிர்சக்திகளின் அரசனாக, பௌர்ணமி நிலவில் பிரகாசிக்கும் நெற்றியுடன் இரத்தச் சிவப்பு நிறத்தில் நித்தியமாக விளங்கி, சிவ-சக்தியின் மைந்தனாக, விக்கினங்களை அகற்றும் ஆணைமுகக் கடவுளுக்கு போற்றி போற்றி! கணேஷா சரணம், சரணம் கணேஷா.

குழந்தைகள் தினமும் சொல்லவேண்டிய பிரார்த்தனைகள்

தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிரார்த்தனை செய்ய குழந்தைகளுக்கு கற்றுத் தரும் ஒரு சிறந்த பழக்கத்தின் மூலம், நாம் வரவிருக்கும் தலைமுறைகளுக்கு நமது மதத்தை கற்றுத் தரும் கடமையை பூர்த்தி செய்கிறோம். விநாயகருடன் தனிப்பட்ட முறையில் பேசும் மனநிலையை

குழந்தைகள் பெறும் வரை, அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து பிரார்த்தனை செய்யவேண்டும் என்று பெற்றோர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

காலைநேர பிரார்த்தனை

ஓம் விநாயகா, நீ பூக்கள் மலரவும், பூமி சூரியனை தொடர்ந்து சுற்றி வரவும் துணை புரிகிறாய். நீ நாள் முழுவதும் வஸ்துக்களை முறையாக இயக்கி வருகிறாய். நீ தேவர்களின் தலைவனாக இருக்கிறாய். நானும் உனது தேவர்கள் குழுவில் ஒருவனாக இருக்கிறேன். நான் மற்றவர்கள் தேவைகளை உணர்ந்து, சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் அன்புடன் இருப்பதற்கு நீ உதவி செய்வாயாக. நான் புதிதாக ஒன்றை தொடங்கும் போது உன்னை முதலில் நினைப்பதற்கும், முறையானது மற்றும் சரியானதை மட்டுமே செய்வதற்கும் நீ உதவி செய்வாயாக. கணேஷா சரணம், சரணம் கணேஷா.

மதியநேர பிரார்த்தனை

ஓம் விநாயகா, நீ எனது இதயத்தை சீராக இயங்க செய்திருக்கிறாய். நான் தவறுகள் செய்வதை தடுத்து இருக்கிறாய். நாள்தோறும் என் குடும்பம் மற்றும் நண்பர்கள் மீதான எனது அன்பை வலுவடையச் செய்வாயாக. என்னை கவனத்தோடும் விவேகத்தோடும் இயங்கச் செய்வாயாக. எங்கள் *குலகுரு* வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு மதிப்பு அளித்து கவனம் செலுத்தவும், எனது பெற்றோர்களுக்கு மரியாதை செலுத்தவும் மிகவும் முக்கியமாக *வேதங்கள்* வழங்கும் ஞானத்தை நினைவில் வைத்து இருக்கவும் நீ எனக்கு உதவி செய்வாயாக. விநாயகா, நீ எனக்கு நிறைய உதவ வேண்டும். நான் வெற்றி பெறுவதற்கு நீ உதவி செய்யவேண்டும். கணேஷா சரணம், சரணம் கணேஷா.

இரவுநேர பிரார்த்தனை

ஓம் விநாயகா, இரவு நேரமும் வானில் இருக்கும் நிலவும், பிறை போன்ற உனது தந்தத்தை நினைவூட்டுகின்றன. நீ என்னுடன் காலையிலும் எனது வெளியுலக சந்திப்புகளிலும் இருந்ததைப் போல, இரவு நேரத்தில் எனது ஆழ்ந்த உறக்கத்திலும் எனது உட்புற அனுபவங்களிலும் நீ என்னுடன் இருக்கவேண்டும். நான் உன்னை எனது கனவுகளிலும் மறக்காமல் இருக்கவேண்டும். நாங்கள் ஒரு குடும்பமாக, அந்த கனவிலும் உனது வழிகாட்டலை பெறவேண்டும். கணேஷா சரணம், சரணம் கணேஷா.

உணவுநேர பிரார்த்தனை

ஓம் விநாயகா, எல்லாம் உனக்குள் அடங்கியுள்ளன. லௌகீக பிரபஞ்சத்தை ஆட்சி செய்யும் பொறுப்பை, சிவபெருமான் உனக்கு வழங்கியுள்ளார். மற்றவர்களுடன் எனது உணவை பகிர்ந்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் எப்போதும் நினைவில் வைத்து இருக்கவேண்டும். நீ எனக்கு இன்று வழங்கிய *பிரசாதம்*, எனது *பிராண* சக்திகள் மற்றும் சூட்சும ஓட்டங்களின் இயக்கத்தில் முழு இணக்கத்தை ஏற்படுத்தி, நான் உனக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு எனக்கு உடல் ஆரோக்கியம் மற்றும் வலிமையை வழங்க வேண்டும். கணேஷா சரணம், சரணம் கணேஷா.

நாம் இந்த பகுதியை விக்கினங்கள் மீது ஆட்சி செய்யும் விக்கினராஜனை பிரார்த்தனை செய்து வழிகாட்டல் மற்றும் உத்வேகத்தை தரவேண்டும் என்ற வேண்டுதலுடன் நிறைவு செய்வோம். நாம் இதனை உயர்ந்த இலக்கான மோக்ஷத்தை அடைவதற்கு, வாழ்க்கை வழங்கும் சோதனைகளுக்கு மத்தியில் பாதுகாக்க வேண்டும்.

வழிகாட்டல் மற்றும் ஊக்கத்தை பெறுவதற்கு

பல *கணங்களுக்கு* தலைவனே, ஆடம்பரம் மற்றும் சடங்குகளை விரும்பும் அமைதி வடிவானவனே, கலைகளின் காவலனாகவும் சிறந்த பழங்கால கலாச்சாரங்களை பாதுகாப்பவனே, முனிவர்களால் பூஜிக்கப்படுபவனே, உனது வலிமைமிக்க துதிக்கை மூலம் எங்களது சுத்தமான நிலையை உனது கம்பீரமான மனதிற்கு அருகில் வைத்துக்கொள். தெளிவு மற்றும் வழிகாட்டலை வேண்டும் எங்களது பிரார்த்தனைகளுக்கு பலன் வழங்கவேண்டும் என்று நாங்கள் உன்னிடம் மன்றாடுகிறோம். வஞ்சிப்பவர்களிடம் இருந்து எங்களை காப்பாற்றி, எங்களை எங்களது மூதாதையர்களின் பாரம்பரிய பாதைகளில் உறுதியாக இயக்கி, இன்றைய உலகில் பழங்காலத்து மரபுகளை வெளிக்கொண்டு வருவதற்கு புதிய வழக்கங்களை எங்களுக்காக உருவாக்கித் தரவேண்டும். சனாதன தர்மத்தை பின்பற்றி வாழ்வதற்கு எங்களுக்கு மனஉறுதியை வழங்கவேண்டும். நாங்கள் உனது திருவடிகளில் விழுந்து நமசுகாரம் செய்கிறோம். எங்களை நீ அருள்வாயாக. கணேஷா சரணம், சரணம் கணேஷா.

ஸ்ரீ கணேஷ உபநிடதம்

Dr. வசந்த் லாட் சமஸ்கிருதத்தில் இருந்து மொழிபெயர்த்த

கணபதி அதர்வசீர்ஷத்தில் இருந்து சில பகுதிகள்



ம்! தேவர்களே, நாங்கள் எங்களது காதுகளால் மங்களகரமாகவும் போற்றத்தக்கதாகவும் இருப்பதை கேட்கவேண்டும். நாங்கள் எங்களது கண்களால் புனிதமாகவும் மங்களகரமாகவும் இருப்பதை பார்க்கவேண்டும். நாங்கள் வலுவான உடல் அங்கங்களுடன் தெய்வீக அருளை நாடி, அந்த தெய்வங்களுக்கு பயனுள்ள வகையில் ஆனந்தமான வாழ்வை வாழவேண்டும்.

விநாயகா, நான் உன்னை சரணடைகிறேன். நீ உபதேசிக்கும் குருவை காப்பாற்றுகிறாய். நீ உபதேசம் கேட்கும் மாணவனை காப்பாற்றுகிறாய். நீ அனைத்தையும் தாங்குபவனாக இருக்கிறாய். நான் உனது பக்தன். நீ என்னை முன்னிருந்தும் பின்னிருந்தும் காப்பாற்ற வேண்டும். நீ என்னை வடக்கில் இருந்தும், தெற்கில் இருந்தும் காப்பாற்ற வேண்டும். நீ என்னை எல்லா திசைகளில் இருந்தும் காப்பாற்ற வேண்டும்.

நீ உண்மை மற்றும் சைதன்ய உணர்வின் நிறைவான அறிவால் நிரம்பி இருகிறாய். நீ ஆனந்தம் மற்றும் சுத்த சைதன்யத்தால் நிரம்பி இருக்கிறாய். நீ சச்சிதானந்தமாக இருக்கிறாய். நீ கண்களுக்கு புலப்படும் பிரம்மமாக இருக்கிறாய். நீ ஞானம் மற்றும் விஞ்ஞானம் நிரம்பி இருக்கிறாய்.

நீ பூமி, நீர், அக்னி, காற்று மற்றும் பரவெளியாக இருக்கிறாய். நீ வாக்கின் ஆதாரமாக இருக்கிறாய். நீ *சத்வ, ரஜஸ், தமஸ்* என்று மூன்று குணங்களுக்கு அதீதமாக இருக்கிறாய். நீ தூல, சூட்சும மற்றும் காரண உடல்களுக்கு அதீதமாக இருக்கிறாய். நீ கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்று கலத்தின் மூன்று அம்சங்களை கடந்து இருக்கிறாய். நீ *மூலாதார* சக்கரத்தில் நிரந்தரமாக வாசம் செய்கிறாய். நீ செயல், அறிவு மற்றும் மன உறுதி என்று மூன்று சக்திகளை கொண்டிருக்கிறாய்.

ஓம் கம் என்ற பீஜ மந்திரத்தை உடைய கணபதிக்கு வந்தனம். ஒற்றை தந்தத்துடன், விசேஷமாக இருக்கும் ஏகதந்தனை நாம் அறிவோம். வளைந்த துதிக்கையை உடைய வக்ரதுண்ட கடவுளை நாம் தியானம் செய்வோம். விசேஷமான அந்த ஆணைமுகக் கடவுள் நமது உணர்வை ஒளிரூட்டி நம்மை சரியான பாதையில் அழைத்து செல்லட்டும்.

ஒற்றை தந்தத்துடனும் நான்கு கைகளுடனும், அவற்றில் இரண்டு கைகளில் பாசம் மற்றும் அங்குசத்தை ஏந்தியும், மற்ற கைகளில் ஒன்றில் வரங்கள் மற்றும் ஆசிகளை அளிக்கும் *வரத* முத்திரையுடனும், இன்னொன்றில் பயம் போக்கும் *அபய* முத்திரையுடனும், தனது கொடியில் ஒரு எலி சின்னத்துடனும், ஒரு அழகான பெரிய தொந்தியுடனும், முறம் போன்ற காதுகளுடனும், சிவப்பு நிற ஆடை அணிந்து, சிவப்பு நிற சந்தனம் பூசிய மேனியுடனும் இருக்கும் விநாயகரை நாம் தியானம் செய்து சிவப்பு நிற மலர்களால் அர்ச்சனை செய்வோம். அவர் தன்னை பிரபஞ்சமாக வெளிப்படுத்தி, *ப்ரக்ருதி* என்கிற பருப்பொருள் மற்றும்

வெளிப்பட்ட கடவுளான பரம புருஷனையும் கடந்து இருக்கிறார். இந்த முறையில் யார் விநாயகரை தினமும் வழிபடுகிறாரோ, அவர் யோகிகளில் சிறந்த யோகியாக கருதப்படுவார்.

மனிதர்களின் கடவுளான வ்ராதபதிக்கு நமசுகாரம். பல்வேறு தேவகணங்களின் கடவுளான கணபதிக்கு நமசுகாரம். சிவனுக்கு தொண்டு செய்யும் *ப்ரமத* என்ற அரக்கர்களின் கடவுளுக்கு நமசுகாரம். பல வரங்களை வழங்கி, பக்தர்களின் விக்கினங்களை அழித்து, ஒற்றை தந்தத்துடனும், பெரிய தொந்தியுடனும் சிவனின் மகனாக இருக்கும் லம்போதரனுக்கு நமசுகாரம்.

இந்த *கணபதி உபநிடதத்தை* பாராயணம் செய்பவன் பிரம்மத்தை அறிய தகுதி பெறுகிறான். அவன் தடைகளை என்றும் சந்திப்பது இல்லை. அவன் எங்கும் மகிழ்ச்சியுடன் இருப்பான். அவன் ஐந்து பெரிய பாபங்கள் மற்றும் சிறிய பாபங்களில் இருந்து விடுதலை பெறுகிறான். இதை மாலை நேரத்தில் பாராயணம் செய்வதன் மூலம், காலையில் செய்த பாவங்கள் அழிகின்றன.

இதை அதிகாலை நேரத்தில் பாராயணம் செய்யும் போது, இரவு நேரத்தில் கனவில் செய்த பாவங்களில் இருந்து ஒருவர் விடுதலை பெறுகிறார். இதை ஒருவர் காலை மற்றும் மாலை நேரத்தில் பாராயணம் செய்யும் போது, ஒருவர் அனைத்து பாவங்களில் இருந்தும் முழுமையாக விடுதலை பெற்று விடுகிறார். அவர் எல்லா தடைகளில் இருந்தும் முற்றிலும் விடுதலை பெறுகிறார். அவர் அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு என்பதை குறிக்கும் தர்ம, அர்த்த, காம மற்றும் மோட்சம் என்கிற நான்கு புருஷார்த்தங்களை அடைகிறார். ஓம் கணேஷா சரணம், சரணம் கணேஷா.



மஹா கணேஷ பஞ்சரத்ன ஸ்தோத்திரம்

महागणेशपञ्चरत्नस्तोत्रम् ।।

ஸ்ரீ ஆதி சங்கரர் இயற்றிய மகா கணேஷ பஞ்ச ரத்ன ஸ்தோத்திரம்

மொழிபெயர்ப்பு ஜே. சேதுராமன்

मुदाकरात्तमोदकं सदा विमुक्तिसाधकं
कलाधरावतंसकं विलासिलोकरक्षकम् ।
अनायकैकनायकं विनाशतेभदैत्यकं
नताशुभाशुनाशकं नमामि तं विनायकम् ॥१॥

முதா கராத மோதகம், சதா விமுக்தி சாதகம்
கலா தரா வதம் ஸகம், விளாஸி லோக ரக்ஷகம்|
அனாயகைக நாயகம், வினாஸி தேப தைத்யகம்
நதாஸுபாஸு நாஸகம், நமாமி தம் விநாயகம் ||1||

नमामि तं विनायकम् நான் தடைகள் நீக்குபவரை வணங்குகிறேன்,
मुदा करात्तमोदकम् அவர் மனம் மகிழ்ந்து, கையில் மோதகம் ஏந்தியிருக்கிறார்,
सदाविमुक्तिसाधकम् அவர் எப்போதும் மோட்சம் வழங்குபவராக இருக்கிறார்,
कलाधरावतंसकम् அவர் சந்திரபிறையை அணிந்து இருக்கிறார்,
विलासिलोकरक्षकम् அவர் தனது வெளிப்பாடுகள் மூலம் உலகங்கள் அனைத்தையும் காப்பவர்,
अनायकैकनायकम् அவர் ஆதரவு இல்லாதவர்களுக்கு தலைவராக இருக்கிறார்,
विनाशितेभदैत्यकम् அவர் யானை அரக்கனை கொன்றார் மற்றும்
नताशुभाशुनाशकम् அவர் தன்னை வணங்கியவரின் குறையை விரைவாக நீக்குகிறார்.

नतेतरातिभीकरं नवोदितार्कभास्वरं
नमत्सुरारिनिर्जरं नताधिकापदुद्धरम् ।
सुरेश्वरं निधीश्वरं गजेश्वरं गणेश्वरं
महेश्वरं तमाश्रये परात्परं निरन्तरम् ॥२॥

நதே தராதி பீகரம், நவோதி தார்க்க பாஸ்வரம்
நமத் ஸுராரி நிர்ஜரம், நதாதி காப துத்தரம் |
ஸுரேஸ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேஷ்வரம்
மகேஸ்வரம் தமாஸ்ரயே பராத்பரம் நிரந்தரம் ||2||

महेश्वरं तमाश्रये நான் விநாயகரிடம் சரணடைகிறேன்,
निरन्तरम् அவர் நிரந்தர
परात्परं பரம்பொருளாக இருக்கிறார்,
नतेतरातिभीकरम् அவர் தன்னை வணங்காதவரை அச்சுறுத்துகிறார்,
नवेदितार्कभास्वरं அவர் உதித்தெழும் சூரியனைப் போல பிரகாசமாக இருக்கிறார்,
नमत्सुरारिनिर्जरम् அவரை அசுரர்களும் தேவர்களும் வணங்குகிறார்கள்.
नताधिकापदुद्धरम् அவர் தன்னை வணங்கியவர்களை துயரத்தில் இருந்து காப்பாற்றுகிறார்,
सुरेश्वरम् அவர் தேவர்களின் தலைவனாக, निधीश्वरम् செல்வத்தின் தலைவனாக,
गजेश्वरम् ஆணைமுகக் கடவுளாக, गणेश्वरम् கணங்களின் தலைவரான கணேஷ்வரனாக இருக்கிறார்.

समस्तलोकशङ्करं निरस्तदैत्यकुञ्जरं
दरेतरोदरं वरं वरेभवक्त्रमक्षरम् ।

कृपाकरं क्षमाकरं मुदाकरं यशस्करं
मनस्करं नमस्कृतां नमस्करोमि भास्वरम् ॥३॥

ஸமஸ்த லோக சங்கரம், நிரஸ்த தைத்ய குஞ்சரம்
தரே தரோ தரம் வரம், வரேப வக்த்ரம் அக்ஷரம் |
க்ருபாகரம் க்ஷமாகரம், முதாகரம் யஸஸ்கரம்
மனஸ்கரம் நமஸ் க்ருதாம், நமஸ் கரோமி பாஸ்வரம் ||3||

नमस्करोमि भास्वरम् நான் பிரகாசமே உருவானவரை வணங்குகிறேன்
समस्तलोकशङ्करम् அவர் அனைத்து லோகங்களுக்கும் நன்மை செய்பவர்,
निरस्तदैत्यकुञ्जरं அவர் கஜாசுரனை வெற்றிக்கொண்டவர்,
दरेतरोदरम् அவர் பருத்த தொந்தியை உடையவர்,
वरम् அவர் வரங்களை வழங்கி
वरेभवक्त्रम् அழகிய ஆணைமுகத்துடன் இருக்கிறார்,
अक्षरम् அவர் அழிவில்லாமல், कृपाकरम् கருணையோடு, क्षमाकरं மன்னித்து,
मुदाकरम् மகிழ்ச்சி यशस्करम् புகழ்,
मनस्करं மற்றும் நல்ல மனதை
नमस्कृतां தன்னை வணங்குபவர்களுக்கு,
भास्वरम् அந்த பிரகாசமே உருவானவர் வழங்குகிறார்.

अकिञ्चनार्तिमार्जनं चिरन्तनोक्तिभाजनं
पुरारिपूर्वनन्दनं सुरारिगर्वचर्वणम् ।
प्रपञ्चनाशभीषणं धनञ्जयादिभूषणं
कपोलदानवारणं भजे पुराणवारणम् ॥४॥

அகிஞ்சனார்த்தி மார்ஜனம், சிரந்த நோக்தி பாஜனம்
புராரி பூர்வ நந்தனம், ஸுராரி கர்வ சர்வணம் |
ப்ரபஞ்சனாஸ பீக்ஷணம், தனஞ்சயாதி பூஷணம்
கபோலதான வாரணம், பஜே புராண வாரணம் ||4||

भजे पुराणवारणम् பழம்பெரும் ஆணைமுகக் கடவுளை நான் வணங்குகிறேன்
अकिञ्चनार्तिमार्जम् அவர் ஏழைகளின் துயர் துடைப்பவர்,
चिरन्तनोक्तिभाजनम् அவர் பழங்கால நூல்களில் போற்றப்படுபவர்,
पुरारिपूर्वनन्दनम् அவர் த்ரிபுரங்களை எரித்த சிவனின் மூத்த மகன்,
सुरारिगर्वचर्वणम् அவர் அரக்கர்களின் அகந்தையை அழித்தவர்,
प्रपञ्चनाशभीषणम् அவர் பிரபஞ்சத்தை அழிக்கும் சக்திகளை பிரயோகம் செய்பவர்,
धनञ्जयादिभूषणम् அவர் அக்னி மற்றும் மற்ற வஸ்துக்கள் மூலம் தன்னை அலங்கரித்து இருப்பவர்,
कपोलदानवारणम् அவரது ஆணைமுக கன்னங்களில் இருந்து மதஜலம் பெருகி வருகிறது (அது ஆண் யானைகளின் கன்னங்களில் இருந்து வெளிவருகிறது.)

नितान्तकान्तदन्तकान्तिमन्तकान्तकात्मजं
अचिन्त्यरूपमन्तहीनमन्तरायकृन्तनम् ।

हृदन्तरे निरन्तरं वसन्तमेव योगिनां
तमेकदन्तमेव तं विचिन्तयामि सन्ततम् ॥५॥

நிதாந்த காந்த தந்தகாந்திம், அந்தக்காந்த காத்மஜம்
அசிந்த்ய ரூபம் அந்த ஹீனம், அந்தராய க்ருந்தனம் |
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தம் ஏவ யோகினாம்
தமேக தந்தம் ஏவ தம், விசிந்தயாமி ஸந்தத்தம் ||5||

तमेकदन्तमेव तं विचिन्तयामि सन्ततम् நான் எப்பொழுதும் அந்த ஏகதந்தரை தியானம் செய்கிறேன்,
नितान्तकान्तदन्तकान्तिम् அவர் பிரகாசமான தந்தத்துடன் ஜொலிப்பவர்,
अन्तकान्तकात्मजम् அவர் யமனை அடக்கிய சிவனின் புதல்வர், अचिन्त्यरूपम् அவர் எண்ணுதற்கு அரிய வடிவம் உடையவர்,
अन्तहीनम् அவர் முடிவில்லாதவர், अन्तरायकृन्तनम् அவர் இடையூறுகளை தகர்ப்பவர், மற்றும்
हृदन्तरे निरन्तरं वसन्तमेव योगिनां அவர் நிரந்தர வசந்தகாலம் போல யோகிகளின் மனதில் குடிகொண்டு இருப்பவர்.

महागणेशपञ्चरत्नमादरेण योऽन्वहं
प्रजल्पति प्रभातके
हृदि स्मरन् गणेश्वरम् ।
अरोगतामदोषतां सुसाहितीं सुपुत्रतां
समाहितायुरष्टभूतिमभ्युपैति सोऽचिरात् ॥६॥

மஹாகணேஷ பஞ்சரத்னம் ஆதரேண யோன்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ரிதி ஸ்மரன் கணேஷ்வரம் |
அரோகதாம் அதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹித் ஆயூர் அஷ்ட பூதிம் அப்யுபைதி ஸோசிராத் ||6||

योऽन्वहम् प्रजल्पति இந்த महागणेशपञ्जरत्नस्तोत्रम् மஹா கணேஷ பஞ்சரத்ன ஸ்தோத்திரத்தை தினமும் आदरेण மரியாதையுடன், प्रभातके हृदि स्मरन् गणेश्वरम् காலையில் கணேஷ்வரனை இதயத்தில் நினைத்து பாராயணம் செய்பவருக்கு, सोऽचिरात् வெகுவிரைவில் अरोगतामदोषतां நோய் மற்றும் குறையில்லாத வாழ்வு மற்றும் ससाहितीं सुपुत्रतां समाहितायुरष्टभूतिम् நல்ல கல்வி, நல்ல மக்கள், நீண்ட ஆயுள் மற்றும் அஷ்ட ஐஸ்வரங்களும் கிடைக்கின்றன. (*அஷ்டாவிபூதி, அணிமா, மஹிமா, லகிமா, கரிமா* போன்றவை)

महागणेशपञ्चरत्नस्तोत्रं संपूर्णम् ॥

மகாகணேஷபஞ்சரத்னஸ்தோத்திரம் சம்பூர்ணம் ||

இத்துடன் *மஹா கணேஷ பஞ்சரத்ன ஸ்தோத்திரம்* நிறைவடைகிறது.

கணபதி வணக்கம்

गणेशमन्त्रम्

ஸ்ரீ கணபதி வணக்கம்

ரிக் வேதம் 2.23.1

ॐ गणानां त्वा गणपतिगं॒ हवामहे
कविं कवीनामुपमश्रवस्तमम् ।
ज्येष्ठराजं ब्रह्मणामं ब्रह्मणस्पत
आ नः शृण्वन्नूतिभिःसीदसादनम् ॥
ॐ महागणाधिपतये नमः ॥

கணானாம் த்வா கணபதிஹும் ஹவாமஹே
கவிம் கவீனா-முபமஸ்ர-வஸ்தமம் |
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத
ஆ ந: ஸ்ருண்வன்னூதிபி: ஸீத ஸாதனம் | |
ஓம் மஹாகணபதயே நம: | |

ஓம் கணநாயகனாக இருக்கும் கணபதியே, நாங்கள் உன்னை வரவேற்கிறோம்.
நீ அறிஞர்களுள் பேரறிஞனாக இருக்கிறாய், நீ நிகரில்லாத புகழுடன் இருக்கிறாய்.
நீ தலைசிறந்த தலைவனாக, பிரார்த்தனைகளின் தலைவனாக இருக்கிறாய்.
எங்கள் அழைப்பில் மனமகிழ்ந்து இங்கே பாங்காக அமர்ந்தருள வேண்டும்.

உணவு நேர மந்திரம்

भोजनमन्त्रम्

உணவுப் பொருளின் மூலத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரார்த்தனை.

1–4 வரிகள்: ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிய *அன்னபூர்ணாஷ்டகத்தில்* இருந்து ஒரு பகுதி.

5–6 வரிகள்: *ஈசா வாஸ்ய உபநிடதத்தின்* சாந்தி பாடம்.

7–8 வரிகள்: வழக்கமாக சைவத்தில் சடங்கின் முடிவில் சொல்லும் மந்திரம்.

ॐ अन्नपूर्णे सदापूर्णे शङ्करप्राणवल्लभे ।
ज्ञान वैराग्यं सिद्ध्यर्थं भिक्षां देहि च पार्वति ॥
माता च पार्वती देवी पिता देवो महेश्वरः ।
बान्धवाः शिवभक्ताश्च स्वदेशो भुवनत्रयम् ।।
ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।

पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ।।
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॐ शिवार्पणमस्तु ।।

ஓம் அன்னபூர்ணே சதாபூர்ணே சங்கர பிராண வல்லபே |
ஞான வைராக்கிய சித்யர்த்தம் பிக்ஷாம் தேஹி ச பார்வதி ||
மாதா ச பார்வதி தேவி பிதா தேவோ மகேஸ்வரஹ |
பாந்தவாஹ சிவபக்தாச்ச ஸ்வதேசோ புவனத்ரையம் ||
ஓம் பூர்ணமதஹ பூர்ணமிதம் பூர்ணாத்பூர்ணமுதயச்யதே |
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே ||
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: || ஓம் சிவார்பணமஸ்து ||

ஓம், அன்னம் சம்பூர்ணமாக இருக்கும் தாயே! எப்போதும் முழுமையாக நிறைந்த ஜகதம்பா! சங்கரனின் உயிருக்கு உயிரான பிரியமான தேவி! ஹே பார்வதி! ஞான வைராக்கியங்கள் பெறும்படியாக எங்களுக்கு பிச்சை அளிப்பாய், அம்மா! பார்வதி தேவி எனது தாய். மகேசுவரன் எனது தந்தை. சிவ பக்தர்கள் அனைவரும் எனது குடும்பம். மூன்று லோகங்களும் எனது வீடு. ஓம், சிவன் முழுமையாக இருக்கிறார். படைப்பு முழுமையாக இருக்கிறது. சிவனின் முழுமையில் இருந்து இந்த உலகின் முழுமை தோன்றுகிறது. இந்த முழுமை அந்த சிவனின் முழுமையில் இருந்து தோன்றினாலும், அந்த சிவனின் முழுமை நிறைவாகவே இருக்கிறது. ஓம், சாந்தி, சாந்தி, சாந்தி. ஓம். நான் இதை சிவபெருமானுக்கு சமர்ப்பிக்கிறேன்.

சாந்தி மந்திரம்

அமைதி, தெளிவு மற்றும் அருளை வேண்டும் இந்த பிரார்த்தனை சத்சங்கத்தின் தொடக்கம் மற்றும் முடிவில் இடம்பெறுகிறது. இது பெரிய நதிகள் அல்லது தலைசிறந்த மனங்கள் சுயநலமின்றி மெய்ஞ்ஞான விவேகத்துடன் ஒன்றாக இயங்கும் சங்கமத்தை அடிப்படையாகக் கொண்டது.

ॐ सह नाववतु ।
सह नौ भुनक्तु ।
सह वीर्यं करवावहै ।
तेजस्विनावधीतमस्तु ।
मा विद्विषावहै ।
ॐ शान्तिः शान्तिः शान्तिः ।।

ஓம் சஹ நாவவது |
சஹ நௌ புநக்து |
சஹ வீர்யம் கரவாவஹை |
தேஜஸ்விநாவதீதமஸ்து |

மா வித்விஷாவஹை |
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: | |

ஓம், கடவுள் நம் இருவரையும் காப்பாற்றட்டும். (ஆசிரியர் மற்றும் மாணவர்)
கடவுள் நம் இருவருக்கும் கல்வியின் பலனை வழங்கி காப்பாற்றட்டும்.
நாம் இருவரும் சுறுசுறுப்பு மற்றும் சக்தியுடன் ஒன்றாக கற்றுக் கொள்வோம்.
நம் கல்வி எந்தவித விரோதத்திற்கும் துணைபோகாமல்
அறிவு புகட்டுவதாக அமையட்டும். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

தூபத்தை காண்பிக்க சொல்லும் மந்திரம்


धूपमन्त्रम्


दशाङ्गं गुग्गुलोपेतं सुगन्धं सुमनोहरम्
आघ्रेयः सर्वदेवानां धूपोऽयं प्रतिगृह्यताम्

தசாங்கம் குக்குலோபேதம் சுகந்தம் சுமனோகரம்
ஆக்ரேயஹ சர்வதேவானாம் தூபோயம் ப்ரதிக்ருஹ்யதாம்

நான் உங்களுக்கு தசாங்கம் மற்றும் குக்குலு கலந்த தூபத்தை காண்பிக்கிறேன். மனதை கவரும் நறுமணங்கள் கூடியதாக இருக்கும் அந்த தூபத்தின் நறுமணத்தை நீங்களும் மகாதேவர்களும் நுகர்ந்து, அதை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.




CHAPTER TWELVE
Ganesha
Worship
Toad Egg Gautier



விநாயகர் வழிபாடு

கணேச உபாசனா


गणेशोपासना



வீட்டில் பாரம்பரிய பூஜை மூலம் விநாயகரை வழிபடும் இந்து குடும்பங்களுக்கு அன்பும் மகிழ்ச்சியும் இயல்பாகிறது. அத்தகைய புனித சடங்குகள் மற்றும் தெய்வீக சக்திகளின் ஆவகானம் மூலம், ஒவ்வொரு குடும்பமும் தங்கள் வீட்டை லௌகீக பிரச்சனைகள் மற்றும் கவலைகளில் இருந்து விலகி அடைக்கலம் புகும் சரணாலயமாக விளங்குகிறது. பூஜை என்பது ஒரு விளக்கை ஏற்றி கடவுளின் திருவடிகளில் ஒரு மலரை வைப்பது போன்று எளிமையாகவும் இருக்கலாம் அல்லது அவை பல சுலோகங்கள் மற்றும் உபசாரங்களுடன் விரிவாகவும் இருக்கலாம். ஒரு பூஜையில் மிகவும் முக்கியமாக பக்தி இருக்கவேண்டும். இதயத்தில் அன்பு இல்லாத போது, புற வழிபாட்டிற்கு மதிப்பு இருக்காது. ஆனால் உண்மையான பக்தியுடன் சாதாரண முத்திரைகளும் புனிதமான சடங்காக கருதப்படும். நமது அன்பான விநாயகரை ஆவாகனம் செய்ய விரும்புபவருக்கு, இந்த அத்தியாயத்தில் ஒரு எளிமையான பூஜையை நாங்கள் வழங்கியுள்ளோம். இந்த பூஜை சமஸ்கிருதம் மாற்றும் ஆங்கில மொழிகளில் (இந்த புத்தகத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு) வழங்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழியில் வழங்கப்பட்டுள்ள பூஜை முறையை உங்களுக்கு தெரிந்த மொழியில் சுலபமாக மொழிபெயர்த்துக்கொள்ளலாம். குடும்பத்தினர் அனைவரும் சடங்குகளின் கருத்தை புரிந்துகொள்ள வேண்டும். விநாயகர் பூஜை செய்வதற்கு சமஸ்கிருத மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது. அவர் எல்லா கிளைமொழிகளையும் அறிந்து இருக்கிறார். நமது அன்பான விநாயகரை ஆவாகனம் செய்யும் இந்த பூஜையை செய்வதற்கு தீட்சை பெறவேண்டிய அவசியம் இல்லை. இந்து ஒழுங்குநெறி மற்றும் தத்துவ கோட்பாட்டின் அடிப்படையாக இருக்கும் கர்மவினை விதிகள் மற்றும் மறுபிறவியில், அந்த பூஜை செய்யும் பக்தனுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். முழுமுதல் கடவுளாக விநாயகர் இருப்பதால், அவர் வழிபாட்டில் இந்துக்கள் மற்றும் இந்து சமயம் அல்லாதவர்களும் மகிழ்ச்சியுடன் பங்குபெறுகின்றனர். *அர்த்த* இந்து அல்லது அரை மனதோடு இருக்கும் இந்து தன்னை பாரம்பரிய *சம்ஸ்காரங்கள்* மூலம் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் வரை, அவர்கள் சிவபெருமான் அல்லது முருகன் அல்லது மற்ற மகாதேவர்களை வழிபடுவதில் விவேகம் இல்லை. தினமும் வீட்டில் வழக்கமாக அதிகாலையில் நடக்கும் பூஜையை, குறைந்த பட்சம் ஒரு முறை செய்யவேண்டும். பூஜைக்கு மூன்று மணிநேரம் முன்பாக உணவு அருந்தும் வழக்கம் இல்லை என்பதால், பொதுவாக உணவு நேரத்திற்கு முன்பாக பூஜை நடைபெறுகிறது.

வீட்டு பூஜை அறையின் புனிதத்தன்மை

இந்துக்கள் அனைவரும் தங்கள் வீட்டிற்கு அருகில் இருக்கும் கோயிலுக்கு வாரம் ஒரு முறை செல்கிறார்கள் மற்றும் வீட்டில் ஒரு சிறிய பூஜை அறையை வைத்து இருக்கிறார்கள். அந்த பூஜை அறை, மறைஞானரீதியாக அருகில் இருக்கும் கோயிலின் விரிவாக்கமாக செயல்படுகிறது. அந்த பூஜை மாடத்தின் மீது தீவிர கவனம் செலுத்தப்படுகிறது மற்றும் அந்த இடம் வழிபாடு, பிரார்த்தனை, சாத்திரம் படித்தல் மற்றும் தியானம் தவிர மற்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவது இல்லை. இங்கே தினமும் பூஜை, வீட்டினர் வழிபாடு நடைபெறுகிறது மற்றும் பொதுவாக குடும்பத் தலைவர் பூஜை செய்து வைக்கிறார். அதில் குடும்பத்தினர் அனைவரும் பங்குபெறுகின்றனர்.



வீட்டில் ஒரு பூஜை அறையை நிர்மாணம் செய்தல்

வீட்டில் ஒரு பூஜை அறையை எளிதில் நிர்மாணம் செய்து விடலாம். பூஜை பெரும்பாலும் தரையில் அமர்ந்து செய்யப்படுவதால், பீடம் தரைமட்டத்தை ஒட்டி அமைந்து இருக்கும். ஆனால் சிறுவர்கள் இருக்கும் வீடுகளில், அது அவர்கள் கைகளுக்கு எட்டாமல், சற்று உயரமாக இருக்க வாய்ப்புள்ளது. ஒரு விநாயகர் பூஜை அறையில், அவரது *மூர்த்தி* பீடத்தின் மையத்தில் வைக்கப்படுகிறது.

இதற்கு ஒரு உலோக சிலை அல்லது கற்சிலை சிறப்பாக இருக்கும் என்றாலும், அது இல்லாத போது வழக்கமாக இரண்டு மாற்று வழிகள் பயன்படுத்தப்படுகின்றன. 1) பின்னால் செம்புத்தகடு வைக்கப்பட்ட திருஉருவப்படம் அல்லது 2) ஒரு பித்தளை கலசத்தில் தேங்காயை வைத்து, அந்த தேங்காய் மற்றும் கலசத்திற்கு மத்தியில் ஐந்து மாவிலைகள் வைக்கப்படுகின்றன. இது விநாயகரின் சின்னமான *கும்பத்தை* குறிப்பிடுகிறது. அந்த தேங்காயில் மேற்புறத்தில் இருக்கும் நாரை மட்டும் மீதம் வைத்து மற்றவை முழுமையாக நீக்கப்படுகின்றன. (ப. 234 யில் விளக்கப்படத்தை பார்க்கவும்). பூஜையின் அங்கமாக விநாயகரின் *மூர்த்தி* நீரால் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதற்காக சில விஷேச ஏற்பாடுகள் செய்யவேண்டி இருக்கும். இதற்கு மிகவும் எளிமையாக, நீர் சேகரிக்கும் ஆழமான தட்டில் அந்த *மூர்த்தியை* வைக்கலாம். அபிஷேகம் முடிந்த பிறகு, அந்த *மூர்த்தியை* உலர்த்தி, வஸ்திரம் அணிவித்து அலங்காரம் செய்யப்படுகிறது. அதிக விஸ்தாரமாக செய்யும் போது, பூஜை மாடத்திற்கு அருகில் ஒரு பாத்திரத்தை வைத்து, அதில் நீரை சேகரிக்க ஒரு வடிகாலை அமைத்துக் கொள்ளலாம். *பூஜாரி* பின்னர் இந்த அபிஷேக தீர்த்தத்தை, உத்தரணி மூலம் ஒவ்வொரு பக்தரின் வலது உள்ளங்கையிலும் சிறிதளவு வழங்குகிறார்.

பூஜைக்கு தேவையான பொருட்கள்

பூஜை அறைக்கு தேவையான பொருட்கள் ஒரு பெரிய உலோக தட்டில் வைக்கப்படுகின்றன. அதன் மீது நெய் விளக்குகள், பூஜை மணிகள், கிண்ணங்கள், உத்தரணிகள் மற்றும் பல்வேறு சடங்குகளுக்கு தேவையான சிறிய கலசங்கள் அடுக்கப்படுகின்றன. இந்த பூஜை பொருட்கள் இந்திய கடைகளில் கிடைக்கின்றன. இவற்றை பூஜை செய்வதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். முக்கிய பொருட்களின் பட்டியல் பின்வருமாறு:

1. இரண்டு பஞ்ச பாத்திரங்கள் மற்றும் நீர் வழங்குவதற்கு ஒரு உத்தரணி;
2. ஒரு சிறிய பாத்திரத்தில் மஞ்சத்தூள் மற்றும் முனை முறியாத அரிசியில் தயார் செய்த அட்சதை;
3. ஒரு தட்டு அல்லது கூடை நிறைய புத்தம் புதிய பூக்கள் (காம்பு நீக்கப்பட்ட);
4. ஒரு குத்துவிளக்கு அல்லது *தீபஸ்தம்பம்*. இது பூஜை நடைபெறும் போது எரிய வேண்டும். (நாள் முழுவதும் எரிவது சிறந்தது) .
5. தெய்வத்திற்கு காண்பிக்க ஒரு *தீபம்* (திரியுடன் ஒரு விளக்கு).
6. ஒரு சிறிய உலோக மணி, *கண்ட;*
7. ஊதுபத்தி ஸ்டேண்ட் மற்றும் ஒரு அட்டைப்பெட்டி நிறைய ஊதுபத்திகள்;
8. ஒரு விபூதி டப்பா;
9. ஒரு சிறிய கிண்ணத்தில் சந்தனம்;
10. ஒரு சிறிய கிண்ணத்தில் குங்குமம்;

11. தெய்வத்திற்கு நெய்வேத்தியம் செய்ய ஒரு தட்டில் சுத்தமான பழங்கள் மற்றும் சுத்தமான உணவு (பெரும்பாலும் சாதம்);
12. தெய்வத்திற்கு ஆரத்தி எடுக்க ஒரு *கற்பூரத்* தட்டு.
13. மூர்த்தியை அபிஷேகம் செய்ய சிறிய கெண்டி, மூர்த்திக்கு சில அழகான வஸ்திரங்கள், மாலைகள், அறையை அலங்கரிக்க சில கூடுதல் விளக்குகள் மற்றும் ஒரு ஆடியோ பிளேயர் போன்றவையும் தேவைப்படும்.

பூஜை அறையில் நுழைய சில கட்டுபாடுகள்

பூஜை அறையில் நுழைவதற்கு முன்பாக எல்லோரும் சம்பிரதாய முறைப்படி குளித்துவிட்டு, சுத்தமான ஆடைகளை அணிந்து, (குளிப்பதற்கு முன்பு எடுத்து வைத்த) சில பூக்கள் அல்லது பழத்தை கொண்டு வருகிறார்கள். பெண்கள் தங்கள் மாதவிலக்கு நாட்களில் வழக்கமாக பூஜையில் பங்குபெறுவது, பூஜை அறை அல்லது கோயிலுக்குள் நுழைவது அல்லது சுவாமிகள் அல்லது மற்ற தெய்வீக புருஷர்களுக்கு அருகில் செல்வதை தவிர்ப்பார்கள். அத்துடன் பெண்கள் இந்த தீட்டு நாட்களில் பூஜைக்கு முன்பாக பூக்களை பறித்தல் அல்லது தெய்வத்திற்கு பிரசாதம் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளில் உதவி செய்வது இல்லை. பெண்கள் இந்த நாட்களில் தனிமையில் ஓய்வெடுத்துக்கொண்டு ஹட யோகம், ஜபம், *பிராணாயாமம்*, தியானம் செய்வது மற்றும் புனித நூல்களை படிப்பதைப் போன்று தங்களது தனிப்பட்ட சாதனைகளை செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த கட்டுப்பாடு உடலில் காயம் ஏற்பட்டு, அது குணமடைந்து வரும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கும் விதிக்கப்படுகிறது. ஆனால் உடலில் சிறிய கீறல்கள் இருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. இரத்தம் கசியும் வெட்டுக்காயங்கள் மற்றும் பெரிய காயங்கள், இரத்த உட்கசிவுகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவை *பிராண* ஒளிஉடலில் உருவாக்கும் துவாரங்கள் வழியாக பக்தருக்குள் ஊடுருவி அல்லது அவரது சக்தியை உரிந்து, அந்த சக்தி மூலமாக சேதத்தை ஏற்படுத்தும் கீழ்நிலை சூட்சும நரகலோகவாசிகளின் ஊடுருவலுக்கு துணை போகிறது. இந்த கட்டுப்பாடு இரத்த கசிவு நின்று மேலும் தொற்று பரவும் அபாயம் தணியும் வரை நீடிக்கிறது. இந்த நிலைக்கு ஒரு சிறிய வெட்டுக்காயம் அல்லது கீறல் வருவதற்கு சில மணிநேரங்கள் தேவைப்படும். இந்த நிலைக்கு ஒரு ஆழமான காயம் வருவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் தேவைப்படும். ஒரு தீவிரமான காயம் குணமடைய பத்து அல்லது கூடுதலாக சில நாட்கள் தேவைப்படலாம். இதய அறுவை சிகிச்சை, சிசேரியன் அல்லது அப்பெண்டிசைடிஸ் போன்ற பெரிய சிகிச்சைகளுக்கு பிறகு அந்த நபர் முழுமையாக குணமடைய பல வாரங்கள் அல்லது சில மாதங்கள் தேவைப்படலாம். உங்கள் சார்பாக உங்களுக்கு பிரியமானவர்கள் கோயிலுக்கு செல்லலாம் என்றாலும், இதைப்போன்ற காயங்களுடன் நீங்கள் இந்து கோயிலுக்கு போகக்கூடாது என்பதையே இந்த கட்டுப்பாடு குறிப்பிடுகிறது.

நான் 1948 மற்றும் 1949 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த போது, ஆச்சாரமான சைவ இந்துக்கள் வீடுகளில் தங்கி இருந்தேன். அந்த குடும்பத்து பெண்கள் மாதத்திற்கு மூன்று அல்லது நான்கு அல்லது மேலும் சில நாட்கள், தங்கள் வீட்டு வளாகத்தில் ஒதுக்குபுறமாக இருந்த ஒலைக்குடிசை வீட்டில் தங்கள் மாதவிலக்கு முடியும்வரை தங்கி இருப்பார்கள். இந்த வழக்கம் எனக்கு வியப்பூட்டுவதாக இருந்தது. இந்த நாட்களில், அவர்கள் குடும்பத்திற்கு சமைக்கவோ அல்லது தங்களது வழக்கமான கடமைகளையோ செய்யமாட்டார்கள். அவர்கள் முழுமையான தனிமையில் இருப்பார்கள். அந்த நாட்களில் அவர்கள் தாம்பத்திய உறவுகளில் ஈடுபடுவது இல்லை. அவர்கள் மீண்டும் குடும்ப இல்லத்தில் நுழையும் முன்பாக, இரத்தக் கரை படிந்த ஆடைகள் மற்றும் துணிகளை எரித்துவிட்டுவார்கள். பெண்கள் குளித்து, புதிய ஆடைகளை அணிந்த பிறகே தங்கள் குடும்ப வீடு, பூஜை அறைக்கு வந்து தங்கள் இயல்பான நடவடிக்கைகளை தொடர்வார்கள். இவை அனைத்தும் என் மனதில் ஒரு வலுவான *சம்ஸ்காரத்தை* ஏற்படுத்தியது. இந்த வழக்கத்தை ஹவாய் மக்கள் மற்றும் மற்ற பழங்குடியினர் பின்பற்றினார்கள். இந்த வழக்கம் *அசுர* தாக்குதலில் இருந்து கோயிலை காப்பாற்றுகிறது.

விவரம் அறிந்த இந்துக்கள் அனைவரும் இன்னொரு முக்கிய தீட்டையும் கடைப்பிடிக்கிறார்கள். நான் இதை *லிவிங் வித் சிவா* புத்தகத்தின் 269 ஆவது சூத்திரத்தில் குறிப்பிட்டு இருக்கிறேன். “சிவ பக்தர்களின் குடும்பத்தில் ஒரு பிறப்பு அல்லது இறப்பு நடைபெறும் போது, அவர்கள் முப்பத்தி ஓரு நாட்கள் தீட்டு கடைப்பிடிக்க வேண்டும். அவர்கள் அந்த காலத்தில் கோயில்கள் அல்லது பூஜை அறைகளில் நுழையக்கூடாது மற்றும் அவர்கள் வழிபாட்டு சடங்குகள் செய்வது அல்லது மங்களகரமான நிகழ்வுகளில் பங்குபெறுவது கூடாது.” இந்த காலத்தில் ஜபம் மற்றும் தனிப்பட்ட சாதனைகளை தொடர வேண்டும். யாரெல்லாம் குடும்ப உறுப்பினர் என்பதை அந்த குடும்பம் தான் முடிவு செய்யவேண்டும்.

விநாயகருக்கு வழங்கும் விசேஷமான நெய்வேத்தியங்கள்

பண்டிகைகள் மற்றும் விசேஷமான புஜைகளின் போது நெய்வேத்திய தட்டு, பீடம் மற்றும் பூஜை அறையை கரும்புகள், மஞ்சள் செடிகள், தேங்காய்கள் மற்றும் வாழை இலைகள் அல்லது வாழை மரங்கள் மூலமாகவும் அலங்கரிப்பது வழக்கமாக இருக்கிறது. குறிப்பாக வாழைப்பழங்கள், மாம்பழங்கள், எழும்பிச்சை பழங்கள், மாதுளைப்பழங்கள் மற்றும் பலாப்பழங்கள் உட்பட அனைத்து வகைப் பழங்களையும் நெய்வேத்தியத்திற்கு வைக்கலாம். காட்டை தனது வீடாக யானை கொண்டிருப்பதால், விநாயகர் பண்டிகை நாட்களில் ஆனைமுகக்கடவுளின் கோயில் அல்லது பூஜை அறையை ஒரு சிறிய காடு போன்று அலங்கரிக்கப்படுகிறது. ஆனால் விநாயகருக்கு மோதகம் மற்றும் மற்ற இனிப்பு வகைகள் மிகவும் பிடித்தமானவை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

விநாயகருக்கு வழக்கமாக பூக்களால் வழங்கப்படும் அர்ச்சனை பற்றி திரு ம. அருணாச்சலம் வழங்கிய சில நுணுக்கங்கள் இங்கே வழங்கப்பட்டுள்ளன. “பூக்களால் வழங்கப்படும் அர்ச்சனையில் இரண்டு பொருட்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. அதில் முதலாவதாக வருவது *அருகம்புல்*. (இறைவனின் நாமங்களை சொல்லிக்கொண்டு) அர்ச்சனை செய்வதற்கு அருகம்புல்லின் நுனிகள், போதுமான அளவில் சேகரித்துக் கொள்ளப்படுகின்றன. வழக்கமாக நாம் பார்க்கும் *அருகு* என்கிற புல்விதை, அதிக அளவில் பூங்காக்களில் பயிரிடப்படுகிறது. இது வழக்கமான *ஹரியாலி* புல்வகை (சமஸ்கிருதத்தில் *துர்வா* என்றும் *சைனோடான் டாக்டைலான்* என்பது தாவரவியல் பெயராகவும் இருக்கிறது) ஆகும். இது வழக்கமாக மூன்று நுனிகள் அல்லது ஐந்து நுனிகளுடன் சேகரிக்கப்படுகிறது. சிலசமயங்களில் இது ஒரு மாலையாக விநாயகர் தோலில் அணிவிக்கப்படுகிறது. இரண்டாவதாக எருக்கம்பூ (*கலோட்ரோபிஸ்*) பயன்படுத்தப்படுகிறது. *எருக்கம்* பூக்கள் ஒன்றாக கோர்த்து, விநாயகரின் கிரீடம் மற்றும் கழுத்தில் அணிவிக்கப்படுகிறது” (*பெஸ்டிவல்ஸ் ஆஃப் தமிழ்நாடு*, ப. 117).

பூஜைக்கான அறிவுறுத்தல்கள்


பூஜை செய்வதற்கு பூக்களை பறிப்பது, பீடம் மற்றும் பூஜை தட்டை சுத்தம் செய்வது மற்றும் எண்ணெய் விளக்குகள் மற்றும் பழங்கள் மற்றும் சமைத்த உணவு நெய்வேத்தியங்களை தயார் செய்வதைப் போன்ற முன்னேற்பாடு நடவடிக்கைகள் மிகவும் முக்கியம் ஆகும். இந்த பணிகளை செய்யும் போது நமது அன்பான விநாயகரின் 108 அல்லது 1008 திருநாமங்களை பாராயணம் செய்வது அல்லது மெதுவாக பக்திப் பாடல்களைப் பாடுவது பொதுவான வழக்கம் ஆகும். இது பக்தர்களின மனதை அமைதிப்படுத்தி, அவர்களின் சாட்சியை அவருக்கு நெருக்கமாக அழைத்து செல்கிறது. இவை அனைத்தும் வழிபாட்டின் அங்கமாக விளங்குகின்றன.

பூஜைக்கு தேவையான பொருள் இல்லை என்று பூஜை தொடங்கிய பின் தெரியவந்தால், அது பூஜையின் வேகத்தை பாதிக்கும் என்பதால், தொடக்கத்தில் பீடத்தில் தேவையான பொருட்கள் இருக்கிறதா என்று சோதித்துக் கொள்ளவேண்டும். நீங்கள் ஒரு *பூஜாரி*, மகாதேவர்களின் தொண்டன், ஆன்மீக சக்திகள் பாய்ந்து செல்லும் ஒரு பாதை என்ற மனநிலையுடன் இருங்கள். நீங்கள் பூஜை செய்யும் போது உங்கள் மனதில் நிறைந்து இருக்கும் இறைவன் பற்றிய சிந்தனைகள், தெய்வீக அருள் பெருகெடுத்து வருவதற்கு வழிவகுக்கிறது.

தேவைப்படும் போது சுலபமாக எடுக்க வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு பூஜைக்கும் அனைத்து பொருட்களும் ஒரே மாதிரியாக அடுக்கி வைக்கவேண்டும். குறிப்பாக அதிகம் பயன்படும் பொருளை அருகில் வைத்துக்கொள்ள வேண்டும். கோபம், உணர்ச்சிப்பூர்வமான வேதனை அல்லது அழுதுகொண்டு இருக்கும் போது அல்லது அதற்கு பிறகு பூஜை எப்போதும் செய்யக்கூடாது என்று பாரம்பரியம் நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது. ஆனால்

பூஜையில் பங்குபெறுவதில் எந்த தவறும் இல்லை. பூஜை என்பது இந்த லோகம் மற்றும் அந்தர்லோகங்களுக்கு மத்தியில் இருக்கும் ஒரு தொடர்பு அல்லது யோகமாக விளங்குகிறது. அதனால் இந்த தொடர்பை உருவாக்கிக்கொள்வதற்கு துணையாக, நீங்கள் நல்ல மனநிலை மற்றும் உணர்ச்சிகளுடன் இருக்கவேண்டும். நீங்கள் பூஜை செய்வதற்கு முன்பாக, சுத்தமான ஆடைகளை உடுத்தி, தினசரி கவலைகளில் கவனத்தை சிதற விடாமல் இருக்கவேண்டும். குளித்து விட்டு பூஜை அறையில் நுழைந்ததும் முதலில் நமசுகாரம் செய்யுங்கள். இது மட்டுமே பூஜை முடியும் வரை நீங்கள் செய்யும் நமசுகாரமாக இருக்கும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் நமசுகாரம் செய்யும் முறை மாறுபடுகிறது. ஆண்கள் *அஷ்டாங்க பிரணாமம்* அல்லது "எட்டு அங்க வந்தனம்" செய்கிறார்கள். இந்த வகை நமசுகாரத்தை கைகள், நெஞ்சு, நெற்றி, கால்கள் மற்றும் பாதங்கள் ஆகிய எட்டு உடற்பாகங்கள் தரையில் படும்படியாக படுத்துக்கொண்டு செய்யவேண்டும். பெண்கள் "ஐந்து அங்க வந்தனம்" என்கிற *பஞ்சாங்க பிரணாமம்* செய்கிறார்கள். மண்டியிட்டு செய்யும் இந்த நமசுகாரத்தில் பெண்களின் கைகள், தலை மற்றும் கால்கள் தரையில் படவேண்டும் (மற்றும் இடது கணுக்கால் மீது வலது கணுக்கால் குறுக்காக இருக்கவேண்டும்). *பிரணிபாத* என்ற சொல்லும் நமசுகாரத்தை குறிக்கிறது. "கீழே விழுந்து வணங்குதல்" என்பது இதன் பொருள் ஆகும். (கீழிருக்கும் விளக்கப்படத்தை பார்க்கவும்.)



பூஜை செய்முறைகள்

எல்லாம் தயார்நிலையில் இருக்கும் போது, பீடத்திற்கு அருகில் இடது புறமாக, தெய்வத்தை பார்த்தவண்ணம் சிறிது வலது புறமாக திரும்பி சம்மணம் போட்டு அமரவேண்டும். கண்களை மூடி சிறிது நேரம் அமைதியாக அமர்ந்து இருந்து, அன்பான விநாயகர் மற்றும் நீங்கள் செய்யவிருக்கும் புனிதமான பூஜை மீது உங்கள் நரம்பு மண்டலத்தை முழுமையாக ஈடுத்துப்படுத்திக் கொள்ளுங்கள். மற்றவர்கள் அந்த பூஜையில் பங்குபெற்றால், மற்றவர்களுக்கு பீடம் மறைக்கும் வகையில் தெய்வத்திற்கு நேர் முன்பாக அமர வேண்டாம். சில பூஜை அறைகளில் ஆரத்தி எடுக்கும் போது அல்லது பூஜை முழுவதும் நின்று இருப்பது வசதியாக இருந்தாலும், பொதுவாக ஒருவர் அந்த சடங்கு முடியும் வரை அமர்ந்து தான் இருக்கவேண்டும். குழந்தைகள் இருக்கும் வீட்டில், பூஜை அறையில் இருக்கும் பொருட்கள் சீர்குலையாமல் இருக்க, அந்த அறையை பூட்டி வைக்கவேண்டும். ஒரு பூட்டிய அறை இல்லை என்றால், பீடத்தை அவர்களின் கைகளுக்கு எட்டாத வகையில் சிறிது உயர்வாக வைத்து, பூஜையை நின்றுக்கொண்டு செய்யவேண்டும். பூஜையில் பங்குபெறுபவர்கள் பெரும்பாலும் அமர்ந்து இருந்து, முக்கிய *ஆரத்தியின்* போது நிற்க வேண்டியிருக்கும். ஆனால் பூஜை அறையில் இருக்கும் பீடத்தின் உயரத்தை பொருத்து ஆரத்தியின் போது நிற்கவேண்டுமா என்பதை முடிவு செய்துக் கொள்ளலாம்.

நீங்கள் சடங்கு முழுவதும், இறைவனுக்கு பல உபசாரங்களை வழங்கிக்கொண்டு இருப்பீர்கள். அவை அனைத்தையும் வலது கைமூலமாக மட்டுமே வழங்கப்பட வேண்டும். சில சமயங்களில் இரண்டு கைகளையும் பயன்படுத்த வேண்டியிருக்கும் மற்றும் சில சமயங்களில் வலது கைக்கு பக்கபலமாக இடது கையை பயன்படுத்த வேண்டியிருக்கும். பூஜை முழுவதும் முறையாக செய்யும் போது, அது பக்தியுடன் நெய்வேத்தியம் வழங்கிய ஒரு அழகான வெளிப்பாடாக இருக்கும்.

உணவை நெய்வேத்தியம் செய்தல்

உணவை நெய்வேத்தியமாக வழங்குவது பூஜையில் ஒரு முக்கிய அம்சம் ஆகும். வழக்கமாக தெய்வத்திற்கு என்றே பிரத்யேகமாக ஒதுக்கப்பட்ட சமையல் பாத்திரங்களில் சாதம் மட்டும் சமைக்கப்படுகிறது. நெய்வேத்திற்கு சாதம் வழங்க முடியவில்லை என்றால், அதற்கு பதிலாக நறுக்கிய சுத்தமான பழங்களை வழங்கலாம். பூஜையில் உணவின் *பிராண* சக்திகளை இறைவனுக்கு வழங்கும் வரை, அவற்றை மூடி வைக்க வேண்டும். உணவை மூடி வைப்பதன் மூலம், அதன் சுத்தம் மற்றும் *பிராண* சக்திகளை பாதுகாக்க முடிகிறது. இவற்றை காணும் மகாதேவர்களும் தேவர்களும், அவற்றை கிரகித்து மகிழ்ச்சி அடைந்து, பக்தர்களின் ஒளிஉடல்களை ஆய்வு செய்து அவற்றை சுத்தம் செய்கிறார்கள். பூஜை முடிந்த பிறகு விபூதி, *தீர்த்தம்*, சந்தனம், குங்குமம் மற்றும்

பூக்களுடன் உணவு நெய்வேத்தியங்களும் இறைவனின் *பிரசாதகமாக* கருதப்பட்டு மற்றவர்களுடன் பகிரப்படுகிறது.

பூஜைக்கு முன்பாக வேத மந்திரங்களின் பதிவு ஒலிநாடாவில் ஒலிக்கிறது. குறிப்பாக ஆரத்தி எடுக்கும் போது, மத்தளங்கள் மற்றும் நாதஸ்வரங்களின் ஒலி விண்ணை பிளக்கிறது. *பூஜாரி பிரசாதங்களை* வழங்கும் போது, வீணையில் இசைக்கப்பட்ட மென்மையான தெய்வீக ராகங்கள் பின்னணியில் கேட்டுக்கொண்டு இருக்க, எல்லோரும் அமைதியான தியானம் மற்றும் அக வழிபாட்டில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

பூஜைக்கு பின்பு தியானம் செய்தல்

பிரசாதங்கள் வழங்கப்பட்ட பிறகு, மூன்று முறை ஓம் என்று சொல்லி அமைதியாக அமர்ந்து, தங்களுக்குள் இருக்கும் இறைவனை வழிபடுமாறு வந்திருக்கும் அனைவரிடமும் கேட்டுக்கொள்ளுங்கள். பூஜையில் வரவழைக்கப்பட்ட *பிராண* சக்திகள் அனைத்தும் பக்தர்களுக்குள் செல்ல வேண்டும் என்பதற்காக, சித்தாந்த பாரம்பரியத்தில், புற வழிபாட்டிற்கு பிறகு அக வழிபாடு தொடர்கிறது. இந்த அக வழிபாடு, வெளிப்புற மனதை அமைதிப்படுத்தி, கவனச் சிதறல் இல்லாமல் சாட்சி தன் மீது கவனம் செலுத்தும் தியான நிலைக்கு கொண்டு வரும் ஜப யோகம் மூலம் நிறைவேற்றப்படுகிறது. மனதில் பலமுறை ஓங்காரத்தை ஜபித்துவிட்டு, சிறிது நேரம் தியானம் மற்றும் தன் உளஆய்வு செய்யும் இந்த எளிய பயிற்சியின் மூலமாக மட்டுமே, நாம் எல்லோரும் ஓர் உலகம், ஓர் குடும்பம் என்பதை உணர்ந்து, வலுப்படுத்தபட்ட மனஉறுதி மற்றும் உறுதியான நம்பிக்கை மற்றும் அன்பு நிறைந்த இதயத்துடன் பக்தர்களால் வெளியுலகை எதிர்கொள்ள முடிகிறது.

விநாயகர் *மூலாதார* சக்கரத்திலும், முருகன் *மணிப்பூரக* சக்கரத்திலும், சிவபெருமான் *சஹஸ்ரஹார* சக்கரத்திலும் அமர்ந்து இருப்பதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். சக்கரங்களை மையமாக கொண்ட இந்த பக்தி வழிபடுபவர்களை வலுப்படுத்தி, தினமும் எதிர்கொள்ளும் கர்மவினைகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள அவர்களை அகரீதியாக தயார் செய்கிறது. பூஜையின் போது நீங்களும் மற்றவர்களும் தங்கள் உடல், உணர்ச்சி மற்றும் அறிவு உணர்வை இழந்து பக்தியுடன் ஆவாகனம் செய்த தெய்வத்தின் மீது தீவிரமாக கவனத்தை ஒருங்கிணைத்து இருந்ததால் பூஜை அறையில் இறைவன், மகாதேவர்கள், அந்தர்லோக குருமார்கள் மற்றும் தேவர்கள் வியாபித்து இருக்கிறார்கள் என்று எப்போதும் இருக்கிற தெய்வீக உணர்வான *சான்னித்ய* சக்தியை எல்லோரும் அமைதியாக அமர்ந்து அனுபவிக்க ஊக்கப்படுத்துங்கள். பிறகு எல்லோரும் அகத்தில் இருக்கும் யதார்த்தமான பரமாத்துமா மீது, தங்கள் சாட்சியின் கவனத்தை திருப்பவேண்டும் என்று நீங்கள் எல்லோரையும் ஊக்கப்படுத்த வேண்டும். நீங்கள் வழிபடும் இறைவனின் உருவத்தை மனதில் நிலைநிறுத்திக்கொண்டு உங்களது அனைத்து கோசங்களின் சக்தி, சுவாசத்தின் இயக்கம், உங்களது

சிந்தனைகளை ஒளிர்விக்கும் ஒளி, பிரபஞ்சத்தை வியாபித்து இருக்கும் தெய்வீக சக்தி மற்றும் எண்ணற்ற கோயில் மணிகள் கணீரென்று ஒலிப்பது போல "ஈஈஈஈ" என்று உங்கள் தலையில் கேட்கும் ஒலியில் இருக்கும் இறை உணர்வின் மீது கவனத்தை பெறுங்கள். இந்த ஐந்தும் அகத்தில் உள்ள இறைவனிடம் இருந்து நேரடியாக வருகிறது என்று இயல்பாக உணருங்கள். நீங்கள் இந்த ஐந்தையும் ஒரே சமயத்தில் உணர்ந்ததும், நீங்கள் ஐந்து இறைஉணர்வை பெறுகிறீர்கள்.

இந்த வகையில் அக வழிபாடு செய்வதன் மூலம், நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் வெளியுலகம் மற்றும் பள்ளி பரீட்சைகள் உட்பட தினசரி சவால்கள் அனைத்தையும் வலுவாக எதிர்கொள்ள முடிகிறது. அக வழிபாடு சனாதன தர்மத்தின் மையமாக விளங்குகிறது. இது 1,000 இதழ்களை கொண்ட தாமரையாக இருக்கும் மிகவும் உயர்ந்த சக்கரத்தின் வேர், தண்டு மற்றும் மலராக விளங்குகிறது. இது மோகத்தை தடுப்பதற்கு, மற்றவர்களை தீய வழிகளில் இருந்து நல்வழியில் திருப்புவதற்கு, இந்த பிறவியில் சுமந்து வந்த *பிராரப்த* கர்மவினைகளை எதிர்கொண்டு வாழ்வதற்கு பலத்தை வழங்கும் ஆற்றலாக விளங்குகிறது. இது பிற்காலத்தில் எதிர்கொள்வதற்கு புதிய மற்றும் குறிப்பாக தேவையில்லாத கர்மவினைகள் உருவாவதை தடுப்பதற்கு தைரியத்தை வழங்குகிறது. இது இந்த கலியுகத்தில் நிலைத்துநிற்க தேவைப்படும் மனஉறுதியை வழங்குகிறது. இது கண்காணித்து மன்னித்த பின்னர் மறப்பதற்கு புரிதலை தூண்டும் அன்பை வழங்குகிறது. இறுதியாக அக வழிபாடு *சாந்தி* என்கிற மன அமைதியை வழங்குகிறது. இந்த *சாந்தியில்* சாதுக்கள், முனிவர்கள், மகாத்மாக்கள் மற்றும் தலைசிறந்த ரிஷிகளும் தங்களது பிரபஞ்சத்தில் வஸ்துக்கள் செயல்புரிவது பற்றிய ஞானத்தில் வாசம் செய்கிறார்கள். நாம் அந்த பிரபஞ்சத்தில் ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறோம்.

வீட்டு பூஜை அறையில் விநாயகர் பூஜை

விநாயகர் பூஜை பின்வரும் பக்கங்களில் வழங்கப்பட்டு உள்ளது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள அடுத்தடுத்த நடவடிக்கைகள் மற்றும் பாவனைகளுடன் ஓதுவதற்கு பல்வேறு சுலோகங்கள் மற்றும் மந்திரங்களும் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு சுலோகம் அல்லது மந்திரமும் முதலாவதாக தேவநாகரி லிபியிலும், இரண்டாவதாக தமிழ் எழுத்து வடிவிலும், மூன்றாவதாக எளிமையான தமிழ் மொழிபெயர்ப்பையும் கொண்டுள்ளது. எழுத்துப் பெயர்ப்பிற்கு இடது புறத்தில், செய்முறைகள் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன.

அன்பான விநாயகருக்கு பூஜை செய்ய சில கட்டுப்பாடுகள் உள்ளன. அவருக்கு இருக்கும் கோயில்கள், மரத்தடி சந்நிதிகள் மற்றும் வீட்டு பூஜை அறைகளுக்கு சமமாக, சனாதன தர்மத்தின் முப்பத்தி முக்கோடி தேர்வர்களில் யாருக்கும் இருப்பதில்லை. அவர் வாழ்க்கையின் யதார்த்தத்தை அறிந்து இருக்கிறார். வழக்கமான *பாலஸ்தாபன* பூஜை மூலம் சம்பிரதாய முறைப்படி

யந்திரங்கள் ஸ்தாபனம் செய்யப்படாத பூஜை அறையில் தந்தைமார்கள் தாய்மார்கள், குழந்தைகள், தாத்தா பாட்டிகள், விதவைகள், விவாகரத்து பெற்றவர்கள் என்று எல்லோரும் அவரை வழிபடலாம். அவர் உலகம் மற்றும் அதன் பொருள்முதல்வாதத்தை அறிந்து இருக்கிறார். அவர் பக்தர்கள் தன்னை வழிபடுவதை விரும்புகிறார். அவர் சைவ உணவு உண்ணும் *சாகாஹாரியாக* இருந்தாலும் வீட்டில் இறைச்சி, மீன், கோழி, முட்டை அல்லது பூச்சிகளை உண்ணும் பக்தர்களின் வழிபாட்டையும் ஏற்றுக்கொள்கிறார். அவர் உலக வழக்கில் இருக்கும் அனைத்து மொழிகளையும் அறிந்து இருந்தாலும், அவர் மொழி ஏதும் அறியாதவர் மற்றும் பன்மொழி பேசுபவர் மீது சமமாக அன்பு செலுத்துகிறார். அவர் ஒரு பிரம்மச்சாரியாக இருந்தாலும், ஒழுங்குமுறை இல்லாமல் பாலுறவில் ஈடுபட்டவர்களின் வழிபாட்டையும் வரவேற்கிறார். நமது அன்பான விநாயகர் மனிதர்கள் மற்றும் உணர்வுள்ள சக்திகள் அனைத்திற்கும் கடவுளாக இருக்கிறார். அவர் அவர்களை மர்மமான முறையில் மெதுவாக வழிநடத்தி செல்வதால், கவனம் தேவை. போதை மருந்து அடிமைகள் அந்த பழக்கத்தை மறந்து விடுவார்கள் மற்றும் அசைவ உணவு உண்ணும் *மான்சாஹாரிகள்* சைவ உணவு பழக்கத்திற்கு மாறி விடுவார்கள். இந்த மாற்றங்கள் யாருக்கும் தெரியாமல் நடந்துவிடும். அவர் அவர்களின் மனசாட்சியை உறுத்தி, குற்ற உணர்வை வெளிப்படுத்தி, அவர்களின் ஆன்மாவை உன்னத உயர்நிலைகளுக்கு உயர்த்துகிறார். அதனால் அவருக்கு மிகவும் பிடித்தமான சமஸ்கிருத மொழி உங்களுக்கு தெரியவில்லை என்றால், நீங்கள் ஆங்கிலம் அல்லது வேறொரு மொழியில் பிரார்த்தனை செய்யும் போது, அது அவருக்கு கேட்கும்படியாக சுலபமாக மொழிப்பெயர்க்கப்படுகிறது. ஆமாம், அவரால் அதை கேட்கமுடியும்.

சமஸ்கிருத உச்சரிப்பு

இந்து சமயத்தின் பழங்கால சாத்திரங்களில் பயன்படுத்தப்பட்ட சமஸ்கிருத மொழி, இங்கே வழங்கப்பட்டுள்ள எளிமையான விநாயகர் பூஜை மந்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த மொழியின் சொற்களின் அடிப்படை ஒலிகளை நீங்கள் கற்றுக்கொள்வதைப் பொருத்து, உங்கள் சமஸ்கிருத உச்சரிப்பு அமையும். உச்சரிப்பு மீது தேர்ச்சி பெறாமல் நீங்கள் சொல்லும் மந்திரங்கள் முழுமை பெறாது என்பதால், பூஜை சுலோகங்களை எத்தனை முறை மனப்பாடம் அல்லது பயிற்சி செய்தாலும், அது சொற்களின் உச்சரிப்பை கற்றுக்கொள்வதற்கு ஈடாகாது. உச்சரிப்பை சரிசெய்ய பயன்படுத்தப்பட்ட நேரம் நல்ல பலனை தரும். அதன் பின்னர் உங்களால் சுலோகங்களை சரியாக படிக்கவும் உச்சரிக்கும் முடியும். தேவநாகரி லிபி சமஸ்கிருத உச்சரிப்பின் நுணுக்கங்களை முழுமையாக பிரதிபலிப்பதால், அந்த லிபியை படிக்க கற்றுக்கொள்வதே நல்ல உச்சரிப்பை பெறுவதற்கு சிறந்த வழியாகும். ஆனால் பலருக்கு ஆங்கிலத்தில் (இந்த புத்தகத்தில் தமிழ் மொழி) ஒலிபெயர்ப்பு

செய்யப்பட்ட மந்திரங்கள் பலருக்கு சுலபமாக இருக்கிறது. இந்த புத்தகத்தில் சமஸ்கிருத உச்சரிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட ஒலிபெயர்ப்பு முறை பற்றிய குறிப்பு, சொற்களஞ்சியத்தின் முடிவில் வழங்கப்பட்டுள்ளது.

நமது இந்து கோயில் பூசாரிகள்

பல நூற்றாண்டுகளாக இந்துக்களின வழிபாட்டு முறைகளில் வழிகாட்டி வந்துள்ள அந்த உன்னத ஆன்மாக்கள் பற்றிய ஒரு கூடுதல் தகவல் வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறோம். நமது இந்து சமய பூசாரிகளுக்கு சிறு வயதில் இருந்தே அன்போடும், தாராள மனதோடும் அடக்கத்தோடும் இருக்க கற்றுத் தரப்படுகிறது. அவர்கள் தங்களுக்கு கற்றுத்தரப்பட்டதைப் பின்பற்றி ஆன்மீக இருப்புடன் வாழ்கிறார்கள் மற்றும் சிலர் பூசாரிகளின் இந்த எளிய நடத்தையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வது வருத்தம் தருவதாக இருக்கிறது. நமது பூசாரிகள் குழந்தை பருவத்தில் இருந்து *பாடசாலைகளில்* வளர்க்கப்படுகிறார்கள். உலகம் முழுவதும் இருக்கும் கோயில்களின் பூசாரிகள் *பரார்த்த பூஜை* (கோயில் பூஜை முறை), கோயில்களின் குடமுழுக்கு, *சம்ஸ்காரங்கள்*, வீட்டில் சுத்தி புண்ணியாகவாசனம், கிருகபிரவேசம் மற்றும் மேலும் பல சடங்குகளை செய்வதற்கு தீவிர பயிற்சியை பெறுகிறார்கள்.

இந்த பூசாரிகளை நல்ல மனநிலையுடன் அணுகும் போது, அவர்கள் சமஸ்கிருத எழுத்துக்களின் உச்சரிப்பு மற்றும் இந்த விநாயகர் பூஜையை முறையாக செய்வது பற்றியும் மகிழ்ச்சியுடன் கற்றுத் தருவார்கள். இந்த சேவையை வழக்கமாக எல்லோரும் எந்த எதிர்பார்ப்புமின்றி இலவசமாக வழங்குவதாக கூறுவார்கள். ஆனால் கற்பவர் கற்றுக்கொண்டு இருக்கும் போது, அந்த பூசாரிக்கு அவ்வப்போது கடமையுணர்வுடன் தட்சிணை தருவதும், இறுதியில் தவறாமல் ஒரு பெரிய தட்சிணை தருவதும் நமது மரபு ஆகும். ஆனால் மூன்று முறை வேண்டாம் என்று சொல்லி இறுதியில் அதிக தயக்கத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஒன்று அல்லது இரண்டு முறை வேண்டாம் என்று சொல்வதால், அவர்கள் நீங்கள் வழங்கும் பரிசை வீட்டிற்கு எடுத்து செல்லமாட்டார்கள என்று அர்த்தம் இல்லை.

தட்சிணை வழங்குவதற்கு பின்வரும் நெறிமுறையை பின்பற்ற வேண்டும். ஒரு தட்டில் பழங்களுக்கு மத்தியில் *தட்சிணையாக* வழங்கும் பணத்தை ஒரு உறையில் வைத்து வழங்குவது ஒரு நுட்பமான முறை ஆகும். அவர் தயக்கமின்றி அந்த தட்டை ஏற்றுக்கொண்டு, பழங்களை இறைவனுக்கு வழங்கி, அந்த உறையை தனக்கு வழங்கப்பட்ட *தட்சிணையாக* கருதி தன்னிடம் பத்திரப்படுத்திக் கொள்வார். கலாச்சார அடிப்படையில், இந்த சன்மானம் நாகரிக முறையாக இருக்கும் மற்றும் இது ஒருவரை பணியில் அமர்த்தி அவருக்கு சம்பளம் தருவதில் இருந்து அதிகம் மாறுபட்டு இருக்கும். முதலாளி-தொழிலாளி உறவை தவிர்க்க விரும்பும் இந்திய ஆன்மீக பாரம்பரியம், அந்த

உறவு ஆன்மீக சார்ந்ததாகவும் தினசரி வியாபார நடவடிக்கைகளை கடந்து உயர்வானதாக இருக்கவேண்டும் என்றும் விரும்புகிறது. இதை அறிந்துகொண்டு பூசாரிகளுக்கு தாராளமாக வழங்குவது சமூகத்தின் பொறுப்பாகிறது. என்றும் தவறாத கர்மவிதி வழங்கியவர்களுக்கு இரட்டிப்பாக திருப்பித் தருகிறது.

இந்த *தட்சிணை* பூசாரியின் வருமானத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. அவர்கள் உங்களுக்கு செய்த சேவை அல்லது கற்பித்த மணிநேர அளவை பொறுத்து அந்த தட்சிணை அமைவது யதார்த்தமாக இருக்கும். அந்த ஒரு மணிநேர விகிதம், உங்கள் சமூகத்தில் அதிக திறமையுடன் இருக்கும் நபரின் விகிதத்துடன் ஒப்பிடும் படியாக இருக்கவேண்டும். உதாரணமாக சென்னையில் வாங்குவதை காட்டிலும் அதிகமாக இருக்கும் என்று சொல்லி, U.K. பவுண்ட்களில் அற்ப தொகையை வழங்குவது பொருத்தமாக இருக்காது. ஐக்கிய இராச்சியத்தில் (U.K) வழங்கப்படும் சேவைக்கு, முறையான பிரிட்டானிய கூலி தரப்படுகிறது. அங்கே இந்திய கூலி தரப்படுவது இல்லை.


பக்தர்கள் அல்லது கோயில் நிர்வாகிகளுக்கு பூசாரிகள் சேவை செய்யவேண்டிய அவசியம் இல்லை என்பதை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். கோயிலை நோக்கி பக்தர்கள் ஈர்க்கப்படுவதற்கு அந்த பூசாரிகளின் அறிவு, திறமைகள் மற்றும் பக்தியுணர்வே காரணமாக விளங்குகின்றன. பூசாரி இல்லாத ஒரு கோயிலை கற்பனை செய்து பாருங்கள். அது அமைதியான அருங்காட்சியகம் அல்லது கலைக்கூடமாகத் தான் இருக்கும். கோயில் நிர்வாகிகள் என்றுமே பூசாரிகளின் கடுங்கோபத்தை எதிர்கொள்ள விரும்பாததால், அவர்கள் கடவுளின் சேவகர்களுக்கு மதிப்பு மற்றும் மரியாதையை வழங்குகின்றனர். பூஜையின் போது நடைபெறும் ஒரு நேர்மறையான மாய நிகழ்வை யாராலும் விளக்க முடியாது. இந்த நிகழ்வு அறிவின் வரம்புகளை கடந்த ஒரு பாராசைக்காலஜி ஆகும். அன்பாகவும் கருணையோடும் வளர்க்கப்பட்டு, வாழ்க்கையில் உடல்ரீதியான துன்புறுத்தலை என்றுமே அனுபவிக்காத பூசாரிகள் சிறப்பாக செயல்படுவார்கள். அதே சமயம் சித்திரவதையை சிறு வயதில் அனுபவித்து கடுங்கோபத்திற்கு ஆளாகக்கூடியவர்களை அவர்களின் முதலாளிகள் அந்த மனநிலையை நோக்கி இயக்கும் போது, அவர்கள் அதே பூஜைகளை கீழ்நிலை மனதில் கோபத்துடன் செய்து, தங்கள் திறமைகளை அபிசார கர்மங்களில் பிரயோகம் செய்து, *அசுர* சக்திகளை வரவழைக்கிறார்கள். இந்த சம்பவங்களை மேற்கத்திய நாடுகளில் புதிதாக அமைக்கப்பட்ட பல கோயில்கள் அவ்வப்போது எதிர்கொண்டு வருகின்றன.



விபூதி

சுத்தத்தை குறிக்கும் விபூதி வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை நமக்கு நினைவூட்டுகிறது. இது மாட்டு சாணத்தை சாம்பலாக எரித்து தயார் செய்யப்படுகிறது. சைவ பூஜையில் முக்கிய பிரசாதமாக இந்த *திரிபுண்டரம்* விளங்குகிறது. இதை ஆண்கள் சைவ சமயத்தின் சின்னமாக தங்கள் நெற்றியில் மூன்று கோடுகளாக பூசிக்கொள்கிறார்கள். இந்த மூன்று கோடுகள்


ஆணவத்தின் (இருமை உருவாக்கும் திரை) தளைகளை குறிக்கும் *பாசம்*, *கர்மவினை* (கடந்தகால செயல்கள்) மற்றும் *மாயை* (இந்த உலகம்) ஆகியவற்றை எரித்து சாம்பலாக்குவதை குறிக்கிறது. பெண்கள் பெரும்பாலும் தங்கள் நெற்றியில் சிறியதாக விபூதியை பூசிக்கொள்கிறார்கள். தேவலோகத்தில் இருந்து பார்க்கும் போது, இந்த விபூதி பிரகாசமாக ஒளிவீசுகிறது மற்றும் இதனை நெற்றியில் பூசி இருப்பதால் தேவர்களும் தெய்வங்களும் பக்தர்களை தெளிவாக காணமுடிகிறது.



நெற்றியில் வைக்கும் பொட்டு அல்லது பிந்து


புருவமத்தியில் வைத்துக் கொள்ளும் *பிந்து* என்கிற பொட்டு, ஒருவரை இந்து என்று அடையாளம் காட்டுகிறது. அந்த பொட்டில் குங்குமம், சந்தனம், களிமண், ஒப்பனை பொருட்களுடன் மேலும் பல சேர்க்கப்பட்டு இருக்கின்றன. இது சூட்சும ரீதியாக தூல கண்களால் பார்க்க முடியாததை பார்க்கும் நமது ஆன்மீக, மெய்ஞ்ஞான பார்வையாக இருக்கும் “மூன்றாவது கண்ணை” பிரதிநிதித்துவம்

செய்து, நாம் நமது உயர்ந்த ஆன்மீக புலன்கள் மற்றும் நுண்ணறிவுகளை மேம்படுத்த வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது. இந்து பெண்களின் அழகு சின்னமாகவும் *பிந்து* (என்கிற பொட்டு) விளங்குகிறது. சிவப்பு நிறத்தில் இருக்கும் பொட்டு பொதுவாக திருமணத்தின் சின்னமாக விளங்குகிறது. திருமணமாகாத பெண்கள் பெரும்பாலும் ஒரு சிறிய கருப்பு நிற *பொட்டு* மற்றும் அதன் மேலே சிறியதாக *விபூதியையும்* அணிந்து இருப்பார்கள்.



கோயில் அர்ச்சனை தட்டு


பக்தர்கள் ஒரு கோயில் பூஜைக்கு செல்லும் போது, அவர்கள் தங்களுடன் ஒரு அர்ச்சனை தட்டு அல்லது கூடையை எடுத்து செல்கிறார்கள். அந்த அர்ச்சனை பொருட்களை அவர்கள் தங்கள் வீட்டிலேயே தயார் செய்து வந்திருக்கலாம் அல்லது கோயில் நுழைவாயிலுக்கு அருகில் இருக்கும் சிறிய கடைகளில் வாங்கி இருக்கலாம். வழக்கமாக அந்த அர்ச்சனை தட்டில் இருக்கும் பொருட்களின் விவரம் பின்வருமாறு:
1) ஒரு புதிதாக உரிக்கப்பட்ட தேங்காய்; 2) ஒரு பூமாலை; 3) சில ஊதுபத்திகள்; 4) வாழைப்பழம், எலுமிச்சை, மாம்பழம் போன்ற சுத்தமான பழங்கள்; 5) ஒரு விபூதி பாக்கெட்; 6) குங்குமம்; 7) சந்தனம்; 8) கற்பூரம் ஒரு பாக்கெட்; 9) ஒரு சிறிய பாட்டில் பன்னீர்; 10) ஒரு மோதகம் அல்லது மற்ற இனிப்புக்களில் ஏதேனும்; மற்றும் 11) கோயில் அல்லது பூசாரிக்கு ஒரு காணிக்கை.



பிரதக்ஷிணம்


வழிபாட்டிற்கு முன்பாகவும், சில சமயம் பூஜையின் மத்தியிலும், நாம் பூஜை அறை அல்லது கோயிலில் இருக்கும் தெய்வத்தை மூன்று முறை வலம் வருகிறோம். இது *பிரதக்ஷிணம்* என்று அழைக்கப்படுகிறது. உங்களுக்கு வலது புறத்தில் தெய்வம் இருக்குமாறு, அதை வலஞ்சுழியாக சுற்றி வருவதை *பிரதக்ஷிணம்* என்ற சொல் குறிக்கிறது. தெய்வத்தை எப்போதும் இடஞ்சுழியாக சுற்றக் கூடாது. இந்த வழக்கத்தின் மூலம் நாம் திட்டமிட்டு நமது சாட்சியை லௌகீக விவகாரங்களில் இருந்து விளக்கி, தெய்வத்தை நோக்கி இயக்குகிறோம். நாம் இறைவனை சுற்றி வரும் போது, மனித ஒளிஉடலில் இயல்பாக சேகரிக்கப்படும் நுணுக்கமான மனோஉணர்வு லௌகீக பந்தங்கள் துண்டிக்கப்படுகின்றன. இவ்வாறு நாம் இறைவனை மூன்று முறை வலம் வரும்

போது, நாம் சுத்தமான ஒருமுகப்பாட்டுடன் கூடிய வழிபாட்டு உணர்வுநிலையை அடைகிறோம்.



சங்கப்ரஹதி, நெற்றியில் குட்டிக்கொள்ளுதல்

விநாயகரின் சந்நிதியில் அவர் முன்பாக நின்று இருக்கும் பக்தர்கள், தங்கள் கைகளை குறுக்காக வைத்துக்கொண்டு, கைமுட்டிகளால் தங்கள் நெற்றியை மெதுவாக மூன்று முறை குட்டிக்கொள்வதை பார்த்து இருப்பீர்கள். இந்த செயல் மறைஞானரீதியாக முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் *மூலாதார* சக்கரத்தில் அமர்ந்து இருக்கும் விநாயகருக்கு *அபிஷேகம்* செய்ய, தலையின் உச்சியில் இருக்கும் *சஹஸ்ரஹார* சக்கரத்தில் இருந்து அமிர்தம் *வழிந்து* வருவதற்கு காரணமாக விளங்கும் சில நரம்புகளை தூண்டுவதாக கருதப்படுகிறது. இது ஒருவர் தன்னை இறைவனிடம் சமர்ப்பித்து, செய்த தவறுகளுக்கு மன்னிப்பைக் கோரி மன்றாடி, விநாயகரின் இருப்பை நினைவில் வைத்து இருந்து இந்த அன்பான விநாயகரின் அருளை வேண்டி பிரார்த்தனை செய்வதை குறிக்கிறது.



பாலிகர்ஷ, காதுகளை இழுத்து தோப்புக்கரணம் போடுதல்

பக்தர்கள் தங்கள் நெற்றியை மெதுவாக குட்டிய பிறகு, தங்கள் கைகளை குறுக்காக வைத்துக்கொண்டு பெரும்பாலும் காதுகளை மெதுவாக இழுத்து தோப்புக்கரணம் போடுவார்கள். இது அடக்கத்தை வெளிப்படுத்தி எல்லா ஆன்மாக்களும் இறைவனுக்கு குழந்தைகளாக தென்படுகிறார்கள் என்பதை அங்கீகரிப்பதாக இருக்கிறது. அடக்கத்துடன் தன்னுணர்வை அழிக்க விரும்பும்


விநாயக பக்தர், காதுகளை இழுத்து தோப்புக்கரணம் போடும் போது, அவர் தன் மீது அந்த தெய்வத்தின் கவனத்தை ஈர்த்து, அவரது திருவடிகளில் பாவங்களை சமர்ப்பிக்கிறார். இது ஆன்மீகரீதியாக உட்புற நரம்பியல் ஓட்டங்களாக இருக்கும் *நாடிகளுக்கு* தூண்டுதலை வழங்கி, அதன் மூலம் பூஜை மற்றும் *தியானத்திற்கு* சாட்சியை அகநோக்கியாக வைத்திருக்க துணை புரிகிறது.



கணபதி கலசம்—கலசத் தேங்காய்

வீட்டு பூஜை அறையில் இருக்கும் பீடங்கள் மற்றும் ஒரு விசேஷமான பூஜைகளின் போது ஒரு தண்ணீர் குலவை மீது மாவிலைகள் மற்றும் தேங்காயுடன் இருக்கும் *கலசம்* (அல்லது *கும்பம்*) தெய்வத்தை குறிப்பிடுவதாக இருக்கிறது. குறிப்பாக விநாயகருக்கு மிகவும் பிடித்தமான தேங்காய்கள் அவரது கோயில்கள் மற்றும் சந்நிதிகளில் உடைக்கப்பட்டு நெய்வேத்தியமாகவும்

வழங்கப்படுகின்றன. ஆசைகள் மற்றும் சூழ்ச்சிகள் மூலம் உண்மையான வழிபாட்டிற்கு தடையாக விளங்கும் ஆணவத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்பதை பிரார்த்தனையின் போது உடைக்கப்படும் சிதறு தேங்காய் குறிப்பிடுகிறது. தேங்காயில் இருக்கும் கரடுமுரடான மற்றும் கடினமான ஓட்டை உடைத்து உள்ளிருக்கும் இனிமையான வெள்ளை சதையை வெளிப்படுத்துவது என்பது எளிதில் நொறுங்கக்கூடிய நமது அறியாமை என்கிற திரையை உடைத்து அகத்தில் இருக்கும் இனிமையான ஆன்மீக உண்மையை வெளிப்படுத்துவது போன்றது ஆகும்.



கோயில் உண்டியல்

கோயிலும் அதன் நன்கொடைகளும் தொடர்ந்து இயங்குவதற்கு, பக்தர்கள் இந்து கோயிலில் எப்போதும் இருக்கும் ஒரு சிறிய அல்லது பெரிய கனமான பெட்டியில் காணிக்கையை செலுத்துவார்கள். நமது பிரார்த்தனைகளுக்கு பலன் கிடைக்கும் போதும், இறைவன் நமக்கு அருளை வழங்கும் போதும், அவரது இருப்பிடமான பூமிக்கு உதவி செய்யவேண்டி பிரார்த்தனை செய்யும் போதும், நாம் பணம் அல்லது ஆபரணங்கள், தங்கம், வெள்ளியை போன்று விலையுயர்ந்த பொருட்களை உண்டியலில் செலுத்துகிறோம். பல கோயில்களில் தெய்வத்திற்கு முன்பாக காணிக்கைகள் எண்ணப்படுகின்றன. பூசாரிகள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கு உதவியாக, பெரும்பாலும் ஒரு சிறிய தொகை வெற்றிலையில் மடித்து தட்சிணையாக வழங்கப்படும்.






கணேச பூஜா

गणेशपूजा

விநாயகரின் அருளையும் பாதுகாப்பையும் வேண்டி வீட்டில்
நடைபெறும் அன்றாட பாரம்பரிய வழிபாடு

முன்னேற்பாடுகள் மற்றும் குறிப்புகள்



आचमनम्

ஆசமனம்

பூஜை செய்பவர் ஆசமனம் செய்யவேண்டும்

ॐ सुमुखाय स्वाहा
ॐ एकदन्ताय स्वाहा
ॐ गजकर्णकाय स्वाहा

ஓம் சுமுகாய ஸ்வாஹா
ஓம் ஏகதந்தாய ஸ்வாஹா
ஓம் கஜகர்ணாய ஸ்வாஹா

ஓம்! எப்போதும் பிரகாசமான முகமுடைய தெய்வத்திற்கு சமர்ப்பிக்கிறேன்!
ஓம்! ஒற்றை தந்தம் உடைய தெய்வத்திற்கு சமர்ப்பிக்கிறேன்!
ஓம்! யானையின் பெரிய காதுகளை உடைய தெய்வத்திற்கு சமர்ப்பிக்கிறேன்!

இடது கையில் பிடித்து இருக்கும் உத்தரணி மூலம், பஞ்சபாத்திரத்தில் இருந்து நீரை எடுத்து வலது உள்ளங்கையில் ஊற்றி வலது கையை கழுவிக்கொள்ளவும் மற்றும் மீதம் இருக்கும் நீரை ஒரு தட்டு அல்லது தரையில் விடவும். இன்னொரு முறை நீரை வலது கையில் ஊற்றிக்கொண்டு, "ஓம் சுமுகாய ஸ்வாஹா" என்று மனதில் சொல்லிக்கொண்டு அந்த நீரை குடிக்கவும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது வரிகளை மீண்டும் சொல்லி, மீண்டும் வலது கையை கழுவிக் கொள்ளவும்.



विघ्नेश्वर प्रार्थना
விக்னேசுவர பிரார்த்தனை

கணேச பிரார்த்தனை

ॐ सुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

நமசுகாரம், நெற்றியில் குட்டிக்கொள்ளுதல், நமசுகாரம்.

ஓம் சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்ன-வதனம் த்யாயேத் சர்வவிக்னோபாசாந்தயே.

ஓம். வெள்ளி நிற ஆடையை உடுத்தி, பிரபஞ்சம் எல்லாம் வியாபித்து, பௌர்ணமி கிரணங்கள் போல பிரகாசமாக ஒளிவீசி, நான்கு வலுவான கரங்கள் மற்றும் நல்ல மலர்ந்த முகத்துடன் அனைத்து விக்கினங்களையும் அழிப்பவரை நாம் தியானம் செய்வோம்.

பிரார்த்தனைக்குரிய அஞ்சலி முத்திரையுடன் பீடத்தில் அமர்ந்து இருக்கும் விநாயகருக்கு வந்தனம் செய்யவும். அதன் பிறகு இந்த மந்திரத்தை சொல்லும் போது, கைகளை உங்கள் முகத்திற்கு முன்பாக குறுக்காக வைத்து, இடது கை மூலம் வலதுபுற நெற்றியையும், வலது கை மூலம் இடதுபுற நெற்றியையும் குட்டிக்கொள்ளவும். இது கணபதியை வணங்கும் ஒரு வழக்கமான முறை ஆகும். நெற்றியில் முன்புறம் நீட்டிக்கொண்டு இருக்கும் எலும்புப் பகுதியில் குட்டிக்கொள்ள வேண்டும். மந்திரத்தை முடிக்கும் போது, உங்கள் கைகளை மீண்டும் அஞ்சலி முத்திரைக்கு கொண்டு வரவும்.

संकल्पम्
சங்கல்பம்

சங்கல்பம்

ॐ अद्य पूर्वोक्त एवंगुणसकल

विशेषेण विशिष्टायां अस्यां शुभतिथौ
ॐ महागणेश्वर उद्दिश्य महागणेश्वरप्रीत्यर्थं
महागणेश्वरप्रसादसिद्ध्यर्थं
यथा शक्ति (நகரத்தின் பெயர்) தேசे (பின்வரும் பட்டியலில் இருந்து அன்றைய காலநேரத்தை சொல்லவும்)
ध्यानावाहनादि गणेशपूजां करिष्ये ।
ॐ अप उपस्पृश्य

அட்சதை மற்றும் பூக்களை மார்புக்கு அருகே வலது கையில் மடித்து வைத்துக்கொண்டு.

ஓம் அத்ய பூர்வோக்த ஏவங்குண விசேஷேன விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதிதவ்

அட்சதை மற்றும் பூக்களை தெய்வத்தின் திருவடியில் சமர்பித்து கைகளை கழுவிக்கொள்ளவும்.

ஓம் மகாகணேஷ்வர உத்திஷ்ய மகாகணேஷ்வர ப்ரீத்யர்த்தம் மகாகணேஷ்வர பிரசாத சித்யர்த்தம்
யதா சக்தி (நகரத்தின் பெயர்) தேசே

(அன்றைய காலநேரத்தை சேர்க்கவும்)

த்யானவாஹனாதி கணேசபூஜாம் கரிஷ்யே |
ஓம் அப உபஸ்ப்ருஷ்ய

மேலிருக்கும் மந்திரத்தில் பொருத்தமான காலநேரத்தை சேர்க்கவும்.

उषः काल	உஷ: கால, விடியற்காலை
प्रातः काल	ப்ராத: கால, காலை
मध्याह्नकाल	மத்யாஹ்நகால, மதியம்
सायङ्काल	சாயங்கால, சாயங்காலம்
ऊर्ध्वयामकाल	ஊர்த்வயாமகால, இரவு

இந்த குறிப்பிட்ட மங்களகரமான தருணம், காலம் மற்றும் இடத்தில், இந்த மங்களகரமான தினத்தில், உனது நிறைவான அருளை பெறவேண்டும் என்பதற்காக, இந்த (காலநேரத்தை சேர்க்கவும்) கணேச பூஜையை நாங்கள் சிறப்பாக செய்யவிருக்கிறோம். ஓம். இந்த சுத்தமான நீரை தொடுவதன் மூலம் நாங்களும் சுத்தம் அடைகிறோம்.




சங்கல்பம் எடுத்துக்கொண்ட பிறகு, சிறிது அட்சதையை வலது கையில் எடுத்து, அதை மார்புக்கு அருகே பிடித்துக்கொண்டு, அதன் கீழே இடது கையை திறந்து வைத்து இருக்கவும். அன்றைய காலநேரம் மற்றும் இடத்தை குறிப்பிட்டுள்ள இடத்தில் சேர்த்துக் கொள்ளவும். இறுதியாக 'கரிஷ்யே' என்று சொல்லி முடிக்கும் போது, மெதுவாக அட்சதையை விநாயகர் பாதங்களில் சமர்ப்பிக்கவும். அதன் பிறகு உத்தரணி நிறைய நீரை இடது கையில் எடுத்து, அதை வலது கையில் ஊற்றி, "ஓம் அப உப சம்பிரதாய ஸ்ப்ருஷ்ய" என்று சொல்லிக்கொண்டு உள்ளங்கைகளை ஒன்றாக முறைப்படி துடைத்துக் கொள்ளவும். சங்கல்பம் எடுத்துக்கொண்ட பிறகு இறுதியாக மந்திரங்கள் சொல்லி முடிக்கும் வரை பூஜையை நிறுத்தாமல் அல்லது கைவிடாமல் தொடர்ந்து செய்யவேண்டும்.

தொடக்க வழிபாடு மற்றும் உபசாரங்கள்

आवाहनम् आसनम्

ஆசமனம், ஆசனம்

தெய்வத்தை வரவேற்று ஆசனம் வழங்குதல்



(மூன்று முறை அட்சதையை சமர்ப்பித்தல்.)

ध्यायामि ।
आवाहयामि ।
रत्नसिंहासनं समर्पयामि ।
த்யாயாமி |
ஆவாஹயாமி |
ரத்னசிங்காசனம் சமர்பயாமி |

இறைவா, நாங்கள் உன்னை தியானம் செய்கிறோம். உனக்கென்று பிரத்யேகமாக தயார் செய்த இரத்தின சிம்மாசனத்தில் நீ வந்து அமரவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

"சமர்பயாமி" என்று சொல்வதற்கு முன்பாக, முதல் மூன்று சொற்களை சொல்லிய பிறகு ஒவ்வொரு முறையும் சிறிது அட்சதையை இறைவனுக்கு சமர்ப்பிக்கவும். வீட்டில் உங்கள் முன்பாக மலர்ந்த முகத்துடன் இரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்து உங்களுக்கு அருளை வழங்கிக்கொண்டு இருக்கும் விநாயகர், நீங்கள் உபசாரம் செய்வதற்காக காத்து இருப்பதாக பாவனை செய்துகொள்ளுங்கள்.

अर्घ्यम्
அர்க்யம்

தெய்வத்தின் கால்கள் மற்றும் கைகளை கழுவுதல்

पादयोः पाद्यं पाद्यं समर्पयामि ।
हस्तयोः अर्घ्यं अर्घ्यं समर्पयामि ।

பாதயோஹோ பாத்யம் பாத்யம் சமர்பயாமி |
ஹஸ்தயோஹோ அர்க்யம் அர்க்யம் சமர்பயாமி |

விநாயகா, வெள்ளை தாமரைப் போன்ற உனது பாதங்களை பணிவோடும், உனது திருக்கரங்களை மெதுவாகவும் அலம்புகிறோம்.

வலது கையில் உத்தரணி மூலம் சுத்தமான நீரை எடுத்து, அதை தெய்வத்திற்கு காண்பித்து, பிறகு அதை தீர்த்த பாத்திரத்தில் விடவும். இந்த முறையை பூஜை முழுவதும் அர்க்யம் விடுவதற்கு பயன்படுத்த வேண்டும். முதல் வரியை சொல்லும் போது, விநாயகரின் பாதத்தை அலம்புவதாக பாவனை செய்துக் கொள்ளுங்கள். இரண்டாவது முறையாக அர்க்யம் விடும்போது, இரண்டாவது வரியை சொல்லிக்கொண்டு, அவரது கைகளை அலம்புவதாக பாவனை செய்துக் கொள்ளுங்கள்.

आचमनम्
ஆசமனம்

தெய்வத்தின் தாக்கத்தை தணிக்க நீர் வழங்குதல்

ॐ भूर्भुवः सुवः
आचमनीयं समर्पयामि ।

ஓம் பூர்-புவஹ சுவஹ
ஆசமனீயம் சமர்பயாமி |



ஓம்! மூன்று லோகங்களிலும் வியாபித்து இருக்கும் நீ பருவதற்காக சுத்தமான நீரை பணிவுடன் வழங்குகிறோம்.

விநாயகருக்கு உத்தரணியில் சுத்தமான நீரை வழங்கவும். அவர் அதை இரண்டு கைகளால் ஏற்றுக்கொண்டு குடிப்பதாக பாவனை செய்துக் கொள்ளுங்கள்.

स्नानम्
ஸ்நானம்

ஸ்நானம்

ॐ सुरसिन्धुसमानीतं सुवर्णकलशास्थितम् ।
स्नानार्थं गृह्यतां शम्भो सलिलं विमलं गणेश ॥
गङ्गास्नानं समर्पयामि ।



மணியை அடித்துக்கொண்டு, கையில் பூவை எடுத்து தீர்த்தத்தில் முக்கி, மூர்த்தி மீது தெளிக்கவும். பிறகு மணியை கீழே வைக்கவும்.

ஓம் சுரசிந்து சமாநீதம் சுவர்ணகலசாஸ்திதம் |
ஸ்நானார்த்தம் க்ருஹ்யதாம் சம்போ சலிலம் விமலம் கணேச ||
கங்காஸ்நானம் சமர்பயாமி |


அன்பான விநாயகா! மகிழ்ச்சியின் மூலமே! உன்னை நீராட்டுவதற்காக கங்கையில் இருந்து தங்கக் குடத்தில் கொண்டுவரப்பட்ட மாசற்ற சுத்தமான இந்த நீரை ஏற்றுக்கொள்வாயாக. நான் உனக்கு கங்கா ஸ்நானத்தை சமர்ப்பிக்கிறேன்.

மணி அடித்துக்கொண்டு இந்த மந்திரத்தை சொல்லும் போது, ஒரு பூவை தீர்த்தத்தில் முக்கி, அதை தெய்வத்தின் மீது தெளிக்கவும். இதை குறைந்தது மூன்று முறை செய்யவும். பூவை மிருகி முத்திரையில் இருக்கும் வலது கையில் வைத்து இருங்கள். அந்த கையின் மூன்றாவது மற்றும் நான்காவது விரல்களுக்கு மத்தியில் அந்த பூவின் காம்பை பிடித்து இருங்கள். உங்கள் பீடத்தில் வசதி இருந்தால், இந்த மந்திரத்தின் போது மூர்த்தி மீது நீரை தெளிக்காமல், அந்த மூர்த்தி மீது நீரை நேரடியாக ஊற்றலாம்.

अलङ्कारम्
அலங்காரம்

அலங்காரம் மற்றும் உபசாரங்கள்



वस्त्रार्थं मङ्गलाक्षतान् समर्पयामि
उपवीतार्थं मंगलाक्षतान् समर्पयामि
ॐ गन्धं गृहाण सुरभिमन्धकासुरसूदन ।
कुकुंमादिसमायुक्तं कुलाचलनिकेतन ॥
दिव्यपरिमलविभूति-चन्दन-कुंकुमं-समर्पयामि ।



தெய்வத்தை அலங்கரித்து விபூதி, சந்தனம் மற்றும் குங்குமத்தை இடுங்கள்

வஸ்த்ரார்த்தம் மங்களாக்ஷதான் சமர்பயாமி
உபவீதார்த்தம் மங்களாக்ஷதான் சமர்பயாமி
ஓம் கந்தம் க்ருஹான சுரபிமந்தகாசுரசூதன |
குங்குமாதி சமாயுக்தம் குலாசலனிகேதன ||
திவ்யபரிமள விபூதி சந்தன குங்குமம் சமர்பயாமி |

நீ பிரகாசமான ஆடையை உடுத்தி மகிழவேண்டும் என்பதற்காக, கம்பீரமான இறைவனே உனக்கு நாங்கள் மங்களகரமான அட்சதையை வழங்குகிறோம். நீ பூணூலை அணிந்து அழகாக அலங்கரித்து இருக்கவேண்டும் என்பதற்காக, விநாயகபெருமானே நாங்கள் மங்களகரமான அட்சதையை வழங்குகிறோம். ஓம். இமயமலையில் வசித்த அந்தகாசுரனை வதம் செய்த தெய்வமே, நாங்கள் வழங்கும் நறுமணம் நிறைந்த சந்தனம் மற்றும் குங்குமம் மற்றும் சிறந்த படையல்களை ஏற்றுக்கொள்ளவும்.

தெய்வத்திற்கு வஸ்திரம் அல்லது ஆடை அணிவித்தல். முதல் இரண்டு வரிகளை சொல்லும் ஒவ்வொரு முறையும் சிறிது அட்சதையை வழங்கவும். நீங்கள் தெய்வத்தை பூக்களால் அலங்கரிக்கும் போது, மூன்றாவது மற்றும் நான்காவது வரிகளை தொடர்ந்து சொல்லவும். நீங்கள் தெய்வத்திற்கு விபூதி, சந்தனம் மற்றும் குங்குமத்தை இடும் போது இறுதி வரியை ஒருமுறை சொல்லவேண்டும்.

पुष्पम्
புஷ்பம்

பூக்களை வழங்குதல்

तदुपरि मङ्गलाक्षतान् समर्पयामि ।
पूजार्थं नानाविधपत्र-पुष्पाणि समर्पयामि ।

முதலில் அட்சதை, பிறகு பூக்கள் அல்லது மேலும் அட்சதையை வழங்கவும்.

ததுபரி மங்களாக்ஷதான் சமர்பயாமி |
பூஜார்த்தம் நானாவிதபத்ர புஷ்பாணி சமர்பயாமி |



நாங்கள் தற்போது மங்கள அட்சதையை வழங்குகிறோம். தனக்கு உவமையில்லாத இறைவனே, எங்கள் பக்தியின் நிறைவேற்றமாக நாங்கள் புத்தம் புதிதாக மலர்ந்த பூக்களை வழங்குகிறோம்.

முதல் வரியுடன் சிறிது அட்சதை வழங்கப்படுகிறது. இரண்டாவது வரியுடன் கை நிறைய பூக்கள் அல்லது ஒரு பூ அல்லது அட்சதை வழங்கப்படுகிறது.

धूपम्
தூபம்

தூப உபசாரம்

ॐ वनस्पत्युद्भवैः दिव्यैः नानागन्धसमन्वितैः ।
आघ्रेयधूपदीपनां धूपोऽयं प्रतिगृह्यताम् ॥
दशाङ्गं गुग्गुलोपेतं सुगन्धं सुमनोहरम् ।
आघ्रेयः सर्वदेवानां धूपोऽयं प्रतिगृह्यताम् ॥
धूपमाघ्रापयामि धूपानन्तरमाचमनीयं समर्पयामि।
मङ्गलाक्षतान् समर्पयामि।



மணி அடித்துக்கொண்டு, தூபத்தினால் மூன்று முறை சுற்றி, பிறகு அதன் மூலம் ஓம் வடிவத்தை வரையவும் (சமஸ்கிருதம், தமிழ், குஜராத்தி போன்ற மொழிகளில்)

ஓம் வநஸ்பத்யுத்பவை: திவ்யை: நாநாகந்தசமன்விதை: |
ஆக்ரேயதூபதீபனாம் தூபோயம் பிரதிக்ருஹ்யதாம் ||
தசாங்கம் குக்குலோபேதம் சுகந்தம் சுமனோகரம் |
ஆக்ரேய: சர்வதேவானாம் தூபோயம் பிரதிக்ருஹ்யதாம் ||

மணியை சத்தமாக அடித்து. முதலில் நீரையும் பின்பு அரிசியையும் வழங்கவும்.

தூபமாக்ராபயாமி தூபாந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி |
மங்களாக்ஷதான் சமர்பயாமி |

விநாயக பெருமானே, பல்வேறு நறுமணங்களுடன் நிறைவாக அற்புத அம்சங்களுடன் இருக்கும் மிகச்சிறந்த தூபத்தை, எங்கள் வீட்டில் ஏற்றி உனக்கு வழங்குகிறோம். தசாங்கம் மற்றும் குக்குலு கலந்து நறுமணங்கள் கூடியதாக இருக்கும் அந்த தூபத்தை, நீங்களும் மகாதேவர்களும் நுகர்ந்து மகிழ்வதற்காக உங்களுக்கு அதை எங்கள் வீட்டில் வழங்குகிறோம். பிரகாசமாக ஜொலிக்கும் தெய்வமே, நாங்கள் உனக்கு தீப நெய் கலந்து, தெய்வீக நறுமணத்துடன், மனதை மயக்கும் குக்குலுவை சிரத்தை மற்றும் பக்தியுடன் வழங்குகிறோம். நாங்கள் அதை உனக்கு எங்கள் வீட்டில் வழங்குகிறோம். நாங்கள் உன்னை மகிழ்விக்க இந்த அருமையான குக்குலுவை முறையாக வழங்கியுள்ளோம். நாங்கள் மீண்டும் நீ பருகுவதற்காக குளுமையான மற்றும் இனிய நீரையும் மங்களகரமான அட்சதையையும் வழங்குகிறோம்.

இந்த மந்திரத்தை சொல்லும் போது இடது கை மூலம் மணியடித்து, தூபத்தை வலது கைமூலம் தெய்வத்தின் முன்பாக மூன்று முறை சுற்றி, மூன்றாவது சுற்றை நிறைவு செய்ததும், தூபமாக்ராபயாமி என்று ஐந்தாவது வரியை சொல்லும் போது, ஓங்கார வடிவத்தை வரையவும். அந்த சமயத்தில் தூபத்தை நன்றாக உயர்த்தி, மணியை நன்கு பலமாக அடிக்கவும். அதன் பிறகு தூபத்தை இறக்கி அடுத்த இரண்டு வரிகளை சொல்லவேண்டும். முதலில் ஆசமனம் செய்ய நீர் மற்றும் அதன் பிறகு அட்சதை வழங்கப்படுகிறது.

दीपम्
தீபம்

தீப உபசாரம்

ॐ साज्यवर्तित्रयोपेतं प्राज्यमङ्गलदायकम् ।
दीपं पश्य दयाराशे दीनबन्धो नमोऽस्तु ते ॥
ॐ आवाहिताभ्यः सर्वाभ्यो देवताभ्यो नमः ।
दिव्यमङ्गलदीपं सन्दर्शयामि ।
दीपानन्तरमाचमनीयं समर्पयामि ।
मङ्गलाक्षतान् समर्पयामि ।



ஓம் சாஜ்யவர்தித்ரயோபேதம் பிராஜ்யமங்களதாயகம் |
தீபம் பஷ்ய தயாராஷே தீனபந்தோ நமோஸ்து தே ||
ஓம் ஆவாஹிதாப்ய: சர்வாப்யோ தேவதாப்யோ நம: |
திவ்யமங்களதீபம் சந்தர்ஷயாமி |
தீபானந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி |
மங்களாக்ஷதான் சமர்பயாமி |

தயாள குணம் கொண்டவனே! பக்தர்களின் நண்பனே! மிகுதியான மங்களத்தை வழங்கும் மூன்று திரிகள் கொண்ட இந்த நெய் விளக்கை பார்.

உனக்கு எங்கள் நமசுகாரங்கள்! ஓம்! ஆவாகனம் செய்யப்பட்ட அனைத்து தேவர்களுக்கும் எங்கள் நமசுகாரங்கள்! நாங்கள் இந்த தெய்வீக மங்கள தீபத்தை உனக்கு காண்பிக்கிறோம். அதன் பிறகு, நீ ஆசமனம் செய்வதற்கு சுத்தமான நீரையும் அட்சதையையும் வழங்குகிறோம்.

இந்த மந்திரத்தை சொல்லும் போது, விநாயகருக்கு எண்ணெய் விளக்கை காண்பித்து மணி அடிக்கவும். தூபம் காண்பித்ததைப் போல, மூன்று முறை சுற்றி தீபத்தால் ஓங்காரத்தை வரையவும். அதன் பிறகு தீபத்தை நன்றாக உயர்த்தி மணியை பலமாக ஒலிக்கவும். அதன் பிறகு மணி அடிப்பதை நிறுத்தவும். பிறகு ஆசமனம் செய்ய நீர் அல்லது சிறிது அட்சதையை வழங்கவும்.

नैवेद्यम्
நெய்வேத்தியம்

உணவு உபசாரம்

सत्यं त्वर्तेन (காலை நேரத்தில்)
ऋतं त्वा सत्येन (சாயங்கால நேரத்தில்) परिषिञ्चामि ।
ॐ अमृतमस्तु अमृतोपस्तरणमसि स्वाहा ।
ॐ गणेशाय स्वाहा । ॐ गणेशाय स्वाहा ।
ॐ गणेशाय स्वाहा ।



சத்யம் த்வர்தேன (காலை நேரத்தில்)
ருதம் த்வா சத்யேன (மாலை நேரத்தில்) பரிஷிஞ்சாமி |
ஓம் அம்ருதமஸ்து அம்ருதோபஸ்தரணமசி ஸ்வாஹா
ஓம் கணேஷாய ஸ்வாஹா | ஓம் கணேஷாய ஸ்வாஹா |
ஓம் கணேஷாய ஸ்வாஹா |


நாம் உண்மையோடு உண்மையை சேர்க்கிறோம். இந்த இனிப்பான மற்றும் உறைப்பான உணவு அமுதமாக மாறட்டும். நாங்கள் உனக்கு இந்த உணவை பணிவுடன் வழங்குகிறோம்.

இந்த மந்திரத்தின் முதல் பகுதியை சொல்லும் போது, உணவை திறந்து வைக்கவும். அதன் பிறகு இறுதி வரியை சொல்லும் போது, உத்தரணியில் எடுத்த நீரினால் உணவை வட்டமிட்டு தெய்வத்திற்கு வழங்கவும். மெதுவாக மணி அடித்து, உணவு அல்லது பழத்தின் நறுமணம் அல்லது முக்கிய சாறுகளை தெய்வத்தை நோக்கி செலுத்தவேண்டும். இவ்வாறு தெய்வத்திற்கு செய்யும் நெய்வேத்தியத்தின் போது, காம்பு மேல்நோக்கி இருக்குமாறு வலது கைவிரல்களுக்கு மத்தியில் ஒரு பூவை பிடித்துக்கொண்டு செய்யவேண்டும். உள்ளங்கை உணவின் மீது சுற்றும் போது, அது கீழ்நோக்கி இருக்கவேண்டும் மற்றும் அது தெய்வத்தை நெருங்கும் போது மேலே திரும்பி, அவரது மூக்கு மற்றும் வாயையை நோக்கி நறுமணம் மற்றும் பிராணனை வழங்க வேண்டும். மூன்றாவது வரியை முடிக்கும் போது, இதயத்தில் நிறைவான அன்போடு தெய்வத்தின் பாதத்தில் மெதுவாக பூவை சமர்ப்பிக்கவும்.

ॐ आवाहिताभ्यः सर्वाभ्यो देवताभ्यो नमः ।
नानाविधमहानैवेद्यं निवेदयामि ।
यथाशक्तिसमर्पित महानैवेद्यं कृपया स्वीकुरु ।

ஓம் ஆவாஹிதாப்யஹ சர்வாப்யோ தேவதாப்யோ நம: |
நாநாவித மஹாநைவேத்தியம் நிவேதயாமி |
யதாசக்திசமர்பித மஹாநைவேத்தியம் க்ருபயா ஸ்வீகுரு |

ஓம்! ஆவாகனம் செய்யப்பட்ட தெய்வங்கள் அனைவருக்கும் நமசுகாரம்! விநாயக பெருமானே, நாங்கள் உனக்கு நேர்மையாகவும் அன்போடும் சிறந்த உபசாரங்களை வழங்குவதால், இந்த உணவின் சாரத்தை நீ இதுவரை பெற்ற சிறந்த உணவாக கருதவேண்டும். உனக்கு நடத்தப்படும் இந்த பூஜையில், நாங்கள் யதாசக்தி வழங்கிய உணவை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.



நீங்கள் இந்த மந்திரத்தை சொல்லி பலமாக மணி அடிக்கும் போது, ஒரு பூ அல்லது அட்சதையை எடுத்து, உங்கள் மார்பின் உயரத்தில் வலது கையின் விரல்நுனியில் வைத்து இருக்கவும். மந்திரத்தை சொல்லி முடித்ததும், தெய்வத்தின் திருவடிகளில் அந்த அட்சதை அல்லது பூவை சமர்ப்பணம் செய்யவும். அதன் பிறகு மணியை கீழே வைத்து, விநாயகர் நீங்கள் வழங்கிய நைவேத்தியத்தை ஏற்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு இருகைகளையும் கூப்பிய நிலையில் தலைக்கு மேலே உயர்த்தவும். உங்கள் கைகளை உயர்த்திய நிலையில், கண்களை மூடிக்கொண்டு விநாயகர் நீங்கள் உணவை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு உண்பதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். சிறிது நேரம் கழித்து, கைகளை கீழே இறக்கி அமைதியாக ஓம் என்று மனதில் சொல்லிக்கொள்ளுங்கள்.

विघ्नेश्वराष्टोत्तर शतनामावलिः

விக்னேசுவராஷ்டோத்திர சதநாமாவலிஹி

விநாயகரின் அஷ்டோத்திர சதநாம அர்ச்சனை



பூஜையின் இந்த பகுதியில், "விநாயகரின் 108 நாமங்களை" குறிக்கும் விக்னேசுவராஷ்டோத்திர சதநாமாவளியை சொல்லி அர்ச்சனை செய்ய வேண்டும். நீங்கள் ஒவ்வொரு பெயராக சொல்லி அர்ச்சனை செய்யும் போது, வலது கையால் ஒரு பூ அல்லது பூவின் இதழ்கள் அல்லது உத்தரணி மூலம் சிறிது நீர் அல்லது அட்சதையை தெய்வத்திற்கு சமர்ப்பிக்கவும். தெய்வத்தின் பண்புகளை குறிக்கும் பெயர்கள் ஒவ்வொன்றும், அவரது இயல்பான அம்சத்தை வரையறுக்கிறது. நீங்கள் நின்றுக்கொண்டு இருந்தால் பூக்கூடையை இடது கையில் பிடித்து இருக்கவும் மற்றும் அமர்ந்து இருந்தால் அதை மடியில் வைத்துக் கொள்ளவும். இதற்கு மணி அடிக்கப்படுவது இல்லை. உங்களிடம் இருக்கும் நேரம் மற்றும் சக்தியை பொருத்து, நீங்கள் அர்ச்சனையை மெதுவாகவோ விரைவாகவே செய்யலாம். ஒவ்வொரு பெயருக்கு முன்பாகவும் ஓம் என்று தொடங்கி இறுதியில் நம: என்று முடிக்கவேண்டும். நம: என்றால் ஒருவருக்கு "வந்தனம், போற்றி, வழிபாடு" அல்லது "மரியாதை" வழங்குதல் என்று பொருள்.

	தேவநாகரி	**ஒலிபெயர்ப்பு**	**மொழிபெயர்ப்பு**
1	ॐ विनायकाय	ஓம் விநாயகாய	(விக்கினங்களை) நீக்குபவருக்கு
2	विघ्नराजाय	விக்னராஜாய	விக்கினங்கள் மீது ஆட்சி செய்பவருக்கு
3	गौरीपुत्राय	கௌரிபுத்ராய	கௌரி புத்திரனுக்கு
4	गणेश्वराय	கணேஷ்வராய	கணங்களின் ஈசுவரனுக்கு

5	स्कान्दाग्रजाय	ஸ்கந்தாக்ரஜாய	கந்தனின் மூத்த சகோதரனுக்கு
6	अव्ययाय	அவ்யயாய	நித்தியமாக இருப்பவருக்கு
7	पूताय	பூதாய	சுத்தமாக இருப்பவருக்கு
8	दक्षाय	தக்ஷாய	திறமையுடன் இருப்பவருக்கு
9	अद्यक्षाय	அத்யக்ஷாய	சிறந்த தலைவருக்கு
10	द्विजप्रियाय	த்விஜப்ரியாய	இருபிறப்பாளரை நேசிப்பவருக்கு
11	अग्निगर्भच्छिदे	அக்னிகர்ப்பச்சிதே	அக்னி கர்ப்பத்தை துளைத்து செல்பவருக்கு
12	इन्द्रश्रीप्रदाय	இந்திரஸ்ரீப்ரதாய	இந்திரனின் செல்வத்தை மீட்டவருக்கு
13	वाणीप्रदाय	வாணிப்ரதாய	சொல்வன்மையை தருபவருக்கு
14	अव्ययाय	அவ்யயாய	நித்யமாக இருப்பவருக்கு
15	सर्वसिद्धिप्रदाय	சர்வசித்திப்ரதாய	அனைத்து சித்திகளையும் வழங்குபவருக்கு
16	शर्वतनयाय	ஷர்வதனயாய	சிவனின் தனையனுக்கு
17	शर्वरीप्रियाय	ஷர்வரீப்ரியாய	அந்தி வெளிச்சத்தை விரும்புபவருக்கு

18	सर्वात्मकाय	சர்வாத்மகாய	எல்லோருக்கும் ஆன்மாவாக இருப்பவருக்கு
19	सृष्टिकर्त्रे	ஸ்ருஷ்டிகர்த்ரே	படைப்பவருக்கு
20	देवाय	தேவாய	பிரகாசமான

			தெய்வத்திற்கு
21	अनेकार्चिताय	அநேகார்சிதாய	பெருந்திரளான மக்களால் வழிபடப்படுபவருக்கு
22	शिवाय	சிவாய	மங்களகரமானவருக்கு
23	शुद्धाय	சுத்தாய	சுத்தமானவருக்கு
24	बुद्धिप्रियाय	புத்திப்ரியாய	புத்தியை விரும்புபவருக்கு
25	शान्ताय	சாந்தாய	அமைதியானவருக்கு
26	ब्रह्मचारिणे	பிரம்மசாரிணே	பிரம்மச்சாரியாக இருப்பவருக்கு
27	गजाननाय	கஜானனாய	ஆனைமுகம் உடையவருக்கு
28	द्वैमातुराय	த்வைமாதுராய	இரு தாய்மார்களை உடையவருக்கு
29	मुनिस्तुत्याय	முனிஸ்துத்யாய	முனிவர்களால் துதிக்கப்படுபவருக்கு
30	भक्तविघ्नविनाशनाय	பக்தவிக்னவினாஷனாய	பக்தர்களின் விக்கினங்களை அழிப்பவருக்கு
31	एकदन्ताय	ஏகதந்தாய	ஒற்றை தந்தம் உடையவருக்கு
32	चतुर्बाहवे	சதுர்பாஹுவே	நான்கு கரங்களை உடையவருக்கு
33	चतुराय	சதுராய	புத்திசாலியாக இருப்பவருக்கு
34	शक्तिसंयुताय	சக்திசம்யுதாய	சக்தியுடன் இணைந்து இருப்பவருக்கு
35	लम्बोदराय	லம்போதராய	பெரிய தொந்தி உடையவருக்கு
36	शूर्पकर्णाय	சூர்பகர்ணாய	முறம் அல்லது விசிறி போன்ற காதுகளை உடையவருக்கு
37	हरये	ஹரயே	சிங்கம் போன்ற

			வீரத்துடன் தீய சக்திகளை அழிப்பவருக்கு
38	ब्रह्मविदुत्तमाय	பிரம்மவிதுத்தமாய	பிரம்ம வித்தை நிபுணருக்கு
39	कालाय	காலாய	விதியின் தலைவருக்கு
40	ग्रहपतये	க்ருஹபதயே	கிரகங்களின் தலைவருக்கு
41	कामिने	காமினே	அன்பே வடிவானவருக்கு
42	सोमसूर्याग्निलोचनाय	சோமசூர்யாக்னி-லோசனாய	சந்திரன், சூரியன் மற்றும் நெருப்பைப் போன்ற வடிவில் கண்களை உடையவருக்கு
43	पाशाङ्कुशधराय	பாசாங்குசதராய	பாசாங்குசத்தை தனது கையில் ஏந்தி இருப்பவருக்கு
44	चण्डाय	சண்டாய	சீற்றத்துடன் இருப்பவருக்கு
45	गुणातीताय	குணாதீதாய	குணங்களை கடந்து இருப்பவருக்கு
46	निरञ्जनाय	நிரஞ்சனாய	களங்கமில்லாமல் இருப்பவருக்கு
47	अकल्मषाय	அகல்மஷாய	மாசில்லாமல் இருப்பவருக்கு
48	स्वयंसिध्दाय	ஸ்வயம்சித்தாய	சுயமாக சித்தி பெற்றவருக்கு
49	सिद्धार्चितपदांबुजाय	சித்தார்சிதபதாம்புஜாய	சித்தர்கள் வழிபடும் தாமரை பாதங்களை உடையவருக்கு
50	बीजापूरफलासक्ताय	பீஜாபுறபலாசக்தாய	மாதுளை பிரியருக்கு
51	वरदाय	வரதாய	வரங்கள் வழங்குபவருக்கு

52	शाश्वताय	சாஷ்வதாய	மாறாமல் நித்தியமாக இருப்பவருக்கு
53	कृतिने	க்ருதினே	திறமையானவருக்கு
54	द्विजप्रीयाय	த்விஜப்ரியாய	இருப்பிறப்பாளரை விரும்புபவருக்கு
55	वीतभयाय	வீதபயாய	பயமின்றி இருப்பவருக்கு
56	गदिने	கதினே	கதாயுதத்தை பிரயோகம் செய்பவருக்கு
57	चक्रिणे	சக்ரினே	சக்கிராயுதத்தை பிரயோகம் செய்பவருக்கு
58	इक्षुचापधृते	இக்ஷுசாபத்ருதே	கரும்பு வில்லை உடையவருக்கு
59	श्रीदाय	ஸ்ரீதாய	சிறந்த செல்வத்தை வழங்குபவருக்கு
60	अजाय	அஜாய	தான்தோன்றியாக இருப்பவருக்கு
61	उत्पलकराय	உத்பலகராய	நீலநிற தாமரையை கையில் ஏந்தியிருப்பவருக்கு
62	श्रीपतये	ஸ்ரீபதயே	செல்வத்தின் தலைவனுக்கு
63	स्तुतिहर्षिताय	ஸ்துதிஹர்ஷிதாய	போற்றிப் பாடுவதால் மகிழ்ச்சி அடைபவருக்கு
64	कुलाद्रिभेत्रे	குலாத்ரிபேத்ரே	தனது குடும்பத்தின் இமயமலைக்கு துணையாக இருப்பவருக்கு
65	जटीलाय	ஜடிலாய	ஜடாமுடியை உடையவருக்கு
66	कलिकल्मषनाशनाय	களிகல்மஷநாஷனாய	கலியுக பாவங்களை அழிப்பவருக்கு
67	चन्द्रचूडामणये	சந்திரசூடாமனயே	பிறைசூடி

			இருப்பவருக்கு
68	कान्ताय	காந்தாய	அன்புடன் இருப்பவருக்கு

69	पापहारिणे	பாபஹாரினே	பாவங்களில் இருந்து விமோசனம் அளிப்பவருக்கு
70	समाहिताय	சமாஹிதாய	தியானத்தில் ஒடுங்கி இருப்பவருக்கு
71	आश्रिताय	ஆஷ்ரிதாய	நமக்கு அடைக்கலமாக இருப்பவருக்கு
72	श्रीकराय	ஸ்ரீகராய	செல்வத்தை வெளிப்படுத்துபவருக்கு
73	सौम्याय	சௌம்யாய	இனிய இயல்புடையவருக்கு
74	भक्तवाञ्चितदायकाय	பக்தவாஞ்சிததாயகாய	பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றுபவருக்கு
75	शान्ताय	சாந்தாய	அமைதியே உருவானவருக்கு
76	कैवल्यसुखदाय	கைவல்யசுகதாய	முக்தி சுகத்தை வழங்குபவருக்கு
77	सच्चिदानन्दविग्रहाय	சச்சிதானந்தவிக்ரஹாய	சச்சிதானந்த உருவாக இருப்பவருக்கு
78	ज्ञानिने	ஞானினே	ஞானியாக இருப்பவருக்கு
79	दयायुताय	தயாயுதாய	இரக்ககுணம் நிரம்பியவருக்கு
80	दान्ताय	தாந்தாய	தந்தத்தை உடையவருக்கு
81	ब्रह्मद्वेषविवर्जिताय	பிரம்மத்வேஷவிவர்ஜிதா-ய	அறிவு மீதான வெறுப்பை தியாகம் செய்தவருக்கு
82	प्रमत्तदैत्यभयदाय	ப்ரமத்ததைத்யபயதாய	அசுரர்களை அச்சுறுத்துபவருக்கு

83	श्रीकण्ठाय	ஸ்ரீகண்டாய	அழகான தொண்டையை உடையவருக்கு
84	विबुधेश्वराय	விபுதேஷ்வராய	ஞானிகளின் ஈசுவரனாக இருப்பவருக்கு
85	रमार्चिताय	ரமார்சிதாய	இலட்சுமி தேவி வழிபடும் தெய்வத்திற்கு
86	विधये	விதயே	சிறந்த வித்வானாக இருப்பவருக்கு
87	नागराजयज्ञोपवीतवते	நாகராஜயக்ஞோபவீதவ-தே	நாகத்தை பூணூலாக அணிந்து இருப்பவருக்கு
88	स्थूलकण्टाय	ஸ்தூலகண்டாய	பருமனான கழுத்தை உடையவருக்கு
89	स्वयंकर्त्रे	ஸ்வயம்கர்த்ரே	தான்தோன்றியாக இருப்பவருக்கு
90	सामघोषप्रियाय	சாமகோஷப்ரியாய	சாமவேத கோஷங்களை விரும்புபவருக்கு
91	परास्मै	பராஸ்மை	யாவும் கடந்து இருப்பவருக்கு
92	स्थूलतुण्डाय	ஸ்தூலதுண்டாய	பருமனான துதிக்கையை உடையவருக்கு
93	अग्रण्ये	அக்ரண்யே	முதன்மையாக இருப்பவருக்கு
94	धीराय	தீராய	தைரியமாக இருப்பவருக்கு
95	वागीशाय	வாகீஷாய	வாக்கின் தலைவராக இருப்பவருக்கு
96	सिधिदायकाय	சித்திதாயகாய	சித்தியை வழங்குபவருக்கு
97	दूर्वाबिल्वप्रियाय	தூர்வாபில்வப்ரியாய	அருகம் புல் மற்றும் வில்வ இலையை விரும்புபவருக்கு

98	अव्यक्तमूर्तये	அவ்யக்தமூர்த்தயே	தெளிவற்ற உருவத்தை உடையவருக்கு
99	अद्भुतमूर्तिमते	அத்புதமூர்திமதே	அற்புத உருவத்தை உடையவருக்கு

100	शैलेन्द्रतनुजोत्सङ्गकेल-नोत्सुकमानसाय	சைலேந்திரதனுஜோத்ச-ங்கேலநோத்சுகமானசாய	தனது தாயாகவும், ஹிமாவத் மலையின் மகளாகவும் இருக்கும் பார்வதியின் மடியில் விளையாடுவதில் மகிழ்ச்சி அடைபவருக்கு
101	स्वलावण्यसुधासारजित-मन्मथविग्रहाय	ஸ்வலாவண்யசுதசாரஜி-தமன்மதவிக்ரஹாய	மன்மதனைப் போன்ற உருவத்துடன், அமுத மழையையும் மிஞ்சும் அழகை உடையவருக்கு
102	समस्तजगदाधाराय	சமஸ்தஜகதாதாராய	அனைத்து லோகங்களுக்கும் ஆதாரமாக இருப்பவருக்கு
103	मायिने	மாயினே	மாயாசக்தியின் மூலமாக இருப்பவருக்கு
104	मूषिकवाहनाय	மூஷிகவாஹனாய	எலியை தனது வாகனமாக கொண்டிருப்பவருக்கு
105	हृष्टाय	ஹ்ருஷ்டாய	எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பவருக்கு
106	तुष्टाय	துஷ்டாய	திருப்தியுடன் இருப்பவருக்கு
107	प्रसन्नात्मने	பிரசன்னாத்மனே	பிரகாசமாக அன்போடு இருக்கும் ஆன்மாவிற்கு
108	सर्वसिद्धिप्रदायकाय	சர்வசித்திபிரதாயகாய	அனைத்து சித்திகளையும் வழங்குபவருக்கு

मन्त्र पुष्पम्

மந்த்ர புஷ்பம்


பூக்களுடன் வழிபாடு

यो॑ऽपां पुष्पं॒ वेद॑। पुष्प॑वान् प्र॒जावा॑न् पशु॒मान् भ॑वति।
च॒न्द्रमा॒ वा अ॒पां पुष्प॑म्। पुष्प॑वान् प्र॒जावा॑न् पशु॒मान् भ॑वति।
य एवं वेद॑। योऽपामा॒यत॑नं॒ वेद॑। आ॒यत॑नवान् भवति॥ १॥
ॐ श्री महागणेश्वराय नमः मन्त्रपुष्पाञ्जलिं समर्पयामि।

இரு கைகளிலும் பூக்கள் அல்லது அட்சதையை எடுத்துக்கொண்டு, இரண்டையும் ஒன்றாக கூப்பிய நிலையில் வைத்து இருங்கள். நீங்கள் மந்திரம் சொல்லி முடித்ததும் பூக்களை தெய்வத்திடம் சமர்ப்பிக்கவும்.

யோ'பாம் புஷ்பம் வேத | புஷ்பவான் ப்ரஜாவான் பசுமான் பவதி | சந்திரமா வா அபாம் புஷ்பம் | புஷ்பவான் ப்ரஜாவான் பசுமான் பவதி | ய ஏவம் வேத | யோ'பாமாயதனம் வேத | ஆயதனவான் பவதி ||1|| ஓம் ஸ்ரீ மஹாகணேஷ்வராய நம: மந்த்ரபுஷ்பாஞ்சலிம் சமர்பயாமி |

> யார் ஒருவர் பிரம்மத்தின் மலரும் சக்தியை பற்றி புரிந்து கொள்கிறாரோ, அவர் வாழ்க்கையில் அழகான மலர், சந்ததி மற்றும் பசுவை பெறுகிறார். அந்த சக்திகளின் மலராக சந்திரன் இருக்கிறது. மலரும் தெய்வீக சக்திகளாக இருக்கும் சந்திரனின் பண்புகளை உணர்ந்தவர் அழகாக மலர்ந்த நிறைவான வாழ்க்கை, சந்ததி மற்றும் பசுவை பெறுகிறார். இந்த அடிப்படை மற்றும் இந்த சக்திகளின் ஆதாரத்தையும் உணர்பவர், அந்த தெய்வீக சக்திகளின் இருப்பிடமாக மாறுகிறார். ஓம் மகாகணேசஷ்வரனுக்கு நமசுகாராம். நாங்கள் உனக்கு இந்த புஷ்ப மந்திரத்தை பணிவோடு சமர்பிக்கிறோம்.



இந்த மந்திரத்தை சொல்லும் போது, அஞ்சலி முத்திரையுடன் கைநிறைய பூக்களை மார்பு உயரத்தில் வைத்து இருக்கவும். இந்த மந்திரத்தை பக்தியுடன் சொல்லவேண்டும். இறுதியாக சமர்பயாமி என்று சொல்லும் போது, (புகைப்படத்தில் இருப்பதைப் போன்று) கைகளை கீழே இறக்கி பூக்களை மூர்த்தியின் மேலே நன்றியுணர்வு மற்றும் அன்பு கலந்த பக்தியோடும் சமர்ப்பிக்கவும்.

आरती

ஆரத்தி

ஆரத்தி எடுத்தல்

ॐ साज्यं त्रिवर्तिसंयुक्तं वह्निना योजितं मया ।
गृहान मङ्गलारतिं ईशपुत्र नमोऽस्तु ते ॥
ॐ आवहिताभ्यः सर्वाभ्यो देवताभ्यो नमः ।
दिव्यमङ्गलदीपं सन्दर्शयामि ।
आचमनीयं समर्पयामि । मङ्गलाक्षतान् समर्पयामि ।



மணி அடிக்கவும். ஓங்கார வடிவில் மூன்று முறை வட்டமிடவும். பலமாக மணி அடிக்கவும்.

ஓம் சாஜ்யம் த்ரீவர்த்திசம்யுக்தம் வஹ்நினா யோஜிதம் மயா | க்ருஹான மங்களாரதிம் ஈஷபுத்ர நமோஸ்துதே ||

பலமாக மணி அடியுங்கள்.

ஓம் ஆவாஹிதாப்யஹ சர்வாப்யோ தேவதாப்யோ நம: | திவ்ய மங்களதீபம் சந்தர்ஷயாமி |

உத்தரணியால் ஆசமனம் செய்ய நீரை வழங்கவும். அட்சதை சமர்ப்பிக்கவும்.

ஆசமனீயம் சமர்பயாமி | மங்களாக்ஷதான் சமர்பயாமி |


> சிவபெருமானின் மகனான கணபதியே, மூன்று திரிகள் மற்றும் அக்னி மற்றும் நெய்யுடன் நான் தயார் செய்த மங்களகரமான ஆரத்தியை தயவு செய்து ஏற்றுக்கொள். உனக்கு எனது நமசுகாரங்கள்! ஓம்! ஆவாகனம் செய்யப்பட்ட தெய்வங்களுக்கு நமசுகாரங்கள்! நாங்கள் இந்த தெய்வீகமான, மங்களகரமான தீபத்தை உனக்கு கண்பிக்கிறோம். அதன் பிறகு நீ ஆசமனம் செய்ய சுத்தமான நீரையும் மங்கள அட்சதையையும் வழங்குகிறோம்.

இந்த மந்திரத்தை சொல்லும் போது, எண்ணெய் விளக்கு அல்லது கற்பூரத் தட்டை வலது கையிலும், இடது கையில் மணியையும் வைத்துக் கொள்ளவும். மெதுவாக மந்திரத்தை சொல்லி மணியை அடிக்கும் போது, அந்த தீபத்தால் விநாயகர் முன்பாக மூன்று முறை சுற்றவும். மூன்று முறை முழுமையாக சுற்றிய பிறகு, தீபத்தை சிறிது கீழே இறக்கி, சமஸ்கிருதம் அல்லது உங்களுக்கு

தெரிந்த மொழியில் ஓங்காரத்தை வரையுங்கள். அதன் பிறகு அந்த ஓங்காரத்தில் இருந்து அந்த தீபத்தை சற்று மேலே ஆகாசத்தில் உயர்த்தி, மூன்று லோகங்களுக்கும் கேட்குமாறு பலமாக மணி அடிக்கவும். தேவர்களுக்கு வந்தனம் செய்யும் இரண்டு வரிகளை சொல்லும் போது, தொடர்ந்து பலமாக மணி அடிக்கவும் (“ஆவாஹிதாப்யஹ ... சந்தர்ஷயாமி”). தீபம் எரிந்துக்கொண்டிருக்கும் போது, மணி மற்றும் விளக்கை கீழே வைத்து, “ஆசமனீயம் சமர்பயாமி,” என்று சொல்லி உத்தரணியில் நீரையும், “மங்களாக்ஷதான் சமர்பயாமி” என்று சொல்லி சிறிது அட்சதையை வழங்கவும்.

रक्षधारणम्
ரக்ஷாதாரணம்

பாதுகாப்பு வேண்டி பிரார்த்தனை




इन्द्र स्तोमेंन पञ्चदशेन
मध्यमिदं वतेंन सगरेंण
रक्ष रक्षां धारयामि।

விளக்கை கீழே வைத்து, அதை பூவினால் மூன்று முறை சுற்றவும்

இந்திர ஸ்தோமேன பஞ்சதசேன
மத்யமிதம் வதேன சகரேண
ரக்ஷா ரக்ஷாம் தாரயாமி |

> லௌகீக மற்றும் ஆன்மீக செழுமையின் கடவுளாக இருக்கும் இந்திர தேவனே, சொர்க்கலோகங்கள் மற்றும் பூமிக்கு மத்தியில் இருக்கும் பகுதி மற்றும் உடல் மற்றும் ஆன்மாவிற்கு மத்தியில் இருக்கும் மனதை, பதினைந்து உன்னத சக்திகள் மற்றும் பண்புகள் (ஐந்து பிராண சக்திகள், ஐந்து ஞானேந்திரியங்கள் மற்றும் ஐந்து கர்மேந்திரியங்கள்) மூலம் காப்பாற்றுவாயாக. உனது பாதுகாப்பும் அருளும் என்னை நிலைநிறுத்துகிறது.

இந்த மந்திரத்தை சொல்லும் போது, காம்பு மேல்நோக்கி இருக்கும் படியாக கையில் பிடித்திருக்கும் மலரால் விளக்கை மூன்று முறை வட்டமிட்டு, மந்திரம் சொல்லி முடிக்கும் போது, அந்த மலரை மெதுவாக தெய்வத்திடம் சமர்பித்து, பீடத்தை பார்த்தபடி உங்கள் கைகளை அஞ்சலி முத்திரையில் வைத்து இருங்கள்.
இதன் பிறகு மார்பின் உயரத்தில் அந்த ஆரத்தி தட்டை, வந்திருக்கும் அனைவருக்கும் வழங்குங்கள். அவர்கள் அனைவரும் தங்கள் கைகளால் அந்த ஆரத்தியை தொட்டு மூன்று முறை கண்களில் (அடுத்த பக்கத்தில் மேலே வலமாக இருக்கும் புகைப்படம்) ஒற்றிக்கொள்வார்கள். அந்த ஆரத்தியின் வாயிலாக மகாதேவர்களும் தேவர்களும் நம்மை பார்த்து ஆசிகளை வழங்கமுடியும். குரு, பெற்றோர்கள் அல்லது ஆசிரியர் போன்ற முக்கிய நபர்கள் பூஜைக்கு வந்திருந்தால், அந்த ஆரத்தியை முதலில் அவர்களுக்கு காண்பியுங்கள். அதன் பிறகு அதை வலஞ்சுசியாக மற்றவர்களுக்கு காண்பியுங்கள். சில சமயங்களில் பூசாரி பீடத்தின் முன்பாக நின்று இருப்பார், மற்றும் பக்தர்கள் ஆரத்தியை தொட்டு ஒற்றிக்கொள்வதற்கு முன்வருவார்கள். யாரும் பூஜையில் பங்குபெறவில்லை என்றால், நீங்கள் அந்த ஆரத்தியில் இருந்து தெய்வீக அருளை தனிப்பட்ட முறையில் பெறலாம். ஆனால் பக்தர்கள் வந்து இருந்தால், அவர்களுக்கு ஆரத்தியை வழங்கவேண்டும். இறுதியாக ஆரத்தியை மீண்டும் ஒருமுறை தெய்வத்திற்கு காண்பித்து விட்டு, அதை வலது கை அசைப்பினால் அல்லது ஒரு பூவின் மூலம் அணைத்து விடுங்கள்.



अर्पणम्
அர்ப்பணம்

அர்ப்பணம் செய்தல்

अनया यथाशक्त्या कृत (அன்றைய காலநேரத்தை பின்வரும் பட்டியலில் இருந்து சேர்த்துக் கொள்ளவும்)
पूजया भगवान् सर्वदेवात्मकः
श्रीमहागणेश्वरः सुप्रीतः
सुप्रसन्नो वरदो भवतु ।

அட்சதை மற்றும் நீரை கையில் எடுத்து, தெய்வத்திற்கு சமர்ப்பணம் செய்யவும்.

அனயா யதாசக்த்யா க்ருத (அன்றைய காலநேரத்தை பின்வரும் பட்டியலில் இருந்து சேர்த்துக் கொள்ளவும்)
பூஜயா பகவான் சர்வதேவாத்மக:
ஸ்ரீ மஹாகணேஷ்வரஹ சுப்ரீத:
சுப்ரசன்னோ வரதோ பவது

ஒரு நாளில் இருக்கும் ஐந்து காலங்கள் (மேலிருக்கும் மந்திரத்திற்கு பொருத்தமான ஒன்றை தேர்ந்தெடுக்கவும்)

उषः काल உஷ: கால, விடியற்காலை
प्रातः काल ப்ராத: கால, காலைj
मध्याह्नकाल மத்யாஹ்னகால, மதியம்

सायङ्काल சாயங்கால, மாலை
ऊर्ध्वयामकाल ஊர்த்வயாமகால, இரவு

அனைத்து மகாதேவர்களின் பண்புகளுடன் இருக்கும் தெய்வமே, நான் இந்த (காலத்தை சேர்க்கவும்) பூஜையை பிரார்த்தனையுடன் யதாசக்தி செய்து இருக்கிறேன். அன்பான விநாயகா, நீ இதன் மூலம் திருப்தி அடைந்து, கருணையுடன் எனது வேண்டுதல்களை நிறைவேற்ற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மந்திரத்தை சொல்லும் முன்பாக, சிறிது அட்சதையை இடது உள்ளங்கையில் எடுத்து, அதை உடனடியாக வலது உள்ளங்கைக்கு மாற்றிக்கொள்ளவும். அந்த அட்சதையுடன் மூன்று உத்தரணி நீரை சேர்த்து, அந்த கையை மூடிக்கொள்ளவும். நீங்கள் அட்சதை இருக்கும் வலது கையை நீட்டி தெய்வத்தை பார்த்து இருக்க, அதன் கீழே இடது கையை வைத்துக்கொண்டு இந்த மந்திரத்தை சொல்லவேண்டும். நீங்கள் மந்திரத்தை சொல்லி முடித்ததும், கையில் இருக்கும் அட்சதை மற்றும் நீரை தீர்த்த பாத்திரத்தில் விடவும். அதன் பிறகு வந்தவர்களுக்கு விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம், நைவேத்தியம் மற்றும் பூக்கள் என்ற வரிசையில் பிரசாதத்தை வழங்கலாம். யாரும் பூஜைக்கு வரவில்லை என்றால், நீங்கள் பிரசாதத்தை எடுத்துக்கொள்ளலாம். பல பக்தர்கள் கூடியிருந்தால், எப்போதும் பூஜை செய்தவர் மட்டுமே விபூதியை வழங்க வேண்டும். மற்ற பிரசாதங்களை இன்னொரு நபர் வழங்கி உதவி செய்யலாம்.





विसर्जनम्
விசர்ஜனம்

வழியனுப்புதல் மற்றும் மன்னிப்பு கோருதல்

கைகளை அஞ்சலி முத்திரையில் வைத்து இருந்து, மந்திரம் சொல்லி முடித்து நமசுகாரம் செய்யுங்கள்.

ॐ आवाहनं न जानामि न जानामि विसर्जनम् ।
पूजाञ्चैव न जानामि क्षम्यतां परमेश्वर ॥
मन्त्रहीनं क्रियाहीनमं भक्तिहीनं सुरेश्वर ।
यत् पूजितं मया देव परिपूर्णं तदस्तु ते ।
अन्यथा शरणमं नास्ति त्वमेव शरणमं मम ।
तस्मात् कारुण्यभावेन रक्ष रक्ष गणेश्वर ॥ ॐ तत् सत् ॐ

ஓம் ஆவாஹனம் ந ஜானாமி ந ஜானாமி விசர்ஜனம்
பூஜாஞ்சைவ ந ஜானாமி க்ஷம்யதாம் பரமேஸ்வர.
மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் சுரேஷ்வர,
யத் பூஜிதம் மயா தேவ பரிபூர்ணம் ததஸ்து தே,
அன்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம,
தஸ்மாத் காருண்யபாவேன ரக்ஷ ரக்ஷ கணேஷ்வர.
ஓம் தத் சத் ஓம்.

இறைவா, எங்களுக்கு முறையாக எவ்வாறு ஆவாகனம் செய்வது அல்லது எப்போது விடைபெறுவது அல்லது எவ்வாறு வழியுனுப்புவது என்று தெரியாது. பூஜை செய்யும் சடங்குகள் எங்களுக்கு முழுமையாக அறிவுறுத்தப்படவில்லை. அதனால் நாங்கள் செய்த தவறுகள் அல்லது விடுபாடுகளை மறந்து மன்னித்து அருள வேண்டும். எங்களுக்கு குறைவான மந்திரங்கள் மற்றும் பூஜை செய்முறைகள் தெரியும். எங்களுக்கு உண்மையான பக்தியும் இல்லை. இருப்பினும் நீ மட்டுமே எங்களுக்கு அடைக்கலமாக இருப்பதால், எங்களை மன்னித்து எங்களது முயற்சிகளை முழுமையானதாக கருதவேண்டும். அன்பான விநாயகா, நீ உனது இரக்க குணத்துடன், உன்னை பிரார்த்தனை செய்பவர்களை பாதுகாக்க வேண்டும் என்று உன்னிடம் மன்றாடுகிறோம். அந்த மெய்ப்பொருளாக இருப்பது ஓங்காரமே.




இந்த மன்னிப்பு நிறைவாக அஞ்சலி முத்திரையுடன் உச்சரிக்கப்படுகிறது. இது மனதில் சிரத்தையுடன் முறையாக வழிபாட்டை நிறைவு செய்கிறது. "ஓம் தத் சத் ஓம்" என்று சொல்லி முடிக்கும் போது, மூன்று முறை கைத்தட்டிக் கொள்வது வழக்கம் ஆகும். இனி எல்லோரும் நமசுகாரம் செய்யலாம்.



பூஜை முடிந்த பிறகு நமது அன்றாட கடமைகளுக்கு விரைவதை காட்டிலும், சில நிமிடங்களுக்கு தியானம் செய்வது பாரம்பரியமாக இருப்பதோடு புத்துணர்வையும் வழங்குகிறது. கண்களை மூடிக்கொண்டு, மனதை நிலைநிறுத்தி, பூஜை உங்களுக்குள் உருவாக்கிய பிராண சக்திகளை பின்தொடர்ந்து உங்களுக்குள் ஆழமாக செல்லும் அக வழிபாடு சிறந்த பலனை தருகிறது. புற வழிபாடு என்பது பக்தி மார்கம் ஆகும். அக வழிபாடு என்பது யோக மார்கம் ஆகும். இரண்டும் ஒன்று சேர்ந்து வழங்கும் பூரணத்துவம், பக்தர்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கி, அவர்களது அன்றாட வாழ்க்கையில் உலக சக்திகளை இயக்குவதற்கு வலிமை மற்றும் பணிவை வழங்குகிறது. சுயமாற்றம் மற்றும் நேர்மையான வாழ்க்கையை நோக்கி அழைத்து செல்லும் இந்த இருவழி முயற்சியானது, சாதகர்கள் அனைவருக்கும் இறுதி இலக்காக விளங்கும் முக்தியை பெறுவதற்கு முக்கிய அடிப்படையாக விளங்குகிறது.





CHAPTER FOURTEEN
Around the World



உலகம் முழுவதும்

பரிபுவனம்

परिभुवनम्




பூமியில் வாழும் அனைவரும் மகாகணபதியை, நமக்கு பிடித்த பெயரான "அன்பான விநாயகர்" என்ற பொருளைத் தரும் பிரேமவான் கணேஷா என்று அழைப்பதில்லை என்றாலும், அவர் இந்துக்களுக்கு மட்டும் அல்லாமல், மனித நேயம் முழுவதற்கும் சொந்தமானவர். அவர் சீனர்களுக்கு உருவில் பெரிய டிராகன் வடிவமாக இருக்கிறார். அந்த டிராகனின் மிகப்பெரிய தூல உருவம், வியக்கத்தக்க வெல்லமுடியாத அவரது ஆற்றலை குறிப்பிடுகிறது. அவர் மேலும் சில சீனர்களுக்கு, பெரிய வயிற்றுடன் மகிழ்ச்சியின் கடவுளான குவான்-சி டியன் அல்லது ஹோ டீ வடிவாக இருக்கிறார். அவர் ஹவாய் தீவில் வாழும் பொலினீசிய மக்களுக்கு லோனோ கடவுளாக இருக்கிறார்.

அவரை தென்னிந்திய மற்றும் இலங்கை தமிழர்கள் அன்போடு பிள்ளையார் என்று அழைக்கிறார்கள். அவரை திபெத்தியர்கள் ட்சோக்ஸ்படாக் என்று அழைக்கிறார்கள். அவரை பர்மா நாட்டவர்கள் மஹா-பியேன் என்ற பெயரில் வழிபடுகிறார்கள். அவர் மங்கோலியாவில் தோட்கரூர் காகன் என்று அழைக்கப்படுகிறார். கம்போடியர்கள் ப்ரா கேன்ஸ் என்று அவரை வழிபடுகிறார்கள் மற்றும் ஜப்பான் நாட்டவர்கள் அவரை விநாயக்சா அல்லது சோ-டென் என்று வழிபடுகிறார்கள். அவரை சிலர் இயற்கை அன்னையாக கற்பனை செய்கிறார்கள். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும், ஆற்றல்மிக்க அவரது சக்திகளை விதி, நியூமன் என்று உருவகப்படுத்தி அவரை புரிந்துகொள்ள முயற்சி செய்கிறார்கள். அவரை பழங்கால எகிப்தியர்கள் இரண்டாம் நிலை கடவுளாக அறிந்து இருந்தாலும், அவர் பெஸ் என்ற பெயரில் பெரிய வயிற்றுடன் கோரமாகவும் உற்சாகமாகவும் மிகவும் பிரபலமான கடவுளாகவும் இருந்தார். ரோமர்கள் அவரை ஜெனஸ் என்று அழைத்து, புதிய பணியின் தொடக்கத்தில் அவரது ஆசிகளை நாடினார்கள். (அவரது பெயர் சூட்டப்பட்ட) ஜனவரி மாத முதல் தேதியன்று அவருக்கு நடைபெற்ற பண்டிகையில், அவர் விசேஷமான கேக்கள் மூலம் உபசரிக்கப்பட்டார். புதிய வருடத்தில் நல்ல தொடக்கமாக, மக்கள் பரஸ்பர நல்வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டு, இனிப்புகளை பரிசாக வழங்கிக்கொண்டார்கள். மேற்கத்திய நாடுகளில், அவர் பருமனாக மகிழ்ச்சியுடன் எங்கும் தென்பட்டு, நமது சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்களை அறிந்திருந்து, அதற்கேற்ப

பரிசுகளை வழங்கி, குறிப்பாக குழந்தைகளுக்கு வரங்கள் மற்றும் பரிசுகளை வழங்கும் சான்டா கிளாஸ் தாத்தாவாக இருக்கிறார். விநாயகரை பௌத்தர்கள் மற்றும் சமணர்களும் மரியாதை செலுத்துகிறார்கள். அவர் ஏதாவது ஒரு ரூபத்தில் உலகெங்கும் வணங்கப்படுகிறார்.

“பிரகாசமான எண்ணங்கள் தோன்றுவதற்கு விநாயகர் வழிபாடு மிகவும் பயனுள்ள முறையாக இருப்பதால் சைவர்கள், வைணவர்கள், சாக்தர்கள், சுமார்த்தர்கள், குமாரர்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்கள் என்று பல சமயத்தை சேர்ந்தவர்கள், விக்கினங்கள் அழிக்கும் அவரை நாடி இறையருளை பெற முயற்சி செய்கின்றனர்,” என்று இலங்கை சிவயோகசுவாமியின் சீடனான பிரபல எழுத்தாளர் ரத்னா மா நவரத்தினம் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார் (*ஓம் கணேஷா, தி பீஸ் ஆப் காட்*, ப. 176).

ஒவ்வொரு கண்டத்திலும் நடைபெறும் எண்ணற்ற பூஜைகளில், இந்துக்கள் முழுமுதல் கடவுளாக இருக்கும் விநாயகரை வழிபடுகிறார்கள். இந்தியா, இலங்கை, நேபாளம், மலேசியா, ஜாவா, பாலி, போர்னியோ, திபெத், மியான்மர், சியாம், ஆப்கானிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகள், சீனா, இந்தோ-சீனா, ஜப்பான், கரீபியன், டிரினிடாட் மற்றும் டொபாகோ, ஹவாய் மற்றும் பசிபிக் தீவுகள், ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், ரீயூனியன், ஐரோப்பா, ஆஸ்திரேலியா, கனடா, தென் அமெரிக்கா, அமெரிக்கா மற்றும் வேறுபல நாடுகளில் இருக்கும் கோயில்கள் மற்றும் பூஜை அறைகளில், இன்று விநாயகர் வழிபடப்படுகிறார்.



ஒவ்வொரு இந்து கிராமத்திலும் சமூகத்திலும் ஒரு விநாயகர் சிலை இடம்பெற்றிருக்கிறது. பல்வேறு விநாயக உருவங்களில், ஏதேனும் ஒரு உருவத்தை ஒவ்வொரு இந்து கோயிலிலும் காணலாம். “விநாயகர் சிலை வழக்கமாக ஒவ்வொரு சிவன் கோயிலிலும், தெற்கில் இருக்கும் மூலஸ்தான நுழைவாயில் மற்றும் முதல் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையிலும் அமைந்து இருக்கும். இதைத் தவிர அவர் பல கோயிலில் நடனமாடும் தோரணையில் நர்த்தன கணபதியாக கிழக்கில் இருக்கும் முதல் *கோஷ்டத்தில்* (தனியிடம்), *அர்த்த மண்டபத்தின்* தெற்கு சுவரில் அமைந்து இருக்கிறார். அவரது துதிக்கை

இடது புறமாக திரும்பி, பெரும்பாலும் அவரது இடது கையில் இருக்கும் மோதகத்தை தொட்டுக்கொண்டு இருக்கும். அவரது துதிக்கை சில சமயங்களில் வலது பக்கம் திரும்பி, வலது கையில் இருக்கும் மோதகத்தை தொட்டுக்கொண்டு இருக்கும். இவ்வாறு தென்படும் தெய்வம் வலம்புரி விநாயகர் என்று அழைக்கப்படுகிறார்," (*பெஸ்டிவல்ஸ் ஆப் தமிழ்நாடு*, 1980, ப. 112) என்று பிரசித்திபெற்ற அறிஞர் ம. அருணாச்சலம் குறிப்பிட்டு இருக்கிறார்.

சாலையோர சந்நிதிகள்

அனைத்து இந்து கோயில்களிலும் விநாயகர் சந்நிதிகள் இருக்கின்றன என்றாலும், அவருக்கு என்று தனிப்பட்ட சந்நிதிகளையும் அவ்வப்போது காணமுடிகிறது. இலங்கையில் யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரத்திற்கு மத்தியில் இருப்பதைப் போன்று அல்லது தென்னிந்திய சாலைகளில் ஆங்காங்கே இருப்பதைப் போன்று, அவை சாலையோரங்களில் மிகவும் எளிமையாக காட்சி அளிக்கின்றன. இங்கே விநாயகருக்கு சிதறு தேங்காய் உடைப்பதற்கும் கற்பூரம் ஏற்றுவதற்கும் பயணிகள் தங்கள் பயணத்தை நிறுத்தி, தங்கள் பயணம் பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்து முடியவெண்டும் என்று விக்கினங்கள் நீக்கும் விநாயகரை வேண்டிக்கொள்கின்றனர். அதைப்போன்ற ஒரு சந்நிதி சென்னையில் இருக்கும் ஒரு பல்கலைகழகத்திலும் உள்ளது. ஒரு இளைஞன் பல வருடங்களுக்கு முன்பாக, ஒரு அடிமரத்தில் அமைந்து இருந்த மரக்கணு, விநாயகரின் தலையை போன்று இருந்ததை கண்டுபிடித்தார். அந்த மரத்தை வழிபடத்தொடங்கிய அவர், அந்த இடத்தை விட்டு நகரப் போவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். அவர் அந்த சிறிய வளாகத்தை விட்டு விலகாமல், பல வருடங்களாக பூசாரியாக சேவை செய்தும் *சாதனைகளை* செய்தும் வந்தார். அந்த விநாயகரின் அருளை பெறுவதற்கு பரீட்சை எழுதவிருந்த மாணவர்கள் மற்றும் பயணிகள் வருகிறார்கள். அத்தகைய மரத்தடி விநாயகர்களை தரிசிக்க வருடந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகிறார்கள்.

செங்குத்தான சரிவுகள், நதியை கடக்கும் இடங்கள் அல்லது இரு சாலைகள் சந்திக்கும் இடங்கள் போன்ற அபாயகரமான பகுதிகளில் அவரது உருவத்தை வழக்கமாக காணமுடிகிறது. அந்த பகுதிகளில் அவரது *மூர்த்தி*, விநாயகரின் வடிவத்தைப் பெற்ற ஒரு கரடுமுரடாக உடைந்த பாறை அல்லது ஒரு அத்தி மரம் அல்லது ஆலமரத்தின் அடிப்பகுதியாகவும் இருக்கலாம். மக்கள் ஒரு *சுயம்பு மூர்த்தியையும்* வழிபட வாய்ப்புள்ளது. "பிரபலமான விநாயகர் *சுயம்பு மூர்த்திகள்* காஷ்மீரில் இருக்கின்றன. அவற்றில் மூன்று மிகவும் பிரபலமான மற்றும் அதிக ஆற்றல்மிக்க அருவ கற்கள் ஆகும். இவற்றை தரிசிக்க பல்லாண்டகளாக பக்தர்கள் வந்துக்கொண்டு இருக்கிறார்கள். அதில் ஒன்று கணேஷ்-பல் கிராமத்திற்கு அருகில், லிடார் நதியின் வலது கரைக்கு அருகில் உள்ளது. அது இன்றும் புண்ணிய தளமாக இருந்து வருகிறது.... ஸ்ரீநகர் அருகில்

ஹரி-பர்பத் மலையடிவாரத்தில் பீமாஸ்வாமின் என்ற பெயரில் விநாயகர் வடிவமாக பழங்காலம் முதல் இன்னொரு பாறை காஷ்மீரில் வழிபடப்பட்டு வருகிறது.... இந்த காஷ்மீர் *சுயம்பு மூர்த்திகளில்* கணேஷ்-காடி என்று அழைக்கப்படும் கிஷன்-கங்கா அருகில் இருக்கும் ஒரு செங்குத்தான பாறை மிகவும் சிறப்பானதாக விளங்குகிறது," என்று ஆராய்ச்சியாளர் அலைஸ் கெட்டி குறிப்பிடுகிறார் (*கணேஷா, ய மோனோகிராப் ஆன் தி எலிபண்ட்-பேசுடு காட்*, எழுதியவர் அலைஸ் கெட்டி, 1971, ப. 22-23).

பிரபல விநாயகர் கோயில்கள்

இந்தியாவில் மிகவும் பிரபலமான விநாயகர் கோயிலாக திருச்சியில் இருக்கும் உச்சிப்பிள்ளையார் கோயில் விளங்குகிறது. (மலைக்கோட்டை கோயில் என்றும் அழைக்கப்படும்) இந்த பெரிய கோயில், மலையுச்சியில் கட்டப்பட்டுள்ளது. இதன் உச்சியில் இருந்து திருச்சி நகரம் மற்றும் காவேரி நதியின் அழகான காட்சியை காணமுடிகிறது. தமிழ்நாட்டில் இராமநாதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள பிள்ளையார்பட்டி கோயில், விநாயகருக்கு மலையை குடைந்து கட்டப்பட்ட இன்னொரு பெரிய கோயில் ஆகும். புது டில்லி விஜயநகரத்தில் சித்தி புத்தி விநாயகர் கோயில் அமைந்துள்ளது. இந்தியாவில் இருக்கும் மதுரை நகர மீனாட்சி அம்மன் கோயிலில் அமைந்துள்ள முக்குறுணி பிள்ளையாரும் மிகவும் பிரசித்தமாக விளங்குகிறது. இந்த *மூர்த்தி* பத்து முதல் பன்னிரண்டு அடி உயரத்துடன் இருக்கிறது. முக்குறுணி என்பது மூன்று மரக்கால் அளவு அரிசியை (சுமார் நாற்பது பௌண்ட்கள்) குறிக்கிறது. இந்த சந்நிதியில் இருக்கும் பூசாரிகள், முக்குறுணி அளவு அரிசியில் ஒரு பெரிய மோதகத்தை தயார் செய்கிறார்கள். இதனால் இவர் முக்குறுணி பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். மேலும் மதுரையில் விநாயகர், புலியின் கால்களுடன் பெண் உருவில் இருக்கும் வியாக்ரபாத கணேசனியாக வழிபடப்படுகிறார். சுசீந்திரம் நகரில் கணேசனி *மூர்த்தி சுகாசனத்தில்* வாசம் செய்கிறார். இந்தியாவில் மேலும் இரண்டு பெண் உருவ விநாயகர் கோயில்கள் உள்ளன. அதில் ஒன்று, ஜபல்பூர் அருகே பேராகட் கிராமத்தில் அறுபத்தி நான்கு *யோகினிகளுக்கு* என்று அர்ப்பணிக்கப்பட்ட பத்தாம் நூற்றாண்டு கோயில் இருக்கிறது. இதைத் தவிர, இதைப்போன்று தமிழ்நாட்டின் சுசீந்திரத்தில் தாணுமாலயன் சுவாமி கோயிலும் இருக்கிறது. பெண் உருவ விநாயகர் திபெத் நாட்டில் கஜானனி என்ற பெயரில் பூஜிக்கப்படுகிறார்.

ஐந்து தலைகளுடன் சிங்கத்தை வாகனமாக கொண்ட விநாயகர் நாகப்பட்டினத்தில் வாசம் செய்கிறார். இந்தியாவின் வேலூர் நகரில், தனது துதிக்கையை இடதுபுறமாக அல்லாமல் வலதுபுறமாக திருப்பிய வலம்புரி விநாயகராக அவர் அருள் பாலிக்கிறார். இந்த *மூர்த்தி* மிகவும் மங்களகரமானதாக கருதப்படுகிறது. திருநெல்வேலி சிவன் கோயில், இந்தியாவின் தென்முனையில் இருக்கும் கன்னியாகுமரி கோயில், ராமேசுவரம்

மற்றும் சிதம்பரத்தில் இருக்கும் கோயில் பிரகாரங்களிலும் அதிகம் பூஜிக்கப்படும் விநாயகர் சந்நிதிகளை காண முடிகிறது. குறிப்பாக நமது அன்பான விநாயகர் மகாராஷ்டிர மாநிலத்தில் பக்தர்களுக்கு அதிகம் பிரியமானவராக இருக்கிறார். அந்த மாநிலத்தில் அவருக்கு இருக்கும் எட்டு கோயில்கள் பிரபல புண்ணியத் தலங்களாக விளங்குகின்றன மற்றும் அவரை உபாசனை செய்ய மேலும் பல தலங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. அறிந்தும் அறியாமலும் கடந்தகாலத்தில் செய்த எதிர்மறை கர்மவினைகள் மற்றும் தவறுகளை, அவரது அருளுடன் கரைத்து எதிர்கால கர்மவினைகளை சீர் செய்வதற்கு, 108 விநாயகர் கோயில்கள் அல்லது மரத்தடி பிள்ளையார்களை சென்று தரிசிக்க உடலை வருத்தி யாத்திரைகளை (இரயிலில் மூன்றாம் வகுப்பு, நடைப்பயணம் அல்லது அங்கப்பிரத்சணம் செய்வதைப் போன்று) மேற்கொள்வது மிகவும் உகந்தது என்று கருதப்படுகிறது. இத்தகைய தவங்கள் நீண்டகாலத்திற்கு அனுபவிக்க வேண்டிய வேதனைகளை, நிதானத்தோடு ஒரு குறுகிய காலமாக சுருக்குகிறது அல்லது அனைத்தையும் ஓரிடத்தில் சேர்க்கிறது.

பூங்காக்கள் நிறைந்த தீவாக இருக்கும் இலங்கையில் பதினான்கு பிரபல விநாயகர் கோயில்கள் உள்ளன. மத்திய ஜாவா மாகாணத்தில் இருக்கும் சிவன் கோயிலில் ஒரு அபூர்வ விநாயகர் சிலை இருக்கிறது. அதை தற்போது இந்தோனேஷிய அரசு புதுப்பித்து ஒரு தொல்பொருள் சுற்றுலா தலமாக மாற்றியுள்ளது. இந்த கோயிலில் விநாயகர், ஒரு குழந்தை உட்காருவதைப் போல அல்லது ஆழ்ந்த *சமாதியில்* இருக்கும் ஒரு யோகியைப் போல, அவர் தனது இரு உள்ளங்கால்களையும் அழுத்திக்கொண்டு அமர்ந்து இருக்கிறார்.

தொல்பொருள் கண்டுபிடிப்புகள்

“மத்திய அமெரிக்கா மற்றும் மெக்சிகோ நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அகழ்வாராய்ச்சிகளின் போது பல்வேறு விநாயகர் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விநாயகர் மெக்சிகோவில் விராகோசா என்று அழைக்கப்படுவதாக கூறப்படுகிறது,” என்று திரு எச். கிருஷ்ணமூர்த்தி *தத்வலோகா* (பிப்ரவரி-மார்ச் 1990) இதழில் குறிப்பிட்டுள்ளார். “வியாசர் சொல்லி விநாயகர் மகாபாரதம் எழுதியதாக கூறப்படும் புராணக்கதைக்கு சான்றாக ஒரு உலோக தகடு கிடைத்துள்ளது. மேற்கு ஈரானின் லுறிஸ்டன் நகரில் கண்டெடுக்கப்பட்ட அந்த தகடில், ஒரு ஆனைமுக கடவுள் கையில் ஒரு எழுதுகோலுடன் இருப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அது கி.மு. 1200 ஆம் ஆண்டை சேர்ந்ததாக கருதப்படுகிறது (*மோதிலால் பனாரசிதாஸ் நியூஸ்லெட்டர்* டிசம்பர் 1993),” என்று பல வருடங்கள் முன்பு, பிர்லா அறிவியல் கழகம் ஒரு புதிய கண்டுபிடிப்பை அறிவித்தது.

மலேசியா மற்றும் மற்ற இடங்களில்

மலேசியா நாட்டில் இருக்கும் மிகவும் பிரபலமாக விநாயகர் கோயில்களில், பெட்டாலிங் ஜெயாவில் இருக்கும் சித்தி விநாயகர் கோயில் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பதுரயா சாலையில் அமைந்திருக்கும் கோலாலம்பூரின் கோட்டை மலை பிள்ளையார் கோயிலும் அடங்கும். இரண்டாவது கோயில் சிறியதாக இருந்தாலும், அது அதிக ஆற்றல்மிக்கதாகவும் அந்த நாட்டின் பிரபலமான விநாயகர் கோயிலாகவும் கருதப்படுகிறது. இதைத் தவிர அந்நாட்டில் ஜலான் புது (பாசர் ரோடு) பிள்ளையார் கோயில் மற்றும் மலாக்காவில் இருக்கும் பொய்யாத விநாயக மூர்த்தி கோயில் ஆகியவை குறிப்பிட்டதக்க கோயில்களாக விளங்குகின்றன. ஹவாய் தீவில் இருக்கும் நமது கடவுள் இந்து கோயில், மடவாசிகள் மற்றும் தீட்சை பெற்ற உறுப்பினர்கள் தரிசனம் செய்ய மூன்று டன் எடையுடன், ஆறு அடி உயர விநாயகரை கொண்டு அமைந்துள்ளது. மொரிஷியஸ் நாட்டின் ரிவியர் து ரெம்பார்ட்டில் அமைந்து இருக்கும் சைவ தர்மசாலையில், நாங்கள் ஒரு ஆன்மீக பூங்காவை அர்ப்பணித்து, அங்கே நதியும் கடலும் சங்கமிக்கும் இடத்தில் ஐந்து டன் எடையுடன், ஒன்பது அடி உயரத்துடன் இருக்கும் பஞ்சமுக கணபதியை சுற்றி, ஒரு பெரிய மண்டபத்தை ஸ்தாபனம் செய்து இருக்கிறோம். எட்மண்டன், கனடா, நியூசிலாந்து மற்றும் நந்தி, பிஜி, சியாட்டில், சால்ட் லேக் சிட்டி, பெதஸ்தா, டென்வர், ஸ்காட்ஸ்டேல், செபாஸ்டியன், ஆங்கரேஜ் மற்றும் சிகாகோவில் நிறுவப்பட்ட புதிய இந்து கோயில்களுக்கு நமது ஆதினம் நல்லாசிகளை வழங்கி, இந்துவாக பிறந்தவர்களின் சமூகங்களுக்கு பரிசாக ஆனைமுகக் கடவுளின் நேர்த்தியான கற்சிலைகளை வழங்கியுள்ளது. கிரேட் பிரிட்டனில் தொடங்கப்பட்ட புதிய கோயில்கள் ஒவ்வொன்றிலும் விநாயகர் சந்நிதி இருக்கிறது மற்றும் விம்பிள்டனில் இருக்கும் ஸ்ரீ கணபதி டெம்பிளில் அவர் பிரதான தெய்வமாக இருக்கிறார். அவருக்கு சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் டென்மார்க் நாடுகளில் இருக்கும் கோயில்களிலும் சந்நிதிகள் உள்ளன. உலகெங்கும் இருக்கும் இந்து சமூக குழுக்கள் வழிபாட்டை தொடங்குவதற்கு ஒரு விநாயகரை பரிசாக வழங்குவது, ஹவாய் தீவில் உள்ள எனது கைலாச பீடத்தின் ஒரு வலுவான தூண்டுதலாக பல வருடங்களாக இருந்து வந்துள்ளது.

அமெரிக்காவில் விநாயகர்

ஆரம்பகால வடஅமெரிக்க இந்தியர்கள் பின்பற்றிய சமயமானது, போற்றத்தக்க நமது சனாதன தர்மத்துடன் பல ஒப்புமைகளை கொண்டுள்ளது மற்றும் அவை இரண்டும் ஒரே உன்னத மூலங்களில் இருந்து வளர்ச்சி பெற்றதாக தோன்றுகிறது. இதற்கு அவர்களின் சடங்குகள் மற்றும் சமய நம்பிக்கைகள் மற்றும் சின்னங்கள் சான்றாக விளங்குகின்றன. விநாயகரின் மிகவும் பழமையான சின்னங்களில் ஒன்றாக இருக்கும் சுவஸ்திக் குறியீடு, முக்கிய மூலக்கருத்துக்களில் ஒன்றாக பல அமெரிக்க இந்திய பழங்குடியினர்களின் எண்ணற்ற வடிவமைப்புக்கள் மற்றும் மாதிரிகளில் பயன்படுத்தப்பட்டு வந்தது மற்றும் அதை இன்றும் அவர்களின் அழகான போர்வைகள் மற்றும்

மட்பாண்டங்களில் காணமுடிகிறது. அதனால் முழுமுதல் கடவுளாக இருக்கும் விநாயகர் மேற்கத்திய நாடுகளுக்கு உண்மையில் புதிதாக இல்லாமல், அதிகம் பரிச்சயமானவராக இருக்கிறார். அவர் சமீபத்தில் முக்கியத்துவம் பெற்றதற்கு, எப்போதும் அவர் இருந்துள்ள நாடுகளில் நமக்கு அவரைப் பற்றிய ஞாபகம் வந்தது தான் முக்கிய காரணம் ஆகும். ஆனால் இந்த இருப்பதோராம் நூற்றாண்டில், 70கள் மற்றும் 80களில், பல மில்லியன் டாலர் மதிப்புள்ள மாபெரும் இந்து கோயில்களில் விநாயகர் சந்நிதிகள் சம்பிரதாய முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. நம்மால் அவரை நியூயார்க், பிட்ஸ்பர்க், சிகாகோ, கான்கார்ட், லிவர்மோர், ஃப்ரீமாண்ட், டென்வர், ஹூஸ்டன், நாஷ்வீல், கனடாவில் எட்மன்டன் மற்றும் நூற்றுக்கணக்கான மற்ற இடங்களில் காணமுடிகிறது. இந்த சந்நிதிகள் விநாயகரின் தூல வடிவ *மூர்த்தியை* ஆனைமுகக் *கஜானனனாக* வெளிக்கொண்டு வந்துள்ளது. மேற்கத்திய நாடுகளில் உள்ள அனைத்து முக்கிய இந்து சமூகங்களில் அவருக்கு இருக்கும் வலுவான ஆதாரம், எல்லோருக்கும் ஒரு சிறந்த இறையருளாகவும் மகிழ்ச்சிகரமான தருணமாகவும் விளங்குகிறது. மேற்கத்திய நாடுகளில் ஆகம இந்து சமயத்தின் ஆரம்பகட்ட வளர்ச்சியின் போது, வட அமெரிக்காவில் விநாயகரின் இருப்பு, அதன் வெற்றியை உறுதி செய்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் இந்து சமயம் வட அமெரிக்காவில் தோன்றிய போது, அதை விநாயகர் வழிநடத்தி சென்றார். முதன்முதலில் பாரம்பரிய முறையில் கட்டப்பட்ட கோயில்களில் ஒன்றாக, நியூ யார்க்கில் இருக்கும் பிளஷிங் பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய மஹா கணபதி கோயில் விளங்குகிறது. மதம் சார்ந்த அடிப்படைகளை அமைக்க ஒவ்வொரு சமூகமும் வழிகாட்டல் மற்றும் அறிவுரையை நாடிக்கொண்டு, ஹவாய் தீவுக்ககூட்டத்தில் இருக்கும் கவாய் இந்து மடத்திற்கு வந்து, எங்கள் பரிந்துரையை வேண்டிய அந்த ஒவ்வொரு சமூகத்தின் கோயில்கள் விரைவாக முழுமையை பெறவேண்டும் என்றால், அந்த சமூகம் நடத்தும் சத்சங்கங்களில் விநாயகர் வழிபாட்டை முதலில் தொடங்கவேண்டும் என்று நான் தொடர்ந்து அதன் அறங்காவலர்களிடம் வற்புறுத்தி வந்தேன். நாங்கள் பெரும்பாலும் அந்த குழுவிற்கு முழுமுதல் கடவுளின் ஒரு பெரிய அல்லது சிறிய சிலையை வழங்கி, அந்த தெய்வத்தின் வழிபாடு விரைவில் தொடங்க ஆசிகளை வழங்குவோம். இவ்வாறு ஒரு புதிய கோயில் தளத்தில் கட்டுமானப்பணி மற்றும் நிதியுதவி தொடர்பான பணிகள் நடந்துகொண்டு இருக்கும் போது, ஒரு சிறிய சந்நிதியில் விநாயகர் சிலை ஸ்தாபனம் செய்யப்பட்டது. இதைப்போன்று பிஜி, எட்மண்டன், லிவர்மோர், ஃப்ரீமாண்ட், சால்ட் லேக் சிட்டி, ஹூஸ்டன், டென்வர், சிகாகோ, லான்சிங், பெதஸ்தா, லண்டன், ஜெர்மனி மற்றும் பிற பகுதிகளிலும் நடைபெற்றது. இந்தியாவில் இருந்து பூசாரிகள் வரவழைக்கப்பட்டனர். அந்த சந்நிதியில் பக்தர்கள் கூட்டம் கூடத்தொடங்கியது. பூஜை மற்றும் வழிபாடும் தொடங்கியது. கோயில் கட்டுமானத்திற்கு நிதியுதவியும் வரத் தொடங்கியது. இது தற்போது

மேற்கத்திய நாடுகளில் ஒரு வழக்கமாக மாறிவிட்டது. விநாயகரை வழிபடத் தொடங்கியதும், ஒரு அற்புதமான மற்றும் உற்சாகமளிக்கும் கோயிலை உண்மையில் அவர் தான் கட்டிமுடிக்கிறார் என்றும், தாங்கள் அவருக்கு உதவியாளர்களாகத் தான் இருக்கிறோம் என்றும் இந்துக்கள் அனுபவப்பூர்வமாக அறிந்துக் கொண்டிருக்கிறார்கள்.

விநாயகர் தரிசனங்கள்

மேற்கத்திய உலகில் விநாயகரின் பிரகாசமான இருப்பின் உச்சமாக, வடக்கு மற்றும் தெற்கு அமெரிக்காவில் வாழும் இந்து குடும்பத்தில் பிறந்தவர்கள் மற்றும் முறையாக இந்து மதத்திற்கு மாறியவர்கள் பல விசேஷ தரிசனங்களை பெற்று இருக்கிறார்கள். பூமியெங்கும் பரவியிருக்கும் இந்துக்களின் சர்வதேச சமூகத்தை முன்னிறுத்தி செல்லவேண்டும் நம்பிக்கையுடன், அத்தகைய சில தரிசனங்கள் பற்றிய குறிப்புக்கள் இங்கே அநாமதேயமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, பல வருடங்களாக இந்தியாவில் இருந்து வந்த பக்தர்கள் மூலம் பல சிறிய முறைகளில், வட மற்றும் தென் அமெரிக்காவில் ஆங்காங்கே விநாயகர் வழிபாடு நடத்தப்பட்டு வந்தன. ஆனால் 1970 களில் நடந்த நிகழ்வுகளின் விளைவாக, நியூ யார்க்கில் மிகப்பெரிய அளவில் ஒரு ஆடம்பரமான விநாயகர் கோயில் ஸ்தாபனம் செய்யப்பட்டதும், அவருக்கு ஒரு முறையான பொது இருப்பிடம் கிடைத்தது. தனது கோயில் எங்கே அமைய வேண்டும் என்பதை தெய்வம் தானே முடிவு செய்யும் என்ற பழங்கால பாரம்பரியத்தை இன்றைய நமது நவீன யுகத்திற்கு உறுதிபடுத்தும் வகையில், இந்த கோயில் உருவாவதற்கு காரணமாக தொடர்ச்சியான நிகழ்வுகள் அமைந்தன. இது தொடர்பான முடிவை, தனிப்பட்ட தூண்டுதலின் பெயரில் ஒரு ஆண் அல்லது ஒரு பெண் அல்லது ஒரு குழு எடுப்பது இல்லை. ஆனால் தனது கோயில் கட்டுவதற்கு நேரம் வந்துவிட்டது என்றும், அவர் இந்த தூல பிரபஞ்சத்தில் வெளிப்படுவதற்கு நாம் நமது பங்கிற்கு முன்வந்து அவருக்கு உதவவேண்டும் என்றும் அந்த தெய்வம் நமக்கு தெரிவிக்கிறது. சமூகத்தால் மதிக்கப்படும் அல்லது மகாதேவர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பில் இருக்கும் முனிவர்கள், குருமார்கள், சுவாமிகள் அல்லது *சந்த்கள்* வாயிலாக கடவுள் தனது கோயிலை எங்கே எப்படி கட்டவேண்டும் என்ற தகவலை வழக்கமாக வழங்குகிறார். அத்தகைய சமய தலைவர்கள் சமூகத்தின் மதம் சார்ந்த முன்னேற்றத்தை பற்றிய ஆன்மீக நுண்ணறிவையும் பெற்று இருக்கிறார்கள். முனிவர்களின் அறிவுறுத்தல்களை வலுப்படுத்தும் வகையில்,

விநாயகர் ஒரு பக்தரின் கனவு அல்லது தரிசனம் வாயிலாக தோன்றி தகவலை வழங்குவார்.



பல ஆண்டுகளாக நியூ யார்க்கில் வசித்து வந்த, இரண்டு நற்பண்புள்ள இந்தியர்கள் மூலமாக நியூ யார்க்கில் இருக்கும் பிளஷிங் பகுதியில் அமைந்துள்ள மகாகணபதி ஆலயத்தின் கட்டுமானப்பணி தொடங்கியது. அதில் ஒருவர் கோயில் கட்டுமானப்பணியில் பல தலைமுறைகளாக ஈடுபட்ட குடும்பத்தை சேர்ந்தவர். இன்னொருவர் தொடர்ந்து யோகம் மற்றும் மதம் சார்ந்த *சாதனைகளை* செய்து வந்த ஒரு பக்திமான். இந்த பக்திமான் இந்தியாவிற்கு திரும்பி இருந்த போது, இரவு கனவில் ஒரு காட்சியை கண்டார். அந்த காட்சியில் அவர் நியூயார்க் நகரத்தின் மேலே உயர பறந்துக்கொண்டு இருந்த போது, தனது பழைய வீட்டிற்கு அருகே ஒரு பாழடைந்த கிறித்துவ தேவாலயத்தை கண்டார். அவர் ஒரு கூரான கோபுரத்தின் மீது வந்த போது, அது திறந்து கொண்டது

மற்றும் அவர் அதன் வழியே கீழே இறங்கியதும், அது நேராக அவரை ஒரு சிலைக்கு அழைத்து சென்றது. என்ன அதிசயம்! அது விநாயகர் சிலையாக இருந்தது. ஆனால் விநாயகர் எதுவும் பேசாமல் சிரித்துக்கொண்டு இருந்தார். அந்த பக்திமான் விழித்துக் கொண்டதும், அவரது இதயத்தில் அன்பும் உட்புற மனதில் முழுமுதல் கடவுளின் காட்சியும் நிலைத்து இருக்க, அப்போது ஐக்கிய நாடுகளில் வேலை செய்துவந்த கோயில் கட்டுமான நிபுணரை தொலைபேசியில் தொடர்புகொண்டார். நியூயார்க் நகரத்திற்கு உடனே வருமாறு அந்த கோயில் கட்டுமான நிபுணர் அந்த பக்திமானிடம் கூறினார். பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அடுத்த 24 மணி நேரத்தில், இருவரும் விநாயகரின் புதிய வீட்டை தேடி நியூயார்க்கின் குவீன்ஸ் பகுதி வழியாக ஒரு வாகனத்தில் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் இறுதியாக கனவில் கண்ட ஒரு பழங்கால கிறித்துவ தேவாலயத்திற்கு வந்த போது, அது விற்பனையில் இருந்தது! விநாயகர் கனவில் தோன்றி, தனது கோயிலை இங்கே கட்டவேண்டும் என்று கூறியது உண்மை என்பது நிரூபணம் ஆகியது. அதன் பிறகு அந்த கட்டிடம் விலைகொடுத்து வாங்கப்பட்டது. பலவருட கடுமையான உழைப்பு மற்றும் ஸ்ரீலஸ்ரீ பன்றிமலைசுவாமியின் ஆசிகள் மற்றும் ஒப்புதலுடன் பாரம்பரிய முறையில் பொதுமக்கள் வழிபடுவதற்காக, வைதீக முறையில் அமைந்த ஒரு சந்நிதியில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்து ஸ்தாபனம் செய்யப்பட்டது. அடுத்த சில வருடங்களில், அந்த கோயில் விரிவாக்கமும் செய்யப்பட்டது.

அதேசமயம் உலகின் மறுபுறத்தில், பசிபிக் பெருங்கடலில் அமைந்த ஹவாய் தீவின் கோனா கடற்கரையில், சைவ சித்தாந்த பக்தர்கள் மூலம் ஒரு கடற்கரை சந்நிதியில் விநாயகரின் ஒரு சிறிய *மூர்த்தி* வழிபடப்பட்டு வந்தது. அந்த சந்நிதிக்கு அருகில் வாழ்ந்த ஒரு பதினாறு வயது *குமரிப்பெண்* தொடர்ந்து அந்த *மூர்த்திக்கு* பூஜையும் பாராயணமும் செய்து வந்தாள். அவளது பக்தியின் காரணமாக விநாயகரும் முருகனும் அவளுக்கு பல முறை காட்சி தந்து அருள் செய்திருந்தனர். 1980 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில், விநாயகர் மற்றும் முருகப்பெருமானின் புதிய மூர்த்திகள், மலையடிவாரத்தில் தங்களது தற்காலிக இருப்பிடமான இன்னொரு பக்தரின் வீட்டிற்கு வந்து இறங்குவதை அந்த குமரிப்பெண் தனது வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அவள் விநாயகரும் முருகப்பெருமானும் ஒரு நீலநிற ஒளி வட்டத்தில் கடற்கரையை நோக்கி நடந்து செல்வதை கவனித்தாள். விநாயகர் வெள்ளைநிறத்திலும் முருகப்பெருமான் ஆரஞ்சு நிறத்திலும் ஆடையை உடுத்தி இருந்ததாகவும், அவர்கள் தங்களை மலர்களால் முழுமையாக அலங்கரித்து இருந்ததாகவும் அவள் விவரித்தாள். அவளுக்கு காட்சி அளித்ததைப் போலவே, முருகப்பெருமானின் *மூர்த்தி* பழனியாண்டவர் கோலத்தில் இருந்தது. விநாயகரை தான் மேலும் இரண்டு முறை பார்த்ததாகவும், அவர் தனது புதிய சந்நிதியில் சாந்தமாக அமர்ந்துகொண்டு, பெண் மானைப் போன்ற

கண்களுடன் தன்னை அமைதியாக பார்த்துக்கொண்டு இருந்ததாகவும் அவள் தகவல் தெரிவித்தாள்.

சில மாதங்கள் கழித்து, பல வருடங்களாக *சாதனை* செய்து வந்த எனது ஹவாய் சீடரான ஒரு வயதான பெண்மணி, தியானத்தில் அமர்ந்து இருந்த போது, அவளது *சத்குரு* அவள் முன்னே தோன்றினார். அவர் அந்த காட்சியில் மேலே உயர செல்ல ஆரம்பித்தார் மற்றும் அவள் அவரது அங்கியைப் பிடித்து மேலே சென்றாள். ஆனால் பிடிப்பு குறைந்ததும் அவள் கீழே விழத் தொடங்கினாள். அவள் கீழே தரையில் விழும் முன்பாக, விநாயகர் தனது துதிக்கையால் அவளை பிடித்து, மகாதேவர்கள் வாசம் செய்யும் லோகங்களின் இரு பெரிய திருவாயில் பொற்கதவுகளின் முன்பாக அமர்ந்து இருந்த அவளது சத்குருவிடம் அழைத்து சென்றார். விநாயகர் தன்னை தனக்கு பிரியமான குருவுக்கு அருகில் மெதுவாக அமர்த்தியதாக அவள் கூறினாள்.

1972 ஆண்டிற்கு பிறகு மேலும் பல சீடர்கள் தாங்கள் கண்ட காட்சிகள் மற்றும் கனவுகளில் விநாயகரை பார்த்து இருக்கிறார்கள். உதாரணமாக 1981 இந்தியா ஒடிசியின் அங்கமாக, பழங்கால பாரதத்தின் (இந்தியா) புண்ணியதளங்களுக்கு ஆன்மீக யாத்திரை மேற்கொண்ட யாத்திரிகளில் பலர் இலங்கை யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஸ்ரீ கும்பழாவளை விநாயகர் கோயிலில் வாழ்க்கையை மாற்றி அமைக்கும் காட்சிகளை கண்டார்கள். விநாயகர் பற்றிய அத்தகைய காட்சிகள், அந்த தெய்வம் செயல்படும் முறையைப் பற்றி தெளிவுபடுத்துகிறது. அந்த காட்சிகள் அவரது பக்தர்களின் சூட்சுமமான மனங்கள் அல்லது நமது நுண்ணுலகத்தில் இடம்பெற்று இருந்தாலும், அந்த சூட்சும பரவெளி மிகவும் பெரியதாகவும், தனிப்பட்ட முறையில் ஒரு மாபெரும் பேரண்டமாகவும் இருக்கிறது.


விநாயகரது வாகனமாக இருக்கும் சிறிய எலி, வீட்டில் இருக்கும் இரகசிய மற்றும் மறைவான இடங்களை எல்லாம் அறிந்துக்கொள்வதைப் போல, இந்த மகாதேவரும் நமது மனங்களில் அதிகம் தெளிவில்லாமல் நுணுக்கமானதாக தோன்றும் பகுதிகளில் இயங்கும் திறன் பெற்று இருக்கிறார். அவர் பெரிய மற்றும் சிறியதாக இருக்கும் அண்டம் மற்றும் பிண்டத்தின் தலைவனாக இருக்கிறார். நிலம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் ஆகாசமாக இருக்கும் பஞ்ச பூதங்கள் மற்றும் அனைத்து உள்பொருளின் முழுமையான வெளிப்பாடாக விநாயகரின் பெரிய உடல் விளங்குகிறது. அதனால் அவர் வெளியிருந்து உட்புறமாக இல்லாமல் உள்ளிருந்து வெளிப்புறமாக அனைத்திலும் வியாபித்து இருக்கிறார். அனைத்து வடிவமும் சுத்தமான நிலையில், பிரிந்து இல்லாமல் சேர்ந்து இருப்பதால், அவர் வியாபிப்பதற்கு ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நகர்வதில்லை. *மூலாதார சக்கரத்தின்* விரிவான, நான்கு இதழ்கள் கொண்ட தாமரை மீது அசையாமல் அமர்ந்து இருக்கும் விநாயகர், பல மில்லியன் மைல்கள் பிரிந்து இருக்கும் உருவங்களாக வெளிப்பட்டு, நமது கண்களுக்கு தென்படும் ஆன்மீக காந்த சக்தியின் விரிவான உட்புற கடல்களின்

இயக்கங்களை பதிவு செய்து நிர்வகிக்கிறார். அவர் வெளிப்புறத்தில் பருமனாக காட்சி அளிக்கும் அனைத்து இயற்கையின் உருவங்கள் வாயிலாக செயல்படுகிறார் என்றாலும், அவர் தனது வாகனமான சிறிய எலி மீது ஏறி, தனது பக்தர்களின் மனங்கள் நல்ல வெளிச்சத்துடன் இருக்கும் குகைகளை போன்று, அதன் வழியாக மிகவும் நுணுக்கமான முறையில் பயணம் செய்கிறார். இவ்வாறு எலியை தனது வாகனாக கொண்டு, வடிவத்தின் ஆளுருவமாக இருக்கும் பகட்டான ஆணைமுகக் கடவுளின் நடவடிக்கை மர்மமாக இருக்கிறது.

தொடக்கமும் முடிவும் ஐக்கியமாவதைப் போல, சென்னையில் இருக்கும் மத்திய கைலாஷ் கோயிலில், பூஜையின் போது விநாயகரும் அனுமாரும் ஒன்றாக ஐக்கியமாவதை பக்தர்கள் பார்த்து இருக்கிறார்கள் மற்றும் இன்றும் அதை பார்த்து வருகிறார்கள். இந்த விசித்திரமான உருவத்தை மதிக்கும் வகையில், பாதி விநாயகர் மற்றும் பாதி அனுமார் கலந்த ஒரு பஞ்சலோக சிலை, 1993 ஆம் ஆண்டில் வடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. தலைசிறந்த இந்து சமயத்தில் இருக்கும் முப்பத்தி முக்கோடி தெய்வங்களில், இரண்டு அபூர்வ தெய்வங்களின் அருள்பெற்ற பக்தர்களுக்கு அதிகாலையில் தோன்றிய தொடர்ச்சியான காட்சிகளுடன் இந்த நிகழ்வுகள் தொடங்கின.

இறுதியாக நான் கண்ட காட்சியை குறிப்பிட விரும்புகிறேன். 1980 களின் மத்தியில் விநாயகர் இரண்டு பூசாரிகளின் துணையுடன் தனது கோயிலில் இருந்து வெளிவருவதை நான் கவனித்தேன். அவர் கடலுடன் நதி சந்திக்கும் மொரிஷியஸ் நாட்டில் அழகான இந்திய பெருங்கடலில் குளிக்க சென்றுகொண்டு இருந்தார். நான் நடுக்கடலில் நின்றுக்கொண்டு இருக்க, என்னை சுற்றி பல சுறாமீன்கள் நீந்திக்கொண்டிருந்தன. அங்கே இரண்டு பூசாரிகளுடன் வந்த விநாயகர் என்னை பார்த்து, “அந்த விலங்குகளின் மூக்கில் சிறிது எண்ணெயை தடவி விடு. அது உன்னை ஒன்றும் செய்யாது,” என்று கூறினார். அடுத்த பக்கத்தில் இந்த வலுவான தெய்வீக அனுபவம் வரைபடத்துடன் விளக்கப்பட்டுள்ளது.

இந்த மகாதேவர் வரும் இத்தகைய காட்சிகள் தியானம் செய்யும் யோகிகளுக்கு மட்டும் வராமல், சிரத்தையுள்ள பக்தர்களுக்கும் வருகின்றன. இந்த பக்தர்கள் தங்கள் *சுகர்மா* காரணமாக, தங்கள் வாழ்க்கைகளின் மங்களகரமான தருணங்களில் இந்த விசேஷமான அருளை பெறுகிறார்கள்.



நமது அன்பான விநாயகர்

அன்பான விநாயகர் நமக்கு உண்மையான தெய்வமாக இருக்கிறார்.
நமக்கு பாதுகாவலராக இருக்கும் அவர்,
தேவையின் போது நாம் நாடும் தெய்வமாக இருக்கிறார்.

அன்பான விநாயகர் நமது எதிர்காலம் மற்றும் கடந்தகாலத்தை அறிந்திருக்கிறார்.
அவர் நம் மனசாட்சியாக இருக்கிறார்,
நாம் விரைவாக முன்னேற விரும்பும் போது நாம் நாடும் தெய்வமாக இருக்கிறார்.

அன்பான விநாயகர் கடவுள் நமக்கு துணையாக இருக்கிறார்.
நமக்கு அருகாமையில் இருக்கும் அவர்,
நாம் கீழ்ப்படிய விரும்பும் போது நாடும் தெய்வமாக இருக்கிறார்.


அன்பான விநாயகர் நமக்கு விருப்பமான கடவுளாக இருக்கிறார்.
நமக்கு எல்லாமாக இருக்கும் அவர்,
நாம் எல்லோரும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருக்கும் தெய்வமாக இருக்கிறார்.



மகாராஷ்டிர மக்களுக்கு பிடித்தமான கடவுள்

ஆசிரியர்: முனைவர் எஸ். சீனிவாசன். *தத்துவலோகா* பிப்ரவரி/மார்ச் 1990 இதழில் இருந்து ஒரு பகுதி

விநாயகர் மீது மகாராஷ்டிர மாநிலம் வைத்திருக்கும் அளவுகடந்த பிரியத்தைப் போல, இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் தனது முழுமுதல் தெய்வத்தின் மீது பிரியத்துடன் இருப்பதில்லை. ஒவ்வொரு வருடமும் விநாயகர் சதுர்த்தி அன்று தொடங்கி அனந்த சதுர்த்தசி தினத்தன்று ஆடம்பரமாக நடைபெறும் விசர்ஜனம் வரை பத்து நாட்களுக்கு, இசை மற்றும் லயத்துடன் விநாயகரை துதிப்பதில் அந்த மாநிலம் முழுவதும் அதிர்கிறது. அதனால் மகாராஷ்டிர மாநிலத்தவர்கள், விநாயகர் சுயம்புவாக தோன்றியதாக கருதப்படும் *அஷ்டவிநாயக* அல்லது எட்டு விநாயகர் கோயில்களுக்கு செல்வதை முக்கியமாக கருதுகிறார்கள். இந்த சிலைகள் சுயம்புவாக இருப்பதால், விரிவான அலங்காரம் இல்லாமல் இருக்கின்றன. அந்த கற்சிலைகள் மேலோட்டமான வடிவத் தோற்றத்துடன் விநாயகரின் தந்தம் மற்றும் துதிக்கையை மட்டுமே வெளிப்படுத்தி, பல நூற்றாண்டுகளாக அடுக்கு அடுக்காக பூசப்பட்ட தடிப்பான சிவப்பு நிற *சிந்தூரத்துடன்* காட்சி அளிக்கின்றன.



அயல்நாட்டவர் ஆட்சிக்கு எதிராக சமூக-கலாச்சார இயக்கத்தை தொடங்கும் பொருட்டு, பால கங்காதர திலகர் பல வருடங்கள் முன்பு மகாராஷ்டிர மக்களின்

இதயங்களில் விநாயகரை இடம்பெற செய்தார். அந்த இயக்கம் வழங்கிய தூண்டுதலை, நம் எல்லோராலும் இன்றும் காணமுடிகிறது. இளைய தலைமுறை மத்தியில் நவீன ரசனைகள் மற்றும் வாழ்முறை பழக்கங்கள் ஊடுருவி இருந்தாலும், பாரம்பரியத்தை விரும்பும் இந்த மாநில சமுதாயபண்பில் வேரூன்றிய விநாயகர் வழிபாடு ஒரு நிரந்தர இடத்தை பிடித்துக்கொண்டது. இந்த எட்டு கோயில்களும் இயற்கை காட்சிகள் நிரம்பிய சூழலில், மேற்கு மகாராஷ்டிராவின் மூன்று அல்லது நான்கு மாவட்டங்களில் பரவியுள்ளன. போதுமான போக்குவரத்து வசதி இல்லாத காலத்தில், இந்த எட்டு கோயில்களை தரிசிக்க எட்டு நாட்கள் தேவைப்பட்டன. ஆனால் இன்று இந்த யாத்திரையை மூன்று நாட்களில் நிறைவு செய்யலாம். யாத்திரிகளுக்கு வசதியான மற்றும் பாதுகாப்பான பயணத்தை ஏற்பாடு செய்ய, புனேவில் பல பயண முகவர்கள் இருக்கிறார்கள். அந்த எட்டு கோயில்கள் பற்றிய சிறிய குறிப்பு அடுத்த சில பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளது. உலகெங்கும் இருக்கும் இந்திய தூதரகங்கள் மூலம் யாத்திரையை ஏற்பாடு செய்துகொள்ளலாம். அவை சிறந்த பயண முகமையங்களுடன் தொடர்பில் இருக்கும். இதனால் யாத்திரைக்கு தேவையான உதவிகள் விருப்பத்துடன் வழங்கப்படும்.


1. ஸ்ரீ மயூரேஸ்வரர் - மோர்காவ் கோயில்



இனி நாம் அந்த எட்டு புண்ணிய தளங்களைப் பற்றி தெரிந்துகொள்ளலாம். புனேவில் இருந்து தென்கிழக்கே 65 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள மோர்காவ், அருகில் இருக்கும் ஜேஜூரி ரயில் நிலையத்தில் இருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இந்த கோயிலை சுற்றி ஒரு நாற்கோணம் வடிவில் உயரமான கற்சுவர்கள் அமைந்து இருக்க, நான்கு மூலைகளில் இசுலாமிய கட்டிடக்கலையை போன்று நான்கு தூண்கள் அமைந்துள்ளன. இந்த கோயில் சிறிதுகாலத்திற்கு, பரந்த உள்ளம்கொண்ட ஒரு இசுலாமிய சேனாதிபதியின் ஆதரவு பெற்று வந்ததாக கூறப்படுகிறது. இந்த கோயிலின் சிறப்பு அம்சமாக, தெய்வத்தின் முன் ஒரு பெரிய நந்தி கற்சிலை அமைந்து இருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக, அந்த நந்தியை அருகில் இருக்கும் சிவன் கோயிலுக்கு எடுத்துச் செல்ல முயற்சி மேற்கொண்ட போது, தான் விநாயகர் முன்பாக இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அந்த

நந்தி, தனது இடத்தை விட்டு நகராமல் இருந்தது. அந்த நாற்கோணத்தில் கோயிலை சுற்றி ஏகதந்தா, மஹோதரா, கஜானனா, லம்போதரா, விகடா, நடராஜா, தூம்ரவர்ணா மற்றும் வக்ரதுண்டா என்ற திருநாமங்களுடன் விநாயகர் சிலைகள் அமைந்துள்ளன. இதைத் தவிர அந்த கோயிலில் இருபத்தி மூன்று இந்து தெய்வங்களின் சிலைகள் மற்றும் *பில்வம்* (வில்வம்) மற்றும் *ஷமி* (வன்னி) மரங்களும் உள்ளன. கருவறையில் பழங்கால சிலையாக இருக்கும் மயூரேஸ்வரர் [மயிலை வாகனமாக கொண்ட தெய்வம்] இடதுபக்கம் திரும்பிய துதிக்கையுடனும், உடல் முழுவதும் சிந்தூரத்தை பூசியும் தலைப்பாகையாக பாதுகாப்பிற்கு நாகத்தையும் கொண்டிருக்கிறார். முதலில் இந்த விநாயகர் சிலை சிறியதாக இருந்ததாகவும், அதன் மீது பூசப்பட்ட சிந்தூரம் காரணமாக பெரியதாக தெரிவதாகவும், அந்த சிந்தூரம் ஒரு நூற்றாண்டிற்கு ஒரு முறை விழுவதாகவும் கூறப்படுகிறது. அந்த நிகழ்வு சமீபத்தில் 1882 ஆண்டிலும், அதற்கு முன்பாக 1788 ஆம் ஆண்டிலும் நடைபெற்றதாக அந்த ஊர் மக்கள் கருதுகின்றனர்.

2. ஸ்ரீ சிந்தாமணி - தேவூர் கோயில்



புனே நகரில் இருந்து 22 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த கிராமம், குறிப்பாக மூத்த மாதவ ராவ் உட்பட புனேவில் ஆட்சி செய்ய பல பேஷ்வா அரசர்களுக்கு ஒரு ஆன்மீக சரணாலயமாக மாறியது. இங்கே சிந்தாமணி [உணர்வின் அணிகலன்] என்று விநாயகர் அழைக்கப்படுகிறார். இந்த தல வரலாற்றைப் பற்றி இங்கே பார்க்கலாம். முன்னொரு காலத்தில் கணராஜன் என்ற பேராசை பிடித்த அரசன், கபில முனிவரிடம் இருந்து சிந்தாமணி என்ற ஒரு அபூர்வ ஆபரணத்தை பறித்து செல்கிறான். கபில முனிவர் விநாயகரை நினைத்து தவம் செய்ய, விநாயகர் மகிழ்ச்சி அடைந்து கணராஜனுடன் போரிட்டு அந்த சிந்தாமணியை மீட்டு முனிவரிடம் தருகிறார். இதற்கிடையில் மனம் மாறிய முனிவர், தனக்கு அந்த ஆபரணத்தை காட்டிலும் அந்த விநாயகரின் துணை தான் வேண்டும் என்கிறார். அதனால் விநாயகர் தனது பக்தனுடன் அந்த சிந்தாமணியாக இருக்க முடிவு செய்கிறார். முளா-முதா என்ற இருநதிகளின் கூட்டு கிராமம் வழியாக பாய்ந்து சென்று, சந்திரபாகாவுடன் இணைகிறது. அது இறுதியாக பன்றாபூர் வழியாக சென்று துங்கபத்ரா மற்றும் கிருஷ்ணா நதிகளுடன் சேர்கிறது. மோர்யா கோசாவி என்ற பிரபல விநாயக பக்தர், சின்ச்வட் மற்றும் மோர்காவ் இடையே பயணம் மேற்கொள்ளும் போது தேவூர் வழியாக பயணம் செய்வார். இந்த விநாயகர் சிலையும், அஷ்டவிநாயகர்

குழுவில் இருக்கும் மற்ற சிலைகளை போல அதிகம் சிந்தூரம் பூசப்பட்டு இருப்பதால், யானையின் தலை மற்றும் துதிக்கையை தவிர வேறு எதுவும் தெளிவாக தெரிவதில்லை. ஆனால் பக்தர்களுக்கு கிடைக்கும் தெய்வீக அருள் முன்னைப் போல வலுவாக இருக்கிறது.

3. ஸ்ரீ சித்திவிநாயக் - சித்தடேக் கிராமத்து கோயில்



இந்த கிராமம் தௌன்டு இரயில் சந்திப்பில் இருந்து 13 கிலோமீட்டர் தொலையில் உள்ளது என்றாலும், அந்த கிராமம் செல்வதற்கு பீமா நதியை ஒரு படகில் கடக்க வேண்டியுள்ளது. நீரோட்ட திசையில் ஒரு அணை கட்டப்படுவதற்கு முன்பாக, உலர்ந்த ஆற்றுப்படுகை வழியாக நடந்து செல்ல முடிந்தது. ஆனால் இன்று நதி அதிக ஆழமாக இருக்கிறது. இங்கே நாம் வலம்புரி விநாயகரை காண்கிறோம். வலம்புரி விநாயகரை [சித்தி விநாயகர், விக்கினங்களை நீக்குவதில் வல்லவர்] வழிபடும் போது, சடங்குகள் மற்றும் விரதங்களில் அதிக கவனத்துடன் இருக்கவேண்டும் என்று பக்தர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. ஒரு மலையின் மீது இந்த கோயில் அமைந்து இருக்க, அந்த மலை மறுபுறத்தில் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் நீண்டு இருக்கிறது. இறையருளை நாடும் பக்தர்கள், அந்த மலை முழுவதையும் ஏழு *பிரதட்சிணம்* செய்கிறார்கள். சரியான பாதை அல்லது சாலை இல்லாமல் முட்புதர்கள் எங்கும் நிரம்பி இருப்பதால், கரடுமுரடான இந்த ஏழு கிலோமீட்டர் பாதையை சுற்றி வரும் இந்த வழக்கத்தின் மூலம் சாதகனுக்கு உறுதியாக இறையருள் கிடைப்பதாக கருதப்படுகிறது!

4. ஸ்ரீ கணபதி - ரான்ஜண்காவ்



புனே மற்றும் அகமதுநகரை சேர்க்கும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த கோயில் ஸ்ரீ மகாகணபதியின் இருப்பிடமாக விளங்குகிறது. புத்தி மற்றும் சித்தி என்ற பெயரில் மகாராஷ்டிராவில் பிரபலமாக இருக்கும் அவரது தேவியர்கள் அவரை சூழ்ந்து இருக்க, ரான்ஜண்காவ் பகுதியில் இருக்கும் ஸ்ரீ மகாகணபதி ஆலயத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட கருவறை காரணமாக, அது மதிய நேரத்திலும் நேரடி சூரிய வெளிச்சத்தை பெறுகிறது. மஹோதகட என்ற பெயரில் பத்து தலைகளை கொண்ட கணபதியின் சிலையும் அந்த கோயிலில் ஸ்தாபனம் செய்யப்பட்டு இருந்தாலும், அது பெரும்பாலான பக்தர்களின் பார்வையில் இருந்து மறைவாக அடித்தளத்தில் மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த சிலை முன்பு முக்கிய மூர்த்தியாக இருந்தது என்றும், படையெடுப்புக்களின் போது அந்த சிலை அழிக்கப்பட வாய்ப்பு இருந்ததால், அது அதன் பிறகு மறைத்து வைக்கப்பட்டாகவும் சிலர் கருதுகிறார்கள்.

5. ஸ்ரீ விக்னேஷ்வர் - ஓஜர் க்ஷேத்திரம்



புனே-நாசிக் நெடுஞ்சாலைக்கு அருகில் இந்த *க்ஷேத்திரத்தில்* விக்னேஷ்வரர் ஆட்சி புரிகிறார். இங்கும் அவருக்கு அருகில் புத்தி மற்றும் சித்தி அமர்ந்து இருக்கிறார்கள். அகலமான இரண்டு வரிசைகளாக இருக்கும் *பிரகாரங்கள்* மட்டுமில்லாமல் மிடுக்குடன் காட்சி அளிக்கும் இரண்டு *துவாரபாலகர்கள்*, நன்றாக மெருகூட்டப்பட்ட *மூஷிக* வாகனம், இரண்டு பெரிய *தீபஸ்தம்பங்கள்* என்று கற்சிற்பங்கள் அனைத்தும் இந்த கோயிலின் குறிப்பிடத்தக்க அம்சங்களாக விளங்குகின்றன.

6. ஸ்ரீ கிரிஜாத்மஜ - லேண்யாத்ரி குகை




அந்த பெயர் ஒரு மலையில் இருக்கும் ஒரு குகையை குறிக்கிறது. இங்கே விநாயகர் ஸ்ரீ கிரிஜாத்மஜா என்று அழைக்கப்படுகிறார். “பார்வதிக்கு மகனாக பிறந்தவன்” என்பதே அதன் பொருள். இந்த இடத்தை சுற்றி பரவலாக அமைந்து இருக்கும் மலைகள் தூரத்தில் இருக்கும் ஒரு மலைத்தொடருடன் சேர்ந்துகொள்ள, அதன் நடுவே வளைந்து நெளிந்து செல்லும் புஷ்பவதி நதி சூரிய ஒளியில் பிரகாசிக்க, அவர் இந்த நிலப்பரப்பில் இருக்கும் ஒரு அழகிய காட்சி ரசித்துக்கொண்டு இருக்கிறார். 283 படிகள் ஏறி கோயிலுக்குள் நுழைந்ததும், அங்கே 57 அடிகள் நீளம் மற்றும் 51 அடிகள் அகலத்துடன் நாம் காணும் ஒரு பெரிய அறை, தூண்களின் துணை இல்லாமல் ஒரு பாறையில் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மலையில், பௌத்த சமயத்தின் கட்டிடக்கலையுடன் மேலும் 18 குகைகள் இருக்கின்றன. மற்ற சிலைகளை காட்டிலும் இந்த விநாயகர் சிலை தெளிவற்ற அம்சங்களுடன் காணப்படுகிறது. விநாயகரின் பின்புறம் மட்டுமே பக்தர்களுக்கு தெரிவதாகவும், அவரது முகம் மலையின் மறுபுறத்தில் அணுக முடியாத நிலையில் இருப்பதாகவும் உள்ளூர் மக்கள் கருதுகிறார்கள். இதனை மாற்றி அமைக்க சில பேஷ்வா அரசர்கள் மேற்கொண்ட முயற்சி பலன் அளிக்காமல் போனது.


7. ஸ்ரீ வரத விநாயக, மஹாட் குக்கிராம கோயில்



மும்பை-புனே நெடுஞ்சாலையில் ஒரு தொழிற்சாலை மையமாக விளங்கும் கோபோலிக்கு அருகில் இந்த சிறிய குக்கிராமம் அமைந்துள்ளது. இதை மும்பையில் இருந்து கோவா செல்லும் வழியில் இருக்கும் மஹாட் நகரத்துடன் குழப்பிக்கொள்ள வேண்டாம். இந்த கோயில் ஒரு குளத்திற்கு அருகே அமைந்து இருந்தாலும், அது கோடைகாலத்தில் வற்றி விடுகிறது. ஆனால் அங்கிருக்கும் பசுமையான வயல்கள் மற்றும் மரங்கள் வழங்கும் நல்ல குளுமையான காற்று மற்றும் அமைதியான சூழ்நிலை தியானம் மற்றும் பிரார்த்தனைக்கு உகந்ததாக இருக்கிறது. வழக்கமான மகாராஷ்டிர பாரம்பரியத்தைப் போல, இந்த கோயிலிலும் பொதுமக்கள் கருவறையில் நுழைய அனுமதிக்கப்படுகிறது. [வரங்களை வழங்கும் வரதவிநாயகரின்] அருளை நாடும் பல பக்தர்கள் அங்கிருக்கும் விக்ரகத்தின் பாதத்தில் தலையை வைத்து வணங்குகின்றனர். 1892 முதல் இந்த கோயிலில் எரிந்துக்கொண்டு இருக்கும் ஒரு *அகண்டதீபம்,* இந்த கோயிலின் ஒரு சிறப்பு அம்சமாக விளங்குகிறது.




8. ஸ்ரீ பல்லாலேஷ்வரர் - பாலி கோயில்



மும்பை-கோவா நெடுஞ்சாலையில் இருந்து சுமார் 8 கிலோமீட்டர்கள் தொலைவிலும், ஆங்காங்கே மலைகள் மற்றும் அதன் குறுக்கே பாய்ந்து செல்லும் ஒரு ரம்மியமான இயற்கை சூழலுக்கு மத்தியிலும், நம்மால் ஸ்ரீ பல்லாலேஷ்வரர் இருக்கும் கிராமத்தை காணமுடிகிறது. இங்கே பல்லால என்ற சிறுவனை விநாயகர் காப்பாற்றியதால், அவர் இங்கே பல்லால ஈசுவரன் என்று அறியப்படுகிறார். அந்த சிறுவன் தன்னை முழுமையாக விநாயகரது பக்தியில் ஈடுபடுத்தி இருந்தான். ஒரு சந்தர்பத்தில் அந்த சிறுவனின் வெறித்தனமான பக்தியைக் கண்டு கோபமுற்ற கிராமத்து மக்கள், அவனை இரக்கமின்றி அடிக்க ஆரம்பித்தனர். அப்போது விநாயகர் அந்த சிறுவனின் உயிரை காப்பாற்றினார். இங்கே இரண்டு விநாயகர் கோயில்கள் உள்ளன. இங்கே வருகை தருபவர் முக்கிய கோயிலில் இருக்கும் ஸ்ரீ பல்லாலேஷ்வரரை தரிசிக்கும் முன்னர், பல்லால சிறுவனாக வழிபட்ட ஸ்ரீ துண்டிவிநாயகரை முதலில் தரிசிக்க வேண்டும். மிகவும் அகலமாக இருக்கும் ஸ்ரீ பல்லாலேஷ்வரரின் சிலை

செங்குத்தான மலையடிவாரத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்து இருப்பதால், அந்த சிலை அதிகாலை சூரிய வெளிச்சத்தில் ஜொலிக்கிறது. வழக்கமாக கனமழை பெய்யும் மாதங்களில், சுற்றுப்புறம் முழுவதும் அருவி பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த கோயிலை ஒரு மிகப்பெரிய *பஞ்சலோக* மணி சிறப்பிக்கிறது. இதன் இனிமையான மணி ஒசைகள், இறைவனுக்கு காண்பிக்கப்படும் பல்வேறு *ஆரத்திகளின்* போது, ஒரு விசேஷ இசையை சேர்க்கின்றன.

மகாராஷ்டிராவின் மற்ற விநாயகர் கோயில்கள்



மகாராஷ்டிராவில் பிரபலமான அஷ்டவிநாயகர் கோயில்கள் மட்டும் இல்லாமல், அதன் மூலைமுடுக்குகளில் ஏராளமான விநாயகர் கோயில்கள் உள்ளன. அதில் சில பிரபலமான கோயில்களும் உள்ளன. மும்பையில் இருக்கும் ஸ்ரீ சித்தி விநாயக், மும்பையில் இருந்து 75 கிலோமீட்டர்கள் தூரத்தில் இருக்கும் டிட்வாலாவில் இருக்கும் ஸ்ரீ மகாகணபதி (திருமண வரம் வேண்டி செல்லும் கோயில்), புனேவின் புறநகர் சின்ச்வட் பகுதியில் இருக்கும் ஸ்ரீ மங்கள மூர்த்தி, புனே நகரில் இருக்கும் ஸ்ரீ கேசவ கணபதி மற்றும் ஸ்ரீ சாரஸ்பாக் கணபதி ஆகியவை மற்ற முக்கிய விநாயகர் கோயில்கள் ஆகும். அரேபிய கடலோரப் பகுதியில், இரத்ணகிரிக்கு அருகில் இருக்கும் கணபதிபுலேவில் இருக்கும் ஒரு கோயில் கடலோரத்தில் அமைந்து இருப்பதால், சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று இருக்கிறது. கடலோரத்தில் சிப்லூன் நகரத்திற்கு அருகில் இருக்கும் தசபுஜ கணபதி, நந்தகாவ் சித்தி விநாயக், மராத்வாடாவின் ராக்ஷஸ்புவனில் இருக்கும் விக்ஞான கணபதி, நாசிக்கில் இருக்கும் மோதகேஷ்வரர் மற்றும் நாக்பூர் சீதாபர்டியில் இருக்கும் ஸ்ரீ கணபதி ஆகியவை மற்ற பிரசித்தமான கோயில்கள் ஆகும். ஒரே தீர்த்தயாத்திரையில் பரிந்துரைக்கப்பட்ட கோயில்கள் அனைத்தையும் சென்று தரிசிக்கும் யத்திரிகள், ஐந்துகரங்களை உடைய தெய்வத்தின் பரிபூரண அருளுக்கு பாத்திரமாவதாக கருதப்படுகிறது. இங்கே பட்டியலிடப்பட்ட கோயில்களுடன், அவருடைய மேலும் சில புண்ணியத்தளங்களுக்கு சென்று வரும் அரிய ஆன்மாக்கள், அந்த தெய்வத்தின் இதயத்தில் நிரந்தரமாக குடிகொண்டு, இதன் பிறகும் பிறவிகளுக்கு மத்தியிலும் மகிழ்ச்சிகரமான விஷயங்களின் பேரானந்தத்தை அனுபவிக்க முடிகிறது.

உலகெங்கும் இருக்கும் விநாயகர் கோயில்களின் பட்டியல்

பல்லாயிரம் வருடங்களாக சத்குருமார்கள், சாத்திரங்கள் மற்றும் கோயில்கள் இந்து தர்மத்தின் மாபெரும் தூண்களாக விளங்கி அதற்கு மதிப்பு மற்றும் மரியாதையை பெற்றுத் தந்திருக்கின்றன. உலகெங்கும் இருக்கும் முக்கிய விநாயகர் கோயில்கள் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன. அதில் இடத்தின் பெயர், கோயிலின் பெயர் அல்லது கோயிலுக்குள் இருக்கும் *மூர்த்தியின்* பெயர் வழங்கப்பட்டுள்ளன. எதிர்கால *லவிங் கணேஷா* புத்தக பதிப்புகளில், இந்த பட்டியலை விரிவாக்கம் செய்ய பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியா

அடிலெய்டு

கணேஷா

ஹோம்புஷ்

ஸ்ரீ கற்பக விநாயகர்

மெல்போரன்

வக்ரதுண்ட விநாயகர்

வங்கதேசம்

டாக்கா

லட்சுமி பஜார் கணேஷ்

கம்போடியா

கண்டல்

பத்மாசன கணேஷா

கனடா

பிராம்ப்டன்

ஸ்ரீ கற்பக விநாயகர்

கால்கரி

கணேஷா டெம்பிள்

எட்மன்டன்

மஹா கணபதி

லவால்

ஸ்ரீ மகாகணபதி

ஸ்கார்பரோ

ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவில்

வான்கூவர்

ஸ்ரீ கணேஷ்

டென்மார்க்

ஹெர்னிங்

ஸ்ரீ சித்தி விநாயகர்

பிரான்ஸ்

கார்ஜெஸ்-லெஸ்-கோனஸி

சுந்தர விநாயக

லா கோர்னியூவ்

சித்தி விநாயகர்

பாரிஸ்

ஸ்ரீ மாணிக்க விநாயகர்

ரில்லியக்ஸ்-லா-பாபே

விநாயக பெருமான் கோயில்

டிராய்ஸ்

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

ஜெர்மனி

பெர்லின்

ஸ்ரீ கணேஷ்

ப்ரேமன்

ஸ்ரீ வரசித்திவிநாயகர்

பிராங்பர்ட் அம் மெயின்

கற்பக விநாயகர்

ஹாம்

சித்தி விநாயக

ஹால்டிகென்

வர சித்தி விநாயக

ஹெல்பிரான்

விநாயக

ஜுசென்

ஸ்ரீ நவசக்தி விநாயகர்

ம்யூனிக்

ஸ்ரீ செல்ல பிள்ளையார்

நுரென்பர்க்

ஸ்ரீ சித்திவிநாயகர்

ஸ்டட்கார்ட்

ஸ்ரீ சித்தி விநாயகர்

கையானா

ஹேக்

சீதா ராம் துளசி வதே கணேஷ்

ரோசிக்நோல்

டி'எட்வர்ட் விக்னேஸ்வர் மந்திர்

இந்தியா

மகாராஷ்டிரா, இந்தியா

எட்டு கோயில்கள் யாத்திரை

மோர்காவ்

மயூரேஷ்வரர் (இந்தியாவில் யாத்திரிகள் செல்லும் முக்கிய விநாயகர் கோயில்)

சித்திடேக்

சித்தி விநாயக

பாலி

பல்லால விநாயக

மஹாட்

வரத விநாயக

ஒஜர்

விக்னேஷ்வர

லேண்யாத்ரி

கிரிஜாத்மஜ

ரான்ஜண்காவ்

மஹா கணபதி

தேவூர்

சிந்தாமணி

மற்ற மகாராஷ்டிர புண்ணியதளங்கள்

அதோஷா, நாக்பூர் பகுதி

சாமி விக்னேஷா

பெரோலா

லக்ஷ விநாயக

ஜெதா காபட் மார்கெட், மும்பை

சித்தி விநாயக

கலம்பா

சிந்தாமணி கணேஷ்

கணகேஷ்வர

ராம சித்த விநாயக

காஸ்வா

ஜயதே கணேஷா

நாகஜரி நதி

த்ரிசுந்டா

நாமல்காவ்

அமலாசிரமக்ஷேத்ர (பிரார்த்தனைகளுக்கு பிரசித்தமானது)

நாந்தேட்

சித்ரகூட கணேஷ

நாசிக்

ஹிகால்யகா கணபதி

பத்மாலயா

ப்ரவாளக்ஷேத்ர (இரண்டு விநாயக மூர்த்திகளுடன்)

பிரபா தேவி, மும்பை

சித்தி விநாயக

ராஜூர்

ராஜசாதனாக்ஷேத்ர

ராக்ஷஸ்புவன்

விக்ஞான கணேஷ

சாங்கிளி, கிருஷ்ணா நதி

கணேஷ (ஒரு சிவலிங்கத்தின் மீது அமைந்திருக்கும் ஒரு சுயம்பு விநாயகர்)

டிட்வாலா

சித்தி விநாயக மஹா கணபதி (அற்புதங்கள் நிகழும் இடம்)

உத்தர பிரதேசம், இந்தியா

பிரயாக

ஓங்கார கணபதி

வாரணாசி

துண்டிராஜ கணேஷ

ஒரிசா, இந்தியா

சண்டிகொலே, கட்டாக்

மகா விநாயக

கேரளா, இந்தியா

திருவனந்தபுரம்

ஸ்ரீ அகிரசால கணபதி

தமிழ்நாடு, இந்தியா

அம்பல்

சுட்டு விநாயகர்

அன்பில் ஆலந்துறை

செவிசாய்த்த பிள்ளையார்

சென்னை, பெரியமேடு

ஸ்ரீ வரசித்தி விநாயகர்

சிதம்பரம்

கற்பக விநாயகர்

குடந்தை கீழ்க்கோட்டம்

கங்கை கணபதி

கல்லட்டி

முச்சந்தி விநாயகர்

காஞ்சிபுரம்

வலம்புரி விநாயகர், விகட சக்ர விநாயகர்

மதுரை

முக்குறுணி பிள்ளையார், சித்தி விநாயகர்

மயூராபுரம்

மயூரேஷ விநாயகர்

நாகபட்டினம்

பஞ்ச முக விநாயகர்

பாண்டிச்சேரி

மணக்குள பிள்ளையார்

சேண்பாக்கம்

பதினொன்று சுயம்பு விநாயகர் சிலைகளின் கோயில்

சீர்காழி

ஆபத்து காத்த விநாயகர்

திருச்சிராப்பள்ளி

உச்சிப் பிள்ளையார்

திருஇன்னம்பர்

நர்த்தன விநாயகர்

திருகச்சூர்

தாலமூல விநாயகர், கருக்கடி விநாயகர்

திருக்கடையூர்

கள்ள வாரண பிள்ளையார்

திருக்காரவாசல்

கடுக்காய் விநாயகர்

திருக்கடையூர்

கொடி விநாயகர்

திருகோகர்ணம்

மஹா கணபதி

திறுமாகறல்

பொய்யா விநாயகர்

திருமழபாடி

சுந்தர கணபதி

திருமறைக்காடு

வீரகத்தி விநாயகர்

திருமுருகன்பூண்டி

கூப்பிடு பிள்ளையார்

திருநாட்டியத்தான்குடி

கைகாட்டி விநாயகர்

திருநல்லூர்

சாளக்கிராம விநாயகர்

திருநள்ளாறு

சொர்ண விநாயகர்

திருநாரையூர்

பொல்லா விநாயகர்

திருந்துதேவன்குடி

கற்கடக விநாயகர்

திருப்பத்தூர்

மாய பிள்ளையார்

திருப்பணையூர்

துனையிருந்த பிள்ளையார்

திருப்புறம்பியம்

பிரளயம் காத்த பிள்ளையார்

திருவையாறு

ஆதி விநாயகர்

திருவலம்

வலம் வந்த விநாயகர்

திருவலஞ்சுழி

வெள்ளை பிள்ளையார்

திருவாரூர்

வாதாபி விநாயகர்

திருவாவடுதுறை

சிவ பிரகாச விநாயகர்

திருவேட்டக்குடி

வேட பிள்ளையார்

திருவிடைமருதூர்

ஆண்ட விநாயகர்

திருவீழிமிழலை

படிக்காசு விநாயகர்

திருவுசாத்தானம்

குடவன பிள்ளையார்

வல்லம்

வரசித்தி விநாயகர்

விருத்தாசலம்

மாற்று உரைத்த பிள்ளையார்

இந்தோனேஷியா

டாகோ

கணேஷ்

ஜகார்த்தா

மங்கள விநாயக்

அயர்லாந்து

டப்லின்

அயர்லாந்து விநாயக

லெட்டர்கென்னி

இந்தியன் கம்யூனிட்டி சென்டர்

இத்தாலி

ஜெனோவா

ஸ்ரீ சித்தி விநாயகர் டி ஜெனோவா

பாலேர்மோ

மொரிஷியஸ் கணேஷ் மந்திர்

ஸ்ரீ முத்து விநாயக டெம்பியோ

ஜப்பான்

காமகுரா

ஹோகை-ஜி

குமாகயா சிட்டி

மெனுமா ஷோடென்-சான்

நாரா

இகொமா ஷோடென்

ஒசாகா

கைஷோசான் ஷோயஞ்சி

டோக்கியோ

மாட்சுசியாமா ஷோடென்

கென்யா

மோம்பாசா

ஸ்ரீ சித்தி விநாயக் கணபதி

மலேசியா

கொலாலம்பூர் அருகில்

ஜலான் புருனே/பசார்

ஸ்ரீ சித்தி விநாயக

ஜலான் இபோ

ஸ்ரீ பரஞ்சோதி விநாயக

கோலா குபு பாரு

ஸ்ரீ சித்தி விநாயக

ஜலான் ப்புடு லாமா

ஸ்ரீ கணேசன்

கோலால்பூருக்கு வெளியே

பெராங் உலு, பெராக்

சித்தி விநாயக

இபோ

ஸ்ரீ மகா கணபதி

கிலாங்

சித்தி விநாயக

சண்டகன், சபா

சித்தி விநாயக

சிதியவான், பெராக்

சித்தி விநாயக

மொரிஷியஸ்

போ பஸ்சின்

விநாயக் மந்திர்

பிளாக் ரிவர்

மராத்தி பாவன் கணேஷ் மந்திர்

துப்ரெயில்

மராத்தி ஸ்ரீ கணேஷ் மந்திர்

பிளாக்

பிளாக் மராத்தி விக்னேஸ்வர் மண்டலி

கிலேன் பார்க்

விக்னேஸ்வர் மந்திர்

ஹென்றிட்டா

மராத்தா மந்திர்

லா மாரி

மராத்தி கணேஷ் மந்திர்

மொண்ட் இடா

ஸ்ரீ கணேஷ் மந்திர்

மெல்ரோஸ்

மெல்ரோஸ் ஸ்ரீ கஜானன் சரஸ்வதி மந்திர்

நியூ குரோவ்

ஸ்ரீ கணேஷ் மந்திர் நியூ குரோவ்

பாய்ண்ட் டெஸ் லாஸ்கார்ஸ்

பார்க் ஸ்பிரிசுயல் டி கணேஷ்

ரோஸ் ஹில்

கணேஷ் கோவில்

டாமரின்

மராத்தி அஷ்ட விநாயக் மண்டலி

மியான்மார்

மண்டலே

ஸ்ரீ கணேஷ்

பியின் ஊ ல்வின்

கணேஷ்

யாகோன்

கணேஷ் இந்து

நேபாளம்

காத்மாண்டு பள்ளத்தாக்கு

பக்தாபூர்

சூர்ய விநாயக

புங்கமடி

கர்ண விநாயக

சோபர்

ஜல் விநாயக

காத்மண்டு

அசோக விநாயக

சந்திர விநாயக

காத்மண்டு பள்ளத்தாக்கிற்கு வெளியே

கோர்கா

விஜய கணபதி

ஜனக்பூர்

ராமா டெம்பிள்

சித்த கணேஷ

புலாஹரா

ராம/ஜானகி டெம்பிள்

கிரிஜா கணேஷ

நெதர்லாந்து

டென் ஹெல்டர்

ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயக

நியசிலாந்து

பாபகுரா

ஆக்லாந்து ஸ்ரீ கணேஷ்

நார்வே

அலேசுண்ட்

அலேசுண்ட் இந்து குள்டுர் சென்டர்

பேர்கன்

ஸ்ரீ ஆனந்த சித்தி விநாயகர்

பேர்கன் இந்து சபா

ட்ரொண்டுஹைம்

ஸ்ரீ டில்லர் கணேஷ்

சீஷெல்ஸ்

விக்டோரியா

அருள்மிகு நவசக்தி விநாயகர்

சிங்கப்பூர்

சிலோன் ரோடு

ஸ்ரீ செண்பக விநாயகர்

கியோங் சியாக் ரோடு

ஸ்ரீ விநாயகர்

தென்னாப்பிரிக்கா

டர்பன், நடால்

சித்தி விநாயகர்

லேடிஸ்மித், நடால்

கணேசர்

மௌண்ட். எட்ஜ்காம்ப், நடால்

கணேஷா

இலங்கை

யாழ்ப்பாணம் தீபகற்பம்

சுழிபுரம்

கண்ணைக் கொத்தி காக்கை பிள்ளையார்

இணுவில்

கருணாகர பிள்ளையார்

மானிப்பாய்

மருதடி விநாயகர்

முறுகண்டி

முறுகண்டி பிள்ளையார்

நல்லூர்

கைலாச பிள்ளையார்

நீர்வேலி

அரசகேசரி பிள்ளையார்

யாழ்ப்பாணத்திற்கு வெளியே

அளவெட்டி

கும்பழாவளை பிள்ளையார்

மட்டக்களப்பு

மாமாங்க பிள்ளையார்

கொழும்பு, செட்டி தெரு

ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்

கொழும்பு, பம்பலப்பிட்டி

புதிய கதிரேசன் கோயில்

கண்டி

செல்வ விநாயகர்

கதிர்காமம்

மாணிக்க விநாயகர்

சுரிநாம்

பரமாரிபோ

ஸ்ரீ கணேஷ் மந்திர்


சுவிட்சர்லாந்து

பார்

அருள்மிகு சித்தி விநாயகர்

பராவ்

ஸ்ரீ விநாயகர்



சுர்

ஸ்ரீ நவசக்தி விநாயகர்

பிரில்லி

ஸ்ரீ பிள்ளையார் கோயில்

ஸ்டெபிஸ்பர்க்

ஸ்ரீ வரசித்தி விநாயகர்

வெர்சோயிக்ஸ்

ஜெனீவா அற்புத விநாயகர்

சுவீடன்

பார்ஸ்டா

ஸ்ரீ சித்தி விநாயகர் தென் ஆப்பிரிக்கா

பீனிக்ஸ், குவாசுலு நடால்

ஸ்ரீ கணேஷ

தாய்வான்

தைப்பே

ஸ்ரீ கணேஷ் மந்திர்

தாய்லாந்து

பாங்காக்

சென்ட்ரல் வேர்ல்டு கணேஷா ஸ்ரைன்

சியங் மாய்

கணேஷ் ஹிமால்

சாசோயங்சாவோ

க்ளோங் குவான் கணேஷ் இன்டர்நேஷனல் பார்க்

வாட் சமன் ரத்தனாரம் கணேஷா

வாட் ப்ராங் அகட் லார்ட் கணேஷ்

டேனோக்

கணேஷா

டிரினிடாட் மற்றும் டொபாகோ

அவோகாட்

ஸ்ரீ சித்தி விநாயக மந்திர்

எஸ்மெரெல்டா

கணேஷ் மந்திர்

லா பாஸ்டோரா செட்டில்மென்ட்

கணேஷ்

பேனல்

ஸ்ரீ கணேஷ் மந்திர்

உகாண்டா

என்டெப்பே

ஸ்ரீ கணேஷ்

ஐக்கிய இராச்சியம் (UK)

கோவென்ட்ரி

கோவென்ட்ரி ஸ்ரீ சித்தி விநாயகர்

க்ராய்டன்

ஸ்ரீ சக்தி கணபதி

ஹாரோ

ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

இல்போர்ட்

ஸ்ரீ செல்வ விநாயகர்

லிவர்பூல்

லிவர்பூல் கணேஷ்

லண்டன், எஃப்ரா ரோடு

ஸ்ரீ கணபதி

போர்ட் டால்போட்

ஸ்ரீ கள்பக ஹிந்து கல்சர் அசோசியேஷன்

வால்தம்ஸ்டோ

சரி கட்பஹ விநாயகர்

விம்பிள்டன்

ஸ்ரீ கணபதி

ஐக்கிய அமெரிக்கா (USA)

ஆங்கரேஜ், அலாஸ்கா

ஸ்ரீ கணேஷ

ப்ரிஆ, கலிபோர்னியா

ஸ்ரீ சித்திவிநாயக்

டார்செஸ்டர், மாசசூசெட்ஸ்

கணேஷ் இந்து

ப்ளஷிங், நியூ யார்க்

ஸ்ரீ மகா வல்லப கணபதி தேவஸ்தானம்

க்ளென் பர்னி, மேரிலாந்து

சித்திவிநாயக்

மரிகோபா, அரிசோனா

மகா கணபதி

நாஷ்வீல், டென்னசி

ஸ்ரீ கணேஷா

சாக்ரமெண்டோ, கலிபோர்னியா

ஸ்ரீ சித்தி விநாயக

சால்ட் லேக் சிட்டி, உட்டா

ஸ்ரீ கணேஷா


சியாட்டில், வாஷிங்டன்


இந்து டெம்பிள், ஸ்ரீ கணேஷா

டாம்ஸ் ரிவர், நியூ ஜெர்சி

ஸ்ரீ சித்திவிநாயக்




CHAPTER FOURTEEN
Questions
And Answers
Alaska's Malaspina Glacier from space, NASA


EXOTIC INDIA: KAILAS RAJ

கேள்விகள் மற்றும் பதில்கள்

பிரஷ்ன உத்தரி ச

प्रश्न उत्तरी च



உலகெங்கும் தகவல்களை அலசி ஆராய்பவர்கள், அற்புத சக்தியாக இருக்கும் விநாயகரை பற்றி வழக்கமாக கேட்கும் சில கேள்விகளுக்கான பதில்களை உங்களுடன் பகிர்வது, நாம் மேற்கொள்ளும் ஆய்விற்கு அறிவூட்டம் தருவதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அவர் மீது ஈர்க்கப்பட்டு, அனுபவப்பூர்வமாக அவரது அருளை பற்றியும் அவர் நிரந்தரமாக வழங்கிக்கொண்டு இருக்கும் வரங்களைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு, இந்த நுணுக்கங்கள் உங்களுக்கு ஊக்கமளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். விநாயகர் பல பெரியவர்களுக்கு ஒரு மர்மமாக இருந்தாலும், குழந்தைகளுக்கு அவர் ஒரு மர்மமாக இருப்பதில்லை. அவருடைய கம்பீரம், உற்சாகம், விவேகம் மற்றும் எளிமையான நுணுக்கங்களை புரிந்துக்கொண்டு முழுமையாக அனுபவிக்க நாமும் சிறுவர்கள் போல இருக்கவேண்டும். சுவஸ்திக் சின்னத்துடன், ஒரே சமயத்தில் பல திசைகளில் இயங்கிக்கொண்டு இருக்கும் இறைவன், உண்மையில் ஒரு குழந்தைக்கு ஒரு டிஜிட்டல் மின்விசை போன்று இருக்கிறார். ஒப்புயர்வற்ற அந்த இறைவனின் பத்து திருக்கரங்களின் அரவணைப்பில் வளர்ந்த குழந்தைகள் விரைவாகவும் வலுவாகவும் செயல்படும் மனதுடன், மாற்றங்களுக்கு இணங்கி, செல்வ வளம் அல்லது வறுமையால் பாதிக்கப்படாமல் இருந்து, தங்களது இஷ்ட தேவதையை வழிபடும் முன்பாக அவரது தினசரி தரிசனத்தில் பொருந்தி பாதுகாப்புடன் இருக்கின்றன.

சீடன்: *விநாயகரின் இயல்பு என்ன?*

குருதேவா: ஒரு மகாதேவராக இருக்கும் விநாயகர், ஆன்மாக்கள் பக்குவமடைவதில் உதவி செய்வதற்காக சிவபெருமான் மூலம் படைக்கப்பட்டார். அவர் ஆனைமுகத்துடன் கலை மற்றும் விஞ்ஞானத்தின் காப்பாளராக, விக்கினங்களின் ஈசுவரனாக மற்றும் தர்மத்தின் பாதுகாவலராக, சிவபெருமானின் மூத்த மகனாக இருக்கிறார். அவர் நேர்மையின் ஆற்றலாக, சிவபெருமானின் கர்ம விதியின் ஆளுருவமாக மூன்று லோகங்களிலும் அவரது விருப்பம் வலுவாக நிலைத்து நிற்கிறது.

“ஒரு பெரிய வயிறு, காதில் ஒரு கடுக்கனுடன் இந்திரனுக்கு அருள் செய்து ஓங்கார வடிவமாக, சிவபெருமானின் புதல்வனாக இருக்கும் ஆனைமுகக் கடவுளை நான் என்றும் மறக்கமாட்டேன்,” என்று எனது *சத்குரு* யோகசுவாமி தெரிவித்தார். நான் வழக்கமாக விநாயகரைப் பற்றி குறிப்பிடும் போது,

“எல்லாம் வல்ல சிவபெருமான் சொர்க்கம் மற்றும் பூலோகங்களில் நுணுக்கமான கர்மவினைகள் மற்றும் தர்மங்களை கண்காணிக்க சொர்க்கம், பூலோகம், தெய்வம் மற்றும் விநாயகரை படைத்தார். விநாயகர் ஒரு தலைவனாகவும் கிரகங்கள் மற்றும் பால்வெளி மண்டலங்களுக்கு இடையே செயல்படும் தெய்வமாகவும் படைக்கப்பட்டார். அவர் எல்லையற்ற அறிவுடன் இருக்கிறார். அவர் தீர்மானம் நியாயமாக இருக்கிறது. விநாயகரும் அவரது ஆற்றல்மிக்க கணங்களும் உதவிக்கரங்களை நீட்டி ஆன்மாக்களை நரகலோக பாதாளங்களில் இருந்து மெதுவாக வெளியே கொண்டுவந்து, உரிய பரிகாரங்களை செய்த பிறகு அவர்களை உயர்ந்த உணர்வில் பொருத்தி, தார்மீக விதியை நோக்கிய சரியான பாதையில் வழிநடத்தி செல்கிறார்கள். அவர் நுணுக்கமான மனதுடன், ஆடம்பரத்தை விரும்பி, ரம்மியமான விவகாரங்களில் மகிழ்வுற்று பக்தர்கள் போற்றிபாடும் பாடல்களை விரும்பிக்கேட்கிறார். தன்னை வணங்குவதற்கு முன்பாக, இந்த மகனை முதலில் வழிபடவேண்டும் என்று சிவபெருமான் ஆணையிடுகிறார். அவர் கர்மவினையின் கடவுளாக இருக்கிறார். ஒரு பொறுப்புள்ள செயல் வெற்றிபெற வேண்டும் என்று மகாதேவர்கள், மற்ற தெய்வங்கள் மற்றும் ஜீவராசிகள் நம்பிக்கை வைப்பதற்கு முன்பாக விநாயகரை வழிபட வேண்டும். அவரை வழிபடாதவர்கள் தங்களது சொந்த விக்கினங்களை எதிர்கொள்கிறார்கள். ஆமாம், அவரது வழிபாடு ஒருவரது விதியின் அமைப்புமுறையை நிர்ணயிக்கிறது. இதனால் இந்த வல்லமைமிக்க கடவுள் உண்மையில் ஒரு மகாதேவராக இருக்கிறார்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே,”

என்று இறுதியாக 2,200 பழமையான திருமந்திரத்தை சொல்லி முடிப்பேன்.

சீடன்: *விநாயகரின் விசேஷ பொறுப்பு என்ன?*

குருதேவா: அவர் விக்கினங்களின் ஈசுவரனான விக்னேசுவரனாக இருக்கிறார். இதனால் நமது வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகளை தடுப்பது அல்லது அனுமதிப்பதன் மூலம் அவர் நாம் பக்குவம் அடைவதை நிர்வகிக்கிறார்.

இந்த சிறிய உலகம் மற்றும் பால்வெளி மண்டங்களுக்கு பொதுவான கடந்தகாலம் மற்றும் எதிர்காலம் பற்றிய தெய்வீக படைப்பின் நுணுக்கமான திட்டங்களை விநாயகர் தன்வசம் வைத்திருக்கிறார். அவர் சிவபெருமானின் அலுவலில் பணியில் அமர்ந்த போது, அந்த பொறுப்புக்கள் அவருக்கு வழங்கப்பட்டன. கருணை நிறைந்த அவருடைய ஆட்சியில், கட்டுப்பாடுகள் வலுவாக இருக்கின்றன. அவரைக்கண்டு மக்கள் அஞ்சவும் செய்கிறார்கள், அவர் மீது அன்பும் செலுத்துகிறார்கள். அவர் மனமாக நீதி இருப்பதால், அவரது சட்டம் நியாயமாக இருக்கிறது. அவருக்கு துதிப்பாடல்கள், பண்டிகைகள், தனது திருநாமங்களை கேட்பது பிடித்து இருக்கிறது. ஏனென்றால் இவை அனைத்தும்

பக்தர்களை அவரது பிரகாரத்திற்குள், அவரது சந்நிதிக்குள் அவருக்கு நெருக்கமாக அழைத்து வருகின்றன. நன்மை மட்டுமே தோன்ற காரணமாக இருக்கும் விநாயகர், யானையின் உருவை எடுத்துக்கொண்டு மற்ற தெய்வங்களிடம் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்கிறார். அவர் தனது திருநாமத்தை சொல்லி தவம் செய்பவர்களுக்கு ஏற்படயிருக்கும் இன்னல்களை தவிர்க்கிறார். அவர் நமது இதயத்துடிப்பை விட நெருக்கமாக நமக்குள் இருந்துக்கொண்டு, நிகழ்வுகளை நிர்ணயித்து நமது கர்மவினையை வழிநடத்துகிறார். ஒரு முழுமையற்ற கோட்பாட்டை பின்பற்றி வாழ்வது அல்லது தேவையற்ற கோரிக்கையை வைப்பது அல்லது நன்கு சிந்திக்காமல் ஒரு நடவடிக்கையை தொடங்கி நம்மை நாமே துன்புறுத்திக் கொள்ளாமல் இருக்க நமது விக்னேசுவரன் நம்மை தடுக்கிறார். தன்னிடம் கோரிக்கைகள் வைப்பதற்கு முன்பாக, நாம் நமது புத்தி மற்றும் இயலுணர்வு புலன்கள் மற்றும் வளங்களையும் நமது அறிவையும் பயன்படுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். விநாயகர் தாமே முடிவு செய்ததைப் போல, நாம் சரியான முடிவை முயற்சி செய்து எடுக்கவேண்டும். இவ்வாறு அவர் விவேகமாக சர்வ வல்லமை பொருந்திய ஒரு மகாதேவராக இருக்கிறார். “சுத்தமான பாதையில், உயர்ந்த மாயா லோகங்களில் இருந்து வழங்கப்பட்ட பல்வேறு கடமைகளை செய்துவரும் இந்த தெய்வங்கள், உயர்ந்த மாயா லோகத்தின் விளைவுகளுக்கு முகப்பாக விளங்குகிறார்கள்,” என்று பழங்கால *ஆகமங்கள்* அறிவிக்கின்றன.

சீடன்: *ஒரு வழிபாடு அல்லது பணியை தொடங்கும் முன்பாக, நாம் எதற்காக விநாயகரை பிரார்த்திக்க வேண்டும்?*

குருதேவா: சிவபெருமானின் ஆணைப்படி, நமது பாதையில் இருக்கும் தடைகளை விலக்க வேண்டும் என்று நாம் அந்த விக்னேசுவரனிடம் பிரார்த்தனை செய்கிறோம். அதேசமயம் நமது பிரார்த்தனை விநாயகரின் விருப்பமாகவும் இருக்கவேண்டும். விக்கினங்களின் ஈசுவரனாக இருக்கும் விநாயகர், நமது வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகளை தடை செய்ய அல்லது அனுமதிக்க, நற்பண்புள்ள தனது சக்தி சின்னங்களாக இருக்கும் பாசம் மற்றும் அங்குசத்தை பிரயோகம் செய்கிறார். இதனால் நாம் ஒரு வழிபாடு அல்லது பணியை தொடங்கும் முன்பாக அவரது அருள் மற்றும் விவேகத்தை ஆவாகனம் செய்கிறோம்.

“தனது அருளை வழங்கும் பரமகுரு, எனக்கு காவலாக இருக்கட்டும்! ஆனைமுகக் கடவுள் எனக்கு காவலாக இருக்கட்டும்! அழகான குழந்தை பயன்படுத்தும் வேல் எனக்கு காவலாக இருக்கட்டும்!” என்று எனது *சத்குரு* யோகசுவாமி அறிவித்தார். நான் அந்த கேள்விக்கு, “முறையாக செயல்படும் வீட்டில், தாயும் தந்தையும் தங்கள் குழந்தைகளை சரியாக வழிநடத்தி, அவர்களை நல்ல குடிமகன்களாக தயார் செய்கிறார்கள். ஒரு புதிய நடவடிக்கையை தொடங்கும் முன்பாக, குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடம் அனுமதி கேட்கிறார்கள். ஒரு புதிய நடவடிக்கையை தொடங்கும் முன்பாக,

தொழிலாளிகள் தங்கள் முதலாளிகளிடம் அனுமதி கேட்கிறார்கள். ஒரு புதிய நடவடிக்கையை தொடங்கும் முன்பாக, பொதுமக்கள் தங்கள் அரசரிடம் அனுமதி கேட்கிறார்கள். அப்படியானால் ஒரு புதிய நடவடிக்கையை தொடங்கும் முன்பாக, இந்த உலகின் தலைவராக, நமது மதத்தின் சேனாதிபதியாக இருக்கும் விநாயக பெருமானிடம் நாம் அனுமதி கேட்பதற்கு எதற்காக தயங்க வேண்டும்? அவர் நுணுக்கமான மனம் மற்றும் ஆற்றலுடன் இயல்பாக செயல்பட்டு, நமது நடவடிக்கைகள் இயங்கும் பாதையில் இருக்கும் தடைகளை நீக்குவதற்கு, நாம் அவரிடம் பலவடிவில் மேற்கொள்ளும் சிரத்தையுள்ள பிரார்த்தனை மற்றும் வேண்டுதல், பணிவான கோரிக்கைகள் மீது கவனம் செலுத்துகிறார். ஆனால் பலன் கிடைப்பதற்கு, அவை அவரது விருப்பமாக இருக்க வேண்டும். இவ்வாறு உண்மையில் ஒரு மகாதேவராக இருக்கும் இந்த அன்பான கடவுள் உயிர்கள் மீது ஆட்சி செய்து, நன்றி தெரிவித்து போற்றி பாடுவதை விரும்பிக் கேட்கிறார்," என்று பதில் அளித்தேன்.

சீடன்: *விநாயகரிடம் நாம் சிரத்தையுடன் வேண்டிக்கொண்டாலும், சிலசமயங்களில் நாம் தடைகளை ஏன் எதிர்கொள்கிறோம்?*

குருதேவா: நமது கர்மவினை மற்றும் தர்மத்திற்கு காலம், வழிவகை அல்லது இலக்கு பொருத்தமாக இல்லாமல் இருக்கலாம். கட்டிடக்கலை நிபுணர் தான் முடிவு செய்த திட்டங்களை பொறியாளரிடம் சமர்ப்பிக்கிறார். அவை ஏதாவது ஒரு தொழில்நுட்ப காரணத்திற்காக நிராகரிக்கப்படுகின்றன. ஒரு அதிகாரி தான் நிறைவு செய்த ஒரு முழுமையான கடிதத்தை தலைவரிடம் சமர்பிக்கிறார். அதன் மூன்றாவது பத்தியில் போதிய தெளிவு இல்லை என்று நிராகரிக்கப்படுகிறது. அந்த கட்டிடக்கலை வல்லுநர் மற்றும் அதிகாரி தங்கள் பணிகளை சிரத்தையுடன் செய்து இருந்தார்கள். அந்த பொறியாளர் மற்றும் தலைவரும் தங்கள் கடமையை சரியாகத் தான் செய்தார்கள். விநாயகர் நம் மீது அன்பு செலுத்துகிறார். திட்டம் நிறைவாக இருக்கும் போது, ஒரு அன்பான தெய்வமாக இருக்கும் அவர் வேகம் மற்றும் நுட்பத்துடன் வழிநடத்தி, முறைப்படுத்தி கட்டுப்படுத்துகிறார். ஆனால் அந்த திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் போது, கவனமாக முடிவெடுத்து பெரும்பாலும் அதை நிராகரிக்கிறார். அந்த திட்டத்தை மீண்டும் உங்கள் மனதில் ஏற்றி, உங்களது மெய்ஞ்ஞானத்தில் சிறந்த யோசனைகளை தேடி, உங்கள் முயற்சிகள் மற்றும் தன்னம்பிக்கையை திருத்தி அமைத்துக் கொள்ளுங்கள். சரியான தருணத்தை தேடுங்கள். சரியான தருணம் அமைந்து விட்டதாக நீங்கள் கருதும் போது, தன்னம்பிக்கையோடு முன்னேறுங்கள். "விருப்பம் தோன்றி கட்டளையிடும் போது, மகாதேவர்களும் அடிபணிய," அல்லது உடனடி ஒத்துழைப்பு வழங்க, வழிகாட்டியாக இருந்து நமது முயற்சிகளை மேம்படுத்த தயாராக இருக்கிறார்கள். நாம் விநாயகரின் மனதோடு நமது மனங்களை நெருங்கிய கூட்டுறவுடன் இயக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது வெற்றி உறுதியாகிறது. இவ்வாறு பக்தர்களின்

விக்கினங்களை அழிக்கும் இந்த தெய்வம் பக்தவிக்னவினாசன என்று அழைக்கப்படுகிறார்.

ஆனைமுக விநாயகரை தொழுதால்,
உங்கள் வாழ்வில் வளம் பெருகும்.
வெள்ளை தந்தம் உடைய விநாயகரை தொழுதால்,
மனதில் இருக்கும் ஆசைகளும் சந்தேகங்களும் அகலும்.
அதனால் மா பலா வாழையை
அன்போடு நெய்வேத்தியமாக வழங்கி,
அவரை வழிபட்டு
கர்மவினை சுமையை குறைத்துக் கொள்ளலாம்.

ஔவையார்

ஆனைமுகத்தவனே!
நீ மிகவும் அருகில் இருக்கிறாய். நாங்கள் உன்னிடமிருந்து
வெகுதொலைவில் இருக்கிறோம்.
நீ அகத்திலும் நாங்கள் புறத்திலும் இருக்கிறோம்.
நீ அகத்தே இருக்க, நான் ஒரு அந்நியனாக இருக்கிறேன்.
இருப்பினும், நீ எனது ஆணவத்தை அழித்துவிட்டாய்.
நான் என்றென்றும் உன்னை புகழ்ந்து பாடி,
உனது திருவடியில் எனது மலர்மாலையை சமர்ப்பிப்பேன்.

நம்பியாண்டார் நம்பிகள்

மூஞ்சுறுக் கொடியும் முறமெனச் செவியும்
தீஞ்சுடர் வண்ணம் திகழொளி உடையும்
சந்தனப் பூச்சும் சகத்துணைக் கனிவும்
முந்தைய புவனம் மூத்தவ நிலையும்

பிரகிருதி புருஷன் பிரிவுக் கப்பால்
வரநிதி யாகிய வல்லக ணேசரை
எவரே தவறா தேற்றுவர் தியானம்
அவரே பெரியார்! அருந்தவ யோகி!

கணபதி உபநிடதம்

யானையை குறிக்கும் *கஜ* என்ற சொல், மூலத்தையும் இலக்கையும் குறிக்கிறது. ஒரு யோகி *சமாதி* அனுபவத்தில் பெறும் நிலை *க* என்று அழைக்கப்பட்டு, இலக்கை குறிக்கிறது, மற்றும் அடிப்படை *ஜ* என்று அழைக்கப்பட்டு, “மூலத்தை” குறிக்கிறது, மற்றும் இதில் இருந்து வந்தனம் செய்யும் அட்சரமான ஓங்காரம் தோன்றியதாக கருதப்படுகிறது.

பிரம்ம சூத்திரங்கள்



முகவுரை: விநாயகர் பால் குடித்த அதிசயம்

பிரஸ்தாவனா க்ஷீர சமத்கார

प्रस्तावना क्षीर चमत्कार



லவிங்க் கணேஷா புத்தகத்தின் இறுதி தொகுப்பை நான் நிறைவு செய்த சில நாட்களில் செப்டெம்பர் 15, 1995 அன்று ஒரு மிகவும் அற்புதமான சம்பவம் நிகழ்ந்தது. விநாயகர் முதலில் இந்தியாவிலும், பிறகு இந்துக்கள் வாழும் பெரும்பாலான நாடுகளிலும் பால் குடிக்கத் தொடங்கினார். இதனால் ஆனைமுகக் கடவுளுக்கு பாலை வழங்க பக்தர்கள் பெரிய மற்றும் சிறிய கோயில்களுக்கும் விரைந்தனர். விநாயகர் பல இடங்களில் பால் குடித்த சம்பவம் தொடர்பான நேர்மறையான மற்றும் உற்சாகம் தரும் சான்றுகளை, பல தொலைப்பேசி அழைப்புக்கள் மற்றும் தொலைநகலி தகவல்கள் மூலம் நாங்கள் சர்வதேச செய்தி பத்திரிகையான இந்துயிசம் டுடே அச்சிடும் ஹவாய் தீவில் பெறுவது, எங்களுக்கு ஒரு சிறந்த ஆன்மீக அனுபவமாக இருந்தது. இரக்க குணமுள்ள கடவுளின் இந்த புத்தகத்திற்கு மிகவும் பொருத்தமான முகவுரையாக, நவம்பர் 1995 மாதத்தின் இந்துயிசம் டுடே பத்திரிகையில் இருந்து *க்ஷீர சமத்கார* என்கிற பால் குடித்த அற்புதம் பற்றிய நிகழ்வுகளை உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

விவேகத்தின் அதிபதியாகவும் ஆனைமுகக் கடவுளாகவும் இருக்கும் விநாயகர் சிறிதளவு பாலுக்காக ஏங்கிக்கொண்டு இருக்கிறார் என்று செப்டெம்பர் 21 ஆம் தேதி, புது டில்லியை சேர்ந்த ஒரு சாமானிய மனிதர் கனவு கண்டார். அவர் உடனே விழித்துக்கொண்டு, விடிவதற்கு முன்பாக அருகில் இருந்த கோயிலுக்கு சென்றார். அங்கிருந்த ஒரு சிறிய விக்ரகத்திற்கு அந்த நபர்

ஒரு ஸ்பூனில் பால் தருவதற்கு, அந்த கோயில் பூசாரி சிறிது தயக்கத்துடன் சம்மதித்தார். ஆனால் விநாயகருக்கு அந்த ஸ்பூனில் வழங்கிய பால் மாயமாக மறைந்ததைப் பார்த்து இருவரும் வியப்பில் ஆழ்ந்தனர். இதுவே அந்த அதிசய நிகழ்வின் தொடக்கமாக விளங்கியது. அதன் பிறகு நடந்த சம்பவங்கள் நவீன இந்து வரலாற்றில் ஈடு இணையற்றதாக விளங்குகின்றன. அடுத்த சில மணி நேரங்களில், விநாயகர் பால் குடிக்கிறார் என்ற தகவல் தீப்போல இந்தியா முழுவதும் பரவியது. பெரியவர் சிறியவர் என்று பல மில்லியன் கணக்கான மக்கள் கோயில்களில் திரண்டனர். இந்த ஆன்மீக நிகழ்வு லௌகீக ஈடுபாடு அதிகமிருந்த புது டில்லியை ஸ்தம்பிக்க வைத்தது, மற்றும் அந்த நகரத்தில் கையிருப்பில் இருந்த சுமார் ஒரு மில்லியன் லிட்டர் பால், சில மணி நேரங்களில் விற்பனையாகி விட்டது. இந்த அதிசயம் இந்தியாவில் திடீரென்று தொடங்கியதைப் போல, அடுத்த 24 மணி நேரங்களில் ஓய்ந்தும் விட்டது.

ஆனால் இந்தியாவில் இருக்கும் இந்துக்கள் உலகின் மற்ற பகுதிகளில் இருக்கும் தங்கள் சொந்தங்களை அழைத்து பேசிய போது, இந்த அற்புதம் இன்னொரு இடத்தில் நடைப்பெறத் தொடங்கியது. விரைவில் உலகெங்கிலும் இருந்து எங்கள் இந்துயிசம் டுடே அலுவலகங்களுக்கு வெள்ளம் போல தகவல்கள் வரத் தொடங்கின. எங்கும் அதே அதிசய நிகழ்வு நடைப்பெற்றுக் கொண்டிருந்தது. விநாயகரின் துதிக்கை, தந்தம் அல்லது வாயை தொடும் படியாக ஒரு டீஸ்பூனில் பாலை வழங்கினால், அது ஒரு சில நொடிகள் அல்லது ஒரு சில நிமிடங்களில் மறைந்துவிட்டது. இந்த நிகழ்வு எப்போதும் நடக்காமல் ஒரு விசேஷமான இடைவெளியில் நடந்தது. "நான் ஸ்பூனை நேராக பிடித்துக்கொண்டேன். அதில் இருந்த பால் மறைந்துவிட்டது. எனக்கு அது அதிசயமாக தோன்றியதோடு, இந்த பூலோகத்தில் ஒரு இறைவன் அல்லது ஒரு பரமாத்துமா இருக்கிறார் என்ற உணர்வை வழங்கியது," என்று அணிலா பிரேம்ஜி கூறியதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது. விநாயகர் மட்டுமில்லாமல் சிவபெருமான், பார்வதி, நந்தி மற்றும் நாகர், சிவபெருமானின் கழுத்தில் இருக்கும் பாம்பு என்று எல்லோரும் பால் குடித்தனர்.

இந்த நூற்றாண்டு அல்லது கடந்த ஆயிரம் ஆண்டுகளில் "விநாயகர் பால் குடித்த அதிசயம்" இந்துக்கள் பகிரக்கூடிய மிகவும் முக்கிய சம்பவமாக வரலாற்றில் இடம்பெறக்கூடும். இந்த சம்பவம் சுமார் ஒரு பில்லியன் மக்களிடத்தில் ஒரு உடனடி சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு முன்னர் வேறு எந்த மதமும் இதைப்போன்று செய்தது இல்லை! இந்த சம்பவத்தின் மூலம் "பத்து பவுண்டாக" இருந்த இந்துவின் பக்தி திடீரென்று இரட்டிப்பாகி இருபது பவுண்டாக அதிகரித்தது போன்று இருந்தது.

மற்ற மதங்களைப் போல இந்து சமயத்தில் அவ்வப்போது பலர் கண்கூடாக பார்த்த அற்புதங்கள் நடந்துள்ளன என்றாலும் அத்தகைய நிகழ்வுகள் மிகவும் அரிதாகவே நடக்கின்றன. பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த நம்பியாண்டார் நம்பி என்ற தமிழ் புலவர் சிறுவனாக இருந்த போது, அந்த சிறுவனின் பக்தியால்

விநாயகர் மனம் இரங்கி அவன் முன்னே தோன்றி, அவன் வழங்கிய நைவேத்தியத்தை உண்டு, அவனுக்கு ஞானத்தையும் வழங்கினார். 600 வருடங்கள் முன்பாக மகாராஷ்ட்ராவைச் சேர்ந்த சந்த் ஞானேஸ்வர், திமிர்பிடித்த பூசாரிகள் குழுவினருக்கு முன்பாக ஒரு எருமை மாட்டை *வேத* மந்திரங்கள் சொல்ல வைத்து பிரபலமடைந்தார்.

வழக்கத்தைப் போல இந்த விஷயத்திலும் இருந்த சந்தேகப்பேர்வழிகள், இந்த சம்பவத்தில் இருந்து தங்களை விலக்கிக்கொண்டார்கள். 10 சதவீத இந்துக்கள் தங்களை விலக்கிக்கொண்டதாக, எங்களது முறைசாரா கருத்துக்கணிப்பு தெரிவித்தது. "மக்கள் கூட்டத்தின் வெறியுடன்" இணைந்த "புழை இயக்கம்" தான் இதற்கான சரியான விளக்கம் என்று சில மணி நேரங்களில் பல விஞ்ஞானிகள் தங்கள் கருத்தை தெரிவித்தனர். இவ்வாறு ஏளனம் செய்பவர்களை கருத்தில் கொண்டு, புது டில்லியை சேர்ந்த அபர்ணா சட்டோபாத்யாய் என்பவர், "நான் புது டில்லியில் இருக்கும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மூத்த விஞ்ஞானியாக இருக்கிறேன். நான் ஒரு கோயிலில் நெய்வேத்தியமாக வழங்கிய பாலை விக்ரகங்கள் மர்மமான முறையில் குடிப்பதை கண்கூடாக பார்த்தேன். தாமிரத்தில் தயாரித்த பாம்பில் இருந்து சிறிது தூரத்தில் வழங்கப்பட்ட பாலை, அதனால் எவ்வாறு உறிய முடிந்தது என்பதை விஞ்ஞானிகளால் விளக்க முடியுமா?" என்று *இந்துஸ்தான் டைம்ஸ்* பத்திரிகைக்கு அனுப்பிய ஒரு கடிதம் மூலமாக பதில் அளித்தார். இது அறிவியலா இல்லையா என்பது ஒரு புறம் இருக்க, பல கேலன் கணக்கில் பால் சுவடில்லாமல் மறைந்து விட்டது. ஒரு வாகன டாஷ்போர்டுக்கு பொருத்தப்பட்டு இருந்த ஒரு உலோக விநாயகர், ஆறு டீஸ்பூன் பால் உறிவதை பார்த்து, மலேஷியாவைச் சேர்ந்த ஒரு பிரபல வழக்கறிஞர் ஆச்சரியத்திற்கு உள்ளானார். நேபாள நாட்டு அரசர் பிரேந்த்ரா தானே கடவுளுக்கு நைவேத்தியங்களை வழங்கினார். கென்யா மற்றும் மற்ற நாடுகளில் இருந்த விக்ரகங்கள், குழிவாகவும் இல்லாமல் வெளியே செல்ல பாதைகளும் இல்லாத இரும்பு தட்டுக்களில் அமர்ந்துக்கொண்டு, பல கேலன் கணக்கில் பாலை அருந்தின.

இதற்கு உலகெங்கும் பத்திரிகைத் துறை வழங்கிய முக்கியத்துவம், இந்த அதிசயத்தைப் போன்றே அதிசயிக்கும் வகையில் இருந்தது. இந்த சம்பவம் இந்திய செய்தித்தாள்களில் பல நாட்களுக்கு முக்கியத்துவம் பெற்று இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த சம்பவம் இந்தியாவிற்கு வெளியே நிகழத் தொடங்கியதும், அமெரிக்காவில் *நியூ யார்க் டைம்ஸ்* மற்றும் *வாஷிங்டன் போஸ்ட்*, ஐக்கிய இராச்சியத்தில் *ஃபினான்சியல் டைம்ஸ்* போன்ற பிரபல தேசிய மற்றும் உள்நாட்டு பத்திரிகைகள், இதற்கு முக்கியத்துவம் தரத் தொடங்கின. ராய்ட்டர்ஸ் மற்றும் அசோசியேட்டட் பிரஸ் போன்ற சர்வதேச வைர் சர்வீசஸ், தினமும் "மில்க் மிராகில்" என்ற தலைப்பில் பத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகளை வெளியிட்டன. இந்த அதிசயத்திற்கு, மேல்நாட்டு பத்திரிக்கைத் துறை வழங்கிய அன்பான ஆதரவுப் பற்றி இந்தியாவில் இருக்கும் பலருக்கு தெரியாது. பல

நாடுகளில் பத்திரிகையாளர்கள் கோயிலுக்கு வந்து விக்ரகங்களுக்கு பாலை வழங்கினார்கள். அவர்களும் தங்கள் அறிக்கைகளில் ஏதாவது ஒரு "அறிவியல் விளக்கத்தை" பரிந்துரைப்பார்கள் என்றாலும், மாற்று கருத்துடன் இருக்கும் பல மேற்கத்திய பத்திரிகையாளர்கள் தாங்கள் எதிர்கொண்ட மகிழ்ச்சிகரமான அனுபவத்தை ஒரு உண்மைத் தகவலாக பகிர்கிறார்கள்.

ஆனால் இந்தியாவில் பத்திரிகைகள் வழங்கிய அறிக்கைகள் முற்றிலும் மாறுபட்டு இருந்தன. மார்க்சிஸ அரசியல் சார்புடன் இருந்த இந்தியாவின் ஆங்கிலமொழி பத்திரிகைத்துறை என்றுமே இந்து சமயத்திற்கு ஆதரவாக இருந்தது இல்லை. "மக்கள் 'விநாயகர் பால் குடித்த அதிசயத்தில்' வெறித்தனமாக நடந்துக்கொண்டனர்;" "மக்கள் கூட்டத்தின் வெறித்தனம்" மற்றும் "பால் அருந்திய தெய்வங்கள் மக்கள் கூட்டத்தின் வெறித்தனத்தை வெளிப்படுத்தின என்று விஞ்ஞானிகள் இந்த அதிசயத்தை பரிகாசம் செய்தனர்" போன்ற தலைப்புச் செய்திகள் அந்த அணுகுமுறையை தெரியப்படுத்தின. எல்லா இந்துக்களும் அந்த அளவுக்கு எதிர்மறையாக இருக்கவில்லை. "தங்கள் நாட்டுமக்களின் நம்பிக்கைகளில் இருக்கும் வெளிப்படையான முரண்பாடுகளை நினைத்து இன்றைய இந்துக்கள் பெரும்பாலும் அதிக வருத்தத்துடன் இருக்கின்றனர். இதன் காரணமாக இந்தியா மதசார்பற்ற நாடாக இருப்பதற்கு வழிவகுத்த கோட்பாட்டையே மதசார்பற்ற இந்துக்கள் நிராகரிக்கும் நிலையில் உள்ளனர். தற்போது அந்த சகிப்புத்தன்மை நெருக்கடியில் இருந்தால், நாட்டின் அடிப்படையாக விளங்கும் இந்து சமய அடையாளம் தொடர்பான கொண்டாட்டங்களை ஆபத்து என்று கருதுபவர் மீது பழியை சுமத்த வேண்டும்," என்று *தி டைம்ஸ்* பத்திரிகையில் துன்கு வரதராஜன் தனது வருத்தத்தை தெரிவித்து இருந்தார்.

இந்த அதிசய நிகழ்வானது வழக்கத்திற்கு மாறான அல்லது இயற்கையை கடந்த நிகழ்வுகளைப் பற்றிக்கூறும் *சகுனங்கள்* என்று இந்து சமயம் தனது சொந்த அறிவியலை பயன்படுத்துகிறது. சகுனங்களைப் பற்றி புரிந்து விளக்கம் அளிப்பது ஜோதிடர்களின் பிரத்யேக உரிமை ஆகும். "விநாயகர் பால்குடித்த அதிசயம்" பற்றிய இந்த விசாரம் இத்துடன் முடியாமல், எதிர்கால முக்கிய நிகழ்வை முன்கூட்டியே அறிவுறுத்துவதாக இருக்கிறது. விநாயகர் ஈடுபாடுள்ள சம்பவம் என்பதால் "இராணுவப்படைத் தலைவர்களுக்கு" ஆபத்து என்றும் அவர் பாலை ஏற்றுக்கொண்டதால் ஒரு நல்ல சகுனம் என்றும் பிரபல இந்திய ஜோதிடர்களில் ஒருவரான ஸ்ரீ கே. என். ராவ் விளக்கம் அளித்தார். அதனால் முடிவு அதிக நன்மை தருவதாகவே இருக்கும் என்றும், அந்த சகுனம் எட்டு மாதங்களில், ஏப்ரல் 1996 கிரகணத்தின் போது தனது தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

தெய்வங்கள் நெய்வேத்தியங்களை நூறு வருடங்களுக்கு ஒரு முறை ஏற்றுக்கொள்ளும் என்றும், அது வழக்கமாக விநாயகர் சதுர்த்தி முடிந்து எட்டு அல்லது ஒன்பது நாட்களில் நடைபெறும் என்றும் பெங்களூரைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ திருச்சி மகாசுவாமிகள் கூறினார். நாங்கள் தொடர்பு கொண்ட மற்ற சுவாமிகள்,

ஜோதிடர்கள் மற்றும் பண்டிதர்களைப் போல, திருச்சி சுவாமிகளும் இதை ஒரு மிகவும் நல்ல சகுனம் என்றே கருதுகிறார்.

உலகெங்கும் விநாயகர் பால் குடித்த அதிசயம் பற்றிய சான்றுரைகள்

இந்தியா: காலை சுமார் 7:30 இருக்கும். காலை நடைப்பயிற்சியில் இருந்து திரும்பிய எனது தந்தை, "ராஜீவ், அருகில் இருக்கும் கோயிலுக்கு சென்று வா. ஒரு அதிசயம் நடந்துக்கொண்டு இருக்கிறது. விநாயகர் பால் அருந்துகிறார். இந்த அதிசயம் டில்லி முழுவதும் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது," என்று என்னிடம் கூறினார். நானும் என் மனைவியும் அருகில் இருந்த தீபாலி கோயிலுக்கு விரைந்தோம். அங்கே பால் வழங்குவதற்கு நூற்றுக்கணக்கான பக்தர்கள் வரிசையில் நின்றுக்கொண்டு இருந்தனர். அந்த கோயிலுக்குள் எட்டு அடிக்கு பத்து அடி அளவில் இருந்த ஒரு கருவறையில், ஒரே சமயத்தில் பன்னிரண்டு பக்தர்கள் ஒரு சிறிய விநாயகர் சிலைக்கு ஸ்பூன்களில் பாலை வழங்கிக்கொண்டு இருந்தனர். என் மனைவி இருமுறை கடவுளுக்கு பாலை வழங்கினாள். சில நொடிகளில் பால் மறைவதை என்னால் நன்றாக கவனிக்க முடிந்தது. விநாயகர் தங்களிடம் பாலை கேட்டு கனவில் வந்ததாகவும், அதன் பிறகு தாங்கள் அதிகாலையில் வந்து வழங்கியதாகவும் பல கோயில் பூசாரிகள் கூறினார்கள். "அதிகாலை 4:30 மணி அளவில் ஒரு நபர் எனது வீட்டுக் கதவை தட்டி, 'விநாயகர் பால் குடிக்கிறார்! விநாயகர் பால் குடிக்கிறார்!' என்று கூறினார். நான் கதவை திறப்பதற்குள் அந்த நபர் மறைந்துவிட்டார்," என்று தீபாலி கோயில் பூசாரி என்னிடம் கூறினார். டில்லியில் வாழ்க்கை ஸ்தம்பித்துவிட்டது. கடைகள் காலியாக இருந்தன. வங்கிகள் மற்றும் அலுவலகங்களில் ஊழியர்கள் வருகை மிகவும் குறைவாக இருந்தது. நான் கடந்த சில நாட்களில் சுமார் 100 நபர்களிடம் பேசியிருப்பேன். அதில் தொண்ணூறு சதவீதத்தினர் தாங்கள் அந்த அனுபவத்தை பெற்றதாகவும், விக்ரகம் உண்மையில் பாலை ஏற்றுக்கொண்டதாகவும் என்னிடம் கூறினர்.

ராஜீவ் மாலிக், புது டில்லி, பத்திரிகையாளர்

நியூ யார்க்: குறைகூறி தீவிரமாக விமர்சனம் செய்யும் நியூ யார்க் நகரிலும் இந்த அதிசயம் நிகழ்ந்துக்கொண்டு இருந்தது. பால் உண்மையில் மறைந்துக்கொண்டு இருந்தது. ஒரு கல்லூரி மாணவியாக இருந்த மனீஷா லுந்த், குயின்ஸ் பகுதியில் இருந்த இந்து கோயிலுக்கு தான் சென்ற போது, அங்கே நெரிசல் மிகவும் அதிகமாக இருந்ததாக கூறினாள். அவள் விநாயகருக்கு பாலை வழங்கிய போது, "ஒருவர் ஸ்ட்ரா மூலம் அதை குடிப்பதைப் போல, அந்த பால் உறிந்துக்கொள்ளப்பட்டது." விநாயகர் குறும்புத்தனமாக இருந்தது போலத் தோன்றுகிறது. அவர் சிலசமயங்களில் பக்தர்கள் வழங்கிய ஸ்பூன் நிறைய பாலை மறுத்தார் மற்றும் நாத்திகர்கள் வழங்கிய பாலை பெரிய சத்தத்துடன் குடித்தார். பிளஷிங்க் பகுதியில் இருந்த ஒரு இந்து கோயிலில், இந்து மதத்தை சார்ந்தவள் இல்லை என்றாலும் இந்து தத்துவத்தில் ஆர்வம் இருந்த ஒரு இளம் ஆப்ரிக்க-அமெரிக்க பெண்மணி, தான் வழங்கும்

நெய்வேத்தியத்தை சிவபெருமான் ஏற்றுக்கொள்வாரா என்று சத்தமாக கேட்டுக்கொண்டே, தனது ஸ்பூனை கடவுளுக்கு முன்பாக நீட்டினார். அப்போது கூடியிருந்த பக்தர்கள் வியக்கும் வகையில், அவர் வழங்கிய பாலை சிவபெருமானின் விக்ரகம் உறிந்துக்கொண்டது. பக்தர்கள் தங்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் கல், பித்தளை மற்றும் வெள்ளியில் உருவாக்கப்பட்ட சிலைகளுக்கு பாலை நம்பிக்கையுடன் வழங்கி மகிழ்ந்த சம்பவங்கள் பல இடங்களில் தொடர்ந்தது. இந்த சம்பவத்தில் இளைஞர்களுக்கு நல்ல அதிஷ்டம் இருந்தது போலவும், அவர்கள் இந்த அதிசயத்தை கண்டு அதிகம் மகிழ்ந்தது போலவும் தோன்றுகிறது. 14 வயது நிரம்பிய பம்மி சிங் அலுவலகத்தில் இருந்த தனது தாயை அழைத்து, தானும் தனது தோழிகளும் விநாயகருக்கு மூன்று முறை பாலை வழங்கியதாகவும், நெரிசல் அதிகமாக இருந்த கோயில்களில் அதிகாலை 2 மணியாக இருந்தாலும், நுழைவது கடினமாக இருந்தது என்றும் அவள் கூறினாள்.

லாவினா மேல்வாணி, நியூ யார்க், பத்திரிகையாளர்



டில்லி பிர்லா கோயிலுக்கு வெளியே விநாயகர் சிலைக்கு பால் வழங்கக் கூடியிருந்த இந்துக்களின் இந்த புகைப்படத்தை அசோசியேட்டட் பிரஸ் உலகெங்கும் பிரசுரித்தது.

லாஸ் ஏஞ்சல்ஸ்: "இந்த அதிசயத்தைப் பற்றி எங்கள் பக்தர்களில் ஒருவருக்கு இந்தியாவில் இருந்து அழைப்பு வந்தது," என்று நோர்வாக் பகுதியில் இருக்கும் இந்து கோயிலின் பூசாரியான பரத் சாஸ்த்ரி நினைவுக்கூர்ந்தார். அன்று மாலைக்குள் அவருக்கு 600 தொலைப்பேசி அழைப்புக்கள் வந்துவிட்டன. இங்கும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இருக்கும் மற்ற கோயில்களிலும் சந்தேகம் பொருந்திய சூழ்நிலை நிலவியது. நோர்வாக் கோயிலில் இருக்கும் விநாயகர் சில பக்தர்கள் வழங்கிய பாலை மட்டுமே ஏற்றுக்கொண்டார். பூசாரிகள் மட்டுமே பாலை வழங்கிய கலாபசாஸ் பகுதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா கோயிலில் விசேஷமாக எதுவும் நடைப்பெறவில்லை. இந்த அதிசய நிகழ்வு சாட்ஸ்வோர்த் கோயிலில் பெரிய அளவில் நடைபெற்றதாக தோன்றுகிறது. “கோயில் தலைவரான தினேஷ் லகன்பால் வியாழக்கிழமை காலையில் சிலைக்கு காலையில் வழங்கிய பால் மறைந்து விட்டது. அதன் பிறகு அவர் மேலும் வழங்கிய பாலும் மறைந்து விட்டது," என்று துணைத் தலைவர் ரவி சரண் கூறினார். சி.என்.என். மற்றும் உள்ளூர் தொலைக்காட்சி சானேல்கள் வந்ததாகவும், இந்த அதிசயம் அவர்களுக்கு நடந்ததாகவும் கூறப்படுகிறது. “சேனல் 5 பத்திரிகையாளரான ஷேரன் டே மிகவும் மகிழ்ச்சி அடைந்து, கண்களில் கண்ணீருடன் என்னை கட்டி அணைத்துக் கொண்டார்," என்று ரவி சரண் கூறினார்.

அர்ச்சனா டொங்க்ரே, லாஸ் ஏஞ்சல்ஸ், பத்திரிகையாளர்

கனடா: எட்மண்டன் விநாயகர் கோயிலில் இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை 7:30 மணி பூஜைக்குப் பிறகுத் தொடங்கி, ஞாயிற்றுக்கிழமை 24 ஆம் தேதி இரவு 11:45 மணி வரை இடைவிடாமல் தொடர்ந்துக்கொண்டு இருந்தது. விநாயகர் சிலையை சுற்றி இருந்த சூழல் பிரகாசமாக இருந்தது. பக்தர்கள் சிலைக்கு அருகில் சென்று வணங்கி பிரார்த்தனை செய்துவிட்டு ஒரு ஸ்பூன் நிறைய பாலை வழங்கினார்கள். சுயமாக நடக்கமுடியாமல் இருபுறமும் துணையுடன் புடவை அணிந்த பக்தியுள்ள மூதாட்டிகள் முதல், கருப்பு லெதர் ஜீன்ஸ் அணிந்து சூயிங்-கம்மை அசைப்போடும் பதின்ம வயதினர்கள் வரை பல்வேறு வயதைச் சேர்ந்த பக்தர்கள் வந்திருந்தனர். அவர்கள் வழங்கிய பால் எங்கே மறைந்தது என்று எனக்குத் தெரியவில்லை. அந்த பால் ஸ்பூனில் இருந்து கற்சிலையின் துதிக்கை வரை "விளக்கின் திரி" போல எழுவதை பார்க்க முடிந்தது. சில சமயம் விரைவாக மூன்று வினாடிகள் அல்லது வழக்கமாக 20 வினாடிகளில், பல ஸ்பூன்கள் நிறைய பால் உறிந்துக்கொள்ளப்பட்டது. ஒரு நிமிடத்திற்கு இரண்டு டீஸ்பூன்கள் என்கிற மிதமான விகிதத்தில் (பால் தொடர்ந்து வழங்கப்பட்ட) 51.5 மணி நேரங்களுக்கு கணக்கிட்டால், சுமார் 7.7 கேலன் பால் உறிந்துக்கொள்ளப்பட்டு இருந்தது. விநாயகர் சிலைக்கு அருகில் குறிப்பிட்டு சொல்லும் படியாக பால் எதுவும் எனக்குத் தென்படவில்லை. பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததாலும், ஸ்பூன்களில் இருந்து பால் சிந்தியதாலும், விநாயகரின் துதிக்கைக்கு அருகே அவருடைய ஆடைகள் ஈரமாகி இருந்தாலும், அவருக்கு வழங்கப்பட்ட பாலின் அளவை ஒப்பிடும் போது,

அந்த ஈரத்தின் அளவு மிகவும் சிறியதாக தோன்றியது. நாங்கள் எல்லோரும் முறையாக விளக்க முடியாத ஒன்றை பார்த்துக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லி முடித்துக்கொள்வதைத் தவிர எனக்கு வேறெதுவும் புரியவில்லை.

அரண் வேலன், எட்மண்டன், பாரிஸ்டர்

மொரீஷியஸ்: நான் இன்று செப்டெம்பர் 25 ஆம் தேதி, விநாயகருக்கு பால் வழங்கி வந்தேன். இது போ பேசினில் இருக்கும் துளசி ஷாம் கோயிலில் நடைபெறுகிறது. நான் எனது வேலைகளை எல்லாம் விட்டு, அங்கே விரைந்து சென்றேன். நான் சிறிதளவு பாலை என்னுடன் எடுத்துச் சென்று, கீழே எதையும் சிந்தாமல் துதிக்கைக்கு அருகில் அதை எடுத்துச் சென்றேன். அந்த பால் மிகவும் விரைவாக உறிந்துக்கொள்ளப்பட்டது. உலகெங்கும் நடந்துக்கொண்டு இருக்கும் இந்த ஒரு அற்புதம் இந்துக்களாகிய நம்மை மேலும் சிறப்புறச் செய்கிறது.

பர்மேஷ் பல்லனீ, பெடிட் ரிவிஏர், கணிப்பொறி அமைப்பு ஆலோசகர்

கென்யா: விநாயகரின் பளிங்கு சிலை பாலை குடிக்கிறது என்று நைரோபியில் இருக்கும் ஒரு சொந்தக்காரருக்கு இந்தியாவில் இருந்து அழைப்பு வந்ததும் அந்த அதிசய நிகழ்வுகள் வரிசையாக தொடங்கின என்று ஸ்ரீ சனாதன தர்ம கோயிலின் தலைமை பூசாரியான பண்டித் நரிந்தர் குமார் சாஸ்த்ரி உணர்ச்சிப்பூர்வமாக தனது அனுபவத்தை வர்ணிக்கிறார். கோயிலில் இருந்த இரண்டு தெய்வ விக்ரகங்கள் அதிக அளவில் பாலை அருந்தியது என்று அவர் கருதுகிறார். பல்வேறு மதங்கள் மற்றும் நாடுகளைச் சேர்ந்த மக்கள், அந்த கோயிலுக்கு வந்து கடவுளுக்கு பாலை வழங்கினர். சோதிப்பதற்காக பல நாத்தீகர்களும் வந்து இருந்தார்கள். கடவுளின் சிலை பாலை ஏற்றுக்கொண்டதால், அது மக்களின் எண்ணத்தை மாறிவிட்டது. இந்த அதிசய நிகழ்வு இளைய தலைமுறையினர் மீது ஒரு விஷேசமான பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் காரணமாக சிரத்தையுள்ள இந்துக்களின் புதிய தலைமுறை உருவாகியுள்ளதாக பண்டித்ஜி கருதுகிறார். ஒரு ஆப்ரிக்க மண்ணில் இந்த அதிசயம் நடந்து இருப்பது அசாதாரணமாக இருப்பதோடு, இந்துக்கள் அல்லாத பல ஆப்ரிக்கர்கள் வந்து பக்தர்களாக மாறியது மேலும் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. நான் கோயிலுக்குள் நின்றுக்கொண்டு, சுமார் மூன்று மணி நேரத்திற்கு மக்கள் கூட்டம் வந்து போவதை பார்த்துக்கொண்டு இருந்தேன். கோயிலில் சூழல் உற்சாகத்துடன் நிலையற்று இருந்தாலும் அமைதியாக இருந்தது. கடவுளுக்கு பாலை வழங்கி மெய்மறந்த மக்கள், கோயிலை விட்டு வெளியே செல்ல மனமில்லாமல் நின்று இருந்தார்கள்.

நைரோபியில் ஜோதின் அரவிந்த் பாய் பட்டேலின் தனியார் கோயிலில், இந்த அதிசயம் வியாழக்கிழமை மாலை 4:30 மணிக்கு தொடங்கி, ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணி வரை தொடர்ந்தது. அவரும் மினாலும் ஸ்பூனில் வழங்கிய பால் மாயமாக மறைந்துவிட்டது. விநாயகரின் துதிக்கைக்கு அடியில் ஸ்பூன் வைக்கப்பட்டதும், அதில் இருந்த பால் உறிந்துக்கொள்ளப்பட்டது. பால் உறியப்படும் சத்தம் தனக்கு கேட்டதாக மினால் நினைவுக்கூர்கிறார். நான்கு நாட்களில் இந்துக்கள், சீக்கியர்கள், ஆப்ரிக்கர்கள், ஐரோப்பியர்கள் என்று அனைத்து மதம் மற்றும் நாடுகளை சேர்ந்த மக்கள் கடவுளுக்கு பாலை வழங்கினார்கள். இந்து அல்லாத ஒருவருக்கு ஏற்பட்ட தனிப்பட்ட அனுபவத்தின்

விளைவாக, பட்டேல் சகோதர்கள் ஒரு வணிக வளாகத்தில் ஒரு சிவன் கோயில் கட்டுவதற்கு இலவசமாக நிலத்தை வழங்கியுள்ளனர்.

பிரபா பிரபாகர் பரத்வாஜ்



ஒரு கோயிலில் விநாயகருக்கு பாலை வழங்கிய ஆயிரக்கணக்கானவர்களைப் போல, இந்த பக்தையும் வழங்குகிறாள். இந்தியாவைப் போல அல்லாமல், இந்த அதிசய சம்பவம் உலகின் மற்ற நாடுகளில் பல நாட்களுக்கு தொடர்ந்தது.

எனக்கு அதிக அதிஷ்டவசமான நாள்

எழுதியவர் கர்னல் பி. சி. பரத்வாஜ்

பல மில்லியன் கணக்கில் இருக்கும் நாம், அத்தகைய ஒரு அதிசய நிகழ்வை பார்வையிட்டு பங்குபெறுவதற்கு எண்ணற்ற பிறவிகளை எடுக்க வேண்டியிருந்தது. தனக்கு பாலை வழங்க, அந்த இறைவனால் வாய்ப்பு அளிக்கப்பட்ட எண்ணற்ற அதிஷ்டசாலிகளில் நானும் ஒருவனாக விளங்கினேன். கோயில் சிலைகளுக்கு சக்திகள் இருக்கிறது என்றும், இறைவனை அடைவதற்கு தெய்வங்களின் வழிபாடு ஒரு பாதையாக விளங்குகிறது என்றும் மக்களின் மனதின் நம்பிக்கையை உருவாக்குவதற்கு

இந்த அதிசய நிகழ்வு தேவைப்பட்டது. நான் நீண்டகாலமாக ஒரு பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். பன்னிரண்டு அங்குலங்களுக்கு ஆறு அங்குல அளவில் இருக்கும் சிறிய கல் அல்லது உலோக சிலைகள், பல நூறு பிண்ட் கணக்கில் பாலை, தந்துகி விளைவு மூலம் உறிந்துக்கொண்டது என்ற கருத்துக்கு சாத்தியமில்லை. பெரும்பாலான விக்ரகங்கள் கல்லில் செதுக்கப்பட்டவை அல்லது உலோகத்தில் வார்புவேலை செய்யப்பட்டவை. வளைந்து இருக்கும் விநாயகரின் துதிக்கை, நுனியில் முறுக்கத்துடன் இருக்கிறது. அதன் நுனியில் மட்டும் சிறிய துவாரம் இருந்து, அதன் மற்ற பகுதிகள் திடமாக இருக்கின்றன. இந்த நுனிப்பகுதியால் ஒரு ஸ்பூன் பாலையும் தக்க வைத்துக்கொள்ள முடியாது. சில *மூர்த்திகளில்*, துதிக்கை நேராகவும், நுனியில் ஒரு துவாரம் இல்லாமலும் இருக்கிறது. அது சில மணி நேரங்களில் பல நூறு பிண்ட் பாலை உறிந்துக்கொண்டது. அந்த சிலையில் இருந்து பால் வெளியே வருவதாகவும் தெரியவில்லை. *மூர்த்திகளை* சுற்றி பனிமூட்டம் இருந்ததாகவும் தெரியவில்லை. நாம் இதை இறைவன் நடத்திய அதிசயம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?

நாம் இறைவனுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறோம்

எழுதியவர் ஜெய் துபாஷி, புது டில்லியின் *ஆர்கனைசர்* பத்திரிக்கையில் பத்தியாளர். இந்த பத்திரிகையில் இந்த கட்டுரை முதலில் வெளிவந்தது

வெளியே நடந்துக்கொண்டு இருந்த அதிசயத்தைப் பற்றி ஒரு சிறுவன் எனக்கு முதலில் எச்சரிக்கை விடுத்தான். "வாங்க, வாங்க...பிள்ளையார் பால் குடிக்கிறார்," என்று அவன் கூறினான். நாங்கள் இருவரும் அருகில் இருந்த கோயிலுக்கு சென்ற போது, மக்கள் கூட்டம் அலைமோதியது. மூன்று அல்லது நான்கு வயது நிரம்பிய ஒரு சிறுமி விநாயகரின் உதடுகளுக்கு அருகில் ஒரு ஸ்பூன் நிறைய பாலை உயர்த்த, அந்த பால் மாயமாக மறைந்ததை நாங்கள் வியப்புடன் பார்த்துக்கொண்டு இருந்தோம். "நான் சொன்னேன் அல்லவா?" என்றான் அந்த சிறுவன். இதில் வாதாடுவதற்கு ஒன்றுமில்லை. அது அதிசய நிகழ்வு தான் என்பதில் சந்தேகமில்லை. அது ஒரு அதிசயமாக இல்லாவிட்டாலும், பார்ப்பவர் கண்களுக்கு அது ஒரு அதிசயமாகவே இருந்தது. காலத்துடன் கோட்பாடுகளும் மாறி வருவதால், இந்த உலகில் இருக்கும் பெரும்பாலான விஷயங்களை

இயற்பியல் அல்லது வேதியலின் சாதாரண கோட்பாடுகள் மூலம் விளக்க முடிவதில்லை.

ஆனால் இந்த விஷயத்தில் இறைவன் பால் அருந்திய அதிசயம் எனது ஆர்வத்தை தூண்டவில்லை. இந்த அதிசயம் இந்தியாவில் மட்டும் இல்லாமல், இந்துக்கள் ஒன்றாக கூடும் பெரும்பாலான உலக நாடுகளில் தென்பட்டது. இந்த செய்தி பரவுவதற்கு பல நாட்கள் மற்றும் மணி நேரங்கள் தேவைப்படாமல், சில நிமிடங்களில் பரவிவிட்டது. இது இந்து சமூகம் தங்கள் அடையாளத்தை பாதிக்கும் விஷயங்களில், இணையத்தை காட்டிலும் அதிக நெருக்கமாக இருப்பதை காண்பிக்கிறது. லண்டன் மற்றும் லெய்செஸ்டர், நியூ ஜெர்சி மற்றும் சிக்காகோ, டென்மார்க், கனடா, பாங்காக் மற்றும் சிங்கப்பூரில் இருந்து கோயில்களில் இந்துக்கள் பெருந்திரளாக கூடியிருந்தனர். மேலும் இவை அனைத்தும் வியக்கும் வகையில் உடனடியாக நடைபெற்றன.

இந்த நிகழ்வு இந்துக்கள் தங்களுக்குள் நெருக்கமாக இருப்பதையும், தங்கள் மகாதேவர்களிடமும் அவர்கள் நெருக்கமாக இருப்பதையும் வெளிப்படுத்தியது. இந்த விஷயத்தை ஒரு இந்துவைத் தவிர வேறு யாராலும் புரிந்துக்கொள்ள முடியாது. நம்மை பொறுத்தவரையில் மகாதேவர்கள் நமக்கு அந்நியமாக இல்லாமல், நமது உயிர்சக்தியின் அங்கமாகவே இருக்கிறார்கள். அந்த மகாதேவர்களுடன் நமக்கு இருக்கும் உறவானது குடும்பத்தினரிடம் இருப்பதைப் போல அன்புடன் நெருக்கமாக இருக்கிறது. நெருக்கமாக இருக்கும் ஒரு இந்து குடும்பத்திற்கு இணை வேறு எதுவும் இல்லை மற்றும் மற்றவர்களைப் போல மகாதேவர்களும் இந்த குடும்பத்தின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

நான் கோவாவில் சிறுவனாக வளர்ந்த போது, அருகில் கோயில்கள் மற்றும் *மடங்கள்* இருந்தது என்றாலும், விநாயகர் விசர்ஜன ஊர்வலத்தின் போது விநாயகர் வீட்டிற்கு வருகை தரும் நாட்களை நாங்கள் அதிகம் விரும்பினோம். ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் குழுவிற்கு பொருந்தும் கடுமையான தோற்றத்துடன் இருக்கும் சிலைக்கு நாம் பழகிவிட்டோம், ஆனால் விநாயகரை ஒரு கடுமையான நபராக நாம் என்றும் கருதியது இல்லை. தனது பருத்த உடலுக்கு ஒரு சிறிய முஞ்சூறு எலியை வாகனமாக தேர்ந்து எடுத்தவர் எப்படி ஒரு கடுமையான நபராக இருக்க முடியும்? ஆனால் நாங்கள் அதைப்போன்ற கேள்விகள் எதையும் கேட்டது இல்லை. அவர் எங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கினால், அதுவே எங்களுக்கு மனநிறைவை தருவதாக இருந்தது மற்றும் அந்த சமயத்தில் நாங்கள் அவருக்கு ராஜ உபசாரத்தை வழங்கினோம். அவர் சிறந்த பட்டாடைகளை அணிந்து சிறப்பான உணவுகளை உட்கொண்டார். நன்கு வளர்ந்த யானை மற்றும் அதன் குடும்பத்தை கழுவுவதற்கு தேவைப்படும் பால் மற்றும் தேனுடன் அவரை நீராட்டினோம். நாங்கள் அவரை வீட்டில் ஒருசில நாட்களுக்கு வைத்து இருந்து, பின்னர் அவரை நதியில் கரைப்பதற்கு தேவையான பணிகளை செய்வோம். அப்போது நாங்களும், குறிப்பாக விநாயகரை கரைக்க முன்னேற்பாடுகளை செய்யும் பணியில் ஈடுபட்டு இருந்த

எனது தாய்மாமனும் அதிகம் உழைக்க வேண்டி இருந்தது. நாங்கள் பாதை முழுவதும் கோஷமிட்டுக் கொண்டு நதி வரை நடந்து சென்றோம் என்றாலும், விநாயகர் எங்களை விட்டு விரைவில் பிரியவிருக்கிறார் என்ற துக்கம் ஆதிக்கம் செலுத்தியது. நதிக்கரையில் ஒரு சிறிய பூஜைக்குப் பிறகு, நாங்களும் எங்கள் ஊர் தலைவராகவும் வயதில் பெரியவராகவும் இருந்த எங்கள் தாய்மாமனும் அழுதுக்கொண்டே, சுழலும் நீரில் அந்த சிலையை மெதுவாக விடுவித்தோம். நமது மகாதேவர்கள் தங்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்றோ பணம் வேண்டும் என்றோ கேட்பதில்லை. ஒரு தந்தை மற்றும் மகன் அல்லது சகோதரர்களிடையே இருக்கும் உறவைப் போல, ஒரு இந்து மற்றும் அவனது கடவுளுக்கு மத்தியில் இருக்கும் ஒரேயொரு உறவில் அந்த மகாதேவர்கள் உங்கள் அன்பு மற்றும் பாசத்தை மட்டுமே வேண்டுகிறார்கள்.

இந்து சமயத்தில் மகாதேவர்கள் மற்றும் அவரது பிரஜைகளுக்கு மத்தியில் இருக்கும் உறவு வலுவாக நீடித்து இருப்பதைப் போல, வேறு எந்த மதத்திலும் இருப்பது இல்லை. நாம் எல்லோரும் அந்த மகாதேவர்களிடம் இருந்து தோன்றி இருக்கிறோம் என்பதாலும், அவர்கள் மலைகள் மற்றும் நதிகளில் காவலாக நின்றுக்கொண்டு நமது புனிதமான பூமியை காக்கிறார்கள் என்பதாலும், அவர்கள் அவ்வப்போது கீழிறங்கி வந்து, நாம் சிறிய ஸ்பூன்களில் வழங்கிய பாலை குடித்தால், அது அதிசயம் ஆகுமா? அது இந்த உலகில் நடைபெறும் ஒரு மிகவும் இயல்பான விஷயமாகத் தான் இருக்கும்.

விநாயகர் பால் குடித்த அதிசயம் பற்றி பத்திரிகைகளில் வந்த கட்டுரைகளை பின்வரும் பக்கங்களில் காணலாம்.

NEWS LOCAL

Statue of Hindu God, Ganesha, drinks milk

Phenomenon witnessed in Fiji and around the world



Hindus Claim Milky Miracle

e Daily Telegr

onder of milk draws thousands



I cannot explain says Ramakrishna boss

'Miracles have been known to happen'

LATE PRICES EXTRA

Evening Standard

to see milk-sipping idol

ES TODAY'S EVENING STANDARD

YOU COULD WIN UP TO £50,000

Pick up your new game card free with today's ES Magazine

IT'S SO EASY TO PLAY – SEE PAGE 38 OF THE PAPER FOR DETAILS AND WINNING NUMBERS

THE AMAZING MILK 'MIRACLE'

The Edmonton Jour

Thousands flock to London Hindu temple as statues 'drink'



£29,000

The Daily Post

A Hindu centu

Milk miracle linked to Hind



A THIRST FOR MIRACLES

Milk-drinking idol renews faith, joy for city's Hindu community

Temples mobbed after 'milk miracle'

Indiase godenbeelden zuigen melk op



November, 1995 • Volume 17, Number 11 — North America Edition — US$3.75

HINDUISM TODAY





"It's a Miracle!" Rejoice Millions As Lord Ganesha Receives Milk

"The" Supernatural Event of This Century Is Experienced Simultaneously Worldwide

SRI LANKA

People Throng Sindhi Temple

From MOHAN SAMARASINGHE

COLOMBO: Thousands of Sri Lankans flocked to Colombo's Sindhi temple to witness what worshippers said was the miracle of two Hindu gods sipping milk here, September 23.

People of all ages and religions streamed into the Sindhi community center, a seaside temple patronized mostly by Hindu devotees, where the marble statues of the deities Lord Ganesha and Lord Shiva, were placed wreathed in flowers.

Devotees offered milk in spoons to the trunk of elephant-headed Ganesha and to the mouth of Shiva and sang their praise as the liquid disappeared slowly.

"Do it slowly," a temple guardian told a female devotee as she awkwardly held the spoon to Ganesha's trunk. "You have to feed him like you feed a baby."

Suresh Pesumal, the Center's Secretary said Colombo got word of the miracle from a devotee in New Delhi, September 21.

Thousands of Indian devotees were reported to have claimed the miracle happened to them, although Indian scientists said it was all just mass delusion.

"Immediately our head priest offered milk and the gods accepted the offerings," Pesumal told Reuters.

Thousands of devotees and curious onlookers have flocked to the temple after hearing of the miracle, Pesumal said.

The temple's head priest Pandit Jaidev Sharma said this was traditionally the time of year when alms were offered to the gods.

"This is the period in which we feed our ancestors. That particular day (September 21) was when we were to feed them milk," Sharma said. Pesumal said he believed it was a heavenly gesture towards mortals.

"I feel that the gods are showing their power, specially to the younger generations who will now start believing," he said.

"Do it slowly," a temple guardian told a female devotee as she awkwardly held the spoon to Ganesha's trunk. "You have to feed him like you feed a baby."

'Some G

LONDON: Anila Pren have the slightest doubt. miracle. Premji was one dreds of Hindus who fl the Vishwa temple in S West London, as word sp wildfire through the larg community that religiou had begun drinking milk c

After waiting patiently queue September 21, Pr scribed the moment when, her hand quivering, she held a spoonful of milk up to the temple's 15-inch (38 cm) high marble idol of Nandi, the bull ridden by the Hindu deity Shiva.

Hu into mou had cart Th idol tion

"We were told to hold th still because some people anxious to feed it quickly milk was spilling. "Anot sitting next to the idol w ing my hand so it didn't held the spoon at level, ar disappeared," Premji, v scribes herself as not part religious, said.

Her verdict? "To me it a miracle. It gave me a s feeling that there is a God

EAST AFRICAN
Standard

CITY EDITION No. 25300, Saturday September 23, 1995

Miracle or



Ganesha Idols Around the World 'Drink' Milk



Devotees offering milk to an idol of Lord Ganesha at the

By Narayanan Madhavan

NEW DELHI—Crowds swarmed into temples across India and neighboring Nepal on Sept. 21 after reports that idols of Hindu gods were drinking milk poured as sacred offerings.

Hindus packed temples as news spread that milk offered to lingams (phallic symbols) of Lord Shiva, or idols of Ganesha, the elephant-headed deity, disappeared.

Unbelievers protested. "Many people who believe in this kind of thing, they look for some miracle and do not want to put a critical mind on that," said Sanal Edamarukku, general secretary of the Indian Rationalist Association.

But believers, some converted by what they were sure they

ble Public Milk Feeding

force that acts on the surface of the liquid tending to minimize its areas, and the other in capillarity, the action by which a liquid in contact with a soaked surface rises or falls due to the relative attraction between the liquid molecules and between the liquid and solid surface.

Since morning, people had thronged temples, hoping to see a "miraculous sight" of idols of Ganesh drinking milk offered to him. Scores swore by the event, drowning the voices of the few rationalists who tried to give a possible explanation.

Scientists at the National Institute of Science Technology and Development Studies (NISTADS) here said if any rough surface is wetter, the liquid creates a capillary channel which sucks in more liquid droplets.

Please See Page 26

Hindu Statue "Sips Milk" in Roman Catholic Italy

ROME—Roman Catholic Italy, more used to "weeping" statues of the Virgin Mary, on Sept. 25 joined the latest "miracle" wave of Hindu idols that sip milk.

A store in Rome that sells Indian wares said a small metallic idol of the elephant-headed Ganesh, son of the Hindu god Shiva and his consort Parvati, had begun sipping milk from a spoon.

"We got a phone call from India and they told us the Ganesh was drinking milk. We tried over here and he was drinking milk," said Sanjay Daswani, whose family owns the store.

"We were all surprised and astonished," he told Reuters as a relative fed the idol a spoonful of milk for television cameras.

"We think in New Delhi a baby was born with the head of a Ganesh and a human body, and that's why he's drinking the milk," Daswani said.

"There's too much bad stuff happening in the world, and this baby was born to help us, to make the world a better place," he added.

There are very few Hindus in Italy but reports of purported miracles are common.

Earlier this year, miracle fever swept the country with a rash of reports of statues of the Virgin Mary weeping blood or tears. None has been verified by the Roman Catholic Church.

The substance Neapolitans believe that the blood of the city's patron saint, Gennaro, liquefied in a repeat of a 600-year-old ritual miracle brings good luck.

(Reuters)

preads to London

"To me it was just a miracle. It gave me a sense of feeling that there is a god, a sense of spirit on this Earth.

"My daughter was with me and she just couldn't believe it."

Scientists said the marvel was just mass delusion, explained by elementary physics.

But believers, in London as in India, were having none of it, insisting that a miracle was at hand.

"I believe that some great soul has descended on earth," Roshan Lal Bhanbari, chairman of the temple, told *London's Evening Standard* newspaper. (Reuters)

Hong Kong Hindus Throng to Temples on Miracle News

By Kwan Chooi Tow

HONG KONG—Hong Kong's Hindus spent a second day on Sept. 22 offering milk to Hindu gods in the hope that their wishes would come true.

"I felt it (a figurine representing Ganesha) drank the whole spoon of milk," said Neelam Gupta, who visited a Hindu temple in Happy Valley on Hong Kong island on Sept. 22.

Ganesha is the elephant-headed deity who is the son of Lord Shiva and Goddess Parvati.

Like thousands of other Hindus in the colony, Neelam received a call from her parents in Bombay, India, telling her a "miracle" was taking place as idols of Ganesha and Lord Shiva drank milk.

"I tried feeding the Ganesha statues at home with milk but it didn't work, so I came to the temple fed the Ganesh idol at the temple may have spilled.

Hong Kong is home to more than 20,000 Indians, many of them Hindus.

The devout believe their wishes will come true if an idol accepts an offering of milk.

Head priest Prakash Sharma said that 700-800 devotees had flocked to the temple when the reports first surfaced in India and spread to Nepal.

He claimed that most of the "milk-drinking" in Hong Kong was by statues of Ganesha, Lord Krishna and Lord Brahma.

A little girl started feeding the statue with milk using a spoon, the idol started drinking, he said.

Idols of the deities are given milk as offerings each day but this was the first time the idols had "drunk" milk, said the priest.

Another devotee said the temple was filled with hundreds of

e" in Thai Temple

have faith in it you can see it with your eyes," said one ethnic Chinese woman from Singapore offering milk to an idol of the god Ganesha, the elephant-headed deity.

The priest of the Hindu

Magazine free with today's ES Magaz
IT'S SO EASY TO PLAY – SEE PAGE 38 OF THE PAPER FOR DETA

THE AMAZ
MILK 'MIRA

Thousands flock to London Hindu temple as statues 'drink'

by TOM LEONARD

THEY CAME in their thousands, some clutching two-litre value packs, others bearing just a humble pint of semi-skimmed.

All through the night and from the early hours this morning, suited London accountants and housewives in saris filed respectfully past the glittering statues of Rama and Vishnu, some of them pausing to ring a brass bell to alert the gods to their presence as they approached the shrine in Southall.

There, under a plaster diorama of the Himalayas, complete with a miniature stream gushing down into a sink, stood a marble bull less than a foot high.

In Southall's Vishwa's Hindu Temple, Nandi, steed of Supreme Shiva, was apparently busy working miracles as he is reported to have been doing in Hindu temples all across the world.


Stories from India that statues of the deities had been sipping milk sparked a feverish response from the faithful that has quickly spread to west London.

By noon today the crowd queuing outside the temple in Lady Margaret Road had reached more than 500. Temple officials estimated that around 10,000 people had visited the little bull in the past 24 hours — 6,000 since early this morning.

According to believers, and everyone seems to be putting a slightly different interpretation on events, the statues are sipping milk all over London — not just in temples but in people's houses.

Two hundred yards down the road from the Southall temple, at 61 Lady Margaret Road, the owners of a nine-inch clay model of Ganesh, the elephant god, said he had guzzled his way through 20 pints of milk in half as many hours. More than

Continued on Page 2 Col 6



Miracle on Lady Margaret Road: Worshippers at Southall's Vishwa's thousands have brought milk for the gods to drink

'Miracle' continues for second

NEW YORK, Sept. 23 (PTI) Thousands of devotees across the United States thronged temples for the second day on Friday as idols of Lord Ganesha continued to accept milk offerings by the spoonfuls.

Television networks showed devotees offering the milk to the deity and milk disappearing.

"It really looks like a miracle," one reporter said.

Devotees rejected any argument that it had scientific explanation, saying in that case, there should be limit to the milk an idol can absorb. But there seems to be no limit.

In interviews, some devotees claimed that milk had vanished even when offered to idols made of brass or other metals. Though claims cannot be verified, the miracle seems to be making believers of staunch non-believers.

In one instance, a devotee reported that Ganesha did not accept milk when offered by a non-believer but prompty drank it moments later when offered by a believer.

Most newspapers, both regional and nationally circulated, had comprehensive coverage of the miracle in India with photos showing devotees thronging the temples.

Press Trust of India received several telephone calls again on Friday asking for details but when told that there could be scientific explanation, most laughed derisively.

"Scientists' explanation is phony. Lord is making his presence felt and that makes them nervous," a caller shouted angrily and banged the receiver.

Another asked have you offered milk to Ganesha. When this correspondent replied in the negative, the caller retorted, "Then you have no business to talk about scientific explanation. Keep explanation to yourself. Tell me about the miracle."

"Yet another miracle by the almighty to remind the people of the presence of a higher power and to persuade them to ask for forgiveness not only from him but from each other and change their ways," a Jewish theology scholar was quoted as saying after seeing the television coverage of the miracle.

The day on which it happened is auspicious also according Hebrew calendar, said Moshe Yogev, a senior researcher at Kabala Center here.

Ruling out any human involvement, he said the secret of universe will soon be revealed if such miracles happen.

DHAKA: Thousands of Hindu devotees thronged temples in different cities of Bangladesh on Friday to offer milk to Hindu deities, who they believed, were drinking the offering.

When devotees offered spoonfuls of milk to the idols of gods in temples in Gopalgunj district in southern Bangladesh, the milk disappeared, vernacular daily *Sangbad* reported today quoting witnesses.

Another vernacular daily *Banglabazar Patrika* frontpaged a photograph today showing Hindu devotees offering milk to the idol of Lord Ganesh at a temple in the Bangladesh capital.

Idols of Ganesh and Gopal also "drank" milk at a temple in the northern Bangladeshi town of Natore, said *Dainik Janakantha* quoting witnesses.

The news of gods drinking the milk offered to them in Indian temples have been getting front-page coverage in Dhaka newspapers for the last two days.

LONDON: Anila Premji didn't have the slightest doubt. It was a miracle. Premji was one of hundreds of Hindus who flocked to the Vishwa temple in Southall, West London, as word spread like wildfire through the Capital's large Indian community that religious statues had begun drinking milk offerings, reports Reuter.

After waiting patiently in a long queue on Thursday night, Premji described the moment when, her hand quivering, she held a spoonful of milk up to the temple's 15-inch (38 cm) high marble idol of Nandi, the bull ridden by the Hindu deity Shiva.

"We were told to hold the spoon still because some people had been anxious to feed it quickly and the milk was spilling," Premji, who describes herself as not particularly religious, said.

"To me it was just a miracle. It gave me a sense of feeling that there is a god, a sense of spirit on this earth."

By mid-morning yesterday hundreds of happy worshippers, young and old, had returned in the autumn sunshine and waited to enter the ornate shrine.

Attendants hurriedly shunted the devotees up to an onion-domed centrepiece where the white marble icon was set in front of an artificial running stream.

Some brought their own milk in bottles and jugs. Others, kneeling to

make
spoon
offici
templ
The
India
Hindu
tradit
Sci
mass
eleme
The
appea
actual
surfac
that s
sprea
But
India,
insisti
"I b
descr
Bhan
told L
newsp
Has
Coun
Teleg
than
templ
north
The
mirac
been
create
If th
organ
doing
over t
and K
Ani
amaze
templ
street
absolu
god, A
it. I've

believers are arguing that miracles defy logic. Others have come up with explanations about Hinduism, which came into the news here as never before. Divyesh Patel, a priest in Wembley, says, "The milk was disappearing then. It is not happening any more. If it was rolling down then, why isn't rolling been dismissed as people believing what they want to believe. The believers have seen the doubters as disbelieving what they want to disbelieve.

Hindus in Germany also Experience Phenomenon

HAMBURG (Reuters) -- Hindus in the German city of Hamburg said they also experienced the phenomenon of religious statues "drinking" milk which has excited thousands of their brethren in India and elsewhere.

The leader of Hamburg's Afghan Hindu community, Marinder Kumar Goswami, said that more than 1,000 Hindus flocked at the weekend to his temple in a building near the northern city's main railway station. "It's a sign from the gods," he said.

The craze began after reports from a Delhi temple that its statues of the Hindu deity Shiva and his elephant-headed son Ganesh had begun sipping milk offerings.

The news swept through India and triggered similar reports from as far afield as London and Rome. Now the Hamburg faithful believe the same thing is happening to their idols. They say their Ganesh statue has consumed around 130 liters (28 gallons) of milk in the last few days. "I even heard Ganesh swallowing the milk," said 38-year-old Menakshi Chanana after holding a spoon of milk from a bronze bowl up to the statue's mouth. Some of the milk runs down the statue -- but less than the spoon contained.

Roman Catholic Italy, more used to "weeping" statues of the Virgin Mary, joined the latest "miracle" wave on Sept. 25.

A store in Rome that sells Indian wares said a small metallic idol of Lord Ganesh had begun sipping milk from a spoon. "We got a phone call from India and they told us the Ganesh was drinking milk. We tried over here and he was drinking milk," said Sanjay Daswani, whose family owns the store.

"We were all surprised and astonished," he told Reuters as a relative fed the idol a spoonful of milk for television cameras. Thousands of Hindus around the world, including in Britain and the United States, have flocked to temples in the hope of seeing the same phenomenon.

Scientists have spoken of mass delusion while secular Indian political parties have accused the Hindu right wing of perpetrating a hoax to whip up religious fever and win votes.

"We think in New Delhi a baby was born with the head of a Ganesh and a human body, and that's why he's drinking the milk," Daswani said.

"There's too much bad stuff happening in the world, and this baby was born to help us, to make the world a better place," he added. There are very few Hindus in Italy but reports of purported miracles are common. Earlier this year, miracle fever swept the country with a rash of reports of statues of the Virgin Mary weeping blood or tears. None has been verified by the Roman Catholic Church.

Last month, the substance Neapolitans believe is the blood of the city's patron saint, Gennaro, liquefied in a repeat of a 600-year-old ritual miracle they believe brings good luck.

India mail

London, September 28th - October 4th 1995

News | Special Feature | Arts

Millions queue to witness 'Act of God'

DAILY NATION

The newspaper that serves the nation

No. 10024, Nairobi, Saturday, September 23, 1995 — Price KSh15/00

'milk miracle' frenzy spread

Milk-drinking' idol picture on page 2

Patriot

NEW DELHI FRIDAY SEPTEMBER 22, 1995

The miracle of vanishi

The Guard

'of spirit on this earth'

ogenised, skimmed

MILK MIRACLE

Elementary Physics, Gullible Public Create Mass Hysteria of Milk Feeding

Hindu Statue "Sips Milk" in Roman Catholic Italy

Hindu Idols' "Milk Miracle" Spreads to Indonesia

Shiva Fever Spreads to London

Hong Kong Hindus Throng t Temples on Miracle News

"Milk Miracle" in Thai Temple

Believers thirst for a miracle from Hong Kong to Southall

Phenomenon leads to milk scarcity

STATESMAN NEWS SERVICE

NEW DELHI, Sept. 21. — The strange phenomenon of idols of God accepting milk in the Capital led to an artificial scarcity of milk here today.

The phenomenon forced sceptics and devotees to experiment whether their offerings were being accepted by God or not.

Shops and vendors did brisk business and by early afternoon milk was not available at most outlets. The demand and supply graph of the commodity suddenly went haywire and milk was being sold at a premium — at the few outlets where it was available.

Mother Dairy, milk booths, run by a Gujarat-based milk producers' cooperative, have sold 30% more milk while milk in polythene packets was freely available outside major temples particularly in South Delhi.

Though officials of Delhi Milk Scheme refuted 'any shortage' of milk in the market, they added that milk supply to the Capital will be increased tomorrow. The DMS supplies 3,00,000 litres every day.

Mr Tyagi assured that tomorrow there will be no shortage of milk for domestic consumption, as the Delhi Milk Scheme and Mother Dairy had been asked to make arrangements for supply of 3,00,000 litres of fresh milk in addition to the normal supply.

He added that the Government of Delhi was closely monitoring the prices and availability of fresh milk.

THE STATESMAN — METRO

Delhi witnesses frenzy of devotees

STATESMAN NEWS SERVICE

NEW DELHI, Sept. 21. — Hindu worshippers at a new luxury hotel here, thousands of people thronging to the temples to offer milk to the deities, there were long queues of devotees at supplies to offer milk to the idols of God. The rush of the devotees to the temples also created a milk crisis in the Capital.

It all started at 1.30 a.m. in the morning, if the queues are to be believed. It is still not clear how the rumours originated. The temple-hopers seldom waste no time. People called their friends and relatives, who called their friends and relatives to inform of the "miracle".

At most places the Gods were "speaking". Eye-witness people rushed to the nearest shop of Lord Ganesha and Lord Shiva with bottles of milk and a queue. Regardless of the endless queues, people waited patiently to watch the Gods "drinking" milk.


When news reached that a man in west Delhi's Rajouri Garden area, was actually hallucinating after "the phenomenon" was the temple without bothering to see the Gods drink of even drops of milk, what regular visitors were accustomed to see, people started to get worried, and left even the temple premises.

Delhi Jal Board, which has been facing a severe water crisis in the capital, was also flooded with complaints from residents that water supply in their areas was affected because of the milk offerings in the temples.

Mr Prem Lal, who works in a private firm said, "I am thinking I, The Idol (Ganesh) only when the water is lifted. Naturally any liquid will go down because of gravity. The devotee wasn't aware of it.

Mr Sunil Sharma, a journalist claimed that the whole phenomenon was nothing but a manifestation of mother wanting. "Put a little bit of honey in the milk. Honey is sacred, but the idols refuse to drink that milk. I could even test myself."

According to Mr Bhagwati Bhatt, a temple priest was anxious to get a chance to drink milk, the first thing he will do is make the devotees the as soon as they step into the temple."



A penchant for milk: A long queue of devotees before the Hanuman Temple in the Capital on Thursday to witness the strange drinking milk. — The Statesman

describes herself as not particularly religious, said. Her verdict?

"Milk Miracle" in Thai Temple

BANGKOK—Hundreds of Indians from Thailand along with Buddhist Thais and other Asians rushed to a main Hindu temple on Sept. 22 after reports that idols of Hindu gods were drinking milk poured at sacred offerings.

"It's a matter of faith, if you have faith in it you can see it with your eyes," said one ethnic Chinese woman from Singapore offering milk to an idol of the god Ganesha, the elephant-headed deity.

The priest of the Hindu Samaj temple in central Bangkok said he was told in telephone calls from India and the United States about the apparent miracles taking place at temples elsewhere.

"Faith is a matter of the heart, not the mind," said Sawami Odejsi Maharaj, when asked if the phenomenom was real.

A long queue of worshippers, many of them ethnic Thai and Chinese, waited to pay their respects at the temple. Many told Reuters

P. Kissoon
, *LL.B.*
nd Solicitor
Citizenship Law
•Refugees

Deity milk miracle? Seeing is believing

By WONG CHUN WAI, M. KRISHNAMOORTHY and HAH FOONG LIAN

KUALA LUMPUR: Miracle, hoax, hysteria, clever illusion? But seeing is believing, as the saying goes.

Following reports on Thursday of Hindus in India claiming that stone idols had begun drinking milk offerings, a similar phenomenon has been reported in Malaysia and other countries.

Several homes and temples in Kuala Lumpur, Seremban and Penang have claimed such happenings.

Those who saw the "milk miracle" including cynical reporters came away awestruck, with Hindus saying it was a form of blessing.

The frenzy which started in India has crossed the borders to Japan, Jakarta, Hong Kong, Singapore, Britain, Australia

two non-Hindus went to check them out.

A devotee, who wished to be known only as Mrs Prabaha, in Taman Tun Dr Ismail showed reporters how it happened.

Mrs Prabaha, a vegetarian since July and having fasted the whole day out of sheer disbelief, described what had happened in her home as "absolutely incredible."

"Wash your hands in the kitchen, not in the toilet. Then, I will take you to the altar and we will pray, and I can demonstrate to you how the *Nandi* (the guardian of Lord Siva's temple) will sip the milk," she said.

She took a teaspoonful of milk and held an empty teaspoon below the figurine so that any spillage would be seen.

As the spoon was brought close to the idol's mouth, slowly but gradually the the milk


Metro News

headed deity who is the son of Lord Shiva and Goddess Parvati.

Like thousands of other Hindus in the colony, Neelam received a call from her parents in Bombay, India, telling her a "miracle" was taking place as idols of Ganesha and Lord Shiva drank milk.

"I tried feeding the Ganesha statues at home with milk but it didn't work, so I came to the temple this morning," said Neelam, who conceded that some of the milk she

by statues of Ganesha, Lord Krishna and Lord Brahma.

A little girl started feeding the statue with milk using a spoon, the idol started drinking, he said.

Idols of the deities are given milk as offerings each day but this was the first time the idols had "drunk" milk, said the priest.

Another devotee said the temple was filled with hundreds of people who trooped in until 3 a.m.

(Reuters)

Bangla Faithful Watch Milk "Miracle"

By Mujtoba Morshed

DHAKA—Thousands of Bangladeshi Hindus flocked to Dhaka's Narayan Jiu temple on Sept. 23 to witness what worshippers said was the miracle of an el-

milk
amed
where
Lord

S

Ganesh, was placed wreathed in flowers.

The devotees offered milk in spoons to the elephant-head Ganesh's small trunk and the liquid vanished in seconds.

Gouri Benarjee, a 20-year-old spinster, said she was happy that Ganesh had accepted her offer. "This will bring me his blessings," she said.

The temple's chief priest, Nitai Benarjee, said at least 2,000 people fed the Ganesh fresh milk on Sept. 23 morning.

Thousands had made offerings since midnight on Sept. 22 after hearing claims of similar miracle happenings in India. Indian scientists said the marvel was just mass delusion.

Panna Dey, 32, said at first he did not believe the reports. "I thought they were just rumors but now I have seen it myself. I firmly

Evening News
Saturday Sept. 23 1995




Ganesha namaha

POLITICIANS are perhaps the most religious of people. On Thursday when news of the miracle milk guzzling by


THE LAWS OF LIGHT • THE LAWS OF LIGHT • THE LAWS OF LIGHT • THE LAWS OF LIGHT • THE LAWS OF LIGHT • THE LAWS OF LIGHT • THE LAWS OF LIGHT


CHAPTER FIFTEEN
Sacred Festivals
Blue sand dunes on Mars, NASA


ी सिवारोनम॥ ग्राधैग्रंग नस म भूजंगं गंग रुरु रुंरु माला मृग छा
ा चंद्र सि गी सैब देस ही॥ ग्रा धैंग्रंगे मु क केस भूप न ग्रने
ने स गो द मै ग ने से पू जे सु र से रा प ती म ही॥ सं क र न वां नी
धुं न ग प ति ग्रां नी। ए ह वेद ब षा नी को वु क वि मु ति य्याक
ी॥ हे तैं जे ग दी से जग मा तै जग दीस के धा ए क ग्रो ष ग्रानी
क ग्रां जे बे ने य्यु र ही॥ श्री न वा नी सं क्रो ये नै म॥ श्री श्री
EXOTIC INDIA

புனிதமான பண்டிகைகள்

புண்ணியோத்சவாஹா

पुण्योत्सवाः




மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களுடன் இருக்கும் ஆடம்பரமான இந்து பண்டிகைகளில் விசேஷ அனுட்டானங்கள் இடம்பெற்று இருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் வருகின்ற எண்ணற்ற பண்டிகைகளில், மகாதேவர்களில் ஒவ்வொருவருக்கும் பல பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. இந்த பகுதியில் நாம் விநாயகரை கௌரவிக்கும் முக்கிய பண்டிகைகளை உங்களுக்காக வழங்கி இருக்கிறோம். அதில் சில கோயிலிலும், மற்றவை பெரும்பாலும் வீடு மற்றும் கிராமத்திலும் கொண்டாடப்படுகின்றன. இந்து சமயத்தில் இருக்கும் ஒவ்வொரு முக்கிய உட்பிரிவும் தனக்கென்று சில விசேஷ பண்டிகைகளையும், எல்லோருக்கும் பொதுவான சில பண்டிகைகளையும் கொண்டுள்ளன. வழக்கமாக சந்திரனை சார்ந்த நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு பண்டிகையும் ஜோதிட கணிப்புக்கு ஏற்ப வருடத்தில் பெரும்பாலும் அதே காலகட்டத்தில் வருகிறது. அந்த பண்டிகைகளில் தவம், விரதம், யாத்திரை போன்று பக்தியை வெளிப்படுத்தும் செயல்கள் மற்றும் ஆடைகள், பாடல்கள், இசை நிகழ்ச்சிகள், ஊர்வலங்கள், கதாகாலட்சேபங்கள், சாத்திரம் படித்தல் மற்றும் விரிவான பூஜைகளைப் போன்று மகிழ்ச்சியூட்டும் ஆன்மீக தருணங்கள் நிரம்பி இருக்கின்றன.

“பூமியில் நடைபெறும் ஒவ்வொரு பண்டிகை அல்லது திருவிழாவிலும் மூன்று அம்சங்கள் இருக்கும். பூஜை மற்றும் முன்னேற்பாடுகள் செய்வதைப் போன்று அந்த கொண்டாட்டத்தில் இருக்கும் பல்வேறு நிலைகளைக் கொண்ட சடங்குகள் முதலாவது அம்சமாக விளங்குகின்றன. அந்த திருவிழாவிற்கு காரணமாக விளங்கிய புராண கதைகள் இரண்டாவது அம்சமாக விளங்குகிறது. அந்த கொண்டாட்டத்திற்கு முக்கியத்துவத்தை வழங்கி, பல நூற்றாண்டுகளாக அதை நிலைநிறுத்தியுள்ள தத்துவம் அல்லது மறைஞானம் மூன்றாவது அம்சமாக விளங்குகிறது,” என்று ம. அருணாச்சலம் தனது *பெஸ்டிவல்ஸ் ஆப் தமிழ்நாடு* புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

கணேஷ சதுர்த்தி

கணேஷ சதுர்த்தியானது விநாயகர் சதுர்த்தி என்றும் அழைக்கப்படுகிறது. இது விநாயகரின் பிறந்தநாளை கொண்டாடுவதாக அமைந்துள்ளது. இந்தியாவின் தேசிய திருவிழாக்களில் ஒன்றாகவும், விநாயகருக்கு கொண்டாடப்படும் ஒரு

முக்கிய திருவிழாவாகவும் இருக்கும் விநாயகர் சதுர்த்தி, ஆவணி மாத (ஆகஸ்ட்-செப்டம்பர்) பௌர்ணமிக்கு பிறகு வரும் சதுர்த்தி அன்று கொண்டாடப்படுகிறது. நாம் அந்த தினத்தன்று கோயில் மற்றும் பூஜை அறையை வாழை இலைகள், கரும்பு மற்றும் மாவிலை தோரணங்களால் அலங்கரித்து, அதற்கு ஒரு சிறிய காடு போன்ற ஒரு தோற்றத்தை வழங்குகிறோம். நாம் கூடைகளில் பழங்கள் மற்றும் குறிப்பாக கொழுக்கட்டைகளுடன் வேறு சில இனிப்புக்களை கொண்டு வந்து, விநாயகர் விக்ரகத்திற்கு முன்பாக வைக்கிறோம். அவருக்கு நாள்முழுவதும் சிறப்பு பூஜைகளுடன் பெரும்பாலும் ஒரு திருவிழா ஊர்வலமும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் நாம் களிமண்ணில் செய்த ஒரு சிறிய அல்லது பெரிய விநாயகர் சிலையை விலை கொடுத்து வாங்கி அல்லது சொந்தமாக தயார் செய்து, விநாயகர் சதுர்த்திக்கு பிறகு வீட்டில் வழிபடுவதற்காக அதை இரண்டு முதல் பத்து நாட்கள் வரை வைத்து இருக்கிறோம். “இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில், இந்த தினத்தில் 108 விநாயகர்களை தரிசிக்க வேண்டும் என்பதை சமயச் சடங்காக கொண்டுள்ள இளைஞர்கள், அன்றைய தினம் தங்கள் நண்பர்கள் மற்றும் சொந்தங்களின் வீடுகளுக்கு செல்கிறார்கள்....அன்றைய தினம் செய்யும் விநாயகர் உபாசனை இளம் மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமும், தொடங்கிய பணிகளில் வெற்றியும் வழங்குவதாக கருதப்படுகிறது,” என்று பண்டிதர் அருணாச்சலம் (*பெஸ்டிவல்ஸ் ஆப் தமிழ்நாடு*, ப. 110-121) குறிப்பிடுகிறார்.



இதனை தொடர்ந்து ஸ்ரீ அருணாச்சலம் சதுர்த்தி பூஜையை பற்றி அளிக்கும் விளக்கத்தை இங்கே காணலாம். “வழக்கமாக முற்பகல் முடிவடையும் நேரத்தில் பூஜை நடைபெறுகிறது. வீட்டு வாசல் மற்றும் வீடு முழுவதும் *கோலத்தால்* அலங்கரிக்கப்படுகிறது. வழிபாட்டு இடத்தை சுற்றி தோரணங்கள் தொங்கவிடப்பட்டு, அந்த இடம் ஒரு அலங்கார *மண்டபம்* போன்று காட்சி அளிக்கிறது. பிரித்து கலையுணர்வுடன் வடிவமைக்கப்பட்ட வெளிர் மஞ்சள் நிற தென்னை மர ஓலைகள், கரும்பச்சை நிற மாவிலைகள், வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு மற்றும் கருஞ்சிவப்பு நிற அல்லிமலர்கள் கலந்த தோரணங்கள் பலவண்ண காட்சியை வழங்குகின்றன. வீட்டின் வடக்கு திசையில் ஒரு வசதியான இடத்தில், எட்டு இதழ்களை கொண்ட *பத்ம* (தாமரை மலரின்) கோலத்தால் அலங்கரிக்கப்பட்ட ஒரு பீடத்தில், களிமண்ணில் புதிதாக வடிவமைக்கப்பட்ட சிலை கிழக்கு நோக்கி அமர்த்தப்படுகிறது. அந்த பத்மத்தின் மீது சிறிய நெல் பரப்பிவிடப்பட்டு, அதன் மீது வாழை இலையை முதலில் வைத்து, பிறகு அதன் மீது விநாயகர் சிலை வைக்கப்படுகிறது. வெள்ளை நிற பூக்கள் மட்டுமே பூஜையில் பயன்படுத்தப்படுகின்றன. விநாயகருக்கு *அருகம்புல்* மற்றும் *எருக்கம்பூ* மிகவும் பிடித்தமானவை ஆகும். அதன் பிறகு *பூஜை* சடங்குகள் முழுவதும் வரிசையாக செய்து முடிக்கப்படுகின்றன.”

“தெய்வத்திற்கு வழக்கமாக நெய்வேத்தியம் செய்யப்படும் வாழைப்பழங்கள் மற்றும் தேங்காய்களுடன் விளாம்பழம், நாவல் பழத்தைப் போன்று அந்த பருவத்தில் கிடைக்கக்கூடிய பழங்களும் படைக்கப்படுகின்றன....வழக்கமாக கிராமங்களில், அடுத்த நாள் காலை அல்லது மதிய நேரத்தில் சுத்தமான உணவு படையல்களுடன் *புணர்பூஜை* செய்யப்படுகிறது. மாலை நேரத்தில் சிறுவர்கள் விநாயகர் சிலையை சுமந்து சென்று, அதை ஒரு ஓடை அல்லது குளத்தில் கரைக்கிறார்கள். இவ்வாறு மண்ணில் இருந்து வடிவமைக்கப்பட்ட விநாயகர் மீண்டும் அதே மண்ணிற்கு திரும்புகிறார்.” அது வாழ்வில் வெற்றி மற்றும் செல்வதை பெறுவதற்கு விக்னேசுவரனின் அருளை நாடி மகிழ்ச்சியுடன் கொண்டாடவேண்டிய நாளாக விளங்குகிறது..

விநாயகர் விசர்ஜனம்

விநாயகர் விசர்ஜனம் என்பது விநாயகர் சதுர்த்தி முடிந்ததும் அந்த சிலையை கடல் அல்லது குளத்தில் சென்று கரைக்கும் சடங்கை குறிக்கிறது. குறிப்பாக மகாராஷ்டிர மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தி முடிந்து பத்து நாட்கள் கழிந்து விசர்ஜனம் நடைபெறுகிறது. ஆனால் சில பகுதிகளில் சதுர்த்தி அன்றே விசர்ஜனம் நடைபெற்று விடுகிறது. இது ஒரு பிடித்தமான தெய்வத்திற்கு அன்போடு வழியனுப்பும் சடங்கு ஆகும். நாம் சதுர்த்தி அன்று விநாயகரின் பிறந்தநாளை கொண்டாடி, பிறகு அவரை பத்து நாட்களுக்கு நமக்கு பிரியமான விருந்தாளியாக கௌரவிக்கிறோம். அதன் பிறகு பத்தாவது நாளாக இருக்கும் *சதுர்தசி* அன்று, ஒரு கடற்கரை அல்லது ஒரு நதிக்கரை அல்லது சலசலப்புடன்

பாயும் ஓடையில் நாம் அவரை அன்போடு வழியனுப்பி, அவர் நமது கண்பார்வையில் இருந்து நீருக்குள் சென்று மறையும் வரை, நாம் அவருக்காக ஏற்பாடு செய்த வாகனத்தில் அவர் மிதந்து செல்வதை பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நாம் அவரது விசர்ஜனத்தை ஒரு பெரிய ஊர்வலம் மூலம் கௌரவிக்கிறோம். அந்த ஊர்வலத்தின் போது நாம் அவரை பூக்களால் அலங்கரித்த ஒரு பல்லக்கில் பூஜை, ஆடல், பாடல் மற்றும் கொண்டாட்டத்துடன் சுமந்து செல்கிறோம். எங்கும் வியாபித்து இருக்கும் உணர்வில் விநாயகர் ஒடுங்குவதை குறிப்பிடும் வண்ணம், இந்த நிகழ்ச்சிக்காக பிரத்யேகமாக தயார் செய்யப்பட்ட விநாயகர் சிலைகள், இந்த விசர்ஜனத்தின் போது உலகெங்கும் இருக்கும் பக்தர்கள் மூலம் கடல் அல்லது மற்ற நீர் நிலைகளில் சம்பிரதாய முறைப்படி கரைக்கப்படுகின்றன. இந்த விசர்ஜனம் ஒரு இந்து சமய விழாவாக ஆயிரம் ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வந்தாலும், இது குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரசித்தமானது.

ஜூலை 1988, இந்துயிசம் டுடே இதழில், ஸ்ரீ எஸ். கே. தியோடர் விசர்ஜன திருவிழா மக்களிடம் பிரபலம் அடைந்ததைப் பற்றி விளக்கி இருந்தார்: “ஆங்கிலேய ஆட்சியில் இருந்து இந்தியா சுதந்திரம் மற்றும் விடுதலை பெறவேண்டும் என்று முதலில் அறிவித்த மகாராஷ்டிராவின் லோகமான்ய திலகர், இந்தியாவின் புனிதமான பாரம்பரியங்கள் மற்றும் சாத்திர போதனைகளின் அடிப்படையில், ஒரு வலுவான ஒருங்கிணைத்த இந்தியாவை உருவாக்க மக்களை ஒன்று சேர்ப்பதற்கு, 1910 ஆம் ஆண்டிற்கு அருகில் விநாயகர் பூஜையை ஒரு பொதுமக்கள் பூஜையாக கொண்டாட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். அன்றிலிருந்து மக்கள் இந்த பண்டிகையை வீட்டிலும் வெளியே பொதுமக்களுடனும் கொண்டாடி வருகிறார்கள். இந்த பண்டிகை ஒன்றரை நாட்கள் முதல் ஐந்து நாட்கள், ஏழு நாட்கள் அல்லது பத்து நாட்கள் வரை கொண்டாடப்படுகிறது. பத்தாவது நாள் அனந்த சதுர்த்தசியாகவும் இருப்பதால், அன்று விஷ்ணுவிற்கும் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன.

“பல நகரங்களில் மிகவும் சிறப்பாக நடைபெறும் பத்தாவது நாள் விசர்ஜனத்தின் போது இசை, நடனம், கொண்டாட்டம், தேர்கள் மற்றும் அலங்காரங்களுடன் ஆயிரக்கணக்கான சிலைகள் கடல் அல்லது நதிக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இவை பெரும்பாலும் பத்தாவது நாள் இரவு முழுவதும் தொடர்ச்சியாக நடைபெற்று, பதினோராவது நாள் காலை வரை நடைபெறுகின்றன. உங்கள் வீட்டிற்கு வரும் ஒரு முக்கிய விருந்தாளிக்கு நீங்கள் செய்யும் பணிவிடைகள் போன்று, இந்த கொண்டாட்டம் கடையில் இருந்து வாங்கி வந்த ஒரு சிலைக்கு பாரம்பரிய முறையில் பூஜை செய்வதை குறிக்கிறது. விருந்தாளி கிளம்பும் நேரம் வரும் போது, நாம் அவருக்கு பரிசுகள் மற்றும் பயணத்திற்கு உணவையும் வழங்குகிறோம். அதன் பிறகு நாம் கிராமத்தின் எல்லையில் இருக்கும் ஒரு சிறிய ஓடை அல்லது சிற்றாறு வரை அவருக்கு துணையாக செல்கிறோம். விருந்தாளி அந்த ஓடையில் கால்

வைத்ததும், நாம் அவரிடம் இருந்து பிரியா விடைபெற்று வீடு திரும்புகிறோம். இந்த பழைய பாரம்பரியம், விநாயகர் பண்டிகையின் போது மண்ணில் செய்த சிலையை நதி, கடல் அல்லது தொட்டியில் கரைப்பதன் மூலம் கடைப்பிடிக்கப்படுகிறது. முதல் நாள் சிலையை வாங்கி வந்து அதற்கு பூஜை செய்து, மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது மற்றும் அதை இரண்டாவது நாள் கரைப்பது என்று இந்த அனுட்டானம் தொடக்கத்தில் ஒன்றரை நாட்களாகத் தான் இருந்தது. ஆனால் அதன் பின்னர் கொண்டாட்டம், பக்தி, இசை, சமயச் சொற்பொழிவுகள் என்று கோலாகலமாக கொண்டாட விரும்பிய பலர், இந்த பண்டிகையின் காலக்கட்டத்தை அதிகரித்தனர். விசர்ஜன திருவிழாக்களுக்கு பிரசித்தமான இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில், குறிப்பாக மும்பை மற்றும் புனே நகரங்களில் பல் மில்லியன் கணக்கான மக்கள் பங்குபெறுகிறார்கள்." (ஸ்ரீ தியோடரின் வர்ணனையை ஸ்ரீ விநாயக் விஸ்வநாத் கோகலே குஜராத்தியில் இருந்து மொழிபெயர்த்து இருக்கிறார்.)

விநாயகர் பக்தர்களை ஒன்று திரட்டுவதில் வல்லவர் என்பதை நாம் நன்றாக அறிவோம். அவர் இதற்கு ஒரு உத்தியாக விசர்ஜனத்தை பயன்படுத்துகிறார். எல்லோரும் இந்த கொண்டாட்டத்தில் தங்களது அன்றாட பிரச்சனைகள் மற்றும் கவலைகளை மறந்து மகிழ்ச்சியுடன் பங்குபெறுகின்றனர். 1988 ஆம் ஆண்டு அமெரிக்காவில் விசர்ஜனம் நடைப்பெற்ற போது, விநாயகர் மக்கள் தொடர்பில் ஒரு புதுமையை படைத்தார். அது அமெரிக்க வரலாற்றில், இந்து சமய உட்பிரிவுகளுக்கு பொதுவான ஒரு மாபெரும் திருவிழாவாக விளங்கியது. அது உண்மையில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக விளங்கியது. விநாயகர் சதுர்த்தி அன்று தொடங்கி பத்து நாட்கள் நடைபெற்ற பூஜைகள் மற்றும் கொண்டாட்டத்தின் உச்சமாக செப்டம்பர் 25 ஆம் தேதி, கலிபோர்னயா மாகாணத்தின் சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற ஓர் மாபெரும் திருவிழாவிற்கு சுமார் இரண்டாயிரம் இந்துக்கள் ஒன்றுகூடினர். கோல்டன் கேட் பாலம் ஓர் பிரம்மாண்ட பின்னணியாக அமைய, பல்வேறு பாரம்பரியங்களை சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட இந்து அமைப்புக்கள் பங்குபெற்றனர். சங்குகளின் ஒலி, மத்தளங்களின் சத்தம் மற்றும் பூஜை மணியுடன் பசிபிக் பெருங்கடலில் நூற்றுக்கணக்கான விநாயகர் சிலைகள் சிறப்பான முறையில் கரைக்கப்பட்டன. இந்தியாவில் இருந்ததைப் போன்ற உணர்வு தங்களுக்கு ஏற்பட்டதாக பல பக்தர்கள் தெரிவித்தார்கள். ஒரு மிகப்பெரிய சமூக திருவிழாவில் பக்தர்கள் தைரியமாக தங்கள் சமயத்தை பிரகடனம் செய்ததால், அமெரிக்காவில் இந்து சமயம் ஒரு புதிய பக்குவ நிலை அடைந்துள்ளதை எல்லோரும் அறிந்துக்கொண்டார்கள். இந்த திருவிழா தொடங்கியதில் இருந்து ஒவ்வொரு வருடமும் சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதியில் தொடர்ந்து நடந்து வருகிறது. இதனை சில வருடங்கள் கழித்து ஆஸ்திரேலியாவும் பின்பற்ற தொடங்கியது. இன்று சிட்னி நகரத்தின் தெருக்களில் ஒவ்வொரு வருடமும்

நடைபெறும் ஊர்வலங்களில், அனைத்து இந்து குழுக்களும் சமூக வழிபாட்டில் ஒன்றாக கலந்து கொள்கின்றனர்.

களிமண்ணில் விநாயகர் சிலை தயாரித்தல்

களிமண்ணில் விநாயகர் சிலை தயாரிக்கும் மகிழ்ச்சிகரமான நடவடிக்கை பற்றி பண்டிதர் அருணாச்சலம் வழங்கிய ஒரு அற்புத விளக்கத்தை இங்கே உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். “விநாயகர் சிலையின் வடிவம் ஒரு கலைஞன் மற்றும் சிற்பியை மட்டுமில்லாமல் குழந்தைகளையும் மகிழ்விக்கிறது....முழுமையான யானை முகம், நுனியில் வளைந்து இருக்கும் துதிக்கை, நான்கு கைகள், அதில் உயர்த்தி இருக்கும் கைகளில் பாசம் மற்றும் அங்குசம், இடது கையில் *மோதகம்*, வலது கையில் அபய முத்திரை, பெரிய வயிறு, இடது தோளில் இருந்து வலமாக பூணூல், கட்டை குட்டையான கால்கள், மற்றும் இறுதியாக அவரது மூஷிக வாகனம் என்று விநாயகரின் முழு உருவத்தை, பெரும்பாலும் எல்லா குழந்தைகளும் தங்கள் சொந்த கைகளால் களிமண்ணில் தயார் செய்ய முயற்சி செய்கிறார்கள். குன்றிமணி கொடியின் (*அப்ரஸ் பிரிகட்டாரியஸ்*) கருஞ்சிவப்பு குண்டுமணி விதைகள், விநாயகர் சிலையின் கண்களாக பயன்படுத்தப்படுகின்றன. சென்னை போன்ற நகரங்களில், ஒரு சிறிய குடையும் சேர்த்து வழங்கப்படுகிறது.

“களிமண் சிலை காலை நேரத்தில் பிரத்யேகமாக தயார் செய்யப்படுகிறது. அதை நகரப்புறங்களில் மக்கள் விலைகொடுத்து வாங்குகிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் இருக்கும் குறும்புக்கார சிறுவர்கள் எறும்புப் புற்று மண்ணில் இருந்து சிலையை செய்யவேண்டும் என்ற விதிமுறையை அமைத்துக்கொண்டு, தங்கள் குடும்ப வழிபாட்டிற்கு என்று தாமே சிலையை பெருமையுடன் தயார் செய்கிறார்கள். நகரப்புறங்களில் இருக்கும் சிலைகளின் தேவையை கைகளால் ஈடு செய்யமுடியாது. அதனால் சிலை தயாரிப்பாளர்களிடம் இருக்கும் மர அச்சுகளின் மூலம், பிசைந்த களிமண்ணை கை அச்சுப் பொறியில் வைத்து சிலைகளை வடிக்கிறார்கள். ”


முறையான பாவனை

தெய்வத்தின் சிலையை சரியான மனநிலையுடன் தயாரிக்க வேண்டும். கலிபோர்னியாவின் தேவி மந்திரைச் சேர்ந்த சுவாமி சத்யானந்த சரஸ்வதி பின்வரும் அறிவுறுத்தலை பகிர்ந்து இருக்கிறார்.

“உங்கள் இதயத்தில் இருக்கும் அன்பு முழுவதையும், தெய்வத்தை நேருக்கு நேராக சந்திக்கவேண்டும் என்ற ஏக்கத்தையும், ஆத்ம ஞானம் அடையவேண்டும் என்ற உங்கள் ஏக்கம் முழுவதையும் சிலையை தயார் செய்ய பயன்படும் வைக்கோல் மற்றும் மண்ணுடன் சேர்த்து, உங்களுக்கு மிகவும் அருகில் உருவத்தை பெறும் தெய்வீக சிலையை கவனியுங்கள்.

“தெய்வீக பண்பை உடனடியாகவும் நேரடியாகவும் அறியவேண்டும் என்ற ஆழமான ஆசை, தெய்வீக இருப்பை நெருக்கமான தாரணையில் அனுபவிக்க வேண்டும் என்ற உங்கள் ஏக்கத்திற்கு வடிவத்தை வழங்கி, இறைவனின் நிழலாக இருக்கும் தெய்வீக பண்பின் சிலைக்கு வடிவம் கொடுக்கும் பொருட்டு, இயற்கையின் பரந்து விரிந்த பரவெளியில் இருக்கும் நிலம், நீர், நெருப்பு மற்றும் காற்று என்ற நான்கு பூதங்களும் ஒன்றாக இணைவதை பாருங்கள். ஒரு சிலையை தயாரிக்க முயல்தவதற்கும், நம் வாயிலாக தெய்வத்தின் *மூர்த்தி* வெளிப்படவேண்டும் என்று பிரார்த்தனை செய்வதற்கும் வித்தியாசம் இருப்பதை நினைவில் வைத்து இருங்கள். பல்வேறு அம்சங்களை பற்றி தியானம் செய்து, முழுமையான *பாவ* என்கிற தெய்வீக பாவனை மீது உங்கள் மனதை செலுத்துங்கள்.

“தெய்வம் காரணமாக அமையும் அமைதி, ஒளி, நன்மைகள் அனைத்தும் உங்கள் இருப்பின் முக்கிய அங்கமாகட்டும். தெய்வத்தை அகத்தில் வழிபட்டு, மந்திரங்களை சொல்லி அவரது சூட்சும வடிவத்தின் மீது ஆழமாக தியானம் செய்யுங்கள். அகத்தில் இருக்கும் அந்த மூர்த்தியை பார்த்து புன்னகைத்து, எல்லோரும் உணரக்கூடிய வகையில் அந்த தெய்வீக உருவம் வெளிப்பட வேண்டும் என்று அதிக சிரத்தையுடன் இறைவனிடம் அனுமதி கேளுங்கள். அந்த சிலை ஒரு உருவத்தை பெற்ற பிறகு, உங்களால் வழங்க முடிந்த அன்பு மற்றும் பக்தியை கண்டுகொண்டு, நீங்கள் தயாரித்த தெய்வீக சிலைக்கு உயிரூட்டம் அளித்து, எல்லோருக்கும் ஞானம் மற்றும் அமைதியை அருளவேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள்..”



மரத்தில் விநாயகர் சிலையை செய்யும் ஒரு எளிய முறை

ஸ்ரீ சதீஷ் என். ஆப்தே எம்.டி., டான்வீல், கலிபோர்னியா

மரத்தில் விநாயகரை செய்வதற்கு தேவையான பொருட்களின் பட்டியல் பின்வருமாறு: 1) களிமண் (திறமையான சிற்பிகள் பயன்படுத்தும் களிமண் அல்லது ஆற்றுப்படுகையில் இருந்த எடுத்த களிமண்) அல்லது *பயிர் மாசே*; 2) மரப்பால் அல்லது மஞ்சள், சிவப்பு, கருப்பு மற்றும் மனித சருமத்தின் நிறங்களில் நீர் வண்ணப்பூச்சு; 3) பொன்னிலை பூச்சு, 4) அலுமினிய படலம், 5) வண்ணத் தூரிகைகள், 6) உப்புத்தாள், 7) பட்டி அல்லது கூட்டுப்பொருள், 8) உதிரி ஆபரணங்கள் மற்றும் *மூர்த்திக்கு* தேவையான வஸ்திரம். 9) சிலையின் அடிப்பகுதி அல்லது கட்டமைப்பை களிமண்ணில் வடிவமைக்க ஒரு பலகை.

வழிமுறைகள்

1. ஈரப்பதம் சீராக இருக்குமாறு களிமண் அல்லது *பயியே மாசேவை* நன்றாக கலக்கவும்.
2. மரம், ஸ்டைரோபோம் அல்லது அதைப் போன்ற மூலப்பொருளில் ஒரு கட்டமைப்பை தயார் செய்யவும்.
3. அந்த கட்டமைப்பில் களிமண்ணை நிரப்பி அவரது திருவுருவத்தை வடிவமைத்து சிலையை உருவாக்கவும்.
4. வெளிப்புறத்தை ஈரமான ஒரு தூரிகை கொண்டு துடைத்து விடவும்.
5. அந்த சிலை சூரியவெளிச்சம் இல்லாத ஒரு குளுமையான இடத்தில் உலரட்டும். (சிலையின் ஒவ்வொரு அடி உயரத்திற்கும், அது களிமண் சிலையாக இருந்தால் ஒரு மாதமும், *பயியே மாசேவில்* செய்த சிலையாக இருந்தால் மூன்று வாரங்களும் வழக்கமாக உலர்த்த வேண்டும்.)
6. உலர்ந்த பிறகு முதலில் சொரசொரப்பான மற்றும் பிறகு நுண்மையான உப்புத்தாள் கொண்டு மெருகூட்டவும்.
7. விரிசல்களை பட்டி அல்லது கூட்டுப்பொருள் கொண்டு நிரப்பி மீண்டும் உப்பத்தாள் மூலம் மெருகூட்டவும்.
8. ஒரு வெள்ளை நிற பிரைமரை பூசி, நுண்மையான உப்புத்தாள் மூலம் மெருகூட்டவும்.
9. சிலை மீது படிந்த தூசியை துடைக்கவும்.
10. மனித சருமத்தின் நிறத்தை சிலையின் முண்டப்பகுதி, தலை, துதிக்கை மற்றும் கைகால்களுக்கு பூசவும்.
11. சிலைக்கு பொருத்தமான வஸ்திரத்தை (வழக்கமாக வெள்ளை அல்லது சிவப்பு நிற பட்டு) அணிவிக்கவும்.
12. கிரீடத்திற்கு பொன்னிறத்தையும் தலைமுடி மற்றும் கண்களுக்கு கருப்பு நிறத்தையும் பூசவும்.
13. நெற்றியில் மூன்று கோடுகள் *விபூதி* மற்றும் சிவப்பு நிற சாயம் மற்றும் ஒரு மெல்லிய தூரிகை மூலம் வயிற்றில் ஒரு சுவஸ்திக் மற்றும் ஓம் சின்னத்தை வரையுங்கள்.
14. ஒவ்வொரு கையில் இருக்கும் கருவியை அலுமினியப் படலம் கொண்டு தயார் செய்யவும்.
15. சிலையை ஆபரணங்கள், பூக்கள் போன்றவற்றால் அலங்கரிக்கவும்.


விநாயக விரதம்

நவம்பர்/டிசம்பரில் வரும் கார்த்திகை மாத பௌர்ணமி முதல் விநாயகரை பூஜிக்கும் 21 நாள் திருவிழாவான விநாயக விரதம் தொடங்குகிறது. இந்த நாட்களில், ஒவ்வொரு விநாயகர் கோயிலிலும் விநாயகர் புராணம் வாசிக்கப்பட்டு, சிறப்புப் புஜைகள் நடத்தப்படுகின்றன. பல பக்தர்கள் ஒரு

விநாயகர் கோயிலில் தினசரி பூஜையில் பங்குபெற்று மாலை நேரத்தில் மட்டும் உணவு அருந்துகிறார்கள்.

மார்கழி பிள்ளையார்

ஒரு மாத காலம் வீட்டில் நடைபெறும் மார்கழி பிள்ளையார் என்ற இந்து சமய பண்டிகையில் விநாயகருக்கு பூஜைகள் நடைபெறுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகாலமாக அவரை கௌரவிக்கும் பண்டிகைகள் மற்றும் திருவிழாக்கள் குளிர்காலத்தில் நடைப்பெற்று வந்துள்ளன. பெரும்பாலும் டிசம்பர் பதினைந்தாம் தேதி முதல் ஜனவரி பதினைந்தாம் தேதி வரை இருக்கும் மார்கழி மாதத்தில், நாம் சிறப்பான பூஜை மற்றும் பிரார்த்தனைகளுடன் பிள்ளையாரின் நாமங்களை ஜெபம் செய்து அவரை வழிபடுகிறோம். ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாதத்தில், நாம் குறிப்பாக அதிகாலை நான்கு முதல் ஆறு மணி வரையிலான காலத்தில், சிரத்தையுடன் தியானம் செய்கிறோம். வழக்கமாக இந்த மார்கழி மாதத்தில் அனைத்து வகையான வழிபாடு, பிரார்த்தனை மற்றும் ஆன்மீக சாதனைகள் தொடங்கப்பட்டு, வீடு தினமும் சுத்தம் செய்யப்படுகிறது.



பஞ்ச கணபதி

கணங்களின் தலைவராக ஐந்து முகங்களுடன் இருக்கும் மகாகணபதிக்கு கொண்டாடப்படும் நவீன இந்து திருவிழாவாக பஞ்ச கணபதி விளங்குகிறது. முப்பது நாட்கள் வீட்டில் கொண்டப்படும் மார்கழி பிள்ளையார் பண்டிகையின் போது வரும் இந்த திருவிழா டிசம்பர் 21 முதல் டிசம்பர் 25 வரை கொண்டாடப்படுகிறது.


விநாயகர் வழிபாட்டிற்கு ஒரு பாரம்பரிய பருவமாக குளிர்காலம் அமைவதால், எல்லா நாடுகள் மற்றும் மதங்கள் மற்றும் அதிலும் குறிப்பாக அது இந்துக்களுக்கு ஒரு திருவிழா காலமாக விளங்குகிறது. இந்து வைதீக ஜோதிடத்தில், இந்த காலகட்டம் சூரியன் தெற்கு நோக்கி செல்லும் *தட்சிணாயன* பயணத்தை நிறுத்தி, அது வடக்கு நோக்கி செல்லும் *உத்தராயண* பயணத்தின் தொடக்கத்தை குறிக்கிறது. இந்துக்கள் கிறிஸ்துமஸ் கொண்டாடுவது இல்லை என்பதால், அவர்கள் அதை கொண்டாடுபவர்களுடன் தயக்கமின்றி பழகுவது

கடினமாக இருக்கும். டிசம்பர் 25 அன்று அவர்களுக்கு ஏன் பரிசுகள் வருவதில்லை என்று அந்த இந்து குழந்தைகளிடம் கேட்கப்படும் போது, அவர்கள் பெரும்பாலும் வேதனைக்கு ஆளாகிறார்கள். தங்கள் சொந்தங்கள், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், நண்பர்கள் மற்றும் தொழில்முறை சகாக்களுக்கு பரிசுகளை வழங்கி, வாழ்த்து அட்டைகளை அஞ்சலில் அனுப்பவேண்டும் என்றும் தாங்களும் அவற்றை அவர்களிடம் இருந்து பெறவேண்டும் என்றும் பெரியவர்கள் நினைக்கிறார்கள். பரிசுகள் வழங்குவதும் கொண்டாட்டங்களும் நிரம்பிய இந்த இயல்பான வழிபாட்டு பருவத்தில், பஞ்ச கணபதி ஒரு இந்து வெளிப்பாடாக விளங்குகிறது.

பல மதங்களை சார்ந்தவர்கள் மற்றும் எந்த மதத்தையும் சாராதவர்களுக்கும், டிசம்பர் 25 மற்றும் அதற்கு முன்னர் மற்றும் பின்னர் உள்ள நாட்கள் வருடத்தின் சிறப்பான காலமாக விளங்குகின்றன. சில மதங்கள் மேற்கொள்ளும் சிறப்பு அனுட்டானங்களுடன் ஒரு மதசார்பற்ற கலாச்சார விடுமுறையாகவும் விளங்கும் இந்த நாட்கள் உலகெங்கும் அதிக பிரபலம் அடைந்துள்ளது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி, தங்களது சொந்த வழிமுறையில் தங்களது செல்வதை பிறருக்கு வழங்கி மற்றும் பகிர்ந்துகொள்ளும் காலமாக இது மாறிவிட்டதை உணர்ந்த அமெரிக்க உச்ச நீதிமன்றம், கிறிஸ்துமஸ் தினத்தை ஒரு மதசார்பற்ற சமூக விடுமுறையாக அறிவித்தது.

பஞ்ச கணபதி பூஜை மாடத்தை உருவாக்குதல்

பஞ்ச கணபதி ஒரு கோயிலில் கொண்டாடப்படும் உற்சவமாக இல்லாமல், இன்றைய நவீன வீட்டு சடங்காக விளங்குகிறது. இந்த பண்டிகை ஒரு புதிய தொடக்கம் மற்றும் கடந்த காலத்தில் செய்த தவறுகள் அனைத்தையும் சீர் செய்யும் காரணத்தால், இதற்காக வீட்டின் முக்கிய வரவேற்பு அறையில் ஒரு பூஜை மாடம் தயார் செய்யப்படுகிறது. பூஜை மாடத்தின் மத்தியில் மரத்தில் அல்லது வெண்கலத்தில் செய்த பஞ்சமுக கணபதியின் சிலை அமர்த்தப்படுகிறது. அவை இல்லாத பட்சத்தில், விநாயகரின் ஒரு பெரிய உருவப்படம் போதுமானதாக இருக்கும். இந்த பண்டிகை காலத்தின் உணர்வோடு அந்த பூஜை மாடம் அலங்கரிக்கப்படுகிறது. விநாயகர் பெரும்பாலும் காட்டில் இருந்து வருவதாக சித்தரிக்கப்படுவதால், தேவதாரு மரக்கிளைகள் (அல்லது வாழை இலைகள்) பயன்படுத்தப்படலாம். *துர்வா* என்கிற அருகம்புல், கரும்பு மற்றும் இனிய மோதகங்களின் மாலை மூலம் பூஜை மாடம் அலங்கரிக்கப்படலாம். இத்துடன் பளிச்சிடும் விளக்குகள், பல வண்ணங்களில் பகட்டான தோரணங்களும் சேர்க்கப்படலாம்.


MANIVEL




ஒவ்வொரு நாள் காலையும், அந்த நாளுக்கு என்று ஒரு பிரத்யேகமான புதிய வஸ்திரத்தை பஞ்ச கணபதிக்கு அணிவிக்கும் பொறுப்பை குழந்தைகளுக்கு வழங்குவது சிறந்தது. அவரது ஐந்து சக்திகளை குடும்பத்தினர் அனைவரும் விரும்பி பிரார்த்தனை செய்கிறார்கள். அவர் டிசம்பர் 21 ஆம் தேதி பொன்னிற மஞ்சள் நிறத்தில் காட்சி அளிக்கிறார். அவருக்கு டிசம்பர் 22 ஆம் தேதி ஆழமான மற்றும் தெளிவான நீல நிறத்திலும், 23 ஆம் தேதி சிவப்பு மாணிக்க நிறத்திலும் அரசருக்குரிய வஸ்திரம் வழங்கப்படுகிறது அவர் டிசம்பர் 24 ஆம் தேதி மரகத பச்சை நிறத்தில் காட்சி அளித்து, இறுதி நாளன்று பஞ்சகணபதி தன்னை தரிசிக்க வந்தவர்களுக்கு பிரகாசமான சிவப்பு மஞ்சள் நிறத்தில் தோற்றமளித்து, மீண்டும் அடுத்த வருடம் பஞ்சகணபதி வடிவில் தோற்றமளிக்க திரும்பும் வரை 365 நாட்களுக்கு செல்வ வளத்தை வழங்குகிறார்.

பஞ்சகணபதி பண்டிகையை ஒரு வெளிப்படையான இந்து முறையில் கொண்டாட வேண்டும். கிறிஸ்துமஸ் மரங்கள், சாண்டா கிளாஸ் அல்லது மற்ற மதத்தின் சின்னங்களை பயன்படுத்தக் கூடாது. இந்த சின்னங்கள் தெரிவிக்கும் உட்பொருளை இந்து வழிபாட்டில் தவிர்க்க வேண்டும். இந்த காலத்தில் அனுப்பவேண்டிய வாழ்த்து அட்டைகளின் வடிவமைப்பு மற்றும் உட்பொருள் இந்து சமயத்துடன் பொருந்த வேண்டும். இது தொடர்பாக மற்ற சமயத்தை சேர்ந்தவர்களுக்கு அனுப்பும் வாழ்த்து அட்டைகளில் இந்து சமய ஞானம் பற்றிய சிந்தனைகள் அல்லது இந்து சாத்திர மேற்கோள்களை தொடரலாம். அவற்றை

முறையாக தேர்ந்து எடுத்தால், அவை பாராட்டப்பட்டு நினைவில் வைத்துக்கொள்ளப்படும்.

பஞ்சகணபதி நடவடிக்கைகள்

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் தருணமாக விளங்கும் பஞ்சகணபதி பண்டிகையில் வெளியே உல்லாசப் பயணம், விடுமுறை நாட்களின் விருந்து மற்றும் வாழ்த்து அட்டைகளை சொந்தங்கள், நண்பர்கள் மற்றும் தொழில்முறை சகாக்களுடன் பகிர்ந்துக் கொள்வதும் இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் பஞ்சகணபதிக்கு பெரும்பாலும் குழந்தைகள் தயாரித்து வழங்கிய, ஒரு பாரம்பரிய நெய்வேத்திய தட்டில் இனிப்புக்கள், பழங்கள் மற்றும் தூபத்தை படைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பரிசுகளை திறக்காமல் பஞ்சகணபதி முன்பாக வைத்து ஐந்தாவது நாள் திறக்கப்படுகிறது. ஒவ்வொரு நாள் பூஜை முடிந்ததும், அந்த நெய்வேத்திய தட்டில் இருக்கும் இனிப்புக்கள் அவர்களுக்கு *பிரசாதமாக* வழங்கப்படுகிறது. பரிசுகள் விலையுயர்ந்ததாக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை, ஆனால் அவை அந்தந்த குடும்ப வருவாய்க்கு ஏற்ப இருக்கவேண்டும். கைவினை பொருட்கள் அதிக மதிப்புமிக்கதாக இருக்கும். பரிசு வழங்குவதன் மூலம் மேற்கத்திய வணிகவாதத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று விநாயகர் விரும்பாமல், தலைசிறந்த இந்து கலாச்சாரம் வளர்ச்சி பெறவேண்டும் என்று விரும்புகிறார். கில்லர் கேம்ஸ் போன்ற விளையாட்டுக்களை கண்டிப்பாக தவிர்க்கவேண்டும். வழக்கமாக குழந்தைகள் தயார் செய்த வாழ்த்து அட்டைகள், இந்து சமயக்கலை மற்றும் *வேதமந்திரங்களில்* இருக்கும் ஞானத்தை வழங்குகின்றன.



பஞ்சகணபதி பண்டிகை கொண்டாடப்படும் ஒவ்வொரு நாளும் அவரைப் போற்றி சுலோகங்கள், பாடல்கள், கீர்த்தனைகள் மற்றும் *பஜனைகள்* பாடப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் ஒரு மாறுபட்ட குடும்ப *சாதனை* மீது கவனம் செலுத்தப்படுகிறது. முதல் சாதனை டிசம்பர் 21 ஆம் தேதி காலையை தொடங்கி வைக்கிறது. அதன் பிறகு ஐந்தாவது மற்றும் இறுதி நாளான டிசம்பர் 25 ஆம் தேதி வரை, ஒவ்வொரு நாளும் மற்ற *சாதனைகள்* தொடங்குகின்றன.

டிசம்பர் 21, மஞ்சள்

நெருக்கமான குடும்பத்தினர் மத்தியில் அன்பு மற்றும் ஒற்றுமை கலந்த சூழலை உருவாக்குவது, பஞ்சகணபதி பண்டிகையின் முதலாவது குடும்ப *சாதனையாக*

விளங்குகிறது. முதல் நாள் நடவடிக்கைகள் விரைவாக தொடங்குகின்றன, மற்றும் பூஜை மாடத்தை *ரங்கோலி*, விளக்குகள் மற்றும் இதர பாரம்பரிய சின்னங்களுடன் வடிவமைத்து அலங்கரிக்க எல்லோரும் ஒன்றாக சேர்ந்து செயல்படுகின்றனர். அதன் பிறகு வீட்டில் பஞ்சகணபதியின் சக்தியை வரவழைக்க ஒரு பெரிய பூஜை நடைபெறுகிறது. அதன் பிறகு அன்றைய *சாதனை* தொடங்குகிறது. சென்ற வருடம் உறவுமுறைகளில் ஏதேனும் கருத்துவேறுபாடுகள் தோன்றியிருந்தால், அதை சரிசெய்ய குடும்பத்தினர் எல்லோரும் ஒன்றாக அமர்கின்றனர். அவர்கள் தாங்கள் செய்த தவறுகள், நிந்தனைகள், அவமானங்கள் மற்றும் வழங்கிய மற்றும் அனுபவித்த வேதனைகளுக்கு பரஸ்பரம் பேசி மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றனர். எல்லோரும் மற்ற எல்லோரையும் மன்னித்த பிறகு, அவர்கள் மற்றவர்களின் நற்பண்புகளைப் பற்றி பேசி, மற்றவர்களை மாற்றும் முயற்சி பயனற்றது என்பதையும் தன்னை மாற்றிக்கொண்டு எல்லோருக்கும் அமைதியான உதாரணமாக தென்படுவதே யதார்த்தம் என்பதையும் எதிர்காலத்தில் நினைவில் வைத்திருப்போம் என்று தீர்மானம் செய்கின்றனர். அதன் பிறகு பரிமாற்றம் செய்யப்படும் பரிசுகள், பஞ்சகணபதி முன்பாக திறக்காமல் வைக்கப்படுகின்றன. இந்துக்களுக்கு குடும்ப ஒற்றுமை முக்கியமாக இருப்பதால், இந்த *சாதனையை* சிரத்தையுடன் செய்யவேண்டும்.

டிசம்பர் 22, நீலம்

அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், சொந்தங்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களுடன் அன்பு மற்றும் ஒற்றுமை கலந்த சூழலை உருவாக்கி, அவர்களுக்கு முழு மனதோடு பரிசுகளை வழங்குவது பஞ்சகணபதி பண்டிகையின் இரண்டாவது நாள் குடும்ப சாதனையாக விளங்குகிறது. தங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏதேனும் இருந்தால் அதற்கு மன்னிப்பை கோரி, அந்த வேறுபாடுகளை நீக்குவதே இரண்டாவது நாள் சாதனை ஆகும். தொலைதூரத்தில் இருக்கும் சொந்தங்கள் மற்றும் நண்பர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு அல்லது தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டு, செய்த தவறை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கோரப்பட்டு, பதற்றம் தணிக்கப்படுகிறது. பரிசுகள் பெறப்பட்டு பஞ்சகணபதி முன்பாக திறக்காமல் வைக்கப்படுகிறது.

டிசம்பர் 23, சிவப்பு

தொழில்முறை சகாக்கள், அதிகம் பரிச்சயம் இல்லாத வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அன்பு மற்றும் ஒற்றுமை கலந்த ஒரு சூழலை உருவாக்குவது மூன்றாவது நாள் குடும்ப சாதனையாக விளங்குகிறது. இது வியாபாரிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு பரிசுகள் வழங்கும் நாளாகவும், பரிசுகள் மற்றும் பாராட்டுதல்கள் மூலம் முதலாளிகளும் தொழிலாளிகளும்

கௌரவிக்கப்படும் நாளாகவும் விளங்குகிறது. அனைத்து கடன்கள் மற்றும் தகராறுகளை தீர்வு காண்பதே அன்றைய *சாதனாவாக* விளங்குகிறது. பரிசுகள் தெய்வத்தின் முன்பாக திறக்கப்படாமல் வைக்கப்படுகின்றன.

டிசம்பர் 24, பச்சை

இசை, கலை, நாடகம் மற்றும் நடனத்தில் உள்ளார்ந்து இருக்கும் மகிழ்ச்சி மற்றும் ஒற்றுமையின் சூழலை வெளிக்கொண்டு வருவதே நான்காவது நாள் *சாதனை* ஆகும். அன்றைய தினம் *சத்சங்கத்தில்* கலந்துக்கொள்ள குடும்பம், சொந்தங்கள் மற்றும் நண்பர்கள் ஒன்றுகூடி தங்களது கலைத்திறமைகளை வெளிப்படுத்தி மகிழ்கிறார்கள். கலைநிகழ்ச்சி முடிந்ததும் எல்லோரும் கலைகளின் ஆதரவாளராகவும் கலாச்சார பாதுகாவலராகவும் இருக்கும் பஞ்சகணபதி முன்பாக அமர்ந்து, இந்து தர்மத்தை பற்றி விவாதித்து ஒவ்வொரு வீட்டிலும் மேலும் அதிக கலாச்சார சீர்திருத்தங்கள் செய்ய திட்டமிடுகிறார்கள். கணபதி முன்பாக மேலும் அதிகமான பரிசுகள் வைக்கப்படுகின்றன.

டிசம்பர் 25, செம்மஞ்சள்

மூன்று லோகங்களிலும் அன்பு மற்றும் ஒற்றுமையை கொண்டு வருவதே, பஞ்சகணபதி பண்டிகையின் இறுதி நாள் குடும்ப *சாதனை* ஆகும். முதல் நான்கு நாட்கள் சிறப்பாக செய்த *சாதனைகள்* காரணமாக, விநாயகரின் அருளைப் பற்றி அறிந்து அதிக ஆக்கப்பூர்வமாக இருக்கும் குடும்பத்தினர் உள்ளங்களில் அந்த தெய்வத்தின் மீது அன்பு பொங்கி வழிகிறது. அன்றைய தினம் குடும்பத்தினர் அனைவரும், அந்த மகாதேவரிடம் இருந்து பொங்கி வழியும் அன்பையும் அமைதியையும் அனுபவிக்கிறார்கள். அவரது அருள் அந்த வீடு மற்றும் அங்கிருக்கும் இதயங்களில் நிரம்பி, வரவிருக்கும் வருடத்தில் அவர்கள் புத்துணர்வுடன் செயல்பட தூண்டுதலை வழங்குகிறது. குடும்பத்தினர் மற்றும் தெய்வத்திற்கு மத்தியில் பரிமாறிக்கொள்ளப்படும் இந்த அன்பு ஆவாகனம் செய்யப்பட்டு, ஐந்து சிறப்பு பூஜைகள் மூலம் நாள் முழுவதும் பராமரிக்கப்படுகிறது. காலை ஆறு மணிக்கு முதல் பூஜை நடைபெறுகிறது. பூஜை தொடங்குவதற்கு முன்பாக, தனிப்பட்ட நெய்வேத்திய தட்டுகள் தயார் செய்து, பூஜை மாடத்தின் முன்பாக வைக்கப்படுகின்றன. பூஜை முடிந்த பிறகு, கடந்த வருடம் தனக்கு பலித்த பிரார்த்தைகளைப் பற்றி ஒவ்வொருவரும் சான்றுரை கூறுகிறார்கள். சான்றுரைகளை கேட்கும் ஒருவருவருக்கும் நம்பிக்கை வலுப்படுகிறது. அதன் பிறகு தாங்கள் விரதமாக மேற்கொள்ள இருக்கும் தியாகங்களை பற்றி எல்லோருக்கும் தெரிவிக்கலாம். அத்தகைய விரதங்கள் புகை பிடிப்பதை கைவிடுவது அல்லது ஒருவர் தனது தீய பழக்கங்களை சரிசெய்வதைப் போன்று ஒருவரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதாக இருக்கவேண்டும்.

இரண்டாவது பூஜை காலை 9 மணிக்கும், மூன்றாவது பூஜை மதியம் 12 மணிக்கும் நடைபெறுகிறது. நான்காவது பூஜை மதியம் 3 மணிக்கு நடைபெறுகிறது. அன்றைய ஐந்தாவது மற்றும் கடைசி பூஜை மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. பஞ்சகணபதிக்கு நடைபெறும் இந்த ஐந்து பூஜைகள், வீட்டில் இருக்கும் அவரது தேவர்களிடம் உதவியை வேண்டிக்கொண்டு, குடும்ப வாழ்க்கையில் வளர்ச்சி முறைகளை அமைக்கின்றன. தற்போது உணரப்படும் அபரிமிதமான அன்பு வரவிருக்கும் வருடத்தில் தாராள மனப்பான்மையை தூண்டிவிட்டு, செல்வவளம் மற்றும் அதிஷ்டத்தை தேடித் தருகிறது. அன்றைய தினம் பெறப்பட்ட பரிசுகள் அனைத்தும் பஞ்சகணபதி முன்பாக திறக்காமல் வைக்கப்படுகின்றன.

நீண்டநேரம் காத்திருந்த பிறகு மாலைநேர பூஜை மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. ஐந்து *சாதனைகள்* நிறைவு பெறுகின்றன. எல்லோரும் அமைதி, அன்பு மற்றும் ஒற்றுமையை மீண்டும் அனுபவிக்கிறார்கள். பூஜை முடிந்த பிறகு மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெறும் பெரிய விருந்துக்கு முன்பாக, விநாயகர் பக்தர்களுக்கு இறுதியாக எல்லோருக்கும் தனது *தரிசனத்தையும் பிரசாதத்தையும்* வழங்குகிறார். பரிசுகள் எல்லோருக்கும் வழங்கப்பட்டு மகிழ்ச்சியுடன் திறக்கப்படுகின்றன. மகிழ்ச்சியான குழந்தைகள். மகிழ்ச்சியான பெற்றோர்கள். மகிழ்ச்சியான கடவுள்.

பஞ்சகணபதி பூஜைக்கு பிறகு ஒரு குடும்ப பிரார்த்தனை

நீங்கள் பஞ்சகணபதிக்கு பிறகு வரும் 360 நாட்களுக்கு இந்த பிரார்த்தனையின் பலனை பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும். அவரது அருள் உங்கள் வீட்டில் எல்லையற்ற மகிழ்ச்சியை நிரப்பட்டும். பல மாதங்கள் முன்பாகவே அவர் வழங்கும் செல்வவளம், கலாச்சாரம் மற்றும் மற்றவர்கள் மீது அக்கறை செலுத்தும் வரங்களை நீங்களும் உங்கள் குடும்பமும் பெறவேண்டும். பஞ்சகணபதியாக விநாயகர் மீண்டும் அடுத்த வருடம் திரும்பும் வரை, உங்கள் பூஜை மாடத்தில் பின்வரும் பிரார்த்தனையை ஒவ்வொரு பூஜைக்கு பிறகு எல்லோரும் ஒன்று சேர்ந்து தொடர்ந்து சொல்லுங்கள்.

ஓம் பூர் புவ: ஸ்வ:
ஏகதந்தாய வித்மஹே

மூன்று லோகங்களில் இருக்கும் தெய்வீக சக்திகளே,
ஒற்றை தந்தத்துடன் இருப்பவரின் *தரிசனத்தில்*
நாங்கள் எங்கள் மனங்களை ஒடுக்குவோமாக.

வக்ரதுண்டாய தீமஹி

ஒரு வளைந்த துதிக்கையுடன் ஒரு யானை உருவில் இருக்கும்
அவரை நாம் தியானம் செய்வோமாக.

தன்னோ தந்தி ப்ரசோதயாத்


அவர் நம்மை என்றும் சரியான பாதையில் வழிநடத்தி செல்லட்டும்.

ஜெய் கணேஷா!
ஜெய் பஞ்சமுக கணபதி!
ஜெய் கணேஷ! ஜெய்! ஜெய்!
ஓம் சாந்தி:, சாந்தி:, சாந்தி:, ஓம்.

கணங்களின் ஈசுவரனுக்கு வெற்றி உண்டாகட்டும்!
பஞ்சமுக கணபதி போற்றி!
கணங்களின் ஈசுவரனுக்கு வெற்றி உண்டாகட்டும்!
கணங்களின் ஈசுவரனுக்கு போற்றி, போற்றி.
ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி, ஓம்.

இன்றும் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடும் பல இந்துக்கள், “இதில் என்ன தவறு?” என்று கேட்கிறார்கள். அதனால் உன்னதமான நமது சனாதன தர்மத்தின் பாரம்பரியம் பலவீனமடைந்து, குழந்தைகள் வழிதவறி செல்லவும் துணைபுரிகிறது. கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடும் பலர் கிறித்துவ பள்ளிகளில் படித்தவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் யூத, இசுலாமிய அல்லது மற்ற மதங்களில் பரிசுகள் வழங்கும் நாட்களுக்கு முக்கியத்துவம் அளிக்கமாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட பாதையை தெரிந்துகொள்வது மட்டுமே போதுமானது என்று மதவாதிகள் நம்புவதால், ஒவ்வொரு மதமும் தங்கள் இளைஞர்களை ஒரு சமயப் பிரிவுணர்வோடு அறிவுறுத்தல்களை வழங்குகிறார்கள். அந்த அறிவுறுத்தல்கள் கிறிஸ்துமஸ் பண்டிகை அல்லது மற்ற மதங்களின் பண்டிகைகளை கொண்டாடுவதால் பலவீனம் அடையக்கூடாது. இன்றைய கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் ஒரு பழங்கால பண்டிகையாக இருந்தது இல்லை என்பதையும், இது 1900 களின் தொடக்கத்தில் அமெரிக்காவில் தொடங்கி உலகெங்கும் பரவியது என்பதையும் பெரும்பாலான இந்துக்களுக்கு தெரிவதில்லை.





Himalaya peaks in snow in China from space, NASA



இனிய நெய்வேத்திய பொருட்கள்

மிஷ்டான்னநெய்வேத்தியம்

मिष्टान्ननैवेद्यम्



சாதாரண மக்களைப் போன்று பிள்ளையாருக்கும் இனிப்புகள் பிடித்து இருக்கிறது. அவருக்கு நடைபெறும் சிறப்பு பூஜைகளின் போது, மனதில் பக்தியுடன் மந்திரங்களை சொல்லிக்கொண்டு தின்பண்டங்கள் மிகவும் கவனமாக தயார் செய்யப்படுகின்றன. 120 க்கும் மேற்பட்ட நாடுகளில் இருக்கும் கோயில்கள் மற்றும் பூஜை மாடங்களில், குறிப்பாக பண்டிகை காலங்களில், விநாயகரின் முன்பாக தட்டுகளில் மற்ற இனிப்புக்களுடன் கொழுக்கட்டையும் வைக்கப்படுகின்றன. பூஜைக்கு தயார் செய்யப்படும் உணவுகளை தயார் செய்யும் போதும், தெய்வத்திற்கு படைக்கும் முன்பாகவும் ருசிப்பது அல்லது நுகர்வதை தவிர்க்க வேண்டும். அவை பூஜைக்கு பிறகு *பிரசாதமாக* ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறந்த விநாயக பக்தர்களில் ஒருவரான, தென் இந்திய பெங்களூரின் திருமதி எஸ். கே. ஜெகதீஸ்வரி மோதகம் படைக்கும் உணர்வை பின்வரும் கவிதையில் சித்தரித்துள்ளார்.



முதாகராத்த மோதகம்

ஓம் கணபதி ஓம்.
ஓம் கம் கணபதயே நம:.
விநாயகா!—உனக்கு எது பிரியமானதோ,
அதை நான் உனக்கு படைக்கிறேன்! நீ உன் கைகளில்
ஆசையோடு கொழுக்கட்டையை பிடித்து இருக்கிறாய்!
உனக்கு அதில் பிரியம் என்பது எனக்கு தெரியும். நீ இனிமையாக
இருக்கிறாய்.
முதாகராத்த மோதக, எள்ளு பூரணத்தை
மிருதுவான அரிசி மாவில் வைத்து
அதன் ஓரங்களை மடித்து,
ஆவியில் வேக வைத்து, பக்தியுடன் நான் உனக்கு வழங்குவேன்.

மோதகம்: முதல் சமையல் குறிப்பு

இனிய உருண்டைகள்

பின்வரும் சமையல் குறிப்பை பயன்படுத்தி எலுமிச்சை பழத்தின் அளவில் சுமார் இருபத்தி ஐந்து *மோதகங்களை* தயார் செய்யலாம். அவை குழந்தைகளுக்கு சிறிய விருந்தாகவும், கோயிலில் வழங்கும் பாரம்பரிய படையலாகவும் இருக்கும். இதனை சமைக்க இரண்டு மணிநேரம் தேவைப்படும்.

மூலப்பொருட்கள் மற்றும் பாத்திரங்கள்

1 lb. (½ kg) அரிசி மாவு
2 கப் வெல்லம் (அல்லது நான்கு மேசைக்கரண்டி வெல்லப்பாகு
சேர்க்கப்பட்ட 2 கப் நாட்டு சர்க்கரை)
2 கப் பச்சை எள்ளு விதைகள்
2 தேங்காய் துருவல் (தேவைபட்டால்)
2 கப் உருக்கிய நெய் அல்லது கடைந்த வெண்ணெய்
1 மேசைக்கரண்டி உப்பு
வாழை இலை அல்லது மெழுகு தாள்
ஒரு மாவு சல்லடை அல்லது நுண்ணிய சல்லடை
ஒரு இட்லி அல்லது காய்கறி வேக வைக்கும் பானை (ஸ்டீமர்)

செயல்முறைகள்

எள்ளு விதைகளை எண்ணெய் இல்லாத ஒரு வாணலியில், தங்க பழுப்பு நிறமாக மாறும் வரை (5 முதல் 10 நிமிடங்கள் வரை) வறுக்கவும். ஒரு உருட்டு கட்டை அல்லது சிறிய உறல் கொண்டு விதைகளை உடைக்கவும். 4 தேக்கரண்டி நெய் சேர்த்து, வெல்லத்தை மிருதுவாக்கவும். பிறகு அதை எள்ளு விதைகள்

மற்றும் தேங்காய் துருவலுடன் நன்றாக கலக்கவும். (சிறிதளவு நெய் சேர்த்து பிசைந்த மாவை உருண்டைகளாக மாற்றி விரைவாக இனிப்புக்களை தயார் செய்ய, இந்த கலவையை குளிர்சாதன பெட்டியில் சேமித்து வைக்கலாம்.)

அதன் பிறகு அரிசி மாவை சலித்து, அது பழுப்பு நிறமாக மாறும் வரை சுமார் 5 முதல் 7 நிமிடங்களுக்கு வறுக்கவும். பிறகு அதை ஒரு தட்டு அல்லது மேசையின் மீது பரப்பி வைத்து, அதை முழுமையாக ஆற விடவும். அரிசி மாவு குளிர்ந்துக்கொண்டு இருக்கும் போது, இரண்டு லிட்டர் தண்ணீர் மற்றும் ஒரு தேக்கரண்டி உப்பை கொதிக்கும் பாத்திரத்திற்கு அருகில் வைத்துக் கொள்ளவும். வறுத்து ஆறிய அரிசி மாவை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு, அதன் நடுவில் ஒரு குழி செய்துகொள்ளவும். அந்த குழியில் மெதுவாக சிறிதளவு வெந்நீரை ஊற்றி, கைகளால் அந்த அரிசி மாவை பிசைய தொடங்கவும். மேலும் வெந்நீரை ஊற்றி, ஒரு மாவு உருண்டையை தயார் செய்யவும். மேசை அல்லது ப்ரெட்போர்டில் வைக்கும் போது, அதில் லேசான ஈரம் இருக்கவேண்டும். ஈரம் மற்றும் மேற்புறம் சீராக அமையும் வரை, மாவை பிசையவும்.

அடுத்ததாக *இட்லி* பானையில் தண்ணீரை ஊற்றி, அதை நன்றாக கொதிக்க விடவும். வாழை இலை அல்லது மெழுகு தாளின் மீது லேசாக நெய் அல்லது எண்ணெயை தடவவும். பாதி எலுமிச்சை பழத்தின் அளவிற்கு மாவை கையில் எடுத்து, காற்றை நீக்க உங்கள் கைகளால் அதை சிறிது பிசையவும். பிறகு அதை இலையில் உள்ளங்கை அகலத்திற்கு வட்டவடிவில் சீராக தட்டையாக்கினால், அதை சீராக வேக வைக்கலாம். ஒரு எள்ளு-வெல்லம்-தேங்காய் உருண்டையை நடுவில் வைத்து ஓரங்களை மூடி ஒட்டவும். பூரணத்தின் மீது இருக்கும் அரிசி மாவை கும்பு வடிவில் பிடித்து, அதற்கு இலை அல்லது காகிதத்தை சுற்றி வைக்கவும். (தேவையென்றால் *மோதகங்களை* வட்டவடிவிலும் செய்யலாம்) இவ்வாறு *மோதகங்களை* உங்கள் பானையில் இடம் இருக்கும் அளவிற்கு தொடர்ந்து தயார் செய்யுங்கள். இந்த *மோதகங்களை* இட்லி பானையில் போதிய இடைவெளி விட்டு விலக்கிவைத்து, பாத்திரத்தை மூடி வேக வைக்கவும் (15 முதல் 20 நிமிடங்கள்). அந்த மோதகங்கள் வேகும் போது, நீங்கள் அடுத்து செய்யவேண்டிய மோதகங்களுக்கு மூலப்பொருட்களை தயார் செய்யவும். *மோதகங்கள்* கைபொறுக்கும் அளவிற்கு ஆறியதும், அதை உருக்கிய நெய்யில் முக்கி வைக்கவும். இப்போது அவை உண்பதற்கு தயாராக இருக்கின்றன.

பிடி கொழுக்கட்டை: இரண்டாவது சமையல் குறிப்பு

இனிய அரிசிமாவு உருண்டை

மூலப்பொருட்கள் மற்றும் பாத்திரங்கள்

2 கப் அரிசி மாவு
1 கப் வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை

1 கப் தேங்காய் துருவல்
1 தேக்கரண்டி உப்பு
ஒரு *இட்லி* அல்லது காய்கறி வேகவைக்கும் பானை
அரிசி மாவை வருக்க ஒரு கடாய்
வாழை இலை அல்லது தட்டு

செயல்முறைகள்

ஈரமில்லாத வாணலியில் அரிசி மாவை மிதமாக வறுத்து, பிறகு அதை ஒரு தட்டு அல்லது மேசை மீது பரப்பி ஆற வைக்கவும். அதன் மீது சிறிது தண்ணீர் தெளித்து, பிறகு அதனுடன் உப்பு, வெல்லம் மற்றும் தேங்காயை சேர்க்கவும். அவற்றை ஒன்றாக கிளறவும். தேவைப்பட்டால் மட்டும் தண்ணீர் சேர்த்துக் கொள்ளுங்கள். அது நன்றாக பிசையப்பட்டு கெட்டியானதும், அதை முழுமையாக பயன்படுத்தி எழும்பிச்சை பழ வடிவில் பல உருண்டைகளை தயார் செய்யவும். அதை உருண்டைகளாக அல்லது வலது கையில் அழுத்தி பிடி *கொழுக்கட்டைகளாகவும்* தயார் செய்யலாம். முதல் சமையல் குறிப்பில் குறிப்பிட்டதைப் போன்று, பானையில் இருக்கும் தண்ணீரை கொதிக்க வைத்து, அதில் கொழுக்கட்டைகளை இலைகளால் சுற்றி இடைவெளி விட்டு அடுக்கவும். உருண்டைகள் இளம் பழுப்பு நிறமாக மாறும் வரை வேக வையுங்கள். அதை ஒரு வாழை இலை அல்லது தட்டில் அடுக்கி விநாயகருக்கு படைக்கவும்.

எள்ளு கொழுக்கட்டை: மூன்றாவது சமையல் குறிப்பு

எள்ளு விதை மற்றும் வெல்லம்-அரிசி உருண்டை

இந்த தென்னிந்திய உணவு வழக்கமாக விநாயகர் சதுர்த்திக்கு தயார் செய்யப்படுகிறது.

மூலப்பொருட்கள் மற்றும் பாத்திரங்கள்


1 கப் எள்ளு விதைகள்
1 கப் வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை
4 கப் அரிசி மாவு
1 தேக்கரண்டி உப்பு
எண்ணெய் அல்லது நெய்
8 கப் தண்ணீர்
தட்டுகளுடன் கூடிய ஒரு இட்லி பானை
மாவை வறுக்க ஒரு வாணலி
ஒரு சிறிய பருத்தித்துணி
ஒரு உரல் மற்றும் உலக்கை, உருட்டுக்கட்டை
அல்லது பிலண்டர்
வாழை இலை அல்லது தட்டு

செயல்முறைகள்


எண்ணெய் இல்லாமல் இளம் பழுப்பு நிறமாக மாறும் வரை, எள்ளு விதைகளை வறுத்து பிறகு அதனை வெல்லத்துடன் சேர்க்கவும். பிறகு உரல் மற்றும் உலக்கை, உருட்டுக்கட்டை அல்லது பிலண்டரை பயன்படுத்தி, இந்த கலவையை பொடியாக்கி தனியாக எடுத்து வைக்கவும். அரிசி மாவை மிதமாக வறுத்து, பிறகு அதை ஒரு தட்டு அல்லது மேசை மீது பரப்பி ஆற வைக்கவும். அது குளிர்ந்துக்கொண்டு இருக்கும் போது, ஒரு வாணலியில் 8 கப் தண்ணீருடன் உப்பை சேர்த்து நன்றாக கொதிக்க வைக்கவும். வறுத்து ஆறிய அரிசி மாவை ஒரு பாத்திரத்தில் சேகரித்து நடுவில் ஒரு குழி செய்து கொள்ளவும். அரிசி மாவுக்கு மத்தியில் இருக்கும் குழியில் சிறிது வெந்நீரை மெதுவாக ஊற்றி, அரிசி மாவை கைகளால் பிசைய தொடங்குங்கள். தொடர்ந்து சிறிது வெந்நீரை ஊற்றி, அரிசி மாவை பிசைந்து ஒரு உருண்டையை தயார் செய்யுங்கள். மேசை அல்லது ப்ரெட்போர்டில் வைக்கும் போது, அதில் ஈரம் மிதமாக இருக்கவேண்டும். ஈரம் மற்றும் மேற்புறம் சீராக அமையும் வரை, மாவை பிசையவும். அது கைபொறுக்கும் வெப்பத்தை அடைந்ததும், பிசைந்த மாவை எழும்பிச்சை பழ அளவில் உருண்டைகளாக செய்து தனியாக எடுத்து வைக்கவும்.


ஒரு வாழையிலை, தட்டு அல்லது மேசையின் மேற்புறத்தில் சிறிது எண்ணெய் அல்லது நெய் தடவி, அதன் மீது ஒரு பிசைந்த உருண்டையை வைக்கவும். அதை உருட்டி அல்லது பிசைந்து 3 அங்குல வட்டவடிவில் தட்டிக்கொண்டு, மத்தியில் ஒரு மேசைக்கரண்டி எள்ளு மற்றும் சர்க்கரை வைத்து, அதை பிறை வடிவில் மடித்து ஓரங்களை ஒட்டவும். இந்த செய்முறையை மற்ற உருண்டைகளுக்கும் தொடரவும்.

உங்கள் வீட்டு காய்கறி அல்லது இட்லி பானையில் தண்ணீரை கொதிக்க வைத்து, சிறிய துவாரங்களுடன் இருக்கும் தட்டு அல்லது ஸ்டீமிங் ராக்கை உள்ளே நுழைக்கவும். அந்த தட்டு நன்கு தட்டையாக இருக்கவேண்டும் மற்றும் அதன் மீது ஒரு பருத்தி துணியை பரப்பி வைக்கவும். அந்த தட்டில் ஒன்றையொன்று தொடாமல் நிறைய கொழுக்கட்டைகளை அடுக்கவும். அதை உங்கள் இட்லி பானையில் மூடி வேக வைக்கவும். உங்கள் பானையை பொருத்து 15 அல்லது 20 நிமிடங்களில் கொழுக்கட்டைகள் தயாராகிவிடும். பிறகு அவற்றை ஒரு தட்டு அல்லது இலை மீது பரப்பி ஆறவைக்கவும். பிறகு விநாயகருக்கு பிடித்தமான இந்த கொழுக்கட்டையை அவருக்கு படைக்கவும். மீதம் இருக்கும் எள்ளு-சர்க்கரை கலவை மூலம் நீங்கள் சிறிய விநாயகர் சிலைகளை தயார் செய்யலாம். அவற்றை சமைத்த பொருட்களுடன் பூஜையில் வைத்து, இதனுடன் வெற்றிலை, பாக்கு மற்றும் பழங்களையும் வழங்கலாம்.






CHAPTER SEVENTEEN
Divine
Mother
Auvaiyar
Human skin cells 40x.
Dr. Bram van den Broek


EXOTIC INDIA- KAILAS RAJ

தவப்பெண் ஔவையார்

சாத்வி ஔவையார் மா

साध्वी औवैयार् मा



நீண்டகாலத்திற்கு முன்பாக ஒன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தயாவில் ஔவையார் என்ற தமிழ் பெண் புலவர் இருந்தார். அந்த பெயருக்கு தமிழில் மதிப்பிற்குரிய மூத்த தாய் அல்லது மூதாட்டி என்று பொருள். பிறந்ததும் பெற்றோர்களால் கைவிடப்பட்ட ஔவையார் ஊர் ஊராக சென்று பாடும் ஒரு பாணர்கள் குடும்பத்தால் வளர்க்கப்பட்டார். அவருக்கு சிறு வயதில் இருந்தே சமயம் மற்றும் இலக்கியத்தில் அதிக ஆர்வமும் மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற எண்ணமும் இருந்தது. அவர் நல்ல அழகு மற்றும் அறிவோடும் இருத்ததால், அவரை பல உயர்குடி ஆண்கள் திருமணம் செய்துக்கொள்ள விரும்பினார்கள். இறுதியில் அவரிடம் திருமணத்திற்கு சம்மதம் பெற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய அக்கறையை பல இளம்பெண்கள் விரும்புவார்கள் என்றாலும், ஔவையாருக்கு இது வாய்ப்பாக இல்லாமல் ஒரு அச்சுறுத்தலாக தோன்றியது. அவருக்கு தத்துவம் மற்றும் பக்தியில் ஆர்வம் இருந்தது, மற்றும் அவரது வாழ்க்கை சிவபெருமான் மீதிருந்த அன்பை மையமாகக் கொண்டு அமைந்து இருந்தது. அந்த பிரபஞ்சத்தின் மையமாக ஒரு ஆண் இருப்பதை அவர் விரும்பவில்லை. எதிர்காலத்தில் குடும்பம் தனக்கு திருமணத்தை நிச்சயிக்கப்போவதை அறிந்த ஔவையார், தனது இஷ்ட தெய்வமான விக்னேசுவரனிடம் தனது விதியில் இருந்து தன்னை காப்பாற்ற வேண்டும் என்று அழுதுக்கொண்டு, “விக்னேசுவரா, இவர்கள் எனது அழகு மற்றும் இளமையைத் தான் விரும்புகிறார்கள். ஆனால் நான் வாழ்க்கையை சரஸ்வதி தேவிக்கும் கல்வியை பரப்புவதற்கும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். அமைதியாக எனது வழியில் செல்வதற்கு நீ எனது இளமை மற்றும் அழகை தயவுசெய்து எடுத்துக்கொள்,” என்று பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனைக்கு விநாயகர் மனம் இறங்கினார். ஔவையின் சருமத்தில் சுருக்கங்கள் தோன்றின, முடி நரைத்தது, கண்கள் மங்கின, கை கால்களில் விறைப்பு ஏற்பட்டது மற்றும் மார்பகங்களில் தொய்வு ஏற்பட்டன. கிராமத்து கிணற்றில் தனது நிழல் உருவத்தை பார்த்து மகிழ்ச்சி அடைந்த அவர், உலகம் இனி தன்னை கட்டாயப்படுத்தாது என்பதையும், அன்பான விநாயகர் தான் செய்த பிரார்த்தனைகளுக்கு கருணை உள்ளத்தோடு பலன் அளித்து இருக்கிறார் என்பதையும் அறிந்துகொண்டு கொண்டார்.

மக்களில் பலர் தங்களது பாதுகாப்பைத் தேடிக்கொள்ளும் வீட்டில் இருந்து வெளியேறிய ஔவையார், பனைமரங்கள் சூழ்ந்த சோழ, பாண்டிய மற்றும் சேர

நாடுகளில் சுற்றித் திரிந்தார். அவர் யோகப்பயிற்சி செய்து தனது குருவின் அறிவுறுத்தல்களை பின்பற்றி ஒரு எளிய வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். அவரது ஆன்மீக சாதனை பலன் அளித்ததும், அவர் மெதுவாக முதிர்ச்சி பெற்று மக்களிடம் சாத்திரங்கள், சித்தர்களின் ஆன்மீக போதனைகள், சிவபெருமான் மற்றும் மகாதேவர்கள் அருளிய ஞானத்தை பரப்ப ஆரம்பித்தார். அவர் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு வழங்கிய எண்ணற்ற இலக்கிய மற்றும் தத்துவ படைப்புக்கள் மனித அனுபவத்தை பற்றி முழுமையான விளக்கம் அளித்து, அவரது ஆழமான அறிவுக்கு சான்றாக விளங்குகிறது. வரலாற்றில் தங்களது வீரம் மற்றும் நற்பண்புகளுக்கும் புகழ்பெற்று விளங்கிய அதியமான், பாரி, காரி மற்றும் சேரமான் போன்ற அரசர்களை ஔவையார் புகழ்ந்து பாடி இருக்கிறார். இவரது புகழ் பல இடங்களில் பரவுவதற்கு, இந்த பேரரசர்கள் அவரது கலாச்சார படைப்புக்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கினார்கள். இன்று அவர் இந்திய கலாச்சார சரித்திரத்தில் மிகவும் விவேகமான பெண்மணியாக போற்றப்படுகிறார்.

பழங்காலத்தில் சிறந்த சிவ பக்தர்களாக இருந்த சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் சேரநாட்டு மன்னன் சேரமான் பெருமாளின் சமகாலத்தவராக இருந்த ஔவையார், அவர்களுடன் நல்ல நட்புறவையும் பராமரித்தார். இவர்கள் இருவரும் சேக்கிழாரின் *பெரியபுராணத்தில்* சிறந்த சிவனடியார்களாக போற்றப்பட்டுள்ளனர். ஔவையார் தனது வாழ்நாளின் இறுதியில் ஒரு நாள் தனக்கு பிடித்தமான விநாயகரை வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்போது சிவபெருமானின் இருப்பிடமான கைலாய மலைக்கு சுந்தரர் மற்றும் அவரது நண்பர் சேரமான் சென்றுகொண்டு இருப்பதாக அவருக்கு ஒரு காட்சி தோன்றியது. சுந்தரர் ஒரு வெள்ளை யானையிலும், சேரமான் ஒரு வெள்ளை குதிரையிலும் பயணம் செய்துக்கொண்டு இருந்தார்கள். தங்களது தோழியான ஔவையார் தங்களுடன் வர ஆசைப்படுவார் என்பதை அவர்கள் இருந்தார்கள். ஔவையார் தானும் தனது ஆன்மீக நண்பர்களுடன் இறுதியாக பயணம் செல்லவேண்டும் என்று விரும்பியதால், அவர் மனம் சஞ்சலம் அடைந்தது மற்றும் அவர் தனது பூஜையை விரைவாக செய்ய முயற்சித்தார். ஆனால் விநாயகர் அவர் முன்பாக காட்சி அளித்து, அவரது நண்பர்களை காட்டிலும் அவரை விரைவாக கைலாயம் அழைத்து செல்வதாக உறுதியளித்து, நிதானமாக பூஜையை செய்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன் பிறகு ஔவையார் ஆழமான சமாதி நிலைக்கு சென்று புகழ்பெற்ற *விநாயகர் அகவல்* பாடலை பாடத் தொடங்கினார். (குறிப்பாக விநாயகர் சதுர்த்தியின் போது, தமிழ்நாடு முழுவதும் இந்த விநாயகர் பக்தி பாடல் பாடப்படுகிறது.) அவர் தனது பூஜையை முடித்து, படையலை தெய்வத்திற்கு சமர்ப்பித்த போது, விநாயகர் அவர் முன்பாக தோன்றி, தனது மென்மையான துதிக்கையால் ஔவையாரை தூக்கி, இரு நண்பர்கள் வருவதற்கு முன்பாக அவரை கைலாயத்தில் கொண்டு

சேர்த்தார். அவரால் விரைவாக எவ்வாறு வர முடிந்தது என்று சேரமான் கேட்ட போது, அவர் தனது அழகு தமிழில் பின்வரும் பாடலை பாடினார்:

மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிரநினை யவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
அதிரவருகின்ற யானையும் தேரும் அதன்பின்வரும்
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே!.

விநாயக அகவல்
விக்கினங்களை நீக்குபவருக்கு வந்தனம்

திரு கே. சுவாமிநாதன் மூலம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது


(*ஓம் கணேஷா, தி பீஸ் ஆப் காட்* புத்தகத்தில் இருந்து தொகுக்கப்பட்டது)

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்,
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்,
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்

கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை

நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!




CHAPTER EIGHTEEN
In Praise of Pillaiyar
Iceland from above, Dystalgia




பிள்ளையார் துதிப்பாடல்கள்

பிள்ளையார் ஸ்துதி:

पिल्लैयर् स्तुतिः

தெய்வீக பாடல்களின் தொகுப்பு
(இது ஆங்கில புத்தகத்தில் சங்கரத்ன முனைவர் எஸ்.எம்.
பொன்னையா மூலம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இருந்தது)



பிள்ளையார் என்ற பெயருடன் பிரபலமாகவும், கணங்களின் தலைவராகவும் இருக்கும் கணபதி பற்றி திருமூலரில் தொடங்கி கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் வரை பல்வேறு சைவர்கள் இயற்றிய பாடல்களை, இந்த தமிழ் துதிப்பாடல்களின் திரட்டாக பதினைந்து பக்தர்கள் தொகுத்து இருக்கிறார்கள். இவை தமிழ் பேசப்படும் இந்து வீடுகள் மற்றும் கோயில்களில் தினமும் பாடப்படுகின்றன. இங்கே இந்த பாடல்களின் விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறந்த பலன்களை பெறுவதற்கு, அதற்கென்று பரிந்துரைக்கப்பட்ட இராகத்தில் பாடவேண்டும். ஆகம சாத்திரங்களின் படி அனைத்து கச்சேரிகள், இலக்கிய படைப்புகள் மற்றும் சமய சடங்குகள் வெற்றி பெறுவதை உறுதி செய்ய, முதலில் விநாயகர் அருளை வேண்டி பிரார்த்தனை செய்யவேண்டும். அன்பு மற்றும் பக்தி மற்றும் இறைவனிடம் முழுமையாக சரணடைவதன் மூலம் மனிதனால் முக்தியை பெறமுடியும் என்ற நம்பிக்கையை, இந்த கடவுள் வாழ்த்துப் பாடல்கள் வலுப்படுத்துகின்றன.

திருமந்திரம், விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை, ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருமூலர் திருமந்திரம்

ஐந்து கைகளையும், யானை முகத்தையும், இளம்பிறைச் சந்திரனைப் போன்ற வளைந்த தந்தத்தையும் உடைய உமாசங்கரின் திருமகனும், அறிவுக் கொழுந்தாக உள்ள விநாயகனை உள்ளத்தில் வைத்து, அவன் திருவடிகளையும் போற்றுகின்றேன்.

திருமந்திரம்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை

கணபதி என்றிடக் காலனும் கைதொழும்

கணபதி என்றிடக் கரும மாதலால்

கணபதி என்றிடக் கரும மில்லையே.

கணபதியின் பெயரை சொன்னதும், வலுவான தீய கர்மவினைகளும் தளர்வடையும். கணபதியின் பெயரை சொன்னதும், காலதேவனும் கைகூப்பி நிற்பான். அதனால் சிரத்தையுடன் கணபதியின் பெயரை சொல்லும் போது, உறுதியாக உங்கள் கர்ம தளைகள் துண்டிக்கப்படும்.

திருஞானசம்பந்தரின் *திருக்கடைக்காப்பு*

பிடியத னுருவுமை கொளமிகு கரியது

வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்

கடி கண பதிவர அருளினன் மிகுகொடை

வடிவினர் பயில் வலி வலமுறை இறையே.

மிகுதியாக வழங்கும் கொடையே தமக்கு அழகைத் தரும் என்று நினைக்கும் வள்ளற் பெருமக்கள் வாழும் வலிவலத்தில் வாசம் செய்யும் இறைவன், உமையம்மை பெண்யானை வடிவுகொள்ள, தான் ஆண்யானையின் வடிவு கொண்டு தன் திருவடியை வணங்கும் அடியவர்களின் இடர்களை நீக்கவும், நிரந்தரமான சைவ பாதையை பின்பற்றுபவர்களுக்கு தனது அருளை வழங்கவும் கணபதியைத் தோற்றுவித்தான்.

பாரதம் பாடிய பெருந்தேவனார்

ஓத வினை அகலும்; ஓங்கு புகழ் பெருகும்

காதற் பொருள் அனைத்தும் கைகூடும் – சீதப்

பனிக் கோட்டு மால்வரை மேல் பாரதப்போர் தீட்டும்

தனிக் கோட்டு வாரணத்தின் தாள்!

ஒற்றை தந்தத்துடன் ஆனைமுக கணங்களின் தலைவனாக, பனிமூடிய இமயமலையில் மகாபாரத போரை தனது தந்தத்தின் மூலம் பதிவு செய்தவரின் திருவடிகளை யார் வணங்குகிறார்களோ, அவர்களுக்கு புகழ் கிடைக்கிறது. அவர்கள் மனதில் இருக்கும் ஆசைகள் நிறைவேறுகின்றன. அவர்கள் கர்மவினை தளைகளில் இருந்து விடுபடுகிறார்.

ஔவையார்

வாக்குண்டாம், நல்லமனமுண்டாம், மாமலராள்

நோக்குண்டாம், மேனி நுடங்காது பூ க்கொண்டு

துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்

தப்பாமல் சார்வார் தமக்கு.

துதிக்கை மற்றும் பவளம் போன்ற திருமேனியுடன் இருக்கும் விநாயகரின் திருவடிகளை, மலர்களால் நாள்தோறும் பூஜை செய்வோருக்கு, சொல்வளம் உண்டாகும். நல்ல சிந்தனை உண்டாகும். பெருமை பொருந்திய செந்தாமரைப்பூவில் இருக்கும் இலட்சுமியின் அருட்பார்வை கிடைக்கும். அவர் உடலை நோய்கள் வாட்டாது.

ஔவையார்

பாலும் தெளிதேனும், பாகும் பருப்பு மிவை

நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்

துங்கக் கரிமுகத்து தூமணியே, நீ எனக்குச்

சங்கத்தமிழ் மூன்றுந் தா

பெருமை மிகுந்த யானை முகத்துடன் அழகிய அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டு, தூய்மையான மணி போன்ற ஒளியுடன் காட்சி அளிக்கும் விநாயகக் கடவுளே! நான் உனக்கு இனிய பாலையும் தெளிந்த தேனையும் வெல்லப் பாகினையும் பருப்பு வகைகளையும் கலந்து படைக்கின்றேன். நீ எனக்கு இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழையும் தருவாயாக! என்று ஔவையார் வேண்டுகிறார்.

கபிலத்தேவ நாயனார் *இரட்டை மணி மாலை*

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்

விநாயகனே வேட்கை தணிவிப்பான், விநாயகனே

விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்

தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து.

விநாயகர் கொடிய துன்பங்களை வேரறுப்பவர். விநாயகர் பொருள் பற்றைத் தணிவிப்பவர். விநாயகர் வானுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவர். இத்தன்மையினரான விநாயகரைப் பணிந்து வணங்கினால் நன்மை பல பெற்று வாழலாம்.

திருவாக்கும், செய்கருமமும் கைகூட்டும் செஞ்சொல்

பெருவாக்கும், பீடும் பெருக்கும் உருவாக்கும்

ஆதலால், வானோரும் ஆனைமுகத்தானைக்

காதலால் கூப்புவர் தம்கை.

செல்வத்தைப் பெருக்கி, செய்யும் செயல்களை நிறைவேற்றி, சொல்லும் சொல்லுக்குப் பெருமையை தேடித்தந்து, பெருமிதத்தை மேலோங்கச் செய்து, படைப்பாற்றலை உண்டாக்குவதால், வானோரும் காதலோடு ஆனைமுனைக் கைகூப்பித் தொழுவர்.

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப
பணங்கொண்ட பாந்தட் சடைமேல் – மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள் பணியப் போம்.

நெற்றிக் கண்ணுடனும், சடையில் படத்தையுடைய பாம்புடனும், நறுமணம் வீசும் கொன்றைப்பூவை சூடிய சிவபெருமானின் மகனான ஆனைமுக பிள்ளையாரின் திருவடிகளைப் பணிந்தால், கூட்டம் கொண்டு வந்த கொடிய வினைகள் கரைந்து போகும்.

நக்கீரதேவ நாயனாரின் *விநாயகர் அகவல்*

வெண்ணீ றணியும் விமலன் புதல்வா
பெண்ணா முமையாள் பெற்றிடுந் தேவே
அரிதிரு மருகா அறுமுகன் துணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயிற் றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்.

நெற்றியில் திருநீறை பூசிய சிவனின் மகனாகவும், உமையாளுக்கு பிறந்த தெய்வமாகவும், திருமால்-லட்சுமியின் மருமகனான ஆறுமுகனின் துணைவனாகவும், கரிய நிறத்தில் ஆனைமுகத்துடன் இருக்கும் கணபதிக்கு சரணம்! குருவே சரணம்! குணமே சரணம்! பெரிய வயிற்றுடன் பொன்னிற திருவடிகளை உடையவருக்கு சரணம்! கண்ணாகவும், மணியாகவும், பற்றுக்கோடாகவும் இருப்பவருக்கு சரணம்! விண்ணொளியாகவும் வேந்தராகவும் இருப்பவருக்கு சரணம்!

நம்பியாண்டார் நம்பி

தந்தையும் நீயே தாயும் நீயே
எமரும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே

அரியும் நீயே அயனும் நீயே

திரிபுர தகனஞ் செய்தவன் நீயே

சத்தியும் நீயே சதாசிவம் நீயே

புத்தியும் நீயே புராந்தகன் நீயே

பத்தியும் நீயே பந்தமும் நீயே

முத்தியும் நீயே மோஷமும் நீயே

ஏகமும் நீயே என்னுயிர் நீயே

தேகமும் நீயே தேகியும் நீயே

உன்னரு ளன்றி யுயிர்த்துணை காணேன்

பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்.

நீயே எனக்கு தந்தையாகவும், தாயாகவும், சொந்தமாகவும், ஈசனாகவும், ஞான வடிவாகவும், நாதமாகவும், நான்கு வேதங்களாகவும் இருக்கிறாய். நீயே அரியாகவும், தாமரையில் அமர்ந்த பிரம்மாவாகவும் இருக்கிறாய். உன்னை எதிர்த்து நின்ற திரிபுரங்களை அழித்தவனும் நீயே! நீயே சக்தியாகவும் சதாசிவமாகவும் இருக்கிறாய். நீயே புத்தியாகவும் திரிபுரத்தை அழித்தவனாகவும் இருக்கிறாய். நீயே பக்தியாகவும் பந்தமாகவும் இருக்கிறாய். நீயே முக்தியாகவும் *மோக்ஷமாகவும்* இருக்கிறாய். நீயே ஏகமாகவும், எனது உயிராகவும், எனது உடலாகவும், அந்த உடலை தரித்த ஆத்மாவாகவும் இருக்கிறாய். நீ மட்டுமே எனக்கு பற்றுக்கோடாக இருக்கிறாய். உனது அருளைத் தவிர எனக்கு துணையாக வேறுயாரும் இல்லை. உள்ளுறைந்து இருக்கும் இறைவனே, என்னால் உன்னைத்தவிர வேறொரு தெய்வத்தை புகழ்ந்து பாடவும் தெரியாது!

நம்பி ஆண்டார் நம்பி

என்னை நினைந்து அடிமை கொண்டு என் இடர் கெடுத்துத்

தன்னை நினையத் தருகின்றான் – புன்னை

விரசு மகிழ் சோலை, வியன் நாரையூர் முக்கண்

அரசு மகிழ் அத்தி முகத்தான்.

புன்னை மரங்களும் மகிழ மரங்களும் அடர்ந்த சோலைகளால் சூழ்ந்த திருநாரையூரியில் கோயில் கொண்டுள்ள முக்கட் பெருமானாகிய சிவபெருமான் மகிழும் யானைமுகப் பெருமான், யான் அவனை நினைக்கும் ஆற்றல் பெறா முன்பே என்மேல் வைத்த பெருங்கருணையினால் என்னை நினைந்து ஆட்கொண்டு அடியேனது பிறவித்துயரை போக்கி, எல்லையற்ற தனது அருளை எனக்கு வழங்குகின்றான். நான் இந்த பூமியில் அவனது நினைவாகவே இருக்கின்றேன்.

சேக்கிழார் *பெரியபுராணம்*

எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாள்செவி நீள்முடிக்
கடக் களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

எடுத்துக்கொண்டிருக்கும் 'மாக்கதை' இனிய தமிழால் நடக்க வேண்டி நமக்கு மேன்மை தந்து அருள் புரியும் ஐந்து கையும், அகன்று விரிந்த காதும், நீண்ட முடியும் கொண்ட மதம் பொழியும் களிற்றினை (பிள்ளையாரை) எண்ணத்துக்குள் இருத்திக்கொள்வோம்.

உமாபதி சிவம்

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மை தருசெய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத, ஐந்துகர மூன்றுவிழி, நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

விண்ணுலகம் மற்றும் மண்ணுலகம் செழித்து, வேதங்கள் நீடித்து, புனிதமான தமிழ் மொழி உலகெங்கும் பிரபலமாக இருப்பதற்கு ஞான உருவாக, ஐந்து தலைகளுடன், மூன்று கண்களுடன், வெற்றி தரும் ஆனைமுகத்துடன் இருக்கும் விநாயகரை தவறாமல் வணங்குவோம்.

குமரகுருபரர்

சீர்கொண்ட காசிநகர் சேர்துண்டி ராஜனெனும்
பேர்கொண்ட வைங்கரற்குப் பேசுபுகழ்த்
தார்கொண்ட நற்றிருப்பாட் டீரைந்தும் ஞாலமிசைத்
தொண்டரெலாங் கற்றிருப்பார் மேலாங் கதி.

ஐந்து கரங்களுடன் துண்டிராஜன் என்று பக்தர்களால் அழைக்கப்பட்டு, புனிதமான கங்கை நதிக்கரையில் அமைந்த வாரணாசி கோயில் கொண்டிருக்கும் ஆனைமுகக் கடவுளை புகழ்ந்து, இந்த ஈரைந்து பாடல்களின் மாலையை பக்தியுடன் பாடுவோரெல்லாம் காலப்போக்கில் உயர்ந்த கதியை நிச்சயம் அடைவார்கள்.

கச்சியப்ப சிவாச்சாரியாரின் *கந்தபுராணம்*

மண்ணுலகத்தினிற் பிறவிமாசற
எண்ணிய பொருள் எல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்றுமாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

பூலோகத்தில் பிறக்கும் பிறவியாகிய குற்றம் தீரும் பொருட்டும், ஆசைப்பட்ட பொருட்கள் எல்லாம் அடையும் பொருட்டும், நெற்றிக்கண்ணை உடைய ஒப்பற்ற பெரிய ஆனைமுகக் கடவுளான விநாயகரின் தாமரை மலர்போன்ற பாதங்களை நாம் வணங்கி துதிப்போம்.

அருணகிரிநாதரின் *திருப்புகழ்*

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண் கடலிற் றேனமுதத் துணிர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தனை வோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே.

ஐந்து திருக்கரங்களையும் யானை முகத்தையும் கொண்ட பெருமையின் மிகுந்தவரே, தந்தையாராகிய சிவபெருமானை வலம் செய்ததனால் வழங்கிய கரத்தில் ஏந்திய கனியை உடையவரே! அன்புடையோர்களுக்கு உரிமையான நிலைத்த பரம்பொருளாக விளங்குபவரே, தம்பியாகிய முருகவேள் பொருட்டாகக் கானகத்தில் யானை வடிவம் கொண்டு சென்றவரே! விண்ணுலகிலுள்ள கற்பக மரம் போலவும், காமதேனுவைப் போலவும், சிந்தாமணியைப் போலவும், என் மனமானது கசிந்து அன்பு உடையதாகியும், ஒளிபெற்ற பாற்கடலில் பிறந்த இனிய அமுதம்போன்ற ஞான உணர்ச்சி என் உள்ளத்தில் ஊற்றெடுத்தும், சிவபோகமாகிய பேரின்ப வெள்ளத்தை அடியேன் பலகாலும் பருகியும் மகிழுமாறு அடியேனுடைய உயிருக்கு ஆதரவு வைத்து திருவருள் புரிவீராக.

அருணகிரநாதரின் *திருப்புகழ்*

கைத்தல நிறைகனி அப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும டியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

திருக்கரங்களில் நிறைந்துள்ள பழம், அவல், பொரி, அப்பம் முதலியவைகளை அருந்துகின்ற யானை முகத்தையுடைய கணேஷ மூர்த்தியின் திருவடிக் கமலங்களை விரும்பி, (பதியின் இலக்கணங்களை ஓதும் அறிவு நூல்களைக்) கற்கின்ற அடியாரது சித்தத்தில் எப்போதும் நீங்காது வாழ்கின்றவரே!
நினைத்ததைத் தரவல்ல கற்பக விருட்சம்போல் (தனது சரண அரவிந்தங்களை இடைவிடாது துதிக்கும்) தொண்டர்கள் நினைந்தவை எல்லாம் எளிதில் தரவல்ல வள்ளலே!
எல்லா மொழிகளுக்கும் முற்படுமாறு இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் நூல் முறைமையை மலைகளுக்குள் முதன்மையுடைய மகாமேருமலையில் எழுதி அருளிய முதன்மையானவரே!
(தேவர்கள் வேண்ட) திரிபுரங்களைச் சிரித்து எரித்த சிவபெருமான் எழுந்தருளிய பெரியத் தேரினுடைய அச்சை (தன்னை நினையாத காரணத்தால்) ஒடித்துத் துகள் செய்த மிகுந்த தைரியமுடையவரே!

இன்பரச சக்தியாகிய வள்ளி பிராட்டியாரைத் திருமணம் புரிந்து உயிர்களுக்கு இன்பத்தை அருளவேண்டுமென்று கருணைகொண்டு, தினைவனத்திற்குச் சென்ற குமாரக் கடவுள் வள்ளி பிராட்டியார் இசையாமையால் யானை வடிவங்கொண்டு சென்று, குறவர் குடியில் தோன்றிய வள்ளி நாயகியாருடன் இளம்பூரணர் ஆகிய இளையபிள்ளையாருடன் திருமணம் புணர்த்தி திருவருள் பாலித்த பெருமையில் சிறந்தவரே! என்று துதி செய்தால் (துன்பத்தை விளைவிப்பதாகிய) வினைகள் அனைத்தும் விரைவில் விலகும். (ஆதலால்) ஊமத்த மலரையும், பிறைச் சந்திரனையும் சடாமகுடத்தில் கருணைகொண்டு தரித்துள்ள, பாவங்களை அழிப்பவராகிய சிவபெருமானது திருக்குமாரரும், மல்யுத்தம் புரிகின்ற திரண்ட தோள்களை உடையவரும், மதங்களைப் பொழிகின்ற யானை முகத்தை உடையவருமாகிய விநாயக மூர்த்தியை, மத்தளம் போன்ற அழகிய திருவுதரத்தை உடையவரை, உத்தமியாகிய உமாதேவியாரது அருட்புதல்வரை தேன் துளிக்கும் புதுமலர்களால் அர்ச்சித்து (வினைகள் விலகும் பொருட்டு அன்புடன்) வணங்குவேன்.

அபிராமி பட்டரின் *அபிராமி அந்தாதி*

தாரமர் கொன்றையும் சண்பக
மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்த

னேஉல(கு) ஏழும்பெற்ற

சீரபி ராமி அந் தாதிஎப்

போதும்என் சிந்தையுள்ளே

காரமர் மேனிக் கணபதி

யேநிற்கக் கட்டுரையே.

மாலையாகப் பொருந்திய கொன்றையையும் சண்பகமலர் மாலையையும் முறையே அணிந்தருளுகின்ற தில்லையெம்பெருமானுக்கும், அப்பெருமான் வாமபாகத்தில் உறைகின்ற உமாதேவியாருக்கும் திருக்குமரனே, கரிய நிறம் பொருந்திய திருமேனியையுடைய கணபதியே, ஏழு உலகங்களையும் பெற்ற சிறப்புடைய அபிராமியம்மையைப் பற்றிய அந்தாதியென்னும் இப்பிரபந்தமானது எப்போதும் என் உள்ளத்துக்குள்ளே நிலைபெறும்படி திருவாய்மொழிந் தருளுவாயாக.

இராமலிங்க அடிகளின் *திருவருட்பா*

முன்னவனே யானைமுகத்தவனே, முத்தி நலம்

சொன்னவனே, தூய்மைச் சுகத்தவனே மன்னவனே

சிற்பரனே, ஐங்கரனே, செஞ்சடையஞ் சேகரனே

தற்பரனே நின்தாள் சரண்.

எல்லாத் தேவர்களுக்கும் முன்வைத்துப் பேசப்படுபவனே, யானையின் முகத்தையுடையவனே, முத்தியின் நலங்களைச் சொன்னவனே, தூய மெய்யான சுகத்தையுடையவனே, மன்னவனே, அறிவால் மேம்பட்டு இருப்பவனே, ஐந்து கைகளையுடையவனே, சிவந்த சடைமுடியை உடையவனே, தன் மயமாக உள்ளவனே, உன் திருவடி எங்கட்கு காப்பிடமாகும்.

சேந்தனாரின் *திருப்பல்லாண்டு*

குழல்ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி

எங்கும் குழாம் பெருகி

விழல்ஒலி விண்ணளவும் சென்று விம்மி

மிகு திருவாரூரின்

மழவிடையார்க்கு வழிவழி ஆளாய்

மனஞ்செய் குடிப்பிறந்த

பழவடியாரொடுங் கூடி எம்மானுக்கே

பல்லாண்டு கூறுதுமே.

வேய்ங்குழல் இசை, யாழின் இசை, கூத்தாடுதலின் ஓசை, துதித்தலின் ஓசை என்பன கூட்டமாகப்பெருகித் திருவிழா நாளில் நிகழ்த்தப்படும் ஓசையோடுகூடி

வானத்தளவும் சென்று பெருகி மிகுகின்ற திருவாரூரில் இளைய காளையை வாகனமாக உடைய சிவபெருமானுக்குப் பரம்பரை பரம்பரையாக அடிமையாய் அத்தகைய குடும்பங்களுக்குள்ளேயே திருமணம் செய்துகொள்கின்ற அடியவர் குடும்பங்களில் பிறந்த பழ அடியாரோடும் கூடி எம் பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

சேக்கிழாரின் *பெரியபுராணம்*

ஐந்து பேரறிவுங் கண்களே
கொள்ள வளப்பருங் கரணங்கணாற்கும்
சிந்தையேயாக குணமொரு மூன்றுந்
திருந்து சாத்து விகமேயாக
இந்து வாழ் சடையானாடு மாணந்த வெல்லையில்
தனிப் பெருங்கூத்தின் வந்து பேரின்ப
வெள்ளத்துள் திளைத்து மாறிலாமகிழ்ச்சியில்
மலர்ந்தார்.


ஐந்து புலன்களும் கண்களாக செயல்பட, நான்கு அந்தகரணங்கக‌ளும் சித்தமாக செயல்பட, முக்குணங்களில் சத்துவ குணம் மேலோங்கி இருக்க, சந்திரன் வாழும் சடையினை உடைய சிவபெருமான் அளவும் ஒப்பும் அற்றதாகிய பெருநடனத்தினால் தம்மிடம் நிகழ்ந்த பேரின்பக் கடலிலே மூழ்கி, மாற்றம் இல்லாத மகிழ்ச்சியுடன் இறைப்பணியில் நீங்காமல் நிலைத்து இருந்தார்.


கச்சியப்பர் சிவாச்சாரியாரின் மங்கள சுலோகம்

வான் முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க, குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

மழை எப்போதும் குறைவில்லாமல் பெய்ய வேண்டும். எல்லா வளங்களும் செழிப்பாக இருக்கவேண்டும். மன்னன் முறையாக அரசாட்சி செய்யவேண்டும். உயிர்கள் எல்லாம் குறை இன்றி வாழ வேண்டும். வேதங்களில் சொல்லப் பட்ட அறங்கள் ஓங்க வேண்டும். தவ வேள்விகள் நிகழ வேண்டும். மேன்மையான சைவ நீதி உலகம் எல்லாம் விளங்க வேண்டும்.





CHAPTER NINETEEN
Singing to Ganesha
Madagascar from space, Ricky Arnold, NASA



விநாயகர் பஜனை

கணேஷ பஜனம்

गणेशभजनम्



சிலசமயங்களில் நமக்கு இறைவனின் மீது அளவுகடந்த அன்பு ஏற்படுகிறது. சிலசமயங்களில் நமது இதயத்தில் பக்தி நிரம்பி வழியும் அளவிற்கு, விநாயகரின் அருள் நமக்குள் உற்சாகம் மற்றும் மகிழ்ச்சியை நிரப்புகிறது. நமது பக்தி நாம் பேசும் பேச்சை பாடலாக மாற்றுகிறது. இது தெய்வீக அன்பு மற்றும் பேரானந்தத்தின் பரிசாக வரும் போது, அது இறைவனுக்கே மீண்டும் வழங்கப்படுகிறது. நாம் உற்சாகமின்றி மனதில் கவனச்சிதறல்களுடன் இருக்கும் மற்ற சமயங்களில், விநாயகரிடம் இருந்து தொலைவில் தனித்து இருப்பதாக உணர்கிறோம். அத்தகைய சமயங்களில் நீங்கள் மீண்டும் விநாயகருடன் தொடர்பு கொள்ளும் அளவிற்கு உங்கள் உற்சாகத்தை மேம்படுத்த, பக்தி பாடல்களைப் பாடுவது ஒரு எளிய மற்றும் உறுதியான வழியாக விளங்குகிறது. அல்லது நமது மதத்தை மகிழ்ச்சியுடன் ஆதரித்து, நம்மை வழிநடத்தும் தெய்வங்களை போற்றிப் பாடும் சத்சங்கத்தில் சேரவிரும்பும் மற்ற இந்துக்களுடன் நாம் ஒன்று சேர்ந்து பக்திப் பாடல்களை பாடலாம். இந்த வழிபாடு இந்து மதத்தில் *பஜனை* அல்லது *கீர்த்தனை* என்று அழைக்கப்படுகிறது. இந்த பழங்கால பாரம்பரியம் எளிமையான முறையில் இறைவனின் திருநாமங்களை இராகத்துடன் தொடர்ந்து பாடுவது முதல் தலைசிறந்த பக்தர்கள் இயற்றிய உற்சாகமூட்டும் பாடல்கள் அல்லது கவிதைகளை பாடுவது என்று பல வடிவங்களை கொண்டுள்ளது. ஒரு சிறிய வேறுபாடும் பிழை என்று கருதப்படும் மேற்கத்திய பாரம்பரிய இசையைப் போன்று இல்லாமல், இந்து சமயத்தின் சாஸ்த்திரீய சங்கீதம் எப்போதும் கடினமாக இருந்தது இல்லை. இந்து சமய சங்கீதங்கள் ஒரு கிராமத்திற்கு கிராமம், பாடகருக்கு பாடகர், சத்சங்கத்திற்கு சத்சங்கம் மாறுபடுகிறது. இந்து சமயம் மற்றும் அதன் சாஸ்த்ரீய சங்கீதத்தின் மையமாக எல்லையற்ற வேற்றுமை, சகிப்புத்தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மை விளங்குகின்றன. வலுவான பக்தி மட்டும் நிலையாக இருக்கிறது. காலநேரம் மற்றும் சுருதி பற்றிய சிறப்பு குறிப்புக்கள் எதுவும் இருப்பதில்லை. நீங்கள் உண்மையான உணர்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வுடன் பாடினால், நீங்கள் பாடும் பாடலே உன்னத நிலையில் இருக்கக்கூடும். எல்லாம் ஒன்று சேர பாடவேண்டிய இந்த சில பாடல்களை வழங்கும் முன்னர், அக்டோபர் 16, 1978 அன்று ஹவாயில்

இருக்கும் கவாய் ஆதீனத்தில் *பஜனை* பற்றி நான் வழங்கிய உரையின் தொகுப்பை இங்கே காணலாம்.

மகாதேவர்களைப் பற்றி பாடுதல்: இந்து சமய வாழ்த்துப்பாடல்கள்



இந்து சமயம் இறைவனை திட்டவட்டமாக ஆன்மீகத் தொடர்போடு அணுகுகிறது. இறைவனால் படைக்கப்படும் ஒவ்வொரு ஆன்மாவும் இறுதியில் அந்த இறைவனையே சென்றடையும் என்று அது நம்பிக்கையுடன் அறிவிக்கிறது. அது தனது விரிவான கலாச்சார மற்றும் சாத்திர பாரம்பரியம் மூலம், பாதையை பின்பற்றி உன்னத குறிக்கோளான ஆத்ம ஞானத்தை அடைவதற்கு அறிவுசார் நுணுக்கங்கள் மற்றும் யதார்த்தமான வழிமுறைகளை வழங்குகிறது. அதிகாலை வழிபாட்டில் தனியாக பாடப்பட்டும் அல்லது சத்சங்கத்தில் நடைபெறும் கூட்டு வழிபாட்டின் மூலம் அதன் ஒவ்வொரு உறுப்பினரின் உள்ளத்திலும் தெய்வத்துடன் ஒரு உயரிய தொடர்பை ஏற்படுத்தும் புனிதமான பாடல்களின் வளமான மற்றும் பல்வேறு வகையான தொகுப்பு, இந்துக்கள் அனைவரும் பெற்ற மரபுரிமை செல்வமாக விளங்குகிறது. இந்துக்கள் சுலோகங்கள் சொல்லியும் பாடல்கள் பாடியும் தங்கள் பக்தியை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துகிறார்கள். ஜப யோக *சாதனையின்* மூலம், தெய்வங்களின் திருநாமங்கள் மற்றும் வேத மந்திரங்கள், மௌனமாகவும் சத்தமாகவும் தொடர்ந்து பாராயணம் செய்யப்படுகிறது. கோயிலுக்கு வரும் யாத்திரிகள் பழங்கால தெய்வீக கலைகளில் சிறந்து விளங்கும் திறமையான இசைக்கலைஞர்கள் மற்றும் பாடகர்கள் பாடுவதை கேட்க வெளியிருக்கும் பிராகாரங்களில் ஒன்று கூடுகிறார்கள். அந்த கலைகளில் பயன்படுத்தப்படும் பாடல்வரிகளின் அழகு மற்றும் நுணுக்கங்கள், கேட்போரின் மனதை லௌகீகத்தில் இருந்து இறைவனை நோக்கி அழைத்து செல்லும் வலிமை பெற்று இருக்கின்றன. வரலாறு மற்றும் உவமைகள் நிரம்பிய சமயம் சார்ந்த புராணக் கதைகளில் இருக்கும் நாடக வடிவிலான பாடல்கள் மூலம், அவை மிகப்பெரிய சத்சங்கங்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. உலகெங்கும் பக்தர்கள் சிறிய அல்லது பெரிய குழுக்களாக ஒன்று கூடி பாடல்களை பாடுகிறார்கள். அவர்கள் வழக்கமாக ஹார்மோனிய பெட்டிகள், மிருதங்கங்கள், தம்புராக்கள் மற்றும் ஜால்ராக்கள் துணையுடன், ஒருவர் பின் ஒருவராக தலைமைத் தாங்கி, இறைவனுக்கு தங்களது துதிப்பாடல்களை பாடுகிறார்கள். இது *பஜனை* என்று அழைக்கப்பட்டு, இந்து பக்தி பாடல்களில் மிகவும் பிரபலமான வழக்கமாக விளங்குகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளாக இந்துக்கள் ஒன்றாக கூட்டம் நடத்தி, மகாதேவர்கள் மீது பெருக்கெடுத்து வரும் தங்களின் அன்பை மணிக்கணக்கில் பகிர்ந்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களின் பாடல்கள் கோயில் கூடங்கள், கிராமத்து மண்டபங்கள் மற்றும் தனியார் வீட்டு முற்றங்களை நிரப்பியுள்ளன. ஆனால் அவை பெரும்பாலும், அவற்றில் முழு மனதோடு பங்குபெற்றவர்களின் உள்ளங்களை நிரப்பி அவர்களுக்கு உற்சாகத்தை வழங்கியுள்ளன. நாம் பக்தி முற்றிய நிலையில் வெளியுலக பெயர் மற்றும் வடிவத்தால் அமைதி குலையாமல் உயர்ந்த பக்தி உணர்வில் உறுதியாக இருப்பதால், அந்நிலையில் இறைவனின் திருநாமங்களை தனியாக பாடுகிறோமா அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து பாடுகிறோமா என்பதற்கு நாம் அதிக முக்கியத்துவம் அளிப்பது இல்லை. இதுவரை சிலர் மட்டுமே முழுமையான பக்தியின் அமைதியான உச்சங்களை அடைந்து இருக்கிறார்கள் மற்றும் அதில் வெகு சிலர் மட்டுமே அந்த நிலைகளை அடைந்த பிறகு, அவற்றை தக்க வைத்துக்கொள்ள போதுமான மனஉறுதியுடன் இருக்கிறார்கள். உறுதியளிக்கும் ஆதரவை வழங்கி, வாழ்க்கையில் ஆன்மீக இலக்குகளையும் பகிர்ந்து கொள்ளும் மற்றவர்களின் துணையால் தனிப்பட்ட சாதகரின் முயற்சிகள் மேம்படுவதோடு, அவர் சனாதன தர்மத்தில் உறுதியாக நிலைத்து இருக்க துணை புரிகிறது. இந்த சத்சங்கங்கள் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அல்லது வாரமும் நடைபெறும் போது, அது பங்குபெறுபவர்களின் வாழ்க்கைகளில் ஒரு ஆன்மீக தூண்டுதல் மற்றும் எல்லோரும் வழங்கி மற்றும் பயன்படுத்திக்கொள்ள ஒரு பொதுவான சக்தியையும் உருவாக்குகிறது.

மூன்று லோகங்களும் இணைந்து செயல்படுதல்


இந்து சமய வாழ்க்கையில் *பஜனை* ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. இலங்கையின் கொழும்புத்துறையில் வாழ்ந்த எனது *சத்குரு* யோகசுவாமி பாடல்களை பாடுவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்தார். “பாடுங்கள், பாடுங்கள், பாடுங்கள். நாம் எல்லோரும் காலை, மதியம் மற்றும் மாலையில் அகமகிழ்ச்சியுடன் சிவபெருமானின் திருநாமத்தை புகழ்ந்து பாடுவோம். உங்களுக்கு நற்பண்பு, செல்வம், இன்பம் மற்றும் முக்தியை வழங்கும் இறைவனை எப்போதும் போற்றிப் பாடி, அவரை நினைத்து தியானம் செய்யுங்கள்,” என்று அவர் அறிவுறுத்துவார்.

நாம் இறைவனை போற்றிப் பாடும் போது, மக்களின் நன்மதிப்பைப் பெற்ற பக்தர்கள் குழுவில் நாமும் சேர்கிறோம். பக்தர்கள் எங்கே கூடினாலும் அந்த இடத்தில் இந்துக்கள் தங்கள் கோயில்கள், பூஜை அறைகளில் போற்றிப்பாடும் இறைவன், மகாதேவர்கள் மற்றும் பெருந்திரளான தேவர்களும் அந்த பக்தர்களை சுற்றி கூடுகிறார்கள். ஒவ்வொரு இந்துவிற்கும் தனிப்பட்ட முறையில் காவல் தேவதைகள் இருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் விலகி செல்லாமல், தொடந்து அருகிலேயே தங்கி ஒரு அந்தர்லோக உணர்வில் இருந்து, இரண்டாம் லோகத்தில் இருந்து அல்லது சூட்சும லோகத்தில் இருந்து உதவி

செய்ய தயாராக இருக்கிறார்கள். இந்த காவல் தேவதைகள் இந்துக்கள் பிறந்ததில் இருந்து அல்லது அவர்களின் முற்பிறவியில் இருந்து அல்லது தலைசிறந்த இந்து மதத்தில் முறையாக நுழைந்ததில் இருந்து, அவர்கள் வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு சடங்கு அல்லது விழாவிலும் பங்குபெற்று துணையாக இருக்கிறார்கள். இரண்டு அல்லது அதிகமான இந்துக்கள் ஒன்று கூடும் போது, அவர்கள் இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளில் செய்த தனிப்பட்ட *சாதனைகளை* பொருத்து, அவர்களின் தனிப்பட்ட தேவதைகளும் அந்த கூட்டத்தில் சேர்கின்றனர்.

உண்மையான பக்தர்கள் சந்திக்கும் போது, அதே அறையில் தூல கண்களுக்கு தெரியாவிட்டாலும், அகப்பார்வைக்கு முழுமையாக தென்பட்டு, அந்த அறையில் வியாபித்து இருக்கும் புனிதமான உணர்வு மூலமாக புலப்படும் அந்தர்லோக தேவர்களும் அங்கே ஒன்று கூடுகிறார்கள். இந்து சமய பாடல்கள் தொடங்கியதும், மொத்த பக்தியின் வலிமைக்கு ஏற்ப மற்ற இரண்டாம் லோக தேவதூதர்கள் ஈர்க்கப்படுகிறார்கள். இந்த தேவதூதர்கள் எல்லோரும் அந்தர்லோகங்களில் இருந்து பூலோக பஜனையுடன் இணைந்து ஒன்றாக பாடுகிறார்கள். அத்துடன் அவர்கள் பூலோகத்தில் நடைபெறும் அந்த *பஜனையில்* பங்குபெறுவதற்கு மேலும் பல அந்தர்லோக சக்திகளுக்கு அழைப்பு விடுக்கிறார்கள்.

நோக்கத்தின் நேர்மை



நாம் *பஜனையில்* பாடும் போது, நமது குரலில் ஏற்படும் ஒலிவேறுபாடுகளை இரண்டாம் லோகத்தில் இருக்கும் தேவர்கள் மற்றும் மூன்றாம் லோகத்தில் இருக்கும் மகாதேவர்களும் கேட்கிறார்கள் என்பதையும் அவர்கள் நமது பக்தியின் ஆழத்தை அறிந்து இருக்கிறார்கள் என்பதையும் நாம் உணர வேண்டும். நமக்கு அவர்கள் மீது முழுமையான விழிப்புணர்வு கிடைக்காமல் இருந்தாலும், அவர்கள் நம்மைப் பற்றி முழுமையாக அறிந்து இருக்கிறார்கள். அவர்கள் நாம் பாடும் பாடல்வரிகளின் பொருளை அறிந்து, அதற்கு உரிய மதிப்பு அளிக்கிறார்கள். அதனால் பாடல்கள் சமஸ்கிருத மொழியில் இருந்தாலும், அதில் வரும் சொற்களின் பொருளை ஒவ்வொருவரும் நன்றாக அறிந்துகொள்வது மிகவும் முக்கியமாகிறது. அதன் பொருள், குரலின் ஓசைகள், பொருளைப் பற்றிய சிந்தனை, சிந்தனையில் இருக்கும் உணர்ச்சி ஆகிய அனைத்தும் *பஜனைக்கு* சக்தியை வழங்கி, அன்பு மற்றும் பக்தியால் வெளிப்படும் ஒலிகளுக்கு அழகை சேர்த்து அந்த பொருள், சிந்தனை, உணர்ச்சி மற்றும் ஒலியை இந்த பேரண்டத்தில் இருந்து தேவலோகத்தின்

நுண்ணுலகத்திற்கும், அதில் இருந்து மகாதேவர்கள் வாசம் செய்யும் மிகப்பெரிய பேரண்டத்திற்கும் அழைத்து செல்கிறது. வலுவான குரலோசைகள் ஆழமாக ஊடுருவி, நுண்ணுலகத்திற்குள் புகுந்து பிறகு அந்தர்லோகங்கள் என்று நாம் அறியும் மிகப்பெரிய பேரண்டத்திற்குள் நுழைகிறது. அத்துடன் மன ஒருமுகப்பாடு, பொருளில் கவனம் மற்றும் நேர்மையான உள் உணர்வு ஆகியவை ஆன்மீக ஆழங்களுக்குள் ஊடுருவும் வலிமையை பாடல்களுக்கு வழங்குகின்றன. அவை இல்லையென்றால் அந்த *பஜனை* சிறிது கூடுதல் இனிமையுடன், மற்ற சாதாரண பாடல்களைப் போன்று விளங்குகிறது.

பிரார்த்தனை மற்றும் நன்றியை தெரிவிக்கும் பாடல்கள்

பெரும்பாலான இந்து சமயப்பாடல்கள் தெய்வத்தை மகிழ்ச்சியுடன் போற்றிப் பாடுவதாக அமைந்துள்ளன. அவை உள்பொருளின் சூட்சும அந்தர்லோகங்கள் இருப்பதை நினைவூட்டும் விதமாகவும், நாம் அவர்களை நினைவில் வைத்து இருக்கவேண்டும் என்பதற்கும், அவர்களின் அருமைகள் மற்றும் உண்மைகளுடன் நன்றாக பொருந்தி இருப்பதற்கும், மகாதேவர்கள் மற்றும் அவர்கள் வழங்க உரிமையுள்ள சில பலன்களை ஆவாகனம் செய்யும் ஒரு பிரார்த்தனையாகவும் இருக்கக்கூடும். நமது மகாதேவர்கள் நமது வாழ்வில் வழங்கிய அல்லது தற்போது வழங்கியுள்ள நன்மைகள் அனைத்திற்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக நமது சமய பாடல்கள் அமைந்துள்ளன. நாம் நமது உள்ளத்தில் நன்றியுணர்வுடன் திருப்தியாகவும் நமது தர்மத்தின் மீது அதிருப்தி இல்லாமலும் இருந்து, இந்த பிறவியில் நமது கர்மவினையை எதிர்த்து போராடாமல் அதை நமது சமயத்துடன் பொருத்தி நிறைவேற்றும் போது நாம் அத்தகைய நன்றி தெரிவிக்கும் வலிமையை பெறுகிறோம். சமஸ்கிருத பாடல்வரிகளை தெளிவாக உச்சரிக்கும் போது மனம், உணர்ச்சிகள் மற்றும் சிந்தனையை ஒன்றாக செயல்படுத்தி சிரத்தையுடன் நன்றியை தெரிவிக்கவேண்டும் அல்லது உண்மையான வேண்டுகோள்களை விடுக்கவேண்டும். பாடல் மூலமாக தன்னிடம் ஒன்றை பிரார்த்தனை செய்துக்கொண்டு, முற்றிலும் தொடர்பில்லாமல் இன்னொன்றை நினைக்கும் அல்லது சிந்தனையின்றி அர்த்தமற்ற அட்சரங்களை உச்சரிக்கும் பக்தனைப் பற்றி அந்த இறைவன் என்ன நினைப்பார்? அந்த பக்தன் தான் செய்யும் பிரார்த்தனையின் பொருளை அறியாமல், உள்ளத்தில் சிரத்தையின்றி மேலோட்டமாக செயல்படுவதாக கருதப்படுவார். அத்தகைய மனநிலைகளை மகாதேவர்களால் அறியமுடியாது என்று கருதுவது நியாயமாக இருக்காது. அவர்கள் *பஜனையின்* போது அந்த பக்தனை காட்டிலும், அவன் உள்ளத்து உணர்ச்சிகள் மற்றும் சிந்தனைகளை முழுமையாக அறிந்து இருக்கிறார்கள்.

ஒரு பக்தன் *சத்சங்கம்* அல்லது *பஜனைக்கு* வரும் முன்பாக குளித்து விட்டு வருகிறான். தங்களது நுண்ணுலகத்தில் இருந்து இந்த பேரண்டத்தை பார்க்கும் சக்தி மற்றும் பேரறிவுடன் இருக்கும் உயிர்சக்திகள் முன்பாக, தான் ஒரு அரங்கத்தில் அமர்ந்து பாடிக்கொண்டு இருக்கிறோம் என்ற உணர்வுடன் ஒரு பக்தன் தன்னை மனம் மற்றும் உணர்ச்சிப்பூர்வமாக தயார் செய்துகொள்கிறான்.

இந்த தெய்வங்களை ஆன்மீக வேட்கையில் ஒருமுகப்பட்டு இருக்கும் சிரத்தையுள்ள இதயம் மற்றும் மனதுடன் முறையாகவும் நேர்மையாகவும் ஆவாகனம் செய்தால், அவர்கள் நிச்சயம் வருகை தருவார்கள். சூட்சும அல்லது விஞ்ஞானமய கோசத்தின் உலகமான இரண்டாவது லோகத்தில் இருக்கும் தேவர்களுக்கு பூலோக ஆன்மாக்கள் பக்குவம் அடைய துணை புரிவதும், அதன் மூலம் தாங்கள் மேலும் பக்குவம் அடைந்துக் கொள்வதும் அவர்களின் பொறுப்பு, அவர்களின் நிறைவேற்றம் மற்றும் தர்மமாக அவர்களின் உணர்வு லோகத்தில் இருப்பதால், அந்த தேவர்களும் வருகை தருவார்கள். அவர்கள் பூலோகத்துடன் இணைந்து செயல்பட்டு, அதை மூன்றாவது லோகத்திருக்கு வழிநடத்தி செல்லும் ஆன்மீக உதவியாளர்களாக இருக்கிறார்கள். இந்து பக்தர்கள் ஒன்று சேரும் போது, அனைத்து லோகங்களும் இணைந்து செயல்படுகின்றன. கீழ்நிலை சூட்சும லோகத்தில் இருக்கும் சூட்சும சக்திகள் உயர்நிலை இரண்டாம் லோகத்தில் இருக்கும் அதிகம் முதிர்ச்சி பெற்ற சக்திகளை தொடர்பு கொள்கிறார்கள். அதிகம் முதிர்ச்சி பெற்ற சக்திகள் தனிநபர்களுடன் செயல்பட்டு மூன்றாவது லோகத்தை ஆவாகனம் செய்யும் திறமையை பெற்று இருக்கிறார்கள். தனிப்பட்ட தெய்வம் இவ்வாறு அடையப்படுகிறது மற்றும் உள்ளத்தில் இருந்து இறையருள் பொங்கி வருகிறது.



வரலாறு முழுவதும் நிரம்பியிருக்கும் எண்ணற்ற சாதகர்கள் மற்றும் முனிவர்களின் நரம்பு மண்டலங்களில் அதிர்ந்துள்ள இந்த புனிதமான பாடல்களை நாம் பஜனை செய்யும் போது சிரத்தையுடன் இருப்பது மிகவும் முக்கியம் ஆகும். சிரத்தை இல்லாமல் அல்லது கவனமில்லாமல், சொல்வது ஒன்றும் நினைப்பது ஒன்றுமாக, அல்லது சொல்வதும் சிந்திப்பதும் ஒன்றாக இருந்து இன்னொன்றை உணர்பவராக நாம் தென்பட விரும்புவதில்லை. நாம் பாடும் துதிப்பாடல்கள் வாயிலாக மகாதேவர்கள் முன்பாக தென்படும் போது அல்லது கோயில் பிராகாரங்களில் அவர்கள் முன்பாக தென்படும் போது, நாம் மனதில் அதிக பக்தி மற்றும் வலுவான மனநிலையுடன் இருக்க விரும்புகிறோம். அன்றாட விவகாரங்கள் மற்றும் அன்றாட உணர்ச்சிகள் மற்றும் சிந்தனைகளை தற்காலிகமாக கைவிடவேண்டும். அதற்காக நீங்கள் பாசாங்கு செய்யவேண்டிய அவசியமும் இல்லை. நீங்கள் கோயிலுக்கு வரும் போது சோகமாக இருந்தால், அவர்கள் உங்கள் சோகத்தை பார்க்கவேண்டும். நீங்கள் உங்கள் சோகத்தை

அவர்களிடம் இருந்து மறைக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் உங்களை சோகமாக பார்த்தால், அதை நீக்க முயற்சி செய்வார்கள். மகாதேவர்கள் தங்களது நுண்ணுலகத்தில் இருந்து இந்த பேரண்டத்தில் வசிக்கும் உங்களை, தங்களுக்கு சாதகமான சூழலில் இருந்து காண இருக்கிறார்கள்.

பஜனையின் அர்த்தம் மற்றும் உணர்ச்சியின் ஆழம்

சமஸ்கிருத மொழி தெரியாதவர்கள், *பஜனையின்* போது சமஸ்கிருத மொழில் என்ன பாடுகிறோம் என்பதை ஆங்கிலத்தில் அல்லது அவர்களுக்கு தெரிந்த ஒரு மொழியில் புரிந்துகொள்ள சிறப்பு முயற்சி எடுக்கவேண்டும். நாம் "கணேஷா சரணம்" என்று பாடும் போது, "கணேஷா, நான் உனது *தரிசனத்தில்* சரண் அடைகிறேன்," என்று குறிப்பிடுவதை நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். அதன் பொருளை அறிந்துக்கொள்வது மட்டும் போதாது. நீங்கள் விநாயகரின் மூர்த்தி அல்லது வடிவத்தை கற்பனை செய்துக்கொண்டு, அவரது சன்னிதானத்தில் இருக்கிறோம் என்ற வலுவான உணர்வில் சரணடைய வேண்டும். நீங்கள் மகாதேவர்களை பற்றிப் பாடும் போது, ஒரு பக்தி மனநிலைக்கு எழுச்சி பெறவேண்டும் என்றால், நீங்கள் உயர்நிலை உணர்ச்சி லோகங்கள் மீதும் விழிப்புணர்வை பெற்று இருக்கவேண்டும். அந்த மனநிலையே உங்களை விநாயகரின் பாதுகாப்பு கவசத்தில் அழைத்து சென்று, விநாயகரின் அன்பு மற்றும் இரக்கம் நிறைந்த இருப்பின் மீது விழிப்புணர்வை ஏற்படுத்தும். நீங்கள் அத்தகைய உண்மையான உணர்வுகளுடன் மகாதேவர்களைப் பற்றி பாடும் போது, பஜனையின் மத்தியில் இருக்கும் போதே அந்த பாடல் உன்னத நிலையை அடைந்து இருக்கும். அதனால் உங்கள் பாடல் உங்களுக்கும் உங்களை சார்ந்து இருப்பவர்களுக்கு மட்டும் பயன் தராமல், மிகவும் முக்கியமாக மனித நேயம் முழுவதற்கும் பயன் தருவதாக இருக்கும்.

நீங்கள் இராகத்துடன் நன்றாக பாடுவதாகவும் அருகில் இருப்பவர் சரியாக பாடவில்லை என்ற மனக்குறையுடன், ஒலிகளை மட்டுமே ரசித்துக்கொண்டு நீங்கள் *கணேஷா சரணம், சரணம் கணேஷா* என்று மிகவும் நேர்த்தியாக பாடிக்கொண்டு இருப்பீர்கள். அல்லது நீங்கள் பாடிக்கொண்டு, அன்றைய தினம் நடந்த பிரச்சனை அல்லது வரவிருக்கும் நாட்களில் நடக்கயிருக்கும் நிகழ்வைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கலாம்.

அத்தகைய அணுகுமுறையுடன் *பஜனையில்* ஈடுபட்டால், சிறந்த பலன்கள் கிடைக்காது. அதைப்போல பிற்காலத்தில் தியானக் கலையில் தீட்சை பெறுவதற்கான நேரம் வரும் பொழுது, மனம் எந்த நோக்கமும் இல்லாமல் அலைந்து திரிந்து, கடந்தகாலத்தைப் பற்றி குழம்பி எதிர்காலத்தைப் பற்றிய கற்பனையில் இருந்தால், தியானத்தில் முழு ஈடுபாடு கிடைக்காது. ஒரு *சாதனையாக* விளங்கும் *பஜனையிலும்* முன்னேற்பாடு, கவனம் மற்றும் ஒருமுகச்சிந்தனை தேவைப்படும். அது பங்குபெறுபவர்களை மகிழ்விக்க நடைபெறும் ஒரு வெளியுலக நிகழ்ச்சி இல்லை. அது அந்தர்லோக

மகாதேவர்களை ஆவாகனம் செய்து, சாட்சியை ஆழமாக உள்ளிழுக்கும் ஒரு உட்புற நிகழ்ச்சி ஆகும். நீங்கள் பாடும் பாடலை ஒரு பக்தி *சாதனையாக* கருத்தில் கொண்டு அணுகுங்கள். அது உங்களுக்குள் இருக்கும் ஆழ்உணர்வுப் பகுதியுடன் மற்றும் மகாதேவர்களுடன் தொடர்புகொள்ளும் நேரமாக இருக்கட்டும். அந்த பாடல்களை படியுங்கள். அதன் கருத்துக்களை நினைவில் வைத்து இருங்கள். அதன் மூலம் உங்கள் குரல் தூல அறையில் ஒலிக்கும் சமயத்தில், உங்கள் சாட்சி உட்புற பரிமாணங்களில் ஊடுருவி செல்லும்.

தூல உடலுடன் *பஜனையில்* அமர்ந்து இருந்தாலும் அலைபாயும் மனதுடன் இருக்கும் ஒரு சாதகனை, மகாதேவர்கள் எவ்வாறு கண்டுக்கொள்கிறார்கள் என்பதை உங்களது சொந்த லௌகீக அனுபவத்தின் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். உங்களிடம் சொல்ல வந்ததை தவிர்த்து வேறு விஷயங்களை பேசும் மக்களை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். உங்களிடம் வந்து பேசிய மக்கள் தங்கள் உரையாடல் மீது கவனம் செலுத்தாமல், மனதில் வேறொன்றை நினைத்துக்கொண்டு இருப்பதை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். தாங்கள் வேறொரு இடத்தில் வேறொரு செயலை செய்தால் நன்றாக இருந்திருக்கும் என்று அரைகுறை மனதுடன் செயல்படும் மக்களுக்கு கிடைக்கும் பலன்களை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். இத்தகைய அணுகுமுறை மூலம் வெளிப்படையான தூல லோகத்திலும் எந்த மதிப்புமிக்க பலனும் நிரந்தரமாக எப்போதும் அடையப்பட்டது இல்லை. அப்படியென்றால் சூட்சுமமான லோகங்கள், உணர்வின் ஆழ்நிலைகளை அணுகும் போது, தெளிந்த மனத்துடன் செயல்படவேண்டியது மேலும் முக்கியத்துவம் பெறுகிறது அல்லவா?

ஒரு குழு தனிநபருக்கு உதவி செய்கிறது

தினமும் மகாதேவர்களைப் பற்றி தொடர்ந்து பாடி வரும் ஒரு குழு, தேவர்களுக்கு நல்ல வலிமையையும் ஒரு பாதையையும் வழங்குகின்றன. அதன் மூலம் அந்த தேவர்கள் அந்த சமூகம் மற்றும் உலகெங்கும் இருக்கும் மற்ற இந்துக்களை சென்றடைந்து உதவி செய்ய முடிகிறது. பெரும்பாலும் தங்கள் சமயத்தில் ஈடுபாடில்லாத இந்துக்களுக்கு வழிநடத்தும் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கும் அந்தர்லோக உதவியாளர்கள் ஒரு நூறு மைல் தூர விட்டத்திற்குள் நடைபெறும் பஜனைக்கு சூட்சும லோகத்தில் வந்து தங்களுக்கு புத்துயிர் வழங்கிக்கொள்கிறார்கள். அந்தர்லோக உதவியாளர்களையும் புத்துயிர் வழங்கி ஊக்கப்படுத்த முடியும்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடர்ந்து நடைபெறும் ஒரு பெரிய *சத்சங்கம்* அல்லது *பஜனையானது* பல்லாயிரக்கணக்கில் இருக்கும் இந்த காவல் தேவதைகளுக்கு அழைப்பு விடுத்து, அவர்களுக்கு புத்துயிர் வழங்கி ஊக்கப்படுத்துகிறது. அதன் பிறகு தாங்கள் பாதுகாத்து வழிநடத்த வேண்டிய இந்துவிடம் அவர்கள் சென்று, அவருக்கு வளர்ச்சி மற்றும் ஊக்கத்தை வழங்குகிறார்கள். இதனால் அவர் குழப்பங்கள் நிறைந்த வெளிப்புற மனதின் திரையில் இருந்து விடுபட்டு, தனது மதத்தின் மீது அதிக கவனம்

செலுத்துவதற்கு வேண்டிய ஊக்கத்தை பெறக்கூடும். அவருக்கு கோயில் செல்லவேண்டும், மற்றவர்களுக்கு அதிக சுயநலமற்ற சேவையை செய்யவேண்டும் போன்ற ஆசைகள் தோன்றக்கூடும். அத்தகைய நிகழ்வுகள் இறைவனைப் பற்றி பாடுவதற்கு ஒன்றாக கூடியிருக்கும் ஒரு பக்தர்கள் குழு, தாங்கள் பாடுவதை உணர்ந்து இருப்பதாலும், தாங்கள் பாடும் சொற்களின் பொருள் மற்றும் அந்த பொருளில் இருக்கும் குறிப்புக்களை அறிந்து இருப்பதாலும் நிகழ்கின்றன. வழக்கமாக குழந்தைகளுக்கு பாடுவதில் விருப்பம் இருக்கும். பொதுவாக எல்லா வயதுக்குழந்தைகளும் ரசிக்கும் *பஜனை*, உங்கள் மகன்கள் மற்றும் மகள்களை மதத்தில் முழுமையாக ஈடுபடுத்துவதற்கு மிகவும் சிறந்த வழிகளில் ஒன்றாக விளங்குகிறது. அவர்கள் அடிக்கடி குழுவாக நடைபெறும் *பஜனைகளில்* பங்குபெற வேண்டும். தினமும் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் பூஜை அறைகளில், குறைந்தபட்சம் சில நிமிடங்கள் ஒன்றாக சேர்ந்து பாடல்களை பாடுவது நல்லது.

நாம் குரல், சிந்தனை, உணர்ச்சி, அறிவு என்று அனைத்தையும் அதன் மூலத்திற்கு, இந்த தூல உலகில் பிறப்பதற்கு முன்பாக பத்து மாதங்கள் வாழ்ந்த அந்த நுண்ணுலகத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புகிறோம். நீங்கள் அந்த நுண்ணுலகத்தில் முழுமையான விழிப்புணர்வு, முழுமையான பக்குவத்துடன் அந்த லோகத்தில் இருந்தவர்களுக்கு உதவி செய்து உங்களது ஆன்மீக விதியை அனுபவித்துக் கொண்டு இருந்தீர்கள். அத்துடன் நீங்கள் இந்த நுண்ணுலகம் திரும்பிய போது, மேலும் உயர்ந்த பக்குவத்தை வழங்க இருக்கும் அடுத்த பிறவிக்காக காத்தும் இருந்தீர்கள். அதனால் இந்த நுண்ணுலகம் உங்களுக்கு பரிச்சயமான இடமாகத் தான் இருக்கிறது. நீங்கள் இந்த நுண்ணுலகத்தை விட்டு வெளியே வந்தீர்கள் மற்றும் இந்த பிறவியின் நோக்கம் பூர்த்தி அடைந்த பிறகு மீண்டும் அதற்கு திரும்புகிறீர்கள். இந்த பூமியில் இருக்கும் எந்த ஒரு கட்டமைப்பை காட்டிலும், அது உங்களது பிரதான வீடாகவே இருக்கிறது. அதனால் நீங்கள் இரண்டாம் உலகிற்கு அழைப்பு விடுக்கும் போது, நீங்கள் உங்கள் வீட்டைத் தான் தொடர்பு கொள்கிறீர்கள். இதை செய்வதில் எந்த கஷ்டமும் இல்லை. அதற்கு மாறாக நீங்கள் இங்கிருந்து கொண்டு, மகாதேவர்களைப் பற்றி ஒவ்வொரு இரவும் பாடுவது மிகவும் சுலபமாக இருக்கும். கீழ்நிலை சூட்சும லோகம் மற்றும் மேல்நிலை சூட்சும லோகத்தில், உங்களைப் போன்ற மனிதர்கள் உங்கள் பாடலை கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்து இருக்கவும். அவர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்து பாடுவதில் பங்குபெறுகிறார்கள். உங்களுக்கு உட்புற காது விழிப்புடன் இருந்தால், நீங்கள் பாடுவதை நிறுத்தும் போது, அவர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் ஒன்றாக பாடுவதை கேட்கமுடியும். இவ்வாறு நிகழ்ந்துள்ளது மற்றும் இந்த அந்தர்லோக பாடல்களை மக்கள் கேட்டும் இருக்கிறார்கள். பஜனைகள் தொடர்ந்து நடைபெறும் போது, அவை அந்தர்லோகங்களுக்குள் அதிக ஆழமாக ஊடுருவுகிறது. மதம் என்பது மூன்று

லோகங்கள் ஒன்றாக செயல்படுவதை குறிப்பதாக நாம் நம்புகிறோம். மேலும் நமது *பஜனையில்* இந்த ஒருங்கிணைந்த செயல்பாடு, அனைத்து உணர்வு லோகங்களிலும் ஒரு மகிழ்ச்சிகரமான சடங்காக கொண்டாடப்படுகிறது.

மற்ற பக்தர்களுடன் சத்சங்கம்

மற்ற பக்தர்களுடன் உருவாகும் கூட்டுறவு, உங்களைப் போன்ற நம்பிக்கையுடன் உங்களுக்கு வலிமை சேர்க்கும் உங்கள் சமயத்தவர்களின் கூட்டுறவு ஆகியவை *பஜனையில்* இருந்து பெறும் மிகப்பெரிய பலன்களாக விளங்குகின்றன. இது *சத்சங்கம்* என்று அழைக்கப்படுகிறது. *சத்சங்கம்* என்பது பெரும்பாலும் மெய்ப்பொருளை நாடும் இந்து சமய சாதகர்கள் சாத்திரம் படிப்பதற்கு அல்லது ஒரு சுவாமி அல்லது தங்களது *சத்குருவிடம்* இருந்து ஒரு *உபதேசம்* பெறுவதற்கு நடைபெறும் ஒரு பாரம்பரிய சந்திப்பை குறிக்கிறது. இந்து சமய நற்பண்புகளில் சிறந்து விளங்கும் ஆண்கள் மற்றும் பெண்கள், சிரத்தை மற்றும் நல் ஒழுக்கத்துடன் தொடர்ந்து முயற்சி செய்பவர்களின் சத்சங்கத்தை நாடவேண்டும். அத்தகைய *சத்சங்கம்* உங்கள் முயற்சிகளை பலமடங்கு மேம்படுத்துகிறது.

இன்றைய உலகில் இந்துக்கள் ஒன்றாக கூடி தங்களை சமயம் சார்ந்த முறையில் வெளிப்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியம் ஆகும். இந்துக்கள் இருக்கும் இடங்களில் *சத்சங்க* குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்து சமயத்தின் வேற்றுமை அதன் மேன்மை அடங்கியிருக்கிறது. அந்த வேற்றுமை அதன் மிகப்பெரிய பலமாகவும் விளங்குகிறது. இது இந்து சமயம் முழுவதற்கும் அதில் இருக்கும் பல்வேறு உட்பிரிவுகளுக்கும் பொருந்துகிறது. எந்த ஒரு *சத்சங்க* குழுவும் இன்னொரு குழுவுடன் முழுமையாக பொருந்தி இருக்காது. ஆனால் அதன் உறுப்பினர்கள், அது பிரதிநிதித்துவம் செய்யும் முக்கிய தத்துவ கருத்துக்களுடன் பொருந்தி இருக்கவேண்டும்.

நீங்கள் ஒரு *சத்சங்க* குழுவை சேரும் போது, இது உங்களுக்கு சமய ஈடுபாடு மற்றும் கவன மையமாக மாறுகிறது. இது கோயில் வழிபாட்டு அனுபவத்தில் இருந்து மாறுபட்ட அனுபவமாக, உங்கள் வீட்டு பூஜை அறையில் செய்யும் தனிப்பட்ட தியானம் மற்றும் பூஜைகளில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. நீங்கள் கோயிலில் வழிபட செல்லும் போது, அங்கே மற்ற பக்தர்கள் இருந்தாலும் நீங்கள் அங்கே தனியாகத் தான் இருப்பீர்கள். மிகவும் புனிதமாகவும் பிரத்யேகமாகவும் இருக்கும் அந்த அனுபவம், உங்களது இஷ்ட தெய்வத்துடன் நீங்கள் தொடர்புகொள்ள ஒதுக்கிய நேரமாக விளங்குகிறது. ஆனால் *சத்சங்க* குழுவில், அதைப் போன்ற *சங்கத்தில்*, நீங்கள் உங்கள் பக்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறீர்கள். குழு உறுப்பினர்களின் கூட்டு மனம் அல்லது கர்மவினையாக இருக்கும் அந்த குழு அமைப்பில், நீங்கள் அந்த குழுவுடன் இணைந்து செயல்படும் காலத்திற்கு, நீங்கள் உங்கள் மனம், உங்கள் கர்மவினையை தற்காலிகமாக ஒதுக்கி வைக்கிறீர்கள். இதை முழுமையான ஈடுபாடு அல்லது

பல்வேறு கர்மவினைகளில் சிக்கிய நிலையாக கருதக்கூடாது. இது ஒவ்வொரு வாரமும் *சத்சங்கம்* சில மணி நேரங்கள் ஒன்றாக கூடும் போது, தற்காலிகமாக இணையும் அல்லது ஐக்கியமாகும் கர்மவினைகளை குறிக்கிறது.

தனிநபர் ஒரு குழுவிற்கும், அந்த குழு தனிநபருக்கும் உதவி செய்கிறது என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன். இதை குழுவாக செய்யும் பூஜைகள் அல்லது *சத்சங்க* குழுக்கள் பாடும் போது தெளிவாக காண முடியும். நாம் அகத்தூண்டுதலையும் நமது தனிப்பட்ட கவலைகளில் இருந்து விடுதலையும் பெற்று *சத்சங்கத்தின்* உயர்ந்த நோக்கங்களுக்காக நமது சிந்தனைகளை முழுமையாக அர்ப்பணிக்க முடிகிறது. இதனை கூடியிருக்கும் எல்லோரும் செய்வதால், உருவாக்கப்படும் ஒரு வலுவான சூழல் ஆன்மீக பாதையில் மேலும் முன்னேறுவதற்கு உகந்ததாக இருக்கிறது.


தனிப்பட்ட *கர்மவினைகளை* பகிர்தல்

ஒரே தத்துவம் மற்றும் நம்பிக்கைகளை பகிர்ந்து, ஒரே *பஜனைகளை* பாடிக்கொண்டு, தொடர்ந்து எல்லோரும் ஒன்றாகக்கூடி சந்திக்கும் சமயக்குழுக்கள் உலகெங்கும் பரவியுள்ளன. அதில் சில குழுக்கள் வலுவாகவும், மற்றவை பலவீனமாகவும் இருக்கக்கூடும். ஒரு *சத்சங்க* குழு ஒன்றாக கூடுவதால் தோன்றும் விளைவுகள், அந்த ஒட்டுமொத்த குழுவின் கூட்டு கர்மவினையை முழுவதுமாக சார்ந்து இருக்கிறது.

அந்த குழுவிற்கு பொதுவான மனமானது அதன் ஒவ்வொரு உறுப்பினரின் எதிர்மறை மற்றும் நேர்மறை கர்மவினைகளை உள்ளடக்கியுள்ளது. இதற்காக ஒரு குழு பலவீனமாக அல்லது துயரத்தில் இருந்தால், அது சரியாக செயல்படாத உறுப்பினர்களை பிரித்து எடுத்து அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று பொருளில்லை. இது வெளியேற்றப்பட்டவர் மற்றும் அவரை விவேகமின்றி வெளியேற்றிய குழுவிற்கும், அதிக தீவிரமான நாணயமற்ற கர்மவினை உருவாகவே காரணமாக அமையும். அதற்கு மாறாக அந்த குழு அதிக ஒரு ஆழமான *சாதனையை,* அதிக கட்டுப்பாடுகள் நிரம்பிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதையும், பாடப்படும் சொற்களின் பொருளை உள்ளத்தில் உணர்வதற்கு சிறப்பு முயற்சிகள் செய்து தேவலோக சூழலுடன் பொருந்தி இருக்கவேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது. அந்த குழு கூடும் நேரம் அதிகமாக இருக்கிறதா, பஜனையில் உணவிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறதா, ஒன்று அல்லது பல உறுப்பினர்கள் தங்களது சொந்த கர்மவினை விளைவுகள் மற்றும் ஈடுபாடுகளை இறைவனின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்யாமல் குழுவிற்குள் கொண்டு வருகிறார்களா என்பதையும் அந்த குழு ஆராய்ச்சி செய்யலாம். மிகவும் முக்கியமாக அந்த குழுவிற்கு பொதுவான மனதில் இருக்கும் ஒரு பிரச்சனை, ஒரு தனிநபரின் தவறு அல்லது பிரச்சனை இல்லை என்பதை அந்த குழு உணரவேண்டும். அது ஒட்டுமொத்த

குழு சேகரித்த கூட்டு கர்மவினைகளின் விளைவாகத் தான் இருக்கிறது மற்றும் அதை நடுநிலையுடன் எதிர்கொள்ள வேண்டும்.

ஒரு வலுவான குழு, ஒற்றுமையுடன் ஒரு பயனுள்ள குழுவாகவும் இருக்கிறது. *சத்சங்கத்தின்* போது உறுப்பினர்கள் அகத்தில் இருக்கும் சக்திகள், இயல்பாக பொங்கி வருவதை குறிக்கும் வண்ணம் அவர்கள் சமயம் தொடர்பான இலக்கியங்களை விநியோகம் செய்ய விரும்புவார்கள். அவர்கள் பசியோடு இருப்பவர்களுக்கு உணவு அளிக்க விரும்புவார்கள். அவர்களால் ஏழை எளிய மக்களை புறக்கணிக்க முடியாது. அவர்கள் இயல்பாகவே தங்கள் சமூகத்தில் புதிதாக சேர்ந்த ஒரு இந்து குடும்பத்தை உபசரிக்கவும், மருத்துவமனையில் இருக்கும் இந்துக்களை சந்தித்து, அவர்களுக்கு கடிதங்கள் எழுதி, அவர்களுக்கு ஆறுதலாக சில வார்த்தைகள் பேசுவதுடன் முறையாக அவர்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறதா என்பதையும் உறுதி செய்ய விரும்புவார்கள். அன்றாட வாழ்வில் ஒரு *சத்சங்கம்* தன்னை ஈடுபடுத்திக் கொள்ள பல வாய்ப்புக்கள் உள்ளன என்றாலும், அது உறுப்பினர்கள் அனைவரும் ஓர் மனதோடு ஒற்றுமையோடு இருந்தால் மட்டுமே சாத்தியம் ஆகும்.



ஒரு குழு பலவீனமாக இருந்தால், அந்த குழுவினர் மத்தியில் வக்குவாதங்களுடன் ஒற்றுமை இல்லாத சூழல் நிலவும். அத்துடன் அந்த குழுவில் தெய்வீக சக்திகளை காட்டிலும் *அசுர* சக்திகள் ஆதிக்கம் செலுத்த வாய்ப்புள்ளது. இந்த சூழ்நிலையை விட்டு விலகாமல் அல்லது தவிர்க்காமல்,

அதை நேர்மறையாக அணுக வேண்டும். அந்த குழுவில் *அசுர* சக்திகள் ஊடுருவி இருந்தால், ஒரே சமயத்தில் *சத்சங்கத்தின்* உணர்வை முழுமையாக உயர்த்த தேவையான காந்தசக்தியை உருவாக்குவதற்கு, ஒரு வட்டவடிவில் அமர்ந்து பாடுவது சிறந்த பலனை தரும். குழுவில் ஒற்றுமை நிலவினால், வழக்கமான இந்து சமய கூட்டங்களைப் போல பெண்கள் ஒருபுறமும் ஆண்கள் ஒருபுறமும் அமர்ந்துக் கொள்ளலாம். தரையில் அமர்வதால் உடலில் இருக்கும் சில சக்திகள் சுதந்திரமாக இயங்கி, அதன் மூலம் மனிதனின் ஆன்மீக வாழ்க்கை பெரிதும் மேம்படுவதால், எப்போதும் தரையில் அமர்வதே சிறந்தது. கோயிலில் வழிபடும் போது, நாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் லோகங்களில் இருக்கும் தெய்வீக சக்திகளிடம் இருந்து தனிப்பட்ட கவனத்தை பெறுகிறோம். அது அந்தர்லோகங்கள் மற்றும் நமது உயிர்சக்தியின் உட்புற லோகங்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்ளும் நேரம் ஆகும். ஆனால் சத்சங்கம் வேறுபட்டு இருக்கிறது, மற்றும் அந்த வேறுபாட்டை அங்கிருக்கும் அனைவரும் உணரவேண்டும். அது சமயம் சார்ந்த குழு அனுபவம் ஆகும். அது ஒவ்வொரு உறுப்பினரின் தனிப்பட்ட கர்மவினையை மேம்படுத்துவதோடு, ஒரு *சங்கமாக* இருக்கும் பொதுவான மனதின் கூட்டு கர்மவினையையும் மேம்படுத்துகிறது.

ஒவ்வொரு *சத்சங்கமும்* தங்களது ஆற்றலை நேர்மையாக ஆய்வு செய்து, அதன் உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் வாழும் சமூகத்திற்கு பயனுள்ளதாக இருக்க ஆக்கப்பூர்வமான வழிகளை தேடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் நமது ஆற்றல்களை சிறப்பாக பயன்படுத்துவது முக்கியம் ஆகும். அத்துடன் நாம் நமது ஆற்றலை விரயம் செய்யாமல், நமது வாழ்க்கைகளை விரயம் செய்யாமல் இருப்பதும் முக்கியம் ஆகும். புனித பூமியில் இருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்து ஒரு அன்பான சொல்லுக்கும், பரிவான புன்னகைக்கும் ஏங்கிக்கொண்டு இருக்கும் இந்துக்களுக்கு உதவி செய்யும் வழிகளை *சத்சங்க* குழுக்கள் தேடலாம்.

சத்சங்கம் நடத்துதல்

சத்சங்க குழுக்களை நடத்துவதற்கு பல வழிகள் உள்ளன. பல வருடங்களாக இயங்கி வரும் குழுக்களில் பிரத்யேக வழக்கங்கள் இருக்கும். இருபது நிமிடத்திற்கு *பஜனை*, பிறகு இருபது நிமிடம் சாத்திரம் படித்தல் அல்லது *உபதேசம்* மற்றும் அடுத்து மீண்டும் இருபது நிமிடத்திற்கு *பஜனை* என்ற எங்களது ஒரு மணிநேர அட்டவணையை புதிதாக அமைந்த குழுக்கள் பின்பற்ற விரும்பலாம். ஒவ்வொரு வாரமும் அல்லது ஒவ்வொரு மாதமும் *சத்சங்க* குழுக்கள் ஒரு வீட்டில் இருந்து இன்னொரு வீட்டிற்கு இடம் மாறுவது வழக்கம் ஆகும். அத்துடன் அந்த குழு சந்திக்கும் வீட்டில் வசிக்கும் நபர் அந்த வார *சத்சங்கத்தின்* தலைவராக இருந்து எல்லோரையும் உபசரிப்பார். அவர் அந்த வாரம் படிக்கவேண்டிய சாத்திரம் அல்லது பயன்படுத்த வேண்டிய ஒலிநாடாவை தேர்வு செய்யவேண்டும், அல்லது ஒரு சுவாமி அல்லது வேறொரு ஆன்மீக தலைவரின் உரையை ஏற்பாடு செய்யவேண்டும். அவர் ஒரு அறையையும்,

தெய்வத்தை வைக்க ஒரு சிறிய பூஜை மாடத்தையும் வைக்கவேண்டும். பொதுவாக விநாயகர் சிலை எல்லோருக்கும் ஏற்புடையதாக இருக்கும். அத்துடன் எல்லோருக்கும் ஒரே மதகுரு இருக்க வாய்ப்பில்லை என்பதால், *சத்சங்கத்தில்* இருக்கும் பல்வேறு உறுப்பினர்கள் பின்பற்றும் குருமார்களின் படங்களையும் சேர்த்து வைக்கலாம். ஒரு *சத்சங்க* குழுவின் பலமும் பக்குவமும் வளர்ச்சி பெறும் போது, நமது சக மனிதர்களுக்கு உதவி செய்ய வேறு பல வழிகளும் பிறக்கும். இது *சத்சங்கம்* தனது உறுப்பினர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி, தனது நோக்கத்தை பூர்த்தி செய்ய தொடங்கியுள்ளது என்பதற்கான முதல் அறிகுறியாக விளங்குகிறது.






விநாயகர் பற்றிய பாடல்களின் ஒரு விசேஷ தொகுப்பு

எல்லா வயதினருக்கும் பொருந்தும் பாடல்கள்

பின்வரும் பக்கங்களில் தனியாகவும் குழுவாகவும் பாடுவதற்கு மற்றும் பஜனை செய்வதற்கு பல பாடல்களை தொகுத்து இருக்கிறோம். ஒரு ஆர்மோனியப் பெட்டியில் சுலபமாக இசைக்கும் வகையில், நாங்கள் அந்த பாடல்களை மேற்கத்திய இசை குறியீடுகளுடன் வழங்கி இருக்கிறோம். பாடல்களின் கருத்தை பொருத்து உயர்ந்த சிந்தனை மற்றும் கற்பனையை தூண்டும் வகையில், இலவச சமஸ்கிருத-தமிழ் மொழிபெயர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. வழக்கமாக அந்த குழுவிற்கு ஒருவர் முதலில் பொறுப்பேற்று முதல் பாடல்வரியை பாட, அதை குழுவில் இருக்கும் மற்றவர்கள் மீண்டும் ஒரு முறை பாடுகிறார்கள். பிறகு தலைவர் ஒவ்வொரு வரியாக பாட குழுவும் அதை ஒருமுறை பாடுகிறது. அந்த குழுவிற்கு ஒருவர் பின் ஒருவராக பொறுப்பேற்று பஜனையை வழிநடத்தி செல்கின்றனர். குழுவின் தலைவர் இசையில் தேர்ச்சி பெற்று இருந்தால், அவர் இசைக் குறியீட்டு வரிகளை அலங்கரித்து வைப்பார். ஆனால் குழு பெரும்பாலும் அந்த பாடல்வரியை எளிய முறையில் மீண்டும் பாடுவார்கள். பெரும்பாலான பஜனைகள் மெதுவாக தொடங்கி, பிறகு வேகத்தையும் ஒலியையும் பெருக்கிக்கொள்கின்றன. *பஜனையின்* கால அளவை அதன் தலைவர் முடிவு செய்கிறார் என்றாலும் அது வழக்கமாக ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் வரை நீடிக்கிறது.

இந்த பாடல்களை முறையான பஜனையின் போது பாடலாம் அல்லது ஒரு நாளில் உங்களுக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களில் தனியாக பாடலாம். நீங்கள் அந்த பாடல்களை காலையில் செய்யும் சாதனையின் போதும், நாள் முழுவதும் உங்களுக்குள் அமைதியாகவும் பாடிக்கொள்ளலாம். அந்த பாடல்களை உணவு அருந்தும் முன்பாக பாடுங்கள். அவற்றை குழந்தைகள் உறங்க செல்வதற்கு முன்பாக பாடுங்கள். அவற்றை நீங்கள் வேலை செய்யும் போதும், பயணம் செய்யும் போதும் பாடுங்கள். நீங்கள் ஊக்கம் இழந்து இருக்கும் போது பாடுங்கள். நீங்கள் உற்சாகத்துடன், ஆக்கப்பூர்வமான மனநிலையில் இருக்கும் போது பாடுங்கள். வருத்தத்துடன் இருக்கும் போது பாடுங்கள். நீங்கள் ஒரு இடத்தில் நீண்டநேரம் காத்து இருந்து, செய்வது அறியாமல் தவிக்கும் போது, மகாதேவர்களைப் பற்றி பாடுங்கள். முழு மனதோடு பாடுங்கள். நீங்கள் பாடும் போது, ஒலிகளுக்குள் இருக்கும் அமைதி மீது கவனம் செலுத்துங்கள். அந்த அமைதியே இறைவனின் குரலாக விளங்குகிறது.



கீதா

கீதா என்றால் பாடல். *கீதங்களை* தனியாகவோ அல்லது குழுவோடு சேர்ந்தோ நிதானமாக பாடலாம். பக்தியுடன் கற்பனை செய்வதற்கு சொற்கள் துணை புரிகின்றன. விநாயகரின் *தரிசனம்* மற்றும் சக்தியை ஆவாகனம் செய்ய விரும்பும் நாம், அவரது தெய்வீக பண்புகள் மீது கவனம் செலுத்திக்கொண்டு அவரை நமது மனங்களில் கற்பனை செய்கிறோம். மகிழ்ச்சிகரமான தெய்வத்துடன் ஒரு ஆழமான தொடர்பு ஏற்படுகிறது. இந்து சமய கர்நாடக இசையை கற்க விரும்பும் மாணவர்களுக்கு பெரும்பாலும், விக்னேசுவர கீதம் முதலாவதாக கற்றுத் தரப்படுகிறது. நமது அன்பான விநாயகர் பற்றிய இந்த பாடலை அதிக சிரத்தையுடன் பாடுங்கள். அவர் அதை கேட்பார். ஆம், அவர் அதை நிச்சயம் கேட்பார். அவர் கையில் இருக்கும் *மோதகத்தை* சாப்பிட்டு கொண்டு இருந்தாலும், அவர் தனது பெரிய காதுகள் மற்றும் கூர்மதியுடைய மனதின் துணையுடன் ஒவ்வொரு கணமும் நடந்துகொண்டு இருக்கும் விஷயங்களை எல்லாம் வியக்கும் வகையில் அறிந்து இருப்பதை நாம் உணர்வது முக்கியம் ஆகும். அதனால் அவரது பாடல்களை தைரியமாகவும் சத்தமாகவும் பாடுங்கள். அவரது அருள் மூலமாக அவரது கட்டுப்பாட்டில் இருக்கும் வளங்கள் அனைத்தும் உங்களுக்கு கிடைக்கும்.



விக்னேசுவரனை போற்றிப் பாடும் பாடல்கள்

பல்லவி ஸ்ரீ கணநாதா சிந்தூர வர்ண கருணாசாகர கரிவதனா
லம்போதர லகுமிகரா அம்பாசுத அமர வினோத

சரணம் 1 சித சாரண கண சேவித சித்தி விநாயக தே நமோ நம (லம்போதர)

சரணம் 2 சகல வித்யாதி பூஜித சர்வோத்தம தே நமோ நம (லம்போதர).

பொருள்:

கணங்களின் தலைவனாக, செந்தூர நிறத்தில் கருணையின் கடலாக, ஆனைமுகத்துடன் பார்வதியின் மகனாக இருக்கும் உன்னை தேவர்கள் எல்லோரும் வழிபடுகிறார்கள்.

சித்தர்கள் உன்னிடம் சரண் அடைந்து இருக்கிறார்கள். கணங்கள் உன்னை வழிபடுகிறார்கள். உனது பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் உன்னை நான் மீண்டும் மீண்டும் வணங்குகிறேன்.

முழுமுதற்கடவுளாக, சகல வித்தைகளை அறிந்தவனாக, சர்வ உத்தமனாக இருக்கும் உன்னை நான் மீண்டும் மீண்டும் வணங்குகிறேன்.

VIGHṆEŚVARA GĪTĀ


Composed by Pūrandaradāsa

Malahari Rāga **Rūpaka Tāla**

AROHANA: S R_1 M_1 P D_1 Ṡ AVAROHANA: Ṡ D_1 P M_1 G_3 R_1 S



தியானம்



தியான வடிவில் இருக்கும் இந்த பாடல் ஓய்வு நேரத்தில் தனியாகவும், மெதுவாகவும், வெறும் ஒத்து வாத்தியத்தை மட்டும் பயன்படுத்தியும் பாடப்படுகிறது. இசையை காட்டிலும் அதிகம் பிரார்த்தனை வடிவில் இருக்கும் இந்த *தியானத்தில்* தோன்றும் சொற்கள், பெரும்பாலும் பழங்கால சமஸ்கிருத சாத்திரங்களில் இருந்து தொகுக்கப்பட்டு இருக்கின்றன. இது பாடகர்களின் பக்தி காணிக்கையாக விளங்குகிறது. இந்த பாடலில் இடம்பெறும் சொற்கள், கேட்பவர்களின் மனதை அன்பான விநாயகருடன் அமைதியாக தொடர்புபடுத்துகிறது. வழக்கமாக இந்த *தியான* வடிவ பாடலுக்கு பிறகு சிறிது நேரம் மௌனமாக இருக்கவேண்டும். தியானத்தைப் பற்றி மேலும் சொல்ல வேண்டும் என்றால், அது அமைதியான மனதின் முழுநிறைவை குறிக்கிறது. எதனால் மனதின் அமைதி குலைகிறது? “எனது சக்திக்கு அப்பாற்பட்ட லோகங்களில் ஒன்றாக அச்சம் விளங்குகிறது,” என்று விநாயகர் எச்சரிக்கிறார். நினைவாற்றலின் நீர்நிலைகளில் இருந்து வெளிவந்து, நல்ல அழகு மற்றும் வலிமையுடன் பூத்து இருக்கும் நான்கு இதழ் தாமரையான *மூலாதார சக்கரத்தின்* மீது அமர்ந்து இருக்கும் அவர், தனது இருப்பிடத்திற்கு கீழிருக்கும் சக்கரத்தில் அச்சம் ஒரு உணர்ச்சியாக குடிகொண்டு இருந்தாலும், அது அவரது கட்டுப்பாட்டில் இருப்பதால் அவரால் நமக்கு உதவி செய்ய முடியும். அவரது இருப்பிடத்திற்கு மேலும் கீழே இருக்கும் கோபம் மற்றும் சீற்றத்தின் சக்கரத்தில் மனம் தனது கட்டுப்பாட்டை *அசுர* சக்திகளிடம் இழந்து விடுகிறது. நாம் அவரது அருளுக்கு பாத்திரமாவதில் தடைகளாக கட்டுப்பாட்டில் இல்லாத மனம் மற்றும் உணர்ச்சிகள் விளங்குவதால், நமது அன்பான கடவுள் கோபத்தில் இருப்பவர்களுக்கு பிரார்த்தனை செய்கிறார். அதனால் *புருஷா* என்கிற ஆன்மா தனது யதார்த்த மகிமையுடன் வளர்ச்சி பெறுவதற்கு, பாடலை பாடி மாற்றம்பெற தொடங்குங்கள் என்று நமது அன்பான கடவுள் அறிவுறுத்துகிறார்.

விநாயகர் தியானம், "அன்பான விநாயகரை தியானம் செய்தல்"


கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

பொருள் : யானை முகத்தை உடையவரும், பூத கணங்களால் வணங்கப்பட்டவரும், விளாம்பழம், நாவல்பழம் ஆகியவற்றின் சாரத்தை ரசிப்பவரும், உமையின் புத்திரனும், துக்கத்தைத் அழிக்கக் காரணமாக இருப்பவரும் ஆகிய விக்னேசுவரரின் காலடித் தாமரையைப் பணிகிறேன்.

GAṆEŚA DHYĀNAM

Hamsadhwani Rāga **Free Time**

AROHANA: S R_2 G_3 P N_3 Ṡ AVAROHANA: Ṡ N_3 P G_3 R_2 S



பஜனை



பஜனை என்பது பெரும்பாலும் ஒரு குழுவாக பாட்டுப்பாடிக்கொண்டு தெய்வத்தை வணங்குவது அல்லது வழிபடுவதை குறிக்கிறது. அதில் தலைவராக இருக்கும் ஒருவர் ஒரு வரியை பாடுகிறார், மற்றும் அந்த குழு அதை அப்படியே மீண்டும் பாடுகிறது. வழக்கமாக ஒரு நல்ல தாள லயத்துடன் அமைந்து இருக்கும் *பஜனைகள்*, சில சமயம் மெதுவாகவும் உறுதியாகவும் பிறகு வேகமாகவும் அமைந்து இருந்து, கவனத்தை தூண்டிவிட்டு, குழுவின் ஆற்றலை உயர்த்துகிறது. *பஜனை* என்பது ஒரு வலுவான *ஜபம்* ஆகும். இறைவனுடன் ஒருமுகப்பட்ட தொடர்பை பெறுவதே இதன் நோக்கம் ஆகும். இதனை தொடர்ந்து மூன்று *பஜனைகள்* இடம்பெற்றுள்ளன. அதில் இரண்டு பாரம்பரியம் சார்ந்ததாகவும், ஒன்று சமீபகாலத்தை சேர்ந்ததாகும் இருக்கிறது.

GAṆEŚA ŚARAṆAM

"Lord Gaṇeśa, you are my refuge."

Haṁsadhwani Rāga **Ādi Tāla**


AROHANA: S R_2 G_3 P N_3 Ṡ AVAROHANA: Ṡ N_3 P G_3 R_2 S



JAYA GAṆAPATI AUM

Popular Melody **Ādi Tāla**

"Be Victorious, Gaṇapati!
Lord Gaṇapati, Victory unto Thee!"



பஞ்சமுக கணபதி

இந்த பாடலுக்கு இந்திய பெருங்கடலின் முத்தாக விளங்கும் மொரிஷியஸ் தீவின் வடக்கு கரையில் நாங்கள் ஸ்தாபனம் செய்த எட்டு அடி உயர பஞ்சமுக கணபதி சிலை தூண்டுதலாக அமைந்தது. ஐந்து முகங்கள், பத்து கைகளுடன் நீலநிற கடல்கள் வழியாக கிழக்கு நோக்கி பார்க்கும் இந்த பிரம்மாண்ட கணபதியின் சிலை, இந்நாட்டில வாழும் இந்துக்களின் பூர்வீகம் மற்றும் அமைதியான வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலுவாக நினைவூட்டுகிறது. தனது பத்து கைகளில் காலத்தை பிடித்துக்கொண்டு தொன்றதொட்டு தலைசிறந்த பன்மொழி வல்லுனராக விளங்கும் அவர், தனது மிகப்பெரிய துதிக்கையை மெதுவாக நகர்த்தி அந்த காலத்தில் ஒவ்வொரு கணத்தையும் நிலைப்படுத்துகிறார். ஆம், நமது அன்பான கடவுளுக்கு எந்த ஒரு மொழியும் புதிராக இருப்பது இல்லை. அவருக்கு அனைத்து மொழிகளும் தெரியும். பஜனை செய்வதற்கு இந்நாட்டு ஆட்சி மொழியான பிரெஞ்சு மற்றும் அதன் கிளைமொழியான கிரியோல் மிகவும் பொருத்தமாக இருக்கின்றன. உலகில் இருக்கும் அனைத்து கிரியோல் வழக்கு மொழிகளும் அவருக்கு புரிகின்றன. அவை அவருக்கு தாய் மொழிகளாக விளங்குகின்றன.

பாடல் வரிகள்:

> பஞ்சமுக கணபதியே எங்கள் குடும்பம், சமூகம் மற்றும் எங்களது தொழில் விவகாரங்களில் அமைதி நிலவட்டும். நமது கலாச்சாரம் மற்றும் மதம் நீடித்து இருக்கட்டும். எங்களுக்கு இறைவனின் அன்பையும் எல்லோருக்கும் தேவையானதையும் வழங்குவாயாக.

பல்லவி:

> பாஹி பாஹி கஜானன. ரக்ஷ ரக்ஷ கஜானன.

INVOCATION DE CINQ GAṆEŚA ŚAKTIS

Nattai Rāga **Ādi Tāla**

AROHANA: S G_3 M_1 P N_3 Ṡ AVAROHANA: Ṡ N_3 P M_1 G_3 M_1R_3 S





Ra ksha Ra ksha Ga jā na na—



L'har mo nie dans la fa mille
L'har mo nie en so cie te"
L'har mo nie dans les af fairs
Vive la culture et la re li gion
L'amour Di vine et la cha ri te"



Pañ cha mu kha Gaṇapa ti Ga jā na na
Pañ cha mu kha Gaṇapa ti Gajava da na
Pañ cha mu kha Gaṇapa ti Ga jā na na
Pañ cha mu kha Gaṇapa ti Gajava da na
Pañ cha mu kha Gaṇapa ti Ga jā na na



L'har mo nie dans la fa mille
L'har mo nie en so cie te"
L'har mo nie dans les af fairs
Vive la culture et la re li gion
L'amour Di vine et la cha ri te"

நற்சிந்தனை



இறைவன், மகாதேவர்கள் மற்றும் தனது குருவைப் பற்றி இலங்கை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மதிப்பிற்குரிய ஆசான் யோகசுவாமி தான் பாடியிருக்கும் பல பாடல்கள் மூலமாக, மதம் மற்றும் மீமெய்யியல் பற்றி ஆழமான உபதேசங்களை வழங்கி இருக்கிறார். இவை நற்சிந்தனை என்று அழைக்கப்படுகின்றன. பிரம்மமாக இருக்கும் சிவபெருமான் பற்றிய ஒரு பிரபல நூலில், பிரம்மத்தைப் பற்றி பாடும் முன்பாக முதலில் விநாயகர் வாழ்த்துப் பாடலை யோகசுவாமி வழங்கியிருக்கிறார். அவர் பாரம்பரிய படங்களை பயன்படுத்தி, தேவேந்திரனுக்கு விநாயகர் அருள் செய்த ஒரு பிரபல கதையை குறிப்பிடுகிறார். விநாயகர் ஓங்கார வடிவமாக இருக்கிறார் என்று அவர் பழங்கால மறைஞான போதனையைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இவ்வாறு எந்த ஒரு வழிபாடு அல்லது செயலை தொடங்கும் முன் விநாயகரை முதலில் வழிபடவேண்டும் என்பதை யோகசுவாமி உறுதி செய்கிறார்.

ஆனைமுகனுக்கு கடவுள் வாழ்த்து

தந்தி முகந்தனைச சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை இந்திர னுக்கரு ளீந்த இறைவனை
மந்திர ரூபனை நான்மற வேனே.

விநாயகர் ஒரு வாயில் காவலனாக இருப்பதால் மகாதேவர்கள் உட்பட பஞ்ச பூதங்கள், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைகளில் அவர் ஓங்கார வடிவமாக தோன்றிய சம்பவங்கள் வரலாற்றில் நிரம்பியுள்ளன. அவரது அனுமதி இல்லாமல் எதையும் தொடங்க முடியாது. மேலும் எந்த ஒரு முடிவும் ஒரு புதிய தொடக்கமாக விளங்குவதால், அவருக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்காமல் எதுவும் முடிவுக்கு வருவதில்லை.

அன்பான விநாயகர் சுவஸ்திக் என்ற ஆன்மீக சின்னத்துடன் இருக்கிறார். அது நெகிழ்வுத்திறன் உள்ள மனம், இடர்களை தாங்கி எதிர்த்து நிற்கும் மனம், இரக்கமுள்ள மனம், தொடங்கியதை முடிக்க இருமுறை பிறந்த வலிமையுடன் இருக்கும் மனம், மேலே மற்றும் கீழே மற்றும் இருபுறமும் இருக்கும்

தெய்வத்துடன் தொடர்பில் இருக்கும் மனம் என்று பக்குவக்கபட்ட மனதின் சக்தியை பிரதிபலிக்கிறது. சுவஸ்திக் சின்னம் விநாயகரை குறிக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

TANDI MUKHAN TANAI

Nattai Rāga **Ādi Tāla**

AROHANA: S G_3 M_1 P N_3 Ṡ AVAROHANA: Ṡ N_3 P M_1 G_3 M_1R_3 S








CHAPTER EIGHT

Ganesha as Primal Sound

Cooling Lava rock, Phil Kallahar


श्रीगणेशाय नमः
श्रीसरस्वत्यै नमः
श्रीकुलदेवतायै नमः
श्रीराम जयराम जयजय राम
वक्रतुण्ड
सर्व- कार्येषु सर्वदा
गुरुर्ब्रह्मा गुरुर्विष्णु गुरुर्देवो महे
गुरुः साक्षात् परब्रह्म तस्मै श्रीगुरवे नमः
करमध्ये सरस्वती करमूले तु गोविन्दः
प्रभाते करदर्शनम्
सुखकर्ता दुःखहर्ता वार्ता विघ्नाची
पूर्वी प्रेम कृपा जयाची सर्वांगी सुंदर उटि शेंदुराची कंठी
माळ मुक्ताफळांची
जयदेव जयदेव जय
मंगल मूर्ती दर्शनमात्रे मन कामना पुरती जय देव
चित पेरा तुज गौरिकुमरा चंदनाची उटी
कुंकुम केशरा हिरेजडित मुगुट शोभतो बरा
रुणझुणती नूपुरे चरणी घागरिया
जयदेवा
पीतांबर फणि वरबंधना सरळसोंड वक्रतुंड त्रिनयना दास
सदना सकरी पा- वावे निर्वाणी रक्षावे सुखसंपदा जयदेव
सगुण हे आरती निर्गुण ओवाळू देवा निर्गुण ओवाळू कल्पने चे
घृत वाती दीप पंचप्राण ओवाळू आरती सद्गुरुनाथा माझे पंढरी
चरणकमलांवरी ठेविले माथा अविद्येचा मोह पडला उपटोनी
रोनी टाकू आशा मनिषा कृष्णा कामक्रोध कुलवंड ओवाळू
षोडषोपचारी देवा षोडषोपचारी
सद्गुरुचे पूजन केले पंचारी रामानंद जीवनमुक्त झाले संसारी ओवाळू
देवा षोड- षोप वंदिन चरण डोळ्यांनी पाहिन रूप तुझे मी आलिंगिन आनंदे पूजीन भावें
ओवाळिन म्हणे नामा त्वमेव माता च पिता त्वमेव त्वमेव बंधुश्च सखा त्वमेव
सर्व विद्या द्रविणं त्वमेव त्वमेव सर्वं मम देवदेव
बुध्यात्मना वानुसृत स्वभावात् करोमि यद्यत्सकलं परस्मै नारायणायेति समर्पयामि
अच्युतं केशवं रामनारायण कृष्णदामोदरं वासुदेवं हरि
श्रीधर माधवं गोपिका वल्लभं जानकीनायकं रामचंद्र भजे
हरे राम हरे राम राम राम हरे हरे हरे कृष्ण हरे कृष्ण कृष्ण
कृष्ण हरे हरी पुष्पांजलि मी तुला अर्पितो हे गणपतिराया तवपदी
वंदन करण्याला मति दीधी या हृदया दुर्वांकुर आणि
फुले सुवासिक नानाविध माला किंचित सेवा भजन
गुरुच्या बाला साधुसंत पाही देवाधि- पते नमिती तव पाया उद्धरण्याला पापी जनाला
तुझी ही आरती ओवाळे श्रवण तुला भक्तिप्रेमे पुष्पांजलि
जनी जन्म नामार्थ साला जन्मांतरी सदा वास केला अंगणात
ब्रह्मचैतन्यमूर्ती श्रीसद्गुरु ब्रह्मचैतन्य मूर्तये प्रति श्रीकांत पंडित हारी अर्पणमस्तु

ஓம் கணேஷா

கணேச பிரணவாத்மகஹ

गणेशः प्रणवात्मकः

எழுதியவர் ரத்னா மா நவரத்தினம். *ஓம் கணேஷா: தி பீஸ் ஆப் காட்* புத்தகத்தில் இருந்து தொகுக்கப்பட்டது



கணபதிக்கு எனது வணக்கம். உண்மைப்பொருளை அடைவதற்கு பல வழிகள் உள்ளன. அதில் ஓம் கணேஷா ஒரு வழியாக விளங்குகிறது. இதில் இருக்கும் அணுகுமுறை மற்றும் மனநிலை காரணமாக, மனித நேயம் ஒற்றை குடும்பமாக வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்புள்ளது. கணேஷா ஓம் என்பது ஆன்மீக யதார்த்தத்தின் உண்மையான பார்வையில் இருந்து பாய்ந்து வருவதால், அது பயன் தருவதாக இருக்கிறது.

சிவனுக்கு தொண்டு செய்யும் சிவகணங்களின் அதிபதியாக இருக்கும் கணபதியை பற்றிய குறிப்புக்கள் *வேதங்களில்* உள்ளன. சிவபெருமானுக்கும் கணபதிக்கும் வேறுபாடு இல்லை என்பதை *யஜூர் வேத சம்ஹிதையில்* இருக்கும் தலைசிறந்த ஸ்ரீ ருத்திரத்திற்கு முன்பாக உச்சரிக்கப்படும் ரிக் வேத மந்திரங்களின் வெளிப்படுத்துகிறது.

கணானாம் த்வா கணபதிஹும் ஹவாமஹே
கவிம் கவீனா-முபமஸ்ர-வஸ்தமம் |
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத
ஆ ந: ஸ்ருண்வன்னூதிபி: ஸீத ஸாதனம் ||

இங்கே கணங்களின் பதியாக போற்றப்படும் தெய்வம் பிரம்மணஸ்பதி என்று அழைக்கப்படுகிறார். ஆனால் அவரைப் பற்றி விளக்க பயன்படுத்தப்பட்டுள்ள அடைமொழிகள் ஆணைமுகக் கடவுளுடன் பொருந்துகின்றன. உதாரணத்திற்கு அறிஞர்களுள் பேரறிஞர் என்பதை குறிக்கும் கவிம் கவீனாம் என்பதற்கு நிகராக தலைசிறந்த அறிவின் கடவுளாக கணபதி இருப்பதும், தலைசிறந்த தலைவன் என்பதை குறிக்கும் ஜ்யேஷ்டராஜம் என்பதற்கு நிகராக விநாயகர் முழுமுதல் கடவுளாக இருப்பதும் பொருந்துகிறது.

இத்துடன் ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிய *கணேச பஞ்சரத்தின* பாடலின் தொடக்கத்தில் தோன்றும் *களாதராவதம்சகம்* என்பதற்கு “தலையில் பிறை சூடியவர்” என்று பொருள். இந்த பண்பு சிவபெருமானுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

வேத ரிஷிகள் கணபதி வழிபாட்டு முறையை அறிந்து இருந்ததோடு, அவர்கள் அவருக்கு மகாதேவர்களில் ஒரு விசேஷமான இடத்தை ஒதுக்கினார்கள். இத்துடன் பக்தர்கள் தங்கள் வாழ்வில் தடைகள் மற்றும் பேராபத்துக்கள் இல்லாமல் மகிழ்ச்சி கலந்த வெற்றியை பெறுவதற்கு அவரது அருளும் நாடப்பட்டது. பல்வேறு விநாயகர் பிரார்த்தனைகள் வேத நூல்களில் இடம்பெற்றுள்ளன. அவர் பின்வரும் சுலோகத்தில் தலைசிறந்த தலைவனாக ஆவாகனம் செய்யப்படுகிறார்:

गणानां त्वा गणपतिगं् हवामहे कविं कवीनामुपमश्रवस्तमं ।
ज्येष्ठराजं ब्रह्मणां ब्रह्मणस्पत आ नः शृण्वन्नूतिभिः सीद सादनं ॥

கணானாம் த்வா கணபதிஹும் ஹவாமஹே
கவிம் கவீனா-முபமஸ்ர-வஸ்தமம் |
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத
ஆ ந: ஸ்ருண்வன்னூதிபி: ஸீத ஸாதனம் ||

ஓம் கணநாயகனே கணபதியே! அறிஞர்களுகுள் பேரறிஞனே! நிகரில்லாத புகழ் உடையவனே! தலைசிறந்த தலைவனே! மறைகளின் தலைவன் நீ! எனது அழைப்பினை ஏற்று, மனமகிழ்ந்து அழகோடு அமர்ந்தருள்வாய்!

ரிக் வேதம், 2.23.1

சதபத பிரமாணம் 10.4.56, *துவிதிய ஆத்மா* என்கிற "இரண்டாவது சுயமாக" இருக்கும் இறைவனின் மகனை "பேசப்படாத சொல்" அல்லது *மிதுனம்* என்று குறிப்பிடுகிறது. பேசப்படாத இறைவனின் சொல் உட்புறமாக வெளிப்படாமல் இருக்கிறது. இவ்வாறு விநாயகர் "இறைவனின் சொல்" என்று அறியப்பட்டார். தொடர்ந்து உருவாக்கப்படும் இறைவனின் உள்ளார்ந்த பண்புக்கு சான்றாக மகன் விளங்குகிறார். விநாயகர் அவரது தந்தையின் ஞானத்தை பிரதிபலித்து, இறைவனது சொல்லின் சேமிப்புக் கிடங்காக விளங்குகிறார்.

தைத்ரீய ஆரண்யகத்தில், தந்திம் (தந்தம் உடையவர்) என்று கணபதி தெளிவாக குறிப்பிடப்படுகிறார். இந்த சொல் கணபதி காயத்ரி மந்திரங்களில் தோன்றுகிறது:

தன்னோ தந்தி பிரசோதயாத்.
தந்தத்தை உடையவர் நமது எண்ணங்களை ஒளிர்விக்கட்டும்.

அந்த அட்சரம் அல்லது எழுத்து தொடக்கமாக இருக்கிறது. ஓம் என்பதே அந்த அட்சரம் ஆகும். அந்த ஓங்காரத்தின் எதிரொலி எங்கும் கேட்கிறது. *ஓம் தத் சத்.* ஓம் என்கிற அந்த பிரணவமே உண்மை. இவ்வாறு *வேதாகமங்கள்* அறிவிக்கின்றன.

ஓம் என்பதே அந்த அட்சரம். அந்த அட்சரமே அபரப்பிரம்மம் ஆகும், அதுவே பரப்பிரம்மம் ஆகும். இந்த அட்சர உண்மையை அறிந்தவரின் அனைத்து ஆசைகளும் நிறைவேறும்....இதுவே சிறந்த ஆலம்பனம்

இதை அறிந்தோர் பிரம்ம லோகத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.
கட உபநிஷதம் 2.15-16

காதால் கேட்கக்கூடிய இந்த ஓங்காரம் தாரணையின் பற்றுக்கோடாக விளங்குகிறது. இதனால் ஒருவர் கண்களுக்கு தெரிவதில் தெரியாததை கண்டு, காதுகளால் கேட்பதில் கேட்கமுடியாததை கேட்கிறார்.
Dr. ஆனந்த குமாரசுவாமி

ஓங்காரத்தின் சாரமாக யார் இருக்கிறாரோ நாம் அவரது துதி பாடுகிறோம்.
சத்குரு யோகசுவாமியின் நட்சிந்தனை

காரண பதமாக விளங்கும் ஓங்காரம் என்பது தெய்வீக சிந்தனை, இருப்பின் மூலத்தை பிரதிபலிக்கிறது. விருப்பத்தின் சக்தியுடன் தொடர்புடையதாக இருக்கும் இது சிவனின் நோக்கம் அல்லது *இச்சா சக்தி* என்று அழைக்கப்படுகிறது. விஷ்ணுவின் திட்டமிடுதல் அல்லது *ஞான சக்தி* என்று அழைக்கப்படும் அறிவின் சக்தியும், பிரம்மனின் உணர்ச்சி வெளிப்பாடு அல்லது *கிரியா சக்தி* என்று அழைக்கப்படும் செயல்பாட்டு சக்தியும் காரண பதமான ஓங்காரத்தை வெளிப்படுத்துகிறது.

ஓங்காரம் என்பது *வ்யஷ்டி* (தனிநபர்) மற்றும் *சமஷ்டி* (பிரபஞ்சம்) வடிவில் இருக்கும் பரசிவத்தை குறிக்கிறது. இவ்வாறு சிவபெருமானின் தெய்வீக மகனாக இருக்கும் ஓங்கார விநாயகர், பிரபஞ்சம் முழுவதற்கும் பற்றுக்கோடாக விளங்குகிறார். ஒலி மற்றும் சின்னமாக இருக்கும் அவரது ஓங்காரம் அன்றும், இன்றும், என்றும் அழியாததாக இருக்கிறது. அது காலங்காலமாக அழியாமல் இருக்கிறது. அவர் எப்போதும் உமா-மகேசுவரனுக்கு பிடித்த மகனான பிள்ளையாராக இருக்கிறார். அ-உ-ம் என்ற மூன்று அம்சங்களில் அவரை தியானம் செய்யும் பக்தர்களால் ஆணைமுகக் கடவுளின் யதார்த்தத்தை உணர முடிகிறது. ஓம் தத் சத் என்ற *மகாவாக்கியம்* "அந்த பிரணவமே உண்மை" என்பதை குறிப்பிடுகிறது மற்றும் அது விநாயகர் வடிவத்தில் உருமாற்றம் பெறுகிறது. "நீயே அதுவாக இருக்கிறாய்" என்பதை குறிக்கும் தத் த்வம் அஸி என்ற மகாவாக்கிய உண்மைப்பொருளின் ஆளுருவமாக அவர் இருக்கிறார்.

உங்கள் மனதால் கிரகிக்க முடிந்த அனைத்தையும், ஒரு பிரிவு அல்லது கணமாக வெளிப்படுத்தலாம். அதனால் கணம் என்பது இருப்பின் அடிப்படை பாகமாக விளங்குகிறது. கணக்கிடக்கூடியதாகவும் புரிந்துகொள்ள முடிந்ததாகவும் இருக்கும் அனைத்தும் ஒரு கணம் ஆகும். பல்வேறு ஒழுங்குமுறைகளுக்கு மத்தியில் இருக்கும் உறவுகள், அண்டம் மற்றும் பிண்டத்திற்கு மத்தியில் இருக்கும் உறவுகளை புரிந்துகொள்வதற்கு துணை புரியும் கணங்களின் கோட்பாடு, கணங்களின் கடவுள் என்றும் கணபதி என்றும் அழைக்கப்படுகிறார்.

அனைத்து கணங்களின் அரசராக இருக்கும் கணபதியை புலனாகும் தெய்வீக தரிசனத்துடன் அடையாளம் காண முடிகிறது. அவர் வாழ்க்கையின் தொடக்கம் மற்றும் அதன் பல்வேறு விரிவாக்கங்களில் காவலாக இருக்கிறார்.

> கணங்களின் தலைவனான கணபதியே, உன்னை நான் வணங்குகிறேன். நீ கண்களுக்கு புலப்படும் தலைவனுக்கு தலைவனாக உண்மையான பரமாத்துமாவாக இருக்கிறாய். கணங்களின் கடவுளே, இங்கே அமர்ந்து எங்களுக்கு இன்பங்களை தந்தருள்வாய்.
>
> *ரிக் வேதம், 2.23.1*

கணங்கள் அல்லது பிரிவுகளின் கோட்பாடு புத்தியை கடந்து இருக்கிறது. கணங்களின் அதிபதியாக இருக்கும் கணபதி, பிரபஞ்ச புத்தி மற்றும் அதில் இருந்து *தத்துவ* கோட்பாடுகளை நிர்வகிக்கிறார்.

கணபதி சில சமயங்களில் பிருகஸ்பதியாகவும் அடையாளம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அவர் புராணங்களில் சாத்திரங்களை எழுதுபவராக இருக்கிறார். அவர் *மகாபாரதத்தின்* ஆசிரியரான வியாச முனிவர் சொல்வதை எழுதுபவராக தோற்றம் அளிக்கிறார்.

> கணங்களின் தலைவனாக இருக்கும் நீ,
> இந்த *மகாபாரதத்தின்* எழுத்தாளராக இருக்கிறாய்.
>
> *மகாபாரதம்* 1.1.77

பிண்டம் மற்றும் அண்டம்

அண்டம் மற்றும் பிண்டத்திற்கு மத்தியில் இருக்கும் நெருங்கிய தொடர்பை சித்தரிக்கும் இந்து சமய குறியீட்டு முறையின் ஒரு அடிப்படை கோட்பாட்டிற்கும் விநாயகர் துணை நிற்கிறார். நமது சமய பாரம்பரியத்தில் ஒரு கர்த்தாவிற்கு முன்பாக, மனிதனின் தெய்வீக பண்பு மற்றும் ஊடுருவி பரவியிருக்கும் இறைவனின் பண்பு நினைவில் இருக்க வேண்டும். இதன் மூலம் ஒரு இந்து அடிக்கடி விநாயகரை வணங்க கற்றுக்கொள்கிறான். அவர் ஒவ்வொரு பணியின் தொடக்கத்திலும் வழிபடப்படுவதோடு, இந்துக்கள் வாழும் பகுதிகளில் அவர் ஒவ்வொரு வீடு, ஒவ்வொரு கோயில் மற்றும் வியாபார நிறுவனத்தின் வாசலிலும் காவலாக நிற்கிறார். ஓம் கணேஷாவாக இருக்கும் அவர், பக்தர்கள் தங்கள் தெய்வீகத் தன்மையை உணர்வதற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறார்.

அண்டம் மற்றும் பிண்டத்திற்கு மத்தியில் இருக்கும் நெருங்கிய தொடர்பை, புலனாகும் பிரபஞ்சத்தின் அனைத்து அம்சங்களின் ஆதாரமாக அமைந்த நிரந்தர தொடர்புகளில் காண முடியும். சைவர்களால் பிள்ளையார் என்று அன்புடன் அழைக்கப்படும் அவர், மனிதன் என்கிற பிண்டம் அல்லது சிறிய உருவத்திற்கும், யானை என்கிற அண்டம் அல்லது பெரிய உருவத்திற்கும் இருக்கும் ஒற்றுமையை வெளிப்படுத்த ஒரு யானையின் தலையுடன் சித்தரிக்கப்படுகிறார். யானையை குறிக்கும் *கஜா* என்ற சொல், “தொடக்கம்

மற்றும் இலக்கை" குறிப்பிடுவதாக அமைக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட உயிர்சக்தியாக இருக்கும் யோகி, இறுதியாக அனுபவிக்கும் சமாதி நிலை *க* என்று அழைக்கப்படுகிறது மற்றும் *ஜ* என்று அழைக்கப்படும் தத்துவமானது பல்வேறு வலுவான சிந்தனை செய்முறைகள் மூலம் ஓங்காரம் தோன்றிய மூலத்தை குறிக்கிறது.

வெளிப்பட்ட தத்துவத்தை பிரதிபலிக்கும் கணபதியின் மனித பகுதி, யானையாக காண்பிக்கப்பட்டு வெளிப்படாத தத்துவமாக இருக்கும் தலைக்கு துணையாக விளங்குகிறது. தெய்வீகத் தன்மையை சித்தரிக்கும் சின்னங்களில் முரணான பண்புகள் சேர்ந்து இருக்க வாய்ப்புள்ளது. அதனால் மனிதனும் யானையும் இணைந்து இருக்கும் கணபதியின் சின்னம், அதன் முக்கிய பொருளான பிரணவத்தை நோக்கி வழிநடத்தி செல்கிறது.

உள்பொருளின் தொடக்கம் (பிரம்மசூத்திரம் 1.1.4) மற்றும் ஓங்காரம் வெளிப்படும் நிலையின் சின்னமாகவும் யானை விளங்குகிறது. ஓங்காரத்தில் இருந்து பிரபஞ்ச விதியான *வேதம்* வெளிப்பட்டு, அந்த *வேதத்தில்* இருந்து பிரபஞ்சம் வெளிப்படுகிறது. *பிரண* என்பது உயிர்சக்தியையும், *வ* என்பது *சித் சக்தி* என்கிற சிவனின் சக்தியையும் குறிப்பிடுகின்றன. *அவை "பிரண-வ"த்தின்* அதிர்வில் ஒன்றாக சேரும் போது, விநாயகர் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு, *ஓம் தத் சத் ஓம்* என்ற தனது புனிதமான அறிவை வழங்குகிறார். அந்த பரம்பொருளின் வெளிப்படையான உருவமாக உயிர்சக்திகள் விளங்குகிறார்கள். மனித இருப்பு என்பது முழுமையாக இருக்கும் அந்த பரம்பொருள் மற்றும் அதன் நிழலாக இருக்கும் உங்களுக்கும் இடையில் இருக்கும் ஒருங்கிணைப்பை குறிக்கிறது.

> எல்லையற்று, யாவும் கடந்த அடிப்படையை பிரதிநிதித்துவம் செய்யும் அந்த பரம்பொருளின் இயல்பு மெய்யறிவு ஆகும்.
>
> *தைத்தீரிய அரண்யக* 8.1.1

ஓம் எழுத்துக்கள்

விநாயகர் குறிப்பிடும் இந்த ஒற்றுமையை உணர்வதே மெய்யறிவு ஆகும். அ-உ-ம் என்ற மூன்று எழுத்துக்களை தனித்தனியாக பயன்படுத்தும் போது பல்வேறு தெய்வங்களின் பெயர்களை குறிப்பிட்டாலும், ஓம் என்பது வழக்கமாக பிரணவ மந்திரத்தின் தலைவனான விநாயகர் உருவுடன் தொடர்புடையதாக இருக்கிறது. *அ* என்பது விராட், அக்னி மற்றும் விஸ்வாவை குறிக்கிறது. உ என்பது ஹிரண்யகர்ப, வாயு மற்றும் தைஜசவை குறிக்கிறது. *ம்* என்பது ஈசுவர், ஆதித்யா மற்றும் பிரக்ஞாவை குறிக்கிறது.

விராட் என்பது உள்பொருளின் எல்லாம் உள்ளடக்கிய பிரபஞ்சத்தை குறிக்கிறது. *அக்னி* பகவான் அனைத்து யாகங்களிலும் முக்கியமாக இருப்பவர். முழு பிரபஞ்சமும் அதில் இருக்கும் வஸ்துக்களும் வெளிப்பட்டு சிவபெருமானின்

பாதுகாப்பில் இருப்பதால், *விஸ்வா* என்பது சிவனை குறிக்கிறது. அவர் அந்த வஸ்துக்கள் அனைத்திலும் வியாபித்து இருக்கிறார்.

ஹிரண்யகர்ப என்பது சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களைப் போன்று ஒளிரும் பொருட்கள் மற்றும் அனைத்து வகை ஒளிகளுக்கும் மூலமாகவும் ஆதரவாகவும் இருப்பவரை குறிக்கிறது. *வாயு* என்பது பிரபஞ்சத்தின் உயிர் மற்றும் பற்றுக்கோடாகவும், அதன் முடிவிற்கு காரணமாக இருப்பவர். தைஜச என்பது சூரியன் மற்றும் மற்ற ஒளிரும் பொருட்களுக்கு ஒளியை வழங்கி பிரகாசமாக இருப்பவர்.

ஈசுவரன் என்பது எல்லையற்ற அறிவு மற்றும் ஆற்றல் உடையவரை குறிக்கிறது. *ஆதித்யா* என்பது அழிவற்ற என்ற பொருளை தருகிறது. *பிரக்ஞா* என்பது நிறைவான அறிவுடன் வாலறிவனாக இருப்பவரை குறிக்கிறது.

இவ்வாறு *ஓங்காரம்* தன்னுடன் பரமாத்துமாவின் சில மிகவும் உயர்வான நாமங்களை சேர்த்துக்கொண்டு, அவருடைய சர்வ வல்லமை மற்றும் எல்லாம் அறிந்த பண்பு மற்றும் குணங்களுடன் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு ஓம் என்பதன் முழுமையாக உட்பொருள இறைவன் என்கிற பரமாத்துமாவை குறிக்கிறது.

அக்ஷரம் பிரம்ம பரமம்
ஸ்வபாவோ அத்யாத்மமுச்யதே.

பகவத் கீதை 8.3

பிரம்மம் என்பது அட்சரமாக குறிப்பிடப்படுகிறது. அது என்றும் அழியாமல் குறையாமல் இருக்கிறது. ஔவையாரும் தான் விநாயகர் பற்றி எழுதிய ஒரு பிரபல பாடலில், அட்சரம் என்ற சொல்லை முடிவில்லாத ஞானம் என்ற பொருளில் பயன்படுத்தி இருக்கிறார்.

மனதில் ஓம் என்று ஜபித்துக்கொண்டு உயிரை துறப்பவர் *பரம கதியை* அல்லது உயர்ந்த இலக்கை அடைகிறார் என்று பின்வரும் சுலோகம் மூலம் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார்.

ஓம் இத்யேகாக்ஷரம் பிரம்ம
வியாஹரன் மாம் அனுஸ்மரன்
யஹ பிரயாதி த்யஜன் தேஹம்
ச யாதி பரமாம் கதிம்.

பகவத் கீதை 8.13

பரசிவத்தின் ஓம் என்கிற ஏகாக்ஷர அல்லது ஓர் எழுத்து மந்திரம் அசபை அல்லது பேசாத மந்திரமாக இருக்கிறது. எதை தொடர்ந்து ஆழ்ந்து சிந்தித்தால், லௌகீக துன்பங்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கிறதா அது மந்திரம் என்று அழைக்கப்படுகிறது.

மனானாத் த்ராயதே இதிமந்த்ரா.

"ஒரு இரண்டாவது சுயமாக" சிவனின் மகனாக இருக்கும் விநாயகர், இறைவனின் சொல்லான *ஓங்காரமாக* அறியப்பட்டார்.

மூன்று அடிப்படை ஒலிகளான *அகாரம், உகாரம்* மற்றும் *மகாரத்தின்* இணக்கமுள்ள கலவையான பிரணவ மந்திரத்தை நாம் ஜபிக்கும் போது, பரசிவத்தின் சர்வ வியாபக யதார்த்தத்தை பிரதிபலிக்கும் பிரபஞ்சத்தின் அனைத்து அண்ட நடவடிக்கையுடன் பிண்ட நடவடிக்கை தன்னை தொடர்புபடுத்திக் கொள்கிறது.

தொண்டை வரை எழுச்சி பெறும் குண்டலினி நிலைகொண்டு இருக்கும் முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருந்து *அகாரம்* தோன்றுகிறது. ஒருவர் விழித்து இருக்கும் நிலையில் பருஉடல் வழியாக செயல்படும் உயர்ந்த உணர்வு என்கிற *சைதன்யம் வைஷ்வநர* என்று அழைக்கப்படுகிறது மற்றும் அது *அ* என்ற முதல் எழுத்து மூலம் குறிப்பிடப்படுகிறது.

இரண்டாவது நிலையாக இருக்கும் *உகாரத்தில்*, தொண்டையின் ஒலி நுனிநாக்கு வழியாக வெளிவருகிறது. ஒருவரது கனவு நிலையில் சூட்சும உடல் வழியாக செயல்படும் அதே சைதன்யம், *தைஜச* என்று அழைக்கப்படுகிறது மற்றும் அது இரண்டாவது எழுத்தான உ மூலம் உருவகப்படுத்தப்படுகிறது.

மகார ஒலி உதடுகளில் மையம்கொண்டு இருக்கிறது. ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கும் ஒருவரின் காரண உடல் வழியாக செயல்படும் அந்த சைதன்யம் *பிரக்ஞா* என்று அழைக்கப்படுகிறது மற்றும் அது ஓங்காரத்தில் *ம்* என்கிற இறுதி எழுத்தின் மூலம் உருவகப்படுத்தப்படுகிறது.

ஓங்கார மந்திரத்தின் முக்கியத்துவத்தை *தைத்ரீய உபநிடதத்தின் சீக்ஷாவல்லி* தெளிவாக எடுத்துரைக்கிறது.

> *ஓம் இதி பிரம்ம, ஓம் இதிதம் சர்வம்*
> *ஓம் இத்யேத தனுக்ரிதி ஓம் இது சாமானி காயந்தி (1.8).*

இதைப்பற்றி சாந்தோக்ய உபநிடதம்:

> *ஓம் இத்யேதாக்ஷரம் உத்கீதம் உபாசித*
> *ஓம் இது ஹ்யுதகாயதி தஸ்யோப வ்யாக்யானம். (1.1.1).*

கணபதியின் உருவம் மற்றும் அவரது ஓங்கார மந்திரம், மாபெரும் அடையாளத்தின் யதார்த்தத்தை நமக்கு தொடர்ந்து நினைவூட்டுகின்றன. மனிதன் உண்மையில் பிரபஞ்சத்தின் நிழல் உருவகமாக இருக்கிறான். உணர்தல்கள் அனைத்தும் அவனுள் பொதிந்து இருக்கின்றன. அவன் தனது உட்புற தூண்டுதல்கள் மற்றும் உட்புற அமைப்பை ஆய்வு செய்வதால், அவனால் பிரபஞ்சத்தின் இயல்பை புரிந்துகொள்ள முடியும். அச்சத்தில் இருந்து விடுதலை வழங்குவதாக விக்னேசுவரன் உறுதி அளிக்கிறார். அவர் காலம் மற்றும் கால அளவில் இயல்பாக இருக்கும் அச்சத்தை போக்குவதற்கு தேவையான அறிவை புகட்டுகிறார். கணபதியின் ஒலி வடிவ சின்னமாக இருக்கும் சூட்சுமமான ஓங்காரத்தில் என்ன சக்தி மறைந்து இருக்கிறது மற்றும் ஒவ்வொரு சடங்கின் தொடக்கத்திலும் அது ஏன் உச்சரிக்கப்படுகிறது! இதன் பொருள் ஓம் தத் சத்

என்ற மகாவாக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்டு, அண்டம் மற்றும் பிண்டத்தின் அடிப்படை அடையாளத்தை பிரதிபலிக்கிறது.

விநாயகரின் ஓங்கார சின்னங்கள்

கணபதியைக் குறிக்கும் வரைகலை சின்னமாக சுவஸ்திக் விளங்குகிறது. அது மையப்புள்ளி என்ற அடிப்படை ஒற்றுமையில் இருந்து தோன்றிய பன்மடங்கு வளர்ச்சியாக, ஒன்றுக்கொன்று குறுக்கே அமைந்த இரண்டு கோடுகள் மூலம் குறிப்பிடப்படுகிறது. ஆனால் அந்த இரண்டு கோடுகளின் கிளைகளும் மையத்தை நோக்கி இல்லாதவாறு முடிவில் வளைக்கப்பட்டு இருக்கும். பிரபஞ்சத்தின் வெளிப்புற உருவங்கள் மூலம் மனிதனால் நேரடியாக அடிப்படை ஒற்றுமையை அடைய முடியாது என்பதை குறிப்பால் உணர்த்துவதே இதன் நோக்கம் ஆகும்.

தெய்வீகத் தன்மையை நேரடியாக புரிந்துக் கொள்ள முடியாது என்பதாலும், விநாயகர் விக்கினங்களின் ஈசுவரனாக இருப்பதாலும், அவரது துதிக்கை வளைந்து இருக்கிறது. அவர் கையில் இருக்கும் பாசக்கயிறு சாதகர்களுக்கு எதிரியாக இருக்கும் மோகத்தை அழிக்கிறது. அவர் பிரபஞ்சத்தை ஆள்பவர் என்பதை குறிக்கும் வகையில் அவர் கையில் அங்குசம் இருக்கிறது. வரங்களை வழங்கும் கை ஆசைகளை பூர்த்தி செய்கிறது மற்றும் மற்றுமொரு கை அச்சங்களை எல்லாம் தணிக்கிறது. தனக்குள் அந்த தலைசிறந்த தெய்வீக சக்தி இடம்பிடிக்க வேண்டும் என்றும் தான் அதனுடன் இணைய வேண்டும் என்றும் விரும்பும் பக்தர் தொடர்ந்து விநாயகரின் பாதுகாப்பை நாடுகிறார்.

யாவும் கடந்த நிலையில் இருப்பதும் ஓம் கணேஷா. உள்ளார்ந்து இருப்பதும் ஓம் கணேஷா. உயிரினங்களும் ஓம் கணேஷா. இவ்வாறு நாம் ஓம் கணேஷா தத் சத் ஓம் என்ற ஒற்றுமை முழக்கத்தை உருவாக்கியுள்ளோம்.

முப்பத்தேழு ஓங்காரங்களின் வரைபடத் தொகுப்பு

அழகான கையெழுத்தில் உருவான பிரத்யேக ஓங்கார தொகுப்பு, கடந்த சில வருடங்களாக எங்கள் கவாய் மடத்தில் சேகரிக்கப்பட்டு வந்தது. அதனை பின்வரும் பக்கங்களில் *அன்பான விநாயகர்* புத்தகத்தின் தொகுப்பாளர்கள் ஒன்று திரட்டி இருக்கிறார்கள். அவை பெரும்பாலும் தேவநாகரி லிபியில் இருந்தாலும், அவற்றில் சில இந்தியாவின் பிராந்திய மொழிகளிலும் வரையப்பட்டுள்ளன. இந்தியாவின் வளமான ஆன்மீக பாரம்பரியத்தில் இருக்கும் புனிதமான சின்னங்களில் ஓங்காரத்தைப் போன்று அதிக விருப்பத்துடன் பரவலாக வேறு எதுவும் பயன்படுத்தப்படுவது இல்லை. அது தெய்வீகத் தன்மையின் அவதாரமாக இருப்பதால் அழகான கையெழுத்தாளர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் சுவற்றில் வண்ணம் பூசுபவர்கள் சகஜமாக உயர்வான உண்மைப்பொருளை வெளிப்படுத்த அதை தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள்.


எங்களது தலைசிறந்த ஓங்கார தொகுப்பை (மற்றும் விநாயகர்கள், கிராமிய கலைகள் மற்றும் மற்ற இந்திய கலை வடிவங்களைப் போன்ற) உங்களுடன் பகிர்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இப்போது அந்த தொகுப்பு முழுவதும் வரிசைப்படுத்தப்பட்டு இமாலயன் அகாடெமி மியூசியம் ஆஃப் ஸ்பிரிட்சுவல் ஆர்ட் என்கிற ஹம்சா மூலமாக எல்லோருக்கும் கிடைக்கின்றது. சமஸ்கிருத மொழியில் *ஹம்சா* என்பது இந்திய வாத்து அல்லது அன்னப்பறவையை குறிக்கும். அது பரம்பொருள் மற்றும் ஆன்மீகரீதியாக சுத்தமான ஆன்மாவை குறிக்கிறது. ஹம்ச பறவை வானில் பறப்பது என்பது பிறப்பு, இறப்பு மற்றும் மறுபிறவி என்ற சம்சாரத்தில் இருந்து விடுதலை பெற்று, அந்தர்லோகங்களில் நமது ஆன்மா தொடர்ந்து பக்குவம் அடையத் தொடங்குவதை குறிக்கிறது.

வாய்ப்பு, எண்ணிக்கை, பக்தி மற்றும் ஆன்மீகரீதியான முக்கியத்துவத்தில் இந்திய ஆன்மீக கலைக்கு ஈடு இணை வேறு இல்லை. ஹம்சாவில் இருக்கும் ஆயிரக்கணக்கான படங்களை தேடுவோர் (மற்றும் பதிவிறக்கம் செய்ய விரும்புவோர்) அணுகவேண்டிய மின்னஞ்சல் www.himalayanacademy.com/hamsa. இங்கே நூற்றுக்கணக்கான ஓங்காரங்கள் மட்டுமில்லாமல் தலைசிறந்த அரிய படைப்புக்கள், புனிதமான சமயச் சின்னங்கள், படவிளக்கத்துடன் கூடிய எழுத்துக்கள், அலங்கார கரைகள், இந்து தெய்வங்கள், கலாச்சாரம், தத்துவம், புராணம், சிறுவர் கதைகளுடன் மேலும் பல தலைப்புக்களில் கல்விசார் சித்திரங்களையும் காண முடிகிறது.








CHAPTER NINE
Master of the Word



பிருகஸ்பதி

பிருகஸ்பதி

बृहस्पतिः

தத்துவலோகம், பிப்ரவரி-மார்ச், 1990



ஆதிகாலம் முதல் இருக்கும் ஆத்ய ஸ்பந்தா என்ற துடிப்பில் நிலைகொண்டு இருக்கும் தொடர்ச்சியான அதிர்வுகள் *நாதம்* என்ற ஒலி வடிவை பெறுவதாக *தந்த்ரா* கூறுகிறது. இந்த சொல்லே நிரந்தர சொல்லாக *வேதத்தின் நித்தியவாக்காக* இருக்கிறது. இதுவே அனைத்து லோகங்களாக மாறியது. *வாக்* படைக்கும் நோக்கத்தோடு, தனது நான்கு பிரபஞ்ச நிலைகளுடன் இறங்கியது. மனதின் தூண்டுதல் மூலம், பேசும் சக்தி அனைத்தும் நான்கு நிலைகள் அல்லது லோகங்களில் அளவிடப்படுகிறது என்றும், பிரம்மத்தை அறிந்தவர்களால் அவற்றை அறியமுடியும் என்றும் *வேதம்* குறிப்பிடுகிறது. முதல் மூன்றும் மறைபுதிராக இரகசியமாக மறைந்து இருப்பதாகவும், நான்காவதாக இருக்கும் மனிதனின் பேசும் சக்தி, சாதாரண சொல்லாக இருக்கிறது.

அந்த நான்கு நிலைகள் அல்லது அம்சங்கள் பின்வருமாறு. பருப்பொருளின் தூல வடிவமாக இருக்கும் *ஸ்தூல* அம்சம், அந்த தூல வடிவத்திற்கு துணை நின்று அதனை சுற்றி முக்கிய உயிர்சக்தியாக இருக்கும் *சூட்சும* அம்சம், மனதின் கோட்பாடாக இருக்கும் *காரண* அம்சம், மற்றும் வாக்கு தனது ஆரம்பநிலையில் வாசம் செய்யும் *மகாகாரணம்* என்கிற உயர்ந்த தெய்வீக அம்சம். இந்த நான்கும் விழித்து இருக்கும் *ஜாக்ரத்* நிலை, கனவு காணும் போது *சுவப்ன* நிலை, ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது *சுஷுப்தி* நிலை மற்றும் இந்த மூன்றையும் கடந்து நான்காவதாக இருக்கும் *துரிய* நிலை என்று உணர்வின் நான்கு நிலைகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றன.

தந்த்ரீகர்கள் பிரிவின் அடிப்படையை ஏற்றுக்கொண்டு, அதை அன்றாட சூழ்நிலைகளுக்கு பயன்படுத்தி, மனம்-உடல் மற்றும் மனம்-ஆன்மீகம் கண்ணோட்டத்துடன் ஒரு நபர் மீது கவனம் செலுத்துகிறார்கள். அதனால் இயல்பாகவே அவர்களின் யோகத்தில் சூட்சும மையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன மற்றும் அதனால் அவர்கள் நரம்பு மண்டலத்தில் இருக்கும் *வாக்* நிலைகளை கண்டறிருந்து அதற்கு *பரா, பஷ்யந்தி, மத்யமா* மற்றும் *வைகரி* என்று பெயரிடுகிறார்கள். முதலாவதாகவும் மிகவும் உயர்ந்த சக்தியாகவும் இருக்கும் மூலமுதலான *பராவாக்* சாதாரண யதார்த்தத்தை கடந்து இருக்கிறது.

அது வெளிப்படாமல் இருந்தாலும், வெளிப்பாடுகளில் பற்றுகையுடன் இருக்கிறது. இது *மகாகாரணமாக* விளங்குகிறது, மற்றும் முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருக்கும் இதன் மையம், நரம்பு மண்டலத்திற்கு துணை புரிகிறது. இந்த அடிப்பகுதியாக இருக்கும் *மூலாதாரம்*, தூல உயிரின் தூண்டுதல்கள் மையமாக விளங்குகிறது. அடுத்ததாக காரண அம்சத்துடன் உணரும் சொல்லாக இருக்கும் *பஷ்யந்திவாக்*, தொப்புள் மையத்தில் அமைந்து இருக்கிறது. அடுத்ததாக மத்தியில் இருக்கும் *மத்யமவாக்*, தொப்புள் மற்றும் தொண்டையின் சூட்சுமமான நடுப்பகுதியில் இருக்கும் சொல்லை குறிக்கிறது. தொண்டைப் பகுதி *வைகரிவாக்* என்ற பேசும் சக்தியின் வெளிப்படும் பகுதி ஆகும். பிரம்மனஸ்பதியாக இருக்கும் கணபதி வாக்கின் தலைவனாக, சத்ய மந்திரத்தின் கடவுளாக இருக்கிறார். அதனால் *பராவாக்* வடிவில் உயிர்சக்திகளின் பேசும் சக்தி தோன்றும் *மூலாதாரத்தில்* அவர் வாசம் செய்வதாக *தந்த்ரா* கருதுகிறது.


மூலாதார ஆசனம்

ஒரு நிலையான மற்றும் திடமான படைப்பை உருவாக்குவதற்கு, பிரம்மனஸ்பதி மனோஉணர்வு இல்லாத கடலின் ஆழத்திற்குள் இறங்கி செல்வதாக *வேதம்* குறிப்பிடுகிறது. பேரண்டமாக இருக்கும் அண்டத்தில், அவரது படைப்பின் செய்முறை முழுவதும் கீழிருந்து தொடங்குகிறது. நுண்ணுலகமாக இருக்கும் பிண்டத்தில், அவர் அதே செய்முறையை கையாள்கிறார். பிண்டமாக நுண்ணுலகில் இருக்கும் மனிதர்களில் உள்ள இருப்பின் பல்வேறு லோகங்கள் மற்றும் பாகங்கள், இருப்பின் உணர்வு மையங்கள் மற்றும் வலுவான சக்தி மூலங்கள் வாயிலாக நிர்வகிக்கப்படுகின்றன. அவை மேலும் உணர்வு செயல்படுவதற்கு குவி மையங்களாகவும் விளங்குகின்றன. சக்கரங்கள் (சக்தியின் சக்கரங்கள்) அல்லது *பத்மங்கள்* (தாமரை மலர்கள்) என்று அழகாக விவரிக்கப்பட்டு விரிவாக்கம் பெறுவதற்கு தயாராக இருக்கும் இந்த மையங்கள் சூட்சும உடலில் அமைந்து இருந்து, கீழ்நிலையில் தூல பண்புடன் தொடங்கி மேல்நிலையில் மனதின் மையம் மற்றும் ஆன்மீக மையம் வரை ஒரு ஏறு வரிசையில் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்டு இருக்கின்றன. கீழ்நிலையில் இருக்கும் தூல பண்பு, *மூலாதாரம்* என்கிற அதிகம் கீழிருக்கும் மையம் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது மற்றும் இங்கிருந்து கணபதி வெளிப்படாத சொல்லாக செயல்படுகிறார்.

ஔவையார் எழுதிய *விநாயகர் அகவல்* என்ற பாடல், விநாயகர் துதிப்பாடல்களாக இருக்கின்றன. அது பொருத்தமாக *சீதக் களபச் செந்தாமரைப்பூம் பாதச் சிலம்பு பலவிசை பாட* என்று தொடங்குகிறது. “விநாயகரின் பாதங்களை அலங்கரித்து இருக்கும் கால் சிலம்பத்தில் இருந்து எழும் தொனிகள், சந்தனம் போல குளிர்ச்சியாக இருக்கின்றன” என்பதே அதன் பொருள். குளிர்ச்சியான சந்தனம் என்கிற *கந்த*, நிலம் என்கிற *பிருத்வி*

தத்துவத்தின் அளவீடு அல்லது *தன்மாத்ராவாக* விளங்குகிறது மற்றும் செந்தாமரை என்பது சிகப்பு நிற தாமரையை குறிக்கிறது. *மூலாதார* மையமும் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் அது *குலம்* என்று அழைக்கப்பட்டு, கீழ்நிலை தூல பண்பு வாசம் செய்யும் பிருத்வி தத்துவமாக இருக்கிறது. அதைப்போன்று *பாதச்சிலம்பு* என்பது பேசும் சக்தியின் நான்கில் ஒரு பாகமாக இருக்கும் *பராவாக்கை* குறிக்கிறது. *மூலாதாரத்தில்* வாசம் செய்யும் கணபதி *பராவாக்* வடிவமாக இருப்பதாக, இந்த பழங்கால தமிழ் பாடல் அவரை தொடக்கத்திலேயே போற்றுகிறது.

மூலாதாரத்தில் இருக்கும் நிலை ஆற்றல், உறங்கும் நாகசக்தியாக இருக்கும் குண்டலினி சக்தி மூலம் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அங்கிருக்கும் நெருப்பு, தனது பருஉருவில் *ஜடராக்னி* என்கிற தூல நெருப்பாக இருக்கிறது. இந்த நெருப்பு அனைத்து உணவுகளையும் எரித்து, செரிமானம் செய்து, தூல உயிரினங்களை வலுப்படுத்தும் வகையில் அதை உருமாற்றம் செய்கிறது. *வைஷ்வநர* என்பது இன்னொரு வடிவமாக இருக்கும். இது ஒவ்வொரு இருப்பு, *ஜீவன்*, பரமாத்துமா, *புராணங்களில்* வரும் ஸ்கந்தனின் இதயத்தில் இருக்கும் ஆன்மாவாக இருக்கிறது. *வைத்யுத* என்கிற மின்சக்தி இன்னொரு வடிவமாக இருக்கிறது. இதில் இருந்து பேசும் திறன் தோன்றுவதால், இது கணபதியை பிரதிபலிக்கிறது. கணபதி *மூலாதாரத்தில்* சுறுசுறுப்பாக இயங்கும் போது, அவரது அருள் உணரப்படும் போது, குண்டலினி சக்தி விழித்துக் கொண்டு, நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்து, உச்சந்தலை மையத்தை திறக்கச்செய்து, அமுதம் போன்ற பேரானந்த பெருமழையை அமைப்பு முழுவதிலும் நிரப்புகிறது. அதன் பிறகு ஒருவரால் மந்திரத்தில் இறைவனை உணர்ந்து, உணர்வுள்ள மனதில் அந்த இறைவனின் சின்னத்தை அறிய முடிகிறது. இதையே விநாயகர் அகவல் பாடல் “சத்தத்தில் சதாசிவம் காட்டி, சித்தத்தில் சிவலிங்கம் காட்டி” என்று குறிப்பிடுகிறது.




சக்திகள் மற்றும் ஆளுமைகள்


கணபதிக்கு பல சக்திகள் மற்றும் ஆளுமைகள் உள்ளன. பிரபஞ்சம் பல குழுக்கள் (கணங்கள்) வடிவில் படைக்கப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு கணத்திற்கும் ஒரு கணபதி ஒரு கூட்டுத் தலைவராக இருக்கிறார். இவ்வாறு எண்ணற்ற கணநாதர்கள் மற்றும் விநாயகர்கள் இருக்கிறார்கள். *மகாஷோட நியாசத்தில்*, *சாக்த தந்த்ரத்தில்* மட்டும் 51 சமஸ்கிருத எழுத்துக்களான *மாத்ருகாக்ஷரங்களுக்கு* சமமாக பல்வேறு விநாயகர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். குழந்தை வடிவில் இருக்கும் பால கணபதி, சாதகருக்கு எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய விரிவாக்கம் மற்றும் வளர்ச்சியை குறிப்பிடுகிறது. நாட்டியக்காரராக இருக்கும் கணபதி முன்னேற்றத்தை நோக்கிய ஒரு வலுவான முரண்பாடு இல்லாத செயல்பாட்டை குறிப்பிடுகிறார்.

CHAPTER TWENTY

Ganesha Puzzles



Silk Moth Antenna, David Linstead





விநாயகர் புதிர்கள்

கணேஷ ப்ரஹேலிகா:

गनेशप्रहेलिकाः



உமாதேவிக்கு பிறந்த விளையாட்டுத்தனமான, ஆற்றல்மிக்க குழந்தையாக இருக்கும் பால கணேஷா, விநாயகருக்கு பிடித்த வடிவங்களில் ஒன்றாக விளங்குகிறது. நாம் இங்கே நல்ல உணர்வோடு கூடிய வேடிக்கையான வார்த்தை விளையாட்டில் களமிறங்க இருக்கிறோம். இதை விளையாடி மகிழ்ந்திடுங்கள். இது ஒரு வேடிக்கையான ஸ்வாத்யாயம். ஸ்வாத்யாயம் என்பது இந்து சமயத்தில் ஒரு முக்கிய கோட்பாடாக, முக்கிய நடத்தை வழிமுறைகளை குறிக்கும் பழங்கால இயமங்களில் ஒன்றாக விளங்குகிறது. இதைப் பற்றி நாத பரம்பரையின் பதஞ்சலி ரிஷி மற்றும் பலர் விளக்கி இருக்கிறார்கள். இது சாத்திரம் படித்தல், வேத மந்திரங்களை மனப்பாடம் செய்தல், மேன்மையை வழங்கும் ஆன்மீக மகான்களின் கதைகள் மற்றும் சமயம்சார்ந்த சொற்பொழிவுகளை கேட்பதைப் போன்று திட்டமிட்ட நடவடிக்கைகள் வாயிலாக சுய முன்னேற்றம் மீது கவனம் செலுத்துவதை குறிக்கிறது. நாம் நமது உணர்வை பயனற்ற விளைவுகளில் சிதற விடாமல், நம்மை முக்தி நோக்கி அழைத்து செல்லும் வேட்கைகளில், நமது நேரத்தை மனம் மற்றும் புத்தியை பயன்படுத்துகிறோம். ஆனால் இதற்காக கடுமையாக உழைக்க வேண்டிய அவசியம் இல்லை. குழந்தைகளுக்கும் துடிப்புணர்வுள்ள மனங்களுடன் இருப்பவர்களுக்கும், சமய சம்ஸ்காரங்களுடன் மனதை நிரப்பும் பொழுதுபோக்கு அம்சங்கள் கூடிய ஸ்வாத்யாயமும் ஒரு விளையாட்டாக இருக்கும். ஆன்மீக விளையாட்டின் ஈடு இணையற்ற செழுமையுடன் இந்து கலை மற்றும் கலாச்சாரம் பொங்கி வழிகிறது. இந்த அத்தியாயம், தர்மத்தை பற்றி நிரம்பியிருக்கும் வேடிக்கை மற்றும் விளையாட்டுக்களுக்கு ஒரு சிறிய அன்பளிப்பாக விளங்குகிறது.

நினைவாற்றல் சக்கரமாக விளங்கும் *மூலாதார சக்கரத்தில்* விநாயக பெருமான் ஆட்சி புரிகிறார். ஆன்மீக போதனைகள், பாடல்கள் மற்றும் கோட்பாடுகளை நினைவில் வைத்திருக்க அவற்றை மனப்பாடம் செய்வதாக மேலோட்டமாக தோன்றினாலும், அவை *மூலாதார* சக்திகளை உருமாற்றம் செய்ய செயல்படுவதாக யோக விழிப்புணர்வு தெரிவிக்கிறது. நாம் நமது

இயல்பை சீர்திருத்தி, உள்ளுணர்வு சக்திகளை மடைமாற்றம் மற்றும் உருமாற்றம் செய்து, நமது அடியுணர்வு விஷயங்களை விறுவிறுப்பாக மாற்றி அமைக்கிறோம். இந்த சில விளையாட்டுக்கள், நமக்கு பிடித்தமான விநாயகரின் மனதில் இருக்கும் தலைசிறந்த போதனைகள் மற்றும் தர்மத்தின் கலாச்சாரத்தை வரவழைத்து, அவை நமது மனங்களில் வலுவாக பதிய துணை புரியட்டும். ஆன்மீக இயல்புடன் இருக்கும் வார்த்தை விளையாட்டுக்களால் தேவர்களும் மகிழ்ச்சி அடைவதாக ரிஷிகள் கூறுகிறார்கள்.

பாரதத்தை பாதுகாக்கும் கடவுளைப் பற்றிய புதிர் - பாகம் 1

குறுக்காக

1. விநாயகர் ஒரு ___ தேவராக இருக்கிறார்.
3. உங்கள் பிரார்த்தனைக்கு விநாயகர் பலன் அளிக்கும் போது, நீங்கள் அவரிடம் எதை தெரிவிப்பீர்கள்.
5. தங்களை நல்ல மகிழ்ச்சிகரமான பாதையில் __செல்லவேண்டும் என்று இந்துக்கள் விநாயகரை பிரார்த்தனை செய்கின்றனர்.
7. உலகில் இருக்கும் மிகப்பெரிய கணினியை காட்டிலும், விநாயகரின் ____ பெரிதாக இருக்கிறது.
10. _____ வயல்கள் விநாயகருக்கு உகந்தது.
11. விநாயகர் சிலசமயங்களில் _____ அதிபதி என்று அழைக்கப்படுகிறார்.
12. விஷ்ணுவின் இன்னொரு பெயர்.
13. இந்த கீழ்நிலை உள்ளுணர்வு மனமானது ஆசையின் இருப்பிடமாக விளங்கி, கர்மேந்திரியங்கள் மற்றும் ஞானேந்திரியங்களை நிர்வகிக்கவும் செய்கிறது.
14. இரு பிறப்பாளன்.
17. _____ ஒரு சிறந்த நறுமணத்தை கொண்டிருக்கிறது.
18. விநாயகர் சிவபெருமானின் மூத்த ___ ஆவார்.
20. விநாயகருக்கு நான்கு ____ உள்ளன.
21. மக்கள் விநாயகர் சந்நிதிக்கு முன்பாக தரையில் _____ போடுகிறார்கள்.
23. விநாயகர் உருவத்தில் மிகவும் ___.
26. ___ திசையை நோக்கி இருக்கும் ஒரு சிவன் கோயில் ஒரு அக்னி தலம் ஆகும்.
29. மெதுவாகவும் பொறுமையாகவும் செயல்படும் விநாயகர், எப்போதும் ___ செயல்படுவது இல்லை.

32. விநாயகர் பூஜைகள் __ 3:00 மணிக்கு தொடங்குகின்றன.

33. நமது மனங்கள் மற்றும் அனைத்து வடிவங்கள் வழியாக விநாயகரின் _____ பாய்ந்து செல்கிறது.

34. ___ விட விநாயகர் அதிக பிரகாசமாக இருக்கிறார்.

35. பெரும்பாலும் ஜப மாலைகள் செய்ய இந்த இந்திய நறுமண செடி பயன்படுகிறது.

36. துவைதத்தை குறிக்கும் தமிழ் சொல்.

மேலிருந்து கீழ்

1. இந்துக்கள் ஓதும் புனிதமான அட்சரங்கள்.

2. இந்திய பெண்கள் _____ அணிகிறார்கள்.

3. கங்கை ___ அனைத்து இந்துக்களுக்கும் புனிதமானதாக விளங்குகிறது.

4. எப்போதும் கவனமாக முடிவெடுக்கும் விநாயகர், என்றுமே ஒரு ___ முடிவை எடுப்பதில்லை.

6. விநாயகரின் வாகனம்

8. விநாயகர் அமர்ந்துள்ள சக்கரமானது, ஒரு நான்கு இதழ்களைக் கொண்ட _____ .

9. விநாயகர் _____ உருவாக இருக்கிறார்.

15. நாம் எப்போதும் முதலாவதாக வணங்கும் கடவுள்.

16. விநாயகருக்கு பிடித்தமான இனிப்பு வகை.

19. உலகின் அனைத்து ___ பூங்காக்களில் இருக்கும் அனைத்து விலங்குகள் மீது விநாயகர் அன்பு செலுத்துகிறார்.

22. விநாயகர் தனக்கு நெய்வேத்தியம் செய்யப்படும் இனிப்பு வகைகளில், அதிகம் _____ கலந்து இருப்பதை விரும்புகிறார்.

24. விநாயகர் தனது பணியில் ஒரு _____ மற்றும் ஒரு அங்குசத்தை பயன்படுத்துகிறார்.

25. விநாயகர் பூஜைகள் மூலம், உங்கள் உள்ளத்தில் ____ நிரம்புகிறது.

27. தேவர்களின் சேவகன். இது ஒரு பக்தரது பெயரின் முடிவில் பயன்படுத்தப்படுகிறது.

28. இந்துக்கள் விநாயகரை ___ மற்றும் மஞ்சள் பூக்களுடன் வழிபடுகின்றனர்.

30. _____ பூக்களில் இருந்து தேனை சேகரிக்கின்றன.

31. இமய மலையில் ___ அமைந்து இருக்கிறது.

பாரதத்தை பாதுகாக்கும் கடவுளைப் பற்றிய புதிர் - பாகம் 2

குறுக்காக


2. விநாயகர் சிலையை பார்த்ததும், உங்களுக்குள் _____ பொங்குகிறது.
4. விநாயகர் ஒரு _____ முகத்தை கொண்டிருக்கிறார்.
5. நாதசுவரம் மற்றும் சங்கு, கோயிலில் பயன்படுத்தப்படும் இருவகை ஊதும் ____.
6. தனது சகோதரனுடன் நடந்த போட்டியில் விநாயகர் வென்ற பழம்.
8. விநாயகர் அமர்ந்து இருக்கும் பெரிய சக்கரம், நுண்ணுலகத்தின் ஆழத்தில் இருக்கிறது.
10. வியப்பை வெளிப்படுத்தும் ஒரு சொற்றொடர் .
11. விநாயகருக்கு சிறப்பு அர்ச்சனை செய்ய வரும் பக்தர்கள் பெரும்பாலும் தங்களுடன் ஒரு _____ கொண்டு வருகிறார்கள்.
13. தென்கிழக்கு ஆசியாவின் ____, பெரிய அளவில் வெப்பமண்டல மழையை வழங்குகிறது.
15. அரிசி மற்றும் உளுந்து சேர்த்து அரைத்த மாவில், பெரும்பாலும் வட்டவடிவில் தட்டையாக தயார் செய்யப்படும் இந்திய உணவுவகை.
17. பாரம்பரிய இந்து திருமணத்தை குறிக்கும் இன்னொரு பெயர் .
18. விநாயகரின் நினைவாற்றல் வலுவாக இருப்பதால், பல்லாயிரம் வருடங்கள் முன்பாக நடந்ததை அவர் _____ வைத்து இருக்கிறார்.
20. சமஸ்கிருதத்தில் இருக்கும் இந்து சமயத்தின் புனிதமான நூல்கள்
21. விநாயகர் மகாபாரதக் கதையை, தனது ஒரு தந்தத்தைக் கொண்டு ____.
22. முருகபெருமான் தனது சகோதரனுடன் நடைபெற்ற ஒரு போட்டியில் வெற்றிபெறும் முயற்சியில் _____உலகை சுற்றி வந்தார்.

மேலிருந்து கீழ்

1 விநாயகர் நமது பாதைகளில் இருக்கும் தடைகளை நீக்கி, நாம் முன்னோக்கி செல்ல

தூண்டுதலாக பயன்படுத்தும் ஆயுதம்.

3. விநாயகரின் கண்கள் சிறியதாக இருந்தாலும், அவரால் அனைத்தையும் ___ .
4. ஏழை எளியோருக்கு வழங்கப்படும் நன்கொடைகள்.
7. ஒரு நாளில் விநாயகர் ___ மோதகங்களை சாப்பிடுகிறார்.
8. விநாயகர் _____ உலகில் வாழ்கிறார்.
9. விநாயகர் தனது பக்தர்களின் பிரார்த்தனைகளை _____ மறப்பது இல்லை.
10. “உதவி” என்பதை குறிக்கும் இன்னொரு சொல்.
12. அகத்தில் இருக்கும் சூட்சுமமான பரவெளி.
13. கரும்பு வயல்கள் _____ இருக்கும்.
14. அழகாக பலவண்ணங்களில் இருக்கும் இந்திய துணிகளில் ___ பல்வேறு கரிம பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.
16. மகாராஷ்டிரா மாநிலத்தில் இருக்கும் பிரபல விநாயகர் கோயில்களின் எண்ணிக்கை.
17. விக்னேசுவரன் என்றும் _____ அழைக்கப்படுகிறார்.
19. விநாயகர் விசாலமான_____ கூர்மையுடன் இருப்பதால், நமது பிரார்த்தனைகளுக்கு எப்போது எப்படி பலன் தருவது என்பதை எப்போதும் நினைவில் வைத்து இருக்கிறார்.



பெரிய உடலுடன் இருக்கும் கடவுளைப் பற்றிய புதிர்

[இந்த புதிரைப் பற்றிய முக்கிய குறிப்பு: பதில்கள் சமஸ்கிருத மொழியில் உள்ளன.]

குறுக்காக

2. செல்வம், மனித இருப்பின் இரண்டாவது குறிக்கோள்.
5. நல்ல கர்மவினை, நேர்மையான செயல்.
8. நீங்கள் தொடர்ந்து தர்மத்தை கடைப்பிடித்து, கோயில் செல்வதற்கும் பூஜை செய்வதற்கும் தகுதி பெறும் போது, நீங்கள் எந்த நிலையை அடைகிறீர்கள்.
9. பக்தி பாடல்கள், கீர்த்தனைகளை தனியாக அல்லது குழுவாக பாடுதல்.
12. நமக்கு மிகவும் முக்கியமான சாத்திரங்கள்.
14. மோட்சத்தை குறிக்கும் இன்னொரு சொல்.

15. விநாயகரின் பீஜ மந்திரம்.

18. தீய கர்மவினை, தவறான செயல்.

20. நிரந்தரம், இதை சரியான நேரத்தில் தொடர்ந்து செய்ய வேண்டும்.

22. அன்பு, இன்பம், மனித இருப்பின் மூன்றாவது குறிக்கோள்.

23. இயற்கையின் அசைவற்ற, கருத்த, பருமனான, மந்தமான, அறியாமை நிறைந்த பண்பு.

24. மருட்சி, லௌகீக இருப்பின் மீது ஆசை மற்றும் பற்று.

26. பூஜையின் போது காண்பிக்கப்படும் ஒளி.

மேலிருந்து கீழ்

1. ஒரு கோயில் அல்லது மடத்தில் இருக்கும் ஒரு கூடம்.
2. நெருப்பின் கடவுள்.
3. அந்த பரமாத்துமாவை குறிக்கும் சமஸ்கிருத சொல்.
4. ஒரு மாலையை பயன்படுத்தி, பொதுவாக ஒரு குறிப்பிட்ட முறை மனதில் ஒரு மந்திரத்தை எண்ணிக்கொண்டு, அதை சிரத்தையுடன் தினமும் தொடர்ந்து சொல்லும் ஆன்மீகப் பயிற்சி.
6. ஆன்மா.
7. பிரணவம்.

10. இரண்டாவது உலகில் இருக்கும் கீழ்நிலை லோகம். இங்கே தற்காலிகமாக ஆன்மாக்கள் சுயமாக உருவாக்கிய மிகவும் கொடிய மனநிலைகளை அனுபவிக்கிறார்கள்.

11. “மங்களகரமானவர்” என்று பரமாத்துமாவை குறிக்கும் இன்னொரு சொல்.

13. நெற்றிக்கண் சக்கரம்.

16. ஜபம், திருநாமங்களை பாராயணம் செய்ய பயன்படும் பொருள்.


17. நடுவில் ஒரு தேங்காயுடன், ஐந்து மாவிலைகள் செருகப்பட்டு இருக்கும் ஒரு தண்ணீர் பாத்திரம்.

19. இது விநாயகரின் வாகனம். இது வழக்கமாக செழுமையுடன் தொடர்புடையதாக இருக்கிறது.

21. பூர்ணம், அரிசி மாவு மற்றும் இதர பொருட்களை கலந்து தயாரிக்கப்படும் ஒரு இனிப்பு வகை. இது மறைஞான ரீதியாக தூய ஆனந்தம் அடையும் சித்தியை குறிக்கிறது.

25. உள்நின்று உறைந்து இருக்கும் உண்மை.

ஞானப்பழம் பற்றிய புதிர்



குறுக்காக

1. மோக்ஷத்தை குறிக்கும் இன்னொரு சொல்.
5. அகத்தில் இருக்கும் இறைவனின் பொது மனதுடன் தனிப்பட்ட மனம் ஐக்கியமாதல்.
6. ஆன்மாக்கள் முதிர்ச்சி அடைவதில் துணை புரிவதற்காக, இந்த மகாதேவரை சிவபெருமான் படைத்தார். இவர் ஆனைமுகத்துடன் கலை மற்றும் அறிவியலுக்கு காவலாளியாக, சிவபெருமானின் முதல் மகனாக, விக்கினங்களை நீக்கும்

ஈசுவரனாக இருக்கிறார்.

8. ஆசிரியர், வழிகாட்டி, அறியாமை இருளை நீக்குபவர்.

9. அமைதி.

10. அன்பான விநாயகர் இந்த பாம்பை செல்லப்பிராணியாக கொண்டிருக்கிறார். பலர் பாம்பை கண்டு அஞ்சுகிறார்கள். ஆனால் அது நம் எல்லோருக்குள்ளும் இருக்கும் குண்டலினி என்றும், எல்லோரும் அனைத்து துன்பங்களையும் கடந்து வரலாம் என்றும் அவர் நமக்கு தெரிவிக்கிறார்.

11. நமது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்பதை தெரிவிக்கும் வண்ணம், அன்பான விநாயகர் ஆசையை நிறைவேற்றும் இந்த மரத்தின் சிறு கிளையை கையில் பிடித்து இருக்கிறார். நமது ஆசைகள் நிறைவேற, அவரிடம் சொன்னால் போதும்.

12. கோடைகாலத்தில் வெப்பம் அதிகமாக இருப்பதால், அன்பான விநாயகர் இந்த குளிர்விக்கும் கருவியை பயன்படுத்தி பக்தர்கள் மனங்களில் இருக்கும் கடந்தகாலத்தை நீக்கிக்கொண்டு இருக்கிறார்.

18. சிவபெருமானின் திருநாமங்களில் ஒன்று. “சிறந்த தேவர்” அல்லது “ பிரகாசமாக சிறந்து விளங்குபவர்.”

19. மகாதேவர் மற்றும் ஓங்காரத்தை குறிக்கும் சின்னம் மற்றும் மந்திரம்.

21. பூஜை, நடனம் மற்றும் ஹட யோகத்தில் கைகளால் தெரிவிக்கப்படும் சைகைகள்.

22. “நான் முதன்முதலில் ஒரு விவேகமான செயலை செய்த போது, இதை சிவபெருமான்

தனது சொந்த கைகளால் வழங்கினார். இது மிகவும் உயர்ந்த ஆன்மீக பலனை குறிக்கிறது,” என்று அன்பான விநாயகர் இந்த பழத்தை பற்றி கூறுகிறார்.

23. தந்திகளை மீட்பதால் தெய்வீக இசையை வழங்கும் கருவி. அதன் ஒரு புறம் குடமும் மறுபுறம் யாழி முகம் மற்றும் சுரைக்காயும் பொருத்தப்பட்டு இருக்கும்.

மேலிருந்து கீழ்

2. எல்லையற்ற காலகட்டங்களை குறிக்கும் சொல்.

3. “குணங்கள் இல்லாத.” இது பரபிரம்மம் அல்லது பரசிவத்தை குறிக்கும் சொல்.

4. இல்லறத்தில் இருக்கும் ஆண் அல்லது பெண். மனித வாழ்வில் பிரம்மச்சரியம் அல்லது மாணவப்பருவத்திற்கு பிறகு, ஒருவர் தனது தொழில், வீடு மற்றும் குடும்பத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் காலகட்டம்.

7. அன்பான விநாயகர் இந்த கருவியை பயன்படுத்தி சோம்பலுடன் இருப்பவர்களுக்கு, தூண்டுதலை வழங்கி அவர்களின் பிறவி கர்மவினைகளில் முன்னேறுகிறார்.

9. “நன்கு தேர்ச்சி பெற்றவர் அல்லது திறமையானவர்.” ஒரு சந்நியாசியாக இல்லாமல் வெள்ளை நிற ஆடைகளை அணிந்து ஆன்மீக சடங்குகளில் பங்குபெறும் ஒரு பிரம்மச்சாரி.

13. இரண்டாவது லோகத்தில் இருக்கும் நுணுக்கமான மற்றும் தூல பண்பில்லாத பரிமாணம்.

14. அமைதி, மௌனம், நிம்மதி மற்றும் சாந்தமான இயல்பு

15. அன்பான விநாயகர் தனது பக்தர்களில் சிலருக்கு துன்பம் வரவிருப்பதை அறிந்து, அவர்கள் ஈர்த்து இருக்கும் தீய சக்திகளிடம் அவர்களுக்கு அன்போடு பாதுகாப்பு அளிக்க, இந்த கருவியை பயன்படுத்துகிறார்.


16. சிரத்தையுடன் செய்யும் கடும் முயற்சி மற்றும் பயிற்சி.

17. சுவாசத்தின் முக்கிய உயிர் சக்தி.

20. அன்பான விநாயகர் இந்த கருவியை பயன்படுத்தி, பக்தர்கள் அனுபவிக்க வேண்டிய கர்மவினைகள் முழுமையாக கரையும் வரை, அவற்றை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார்.



ஆன்மீக மர்மங்களின் கடவுள் பற்றிய புதிர்



குறுக்காக

2. அன்பான விநாயகர், தனது சகோதரன் முருகப்பெருமானைப் போன்று, இந்த மாபெரும் ஆயுதத்தை வைத்து இருக்கிறார். இதன் மூலம் அவர் மனம் மீது ஆன்மாவும், பருபொருள் மீது மனமும் ஆதிக்கம் செலுத்த துணை புரிகிறார்.
5. திடநம்பிக்கை.
8. இரண்டாம் லோகத்தில் கீழ்நிலை சூட்சும லோகத்தில் வாழும் “தெய்வீக பண்பு இல்லாத” ஒரு உயிர்சக்தி. இது சிலசமயம் “துர்தேவதை” என்று அழைக்கப்படுகிறது.
9. விநாயகரின் தலைமையில் சிவபெருமானுக்கு துணையாக இருக்கும் தேவர்களின் குழு.
10. வேதங்களின் முடிவில் வருவன. அவை மக்களின் கேள்விகள் மற்றும் ரிஷிகளின்

பதில்கள் மூலம் தத்துவத்தை போதிக்கின்றன.

12. மங்களம் மற்றும் அதிஷ்டத்தை தரும் பழங்கால இந்து சின்னம். அந்த சின்னத்தில் மேலிருந்து கீழும் இடமிருந்து வலமாகவும் குறுக்காக செல்லும் இரு கோடுகளும் முடிவில் வலஞ்சுழியாக தொண்ணூறு டிகிரி திரும்பி இருக்கின்றன.

16. “கடவுள்.” இது கோயிலில் ஸ்தாபனம் செய்யப்பட்ட *மூர்த்தி* அல்லது அந்த *மூர்த்தி* பிரதிநிதித்துவம் செய்யும் மகாதேவரை குறிப்பிடலாம்.

17. அன்பான விநாயகர் தியாக உணர்வுடன் தன்னிடம் இருந்த இதை உடைத்து, தான் தொடங்கிய பணியை நிறைவு செய்தார். இதன் மூலம் நாம் தொடங்கிய செயலை நிறைவு செய்யவேண்டும் என்று அவர் தெளிவாக தெரிவிக்கிறார்.

18. ஒளி பொருந்திய அந்தர்லோக சக்திகள்.

21. ஒவ்வொரு இந்து கடவுளும் அமர்ந்து இருக்கும் விலங்கு. இது அந்த கடவுளின் ஒரு கடமையை குறிப்பிடுவதாக இருக்கிறது.

23. இது தென்னைமரத்தில் பழுக்கும். வெளியே பழுப்பு நிறத்தில் கடினமாகவும், உள்ளே மென்மையாக வெள்ளை நிற பருப்புடனும் அமைந்து இருக்கும்.

24. உக்கிரமாக, அமைதியற்று இருக்கும் இயல்பு.

25. அவர் இதை தன் வில்லைக் கொண்டு எய்கிறார்.

மேலிருந்து கீழ்

1. இந்த விதைகளில் செய்த ஜப மாலையுடன், சிவபெருமானின் திருவடிகளில் அன்பான விநாயகர் அமர்ந்து இருக்கிறார்.

3. இந்த மற்றும் மற்ற கிரகங்களில் இருக்கும் இந்த புனித நூல்களை எல்லாம் அன்பான

விநாயகர் தொகுத்து அமைக்கிறார்.

4. இது முன்வினை பயன் அல்லது காரண காரியத்தை குறிக்கும் கோட்பாடு ஆகும். இத்துடன் இது நாம் இந்த மற்றும் முற்பிறவிகளில் செய்த செயல்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய எதிர்வினைகளின் முழுமையையும் குறிக்கிறது.


5. ஆன்மீக சக்தி அல்லது தேர்ச்சி, மெய்ஞ்ஞான திறமைகள், நிறைவேற்றம்.

6. “ஆழமான சேற்றில் இருந்து அழகாகவும் உயரமாகவும் வளரும்” இந்த மலரைப் போல நாமும் இருக்கவேண்டும் என்று அன்பான விநாயகர் விரும்புகிறார்.


7. இது ஒரு சிகப்பு நிற சிறிய வட்டமாக புருவமத்தியில் இட்டுக் கொள்ளப்படுகிறது. இது ஆக்ஞா சக்கரம் செயல்படத் தொடங்கி, மெய்ஞ்ஞான ஆன்மாவின் பார்வையுடன் காண்பதை குறிக்கிறது.

11. நீர்ச்சத்து அதிகமுள்ள இந்த கிழங்கின் மீதுள்ள விருப்பத்தால், நமக்கு தேவையான ஆரோக்கியமான உணவை நாமே வளர்க்க அன்பான விநாயகர் தூண்டுதலை வழங்குகிறார்.
12. தொன்றுதொட்டு இந்து சமயத்தில் பரம்பரை பரம்பரையாக காதால் கேட்டு மனதில் இருத்தி வைத்து பிறர்க்கு உபதேசிக்கப்பட்ட சாத்திரங்கள்.
13. அன்பு, ஞானம், செயல்பாடு என்று மூன்றும் ஒன்றாக இணைந்த சிவனின் சக்தியை குறிப்பிடும் விதமாக மூன்று கூரிய முனைகளுடன் ஈட்டி போன்று இருக்கும் ஆயுதம்.
14. இந்த கயிற்றை அன்பான விநாயகர் பிரத்யேகமான முறைகளில் பயன்படுத்தி, தனது பக்தர்களை தனக்கு அருகில் கொண்டு வருகிறார் மற்றும் அதன் மூலம் வழி தவறி செல்பவர்களை காப்பாற்றவும் செய்கிறார்.
15. ஒரு வீடு அல்லது கோயில் அல்லது சமய சடங்குகள் நடைபெறும் இடங்களின் நுழைவாயிலில், அரிசி மாவு அல்லது பல வண்ண பொடிகளை பயன்படுத்தி நுணுக்கமான அலங்கார வடிவங்களை “வரையும்” புனிதமான கலை.
19. ஒவ்வொரு நபரின் அகத்தில் இருக்கும் இந்த சக்கரம் நினைவாற்றல், காலம் மற்றும் பரவெளியை நிர்வகிக்கிறது. இது முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருக்கிறது. இங்கே அன்பான விநாயகர் வீற்று இருக்கிறார்.
20. இந்த சாவா மருந்தை அன்பான விநாயகர் தன்னிடம் இருக்கும் கிண்ணத்தில் வைத்து இருக்கிறார்.
22. தெய்வீக விதி; உயிரினங்கள் பின்பற்ற வேண்டிய விதி; நேர்மையான பாதை அல்லது “ஒருவரின் உண்மையான இயல்பை தக்க வைக்க துணை புரியும் ஒன்று.”


அனைத்திலும் மறைந்து இருக்கும் கடவுள்


12
13
11
31
14
9
10
30
32
15
16
8
7
17
18
6
5
60
20
29
4
19
56
21
59
61
3
28
55
22
33
57
58
62
23
24
27
2
25
63
65
66
64
1
26
67
68
54
49
71
69
80
48
70
52
50
51
53
78
79
35
34
72
47
36
37
38
39
77
40
41
46
42
45
44
43
76

பாரதத்தை பாதுகாக்கும் கடவுளைப் பற்றிய புதிருக்கான விடைகள் - பாகம் - 1



பாரதத்தை பாதுகாக்கும் கடவுளைப் பற்றிய புதிருக்கான விடைகள் - பாகம் - 2


1அ
2ம கி ழ் ச் சி
3கா
ங்
4யா னை
ண
கு
ச
5 வா த் தி ய ங் க ள்
மு
ச
க
டி
6மா ம்
7ப ழ ம்
8மூ லா தா ர
கி
ல
ன்
9எ
ற
10ஆ ஹா
11கூ டை யை
றா
12ஆ
ன்
து
த
13ப ரு வ க் கா ற் று
ர
சு
து
ச
மே
14 நி
வு
மை
ம்
ற
15 தோ சை
யா
மே
16எ
17வி வா க ம்
18நி னை வி ல்
ற்
ட்
நா
ற
டு
19 பு
ய
20 சா த் தி ர ங் க ள்
த்
க
21எ ழு தி னா ர்
22இ டை வி டா து


தர்மம் பற்றிய புதிருக்கான விடைகள்

ஞானப்பழம் பற்றிய புதிருக்கான விடைகள்

ஆன்மீக மர்மங்களின் கடவுள் பற்றிய புதிருக்கான விடைகள்



		[1]ரு			[2]வ	ஜ்	ர	ம்				[3]சா		[4]க
[5]சி	ர	த்	தை									த்		ர்
த்		ரா		[6]தா		[7]பொ			[8]அ	சு	ர	ச	க்	தி		ம
தி		ட்		ம		ட்								ர		வி
		ச		ரை		டு		[9]க	ண	ங்	க	ள்		ங்		னை
		ம்												க		
							[10]உ	ப	நி	ட	த	ங்	க	ள்	[11]மு	
[12]சு	வ	ஸ்	[13]தி	க்											ள்	
ரு			ரி					[14]பா					[15]கோ		ள்	
தி			சூ					ச					ல		ங்	
			ல					க்			[16]தெ	ய்	வ	ம்	கி	
[17]த	ந்	த	ம்		[18]தே	வ	ர்	க	ள்							
								யி			[19]மூ			[20]அ		
[21]வா	க	ன	ம்		[22]த			று			லா			மி		
					ர்						தா			ர்		
[23]தே	ங்	கா	ய்		ம						[24]ர	ஜ	ஸ்	த		
				[25]அ	ம்	பு					ம்			ம்		



CHAPTER TEN

Mantra Recitation

Carbon Nanotubules, Paul Marshall



ஜபம்

ஜபஹ

जपः



ஜபம் என்பது பெரும்பாலும் 108 முறை ஒரு மந்திரத்தை சொல்வதைப் போல, ஒரு குறிப்பிட்ட முறை ஒரு மந்திரத்தை சிரத்தையுடன் தொடர்ந்து உச்சரிக்கும் ஆன்மீக பயிற்சி ஆகும். இந்த பயிற்சியின் போது, மந்திரப் பொருளின் மீது அக்கறையுடன் கவனம் செலுத்தி, கையில் ஒரு ஜபமாலை கொண்டு ஜபம் கணக்கிடப்படுகிறது. தொடர்ந்து மந்திரம் சொல்லும் செய்முறை பணிவோடு மெதுவாக இருக்க வேண்டும். இதனால் பக்தன் *புண்ணியம்* சம்பாதிக்கிறார். அது அக்கறையின்றி இயந்திரம் போல அல்லது அவசரமாக, விரைவாக அல்லது இயந்திர துப்பாக்கி போல செய்யும் ஜபமாக இருக்கக்கூடாது. அது தந்த்ரங்கள் பற்றிய அறியாமையையே விளக்குகின்றன. அதைப்போன்று ஒழுங்குமுறை சாராமல், அலட்சியமாக இருந்து ஆழ்ந்த தியான சடங்குகளை புறக்கணிப்பதால் பக்தனுக்கு பாபம் சேர்ந்து, உள்ளத்தில் மனப்போராட்டம் தோன்றுகிறது மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் சமூக எதிர்ப்பு மற்றும் குழப்பங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஜபம் என்பது ஒரு வகை பக்தி வழிபாடு, மங்கள சுலோகம், பிரார்த்தனை, துதிப்பாடல், ஆராதனை, தியானம் மற்றும் நேரடி அனுபவம் நிறைந்த சத்சங்கத்தை குறிப்பிடுகிறது. பெரும்பாலான மக்களுக்கு கடினமாக இருக்கும் (முழுமையான ஒடுக்கம் என்கிற) சமாதி நிலையில் நாம் இல்லை என்றால், ஜபம் என்பது விரைந்தோடும் நமது சிந்தனைகள் மற்றும் பெரும்பாலும் எதிர்மறையான கடந்தகால நினைவுகளில் இருந்து விடுதலை பெறும் வழியாக விளங்குகிறது. தொடர்ந்து நேர்மறையான, உற்சாகம் தரும் ஆன்மீக மந்திரங்களை சொல்வதன் மூலம் உணர்வு உயர்த்தப்பட்டு, *மூலாதார* சக்கரம் வலஞ்சுழியாக சுற்றுகிறது. நாம் உற்சாகம் பெறுகிறோம். வாழ்க்கையும் கடந்தகாலமும் மோசமாக தோன்றுவது இல்லை. மன்னிக்கும் மனப்பான்மை தோன்றி எதிர்காலம் பிரகாசமாக காட்சி அளிக்கிறது. கடந்தகாலம் மறக்கப்பட்டு மன்னிக்கப்படுகிறது.

சிந்தனை மற்றும் மனதின் சக்தி, ஒலி வடிவமாக வாக்கில் இருக்கிறது. பழங்கால ரிஷிகள் வாக்கு பற்றிய தகவலை அறிவியலாக மாற்றி, தங்கள்

மனங்களை அந்தர்லோகங்கள் மீது திசை திருப்பி, அங்கிருந்த சக்திகளை ஆவாகனம் செய்து, தங்கள் தெய்வங்கள் மற்றும் தேவர்களுக்கு சூக்தங்கள், பிரார்த்தனைகள் மற்றும் மந்திரங்கள் மூலம் தங்களது சிந்தனைகளை வழங்கினார்கள். தெய்வத்தின் மனதில் இருந்து *வாக்* தோன்றியதாக இந்து மதத்தின் அடிப்படையாக விளங்கும் *வேதங்கள்* கூறுகின்றன. அதன் விரிவாக்கங்கள் முன்பாக தோன்றி, உட்புற மனதின் சூட்சும வடிவங்களை தோற்றுவிக்கின்றன. இந்த சூட்சும வடிவங்கள் தங்கள் பங்கிற்கு நாம் காணும் வெளிப்புற லௌகீக வடிவங்களை தோற்றுவிக்கின்றன.

> அவரது அந்த வாக்கின் மூலம், அந்த பரமாத்துமாவின் துணையுடன், அவர் இருப்பது அனைத்தையும் படைத்தார்.
>
> *சுக்க யஜூர் வேதம், சதபத பிராமண*
> 10.6.5.5. *தி வேதிக் எக்பெரியன்ஸ்* ப. 106

> இது [தொடக்கத்தில்] பிரபஞ்ச கடவுளாக இருந்தது. அவரது வாக்கு அவரிடம் அவருக்கு துணையாக இருக்கிறது. அவர் ஆழ்ந்து தியானம் செய்து, "நான் இந்த வாக்கை வழங்குகிறேன். அவள் இதன் மூலம் சிருஷ்டி செய்து இந்த உலகத்திற்கு இருப்பை வழங்கட்டும். "
>
> *சாம வேதம், தாண்ட்ய மகா பிராமண*
> 20.14.2. *தி வேதிக் எக்பியரியன்ஸ்* ப.107

> வாக்கு என்பது எல்லையற்று, அளவற்று, யாவும் கடந்து இருக்கிறது... அனைத்து தேவர்கள், விண்ணுலக சக்தி, மனிதர்கள் மற்றும் விலங்குகள் அந்த வாக்கில் வாழ்கிறார்கள். இந்த வாக்கில் உலகங்கள் அனைத்தும் தங்கள் பற்றுக்கோடை தேடிக்கொள்கின்றன.
>
> *கிருஷ்ண யஜூர் வேதம், தைத்ரீய பிராமண*
> 2.8.8.4. *தி வேதிக் எக்பெரியன்ஸ்* ப. 107

நவீன அறிவியல் சரியான பாதையில் சென்றுகொண்டு இருக்கிறது என்பதற்கு வேதத்தின் கருத்து கூடுதல் உறுதியை வழங்குகிறது. பருப்பொருள் என்று எதுவும் இல்லை என்றும், காலம் மற்றும் பரவெளியின் விசைப்பகுதிகள் மட்டுமே இருப்பதாகவும், அவை பல்வேறு செறிவுகளுடன் புலப்படுகின்றன என்றும் குவாண்டம் மின்காந்தமண்டலம் பற்றிய கோட்பாடுகள் தெரிவிக்கின்றன. இதனால் கரிம அணு ஒரு பருப்பொருளாக இல்லாமல், ஒரு குறிப்பிட்ட செறிவில் இருக்கும் காலம்-பரவெளி-ஆற்றலின் விசைப்பகுதியாக இருக்கிறது.

அணுக்கரு இயற்பியலாளர்களால் ஒரு அறையில் இருக்கும் ஆற்றலின் விசைப்பகுதிகளை மாற்றி, ஒரு மூலப்பொருளை இன்னொன்றாக உருமாற்ற முடியும். நமக்கு கரிமம் உருவாக்கும் மந்திரம் தெரிந்து இருந்து நாம் அதை முறையாக உச்சரித்தால், நாம் ஒரு குறிப்பிட்ட காலம்-பரவெளி-ஆற்றலை உருவாக்கி சில கரிம துகள்களை வண்டலாக படிய வைக்க முடியும். இதை சில

மறைபொருள் வித்தகர்களால் தங்கள் மனங்களில் உருவாக்கி, பொருட்களை வெளிப்படுத்த முடியும். அத்தகைய மாயவித்தை மனம், ஒலி மற்றும் வடிவத்திற்கு மத்தியில் இருக்கும் தொடர்பை வெளிப்படுத்துகிறது. இது மந்திரங்களில் இருக்கும் அடிப்படை ஆன்மீக யதார்த்தத்தை குறிப்பிடுகிறது. ஒவ்வொரு மகாதேவரின் தெய்வீக பண்புடன் தொடர்பில் இருக்கும் ஒரு மந்திர வடிவத்தில் அவரை புலனால் உணர்ந்து, விவரிக்கவும் முடியும் என்பதை உணர்வது தான் முக்கியம் ஆகும். இந்த அனுபவம் ஒரு நபரின் முகத்தை நினைவில் வைத்து இருக்காமல் அவரது பெயரை நினைவில் வைத்து இருப்பதை போன்றது ஆகும். நாம் அத்தகைய ஒரு மந்திரத்தை உச்சரிக்கும் போது, நாம் அந்த மகாதேவருக்கு அழைப்பு விடுக்கிறோம் அல்லது நமது மனங்களில் ஒரு குறிப்பிட்ட உட்புற உண்மை தோன்றுவதற்கு காரணமாக அமைகிறோம். அதன் பிறகு நாம் அவரது சன்னிதானத்தை உணர்ந்து மகிழ்கிறோம்.

இருவகை மந்திரங்கள்

இரண்டு அடிப்படை மந்திரங்கள் உள்ளன. அதில் ஒருவகை மந்திரம் மிகவும் வலுவாக இருக்கிறது. நாம் அதன் ஒலிகளின் பொருளை அறிந்து இருந்தாலும் அறியவிட்டாலும், அது நம்மை சுற்றியுள்ள விசைப்பகுதிகளில் உடனடியாக நேரடி மாற்றங்களை நிகழ்த்துகின்றன. இந்த மந்திரங்களை சரியாக உச்சரிக்கவில்லை என்றால் தீவிர தீங்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதால், இவற்றை தீட்சை மற்றும் முறையான அறிவுறுத்தலுக்கு பின்னரே பயன்படுத்த வேண்டும். அமெரிக்காவின் நவஜோ பழங்குடி இனத்தில் மந்திரம் பாடுபவர்கள் வைத்தியம் பார்க்க பயன்படுத்தும் வலுவான மந்திரங்களின் தாக்கம் பல நாட்களுக்கு நீடித்து இருக்கும். சமீபகாலத்தில் ஒரு நவஜோ பாடகர், ஒன்பது நாட்கள் பாடவேண்டிய பாடலில் ஐந்தாவது நாளில் தவறாக பாடியதால் அவருக்கு உடலில் ஊனம் ஏற்பட்டது. இந்த செய்தி பத்திரிகைகளில் வெளியாகி உள்ளது. அதன் பிறகு அவர் ஆற்றல் குறைவான மந்திரங்களை பயன்படுத்த தொடங்கினார்.



இரண்டாவது வகை மந்திரங்களின் வலிமை குறைவாக இருக்கக்கூடும் அல்லது அவற்றை தவறாக பயன்படுத்தினால் அல்லது தவறாக உச்சரித்தால் அவற்றின் வலுவான அதிர்வுகள் சீர்குலையாமல் இருக்கக்கூடும். இந்த வகை மந்திரங்களில், அந்தர்லோக சக்தி அல்லது கருத்தில் கவனம் செலுத்தும் நமது மனதின் சக்தி காரணமாக அந்த மந்திரம் அதிக பலன் தருவதாக இருக்கிறது. நாம் கவனச்செறிவுடன் இல்லையென்றாலும், அந்த மந்திர சக்தியால் ஒரு அதிர்வு அல்லது உருவத்தை மட்டுமே தூண்ட முடியும். பெரும்பாலான வேத மந்திரங்கள் மற்றும் மகாதேவர்களின் பெயர்கள் மற்றும் காயத்ரி மந்திரங்கள் இந்த பிரிவை சேர்ந்தவை. பெரும்பாலான வேத மந்திரங்கள் சிறிய துதிப்பாடல்கள் மற்றும் பிரார்த்தனைகளாக இருக்கின்றன. சமஸ்கிருத மொழி உருவாக்கும் நேர்மறையான, ஊக்கமளிக்கும் விசைப்பகுதிகள் அந்தர்லோகங்களுக்குள் உடனடியாக ஊடுருவுகின்றன.

மன ஒருமுகப்பாடு மற்றும் பக்தியுடன் இறைவனின் நாமத்தை தொடர்ந்து சொல்லும் ஜபத்திற்கு எனது *சத்குருவான* யோகசுவாமி அதிக முக்கியத்துவம்

அளித்தார். “மந்திரம் தான் செயல், மந்திரம் தான் அன்பு என்ற வாழ்க்கையின் மந்திரத்தை நாம் மறக்க வேண்டாம் மற்றும் மந்திரத்தை தொடர்ந்து உச்சரிக்கும் ஜபம் அகத்தில் இருக்கும் ஞானத்தை வெளிக்கொண்டு வருகிறது. ஞானம் குறிக்கோளாக இருக்கும் போது, ஜப யோகத்தை முதலாவதாக செய்யவேண்டும். கோயிலில் ஜபம் செய்யுங்கள். புனித மரத்தடியில் ஜபம் செய்யுங்கள். நான் இந்த பிறவி முழுவதும் ஒரு அமைதியான *சாதனையாக* ஜபம் செய்தேன். இது தற்போது எனக்கு இயல்பாகி விட்டது,” என்று அந்த சிறந்த ஞானி விளக்கம் அளித்தார். “ருத்ராட்ச மாலை அணிந்து பஞ்சாட்சர ஜபம் செய்யுங்கள். உங்கள் இதயம் மென்மையாகி உருகட்டும். ஐந்து எழுத்துக்களை ஜபிக்கும் போது, அன்பின் மூலம் நீங்கள் அவரது விருப்பத்தை தெரிந்துக் கொள்வீர்கள். மனதில் இருக்கும் மாசுகள், கவலைகள் மற்றும் சந்தேகங்கள் அழியுமாறு சிரத்தையுடன் ஜபம் செய்யுங்கள். நமச்சிவாய வாழ்கவே என்று எல்லோரும் ஒன்றாக சேர்ந்து சொல்லுங்கள்,” என்று யோகசுவாமி தனது சைவ அன்பர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாசுபடிந்த நீர் இருக்கும் பாத்திரத்திற்கு தொடர்ந்து சுத்தமான நீரை வழங்குவதால் அந்த பாத்திரத்தின் நீர் சுத்தமடைவதைப் போல, மந்திரங்களை மெதுவாக சொல்லும் போது மனம் சுத்தமடைகிறது. சுத்தமான நீரை தொடர்ந்து வழங்குவதன் மூலம் ஒரு பாத்திரத்தின் அடியில் இருக்கும் மாசு மேலே எழும்பி, அதில் இருந்து வெளியேறுகிறது மற்றும் இறுதியில் அந்த பாத்திரத்தில் தெள்ளத் தெளிவான நீர் மட்டுமே நிரம்பி இருக்கிறது. மந்திரங்களின் சுத்தமான அதிர்வுகள், அசுத்தமான அதிர்வுகளை தளர்த்தி அவற்றை நீக்கி விடுவதால், ஜபம் மனதின் மாசுகளை சுத்தம் செய்கிறது.

ஓங்கார ஜபம்

விநாயகப் பெருமான் ஓங்கார மந்திரம் மூலம் ஆவாகனம் செய்யப்படுகிறார். மிகவும் உயர்வான ஞானத்தை உள்ளடக்கியுள்ள ஓங்காரத்தின் உட்பொருளை *மாண்டூக்ய உபநிடதம்* விளக்குகிறது. ஓங்காரம் மூன்று எழுத்துக்களை கொண்டுள்ளது. அகாரம் விழித்து இருக்கும் நிலையையும், உகாரம் கனவு காணும் நிலையையும், மகாரம் ஆழ்ந்த உறக்கத்தையும் குறிப்பிடுகின்றன. ஓங்காரம் முழுவதும், அதைப் பின்தொடரும் அமைதியும், புரிதலை கடந்த அமைதியாக இருக்கும் *சாந்தியை* குறிப்பிடுகிறது. இவ்வாறு நமது இதயங்களில் இருந்து அன்பு பொங்கி வெளிவருவதோடு காரணமின்றி கண்களில் இருந்து ஆனந்த கண்ணீரும் பெருகி வரும் போது, ஞானம் மற்றும் அறிவின் கடவுளாக இருக்கும் விநாயகரை ஆவாகனம் செய்யும் ஓங்கார ஜபம், இந்த நான்கு உணர்வின் நிலைகளில் நமது இருப்பு முழுவதையும் பற்றிய அறிவை வரவழைக்கிறது. இந்த லோகங்கள் மீது கணங்களின் தலைவராக இருக்கும் விநாயக பெருமான் ஆட்சி புரிகிறார் மற்றும் ஓங்கார ஜபம் செய்து

அந்த ஓங்காரத்தின் பொருள் மீது தியானம் செய்யும் பக்தர்களுக்கு, அவர் இந்த அறிவையே வழங்குகிறார்.

ஓங்கார ஜபம் பலன் தருவதற்கு, அந்த மந்திரத்தை சரியாக உச்சரிக்க வேண்டும். முதலில் அகாரத்தை சிறிது நீளமாக உச்சரிக்க வேண்டும். இரண்டாவதாக உகாரத்தை நீளமாக உச்சரிக்க வேண்டும். மூன்றாவதாக மகாரத்தை உச்சரிக்கும் போது முன் இருக்கும் பற்கள் ஒன்றுக்கொன்று சிறிது தொட்டுக்கொண்டு "ம்ம்ம்ம்" என்று நீளமாக உச்சரிக்கவேண்டும். அகாரத்திற்கு இரண்டு நொடிகள், உகாரத்திற்கு இரண்டு நொடிகள் மற்றும் மகாரத்திற்கு இரண்டு நொடிகள் மற்றும் ஒரு நொடி அமைதியாக இருக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு உச்சரிப்பும் ஏழு நொடிகள் நீடிக்க வேண்டும். மூன்று எழுத்துக்களும் ஒன்றாக சேர்ந்து உச்சரிக்கும் போது அ-உ-ம் (அமைதி), அ-உ-ம் (அமைதி), அ-உ-ம் (அமைதி) என்று தொடர வேண்டும். முதல் எழுத்தான அகாரத்தை உச்சரிக்கும் போது சூரிய பின்னல் மற்றும் நெஞ்சில் அதிர்வை உணர வேண்டும். இரண்டாவது எழுத்தான உகாரத்தை உச்சரிக்கும் போது தொண்டையில் அதிர்வை உணரவேண்டும். மூன்றாவது எழுத்தான மகாரத்தை உச்சரிக்கும் போது, தலையில் அதிர்வை உணரவேண்டும். இவ்வாறு ஓங்காரத்தை முறையாக உச்சரித்து, உடலில் கீழ்நிலையில் இருக்கும் சக்கரத்தில் இருந்து மிகவும் உயர்வான சக்கரத்திற்கு அல்லது உச்சந்தலையில் ஆற்றல் மையமாக இருக்கும் *சஹஸ்ரஹார சக்கரத்திற்கு*, ஆற்றலை இயக்குவதும் ஒரு உயர்வான யோக வடிவம் ஆகும்.

முழுமையாக மூச்சை உள்ளிழுத்து அதை வெளியிடும் போது, மூன்று முறை ஓம் என்று உச்சரித்து ஜபம் செய்வது, இன்னொரு பாரம்பரிய முறை ஆகும். முதல் உச்சரிப்பு காதால் கேட்கும் படியாக இருக்கும், இரண்டாவது சற்று அமைதியாகவும் இருக்கும். மூன்றாவது உச்சரிப்பின் போது நீங்கள் அகத்தில் ஒருமுகப்பட்டு இருப்பதால் இறுதி உச்சரிப்பை சிறிதும் கேட்க முடியாது. அதன் பிறகு நீங்கள் மெதுவாக மூச்சை உள்வாங்கும் போது, உங்கள் மனதில் அன்பான விநாயகர் உருவத்தை கற்பனை செய்துகொள்ளுங்கள். அதன் பிறகு மூச்சை வெளியிடும் போது, ஓங்காரத்தை மீண்டும் மூன்று முறை உச்சரியுங்கள். செயற்கையாக இல்லாமல் இயல்பாக, மெதுவாக மற்றும் கால லயத்துடன் சுவாசிக்க வேண்டும். நாம் 108 மணிகளுடன் இருக்கும் ஒரு ஜப மாலையை பயன்படுத்தி, ஒவ்வொரு ஜபத்திற்கும் ஒரு மணியை நகர்த்தலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு ஜபம் செய்யலாம்.

இரண்டு பிரபல விநாயகர் மந்திரங்கள்

வழக்கமாக மேலும் இரண்டு விநாயக மந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதில் ஒன்று *ஓம் ஸ்ரீ கணேஷாய நம*:. "விநாயகப் பெருமான் போற்றி போற்றி" என்பதே அதன் பொருள். இது ஆவாகனம், ஆராதனை மற்றும் வழிபடுவதற்கு பயன்படும் மந்திரம் ஆகும். இது பூஜைகளின் தொடக்கத்தில் தொடர்ந்து

உச்சரிக்கப்படுகிறது மற்றும் இந்த மந்திரத்தை ஜபம் செய்யலாம். ஒரு பணி, திட்டப்பணி, வாழ்க்கையில் ஒரு முக்கிய மாற்றம் அல்லது சமூகப் பொறுப்பை மங்களகரமாக தொடங்கும் போது விநாயகரின் அருளை ஆவாகனம் செய்வதற்கு அல்லது அவரை வாழ்த்துவதற்கு அந்த மந்திரத்தை பயன்படுத்தலாம். *ஓம் கம் கணபதயே நம:* என்பது இன்னொரு விசேஷமான மந்திரம் ஆகும். இது விநாயகரின் "*மூல*" மந்திரம் ஆகும். இது அவரைப் போற்றும் "கணபதி போற்றி" என்ற சொற்றொடருடன், அவரது பீஜ ("விதை") மந்திரத்தை இணைத்து இருப்பதால், இது அவரது *பீஜ* மந்திரம் என்றும் அழைக்கப்படுகிறது. யோக *சாதனையாக* பயன்படுத்தப்படும் இந்த மந்திரத்தில், நாம் கணபதியை ஆவாகனம் செய்து, நம்மை அவரது ஞானம் மற்றும் அமைதியுடன் ஐக்கியமாக்கிக் கொள்கிறோம். இந்த இரண்டு மந்திரங்களை சில சமயங்களில் தவறாக உச்சரித்தாலும் தீங்கு விளையாது என்றாலும், முடிந்தவரை அவற்றை முறையாக உச்சரிப்பதால் நல்ல பலன் கிடைக்கும். இந்த மந்திரத்தை தினமும் ஒரு குறித்த நேரத்தில் உச்சரிப்பது மிகவும் முக்கியம் ஆகும். இதனால் தெய்வீக ஆதரவு முழுமையாக கிடைக்கும்.

நீங்கள் வீட்டில் பூஜை செய்யும் இடம் ஒதுக்குப்புறமாக அல்லது சிறிய அலமாரியாக இருந்தாலும், விநாயகரின் கணங்கள் மற்றும் தேவர்கள் அந்த பூஜை அறைக்கு ஈர்க்கப்படும் போது, அந்த அறை முழுவதும் ஆன்மீக காந்த சக்தி நிரம்புகிறது. அந்த அறைக்குள் திடீரென்று ஆற்றல் தோன்றும். இந்த உணர்வு விநாயகரின் கணங்கள் இருக்கிறார்கள் என்பதும், அவர்கள் *சாந்தி* என்கிற அமைதியை வீட்டில் நிலைநாட்டி, குடும்பத்தினரை ஒன்றாக இணைப்பதில் ஆர்வம் மற்றும் விருப்பத்துடன் இருப்பதையும் குறிப்பிடுகிறது. அதிக ஆர்வத்துடன் பிரார்த்தனை செய்வதாலும், அவர்கள் என்றும் கெட்ட செயல், மனதை புண்படுத்துவது அல்லது தீங்கு விளைவிக்கும் செயலில் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் செயல்களில் நல்ல பண்பு மற்றும் நன்மை மட்டுமே இருக்கும். அவர்கள் பழிவாங்கும் செயலை மன்னிக்க மாட்டார்கள். அவர்கள் தர்மத்திற்கு கட்டுப்பட்டு இருக்கும் பக்தர்களின் வேண்டுதல்களை மறுக்க மாட்டார்கள். அவர்கள் குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொரு நபரின் *பிராரப்த கர்மவினைகளுடன்* தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். குடும்பம் வெகு தொலைவில் பிரிந்து இருந்தாலும், அதில் ஒற்றுமையை பராமரிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டு செயல்படுகிறார்கள்.

இந்த *கணங்கள்* பல டிரில்லியன் கணக்கில் இருக்கிறார்கள் மற்றும் அவர்கள் சிரத்தையுடன் இருப்பவர்களின் வீடுகளில் சேவை செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள். இவர்களுக்கு நமது அன்பான விநாயகர் விரிவான விளக்கத்துடன், குடும்ப ஒற்றுமையை மேம்படுத்தும் திட்டப்பணியை வழங்கி இருப்பதால், இன்று அவர்கள் சீனா, ஜப்பான் மற்றும் உலகின் பெரும்பாலான நாடுகளில் அந்த பணியை செய்து வருகிறார்கள். அவர்கள் காரணமாக குடும்ப வாழ்க்கை சீராக இயங்குகிறது, பாதுகாப்பு என்பது உடனடியாகவும்

இயல்பாகவும் கிடைக்கிறது. இதனால் எல்லோரும் எல்லோர் மீதும் அன்பு மற்றும் நல்ல எண்ணங்களுடன் பிணைந்து இருந்து, எல்லோரும் ஒருவருக்கொருவர் ஆதரவு அளித்துக்கொள்ளும் ஒரு பாதுகாப்பான சூழலில் குடும்பத்தினர் அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். வீட்டில் இருக்கும் *பிராண* சக்திகளின் இந்த நுணுக்கமான வேலையைத் தான், நமது விநாயகரின் கணங்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு தலைமுறையிலும் செய்து வருகிறார்கள். அவர்கள் இவ்வாறு செய்வதன் மூலம் உன்னத சொர்க்கலோகத்தில் வெகுமதிகளை பெறுகிறார்கள். மனிதர்கள் தங்களது அக இன்பத்தின் துணையுடன் சிறப்பாக செயல்படும் ஆச்சாரமான சமூகத்தை சேர்ந்த பக்குவமடைந்த சந்நியாசிகளாக இல்லையென்றால், குழுவோடு சேர்ந்து இருக்கும் அவர்களால் சுயமாக சிறப்பாக செயல்பட முடியாது. பெரிய குடும்பங்களை இணைத்து வைத்து, எதிர்காலத்தின் எதிர்காலங்களில் வரவிருக்கும் பல தலைமுறைகளுக்கு செல்வத்தை தக்கவைக்கும் பணியை விநாயகரின் *கணங்கள்* மேற்கோள்கிறார்கள். தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சாதனைகள் செய்து விநாயகரை ஆவாகனம் செய்தால், உங்களுக்கு வெதுமதி அளிக்க அவர் தனது *கணங்களை* அனுப்புவார். உங்கள் பூஜை அறையில் பால், தேன் மற்றும் இனிப்புகளை அவர்களுக்கு நெய்வேத்தியமாக வையுங்கள். இந்த நெய்வேத்தியம் உங்களுக்கு, உங்கள் குடும்பத்திற்கு மற்றும் உங்களுக்கு பிடித்தமான நபர்களுக்கு செய்யப்பட்ட நற்பணிகளுக்கு ஒரு வெகுமதியாக கருதப்பட்டு, அவர்களுக்கு திருப்தி அளிப்பதாக இருக்கும்.

மூன்று விநாயக காயத்ரி மந்திரங்கள்



பிரத்யேகமாக மூன்று அடிகளுடன் அமைந்திருக்கும் வேதத்தின் *காயத்ரி* என்கிற யாப்பு வகை, ஆவாகனம் செய்து தெய்வத்தின் மீது உணர்வை ஒருமுகப்படுத்த மந்திரங்களில் பயன்படுத்தப்படுகிறது. கீழே குறிப்பிடப்பட்டு இருக்கும் மூன்று *காயத்ரிக்கள்*, பூஜைகள் மற்றும் *யக்ஞங்களில்* ஓதப்படுகின்றன. அவற்றை தொடர்ந்து உச்சரித்து ஒரு ஜபமாகவும் செய்யலாம். அவ்வாறு செய்யும் போது,

விநாயகருடன் ஒரு வலுவான ஆன்மீக தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள, ஒருவர் தனது குரு வழங்கிய பிராணாயாம விதிமுறையை பின்பற்ற வேண்டும்.

ॐ एकदन्ताय विद्महे
वक्रतुण्डाय धीमहि।
तन्नो दन्तिः प्रचोदयात्

ஓம் ஏகதந்தாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி பிரசோதயாத்

ஓம்! நாம் ஒற்றை தந்தம் மற்றும் வளைந்த துதிக்கையுடன் இருக்கும் தெய்வத்தை தியானிப்போம். அவர் நமக்கு நல்ல புத்தியை வழங்கி, சரியான பாதையில் வழிநடத்தி செல்லட்டும்.

கணபதி உபநிடதம்

ॐ तत्पुरुषाय विद्महे
वक्रतुण्डाय धीमहि ।
तन्नो दन्तिः प्रचोदयात्

ஓம் தத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி பிரசோதயாத்

ஓம்! நாம் உன்னத ஆத்மாக வளைந்த துதிக்கையுடன் இருக்கும் தெய்வத்தை தியானிப்போம். அவர் நமக்கு நல்ல புத்தியை வழங்கி, சரியான பாதையில் வழிநடத்தி செல்லட்டும்.

நாராயண உபநிடதம்

ॐ तत्कराटाय विद्महे
हस्तिमुखाय धीमहि ।
तन्नो दन्तिः प्रचोदयात्

ஓம் தத்கராடாய வித்மஹே
ஹஸ்திமுகாய தீமஹி
தன்னோ தந்தி பிரசோதயாத்

ஓம்! நாம் துதிக்கையை அசைத்து பக்தர்களை ஆசிர்வதிக்கும் அந்த ஆணைமுகக் கடவுளை தியானிப்போம். ஒற்றை தந்தம் உடைய அவர் நம்மை சரியான பாதையில் வழிநடத்தி செல்லட்டும்.

*மைத்ராயணி சம்ஹிதா*2.6-9

விநாயகர் மந்திரங்களின் ஒரு விசேஷ தொகுப்பு

லார்ட் கணேஷா என்ற தலைப்பில் சத்குரு சந்த் கேஷவதாஸ் எழுதிய புத்தகத்தில் இருந்து ஒரு பகுதி

விநாயகர் மந்திரங்கள் சித்தி மந்திரங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு மந்திரமும் விநாயகரின் சில குறிப்பிட்ட சக்திகளை கொண்டிருக்கிறது. அவற்றை முறையான பிராணாயாமம் மற்றும் சிரத்தை பக்தியுடன் உச்சரிக்கும் போது, நமக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். பொதுவாக விநாயக மந்திரங்கள் தீய சக்திகளை தடுத்து, பக்தனுக்கு செழுமை, விவேகம் மற்றும் வெற்றியை வழங்கி அருள் செய்கின்றன. விநாயகர் மந்திரங்கள் உச்சரிக்கப்படும் வீடு அல்லது மனதில் தீய சக்திகள் நுழைவது இல்லை. *மூலதாரத்திற்கு* கீழிருக்கும் ஏழு சக்கரங்கள் பற்றிய அறிவு மற்றும் அதிக ஆன்மீக ஈடுபாட்டுடன் இருப்பவர்கள், இந்த மனதின் பகுதிகளை ஒன்றன் பின் ஒன்றாக மூடுவதோடு வலுவான மனச்சோர்வு, குழப்பம், பொறாமை, கடுங்கோபம், பொங்கி எழும் கோபம் மற்றும் அச்சத்தில் இருந்து உணர்வை விடுவிக்க ஒரு குருவின் வழிகாட்டலுடன் இந்த வலுவான மந்திரங்களை பயன்படுத்துவார்கள். அத்தகைய சில மந்திரங்கள் வாசகர்கள் பயன் பெறுவதற்காக இங்கே வழங்கப்பட்டுள்ளன.

இந்த மந்திரத்தை ஜபிக்கும் முன்பாக ஒருவர் குளித்துவிட்டு அல்லது கை கால்களை அலம்பிக்கொண்டு அமர்வது மிகவும் முக்கியம் ஆகும். இத்துடன் மந்திரத்தை உச்சரிக்கும் முன்பாக ஒருவர் இரண்டு அல்லது மூன்று முறை *பிராணாயாமம்* செய்யவேண்டும். குறைந்தபட்சம் ஒரு மாலையில் இருக்கும் மணிகளின் எண்ணிக்கை அளவு அல்லது 108 முறை ஜபம் செய்யவேண்டும். இது ஒரு குறிப்பிட்ட நேரம் மற்றும் இடத்தில் நாற்பத்தி எட்டு நாட்களுக்கு தொடர்ந்து செய்யும் போது, இது *உபாசனை* என்கிற தீவிர தியானமாக மாறி, ஆன்மீக சக்திகள் அல்லது சித்திகளை வழங்குகிறது. அத்தகைய சக்திகளை நோயால் வாடுபவர்கள் மற்றும் மனிதநேயம் பயன்பெறுவதற்கு செய்யும் சுயநலமற்ற சேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதிலும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். சக்திகளை தவறாக பயன்படுத்தினால் அசுரர்களின் சாபத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும்.

ॐ गं गणपतये नमः

ஓம் கம் கணபதயே நம:

இந்த மந்திரம் *கணபதி உபநிடதத்தில்* இடம்பெற்று இருக்கிறது. ஒருவர் தான் செய்யும் முயற்சியில் இருக்கும் தடைகள் நீங்கி வெற்றி கிடைக்கவேண்டும் என்று ஒரு பயணம், ஒரு பள்ளியில் புதிய பாடம், ஒரு பணி அல்லது வேலை தொடங்கும் முன்பாக அல்லது ஒரு புதிய ஒப்பந்தம் அல்லது வியாபாரத்தில் நுழையும் முன்பாக இதை நிச்சயம் பயன்படுத்துகிறார்.

ॐ श्री गणेशाय नमः

ஓம் ஸ்ரீ கணேஷாய நம:

இந்த மந்திரம் வழக்கமாக குழந்தைகள் நன்றாக படிக்கவேண்டும் என்பதற்காக கற்றுத் தரப்படுகிறது. இது அவர்களின் நினைவாற்றலை அதிகரிப்பதால், அவர்கள் தங்கள் பரீட்சைகளில் வெற்றி பெறுகிறார்கள். இந்த மந்திரத்தை பள்ளி அல்லது பல்கலைக்கழகத்தில் சேரும் மாணவர்களும், தாங்கள் ஒரு நல்ல பாடத்திட்டத்தை தேர்வு செய்து, அதில் பட்டம் வாங்குவதற்கும் பயன்படுத்தலாம்.

ॐ श्री वक्रतुण्डाय हुं

ஓம் ஸ்ரீ வக்ரதுண்டாய ஹூம்

இது *கணேச புராணத்தில்* வரும் ஒரு அதிக ஆற்றல்மிக்க மந்திரம் ஆகும். தனிப்பட்ட முறையில் அல்லது பூலோக அளவில், தேசிய அளவில் அல்லது சர்வதேச அளவில் ஏதாவது தவறாக நடக்கும் போதும் அல்லது மக்களின் மனங்கள் நேர்மையற்று, எதிர்மறையாக, மனச்சோர்வுடன் அல்லது தன்னம்பிக்கை இழந்து இருக்கும் போதும், இந்த மந்திரத்தின் மூலம் அவர்களின் வாழ்க்கைகளை ஒழுங்குபடுத்த விநாயகரின் கவனத்தை கோரலாம். "நேர்மையற்று வழிதவறி செல்லும் மனங்களின் பாதைகளை ஒழுங்குபடுத்த இனியும் தாமதிக்க வேண்டாம்" என்பதை *ஹூம்* என்ற பதம் குறிப்பிடுகிறது. இந்த மந்திரம் கொடிய அரக்கர்களின் அட்டுழியத்தை கட்டுப்படுத்த பல முறை *கணேச புராணத்தில்* பயன்படுத்தப்பட்டுள்ளது. இது மட்டுமில்லாமல், இந்த மந்திரத்தை பயன்படுத்தி வளைந்த முதுகெலும்பு தொடர்பான குறைபாடுகளை அல்லது வளைந்த கை கால்களை குணப்படுத்தலாம். அத்தகைய குறைபாடுகளை குணப்படுத்த இந்த மந்திரத்தை 1,008 முறை ஜபிக்க நேரம் ஒதுக்குங்கள்.

ॐ क्षिप्रप्रसादाय नमः

ஓம் க்ஷிப்ரபிரசாதாய நம:

க்ஷிப்ர என்றால் உடனடியாக என்று பொருள். நீங்கள் ஒரு ஆபத்து அல்லது எதிர்மறை சக்தியை எதிர்கொள்ள வேண்டியிருந்து, அதை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் திணறும் போது, உடனடியாக இறையருளை பெற்று உங்கள் ஒளிஉடலை சுத்தி செய்ய இந்த மந்திரத்தை மனப்பூர்வமான பக்தியுடன் ஜபம் செய்யுங்கள்.

ॐ श्रीं ह्रीं क्लीं ग्लौं गं गणपतये वर वरद सर्वजनम्मे वशमानय स्वाहा

ஓம் ஸ்ரீ ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே வர வரதே சர்வஜனம்மே வஷமானய ஸ்வாஹா

இந்த மந்திரத்தில் பல *பீஜ* (விதை) மந்திரங்கள் உள்ளன. "இறைவனே, எனக்கு உங்கள் அருள் கிடைக்கட்டும். நான் எனது ஆணவத்தை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்," என்பதையும் இந்த மந்திரம் குறிப்பிடுகிறது.

ॐ सुमुखाय नमः

ஓம் சுமுகாய நம:

இந்த மந்திரம் பல அர்த்தங்களை வழங்கினாலும், உங்கள் ஆன்மா மற்றும் முகம் எப்போதும் அழகாக இருக்கும் என்பது ஒரு எளிமையான பொருள் ஆகும். இந்த மந்திரத்தை தியானம் செய்யும் போது, உங்கள் பழக்கங்கள் மிகவும் இனிமையாக இருப்பதுடன் முகத்தில் ஒரு பொலிவும் தோன்றுகிறது. அத்துடன் வரும் அமைதி உங்கள் கண்களில் நடனமாடுகிறது மற்றும் நீங்கள் பேசும் வார்த்தைகளில் அன்பின் சக்தி நிரம்பி இருக்கின்றன.

ॐ एकदन्ताय नमः

ஓம் ஏகதந்தாய நம:

ஏகதந்தா என்பது ஆணைமுகத்தில் உடைந்த ஒரு தந்தத்தை குறிக்கிறது. இறைவன் இருமையை உடைத்து, நீங்கள் ஒருமுகப்பட்ட மனதோடு இருக்கவேண்டும் என்று வற்புறுத்தினார். ஒருமுகப்பட்ட மனம் மற்றும் ஒருமுக பக்தி இருப்பவர், விரும்பியது அனைத்தையும் அடைகிறார்.

ॐ कपिलाय नमः

ஓம் கபிலாய நம:

கபில (சிவப்பு) என்பது நிறங்களால் அளிக்கும் வைத்தியத்தை குறிக்கிறது. நீங்கள் உங்களை சுற்றியும் மற்றவர்களை சுற்றியும் நிறங்களை உருவாக்கி, அவர்களை அதில் குளிக்க செய்து குணப்படுத்த முடியும். எந்த நிறத்தை நினைக்கிறீர்களோ, அந்த நிறத்தை உருவாக்குகிறீர்கள். இன்னொன்று ஆசைகளை பூர்த்தி செய்யும் காமதேனுவை குறிப்பிடுகிறது. இதன் மூலம் நீங்கள் விரும்புவது கிடைத்துவிடும். மற்றவர்களை குணப்படுத்த நீங்கள் விரும்புவது உடனடி பலனைக் கொடுக்கும்.

ॐ गजकर्णिकाय नमः

ஓம் கஜகர்ணிகாய நம:

விநாயகருக்கு இருக்கும் யானையின் பெரிய காதுகள், தொடர்ந்து காற்று வீசிக்கொண்டு இருக்கின்றன. இது மக்கள் அதிகம் பேசிக்கொண்டு இருந்தாலும், முக்கியமானதை மட்டுமே உள்வாங்குவதை குறிப்பிடுகிறது. நீங்கள் ஒரு இடத்தில் அமர்ந்துகொண்டு ஏழு சேனல்கள் (சக்கரங்கள்) மற்றும் 72,000 *நாடிகளுடன்* இருக்கும் இந்த பிரபஞ்ச தொலைக்காட்சியை (உடல்) ஏதாவது ஒரு *லோகத்துடன்* டியுன் செய்து பித்ருக்கள், தேவதூதர்கள் பேசுவதை அல்லது தெய்வத்தின் குரல் அல்லது ரிஷிகளின் குரலை கேட்கலாம். நீங்கள் இந்த மந்திரத்தின் மூலம் அத்தகைய ஆற்றல்மிக்க ஆன்மீகக் காதை உருவாக்க முடியும்.

ॐ लम्बोदराय नमः

ஓம் லம்போதராய நம:

இது நீங்கள் இந்த பிரபஞ்சமாக இருப்பது மற்றும் இந்த பிரபஞ்சங்கள் அனைத்தும் உங்களுக்குள் இருக்கும் உணர்வை குறிப்பிடுகிறது. ஒரு பெரிய மரம் முழுவதும் சிறிய விதையில் அடங்கி இருப்பதைப் போலவும், பிரபஞ்சம் முழுவதும் சிருஷ்டியின் ஒலியான ஓங்காரத்தில் அடங்கி இருப்பதைப் போலவும், நீங்கள் பிரபஞ்சமாக இருக்கிறீர்கள் என்பதை உங்களுக்குள் இருக்கும் பிரபஞ்ச உணர்வு வழங்குகிறது. அதனால் பிரபஞ்சத்துடன் ஒருமையை உணர்கிறேன், “உலகில் *சாந்தி* நிலவட்டும்" என்று நீங்கள் தினமும் கூறினால், உங்களுக்கு இறையருள் கிடைக்கும் மற்றும் உலகம் மற்றும் பிரபஞ்சத்தில் அமைதி நிலவும். இது பிரபஞ்சங்கள் ஓங்காரத்தில் இருப்பதையும், அந்த ஓங்காரம் உங்களுக்குள் இருப்பதையும் குறிக்கிறது.

ॐ विकटाय नम:

ஓம் விகடாய நம:

இது இந்த உலகை ஒரு கனவு அல்லது ஒரு நாடகமாக உணர்வதை குறிக்கிறது. நீங்கள் அந்த உயரிய உணர்வில் இருக்கும் போது, பூலோகம் முழுவதும் உங்களுக்கு ஒரு கனவு போலவும் தோன்றும். நாம் எல்லோரும் ஒரு பாத்திரத்தை ஏற்று இருக்கிறோம். நாம் வாழ்க்கையில் ஒரு மனைவி அல்லது கணவன் அல்லது குழந்தைகள் அல்லது குடிமகன்களின் பொறுப்பை வகிக்க வேண்டியிருக்கிறது. இவை அனைத்தும் நாம் ஏற்ற பொறுப்புடன் முரண்பாடு இல்லாமல் இருக்கின்றன. மேடையில் நடிக்கும் ஒரு சிறுவனை ஒரு பொம்மை பாம்பு கடித்ததும், அவன் மயங்கி விழுகிறான். இதனால் பார்வையாளர்கள் அனைவரும் அழுகிறார்கள். ஆனால் கீழே விழுந்த சிறுவனுக்கு அது உண்மையான பாம்பு இல்லை என்பதும், தான் இறக்கவில்லை என்பதும் தெரியும். தான் ஒரு பொம்மை பாம்பு கடித்து இறக்கவில்லை என்று அதிக மகிழ்ச்சியுடன் மேடையில் நடித்த சிறுவன் இருப்பதைப் போல, அகத்தில் இருக்கும் உண்மை என்றும் இறக்காமல் அழியாமல் இருக்கிறது. அதனால் மற்ற அனைத்தையும் ஒரு நாடகமாக கருதுங்கள். இந்த மந்திரத்தை அறிவதன் மூலம் உங்களுக்கு அந்த உணர்வு தோன்றுகிறது.

ॐ विघ्नाशनाय नम:

ஓம் விக்னநாஷனாய நம:

இந்த மந்திரம் உங்கள் வாழ்க்கை மற்றும் உங்கள் பணிகளில் இருக்கும் அனைத்து தடைகளையும் நீக்குவதற்கு விநாயகரை ஆவாகனம் செய்கிறது. இந்த மந்திரத்தை தொடர்ந்து ஜபிப்பதன் மூலம், உங்கள் தூல மற்றும் சூட்சும உடல்களில் இருக்கும் தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டு முடக்கப்பட்ட சக்திகள் அனைத்தும் விடுவிக்கப்படுகின்றன.

ॐ विनायकाय नम:

ஓம் விநாயகாய நம:

இவர் பொற்காலத்தில் *விநாயகர்* என்ற பெயரைப் பெற்றார். அதனால் இந்த மந்திரத்தை நீங்கள் புரிந்துகொள்வதன் மூலம், நீங்கள் ஒரு பொற்காலத்தை அனுபவிப்பீர்கள். உங்கள் பணியில் நீங்கள் முதலாளியாக இருப்பீர்கள். விநாயகா என்றால் கட்டுப்பாட்டில் இருப்பது என்றும் பொருள். விநாயகா என்றால் பிரச்சனைகளின் கடவுள் என்று பொருள்.

ॐ धूम्रकेतवे नमः

ஓம் தூம்ரகேதவே நம:

ஹாலீஸ் காமெட் என்கிற வால் நட்சத்திரம், *வேதங்களில்* தூம்ரகேது என்று அழைக்கப்படுகிறது. ஹாலீஸ் காமெட் காட்சி தரும் போதெல்லாம், பூமி மற்றும் மற்ற இடங்களில் அச்சம் மற்றும் திகில் நிலவுகிறது. வழிகாட்டும் ஆசான்கள் மற்றும் அந்த சூழலை எதிர்கொள்ள தேவையான விவேகத்துடன் இருப்பவர்கள் உயர்ந்த லோகங்களில் ஒடுங்குகிறார்கள். இந்த காலகட்டத்தில் முக்கிய நபர்களின் உயிர் பிரிகிறது. அத்துடன் கொலைப்பழி மற்றும் வேறு பல பிரச்சனைகளும் முளைக்கின்றன. இவற்றை சமாளிப்பதற்கும் உலக அமைதி பெறுவதற்கும் இந்த மந்திரத்தை நினைவில் வைத்து இருப்பது முக்கியம் ஆகும்.

ॐ गणाध्यक्षाय नमः

ஓம் கணாத்யக்ஷாய நம:

இது மிகவும் முக்கியமான மந்திரம் ஆகும். உங்களிடம் ஒரு குழு, ஒரு நாடு, அக்கம் பக்கத்து நண்பர்கள் இருந்தால் அல்லது குழு மருத்துவம், குழு சிகிச்சை அல்லது நாடு முழுவதற்கும் வைத்தியம் தேவைப்பட்டால், அந்த குழுவினர் அனைவரையும் உங்கள் மனதின் பகுதிக்குள் அழைத்து வந்து இந்த மந்திரத்தை சொல்லுங்கள். இந்த மந்திரத்தின் மூலம் குழுவினர் அனைவரும் குணப்படுத்தப்படுகிறார்கள்.

ॐ भालचन्द्राय नमः

ஓம் பாலச்சந்திராய நம:


சமஸ்கிருதத்தில் *பால* என்பது நெற்றியின் மத்தியில் இருக்கும் பகுதியை குறிப்பிடுகிறது. *சந்திர* என்பது பிறை வடிவில் இருக்கும் சந்திரனை குறிக்கிறது. *பாலசந்திர* என்பது அமுதம் வழியும் சக்கரத்தை குறிக்கிறது. இதுவே குணப்படுத்தும் செய்முறையின் இரகசியம் ஆகும். உங்களை சிவபெருமானாக உணர்ந்து, மெய்ப்பொருளுடன் உங்களை அடையாளம் கண்டுகொண்டு, வளர்ச்சி மற்றும் அமுதம் மற்றும் அமைதியின் சின்னமாக இருக்கும் பிறை சந்திரனை நீங்கள் சுமந்து இருப்பதாக உணர்வதை இது குறிக்கிறது.

ॐ गजाननाय नमः

ஓம் கஜாநநாய நம:

ஆணைமுகக் கடவுளை நான் வணங்குகிறேன் என்பதே இதன் பொருள். இது ஆணவத்தை விலக்கி, அந்த இடத்தை ஓங்காரத்திற்கு வழங்குவதை குறிக்கிறது. இது தலையில் எல்லையற்ற உணர்வாக இருக்கும் சைதன்யம் நிரம்புவதை குறிக்கிறது.






CHAPTER TWENTY-ONE

Hinduism: the Greatest Religion in the World

Solar panels. Shutterstock


EXOTIC INDIA: KAILAS RAJ

இந்து மதம்: உலகின் தலைசிறந்த மதம்

இந்துதர்மோ மஹோத்தமோ விஷ்வதர்ம :

हिन्दुधर्मो महत्तमो विश्वधर्मः



மதம் என்பது தெய்வீகத் தன்மையுடன் மனிதனுக்கு உள்ள தொடர்பு என்றும், மதத்தின் அடிப்படை இலக்காக ஆத்ம ஞானம் விளங்குகிறது என்றும் உறுதியாக சொல்லலாம். உண்மைப்பொருள் கருத்தாக்கத்தை கடந்து இருப்பதால், அதை குறிப்பிடும் உருவங்கள் வெறும் சின்னங்களாக விளங்குகின்றன. உண்மைப்பொருளானது கிரகிக்க முற்படும் மனதை கடந்து இருப்பதால், உண்மைப்பொருளை காரண ஆய்வு மூலம் புரிந்துகொள்ள மேற்கொள்ளும் முயற்சிகள் எப்போதும் தோல்வியையே தரும்.

உலக மதங்களில் இந்து மதம் அபூர்வமான ஒன்றாக விளங்குகிறது. இது உலகில் தலைசிறந்த மதம் என்று நான் மனஉறுதியோடு அறிவிக்கிறேன். இது மனித நேயத்திற்கு சொந்தமான மிகவும் பழமையான ஆன்மீக சமயக்கோட்பாடாகவும், இந்த பூமியின் மதநம்பிக்கையின் மூலமாகவும் விளங்குகிறது என்ற அறிமுகத்தோடு தொடங்குகிறேன். இந்து சமயத்தின் போற்றத்தக்க அகவை, அதற்கு பக்குவத்தை வழங்கியுள்ளது. எனக்கு தெரிந்த வரை, இந்து மதம் மட்டுமே அபூர்வமாக, ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு அல்லது தீர்க்கதரிசி மூலம் தொடங்கப்படாமல் இருக்கிறது. அதன் தொடக்கமும் பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்டதாக இருக்கிறது. அது பெரும்பாலும் ஒவ்வொரு முக்கிய மதத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அத்துடன் அது அனைத்து மதங்களையும் கிரகித்து, அதன் சாத்திரங்கள், அதன் மகான்கள், அதன் தத்துவங்களை கௌரவித்து ஆதரவு தரும் திறமை பெற்று இருப்பதால், அதை “ஆன்மீகத்தின் தொடக்கம்” என்றும் “அனைத்து மதங்களின் அன்னை” என்றும் குறிப்பிடலாம். இது நேர்மையான அனைத்து ஆன்மீக முயற்சியையும் இந்து மதம் பரிவுடன் அணுகுவதாலும், அனைத்து ஆன்மாக்களும் இறைவனுடன் ஐக்கியமாவதற்கு பக்குவம் அடைவதையும், எல்லோரும் இந்த அல்லது அடுத்த பிறவியில் ஆன்மீக அறிவூட்டம் மற்றும் முக்தியை தவறாமல் அடைய இருக்கிறார்கள் என்பதையும் தெளிவாக அறிந்து இருப்பதாலும் சாத்தியமாகிறது.

உலகில் இருக்கும் எந்த மதமும் மக்களின் மனதில் ஒரு பகுதியாக இருக்கிறது அல்லவா? அது உணர்வுடன், அடியுணர்வுடன் மற்றும் மெய்ஞ்ஞானத்துடன்

ஒன்று போல சிந்திக்கும் மற்றும் அவர்களின் மெய்ஞ்ஞானம் மற்றும் அவர்கள் பின்பற்றும் தலைவர்களின் மெய்ஞ்ஞானத்தின் மூலம் வழிநடத்தப்படும் மக்களின் குழுவை குறிக்கிறது. இந்த குழு உருவாக்கும் விசைப் பகுதியை நாம் மதம் என்று அழைக்கிறோம். அது மனதின் வெளியே இருப்பது இல்லை. ஒரு குறிப்பிட்ட மதத்தை சேர்ந்த மக்கள் ஒரே மாதிரியான அனுபவங்களால் உருவான அபிப்பிராயங்களுடன் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரே அல்லது ஒரே மாதிரியான நம்பிக்கைகள் மற்றும் மனநிலைகளை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மேலும் அவர்களின் பரஸ்பர உடன்பாட்டின் காரணமாக சத்சங்கம் மற்றும் நோக்கம், கோட்பாடு மற்றும் ஆன்மீக கூட்டுறவின் பிணைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன.

இந்து சமயத்தை சார்ந்தவர்கள் ஒரு மனதின் அமைப்பை பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்களால் அனைத்து மதத்தவர்களையும் புரிந்துக்கொண்டு, அங்கீகாரம் வழங்கி, நம்பிக்கை வைத்து மற்றும் அன்பு செலுத்தி, அவர்களை தங்களது மனதில் சமயப்பற்றுள்ள நல்ல மக்களாக ஏற்றுக்கொள்ள முடிகிறது. ஒரு நிலையான பாதை தான் இருக்கிறது என்பதை உண்மை என்று நம்பும் இந்து, ஒரு மதம் தான் முறையானது அல்லது ஆன்மாவிற்கு விமோசனத்தை ஒரு மதத்தால் தான் வழங்க முடியும் என்பதை நம்பவில்லை. ஆனால் நிலையான பாதை அனைத்து மதங்களிலும் பிரதிபலிப்பதாக அவர் கருதுகிறார்.

சிரத்தையுள்ள வழிபாடு மற்றும் சேவைகள் அனைத்திலும் இறைவன் மற்றும் மகாதேவர்களின் விருப்பம் செயல்படுகிறது என்றும் சொல்லலாம். “உண்மைப்பொருள் ஒன்று. பாதைகள் பல,” என்று இந்து சமய சாத்திரங்கள் தெரிவிக்கின்றன. உண்மைப்பொருள், இறைவனை தேடும் வேட்கை சனாதன தர்மம் அல்லது நிலையான பாதை என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் அது மதம் தொடங்கும் இடமான ஆன்மாவின் இயல்பாக இருக்கிறது. இந்த பாதை மற்றும் தனது மூலத்திற்கு திரும்பும் செய்முறையை மனிதன் அறிந்தாலும் அறியாவிட்டாலும், அது அவனுக்குள் எப்போதும் செயல்பட்டு வருகிறது. அதில் இவரது வேட்கை அல்லது அவரது வேட்கை என்ற வேறுபாடு இருப்பதில்லை. இந்த தூண்டுதல் எங்கிருந்து வருகிறது? அது மனதின் அகத்தில் இருந்து வருகிறது. இந்து மதம் சார்ந்து இருக்கும் இந்த முதன்மையான மூலத்தின் உத்வேகம் மற்றும் அகத்தில் இருக்கும் ஆன்மாவின் முதல் தூண்டுதல், அதற்கு நித்தியத்தில் நிரந்தரமாக புதுப்பித்துக் கொள்ளும் ஒரு ஆற்றல் மற்றும் துடிப்புணர்வை வழங்குவதால், அது எப்போதும் துடிப்புணர்வு மற்றும் உயிரோட்டத்துடன் இருக்கிறது.

அதனால் இந்து ஆன்மீக விரிவாக்கத்தில் தனது மதத்தை ஒரு விரிவான, மிகவும் யதார்த்தமான மற்றும் பயனுள்ள கருவியாக கருதுகிறார். அவர் அதேசமயத்தில், தனது இந்து மனதில் ஒரு நிலையான பாதையின் வெளிப்பாடுகளாக அனைத்து உலக மதங்களையும் இணைத்துக் கொண்டு, அந்த மதங்களின் கோட்பாடு மற்றும் போதனைகளுக்கு ஏற்ப அவற்றை

புரிந்துகொள்கிறார். ஒப்பீட்டு அளவில் ஆன்மீக வளர்ச்சிக்கு சில நம்பிக்கைகள் மற்றும் உட்புற மனநிலைகள் அதிகம் பயனுள்ளதாக இருக்கலாம் என்றும், அதனால் அனைத்து மதங்களும் ஒன்றல்ல என்பதையும், அவை முக்கிய முறைகளில் மாறுபடுகின்றன என்பதையும் அவர் அறிந்து இருக்கிறார். ஆனால் இந்து சமயத்தில் "ஒரே பாதை" என்ற கருத்துக்கு இடமில்லை. பக்தி சிரத்தையுடன் இருக்கும் ஒரு இந்து தூய்மையான மற்றும் நற்பண்புள்ள வாழ்க்கைக்கு வழிவகுக்கும் முயற்சிகளுக்கு துணை நிற்கிறார் மற்றும் ஒரு உண்மையான பக்தர் தேர்ந்தெடுத்த பாதையில் இருந்து அவரை விலக்க முயற்சிப்பதை தன்னால் கற்பனை செய்தும் பார்க்க முடியாததாக கருதுகிறார். இந்துவின் மனது இப்படித்தான் செயல்படுகிறது மற்றும் நாங்கள் இதைத்தான் கற்றுத் தருகிறோம், இதைத்தான் பயிற்சி செய்கிறோம் மற்றும் பாதையில் இருக்கும் சாதகர்களுக்கு நாங்கள் இதைத்தான் வழங்குகிறோம்.

ஒருவரிடம் நம்பிக்கை மட்டுமே மாறுபட்டு இருக்கிறது என்பதால், அவரை மதமாற்ற செய்ய முற்படும் போது முறையற்ற கர்மவினை உருவாகும் என்று இந்து சமய கோட்பாடு கருதுவதால், நாங்கள் பெரும்பாலும் மக்களை அவர்களின் சொந்த மதத்திற்கே திருப்பி அனுப்பி விடுகிறோம். ஒருவர் பிறப்பு, கலாச்சாரம் அல்லது இடத்தால் தற்செயலாக பின்பற்றும் மதத்தை காட்டிலும், ஒழுக்கம் மற்றும் ஆன்மா பக்குவம் அடைவதற்கான உட்புற செய்முறைகள் இந்துவிற்கு அதிக முக்கியமானதாக விளங்குகின்றன. ஒருவருக்கு சொந்தமான மதத்தில் இருந்து அவரை வெளியே இழுக்க முற்படுவதால், அந்த நபரின் தர்மத்தில் தற்செயலாக இடையூறு ஏற்படுத்தப்பட்டு, இருவருக்கும் வெறுப்பை தரும் கர்மவினையை உருவாக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை ஒரு இந்து அறிந்து இருக்கிறார். எல்லோரும் இறைவன் மீது ஒரே மாதிரியாக நம்பிக்கை வைப்பது அல்லது ஒரே பெயருடன் அழைப்பது தேவையற்றது என்பதையும் அவர் அறிந்து இருக்கிறார்.

ஒரு அனுபவப்பூர்வமான மதம்

இவ்வாறு இருந்த போதிலும், இந்து சமயம் தீவிர சமயப்பிரிவு உணர்வுடன், தனது கோட்பாடுகளில் உறுதியாக இருக்கிறது. கர்மவினை மற்றும் மறுபிறவி பற்றிய அதன் கோட்பாடுகள், அகிம்சை மற்றும் கருணை பற்றிய அதன் தத்துவம், சூட்சும யதார்த்தங்கள் மற்றும் அனுபவம் மற்றும் அதன் பொதுமையின் உறுதியான பண்பு ஆகியவை அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதற்கு இந்து சமயம் என்பது அதிகம் ஒரு கோட்பாடாக இல்லாமல் ஒரு அனுபவமாக இருப்பதும் காரணமாக இருக்கலாம். "இது தான் உண்மைப்பொருளின் இயல்பு. இந்த வழிகள் மூலம் அந்த உண்மைப்பொருளை உணர முடியும். காலங்காலமாக பலன் அளித்து வரும் பாரம்பரியங்கள் இங்கே வழங்கப்பட்டுள்ளன. இவற்றை நீங்கள் உங்கள் வாழ்வில் பயன்படுத்தி, நீங்களே உங்களுக்கு நிரூபித்துக்கொள்ளலாம். நாங்களும் அவ்வப்போது உதவிகளை வழங்குவோம்," என்று அது

இந்துக்களிடம் சொல்ல விழைகிறது. “இந்த அறிவுறுத்தல்களை நீங்கள் பின்பற்ற வேண்டும் அல்லது அதில் நம்பிக்கை வைக்கவேண்டும் இல்லையென்றால் நீங்கள் நிந்திக்கப்படுவீர்கள்,” என்று இந்து சமயம் எப்போதும் சொல்வது இல்லை. யாரும் நிரந்தரமாக நிந்திக்கப்படுவது இல்லை என்பதில் இந்து சமயம் உறுதியாக இருக்கிறது. அன்புடன் ஏற்றுக்கொள்ளும் அந்த இயல்பு மற்றும் வாழ்க்கையின் நற்பண்பு மீது இருக்கும் நிரந்தர நம்பிக்கையின் காரணமாக, உலகின் தலைசிறந்த சமயமாக இந்து சமயம் விளங்குகிறது என்று நான் தைரியமாக சொல்கிறேன்.

மற்ற சமய அமைப்புக்களில் இருப்பதைப் போன்று, இந்து சமயத்திலும் அகத்தூய்மை, அறிவு மற்றும் அமைதியான வாழ்க்கையை அடைவதற்கு யதார்த்தமான வழிகள் உள்ளன. ஒவ்வொரு இந்துவும் தினமும் ஒரு பூஜையில் பங்குபெற வேண்டும் என்று அறிவுறுத்தப் படுகிறது. அது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடர்ந்து செய்து வந்தால் நல்ல பலன்களை தரும். அவர் இயமம் மற்றும் நியமங்களை கடைப்பிடிக்க வேண்டும். அவர் மற்றவர்களுக்கு சேவை செய்து, தனது சமூகத்தில் சமயத்தொண்டு செய்ய வேண்டும். அவர் அவ்வப்போது புண்ணிய தளங்கள் மற்றும் கோயில்களுக்கு தீர்த்த யாத்திரை சென்று, சடங்குகளில் பங்குபெற வேண்டும். அவர் அதிக உன்னதநிலையில் இருக்கும் மேம்பட்ட ஆன்மாவாக இருந்தால், அவர் சில *சாதனா* மற்றும் *தபஸ்* செய்ய வாய்ப்புள்ளது.

அதிக விழிப்புணர்வு பெற்ற ஆன்மாவிற்கு அதிக முக்கிய கோரிக்கைகள் மற்றும் பொறுப்புக்கள் என்று இந்து சமயம் தனது அன்பர்கள் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புக்களில் அதிக கண்டிப்புடன் இல்லாததை, மனம் முழு சுதந்திரத்துடன் விசாரம் செய்யலாம். இந்த உயரிய மனதின் அமைப்பானது மற்ற மதநம்பிக்கை அமைப்புக்களை முழுமையாக ஏற்றுக்கொண்டாலும், இந்து சமயத்தில் இருந்து வெளியேற எந்த வாய்ப்பும் இல்லை. மதம் மாறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. இந்து சமய உணர்வு துண்டிக்கப்படுவதற்கும் வாய்ப்பில்லை. நீங்கள் ஒரு மதத்தை ஏற்றுக்கொண்டதால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதால், இந்து சமயத்தை விட்டு நீங்கள் வெளியேற முடியாது. ஏன் தெரியுமா? ஏனென்றால் இந்து சமயம் மதங்கள் அனைத்தையும் தனக்குள் கொண்டுள்ளது. ஒருவர் இந்து சமயத்தை விட்டு வெளியேறி பின்பற்றுவதற்கு “வேற்று மதம்” என்று ஒன்றும் இல்லை. அவர் மதங்களின் சாரமாக இருக்கும் சனாதன தர்மம் என்கிற ஒரு மதத்தின் மற்ற அம்சங்களைத் தான் பின்பற்றுவதாக இருக்கும்.

தாராள மனப்பான்மை மற்றும் இரக்கம் மற்றும் நான் சற்று முன் குறிப்பிட்ட பொறுமை ஆகிய பண்புகள் இந்து சமயத்திற்கு இல்லை என்றாலும், வலுவான மறைஞானத்தின் அடிப்படையில் அது தலைசிறந்த மதமாக இருக்கும். உள்பொருளின் மர்மங்கள் பற்றிய அத்தகைய ஒரு ஆழமான மற்றும் உறுதியான புரிதல் அல்லது மிகவும் விரிவான ஒரு மீமெய்யியல் அமைப்பை வேறு எந்த

மதமும் கொண்டிருக்கவில்லை. இந்து சமயத்தில் இருக்கும் சமயம் சார்ந்த வெளிப்பாடுகளின் சேமிப்புக்கிடங்கை அளவிட முடியாது. என்னை பொறுத்தவரை, அதற்கு சமமாக எதுவும் இல்லை. அது யோகம், தியானம் மற்றும் தாரணை மற்றும் ஆத்ம ஞானம் பற்றிய ஒரு முழுமையான அமைப்பை கொண்டுள்ளது. மனிதனின் அகத்தில் இருக்கும் உடல்கள், நுணுக்கமான *பிராண* சக்திகள் மற்றும் சக்கிரங்கள், அல்லது நரம்பியல் அமைப்பில் இருக்கும் மனோஉணர்வு மையங்களைப் பற்றி அத்தகைய நுண்ணறிவுள்ள வெளிப்பாடு வேறு எங்கும் இல்லை. விழிப்புணர்வு பெற்ற மனிதனின் அகஉணர்வுநிலையில் பெருக்கெடுத்து வரும் தூய வெள்ளை ஒளி முதல் காட்சிகள் மற்றும் ஒலிகள் வரை, இந்து சமயத்தில் மெய்ஞ்ஞானத்தின் அகநிலைகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளன. அக உணர்வுநிலைகளை புரிந்துகொள்வதற்கு, இந்து சமயத்தில் வேறு எங்கும் கிடைக்காத பதில்கள் உள்ளன மற்றும் அது தொடர்ந்து ஆழமாக செல்லும் மனதின் பகுதிகளுக்குள் சாட்சியை வழிநடத்தும் திறமை பெற்றுள்ளது என்பதை கடுமுயற்சி செய்து தெரிந்துக்கொள்வதற்கு, மறைஞான விழிப்புணர்வு பெற்ற மேற்கத்திய ஆன்மா இந்து சமயத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறார்.

இந்து சமயத்தின் எல்லையில்லா பொறுமை

நாம் எப்படி வாழவேண்டும் என்பதை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட சாத்திரங்கள் விளக்குகின்றன. அதே நேரத்தில் அவற்றை பின்பற்றி நம்மால் வாழமுடியாது என்று பல யுகங்களாக மகான்கள், ரிஷிகள் நமக்கு தெரிவித்து வருகிறார்கள். அதனால் இந்து சமயம் முயற்சி செய்பவர்களிடம் அதிக பொறுமையுடன் இருந்து, தோல்வி அடைபவர்களை மன்னிக்கவும் செய்கிறது. அது தனது கடுமையான ஒழுங்குமுறைகளை பின்பற்றி வாழ்ந்து வெற்றிக்கண்டவர்களை வியப்புடன் பார்க்கிறது. இந்து சமயத்தில் எண்ணற்ற மகான்கள் இருக்கிறார்கள். நமது மதத்தில் ஒரு மகான் என்று அங்கீகாரம் பெறுவதற்கு உயிர் துறக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் அதன் வழிமுறைகளை பின்பற்றி வாழ்ந்து காட்டவேண்டும். இந்துக்கள் பூமியில் இருக்கும் மற்ற பெரும்பாலான மக்களைப் போல அல்லாமல், ஒரு மனித உடலில் வாழும் கடினங்களை உணர்ந்து, உண்மையான ஆன்மீக குணத்தை பெறும் நபரை வியப்புடன் பார்க்கிறார்கள்.

ஒரு இந்து மறுபிறவியில் நம்பிக்கை வைத்து இருக்கிறார். வாழும் உடல் தான் இல்லை, ஆனால் ஒரு குறிபிட்ட நோக்கத்திற்காக ஆன்மா அல்லது சாட்சி ஒரு உடலை எடுத்துள்ளது என்று அவர் நம்புகிறார். தனக்கு ஒரு நல்ல பிறவியில் ஒரு நல்ல உடல் கிடைக்கும் என்றும், இந்த செய்முறை ஒரு பிறவியில் நிறைவு பெறாமல், ஆன்மீக முன்னேற்றத்தின் மீது ஒரு வாழ்நாள் வழங்கும் வரம்புகளை கடந்து தொடர்ச்சியாக நடைபெறும் என்பதில் அவர் நம்பிக்கை வைத்து இருக்கிறார். தான் ஒரு குறிப்பிட்ட முறையில் நடந்துகொண்டால் மட்டுமே

தனக்கு ஒரு நல்ல பிறவி மற்றும் ஆன்மீக முன்னேற்றம் கிடைக்கும் என்பதை தனக்கு உறுதி செய்யும் கர்மவினையில், அவர் நம்பிக்கை வைத்து இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. இயற்கை விதிகள், இந்துசமய ஒழுங்குமுறைகளை பின்பற்றி தான் நடந்துக்கொள்ளவில்லை என்றால் தனக்கு வரவிருக்கும் பிறவி அல்லது பிறவிகளில் தனது விதிமீறல்களுக்கு அவதிப்படவேண்டி இருக்கும் என்றும், தான் செய்த வினைகளுக்கு ஒரு கீழ்த்தரமான பிறவியை பெற்று, தான் தோல்வியுற்ற பிறவியில் உயிர் துறந்த இடத்தில் இருந்து மீண்டும் தொடங்கும் உரிமையை பெறுகிறோம் என்றும் அவர் அறிந்து இருக்கிறார்.

கர்மவினை மற்றும் மறுபிறவி மீதான நம்பிக்கை இந்து சமயத்திற்கே உரியது என்றாலும், சமய ஈடுபாடு ஒரு வரையரையாக இல்லாமல், இன்றைய உலகில் பலர் அதே முடிவிற்கு எந்த வற்புறுத்தலும் இல்லாமல் இயல்பாக முழுமனதோடு வருகிறார்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட பிறவியில் இருக்கும் நம்பிக்கை, இந்துவிற்கு முழு மன அமைதியை வழங்குகிறது. ஆன்மா பக்குவம் அடைவதற்கு பல நூறு பிறவிகள் தேவைப்படலாம் என்பதை அவர் அறிந்து இருக்கிறார். அவர் தற்போது நிறைவாக இல்லை என்றாலும், தான் முன்னேறிக் கொண்டு இருப்பதையும், கற்பதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் பல வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பதையும் அவர் அறிந்து இருக்கிறார். இது கவலையை தவிர்த்து, எல்லாம் சரியாக இயங்கிக்கொண்டு இருக்கிறது என்ற அமைதியான உணர்வை வழங்குகிறது. எந்நேரமும் முடிவு வந்து விடும் அல்லது தனது செயல்கள் மற்றும் மனநிலைகளுக்கு ஒரு முடிவான தீர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்ற ஒரு காலவரையறை கவலை இருப்பது இல்லை. ஆன்மா பக்குவம் அடைகிறது என்ற இந்த புரிதல், இந்துவிற்கு மனித நிலைப்பற்றி ஒரு குறிப்பிடத்தக்க நுண்ணறிவு மற்றும் ஆன்மீக வளர்ச்சியின் அனைத்து நிலைகளில் இருக்கும் அனைத்து மனிதர்கள் மீது மதிப்பையும் வழங்குகிறது.

மிகவும் விசாலமாக இருக்கும் இந்து சமயத்தில் பித்தனுக்கும் இடம் உள்ளது மகானுக்கும் இடம் உள்ளது. அங்கே பிச்சைக்காரனுக்கும் இடம் உள்ளது, பிச்சை வழங்குபவருக்கும் இடம் உள்ளது. புத்திசாலிக்கும் இடம் உள்ளது மற்றும் முட்டாளுக்கு நிறைய இடம் உள்ளது. இந்த பிறவியில் ஒவ்வொரு ஆன்மாவும் நிறைவை பெறவேண்டும் என்று இந்து சமயம் கோருவது இல்லை. ஒரு வாழ்நாளில் மனித நிறைவு அல்லது அருளை பெறவேண்டும் என்று நம்பிக்கை வைத்திருப்போருக்கு, இந்த அற்புதம் ஒரு முக்கிய சித்தாந்தமாக விளங்குகிறது. மறுபிறவியில் இருக்கும் நம்பிக்கை மூலம், இந்து சமயம் மனித நேயத்தின் ஒவ்வொரு நிலையிலும் வரவேற்பை பெறுகிறது. ஒப்பீட்டு அளவில் சில ஆன்மாக்கள் பக்குவமடைந்த ஆன்மாக்களாக இருந்தாலும், எல்லோரும் ஒரே மாதிரியான அழிவில்லாத இயல்பு மற்றும் தெய்வீக பண்புடன் இருக்கிறார்கள்.

தெய்வீக பண்பு பற்றி இந்து சமயக் கருத்துக்கள்

இந்து சமயத்தில் மகாதேவர்கள், இந்த பூலோகத்தில் உள்ள நுண்ணுலகத்தில் இருக்கும் ஒரு அந்தர்லோகத்தில் உயிருடன் வாழ்ந்து, சிந்தனை செய்யும் வலுவான சக்திகளாக கருதப்படுகிறார்கள். அந்த அந்தர்லோகத்தில் கண்களுக்கு புலப்படும் இந்த பேரண்டத்தை காட்டிலும் பெரிய பேரண்டம் ஒன்று உள்ளதாக இந்துக்கள் கருதுகிறார்கள். இந்துவை பொறுத்தவரை, பிரபஞ்சத்தை படைத்து, அதில் வியாபித்து வழிநடத்தும் தெய்வீக சித்தத்திடம் சரண் அடைவது முக்கியம் ஆகும். இந்த உயிர்சக்திகள் பக்குவம் அடையும் செய்முறைகளை திட்டமிட்டு வழிநடத்தி, நமது பூலோக அனுபவங்களை வழிநடத்துவதாக இந்து கருதுகிறார். அதனால் அவர் அந்த உயிர்சக்திகளை, தன்னை விட பெரிய சக்திகளாக கருதி அவற்றை வழிபடுகிறார். பிரபஞ்சத்தில் இருக்கும் இந்த மாபெரும் சக்திகளுடன் தான் பொருந்தி இருந்து, இந்த மாபெரும் சக்திகள் தனக்கு விதித்த செயல்களுடன் தனது தனிப்பட்ட விருப்பம் இணக்கத்துடன் இருக்கவேண்டும் என்ற ஆசையுடன், அவர் இந்த சக்திகளோடு ஒரு தனிப்பட்ட அணுகுமுறையை பராமரிக்கிறார். இதனால் ஒருவர் மீது ஒருவர் அன்பை வெளிப்படுத்தி, பொறுமையான அணுகுமுறையை கடைப்பிடிப்பதன் மூலம் ஒரு நல்ல கலாச்சாரம் தோன்றுகிறது. இதனால் வாழ்க்கையின் மீது ஒரு பணிவான அணுகுமுறை உருவாகிறது. அது ஒரு பலவீனமான அல்லது போலியான அடக்கமாக இல்லாமல், தலை இயல்பாக வணக்கம் தெரிவிக்கும் கம்பீரமான இருப்பு மற்றும் வாழ்க்கையின் நோக்கத்தில் இருக்கும் ஒரு வலுவான மற்றும் பக்குவமடைந்த உணர்வாக இருக்கிறது.

இந்துக்கள் கோயில்களில் ஒரு சில முக்கிய தெய்வங்கள் மட்டுமே வழிபட்டாலும், இந்து சமயத்தில் முப்பத்தி முக்கோடி தெய்வங்கள் இருப்பதாக கருதப்படுகிறது. மக்கள் வழிபடும் இறைவன் ஒரு தெய்வீக தந்தை, தெய்வீக தாய் அல்லது பேரரசராக இருப்பது, இந்து சமயத்திற்கு கிடைத்த ஒரு வரமாக விளங்குகிறது. அது ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப்பட்ட மற்றும் முக்கிய தொடர்பை வழங்குகிறது, மற்றும் ஒவ்வொரு இந்துவும் தனது உட்புற தேவைகள் மற்றும் உணர்ச்சிகளை அதிகம் ஈர்ப்பதாக இருக்கும் தெய்வீக அம்சத்தை தேர்ந்து எடுக்கிறார். அது சிலருக்கு குழப்பம் தருவதாக இருக்கலாம், ஆனால் இந்துவிற்கு அவ்வாறு இருப்பதில்லை. அவரது சமயத்தில் அத்வைதம் மற்றும் துவைதம், ஒரு கடவுள் கோட்பாடு மற்றும் பல கடவுள்களின் கோட்பாடு மற்றும் இறையியல் பற்றிய பல்வேறு வலுவான மற்ற கருத்துக்களும் இருக்கின்றன.

இந்து சமயத்தில் இறைவன் என்பவர் யாவும் கடந்து இருப்பதாகவும் உள்ளார்ந்து இருப்பதாகவும், மனதை கடந்து இருப்பதாகவும் மனதிற்கு ஆதாரமாக இருப்பதாகவும் கருதப்படுகிறார். ஒவ்வொரு கணமும் எப்போதும் இறைவனை பற்றி சிந்தித்து, இறைவனது சன்னிதானத்தின் மீது எப்போதும் உணர்வுடன் இருப்பது இந்து சமயத்தின் உன்னத பண்பாக விளங்குகிறது. இது பரசிவம் அல்லது பரம்பொருளை குறிப்பிடவில்லை. அதை ஒரு யோகி தனது ஆழ்நிலை தியான பயிற்சியில் விசாரம் செய்யவேண்டும். அது சிரத்தையுடன்

கோயில்களில் வழிபட்டு, ஆழமாக சாத்திரங்களை படித்து தனது *சத்குருவை* தேடிக்கொண்ட முழு நிறைவான இந்துவிற்கு உரியது. பெரும்பாலான இந்துக்களுக்கு இறைவன் என்ற சொல், நமது மதத்தில் இருக்கும் பல தனிப்பட்ட தெய்வங்கள் மற்றும் மகாதேவர்களை குறிக்கிறது. இது என்றுமே ஒரு தூல பிறவி எடுக்காத ஒரு தனிப்பட்ட சிறந்த ஆன்மா மற்றும் இந்த பூமியில் தனது மனம் மற்றும் மிகமுக்கிய தெய்வீக பண்பினால் உருவத்தில் வியாபித்து பரிணாமத்தை வழிநடத்தும் ஒரு சக்திவை குறிக்கிறது. அத்தகைய ஒரு இறைவன் இந்து சமயத்தை பின்பற்றுபவர்களுக்கு பாதுகாப்பு அளித்து, வழிநடத்தும் திறமையை பெற்று இருக்கிறார். நம்மில் பெரும்பாலானோர் ஒரு நாளில் இறைவனைப் பற்றி ஒரு நிமிடம் கூட சிந்திப்பது இல்லை என்றாலும், ஒரு இந்து எங்கும் இறைவனை காண்பதற்கு, தினமும் ஒவ்வொரு நிமிடமும் இறைவனைப் பற்றி சிந்திக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாகவே ஒவ்வொரு இந்துவும் தினமும் தனது வீட்டிற்கு அருகில் இருக்கும் கோயில் அல்லது பூஜை அறையில் ஒரு சமய சேவை, ஒரு பூஜை அல்லது சடங்கை நடத்தவேண்டும் அல்லது பங்குபெற வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. இதனால் அவர் மனம் இறைவன் மற்றும் மகாதேவர்கள் மீது தனது கவனத்தை திருப்புகிறது.

இந்து சமயம் என்ற சனாதன தர்மம் ஒரு கிழக்கத்திய மதமாக இருக்கிறது. கிழக்கத்திய மதங்கள் அதிகம் அகநோக்கியாக இருப்பதால், அவை மேற்கத்திய மதங்களில் இருந்து மிகவும் மாறுபட்டு இருக்கின்றன. புத்தர் பிறக்கும் போதும் இறக்கும் போதும் ஒரு நல்ல இந்துவாக இருந்ததால், பௌத்த மதம் உருவாக இந்து மதம் காரணமாக இருந்தது என்று சொல்லலாம். இத்துடன் அது கிழக்கத்திய நாடுகளில் தாவ் நெறி, சமணம், சீக்கிய சமயம் மற்றும் மற்ற மதங்கள் உருவாகவும் காரணமாக இருந்தது.

மூன்று தூண்கள்: கோயில்கள், தத்துவம் மற்றும் சத்குருமார்கள்

இந்து சமயத்தின் மூன்று தூண்களாக விளங்குவது கோயில்கள், தத்துவம் மற்றும் *சத்குருமார்கள்.* கடைசி இருபது ஆண்டுகளில், இந்த உலகின் பெரும்பாலான பகுதிகளில் இந்து சமயக் கோயில்கள் சூழ்ந்துள்ளன. இது நமக்கு கிடைத்த பெரிய அதிஷ்டமாக விளங்குகிறது. ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் கோயில்கள் உள்ளன. கற்சிலை மீது சுற்றிக்கொண்டு இருக்கும் தெய்வம் மற்றும் மகாதேவர்கள், பக்தர்களுக்கு தங்கள் *தரிசனத்தை* வழங்கி, தங்களது நுணுக்கமான ஆகாச வடிவங்கள் வாயிலாக அந்த பக்தர்களின் நரம்பியல் ஓட்டங்களை மாற்றி அவர்களின் வாழ்க்கைகளை மாற்றி அமைப்பதால், இந்து கோயில்கள் மற்றும் அதில் இருக்கும் கற்சிலைகள் அந்த தெய்வம் மற்றும் மகாதேவர்களுடன் தொடர்புகொள்ளும் பாதையாக விளங்குகிறது. மக்கள் ஒரு பிரதிஷ்டை செய்த கோயிலுக்கு வந்து தரிசனம்

செய்து வீடு திரும்பும் போது, அவர்கள் மெதுவாக முழுமையான மாற்றத்தை பெறுகிறார்கள். அவர்களின் உயிர்சக்தி மாற்றம் பெற்று, அவர்களின் மனம் மாற்றம் பெற்று மற்றும் அவர்களின் உணர்ச்சிகள் நுணுக்கமான மாற்றத்தை பெற்று இருப்பதால், அவர்கள் முழுமையான மாற்றத்தை பெற்று இருக்கிறார்கள். பார்ப்பதற்கு பிரம்மாண்டமாக சிறந்து விளங்கும் இந்து சமய கோயில்கள், தூல மற்றும் வெளிப்புற இருப்பாக இருக்கும் முதல் லோகம் அல்லது பூலோகம் மற்றும் உட்புறமாக இருக்கும் இரண்டாவது மற்றும் மூன்றாவது லோகங்கள் மத்தியில் பாதையாக விளங்குவதிலும் சிறந்து விளங்குகின்றனர்.

இந்து கோயில்களில் கவனமாகவும் அமைதியாகவும் அறிவுரையை நாடுவதற்கு என்று ஒரு மதிக்கத்தக்க சான்றோர் இருப்பார் என்றாலும், அவை ஒரு பூசாரி அல்லது ஒரு மதகுருவை மையமாக கொண்டு அமைந்து இருப்பதில்லை. பக்தர்களின் வழிபாட்டை வழிநடத்துவதற்கு என்று ஒரு உபதேசம், ஒரு நடுவர் அல்லது ஒரு இயக்குனர் இருப்பதில்லை. தெய்வங்களின் வீடாக விளங்கும் கோயிலுக்கு, ஒவ்வொரு பக்தரும் தனது தனிப்பட்ட தேவைகள் பூர்த்தியாக வேண்டும் என்று தனக்கு வசதியான நேரத்தில் செல்கிறார். துக்கத்தில் இருக்கும் சிலர் தெய்வத்திடம் அழுது புலம்பி ஆறுதல் பெறுவதற்காக செல்வார்கள். அதே சமயத்தில் மகிழ்ச்சி வெள்ளத்தில் இருக்கும் வேறு சிலர், பாடல்கள் மூலம் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இறைவனுக்கு நன்றி சொல்ல செல்வார்கள். இதனால் பெயர் சூட்டு விழா, திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் கோயிலுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. இந்த பழமையான மத்தின் மாபெரும் சக்தி மற்றும் உற்சாகத்தை கிரகிப்பதற்கு பண்டிகை காலங்களில் ஒரு இந்து கோயிலுக்கு சென்றால் போதும்.


இந்து சமயம் பரிச்சயமான வரலாறு மூலம், அனைத்து கலாச்சாரங்களை சேர்ந்த ஆழமான சமயச் சிந்தனையாளர்கள் மீது, தனது இரண்டாவது பிரிவாக இருக்கும் தத்துவத்தின் வாயிலாக தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. “இந்து சமயம்” என்று குறிப்பிட்டு சொல்வதற்கு ஒரு தனியான தத்துவம் எதுவுமில்லை. ஆனால் அது பல தத்துவங்களின் வலைப் பின்னலாக விளங்குகிறது. அதில் சில தத்துவங்கள் மற்ற தத்துவங்களின் அடிப்படை கருத்துக்கு முற்றிலும் முரணாக தோன்றினாலும், ஆழமாக விசாரம் செய்யும் போது அவை ஒரு பிரகாசமான சிந்தனை ஓட்டத்தில் இருக்கும் ஒருங்கிணைந்த அம்சங்களாக தென்படுகின்றன. சாத்திரம், துதிப்பாடல்கள், மந்திரங்கள், *பஜனைகள்* மற்றும் சந்தேகமின்றி உலகில் ஈடு இணையற்றதாக விளங்கும் தத்துவ நூல்களின் மாபெரும் தொகுப்பையும் தத்துவ பகுதியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

வழக்கமாக தத்துவத்திற்கு முன்பாக கோயில் வழிபாடு இடம்பெறுகிறது. அகமும் புறமும் இணைந்து ஐக்கியமாகும் இடமாகவும், மூன்று லோகங்கள் தொடர்பு கொள்ளும் பிரதிஷ்டை செய்த இடமாகவும், தெய்வங்களின் புனிதமான இருப்பிடமாகவும் விளங்கும் கோயிலில் இருந்து அனைத்தும் தொடங்குகின்றன. இந்த இடத்தில் பக்தர்கள் மாற்றம் பெறுகிறார்கள். அவர்கள்

கோயிலில் வாழும் முழுநிறைவான சக்திகள் போன்று மாறி, அந்த தெய்வத்தின் குரலாக விளங்கி, அகத்தில் இருந்து தோன்றும் கருத்துக்களுக்கு எழுத்து வடிவம் தருகிறார்கள். அவர்கள் இறைவனின் மெய்ஞ்ஞான தகவல் மீது சிரத்தையுடன் இருந்தால், அவர்களின் படைப்பு சாத்திரமாக கருதப்பட்டு இந்து சமய தத்துவங்களில் அங்கம் வகிக்கிறது. பிறகு அந்த தத்துவங்கள் மதத்தின் குரலாக தனித்து விளங்குகின்றன. அவை பல்கலைகழங்களில் கற்றுத் தரப்பட்டு, அறிஞர்களால் விவாதிக்கப்பட்டு, யோகிகள் மற்றும் சிரத்தையுள்ள சாதகர்கள் மூலம் தியானம் செய்யப்படுக்கின்றன. கோயிலுக்கு செல்லாமல் தத்துவத்தை மட்டுமே படிப்பதாலும் அல்லது ஆழமான தத்துவங்களை என்றுமே கேட்காமல் கோயிலுக்கு மட்டுமே செல்வதாலும் ஒருவர் நல்ல இந்துவாக இருக்க முடியும்.

இந்து சமயத்தில் மூன்றாவதாக இடம் பெறும் குரு என்பது ஆசிரியர், ஒளிர்விப்பவர், சமயகுருவை குறிக்கிறது. குரு என்பவர் அறியாமையை நீக்குபவராக இருக்கிறார். அவர் தத்துவத்தை அறிந்து இருந்து, கோயிலின் ஆன்மீக செயல்பாடுகளை அறிந்து இருக்கிறார் மற்றும் அவர் தானே ஒரு தத்துவஞானியாகவும் கோயிலாகவும் விளங்குகிறார். குரு என்பவர் மக்களுக்குள் இருக்கும் ஆன்மீக சக்திக்கு உயிரூட்டம் வழங்குகிறார். கோயில் மற்றும் தத்துவத்தை போல, அவர் கற்பிக்கும் அமைப்புக்கள் மற்றும் புண்ணிய தளங்களில் இருந்து விலகி தனித்து இருக்கிறார். அவர் தானே அறிவின் மூலமாகவும், பக்தரின் இலக்காகவும் விளங்குகிறார்.

கோயில்கள் அனைத்தும் அழிக்கப்பட்டாலும், அவை தத்துவ விதைகளில் இருந்து அல்லது ஆத்ம ஞானம் பெற்ற மனிதரின் சன்னிதானத்தில் இருந்து மீண்டும் தோன்றுகின்றன. அனைத்து சாத்திரங்கள் மற்றும் தத்துவ நூல்கள் எரிக்கப்பட்டாலும், அவை மீண்டும் அதே மூலத்தில் இருந்து எழுதப்படும். அதனால் இந்து சமயத்தை என்றும் அழிக்க முடியாது. அது ஒவ்வொரு சக்தியின் உட்புறத்தில் மதத்தின் ஆன்மாவாக இருக்கிறது. கோயில், தத்துவம் மற்றும் சத்குரு என்று தனிப்பட்ட முறையில் சிறந்து விளங்கும் அதன் மூன்று அம்சங்கள் ஒன்றாக இணையும் போது, அது இந்து சமயத்தை உலகின் மிகமுக்கிய மற்றும் மிகப்பெரிய மதமாக மாற்றுகிறது.



ஸ்ரீகாந்த தாமோதர் பண்டித்

எல்லையற்ற இந்து சமய பேதங்கள்

இந்து சமயத்தில் இருக்கும் பல்வேறு உட்பிரிவுகளில் ஒரு மாபெரும் வேற்றுமையை கொண்டுள்ளது. அந்த வேற்றுமையே ஒரு பலமாக விளங்கி, இந்து சமயத்தின் விசாலமான மற்றும் உள்ளடக்கிய பண்பை வெளிப்படுத்துகிறது. அது எல்லா பக்தர்களும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது இல்லை. அத்தகைய ஒரு ஒற்றுமையை எந்த ஒரு தலைமை அதிகாரம் அல்லது முறைப்படுத்தப்பட்ட ஒரு அமைப்பால் அறிவிக்கவோ அமல் செய்யவோ முடியாது. அகத்தில் ஒரு வலுவான ஒற்றுமை இருந்தாலும், இந்து சமயத்தில் இருக்கும் சமய பேதங்கள் மற்றும் அதன் வகைகள் அதன் உண்மையான பலம் மற்றும் விவேகமாக விளங்குகிறது. இந்து சமயத்தில் பல உட்பிரிவுகள் இருப்பதால், நீங்கள் அவற்றை ஒரு வாழ்நாள்

முழுவதும் ஆய்வு செய்யலாம், ஆனால் அவற்றை எப்போதும் மதிப்பீடு செய்ய தொடங்க முடியாது. ஒரு தனி மனிதனின் வாழ்நாளில் கிரகிக்க முடியாத அளவில் அதில் விஷயங்கள் அடங்கி உள்ளன. அதனால் இந்து மதம் அடுத்தடுத்த பிறவிகளில் தனது பெருஞ்சிறப்பில் நம்மை ஈர்க்கும் காந்தசக்தியை பெற்று இருக்கிறது. எந்த அம்சமும் விட்டுப்போகாமல், ஒவ்வொரு உட்பிரிவும் மதத்திற்கு தேவையான அனைத்து இணைப்புக்களுடன், தனிப்பட்ட முறையில் ஒரு முழுநிறைவான மதமாக இருக்கிறது என்றே சொல்லவேண்டும். அதனால் ஒவ்வொரு உட்பிரிவும் அதன் உறுப்பினர்களுக்கு முழுமையாக செயல்படுகிறது மற்றும் ஒவ்வொரு உட்பிரிவும் மற்ற பிரிவுகளிடம் பொறுமையுடன் செயல்படுகிறது. அது மற்ற பிரிவுகளின் நம்பிக்கையை மறுத்து அவற்றுடன் தனது தொடர்பை முழுமையாக துண்டித்துக் கொள்ளாமல், வரையறைக்கு உட்பட்ட மனித புலன்களால் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதற்காக, அது விரிவான தத்துவத்தின் ஒரு சிறிய பகுதியை தனித்து நின்று வலியுறுத்துகிறது அல்லது விளக்குகிறது.

இந்து சமயத்தில் இருக்கும் இந்த பல்வேறு உட்பிரிவுகள் அனைத்தும் ஒரே மூலத்தில் இருந்து தோன்றுகின்றன. பெரும்பாலான இந்துக்கள் யாவும் கடந்து இருக்கும் கடவுள் அல்லது தனிப்பட்ட கடவுள் அல்லது இறைவனை நம்புகிறார்கள். ஆனால் மத நம்பிக்கையின் எல்லைக்குள் தனது நம்பிக்கைகளை ஆய்வு செய்து மேம்படுத்தும் ஒரு நாத்திகன் அல்லது விவாதம் செய்பவருக்கும் இடம் உள்ளது. இதன் மூலம் நமது மதத்தில் பாசாண்டம் என்ற சொல்லுக்கு இடமில்லை. முறையான ஒரேயொரு கண்ணோட்டம் அல்லது நம்பிக்கை என்று எதுவும் இல்லை என்பதால், இந்து சமயத்தில் சமய பேதமுள்ளவன் என்று யாரும் அழைக்கப்படுவது இல்லை. கோட்பாடு மற்றும் சாதனா முழுமையானதாக கருதப்படுவது இல்லை. ஆனால் அவை ஒரு முழுமையான முடிவை நோக்கி செல்லும் பாதைகளாக விளங்குகின்றன மற்றும் அவை தனிப்பட்ட தேவைகள் மற்றும் இயல்புகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்படுகின்றன. வெவ்வேறு நோய்களுக்கு வெவ்வேறு மருந்துகள் தேவைப்படும் என்று எனது சத்குரு பரிந்துரைப்பார்.

இந்து சமயத்தில் மனிதன் மற்றும் கடவுளுக்கு மத்தியில் ஒரு தனிநபர் அல்லது ஆன்மீக பொறுப்பில் யாரும் இருப்பதில்லை. ஆனால் இந்து சமயம் அதற்கு நேர்மாறாக போதிக்கிறது. கோயில்களில் இருக்கும் பூசாரிகள் தெய்வத்தின் சேவகர்களாக, மகாதேவர்களின் வீட்டில் இருக்கும் உதவியாளர்கள் மற்றும் பாதுகாவர்களாக இருக்கிறார்கள். அவர் கோயிலின் சூழலை சுத்தம் செய்து தயார் செய்கிறார். ஆனால் ஒரு பக்தர் நமது சமயத்தில் எந்த இறைவனை வழிபட்டாலும், அந்த பக்தர் மற்றும் அந்த இறைவனுக்கு மத்தியில் ஒரு பூசாரி தலையீடு செய்வதில்லை. நடுவர் யாரும் இல்லாததால், பொறுப்பு முழுவதும் அந்த தனிநபர் மீது சுமத்தப்படுகிறது. அவர் சார்பாக பரிந்து பேசுவதற்கு யாரும் இருப்பதில்லை. அவர் தனது செயல்கள், தனது

சிந்தனைகள், தனது உணர்ச்சிகள் மற்றும் தனது இறைவனுடனான உறவிற்கு பொறுப்பாகிறார். அவர் தேவையின்றி வெளிப்புற தாக்கங்களை சார்ந்து இருக்காமல், அகத்தில் இருக்கும் தனது நம்பிக்கைகளை சீர் செய்யவேண்டும். அதே சமயம் அவர் தற்போது கடந்து செல்லும் பாதையில், முன்பு சென்றவர்களிடம் இருந்து அவருக்கு தேவையான உதவியும் கிடைக்கும். அவர் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கோட்பாட்டை ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது, அதனை விசாரம் செய்து தனது அகத்தில் அந்த போதனைகளை உயிர்ப்பிக்க வேண்டும்.

தத்துவத்தை பொறுத்தவரையில், ஒரு மனிதன் யோகத்தின் விதிகளை முறையாக பயிற்சி செய்து தனது குண்டலினி சக்தி மூலம் அகநோக்கியாக இருந்தால், அவரால் தனக்குள் இருக்கும் இறைவனை தேடிக்கொள்ள முடியும் என்று ஒவ்வொரு தத்துவ ஞானியும் அறிவிக்கிறார். குருவே அந்த சக்தியை விழிப்படைய செய்யும் முறை பற்றி கற்றுத் தருகிறார். சீடன் பாதையை சிரத்தையுடன் பின்பற்றினால், இந்த பிறவியிலேயே தனது சொந்த அனுபவத்தின் மூலம் இறைவனின் யாவும் கடந்த பரசிவ பண்பு மற்றும் மகேசுவரன் என்ற அவரது தனிப்பட்ட அம்சத்தின் வாயிலாக அவரை எவ்வாறு உணர்வது என்பதையும் அந்த குரு கற்றுத் தருகிறார்.

தனி நபரின் பரிணாமத்திற்கு ஏற்ப இறைவன் மற்றும் மனிதன், மனம் மற்றும் இறைவன், உள்ளுணர்வு மனம், அறிவுணர்வு மனம் மற்றும் மெய்ஞ்ஞான மனம் ஒன்றாக ஐக்கியமாகும் என்பதால் இந்து சமயம் தனிசிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது. ஒவ்வொருவரும் சுயமாக உருவாக்கிய கர்மவினையை பொருத்து, தனது சொந்த நிறைவுகளை கொண்டிருக்கிறார்கள். ஆரம்பகட்ட பரிணாம நிலையில் இருப்பவர்களின் ஆசைகள் மற்றும் அனுபவங்கள் அடிப்படையில் உள்ளுணர்வு சார்ந்ததாக இருக்கின்றன. வரையறுக்கப்பட்ட புத்தி அல்லது மன வலிமையுடன் இருக்கும் அவர்கள் தங்களது உணர்ச்சிகள் மற்றும் தூண்டுதல்கள் மூலம் வழிநடத்தப்பட்டு வழக்கமாக அச்சத்துடன் வாழ்கிறார்கள். கோயிலில் தெய்வத்துடன் அவர்களுக்கு ஏற்படும் தனிப்பட்ட அனுபவம் பொதுவாக அச்சம் நிறைந்து இருக்கிறது. அவர்கள் இறைவனைக் கண்டு அஞ்சுகிறார்கள். அவர்களோடு ஒரு பூஜையில் பங்குபெறும் ஒரு தலைசிறந்த ரிஷி, இந்த பூமியில் பல நூறு முறை பிறவி எடுத்து இருக்கிறார். அவரது தனிப்பட்ட இறை அனுபவம் அன்பு, ஒருமை மற்றும் ஐக்கியம் சார்ந்ததாக இருக்கிறது. அங்கே அவர்கள் ஒருவருக்கொருவர் அருகாமையில் இருக்கிறார்கள். ஒவ்வொரு இறை அனுபவமும் மாறுபட்டு இருந்தாலும் உண்மையானதாக இருக்கிறது. ஒருவர் பெற்ற அனுபவத்தைப் போலவே இன்னொருவரும் பெறவேண்டும் என்று வற்புறுத்தி அனுபவம் வழங்குவதற்கு நடுவர் அல்லது மத்தியஸ்தர் என்று யாரும் இருப்பதில்லை.

இந்து சமயத்தில் எல்லோருக்கும் இடமிருக்கிறது

இந்து சமயம் மனித நேயம் போன்று விசாலமானதாகவும், மக்களைப் போன்று பல்வேறு வகைகளாகவும் இருக்கிறது. அது பணக்காரர் மற்றும் ஏழை, ஆன்மீகவாதி மற்றும் லௌகீகவாதிக்கு பொருத்தமாக இருக்கிறது. அது அறிவாளிக்கும் மூடனுக்கும் பொருத்தமாக இருக்கிறது. யாரும் நீக்கப்படுவது இல்லை. ஒரு இந்து கோயிலில் அனைத்து வகையான மனிதர்களையும் காணமுடியும். கோயிலை சுற்றி உருவாகிய அமைப்புக்களுக்கு ஆதரவு அளித்து, அடுத்த பிறவிக்கு புண்ணியத்தை சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக தனது செல்வத்தை நல்ல காரணத்திற்கு விவேகமாக செலவு செய்ய விரும்பும் செல்வந்தரும் கோயிலுக்கு வருகிறார். நாளைய வயிற்றுப்பசிக்கு உணவு கிடைக்கும் என்றும் பக்தர்கள் மூலம் தனக்கு ஒன்று அல்லது இரண்டு நாணயங்கள் கிடைக்க இறைவன் அருள் புரிவார் என்றும் நம்பிக்கையுடன் யாசகம் செய்யும் பிச்சைக்காரரும் கோயிலில் இருக்கிறார். அதனால் ஒரு சமூக வாழ்க்கையின் மத்தியில் அமைந்து இருக்கும் ஒரு இந்து கோயில், ஒரு வாழ்க்கையின் பிரதிபலிப்பாக விளங்குகிறது. அது அந்த கிராமத்து வாழ்க்கையை காட்டிலும் சிறந்து விளங்க முயற்சி செய்யாமல், அந்த வாழ்க்கைக்கு வேண்டிய சேவையை செய்து, அது அடுத்த நிலைக்கு பக்குவம் அடைய தூண்டுதலை வழங்குகிறது. உலக மதங்களை எல்லாம் ஏற்றுக்கொள்ளும் இந்து மனமானது, கோயிலின் சக்தி மூலம் அந்த கோயிலை நோக்கி ஈர்க்கப்படும் உலக மக்களை எல்லாம் அதற்குள் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு நமது மதத்தின் கருணை சிறந்து விளங்குகிறது.

இந்து மதத்தின் மேன்மையை மற்ற மதங்களுடன் ஒப்பிட முடியாது. ஒப்பிடுவதற்கு எந்த அடிப்படையும் இல்லை. இந்து சமயம் அல்லது சனாதன தர்மத்திற்கு தொடக்கம் இல்லை என்பதால் அதற்கு நிச்சயமாக முடிவும் இருக்காது. அது படைக்கப்படவில்லை என்பதால், அதை அழிக்கவும் முடியாது. இது இறைவனை மையமாக கொண்ட ஒரு மதம். அதன் மையத்தில் இறைவன் இருக்கிறார். மற்ற மதங்கள் எல்லாம் தீர்க்கதரிசிகளை மையமாகக் கொண்டு இயங்குகின்றன. பூமியில் வாழ்ந்து இறந்த ஒரு மகான் அல்லது முனிவர், ஒரு தீர்க்கதரிசி, மீட்பாளர், இறைவனை உணர்ந்த ஒருவர் அந்த மதங்களின் மையமாக விளங்குகிறார். வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உலகின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அந்த குறிப்பிட்ட சமய உட்பிரிவு, அந்த குறிப்பிட்ட மதத்தை உருவாக்கவே அவர் பிறந்து இருக்கவேண்டும் என்பதை இந்துக்கள் அங்கீகரிக்கிறார்கள். அத்துடன் உலக மதங்களின் தலைவர்கள் அனைவரும் தங்கள் உணர்தல் மற்றும் உட்புற பயிற்சிகள் மூலம் பிரபல சமயத் தலைவர்களாக பிறவி எடுத்து அல்லது மாற்றம் பெற்று, தொடர்ந்து வாழ்க்கை கோட்பாடுகளை உபதேசம் செய்ய சீடர்களை தங்களை நோக்கி ஈர்த்து, அதன் மூலம் சிறந்த வாழ்முறையை நோக்கி ஒரு குலம், ஒரு நாடு அல்லது ஒரு இனத்தை வழிநடத்தி செல்லும் சிறந்த தீர்க்கதரிசிகள், சிறந்த ஆன்மாக்கள்,


சிறந்த தெய்வ பிறவிகள் அல்லது சிறந்த உயிர்சக்திகளாக இருப்பதாகவும் இந்துக்கள் கருதுகிறார்கள்.

இதை இந்துவின் மனதால் ஆய்வு செய்து முழுமையாக புரிந்துகொள்ள முடிகிறது. ஏனென்றால் அது இறைவனை மையமாகக் கொண்ட மதத்தில் நன்றாக வேரூன்றி இருக்கிறது. இந்து சமயத்தின் மையமாக காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்த பரம்பொருள் இருக்கிறார். அவர் தூய உணர்வாகவும், ஆதி ஆன்மா என்று நன்றாக புலப்படும் அதிக நிறைவான உருவுடனும் வெளிப்படுகிறார். அவர் அந்த உருவில் இருந்து எண்ணற்ற மகாதேவர்கள் மற்றும் பெண் தெய்வங்களை வெளிப்படுத்துகிறார். அவர்கள் கோயில்களில் வாசம் செய்து மக்களுக்கு அருள் செய்து, சாத்திரங்களை ஊக்குவித்து, ஆன்மீக தலைவர்களை ஊக்குவித்து, மொத்தத்தில் மனித நேயத்தை மேம்படுத்துகிறார்கள். இவை அனைத்தும் பல வடிவங்களில் இருக்கும் ஒரு இறைவனை குறிக்கிறது. இதைப்பற்றி சமீபத்தில், “சிவன் அக்னியாக இருக்கிறார். சக்தி அந்த அக்னியின் வெப்பமாக இருக்கிறாள். விநாயகர் அந்த அக்னியின் சிகப்பு நிறமாக இருக்கிறார். முருகப்பெருமான் அந்த அக்னியின் ஒளியாக இருக்கிறார்,” என்று நியூ யார்க் விநாயகர் கோயிலில் இருக்கும் சந்நியாசி மிகவும் அற்புதமான முறையில் ஆழமான விளக்கத்தை வழங்கினார்.

உலகில் இருந்து ஏறத்தாழ ஒரு பில்லியன் இந்துக்கள் இருக்கிறார்கள். அது அமெரிக்க மக்கள் தொகையை விட நான்கு மடங்கு பெரியது. பூமியில் இருக்கும் மக்களில் ஆறில் ஒருவர் இந்துவாக இருக்கிறார். இந்து சமயம் ஒவ்வொரு நபரின் தேவைகளை பூர்த்தி செய்கிறது. இது மட்டுமே இந்த அளவு விசாலமாக இருக்கிறது. இந்து சமயமானது தெய்வங்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த கோயில்கள், அகஉணர்வுநிலைகள், யோகம் மற்றும் தியானப் பயிற்சிகள் பற்றிய மறைபொருளை கொண்டுள்ளது. அது மற்ற மதங்களின் மீது ஒரு மென்மையான இரக்கம் மற்றும் ஒரு உண்மையான பொறுமையை வெளிப்படுத்தி, அவற்றை அங்கீகரிக்கவும் செய்கிறது. அது கொள்கை பிடிவாதம் இல்லாமல், விசாரணைக்கு தயாராக இருக்கிறது. அது நம்பிக்கை வைத்து இருக்கும் ஒரு நியாயமான உலகில், மறுபிறவியில் இருந்து விடுதலை தரும் முக்தியை பெறுவதற்கு ஆத்ம ஞானம் என்கிற முடிவான இலக்கை நோக்கி, ஒவ்வொரு ஆன்மாவும் கர்மவினை மூலம் வழிநடத்தப்படுகிறது. அது முழுமையான பக்குவம் அடையும் வரை அடுத்தடுத்த பிறவியை எடுக்கும் ஆன்மாவின் தெய்வீக மூலம் பற்றிய அறிவில் திருப்தியுடன் இருக்கிறது. அது நாத்திகன் முதல் மகரிஷி வரை தன்னிடம் அடைக்கலம் புகுந்த எல்லோருக்கும் வழிகாட்டலை வழங்குகிறது. அது பூமியில் இருக்கும் மிகப்பெரிய மற்றும் மிகவும் பழமையான சாத்திரம் மற்றும் தத்துவத்தின் சேமிப்புக் கிடங்கை போற்றிப் பேனுகிறது. அது பரிசாக பெற்று இருக்கும் மகான்கள் மற்றும் முனிவர்கள், ஆத்ம ஞானம் பெற்ற ஆண்கள் மற்றும் பெண்களின்

பாரம்பரியத்திற்கு நிகராக பூமியில் வேறு எதுவும் இல்லை. அது மேலும் பல அம்சங்களின் சாரமாக இருப்பதால், இந்து சமயம் உலகின் தலைசிறந்த சமயம் என்பதை நான் உறுதியாக அறிவிக்கிறேன்.





CHAPTER TWENTY-FOUR

How to Become A Hindu

Terraced rice fields in China



ஒரு இந்துவாக மாறுவது எப்படி

இந்து: கதம் பூயதே

हिन्दुः कथं भूयते

இந்துயிசம் டுடே பத்திரிகை, ஜனவரி, 2000



நவம்பர் மாதம் போப்பாண்டவர் வருகை தரும் சமயத்தில், அமெரிக்க பாப்டிஸ்ட் குழுவினர் தங்களது அக்டோபர் மாத பிரார்த்தனையில் “வேதனை தரும் இந்து சமய இருளில் வழி தவறி இருக்கும் 900 மில்லியன் மக்களை” மதமாற்றம் செய்யவேண்டும் என்று பிரச்சாரம் செய்ததன் காரணமாக, இந்த மாதம் இந்தியாவில் மதமாற்றம் அதிக சர்ச்சைக்குரிய விஷயமாக விளங்குகிறது. ஒருவர் தனது மதத்தை மாற்றிக்கொள்வது இந்து சமயத்திற்கு புதிது இல்லை என்பதை வரலாற்று அறிஞர்கள் அறிவார்கள். இசுலாம் அல்லது கிறித்துவம் தொடங்குவதற்கு நீண்டகாலம் முன்பே, இந்திய மக்களின் விசுவாசத்தை பெறவேண்டும் என்பதற்காக, சனாதன தர்மத்துடன் பௌத்த மதமும் சமணமும் போராடின. ஆதி சங்கரர், அப்பர் மற்றும் சுந்தரர் போன்ற இந்து சமய மகான்கள், இந்த புதிய மதங்களுக்கு எதிராக செய்த போராட்டத்தினால் புகழ்பெற்றார்கள். தோன்றிய மண்ணில் இருந்து அவை பெரும்பாலும் மறையும் அளவிற்கு, அந்த போராட்டங்கள் வெற்றிகரமாக இருந்தன. அந்த காலத்தில் அரசர் எவ்வழி மக்கள் அவ்வழியாக இருந்த காரணத்தால், அரசர் பின்பற்றிய மதத்தை மக்களும் பின்பற்றினார்கள். அதனால் தென்னிந்திய அரசர்கள் குடியேறிய கம்போடியா, பாலி மற்றும் மற்ற தென்கிழக்கு ஆசிய பகுதிகளில் மதமாற்ற வாளின் மறுமுனை வெளிப்பட்டது.

“பாகால் மதத்தவர்களை காப்பாற்ற” கிறித்துவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பற்றி இந்துக்கள் கவலையில் இருக்க, மேற்கத்திய நாடுகளில் பல மில்லியன் கணக்கான மக்கள் குறிப்பிடத்தக்க வகையில் அமைதியாக இந்து சமயத்திற்கு மாறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த ஒரு மாற்றம் வலுவாகவும் கடந்த காலத்தை காட்டிலும் அதிக விரிவாகவும் இருக்கிறது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்க நாடுகளை சேர்ந்த சிரத்தையுள்ள சாதகர்கள், தங்களை இந்துக்கள் என்று அழைத்துக்கொண்டு மதத்தில் முறையாக நுழைய முயற்சி செய்து வருகிறார்கள். இவை அனைத்தும் சாத்திர மொழிப்பெயர்ப்புக்களுடன் தொடங்கி, சுவாமி விவேகானந்தரைப் போன்ற மகான்கள் உலகமெங்கும் பயணம் செய்து வழங்கிய உரைகள், மற்றும் சமீபகாலத்தில் இந்தியா, இலங்கை மற்றும் நேபால் ஆகிய நாடுகளில் இருந்து

இந்துக்கள் புலம்பெயர்ந்ததன் அங்கமாகவும், அதன் விளைவாக பெரும்பாலான உலக நாடுகளில் நிறுவப்பட்ட கோயில்கள் மற்றும் ஆசிரமங்கள் என்று 150 ஆண்டு காலமாக இந்தியாவில் இருந்து பல்வேறு அலைகளாக பாய்ந்து வந்த இந்து சமய தத்துவத்தின் விளைவுகள் ஆகும். இன்று இந்து சமயத்தில் பிறக்காத பல மில்லியன் கணக்கான மக்கள், வர்த்தக விளம்பரங்கள் உட்பட இசை, திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி வாயிலாக இந்து சமயத்தின் மைய கோட்பாடுகளான கர்மவினை, தர்மம் மற்றும் மறுபிறவியை புரிந்துகொண்டுள்ளனர்.

மதம் மாறியவர்களை இந்து சமயம் ஏற்றுக்கொள்வதில்லை என்று இன்றும் ஒரு பெரிய ஆச்சாரமான இந்துக்களின் குழு உறுதியாக அறிவுறுத்தி வருகிறது. பிறவிலேயே ஒருவர் இந்துவாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இந்து சமயத்தில் பிறவி எடுக்காதவர்கள் அதிகம் படித்து சிரத்தையுடன் இருந்தாலும், அதில் நுழைவதற்கு இன்னொரு பிறவி வரை காத்து இருக்கவேண்டும். இந்த கருத்து வரலாற்று நிகழ்வுகளுக்கு புறம்பாக இருந்தாலும், பல இந்து அறிஞர்கள் மதம் மாறியவர்களை தயக்கமின்றி ஏற்றுக்கொள்கிறார்கள். "பெரும்பான்மை இன மக்களால் வேற்று மதத்தில் பிறந்தவர்கள் மதம் மாற்றப்பட்டுள்ளனர். இந்த வழக்கம் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த அறிக்கை பழங்குடியினர், தொலைதூரத்தில் இருக்கும் நாடுகள், முகமதியர் முற்றுக்கைக்கு முன்பு நம்மை வென்ற அரசர்களுக்கு மட்டுமே பொருந்தாமல், புராணங்களில் ஒரு விசேஷ மூலத்துடன் தொடர்புடைய மற்ற ஜாதிகளுக்கும் பொருந்தும். இவ்வாறு வேற்று மதத்தவர்கள் நமது மதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்று நான் கருதுகிறேன்" என்று 1899 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் தனது கருத்தை தெரிவித்தார். சுவாமியின் இந்த கருத்தை, இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர் Dr. எஸ். ராதாகிருஷ்ணன் தான் எழுதிய *தி இந்து வியூ ஆஃப் லைப்* என்ற புத்தகத்தில், "இந்து மதத்தை சமயப்பணியின் உலகில் ஒரு முன்னோடியாக குறிப்பிடலாம் என்று தோன்றுகிறது. அது மேற்கொண்ட சமயப்பணியின் அடிப்படை கூறு மட்டும், மதமாற்றம் செய்ய முயற்சிக்கும் சமூக நம்பிக்கைகளில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. அது ஒரு குறிப்பிட்ட கருத்திற்கு மனித இனத்தை மாற்றவேண்டும் என்பதை தனது குறிக்கோளாக கொண்டிருக்கவில்லை. இந்து சமயத்தில் பல்வேறு தெய்வங்களை வழிபடுவர்கள் மற்றும் பல்வேறு வழிபாட்டுமுறைகளை பின்பற்றுபவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். *தாண்ட்ய பிராமணத்தில்* முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள *விராத்யஸ்தோம* என்கிற பழங்கால வழக்கம், தனிநபர்கள் மட்டுமல்லாமல் இனங்கள் முழுவதுமாக இந்து மதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை குறிப்பிடுகிறது. பல நவீன சமய உட்பிரிவுகள் வேற்று மதத்தவர்களை ஏற்றுக்கொள்கின்றன. லௌகீக ஆசையால் மற்ற மதங்களுக்கு மாறியவர்கள் உட்பட வலுக்கட்டாயமாக மற்ற மதங்களுக்கு மாற்றப்பட்ட மக்கள் மற்றும் பல வருடங்களாக கட்டுப்பாடுகளுடன்

ஒதுக்கி வைக்கப்பட்ட பெண்கள்குலத்திற்கு எளிமையான சுத்திகரிப்பு விதிகளை *தேவல ஸ்ம்ருதி* வழங்குகிறது," என்று ஒரு சிறிய பத்தியின் மூலம் உறுதி செய்கிறார்.

இந்து சமயம் என்பது சமயம் சார்ந்த மற்றும் சமயம் சாராத ஒரு வாழ்முறை, ஒரு கலாச்சாரம் என்ற ஒரு பொதுவான விளக்கத்தை கொண்டிருப்பதால், இன்றைய காலகட்டத்தில் இந்துவாக பிறந்தவர்களுக்கு, இந்து சமயத்தில் நுழைவது தேவையற்ற கேள்வியாக தோன்றலாம். இந்து சமயம் என்பது ஒரு இந்துவிற்கு அவரது ஒவ்வொரு அனுபவத்திலும் நிரம்பி இருப்பதால், தனது சமய அமைப்பானது மற்ற அமைப்புக்களில் இருந்து தனித்து, மாறுபட்டு தெளிவாக விளக்கப்பட்டு இருக்கும் ஒரு அமைப்பு என்று அவர் நினைப்பது இல்லை. அது அவரது வாழ்க்கை முழுவதையும் உள்ளடக்கி உள்ளது. இந்து சமயத்தின் எல்லாம் உள்ளடக்கிய பண்பு மற்றும் பல்வேறு நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை பயிற்சி செய்வதும் ஓரளவிற்கு, இந்த சுத்தமான மற்றும் எளிமையான கருத்திற்கு காரணமாக அமைகின்றன. ஆனால் இந்த கருத்து, இந்த வாழ்முறைக்கும் உலகில் இருக்கும் மற்ற மதங்களின் வாழ்முறைகளும் உள்ள உண்மையான வேறுபாடுகளை புறக்கணிக்கிறது. இன்றைய உலகில் இந்து சமயம் தனித்துவத்துடனும் விளங்குகிறது என்பதில் சந்தேகமில்லை. அதற்கு மாறான அணுகுமுறை பல ஆபத்துக்கள் தருவதாக இருக்கும்.

இந்து சமயம் ஒரு மதமாக இல்லை என்றால், உலக நாடுகள் ஒரு மதத்திற்கு வழங்கும் உரிமைகளுக்கு அதனால் உரிமை கோரமுடியாது. உதாரணமாக இந்துக்கள் குடியேறிய டிரினிடாட் நாட்டில், இந்து சமயம் அங்கீகரிக்கப்படாமல் இருந்தது. அதனால் இந்து திருமணங்கள் சட்டவிரோதமானதாகவும், இந்து குழந்தைகள் முறை தவறி பிறந்ததாகவும் கருதப்பட்டன. அதனால் அந்த குழந்தைகளுக்கு பரம்பரை சொத்தின் மீது உரிமை கிடைக்கவில்லை. இந்துக்களுக்கு சொந்தமான பெருமளவு மூதாதையர் சொத்து குடியேறிய கிறித்துவ அரசால் பறிமுதல் செய்யப்பட்டது. இந்து சமயம் "ஒரு சமயம்" இல்லை என்று கோரும் போது, உலக சமுதாயத்தின் மற்ற சமயங்களுடன் ஒப்பீட்டளவில் அதன் நிலை சமூக மற்றும் சட்டரீதியாக பலவீனமடைகிறது.



இந்து சமயத்தில் நான்கு முக்கிய உட்பிரிவுகளான வைணவம், சைவம், சாக்தம் மற்றும் சுமார்த்தத்தில், சிருங்கேரி மற்றும் பூரியை போன்று பல்வேறு சங்கராச்சாரியார்களை பிரதிநிதிகளாக கொண்ட சுமர்த்த சமயம் மட்டுமே மதம் மாறியவர்களை ஏற்றுக்கொள்வது இல்லை. இந்து சமயத்தில் பிறக்காதவர்கள் அதில் நுழைவதற்கு தேவையான *நாமகரண சம்ஸ்காரத்தை,* அமெரிக்க கோயில்களில் சேவை செய்து வரும் சுமார்த்த புரோகிதர்கள் தொடர்ந்து மறுத்து வந்துள்ளார்கள். ஆனால் இந்துக்களில் தொண்ணூறு சதவீதம் அங்கம் வகிக்கும் மற்ற பிரிவைச் சேர்ந்த ஆன்மீக தலைவர்கள் மற்றும் புரோகிதர்கள், மதமாற்ற சடங்குகளில் ஆர்வத்துடன் பங்கு கொள்கின்றனர்.

தொடர்ந்து இந்தியாவிற்கு வெளியே பணம் செய்யும் நூற்றுக்கணக்கான இந்து சுவாமிகள், பண்டிதர்கள் மற்றும் சாதாரண மனிதர்கள் பெரும்பாலும் சாதுவான குழுவாக இருக்கின்றனர். மதநம்பிக்கைகள பற்றி அவர்கள் வழங்கும் தெளிவான உரையை கேட்கும் நேயர்கள், அதனை கருத்தில் கொண்டு தேவையென்றால் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். அந்த உரையில் மதம் மாற்றம் செய்ய அல்லது மற்ற மதங்களை தரம் குறைவாக பேச முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இல்லை. ஆன்மீக குடியேற்றம் மற்றும் கலாச்சார முற்றுகையைப் போன்று உலகம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் சமயப்பணியின் நிர்பந்தம் இந்து

தத்துவத்தில் இருப்பதில்லை. அத்தகைய ஒரு மதமாற்றம் பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் நடைப்பெற்று கொண்டிருக்கிறது, மற்றும் அது தந்தைக்கு எதிராக மகனையும், கணவனுக்கு எதிராக மனைவியையும், நண்பனுக்கு எதிராக நண்பனையும் தூண்டிவிட்டு சமூகங்களில் தீவிர சீர்குலைவுகளை ஏற்படுத்தியுள்ளது. பணத்தாசையுடன் பழங்கால பாரம்பரியங்களின் அழிவும் சேர்ந்து கொண்டதால், அது பல வாழ்க்கைகள் அழிய காரணமாக இருந்துள்ளது. இதைப் போன்ற நடவடிக்கைகளில் இந்து சமய போதனை ஈடுபடுவதில்லை.

மேற்கத்திய நாடுகளுக்கு நூற்றுக்கணக்கான சுவாமிகள் மற்றும் யோகிகள் வருவது மற்றும் இந்தியாவிற்கு பல்லாயிரக்கணக்கான மேற்கத்திய நாட்டவர்கள் பயணம் செய்வதன் நேரடி விளைவாக இந்துவாக பிறக்காத பலருக்கு இந்துவாக மாறவேண்டும் என்ற ஆசை தோன்றியது. ஆனால் “எப்படி மாறுவது?” என்பது ஒரு கேள்வியாக இருந்தது. இந்த சிக்கலை நாங்கள் ஐம்பது வருடங்கள் முன்பாக சந்தித்தோம். “கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் மத்தியில் ஒரு பாலத்தை உருவாக்கு” என்று இலங்கையில் வாழ்ந்த எனது சத்குரு சிவ யோகசுவாமி எனக்கு அறிவுறுத்தியதற்கு ஏற்ப, நான் 1957 ஆம் ஆண்டு அமெரிக்காவில் எனது சமயப்பணியை தொடங்கியவுடன், இந்து சமயத்தில் எப்படி நுழைவது என்று தெரியாமல் தவிக்க வேண்டியிருந்தது. பல அமெரிக்கர்களைப் போல நான் முன்பு எந்த மதத்தையும் சார்ந்து இருக்கவில்லை. இந்து மதம் எனக்கு முதலாவதாக இருந்தது. இருபது வயதில் எனக்கு ஏற்ப்பட்ட முதல் அனுபவம், பிற்காலத்தில் எனது சமயப்பணிக்கு பாதையை அமைத்து கொடுத்தது. இந்து சமயத்தின் மீது ஒரு நேர்மையான நீடித்த அர்ப்பணிப்பை வழங்கும் அந்த ஆறு நிலை செய்முறையை நாங்கள் “தார்மீக மதமாற்றம்” என்று அழைக்கிறோம். ஒரு புதிய நாட்டில் இந்து சமயத்தை முழுமையாக நிறுவுவதற்கு மூன்று தலைமுறைகள் தேவைப்படும் என்று இந்தியாவின் சிவாச்சாரியார்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

ஓம் கணேஷா

நாமகரண சம்ஸ்காரம்
नामकरण संस्कार

இந்து பெயர் வழங்கும் சடங்கு

_____ என்கிற நான், முன்பு _____ என்ற பெயருடன்
(இங்கே அன்பரின் இந்து பெயரை அச்சிடவும்)
இருந்தேன். நான் சனாதன தர்மத்தின் கோட்பாடுகளை மனப்பூர்வமாக ஏற்பதாக அறிவித்து, இந்து சமயம் சாராத அனைத்து தொடர்புகள், பற்றுக்கள் மற்றும் அர்ப்பணிப்புக்களை முறையாக துண்டித்து கொண்டு, பாரம்பரிய நாமகரண சமஸ்காரம் வாயிலாக இந்து சமயத்தின் (ஃ சைவம் ஃ வைணவம் ஃ சாக்தம் ஃ சுமார்த்தம் ஃ மற்ற பிரிவு) _____ பிரிவுக்குள் நுழைய வேண்டும் என்று இதன் மூலம் பணிவோடு விண்ணப்பம் செய்து, இந்து சமயத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது அந்த சமயத்திற்கு மாறும் இந்த புனிதமான சடங்கை காணவந்திருக்கும் அன்பர்கள் சமூகம் இதை அங்கீகரிக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன். நான் இந்து சமய பாடங்களை முழுமையாக படித்து இருக்கிறேன் மற்றும் நான் இதன் மூலம், இந்து சமயத்தில் அங்கம் வகிக்கும் பின்வரும் ஒன்பது நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டேன் என்பதையும் உபாசனை, உத்ஸவம், தர்மம், தீர்த்த யாத்திரை மற்றும் சமஸ்காரம் என்கிற பஞ்ச நித்திய கர்மாக்களை திறம்பட செய்து முடிப்பேன் என்ற வாக்குறுதியையும் அறிவிக்கிறேன். நான் இப்போது அந்த ஒன்பது நம்பிக்கைகளை சத்தமாக படித்து அவற்றை ஏற்றுக்கொள்கிறேன். ஓம்.

1. உலகில் மிகவும் பழமையான சாத்திரமாக விளங்கும் வேதங்களின் தெய்வீக சக்திகள் வாசம் பண்பின் மீது நம்பிக்கை வைத்து, அந்த வேதங்களுக்கு சமமாக புனிதமானவை என்றும் மதிப்பளிக்கிறேன். இந்த பண்டையகாலத்து ஆகமங்களும் பக்திகள் மூலம் அந்த தேவர்கள் மற்றும் மகாதேவர்களுடன் மானசீக

6. கண்களுக்கு புலப்படாத லோகங்களில் தெய்வீக செய்கின்றன என்றும் கோயில் வழிபாடு, சடங்குகள் மற்றும் தனிப்பட்ட

ஒருவர் தனது முந்தைய மதநம்பிக்கைகளில் இருந்து முழுமையாக துண்டித்துக்கொள்வது, இந்த தார்மீக மதமாற்றத்தில் மிகவும் புதுமையான அணுகுமுறையாக இருப்பதோடு, அது அதற்கு முழுமையான தார்மீக பண்பையும் வழங்குகிறது. சம்பந்தப்பட்ட அன்பர் தனது முந்தைய சமயகுரு, மதகுரு, ரப்பி போன்றவரிடம் திரும்பிச் சென்று, அவரை நேரடியாக சந்தித்து

தனது மதமாற்றத்தை பற்றி விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. அந்த தலைவர் அந்த சீடரின் மனதை மாற்ற முற்படுவார் அல்லது அவரது புதிய அர்ப்பணிப்பு மற்றும் புரிதலுக்கு மதிப்பு அளிப்பார்.

இத்தகைய ஒரு முறைப்படுத்தப்பட்ட செய்முறை தேவையா? “இந்து என்பது பாரதகண்டத்தில் [இந்தியா] தோன்றிய வாழ்க்கை, ஒழுக்கம் மற்றும் ஆன்மீகம் பற்றிய நிரந்தர பண்புகளை பின்பற்றுபவர் அல்லது அதில் நம்பிக்கை வைத்திருப்பவர் மற்றும் தான் ஒரு இந்து என்று அழைத்துக்கொள்பவரையும் குறிக்கிறது,” என்று 1966 ஆம் ஆண்டு விஷ்வ இந்து பரிஷத் ஒரு விளக்கத்தை வழங்கியது. இந்து சமயத்தில் நுழைவதற்கு சுயமாக வழங்கும் அறிவிப்பு ஒரு அடிப்படை வழியாக இருந்தாலும், 1998 ஆம் ஆண்டு அமெரிக்காவில் விஷ்வ இந்து பரிஷத் நடத்திய தர்ம சம்சத் சந்திப்பில் “இந்து சமயத்தில் மற்ற மதத்தில் பிறந்தவர்களை சேர்க்க ஒரு செய்முறையை வடிவைக்க வேண்டும். இது அமெரிக்காவில் வாழும் இந்துக்களுக்கு ஒரு முக்கிய பிரச்சனையாக இருக்கிறது,” என்று முடிவு செய்யப்பட்டது. அந்த பிரச்சனைகளில், கலப்பு திருமணம் நடந்த ஒரு குடும்பத்தில் இந்துவாக பிறக்காத ஒருவர் தனது வாழ்க்கைத்துணையின் மதத்தை ஏற்றுக்கொண்டு, ஒரு சுத்தமான இந்து வீட்டில் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதில் ஏற்படும் பிரச்சனைகளும் அடங்கும். மேற்கத்திய நாடுகளில் இருக்கும் பெரும்பாலான இந்திய சுவாமிகள், தங்கள் சீடர்களை முறையாக இந்து சமயத்திற்கு மாற்றாமல், உறுதியாக இருப்பது இன்னொரு பிரச்சனையாக இருக்கிறது. அவர்கள் ஒரு இந்து முதற்பெயரை வழங்கி, ஒரு “அர்த்த இந்து” அல்லது “பாதி இந்துவை” உருவாக்குகிறார்கள். அந்த அர்த்த இந்து தனது பழைய மதத்தை பின்பற்றுவதற்கு புதிய மதம் தடையாக இருக்கிறது. அதே சமயத்தில் அவரது புதிய மதம் அவரை முழுமையாக ஏற்றுக்கொள்வதும் இல்லை. குழந்தைகளை வளர்க்கும் போது, நிலைமை மேலும் மோசமடைகிறது. அவர்கள் இந்து மதத்தை சேர்ந்தவர்களா இல்லையா? இந்த மாதிரி குழந்தைகள் கடந்த இருபது வருடங்களில் எந்த மத நம்பிக்கையும் இல்லாமல் வளர்க்கப்படுவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

தார்மீக மதமாற்றத்திற்கு ஒரு தரநிலையை அமைப்பதன் மூலம், மதமாற்றத்தை காரணம் காட்டி சூறையாடும் வழக்கத்தை மாற்றி அமைக்க இந்துக்கள் துணை புரியலாம். இந்த யோசனை மற்ற மதங்களிலும் பயன்படுத்தப்பட்டு, ஒரு தார்மீக மதமாற்றத்தை கிறித்துவ மதத்திற்கு மாறவிரும்பும் ஒவ்வொரு இந்துவும் வெற்றிகரமாக நிறைவு செய்தால், அவர் இலஞ்சம் வாங்கினார், அச்சுறுத்தப்பட்டார், பணத்தாசையால் கவர்ந்திழக்கப்பட்டார் அல்லது வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்யப்பட்டார் என்று இந்துக்கள் அவர் மீது பழி சுமத்த மாட்டார்கள். இதனால் மதமாற்ற எண்ணிக்கையும் குறையும் என்பதில் சந்தேகமில்லை! இறுதியாக இன்று மதங்கள் தங்களுக்குள் ஒற்றுமையுடன் இருக்க வழிகளை தேடிக்கொண்டு இருக்கின்றன. துரதிஷ்டவசமாக சர்வதேச மாநாட்டில், சமயப்பணியில் ஈடுபடும்

மதங்களின் தீவிரமான மதமாற்ற யுத்திகள் வெளிப்படையாக பேசப்படுவது இல்லை. தார்மீக மதமாற்றத்தை அறிவுறுத்துவதன் மூலம், மத ஒற்றுமை எதிர்கொள்ளும் மிகப்பெரிய தடையை இந்துக்களால் வெற்றிகொள்ள முடிகிறது.

தார்மீக மதமாற்றத்தின் ஆறு நிலைகள்

நாங்கள் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவில் இந்து சமயத்தை கற்றுத் தந்த பிறகு, இந்து சமயத்தில் நுழைய நேர்மையாக கடுமுயற்சி செய்யும் வேற்று மதத்தவர்களுக்கு உதவி செய்வதில், இமாலயன் அகாடெமியில் இருக்கும் நாங்கள் தேர்ச்சி பெற்று இருக்கிறோம். எங்களது பல வருட அனுபவத்தின் விளைவாக பின்வரும் ஆறுநிலைகளை உருவாக்கி இருக்கிறோம். இது சுயமாற்றம் ஏற்படுத்தும் செய்முறை ஆகும். இதற்கான தூண்டுதல் சம்பந்தப்பட்ட தனிநபரிடம் இருந்தே வரவேண்டும் மற்றும் அதில் இருக்கும் நிலைகள், தொடர்ந்து சிரத்தையை வலியுறுத்தும் அளவிற்கு கடினமாக இருக்கின்றன.

1. ஒரு இந்து சமூகத்தை சேர்தல்
அந்த சீடர் மிகவும் முக்கியமாக முதலில் ஒரு பாரம்பரிய இந்து சமூகத்தில் ஒன்றாக கலந்து அந்த குழுவின் நன்மதிப்பை பெறுகிறார். அவர் அந்த சமூகம் நடத்தும் *சத்சங்கங்கள்* அல்லது கோயில்களில் தொடர்ந்து வழிபாடு நடத்தி, வருடம் ஒரு முறை யாத்திரை சென்று, வீட்டில் தினமும் பூஜை மற்றும் *சாதனாக்கள்* செய்து, கலாச்சாரத்தை பின்பற்றி வாழ முயற்சி செய்கிறார்.

2. கருத்து-எதிர்கருத்து
அந்த சீடர் நுழைய விரும்பும் இந்து சமய உட்பிரிவுக்கு ஏற்ப, தனக்கென்று ஒதுக்கப்பட்ட சில சமய நூல்களை படிக்கிறார். அதே சமயத்தில் அவர் தனது முந்தைய மதங்கள், உட்பிரிவுகள், *சம்பிரதாயங்கள்* அல்லது தத்துவ அமைப்புக்களை முறையாக ஆய்வு செய்கிறார். அவர் இந்து சமயத்தை அத்தகைய ஒவ்வொரு பொதுவான கருத்துடன் ஒப்பிட்டு கருத்து-எதிர்கருத்தை எழுதி, கவனமாக ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை குறித்துக் கொள்கிறார். அவர் இந்த பணியின் இரண்டாவது அங்கமாக தான் முன்னர் எடுத்த உறுதிமொழிகள் அல்லது விரதங்களை (ஞானஸ்நான உறுதிப்பாடு உட்பட) எல்லாம் எழுத்து வடிவில் ஆய்வு செய்து, அவை எங்கே மற்றும் எதற்காக கைவிடப்பட்டன என்பதையும் குறிப்பிடுகிறார். பின்னர் இந்த கருத்து-எதிர்கருத்துக்களின் தொகுப்பு, ஒரு இந்து சமய சான்றோரிடம் வழங்கப்பட்டு அவரது மதிப்பீடு மற்றும் கருத்துக்கள் பெறப்படுகின்றன.

3. முன்னாள் ஆலோசகர்களிடம் இருந்து துண்டித்துக் கொள்ளுதல்
அந்த சீடர் கத்தோலிக்க தேவாலயம் போன்று ஒரு குறிப்பிட்ட மதப்பிரிவில் அதிகாரப்பூர்வ உறுப்பினராக இருந்தால், அவர் அதில் இருந்து முறையாக

தன்னை துண்டித்துக் கொள்ளவேண்டும். அவர் எந்த மதப்பிரிவிலும் அதிகாரப்பூர்வ உறுப்பினராக இல்லையென்றால், அவர் நேரடியாக நான்காவது நிலைக்கு செல்கிறார். அவர் முறையான துண்டிப்பை பூர்த்தி செய்ய தனது முந்தைய அமைப்பிற்கு திரும்பிச் சென்று, அங்கே சில வாரங்களுக்கு சேவைகள் அல்லது சொற்பொழிவுகளில் பங்கு பெறுகிறார். அதன் பிறகு அவர் சாட்சிக்காக ஒரு சொந்தம் அல்லது நண்பரின் துணையுடன் தனியாக அங்கிருக்கும் சமயகுரு, ரப்பி, இமாம் அல்லது ஆலோசகரை சந்திக்கிறார். தான் இந்து சமயத்தில் சேர விரும்புவதாகவும், அதனால் அந்த தேவாலயம் அல்லது அமைப்புடன் தனது தொடர்பை துண்டித்துக் கொள்ள விரும்புவதாகவும் அந்த சீடர் விளக்கம் அளிக்கிறார். சமயகுரு அந்த சீடரிடம் நல்ல காரணங்களை கூறி அவரது மதமாற்ற எண்ணத்தை மாற்ற முயற்சிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம் ஆகும். தான் பழைய அமைப்பின் உறுப்பினராக இருக்க விரும்பவில்லை என்று அந்த சீடர் வெற்றிகரமாக மதகுருவிடம் தனது முழு மனதோடு தெரிவித்த பின்னர், அவர் தனது துண்டிப்பு பற்றிய ஒரு அதிகாரப்பூர்வ கடிதத்தை கோருகிறார். அந்த மதகுரு ஒரு கடிதத்தை தர மறுத்து, வாய்மொழியாக விடுவிக்கலாம் அல்லது விடுவிக்க மறுத்து விடலாம். மதகுரு விடுவிக்க மறுத்தாலும், சீடர் தனது சமயத் துறவு பற்றி அறிவித்ததன் மூலம், உட்புற துண்டிப்பு நிறைவு பெறுகிறது. கத்தோலிக்க தேவாலயத்தை பொறுத்தவரை, இன்னொரு மதத்தை ஏற்றுக்கொள்பவர் உடனடியாக ஒரு சமயப்பகைவனாக மாறிவிடுகிறார். அவர் அதன் பிறகு பிரார்த்தனை, குற்ற ஏற்புரை, நோன்பு அல்லது மற்ற தேவாலய சடங்குகளில் பங்குபெற அனுமதிக்கப்படுவதில்லை.

4. ஒரு இந்து பெயரை ஏற்றுக்கொள்ளுதல்

அதன் பிறகு அந்த சீடர் தனது பெயர் மாற்றத்தை சட்டபூர்வமாக மாற்ற முயற்சிகளில் ஈடுபடுகிறார். அந்த புதிய பெயர் அவரது கடவுச்சீட்டு, பயனர் உரிமம், கடன் அட்டைகள், நூலக அடையாள அட்டைகள் மற்றும் வங்கி கணக்குகள் உட்பட அனைத்து முக்கிய நிதி அல்லது சட்ட ஆவணங்களில் மாற்றப்படுகிறது. அவர் முறையாக இந்து சமயத்தில் நுழைவதற்கு முன்பாகவே, அவர் தனது முதற்பெயர் மற்றும் குடும்பப் பெயரை எந்நேரமும் பயன்படுத்த ஆதரவு அளிக்கப்படுகிறது.

5. நாமகரண சம்ஸ்காரம்

நாமகரண சமஸ்காரத்தை எந்த ஒரு இந்து கோயிலிலும் நிகழ்த்தலாம். இந்த சடங்கிற்கு முன்பாக, அந்த சீடர் தனது குடும்பம், சொந்தங்கள் மற்றும் நெருக்கமான நண்பர்களிடம் தனது பெயர் மாற்றம் மற்றும் இந்து சமயத்தில் நுழையும் எண்ணத்தை தெரிவிக்கிறார். நாமகரண சம்ஸ்காரத்தின் போது, முறையாக இந்து பெயர் பெறப்பட்டு, விரதங்கள் இருக்க முடிவு செய்யப்பட்டு, முந்தைய பெயர் மற்றும் புதிய பெயர், சடங்கு நடந்த இடம் மற்றும் புரோகிதர்

மற்றும் குறைந்தபட்சம் மூன்று சாட்சிகளின் கையெழுத்துடன் ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டு, ஒரு சான்றிதழில் கையொப்பமிடப்படுகிறது. (இதைப் பற்றி தெரிந்துக்கொள்வதற்காக, பக்கம் 412 யில் ஒரு மாதிரி நாமகரண சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.)

6. நாமகரணத்தை அறிவித்தல்

பழைய மதத்துடன் இருக்கும் தொடர்பை துண்டித்துக்கொண்டு நாமகரண சம்ஸ்காரம் நிறைவு பெற்ற பிறகு, தனக்கு பெயர் மாற்றம் நிறைவு பெற்றது என்றும், தான் *நாமகரண சம்ஸ்காரம்* மூலம் இந்து சமயத்தில் நுழைந்து இருப்பதையும் மூன்று நாட்களுக்கு ஒரு உள்ளூர் பத்திரிகையில் அறிவிக்க வேண்டும். அந்த சீடர் இந்த அறிவிப்புக்கள் மற்றும் மதமாற்றம் தொடர்பான அனைத்து ஆவணங்களின் நகல்களை (வழக்கறிஞர்கள் மற்றும் சான்றோர்கள் வழங்கிய கடிதங்களை போன்று) தன்னிடம் பாதுகாப்பாக வைத்து இருக்கவேண்டும். இவை எதிர்காலத்தில் ஒரு ஆச்சாரமான இந்து அமைப்பில் சேர்வது அல்லது ஒரு வெளிநாட்டில் நிரந்தர வாசம் அல்லது குடியுரிமையை பெறுவது போன்ற சூழ்நிலைகளில் தேவைப்படலாம். அதைப் போன்று இந்தியா மற்றும் மற்ற நாடுகளில் இருக்கும் கோயில்களில், இந்தியாவிற்கு வெளியில் இருந்து யாத்திரிகள் விசேஷ தரிசனத்தை பெறுவதற்கு, அவர்கள் தங்கள் கடவுச்சீட்டை காண்பிக்க வேண்டியிருக்கும் அல்லது அவர்கள் தங்களது இந்து அடையாளத்தை மற்ற பொருத்தமான சான்றுகள் மூலம் நிரூபிக்க வேண்டியிருக்கும்.

சொந்த நாடு திரும்புவதை வரவேற்கும் சடங்கு

வ்ராத்யஸ்தோம (“விரதத்தை புகழ்தல்”) சடங்கு என்பது *சாம வேதத்தின் தாண்ட்ய பிராமண* காலத்தை சேர்ந்தது. இந்த சடங்கு வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் இந்துக்கள், மற்ற மதங்களுக்கு மாறி மீண்டும் இந்து சமயத்திற்கு திரும்ப விரும்புபவர்களுக்கு நடைபெறுகிறது. இந்திய நாட்டில் கிறித்துவ மதம் தொடங்கிய போது அதற்கு மாறிய சிரியன் மலபார் கிறித்துவர்கள், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இசுலாமிய மதத்திற்கு மாறியவர்கள், சென்ற சில தலைமுறைகளில் மதம் மாறிய இந்தியர்கள் என்று இந்திய நாட்டில் மதம் மாறியவர்களில் பலவகைகளை காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக சமீபத்தில் மதம் மாறிய பலரது மதமாற்றம் பெரும்பாலும் மேலோட்டமாக இருக்கிறது மற்றும் அவர்கள் இந்து சமயம் திரும்புவதற்கு சடங்குகளுடன் அங்கீகாரம் வழங்கினால் போதும். ஆனால் மற்றவர்கள் விஷயத்தில், முழுவதையும் மீண்டும் கற்பிக்க வேண்டியிருக்கும்.

இந்தியாவில் மீண்டும் மதமாற்றம் செய்யும் முயற்சியில் சுறுசுறுப்பாக பல அமைப்புக்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் சில அமைப்புகள், இந்துக்கள் ஆதிக்கம் செலுத்திய பகுதிகளில், மற்ற மதத்தவர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக துடிப்புடன்

செயல்படுகின்றன. மும்பை நகரில் இருக்கும் மசுராசிரமம் ஒவ்வொரு மாதமும் மதமாறிய பலரை மீண்டும் சனாதன தர்மத்திற்கு ஒரு சுத்தி ஸ்ரத்தா சடங்கு மூலம் அழைத்து வருவதில் கவனம் செலுத்தி வருகிறது. மசுராசிரமத்தின் ஸ்தாபகரான தர்ம பாஸ்கர் மசுர்கார் மகாராஜ் அவர்கள், கிறித்துவ மதத்திற்கு மாறியிருந்த 1,150 அன்பர்களுக்கு, 1928 ஆம் ஆண்டு கோவாவில் சுத்திகரிப்பு சடங்கை ஏற்பாடு செய்து, ஒரு வலுவான முன் உதாரணத்தை அமைத்து தந்தார். அதே காலகட்டத்தில் கேரள ராமகிருஷ்ண இயக்கத்தின் சுவாமி ஆகமானந்தாஜி, தனது குருவான நாராயண குருவைப் போன்று, நூற்றுக்கணக்கானவர்களை மீண்டும் இந்து மதத்திற்கு மாற்றினார். சமீப காலத்தில் தென்னிந்திய ஆசிரமங்களான மதுரை ஆதீனம் மற்றும் குன்றக்குடி ஆதீனம், ஆயிரக்கணக்கான இந்தியர்களை ஒரு வெகுஜன மதமாற்ற சடங்கின் மூலம் மீண்டும் இந்து சமயத்திற்கு மதமாற்றம் செய்தன. ஒருவரை மதமாற்றம் செய்ய கிறித்துவ சமயப்பணியாளர்கள் US$6,000 செலவழிப்பதாக, பிப்ரவரி 1989 வெளியான இந்துயிசம் டுடே ஆய்வு அறிக்கை தெரிவித்தது. 1960 தொடக்கத்தில் இருந்து விஷ்வ இந்து பரிஷத், இந்தியா முழுவதும் சுத்திகரிப்பு சடங்குகள் மூலம் அரை மில்லியன் மக்களை மீண்டும் இந்து மதத்திற்கு மாற்றியுள்ளதாக தெரியவருகிறது. இத்தகைய VHP நடவடிக்கைகள், கிறித்துவ சமயப்பணிக்கு அதிக வேதனை தருவதாக இருக்கின்றன.

மத மறுமாற்ற பிரச்சாரங்களுக்கு பிறகு சுயமாக நிலைத்து நிற்கும் குழுக்களை உருவாக்க தொடர்ந்து உபதேசங்கள், சமூக வளர்ச்சி மற்றும் சமூக கோயில் நிர்மாணத்தை திட்டமிட்டு செயல்படுத்துவது முக்கியம் ஆகும்.

வ்ராத்யஸ்தோம சான்றிதழ்

பின்வரும் பக்கத்தில் ஒரு *வ்ராத்யஸ்தோம* சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதை தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்து அல்லது பெரிதாக்கி, ஏதாவது ஒரு கோயிலில் இந்த சுத்திகரிப்பு சடங்கை நடத்தி, அதை ஆவணம் செய்து கொள்ளலாம். இந்த சடங்கானது ஒரு தேர்ச்சிபெற்ற புரோகிதர் மூலம் ஆவாகனம் செய்யப்பட்ட மகாதேவர்கள் மற்றும் தெய்வங்களின் அருள் மற்றும் சான்றோர்களின் சம்மதம் வாயிலாக, இந்து சமயத்தின் ஒரு குறிப்பிட்ட சமய உட்பிரிவுக்குள் முறையாக மீண்டும் நுழைவதை குறிக்கிறது.

வ்ராத்யஸ்தோம

व्रात्यस्तोम

சனாதன தர்மத்திற்கு மீண்டும் திரும்புவதற்கான சுத்திகரிப்பு சடங்கு

_____ என்கிற நான், இந்து சமயம்
இங்கே அன்பரின் இந்து பெயரை அச்சிடவும்

சாராத எனது தொடர்புகள், பற்றுக்கள் மற்றும் அர்ப்பணிப்புக்களை துண்டித்துக்கொண்டு, எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் தெய்வீக பண்பு, சச்சிதானந்தம் மற்றும் கர்மவினை, தர்மம் மற்றும் மறுபிறவி பற்றிய வேத கருத்துக்களில் ஒரு உறுதியான நம்பிக்கையுடன், சுத்தி சிரத்தா என்றும் அழைக்கப்படும், பாரம்பரிய வ்ராத்யஸ்தோம என்கிற சுத்திகரிப்பு சடங்கின் வாயிலாக இந்து சமயத்தின் _____ பிரிவுக்குள் மீண்டும் நுழைய வேண்டும் என்று இதன் மூலம் பணிவோடு கேட்டுக்கொண்டு, எனக்கு பிடித்தமான இந்து சமயம் திரும்புவதற்கு சமூகம் கருணையுள்ளத்துடன் அனுமதிக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன். நான் அடுத்த தலைமுறைக்கு ஒரு முன்உதாரணமாக வாழ்ந்து காட்டுவேன் என்று பயபக்தியுடன் உறுதியளிக்கிறேன்.

அன்பரின் கையொப்பம்: _____

வ்ராத்யஸ்தோம சான்றிதழ்

_____ஊரில் _____ தேதியில் பிறந்த இந்த அன்பர் _____மங்களகரமான நாளில் _____கோயிலில், உலகின் மிகவும் பழமையான பாரம்பரியத்திற்கு ஏற்ப முறையாக நடத்தப்பட்ட
வ்ராத்யஸ்தோம சடங்கில், சனாதன தர்மத்திற்கு விசுவாசமாக இருப்பேன் என்று அவர் தெய்வம், மகாதேவர்கள் மற்றும் தேவர்கள் முன்பாக உறுதிமொழி எடுத்துக்கொண்டார். இவ்வாறு இந்த அன்பர் இன்றைய தினத்தில் இருந்து இந்து சமயத்துடன் நிரந்தரமாக இணைகிறார். இத்தடன், அவர் உலகெங்கும் இருக்கும்



சொற்களஞ்சியம்

சப்தாவளி

शब्दावली



aadheenam: ஆதீனம்; அறக்கட்டளை, சங்கம், ஸ்தாபனம், அசையா சொத்து, தென்னிந்திய சைவ சித்தாந்த பாரம்பரியத்தை பின்பற்றி அமைக்கப்பட்ட ஒரு சைவ இந்துமடம். இது மடம் அல்லது பீடம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆதீனத்தின் தலைவர் அல்லது முக்கிய மதகுரு, *குரு மகாசன்னிதானம்* அல்லது *ஆதீனகர்த்தார்* என்று அழைக்கப்படுகிறார்.

***abhaya* mudrā:** अभयमुद्रा. அபய முத்திரை. “பயம் வேண்டாம்” என்று தெரிவிக்கும் வண்ணம் வழக்கமாக இந்து சமய உருவச்சிலைகளின் கைகளில் தென்படும் முத்திரை. மேலும் தகவலுக்கு: *முத்திரை*.

abhimāna: अभिमान “Egoism.”. அபிமானம்.

abhisheka: अभिषेक “Sprinkling; ablution.” **அபிஷேகம்:** “புரோக்ஷனம்; நீராட்டுதல்.” நீர், தயிர், தேன், நெய், பன்னீர் போன்றவற்றால் தெய்வ விக்ரகங்களுக்கு சடங்குகளுடன் நீராட்டுவதை குறிக்கிறது. ஆகம விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட ஒரு விசேஷமான பூஜையின் வடிவம். மேலும் சமய மற்றும் அரசியல் விழாக்களின் தொடக்கம் மற்றும் மற்ற சுப நிகழ்ச்சிகளிலும் அபிஷேகம் நடைபெறுகிறது. மேலும் தகவலுக்கு: *பூஜை*.

abhyāsa: अभ्यास “Throwing towards.” அப்பியாசம்: கடுமையான முயற்சி மற்றும் பயிற்சி.

ablution: *Snāna***.** நீராட்டுதல். ஒரு சமயச் சடங்கின் அங்கமாக உடலை சுத்தம் செய்தல்.

முழுமை (Absolute): ஆங்கில சிற்றெழுத்து (absolute): உண்மையாக, எதையும் சாராத, இன்னொன்றுடன் ஒப்பீடாக இல்லாத நிலை. ஆங்கில பெரிய எழுத்து (Absolute): முடிவான பரம்பொருள், வெளிப்படாமல், மாறாமல் யாவும் கடந்து இருக்கும், உணர்வின் மிகவும் நுணுக்கமான நிலையுடன் சிறிதும் தொடர்பில்லாத பரசிவம். அது மனித ஆன்மாவின் சாரமாக விளங்கும் பரமாத்துமா. இது *முழுநிறைவான சக்தி* மற்றும் *முழுமையான உண்மைப்பொருள்* என்றும் அழைக்கப்படுகிறது.

ஒதுங்கி இருத்தல் (abstain): விலகி இருத்தல். ஆசை, எதிர்மறை செயல் அல்லது பழக்கத்தை தவிர்த்தல்.

படுகுழி (abyss): அளவிடமுடியாத ஆழமுள்ள ஒரு குழி. ஒருவர் தீவிர தீய நடத்தையால் உணர்வின் இருண்ட நிலைகளாக, முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருக்கும் மூலாதார சக்கரத்திற்கு கீழே அமைந்திருக்கும், ஏழு *சக்கரங்கள்* (மனோஉணர்வு மையங்கள்), அல்லது *தளங்களுக்குள்* (உணர்வு லோகங்கள்) வீழ்வதற்கு வாய்ப்புள்ளது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், லோகம்.*

ācārya: आचार्य "Going toward;" "approaching." *ஆச்சார்யர்.* அதிக மதிப்பிற்குரிய ஆசிரியர். சீடர்களுக்கு தான் போதிப்பதை தனது வழக்கமாக கொண்டிருப்பவர். சிவாச்சார்ய புரோகிதர்கள் வழக்கத்தைப் போல, இந்த பட்டம் பொதுவாக தீட்சை மற்றும் நியமனம் மூலம் வழங்கப்படுகிறது.

ஆன்மீகம் சார்ந்தது ***(actinic):*** ஒளியை உருவாக்கக்கூடியது. புனிதமான, மாசற்ற நிலையில் இருக்கும் உணர்வை சார்ந்தது.

ஆன்மீக காந்த சக்தி ***(actinodic):*** ஆன்மீகம்-காந்தத்தன்மை கலந்தது; இது காந்த மற்றும் ஆன்மீக சக்தி கலந்தது, ஆன்மீக சார்ந்த உணர்வு சுத்தமாக, மாசற்று இருக்கிறது. காந்த சக்தியானது மக்களுக்கு மத்தியிலும், மக்கள் மற்றும் அவர்களின் பொருட்களுக்கு மத்தியிலும் இருக்கும் ஈர்க்கும் விசை மற்றும் விலக்கும் விசையை குறிக்கிறது. இது *பிங்கலா* மற்றும் *இடா* நாடி ஓட்டங்களில் இருந்து ஆண்மை (உக்கிர பண்பு) மற்றும் பெண்மை (மந்தமான பண்பு) பண்புகளுடன் வெளிப்படுகிறது.

முதுமொழி (adage): உண்மையன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பழமொழி.

நிபுணர் (adept): மிகவும் திறமையானவர்; வல்லுநர். ஒருவர் தனது மதத்தில் குறிப்பிட்ட ஆன்மீக பயிற்சிகள் அல்லது கட்டுப்பாடுகளில் தேர்ச்சி பெற்றவர். ஒரு மேம்பட்ட *யோகி.*

adharma: अधर्म "Unrighteousness." **அதர்மம்.** "நேர்மையின்மை." தர்மத்தின் எதிர்பதம். தெய்வீக விதியை மீறி இருக்கும் சிந்தனைகள், சொற்கள் அல்லது செயல்கள். நேர்மையின்மை, மதநம்பிக்கை இல்லாமை, குறைபாடு. மேலும் தகவலுக்கு: *தர்மம், பாபம்.*

adhyāya: अध्याय "Chapter." **அத்தியாயம்**.

பின்பற்றுதல் (adopt): குறிப்பாக ஒரு கருத்து, கொள்கை அல்லது ஒரு மதத்தை தனதாக ஏற்றுக்கொண்டு அதைப் பின்பற்றி வாழ்வது.

போற்றுதல் (adulate): புகழ்தல், மரியாதை செலுத்துதல், வியந்து பாராட்டுதல் அல்லது மிகைப் பாராட்டு.

advaita: अद्वैत "Non-dual; not two-fold." **அத்வைதம்.** இருமையற்ற தன்மை அல்லது ஒருமைவாதம். முடிவான பரம்பொருள் ஒரே ஒரு மூலப்பொருளை அல்லது இறைவனை தத்துவ கோட்பாடாக கொண்டுள்ளது. இது *துவைதம்,* இருமைவாதத்தின் எதிர்சொல். இந்து சமயத்தின் வேதாந்தம் அல்லது உபநிடதங்களின் முக்கிய தத்துவமாக இருக்கும் இந்த அத்வைதத்தைப் பற்றி பல்வேறு ரிஷிகள், குருமார்கள், பண்டிதர்கள் மற்றும் தத்துவவாதிகள் வெவ்வேறு விதமாக விளக்கம் அளிக்கிறார்கள்.

துன்பம் (adversity): துரதிஷ்டவசமான, கடினமான மற்றும் குழப்பமான நிலை; அதற்கு காரணமாக இருப்பது.

பரிந்து பேசுதல் (advocate): ஆதரவாக பேசுதல் அல்லது எழுதுதல்; துணையாக இருத்தல்.

affirmation: *Dṛiḍhavāchana.* "Firm statement." **உறுதிமொழி.** ஒரு நேர்மறையான அறிவிப்பு அல்லது வலியுறுத்தல். ஒரு விரும்பிய பலனை அடைவதற்கு, ஒரு அறிக்கையின் பொருள் மற்றும் மனதில் வரவழைக்கப்படும் காட்சிகள் மீது கவனத்தை ஒருமுகப்படுத்திக்கொண்டு, அந்த அறிக்கையை தொடர்ந்து சொல்வது ஆகும்.

தனது மதம் மீதான நம்பிக்கையை உறுதி செய்தல் (affirmation of faith): ஒருவரது மதம் மற்றும் அதன் நம்பிக்கைகள் பற்றிய ஒரு சுருக்கமான வாசகம்.

துன்பம் (affliction): துயர்; வேதனை; வருத்தம்.

செழுமை (affluence): செல்வ வளம்; சம்பத்து; வழமை; செல்வ மிகுதி.

Āgama: आगम The tradition that has "come down." **ஆகமம்.** சமஸ்கிருத சாத்திரங்களின் ஒரு மிகப்பெரிய தொகுப்பு. இவையும் வேதங்களும் ஒன்றாக (இறைவனிடம் இருந்து தோன்றிய) *சுருதி* என்று அழைக்கப்படுகிறது. சடங்கு, யோகம் மற்றும் கோயில் கட்டுமானத்திற்கு ஆகமங்கள் முக்கிய நூலாகவும் விதியாகவும் விளங்குகிறது. சைவம், வைணவம் மற்றும் சாக்தம் என்ற ஒவ்வொரு முக்கிய உட்பிரிவும் தனக்கென்று பிரத்யேகமான *ஆகம* நூல்களை கொண்டுள்ளது.

agarbhatti: अगरबत्ती "Stick incense." (Gujarati) அகர்பத்தி, ஊதுபத்தி. மேலும் தகவலுக்கு: *தூபம்.*

agni: अग्नि "Fire." அக்னி. 1) *பஞ்சபூதங்களில்* ஒன்று. 2) அக்னி தெய்வம் *யக்ஞம், அக்னிகாரக, ஹோமம்* மற்றும் *ஹவன்* மூலம் ஆவாகனம் செய்யப்படுகிறார். பிரார்த்தனைகள் மற்றும் நெய்வேத்தியங்களை பெற்று, அவற்றை தேவ லோகங்களுக்கு வழங்கும் தேவ தூதராக அக்னி பகவான் விளங்குகிறார். மேலும் தகவலுக்கு: *யக்ஞம்.*

ahaṁkāra: अहंकार "I-maker." ***அஹம்காரம்:*** தன்முனைப்பு. மனதில் தனிப்பண்பை வழங்கும் புலன்; இருமை மற்றும் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டு இருப்பதாக தோன்றும் உணர்வு. "அபிமானம்", "நான்" மற்றும் "எனது" என்ற உணர்வு. "அபிமானம்" மற்றும் "எனது" என்ற உணர்வு, உடலுடன் அடையாளம் கண்டுகொண்டு (*மதியம்*), தனிப்பட்ட சுகத்திற்கு (*மமசுகம்*) திட்டமிடுதல், தனிப்பட்ட துக்கத்திற்கு (*மமதுக்கம்)* வருந்துதல் மற்றும் எனக்கு சொந்தமானது என்ற பண்பு (*மம இதம்*) ஆகியவை *அஹங்காரத்தின்* குணங்கள் ஆகும். மேலும் தகவலுக்கு: *ஆணவ மலம், தன்முனைப்பு.*

ahiṁsā: अहिंसा "Noninjury," nonviolence or nonhurtfulness. **அகிம்சை**. மற்றவர்களுக்கு உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தாமல் இருத்தல். அகிம்சை என்பது இயமங்களில் முதன்மையான கட்டுப்பாடாக விளங்குகிறது. இந்த முக்கிய கட்டுப்பாட்டை மற்ற இயமங்கள் சார்ந்து இருக்கின்றன.

ajapa: अजप "Non-recitation." ***அஜப மந்திரம்.*** மௌனமாக ஓதும் *மந்திரம்.* மேலும் தகவலுக்கு: *ஜபம்.*

ājñā **chakra:** आज्ञाचक्र "Command wheel." ***ஆக்ஞா சக்கரம்***. நெற்றிக்கண். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

ākāśa: आकाश "Space." ***ஆகாசம்***. ஆகாயம். தடையில்லாத திறந்தவெளி. பஞ்ச பூதங்களாக இருக்கும் நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாசத்தில் ஐந்தாவதாக மிகவும் நுணுக்கமாக இருப்பது. இது அனுபவ ரீதியாக, உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சங்களில் வியாபித்து இருக்கும் புனிதமான பரவெளி அல்லது சூட்சுமமான பிளாஸ்மா வாயுவாக இருக்கிறது. தற்போது உள்பொருளாக இருப்பது மற்றும் எதிர்காலத்தில் இருக்கப்போவது அனைத்தையும் தக்க வைத்து இருக்கும் மனதின் மெய்ஞ்ஞான நிலைகளில் அருள்ஞான ரீதியாக எல்லா நிகழ்வுகளும் பதிவு செய்யப்பட்டு, தீர்க்கதரிசிகள் தெரிந்துகொள்ளும் வகையில் அமைந்து இருக்கின்றன. யாவும் கடந்து இருக்கும் இந்த *ஆகாசத்தில்* சூட்சுமமாக நுழைந்து, பிரபஞ்ச அறிவு சேகரிக்கப்படுகிறது மற்றும் மூன்று காலங்களும் (கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்) அறியப்படுகிறது. மேலும் தகவலுக்கு: (பொதுவான) மனம்.

akshata: अक्षत "Unbroken." ***அட்சதை.*** மஞ்சள் பொடியுடன் கலந்த முனை முறியாத அரிசி. இது திருமணங்கள் மற்றும் மற்ற சடங்குகளின் போது பெரியவர்கள் அட்சதையை தூவி வாழ்த்துவார்கள். மேலும் தகவலுக்கு: *பூஜை.*

alaṅkāra: अलंकार "Ornamentation." அலங்காரம். தெய்வத்திற்கு வழங்கப்படும் ஒப்பனை.

நீக்கமற நிறைந்து இருத்தல் (all-pervasive): எங்கும் பரவி இருத்தல் அல்லது பிரபஞ்சத்தின் ஒரு அங்கத்திலும் இருத்தல்.

இணக்கமான (amendable): வளையத்தக்க, மனமுவந்த, தயாராக இருக்கிற.

āmra: आम्र "Mango." **மாம்பழம்**.

amṛita: अमृत "Immortality." **அமிர்தம்.** அமுதம். "மரணம் (*மிருத*) இல்லாத" என்பது இதன் பொருள். ஒருவர் தியானங்களில் அதிக ஆழமான நிலைகளுக்குள் நுழையும் போது, *சஹஸ்ரஹார சக்கரத்தில்* இருந்து பாய்ந்து செல்லும் தெய்வீக பேரின்பத்தின் தேனமது.

amṛitakumbha: अमृतकुम्भ "Pot of immortality." ***அமிர்தகலசம்***. அன்பான விநாயகர் கையில் இந்த கலசம் இருக்கிறது. ஆழ்ந்த தியானத்தின் போது, *சஹஸ்ரஹார சக்கரத்தில்* இருந்து பாய்ந்து வரும் தெய்வீக அமிர்தம் அந்த கலசத்தில் இருக்கிறது. இந்த தேனமுது மரணமில்லாத பண்பை வழங்குகிறது.

ananasa: अननस "Pineapple." ***அன்னாசி***.

ānanda: आनन्द "Bliss." **ஆனந்தம்**. "பேரின்பம்." இறைவனின் உணர்வு அல்லது ஆன்மீக அனுபவத்தில் இருந்து தோன்றும் பரவசநிலை அல்லது அனுபவமற்ற நிலையில் வெளிப்படும் புனிதமான ஆனந்தம். ஆனந்தம் என்பது மிகவும் உன்னத நிலையில், *சச்சிதானந்தம்* என்று இறைவனைப் பற்றிய பிரபல விளக்கமாக வேதத்தில் வழங்கப்பட்டுள்ளது. இது அனைத்து ஆன்மாக்களின் தெய்வீக அல்லது மெய்ஞ்ஞான மனதை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *கடவுளை உணர்தல்.*

āṇava mala: आणवमल "Impurity of smallness; finitizing principle." ***ஆணவ மலம்***.: "சிறுமையின் மாசு; வரையறுக்கும் கோட்பாடு." அது ஆன்மாவை முழுமையாக மறைக்கும், இருமையின் தனிமைப்படுத்தும் திரை ஆகும். இது ஆன்மாவை தற்காலிகமாக கட்டுப்படுத்தும் மூன்று மலங்களில் (*ஆணவ,* கர்மவினை, மாயை) மிகவும் அடிப்படையாக விளங்கி, வரையறுக்கப்பட்ட தன்மை மற்றும் அறியாமையின் மூலமாக விளங்குகிறது. *ஆணவ மலம்* இருப்பதன் காரணமாக கடவுள், ஆன்மா மற்றும் உலகம் பற்றிய தவறான நம்பிக்கை, கடவுள் மற்றும் பிரபஞ்சத்தில் இருந்து தனித்து மற்றும் மாறுபட்டு இருப்பதாக எண்ணம் உருவாகிறது. மேலும் தகவலுக்கு: ஆணவ, ஆன்மாவின் வளர்ச்சி, அருள், *மலம், ஆன்மா.*

añjali* mudrā:** अञ्जलिमुद्रा "Reverence gesture." Also called *praṇāmāñjali.* ***அஞ்சலி முத்திரை. இது *பிரணாம அஞ்சலி* என்றும் அழைக்கப்படுகிறது. மரியாதை மற்றும் வாழ்த்துக்களை தெரிவிக்கும் இந்த முத்திரையில், இரண்டு கைகளையும் ஒன்றாக சிறிதளவு குவித்து, வழக்கமாக "நமசுகாரம்" என்று சொல்லி வணக்கம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *முத்திரை, நமசுகாரம்.*

aṅkuśa: अङ्कुश. ***அங்குசம்.*** யானையை கட்டுப்படுத்த பயன்படும் இந்த ஆயுதம், பக்தரின் பாதையில் இருந்து தடைகளை நீக்கி, மந்தமானவர்கள் முன்னேறி செல்ல துணை புரியும் விநாயகர் சக்தியின் சின்னமாக விளங்குகிறது.

Antarloka: अन्तर्लोक "Inner plane," or "in-between world." அந்தர்லோகம். சூட்சும லோகம். மேலும் தகவலுக்கு: *லோகம்.*

antaryāmin: अन्तर्यामिन् "Inner controller." ***அந்தர்யாமின்.*** "அகத்தில் இருந்து கட்டுப்படுத்துபவர்." இது உளச்சான்றாக, ஆன்மாவின் அறிந்த கருத்தாக இருக்கிறது.

தொகை நூல் (anthology): பாடல் திரட்டு.

antyeshṭi: अन्त्येष्टि "Last rites." ***அந்த்யேஸ்டி.*** "இறுதி சடங்குகள்." ஈமச்சடங்கு. மேலும் தகவலுக்கு: *மரணம், சமஸ்காரம்.*

anubhava: अनुभव "Perception, apprehension; experience." ***அனுபவம்.*** "புலனுணர்வு, உணர்தல்; பட்டறிவு." தனிப்பட்ட அனுபவம்; புரிதல்; ஞாபக சக்தியில் இருந்து தோன்றாமல் மனதில் இருக்கும் எண்ணங்கள்.

anugraha śakti: अनुग्रहशक्ति "Graceful or favoring power." அனுகிரக சக்தி. இது ஆணவம், கர்மவினை மற்றும் மாயை என்று மும்மலங்களில் இருந்து ஆன்மாவை விடுவித்து, இறுதியாக முக்தியை வழங்கும் சிவபெருமானின் ஞானோதய சக்தியை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆணவ மலம், அருள், நடராசர்.*

சமயப்பகைவன் (apostate): பழைய மதநம்பிக்கையை துறப்பவர்.

Appar: அப்பர் "Father." அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவர். இவரது இயற்பெயர் திருநாவுக்கரசர் (கி.பி. 700). இவர் சமண மதத்தில் நுழைந்தவர்களை மீண்டும் சைவ சமயத்திற்கு அழைத்து வந்த நான்கு தமிழ் சமயாச்சார்யர்களில் ஒருவர். இவர் தன்னை சிவத்தொண்டர்களின் சேவகன் என்று தன்னை குறிப்பிடுகிறார். இவர் சிவபெருமானை போற்றி தேவார பதிகங்களை பாடியிருக்கிறார். மேலும் தகவலுக்கு: *நாயனார்.*

பொதுப்பெயர் (appellative): ஒரு பெயர்; சிறப்புப் பட்டம்.

Āraṇyaka: आरण्यक "Forest treatise." ***ஆரண்யகம்.*** நான்கு வேதங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றாவது பகுதியாக இருப்பது. இந்த உரைகள் மறைஞானம், சூட்சும ஞானத்தை உள்ளடக்கி, பெரும்பாலும் வைதீக *யக்ஞங்களின்* உட்பொருட்கள் மற்றும் செயல்பாடுகளை சார்ந்து இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *வேதங்கள்.*

āratī: आरती "Light." ***ஆரத்தி.*** "ஒளி." ஒரு தெய்வீக புருஷர் அல்லது கோயிலில் இருக்கும் தெய்வத்தை *பூஜை* செய்யும் போது ஒரு தட்டில் நெய், எண்ணெய் அல்லது கற்பூரத்தினால் ஏற்றிய விளக்கை வட்டவடிவில் காண்பிப்பது ஆரத்தி என்று அழைக்கப்படுகிறது. அது அதன் பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும் போது, அவர்கள்

அதை கைகளால் தொட்டு தங்கள் கண்களில் மூன்று முறை ஒற்றிக் கொண்டு, இறை அருளை பெறுகிறார்கள். மிகவும் சிறிய பூஜையிலும் *ஆரத்தி* காண்பிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *அர்ச்சனை, பூஜை.*

archana: अर्चन ***அர்ச்சனை***. கோயில் பூஜாரிகள் செய்யும் இந்த விசேஷமான, தனிப்பட்ட, சுருக்கமான பூஜையில், ஒரு பக்தர் தனிப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் அருளை பெறுவதற்கு அவரது பெயர், நட்சத்திரம் மற்றும் கோத்திரம் உச்சரிக்கப்படுகின்றன. *அர்ச்சனை* என்பது பல்வேறு பகவன்நாமாக்களை சொல்வதையும் குறிப்பிடுகிறது. இது ஒவ்வொரு பூஜையிலும் முக்கிய அங்கமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பூஜை..*

சிரத்தையுள்ள (ardent): அதிக ஆர்வமுள்ள அல்லது பக்தியுள்ளவர்; இரக்க உள்ளம் அல்லது தீவிர உணர்ச்சியுடன் இருப்பவர்.

ardha*-Hindu:** अर्धहिन्दु "Half-Hindu." ***அர்த்த இந்து. "பாதி-இந்து." ஒரு பக்தன் இந்துகோட்பாடு மற்றும் கலாச்சாரத்தை அதிகமாக ஏற்றுக்கொண்டாலும், முறையான சடங்குடன் மதத்தில் சேராமல், ஒரு இந்துசமய பெயரை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பவர். அதைப்போன்று இது மற்ற மதத்தின் பெயர்களை ஏற்றுக்கொள்ளும் கிழக்கத்திய நாட்டவர்களையும் குறிக்கிறது.

கடினமான உழைப்பு (arduous): சிரமமான; அதிக வேலை, சக்தி அல்லது கடுமுயற்சி தேவைப்படுகிற.

artha: अर्थ "Goal" or "purpose;" wealth, substance, property, money. ***அர்த்தம்***: "இலக்கு" அல்லது "நோக்கம்" செல்வம், பொருள், சொத்து, பணம். இது பயன்பாடு மற்றும் ஆசைப்படும் பொருளையும் குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *தர்மம், புருஷார்த்த.*

***aruhu* grass:** அறுகம்புல். இவ்வகை புல் விநாயகர் அர்ச்சனைக்கு உகந்தது. இது தெய்வத்தின் சிலைக்கு மாலையாகவும் சாற்றப்படுகிறது. இது *ஹரியாலி* என்றும், சமஸ்கிருதத்தில் *துர்வா* என்றும் அழைக்கப்படுகிறது. *சைனோடான் டாக்டைலான்* என்பது இதன் தாவரவியல் பெயர் ஆகும். மேலும் தகவலுக்கு: *துர்வா.*

Arunagirinathar: அருணகிரிநாதர். தென்னிந்திய சைவ புலவர் (கி.பி. 1500). இது மதிப்பிற்குரிய குரு என்ற பொருளில் "ஆசிரியர்; ஆசானை" குறிப்பிடவும் பயன்படுகிறது.

Ārya: आर्य "Honorable, noble" or "respectable one; a master, lord." ***ஆரியன்.*** "மரியாதைக்குரிய, உயர் குணமுடைய" அல்லது "ஒரு ஆசான்."

āsān: ***ஆசான்*** "Teacher; master." ஒரு மதிப்பிற்குரிய குருவிற்கு வழங்கப்படும் ஒரு பட்டம்.

சந்நியாசி (ascetic): ஒருவர் தனது மத குறிக்கோள்களை அடைவதற்காக, தனது சுகங்கள் மற்றும் சந்தோஷங்களை கைவிட்டு, தாரணை மற்றும் தீவிரமான சுய-கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கையை வாழ்பவர்.

விபூதி (ash):

ashṭavibhūti: अष्टविभूति "Eight powers." ***அட்டமா சித்தி.*** "எட்டு சித்திகள்." பல்வேறு நூல்களில் குறிப்பிடப்படும் அசாதாரண சித்திகளின் பட்டியல்: 1) *அணிமா:* ஒரு அணுவைப் போன்று சிறிய உடலை பெறுதல்; 2) *மகிமா:* மலையைப் போன்று பெரிய உருவத்தைப் பெறுதல்; 3) *இலகிமா:* காற்றைப் போன்று இலேசாக இருத்தல்; 4) *பிராப்தி:* வியாபகப் பண்பு, விருப்பத்திற்கேற்ப எங்கும் இருத்தல்; 5) *பிரகாமியம்:* ஆசைகளின் நிறைவேற்றம்; 6) *வசித்துவம்:* இயற்கை சக்திகளை கட்டுப்படுத்துதல்; 7) *ஈசத்துவம்:* இயற்கை மீது ஆதிக்கம் செலுத்துதல்; 8) *காமாவசாயித்துவம்:* முழுமையான திருப்பதி. மேலும் தகவலுக்கு: *சித்தி.*

Aṣṭavināyaka: अष्टविनायक "The Eight [obstacle] removers." ***அஷ்ட விநாயக.*** எட்டு விநாயகர்கள். மகாராஷ்டிர மாநிலத்தின் புனேவின் புறநகர் பகுதிகளான மோர்காவ், தேவூர், சித்த டெக், ராஞ்சண்காவ், ஓஜர் க்ஷேத்ரம், லேண்யாத்ரி குகை, மஹாட் மற்றும் பாலியில் இருக்கும் எட்டு விநாயகர் மூர்த்திகள் உள்ளன. இவற்றை காண வருடந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகிறார்கள்.

āśrama: आश्रम "Place of striving." ***ஆசிரமம்.*** From *śram,* "to exert energy." Hermitage; order of life. "முயற்சி மேற்கொள்ளும் இடம்." துறவி வசிக்கும் இடம்; வாழ்க்கையில் ஒரு நிலை. புனிதமான புகலிடம்; ஒரு சாது, மகான், சுவாமி, துறவி அல்லது குருவின் இருப்பிடம் மற்றும் அவர் சீடர்களுக்கு கல்வி கற்பிக்கும் இடம்; இங்கே வழக்கமாக மாணவர்களுக்கு தங்கும் வசதியும் வழங்கப்படும். இது வாழ்க்கையின் நான்கு நிலைகளையும் குறிப்பிடுகிறது.

āśrama* dharma:** आश्रमधर्म "Laws of life's orders." ***ஆசிரம தர்மம். "வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் விதிகள்." மேலும் தகவலுக்கு: *தர்மம்.*

சூட்சுமமான (astral): தூல மற்றும் காரண லோகங்களுக்கு மத்தியில் தூல பண்பில்லாமல் நுணுக்கமாக இருக்கும் லோகம் (சூட்சும லோகம்) சார்ந்தது. மேலும் தகவலுக்கு: *சூட்சும லோகம்.*

சூட்சும உடல் (astral body): *அந்தரலோகம்* என்று அழைக்கப்படும் சூட்சும உலகம், உட்புற உலகில் ஆன்மா செயல்படும் நுணுக்கமான, *சூட்சும சரீரத்தை* குறிப்பிடுகிறது. சூட்சும உடலில் *பிராணமய கோசம்*, உள்ளுணர்வு-அறிவுணர்வு கோசம் (*மனோமய கோசம்*) மற்றும் அறிவெழுச்சி கோசம் (*விஞ்ஞானமய கோசம்*) அடங்கியுள்ளன மற்றும் இதில்

மரணத்தின் போது, தூல உடலில் இருந்து *பிராணமய கோசம்* விடுவிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *கோசம், ஆன்மா.*

சூட்சும லோகம் (astral plane): இது நுணுக்கமான, தூல பண்பை சாராத பரிமாணத்துடன் தொடர்புடையது. இது அந்தர்லோகம் அல்லது இரண்டாவது உலகம் என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டாவது உலகில் "சூட்சும சக்திகள்" வசிக்கின்றன என்றாலும், அவற்றை பூலோகத்தில் சூட்சுமமாக உணர முடியும். மேலும் தகவலுக்கு: *லோகம், மூன்று லோகங்கள்*. மேலும் தகவலுக்கு: *லோகம்.*

ஜோதிடம் (astrology): விண்ணுலக தாக்கங்கள் பற்றிய அறிவியல்.

asura: असुर "Evil spirit; demon." (Opposite of *sura,* meaning "deva; God.") ***அசுர சக்தி***. "தீய சக்தி; அசுரன்." ("தெய்வம்; கடவுள்" என்பதை குறிக்கும் *சுரா* என்ற சொல்லின் எதிர்பதம்) கீழ்நிலை சூட்சும உலகமான நரகத்தில் இருக்கும் ஒரு உயிர்சக்தி. *அசுரர்கள்* தூல உலகில் இருப்பவர்களுடன் தொடர்பு கொண்டு, மக்களின் வாழ்க்கைகளில் சிறிய அல்லது பெரிய பிரச்சனைகளை உருவாக்குகிறார்கள். *அசுரர்கள்* இந்த நிலையில் நிரந்தரமாக நிலைத்து இருக்காமல் வளர்ச்சியை பெறுகிறார்கள். மேலும் தகவலுக்கு: *நரகம்.*

அசுரர்களின் குணத்தை சார்ந்த (asuric): "ஆன்மீகம் அல்லாத."

atala: अतल "Bottomless region." ***அதள***: "அடிப்பகுதி இல்லாதது." இந்த சக்கரம் இடுப்புப் பகுதியில், *மூலதாரத்திற்கு* கீழிருக்கும் முதல் சக்கரமாக இருக்கிறது. இது பயம் மற்றும் கழிகாமத்தின் பகுதியாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், லோகம், நரகம்.*

நாத்திகம் (atheism): மதம் அல்லது மதத்தின் நம்பிக்கைகள் அனைத்தையும் நிராகரித்தல், அல்லது கடவுள் அல்லது தெய்வங்கள் எதுவும் இல்லை என்கிற தெளிவான நம்பிக்கையுடன் இருத்தல்.

ātman: आत्मन् "The soul; the breath; the principle of life and sensation." ***ஆத்மன்***: "ஆன்மா; உயிர்மூச்சு; வாழ்க்கை மற்றும் தூல உணர்வின் கோட்பாடு." *ஆனந்தமய கோசம்* மற்றும் அதன் சாரமாக (பராசக்தி மற்றும் பரசிவம்) இருக்கும் ஆன்மாவின் முழுமையை குறிக்கிறது. நாம் ஆத்மனாக இருக்கிறோம். ஆனால் நாம் தூல உடல், உணர்ச்சிகள், வெளிப்புற மனம் அல்லது ஆளுமையாக இல்லை என்பது இந்து சமயத்தில் மிகவும் அடிப்படை கோட்பாடுகளில் ஒன்றாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *பரமாத்துமன், ஆன்மா.*

ātmārtha pūjā: आत्मार्थपूजा "Personal worship rite." ***ஆத்மார்த்த பூஜை.*** "தனிப்பட்ட வழிபாடு." வீட்டில் நடைபெறும் பூஜை. மேலும் தகவலுக்கு: *பூஜை.*

பரிகாரம் (atone): பிராயச்சித்தம் அல்லது ஈடு செய்தல். மேலும் தகவலுக்கு: *பாபம், தவம்.*

சித்தி (attainment): கைப்பற்றுதல், சாதனை செய்தல் அல்லது முயற்சி மூலம் உணர்தல். ஆன்மீக சித்தி.

அலங்கார ஆடை (attire): குறிப்பாக செழிப்பான அல்லது சிறப்பான ஆடைகள்; பகட்டாடை ஒப்பனை.

Aum: ॐ or ओ३म् Often spelled *Oṁ*. ஓம். இந்து சமயத்தின் தாரக மந்திரம். இது தெய்வீக நூல்களின் தொடக்கத்தில் பயன்படுத்தப்படுகிறது. அன்பான விநாயகரின் சின்னம். இது அ-உ-ம் என்று ஒரு மந்திரமாக உச்சரிக்கப்படுகிறது. மேலிருக்கும் பிறை சந்திரன் மற்றும் புள்ளி *அனுஸ்வார* என்று அழைக்கப்படுகிறது. இது பரநாதத்தை பிரதிபலிக்கிறது. இந்திய மொழிகளில், “ஆமாம், உறுதியாக" அல்லது “வாழ்க" என்பதையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *நாதம்.*

ஒளி உடல் (aura): இது மனித உடலுக்குள்ளும் வெளிப்புறத்திலும் பலவண்ண புலமாக ஒளிரும், நுணுக்கமான சக்தியாக பிரகாசிக்கிறது. இது மூன்று முதல் ஏழு அடிகள் நீளத்துடன் இருக்கிறது. ஒருவரது உணர்வு, எண்ணங்கள், மனநிலைகள் மற்றும் உணர்ச்சிகளின் நிலைக்கு ஏற்ப ஒலி உடலின் நிறங்கள் மாறுகின்றன. மேலும் தகவலுக்கு: மனம் (*ஐந்து நிலைகள்*)

auspicious: *Maṅgala.* **மங்களம்.** அனுகூலமான, நல்ல சகுணம், நன்றாக பிணைந்து இருக்கிற. இந்து வாழ்க்கைமுறையில் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. மனிதன் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு, உகந்த சமயத்தை தீர்மானிக்க, ஜோதிடம் ஒரு செய்முறையை வரையறுக்கிறது. மேலும் தகவலுக்கு: *ஜோதிடம்.*

உடலை விரும்பி வருத்துதல் (austerity): இது *சித்திகளை* பெறுவதற்கு, அருள் கிடைப்பதற்கு, உள்ளுணர்வு இயல்பை வெற்றிக்கொள்வதற்கு மற்றும் பழைய *கர்மவினைகளின்* விதைகளை எரிப்பதற்கு என்று கடைபிடிக்கப்படும், உடல் மற்றும் மனம் சார்ந்த சுய-கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கத்தை குறிப்பிடுகிறது. *மேலும் தகவலுக்கு: பிராயசித்தம், தபஸ்.*

Auvaiyar: ஔவையார். வரலாற்றில் பல ஔவையார்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளனர். சுந்தரர் காலத்தில் வாழ்ந்த ஒரு ஔவையார் (கி.பி. 800), விநாயகர், முருகன் மீது மிகுந்த பக்தி கொண்டவராக இருந்தார் (மேலும் தகவலுக்கு பாடம் 17 படிக்கவும்). அவர் பழங்கால இந்தியாவில் நன்னெறிகளை செய்யுளாகவும் பாடலாகவும் பாடியுள்ளார். அவரின் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், உலக நீதி, மூதுரை மற்றும் நல்வழி போன்றவை இன்றும் பிரபலமாக இருக்கின்றன. ஒரு ஔவை (கி.மு. 200) தமிழ்ச்சங்கத்தில்

திருவள்ளுவரின் திருக்குறளை அரங்கேற்றம் செய்ய துணை புரிந்ததாக கூறப்படுகிறது.

avasthā: अवस्था "Condition or state" of consciousness or experience." ***அவத்தை.*** உணர்வு அல்லது அனுபவத்தின் "தன்மை அல்லது நிலை." உணர்வு பற்றி வேதங்கள் வழங்கும் குறிப்புகளில் அவத்தை என்பதை *ஜாக்ரத்* (அல்லது *வைஷ்வாநர*), "விழித்தநிலை;" *ஸ்வப்னா* (அல்லது *தைஜஸ்*), "கனவு நிலை;" *சுஷுப்தி*, "ஆழ்ந்த நித்திரை;" மற்றும் துரிய, "நான்காவது நிலையாக" இருக்கும் மெய்ஞ்ஞான நிலை என்று நான்கு நிலைகளாக *மாண்டூக்ய உபநிடதத்தில்* விளக்கப்பட்டுள்ளது. "*துரிய* நிலையை கடந்து," ஐந்தாவது நிலையாக *துரியதீதம்* உள்ளது.

avatāra: अवतार "Descent." **அவதாரம்.** கடவுள் ஒரு மனித (அல்லது விலங்கு) உடலில் பிறவி எடுத்தல். இது சாக்த இந்துசமயம், சுமார்த்த இந்துசமயம் மற்றும் வைணவ இந்துசமயத்தின் மைய கோட்பாடாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: மனித பிறவி எடுத்தல், *இஷ்ட தேவதா, வைணவம்.*

avidyā: अविद्या Spiritual "ignorance." ***அவித்யை.*** ஆன்மீக அறியாமை. மெய்ம்மை பற்றிய தவறான புரிதல். நிலையற்றதை நிலையானதாக தவறாக கருதுதல்.

awareness: *Sākshin,* or *chit. சாட்சி. சாக்ஷின்* அல்லது *சித்.* தனிமனிதனின் உணர்வு, புலனுணர்வு, புரிதல்; புலனுணர்வின் சாட்சி, "ஆன்மாவின் அகக்கண்." ஆன்மா உணர்ந்து, பார்த்து மற்றும் புரிந்துக்கொண்டு, அந்த புரிதலில் உணர்வுடன் இருக்கும் திறன். மேலும் தகவலுக்கு: *உணர்வு.*

āyurveda: आयुर्वेद "Science of life," "science of longevity." **ஆயுர்வேதம்**. "உயிரில் இருக்கும் விஞ்ஞானம்," "நீண்ட ஆயுளில் இருக்கும் விஞ்ஞானம்." இது பழங்கால இந்தியாவை சார்ந்த மருத்துவம் மற்றும் ஆரோக்கியத்தின் ஒரு முழுமையான அமைப்பாக விளங்குகிறது. இதன் குறிக்கோள்களாக *ஆயுஸ்* என்ற நீண்ட ஆயுள் மற்றும் *ஆரோக்கிய* என்கிற "ஆரோக்கியம்" விளங்குகின்றன. இந்த குறிக்கோள்கள் முடிவான ஆன்மீக முன்னேற்றத்தை நோக்கி முன்னேற துணை புரிகின்றன. ஆரோக்கியம் என்பது உயிர்சக்தியின் அனைத்து நிலைகளிலும் ஆற்றல்களை (குறிப்பாக தோஷங்களை) சமன் செய்வதன் மூலம் அடையப்படுகிறது.



Bāla Gaṇapati: बालगणपति. ***பாலகணபதி***. இது குழந்தைகளுக்கு வைக்கும் பெயராகவும், "சிறு வயது" விநாயகரின் பாரம்பரிய *மூர்த்தியின்* பெயராகவும் இருக்கிறது. இவர் தனது திருக்கரங்களில் வாழைப்பழம், மாம்பழம், கரும்பு, பலாப்பழம் மற்றும் *மோதகம்* என்று ஐந்து வகை இனிப்புக்களை வைத்து இருக்கிறார்.

bālasthāpana: बालस्थापन "Initial establishing." ***பாலாலயம்*** அல்லது ***பாலஸ்தாபனம்***. ஒரு புதிய கோயிலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிர்மாணம் செய்யவேண்டும் என்று சங்கல்பம் எடுத்து, அந்த இடத்தை சுத்தி செய்யும் சடங்குகள்.

Ballaleśvara: बल्लालेश्वर "Lord of Ballala" [after the name of a young devotee]." பல்லாலேஸ்வர். "பல்லால என்ற பெயருடைய சிறுவனின் ஈசுவரன்." இந்த விநாயகர் சிலை மகாராஷ்டிராவின் பாலி கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கிறது.

விருப்பமில்லாமல் வழங்குதல் (begrudgingly): தீய எண்ணத்துடன் அல்லது அரை குறை மனதுடன் வழங்குதல்.

குறித்துக்காட்டு (betoken): சின்னமாக விளங்குவது; குறிப்பிடுவது; காண்பிப்பது.

Bhagnadanta: भग्नदन्त "He of broken tusk." ***பக்னதந்த.*** "உடைந்த தந்தத்தை உடையவர்." அன்பான விநாயகரை குறிப்பிடும் பெயர்.

bhajana: भजन Spiritual song. ***பஜனை.*** ஆன்மீக பாடல். தெய்வீக பாடல், ஸ்தோத்திரங்கள் மற்றும் சுலோகங்களை தனியாக அல்லது குழுவினருடன் பாடுதல். மேலும் தகவலுக்கு: *கீர்த்தனை*.

bhakta: भक्त "Devotee." **பக்தன்.** இறைவனை வழிபடுவர். இறைவனிடம் சரண் அடைந்தவர்.

bhakti: भक्ति "Devotion." **பக்தி**. இறைவன், மகாதேவர்கள் அல்லது குருவிடம் சரண் அடைதல். பக்தி என்பது மிகவும் எளிமையான வழிபாட்டில் இருந்து முழுமையான சரணாக, ஆணவத்தை அழிக்கும் கோட்பாடாக இருக்கும் *பிரபத்தி* வரை பல்வேறு வடிவங்களை பெற்று இருக்கிறது. பக்தி என்பது அனைத்து இந்து சமய உட்பிரிவுகள் மற்றும் உலகெங்கும் இருக்கும் யோகப்பள்ளிகளின் அடிப்படையாகவும் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பக்தி யோகம், தரிசனம், பிரபத்தி, பிரசாதம், தியாகம், சரணாகதி, யக்ஞம்*.

Bhakti Gaṇapati: भक्तिगणपति ***பக்தி கணபதி***. "பக்தர்களுக்கு பிடித்தமானவராக" மிகவும் பிரபலமாக இருக்கும் இந்த விநாயகர் தனது திருக்கரங்களில் ஒரு தேங்காய், ஒரு கிண்ணத்தில் பாயசம், மாம்பழம் மற்றும் வாழைப்பழத்தை வைத்து இருக்கிறார்.

bhakti yoga: भक्तियोग "Union through devotion." **பக்தி யோகம்**. ஒருவர் தனது இதயத்தில் அன்பை விழிப்படைய செய்து கடவுளின் அருளுக்கு தன்னை திறந்து கொள்ளும்

நோக்கத்துடன் தெய்வீக கட்டுப்பாடுகள், வழிபாடு, பிரார்த்தனை, சுலோகங்கள் மற்றும் பாடல்களின் வழக்கம் பக்தி யோகம் என்று அழைக்கப்படுகிறது. பக்தியை இறைவன், மகாதேவர்கள் அல்லது ஒரு சத்குரு மீதும் செலுத்தலாம். பதஞ்சலியின் யோக தரிசனத்தில் (கோட்பாடு) இரண்டாவது அங்கமாக இருக்கும் நியமங்களில் (கடைப்பிடித்தல்கள்) பக்தி வடிவில் (ஈசுவரபிரணிதானா) பக்தி யோகம் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *பிரபத்தி*, *யக்ஞம்*.

bhaṅgima: भङ्गिम “Posture.” ***பங்கிம***. “முத்திரை.” ஒரு சிலையில் இருக்கும் அங்கங்களின் நிலை.

Bhārata: भारत. ***பாரதம்.*** பழங்கால இந்தியாவின் பெயர். இது சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புப் பெயராக விளங்குகிறது (இந்தியில் பாரத்). மேலும் இது பாரத்வர்ஷ (“பாரத நாடு”), ஒரு புராண காலத்து மன்னர் மற்றும் முனிவரையும் குறிப்பிடுகிறது..

Bhāratkhand: “Land of Bhārat,” India. பாரதகண்டம். இந்தியா.

bhāva: भाव. ***பாவனை***. ஒருமுகப்பட்ட உணர்ச்சி, பக்குவப்பட்ட பக்தி.

Bhūloka: भूलोक “Earth world.” ***பூலோகம்***. தூல லோகம். மேலும் தகவலுக்கு: *லோகம்*.

bhūmikā: भूमिका “Earth; ground; soil.” ***பூமிகா.*** “பூமி; நிலம்; மண்.” அறிமுகம்; ஒரு புத்தகத்திற்கு வழங்கப்படும் அறிமுகம். இது “உண்டாகுதல், இருத்தல்; தோன்றுதல், இருப்பை பெறுதல்” என்று பொருள்படும் *பூ* (சமஸ்கிருத வினையடி) சொல்லில் இருந்து உருவானது.

bīja mantra: बीजमन्त्र “Seed syllable.” ***பீஜ மந்திரம்***. “பீஜாட்சர மந்திரம்.” சூட்சும சடங்குகளின் போது, ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை வழிபடுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு எழுத்து சம்ஸ்கிருத ஒலி.

bindu: बिन्दु “A drop, small particle, dot.” பிந்து: “ஒரு துளி, சிறிய பொருள், புள்ளி.” 1) இது படைப்பின் விதை அல்லது மூலமாக விளங்குகிறது. 2) நெற்றியில் இரு புருவங்களுக்கு மத்தியில் அல்லது அதற்கு மத்தியில் இடும் சிறிய புள்ளி. இது குங்குமம், சந்தனம், களிமண், ஒப்பனைப் பொருள் அல்லது வேறு பொருட்கள் மூலம் தயாரிக்கப்படும். இது இந்து சமயத்தை சேர்ந்தவர் இடும் சின்னம். இது மறைஞான ரீதியாக தூல கண்களுக்கு தெரியாதவற்றை காணும் “மூன்றாவது கண்” அல்லது “மனதின் கண்ணை” குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *திலகம்*.

அருள், ஆசிகள் (blessing): நல்லாசிகள்; வாழ்த்துக்கள். இந்து வாழ்க்கையின் மிகமுக்கிய அம்சமாக அருளை வேண்டுவதும், அதை வழங்குவதும் விளங்குகின்றன. இது *காருண்ய* (அருள்), *சக்தி* (ஆற்றல்), தரிசனம் (தெய்வீக சக்தியை சந்தித்தல்/தரிசித்தல்), *பிரசாதம்* (நெய்வேத்திய பிரசாதம்), *பூஜை* (ஆவாகனம்), *தீர்த்த*

யாத்திரை (புண்ணிய தளங்கள் செல்லுதல்), *தீட்சை*, *சக்திபாத* (தெய்வீக அருள் பரவுதல்), *சமஸ்காரங்கள்* (வாழ்க்கையின் முக்கிய தருணங்களில் நடைபெறும் சடங்குகள்), *சாந்நித்ய* (புனிதமான இருப்பு) மற்றும் *சாதனை* (ஆன்மீக இணக்கத்தை பெறுவதற்கான பயிற்சிகள்) பற்றிய கோட்பாடுகளின் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.

பற்று (bond (bondage)): மேலும் தகவலுக்கு: *ஆன்மாவின் முதிர்ச்சி*, *மலம்*, *பாசம்*.

boon: *Varadāna*. **வரம்**. மக்களின் வரவேற்பை பெறும் அருள், தெய்வீக அருளால் கிடைக்கும் பயன். ஒரு எதிர்பாராத பலன் அல்லது வெகுமதி. மேலும் தகவலுக்கு: *ஆசிகள்*, *அருள்*.

தாராளகுணம் மிகுந்த (bountiful): வரையறை இல்லாமல் மிகுதியாக வழங்குவது; ஏராளமான.

Brahmā: ब्रह्मा. **பிரம்மா.** படைப்புக் கடவுளின் பெயர். சைவர்கள் சிவபெருமானின் ஐந்து அம்சங்களில் மூன்று அம்சங்களாக பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரனை கருதுகிறார்கள். சுமார்த்த சம்பிரதாயத்தை சேர்ந்தவர்கள் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவபெருமானை முப்பெரும் தெய்வகளாக கருதுகிறார்கள் மற்றும் அதில் சிவபெருமான் அழிப்பவராக இருக்கிறார். படைக்கும் கடவுளாக இருக்கும் பிரம்மாவை 1) *உபநிடதங்கள்* குறிப்பிடும் பிரம்மம்; 2) *பிராமண* என்கிற வேத உரைகள் மற்றும் சடங்கு முறைகள்; 3) இந்து சமய பிராமணர் குலத்துடன் குழப்பிக்கொள்ள வேண்டாம். மேலும் தகவலுக்கு: *பிரம்மம்*, *பரமேசுவரன்*.

brahmachārī: ब्रह्मचारी "He who is moving in God." ***பிரம்மச்சாரி***. பிரம்மச்சரியம் என்பது புலன் அடக்கத்துடன் இருந்து சாதனை, பக்தி மற்றும் சேவை உட்பட சமய அறிவுறுத்தல்களை கடைப்பிடித்து, அவ்வப்போது எளிமையான விரதங்களை மேற்கொள்ளும் ஆன்மீக நாட்டமுள்ள ஒரு திருமணமாகாத இளைஞரை குறிப்பிடுகிறது. இது மாணவ பருவத்தில் இருப்பவரை, 12 இருந்து 24 வயது வரை இருப்பவரை அல்லது அவருக்கு திருமணமாகும் வரை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆசிரம தர்மம்*.

brahmachāriṇī: ब्रह्मचारिणी. ***பிரம்மசாரிணி***. பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கும் பெண்.

brahmacharya: ब्रह्मचर्य "Path to God," or "moving in God." ***பிரம்மச்சரியம்***. "வேதம் வழி செல்லும் வாழ்க்கை." புலன் வழி செல்லாமல் இந்திரிய நிக்ரகம் செய்து மனதை கட்டுக்குள் வைத்தல். மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்*.

Brahman: ब्रह्मन् "Supreme Being; expansive spirit." **பிரம்மம்.** பிரம்மன். "பரமாத்துமா." இது "வளர்தல், அதிகரித்தல். விரிவாக்குதல்," என்று குறிக்கும் *ப்ரிஹ்* என்ற வேர்ச்சொல்லில் இருந்து உருவானது. இது வேதங்களில் கடவுளின் பெயர் அல்லது மகாதேவரை குறிக்கிறது, மற்றும் அதில் அவர் 1) யாவும் கடந்த முழுமையாக, 2) எங்கும் வியாபித்து

இருக்கும் சக்தியாக மற்றும் 3) பரமாத்துமாவாக அல்லது ஆதி ஆன்மாவாக விவரிக்கப்பட்டு இருக்கிறார். இந்த மூன்றும் சிவபெருமானின் மூன்று முழுமைகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. அதனால் சைவர்கள் பிரம்மன் மற்றும் சிவனை ஒரே கடவுளாக நிற்குண மற்றும் சகுண பிரம்மமாக அறிகிறார்கள். —***நிர்குண பிரம்மம்,*** "பண்புகள் (குணம்) இல்லாத கடவுள்" உதாரணத்திற்கு உருவமில்லாமல், முழுமையான உண்மைப்பொருள், பரபிரம்மம் அல்லது பரசிவமாக–புலனாகும் பண்புகளை வெளிப்படுத்தும் குணம் (பண்பு), தெளிவாக தெரியும் உள்பொருள் மற்றும் பராசக்தியையும் முழுமையாக கடந்து இருக்கும் நிலை; —***சகுண பிரம்மம்,*** "பண்புகளுடன் இருக்கும்" கடவுள்; சிவபெருமான் தனது முழுமைகளாக பராசக்தி மற்றும் பரமேசுவரனாக இருக்கும் நிலை. இந்நிலையில் கடவுள் மெய்ஞ்ஞானமாக, எங்கும் வியாபித்து, எல்லாம் அறிந்து, எல்லோர் மீதும் அன்பை செலுத்தி ஆற்றல் நிறைந்து இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *பரமேசுவரன், பராசக்தி, பரசிவம்*.

Brāhmaṇa: ब्राह्मण "Knower of God." ***பிராமண***. "பிரம்மத்தை அறிந்தவன்." 1) ஒவ்வொரு வேதத்தில் இருக்கும் நான்கு முக்கிய பிரிவுகளில் ஒன்று. இது பிரதானமாக *யக்ஞம்* மற்றும் புரோகிதர்களின் விசேஷ கடமைகள் மற்றும் விதிகள் பற்றி விளக்கம் அளிப்பதோடு, தத்துவ அறிவிலும் சிறந்து விளங்குகிறது. 2) நான்கு *வர்ணங்களில்* முதலாவதாக விளங்குவது. இதில் புரோகிதர்கள், கல்வியாளர்கள் மற்றும் மனிதநேயத்தின் வழிகாட்டிகள் உட்பட சிறந்த கல்வி அறிவு மற்றும் பக்தியுடன் இருக்கும் ஆன்மாக்கள் அங்கம் வகிக்கின்றனர். மேலும் தகவலுக்கு: *பிராமணன், வர்ண தர்மம், வேதங்கள்*.

Brahmaṇaspati: ब्रह्मणस्पति "Divine artisan." ***பிரம்மனஸ்பதி***. வேதங்களின் அதிபதி.

Brahmāṇḍa: ब्रह्माण्ड "Egg of God," or "Cosmic egg." ***பிரம்மாண்டம்***. அண்டம்; உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சம். மேலும் தகவலுக்கு: *லோகம், மூன்று லோகங்கள், உலகம்*.

brahmarandhra: ब्रह्मरन्ध्र "Door of Brahman." ***பிரம்மரந்திரம்***. மேலும் தகவலுக்கு: *கபாலத்தில் இருக்கும் துளை*.

Brahma Sūtra(s): ब्रह्मसूत्र "Threads (aphorisms) of the Absolute." ***பிரம்மசூத்திரம்***. "பிரம்மம் பற்றிய சூத்திரங்கள்." இவை *வேதாந்த சூத்திரங்கள்* என்றும் அழைக்கப்படுகின்றன. இதனை பாதராயணர் (கி.மு. 400) இயற்றினார். இது உபநிடத கருத்துக்களை சீர்செய்து சுருக்கி வழங்க மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி ஆகும். மிகவும் சுருக்கமாக இருக்கும் அதன் 550 சூத்திரங்களை, ஒரு விளக்கவுரை இல்லாமல் புரிந்துகொள்வது மிகவும் கடினமாக இருக்கும். உபநிடதங்கள மற்றும் பகவத் கீதை மற்றும் இந்த நூலின் விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, பின்னர் தோன்றிய வேதாந்த பிரிவுகள்

தங்களது சொந்த உபநிடத கருத்துக்களை வெளிப்படுத்தி உருவாக்கிக்கொண்டன. மேலும் தகவலுக்கு: *உபநிடதம், வேதாந்தம்*.

brahmin ***(brāhmaṇa):*** ब्राह्मण "Mature or evolved soul." **பிராமணன்**. "முதிர்ந்த அல்லது பக்குவமடைந்த ஆன்மா." சிறப்பாக கல்வி கற்று, தெய்வ பக்தியுடன் இருக்கும் ஆன்மாக்களின் குலம். *பிராமணன்* என்றால், "வளர்ச்சி, விரிவாக்கம், பக்குவமடைதல், மேம்பாடு, ஆன்மாவின் எழுச்சி." விவேகம், பொறுமை, சகிப்புத்தன்மை மற்றும் பணிவுக்கு முன் உதாரணமாக பக்குவமடைந்த ஆன்மா விளங்குகிறது.

பிராமண பாரம்பரியம் (brahminical tradition): *மந்திரங்களை* ஓதுதல் மற்றும் தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தனிப்பட்ட விதிகளைப் போன்று, *வைதீக* பிராமணர்களின் பாரம்பரிய சமய கட்டுப்பாடுகள்.

Bṛihaspati: बृहस्पति "Lord of Prayer." ***பிருகஸ்பதி***. "பிரார்த்தனையின் கடவுள்." மகாதேவர்களின் குரு மற்றும் வாக்கின் தலைவன். இவர் சிலசமயங்களில் விநாயகராகவும் அறியப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *விநாயகர்*.

Buddha: बुद्ध "The Enlightened." **புத்தர்:** "ஞானோதயம் பெற்றவர்." வழக்கமாக இந்த பெயர், நேபாள எல்லையில் இருக்கும் கிழக்கு இந்தியாவின் சைவ இந்துபிரிவை சேர்ந்த சாக்கிய குலத்தில் பிறந்த இளவரசன், சித்தார்ந்த கௌதமரை (கி.மு. 624–544), குறிப்பிடுகிறது. அவர் உலக வாழ்க்கையை துறந்து, துறவறம் பூண்டார். அவர் ஞானோதயம் பெற்ற பிறகு, கோட்பாடுகளை போதித்தார் மற்றும் பின்னர் இதனை பயன்படுத்தி அவரது சீடர்கள் பௌத்த தர்மத்தை தொடங்கினார்கள். மேலும் தகவலுக்கு: *பௌத்த தர்மம்*.

buddhi: बुद्धि "Intellect, reason, logic." ***புத்தி***. "அறிவு, காரண ஆய்வு, தர்க்கம்." அறிவுணர்வு அல்லது கட்டுப்பாட்டுடன் இருக்கும் மனம். இது உள்ளுணர்வு-அறிவுணர்வு கோசம் அல்லது மனோமய கோசத்தின் புலன் ஆகும். மேலும் தகவலுக்கு: *அறிவுணர்வு மனம், (தனிப்பட்ட) மனம்*.

Buddhi* and *Siddhi: बुद्धि सिद्धि "Wisdom and attainment (or fulfillment);" ***சித்தி மற்றும் புத்தி***. விநாயகரின் இரண்டு சக்திகளின் உருவகமாக இருக்கும் இரண்டு தேவியர்களின் பெயர்கள்.

பௌத்த தர்மம் (Buddhism): புத்தர் (கி.மு. 624–544) என்று அழைக்கப்பட்ட, சித்தார்த்த கௌதமரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட மதம். அவர் மனித ஆன்மா அழிவில்லாதது என்கிற கோட்பாட்டை நிராகரித்தார் மற்றும் அவர் எந்த ஒரு கடவுளையும் போதிக்கவில்லை. ஆனால் மனிதன் பேராசை, வெறுப்பு மற்றும் மாயையை வெற்றிக்கொண்டு, நான்கு உயர்ந்த உண்மைகளை உணர்ந்து மற்றும் எண்வகை

மார்க்கங்களை பின்பற்றி ஞானோதயத்தை பெறவேண்டும் என்று போதித்தார். மேலும் தகவலுக்கு: *புத்தர்*.



செவ்வக வடிவில் பின்னப்பட்ட பனை ஓலை (*cajan):* இது வீட்டு கூரை, சுவர் மற்றும் வேலியாக பயன்படுத்தப்படுகிறது.

camphor:-*Karpūra*. **கற்பூரம்**. கற்பூர மரத்தில் இருந்து வெள்ளை நிறத்தில் வாசனையுள்ள இந்த திட படிகம் தயார் செய்யப்படுகிறது. இது செயற்கையாக பினீன் என்ற வேதியல் பொருளில் இருந்து தயார் செய்யப்படுகிறது. இது கோயில் *ஆரத்தியில்* எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆரத்தி, பூஜை*.

ஜாதி (caste): பழங்கால இந்தியாவில் உருவான *வர்ண தர்மம்* (அல்லது *ஜாதி தர்மம்*). இந்த அமைப்பு பல தொழில் குழுக்களில் சலுகைகள், அந்தஸ்து, உரிமைகள் மற்றும் கடமைகளை தீர்மானித்தன. இந்த அமைப்பில் ஒருவர் தான் பிறந்த பரம்பரை மூலம் அந்தஸ்த்துக்கு தகுதி பெற்றார். இது *பிராமண, சத்திரிய, வைஷ்ய* மற்றும் *சூத்திர* என்ற நான்கு முக்கிய பிரிவுகளுடன் (*வர்ணங்கள்*) எண்ணற்ற ஜாதிகளை கொண்டிருக்கிறது. மேலும் தகவலுக்கு: *வர்ண தர்மம்*.

காரண லோகம் (causal plane): உள்பொருளின் மிகவும் உயரிய மண்டலமான, சிவலோகம். மேலும் தகவலுக்கு: *லோகம்*. மேலும் தகவலுக்கு: *லோகம், மூன்று லோகங்கள்*.

ஒரு சமயச்சடங்கை அனுட்டானம் செய்பவர் (celebrant).

விண்ணுலகம் சார்ந்த (celestial): “சொர்க்க லோகம் சார்ந்த.” சொர்க்க லோகங்கள் அல்லது அங்கே வாழும் உயிர்சக்திகள் தொடர்புடைய. மிகவும் புனிதமான, தெய்வீகமான.

சமயச் சடங்கு (ceremony): விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஏற்றார் போல குலவழக்கம் அல்லது சம்பிரதாயத்தால் உருவாக்கப்பட்ட ஒரு முறையான சடங்கு.

chaitanya: चैतन्य “Spirit, consciousness, especially higher consciousness; Supreme Being.” ***சைதன்யம்.*** “ஆன்மா, உணர்வு,” குறிப்பாக “உயர்நிலை உணர்வு;” “பரமன்.” பரவலாக பயன்படுத்தப்படும் சொல், அது பெரும்பாலும் தனக்கு முன்பாக பொருளை மாற்றி அமைக்கும் உரிச்சொல்லுடன் இருக்கும், உதாரணத்திற்கு, *சாக்ஷி சைதன்ய*, “சாட்சி

உணர்வு," அல்லது *பக்தி சைதன்ய*, "பக்தி நிறைந்த உணர்வு," அல்லது *சிவசைதன்ய, "கடவுளின் உணர்வு." மேலும் தகவலுக்கு: சித்தம், உணர்வு, மனம் (ஐந்து நிலைகள்).*

chakra: चक्र "Wheel." **சக்கரம்.** அ) சிற்பசாத்திரத்தில், அன்பான விநாயகரின் (மற்றும் விஷ்ணுவின்) அடையாள சின்னங்களில் ஒன்றாக இருக்கும் ஒரு வட்டவடிவ ஆயுதம். இது மனம் மற்றும் சூரியனை குறிப்பிடும் ஒரு சின்னமாக விளங்குகிறது. இது ஒரு ஆயுதமாக பிரயோகம் செய்யும் போது, இது தெய்வீக ஆற்றலை பெற்ற புத்தியாக விளங்குகிறது. ஆ) இது மீமெய்யியல் ரீதியாக, மனிதனின் உட்புற கோசங்களில் அமைந்திருக்கும் நரம்புப் பின்னல்கள் அல்லது விசைப்பகுதிகள் மற்றும் உணர்வின் மையங்களில் ஏதேனும் ஒன்றை குறிப்பிடுகிறது. நரம்புப் பின்னல்கள், கொத்துகள் மற்றும் சுரப்பிகள் ஆகியவை, இந்த *சக்கரங்களுடன்* தூல உடலில் தொடர்பில் இருக்கின்றன. இதில் இருக்கும் ஏழு அடிப்படை *சக்கரங்களை* மனோஉணர்வுடன் பார்க்கும் போது, அவை பல இதழ்களை கொண்ட வண்ணமயமான *சக்கரங்களாக* அல்லது தாமரைகளாக தென்படுகின்றன. அவை முதுகுதண்டு நெடுகிலும், அடிப்பகுதியில் இருந்து மண்டை ஓடு வரை அமைந்துள்ளன. இதைத்தவிர கண்களுக்கு புலப்படாத ஏழு சக்கரங்கள் முதுகுத்தண்டின் கீழே அமைந்து உள்ளன. அவை உள்ளுணர்வின் இருப்பிடங்களாகவும் பொறாமை, வெறுப்பு, மனவெரிச்சல், குற்ற உணர்வு, துக்கம் போன்றவற்றின் மூலமாகவும் விளங்குகின்றன. அவை கீழ்நிலை லோகமாக இருக்கும் நரகம் அல்லது *பாதாளத்தில்* அங்கம் வகிக்கின்றன. மொத்தம் 14 சக்கரங்கள் உள்ளன. அடிமட்டத்தில் இருந்து மிகவும் உயர்ந்த நிலை வரை உள்ள ஏழு உயர்நிலை *சக்கரங்களின்* பட்டியல் பின்வருமாறு, 1) ***மூலாதார சக்கரம்*** (முதுகுதண்டின் அடிப்பகுதி): நினைவாற்றல், காலம் மற்றும் பரவெளி; 2) ***ஸ்வாதிஷ்டானா*** (தொப்புளுக்கு கீழே): காரண ஆய்வு; 3) ***மணிப்பூரகம்*** (சூரிய பின்னல்): மனோபலம்; 4) ***அனாஹத*** (இதயத்தின் மையம்): நேரடி அறிவெழுச்சி; 5) ***விசுத்த*** (தொண்டை): தெய்வீக அன்பு; 6) ***ஆக்ஞா*** (மூன்றாவது கண்): தெய்வீக பார்வை; 7) ***சஹஸ்ரஹார*** (உச்சந்தலை): ஞானோதயம், தெய்வீகப் பண்பு. மூலாதாரத்திற்கு கீழிருக்கும் ஏழு சக்கரங்களில், மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து மிகவும் தாழ்ந்த நிலை வரை இருக்கும் *சக்கரங்களின்* பட்டியல் பின்வருமாறு: 1) ***அதள*** (இடுப்பு): கோபம் மற்றும் சிற்றின்ப வேட்கை; 2) ***விதள*** (தொடை): பொங்கி எழும் கோபம்; 3) ***சுதள*** (முழங்கால்): பழிவாங்கும் பொறாமை; 4) ***தளாதள*** (காலின் பின்பகுதி): நீடித்த மனக்குழப்பம்; 5) ***ரசாதள*** (கணுக்கால்): சுயநலம்; 6) ***மகாதளம்*** (கால்கள்): மனசாட்சி இல்லாத இல்லை; 7) ***பாதாள*** (உள்ளங்கால்): கொலை மற்றும் தீய எண்ணம்.

chāmara: चामर. **சாமரம்**.

chandana: चन्दन "Sandalwood" paste. **சந்தனம்.** பூஜையின் போது தெய்வத்திற்கு அலங்காரம் செய்த பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும் ஒரு புனிதமான பொருள்.

chandra: चन्द्र "The moon." ***சந்திரன்***. இது இந்து ஜோதிடத்தில் அதிக முக்கியத்துவத்தை பெற்று, பண்டிகை நாட்களை திட்டமிட பயன்படுகிறது. இது நமது உணர்ச்சியின் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்துவதாக கருதப்படுகிறது.

Chintāmaṇi: चिन्तामणि "Jewel of consciousness." ***சிந்தாமணி***. மகாராஷ்டிராவின் புனேவிற்கு அருகில் தேவூர் கோயிலில் இருக்கும் விநாயகர் மூர்த்தி.

chit: चित् "Consciousness" or "awareness." ***சித்.*** "உணர்வு" அல்லது "சாட்சி." தத்துவ ரீதியாக, தூய சாட்சி; *சத்-சித்-ஆனந்தத்தில்* இருப்பதை போல ஆழ்நிலை உணர்வு. லௌகீக பயன்பாட்டில், *சித்* என்றால், "புலனுணர்வு; உணர்வு." மேலும் தகவலுக்கு: சாட்சி, *சித்த*, உணர்வு, (பொதுவான) மனம்.

chitta: चित्त "Mind; consciousness." ***சித்த***. "மனம்; உணர்வு." தனிப்பட்ட அளவில், இந்த இடத்தில் மனதின் கருத்துக்கள் மற்றும் அனுபவங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இது உணர்வுள்ள, அடியுணர்வு மற்றும் மெய்ஞ்ஞான நிலைகளின் இருப்பிடமாக விளங்குகிறது. இது *புத்தி, மனஸ்* மற்றும் *அகங்காரத்தை* உள்ளடக்கிய *அந்தகரணம்* என்ற மனோசக்தியின் இருப்பிடமாகவும் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *உணர்வு,* (தனிப்பட்ட) மனம், (பொதுவான) மனம்.

chūḍākaraṇa: चूडाकरण "Head-shaving sacrament." ***சூடாகரண***. "தலைமுடி நீக்கும் சடங்கு." மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம்.*

çhuri: छुरि "Dagger." ***சுறி.*** குத்துவாள். விநாயகர் சின்னங்களில் இருக்கும் ஒரு அரிய ஆயுதம். மிகவும் கூர்மையாக இருக்கும் இந்த ஆயுதம், ஆன்மீக சாதகன் நடந்து செல்லவேண்டிய குறுகலான பாதையை குறிப்பிடுகிறது.

circumambulation: *Pradakshiṇā.* ***பிரதட்சிணம்***. வழக்கமாக வலச்சுழியாக சுற்றி வருவது. மேலும் தகவலுக்கு: *பிரதட்சிணம், பூஜை.*

clairaudience: "Clear-hearing." "தெளிவாக கேட்டல்." **புலன்கடந்த கேள்வியாற்றல்** சூட்சுமமாக அல்லது *திவ்யஷ்ரவன* என்கிற தெய்வீகத் தன்மையுடன் காதால் கேட்டல். நரம்பு அமைப்பில் இருக்கும் உட்புற ஓட்டங்கள், *ஓம்* மற்றும் மற்ற சூட்சுமமான தொனிகளை கேட்கும் திறமை. ஒருவர் தனது மனதில், தூல கண்களுக்கு தென்படாத அந்தர்லோக அல்லது லௌகீக சக்திகளின் உரையாடல்களை கேட்டறிதல். இது நாள் முழுவதும் அல்லது தியானத்தின் போது *நாதநாடி சக்தியை* காதால் கேட்பதையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *புலனாகாதவற்றைக் காணும் ஆற்றல், நாதம்.*

clairvoyance: "Clear-seeing." **புலனாகாதவற்றைக் காணும் ஆற்றல்.** "தெளிவாக பார்த்தல்." சூட்சுமமாக அல்லது *திவ்யதிருஷ்டி* என்கிற தெய்வீகத் தன்மையுடன் பார்த்தல். அந்தர்லோகங்களில் கூர்ந்து கவனித்து ஒளி உடல்கள், *சக்கரங்கள், நாடிகள்,* சிந்தனை வடிவங்கள், தூல உடல் இல்லாத மக்கள் மற்றும் நுணுக்கமான சக்திகளை பார்த்தல். "கால வரம்புகளை கடந்து" கடந்தகாலம் அல்லது எதிர்காலத்தில் பார்க்கும் திறமை. சிந்தனைகளை ஒளிர்விக்கும் ஒளியை, அந்த ஒளி ஒளிர்விக்கும் உருவங்களில் இருந்து பிரிக்கும் திறமையையும் குறிப்பிடுகிறது.

தூய வெள்ளை ஒளி (clear white light): அதிக சுத்தமாகவும் தெளிவாகவும், அதிக பிரகாசமாகவும் இருக்கும் உட்புற ஒளி. அதை முழுமையாக அனுபவித்ததும், அது எல்லா உருவங்களுக்கும் ஆதாரமாக, தூய உணர்வாக இருக்கும் சச்சிதானந்தம் வழியாக வியாபிப்பதாக தென்படுகிறது. இந்த அனுபவத்தை அவ்வப்போது தொடர்ந்து பெறுவதன் மூலம், "உயர்ந்த கல்வியை வழங்கும் ஒரு பல்கலைக்கழகம் அல்லது ஒரு கல்வி அமைப்பை காட்டிலும் ஒரு சிறந்த புரிதலை" பெற முடிகிறது. மேலும் தகவலுக்கு: *சிவ உணர்வு, தத்துவம்.*

அறிவெழுச்சி (cognition): புலனுணர்வு. அறிவுணர்வு மட்டுமல்லாமல் இயலுணர்வு, மெய்ஞ்ஞான புலன்களால் அடையப்படும் அறிவு.

அர்ப்பணிப்பு (commitment): ஒரு நீண்டகால நடவடிக்கையில் ஈடுபடுதல்.

நெருக்கமான தொடர்பு (commune): சிந்தனைகள், உணர்ச்சிகள் அல்லது பிரார்த்தனைகளை ஒரு நெருக்கமான முறையில் தெரிவித்தல். நெருக்கமான தொடர்பில் இருத்தல்.

இணக்கமான (compatible): நன்றாக ஒத்திருக்கிற; ஒன்றுக்கொன்று பொருந்திய.

சமரசம் (compromise): இரு தரப்பினரும் தங்களது சில கோரிக்கைகளை விட்டுக்கொடுத்து அல்லது சலுகைகள் வழங்கி அடையும் ஒரு தீர்மானம். ஒருவரின் கொள்கைகள் பலவீனமடைவது.

ஒருமுகச் சிந்தனை (concentration): தடையில்லாத நீடித்த கவனம்.

மனசாட்சி (conscience): நன்மை மற்றும் தீமை அறியும் உட்புற உணர்வு. இது சில சமயங்களில் "ஆன்மாவின் அறிவுள்ள கருத்தாகவும்" அழைக்கப்படுகிறது. ஆனால் மனசாட்சி மீது ஒருவரது பயிற்சி மற்றும் நம்பிக்கை மாதிரிகளின் தாக்கம் இருப்பதால், அதை தர்மத்தின் முழுமையான பிரதிபலிப்பாக கருத முடியாது.

உணர்வுள்ள மனம் (conscious mind): வெளிப்புறமாக இருக்கும், தினசரி உணர்வு நிலை. மேலும் தகவலுக்கு: *மனம்.*

consciousness: *Chitta* or *chaitanya*. **உணர்வு**. *சித்த* அல்லது *சைதன்யம்*. 1) *சித்தத்தை* குறிப்பிடும் இன்னொரு சொல்; அல்லது 2) புலனுணர்வு, விழிப்புணர்வு, புரிந்துணர்வின் நிலை அல்லது சக்தி. ஜடப்பொருளின் எளிமையான உணர்வில் தொடங்கி, அடிப்படை உயிர் அமைப்புக்களின் உணர்வு, மனித உடலின் உயர்ந்த உணர்வு, மற்றும் பராசக்தி என்கிற ஒரு பொதுவான உணர்வில் முழ்குவதை நோக்கி வழிநடத்தி செல்லும் மெய்ஞ்ஞானத்தின் எல்லாம் அறிந்த நிலை வரை, உணர்வில் எண்ணற்ற படிநிலைகள் உள்ளன. சாத்திரங்களில் விவாதிக்கப்பட்டுள்ள ஐந்து பாரம்பரிய சாட்சியின் "நிலைகள்": 1) விழிப்பு நிலை (*ஜாக்ரத்*), 2) "கனவு" *(ஸ்வப்னம்)* அல்லது சூட்சும உணர்வு, 3) "ஆழ்ந்த உறக்கம்" *(சுக்ஷுப்தி)* அல்லது துணைமெய்ஞ்ஞான நிலை, 4) மெய்ஞ்ஞான நிலை (துரிய என்கிற "நான்காவது" நிலை) மற்றும் 5) யாவும் கடந்து இருக்கும் துரியாதீத நிலை ("நான்காவது நிலையை கடந்து இருப்பது"). மேலும் தகவலுக்கு: *சாட்சி, சைதன்யம், சித்த, மனம் (பற்றிய அனைத்து தகவல்களும்)*.

வாழ்க்கைத்துணை (consort): குறிப்பாக ஒரு அரசன் அல்லது அரசி, தேவர் அல்லது தேவியரை குறிப்பிடுவது. இந்து சமயத்தின் புராண கதைகளில், தெய்வங்கள் வழக்கமாக மனித உருவுடன் விரிவாக சித்தரிக்கப்பட்டு இருந்தாலும், அவர்களுக்கு பாலினங்கள் அல்லது பாலின வேறுபாடுகள் இல்லை. மக்கள் எவ்வாறு வாழவேண்டும் மற்றும் வாழக்கூடாது என்ற கல்வி அறிவை புகட்டும் கதைகளில் இருந்து தெய்வங்களுக்கு இடையே திருமணம் மற்றும் மனிதர்களைப் போன்ற குடும்பங்கள் தோன்றியுள்ளன. மேலும் தகவலுக்கு: *சக்தி*.

தாரணை (contemplation): தியான நிலையை கடந்து இருக்கும் சமயம் சார்ந்த அல்லது ஆன்மீக ஒடுக்கம். மேலும் தகவலுக்கு: *இராச யோகம், சமாதி*.

ஆன்மீக, சமயம் சார்ந்த, தியானம் கலந்த வாழ்முறையில் ஈடுபட்டுள்ள (contemplative):

வெறுப்பு (contempt): ஒருவரை அல்லது ஒரு பொருளை கீழ்த்தரமாக அல்லது பயனற்றதாக கருதுவது.

குறிப்பாக பாலுறவில் கட்டுப்பாட்டுடன் இருத்தல் அல்லது முழுமையாக விலகி இருத்தல் (continence (continent)). மேலும் தகவலுக்கு: *பிரம்மச்சரியம்*.

முரண்பாடு (contradiction): ஒன்றுக்கு முரணாக இருக்கும் இன்னொரு அறிக்கை; மறுப்பு; ஒன்றுக்கொன்று எதிராக இருக்கும் நிலை.

மதம் மாறுவது அல்லது வேறு தத்துவத்தை பின்பற்றுவது (convert): அவ்வாறு மாறிய நபர்.

உடன்படிக்கை (covenant): சில செயல்களை செய்யவேண்டும் அல்லது அவற்றில் இருந்து விலகி இருக்கவேண்டும் என்று பிணிக்கும் ஒப்பந்தம்.

மற்றவருக்கு சொந்தமனதை இரகசியமாக விரும்புதல் (covet): பொறாமைப்படுதல்.

உச்சந்தலையில் இருக்கும் சக்கரங்கள் (cranial chakras): *ஆக்ஞா* அல்லது நெற்றிக்கண் சக்கரம், மற்றும் பீனியல் சுரப்பி மற்றும் அடிமூளை சுரப்பிக்கு அருகில் உச்சந்தலையில் இருக்கும் *சஹஸ்ரஹார சக்கரம்.* மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

ஸ்ருஷ்டிகர்த்தா (Creator): படைக்கும் தொழிலை செய்யும் கடவுள். சிவபெருமானின் ஐந்து சக்திகளில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *நடராசர், பரமேசுவரன்.*

தகனம் (cremation): உயிர் நீத்தவர்களின் உடலை எரித்தல். இவ்வாறு சடலத்தை பாரம்பரிய முறைப்படி தகனம் செய்வதன் நேர்மறை விளைவாக, ஆன்மா லௌகீக உலகில் பற்றுடன் சுற்றிக்கொண்டு இருக்காமல் உடனடியாக விடுவிக்கப்படுகிறது. இன்றைய காலத்தில், தகனம் செய்வதற்கான வசதிகள் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக அந்த சுடுகாடுகளில் தகனம் செய்ய, பாரம்பரிய முறையில் விறகுகளை பயன்படுத்தாமல், எரிவாயு தகன மேடை பயன்படுத்தப்படுகின்றன.

கிளைமொழி (creole): லூசியானா அல்லது மொரிஷியஸ் நாடுகளில் பிரெஞ்சு கிளை மொழிகள் பேசப்படுவதைப் போன்று, எளிமையான வடிவில் இருக்கும் பல்வேறு மொழிகளின் ஒரு கலவை.

crown chakra: *Sahasrāra* chakra. ***சஹஸ்ரஹார சக்கரம்***. உச்சந்தலையில் ஆயிரம் இதழ்களுடன் இருக்கும் தெய்வீக உணர்வு. மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*



dāḍima: दाडिम Pomegranate. மாதுளை.

dakshiṇā: दक्षिणा. தட்சிணை. ஒரு சடங்கு முடிந்த பிறகு அந்த புரோகிதருக்கு வழங்கப்படும் கட்டணம் அல்லது வெகுமானம்; ஒரு *குரு* வழங்கும் வரையரையற்ற ஆன்மீக நல்லாசிகளை அங்கீகரிக்கும் சின்னமாகவும் விளங்குகிறது.

dakshiṇāyaṇa: दक्षिणायण "Southern way." ***தட்சிணாயணம்***. சூரியன் தெற்கு நோக்கி பயணம் செய்வதாக தோற்றமளிக்கும் ஆறு மாத காலங்கள். *அயணம்* என்றால் பாதை.

dāna: दान "Generosity, giving; gift." ***தானம்***. "தாராளமனப்பான்மை, வழங்குதல்; பரிசு" மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்*.

daṇḍa: दण्ड "Stick," or "staff of support." ***தண்டம்***. "ஊன்றுகோல்." தனக்கு ஆதரவாக *தபஸ்* மட்டுமே இருப்பதையும், *சுஷும்னா* நாடியை உயிர்ப்பித்து, அதன் விளைவாக தான் நாடும் உணர்தலுக்கு உயிரூட்டம் அளிப்பதை குறிப்பிடும் விதமாக ஒரு சாது அல்லது சந்நியாசி தண்டத்தை பிடித்துக்கொண்டு இருப்பார். *தண்ட* என்பது "அபராதம்" அல்லது "தண்டனையை" குறிப்பிடவும் பயன்படுகிறது. இந்த அதிகாரச் சின்னம் அன்பான விநாயகரின் அடையாளமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சந்நியாசின்*.

darśana: दर्शन "Vision, sight." ***தரிசனம்***. தெய்வீக சக்தியை காணுதல். பூஜிக்கக்கூடிய சக்தி அல்லது சக்திகளுடன் ஆன்மீக தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு, அதன் அருளையும் ஆசிகளையும் பெறும் நோக்கத்துடன், கோயிலில் இருக்கும் ஒரு மூர்த்தி, தெய்வம், தெய்வீக புருஷர் அல்லது புண்ணிய தலத்தின் காட்சியை உட்புறமாக அல்லது வெளிப்புறமாக தக்க வைத்துக்கொள்வது. இது மேலும் "கண்ணோட்டம்," கோட்பாடு அல்லது தத்துவத்தையும் குறிப்பிடுகிறது.

day of Brahmā: பிரம்மனின் ஒரு பகல். *ஒரு* ***கல்பம்***. காலவரையறை இல்லாமல் தொடர்ந்து நடைபெறும் பிரபஞ்சத்தின் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல். பிரம்மனின் ஒரு பகல் என்பது 994 *மகாயுகங்களுக்கு* சமம் ஆகும் (ஒரு *மகாயுகம்* என்பது சத்தியம், திரேதா, துவாபர மற்றும் கலியுகம் என்ற நான்கு யுகங்களின் ஒரு சுழற்சி ஆகும்). இது 4,294,080,000 வருடங்களை குறிக்கிறது. பிரம்மனின் ஒவ்வொரு நாளின் முடிவில் ஒரு *பிரளம்* (அல்லது *கல்பாந்தம்* "ஒரு கல்பத்தின் முடிவு") ஏற்பட்டு, காரண லோகத்தில் தூல மற்றும் சூட்சும லோகங்கள் ஒடுங்குகின்றன. இந்த ஒடுங்கிய நிலை அல்லது "பிரம்மனின் இரவு," படைப்பு மீண்டும் தொடங்கும் வரை கல்பகாலம் முழுவதும் தொடர்கிறது.

மரணம் (death): சமஸ்கிருத மொழியில் மரணம் என்ற ஒரு பொதுவான கருத்தை குறிப்பிடுவதற்கு பல சொற்கள் உள்ளன. உதாரணத்திற்கு "இறுதி மகாபயணம்" என்கிற *மகாபிரஸ்தானம்,* தியான நிலையில் இருக்கும் போது விழிப்புடன் உயிர் துறக்கும் *சமாதிமரணம்*, ஒரு ஞானோதயம் பெற்ற ஆன்மாவின் உடலில் இருந்து உயிர் பிரிவதை குறிக்கும் "மாபெரும் ஐக்கியம் அல்லது ஒடுக்கம்." மரணம் என்பது ஆன்மா தன்னை தூல உடலில் இருந்து விலக்கிக்கொண்டு, தான் ஒரு தூல உடலில் வாழ்ந்த போது இருந்த அதே ஆசைகள், விருப்பங்கள் மற்றும் செயல்பாடுகளுடன் சூட்சும *ஷரீரத்தில்* தொடர்ந்து வாழ்தல் என்பதை இந்துக்கள் அறிவார்கள். மேலும் தகவலுக்கு: மறுபிறவி.

நல்லொழுக்கம் (decorum): நடத்தை, பேச்சு, உடை போன்றவற்றில் தகுதியுடைமை மற்றும் நல்ல ஈடுபாடு.

சிதைவு (deformity): உடல், மனம் அல்லது உணர்ச்சிகள் சீர்குலைந்து அல்லது அருவருப்பாக இருக்கும் நிலை.

Deity: "God." "இறைவன்." இது ஒரு வரைபடத்தை அல்லது கோயிலில் ஸ்தாபனம் செய்யப்பட்ட மூர்த்தியை அல்லது மகாதேவரை பிரதிநிதித்துவம் செய்யும் மூர்த்தியை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மூர்த்தி, பூஜை.*

இழிவுப்படுத்துதல் (demean): அந்தஸ்து அல்லது குணத்தை நிந்தித்தல்; தரங்குறைத்தல் .

அடக்கமான பண்பு (demureness): நன்னடத்தை, பணிவு, கூச்சம், நாணம்.

சமய உட்பிரிவு (denomination): குறிப்பாக பல்வேறு சமயக் குழுக்கள், பிரிவுகள் மற்றும் உட்பிரிவுகளுக்குள்ள ஒரு பெயர். மேலும் தகவலுக்கு: *குரு பரம்பரை, சம்பிரதாயம்.*

இடர்ப்பாடுகள் (deprivations): நிர்பந்திக்கப்பட்ட இழப்பு அல்லது ஏழ்மை.

விதி (destiny): இறுதியாக தோன்றும் விளைவு. தவிர்க்க முடியாததாக அல்லது முன்பே வகுக்கப்பட்டதாக தோன்றும் நிகழ்வுகளின் கோவை. மேலும் தகவலுக்கு: *கர்மவினை.*

அச்சம், கவலை, சந்தேகம் போன்றவற்றை தூண்டிவிட்டு ஒரு செயலை செய்யாமல் தடுப்பது (deter).

தூற்றுபவர் (detractor): அவமானப்படுத்துபவர், அவதூறாக பேசுபவர் அல்லது இழித்துரைப்பவர்.

deva: देव "Shining one." "பிரகாசமான ஒன்று." உயர்ந்த சூட்சும லோகத்தில் ஒரு நுணுக்கமான, புலனாகாத உடலில் வாழும் ஒரு உயிர்சக்தி. சமஸ்கிருத சாஸ்திரத்தில் *தேவ* என்ற சொல் "கடவுள் அல்லது தெய்வத்தை" குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *மகாதேவர்.*

Devanāgarī: देवनागरी "Divine city [script]." **தேவநாகரி**. சமஸ்கிருதம், பிராகிருதம், இந்தி மற்றும் மராத்தி மொழிகளை எழுதப்பயன்படும் ஒரு எழுத்து முறைமை ஆகும். இது வடஇந்திய பிரம்மி எழுத்து முறைமையில் இருந்து தோன்றியது. இந்த முறைமையில் எழுத்துக்களை தொடர்புபடுத்தும் கோடுகள் மேலாக இடம்பெற்று இருக்கும். மேலும் தகவலுக்கு: *சமஸ்கிருதம்.*

Devī: देवी "Goddess." **தேவி**. சாக்த சமயத்தில் சக்தியை குறிப்பிட பயன்படும் இன்னொரு பெயர். மேலும் தகவலுக்கு: *சக்தி, சாக்த சமயம்.*

தெய்வீக (devonic): தேவ தூதர்கள், சொர்க்க லோகம் சார்ந்தது. உயர்நிலை உலகங்களின் இயல்புடன், உயர்ந்த சக்கரங்கள் அல்லது உணர்வு மையங்களின் புனிதமான சக்திகளுடன் இணக்கத்துடன் இருத்தல்.

பக்தன் (devotee): ஒருவர் கடவுள் அல்லது *குருவைப்* போன்ற ஒன்றின் மீது தீவிரமான அர்ப்பணிப்புடன் இருத்தல். சீடன் என்கிற சொல் இன்னும் அதிக ஆழமான அர்ப்பணிப்பை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *குரு பக்தி, குரு-சிஷ்ய சம்பிரதாயம்*.

dhanus: धनुस “Bow.” ***தனுசு***. வில் வடிவில் இருக்கும் ஒரு பொருள்; அம்புகளை எய்வதற்கு பயன்படும் ஆயுதம்.

dharma: धर्म “Righteousness.” **தர்மம்.** இது “நிலை நிறுத்துதல்; தக்க வைத்துக் கொள்ளுதல்,” என்பதை குறிப்பிடும் *த்ரி* என்கிற சொல்லில் இருந்து உருவானது. அதனால் “பிரபஞ்சத்தை உள்ளடக்கியது அல்லது அதை தக்க வைத்திருப்பது,” தர்மம் ஆகும். தெய்வீக விதி, ஒழுங்குநெறி, உயிர்சக்தியின் விதி, நேர்மையான பாதை, சமயம், கடமை, நல்லொழுக்கம், நீதி, நன்மை மற்றும் உண்மை என்று *தர்மம்* என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உள்ளன. அடிப்படையில் தர்மம் என்பது, இயல்பான பண்பு அல்லது விதியின் முறையான நிறைவேற்றம் ஆகும். இது ஆன்மாவை பொறுத்தவரையில், ஆன்மீக மேம்பாட்டிற்கு சரியான மற்றும் நேர்மையான பாதையில் அழைத்து செல்ல மிகவும் பொருத்தமான நடத்தை ஆகும். தர்மத்தில் நான்கு அடிப்படை வகைகள் உள்ளன, அவை கூட்டாக *சதுர்தர்ம* (நான்கு தர்மங்கள்) என்று அழைக்கப்படுகின்றன. **1) *ரித தர்ம***: “எல்லோருக்கும் பொதுவான விதி.” பிரபஞ்சத்தில் இயல்பாக இருக்கும் ஒழுங்குமுறை. **2) *வர்ண தர்மம்***: “ஒருவர் தனது சமூக பிரிவுகளுக்கு ஏற்ப தர்மத்தை கடைப்பிடிப்பது.” சமூக கடமை. **3) *ஆசிரம தர்மம்***: “வாழ்க்கையின் பல்வேறு படிநிலைகளில் இருக்கும் கடமைகள்.” மனிதன் அல்லது வளர்ச்சி சார்ந்த தர்மம். *பிரம்மசரியம்* (மாணவன்), *கிரிகஸ்தன்* (சம்சாரி), *வானப்பிரஸ்தம்* (மூத்த ஆலோசகர்) மற்றும் *சந்நியாசி* (ஆன்மீக நாட்டத்துடன் தனியாக இருப்பவர்) என்று சிறு வயது முதல் வயோதிகம் வரை வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையின் பொறுப்புக்களை பூர்த்தி செய்து பக்குவம் அடையும் இயல்பான செய்முறை. **4) *ஸ்வதர்மம்:*** “ஒருவரது தனிப்பட்ட கடமைகள் அல்லது பொறுப்புக்கள்.” ஒருவருக்கு சொந்தமான உடல், மனம் மற்றும் உணர்ச்சியின் இயல்பிற்கு ஏற்ப, அவருக்கு சொந்தமான நிறைவான வாழ்முறை.

Dharma Śāstra: धर्मशास्त्र “Religious law book.” ***தர்மசாத்திரம்***. பல்வேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்ட பல்வேறு இந்து உரிமை மற்றும் சமூக விதிகளின் தொகுப்பை குறிக்கும் சொல். இவற்றில் மிகவும் சிறப்பானதாகவும் பிரபலமானதாகவும் விளங்கும் மனு மற்றும் யாக்ஞவல்கியரின் நூல்கள், கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இயற்றப்படதாக கருதப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஸ்மிருதி*.

dhotī: धोती (Hindi) **வேட்டி**. ஆண்கள் உடுத்தும் இந்த இந்து பாரம்பரிய உடை, தைக்கப்படாத ஒரு நீளமான துணியாக இடுப்புக்கு கீழே உடுத்திக்கொள்ளப்படுகிறது. மேலும் சில

சமயங்களில், அந்த துணியை கால்களுக்கு நடுப்பகுதி வழியாக வெளியே இழுத்து, இடுப்பில் செருகும் பஞ்சகச்ச முறையிலும் உடுத்திக்கொள்வதும் உண்டு.

Dhumravarṇa: धूम्रवर्ण "Smoke-colored." ***தூம்ர வர்ணம்***. "புகை நிறம்." அபிமானத்தை வெற்றிகொள்ளும் விநாயகரின் அம்சம்.

Ḍhuṇḍhi Gaṇapati: ढुण्ढिगणपति ***துண்டி கணபதி***. மக்களால் "நாடப்படும் கணபதி" வாரணாசியில் கோயில் கொண்டிருக்கிறார். அவரது நான்கு திருக்கரங்களில் ஒரு கோடாரி, ருத்ராட்சமாலை, தந்தம் மற்றும் ஒரு இரத்தின பாத்திரம் இருக்கின்றன.

dhvaja: ध्वज "Flag." ***த்வஜ***. கொடி. *சனாதன தர்மத்தின்* வெற்றியை சித்தரிக்கும் விதமாக, பண்டிகைகள் மற்றும் திருவிழாக்களில், இந்து சமயத்தின் அங்கமாக பட்டொளி வீசிப் பறக்கும் ஆரஞ்சு அல்லது சிவப்பு நிற கொடிகள்.

dhyāna: ध्यान "Meditation." ***தியானம்***. மேலும் தகவலுக்கு: *அக வழிபாடு, இராச யோகம்*.

புலம்பெயர்ந்தோர் (diaspora): யூதர்கள் இசுரேல் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டதை போல, இந்துக்கள் இலங்கை, பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதைப் போல, இது மதம் அல்லது இனத்தை சேர்ந்த குழு(க்கள்) வெளிநாடுகளில் குடியேறுவதை குறிக்கிறது.

dīkshā: दीक्षा "Initiation." ***தீட்சை***. இது ஒரு ஆசான் அல்லது குரு தனது ஆசிகள் அல்லது *பிராண* சக்திகளை வழங்கி, ஒரு சாதகரை ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் பயிற்சியின் புதிய உலகில் அழைத்து வரும் புனிதமான அறிமுகம் ஆகும். இது ஆசான் மற்றும் அவரது பரம்பரையுடன் இருக்கும் தொடக்கநிலை அல்லது வலுவான தொடர்பை குறிப்பிடுகிறது மற்றும் இது பொதுவாக ஒரு சமயச்சடங்குடன் நடைபெறுகிறது. விழிப்புணர்வு பெறும் தருணமாக விளங்கும் தீட்சையை பார்வை அல்லது சிந்தனையால், வாக்கு அல்லது சீடனை தொட்டு வழங்கப்படலாம். பெரும்பாலான இந்து சம்பிரதாயங்கள், குறிப்பாக சைவ சமயம், ஒரு *சத்குரு* வழங்கும் தீட்சையால் மட்டுமே ஞானோதயம் பெறமுடியும் என்று போதிக்கின்றன. இந்துக்கள் அனைவரும் *சக்திபாத* என்கிற *தீட்சையை* பெறவிரும்புகிறார்கள். இதற்கு "இறையருள் அந்த உயிரில் பதிதல்" என்று பொருள். இது பெரும்பாலும் தடையில்லாமல் வெளிவந்து, மர்மமான குண்டலினி சக்தியை தூண்டுகிறது.

ஒன்றை வேறொன்றுடன் சேர்த்து பலவீனப்படுத்துவது அல்லது அதை மாற்றி அமைப்பது (dilute).

dīpastambha: दीपस्तम्भ "Standing light." ***தீபஸ்தம்பம்***. குத்துவிளக்கு. "விளக்கு இருக்கும் கம்பம்." கோயில், பூஜை அறை அல்லது வீட்டில் இருக்கும் தீபஸ்தபம். இது உலோகத்தில் தயாரிக்கப்படுகிறது. இதில் நெய் அல்லது விஷேச எண்ணெய்களை ஊற்றி

விளக்கேற்றப்படுகிறது. இந்த தீபஸ்தம்பங்கள் வீட்டில் மற்றும் பூஜையில், கோயிலில் மற்றும் பூஜை மாடத்தில் விளக்கேற்ற பயன்படுத்தப்பட்டு, அது தெய்வீக ஒளியாக, பராசக்தி அல்லது *பரஜ்யோதியாக* வழிபடப்படுகிறது. வீட்டிற்கு திரும்பி தனது வீட்டில் இருக்கும் குத்து விளக்கை ஏற்றுவதன் மூலம், கோயிலில் இருந்து துணையாக வரும் தேவர்கள் வீட்டில் நிரந்தரமாக இருக்க துணை புரிந்து, வீட்டு பூஜை அறையில் அந்த கோயில் கருவறையின் அதிர்வுகளை இயக்கவும் காரணமாக அமைகிறது.

வேறுபாடு காணல் (discrimination): *விவேகம்*. வேறுபாடுகளை பகுத்து அறியும் அல்லது உணரும் திறமை. இது ஆன்மீகத்தில் சரி மற்றும் தவறு, உண்மையான மற்றும் வெளிப்படையான, நிரந்தரமான மற்றும் நிலையானதை வேறுபடுத்தி பார்க்கும் திறமையை குறிக்கிறது.

பிளவுபடுத்தும் (divisive): கருத்து வேறுபாடு அல்லது அபிப்பிராய பேதம் மூலம் பிரிவினையை ஏற்படுத்துதல்.

பணிவான (docile): கற்பிப்பதற்கு எளிதான, எளிதில் கட்டுப்படுத்தக்கூடிய, இணங்கி நடக்கிற.

கபாலத்தில் இருக்கும் துளை (door of Brahman): ***பிரம்மரந்திரம்***. இது *நிர்வாண சக்கரம்* என்றும் அழைக்கப்படுகிறது. உச்சந்தலையில் இருக்கும் ஒரு சூட்சுமமான அல்லது மறைஞான துவாரம். இந்த *சுஷும்னா* நாடி துளை வாயிலாக குண்டலினி சக்தி ஆத்ம ஞானத்திற்குள் நுழைகிறது. இதன் வழியாக மரணத்தின் போது உயிர் பிரிகிறது. மிகவும் தூய்மையானவர்களின் உயிர் மட்டுமே இந்த வழியில் பிரிகிறது. மேலும் தகவலுக்கு: *ஞானம், குண்டலினி*.

செயலற்ற (dormant): உறங்குகிற; மந்தமான; வழக்கற்ற.

ஒரு விஷயம் அல்லது நபரைப் பற்றிய ஆவணங்களின் மாபெரும் தொகுப்பு (dossier).

ஸ்தோத்திரம் (doxology): போற்றுதல் அல்லது வாழ்த்துதல்.

இருமைவாதம், துவைதம் (dualism): அத்வைதத்தின் எதிர்பதம். இறைவன்-உலகம், நன்மை-தீமையை போன்று பிரபஞ்சத்தில் இரண்டு நிரந்தரமான மற்றும் மாறுபட்ட யதார்த்தங்கள் இருப்பதாக குறிப்பிடும் ஒரு கோட்பாடு.

Durga Gaṇapati: दुर्गागणपति The “invincible,” “unconquerable” fortress or stronghold. ***துர்க்கா கணபதி***. எட்டு கரங்களுடன் இருக்கும் இந்த விநாயகர் மூர்த்தி ஒரு வெற்றிக்கொடி, வில் மற்றும் அம்பு மற்றும் ஜபமாலைகள் மூலம் அடையாளம் காணப்படுகிறார்.

dūrvā: दूर्वा. துர்வா. அருகம்புல். விநாயகருக்கு அருகம்புல் மாலை சாற்றுவதும், அதைக்கொண்டு அவருக்கு அர்ச்சனை செய்வதும் வழக்கமாக இருக்கிறது. *சைனோடான் டாக்டைலான்*. மேலும் தகவலுக்கு: *அருகம்புல்*.

dvaita-advaita: द्वैत अद्वैत "Dual-nondual; twoness-not twoness." ***துவைதம்-அத்வைதம்***: இது இந்துசமய கோட்பாடுகளில் இருக்கும் வகைப்பாடுகளில் மிகவும் முக்கிய வகைகளில் ஒன்றாக விளங்குகிறது. *துவைதம்* மற்றும் *அத்வைதம்* ஒரு மிகப்பெரிய வகைப்பாட்டின் இரு முனைகளாக விளங்குகின்றன. —***துவைதம் (dvaita):*** இது இருமைவாத கோட்பாடாக விளங்குகிறது. இந்த கோட்பாடு உண்மைப்பொருள் என்பது மேலும் குறைக்கமுடியாத இரண்டு அடிப்படைகள், பிரிவுகள், உண்மைகள் போன்றவற்றை கொண்டுள்ளதாக குறிப்பிடுகிறது. உதாரணத்திற்கு, கடவுள் மற்றும் ஆன்மா நிரந்தரமாக பிரிந்து இருப்பதாக கருதப்படுகிறது. —**இருமைவாதம் சார்ந்த:** இருமையை (நன்மை-மற்றும்-தீமை, உயர்ந்த-மற்றும்-தாழ்ந்த, அவர்கள்-மற்றும் நாங்கள்) வரம்பு மீறியதாக கருதாமல், நிரந்தரமானவை என்று கருதும் கோட்பாடுகள், கட்டுரைகள், தத்துவங்கள் சார்ந்தது. —**பன்மைவாதம்:** இது ஒருமைவாதம் சாராமல் இருக்கிறது, மற்றும் இது மூன்று அல்லது அதற்கும் அதிகமாக இருக்கும், நிரந்தரமான தனித்த உண்மைப்பொருள்களை வலியுறுத்துகிறது, உதாரணத்திற்கு கடவுள், ஆன்மா மற்றும் உலகம். —***அத்வைதம்:*** இது இருமைவாதம் அல்லாத ஒருமைவாதம் பற்றிய கோட்பாடு, மற்றும் உண்மைப்பொருள் என்பது தனித்த பாகங்கள் எதுவும் இல்லாமல், சாரம் அல்லது கடவுளாக, ஒரு முழுமையான அடிப்படையை கொண்டுள்ளது. சுருக்கமாக சொன்னால், கடவுள் எல்லாமாக இருக்கிறார். —***அத்வைத ஈசுவரவாதம்:*** இது ஒருமைவாத மற்றும் இருமை வாதத்தை உள்ளடக்கிய ஒரு இருத்துருவ கண்ணோட்டம் ஆகும். மேலும் தகவலுக்கு: *அத்வைத ஈசுவரவாதம்*.

Dvija Gaṇapati: द्विजगणपति "The twice-born." ***துவிஜ கணபதி.*** "இரு பிறப்பாளன்." விநாயகரின் பாரம்பரிய *மூர்த்தியின்* ஒரு பெயர். அவர் தனது கையில் ஒரு சாத்திரம், தண்டம், ஜபமாலையை ஏந்திக்கொண்டு, பக்தர்கள் தார்மீக முயற்சியில் ஈடுபடவேண்டிய அவசியத்தை நினைவூட்டுகிறார்.

Dvimukha Gaṇapati: द्विमुखगणपति The unmistakable "double-faced" *mūrti* of Lord Gaṇeśa. ***துவிமுக கணபதி.*** இரு முகங்களுடன் எல்லா திசைகளையும் பார்க்கிறார். அவர் தனது கைகளில் ஒரு அங்குசம், பாசம், உடைந்த தந்தம் மற்றும் இரத்தின கலசத்தை வைத்து இருக்கிறார்.



காதணிகள் (earrings): இந்து பெண்கள் மற்றும் ஆண்கள் தங்கள் காதுகளில் அணியும் ஒரு ஆபரணம். காதுகளை துளைத்து காதணிகளை அணிபவருக்கு, ஆரோக்கியமும் (வலது காது) செல்வமும் (இடது காது) கிடைப்பதாக கருதப்படுகிறது.

பொதுவான (ecumenical). —ecumenism: இந்த சொல் குறிப்பாக கிறித்துவ மதத்தின் பல்வேறு உட்பிரிவுகளுக்குள் உலகளாவிய ஒற்றுமை மற்றும் நல்ல புரிதலை ஊக்குவிக்கும் கொள்கைகள் அல்லது வழக்கங்களை குறிக்கிறது. இது "வசிக்கும் உலகம்" என்று பொருள் தரும் *எக்குமென* என்ற கிரேக்க சொல்லில் இருந்து உருவானது. இது கிறித்துவ மதத்தில் பயன்படுத்தப்படும் சொல். *மதங்களுக்கு மத்தியில்* (*interfaith*) என்ற விசாலமான கருத்துடைய சொல், அமைதி மற்றும் ஒற்றுமைக்கு முயற்சி செய்யும் மதங்களால் பயன்படுத்தப்படுகின்றன.

edampuri: एदम्पुरि "Left-turning." ***இடம்புரி.*** துதிக்கை இடதுபுறமாக திரும்பியிருக்கும் விநாயகரின் மூர்த்திகள். இது வழக்கமான உருவம். இதன் எதிர்பதம் *வலம்புரி.*

அதிகாரத்தில் இருப்பவர் வழங்கும் ஒரு அதிகாரப்பூர்வ பொது ஆணை (edict).

மாதிரி உருவம் (effigy): உருவம், ஒத்த தன்மை, சிலை, உருவச்சில.

மிகவும் பிரகாசமான (effulgent): ஒளி வீசுகிற; ஒளி நிரம்பிய.

தன்முனைப்பு (ego): வெளிப்புற ஆளுமை அல்லது "நான்" மற்றும் "எனது" என்கிற உணர்வு. இது பொதுவாக தனிப்பட்ட அடையாளம் என்பதை குறிக்கிறது. சைவ சித்தாந்தம் மற்றும் மற்ற பிரிவுளில், தன்முனைப்பு என்பது நான் என்கிற பண்பின் உணர்வு, தனித்தன்மை மற்றும் இறைவனிடம் இருந்து பிரிந்து இருக்கும் தன்மையை வழங்கி, "நான் என்பதை உருவாக்கும்," *அகங்கார தத்துவத்திற்கு* சமமாக கருதப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆணவ மலம்.*

Ekadanta Gaṇapati: एकदन्तगणपति ***ஏகதந்த கணபதி.*** "ஒற்றை தந்ததுடன்" இருக்கும் நான்கு கைகள் கொண்ட விநாயகர் தனது கைகளில் கோடாரி, ஜபமாலை, (இனிய) லட்டு மற்றும் உடைந்த தனது தந்தத்தை ஏந்தி இருக்கிறார்.

Ekākshara Gaṇapati: एकाक्षरगणपति ***ஏகாட்சர கணபதி.*** ஒற்றை அட்சர (ग्रं *கம்*) கணபதி மூஷிக வாகனத்தில் *வரத முத்திரை* மற்றும் *அபய முத்திரையுடன்* பத்மாசனத்தில் அமர்ந்து இருக்கிறார்.

சரளமான (eloquent): தெளிவான, வலுவான, தங்கு தடையில்லாத, ஆற்றல்மிக்க, வசீகரமான மற்றும் தூண்டக்கூடிய உரை அல்லது கட்டுரை.

மந்திரம் (enchantment): மயக்குதல்; வசிய சக்தி.

ஞானோதயம் பெற்ற (enlightened): ஆத்ம ஞானம் பெற்ற. ஒரு *ஞானி* அல்லது *ஜீவன்முக்தா*. மேலும் தகவலுக்கு: *ஞானோதயம், ஞானம், ஆத்ம ஞானம்*.

ஞானோதயம் (enlightenment): இது சைவ சமய அத்வைதிகளுக்கு ஆத்ம ஞானம், விதை இல்லாத *சமாதி* (*நிர்விகல்ப சமாதி*); மற்றும் முடிவான சித்தியாக, சிலசமயம் *பரமாத்துமா தர்ஷன*, அல்லது *ஆத்ம தர்ஷன* எனப்படும், "ஆத்மாவின் தரிசனம்" (இந்த சொற்றொடர் பதஞ்சலி யோக சூத்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது) என்று குறிப்பிடப்படுகிறது. ஞானோதயம் என்பது காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து, எல்லாம் கடந்து ஒருவருக்குள் இருக்கும் பரமாத்துமா, பரசிவத்தை உணர்வதன் மூலம் விளையும் அனுபவம்-அனுபவமற்ற நிலையை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *இறைவனை உணர்தல், குண்டலினி, ஆத்ம ஞானம்*.

விரோதம் (enmity): ஒரு எதிரி மீது இருக்கும் கோபம் அல்லது பகை உணர்வு; எதிர்ப்பு.

சமாதி (enstasy): பரவசநிலை (ecstasy) என்று "தன்னைவிட்டு விலகி வெளியே இருத்தலை" குறிப்பிடும் மேற்கத்திய கண்ணோட்டத்திற்கு எதிர்பதமாக, 1969 ஆம் ஆண்டு மிர்சியா எலியட் என்பவர், கிழக்கத்திய கண்ணோட்டத்துடன் "தனக்குள் இருத்தல்" (enstasy) என்ற சொல்லை உருவாக்கினார். மேலும் தகவலுக்கு: *இராச யோகம், சமாதி*.

சிக்கல்கள் (entanglements): இக்கட்டான சூழ்நிலையில் இருத்தல்; குழப்பத்துடன் இருத்தல்.

நிலை இல்லாத (ephemeral): மாறுகின்ற, தற்காலிகமான, நீடித்து இல்லாத.

பண்பை குறிக்கும் ஒரு பெயர் (epithet): அடைமொழி அல்லது ஒரு தெய்வத்தின் திருநாமங்களில் ஒன்று.

இரு பொருளுடைய (equivocal): நிச்சயமற்ற; தீர்மானிக்கப்படாத; சந்தேகத்திற்குரிய.

நிர்மூலமாக்குதல் (eradicate): "வேரோடு அழித்தல்," ஒழித்தல்.

எருக்கு (erukku): பண்டிகை காலங்களில், விநாயகருக்கு எருக்கம் பூமாலை தலையிலும் கழுத்திலும் அணிவித்து பூஜிக்கப்படுகிறது. *கலோட்ரோபிஸ்* என்பது இதன் தாவரவியல் பெயர்.

மறைஞானம் சார்ந்த (esoteric): வெகு சிலர் அல்லது தீட்சை பெற்றவர்களைத் தவிர மற்றவர்களுக்குப் புரியாத.

பரவெளி (ether): *ஆகாசம்.* பஞ்சபூதங்களில் மிகவும் நுணுக்கமானது. மேலும் தகவலுக்கு: *ஆகாசம், தத்துவம்.*

ஒழுங்குநெறி கட்டுப்பாடுகள் (ethical restraints): மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*

ஒழுங்குநெறி கடைப்பிடித்தல்கள் (ethical observances): மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*

நெறிமுறைகள் (ethics): ஒரு நாடு, மக்கள், தத்துவம் மற்றும் சமயத்தில் இருக்கும் குறியீடு அல்லது ஒழுங்கு முறைகள். மேலும் தகவலுக்கு: *தர்மம், பஞ்ச நித்திய கர்மாக்கள், புண்ணியம், இயமம்-நியமம்.*

தீவினை (evil): தார்மீக அடிப்படையில் தீங்கு, வலி, துன்பத்தை உருவாக்கும் ஒரு தவறான செயல். மேற்கத்திய மதங்களில், தீவினை என்பது இறைவனுக்கு எதிரான நடவடிக்கையாக கருதப்படுகிறது. இந்துக்கள் தீவினையை *பாப, பாபமான்* அல்லது *துஷ்ட* என்று சமஸ்கிருதத்தில் அழைக்கின்றனர். இது உள்ளுணர்வு-அறிவுணர்வு மனம் ஆதிக்கம் செலுத்தி, தெளிவில்லாமல் இருக்கும் ஆழமான, ஆன்மீக அறிவின் காரணமாக தோன்றும் தவறான செயல்களின் (*பாபம்* அல்லது *அதர்மம்*) விளைவு என்று இந்துக்கள் கருதுகிறார்கள். சரியான சிந்தனை, சொல் மற்றும் செயலைப் பற்றிய அறியாமையுடன், பூலோக *மாயையில்* சிக்கிக் கொள்ளாமல் வாழத் தெரியாத இளம் ஆன்மாவாக தவறு செய்பவர் கருதப்படுகிறார். —**இயல்பாக அமைந்த தீவினை (intrinsic evil):** இயற்கையான, உடன் பிறந்த தீங்கு. இயல்பான தீவினை என்று எதுவும் இல்லை என்றும், மனிதனின் உண்மையான இயல்பு தெய்வீகத்தன்மை கொண்ட ஆன்மாவாக நற்பண்புடன் இருப்பதாகவும் இந்து மதம் கருதுகிறது. மேலும் தகவலுக்கு: *நரகம், கர்மவினை, பாபம்.*

ஆன்மாவின் வளர்ச்சி அல்லது முதிர்ச்சி (evolution of the soul): *Adhyātma prasāra. அத்யாத்ம பிரசார.* சைவ சித்தாந்தத்தில், ஆன்மாவின் முதிர்ச்சி என்பது சிவபெருமானுடன் முழுமையான ஐக்கியமாக விளங்கும், ஆன்மாவின் முன்னேற்றம் பொருந்திய விரிவாக்கம், வளர்ச்சி மற்றும் தனது உள்ளார்ந்த, தெய்வீக விதியை நோக்கி பக்குவமடைவதை குறிப்பிடுகிறது. தூல உடலின் கருத்தரிப்பின் போது ஆன்மா உருவாக்கப்படுவது இல்லை. ஒவ்வொரு ஆன்மாவும் முழு நிறைவாக எப்போதும் இருக்கிறது என்றும் சொல்லலாம். ஆனால் சிவபெருமானிடம் இருந்து வெளிவந்த தனிப்பட்ட ஆன்மாவின் உடல், வளர்ச்சி பெறாத ஒரு சிறிய விதை போன்று இருக்கிறது. ஒரு கருவாலி மரத்தை வளர்வதற்கு ஒரு சிறிய கருவாலிக்கொட்டையை இருள் சூழ்ந்த நிலத்தடியில் விதைக்க வேண்டி இருப்பதைப் போல, ஆன்மா முழுமையாக பக்குவம் பெற்று இறைவனுடன் தனது இயல்பான ஒருமையை உணர்வதற்கு அது *மலங்களால்*

உருவான அறியாமை இருளில் இருந்து விரிவாக்கம் பெறவேண்டும். ஆனால், அது சிவலோகத்தில் உருவாக்கப்படுகிறது. அது இறுதியாக பூலோகத்தில் ஒரு தூல உடலில் பிறவி எடுக்கும் வரை *விஞ்ஞானமய கோசம்*, *மனோமய கோசம்* மற்றும் *பிராணமய கோசம்* என்று மிகவும் அடர்த்தியான கோசங்களை பெற்று வளர்ச்சி பெறுகிறது. அதன் பிறகு அது பல பிறவிகளை அனுபவித்து, மறுபிறவி செயல்முறையின் மூலம் பக்குவம் அடைகிறது. இவ்வாறு ஆன்மாக்கள் ஒவ்வொரு பிறவியிலும் கற்றுக்கொண்டு முதிர்ச்சி பெறுகின்றன. மேலும் தகவலுக்கு: *மலம்*, *மோக்ஷம்*, *சம்சாரம்*.

முன் உதாரணமாக திகழ்வது (exemplify).

அனுபவம் (experience): ஒரு சம்பவத்தில் முழுமையாக வாழ்தல்; தனிப்பட்ட ஈடுபாடு. சமஸ்கிருதத்தில், *அனுபவ*.

உயர்வாக போற்றுதல் (extol): புகழ்ந்து பேசுதல்.



சிரத்தை அல்லது **நம்பிக்கை (faith):** விசுவாசம் அல்லது உறுதிப்பாடு. வலுவான நம்பிக்கை. இந்த நம்பிக்கையை விரிவான கண்ணோட்டத்துடன் பார்க்கும் பொது, அது "மதம், தர்மத்தை" குறிப்பிடுகிறது. அது குறிப்பாக ஐம்புலன்களின் வரம்பை கடந்து, பகுத்தறிவியலில் இருந்து முற்றிலும் மாறுபட்ட நிகழ்வுகள் மீது இருக்கும் நம்பிக்கையாக, மதத்தின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இறைநம்பிக்கை என்பது ஒரு நபரின் இயலுணர்வு அல்லது ஆதீதமான அனுபவம், சாத்திரம் படித்தல் மற்றும் ஆயிரம் வருடங்களாக மாறாமல் இருக்கும் உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் பல விவேகமான *ரிஷிகளின்* பிரமாணங்களை கேட்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது.

உண்ணாவிரதம் அல்லது **உபவாசம் (fast):** ஒரு விரதம் அல்லது பண்டிகை சமயங்களில் கடைப்பிடிப்பதைப் போன்று, குறிப்பிட்ட உணவை சாப்பிடுவது அல்லது உணவு ஏதும் சாப்பிடாமல் இருப்பதை குறிக்கிறது. இந்துக்கள் கடைப்பிடிக்கும் உண்ணாவிரதத்தில் பலவகைகள் உள்ளன. ஒரு நாள் அல்லது சில நாட்களுக்கு குறிப்பிட்ட உணவு வகைகளை தவிர்ப்பது ஒரு எளிமையான உண்ணாவிரதம் ஆகும். உதாரணத்திற்கு அசைவ உணவு உண்பவர்கள் மீன், கோழி மற்றும் இறைச்சிகளை தவிர்ப்பார்கள். மிதமாக உண்ணாவிரதம் இருப்பவர்கள் கெட்டியான உணவுகளை தவிர்த்து பழச்சாறுகள், தேநீர் மற்றும் மற்ற நீர் ஆகாரங்களை மட்டுமே எடுத்துக்கொள்வார்கள். சிலசமயங்களில் அத்தகைய உபவாசங்கள் காலையில் மட்டும்

அனுட்டானம் செய்யப்படுகின்றன, மற்றும் சூரியன் மறைந்த பிறகு வழக்கம் போல உணவு அனுமதிக்கப்படுகிறது. தீவிரமான உண்ணாவிரதத்திற்கு கண்காணிப்பு தேவைப்படுகிறது, மற்றும் அந்த விரதத்தில் இருக்கும் போது பல நாட்களுக்கு தண்ணீர் மட்டுமே குடித்து, பெரும்பாலான வெளியுலக நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியிருக்கிறது.

சங்கம் (fellowship): சமூகம். ஈடுபாடுகள், நம்பிக்கைகள் அல்லது வழக்கங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுதல், பொதுவான ஈடுபாடுகள் மற்றும் நாட்டங்களுடன் இருக்கும் ஒரு குழு.

பண்டிகை (festival): சமயத்துடன் தொடர்புடைய கொண்டாட்டங்கள் மற்றும் விசேஷ அனுட்டானங்களை கடைபிடிக்கும் நாட்கள். ஒவ்வொரு வருடமும் வருகின்ற பண்டிகைகளின் தேதிகள் பஞ்சாங்க கணிப்பிற்கு ஏற்ப சிறிது மாறுபட்டு இருக்கும். அந்த நாட்களில் பக்தி (விரிவான பூஜைகள், பிராயச்சித்தம், விரதம், யாத்திரை) மற்றும் கொண்டாட்டங்கள் (ஆடல், பாடல், இசை, திருவீதி உலா, கதாகாலட்சேபம், சாத்திரம் படித்தல்) சீரும் சிறப்புமாக அமைந்து இருக்கும்.

முதல் உலகம் (First World): ஐம்புலன்களுக்கு புலனாகும் பருமனான அல்லது தூல பொருட்களின் பூலோகம் அல்லது தூல பிரபஞ்சம். மேலும் தகவலுக்கு: *லோகம்*.

ஐந்து பாரம்பரிய கடமைகள் (five classical duties): மேலும் தகவலுக்கு: *பஞ்ச நித்திய கர்மாக்கள்*.

ஐந்து எழுத்துக்கள் (அட்சரங்கள்) (Five Letters (syllables)): மேலும் தகவலுக்கு: *நமச்சிவாய*.

நெற்றியில் வைக்கும் சின்னங்கள் (forehead marks): மேலும் தகவலுக்கு: *பிந்து, திலகம், த்ரிபுந்தரம்*.

முன்னுணர்ந்து தடு (forestall): தடை செய், இடைமறி, குறுக்கீடு.

குற்றம் அல்லது தவறு அல்லது கடமை தவறியதால் ஏற்படும் உரிமை இழப்பு (forfeiting).

நான்கு பாரம்பரிய குறிக்கோள்கள் (four traditional goals): *சதுர்வர்கம்* அல்லது *புருஷார்த்த* —கடமை (தர்மம்), செல்வம் *(அர்த்தம்)*, அன்பு (காமம்) மற்றும் முக்தி. மேலும் தகவலுக்கு: *புருஷார்த்தம்*.

ஈமச்சடங்கு (funeral rites): மேலும் தகவலுக்கு: *தகனம்*.



gādā: गदा “Mace.” தண்டாயுதம் அல்லது கதை. விநாயகரின் ஆயுதங்களில் ஒன்று. நுனியில் சொரசொரப்பாக பருத்து உருண்டையாக இருக்கும். இது பக்தர்கள் கரைக்க வேண்டிய கர்மவினைகள் முழுநிறைவு பெறும் வரை, அவற்றை அவர்களுக்கு மீண்டும் வழங்கும் விநாயகரின் சக்தியை குறிக்கிறது.

gaja: गज ***கஜ***. யானை. விலங்குகளின் அரசனாக விளங்கும் யானை, விநாயகரை பிரதிநிதித்துவம் செய்து, அதிகாரத்துவம் மற்றும் ஆற்றலின் சின்னமாக விளங்குகிறது. பல பெரிய இந்து கோயில்களில் ஒன்று அல்லது பல கோயில் யானைகள் உள்ளன.

Gajānana: गजानन “Elephant-faced.” ***கஜானன***. ஆணைமுகன். விநாயகரின் பிரபலமான பெயர். இவர் *லோபம்* அல்லது பேராசையை அழிப்பவராக *முத்கல புராணம்* குறிப்பிடுகிறது.

Gaṁ* Mantra:** गंमन्त्र ***கம் மந்திரம். அன்பான விநாயகரின் *பீஜ* மந்திரம். ஒற்றை அட்சரமாக இருக்கும் *பீஜ* மந்திரங்கள், அதிக சிக்கலாக இருக்கும் ஒலிக் கலவைகளின் சாரமாக விளங்குகின்றன. *கம்* என்பது *மூலாதார* சக்கரத்தில் இருக்கும் வேர் சொல்லாக விளங்குகிறது.

gaṇa(s): गण “Number,” hence “throng,” “troop,” “retinue;” a body of followers or attendants.” ***கணங்கள்.*** “கூட்டம், சேனை; உதவியாளர்கள் கூட்டம்; பின்பற்றுபவர்கள் அல்லது ஊழியர்களின் குழு.” விநாயகரின் மேற்பார்வையில் தெய்வீக உதவியாளர்களாக இயங்கும் சிவனின் சேவகர்கள். உபதேவதைகளின் குழு. மேலும் தகவலுக்கு: *கணபதி, கணேஷா.*

Gaṇanāthas: गणनाथ “Lords of hosts.” ***கணங்களின் தலைவன்.*** இந்த சொல் ஒருமையாக இருக்கும் போது, விநாயகரை குறிக்கிறது. பன்மையாக இருக்கும் போது, மகாதேவர்களின் மேற்பார்வையில், உணர்வின் ஓட்டத்திற்கு வழிகாட்ட உதவி செய்யும் எண்ணற்ற தெய்வீக சக்திகளை குறிக்கிறது.

Gaṇapati: गणपति “Leader of the *gaṇas*.” ***கணபதி***. “கணங்களின் தலைவர்.” விநாயகரின் பெயர்களுள் ஒன்று.

Gaṇapati Upanishad: गणपति उपनिषद्, ***கணபதி உபநிடதம்***. எந்த வேதத்துடனும் தொடர்பில் இல்லாமல், பிற்காலத்தில் தோன்றிய விநாயகர் பற்றிய *உபநிடதம்*. இது இயற்றப்பட்ட காலம் தெளிவாக தெரியவில்லை. இது விநாயகரை முழுமுதல் கடவுளாக வழிபடும் காணாபத்தியம் என்ற இந்து சமயப் பிரிவினரின் ஒரு முக்கிய சாத்திரம் ஆகும். இது பெரும்பாலும் மகாராஷ்டிரா மாநிலத்தின் சில பகுதிகளில் ஒரு முக்கிய பிரிவாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: விநாயகர்.

gandha: गन्ध "Smell, odor, fragrance." *கந்தம்.* நாற்றம் (மணம்). ஐந்து *தன்மாத்திரைகளில்* "மூலப்பொருட்களில்" ஐந்தாவது. இவற்றில் இருந்து பருமனான *மகாபூதங்கள்* (அல்லது *பஞ்சபௌதிகாஸ்)* தோன்றுகின்றன. நாற்றம் என்ற *தன்மாத்திரை, ப்ரித்வி* தத்துவத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *தன்மாத்திரை.*

Gaṇeśa: गणेश "Lord of Categories." (From *gaṇ,* "to count or reckon," and *Īśa,* "lord.") Or: "Lord of attendants *(gaṇa),"* synonymous with *Gaṇapati.* ***கணேஷா.*** "கணங்களின் தலைவர்," அல்லது: "கணநாதர்," இவை அனைத்தும் கணபதி அல்லது விநாயகரை குறிக்கின்றன. கணபதி ஒரு மகாதேவராக, இந்துக்களின் ஒவ்வொரு பிரிவாலும் வணங்கப்படும் ஆனைமுகனாக இருக்கிறார். அவர் விக்கினங்களின் அழிக்கும் கடவுளாக (விக்னேசுவரன்) இருந்து, அவருக்கு இருக்கும் சிறந்த ஞானத்திற்காக மரியாதை செலுத்தப்படுகிறார், மற்றும் ஒவ்வொரு ஆன்மாவின் *கர்மவினையிலும்* இருக்கும் நுணுக்கங்கள் மற்றும் ஒரு செயலை வெற்றி அடைய செய்யும் முறையான *தார்மீகப்* பாதையை அவர் அறிந்து இருப்பதால், எந்த ஒரு செயலையும் தொடங்கும் முன் அவர் பூசிக்கப்படுகிறார். அவர் *மூலாதார சக்கரத்தில்* வீற்று இருக்கிறார் மற்றும் எளிதில் அணுகும் படியாக இருக்கிறார்.

Gaṇeśa Chaturthī: गणेश चतुर्थी. விநாயகர் சதுர்த்தி. இது விநாயகரின் பிறந்தநாளை கொண்டாடுவதாக அமைந்துள்ளது. இது ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் பத்து நாட்களுக்கு ஒரு திருவிழாவாக கொண்டாடப்பட்டு, இறுதி நாளன்று கடலில் சென்று விநாயகரை கரைக்கும் விநாயகர் *விசர்ஜனம்* ஒரு பெரிய ஊர்வலமாக நடைபெறுகிறது. இந்த சந்தோஷமான தருணத்தில் இந்துக்கள் அனைவரும் ஒன்றாக வழிபடுகின்றனர்

Gaṇeśa Visarjana: गणेश विसर्जन "Gaṇeśa departure." விநாயகர் *விசர்ஜனம்.* விநாயக சதுர்த்தி முடிந்து பதினோராவது நாளன்று நடைபெறும் இந்த ஊர்வலத்தில், இதற்காக பிரத்யேகமாக தயார் செய்யப்பட்ட விநாயகர் *மூர்த்திகளை* ஒரு நீர்நிலைக்கு சுமந்து சென்று, அங்கே கரைக்கப்படுகின்றன. இது உணர்வுக் கடலுடன் விநாயகர் ஐக்கியமாவதை பிரதிநித்துவம் செய்வதாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *கணேஷா.*

Ganges *(Gaṅgā):* गंगा. கங்கை. பாகீரதி என்ற பெயரில் ஹரித்வாருக்கு மேலே, இமயமலையில் இருந்து தொடங்கும் இந்த மிகவும் புனிதமான நதியின் நீளம் 1,557 மைல்கள். இந்த நதி அலக்நந்தாவுடன் சேரும் இடத்தில் (இங்கே பூமிக்கு அடியில் சரஸ்வதி நதியும் சேர்வதாக கருதப்படுகிறது) கங்கை என்று பெயர் பெறுகிறது. இது தென்கிழக்கு திசையில் மக்கள் தொகை அதிகமாக இருக்கும் கங்கை சமவெளி வழியாக பாய்ந்து சென்று, பிரயாக் (அலகாபாத்) என்ற இடத்தில் தனது கிளை நதியான யமுனையுடன் சேர்ந்து வங்கக்கடலில் இறுதியாக கலக்கிறது.

வட இந்தியாவில் பாய்ந்து செல்லும் கங்கையின் நதிக்கரை அல்லது அதற்கு அருகில் இருக்கு பகுதி (Gangetic).

Gāritra: गारित्र "Grains." ***காரித்ர***. தானியங்கள். உதாரணத்திற்கு கோதுமை அல்லது வாற்கோதுமை.

gāyatrī: गायत्री ***காயத்ரி***. காயத்ரி என்பது மந்திரத்தை உச்சரிக்கும் முறைகளில் ஒன்று. இது சந்தஸ் என்று அழைக்கப்படுகிறது. இதில் மொத்தம் இருக்கும் 24 எழுத்துக்கள், மூன்று சரணங்கள் மற்றும் ஒரு சரணத்திற்கு 8 எழுத்துக்கள் என்று அமைந்து இருக்கும். இது "பாடல்" என்று பொருள்படும் *காய* என்ற வேர்சொல்லில் இருந்து உருவானது. — ***காயத்ரி:*** காயத்ரி தேவி வேதங்களின் மாதாவாக கருதப்படுகிறாள்.

Gāyatrī Mantra: गायत्रीमन्त्र ***காயத்ரி மந்திரம்***. 1) பூஜை மற்றும் தனித்த அனுட்டானங்களில் உச்சரிக்கப்படும் பிரபல வேத மந்திரம். *ஓம் பூர்புவ: ஸ்வ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்க்கோதேவஸ்ய தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத்.* "மூன்று உலகங்களையும் படைத்து, ஒளி பொருந்தி இருக்கும் பூஜிக்கத்தக்கவரை நாங்கள் தியானிக்கிறோம். நாங்கள் மேலான உண்மையை உணர அந்தப் பரம்பொருள் எங்களது அறிவை ஊக்குவிக்கட்டும்" (ரிக் வேதம் 3.62.10, *வேதிக் எக்ஸ்பிரியன்ஸ்)*. இந்த புனிதமான சாவித்திரி மந்திரம், சூரியனின் படைக்கும் அம்சமான சாவித்திரியை போற்றிப் பிரார்த்தனை செய்வதாக அமைந்துள்ளது. பூடகமான ஒரு பிரபஞ்ச சூத்திரமாக கருதப்படும் இதன் முக்கியத்துவம் காரணமாக இது வேத மாத்ரி, "வேதங்களின் தாய்" என்று அழைக்கப்படுகிறது. 2) இது காயத்ரி என்று அழைக்கப்படும் பிரத்யேகமான தாந்த்ரீக மந்திரங்களில் ஏதேனும் ஒரு பிரிவை குறிக்கிறது. அதில் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தெய்வத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது.

ghaṇṭā: घण्टा "Bell." Akin to *ghaṇṭ,* "to speak." ***கண்டா***. "மணி." இந்து பூஜையில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய கருவி. இது அசுரர்களை துரத்தி, தேவர்கள் மற்றும் மகாதேவர்களை வரவழைக்க பயன்படுத்தப்படுத்துகிறது. மேலும் தகவலுக்கு: *பூஜை*.

ghee: घी **நெய்**. இது இந்தியில் கீ என்றும், சமஸ்கிருதத்தில் *க்ருத* என்றும் அழைக்கப்படுகிறது. உருக்கி வடிகட்டிய வெண்ணெய். கோயில் விளக்குகளில் மற்றும் *யக்ஞத்தில்* பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய புனிதமான பொருள். இது ஆயுர்வேத குணங்கள் நிரம்பிய ஒரு உணவாகவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *யக்ஞம்*.

Girijātmaja: गिरिजात्मज "Born from she who as mountain born." ***கிரிஜாத்மஜ.*** "மலையில் பிறந்த பார்வதியின் புதல்வன்." மகாராஷ்டிராவின் லெண்யாத்ரி குகை கோயிலில் குடிக்கொண்டு இருக்கும் விநாயகர் மூர்த்தி.

பெண் தெய்வம், அம்மன் (Goddess): தெய்வீக சக்தியின் பெண் வடிவம்; சக்தி அல்லது தேவி. *அம்மன்* என்பது பாலின வேற்றுமையின்றி தனது இயல்பான நிலையில் காரண லோகத்தில் இருக்கும் சக்தியின் (மகாதேவர்) ஒரு பெண் புலனுணர்வு அல்லது சித்தரிப்பை குறிப்பிடலாம் அல்லது ஒரு சூட்சும பெண் உடலில் வாசம் செய்யும் ஒரு சூட்சும லோக சக்தியை குறிப்பிடலாம். தெய்வீகத் தன்மை பாலின வேற்றுமையை கடந்தது என்பதை தெரிவிக்க, அது சிலசமயங்களில் இரு பாலின பண்புகளுடன் அர்த்தநாரீஸ்வரர் வடிவிலும் அல்லது வலது காதில் பாம்பு வடிவ வளையம் மற்றும் இடது காதில் கனிவாய் குழையும் தோடு வடிவம் என்று இரு பாலினத்தாரின் காதணிகளுடன் நடராசர் வடிவிலும் சித்தரிக்கப்படுகிறது.

கடவுளை அல்லது இறைவனை உணர்தல் (God Realization): தனக்குள் இருக்கும் தெய்வத்தை நேரடியாக மற்றும் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளுதல். அந்த உணர்தலானது 1) உட்புற ஒளியை அனுபவிப்பதில் தொடங்கி, சச்சிதானந்தத்தை உணர்தல், எல்லா உருவங்கள் வழியாக பாய்ந்து செல்லும் புனிதமான உணர்வு அல்லது அடிப்படை சாரம் வரை பல்வேறு நிலைகளில் இருக்கும் *சவிகல்ப சமாதி* ("உருவம் அல்லது பீஜத்துடன் கூடிய சமாதி"), அல்லது 2) யாவும் கடந்த பிரம்மம், பரசிவம், காலம் மற்றும் உருவம் மற்றும் பரவெளியை கடந்த பரமாத்துமாவுடன் நடைபெறும் சங்கமத்தை குறிப்பிடும் *நிர்விகல்ப சமாதியை* ("உருவம் அல்லது பீஜம் இல்லாத சமாதி") குறிப்பிடலாம். இந்த *அன்பான விநாயகர்* புத்தகத்தில் *கடவுளை உணர்தல்* என்பது மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் *சமாதிகளில்* ஏதேனும் ஒன்றை குறிப்பிடலாம், ஆனால் ஆத்ம ஞானம் என்பது *நிர்விகல்ப சமாதியை* மட்டுமே குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *சமாதி*, ஆத்ம ஞானம்.

Gods: Mahādevas, "great beings of light." **மகாதேவர்கள்:** "சுயமாக பிரகாசிக்கும் உயர்வான சக்திகள்." அன்பான விநாயகர் புத்தகத்தில், மகாதேவர்கள் என்கிற சொல் காரண லோகத்தில் சுயமாக பிரகாசித்து தங்களது *ஆனந்தமய கோசத்தில்* வாசம் செய்யும் மிகவும் மேம்பட்ட சக்திகளை குறிப்பிடுகிறது. மகாதேவர்கள் என்கிற சொல், சிவபெருமானின் படைப்புக்களை குறிப்பிடுகிறது. மகாதேவர்கள் என்ற சொல்லின் விளக்கத்தை "இறைவன் மற்றும் மகாதேவர்கள்" என்ற சொல்லில் தெளிவாக காணமுடியும். இந்த சொற்றொடர் பரமனாக இருக்கும் சிவபெருமானையும், அவரது படைப்பான மகாதேவர்களையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மகாதேவர்*.

goshṭha: गोष्ठ "Cow pen; niche." *கோஷ்ட.* தனியாக இருக்கும் ஒரு சிறிய பூஜை மாடம்.

அருள் (grace): "Benevolence, love, giving," from the Latin *gratia*, "favor, goodwill." இது இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் சக்தியான *அனுக்கிரக சக்தியை* ("இரக்கம்,

ஆதரவு வழங்குதல்") குறிப்பிடுகிறது. இதன் மூலம் ஆன்மாக்கள் தங்களது உண்மையான தெய்வீக தன்மையின் மீது விழிப்புணர்வை பெறுகிறார்கள். ஆன்மீக பயணத்தின் பக்குவமடையாத நிலைகளில் அருள் என்பது, பெரும்பாலும் எந்த தடையும் இல்லாமல் தனக்கு இறைவனிடமிருந்து பரிசுகள் அல்லது வரங்கள் கிடைப்பதாக பக்தர் உணர்கிறார். பக்குவமடைந்த ஆன்மா தன்னை சுற்றி அருள் நிறைந்து இருப்பதை காண்கிறார். இறைவனின் செயல்கள் நன்மை செய்து பயனுள்ளதாக தோன்றினாலும் தோன்றாவிட்டாலும், அந்த பக்தர் அவற்றை இறைவனின் அருளாகவே கருதுகிறார். மேலும் தகவலுக்கு: *பிரபத்தி*.

guṇa: ગુણ "Strand; quality." ***குணம்***. *பிரக்ரிதி* அல்லது மூல இயற்கையின் மூன்று முக்கிய அடிப்படைகள். அவை பின்வருமாறு: —***சத்வ (sattva):*** "தூய்மையான," அமைதியான, அரிதான, ஒளி புகவல்ல, வியாபிக்கும் பண்புடன், தூய உணர்வின் ஒளியை பிரதிபலித்தல். —***ரஜோ (rajas):*** "பேரார்வம்," ஆற்றல், இயக்கம், செயல், உணர்ச்சி, உயிரில் இயல்பாக இருப்பது. —***தமோ (tamas):*** "இருள்," செயலற்ற தன்மை, அடர்த்தி. ஒடுக்கும், தடை செய்யும் மற்றும் கலைக்கும் சக்தி. *ஆயுர்வேதம்*, கலை, சுற்றுப்புறம் மற்றும் ஆளுமைகள் உட்பட இந்த இயற்கையின் பண்புகள் அனைத்து வஸ்த்துக்களிலும் அடங்கி இருப்பதால், இந்த *குணங்கள்* இந்து சிந்தனையில் அடிப்படை அங்கமாக விளங்குகின்றன. மேலும் தகவலுக்கு: *ஆயுர்வேதம்*, *பிரக்ரிதி*, *தத்துவம்*.

guru: ગુરુ "Weighty one," indicating an authority of great knowledge or skill. **குரு**: "கணமான." தலைசிறந்த புலமை அல்லது திறமையின் மீது இருக்கும் நிபுணத்துவத்தை குறிப்பிடுகிறது. இசை, நடனம், சிற்பக்கலை போன்ற துறைகளில் ஏதேனும் ஒன்று, அதிலும் குறிப்பாக சமயம் சார்ந்த துறையில் இருக்கும் ஒரு ஆசிரியர் அல்லது வழிகாட்டியின் உத்தியோகப் பெயர். தெளிவாக புரியவேண்டும் என்பதற்காக, இந்த சொல்லுக்கு முன்பாக வழக்கமாக அந்த நபரின் தகுதியும் ஒரு அடைமொழியாக பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக *குலகுரு* (குடும்பத்தின் ஆசிரியர்), *வீணாகுரு* (*வீணை* கற்பிக்கும் ஆசிரியர்) மற்றும் *சத்குரு* (ஆன்மீக குரு) போன்ற சொற்கள். *அத்வய தாரக* உபநிடதம் (14-18), குரு என்பதற்கு "அறியாமையை (ரு) நீக்குபவர் (கு)" என்று விளக்கம் அளிக்கிறது. மேலும் தகவலுக்கு: *குரு-சிஷ்ய சம்பிரதாயம்*, *சத்குரு*.

guru bhakti: ગુરુભક્તિ "Devotion to the teacher." **குரு பக்தி.** ஒரு மாணவன் ஏதேனும் ஒரு பாடப்பகுதியின் மீது வைத்திருக்கும் பணிவு, அன்பு மற்றும் கருத்து உருவாக்க அணுகுமுறையை குறிப்பிடுகிறது. ஆன்மீக உலகில், ஒரு சீடன் குருவை உயர்வான தனது பரமாத்துமாவாக காண முயற்சி செய்கிறார். தனது *குரு* பெற்ற அதே அமைதி மற்றும் ஞானோதயத்தை இறுதியில் பெறுவதற்காக, சீடன் *சத்குருவின்* உட்புற இயல்பு

மற்றும் ஞானத்துடன் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, அவர் தனது இயல்பை மெதுவாக உருமாற்றிக்கொள்கிறார். மேலும் தகவலுக்கு: *குரு, குரு-சிஷ்ய சம்பிரதாயம், சத்குரு.*

guru lineage: குரு பரம்பரை. மேலும் தகவலுக்கு: *குரு பரம்பரை.*

guru *paramparā:* गुरुपरंपरा "Preceptorial succession" (literally, "from one teacher to another"). ***குரு பரம்பரை.*** (ஒரு ஆசிரியரை தொடர்ந்து இன்னொரு ஆசிரியர் பதவிக்கு வருவதை குறிப்பிடுகிறது). அதிகாரப்பூர்வமாக அடுத்தடுத்து தீட்சை பெறும் ஆன்மீக *குருமார்களின்* வரிசை; ஒரு *குருவிடம்* இருந்து இன்னொரு *குருவிற்கு* வழங்கப்படும், சூட்சும ஞான சக்தியின் வரிசை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொடர்ச்சி. ஒப்பிடுவதற்கு: *சம்பிரதாயம்.*

guru-śishya system: गुरुशिष्य "Master-disciple" system. ***குரு சிஷ்ய சம்பிரதாயம்.*** இது இந்துதர்மத்தில் ஒரு முக்கிய கல்விமுறையாக விளங்குகிறது. இதில் ஒரு மாணவனுக்கு ஆசிரியர் தனக்கு தெரிந்த தகவல் மற்றும் பாரம்பரியத்தை எடுத்துரைக்கிறார். மாணவன் குரு மீது செலுத்தும் மரியாதை, அவனது அர்ப்பணிப்பு, பக்தி மற்றும் கீழ்ப்படிதல் மற்றும் தனிப்பட்ட அறிவுறுத்தலின் மூலமாக முடிவில் அந்த மாணவன் குரு பெற்ற அறிவில் தேர்ச்சி பெறுவததை அடிப்படையாகக் கொண்ட ஒரு வலுவான மனித உறவின் மூலமாக அறிவை வழங்குவது, அதிலும் குறிப்பாக நுணுக்கமான அல்லது மேம்பட்ட அறிவை சிறப்பாக வழங்குவதே, இந்த சம்பிரதாயத்தின் அடிப்படை ஆகும். மேலும் தகவலுக்கு: *குரு, குரு பக்தி, சத்குரு.*



Hanumān: हनुमान् (Hindi) "Large jawed." ***அனுமார்.*** இது சமஸ்கிரதத்தில் *அனுமத்* என்ற சொல்லில் இருந்து தோன்றியது மற்றும் "பெரிய தாடையை உடையவர்" என்பது இதன் பொருள். இவர் *இராமாயணத்தில்* ஆற்றல்மிக்க வானரக் கடவுளாகவும், பிரபலமான *அனுமான்-நாடகாவில்* கதாநாயகனாகவும் இருக்கிறார். இந்த பிரபலமான தெய்வம் தனது எஜமானர் ராமருக்கு முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட சேவகராகவும், *தாஸ்ய* பக்திக்கு முன் உதாரணமாகவும் விளங்குகிறார்.

Hari: हरि "Vishṇu." ***ஹரி.*** விஷ்ணு. மேலும் தகவலுக்கு: *பிரம்மா, விஷ்ணு.*

Haridrā Gaṇapati: हरिद्रागणपति. ***ஹரித்ரா கணபதி.*** "மஞ்சள் நிறத்தில்" இருப்பவர். அவர் தனது நான்கு கரங்களில் பாசம், அங்குசம், தந்தம் மற்றும் *மோதகம்* என்று நான்கு வழக்கமான சின்னங்களை தரித்து இருப்பவர்.

haṭha yoga: हठयोग "Forceful yoga." **ஹட யோகம்**. "ஆற்றல்மிக்க யோகம்." உடல் மற்றும் மனதிற்கு பயிற்சி வழங்க பழங்காலத்தில் வடிவமைக்கப்பட்ட ஹட யோகம் என்ற செய்முறையானது, தியானத்திற்காக உடல் மற்றும் மனதை தயார் செய்யும் ஒரு வழிமுறை ஆகும். மேலும் தகவலுக்கு: *குண்டலினி, நாடி, யோகம்.*

சொர்க்கம் (heaven): ஆன்மாக்கள் இரு பிறவிகளுக்கு இடையே ஓய்வெடுத்துக்கொண்டு கற்றுக்கொள்ளும், மற்றும் முதிர்ந்த ஆன்மாக்கள் *மோக்ஷத்திற்கு* பிறகு பக்குவம் அடையும் இடமான, சிவலோகம் மற்றும் நுணுக்கமான உலகின் உயர்நிலை பிரபஞ்சங்களை உள்ளடக்கிய விண்ணுலகங்களை குறிப்பிடுகிறது. ஹெவன் (heaven) என்கிற சொல் சமஸ்கிருத சொல்லான *ஸ்வர்கத்திற்கு* சமமாக பொருளுடைய சொல்லாக மொழிபெயர்ப்பாளர்களால் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *லோகம்.*

hell: *Naraka.* **நரகம்**. இது சோகமான, மனம் மற்றும் மனவெழுச்சி ரீதியாக நெரிசலான, துன்பகரமான உணர்வுப் பகுதியாக இருக்கும். நரகம் என்கிற மனநிலையை, தூல உலகம் அல்லது துணை-சூட்சும உலகில் (நரகம்) தூல உடலின் மரணத்திற்கு பிறகு அனுபவிக்க முடிகிறது. அதனுடன் வெறுப்பு, கழிவிரக்கம், ஆத்திரம், அச்சம், பொறாமை மற்றும் சுய-கண்டனத்தின் வேதனை நிறைந்த உணர்ச்சிகள் சேர்ந்து வருகின்றன. ஆனால் இந்துதர்மத்தின் கண்ணோட்டத்தில், நரக வேதனை என்பது நிரந்தரமாக இல்லாமல், ஒருவர் சுயமாக உருவாக்கிக்கொண்ட ஒரு தற்காலிக நிலையாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *அசுரன், நரகம்.*

Heramba Gaṇapati: हेरम्बगणपति "Protector of the weak" is a five-faced *mūrti* of Gaṇeśa. ***ஹேரம்ப கணபதி.*** ஐந்து முகங்களுடன் "பலவீனமானவர்களை பாதுகாக்கும்" கணபதி. இவர் அபய மற்றும் வரத முத்திரையுடன் காட்சி அளித்து, சிங்கத்தின் மீது அமர்ந்து இருக்கிறார்.

பாரம்பரியம் (heritage): ஒரு மரபுரிமையாக பிற்கால சந்ததியருக்கு கற்றுத் தரும் சம்பிரதாயம்.

உயர்ந்த பண்பு, தாழ்ந்த பண்பு (higher nature, lower nature): ஒரு புறத்தில் மனிதனின் புனிதமான, ஆத்மார்த்தமான பண்புகள் மற்றும் மறு புறத்தில் அந்த மனிதனின் கீழ்நிலை, உள்ளுணர்வு பண்புகளை குறிப்பிடும் வெளிப்பாடுகள். மேலும் தகவலுக்கு: *கோசம், மனம் (ஐந்து நிலைகள்).*

Himālayas: हिमालय “Abode of snow.” **இமய மலைத்தொடர்.** “பனி சூழ்ந்த ஆலயம்.” இந்த மலைத்தொடர் இந்திய-திபெத்திய எல்லையில் மட்டுமல்லாமல் பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பூட்டானிலும் பரவி இருக்கிறது.

Hindu: हिन्दू. **இந்து**. இந்து தர்மத்தை பின்பற்றுபவர் அல்லது இந்து தர்மம் தொடர்பான ஒன்றைக் குறிக்கும் சொல். மேலும் தகவலுக்கு: *இந்து சமயம்.*

Hinduism (Hindu Dharma): हिन्दूधर्म. **இந்துசமயம் (இந்துதர்மம்):** இது இந்தியாவில் தோன்றிய சமய மற்றும் கலாச்சார அமைப்பு ஆகும், மற்றும் இது தற்போது சுமார் ஒரு பில்லியன் மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது, அதில் பெரும்பாலானோர் இந்தியாவில் இருந்தாலும், மற்ற நாடுகளிலும் இந்துக்கள் பெருமளவில் இருக்கிறார்கள். இது சனாதன தர்மம் என்றும் வைதீக தர்மம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்துசமயம் உலகில் மிகவும் பழமையான சமயமாக விளங்குகிறது, மற்றும் இது பன்மைவாத மத நம்பிக்கையில் தொடங்கி முழுமையான ஒருமைவாதம் வரை தத்துவங்களின் ஒரு விரிவான தொடரை உள்ளடக்கியுள்ளது. அது எண்ணற்ற நம்பிக்கைகளை கொண்ட ஒரு குடும்பமாக இருக்கிறது மற்றும் அதன் நான்கு முக்கிய பிரிவுகளாக சைவ சமயம், வைஷ்ணவ சமயம், சாக்த சமயம் மற்றும் சுமார்த்த சமயம் விளங்குகின்றன. இந்த நான்கும் முற்றிலும் மாறுபட்ட நம்பிக்கைகளை கொண்டு இருப்பதால், ஒவ்வொன்றும் ஒரு முழுமையான மற்றும் தனிப்பட்ட சமயமாக விளங்குகிறது. எனினும் அவை *கர்மவினை, தர்மம்,* மறுபிறவி, எங்கும் வியாபித்து இருக்கும் தெய்வீகத் தன்மை, கோயில் வழிபாடு, சடங்குகள், பலவிதமான தெய்வங்கள், *குரு-சிஷ்ய* பரம்பரை மற்றும் புனிதமான நூலாக *வேதங்களை* சார்ந்து இருக்கும் கலாச்சாரம் மற்றும் நம்பிக்கையின் மிகப்பெரிய பாரம்பரியத்தை பகிர்கின்றன.

holy ash: *Vibhūti.* **திருநீறு.** மேலும் தகவலுக்கு: *திலகம், திருபுண்டரம், விபூதி.*

huṇḍi: हुण्डि “Collection box,” from *hun,* “to sacrifice.” ***உண்டியல்.*** இந்து கோயில்களில் பக்தர்கள் தங்கள் காணிக்கையை செலுத்துவதற்காக வைக்கப்பட்டு இருக்கும் ஒரு கனமான இரும்புப்பெட்டி.



icçhā śakti: इच्छाशक्ति “Desire; will.” ***இச்சைசக்தி.*** "ஆசை, விருப்பம்." மேலும் தகவலுக்கு: *சக்தி, திரிசூலம்.*

திரு உருவச்சிலை (icon): வழக்கமாக இறைவன் அல்லது ஒரு மகாதேவரின் சிலை. மேலும் தகவலுக்கு: *மூர்த்தி*.

iḍā nāḍī: इडानाडी “Soothing channel.” “அமைதியான பாதை.” இடா நாடி. பெண்மை பண்புடன் முதுகுத்தண்டு வழியாக செல்லும் மனோஉணர்வு ஓட்டம். மேலும் தகவலுக்கு: *குண்டலினி, நாடி, பிங்கலா.*

ikshukāṇḍa: इक्षुकाण्ड “Sugarcane.” ***இக்ஷுகாண்ட.*** “கரும்பு.”

ikshukārmuka: इक्षुकार्मुक “Sugarcane bow.” ***இக்ஷுகார்முக.*** அன்பான விநாயகர் கையில் தரித்து இருக்கும் ஒரு ஆயுதம் அல்லது சின்னம்.

உள்ளார்ந்த (immanent): உள்ளே வாசம் செய்கின்ற; இயற்கையாக உள்ளிருந்து செயல்படுகின்ற. கடவுளை பற்றி குறிப்பிடும் போது, *உள்ளார்ந்த* என்பது தனியாக அல்லது தூரத்தில் இல்லாமல், எல்லா பொருட்கள் மற்றும் பிரபஞ்சம் முழுவதிலும் பரவி இருப்பதை குறிப்பிடுகிறது.

பலியிடுதல் (immolate): தன்மறுப்பு. படையலாக வழங்குவது.

மன்றாடுதல் (implore): அக்கறையுடன் அல்லது சோகமாக வேண்டுதல், கெஞ்சுதல், யாசித்தல், பிரார்த்தனை செய்தல்.

மனித பிறவி எடுத்தல் (incarnation): இது ஆன்மா தொடர்ந்து தூல பிறவி எடுப்பதை குறிக்கிறது. குறிப்பாக வைணவ சம்பிரதாயத்தில், இறைவன் மனித உருவில் பிறவி எடுத்து மனித நேயத்திற்கு உதவி செய்வதாக கருதப்படுகிறது. இதற்கு அவதாரம் என்று பெயர். மேலும் தகவலுக்கு: *அவதாரம், மறுபிறவி எடுத்தல்*.

incense: *Dhūpa*. தூபம். எரித்தல் நறுமணப் புகைத் தரும் குங்கிலியம் போன்ற இயற்கை பொருட்கள். இந்து வழிபாட்டு சடங்குகளில் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இறைவனை நீராட்டிய பிறகு வழங்கப்படும் உபசாரங்களின் போது தூபமும் காண்பிக்கப்படுகிறது. இது *சுகந்தி* மற்றும் *லோபான்* (சாம்பிராணி) என்று இந்தியில் அழைக்கப்படுகிறது. வழக்கமாக ஊதுபத்திகளை குறிப்பிட *அகர்பத்தி* (குஜராத்தி) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பூஜை*.

தனித்துவம் (individuality): ஒரு நபரை இன்னொரு நபரிடம் இருந்து அல்லது ஒரு ஆன்மாவை இன்னொன்றில் இருந்து வேறுபடுத்தும் பண்பு. மேலும் தகவலுக்கு: *அகங்காரம், ஆணவ மலம், தன்முனைப்பு, ஆன்மா.*

Indra: इन्द्र “Ruler.” ***இந்திரன்***. மழை மற்றும் இடிமின்னலின் தெய்வமாக வேதங்கள் குறிப்பிடும் தேவலோக அரசன்.

indriya: इन्द्रिय “Agent, sense organ.” ***இந்திரியம்***. “கருவி, புலன் உறுப்பு.” ஐந்து புலன் உணர்வு கருவிகளாக (*ஞானேந்திரியங்கள்*), கேளுணர்வு (*ஷ்ரோத்ர*), தொட்டுணர்வு

(*த்வக்*), பார்வை (*சக்ஷுஸ்*), சுவை உணர்வு (*ரஸனா*) மற்றும் வாசம் (*கிறான*); மற்றும் ஐந்து செயல் கருவிகளாக (*கர்மேந்திரியங்கள்*) வாக்கு (*வாக்*), கைப்பற்றுதல் (*பாணி*), இயக்கம் (*பாத*), மலம் கழித்தல் (*பாயு*) மற்றும் உருவாக்குதல் (*உபாஸ்தா*). மேலும் தகவலுக்கு: *கோசம், ஆன்மா, தத்துவம்.*

சிந்து சமவெளி (Indus Valley): கி.மு. 5000 மற்றும் கி.மு.1000 க்கு இடையே செழிப்பாக இருந்த இந்த நாகரிகத்தின் அழிபாட்டு சின்னங்கள், தற்போது பாகிஸ்தானில் இருக்கும் சிந்து நதிப்பகுதியில், 1924 ஆம் ஆண்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு எடுக்கப்பட்டன. அந்த இடத்தில் யோக நிலையில், "விலங்குகளின் தலைவன்," பசுபதியாக சிவபெருமான் அமர்ந்திருக்கும் ஒரு "முத்திரை" கண்டெடுக்கப்பட்டது. அந்த நாகரீகத்தை சேர்ந்த மக்கள் பேசிய மொழி மற்றும் அவர்கள் சூழ்நிலையைப் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. அவர்கள் சுயமாக தயாரித்த உறுதியான கப்பல்கள் மூலம் மேற்கில் தொலைதூரத்தில் இருந்த மற்ற நாகரீகத்தை சேர்ந்த மக்களுடன் கலாச்சார ரீதியாக தொடர்பில் இருந்து, அவர்களுடன் பெரிய அளவில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருந்தனர். அவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு பூமியில் மிகவும் மேம்பட்ட நாகரீகமாக விளங்குகின்றார்கள். மேலும் தகவலுக்கு: *சைவம்.*

தீட்சை வழங்குதல் (initiation (to initiate)): உள்ளே நுழைதல்; ஒரு உறுப்பினராக பிரவேசம் செய்தல். இந்துதர்மத்தில், ஒரு தகுதி வாய்ந்த குருவிடம் இருந்து தீட்சை பெறுவது ஆன்மீக வளர்ச்சியில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. இது வழக்கமாக மிகவும் உயர்ந்த கல்விக்கு தொடக்கமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *தீட்சை.*

உள்ளுணர்வு சார்ந்த (instinctive): "Natural or innate." "உள்ளார்ந்த" அல்லது "இயல்பான." விலங்குகள் உலகம் மற்றும் மனிதர்களின் தூல மற்றும் கீழ்நிலை சூட்சும உலகங்களை ஆணையிடும் இயக்கங்கள் மற்றும் உத்வேகங்கள், உதாரணத்திற்கு சுய-பாதுகாப்பு, இனப்பெருக்கம், பசி மற்றும் தாகம், மற்றும் பேராசை, வெறுப்பு, கோபம், அச்சம், கழிகாமம் மற்றும் பொறாமை போன்ற உணர்ச்சிகள்.

உள்ளுணர்வு மனம் (instinctive mind): *Manas chitta. மனஸ் சித்த.* புலனுணர்வு, உடலின் இயக்கம், மற்றும் சாதாரண சிந்தனை மற்றும் உணர்ச்சியை கட்டுப்படுத்தும் கீழ்நிலை மனம். *மனஸ் சித்த* என்பது *மனோமய கோசத்துடன்* பொருந்தி இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *மனம் (மூன்று அம்சங்கள்).*

அறிவாற்றல், புத்தி (intellect): பகுத்தறியும் அல்லது புரிந்துக்கொள்ளும் திறன்; சிந்தனையின் சக்தி; புத்திக்கூர்மை. மேலும் தகவலுக்கு: *புத்தி, அறிவுணர்வு மனம்.*

அறிவுணர்வு மனம் (intellectual mind): *Buddhi chitta. புத்தி சித்த.* பகுத்தறிந்து தர்க்க ரீதியாக சிந்திக்கும் புலன். அது *மனஸ் சித்த* என்று அழைக்கப்படும் சாதாரண, அவசர

சிந்தனை செயல்முறைகளாக இல்லாமல், வேறுபடுத்தி பார்க்கும் சிந்தனையின் மூலமாக விளங்குகிறது. *புத்தி சித்த* என்பது *மனோமய கோசத்துடன்* பொருந்தி இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *புத்தி, (தனிப்பட்ட) மனம்.*

ஒரு விஷயத்தை அகத்தில் ஏற்றுக்கொள்ளுதல் (internalize).

அக வழிபாடு (internalized worship): யோகம். வெளியுலக சடங்குகளால் அல்லாமல், தியானம் அல்லது தாரணை வழியாக இறைவன் அல்லது மகாதேவர்களை வழிபடுதல் அல்லது தொடர்பு கொள்ளுதல். இது ஒரு *யோகியின்* பாதையாக விளங்குகிறது. இது *சரியை* மற்றும் *கிரியை பாதைகளுக்கு* பிறகு வருகிறது. மேலும் தகவலுக்கு: *தியானம், யோகம்.*

உள்ளார்ந்த (intrinsic): உட்புறமான; அத்தியாவசியமான; உடன் பிறந்த. ஒரு சக்தி அல்லது வஸ்துவின் உண்மையான இயல்பை சார்ந்த. —**இயல்பான தீமை (intrinsic evil):** மேலும் தகவலுக்கு: *தீமை.*

இயலுணர்வுடன் அறிதல் (intuition (to intuit)): பகுத்தறியும் செயல்முறையை தவிர்த்திடும், நேரடி புரிதல் அல்லது அறிவெழுச்சி. காரண ஆய்வை காட்டிலும் இயலுணர்வு மிகவும் மேம்பட்டதாக இருந்தாலும், அது பகுத்தறிவிற்கு முரணாக இருப்பதில்லை. மேலும் தகவலுக்கு: அறிவெழுச்சி, மனம் (ஐந்து நிலைகள்).

வெல்லமுடியாத (invincible): வெற்றிகொள்ள முடியாத; பணிய வைக்க முடியாத.

கடவுள் வணக்கம், ஆவாகனம் (invocation (to invoke)): அருளை வழங்கி உதவி செய்ய ஒரு தெய்வம், ஒரு மகான் போன்றவர்களை "வேண்டி வரவேற்பதை" குறிக்கிறது. இது ஒரு முறையான பிரார்த்தனை அல்லது பாடலையும் குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *மந்திரம்.*

அதன் விளைவாக (ipso facto): "By the fact itself." ஒருவர் தனது மதத்தின் பகைவனாக மாறுவதன் மூலம், அவர் அந்த மதத்தில் இருந்து வெளியேறியதாக சில மதங்களில் கருதப்படுகிறது.

Iraivan: இறைவன் "Worshipful one; divine one." எங்கும் இறைந்து இருக்கும் பேராற்றல். கடவுளை அழைக்கப் பயன்படும் மிகவும் பழமையான தமிழ் சொற்களில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *சன்மார்க்க சரணாலயம்.*

இறைவன் கோயில் (Iraivan Temple): மேலும் தகவலுக்கு: *சன் மார்க்க சரணாலயம்.*

Īśa: ईश "Ruler, lord or sovereign." ***ஈஷ.*** ஈசன். "அரசன், கடவுள்."

Ishṭa Devatā: इष्टदेवता "Cherished or chosen Deity." ***இஷ்ட தேவதா.*** இஷ்ட (விருப்பமான) தெய்வம். ஒரு பக்தனின் விசேஷ பக்திக்கு பாத்திரமாகும் தெய்வம்.

Itihāsa: इतिहास "So it was." ***இதிகாசம்.*** "இவ்வாறு தான் இருந்தது." வரலாறு. இது குறிப்பாக இராமாயணம் மற்றும் மகாபாரதம் (இதன் அங்கமாக பிரசித்தமான *பகவத் கீதை* விளங்குகிறது) என்கிற வரலாற்று சிறப்புமிக்க காவியங்களை குறிப்பிடுகிறது. இதிகாசம் என்பது குறிப்பாக *ஸ்கந்த புராணம்* மற்றும் *பாகவத புராணத்தையும்* (அல்லது *ஸ்ரீமத் பாக்வதம்*) சிலசமயங்களில் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மகாபாரதம், இராமாயணம், ஸ்ம்ருதி.*



jāgrat: जाग्रत् "Wakefulness." "விழித்தநிலை." புலன்கள் வெளிப்புறமாக கவனம் செலுத்தும் மனநிலை. உணர்வுள்ள மனம். *மாண்டூக்ய உபநிடதம் அவத்தைகளாக* குறிப்பிடும் நான்கு உணர்வுகளில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *அவத்தை, உணர்வு.*

jaya: (jai) जय "Victory!" ***ஜெய்.*** "வெற்றி!"

Jainism: (Jaina) जैन. ***சமணம்*** அல்லது ***சமண மதம்.*** கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்கு அருகில், மகாவீரரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு, வேதத்தை சாராமல் அமைந்த ஒரு பழமையான மதம். உயிர்களுக்கு தீங்கு விளைவிக்காமை, சைவ உணவுக் கோட்பாடு மற்றும் துறவிகளுக்கு தீவிரமான துறவறத்தை சமண மதத்தின் *ஆகமங்கள்* போதிக்கின்றன. எல்லா ஆன்மாக்களும், தனது சொந்த முயற்சியால் முக்தியை பெறமுடியும் என்பதை சமணம் வலுவாக வலியுறுத்துகிறது. அந்த மதத்தின் வரலாற்று சிறப்புமிக்க துறவிகள் *தீர்த்தங்கரர்கள்* (பிறவியின் பெருங்கடலை கடந்தவர் என்பது இதன் பொருள்) என்று அழைக்கப்பட்டு, அவர்களது சிலைகள் வணங்கப்படுகின்றன. இவர்களின் வரிசையில் மகாவீரர் 24 ஆவதாகவும் இறுதியாகவும் இடம்பெறுகிறார். இன்று சமண மதத்தை சுமார் ஆறு மில்லியன் மக்கள் பின்பற்றுகிறார்கள், மற்றும் அவர்கள் பெரும்பாலும் இந்தியாவில் வாழ்கிறார்கள்.

jambira: जम्बिर "Lime." ***ஜம்பீர்.*** "எலும்பிச்சை."

jambu: जम्बु "Rose apple." ***ஜம்பு.*** "நாவல் பழம்."

japa: जप "Recitation." ***ஜபம்.*** வழக்கமாக ஒரு மணி மாலையால் ஜபித்துக் கொண்டு, கவனத்தை ஒருமுகப்படுத்தி தொடர்ந்து ஒரு *மந்திரத்தை* சொல்லும் பயிற்சி. இது கர்வம் மற்றும் அகங்காரம், கோபம் மற்றும் பொறாமை, அச்சம் மற்றும் குழப்பத்தை நீக்க

பரிந்துரைக்கப்படுகிறது. இது மனதை தெய்வீக அட்சரங்களால் நிரப்பி, ஆன்மீக சக்திகளின் தெய்வீக சாரத்தை விழிப்படைய செய்கிறது.

japa *mālā:* "Garland for incantation." **ஜப மாலை.** ஜபம் செய்வதற்கு பயன்படும் மணிமாலை. இது வழக்கமாக *ருத்ராட்சம், துளசி, சந்தனம்* அல்லது படிகத்தில் தயார் செய்யப்பட்டு இருக்கும்.

jātakarma: जातकर्म "Rite of birth." ***ஜாதகர்மா.*** "குழந்தை பிறக்கும் போது நடைபெறும் சடங்கு." மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம்.*

jaṭāmukuṭa: जटामुकुट "Crown of matted hair." ***ஜடாமுகுட.*** சடைமுடியின் மகுடம்.

jāti: जाति "Birth; genus; community or caste." ***ஜாதி.*** "பிறப்பு; இனம்; சமூகம் அல்லது சாதி." மேலும் தகவலுக்கு: *வர்ண தர்மம்.*

jīva: जीव "Living, existing." From *jīv,* "to live." *ஜீவன்.* "வாழ்ந்துகொண்டு இருக்கிற." ஒரு ஆன்மா உடம்பெடுத்த நிலையில், மும்மலங்களில் (*ஆணவம்,* கர்மவினை மற்றும் *மாயை)* கட்டுண்டு இருப்பது. *ஜீவன்முக்தா* என்பது "ஜீவன் உடலில் இருக்கும் போதே முக்திக்கு உரிய பண்பை அறிந்த மற்றும் உணர்ந்த நிலையில் வாழ்வது." மேலும் தகவலுக்கு: *ஆத்மன், ஆன்மாவின் முதிர்ச்சி, புருஷ, ஆன்மா.*

jñāna: ज्ञान "Knowledge; wisdom." ***ஞானம்.*** இது ஆன்மாவின் முதிர்ந்த நிலையை குறிப்பிடுகிறது. இது *குண்டலினி சக்தி பிரம்மரந்திரத்தை* உடைத்துக்கொண்டு பரசிவ என்கிற பிரம்மத்தை உணரும் போது தோன்றும் மெய்யறிவை குறிப்பிடுகிறது. ஞானம் என்பது விழிப்புணர்வைப் பெற்ற மெய்ஞ்ஞான நிலை (*காரண சித்த*) ஆகும். இது சைவ சித்தாந்தத்தின் ஆன்மீக விரிவக்கத்தில் இருக்கும் *சரியை,* கிரியை மற்றும் யோகம் என்ற அடுத்தடுத்த நிலைகளின் பலனாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *கடவுளை உணர்தல், சமாதி, ஆத்ம ஞானம்.*

jñāna pāda: ज्ञानपाद "Stage of wisdom." ***ஞான பாதம்.*** "மெய்யறிவு நிலை." இது ஒவ்வொரு *ஆகமத்தில்* இருக்கும் ஞானப் பிரிவையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *ஞானம், பாதம்.*

jñāna śakti: ज्ञानशक्ति "Knowing power." ***ஞான சக்தி.*** மெய்யறிவின் பிரபஞ்ச சக்தி. மேலும் தகவலுக்கு: *சக்தி, திரிசூலம்.*

jñānendriya: ज्ञानेन्द्रिय "Agent of perception." ***ஞானேந்திரியம்.*** மேலும் தகவலுக்கு: *இந்திரியம்.*

அதிகார வரம்பு (jurisdiction): அதிகார எல்லை.

jyoti: ज्योति "Light." ***ஜோதி.*** "ஒளி."

jyotisha: ज्योतिष From *jyoti,* “light.” “The science of the lights (or stars).” ***ஜோதிடம்.*** இது “ஒளியை,” குறிப்பிடும் ஜோதியில் இருந்து உருவானது. “ஒளிகளில் (நட்சத்திரங்களில்) இருக்கும் அறிவியல்.” கிரகங்களின் இயக்கங்கள் மற்றும் நிலைகளை பொறுத்து, குணங்களை வரையறுத்து மங்களகரமான தருணங்களை நிச்சயித்து, நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை ஆய்வு செய்யும் புலமை மற்றும் பயிற்சியாக இந்துசமய ஜோதிடம் (*ஜ்யோதிஷம்*) விளங்குகிறது. ஜாதகங்களை கணிக்கும் போது, *ஜ்யோதிஷம்* “நிராயன முறையையும்,” மேற்கத்திய ஜோதிடம் “சாயன முறையையும்,” பயன்படுத்துகின்றன.



kadalīphala: कदलीफल “Banana fruit.” ***கதலிபழ***. வாழைப்பழம்.

Kailāsa: कैलास “Crystalline” or “Abode of bliss.” ***கைலாயம்***. “படிகம்" அல்லது “பேரின்பத்தின் இருப்பிடம்.” இந்த இமாலய சிகரம் நான்கு முகப்புக்களுடன் மேற்கு திபெத்தில் அமைந்துள்ளது. இது சிவபெருமான் பூலோகத்தில் வாசம் செய்யும் இடமாகவும் கருதப்படுகிறது. இது இந்துக்கள் மற்றும் திபெத்திய பௌத்தர்களின் புண்ணிய தலமாகவும், அண்டத்தின் மையமாகவும் விளங்கும் மேரு பர்வதத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. சாக்த சமயத்தில் *ஸ்ரீ சக்ர யந்திரத்தின்* (கைலாய சக்கரம் என்றும் அழைக்கப்படுகிறது) ஒரு குறிப்பிட்ட முப்பரிமாண வடிவத்தின் மூலம் கைலாயம் உருவகப்படுத்தப்படுகிறது.

Kailāsa Paramparā: कैलासपरंपरा “Crystaline lineage.” ***கைலாச பரம்பரை***. “படிக பரம்பரை.” இது ஒருமைவாத சைவ சித்தாந்தத்தின் பழங்கால தத்துவத்தை போதிக்கும், நந்திநாத சம்பிரதாயத்தின் ஒரு முக்கிய பிரிவாக, சித்தர்களின் ஒரு ஆன்மீக பரம்பரையாக விளங்குகிறது. இதன் தற்போதைய பிரதிநிதயாக சத்குரு போதிநாத வேலன்சுவாமி பொறுப்பு வகிக்கிறார். மேலும் தகவலுக்கு: *யோகசுவாமி.*

kalaśa: कलश “Pot;” “pitcher,” “jar.” ***கலசம்***. கோயில்கள் மற்றும் வீடுகளில் நடைபெறும் விஷேச *பூஜைகளின்* போது தெய்வத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், மத்தியில் மாவிலையும் தேங்காயும் வைக்கப்பட்டு இருக்கும் நீர் நிரம்பிய பானை, கலசம் என்று அழைக்கப்படுகிறது. கோயில் கோபுரத்தில் கூம்பு வடிவில் இருப்பதும் *கலசம்* என்று அழைக்கப்படுகிறது.

Kali Yuga: कलियुग "Dark Age." ***கலியுகம்***. நமது சூரிய மண்டலம் கடந்து செல்லும் நான்கு கட்டங்களின் தொடர் சுழற்சியில், கலியுகம் கடைசி யுகமாக விளங்குகிறது. அறியாமை சக்தி முழு வீச்சில் செயல்படுகிறது மற்றும் ஆன்மாவில் இருக்கும் பல நுணுக்கமான புலன்கள் தெளிவற்று இருப்பதால், அதை இரவின் இருண்ட பகுதியுடன் ஒப்பிடலாம். மேலும் தகவலுக்கு: *யுகம்*.

kalpavṛiksha: कल्पवृक्ष "Wish-fulfilling tree." ***கல்பவிருட்சம்***. "ஆசையை பூர்த்தி செய்யும் மரம்." இந்து சமய இறையியலில் ஒரு முக்கிய சின்னம்.

kāma: काम "Pleasure, love; desire." ***காமம்***. "மகிழ்ச்சி, அன்பு; ஆசை." கலாச்சார, அறிவுணர்வு மற்றும் உடலுறவில் நிறைவு. *புருஷார்த்தம்* என்கிற நான்கு மனித குறிக்கோள்களில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *புருஷார்த்தம்*.

kamaṇḍalu: कमण्डलु. ***கமண்டலம்***. சந்நியாசிகள் சுமந்து செல்லும் ஒரு சிறிய தண்ணீர் பாத்திரம்.

kapittha: कपित्थ "On which monkeys dwell." ***கபித்த***. விளா மரம். இதன் தாவரவியல் பெயர் *லிமோனியா அமிலசிமா*. இந்தியா மற்றும் இலங்கையின் வறண்ட சமவெளிகளை தனது தாயகமாக கொண்ட இந்த மரம், சாலைகள் மற்றும் வயல்களின் ஓரத்திலும் அவ்வப்போது பழத்தோட்டங்களிலும் வளர்க்கப்படுகின்றன. விளாம்பழத்திற்கு கபடிகை, கபித்தம், பித்தம், கவித்தம், தந்தசடம், விளவு, வெள்ளி என்று வேறு பெயர்களும் உள்ளன. இந்த பழத்தின் ஓடு கெட்டியாக இருக்கும். இது காயாக இருக்கும் போது துவர்ப்பாகவும், பழுத்ததும் துவர்ப்பு மற்றும் புளிப்பு கலந்து இருக்கும். இதில் மருத்துவ குணம் நிரம்பி இருப்பதால், இது பரவலாக *ஆயுர்வேதத்தில்* பயன்படுத்தப்படுகிறது.

kāraṇaloka: "The causal plane," also called Śivaloka. ***காரண லோகம்***. சிவலோகம். அந்தர்லோகத்தின் அதிக ஆழத்தில் உயர்ந்த அதிர்வுடன் இருக்கும் இந்த லோகம், மெய்ஞ்ஞானம் மற்றும் மிகவும் புனிதமான ஆற்றலின் லோகமாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *லோகம்*.

karaṇḍa mukuṭa: करण्ड मुकुट "Basket-shaped crown." **கரண்ட மகுடம்**. "கூடையைப் போன்ற மகுடம்." தெய்வங்கள் அணியும் இந்த மகுடம், கூம்பு வடிவ கூடையைப் போன்று இருக்கும். இந்த மகுடத்தின் மேற்புறம் குறுகலாக இருக்கும். இதன் மேற்பகுதியில் தட்டையான சிறிய உருளைகள் வரிசையாக அமைந்து இருக்கும்.

karma: कर्म "Action, deed." **கர்மா: கர்மவினை**. இது இந்து சிந்தனை வடிவத்தின் மிகவும் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. *கர்மவினை* என்பது 1) ஒரு செயல் அல்லது நடவடிக்கை; 2) காரண காரியத்தின் அடிப்படை; 3) இறுதியாக செய்வதவரையே வந்து சேரும் ஒரு விளைவு அல்லது "செயலின் விளைவு" *(கர்மபல)* அல்லது

“பின்விளைவு” (*உத்தரபல*). வினை விதைப்பவன் வினை அறுப்பான். சுயநலம், வெறுப்பு நிறைந்த செயல்கள் (*பாபகர்மா* அல்லது *குகர்மா*) வேதனையை வழங்கும். நல்ல செயல்கள் (*புண்யகர்மா* அல்லது *சுகர்மா*) அன்பு கலந்த எதிர்வினைகளை கொண்டு வரும். வெளிப்புற பிரபஞ்சத்தின் பொதுமுறை விதியாக புவியீர்ப்பு இருப்பதைப் போன்று, கர்மவினை என்பது உட்புற பிரபஞ்சத்தின் நடுநிலையான மற்றும் சுயமாக நிலைநிறுத்திக் கொள்ளும் விதியாக விளங்குகிறது. *சஞ்சித, பிராரப்த* மற்றும் *க்ரியாமான* என்று கர்மவினை மூன்று வகைப்படும். —**சஞ்சித கர்மா (*sañchita* karma):** (“Accumulated actions.”) “சேகரித்த செயல்கள்.” இந்த ஜென்மம் மற்றும் பூர்வ ஜென்மங்களின் செய்த கர்மவினைகளின் கூட்டுத்தொகை. —***பிராரப்த கர்மா* (*prārabdha* karma):** (“Actions begun; set in motion.”) “தொடங்கப்பட்டு இயக்கத்தில் இருக்கும் செயல்கள்.” பலன்களை வழங்குவதோடு ஒருவரின் உடற்பண்புகள், தனிப்பட்ட மனநிலைகள் மற்றும் நட்புறவுகள் உட்பட இந்த ஜென்மத்தில் இருக்கும் நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை உருவாக்கும் *சஞ்சித கர்மாவின்* பகுதி. —***க்ரியாமான கர்மா* (*kriyamāna* karma):** (“Being made.”) தற்போது உருவாகிக்கொண்டு இருக்கும்.” ஒருவர் தனது சிந்தனை, சொல் மற்றும் செயல்களின் மூலம் இந்த பிறவியில் அல்லது இரு பிறவிகளுக்கு இடையே அந்தர்லோகத்தில் புதிதாக உருவாக்கும் அல்லது *சஞ்சித கர்மாவுடன்* சேர்க்கும் *கர்மவினைகள்*. மேலும் தகவலுக்கு: *மலம், முக்தி, பாபம், ஆன்மா*.

karma yoga: कर्मयोग “Union through action.” **கர்மயோகம்**. சுயநலமற்ற சேவை. மேலும் தகவலுக்கு: *யோகம்*.

karmendriya: कर्मेन्द्रिय “Agent of action.” ***கர்மேந்திரியம்***. மேலும் தகவலுக்கு: *இந்திரியம்*.

karṇavedha: कर्णवेध “Ear-piercing.” ***கர்ணவேத.*** “காது குத்துதல்.” மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம்*.

karpūra: कर्पूर “Camphor.” ***கற்பூரம்***. கற்பூர மரத்தில் இருந்து தயாரிக்கப்படும் இந்த வெள்ளை நிற படிகம், பூஜையில் ஆரத்தியின் போது காண்பிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆரத்தி*.

Kārttikeya: कार्त्तिकेय Child of the Pleiades, from *Kṛittikā*, “Pleiades.” ***கார்த்திகேயன்.*** கார்த்திகை என்ற சொல்லில் இருந்து உருவானது. சிவபெருமானின் இரண்டாவது மகன், விநாயகரின் சகோதரன். இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் உலகெங்கிலும் வழிபடப்படும் ஒரு மகாதேவர். இவர் முருகன், குமரன், ஸ்கந்தா, சண்முகநாதா, சுப்ரமணியா மற்றும் வேறு சில பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். அவர் பக்குவமடையும் செய்முறையின் அங்கமாக, யோகத்தின் மூலம் உள்ளுணர்வை ஒரு தெய்வீக ஞானமாக மாற்றும் சமயத்தை வழிநடத்தும் கடவுளாக இருக்கிறார். அவர்

அறியாமையை அழிக்கும் தனது ஞான சக்தியின் சின்னமாக வேலாயுதத்தை ஏந்தி இருக்கிறார்.

karuṇā: करुणा "Compassionate; loving, full of grace." ***கருணை.*** "இரக்க குணமுள்ள; அன்புள்ளம் கொண்ட, அருள் நிரம்பிய."

கவாய் (Kauai): ஹவாய் தீவுகளில் வடக்கு எல்லையில் இருக்கின்ற தீவு; 555 சதுர மைல்கள், மக்கள் தொகை 50,000.

கவாய் ஆதீனம் (Kauai Aadheenam): 1970 வருடத்தில் சிவாய சுப்பிரமுனியசுவாமியால் தோற்றுவிக்கப்பட்ட மடம் மற்றும் கோயிலின் வளாகம்; சைவ சித்ததாந்த கோயிலின் சர்வதேச தலைமையகம்.

kavacha: कवच "Armor; covering." ***கவசம்.*** தங்கம் அல்லது வெள்ளியில் தெய்வத்தின் முகம், கைகள் அல்லது முழுமையாக அலங்கரிக்கும் மேலுறை.

kavadi: ***காவடி.*** குறிப்பாக தை பூசத்திருவிழாவின் போது பக்தர்கள் முருகப்பெருமான் கோயிலுக்கு சென்று காவடி எடுப்பதாக வேண்டிக்கொள்வார்கள். இந்த காவடியில் முருகப்பெருமானுக்கு *அபிஷேகம்* செய்ய ஒரு நீளமான தடியின் இரு முனைகளிலும் பால், தேன், இளநீர் குடங்கள் தொங்க விடப்பட்டு, மேலே அழகாக அலங்கரிக்கப்பட்டு இருக்கும். திருவிழாவின் போது இந்த காவடிகளின் பெரிய அணிவகுப்பு நடைபெறும். வழக்கமாக தெய்வத்திடம் வேண்டிக்கொள்பவரின் நாக்கு அல்லது உடலின் மற்ற பகுதிகள் ஒரு சிறிய வெள்ளி வேல் அல்லது வளைந்த வெள்ளி ஊசிகளால் குத்தப்பட்டு இருக்கும். மேலும் தகவலுக்கு: *பிராயச்சித்தம்.*

keśānta: केशान्त "Beard-shaving." ***கேஷாந்த.*** "ஆணின் சிகை மற்றும் முகத்தில் இருக்கும் முடியை சவரம் செய்யும் சடங்கு." மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம்.*

khaḍga: खड्ग "Sword." ***கட்க.*** "வாள்." இந்து சிற்ப சாத்திரத்தில் ஒரு வலுவான சின்னம். இது மனித பலவீனங்களை பக்தர்கள் வெற்றிகொள்வதில் துணைபுரிவதற்காக, மகாதேவர்கள் பயன்படுத்தும் சக்தியை சித்தரிக்கிறது.

kheṭaka: खेटक "Shield." ***கேடக.*** கேடயம். இந்த இந்து மத சின்னம் பாதுகாப்பு, தெய்வீக ஆதரவு மற்றும் தர்மம் பராமரிக்கப்படுவதை பிரதிநிதித்துவம் செய்கிறது.

kīrtana: कीर्तन "Praising." ***கீர்த்தனை.*** "போற்றுதல்." இறைவன், மகாதேவர்கள் மற்றும் குருவைப் பற்றிய பக்திப் பாடல்களை ஆடலுடன் பாடிக் கொண்டாடுவதை குறிக்கிறது. பல இந்து சம்பிரதாயங்களில் கூட்டு வழிபாட்டின் ஒரு முக்கிய வடிவமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பஜனை.*

kolam: கோலம். ஒரு வீடு அல்லது கோயிலின் நுழைவாயில் அல்லது சமயச் சடங்கு நடைபெறும் இடத்தில் பாரம்பரிய முறையில் பல வண்ணப்பொடிகளை பயன்படுத்தி

அலங்கார வடிவங்களை வரைதல். இது சமஸ்கிருதத்தில் *ரங்கோலி* என்று அழைக்கப்படுகிறது. அரிசிமாவு பயன்படுத்தி வரையும் கோலங்களில் தண்ணீர் கலந்த செம்மண் மற்றும் சில சமயங்களில் பூக்கள் மற்றும் பல வண்ண பருப்புப் பொடிகள் பயன்படுத்தப்படுகின்றன.

konrai: கொன்றை. கொன்னை. தாவரவியல் பெயர் *காசியா பிஸ்துலா*. இது சிவபெருமானிடம் இருந்து பெருந்திரளாக அருவி போன்று வெளிவரும் பொன்னிற அருளை குறிப்பிடுவதாக இருக்கிறது.

kośa: कोश "Sheath; vessel, container; layer." ***கோசம்***. "உறை; கொள்கலம், பாத்திரம்; அடுக்கு." ஆன்மா என்பது தத்துவரீதியாக, ஒரே சமயத்தில் ஐந்து கோசங்கள் வாயிலாக வெவ்வேறு லோகங்கள் அல்லது உள்பொருளின் வெவ்வேறு நிலைகளில் செயல்படுகிறது. —***annamaya kośa:*** "Sheath composed of food;" ***அன்னமய கோசம்***: "உணவால் உருவான கோசம்." தூல அல்லது காந்த உடல். —***prāṇamaya kośa:*** "Sheath composed of *prāṇa* (vital force);" ***பிராணமய கோசம்***. இது *பிராண* உடல், ஆகாச உடல் அல்லது ஆகாச நகல் என்றும் அழைக்கப்படுகிறது. —***manomaya kośa:*** "Mind-formed sheath;" ***மனோமய கோசம்:*** "மனதால் உருவான கோசம்." கீழ்நிலை சூட்சும உடலாக, "சிந்தனை, விருப்பம், ஆசை" என்பதை குறிக்கும் *மனஸில்* இருந்து உருவாகிறது. சாதாரண சிந்தனை, ஆசை மற்றும் உணர்ச்சியின் உள்ளுணர்வு-அறிவுணர்வு கோசமாக விளங்குகிறது. —***vijñānamaya kośa:*** "Sheath of cognition;" ***விஞ்ஞானமய கோசம்:*** "அறிவெழுச்சி கோசம்." இது மனம் அல்லது அறிவுணர்வு-உள்ளுணர்வு கோசம், மற்றும் ஆன்மீக காந்த கோசம் என்றும் அழைக்கப்படுகிறது. —***ānandamaya kośa:*** "Body of bliss;" ***ஆனந்தமய கோசம்:*** "பேரின்ப உடல்." இது இயலுணர்வு-மெய்ஞ்ஞான கோசம் அல்லது ஆன்மீக-காரண உடலை குறிக்கிறது. *ஆனந்தமய கோசம்* என்பது மற்ற நான்கு வெளிப்புற கோசங்களைப் போன்றது இல்லை. இது *காரண சரீர* என்கிற ஒளி உடல் அல்லது அந்த ஆன்மாவையே குறிக்கிறது. இது *கர்மாஷய* என்கிற இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளின் கர்மவினைகளின் கொள்கலனாகவும் விளங்குகிறது. ஆன்மாவானது ஆதி ஆன்மா என்கிற பரமேசுவரனிடத்தில் *விஷ்வகிராசா* என்கிற இறுதியான அல்லது நிறைவான ஐக்கியமடையும் வரை, *ஆனந்தமய கோசம்* என்பது பல பிறவிகளை தொடர்ந்து எடுத்து பக்குவமடைந்து வருகிறது. அதன் பிறகு *ஆனந்தமய கோசமானது* சிவனின் உடல் அல்லது சிவமயகோசமாக மாறுகிறது.

கால்நடைகள் தங்கும் இடம் (kraal): இது ஆப்பிரிக்க மொழிச் சொல்.

Kṛishṇa: कृष्ण "Black." Also related to *kṛishṭiḥ,* meaning "drawing, attracting." **கிருஷ்ண**. இது "ஈர்க்கும், கவரும்," என்பதை குறிப்பிடும் *கிரிஷ்டியுடனும்* ஒப்பிடப்படுகிறது. இந்துக்கள்

வழிபடும் பல கடவுள்களில் மிகவும் பிரபலமான கடவுள்களில் ஒருவராக விளங்குகிறார். பகவான் ஸ்ரீ விஷ்ணுவின் எட்டாவது அவதாரமாக வைணவர்கள் கிருஷ்ணரை வழிபடுகிறார்கள். இவர் மகாபாரதத்தின் அங்கமாக விளங்கும் *பகவத் கீதையில்* கிருஷ்ண பரமாத்மா என்று போற்றப்படுகிறார். கௌடியா வைணவ சமயத்தில், கிருஷ்ணர் தெய்வங்களின் தலைவனாக விளங்குகிறார்.

kriyā: क्रिया "Action." **கிரியை**. "செயல்." பொதுவாக *கிரியை (காரியம்)* என்பது எந்த ஒரு செயலையும் குறிப்பிடலாம். குறிப்பாக அது சமயம் சார்ந்த செயலாக, அதிலும் குறிப்பாக சடங்குகள் அல்லது விழாக்களை குறிப்பிடலாம். *கிரியை* என்பது *குண்டலினி* எழுச்சியால் உருவாகும் தன்னிச்சையான உடல் இயக்கங்கள் என்று யோக சொல்லியல் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *பாதம்*.

kriyā pāda: क्रियापाद "Stage of religious action; worship." ***கிரியை பாதம்.*** "சமயம் சார்ந்த நடவடிக்கையின் நிலை; வழிபாடு." வழிபாடு மற்றும் பக்தியைக் கொண்டு அமைந்தநிலை, சைவ சித்தாந்தத்தில் சித்தி அடையும் பாதையில் இருக்கும் நான்கு முற்போக்கான நிலைகளில் இரண்டாவதாக இருக்கும் நிலை. மேலும் தகவலுக்கு: *பாதம்*.

kriyā śakti: क्रियाशक्ति "Action power." ***கிரியைசக்தி***: "செயலின் சக்தி." செயலில் இருக்கும் பிரபஞ்ச சக்தி. மேலும் தகவலுக்கு: *சக்தி, திரிசூலம்*.

krodha: क्रोध "Anger." **கோபம்.** *மூலாதாரத்திற்கு* கீழே இரண்டாவது சக்கரமான *விதள* சக்கரத்தின் உணர்ச்சி. இது நரகத்தின் நுழைவாயில் என்று சாத்திரம் விவரிக்கிறது.

kshatriya: क्षत्रिय "Governing; sovereign." சத்திரியன்: "நாடு ஆள்பவர்; அரசர்." சட்டம் இயற்றுபவர்கள், சட்டத்தை அமல்படுத்துபவர்கள் மற்றும் இராணுவ பணியில் இருப்பவர்கள். மேலும் தகவலுக்கு: *வர்ண தர்மம்*.

kshetra: क्षेत्र "Place," "field." ***கேஷத்திரம்.*** கேத்திரம். புண்ணிய தலம். ஒரு சொத்து அல்லது பகுதி. இந்த சொல் பெரும்பாலும் ஒரு புனிதமான இடத்தை குறிப்பிட பயன்படுத்தபடுகிறது.

Kshipra Gaṇapati: क्षिप्रगणपति. ***கூஷிப்ர கணபதி***. இது விநாயகரின் பெயர் மற்றும் ஒரு பாரம்பரிய மூர்த்தி அல்லது உருவத்தை குறிக்கிறது. "விரைந்து செயல்படுபவர்." அவர் தனது திருக்கரங்களில் ஒரு கற்பகவிருட்ச கொடி மற்றும் இரத்தின கலசத்தை ஏந்தி இருக்கிறார்.

Kshipra Prasāda Gaṇapati: क्षिप्रप्रसाद गणपति "The quick rewarder." ***கூஷிப்ரபிரசாத கணபதி.*** "விரைந்து பலன் அளிப்பவர்." ஒரு தர்ப்பைப் புல் ஆசனத்தில் அமர்ந்து இருக்கும் அவர் தனது கைகளில் மாதுளை, அங்குசம், பாசக்கயிறு மற்றும் மேலும் பல ஆயுதங்களை ஏந்தி இருக்கிறார்.

kukarma: कुकर्म “Unwholesome acts” ***குக்கர்மா***. ஒழுக்கமற்ற செயல்கள் அல்லது அதன் பலன்கள். மேலும் தகவலுக்கு: *கர்மவினை. பாபம்.*

kulaguru: कुलगुरु “Family preceptor or teacher.” ***குலகுரு***. *குல குரு* என்பவர் குடும்ப தலைவர்கள் மூலமாக, கூட்டு மற்றும் பெரிய குடும்பங்களுக்கு ஆன்மீக பாடங்களை வழங்குகிறார். அவர் ஒரு சத்குருவாக இருக்கவேண்டும் என்று அவசியமில்லை.

Kulārṇava Tantra: कुलार्णवतन्त्र. ***குலார்ணவ தந்திரம்***. சாக்த சமயத்தின் கௌல பிரிவின் ஒரு முக்கிய சாத்திரம். இதில் இருக்கும் 17 அத்தியாயங்களில் மொத்தம் 2,058 சுலோகங்கள் உள்ளன. அவை குரு-சிஷ்ய உறவுகளை குறிப்பிடும் அத்தியாயங்களுடன் முக்திக்கான வழிகள் மீதும் கவனம் செலுத்துகின்றன.

Kumāra: कुमार “Virgin youth; ever-youthful.” ***குமரன்***. கார்த்திகை பெண்களால் பாலூட்டி சீராட்டி வளர்க்கப்பட்ட கார்த்திகேயனை குறிப்பிடும் இன்னொரு பெயர். இவர் நிரந்தர குமாரனாக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்.*

kumbha: कुम्भ “Water vessel.” ***கும்பம்***. கலசம். தெய்வத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், மத்தியில் மாவிலைகளும் தேங்காயும் வைக்கப்பட்டு இருக்கும் நீர் நிரம்பிய பானை. இது சில இந்து சமய சடங்குகளில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

kumārī: कुमारी “Ever youthful.” ***குமாரி***. குமரி. குறிப்பாக 10-12 வயதில் இருக்கும் ஒரு கன்னிப்பெண்.

kumbhābhisheka: कुम्भाभिषेक “Water-pot ablution.” ***கும்பாபிஷேகம்***. ஒரு புதிய கோயிலில் நடைபெறும் முறையான பிரதிஷ்டை மற்றும் (பன்னிரண்டு வருட இடைவெளியில்) புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கு பிறகு நடைபெறும் குடமுழுக்கு விழா. தலைகீழான குடம் அல்லது *கும்பம்* போல காட்சியளிக்கும் கோயில் கோபுர கலசங்கள் மீது புரோகிதர்கள் புனிதமான கலச நீரை ஊற்றி சடங்குகளை நிறைவு செய்கின்றனர்.

kuṇḍalinī: कुण्डलिनी “She who is coiled; serpent power.” **குண்டலினி**. “சுருண்டு இருப்பவள்; பாம்பின் சக்தி.” இந்த பழங்கால பிரபஞ்ச சக்தி, நம் எல்லோருக்குள்ளும் முதுகுத்தண்டின் அடியில், ஒரு பாம்பை போல முதலில் சுருண்டு இருக்கிறது, மற்றும் யோகப்பயிற்சியின் மூலம், இறுதியில் *சுஷும்னா நாடியில்* எழுச்சி பெறுகிறது. *குண்டலினி சக்தி* எழுச்சி பெறும் போது, அது அடுத்தடுத்த *சக்கரங்களை* விழிப்படைய செய்கிறது. அந்த சக்தி *சஹஸ்ரஹாரத்தின்* மத்தியில், *பிரம்மரந்திரம்* வழியாக துளைத்துக்கொண்டு நுழையும் போது, *நிர்விகல்ப சமாதி* என்கிற ஞானதோயம் தோன்றுகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், சமாதி, நாடி.*

kuṅkuma: कुङ्कुम “Saffron; red.” ***குங்குமம்***. இந்துக்கள் தங்களது நெற்றியில் மூன்றாவது கண்ணில் ஒரு பொட்டு வைக்க பயன்படுத்தப்படும் சிவப்பு நிறப்பொடி. இது மஞ்சள்

மற்றும் சுண்ணாம்பை பயன்படுத்தி உருவாக்கப்படுகிறது. செம்மஞ்சள் நிறத்தில் இருக்கும் ஒரு பூ வகை, குங்குமப்பூ என்று அழைக்கப்படுகிறது. *சாஃப்ரன் குரோக்கசு* என்ற தாவரவியல் பெயருடைய குங்குமப்பூ செடி மற்றும் அது வழங்கும் நறுமண பொருளை குறிப்பிடும் சொல்.

kuttuvilaku: ***குத்துவிளக்கு***. சமஸ்கிருதத்தில் *தீபஸ்தம்பம்* என்று அழைக்கபடும் இந்த விளக்கு கோயில், பூஜை அறை மற்றும் வீடுகளில் காணப்படும். மேலும் தகவலுக்கு: *தீபஸ்தம்பம்*.



laḍḍu: लड्डू. ***லட்டு***. இந்த இனிப்பு வகை தென்னிந்தியாவில் பால், மாவு மற்றும் சக்கரைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது. இது வட இந்தியாவில் கொண்டைக்கடலை மாவு, நெய் மற்றும் சக்கரைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது.

Lakshmī: लक्ष्मी “Mark or sign.” ***லட்சுமி***. வெற்றி அல்லது வளத்தை குறிப்பிடும் “சின்னம்.” சக்தி, நிலமகள், செல்வத்தை வழங்கும் கடவுள், திருமாளின் மனைவி. பெரும்பாலும் ஒரு தாமரை மலர் மீது லட்சமி சித்தரிக்கப்பட்டு இருப்பாள். செல்வம், அழகு மற்றும் அமைதியை வேண்டி பக்தர்கள் லட்சமியை பிரார்த்தனை செய்வார்கள். —***தியான லட்சுமி*** ***(Dhānya Lakshmī):*** *“Bestower of wealth.”* “செல்வத்தை வழங்கும் லட்சுமி.” மேலும் தகவலுக்கு: *அம்மன், சக்தி*.

Lakshmī Gaṇapati: लक्ष्मीगणपति. ***லட்சுமி கணபதி***. இது விநாயகரின் பெயர் மற்றும் ஒரு பாரம்பரிய மூர்த்தி அல்லது உருவத்தை குறிக்கிறது. “செழுமையை வழங்கும் கடவுள்.” அவரை அவரது துணைவியர்களான சித்தி மற்றும் புத்தி சூழ்ந்து இருக்க, கையில் *சுகி* என்கிற ஒரு பச்சைக்கிளியுடன் அமர்ந்து இருக்கிறார்.

Lambodara: लम्बोदर “Large belly.” ***லம்போதர***. “பெரிய வயிறு அல்லது தொந்தி.” *க்ரோதம்* என்கிற கோபத்தை வெற்றிகொண்ட விநாயகரை *முத்கல புராணம்* குறிப்பிடும் பெயர்.

left-handed: *Vāma mārga.* ***வாம மார்கம்.*** ஆச்சாரமான சமூக விதிகளுக்கு புறம்பான வழக்கங்கள் மற்றும் நடத்தை மூலம் உள்ளுணர்வு மற்றும் அறிவுணர்வு எல்லைகளை கடந்து பற்றற்ற நாட்டத்தை வழங்கும் சில தாந்த்ரீக பயிற்சிகளை குறிப்பிடும் சொல். மேலும் தகவலுக்கு: *தந்திர, தாந்த்ரீக, தாந்த்ரீயம்*.

liberation: *Moksha.* **முக்தி**. *பாசத்தின்* பற்றில் இருந்து விடுதலை பெறுதல், இதன் பிறகு ஆன்மா சம்சாரத்தில் (பிறப்பு மறுபிறப்பின் சுழற்சி) இருந்து விடுவிக்கப்படுகிறது. சைவ சித்தாந்தத்தில், *பாசம்* என்பது ஆன்மா வளர்ச்சி அடையாமல் இருக்க, அதை மறுபிறவி சுழற்சியில் கட்டுப்படுத்தும் அல்லது சிறைப்படுத்தும் *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* என்கிற மூவகை தளைகளை குறிக்கிறது. *மோக்ஷம்* என்பது இந்த மூன்று தளைகளின் தடை செய்யும் சக்தியில் இருந்து விடுதலை பெறுவதாகும். இந்த நிலையில் அவை முழுவதுமாக அழிந்து விடுவதில்லை, ஆனால் ஆன்மாவை தடை செய்ய அல்லது பிணைக்க தேவையான வலிமை இல்லாமல் இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *மலம், மோக்ஷம், மறுபிறவி, ஆத்ம ஞானம்.*

līlā: लीला "Play." ***லீலை***. செயல் புரிவதில் எளிமை அல்லது வசதி. சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்ற இறைவனின் தெய்வீக பிரபஞ்ச நாடகத்தை குறிப்பிட பயன்படுத்தப்படும் சொல்.

வழிபாட்டு முறை (liturgy): முறையாக சடங்குகள் செய்ய பரிந்துரைக்கப்பட்ட செய்முறைகள்.

lobha: लोभ "Greed." ***லோபம்***. பேராசை. மனிதன் தனது பாதையில் எதிர்கொள்ளும் முக்கிய தடைகளில் ஒன்று. இதை சுயநல்மின்றி வழங்கும் தானம் மற்றும் பேராசையின்மையின் மூலம் சமாளிக்கலாம். மேலும் தகவலுக்கு: *கஜானன*.

loka: लोक "World, habitat, realm, or plane of existence." ***லோகம்***. "உலகம், வாழ்விடம், பிரபஞ்சம் அல்லது உள்பொருள் இருக்கும் பகுதி." இந்த சொல் "பிரகாசிக்க, கண்ணுக்கு தென்படுகிற" என்பதை குறிக்கும் *லோச் (लोच्)* என்ற சொல்லில் இருந்து உருவானது. வெளிப்பட்ட உள்பொருளின் ஒரு பரிமாணமம்; பிரபஞ்சத்தில் ஒரு பகுதி. ஒவ்வொரு *லோகமும்* ஒரு குறிப்பிட்ட உணர்வின் தொடர்ச்சியை பிரதிபலிக்கிறது அல்லது உள்ளடக்கியுள்ளது. மூன்று அடிப்படை லோகங்கள்: 1) —***Bhūloka:*** "Earth world." ***பூலோகம்***: "லௌகீக உலகம்." ஐம்புலன்களுக்கு புலப்படும் உலகம், இது உலகங்களில் மிகவும் பருமனாக இருப்பதால், இது பரு உலகம் என்றும் அழைக்கப்படுகிறது. இது சிலசமயங்களில் முதல் லோகம் என்று அழைக்கப்படுகிறது. 2) —***Antarloka:*** "Inner" or "in-between world." ***அந்தர்லோகம்***: "உட்புறமாக இருக்கும் உலகம் அல்லது மத்தியில் இருக்கும் உலகம்." இது நுணுக்கமான அல்லது சூட்சும லோகம் என்று அழைக்கப்படுகிறது. இது தூல மற்றும் காரண லோகங்களுக்கு மத்தியில் இருக்கும் பரிமாணமமாகவும், ஆன்மாக்களின் சூட்சும உடல்கள் மறுபிறவிகளுக்கு மத்தியில் அல்லது உறங்கும் போது தற்காலிகமாக தங்கும் இடமாகவும் இருக்கிறது. இது இரண்டாவது லோகம் என்றும் அழைக்கப்படுகிறது. 3) —***Śivaloka:*** "World of Śiva," and of the

Gods and highly evolved souls. ***சிவலோகம்:*** “சிவபெருமான்,” மற்றும் மகாதேவர்கள் மற்றும் உயர்வாக வளர்ச்சி அடைந்த ஆன்மாக்களின் லோகம். அந்தர்லோகத்தின் ஆழத்தில் இருக்கும் காரண லோகம் ஒரு உயர்நிலை அதிர்வுடன் இருக்கிறது, மற்றும் இது மெய்ஞ்ஞான நிலை மற்றும் மிகவும் தூய்மையான சக்திகளின் உலகமாக இருக்கிறது. ஒளியின் ஆன்மீக துகள்களால் சுயமாக பிரகாசிக்கும் உடல்களுடைய ஆன்மாக்கள் வாசம் செய்யும் இந்த லோகம், ஆக்கத்திறன் மற்றும் இயலுணர்வின் லோகமாகவும், குவாண்டம் நிலையில் பிரபஞ்சம் இருக்கும் லோகமாகவும் இருக்கிறது. இந்த லோகத்தில் சிவபெருமானும் மகாதேவர்களும் இயங்கி, அனைத்து லோகங்களின் பரிணாம வளர்ச்சிக்கு அன்புடன் வழிகாட்டி, நிரந்தரமாக பாய்ந்து செல்லும் அருளை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இது *விசுத்த, ஆக்ஞா* மற்றும் *சஹஸ்ரஹாரம்* மற்றும் அதன் மேலிருக்கும் சக்கரங்களின் அதிர்வு விகிதத்துடன் பொருந்தி இருக்கிறது. இது மூன்றாவது லோகம் என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *மூன்று லோகங்கள்.*

சுத்தி செய்தல் (lustration): சடங்கு நடைபெறும் முன்பாக செய்யும் புண்ணியாகவாசனம்.



பேரண்டம் (macrocosm): “பெரிய உலகம்” அல்லது “பிரபஞ்சம்.” மேலும் தகவலுக்கு: *நுண்ணுலகம்-பேரண்டம், மூன்று உலகங்கள்.*

madhukumbha: मधुकुम्भ “Honey vessel.” *மது கும்பம்.* “தேன் கிண்ணம்.”

madhyama vāk: मध्यमवाक् “Intermediate word.” *மத்யம வாக். பரா வாக்* மற்றும் *பஷ்யந்திவாக்கிற்கு* மத்தியில் இருப்பது. மேலும் தகவலுக்கு: *வாக்.*

மதுரை (Madurai): தென்னிந்தியாவின் தமிழ்நாட்டு மாநிலத்தில் இருக்கும் நகரம்; இங்கே மிகவும் பிரம்மாண்டமான சைவ கோயில்களில் ஒன்றான மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் உள்ளது.

mahā: महा. ***மகா.*** இது சிறந்த என்ற பொருளில் ஒரு உரிச்சொல் அல்லது முன்னடை.

Mahā Gaṇapati: महागणपति “The great one.” ***மகாகணபதி.*** ஒரு சக்தியின் துணையுடன் இருக்கும் கணபதி. இந்த பாரம்பரிய *மூர்த்தியின்* கைகளில் ஒரு மாதுளம், நீலநிற அல்லிமலர் மற்றும் இரத்தின கலசம் இருக்கிறது.

Mahābhārata: महाभारत "Great Epic of India." ***மகாபாரதம்***. மகாபாரதம். உலகின் நீளமான இதிகாசம். இந்த கதை இரு அரச குடும்பங்களான, பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களுக்கு இடையே, கி.மு. 1424 வருடத்தில் டில்லிக்கு அருகில் குருக்ஷேத்ரம் என்கிற இடத்தில் நடந்த போரை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்த கதையுடன் தத்துவம், மதம், ஜோதிடம், அண்டவியல், அரசியல் மற்றும் பொருளாதாரம் பற்றிய எண்ணற்ற உபதேசங்களுடன் எளிமையான உண்மைகள் மற்றும் நெறிமுறை கோட்பாடுகள் பற்றிய பல்வேறு விரிவான கதைகளும் முக்கிய கதையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த இதிகாசத்தின் ஒரு அங்கமாக *பகவத் கீதை* விளங்குகிறது. வைணவர்கள் மற்றும் சுமார்த்த சமயத்தை சார்ந்தவர்களால், மகாபாரதம் ஒரு புனித நூலாக மதிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பகவத் கீதை.*

Mahādeva: महादेव "Great shining one; God." ***மகாதேவர்.*** சிவலோகத்தில் தங்களது இயல்பான, சுயமாக பிரகாசிக்கும் உடல்களில் வாழும் சிவபெருமான் அல்லது உயரிய பக்குவத்தை பெற்ற உயிர் சக்திகளை குறிப்பிடுகிறது. சிவபெருமான் தனது முழுநிறைவான நிலையில் ஆதி ஆன்மாவாக, அந்த மகாதேவர்களில் ஒருவராக இருக்கிறார். இருந்தாலும் அவர் மட்டுமே தான்தோன்றியாக விளங்கி, மற்ற மகாதேவர்களின் தாய்-தந்தை மற்றும் விதியாக இருப்பதால், அவர் தனித்தன்மையுடன் தனக்கு உவமை இல்லாதவராக இருக்கிறார். அவர் "பரமேசுவரன்" என்று அழைக்கப்படுகிறார். அவர் ஆதி ஆன்மாவாக இருக்க, மற்ற மகாதேவர்கள் தனிப்பட்ட ஆன்மாக்களாக இருக்கிறார்கள். மேலும் தகவலுக்கு: மகாதேவர்கள், *பரமேசுவரன்*, சிவபெருமான்.

mahākāraṇa: महाकारण The Great Causality." ***மகாகாரண***. வாக்கின் ஆரம்பநிலை. மேலும் தகவலுக்கு: *வாக்.*

mahāparaśu: महापरशु "Great axe." ***மகாபரசு***.

mahāpralaya: महाप्रलय "Great dissolution." ***மகாபிரளயம்***. *மகாகல்பத்தின்* முடிவில், பிரபஞ்சத்தின் முழுமையான அழிவு. நதியில் இருக்கும் நீர் தனது மூலமாக இருக்கும் கடலில் சென்று கலப்பதை போல, மகாபிரளயம் என்பது எல்லா உள்பொருள், காலம், பரவெளி மற்றும் தனிப்பட்ட உணர்வு, எல்லா *லோகங்கள்* மற்றும் அதில் வசிப்பவர்களை சிவபெருமான் தனக்குள் ஒடுக்கிக்கொள்வதை குறிப்பிடுகிறது. அதன் பிறகு சிவபெருமான் மீண்டும் சிருஷ்டிக்கத் தொடங்கும் வரை, அவர் மட்டுமே தனது மூன்று முழுநிறைவான நிலைகளில் இருக்கிறார். மிகவும் நீளமாக இருக்கும் இந்த காலகட்டத்தில், பகுதி அளவில் பல பிரளயங்கள் தோன்றுகின்றன, மற்றும் அப்போது பூலோகம் அல்லது பூலோகமும் அந்தர்லோகமும் அழிக்கப்படுகின்றன.

mahārāja: महाराज "Great king." **மகாராஜா.** இந்திய அரசர். அரசியல் தலைவர் அல்லது (இன்றைய காலத்தில்) ஆன்மீகத் தலைவர்களுக்கு மரியாதையுடன் வழங்கப்படும் பட்டம்.

Mahārāshṭra: महाराष्ट्र. மகாராஷ்டிரம். நவீன இந்தியாவின் மத்தியில் இருக்கும் இந்த மாநிலத்தின் தலைநகரமாக இருப்பது மும்பை (பம்பாய்) மாநகரம். பரப்பளவு 118,717 சதுர மைல்கள், மக்கள் தொகை 63 மில்லியன்.

mahāsamādhi: महासमाधि "Great enstasy." ***மகாசமாதி***. ஒரு மகான், தூல உடலை விட்டு வெளியேறுவதை அல்லது மரணத்தை குறிக்கிறது. இந்த நிகழ்வில் பங்குபெறுவது மிகப்பெரிய வரமாக கருதப்படுகிறது. மேலும் ஒரு மகானின் உடல் கல்லறையில் வைக்கப்படும் புனிதமான இடத்தையும் குறிப்பிடுகிறது. —***மகாசமாதி தினம்*** (***Mahāsamādhi* day**) ஒரு மகான் உயிர் நீத்ததை நினைவுகூரும் நாள். மேலும் தகவலுக்கு: *தகனம், மரணம்*.

mahātala: महातल "Vast netherworld." ***மகாதளம்.*** கீழே ஆறாவதாக இருக்கும் சூட்சும லோகம். மனசாட்சி இல்லாமல் இருக்கும் பகுதி. மேலும் தகவலுக்கு: *சக்கரம்*.

mahātmā: महात्मा "Great soul." **மகாத்மா**. நன்மதிப்பை பெற்று இருக்கும் மக்களுக்கு வழங்கப்படும் கௌரவ பட்டம். இது குறிப்பாக மகான்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆத்மன்*.

mahāvākya: महावाक्य "Great saying." ***மகாவாக்கியம்.*** ஒரு சாத்திரம் அல்லது கடவுளாக கருதப்படும் மனிதர்களிடம் இருந்து வெளிப்படும் சூத்திரம். பலரும் அறிந்த பிரபலமான உபநிடத மகாவாக்கியங்கள் நான்கு உள்ளன. அவை: *பிரஞானம் பிரஹ்ம* ("தூய உணர்வு கடவுளாக இருக்கிறது"–*ஐத்ரேய உ.), அஹம் பிரஹ்மாஸ்மி* ("நான் கடவுள்"–*பிருஹதாரண்யக உ.), தத்-த்வமஸி* ("நீ அதுவாகிறாய்"–*சாந்தோக்ய உ.) மற்றும் அயம் ஆத்மா பிரஹ்ம* ("The soul is God"–*மாண்டூக்ய உ.)*.

Mahodara: महोदर "Big-bellied." ***மகோதர***. "பெரிய வயிறுடன் இருப்பவர். " *மோகம்* அல்லது மாயையை அகற்றும் விநாயகரின் அம்சம்.

mala: मल "Impurity." மலம். "மாசு." சைவ சமயத்தில் பாசம் என்று அழைக்கப்படும் *ஆணவம்*, கர்மவினை மற்றும் மாயை என்ற மூன்று மலங்களை குறிப்பிடப் பயன்படும் ஒரு முக்கியமான சொல். இந்த மலங்கள் ஆன்மாவை கட்டுப்படுத்தி, அது தனது உண்மையான தெய்வீகத் தன்மையை அறிந்து கொள்வதில் தடை ஏற்படுத்துகிறது. மேலும் தகவலுக்கு: *முக்தி, பாசம்*.

mālā: माला "Garland." *மாலை.* இந்த சொல் வழக்கமாக ருத்திரட்சம், *துளசி*, சந்தனம் அல்லது படிகத்தில் செய்த ஜப மாலையை குறிப்பிடுகிறது. மேலும் இது பூமாலையை குறிப்பிடுகிறது.

mamatā: ममता "Egoity, self-interest, selfishness." *மமதை.* "ஆணவம், சுய ஈடுபாடு, சுயநலம்."

manas: मनस् "Mind; understanding." ***மனஸ்.*** "மனம்; புரிதல்." கீழ்நிலை அல்லது உள்ளுணர்வு மனம். இது ஆசையின் இருப்பிடமாக விளங்கி, புலன் உணர்வு கருவிகள் மற்றும் செயல் கருவிகள் என்கிற *இந்திரியங்களை* நிர்வாகம் செய்கிறது. *மனஸ்* என்பது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கற்ற மனமாக விளங்குகிறது. ஆசை, தீர்மானம், சந்தேகம், நம்பிக்கை, நம்பிக்கையின்மை, உறுதியாக இருக்கும் பண்பு, உறுதியாக இல்லாமை, அவமானம், பகுத்தறியும் முறை மற்றும் அச்சம் ஆகியவை *மனஸின்* பண்புகள். இது கீழ்நிலை சூட்சும அல்லது உள்ளுணர்வு-அறிவுணர்வு கோசமாக இருக்கும், *மனோமய கோசத்தின்* புலனாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சாட்சி, இந்திரியம், உள்ளுணர்வு மனம், கோசம், (தனிப்பட்ட) மனம்.*

maṇḍapa: मण्डप From *maṇḍ,* "to deck, adorn." மண்டபம். இது "அலங்கரி" என்பதை குறிக்கும் *மண்ட்* என்ற சொல்லில் இருந்து உருவானது. கோயில் சுற்றுச்சுவர்; கோயில் வளாகம், திறந்த கூடம் அல்லது அறை. ஒரு பெரிய கோயிலில் நுழையும் போது, தொடர்ச்சியான *மண்டபங்களை* கடந்து செல்கிறோம். அதில் ஒவ்வொன்றும் ஒரு பெயரை கொண்டு அமைந்துள்ளது. உ. தா. *முகமண்டபம்*, "கோயிலுக்கு முன்னிருக்கும் மண்டபம்." சில கோயில்களில், *மண்டபங்கள்* ஒரு பொதுவான மையத்தை சுற்றி அமைந்து இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *கோயில்*..

mandira: मन्दिर "Abode." ***மந்திர்.*** ஒரு கோயில் அல்லது சந்நிதி; ஆலயம். மேலும் தகவலுக்கு: *கோயில்.*

Māṇḍūkya Upanishad: माण्डूक्य उपनिषद्. ***மாண்டூக்ய உபநிடதம்***: அதர்வண வேதத்தில் அங்கம் வகிக்கும் இந்த "முக்கிய" *உபநிடதத்தில்* இடம்பிடிக்கும் 12 சுருக்கமான மந்திரங்கள், ஓங்காரத்தை பற்றிய விளக்கத்துடன் விழிப்பு நிலை (*வைசுவானரன்*), கனவு காணும் நிலை (*தைஜஸன்*), கனவுகள் அற்ற நிலை (*பிராஜ்ஞன்*) மற்றும் அதீதமான ஆன்மீக உணர்வு (*துரீய*) என்ற சாட்சியின் நான்கு நிலைகள் (அவத்தைகள்) பற்றிய விளக்கத்தையும் வழங்குகிறது.

maṇipūra* chakra:** मणिपूरचक्र "Wheeled city of jewels." ***மணிப்பூரக சக்கரம். சூரியபின்னலில் இருக்கும் மனஉறுதியின் மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

Manikkavasagar: மாணிக்கவாசகர் "He of ruby-like utterances." இவர் இடைக்காலத்தில் (சுமார் கி.பி. 850) சைவ சமயத்தின் மறுமலர்ச்சிக்கு பணியாற்றிய தமிழ்

சமயக்குரவர்களில் ஒருவர். அவர் தனது அமைச்சர் பதவியை துறந்து துறவறம் மேற்கொண்டார். அவர் எழுதிய *திருவாசகம்,* ஒரு முக்கிய சைவ சித்தாந்த சாத்திரமாகவும், எட்டாவது திருமுறையில் ஒரு அங்கமாகவும் விளங்குகிறது. இது சிறந்த தமிழ் இலக்கியங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இதில் அவர் தனது ஆசைகள், சோதனைகள் மற்றும் யோக சாதனைகளை வெளிப்படுத்தி இருக்கிறார்.

māṃsāhārī: मांसाहारी "Meat-eater." ***மான்சாஹாரி.*** அசைவ உணவு உண்பவர். மேலும் தகவலுக்கு: *சைவ உணவு உண்பவர். சைவ உணவு உண்பவர்.*

mantra: मन्त्र "Mystic formula." **மந்திரம்**. இது பொதுவாக சாத்திரத்தில் இருந்து பெறப்பட்டு, விசேஷமான சக்திகளை கொண்ட ஒரு ஒளி, சொல் அல்லது சொற்றொடர். *பூஜை* செய்யும் போது தெய்வங்களை ஆவாகனம் செய்வதற்கும், ஒரு ஆன்மீக விசைப்பகுதியை உருவாக்குவதற்கும், உரத்த குரலில் *மந்திரங்கள்* ஓதப்படுகின்றன. இத்தகைய *மந்திரங்கள்* மிகவும் பயனுள்ளதாக இருக்க, ஒரு *சத்குரு* தீட்சையின் போது வழங்கப்படவேண்டும்.

mārga: मार्ग "Path; way." ***மார்கம்.*** "பாதை; வழி." இது "நாடுதல்" என்று பொருள்படும் *மார்க்* என்ற சொல்லில் இருந்து உருவானது. மேலும் தகவலுக்கு: *பாதம்.*

Markali Pillaiyar: மார்கழி பிள்ளையார். பிள்ளையார் வடிவில் இருக்கும் விநாயகருக்கு மார்கழி மாதத்தில் (டிசம்பர்-ஜனவரி) நடைபெறும் பண்டிகை. ஆன்மீக சாதனைகள் செய்யும் இந்த மாதத்தில் வழிபாடு, பிரார்த்தனை மற்றும் மற்ற ஆன்மீக வழக்கங்கள் தொடங்கப்படுகின்றன மற்றும் வீடுகள் தினமும் முழுமையாக சுத்தம் செய்யப்படுகின்றன.

லௌகீகம், பொருள்முதல்வாதம் (materialism (materialistic)): பருப்பொருள் மட்டுமே உண்மை என்றும், பருப்பொருளின் இயக்கத்தின் விளைவாக சிந்தனை மற்றும் உணர்ச்சிகள் இருக்கின்றன, மற்றும் தூல உலகைத்தவிர வேறு எந்த உலகமும் இல்லை என்ற கோட்பாடு. மேலும் தகவலுக்கு: *லௌகீகம்.*

பொருள்முதல்வாதி (materialist): தூல உலகில் கிடைக்கும் வசதி, சந்தோஷம் மற்றும் செல்வம் ஆகியவை வாழ்க்கையின் மிகப்பெரிய குறிக்கோள்கள் மற்றும் பருப்பொருள் மட்டுமே உண்மை என்று நம்புபவர்.

mātṛikākshara: मातृकाक्षर. ***மாத்ருகாக்ஷர.*** சமஸ்கிருத எழுத்துக்களில் இருக்கும் ஒரு அட்சரம். இது "சிறிய தாய்" என்று பொருள் தரும் *மாத்ருகா மற்றும்* "அழிக்கமுடியாத, மாறாத" மற்றும் "எழுத்து" என்று பொருள்தரும் *அக்ஷரத்தில்* இருந்து உருவானது.

mātsarya: मात्सर्य "Jealousy." ***மாத்சர்யம்.*** "பொறாமை."

maya: मय "Consisting of; made of," as in *manomaya,* "made of mind." ***மயம்.*** "மனதால் உருவான," என்பதை குறிப்பிடும் *மனோமயம்* என்ற சொல்லில் இருப்பதை போல "உள்ளடக்கிய; கொண்டு உருவான."

māyā: माया From the verb root *mā*, "to measure," "to limit," "give form." ***மாயை.*** இது "அளவிடுதல்," "வரையறுத்தல்," "உருவத்தை வழங்குதல்" என்று பொருள் தரும் *மா* என்ற வேர்சொல்லில் உருவானது. இறைசக்தியின் தோற்றம் அல்லது வெளிப்பாடு பற்றிய கோட்பாடு அல்லது "அற்புதத்தை விளைவிக்கும் சக்தி," "அளவிடுவது." வெளிப்பட்ட உலகம் உருவாக காரணமான, சிவபெருமானிடம் இருந்து வெளிப்பட்ட சாரம். இதனால் படைப்புக்கள் அனைத்தும் மாயை என்று அழைக்கப்படுகிறது. இது பிரபஞ்சத்தின் படைக்கும் சக்தியாக, வெளிப்பாட்டின் அடிப்படையாக விளங்கி, தொடர்ந்து ஆக்கல், காத்தல் மற்றும் கரைத்தல் என்கிற செயல்முறையில் அங்கம் வகிக்கிறது. மேலும் தகவலுக்கு: *லோகம், (பொதுவான) மனம்.*

mayūra: मयूर "Peacock." **மயில்.** இது கார்த்திகேயன் அல்லது முருகப்பெருமானின் வாகனமாக விளங்கி, பிரகாசமான அழகு மற்றும் நமது மதத்தின் புகழை சித்தரிப்பதாக இருக்கிறது. நாகப்பாம்பைப் போன்று கொடிய பாம்புகளை கட்டுப்படுத்தும் இதன் இயல்பு, உள்ளுணர்வு இயல்புகள் மீது ஆன்மா ஆதிக்கம் செலுத்துவதை அல்லது *யோகாப்பியாசத்தில் குண்டலினி* சக்தி கட்டுப்படுத்துவதை சித்தரிப்பதாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன், வாகனம்.*

Mayūreśvara: मयूरेश्वर "Peacock Lord." ***மயூரேஸ்வரர்.*** மகாராஷ்டிராவில் இருக்கும் புனே நகரின் தெற்கே அமைந்து இருக்கும் மோர்காவ் கோயிலில் அருள்பாலிக்கும் விநாயக மூர்த்தி.

வளைந்து நெளிந்து செல்கின்ற (meandering).

meat-eater: *Mānsāhārī.* **அசைவ உணவு உண்பவர்**. மேலும் தகவலுக்கு: *சைவ உணவுக் கோட்பாடு.*

meditation: *Dhyāna.* **தியானம்**. நீடித்த ஒருமுகச் சிந்தனை. தியானம் என்பது அமைதியான, கவனமான, ஆற்றல்நிறைந்த ஒருமுகச்சிந்தனையுடன் இருக்கும் நிலையை குறிப்பிடுகிறது. இந்த நிலையில் சாட்சி ஒரு பொருளின் மீது கவனம் செலுத்துவதால் அல்லது ஒரு குறிப்பிட்ட சிந்தனையுடன் இருப்பதால், உள்ளத்தில் புதிய அறிவு மற்றும் நுண்ணறிவுகள் விழிப்படைகின்றன. மேலும் தகவலுக்கு: *இராச யோகம், யோகம்.*

சூட்சும சக்திகளுடன் தொடர்புகொள்ளும் திறன் (mediumship): அந்தர்லோக சக்திகள் மனிதர்களுடன் தொடர்புகொள்ள ஒரு பாதையாக அமையும் ஒரு நடவடிக்கை அல்லது வழக்கம்.

மாதவிலக்கு (menses): பெண்களுக்கு மாதந்தோறும் வரும் இந்த மாதவிடாய் காலத்தில், இந்து சமய பெண்கள் வழக்கமாக தங்கள் குடும்பத்துடன் மதம் சார்ந்த மற்றும் அன்றாட சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்து ஓய்வு எடுக்கின்றனர்.

ஆலோசகர் (mentor): முறையாக அல்லது இயல்பாக அறிவுறுத்துபவர், போதனை வழங்குபவர்.

ஐக்கியமாதல் (merge): ஒடுங்குவதால் தனித்தன்மை அல்லது அடையாளத்தை இழத்தல். இணைதல்.

ஆன்மா ஐக்கியமாதல் (merger of the soul): மேலும் தகவலுக்கு: *ஆன்மாவின் வளர்ச்சி, விஷ்வகிராசா*.

வளர்ச்சிதை மாற்றம் (metabolism): அன்றாட நடவடிக்கைகளை பராமரிப்பதற்காக, உயிருடன் இருக்கும் அணு அல்லது உயிரினத்தில் நடைபெறும் உடல் மற்றும் வேதியல் செய்முறைகள். வளர்மாற்றம் (பெரிய மூலக்கூறுகளைச் சிறிதாக உடைத்தல்) மற்றும் சிதை மாற்றம் (சக்தியைப் பயன்படுத்தி புரதம், நியூகிளிக் அமிலம் போன்றவற்றை தயாரித்தல்) என்று உயிரினங்களில் இருவகை வேதி வினைகள் நடைபெறுகின்றன.

நுண்ணுலகம்-பேரண்டம் (microcosm-macrocosm): "பெரிய உலகத்தை" ஒப்பிடும் போது "சிறிய உலகம்" அல்லது "மிகச்சிறிய பிரபஞ்சம்." நுண்ணுலகம் என்பது பெரிதாக அல்லது அதிக வெளிப்புறமாக (பேரண்டம்) இருக்கும் ஒன்றின் உட்புற மூலத்தை குறிப்பிடுகிறது. இந்துசமய அண்டவியலில், உட்புற உலகின் ஒரு பேரண்டமாக வெளிப்புற உலகம் விளங்குகிறது. அந்த உட்புற உலகம் வெளிப்புற உலகின் நுண்ணுலகமாக விளங்கி, தூல பிரபஞ்சத்தை காட்டிலும் சூட்சும ரீதியாக பெரிதாகவும் பல்வேறு பாகங்களுடன் இருந்து, ஒரு உயர்ந்த அதிர்வில் மட்டுமல்லாமல் ஒரு மாறுபட்ட அதிர்வுடனும் இயங்குகிறது. பேரண்டத்திற்கு முன்பாக நுண்ணுலகம் தோன்றுகிறது. இதனால் பூலோகத்திற்கு வழிகாட்டும் கோட்பாடு, அந்தர்லோகம் மற்றும் சிவலோகத்தில் இருந்து வருகிறது. தூல உருவத்திற்கு முன்பாக உணர்வு தோன்றுகிறது. *தாந்த்ரீகத்தில்*, தெய்வீக படைப்பு முழுவதற்கும், மனித உடல் நுண்ணுலகமாக கருதப்படுகிறது. பிண்டம் மற்றும் அண்டமாக "நுண்ணுலகம்-பேரண்டம்" உருவகப்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: குவாண்டம், *தாந்த்ரீகம், தத்துவம்*.

ஆயிரம் ஆண்டுகாலம் (millennium). மில்லினியம் என்ற சொல்லின் பன்மை **(millennia)**.

மனம் (ஐந்து நிலைகள்) (mind (five states)): ஐந்து பாகங்களாக இருக்கும் மனதை பற்றிய ஒரு கண்ணோட்டம். —**உணர்வுள்ள மனம் (conscious mind) (***Jāgrat chitta,* "wakeful consciousness"): (*ஜாக்ரத் சித்த*, "விழிப்புள்ள உணர்வு"). அன்றாட வாழ்வில் பெரும்பாலான மக்கள் இயல்பாக விழித்திருந்து சிந்தித்து செயல்படும் மனநிலை. —**அடிமனம்**

(subconscious mind) (*Saṁskāra chitta,* "impression mind") (*ஸம்ஸ்கார சித்த,* "பதிவு செய்யும் மனம்"): இது உணர்வுள்ள மனதிற்கு "அடியில்" இருக்கிறது, மற்றும் இது கடந்தகால பதிவுகள், எதிர்வினைகள் மற்றும் ஆசைகள் என்று அனுபவங்கள் அனைத்தையும் (உணர்வுடன் நினைவக்கூர்ந்தாலும் அல்லது நினைவுக்ககூராவிட்டாலும்) பதிவு செய்யும் இடமாக அல்லது சேமிப்புக்கிடங்காக விளங்குகிறது. மேலும், இது தன்னிச்சையான உடலியக்க செய்முறைகளின் இருப்பிடமாகவும் விளங்குகிறது. —**மறைந்திருக்கும் பண்புகள் மனம் (subsubconscious mind) (***Vāsanā chitta,* "mind of subliminal traits") (*வாசன சித்த*): ஒரே அதிர்வு விகிதத்துடன் இருக்கும் இரண்டு சிந்தனைகள் அல்லது அனுபவங்கள் வெவ்வேறு சமயங்களில் அடியுணர்வுக்குள் அனுப்பப்பட்டு, ஒன்றாக கலந்து, புதிய மற்றும் முற்றிலும் மாறுபட்ட அதிர்வுடன் உருவாகும், அடிமனதின் பகுதி ஆகும். அதன் பிறகு நேர்மறையாக, எதிர்மறையாக அல்லது கலவையாக இருக்கும் இந்த சேகரிக்கப்பட்ட அதிர்வுகளுக்கு ஏற்ப, இந்த அடியுணர்வு உருவாக்கம் வெளிப்புற மனதை சூழ்நிலைகளுக்கு எதிர்ச்செயலாற்ற செய்கிறது. —**மெய்ஞ்ஞான மனம் (superconscious mind)** *(Kāraṇa chitta) (காரண சித்த):* ஒளிமயமான மனம், ஆன்மாவின் எல்லாம் அறிந்த அறிவுணர்வு. இது தனது ஆழமான நிலையில் பராசக்தி அல்லது சச்சிதானந்தம், சிவபெருமானின் தெய்வீக மனமாக இருக்கிறது. —**துணை மெய்ஞ்ஞான மனம் (subsuperconscious mind)** *(Anukāraṇa chitta) (அணுகரன சித்த):* இந்த மெய்ஞ்ஞான மனம் உணர்வுள்ள மற்றும் அடியுணர்வு நிலைகள் வழியாக செயல்பட்டு இயலுணர்வு, தெளிவு மற்றும் நுண்ணறிவுகளை வெளிக்கொண்டு வருகிறது. மேலும் தகவலுக்கு: *சித்த, உணர்வு, சமஸ்காரம்.*

(தனிப்பட்ட) மனம் (mind (individual)): தனிப்பட்ட ஆன்மாக்களின் நுண்ணுலக அளவுகளில் மனம் என்பது உணர்வு மற்றும் நினைவாற்றல், ஆசை, சிந்தனை மற்றும் அறிவெழுச்சியின் புலன்களாக இருக்கிறது. தனிப்பட்ட மனமானது *சித்த,* "மனம், உணர்வு" என்று அழைக்கப்படுகிறது. மூன்று அம்சங்கள் நிறைந்த மனமானது *அந்தகரணம்* (அகக்கருவிகள்) என்று அழைக்கப்படுகிறது. 1) *புத்தி* ("அறிவு, காரண ஆய்வு," உயர்நிலை மனம்); 2) *அகங்காரம்* (நான் என்ற அபிமானம், ஆணவம்); 3) மனஸ் ("கீழ்நிலை மனம், உள்ளுணர்வு-அறிவுணர்வு மனம், ஆசையின் இருப்பிடம்). இந்த மூன்றும் அந்தகரணத்தின் அங்கங்கள் ஆகும்.

மனம் (மூன்று பிரிவுகள்) (mind (three phases)): மனம் என்பது உள்ளுணர்வு, அறிவுணர்வு மற்றும் மெய்ஞ்ஞானமாக இருக்கிறது என்கிற கண்ணோட்டம். —**உள்ளுணர்வு மனம் (*மனஸ் சித்த*) (instinctive mind)** *(Manas chitta):* ஆசையின் இருப்பிடமாக இருந்து ஞானேந்திரியங்கள் மற்றும் கர்மேந்திரியங்களை நிர்வகிக்கிறது. —**அறிவுணர்வு**

மனம் *(புத்தி சித்த)* **(intellectual mind** *(Buddhi chitta)):* சிந்தனை மற்றும் அறிவுடன் தொடர்புடைய கருவி. —**மெய்ஞ்ஞான மனம்** *(காரண சித்த)* **(superconscious mind** *(Kāraṇa chitta)):* இந்த நிலையில் இயலுணர்வு, இரக்க எண்ணம் மற்றும் ஆன்மீக ஆதாரம் ஆகிய பண்புகள் அனுபவிக்கப்படுகின்றன. இதன் மிகவும் புனிதமான சாரமாக எல்லாம் அறிந்து, நீக்கமற இருக்கும் உணர்வாக, யாவும் கடந்து, சுயமாக பிரகாசித்து, எல்லா ஆன்மாக்களுக்கும் பொதுவான தெய்வீக மனமாக இருக்கும் பராசக்தி என்கிற சச்சிதானந்தம் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *உணர்வு, மனம் (ஐந்து நிலைகள்).*

(பொதுவான) மனம் (mind (universal)): மனம் என்ற சொல்லை மிகவும் ஆழமாக ஆய்வு செய்தால், அது நுணுக்கமாக மற்றும் பருமனாக, புனிதமாக மற்றும் சாதாரணமாக இருக்கும் எல்லா பொருட்கள், ஆற்றல்கள் மற்றும் வெளிப்பாடுகளின் கூட்டுத்தொகை என்பது தெரியவரும். அது உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சம் ஆகும். மனம் என்பது *மாயை* ஆகும். அது லௌகீக அமைப்பாக இருக்கிறது. அது ஆத்ம ஞானம் பெற்ற பிறகே ஒருவரால் அறியமுடிகிற அந்த பரமாத்துமா என்கிற பரசிவத்தை தவிர்த்து, மற்ற அனைத்துமாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சித்த, உணர்வு, மாயை.*

அதிசயம் நிகழ்த்துகிற (mirific): "வியக்க வைக்கிற, அற்புதமான."

mlecçha: म्लेच्छ "One who speaks indistinctly (like a foreigner)." ***ம்லேச்ச.*** இந்து கலாச்சாரத்தை பின்பற்றாத ஒருவர். நாகரிகமில்லதவர்.

mada: मद "Arrogance." "அகந்தை." விநாயகரின் *ஏகதந்தா* வடிவம் *மமதையை* வெற்றிகொள்ள துணைபுரிவதாக கருதப்படுகிறது.

modaka: मोदक "Sweets." ***மோதக.*** அரிசிமாவு, பூர்ணம் போன்றவை கலந்த வட்டவடிவ அல்லது கூம்பு வடிவ இனிப்பு வகை. இது விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது. இது மறைஞானரீதியாக சுத்தமான இன்பத்தால் கிடைக்கும் திருப்தியாக இருக்கும் சித்தியை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *கணேஷா.*

modakapātra: मोदकपात्र "Bowl of sweets." ***மோதகபாத்திரம்.*** அன்பான விநாயகருக்கு மிகவும் பிடித்தமான *மோதகமானது,* அனைத்து நல்ல விஷயங்களுடன் குறிப்பாக முக்தியை பிரதிபலிக்கிறது.

moha: मोह "Infatuation, delusion." ***மோகம்.***

moksha: मोक्ष "Liberation." ***மோக்ஷம்*** அல்லது முக்தி. கர்மவினையை கரைத்து, ஆத்ம ஞானம் என்கிற பரசிவத்தை குறிக்கும் நிர்விகல்ப சமாதியை அடைந்ததும், சம்சார என்கிற பிறப்பு இறப்பின் சுழற்சியில் இருந்து பெறும் விடுதலையை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, முக்தி.*

துறவி (monastic): ஒரு ஆண் சந்நியாசி அல்லது பெண் சந்நியாசி. லௌகீக வாழ்க்கையில் இருந்து விலகிய ஒரு ஆண் அல்லது பெண், தனியாக அல்லது ஒரு மடத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து ஆச்சாரமான, சமய ஈடுபாடுள்ள வாழ்க்கை வாழ்வதை குறிக்கிறது. மடத்தில் குடியிருப்பவர் ஒரு *மடவாசி* என்று அழைக்கப்படுகிறார்; சாது என்கிற சொல் ஆண்டி என்கிற சொல்லிற்கு ஓரளவு பொருந்துவதாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சந்நியாசின்.*

அத்வைதம் (monism): "ஒருமை பற்றிய கோட்பாடு." 1) ஒரே ஒரு பரம்பொருள் அல்லது தத்துவம் மட்டுமே இருக்கிறது என்கிற தத்துவ ஞானக் கண்ணோட்டம். 2) உண்மைப்பொருள் என்பது தனித்தனி பாகங்கள் இல்லாத ஒரு ஒருங்கிணைந்த முழுமை என்கிற கண்ணோட்டம். மேலும் தகவலுக்கு: *துவைதம்-அத்வைதம்.*

யதார்த்தம் ஒருமையாக இருக்கிறது என்ற நம்பிக்கையின் வெளிப்பாடு (monistic).

monistic theism: Advaita Īśvaravāda. **அத்வைத ஈசுவரவாதம்**. அத்வைத கோட்பாட்டில், உண்மைப்பொருள் என்பது தனித்தனி பாகங்கள் இல்லாத ஒரு முழுமையாக அல்லது உள்பொருளாக இருக்கிறது. கடவுள் ஒரு உண்மையான, உணர்வுள்ள, தனிப்பட்ட பரமாத்துமாவாக இருக்கிறார் என்பதே கடவுள் நம்பிக்கை ஆகும். ஒருமைவாத இறை நம்பிக்கை என்பது இருத்துருவ கோட்பாடு ஆகும். ஒருமைவாத கடவுள் நம்பிக்கை என்பது இரண்டு முரணான அல்லது ஒன்றையொன்று விலக்கும் பண்புடைய கண்ணோட்டங்களை தழுவியுள்ளது. அத்துடன் ஒருமைவாத கடவுள் நமபிக்கையானது 1) கடவுள் ஒரு தனி உருவை கொண்டிருக்கிறார் என்றும் 2) அவர் படைத்து, எங்கும் வியாபித்து, பிரபஞ்ச உள்பொருள் எல்லாமாக இருக்கிறார் மற்றும் 3) இறுதியில் அவர் எல்லா உள்பொருளையும் கடந்து இருக்கிறார் மற்றும் அடிப்படையில் ஆன்மா இறைவனுடன் ஒன்றாக இருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்கிறது. மேலும் தகவலுக்கு: *அத்வைதம், ஈசுவரவாதம்.*

monotheism: "Doctrine of one God." **ஒரு கடவுள் கோட்பாடு.** இது பல கடவுள்கள் மீது நம்பிக்கை வைக்கும் கோட்பாட்டில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. ஒரு கடவுள் கோட்பாடு என்ற சொல்லானது ஒரு கடவுளை மட்டுமே அங்கீகரிக்கும் "தனிப்பட்ட" (அல்லது சுத்தமான) ஒரு கடவுள் கோட்பாட்டில் (செமிடிக் மதங்களைப் போல) இருந்து, மற்ற கடவுள்களையும் ஏற்றுக்கொள்ளும் "உள்ளடக்கிய" ஒரு கடவுள் கோட்பாடு வரை, பல்வேறு தத்துவ நிலைகளை குறிக்கிறது. பொதுவாக இந்து சமயத்தின் பல்வேறு சம்பிரதாயங்களுக்கு ஒரு பரமாத்துமா மீது இருக்கும் நம்பிக்கை மற்றும் மற்ற மகாதேவர்கள் மீது இருக்கும் மரியாதை மூலம் அவை "உள்ளடக்கிய" ஒரு கடவுள் கோட்பாட்டை சார்ந்து இருக்கின்றன.

mṛidaṅga: मृदङ्ग. **மிருதங்கம்.** இந்த தென்னிந்திய இசைக்கருவி உருளை வடிவில், இருபுறமும் தோலினால் மூடப்பட்டு இருக்கும்.

mṛigi* mudrā:** मृगि मुद्रा "Deer gesture." ***மிருகி முத்ரா. வலது கையின் நடுவிரல், மோதிர விரலை மடக்கி, கட்டை விரலை அதன் முதல் ரேகையில் படும்படி வைக்கவும். மற்ற விரல்கள் நேராக நீட்டி இருக்கும்படி வைக்கவும். இது மானின் தலைப் போன்ற வடிவில் அமைந்து இருக்கும். பூஜையின் போது இந்த முத்திரையில் ஒரு மலரை (மூன்றாவது மற்றும் நான்காவது விரல்களுக்கு மத்தியில் வெளிப்புறமாக) பிடித்துக்கொண்டு நெய்வேத்திய பொருட்கள் மீது நீரை தெளித்து, அவை தெய்வத்திற்கு படைக்கப்பகின்றன.

mudgara: मुद्गर "A hammer or mallet." ***முத்கர***. "ஒரு சுத்தியல்." இது கலை மற்றும் கைத்தொழில்களின் சின்னமாகவும், இந்து சிற்ப சாத்திரத்தில் ஒரு ஆயுதமாகவும் விளங்குகிறது.

mudrā: मुद्रा "Seal." **முத்ரா** அல்லது முத்திரை. இது விரல்கள் மூலம் குறிப்பிட்ட ஆற்றல்கள் அல்லது சக்திகளை வெளிப்படுத்தும் அருள்ஞான நிலைகள் ஆகும். வழக்கமாக நுணுக்கமாக அமைந்திருக்கும் இந்த முத்திரைகள் வழிபாடு (பூஜை), நடனம் மற்றும் யோகத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றன. சில பிரபல முத்திரைகளின் பட்டியல் பின்வருமாறு. 1) அபய முத்திரை (அச்சத்தை தணிக்க உதவும் முத்திரை), இந்த முத்திரையில் விரல்கள் நீட்டிய நிலையிலும், உள்ளங்கை கீழ்நோக்கியும் இருக்கும்; 2) அஞ்சலி முத்திரை (மரியாதை செலுத்தும் முத்திரை) 3) ஞான முத்திரை (இது *சின்* முத்திரை மற்றும் யோக முத்திரை என்றும் அழைக்கப்படுகிறது) சுட்டு விரலால் பெரு விரலின் நுனியைச் சேர்த்து மற்றைய மூன்று விரல்களையும் தனியே நீட்டி உயர்த்திப் பிடித்தல் சின்முத்திரை ஆகும்; 4) *தியான முத்திரை* (தியானம் செய்யும் முத்திரை), இந்த முத்திரையை சுகாசனம் அல்லது பத்மாசனத்தில் அமர்ந்து பயிற்சி செய்யலாம். இந்த முத்திரையில் வலது கையை இடது கையின் மேல் வைத்து, உள்ளங்கைகளை மேல் நோக்கியும், கட்டைவிரல்களை சற்று உயர்த்தியும், அதன் விரல் நுனிகள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டும் இருக்கும். மேலும் தகவலுக்கு: *அபய முத்திரை, அஞ்சலி முத்திரை, ஹட யோகம், நமசுகாரம்.*

mukti: मुक्ति "Release." ***முக்தி.*** மோக்ஷத்தை குறிக்கும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: *மோக்ஷம்.*

mūlādhāra* chakra:** मूलाधारचक्र "Root support center," from *mūla,* "root," and *ādhāra,* "supporting." ***மூலாதார சக்கரம். முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருக்கும் மனோஉணர்வு மையம். இது நினைவாற்றல், காலம் மற்றும் பரவெளியை நிர்வாகம் செய்கிறது.

முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருந்து மண்டை ஓடு வரை அமைந்து இருக்கும், மனிதனின் மனோஉணர்வு நரம்பியல் அமைப்பின் ஏழு நரம்பு பின்னல் அல்லது விசை மற்றும் உணர்வின் மையங்களில் முதலாவதாக இருப்பது. அன்பான விநாயகர் நான்கு இதழ்களைக் கொண்ட *மூலாதாரத்தில்* அமர்ந்து, நினைவாற்றல் மற்றும் அறிவாற்றலை நிர்வகித்து, மேலிருக்கும் ஆறு சக்கரங்களின் வாயில்காவலனாகவும், கீழிருக்கும் ஏழு சக்கரங்களின் காவலனாகவும் இருக்கிறார்.

mūlaka: मूलक "Radish." ***முள்ளங்கி.***

mūrti: मूर्ति "Form; manifestation, embodiment, personification." ***மூர்த்தி*** அல்லது சிலை. "உருவம்; வெளிப்பாடு, உருவகம், ஆளுருவகம்." இது பூஜையின் போது தெய்வத்தின் இருப்பை ஆவாகனம் செய்யும் இறைவனின் சிலை அல்லது விக்ரகத்தை குறிக்கிறது. *மூர்த்திகள்* சிவலிங்கத்தை போன்று அருவச்சிலை (*அவ்யக்த*, "வெளிப்பாடத") முதல் நடராசரைப் போன்று மனித வடிவில் இருக்கும் உருவச்சிலை (*வ்யக்த*, "முழுமையாக வெளிப்பட்ட") வரை பல்வேறு விதமாக உள்ளன. இரண்டிற்கும் இடையில் சிறிதளவு வெளிப்பட்ட சிலை (*வ்யக்தாவ்யக்த*) உள்ளது. உதாரணமாக *முக லிங்கத்தில்*, சிவலிங்கத்தில் சிவனின் முகம் காட்சி அளிக்கிறது. உதாரணத்திற்கு ஆலமரம் மற்றும் *யந்திரங்கள்* மற்றும் *மண்டலங்களைப்* போன்ற வடிவியல் சின்னங்கள் தெய்வத்தை குறிக்கும் மற்ற முறைகள் ஆகும். *சுயம்பு* என்பது மனிதனால் செதுக்கப்படாமல் இயற்கையாக கண்டெடுக்கப்பட்ட மூர்த்தியை குறிக்கிறது. தெய்வீக சிலை அல்லது விக்ரகத்தை குறிப்பிட *பிரதிமா* (நிழல் உருவம்) என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *இஷ்ட தேவதா*.

Murugan: முருகன் "அழகன்." கார்த்திகேயன் தென்னிந்தியாவின் தமிழ்நாடு, இலங்கை மற்றும் வேறு பல இடங்களில் முருகன் என்று அழைக்கப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்*.

mūshika: मूषिक ***மூஷிக***. From *mūsh*, "to steal." மூஞ்சூறு. இந்த விநாயகரின் வாகனம் வழக்கமாக செழிப்புடன் தொடர்புடையதாக இருக்கிறது. மனதில் இருக்கும் ஒவ்வொரு மூலைக்கும், மூஞ்சூறு விநாயகரின் அருளை சுமந்து செல்வதாக ஐதீகம். மேலும் தகவலுக்கு: *விநாயகர்*, *வாகனம்*.



nāda: नाद “Sound; tone, vibration.” ***நாதம்.*** மீமெய்யியல் அடிப்படையில், இது நிரந்தரமான சூட்சும ஒலிகள் ஆகும். இதில் மிகவும் உயர்வானதாக ஆழ்ந்த நிலையில் அல்லது ஒலியில்லாத ஒலியாக இருக்கும் பரநாதம் விளங்குகிறது. இதன் முதல் அதிர்வில் இருந்து படைப்பு வெளிப்படுகிறது. பரநாதத்தில் இருந்து ஓம் என்ற பிரணவ மந்திரமும் *நாதத்தின்* மேலும் பல பரிணாமங்களும் தோன்றுகின்றன. தியானம் செய்பவர் இவற்றை *நாதநாடி* சக்தியாக அனுபவிக்கிறார். மேலும் இவற்றை ஸ்திரமாக உயர்ந்த ஸ்ருதியுடன் இருக்கும் முரல் ஒலியாக, ஒரு தம்புரா, ஒரு மின்சார மின்மாற்றி, ஒரு தேனீக்களின் திரள் அல்லது ஒரு ஸ்ருதி பெட்டியை போன்று நரம்பு மண்டலத்தில் துடிப்பதை கேட்கலாம். உட்புற ஒலிகளை கேட்பது “ஒலி மூலம் வழிபடும்" *நாத உபாசனா*, “உட்புற ஒலியை பண்படுத்தும்" *நாத அனுசந்தான*, அல்லது “ஒலி மூலம் ஐக்கியமாகும்" *நாத யோகம்* என்று அழைக்கப்படும் ஒரு ஆழ்நிலை தியான பயிற்சி ஆகும். வழக்கமாக *நாதம்* என்பது சாதாரண ஒலியையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *ஓம், சிவ உணர்வு.*

nāḍī: नाडी “Conduit;” “river.” ***நாடி.*** இது மனித உடலில் இருக்கும் ஒரு நரம்பு இழை அல்லது நுணுக்கமான (உட்புற) உடல்களில் இருக்கும் சக்தியின் பாதை ஆகும். 72,000 *நாடிகள்* இருப்பதாக கருதப்படுகிறது. இவை சக்கரங்களை ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்துகின்றன. *இடா, பிங்கலா* மற்றும் *சுஷும்னா* ஆகியவை மூன்று முக்கிய *நாடிகள்* ஆகும். —***இடா*** ***(iḍā):*** இது *சந்திர நாடி* என்றும் அழைக்கப்படுகிறது. இது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கிறது. இது கீழ்நோக்கி பாய்ந்து சென்று, உடலின் இடது பகுதியில் நிறைவடைகிறது. இந்த ஓட்டம் பெண்மையின் பண்புடன் இருக்கிறது மற்றும் இது தூல உணர்ச்சி சக்தியின் பாதையாக இருக்கிறது. —***பிங்கலா*** ***(piṅgalā):*** இது *சூரிய நாடி* என்றும் அழைக்கப்படுகிறது. இது நீல நிறத்தில் இருக்கிறது. இது மேல் நோக்கி சென்று, உடலின் வலது புறத்தில் நிறைவடைகிறது. இந்த ஓட்டம் ஆணின் இயல்புடன் அறிவுணர்வு மற்றும் மனதின் சக்தி செல்லும் பாதையாக இருக்கிறது. —***சுஷும்னா*** ***(sushumṇā):*** இது முக்கிய நரம்பு ஓட்டமாக விளங்கி, அடிப்பகுதியில் இருக்கும் *மூலாதார சக்கரத்தில்* தொடங்கி உச்சந்தலையில் இருக்கும் *சஹஸ்ரஹார சக்கரம்* வரை முதுகுத்தண்டு வழியாக பாய்ந்து செல்கிறது. இது குண்டலினி பாதையாக விளங்குகிறது. *மூலாதாரத்தில்* செயலற்று இருக்கும் *குண்டலினி* சக்தி *யோகத்தின்* மூலம் விழிப்படைகிறது மற்றும் அது இந்த பாதையில் *சஹஸ்ரஹார சக்கரம்* வரை ஒவ்வொரு *சக்கரம்* வழியாக எழுச்சி பெறுகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், குண்டலினி, இராச யோகம், தாந்த்ரீகம்.*

nāga: नाग "Serpent," ***நாகம்.*** பெரும்பாலும் நாகப்பாம்பை குறிப்பிடுகிறது; *மூலாதார சக்கரத்தின்* நான்கு இதழ்களில் சுருண்டு இருக்கும் குண்டலினியின் சின்னமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, மூலாதார சக்கரம்.*

nāgapāśa: नागपाश "Snake cord." ***நாகப்பாசம்.*** உயிர் சக்திகள் மீது கட்டுப்பாட்டை பெற்று உள்ளுணர்வை ஆன்மீக பண்பாக உருமாற்றுவதை பிரதிபலிக்கும் விதமாக, இதை விநாயகர் தனது பல்வேறு மூர்த்திகளில் ஒரு இடுப்புப்பட்டை போலவும் பூணூல் *(யக்ஞோபவீதம்)* போலவும் அணிந்து இருக்கிறார்.

nāgasvara: नागस्वर "Snake note." ***நாதசுவரம்.*** இந்த காற்றிசை கருவி, ஆச்சா மரத்தை கொண்டு உருவாக்கப்பட்டு, நீண்ட மரக்குழலுடன் சுமார் மூன்று அடி நீளத்திற்கு இருக்கும். இது ஒபோ இசைக்கருவியை போன்று இருந்தாலும், அதிக கீரிச்சிடும் ஒலியுடன் காதில் ஊடுருவுவதாக இருக்கும். இது வழக்கமாக தென்னிந்தியாவில், இந்து சமய பூஜைகள் மற்றும் திருவிழாக்களில் தவிலுடன் வாசிக்கப்படும்.

naivedya: नैवेद्य. ***நெய்வேத்தியம்.*** கோயில் அல்லது வீட்டுப் பூஜையில் தெய்வத்திற்கு வழங்கப்படும் படையல். இது பூஜையில் முக்கிய அங்கம் வகிக்கிறது. மேலும் தகவலுக்கு: *பிராசதம், பூஜை.*

nakshatra: नक्षत्र "Star cluster." ***நட்சத்திரம்.*** ஜோதிட கணிப்புக்களுக்கு மையமாக இருக்கும் நட்சத்திரங்கள் 27 விண்மீன் குழுக்களாக, பெருவட்டம் அல்லது சூரிய பாதையில் அமைந்து இருக்கின்றன. ஒருவரின் ஜென்ம நட்சத்திரம், அவர் பிறந்த சமயத்தில் சந்திரனுடன் பொருந்தி இருந்த விண்மீன் குழுவை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *ஜோதிடம்.*

namaḥ: नमः ***நம:*** "Adoration (or homage) to." "வணக்கம்." நமசுகாரம்.

Namaḥ Śivāya: नमः शिवाय "Adoration (or homage) to Śiva." ***நமச்சிவாய.*** சைவ சமயத்தின் முக்கிய மந்திரமாக விளங்குகிறது, இது *பஞ்சாட்சரம்* அல்லது "ஐந்து அட்சரங்கள்," என்று அழைக்கப்படுகிறது. *ந* என்பது இறைவனின் மறைக்கும் சக்தி; *ம* என்பது உலகம்; *சி* என்பது சிவன்; *வா* என்பது வெளிப்படுத்தும் சக்தி; *ய* என்பது ஆன்மாவை குறிப்பிடுகிறது. இந்த அட்சரங்கள் தூல உடலையும் குறிப்பிடுகிறது: *ந* என்பது கால்கள், *ம* என்பது வயிறு, *சி* என்பது தோள்கள், *வா* என்பது வாய் மற்றும் *ய* என்பது கண்களை குறிப்பிடுகிறது. இந்த மந்திரம் சைவ சித்தாந்தத்தின் சாரத்தை வெளிப்படுத்தி, முதன்மையான மூன்று வேதங்களின் (*ரிக், யஜூர்* மற்றும் *சாம*) மையத்தில் இருக்கும் *கிருஷ்ண யஜூர் வேதம், தைத்ரிய சம்ஹிதையில்* (4.5.8) காணப்படுகிறது.

nāmakaraṇa: नामकरण "Name giving." நாமகரணம். மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம்.*

namaskār: नमस्कार् "Reverent salutations." ***நமசுகாரம்.*** இது பாரம்பரிய முறைப்படி கைகளை ஒன்றாக குவித்து முத்திரையுடன், வாழ்த்துக்களை தெரிவிப்பது ஆகும். அவ்வாறு வணக்கம் செலுத்தும் போது, கைகள் இதயத்தின் அருகே அல்லது நெற்றி உயரத்திற்கு உயர்த்தப்பட்டு இருக்கும். இது *அஞ்சலி* முத்திரை என்றும் அழைக்கப்படுகிறது.

namaste: नमस्ते "Reverent salutations to you." ***நமஸ்தே***. இது ஒரு வழக்கமான வாய்மொழி வாழ்த்து ஆகும். இது ஒரு *நமஸ்* ஆகும். இதன் பொருள் "தலை வணங்குவது, மரியாதை செலுத்துவது." மேலும் தகவலுக்கு: *நமஸ்காரம்*.

Nandī: नन्दी "The joyful." ***நந்தி.*** "மகிழ்ச்சி." சிவபெருமானின் வாகனமாக விளங்கும் இந்த நந்தி, ஒரு கருப்பு வாலுடன் இருக்கும் வெள்ளை நிற காளை மாடு. இது சிவபெருமானால் கட்டுப்படுத்தப்பட்ட வலுவான உள்ளுணர்வு சக்தியின் சின்னம் ஆகும். நந்தி ஒரு முழுமையான பக்தனாக, மனிதனின் ஆன்மாவாக விளங்கி, சிவபெருமானின் முன்பாக மண்டியிட்டு, அவர் மீது தனது கவனத்தை நிரந்தரமாக ஒருங்கிணைத்துக் கொண்டுள்ளது. அனைத்திலும் சிவபெருமானை காண்பதே, ஒரு *சிவபக்தனின்* குறிக்கோள் மற்றும் இலக்காகும். மேலும் தகவலுக்கு: *வாகனம்*.

Nandinātha Sampradāya: नन्दिनाथसंप्रदय. ***நந்திநாதசம்பிரதாயம்***. மேலும் தகவலுக்கு: *நாத சம்பிரதாயம்*.

Naraka: नरक Abode of darkness. Literally, "pertaining to man." ***நரகம்***. இருண்ட உலகம். "மனிதன் சம்பந்தப்பட்ட," என்பது இதன் பொருள். நரக லோகங்கள். இது மேற்கத்திய நாடுகளின் *ஹெல்* என்ற சொல்லுக்கு சமமானதாக, அந்தர்லோகத்தில் பருமனான பகுதியாக விளங்குகிறது. அரக்கர்கள் மற்றும் இளைய ஆன்மாக்கள் தாங்கள் உருவாக்கிய இருண்ட *கர்மவினைகளுக்கு* தீர்வு காணும் வரை, அவர்கள் தற்காலிகமாக தங்கும் இடமாக விளங்கும் *நரகலோகம்*, ஒரு நெரிசலான மற்றும் வேதனைகள் நிறைந்த இடமாக விளங்குகிறது. இங்கே தாங்கள் முற்பிறவியில் செய்த தவறுகளுக்கு, உயிர்சக்திகள் வேதனையை அனுபவிக்கிறார்கள். *தளம்* என்று அழைக்கப்படும் *நரகலோகம்*, ஏழு கீழ்நிலை *சக்கரங்களின்* உணர்வுடன் தொடர்புடைய ஏழு பகுதிகளை கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. அதன் பட்டியல் இங்கே வழங்கப்பட்டுள்ளது. 1) புட் (Put), "childless" (*அதள சக்கரம்*, "தளம் இல்லாத பகுதியின் சக்கரம்"): அச்சம் மற்றும் சிற்றின்ப வேட்கை (இடுப்புப் பகுதி). 2) அவிச்சி (Avīchi), "joyless" (*விதள சக்கரம்*: "எதிர்மறை பகுதியின் சக்கரம்"): கோபத்தின் மையம் (தொடைகள்). 3) சம்ஹாத (Saṁhāta), "abandoned" (*சுதள சக்கரம்*: "மிகவும் ஆழமான பகுதி"): பொறாமையின் பகுதி (முழங்கால்கள்). 4) தமிஷ்ரா (Tāmisra), "darkness" (*தளாதள சக்கரம்*: "கீழ்நிலை பகுதியின் சக்கரம்"): குழப்பமான சிந்தனை உலகம் (கொண்டைக்கால் பின் தசைகள்). 5) ரிஜிஷா (Ṛijīsha), "expelled" (*ரசாதள சக்கரம்*: "அடிநிலப்பகுதியின் சக்கரம்"): சுயநலத்தின் பகுதி

(கணுக்கால்கள்). 6) குட்மல (Kuḍmala), “leprous” (*மகாதள சக்கரம்:* “அதிக கீழ்நிலையில் இருக்கும் சக்கரம்”): மனசாட்சி இல்லாத நிலையின் பகுதி (பாதங்கள்). இந்த ஆழமான நிலையில் “நரகத்தின்” தீவிரம் தொடங்குகிறது. 7) காகோலா (Kākola), “black poison” (*பாதாள சக்கரம்*, “தீவினையால் பாபம் நிரம்பிய நிலையில் இருக்கும் சக்கரம்”): தீய எண்ணங்களின் பகுதி (உள்ளங்கால்கள்). மேலும் தகவலுக்கு: *நரகம், லோகம், தளம் (தளம் தொடர்பான பதிவுகள் அனைத்தும்)* .

nārikela: नारिकेल “Coconut.” ***தேங்காய்.*** ஆணவத்தை உடைத்து ஆன்மாவில் உள்ளார்ந்து இருக்கும் இனிமையான, சுத்தமான பண்பு வெளிப்படுவதை குறிப்பிடும் வண்ணம், உலகெங்கும் விநாயகர் பிரார்த்தனையின் போது தேங்காய் உடைப்பது ஒரு வழக்கமாக இருக்கிறது. சில பூஜை சடங்குகளின் போது ஒரு தண்ணீர் கலசத்தின் மீது தேங்காயும் அதனை சுற்றி ஐந்து மாவிலைகளையும் வைத்து, அதனை குறிப்பாக விநாயகர் வடிவமாக வழிபடுவதும் வழக்கமாக இருக்கிறது.

Naṭarāja: नटराज “King of Dance,” or “King of Dancers.” ***நடராசர்.*** “நடனத்தின் அரசன்". பிரபஞ்ச நடனம் ஆடும் கடவுள். இந்து சமயத்தின் மிகவும் செழிப்பான மற்றும் தெளிவான சின்னமாக இருக்கும் நடராசர், இருப்பு அனைத்திலும் ஆற்றல், சக்தி மற்றும் உயிராக இருக்கும் ஆதி ஆன்மா, பரமேசுவரனின் உருவிலுள்ள சிவபெருமானை பிரதிநிதித்துவம் செய்கிறார். இது சிவபெருமானிடம் இருந்து வெளிப்படும் மிகமுக்கிய தெய்வீக தன்மையின் நுணுக்கமான நிலையாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *நாதம், பரமேசுவரன், பராசக்தி, பரசிவ.*

Natchintanai: நற்சிந்தனை “Good thoughts.” சத்குருவின் ஆற்றல், சிவபெருமானின் வழிபாடு, தார்மீக பாதை மற்றும் ஆத்ம ஞானம் அடைவதை பற்றி இலங்கை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிவயோக சுவாமி (1872-1964) இயற்றிய கீர்த்தனைகளின் தொகுப்பு.

Nātha: नाथ “Master, lord; adept.” ***நாத.*** இது சைவ-யோக சூட்சும ஞானத்தின் பழங்கால இமாலய பரம்பரையை குறிக்கிறது. வரலாற்று குறிப்பின் படி, இந்த பரம்பரையின் முதல் பிரதிநிதியாக நந்திகேஷ்வர (கி.மு. 250) விளங்கினார். *நாத*-ஆத்மஞானம் பெற்ற வல்லுநர்–இந்த பிரிவுக்கு மிகச்சிறந்த சந்நியாசி ஆசிரியர்களை (அல்லது பக்தர்களை) நியமிக்கிறார். *ஹட* மற்றும் *இராச யோக* தோற்றத்திற்கு நாதர்கள் மூலமாக கருதப்படுகிறார்கள்.

Nātha Sampradāya: नाथसंप्रदाय “Transmitted doctrine (or theology) of the masters.” ***நாத சம்பிரதாயம்.*** *சம்பிரதாயம்* என்பது பாரம்பரியம் அல்லது இறையியலின் ஒரு துடிப்புணர்வுள்ள பிரவாகத்தை குறிப்பிடுகிறது. சைவ சமயத்தின் ஒரு தத்துவ ஞான

மற்றும் *யோக* பாரம்பரியமாக *நாத சம்பிரதாயம்* விளங்குகிறது, மற்றும் இதன் தொடக்கத்தைப் பற்றி தெளிவான தகவல் எதுவும் இல்லை. தற்போது இருக்கும் சைவ சம்பிரதாயங்களில் மிகவும் பழமையான இந்த சம்பிரதாயத்தில், நந்திநாத மற்றும் ஆதிநாத என்று இரண்டு முக்கிய பிரிவுகள் உள்ளன. மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, நாத, சைவ சமயம், சம்பிரதாயம்*.

Nayanar: நாயனார் "One who shows the way." 63 சைவ அடியார்கள்/தமிழ் நாயனார்கள்/நாயன்மார்கள் இருந்ததாக சேக்கிழார் (கி.பி.1140) எழுதிய பெரியபுராணம் குறிப்பிடுகிறது. இவர்களில் சிலர் இல்லறத்தில் ஈடுபட்டு இருந்தார்கள், மற்றும் இவர்கள் சிவபெருமான் மீது இருந்த அதீத பக்தியின் காரணமாக கௌரவிக்கப்பட்டவர்கள், மற்றும் அவர்களது சுயசரிதை முழு நிறைவாக இல்லை. அவர்களில் சிலரது நடவடிக்கைகள் வன்முறை கலந்து, மிகவும் கொடூரமாகவும் இருந்துள்ளது. அவர்களில் பலர் சைவ சித்தாந்த நூல்களின் தொகுப்பான *திருமுறையில்* முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

எதிர்மறை பற்று (negative attachment): (ஒரு தனிப்பட்ட ஆன்மீக உயிர்சக்தியாக, புரிந்துணர்வு மூலம் ஒவ்வொரு அனுபவத்தையும் சமாளித்து, "வாழ்க்கை என்கிற நதியுடன் பாய்ந்து சென்று," தற்காலத்தில் முழுமையாக வாழ்வதை தடுப்பதற்கு காரணமாக விளங்கும்) எதிர்காலம் பற்றிய ஒரு அச்சம், கவலை அல்லது சந்தேகம் அல்லது நிலைத்து இருக்கும் ஒரு கடந்தகால வருத்தம்.

நெர்வைன் (nervine): நரம்புக் கோளாறு தணிவிக்கும் மருந்துப் பொருள். நரம்புத் தளர்ச்சியைத் தணிவிக்கிற.

nīlapadma: नीलपद्म "Blue water lily." ***நீல நிறத்தில் இருக்கும் தாமரை***.

Nirguṇa Brahman: निर्गुणब्रह्मन् "God without qualities." ***நிற்குண பிரம்மம்.*** குணங்கள் இல்லாத பிரம்மம்." மேலும் தகவலுக்கு: *பிரம்மம்*

nityavāk: नित्यवाक् "The eternal Word." **நித்தியமாக இருக்கும் வாக்கு.** ஓங்காரம், வாக், படைப்பின் முதல் தூண்டுதல் பற்றிய வேத ரூபமாக இருக்கும் ஒரு சொற்றொடர். மேலும் தகவலுக்கு: *வாக்*.

niyama: नियम "Restraint." ***நியமம்.*** மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்*.

nondualism: "Not two-ness." இருமையற்ற பண்பு. ஒருமைவாத தத்துவம். மேலும் தகவலுக்கு: *அத்வைதம், அத்வைத ஈசுவரவாதம், வேதாந்தம்*.

Nṛitya Gaṇapati: नृत्यगणपति. *நிருத்த கணபதி.* ஒரு பாரம்பரிய விநாயகர் மூர்த்தியின் பெயர். பொன்னிறத்தில் நான்கு கைகளுடன் காட்சி அளிக்கும் நிருத்த கணபதி, கற்பக விருட்சத்தின் கீழ் மகிழ்ச்சிகரமாக "நடனமாடுகிறார்".

பேணி வளர்த்தல் (nurture): பயிற்சி அளித்தல்; கற்பித்தல் அல்லது வளர்ச்சிக்கு துணை புரிதல்.



இரகசியமான (occult): மறைந்திருக்கிற, இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிற; தீட்சைக்கு பிறகே வெளியிடப்படுகிற.

olai: ஓலை "Leaf." இது பழங்கால இந்தியாவில் புத்தகங்களாக பயன்படுத்தப்பட்டது. இதற்கு பனை மரம் மற்றும் தாளைப்பனை ஓலைகள் பயன்படுதப்பட்டன. வட இந்தியாவில் பிர்ச் மரப்பட்டைகள் பயன்படுத்தப்பட்டன. இந்த நூல்கள் பொதுவாக 2 அங்குல உயரம் மற்றும் 8 அங்குல அகலம் மற்றும் 11 அல்லது 12 அங்குல நீளத்துடன் இருந்தன. இது பொதுவாக கயிற்றில் சுற்றி, ஏதாவது ஒரு நிறத் துணியால் பாதுகாக்கப்பட்டன.

முதிர்ந்த அல்லது பழைய ஆன்மா (old soul): பலமுறை மறுபிறவி எடுத்து, அதிகமான அனுபவத்தை பெற்று இருப்பதால், இளைய ஆன்மாவை காட்டிலும் பாதையில் அதிகமாக முன்னேறி இருப்பவர். முதிர்ந்த ஆன்மாக்களை அவர்களது இரக்கம், அடக்கம் மற்றும் மெய்யறிவின் பண்புகளின் மூலம் அடையாளம் காணலாம். மேலும் தகவலுக்கு: *ஆன்மா*.

Oṁ: ओम् "Yes, verily." **ஓம்.** இந்து தர்மத்தின் மிகவும் புனிதமான மந்திரம்.

Oṁkāra: ओंकार "Impulse of the cosmic sound." ***ஓங்காரம்.*** மூலமாக, ஸ்ருஷ்டிகர்த்தா மற்றும் பிரணவமாக இருக்கும் இறைவனை குறிப்பிடும் பெயர். மேலும் தகவலுக்கு: *ஓம்*.

சர்வவல்லமைமிக்க (omnipotent): எல்லாம் வல்ல இறைவன், எதையும் செய்யத்தக்க.

நீக்கமற (omnipresent): எங்கும் எதிலும் நிறைந்து இருக்கிற.

எல்லாம் அறிந்த (omniscient): வால் அறிவன், எல்லையற்ற அறிவை பெற்ற, சர்வஞன்.

நியமித்தல் (ordain (ordination)): சமய சடங்குகள் அல்லது சூட்சும ஞான தீட்சையின் மூலம் புரோகிதர், மதகுரு அல்லது *சத்குருவை* போன்ற சமயம் சார்ந்த பணியின் அதிகாரம் மற்றும் ஆன்மீக ஆற்றல் தொடர்பான கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வழங்குதல். மேலும் தகவலுக்கு: *தீட்சை*.

கபாலத்தில் இருக்கும் துளை (orifice of Brahman): மேலும் தகவலுக்கு: *பிரம்மரந்திரம்*.



pāda: पाद “The foot (of men and animals); quarter-part, section; stage; path.” ***பாதம்***. “(மனிதர்கள் அல்லது விலங்குகளின்) பாதம்”. நான்கில் ஒரு பகுதி, பிரிவு; நிலை; பாதை. ஆகம நூல்களின் முக்கிய பிரிவுகள் மற்றும் *மோக்ஷத்தை* நோக்கிய பாதையில் அதனுடன் தொடர்புடைய பயிற்சி மற்றும் விரிவாக்கத்தின் நிலைகளை குறிப்பிடும் பெயர்கள். —***சரியை பாதம் (அல்லது மார்க்கம்*** ***(charyā pāda*** (“Good conduct stage”)): “நன்னடத்தை நிலை.” முதல் நிலையானது நேர்மையுடன் வாழ்ந்து, சுயநலமின்றி சேவை செய்து, *கர்ம யோகம்* செய்ய கற்றுக்கொள்வதை குறிக்கிறது. *கிரியையின்* பாரம்பரிய நடவடிக்கைகளில் கோயிலை சுத்தம் செய்தல், விளக்கேற்றுதல் மற்றும் வழிபாட்டிற்கு பூக்களை பரித்தல் போன்றவை அடங்கும். இந்த நிலையில் வழிபாடு பெரும்பாலும் அகநோக்கியாக இருக்கிறது. –***கிரியை பாதம் (அல்லது மார்க்கம்) kriyā pāda*** (“Religious action; worship stage”): “சமயப்பணி; வழிபாட்டு நிலை.” இந்நிலையில் பூஜை மற்றும் தொடர்ந்து தினசரி *சாதனா* செய்வதன் மூலம் பக்தி வளர்க்கப்படுகிறது. *கிரியை பாதத்தில்* தினசரி பூஜை மிகவும் முக்கிய அங்கம் வகிக்கிறது. —***யோக பாதம் (***அல்லது ***மார்க்கம்)*** ***yoga pāda:*** (“Stage of uniting”): “ஐக்கிய நிலை.” *சரியை* மற்றும் *கிரியை மார்க்கத்தில்* பக்குவம் அடைந்த பிறகு, *சத்குருவின்* வழிகாட்டலின் கீழ், ஆன்மாவின் கவனம் அகவழிபாடு மற்றும் *இராச யோகம்* நோக்கி திரும்புகிறது. ஆத்ம ஞானம் குறிக்கோளாக இருக்கும் இந்த தருணத்தில், *சாதனா* மற்றும் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. —***ஞான பாதம் (அல்லது மார்க்கம்) jñāna pāda*** (“Stage of wisdom”): “மெய்யறிவு நிலை.” ஆத்ம ஞானம் பெற்றதும், அந்த ஞானி தனது மீதம் இருக்கும் வாழ்க்கையை மனித நேயத்திற்கு உபதேசங்களை வழங்கி நல்வழிப்படுத்துவதில் செலவிடுகிறார். இந்நிலை “நேர்மையான பாதை,” சன்மார்க்கம் என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஞானம், யோகம்*.

pāda pūjā: पादपूजा “Foot worship.” ***பாத பூஜை***. இது பாரம்பரிய முறைப்படி குருவின் பாதுகை அல்லது திருவடி வழிபாட்டை குறிப்பிடுகிறது. இந்த வழிபாட்டின் போது திருவடிகளை நீராட்டி மஞ்சள் குங்குமமிட்டு பழங்கள் மற்றும் பூக்கள் நெய்வெத்தியம் செய்யப்படுகின்றன. பூஜை முடிந்த பிறகு, அவருடைய பாதங்களை கழுவிய நீர் தீர்த்தமாகவும், நெய்வெத்திய பொருட்கள் பக்தர்களுக்கு பிரசாதமாகவும் வழங்கப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *குரு, குரு பக்தி, பாதுகை, பிரசாதம், உச்சிஷ்ட*.

padma: पद्म. ***பத்ம.*** தாமரை மலர். *நெலும்போ நியூசிபெரா* என்பது இதன் தாவரவியல் பெயர். இது ஆன்மீக வளர்ச்சி மற்றும் சக்கரங்களின் சின்னமாக விளங்குகிறது. இது சேற்றில் வளர்ந்து, நிறைவான சுத்தம் மற்றும் மேன்மையை அடைவதால், இது ஆன்மீக விரிவாக்கத்திற்கு ஒரு பொருத்தமான சின்னமாக விளங்குகிறது.

padmāsana: पद्मासन "Lotus posture." ***பத்மாசனம்***. இது மிகவும் பிரபலமான *ஹட யோகாசனமாகவும்*, நீடித்த தியானத்திற்கு சிறந்த அங்கஸ்திதியாகவும் விளங்குகிறது. இந்த நிலையில் கால்கள் குறுக்காகவும், உள்ளங்கால்கள் மேல்நோக்கியும் அமைந்திருந்து, ஒரு தாமரை மலர் போல காட்சி அளிக்கும். இந்த நிலையில் அறிவுணர்வு-மனவெழுச்சி சக்திகள் சமநிலை பெற்று அமைதியாக இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *இராச யோகம், யோகம்*.

pādukā: पादुका "Sandals." ***பாதுகை***. ஸ்ரீ *பாதுகை* என்பது சத்குருவின் திருவடிகளாகவும் குருவின் பாரம்பரிய சின்னமாகவும் விளங்கி மரியாதைக்குரிய அவரது பாதங்களை பிரதிநிதித்துவம் செய்து, அருளின் மூலமாக வழிபடப்படுகிறது. *பாதுகை* என்பது வீரசைவத்தில் பக்தனை வெளிப்புற தாக்ககங்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் எட்டு ஆவரணங்களில் (*அஷ்டாவரணம்*) ஒன்றாக விளங்குகிறது. சிவலிங்கம் அல்லது குருவின் பாதங்களை சம்பிரதாய முறைப்படி கழுவிய நீரை தீர்த்தமாக குடிக்கும் வழக்கத்தை இந்த ஆவரணம் குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *குரு பக்தி, பிரசாதம், சத்குரு, உச்சிஷ்ட*.

panasa phala: पनसफल. **பலாப்பழம்**.

pañchabhūta: पञ्चभूत "Five elements." ***பஞ்சபூதங்கள்***. நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாசம். இது *மகாபூதா* என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *இந்திரியம், தத்துவம்*.

Pañcha Gaṇapati: पञ्चगणपति. ***பஞ்ச கணபதி.*** ஐந்து முகங்களைக் கொண்ட விநாயகர் மூர்த்தியின் பெயர். குறிப்பாக பஞ்ச கணபதி பண்டிகையின் போது, இந்த உருவில் இருக்கும் விநாயகருக்கு பூஜைகள் நடைபெறுகின்றன. டிசம்பர் 20-25 வரை நடைபெறும் இந்த விழாவின் போது, பரிசுகள் பரிமாறிக் கொள்ளப்பட்டு, கொண்டாட்டங்களுடன் தனிப்பட்ட உறவுகளில் ஒற்றுமையை புதுப்பிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

pañcha* kriyā(s):** पञ्चक्रिया "Five duties." ***பஞ்ச கிரியைகள். "ஐந்து கடமைகள்." மேலும் தகவலுக்கு: *பஞ்ச நித்திய கர்மா(க்கள்)*.

Pañchākshara Mantra: पञ्चाक्षरमन्त्र "Five-syllabled incantation." ***பஞ்சாட்சர மந்திரம்***. இது நமச்சிவாய என்கிற புனிதமான சைவ சமய மந்திரத்தை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *நமச்சிவாய*.

pañchāṅga: पञ्चाङ्ग "Five limbs." ***பஞ்சாங்கம்***. "ஐந்து அங்கங்கள்." திதி, நட்சத்திரம், கரணம், யோகம் மற்றும் வாரம் என்று ஐந்து அடிப்படை அங்கங்களைக் கொண்ட பாரம்பரிய இந்து நாட்காட்டி. புரோகிதர்கள், ஜோதிடர்கள் மற்றும் சாதாரண மக்கள் பல்வேறு வகையான நடவடிக்கைகளை செய்வதற்கு மங்களகரமான நேரத்தை தீர்மானிக்க பஞ்சாங்கத்தை பயன்படுத்துகிறார்கள்.

pañcha nitya karma(s): पञ्चनित्यकर्म "Five constant duties." ***பஞ்ச நித்திய கர்மா(க்கள்).*** 1) *தர்மம்* (நற்பண்புகளுடன் வாழ்தல்) 2) *உபாசனை* (வழிபாடு) 3) *உத்சவம்* (புனிதமான நாட்கள்) 4) *தீர்த்த யாத்திரை* (புனித பயணம்) மற்றும் 5) *சம்ஸ்காரங்கள்* (புனிதமான சமயச்சடங்குகள்) என்ற ஐந்தும் இந்துக்களுக்கு மதம் தொடர்பான அனுட்டானங்களின் ஒரு பாரம்பரிய விதிமுறையாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *தர்மம், திருவிழா, தீர்த்த யாத்திரை, சமஸ்காரம்*.

pandit *(paṇḍita):* पण्डित "Learned one." **பண்டிதர்**. ஒரு அறிஞர் அல்லது இறையியல் வல்லுனர் மற்றும் தத்துவம், வழிபாட்டு முறை, தர்ம சாத்திரம் மற்றும் சேக்ரெட் சயின்ஸ் போன்றவற்றில் தேர்ச்சி பெற்ற நபர்.

panentheism: "All-in-God doctrine." **"எல்லாம் இறைவனுக்ககுள் அடங்கிருக்கிறது என்ற கோட்பாடு."** இறை இருப்பின் அங்கமாக பிரபஞ்சம் இருக்கிறது என்ற கண்ணோட்டம். இது "எல்லாம் இறைவனாக இருக்கிறது" என்ற கோட்பாட்டில் (pantheism) இருந்து மாறுபட்டு இருக்கிறது. இந்த கோட்பாடு இறைவனை முழு யதார்த்தத்துடன் அடையாளம் காண்கிறது. இதற்கு மாறாக, "எல்லாம் இறைவனுக்ககுள் அடங்கிருக்கிறது என்ற கோட்பாடு" (panentheism), இறைவன் உலகெங்கும் வியாபித்து, அதை கடந்தும் இருப்பதாக கருதுகிறது. அவர் உள்ளார்ந்தும் யாவும் கடந்த நிலையிலும், ஒப்பீட்டு அளவிலும் முழுமையாகவும் இருக்கிறார். இவ்வாறு எதிர்ப்பதங்களை தழுவி இருப்பதை (dipolar) இருதுருவம் என்று அழைக்கப்படுகிறது. இதைப் பின்பற்றுபவருக்கு, இறைவன் அனைத்திலும் இருக்கிறார் மற்றும் எல்லாம் இறைவனுக்குள் இருக்கிறது. இந்த கோட்பாடு அத்வைத ஈசுவரவாதம் என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *துவைதம்-அத்வைதம், அத்வைத ஈசுவரவாதம்*.

இந்து சமயத்தின் முப்பத்தி முக்கோடி தேவர்கள் (pantheon).

pāpa: पाप "Wickedness; பாபம், crime." 1) தீய அல்லது கொடிய. 2) தவறான செயல். 3) தவறு செய்ததால் உருவான குறை. *பாவம்* என்பது சாதாரண சட்ட மீறலில் இருந்து திட்டமிட்ட

கொலை போன்ற மிகவும் கொடிய குற்றங்கள் வரை, சகலவிதமான தவறுகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு பாவமும் அதன் *கர்மவினையின்* விளைவு, *கர்மபலம்* என்கிற "செயலின் விளைவை," சுமந்து செல்கிறது, மற்றும் அந்த *பாவத்திற்கு* பரிகாரம் செய்ய *சாத்திரங்கள்* குறிப்பிட்ட பிராயசித்தங்களை விளக்கிக் கூறியுள்ளது. மேலும் தகவலுக்கு: *தீவினை, கர்மவினை, பிராயச்சித்தம், புண்ணியம், பாபம்*.

Paramātman: परमात्मन् "Supreme Self," or "transcendent soul." ***பரமாத்துமன்.*** பரசிவம், முழுமுதற்பொருள், ஒவ்வொரு ஆன்மாவின் பர ஆத்மனாக விளங்குகிறார். இது பரசிவம், பராசக்தி மற்றும் ஆனந்தமய கோசம் என்கிற ஆன்மாவின் மூன்று அம்சங்களை உள்ளடக்கிய ஆத்மனுக்கு நேர்மாறாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *பரசிவம், பரமாத்துமா, ஆன்மா*.

Parameśvara: परमेश्वर "Supreme Lord or Ruler." ***பரமேசுவரன்***. சிவபெருமானின் இந்த மூன்றாவது முழுமையில், மிகப்பெரிய மகாதேவராக, சிவ-சக்தியாக, பிரபஞ்சத்தின் அன்னையாக இருக்கிறார். சிவபெருமான் இந்த முழுமையில் தனிநபராக, தாய்-தந்தை கடவுளாக, உடல், தலை, கை, கால்கள் போன்றவற்றுடன் செயல்படும், விருப்பம் தெரிவிக்கும், ஆசிர்வதிக்கும், *தரிசனம்* வழங்கும், வழிகாட்டும், படைக்கும், காக்கும், மீண்டும் ஒடுக்கிக்கொள்ளும், மறைக்கும் மற்றும் ஞானோதயம் வழங்கும் ஒரு மனிதனாக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *நடராசர்*.

அதிமுக்கியமான, மிகவும் உயர்வான (paramount).

paramparā: परंपरा "Uninterrupted succession." ***பரம்பரை***. மேலும் தகவலுக்கு: *குரு பரம்பரை*.

Parārtha Pūjā: परार्थपूजा "Public liturgy and worship." ***பரார்த்த பூஜை***. "உலக மக்களின் நலனை வேண்டி கோயில்களில் நடைபெறும் வழிபடும்." மேலும் தகவலுக்கு: *பூஜை*.

Parāśakti: पराशक्ति "Supreme power; primal energy." ***பராசக்தி.*** "மிகப்பெரிய சக்தி; முதன்மையான சக்தி." இது சிவபெருமானின் இரண்டாவது முழுமையாக இருக்கிறது. இதில் அவர் தனிநபராக இல்லாமல் உள்ளார்ந்து, எங்கும் எதிலும் வியாபிக்கும் உருவத்துடன், தூய உணர்வாக மற்றும் இருப்பு அனைத்திற்கும் முதன்மை சாரமாக விளங்குகிறார். பராசக்தி–சச்சிதானந்தம் ("தூய இருப்பு-உணர்வு-பேரின்பம்"), ஒளி, அமைதி, தெய்வீக மனம், மெய்ஞ்ஞான நிலை மற்றும் வேறு பல விளக்கமான பெயர்களும் உள்ளன. பராசக்தியின் சித்தி *சவிகல்ப* சமாதி என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *சிவபெருமான்*.

Paraśiva: परशिव "Transcendent Śiva." பரசிவம். யாவும் கடந்து இருக்கும் சிவபெருமான் பரமாத்துமாவாக, சிவபெருமானின் முதல் முழுமையாக, முழுமுதற்பொருளாக இருக்கிறார். பரசிவம் என்பது உணர்வால் கிரகிக்கும் சக்தி, காலம், உருவம் மற்றும்

பரவெளியை கடந்து விளக்கமுடியாததாக இருக்கும் அந்த பரம்பொருளை குறிக்கிறது. இந்த *சித்தியை* பெறுவதே ஆத்மஞானம் அல்லது *நிர்விகல்ப சமாதி* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *சமாதி, சிவபெருமான்*.

paraśu: परशु "Axe." ***பரசு.*** "கோடாரி."

paraśvadha: परश्वध "Battleaxe." ***பரஸ்வத.*** "குந்தாலி."

Paravāk: परवाक् "The Primal Word." ***பரவாக்.*** "ஓங்காரம்." மேலும் தகவலுக்கு: *வாக்*.

Pārvatī: पार्वती "Mountain's daughter." ***பார்வதி.*** "மலை அரசனின் மகள்." சிவபெருமானின் துணைவியார். பூமித்தாயை குறிப்பிடும் இன்னொரு பெயர். வலிமை, ஆரோக்கியம் மற்றும் மாசுகளை நீக்கி தூய்மை நிலை அடையவேண்டும் என்று பார்வதியிடம் பிரார்த்திக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *அம்மன், சக்தி*.

pāśa: पाश "Tether; noose." ***பாசம்.*** இது வெளிப்பட்ட மற்றும் வெளிப்படாத இருப்பு அனைத்தையும் குறிப்பிடுகிறது. இது ஆன்மாவை பின்னிப்பினைத்து அல்லது கட்டுப்படுத்தி, அந்த ஆன்மா தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்த முடியாதபடி தடுக்கிறது. பாசம் என்பது *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* என்கிற மும்மலங்களை கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *முக்தி, மலம், பதி-பசு-பாச*.

Pāshāṇadāraṇa: पाषाणदारण "Pick axe." ***பாஷாணதாரண.*** "கொத்துக் கோடாரி."

paśyānti vāk: पश्यन्ति वाक् "The word that perceives." ***பஷ்யந்தி வாக்.*** "புலன்களால் உணரும் வாக்." மேலும் தகவலுக்கு: *வாக்*.

pātāla: पाताल "Fallen or sinful region." ***பாதாளம்***. இது *மூலதாரத்திற்கு* கீழே ஏழாவது *சக்கரமாக*, உள்ளங்கால்களில் மையங்கொண்டு இருக்கிறது. இது *காகோலம்* ("கருப்பு விஷம்") அல்லது *பாதாளம்* என்று அழைக்கப்பட்டு, பூமிக்கு கீழே இருக்கும் ஏழாவது மற்றும் கீழ்நிலை சூட்சும நரகலோகத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. இந்த பிரபஞ்சத்தில் தவறாக வழிநடத்தப்பட்ட ஆன்மாக்கள் எந்த ஒரு காரணமும் இல்லாமல் அழிவு, சித்ரவதை மற்றும் கொலை செய்கிறார்கள். பாதாளம் என்பது பொதுவாக நரகலோகத்தை குறிப்பிட்டு, *நரகம்* என்பதற்கு சமபொருட்சொல்லாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், லோகம், நரகம்*.

Patañjali: पतञ्जलि "Possessed of reverence." ***பதஞ்சலி.*** இவர் ஒரு சைவ சமயத்தை சேர்ந்த நாத சித்தர் (கி.மு. 200). இவர் மனதின் சுத்திகரிப்பு, கட்டுப்பாடு மற்றும் ஆழ்ந்தநிலை மூலம் ஞானோதய பாதையை விவரித்து, பழங்கால *யோக* தத்துவத்தை ஒழுங்கப்படுத்தியுள்ளார். இது *யோக தரிசனம்* என்று அழைக்கப்பட்டு, இந்து தர்மத்தின் ஆறு பாரம்பரிய தத்துவ அமைப்புக்களில் (*தரிசனங்கள்*) ஒன்றாக திகழ்கிறது. அவர் எழுதிய நூல்களில் மிகவும் சிறந்ததாக விளங்கும், *யோக சூத்திரங்கள்* சுமார் 200

சூத்திரங்களை கொண்டுள்ளது, மற்றும் அது *அஷ்டாங்க* (எட்டு-அங்கங்கள்), *இராச* (அரசரை போன்ற) அல்லது *சித்த* (முழுமையான) *யோகத்தை* விளக்கிக் கூறுகிறது. இது தியான *யோகத்தில்* இன்றும் பழமையான மற்றும் முன்னோடியான நூலாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *இராச யோகம், யோகம்*.

pāṭhaśāla: पाठशाल "Place of lessons." பாடசாலை. கோயில் புரோகிதர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு பள்ளி.

Pati: पति "Master; lord; owner." ***பதி***. "தலைவன்; கடவுள்." அக்கறை செலுத்தும் அரசனாக மற்றும் உதவி செய்யும் வழிகாட்டியாக, ஆன்மாக்களுடன் சிவபெருமானுக்கு இருக்கும் வலுவான உறவை, இந்த பெயர் குறிப்பிடுவதாக இருக்கிறது. இந்த பட்டம் சைவ சித்தாந்தத்தில் மாடு மேய்க்கும் இடையன் *(பதி)*, மாடுகள் (*பசு*, ஆன்மாக்கள்) மற்றும் மாடுகளை கட்டும் கயிறு (*ஆணவம்*, *கர்மவினை* மற்றும் *மாயையை* குறிப்பிடும் *பாசம்*) என்கிற ஒப்புமையின் அங்கமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பதி-பசு-பாச*, *சிவபெருமான்*.

Pati-paśu-pāśa: पति पशु पाश Literally: "master, cow and tether." *பதி-பசு-பாசம்*. இதன் பொருள்: "தலைவன், மாடு மற்றும் கயிறு." சைவ சித்தாந்த கோட்பாட்டில் மூன்று அடிப்படை பிரிவுகள் (*பத்தார்த்த*, அல்லது *தத்துவத்ராயி*) இருக்கின்றன. அவை: இறைவன், மனிதன் மற்றும் பிரபஞ்சமாக இருக்கும் தெய்வீகத்தன்மை, ஆன்மா மற்றும் உலகம் ஆகும். இவை சூட்சும ரீதியாகவும் நுணுக்கமாகவும் ஒன்றோடொன்று தொடர்புடைய ஒற்றுமையில் இருப்பதாக தென்படுகின்றன. *பதி* என்பது கடவுளை குறிக்கிறது, மற்றும் ஒரு மாட்டு இடையனாக கற்பனை செய்யப்பட்டுள்ளது. *பசு* என்பது ஆன்மாவை குறிக்கிறது, மற்றும் இது ஒரு பசுமாடாக கற்பனை செய்யப்பட்டுள்ளது. *பாசம்* என்பது மிகவும் முக்கியமான சக்தி அல்லது கயிறாக இருக்கிறது, மற்றும் இதன் மூலம் இறைவன் ஆன்மாக்களை மெய்ப்பொருளின் பாதையில் அழைத்து வருகிறார். மேலும் தகவலுக்கு: *பாசம், சைவ சித்தாந்தம், ஆன்மா*.

pātra: पात्र Worthy; literally, a "receptacle" as of a drinking vessel. ***பாத்திரம்***. தகுதியுடைய. சேமிக்கும் பாண்டம். ஏற்றுக்கொள்ள தகுதியுடன் இருக்கும் நிலை.

தந்தை வழி அல்லது மூதாதையர் வழிப் பெயர் ***(patronymic)***.

pāyasa: पायस– "Prepared with milk." **பாயசம்**. பால், அரிசி, மரவள்ளி கிழங்கு, சர்க்கரை அல்லது வெல்லம் கொண்டு தயார் செய்யும் ஒரு இனிப்பு வகை.

penance: *Prāyaścitta*. Atonement, expiation. **பிராயசித்தம்**. பரிகாரம், விமோசனம். கடந்தகாலத்தில் செய்த ஒரு செயலுக்கு எதிர்பார்க்கப்படும் எதிர்வினையை தணிக்க அல்லது பயனற்றதாக்க அர்ப்பணிப்பு *(பக்தி)*, தவம் *(தபஸ்)* அல்லது ஒழுக்கத்துடன்

(சுக்ருத்திய) மேற்கொள்ளப்படும் ஒரு *கிரியை* (நடவடிக்கை). தவறான செயல்கள் *(குகர்மா)* மூலம் ஒருவருக்கு உருவான *கர்மவினையின்* சுமையை குறைக்க, ஒருவர் தனக்குத்தானே இழைத்துக்கொள்ளும் அசௌகரியமான *கர்மவினையே* தவம் ஆகும். இதில் 108 முறை நமஸ்காரம் செய்தல், உபவாசம், தன்னலமறுப்பு, அல்லது *காவடி எடுத்தல்* (மக்களோடு சேர்ந்து செய்யும் தவம்) மற்றும் சில தீவிரமான விரதங்கள், அல்லது *தபஸ்* போன்றவை அடங்கும். மேலும் தகவலுக்கு: *தீவினை, காவடி, பாபம்.*

Periyapurāṇam: பெரிய புராணம். *திருமுறையில்* பன்னிரண்டாவது புத்தகம். தமிழ்நாட்டில் வாழ்ந்த 63 சைவ நாயன்மார்களின் கதை. இதை எழுதியவர் சேக்கிழார் (12 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர்).

நினைவில் நிலைத்து இருக்கச் செய் (perpetuate): நீடித்து இருக்கச் செய்

phala: फल "fruit." ***பழம்.*** பலன்.

pilgrimage: *Tīrthayātrā.* "Journeying to a holy place." Pilgrimage. ***தீர்த்த யாத்திரை.*** இந்துக்கள் கடைப்பிடிக்க வேண்டிய *பஞ்ச நித்திய கர்மாக்களில்* ஒன்றாக *தீர்த்த யாத்திரை* விளங்குகிறது. இந்தியா அல்லது மற்ற நாடுகளில் இருக்கும் எண்ணற்ற *புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு* பயணம் மேற்கொள்வதை குறிப்பிடுகிறது. தீர்த்த யாத்திரைக்கு முன்பாக உபவாசம் மற்றும் சுயக்கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகிறது. *தீர்த்த யாத்திரை* செல்லும் போது விரதம் மேற்கொண்டு சுத்தமாக இருந்து, லௌகீக கவலைகள் அனைத்தையும் மறந்து, இறைவன் மீது முழுமையாக கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பஞ்ச நித்திய கர்மாக்கள்.*

piṅgalā: पिंगला "Tawny channel." ***பிங்கலா.*** இது முதுகுதண்டின் வழியாக ஆணின் பண்புடன் பாய்ந்து செல்லும் சூட்சுமமான ஓட்டத்தை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, நாடி, இராச யோகம்.*

pitṛi tarpaṇa: पितृ तर्पण "Libations to ancestors." ***பித்ரு தர்ப்பணம்.*** முன்னோர்களை நினைத்து எள்ளும் தண்ணீரும் இரைத்து செய்யும் வழிபாடு தர்ப்பணம் ஆகும். தர்ப்பணம் என்பது ஒவ்வொரு நாளும் நம் முன்னோர்களுக்காக நாம் செய்ய வேண்டிய புண்ணிய காரியம் என்று தர்ம சாத்திரங்கள் கூறுகின்றன. மேலும் தகவலுக்கு: *பஞ்ச மகாயக்ஞங்கள்.*

தொல்லை (plague): தொந்தரவு, துன்பம், வேதனை, இன்னல் அல்லது இம்சை.

பல கடவுள்களைக் கொண்ட கோட்பாடு (polytheism): பல கடவுள்கள் மீது நம்பிக்கை அல்லது அந்த கடவுள்களை வழிபடுதல். மேலும் தகவலுக்கு: *ஒரு கடவுள் கோட்பாடு.*

முதன்மை புரோகிதர் (pontiff): தலைமை குரு; நன்மதிப்பு மற்றும் அதிகாரத்தை பெற்று இருக்கும் ஒரு ஆன்மீக தலைவர்.

prabhāvalī: प्रभावली "Luminous circle." ***பிரபாவலி***. திருவாசி. கல் அல்லது உலோகத்தில் தயார் செய்த இந்த அலங்கார வளைவு, கோயில்கள் மற்றும் சந்நிதிகளில் தெய்வங்களின் சிலைகளுக்கு பின்புறத்தில் அமைந்து இருக்கும். இது படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என்ற முத்தொழிலின் சுழற்சியை குறிக்கிறது. இறுதியில் அனைத்தையும் ஒடுக்கிக்கொள்ளும் காலத்தின் கடவுளான மகாகால பைரவர், இந்த வளைவின் உச்சத்தில் உக்கிரமான முகத்துடன் காட்சி அளிக்கிறார்.

pradakshiṇā: प्रदक्षिणा "Moving rightward." ***பிரதட்சிணம்***. உலக விவகாரங்களில் இருந்து விலகி, தெய்வீக சாட்சி மீது மனதை திசைத்திருப்பும் நோக்குடன், கோயில் அல்லது மற்ற புனிதமான இடங்களின் கருவறையை வலஞ்சுழியாக பக்தியுடன் சுற்றி வருதல். வலஞ்சுழி என்பது மறைஞான முக்கியத்துவம் பெற்று இருக்கிறது. *மூலாதாரத்திற்கு* மேலிருக்கும் சக்கரங்கள் வலஞ்சுழியாக சுற்றுகின்றன. அதற்கு கீழிருக்கும் சக்கரங்கள் இடஞ்சுழியாக சுற்றி, ஒருவரை சுயநலம், பேராசை, முரண்பாடு மற்றும் கொந்தளிப்பு நிறைய கீழ்நிலை பகுதிகளுக்குள் அழைத்து செல்கின்றன.

prakṛiti: प्रकृति "Primary matter; nature." மூலப்பிரகிருதி. "மூலப் பருப்பொருள்; இயற்கை." படைப்பின் வெளிப்பட்ட தோற்றங்களை மட்டுமே குறிப்பிடும் 25 *தத்துவ* சாங்கிய தரிசனத்தில் பருப்பொருள் மற்றும் ஆன்மா, *பிரக்ருதி* மற்றும் *புருஷா*, பெண்மை மற்றும் ஆண்மையின் அடிப்படைகள் என்ற இரண்டு உன்னதமான நித்திய யதார்த்தங்களில் ஒன்றாக *பிரகிருதி* அல்லது *பிரதானம்* குறிப்பிடப்பட்டிருக்கிறது. *பிரகிருதி* என்பது வெளிப்பட்ட அம்சமாகவும், தூய உணர்வானது அமைதியான வெளிப்படாத (*புருஷா*) அம்சமாகவும் இருக்கிறது. சைவ அண்டவியலின் 36 தத்துவங்களில் 24 ஆவதாக இடம்பிடிக்கும் பிரகிருதியானது, தூல பிரபஞ்சத்தின் உள்ளாற்றலாகவும், அனைத்து கீழ்நிலை தத்துவங்களும் தோன்றக் காரணமாக விளங்கும் பருமனான சக்தியாகவும் விளங்குகிறது. சத்வ, ரஜோ, தமோ என்பவை இதன் முக்குணங்கள் ஆகும். மேலும் தகவலுக்கு: *புருஷா, தத்துவ*.

prāṇa: प्राण. ***பிராணன்***. முக்கிய சக்தி அல்லது உயிரின் அடிப்படை. இதற்கு "அத்தியாவசிய காற்று," என்று பொருள். இது "சுவாசித்தல்," என்பதை குறிப்பிடும் *பிராண* என்ற சொல்லில் இருந்து உருவானது. மனித உடலில் இருக்கும் *பிராணன், பிராணாயாம கோசத்தில்* "அத்தியாவசிய காற்றுகள்," என்று அழைக்கப்படும் *வாயு* என்கிற ஐந்து அடிப்படை உயிர் ஓட்டங்களாக பாய்ந்து செல்கின்றன. அவை *பிராணன்* (வெளியே செல்லும் வாயு), *அபானன்* (உள்ளே வரும் வாயு), *வியானன்* (உடலில் நிலைத்து இருக்கும் வாயு), *உதனான்* (மேல்நோக்கி செல்லும் வாயு) மற்றும் *சமானன்* (சமநிலைப்படுத்தும் வாயு) ஆகும். ஒவ்வொன்றும் உடலின் முக்கியமான

செயல்பாடுகளை நிர்வகிக்கின்றன, மற்றும் உடலின் எல்லா சக்திகளும் இதன் மாற்றங்களாக விளங்குகின்றன. *பிராணன்* பெரும்பாலும் உயிரின் அடிப்படையை குறிப்பிட்டாலும், அது சில சமயங்களில் பிரபஞ்சத்திற்கு உயிரூட்டம் அளிக்கும் விசை, சக்தி அல்லது ஆற்றல் மற்றும் எல்லா சக்தி மற்றும் விசைகளின் சாரமாக அல்லது அதன் ஆற்றலை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *கோசம், தத்துவம்*.

praṇāma: प्रणाम "Obeisance; bowing down." ***பிரணாம***. தலை குனிந்து அல்லது உடல் தரையில் விழுந்து வணக்கம் தெரிவிக்கும் முறை. —***அட்டாங்க பிரணாம*** ***(ashṭāṅga praṇāma)*** ("Eight-limbed obeisance"): கைகள், மார்பு, நெற்றி, முழங்கால்கள், மற்றும் கால்கள் ஆகிய எட்டு உறுப்புகளும் (அட்டாங்கம்) தரையில் படுமாறு ஆண்கள் வணங்கும் முறை. (இது பொதுவாக சாஷ்டாங்க பிரணாம போன்று அமைந்து இருக்கும்.) — ***பஞ்சாங்க பிரணாம*** ***(pañchāṅga praṇāma)*** ("Five-limbed obeisance"): கைகள், தலை மற்றும் கால்கள் தரையில் படுமாறு (வலது கணுக்காலை இடது கணுக்கால் மீது குறுக்காக மடக்கி) பெண்கள் வணங்கும் முறை. "மரியாதையுடன் தரையில் விழுந்து வணங்குதல்" என்பதை குறிக்கும் *பிரணிபாத* என்ற சொல் இதற்கு பொருத்தமாக இருக்கும். மேலும் தகவலுக்கு: *பக்தி, நமசுகாரம், பிரபத்தி*.

Praṇava: प्रणव "Humming." *பிரணவம்*. ஓங்காரமாக இறைவனை குறிப்பிடும் *ஓம்* மந்திரம். ஒரு மின்சார மின்மாற்றி, ஒரு தேனீக்களின் திரள் போன்று நாம் அதை நமது நரம்பு மண்டலத்தில் துடிப்பதை கேட்கலாம். சிந்தனை ஒளிர்விக்கும் உட்புற ஒளியாக இந்த ஒலியை மாற்றுவதற்கும், இந்த ஆனந்தம் நிரம்பிய உணர்வில் ஒடுங்குவதற்கும் தியானம் செய்பவருக்கு கற்றுத் தரப்படுகிறது. *நாதநாடி* சக்தியின் ஒலியாகவும் பிரணவம் அழைக்கப்படுகிறது.மேலும் தகவலுக்கு: *ஓங்காரம்*.

prāṇāyāma: प्राणायाम "Breath control." பிராணாயாமம். "மூச்சைக் கட்டுப்படுத்தி வைத்தல்." மேலும் தகவலுக்கு: *இராச யோகம்*.

prapatti: प्रपत्ति "Throwing oneself down." ***பிரபத்தி***. "ஒருவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்தல்." இந்த பக்தியில் முழுமையாக நிபந்தனையின்றி இறைவனிடம் சரணடைதலுடன் வழக்கமாக ஆதரவற்ற நிலையில், அடக்கத்துடன் ஒருவர் தன்னை அந்த இறைவனிடம் ஒப்புவிக்கிறார். கிட்டத்தட்ட எல்லா இந்து சமய பிரிவுகளுக்கும் மையமாக விளங்கும் கோட்பாட்டை குறிக்கும் இந்த சொல், குறிப்பாக வைணவ சமயத்தில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பக்தி, அருள், பாதம், சரணாகதி*.

prārabdha **karma:** प्रारब्धकर्म "Action that has been unleashed or aroused." ***பிராரப்த கர்மவினை***. "தொடங்கி வைக்கப்பட்டுள்ள செயல்." மேலும் தகவலுக்கு: *கர்மவினை*.

prasāda: प्रसाद "Clarity, brightness; grace." ***பிரசாதம்***. "தெளிவு, பிரகாசம்; அருள்." 1) அமைதியாகவும் பணிவாகவும் இருக்கும் நற்குணம். 2) தெய்வம் அல்லது குருவிற்கு நெய்வெத்தியம் செய்யப்படும் உணவு, அல்லது அவ்வாறு நெய்வெத்தியம் செய்த உணவில் பக்தர்களுக்கு வழங்க இருக்கும் உணவு. 3) ஒரு தோஷத்தை நீக்க வழங்கப்படும் படையல். மேலும் தகவலுக்கு: *புனிதமான மதச்சடங்கு*.

praśnottara: प्रश्नोत्तर "Question-answer *(praśna-uttara)*." ***பிரஷ்நோத்தர***. கேள்வி-பதில். சமயக் கோட்பாடு பற்றி வினாவிடை வடிவில் கற்பிக்கும் பாடம்.

விதிமுறை (precept): ஒரு நடவடிக்கை அல்லது நடத்தையின் விதியாக விளங்கும் ஒரு கட்டளை.

சத்குரு (preceptor): ஒரு ஆன்மீக சமூகம் மற்றும் குலத்தில் அதிகம் மதிக்கப்படுகிற ஆசிரியர் மற்றும் தலைவர்.

தலைமை தாங்குதல் (preside): ஒரு கூட்டத்தில் தலைவராக இருத்தல், ஒரு குழுவில் உயர்ந்த பதவியில் இருத்தல். பொறுப்பு வகித்தல்; ஆதிக்கம் செலுத்துதல்.

ஆதி ஆன்மா (Primal Soul): தான்தோன்றியாக இருந்து, முதன்மையான, முழுநிறைவான ஆன்மாவாக உள்ள சிவ பரமேசுவரனை குறிப்பிடுகிறது. இவர் தன்னிடம் இருந்து உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சங்களையும், தனது சாரத்தை போன்ற சாரத்துடன் இருக்கும் பெருந்திரளான ஆன்மாக்களையும் வெளிப்படுத்துகிறார். தனது தனிப்பட்ட அம்சத்தில் தலைவனாகவும் சிருஷ்டிகர்த்தாவாகவும் இருக்கும் இறைவன், சைவர்களால் நடராசராகவும், வைணவர்களால் பகவான் ஸ்ரீவிஷ்ணுவாகவும், சாக்த சமயத்தை சேர்ந்தவர்களால் தேவியாகவும் பல உருவங்களில் சித்தரிக்கப்பட்டு இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *நடராசர், பரமேசுவரன்*.

பிரணவம் (Primal Sound): படைப்புக்களில் ஒளிக்கு முன்பாக ஒலி தோன்றியதாக இந்து சமயம் கருதுகிறது. இது "ஓம்" என்கிற *மூல* மந்திரத்தின் ஒலியாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பிரணவம்*.

pṛithivī tattva: पृथिवी तत्त्व "Earth element." ***பிருத்வி தத்துவம்***. நிலம். மேலும் தகவலுக்கு: *தன்மாத்திரை, தத்துவம்*.

தரையில் விழுந்து வணங்குதல் (prostration): மேலும் தகவலுக்கு: *பிரணாம*.

வரைமுறை (protocol): குறிப்பாக மதம் அல்லது அரசியல் தலைவர்கள் மத்தியில் இருக்கவேண்டிய ஒழுங்குமுறை மற்றும் செய்முறை வழக்கங்கள். மேலும் தகவலுக்கு: *கலாச்சாரம்*.

மனோஉணர்வு சார்ந்த (psychic): "Of the psyche or soul." "ஆன்மா சார்ந்த." ஆன்மீக செய்முறைகள் மற்றும் சக்திகளுக்கு கூர் உணர்வுடன் செயலாற்றுதல். உடல் சாராத

யதார்த்தங்கள் மீது உட்புறமாகவும் இயலனுணர்வுடனும் விழிப்புடன் இருத்தல்; கட்புலனுக்கு அப்பார்ப்பட்டதை காணும் அல்லது கேட்கும் திறன் மற்றும் முன்னறிவிப்பு போன்ற ஆற்றல்களை பயன்படுத்தக்கூடியவராக இருத்தல். தூல பண்பில்லாத, நுணுக்கமான; மனிதனின் ஆழமான அம்சங்கள் சார்ந்த. மேலும் தகவலுக்கு: *புலன்கடந்த கேள்வியாற்றல், புலனாகாதவற்றை காணும் ஆற்றல்*.

pūjā: पूजा "Worship, adoration." **பூஜை**. "வழிபாடு, ஆராதனை." ஒரு தெய்வீக சிலை (*மூர்த்தி*), ஒரு குருவின் புனிதமான பாதுகைகள் (*ஸ்ரீ பாதுகா*) அல்லது மற்ற புனிதமான பொருள், அல்லது *சத்குருவை* போன்ற ஒரு நபருக்கு வீட்டில், கோயிலில் அல்லது புனிதமான இடத்தில் நடைபெறும் வழிபாட்டில் இருக்கும் ஒரு ஆகம சடங்கு. வழிபடும் பொருளை சுற்றியிருக்கும் சூழ்நிலையை தூய்மை செய்து, அந்தர்லோகங்களுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தி கடவுள், தெய்வங்கள் அல்லது ஒரு *குருவை* ஆவாகனம் செய்வதே இதன் உள்ளார்ந்த குறிக்கோள் ஆகும். பூஜாரி தான் செய்யும் பூஜையின் போது, பாரம்பரிய வழக்கங்களுக்கு ஏற்ப தெய்வத்திற்கு படையல்களை வழங்கிக்கொண்டு, தெய்வத்தை புகழ்ந்து மற்றும் தெய்வீக அருளை வேண்டி பல சுலோகங்களை சொல்கிறார். வேத முறைப்படி நடக்கும் யக்ஞங்களில் அக்னி பகவான் வாயிலாக இறைவனுக்கு படையல்கள் வழங்கப்படுகின்றன. ஆகம முறைப்படி நடக்கும் பூஜைகளில் நீர், தீபங்கள் மற்றும் பூக்கள் வாயிலாக ஒரு *மூர்த்திக்கு* வழிபாடு நடக்கிறது. இந்து சமயத்தில் பூஜைகள் இரு வகைப்படும். —**ஆத்மார்த்த பூஜை (Ātmārtha Pūjā):** *ஆத்மார்த்த ச பரார்த்த ச பூஜா த்விவிதாமுச்யதே* என்று *காரண ஆகமம்* குறிப்பிடுகிறது. "தனது நன்மைக்காகவும் மற்றவர்களின் நன்மைக்காகவும் செய்யும் பூஜைகள் என்று பூஜைகள் இரு வகைப்படும்" என்பதே அதன் பொருள். ஆத்மார்த்த பூஜை என்பது தனக்காகவும் தனது குடும்பத்திற்காகவும் சொந்த வீட்டில் நடைபெறுகிறது. —**பரார்த்த பூஜை (Parārtha Pūjā):** "Pūjā for others." "பிறருக்காக செய்யும் பூஜை." பரார்த்த பூஜை என்பது ஒரு கோயிலில் அல்லது ஒரு பொதுமக்கள் சந்நிதியில் முறையாக பயிற்சி பெற்று அங்கீகரிக்கப்பட்ட பூசாரிகள் மூலம் அந்த பொது மக்கள் நலனுக்காக செய்யப்படுகிறது.

pujārī: पुजारी "Worshiper." ***பூஜாரி***. இந்து கோயிலில் அல்லது வீட்டில் பூஜை செய்பவரை குறிப்பிடும் ஒரு பொதுவான சொல். *பூஜக* என்கிற சமஸ்கிருத சொல்லின் ஹிந்தி வடிவமான பூஜாரி, மற்றும் தமிழில் பூசாரி. இவ்வாறு பூஜை செய்பவருக்கு தென்னகத்து பாரம்பரியத்தில் *அர்ச்சகர்* என்ற இன்னொரு பெயரும் உள்ளது. வீட்டில் நடைபெறும் சடங்கை நடத்தும் சுமார்த்த சமய அந்தணருக்கு புரோகிதர் என்று பெயர். மேலும் தகவலுக்கு: *பூஜை*.

punarjanma: पुनर्जन्म "Reincarnation." ***புனர்ஜென்மம்***. மறுபிறவி. சமஸ்கிருதத்தில் *புன:* என்றால் "மீண்டும் மீண்டும்" மற்றும் *ஜென்ம* என்றால் "பிறவி எடுத்தல்" என்று பொருள்.

பண்டிதர் (pundit).

puṇya: पुण्य "Holy; virtuous; auspicious." ***புண்ணியம்.*** 1) நல்ல அல்லது நேர்மையான. 2) பாராட்டுதற்குரிய செயல். 3) முறையான சிந்தனை, சொல் மற்றும் செயல் மூலம் கிடைக்கும் நன்மதிப்பு. ஒரு சாதாரண உதவியில் இருந்து, வாழ்நாள் முழுவதும் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் செய்யும் நன்மை வரை, *புண்ணியம்* நற்செயலின் அனைத்து வடிவங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு *புண்ணிய* செயலும் தன்னுடன், *தர்மத்தை* கடைப்பிடிக்கும் செயல்கள் (*பாவத்தின்* எதிர்ச்சொல்) மற்றும் சொற்களின் நேர்மறை வெகுமதியாக இருக்கும் *கர்மவினையின்* விளைவு என்கிற *கர்மபல*, "செய்த செயலுக்கு கிடைத்த பலனை," கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *கர்மவினை, பாபம், பிராயச்சித்தம்*.

Purāṇa: पुराण "Ancient (lore)." ***புராணம்.*** "பழங்கால கதை." புராணம் என்பது தெய்வங்கள், மனிதன் மற்றும் உலகம் தொடர்பாக நெறிமுறை மற்றும் அண்டவியல் போதனைகளை உள்ளடக்கிய இந்து சமய கதைகள் ஆகும். அவை முதல்நிலை படைப்பு, இரண்டாம் நிலை படைப்பு, மரபு வழி ஆய்வு, காலம் மற்றும் வரலாற்றின் சுழற்சி என்று ஐந்து கருப்பொருளை சுற்றி அமைந்துள்ளன. 18 முக்கிய *புராணங்கள்* இருக்கின்றன. அவை சைவ சமயம், வைணவ சமயம் அல்லது சாக்த சமயம் என்று பிரிக்கப்பட்டுள்ளன.

தூய உணர்வு (Pure Consciousness): மேலும் தகவலுக்கு: *பராசக்தி*.

purusha: पुरुष "The spirit that dwells in the body/in the universe." ***புருஷ.*** "உடல்/பிரபஞ்சத்தில் வாசம் செய்யும் ஆன்மா." மனிதன்; ஆன்மா; ஆண். ஆன்மா என்பது மீமெய்யியல் ரீதியாக ஆண் அல்லது பெண்ணை குறிப்பது இல்லை. இது யோகம் மற்றும் சாங்கிய தரிசனத்தில், யாவும் கடந்த பரமாத்துமாவை குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. இது *ஆத்மன்* என்றும் அழைக்கப்படுகிறது. *புருஷ* என்கிற சொல் உபநிடதங்களில் குறிப்பிடுவதை போல, *பரமன்* அல்லது பரமாத்துமா என்ற சொல்லையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆத்மன், ஜீவன், பிரகிருதி, ஆன்மா, தத்துவம்*.

purushārtha: पुरुषार्थ "Human wealth or purpose." ***புருஷார்த்த.*** "மனித செல்வம் அல்லது குறிக்கோள்." மனிதர்கள் தார்மீக ரீதியாக தர்மம், அர்த்தம், காமம் மற்றும் மோட்சம் என்று நான்கு வேட்கைகளில் ஈடுபடுகிறார்கள். இது *சதுர்வர்க* என்று அழைக்கப்பட்டு, இந்து தர்ம சாஸ்திரத்தின் அடிப்படை கோட்பாடாக விளங்குகிறது. —***தர்மம்*** *("நேர்மையான வாழ்க்கை") **(dharma)*** ("Righteous living"): இது சமூக சேவை மற்றும் அதன் மேம்பாட்டிற்கு ஒருவர் தனது பங்கிற்கு கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள், செய்யவேண்டிய நற்செயல்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், கட்டுப்பாடுகள் மற்றும் கடைப்பிடித்தல்களை குறிப்பிடுகிறது. இதில் ஒரு குறிப்பிட்ட *பரம்பரை* மற்றும்

சம்பிரதாயத்தை சார்ந்த ஒரு குருவின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளும் உண்மைப்பொருளின் வேட்கையும் அடங்கும். மேலும் தகவலுக்கு: *தர்மம்*. —***அர்த்தம்*** *("செல்வம்)* ***(artha)*** ("Wealth"): லௌகீக நன்மை மற்றும் செழிப்பு, பணம், சொத்து, உடைமைகள். *அர்த்தம்* என்பது தர்மத்தின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படும் செல்வத்தின் வேட்கை ஆகும். இதில் உணவு, பணம், உடை மற்றும் தங்கும் இடம் என்கிற அடிப்படை தேவைகளோடு ஒரு வசதியான வீட்டை பராமரிக்க, ஒரு குடும்பத்தை பேணி பாதுகாக்க, ஒரு வெற்றிகரமான தொழில் வாழ்க்கையை பூர்த்தி செய்ய மற்றும் மதம் சார்ந்த கடமைகளை செய்ய தேவைப்படும் செல்வமும் அடங்கும். மேலும் தகவலுக்கு: *யக்ஞம்*. —***காமம்*** *("இன்பம், அன்பு; மகிழ்ச்சி")* ***(kāma)*** ("Pleasure, love; enjoyment"): லௌகீக அன்பு, அழகியல் மற்றும் கலாச்சார நிறைவேற்றம், லௌகீக சுகங்கள் (பாலியல் இன்பங்கள் உட்பட), குடும்பம் வழங்கும் மகிழ்ச்சிகள், சிந்தனை செய்து புரிந்துகொள்ளும் திறமையால் ஏற்படும் திருப்தி. மகிழ்ச்சி, பாதுகாப்பு, ஆக்கத்திறன், பயனுள்ள தன்மை மற்றும் உத்வேகத்தை அனுபவித்தல். —***மோக்ஷம்*** *("முக்தி")* ***(moksha)*** ("Liberation"): சித்தியின் சிகரமாக இருக்கும் ஆத்ம ஞானம், பரசிவத்தை உணர்வதன் மூலம் மறுபிறவியில் இருந்து பெறும் விடுதலை. ஆன்மீக சித்திகள் மற்றும் மெய்ஞ்ஞான சந்தோஷங்கள், ஆத்ம ஞானம் நோக்கி வழிநடத்தி செல்லும் துறவறம் மற்றும் யோகத்தில் பங்கு பெறுதல். இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளில் தர்மம், அர்த்த மற்றும் காமத்தை நிறைவேற்றுவதால் மோஷம் கிடைக்கிறது. இதன் மூலம் ஒருவர் உலக சுக துக்கங்களில் இருந்து நிரந்தர விடுதலையை பெறுகிறார். மேலும் தகவலுக்கு: *மோக்ஷம்*.

pushpaśara: पुष्पशर "Flower arrow." ***புஷ்பஷர***. "மலர்களால் செய்த அம்பு." அன்பான விநாயகர் பிரயோகம் செய்யும் ஒரு ஆயுதம்.



குவாண்டம் (quantum): அளவு அல்லது எண்ணிக்கை. அறிவியலின் குவாண்டம் கோட்பாட்டில், இது பொதுவாக ஆற்றல் சார்ந்த ஒரு நிரந்தரமான அடிப்படை அலகு. — **குவாண்டம் ஒளியின் துகள்கள் (quantum particles of light):** ஒளி ஒரு தொடர் வரிசையாக இல்லாமல், ஒரே வலிமையுடன் பயணம் செய்யும் ஒளிக் கற்றைகளாக அறியப்படுகிறது. மேலும் ஆழமாக ஆய்வு செய்தால், இந்த துகள்கள் அனைத்தும் ஒரு தெய்வீக சக்திக்குள், தாங்களே உருவாகி தங்களை சீர் செய்துக்கொள்வது தெரியவரும்.

—**(மனதின்) குவாண்டம் அளவில் (at the quantum level (of the mind)):** மனதின் காலத்தில், ஒரு நுணுக்கமான ஆற்றலின் அளவில் இருத்தல்.

நாலடிப்பாடல் அல்லது நாலடி செய்யுள் (quatrain).

அடக்குதல் (quell): அமைதிப்படுத்துதல் அல்லது முடிவுக்கு கொண்டு வருதல்.



Radhakrishnan, Dr. S.: रधकृष्णन् (1888-1975) ***டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன்*** (1888-1975). இவர் 1962 முதல் 1967 வரை இந்திய குடியரசுத்தலைவராக இருந்தார். இவர் ஒரு அறிஞர், தத்துவவாதி, ஆக்கபூர்வமான எழுத்தாளர், மக்களின் கவனத்தை ஈர்க்கும் பேச்சாளர் மற்றும் இந்து மதம் சார்பாக பேசுவதில் வல்லவராக இருந்தார். இவர் விவேகானந்தர், தாகூர், அரபிந்தோ மற்றும் மற்றவர்களுடன் சேர்ந்து, தற்போதுள்ள இந்துசமய மறுமலர்ச்சிக்கு தூண்டுதலாக இருந்தார். மேலும் தகவலுக்கு: *வேதாந்தம்*.

rāga: राग "That which enraptures." ***ராகம்.*** இந்திய பாரம்பரிய இசையில் பயன்படும் இசை வடிவங்களில் ஒன்றான ராகம் என்பது ஒரு குறிப்பிட்ட சுரங்களின் சேர்க்கையை குறிக்கிறது. இது மேற்கத்திய இசைக்குறிப்புக்களை போன்றது ஆகும். ஆனால் பூரணமான இந்திய இசையில் ராக பாவமும் அர்த்த பாவமும் ஒன்றாக பாடுபவர் உணர்ச்சியில் வெளிப்படும்.

rajas: रजस् "Passion; activity." ***ரஜஸ்***. "பேரார்வம்; நடவடிக்கை." மேலும் தகவலுக்கு: *குணம்*.

rāja yoga: राजयोग "King of yogas." ***இராச யோகம்***. இது *அட்டாங்க யோகம்*, "எட்டு அங்கங்களை பயன்படுத்தும் யோகம்," என்றும் அழைக்கப்படுகிறது. பல்வேறு *யோக உபநிடதங்கள்*, *திருமந்திரம்*, மற்றும் குறிப்பாக பதஞ்சலியின் *யோக சூத்திரங்களில்* குறிப்பிட்டுள்ளதை போல, *இராச யோகம்* என்பது ஞானோதயத்தை பெறுவதற்கு எட்டு தொடர்ச்சியான படிநிலைகளை கொண்ட பாரம்பரிய *யோக* அமைப்பு ஆகும். *இயமம்* (கட்டுப்பாடு), *நியமம்* (கடைப்பிடித்தல்கள்), *ஆசனம்* (அங்கஸ்திதி), *பிரணாயாமம்* (பிராண சக்தியை கட்டுக்குள் வைத்தல்), *பிரத்தியாகாரம்* (மனதை ஒடுக்குதல்), *தாரணை*, *தியானம்* மற்றும் *சமாதி* என்பவை அந்த எட்டு நிலைகள் ஆகும். மேலும் தகவலுக்கு: *சமாதி*, *யோகம்*.

Rāma: राम "Pleasing." **ஸ்ரீராமர்**. இராமாயணத்தில் போற்றப்படும் கதாநாயகன். விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களில், கிருஷ்ண அவதாரத்துடன் ராமாவதாரமும் மிகவும்

பிரபலமானதாக இருக்கிறது. அவரை வைணவர்கள், சுமார்த்த சம்பிரதாயத்தை சேர்ந்தவர்கள் மற்றும் மரபு சாராத இந்துக்கள் வழிபடுகிறார்கள். அவர் சிவனை வழிபட்டார், மற்றும் இந்தியாவின் தென்முனையில் அவரது பெயரில் ராமேசுவரம் என்ற ஒரு சிவாலயம் உள்ளது.

Rāmakṛishṇa: रामकृष्ण (1836–1886) **ராமகிருஷ்ணர்** (1836–1886). இவர் இன்றைய இந்து தர்மத்தின் தலைசிறந்த துறவிகள் மற்றும் சூட்சும ஞானிகளில் ஒருவராக விளங்கினார். அத்வைத ஈசுவரவாதத்தை போதித்து, காளி தேவியின் தீவிர பக்தனாகவும் இருந்தார். அத்வைதத்தை உறுதியாக பின்பற்றுபவராகவும் இருந்து, ஒருமை மற்றும் முடிவான பரம்பொருளின் உணர்தலை குறிக்கும் *நிர்விகல்ப சமாதியின்* நாட்டத்தை கற்றுதருபவராகவும் இருந்தார். இவர் இந்து தர்ம சிந்தனை மற்றும் தத்துவத்தை உலகெங்கும் பரப்பிய சுவாமி விவேகானந்தரின் (1863–1902) *குரு* ஆவார்.

Rāmānuja: रामानुज Philosopher (1017–1137). **இராமானுஜர்**. சிறந்த பக்தர் மற்றும் ஐந்து முக்கிய வைணவ சம்பிரதாயங்களில் ஒன்றை நிறுவிய இந்த மகான், ஆதி சங்கரரின் *அத்வைதத்திற்கு* எதிர்கருத்து கூறினார். அவர் *பிரம்ம சூத்திரத்திற்கு* எழுதிய *ஸ்ரீ பாஷ்யத்தில்,* ஆதி சங்கரரின் ஒவ்வொரு அத்வைத கருத்திற்கும் தனது *விசிஷ்டாத்வைத வேதாந்தத்தின்* மூலம் மாற்று கருத்து தெரிவித்து இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *வேதாந்தம்.*

Rāmāyaṇa: रामायण "Vehicle of Rāma." "ஸ்ரீ ராமரின் வாழ்க்கைப் பயணம்." இதுவும் *மகாபராதமும்* இந்தியாவின் இரண்டு மாபெரும் இதிகாகசங்களாக விளங்குகின்றன. இது இராமரையும் சீதையையும் மையமாகக் கொண்டு வால்மீகி எழுதிய காவியம். இந்த இரண்டு கதாபாத்திரங்களும் வாழ்ந்த முன்மாதிரியான வாழ்க்கைகள், கண்ணியம் மற்றும் நேர்மைக்கு உயர்ந்த தரநிலைகளை அமைத்து, இந்து தர்மத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றன. இராமரின் ஆட்சிக்காலம் சுமார் கி.மு. 2015-ஆக இருக்கலாம் என்று கதையில் இருக்கும் வானியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் தகவலுக்கு: *இதிகாசம், மகாபாரதம், ஸ்ரீ ராமர்.*

raṅgoli: रङ्गोलि. ***ரங்கோலி.*** ஒரு வீடு அல்லது கோயில் வாசலில் அல்லது ஒரு சமயச் சடங்கு நடைபெறும் இடத்தில் பாரம்பரிய முறைப்படி வரையும் அலங்கார வடிவங்கள். இது தமிழில் *கோலம்* என்று அழைக்கப்படுகிறது. அரிசி மாவுடன் தண்ணீர் கலந்து வரைவதை மாக்கோலம் என்றும், பூக்கள் சேர்த்து வரைவதை பூக்கோலம் என்றும், பல வண்ணப் பொடிகளை கலந்து வரைவதை ரங்கோலி என்றும் அழைக்கப்படுகின்றன.

rasātala: रसातल "Subterranean region." ***ரசாதள.*** மூலாதாரத்திற்கு கீழே ஐந்தாவதாக இருக்கும் இந்த சக்கரம், கணுக்கால்களில் அமைந்து இருக்கிறது. இது பூமிக்கு அடியில்

ஐந்தாவது சூட்சும நகரமாக இருக்கும் *ரிஜிஷா* அல்லது ரசாதளவுடன் தொடர்புடையதாக இருக்கிறது. இது சுயநலம், தன்னலம் மற்றும் சொந்தம் கொண்டாடும் பண்பு குடிகொண்டு இருக்கும் பகுதி ஆகும். *ரசம்* என்றால் "பூமி, நிலம்; ஈரப்பதம்." மேலும் தகவலுக்கு: *சக்கரம், லோகம், நரகம்*.

ratnakumbha: रत्नकुम्भ "Pot of gems." ***இரத்தின கலசம்***.

எதிர்வினை (reaction): எதிர்செயல்.

முரண்பாடு நீக்கம் (reconciliation): ஒரு தகராறில் தீர்வு காணுதல் அல்லது வேறுபாட்டை நீக்குதல். தசமாம்ச முரண்பாடு நீக்கம் என்பது வருமானம் மற்றும் தசமாம்சத்தை எழுத்து வடிவில் கணக்கிடும் முறை.

மறுபிறவி எடுத்தல் (reincarnate): ஒரு உடலில் வாழ்ந்து உயிர் துறந்த பிறகு இன்னொரு உடலில் பிறவி எடுத்தல்.

reincarnation: "Re-entering the flesh." *Punarjanma;* metempsychosis. **மறுபிறவி.** ஆன்மாக்கள் பிறப்பின் மூலம் ஒரு தூல உடலுக்குள் நுழையும் செய்முறை. *கர்மவினையை* கரைத்து, பரசிவத்தை உணர்ந்த பிறகு மறுபிறவியின் சுழற்சி முடிவுக்கு வருகிறது. இந்த விடுதலை *மோக்ஷம்* என்று அழைக்கப்படுகிறது. அதன் பிறகு ஆன்மா மீண்டும் தூல பிறவி எடுக்கவேண்டிய அவசியமில்லாமல் தொடர்ந்து வளர்ச்சியும் பக்குவமும் அடைகிறது. மேலும் தகவலுக்கு: *கர்மவினை, மோக்ஷம், சம்சாரம், ஆன்மா*.

மதம் (religion): From Latin *religare*, "to bind back." மனிதனுக்கு அப்பாற்பட்ட உயிர்சக்திகள் அல்லது ஆற்றல்கள் மற்றும் ஒரு பரமாத்துமா அல்லது மாபெரும் ஆற்றலின் வழிபாடு மற்றும் அதன் மீது இருக்கும் நம்பிக்கை பற்றிய ஒரு அமைப்புமுறை. மதம் என்பது ஆன்மாவின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட ஒரு வாகனம் ஆகும், மற்றும் இதில் வழக்கமாக இறையியல், சாத்திரம், ஆன்மீக மற்றும் தார்மீக நெறிகள் மற்றும் வைதீகம் அடங்கியுள்ளன. மேலும் தகவலுக்கு: *இந்து மதம்*.

கழிவிரக்கம் (remorse): தவறு செய்ததற்காக தீவிரமாக வருந்துதல் அல்லது குற்ற உணர்வு. மனவுறுத்தல்.

துறவி (renunciate): லௌகீக வாழ்க்கையை துறந்தவர். மேலும் தகவலுக்கு: *சந்நியாசி*.

கட்டுபாடுகள் (restraints): மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்*.

Ṛig Veda: ऋग्वेद *"Veda* of verse *(ṛik)."* ***ரிக் வேதம்***. இது *சுருதி* என்று அழைக்கப்படும் நான்கு வேதங்களின் தொகுப்பில் முதன்மையானதாகவும் பழமையானதாகவும் விளங்குகிறது. இதில் மந்திரங்கள், வழிபாட்டு முறைகள் மற்றும் வேள்விகள் செய்யும் சூத்திரங்களை அடக்கிய *சம்ஹிதை*, சடங்குகள் செய்வது பற்றிய அறிவுறுத்தல்கள் மற்றும் விளக்கங்கள் அடங்கிய *பிராமணம்*, அமைதியாக காட்டிற்கு சென்று கற்கவேண்டிய

ஆரண்யகம் மற்றும் வைதீக சடங்குகள் பற்றிய விளக்கங்கள் மற்றும் தத்துவ உரைகள் அடங்கிய *உபநிடதங்கள்* அங்கம் வகிக்கின்றன. *சம்ஹிதையின்* மிகவும் பழமையான முக்கிய பகுதி சுமார் 8,000 வருடங்கள் பழமையானதாக கருதப்படுகிறது. இதில் இயற்கை தேவதைகள் மற்றும் பிரம்மத்தை துதிக்கும் சூக்தங்கள் மற்றும் பிராத்தனைகள் அடங்கியுள்ளன. இது மற்ற *வேத சம்ஹிதைகளுக்கு* (*சாம, யஜுர்* மற்றும் *அதர்வண*) அதிக அளவில் சூக்தங்களை வழங்கி இருப்பதால், இது ஹோமர் எழுதிய *இல்லியாட்* மற்றும் *ஒடிசியை* ஒன்று சேர்த்தாலும், அதை காட்டிலும் இந்த *ரிக் வேத சம்ஹிதையானது* நீளமாக இருக்கிறது. வரிசை க்ரமத்தில் *சம்ஹிதைகளுக்கு* பின்பாக *பிராமணங்களும்*, அதன் பின்னர் *ஆரண்யகங்களும்*, இறுதியாக *உபநிடதங்களும்* தோன்றின. *வேதாந்தம்* என்றும் *உபநிடதங்கள்* அழைக்கப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *சுருதி, வேதம்.*

Ṛiṇamochana Gaṇapati: ऋणमोचनगणपति "The remover of bondage" ***ருணமோசனகணபதி.*** "பந்தத்தில் இருந்து விடுவிப்பவர்." அவர் தனது கைகளில் ஒரு பாசம், அங்குசம், பாலைப் போன்று வெண்மையான தந்தம் மற்றும் அவருக்கு பிடித்தமான நாவல் பழத்தை தாங்கி இருக்கிறார்.

ṛishi: ऋषि "Seer." **ரிஷி**. சூட்சுமமான புலனுணர்வு மற்றும் தொலைநோக்கு மெய்யறிவை வலியுறுத்தும், ஒரு ஞானோதயம் பெற்ற உயிர்சக்தியை குறிப்பிடும்சொல்.

சடங்கு (rite (or ritual)): மதம் தொடர்பான ஒரு விழா. மேலும் தகவலுக்கு: *புனிதமான மத சடங்கு, யாகம், சம்ஸ்காரம்.*

***சமஸ்காரம்* (rites of passage):** ஒருவரது வாழ்க்கையின் முக்கிய தருணங்களில் நடைபெறும் சடங்கு.

உருண்டை (rotundity)

Rudra: रुद्र "Controller of awesome powers;" or "red, shining one." ***ருத்திரன்.*** அழிக்கும் கடவுளாக, மீண்டும் ஒடுக்கிக்கொள்ளும் சக்தியாக இருக்கும் சிவபெருமானின் பெயர். ருத்திரனாக இருக்கும் சிவபெருமான், "அச்சுறுத்துபவராகவும்", "கண்ணீரின் கடவுளாகவும்" இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *நடராசர்.*

rudrāksha: रुद्राक्ष "Eye of Rudra;" or "red-eyed." ***ருத்ராட்சம்***. From *rud,* "to cry," and *aksha,* meaning "eye." இது மூன்றாவது கண் அல்லது *ஆக்ஞா* சக்கரத்தை குறிப்பிடுகிறது. ஒரு கோலிகுண்டு வடிவில், பல்வேறு முகங்களுடன், *எலியோகார்பஸ் கேனிட்ரஸ்* மரத்தின் செம்பழுப்பு நிற விதைகளாக இருக்கும் ருத்திராட்சம் சிவபெருமானிற்கு மனித நேயத்தின் மீதிருக்கும் இரக்கத்தின் சின்னமாக இருப்பதாகவும் கருதப்படுகிறது. பெரிய ருத்ராட்ச விதைகளின் மாலைகளை துறவிகள் தங்கள் கழுத்தில் அணிந்து

கொள்கிறார்கள். பெரும்பாலும் சாதாரண ஆண்கள் மற்றும் பெண்கள் ஒரு ருத்ராட்சத்தை கயிற்றில் கட்டி தங்கள் கழுத்தில் அணிந்து கொள்கிறார்கள். சிறிய மணிமாலைகள் (வழக்கமாக 108) ஜபம் செய்ய பயன்படுத்தப்படுகின்றன. மனித நேயத்தின் அவலநிலையைக் கண்டு சிவபெருமான் சிந்திய கண்ணீர் பூமியில் விழுந்து, அது ருத்ராட்ச மரமாக வளர்ந்ததாகவும் கருதப்படுகிறது. இதனால் இதன் விதைகளை சிவபெருமானின் அன்பு மற்றும் இரக்கத்தின் சின்னமாக இந்துக்கள் அணிந்துக் கொள்கிறார்கள். மேலும் தகவலுக்கு: *ஜபம், மந்திரம்.*

rudrāksha mālā: रुद्राक्षमाला "Garland of Śiva's tears." ***ருத்ராட்ச மாலை.*** வழக்கமாக 108 மணிகளை கொண்ட மணிமாலை. இது மந்திரங்கள் தொடர்ந்து ஜபிக்க பயன்படுத்தப்படுகிறது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஜபமாலையை தரித்துக்கொண்டு, நாம் தினமும் ஜப யோகம் செய்யவேண்டும் என்பதை நினைவூட்டுகிறார். மேலும் தகவலுக்கு: *ருத்ராட்சம்.*



śabda kośa: शब्दकोश "Sheath of sounds, or words." ***ஷப்த கோசம்.*** சொல்லகராதி. சொற்களஞ்சியம் அல்லது நிகண்டு.

புனிதமான மத சடங்கு (sacrament): 1) இது அந்த சடங்கை செய்து பயன் பெறுபவருக்கும் இறைவன், தெய்வங்கள் மற்றும் *குருவிற்கும்* இடையே ஒரு பிணைப்பு உருவாக காரணமாகிறது. இதில் வாழ்க்கையின் முக்கியமான தருணங்களை குறிக்கும் மத சடங்குகளும் (*சம்ஸ்காரம்*) அடங்கும். 2) *பிரசாதம்.* ஒரு புனிதமான விழாவில் அல்லது ஒரு புனிதமான நபரால் நெய்வேத்யம் செய்யப்பட்ட புனிதமான பொருட்கள், அருள் நிறைந்த பரிசுகள். மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம்.*

பூணூல் (sacred thread): *Yajñopavīta. யக்ஞோபவீதம்.* மேலும் தகவலுக்கு: *உபநயனம்.*

sacrifice: *Yajña.* **யக்ஞம், யாகம்.** 1) வழிபாடு மற்றும் பக்தியின் வெளிப்பாடாக ஒரு தெய்வத்திற்கு வழங்கப்படும் படையல். 2) ஒரு உயரிய குறிக்கோளை அடைவதற்கு, தனது உடைமை, அனுகூலம் அல்லது விருப்பத்தை கைவிடுவது. *யாகம்* என்பதற்கு "புனிதமாக்குதல்" என்று பொருள், மற்றும் அது வழிபடுவதை குறிப்பிடுகிறது. இதன் வழக்கமான மொழியப்பெயர்ப்பாக விளங்கும் *யக்ஞய* என்கிற சொல், "வழிபடுதல்," என்பதை குறிக்கும் "*யுஜ்*" என்று சொல்லில் இருந்து உருவானது. இந்து சமயத்தில், வாழ்க்கை முழுவதும் *யாகம்* அல்லது தியாகமாக விளங்குகிறது மற்றும் இதன் மூலம்

உண்மையான ஆன்மீக நிறைவேற்றம் நடைபெறுகிறது. இந்த *யாகம், ஜீவயக்ஞ* என்று அழைக்கப்படுகிறது, மற்றும் ஒருவர் தன்னையே *தியாகம்* செய்தல் என்பது இதன் பொருள். பற்றின்மையின் ஆற்றலாக இருக்கும் *தியாகம்*, உண்மையான *யாகத்தின்* ஒரு அத்தியாவசிய பண்பாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சரணாகதி*.

Sadāśiva: सदाशिव "Ever-auspicious." ***சதாசிவம்.*** "எப்போதும் மங்களகரமான." இது சிவபெருமானின் ஆதி ஆன்மாவை குறிப்பிடும் இன்னொரு பெயராகவும், *சத்குருவின்* தூல உயிர்சக்தியில் வெளிப்படுத்தப்படும் பரமேசுவரனுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லாகவும் விளங்குகிறது. சதாசிவம் மிகவும் முக்கியமாக மூன்றாவது *தத்துவம்*, மற்றும் வெளிப்படுத்தும் அருள் சக்தியான *அனுக்கிரக சக்தியை* குறிப்பிடுகிறது. இதன் பிறகு சிவபெருமானின் மற்ற தெய்வீக சக்திகள் தோன்றுகின்றன. இந்து சமய மந்திரங்கள், இலக்கியம் மற்றும் கலையில் பிரபஞ்சத்தில் கடவுள் மேற்கொள்ளும் நடவடிக்கையின் இந்த ஐந்து வெளிப்பாடு அல்லது தோற்றங்கள் ஐந்து-முகங்களை கொண்ட சதாசிவமூர்த்தியாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *பரமேசுவரன்*, *தத்துவம்*.

sādhaka: साधक From *sadh,* "going straight to the goal." ***சாதகன்.*** சாதகன். "இலக்கை நோக்கி நேராக செல்பவன்" என்பது இதன் பொருள். ஆன்மீக நாட்டம் உள்ளவர்; *சாதனா* செய்யும் ஒரு பக்தன். தீவிரமான நாட்டத்துடன் ஆன்மீக பயிற்சிகளை மேற்கொள்பவர், மற்றும் இவர் பொதுவாக பிரம்மச்சாரியாக இருந்து, ஒரு குருவின் வழிகாட்டலின் கீழ் செயல்படுபவர். அவர் வெள்ளை உடை அணிந்து எளிய விரதங்களை மேற்கொள்வார், ஆனால் அவர் ஒரு *யோகியாகவோ* அல்லது *சந்நியாசியாகவோ* இருப்பதில்லை. மேலும் தகவலுக்கு: *சாதனை*.

sādhana: साधन "Effective means of attainment." ***சாதனா.*** சாதனை. "பயனுள்ள முறையில் *சித்தி* பெறுதல்." சுய-முயற்சி, ஆன்மீகப் பயிற்சி; முன்னேறும் பாதை. *பூஜை, யோகம், தியானம், ஜபம், விரதம் மற்றும் பிராயச்சித்தம்* போன்று மதம் சார்ந்த அல்லது ஆன்மீக பயிற்சிகள். *சாதனா* என்பது தனக்குள் மற்றும் கடவுள், தெய்வங்கள் மற்றும் குருவின் மீது அர்ப்பணிப்பு, விசுவாசம் மற்றும் நம்பிக்கையை உருவாக்குகிறது. மேலும் தகவலுக்கு: *பாதம், இராச யோகம், ஆன்மீக விரிவாக்கம்*.

sādhu: साधु "Virtuous one; straight, unerring." **சாது.** "நற்பண்புடன் இருப்பவர்; தவறு செய்யாது நேர்மையாக இருப்பவர்." இறைவனை தேடும் வேட்கையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு மகான். ஒரு சாது என்பவர் ஒரு *யோகி* அல்லது *சந்நியாசி*, ஒரு குருவின் கீழ் சீடனாகவோ அல்லது முறையான பரம்பரை சார்ந்தவராக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. சாதுக்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடம் என்று

எதுவும் இருப்பதில்லை மற்றும் அவர்கள் ஒரு இடத்தில் இருந்து இன்னொன்றுக்கு பயணம் செய்துக்கொண்டு, பெரும்பாலும் யாசகம் செய்து வாழ்ந்துக்கொண்டு இருப்பார்கள்.

sādhvī: साध्वी ***சாத்வி.*** சாதுவின் பண்புடன் இருக்கும் ஒரு பெண். மேலும் தகவலுக்கு: *சாது.*

Saguṇa Brahman: सगुणब्रह्मन् Brahman "with qualities." ***சகுண பிரம்மன்.*** சிவபெருமானின் முழுமைகளை குறிக்கும் சொல். இது சச்சிதானந்தம், மகேசுவரன், ஆதி ஆன்மா மற்றும் தெய்வீக பண்புடன், எல்லாம் அறிந்து, எல்லோர் மீதும் அன்பு செலுத்தி, சர்வ வல்லமையுடன் இருக்கும் அவரது தெய்வீக மனதின் பகுதியை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *பிரம்மன்.*

sahasrāra* chakra:** सहस्रारचक्र "Thousand-spoked wheel." ***சஹஸ்ரஹார சக்கரம். "ஆயிரம் ஆரைக்கால்களைக்கொண்ட சக்கரம்." மண்டை ஓட்டில் இருக்கும் சூட்சுமமான விசை மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

Śaiva: शैव "Auspicious." **சைவம்.** "மங்களகரமான." தற்போது உலகில் 400 மில்லியனாக இருக்கும் சைவர்கள் அல்லது சைவ சமயம் தொடர்பான ஒன்றை குறிப்பிடுவதற்கு பயன்படும் சொல். மேலும் தகவலுக்கு: *சைவ சமயம்.*

Śaiva Ātmārtha Pūjā: शैव आत्मार्थ पूजा. ***சைவ ஆத்மார்த்த பூஜை.*** மேலும் தகவலுக்கு: *பூஜை.*

Śaiva Siddhānta: शैवसिद्धान्त "Final conclusions of Śaivism." **சைவ சித்தாந்தம்**. இன்றைய காலகட்டத்தில் குறிப்பாக இலங்கை மற்றும் தென்னிந்திய மக்களிடம் முதன்மையானதாகவும், உலகெங்கும் பிரபலமானதாகவும் சைவ சமயத்தின் ஆற்றல்மிக்க பிரிவாகவும் விளங்குகிறது. இது தெய்வீக வெளிப்பாடுகளின் முறைப்படுத்தப்பட்ட வேத சாத்திரம் ஆகும் மற்றும் இது இருபத்தி எட்டு *சைவ ஆகமங்களில்* உள்ளடங்கியுள்ளது. எல்லா இருப்புக்களின் சாரமாக விளங்கும் சிவபெருமான் *பரமேசுவரன்* (தனிப்பெரும் உருவாய் இருக்கும் சிருஷ்டிகர்த்தா), *பராசக்தி* (உருவத்தின் ஆதாரத்தளமாக), *பரசிவ* (எல்லாம் கடந்து இருக்கும் முழுமுதற்பொருளாக) என்று சைவ சித்தாந்திகளுக்கு மூன்று முழுமைகளாக அறியப்படுகிறார். ஆன்மாக்கள் மற்றும் உலகம் சிவபெருமானுடன் சாரத்தில் ஒன்றாக இருந்தாலும், அவை வேறுபட்டு இருப்பதால் முதிர்ச்சி பெறுகின்றன. அகோரசிவா மற்றும் மெய்கண்டாரின் போதனைகளில் இருந்து வரலாற்றின் இடைக்காலங்களில் ஒரு பன்மைவாத பிரிவு தோன்றியது. இவை சிவபெருமானுடன் ஆன்மாக்கள் நிச்சயமாக நிறைவான ஒருமை அல்லது ஐக்கியத்தை பெறுகின்றன என்பதை மறுக்கின்றன. மேலும் தகவலுக்கு: *சைவம்.*

சைவ சித்தாந்த யோக சமூகம் (Śaiva Siddhānta Yoga Order): சைவ சித்தாந்த தேவாலயத்தில் வாழ்நாள் முழுவதும் தங்களை துறவிகளாக அர்ப்பணித்தவர்களின் சங்கம். இந்த சங்கத்தை சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி 1949 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்.

Śaivism ***(Śaiva):*** शैव. **சைவம்**. சிவபெருமானை பரமாத்துமாவாக வழிபடுபவர்களின் சமயம். இந்து தர்மத்தின் நான்கு பிரிவுகளில் மிகவும் பழமையானது. சைவ சமயத்தின் முதல் சான்றாக, ஒரு யோகியின் தோரணையில் பசுபதியாக அமர்ந்திருக்கும் சிவபெருமானை கொண்ட முத்திரை, 8000 வருடங்களுக்கு முந்தைய சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்டது. இராமாயணத்தில் ஸ்ரீ ராமரும், அவரது எதிரியான இராவணனும் சிவபெருமானை வழிபட்டனர். புத்தர் கி.மு. 624 ஆம் ஆண்டில் ஒரு சைவ சமய அரசர் குலத்தில் இந்து இளவரசராக பிறந்தார். இன்று போல அவர் காலத்திலும் சைவ சமய துறவிகள் மலைகளில் சுற்றித் திரிந்ததாக, அவரைப் பற்றிய வரலாறு குறிப்பிடுகிறது.

Śaivite ***(Śaiva):*** शैव. **சைவ சமயத்தை சார்ந்தவர்** அல்லது சார்ந்தது. இன்று உலகெங்கும் 400 மில்லியன் மக்கள் சைவ சமயத்தை பின்பற்றி வருகிறார்கள். மேலும் தகவலுக்கு: *சைவம்.*

சைவத் துறவிகள் (Śaivite saints): மேலும் தகவலுக்கு: *நாயனார்.*

śākāhāra: शाकाहार "Vegetarian diet." ***ஷாகாஹார***. சமஸ்கிருதத்தில் *ஷாகா* என்றால் "காய்கறி", மற்றும் *ஆஹார* என்றால் "உணவு உண்பவர்" என்று பொருள். மேலும் தகவலுக்கு: அசைவ உணவு உண்பவர், *சைவ உணவு உண்பவர், இயமம்-நியமம்.*

Śākta: शाक्त "Powerful," Of or relating to *Śāktism.* ***சாக்தம்***. "வலுவான." சாக்த சமயம் சார்ந்த. சாக்த இந்து சமயத்தை பின்பற்றுபவர். மேலும் தகவலுக்கு: *சாக்த சமயம்.*

śakti: शक्ति "Power, energy" (from the root *śak,* "to be able"). **சக்தி**. "ஆற்றல்." சிவபெருமானின் இந்த துடிப்புள்ள அல்லது வெளிப்படையான சக்தி, எல்லா இருப்பிலும் வியாபிக்கிறது. எல்லா உருவங்களின் முதன்மை ஆதாரத்தளமாகவும் புனிதமான உணர்வாகவும் விளங்கும் பராசக்தி என்கிற சச்சிதானந்தம், *சக்தியின்* மிகவும் புனிதமான அம்சமாக விளங்குகிறது. சைவ சித்தாந்தத்தில், சிவபெருமான் எல்லாமாக இருக்கிறார், மற்றும் அவரது தெய்வீக ஆற்றலாக இருக்கும் *சக்தி*, அவரிடம் இருந்து பிரிக்க முடியாததாக இருக்கிறது. *சக்தி* என்பது உயர்வானதாக, பேரின்பத்தை தூண்டிவிடும் ஆற்றலாக பக்தர்களால் மிகவும் எளிதாக அனுபவிக்கப்படுகிறது மற்றும் அது ஒரு மகான் அல்லது புனிதமான இந்து கோயிலில் இருந்து வெளிவருகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, பராசக்தி, சாக்தம்.*

Śakti Gaṇapati: शक्तिगणपति "The powerful" is four-armed and seated with *Śakti* on His knee. ***சக்தி கணபதி.*** "வலுவாக" நான்கு கரங்களுடன் தனது மடியில் சக்தியுடன் இவர் அமர்ந்து இருக்கிறார். அவர் ஒரு கையில் மாலையை தரித்து இருக்கிறார். அவர் இன்னொரு கையில் *அபய முத்திரையுடன்* காட்சி அளிக்கிறார்.

Śaktis: शक्ति "Consorts." **சக்திகள்**. "வாழ்க்கைத்துணைகள்." அன்பான விநாயகர் பெரும்பாலும் இரு பெண் வாழ்க்கைத்துணைகள் அல்லது சக்திகளுடன் காட்சி அளிக்கிறார். அவை *இடா* மற்றும் *பிங்கலா* என்ற இரு உயிரோட்டங்களை பிரதிபலித்து, நம்மை பூலோகத்திற்கு அருகாமையில் வைத்து இருக்கும் உணர்ச்சி மற்றும் புத்தியையும் பிரதிபலிக்கின்றன.

Śāktism *(Śākta):* शाक्त "Doctrine of power." **சாக்தம்** அல்லது சாக்த சமயம். மென்மையாகவும் ஆக்ரோஷமாகவும் பல உருவங்களில் சக்தி அல்லது தேவியாக இருக்கும் தெய்வீகத் தாயை கடவுளாக வழிபடுபவர்களின் சமயம். இந்து தர்மத்தில் இருக்கும் நான்கு முக்கிய பிரிவுகளில் ஒன்றாக சாக்த சமயம் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சக்தி, தாந்திரீகம்.*

śālipallava: शालिपल्लव "Rice sprig." ***சாலிபல்லவ.*** "நெற்கதிர்."

samādhi: समाधि "Enstasy," which means "standing within one's Self." "Sameness; contemplation; union, wholeness; completion, accomplishment." ***சமாதி.*** "ஒற்றுமை; தாரணை; ஐக்கியம், முழுமை; நிறைவு, நிறைவேற்றம்." *சமாதி* என்கிற உண்மையான *யோக* நிலையில், தியானம் செய்பவரும் தியானம் மேற்கொள்ளப்படும் பொருளும் ஒன்றாக இருக்கின்றன. *சமாதி* இரண்டு நிலைகளை கொண்டது. இதில் முதலாவதாக இருக்கும் *சவிகல்ப சமாதி* (உருவம் அல்லது விதையில் நிலைத்து இருத்தல்), ஒரு பொருளின் சாரத்துடன் அடையாளம் அல்லது ஒருமையை காண்பது ஆகும். இதன் மிகவும் உயர்ந்த நிலையாக முதன்மை ஆதாரத்தளம் அல்லது தூய உணர்வு என்கிற சச்சிதானந்தம் விளங்குகிறது. இரண்டாவதாக பரமாதத்துமாவுடன் அடையாளம் காணும் *நிர்விகல்ப சமாதி* (உருவம் அல்லது விதை இல்லாமல் நிலைத்து இருத்தல்) விளங்குகிறது. இந்த நிலையில் உணர்வின் எல்லா வகைகளையும் கடந்து காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து இருக்கும் முழுமுதற்பொருள், பரசிவம் அனுபவிக்கப்படுகிறது. இது தனது பின்விளைவாக உணர்வில் ஒரு முழுமையான மாற்றத்தை கொண்டு வருகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, பரசிவ, யோகம், ஆத்ம ஞானம்.*

sampradāya: संप्रदाय "Tradition," "transmission;" a philosophical or religious doctrine-or lineage. ***சம்பிரதாயம்.*** இது ஒரு தத்துவம் சார்ந்து அல்லது சமய கோட்பாடு அல்லது பரம்பரையாக இருக்கலாம். இது இந்து சமயத்தில் இயங்கிக்கொண்டு இருக்கும்

பாரம்பரியம் அல்லது சாத்திரமாக விளங்கி, வாய்மொழி பயிற்சி மற்றும் தீட்சை மூலமாக கற்றுத் தரப்படுகிறது. “வழங்குதல்,” “கொடுத்தல்,” அளித்தல்; பாரம்பரிய முறையில் அளித்தல். மேலும் தகவலுக்கு: *குரு பரம்பரை.*

saṁsāra: संसार “Flow.” **சம்சாரம்**. நிலையில்லாத தன்மை மற்றும் மாற்றங்கள் நிரம்பி, கூடுவிட்டு கூடு பாயும் இருப்பை கொண்ட ஒரு விந்தையான உலகம். பிறப்பு, மரணம் மற்றும் மறுபிறவியின் சுழற்சி; ஒரு ஆன்மா அனுபவிக்கும் தொடர்ச்சியான லௌகீக வாழ்க்கைகளின் முழுமையான மாதிரி.

saṁskāra: संस्कार “Impression, activator; sanc tification, preparation.” ***சம்ஸ்காரம்.*** “பதிவு, வினையூக்கி; புனிதமாக்கம், முன்னேற்பாடு.” 1) ஒருவரின் வாழ்க்கை, குணம், எதிர்வினைகள், மனநிலைகள் போன்றவற்றில் (இந்த அல்லது இதற்கு முந்தைய பிறவிகளில்) அனுபவத்தின் மூலம் அடிமனதில் பதிந்த பதிவுகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. 2) வாழ்க்கையில் நடைபெறும் முக்கிய மாற்றத்தை குறிப்பிடும் சடங்கு. இதை பெறுபவர் மனதில் இந்த சம்ஸ்காரங்கள் வலுவான மற்றும் நேர்மறையான அபிப்பிராயங்களை உருவாக்கி, குடும்பம் மற்றும் சமூகத்திடம் அதன் உறுப்பினர்களின் வாழ்க்கைகளில் நடைபெறும் மாற்றங்களைப் பற்றி தெரிவித்து அந்தர்லோக அருளை பத்திரப்படுத்துகிறது. மேலும் தகவலுக்கு: *மனம் (ஐந்து நிலைகள், சமயச்சடங்கு.*

Sanātana Dharma: सनातनधर्म “Eternal religion” or “everlasting path.” **சனாதன தர்மம்**. சனாதன தர்மம். இந்து தர்மத்தின் பாரம்பரிய பெயர். மேலும் தகவலுக்கு: *இந்து மதம்.*

Sanātani: सनातनि “Of the eternal.” ***சனாதனி.*** ஒரு இந்து, சனாதன தர்மத்தை பின்பற்றுபவர்.

புனிதமான நீர் (sanctified waters): மேலும் தகவலுக்கு: *பாத பூஜை, பிரசாதம், உச்சிஷ்ட.*

sandalwood: *Chandana.* **சந்தனம்**. பசுமையான *சாண்டலம் ஆல்பம்* (இந்திய சந்தனம்) ஆசிய நாடுகளில் காணப்படுகிறது. வாசனை நிரம்பி இருக்கும் இதன் மர வைரத்தை பொடியாக்கி தயார் செய்யப்படும் கபில நிற சாந்து, சிவன் கோயில்களில் பிரசாதமாக விநியோகம் செய்யப்படுகிறது. இதை நெற்றியில் புனிதமான சின்னமான திலகமாக இந்துக்கள் அணிகிறார்கள். இது சாம்பிராணி தயார் செய்வதற்கும், சிற்பங்கள் செதுக்குவதற்கும், அழகான அலமாரி செய்வதற்கும் புகழ்பெற்றது.

saṅgama: सङ्गम “Association; fellowship.” Also *saṅga.* ***சங்கம்.*** சமயம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு ஒன்றாக கூடுதல். மேலும் தகவலுக்கு: *சத்சங்கம்.*

saṅkalpa: संकल्प “Will; purpose; determination.” ***சங்கல்பம்.*** “விருப்பம்; நோக்கம்; மனஉறுதி.” ஒரு சடங்கு செய்யும் நோக்கத்தை அறிவிக்கும், ஒரு புனிதமான உறுதிமொழி அல்லது அறிவிப்பு. பெரும்பாலும் கோயிலில் வழிபட்டு சடங்கை

தொடங்குவதற்கு முன்பாக, பூசாரி தான் செய்யும் *கிரியையின்* விளக்கம் மற்றும் நோக்கத்தை கூறி, அதை செய்து முடிப்பேன் என்று அவர் மூன்று லோகங்களுக்கும் சொல்வதாக *சங்கல்பம்* அமைத்திருக்கும். தான் வழிபடப்போகும் தெய்வம் மற்றும் தான் செய்யப்போகும் சடங்கின் பெயர் மற்றும் பஞ்சாங்கத்தில் இருக்கும் அன்றைய துல்லியமான குறிப்புக்கள் மற்றும் இடம் பற்றி தெளிவாக உச்சரிப்பார். *சங்கல்பம்* சொல்லி முடித்ததும், அந்த சடங்கை செய்து முடிக்க வேண்டியது அவரது கடமையாகிறது. மேலும் தகவலுக்கு: *பூஜை.*

Śaṅkara: शङ्कर "Conferring happiness; propitious." ***சங்கர***. "மகிழ்ச்சியை வழங்குபவர்; அனுகூலமான." சிவபெருமானை குறிப்பிடும் இன்னொரு பெயர். மேலும் இது ஆதிசங்கரர் பகவத்பாதாளையும் (788–820) குறிப்பிடுகிறது. இவர் சுமார்த்த சம்பிரதாயத்தின் முக்கிய *குருவாக*, தனது ஒருமைவாத (அத்வைத வேதாந்தம்) தத்துவத்திற்கு, சாஸ்திரம் சார்ந்த உரைகளுக்கு மற்றும் இந்தியா முழுவதும் பயணம் செய்து நான்கு மடங்களை அமைத்து, *தசனாமி சம்பிரதாயத்தை* ஒழுங்குபடுத்தியதற்காக புகப்பெற்றவர். அவர் வாழ்ந்தது 32 வருடங்களாக இருந்தாலும், இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு, அப்போதைய இந்து உலகை மாற்றி அமைத்தார். மேலும் தகவலுக்கு: *வேதாந்தம்.*

Saṅkaṭahara Gaṇapati: संकटहरगणपति. ***சங்கடஹர கணபதி.*** "துயர் துடைக்கும்" கணபதி. இவர் செங்கமலத்தில் அமர்ந்து, கையில் ஒரு பாயசக் கிண்ணத்தை தரித்துக்கொண்டு, *வரத* முத்திரையுடன் காட்சி அளிக்கிறார்.

śaṅkha: शङ्ख "Conch." ***சங்கு.*** கடல் வாழ் நத்தையின் கூடாக இருக்கும் சங்கு உள்பொருளின் மூலத்தை குறிக்கிறது. சங்குகளில் வலம்புரி மற்றும் இடம்புரி என்று இருவகை சங்குகள் உள்ளன. இது பழங்காலத்தில் போரில் வெற்றியை அறிவிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. இது இன்று இந்து கோயில்களில் நடைபெறும் பூஜைகளில் தெய்வத்திற்கு ஆரத்தி காண்பிக்கும் போது ஒலிக்கப்படுகிறது. தெய்வத்தின் கரங்களில் இருக்கும் இந்த சங்கில் இருந்து எழும் ஒலியானது, தீய சக்திகளில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் மங்களகரமான ஒலியாக விளங்குகிறது.

San Mārga: सन्मार्ग "True path." ***சன் மார்க்கம்***. இது குறிப்பாக சைவ சித்தாந்தத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. 1) இது பொதுவாக தேவையற்ற மனோஉணர்வு ஆய்வுகள் மற்றும் காரணம் இல்லாமல் *சித்திகளை* அடைய முயற்சி செய்யாமல், நேராக முடிவான குறிக்கோளாக விளங்கும் ஆத்ம ஞானத்தை நோக்கி செல்லும் பாதையை குறிக்கிறது. *சன் மார்கி* என்பது "பாதையில் முன்னேறிக் கொண்டு" இருக்கும் நபரை குறிக்கிறது. *சம்சாரி* என்பது லௌகீகத்தில் உழல்பவரை

குறிக்கிறது. 2) *ஞான பாதத்தை* குறிப்பிடவும் *சன் மார்கம்* பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *முக்தி*, *பாதம்*.

San Mārga Sanctuary: சன் மார்க சரணாலயம். ஹவாய் தீவுகளில் கார்டென் ஐலான்ட் என்று அழைக்கப்படும் கவாய் தீவில், கவாய் ஆதீனத்தில் அமைந்து இருக்கும் ஒரு சரணாலயம். இது சிவபெருமான் (பரமேசுவரன்-பராசக்தி-பரசிவ) மற்றும் இறைவன் கோயிலை நோக்கி நம்மை அழைத்து செல்லும் ½ மைல் நேரான பாதையின் மையத்தில் அமைந்து இருக்கிறது. இந்த கோயிலின் கருவறையில், கூர் முனையுடன் 700 பவுண்ட் எடையுள்ள எர்த்கீப்பர் பளிங்கு படிகத்தில் அமைந்த சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது.

sānnidhya: सान्निध्य "(Divine) presence; nearness, proximity." ***சான்னித்தியம்.*** "தெய்வீக இருப்பு; அருகாமை, நிரந்தரமாக வாசம் செய்கிற." ஒரு கோயில் அல்லது தெய்வீக புருஷரை சுற்றி அல்லது அவற்றுள் இருக்கும் சக்தியின் பிரகாசமான மற்றும் புனிதமான இருப்பு.

sannyāsa: संन्यास "Renunciation." "Throwing down or abandoning." **சந்நியாசம்**. "துறவறம்." *சந்நியாசம்* என்பது இல்லற பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை உள்ளடக்கிய *தர்மத்தை* நிராகரித்து, மேலும் அதிகமான நிபந்தனைகள் நிறைந்த *சந்நியாச தர்மத்தை* ஏற்றுக்கொள்வதாகும். மேலும் தகவலுக்கு: சந்நியாசி.

sannyāsin: संन्यासिन् "Renouncer." **சந்நியாசி**. சம்பிரதாய முறைப்படி *சந்நியாச தீட்சையை* பெற்று அல்லது எளிமையான முறையில் அருளாசியை பெற்று துறவற வாழ்வில் நுழையும் ஒரு அன்பர். இதனால் அவர் வாழ்நாள் முழுவதும் புலனடக்கம், ஏழ்மை மற்றும் கீழ்ப்படிதல் போன்ற விரதங்களை அனுட்டானம் செய்து, ஆத்ம ஞான பாதையில் இயக்கப்படுகிறார். ஒரு இந்து துறவி, *சுவாமி*, மற்றும் *சந்நியாசிகள்* சமூகத்தை சேர்ந்தவர். மேலும் தகவலுக்கு: *சுவாமி*.

Sanskrit *(Saṅskṛita):* संस्कृत "Well-made;" "refined," "perfected." **சமஸ்கிருதம்**. "நன்றாக உருவாக்கப்பட்ட," "புனிதமான," "பூரணமான." இது பழங்கால இந்தியாவின் பாரம்பரிய சமயகுருமார்களின் மொழியாகவும், சொர்க்க லோகங்களுடன் தொடர்பு கொள்ளும் ஒரு புனிதமான சாதனமாகவும் கருதப்படுகிறது. இது *வேதங்கள்* மற்றும் *ஆகமங்கள்* உட்பட, இந்து சாத்திரங்கள் எழுதப்பட்ட முதன்மையான மொழி ஆகும். இன்று பேச்சு வழக்கில் இல்லாவிட்டாலும் வழிபாட்டு முறை, இலக்கியம் மற்றும் கல்வியில் தீவிரமாக ஆய்வு மேற்கொள்ளும் மொழியாக இருக்கிறது.

sant: सन्त् “Saint.” ***சந்த்.*** “சாது.” இது “உண்மை; யதார்த்தம்” என்று பொருள்படும் *சமஸ்கிருத* மொழியின் *சத்* என்ற சொல்லில் இருந்து தோன்றிய இந்தி அல்லது வட்டார பேச்சு வழக்கில் இருக்கும் ஒரு சொல்.

śānti: शान्ति “Peace.” ***சாந்தி***. “அமைதி.”

śara: शर “Arrow.” ***ஷர***. “அம்பு.” அன்பான விநாயகர் சிந்தனை மீது வலுவான கட்டுப்பாட்டை பெற்று இருப்பதால், ஒவ்வொன்றும் தனது இலக்கை அடைகின்றன. வில்லை இழுத்து அம்பை குறி வைப்பதன் மூலம், எல்லா நடவடிக்கைகளையும் நல்ல நோக்கங்களுடன் தொடங்கவேண்டும் என்பதை அவர் நமக்கு அறிவுறுத்துகிறார்.

śaraṇa: शरण “Refuge.” **சரணம்**. “அடைக்கலம்.”

Sarasvatī: सरस्वती “The flowing one.” **சரஸ்வதி**. ஆறு போல் பாய்ந்து செல்லக்கூடிய.” கலை மற்றும் கல்வியின் தெய்வமாக இருக்கிறாள். அவள் சத்யலோகத்தில் பிரம்மதேவனுடன் வாசம் செய்கிறாள். சரஸ்வதி தேவி, வழக்கமாக ஒரு வெள்ளைநிற புடவையுடன் ஒரு அன்னப்பறவை அல்லது தாமரை மலர் மீது அமர்ந்து இருப்பதாக சித்தரிக்கப்பட்டு இருப்பாள். கலை, கலாச்சாரம் மற்றும் கல்வியை மேம்படுத்த, சரஸ்வதி தேவியை மக்கள் வழிபடுகிறார்கள். *ரிக் வேதம்* ஏழு புனிதமான நதிகளில் (சப்த சிந்து) ஒன்றாக *சரஸ்வதியை* குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: அம்மன், *சக்தி*.

sārī: (Hindi, साड़ी) ***புடவை.*** இது ஒரு பெண்மணி அணியும் பாரம்பரிய ஆடை. இது வழக்கமாக பருத்தி நூல் அல்லது பட்டு நூலால் பல நிறங்களில் உருவாக்கப்பட்ட, நீண்ட மற்றும் தைக்கப்படாதத் துணியாக இருக்கிறது. இதை இந்தியா மற்றும் இலங்கையில் இருக்கும் பெண்கள் உடுத்திக்கொள்ள பல்வேறு முறைகளை பயன்படுத்துகின்றனர்.

śaśikalā: शशिकला “Period of the moon.” ***சசிகலா.*** இது குறிப்பாக சிவபெருமானின் தலையில் இருக்கும் பிறை சந்திரன். இது கிருஷ்ண பக்ஷத்தில் இரண்டாம் நாள் நிலவை குறிக்கிறது.

śāstra: शास्त्र “Sacred text; teaching.” ***சாஸ்திரம்*** அல்லது ***சாத்திரம்***. “புனிதமான உரை; போதனை.” 1) சமயம் அல்லது தத்துவம் சார்ந்த கட்டுரை அல்லது நூல்கள். 2) மதத்தில் இருக்கும் விதிமுறைகள் பற்றிய *தர்ம சாத்திரங்கள்*, அரசியல் பற்றிய *அர்த்த சாத்திரங்களை* போன்று ஒரு அறிவியல் துறை, ஒரு அறிவியல்.

Śatapatha Brāhmaṇa: शतपथब्राह्मण “Priest manual of 100 paths.” ***சதபதபிராமண***. “நூறு பாதைகளை கொண்ட பிராமண கிரந்தம்.” இது *சுக்ல யஜூர் வேதத்தின்* துணை நூல் ஆகும். இது இறையியல், தத்துவம் மற்றும் வழிபாட்டு முறைகள் பற்றிய விளக்கங்களை வழங்குகிறது.

satguru (sadguru): सद्गुरु "True weighty one." ***சத்குரு***. *நிர்விகல்ப சமாதியின்* மூலம் பரசிவம் என்கிற முடிவான புரிதலை உணர்ந்து, மிகவும் உயர்ந்த சித்தி மற்றும் ஆற்றலை பெற்ற ஒரு ஆன்மீக குருவாகவும் ஒரு *ஜீவன்முக்தாவாகவும்* இருக்கும் இவர், மற்றவர்களை ஆன்மீக பாதையில் வழிநடத்தி செல்கிறார். அவர் எப்போதும் ஒரு சந்நியாசியாக, திருமணமாகாத ஒரு துறவியாக இருக்கிறார். ஆத்ம ஞானம் பெறுவதற்கு வாழ்ந்துக்கொண்டு இருக்கும் *சத்குருவின்* அருள் மற்றும் வழிகாட்டல் அவசியம் என்று இந்து மதப்பிரிவுகள் அனைத்தும் போதிக்கின்றன. இவர் அருள் மற்றும் முக்தியின் மூலமாக இருக்கும் சதாசிவன், இறைவனின் ரூபமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வணங்கப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *குரு, குருபக்தி, குரு-சிஷ்ய சம்பிரதாயம்*.

satsaṅga: सत्संग "Holy gathering." ***சத்சங்கம்***. கோயில் அல்லது வீட்டில் வழிபாடு, கொண்டாட்டம், சுயநலமற்ற சேவை மற்றும் அதன் சார்ந்த பாரயணங்களுக்காக ஒன்று சேரும் பக்தர்களின் கூட்டணி.

sattva guṇa: सत्त्वगुण "Purity." ***சத்வம்.*** நல்ல அல்லது தூய பண்பு. மேலும் தகவலுக்கு: *குணம்.*

Satya Mantra: सत्य मन्त्र "Sacred syllable of truth." ***சத்ய மந்திரம்.*** *ஓம்*. மேலும் தகவலுக்கு: *ஓம்*.

இரண்டாவது உலகம் (Second World): சூட்சும அல்லது நுணுக்கமான உலகம். உறக்கத்தின் போதும் தூல உடல் இறந்த பிறகும், இந்த உலகில் ஆன்மா தனது நடவடிக்கைகளை தொடர்கிறது. இது தேவலோகம் மற்றும் நரகலோகத்திற்கும் நடுவில் இருக்கும் உலகமாக விளங்குகிறது. முதல் உலகம் அல்லது தூல உலகிற்குள் இரண்டாம் உலகம் இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *லோகம்*.

மத சார்பற்ற (secular): ஆன்மீகம் சாராது லௌகீகம் சார்ந்த; புனிதமாக அல்லது சமயப்பற்றுடன் இல்லாத. தற்காலிகமான அல்லது லௌகீகம் சார்ந்த..

மதசார்பற்ற மனிதாபிமானம் (secular humanism): சமய நம்பிக்கை மற்றும் வழிபாட்டை நிராகரித்து, வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளுக்கு மனிதனைத் தவிர வேறு எதையும் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்ற அமைப்பு.

தீர்க்கதரிசி (seer): ரிஷி. சாதாரண புலனுணர்வின் எல்லைகளை கடந்து பார்க்கும் திறமையுடைய ஒரு விவேகமான மனிதர். மேலும் தகவலுக்கு: *ஆகாசம், ரிஷி*.

பரமாத்துமா (Self (Self God)): சிவபெருமானின் முதல் பூரணத்துவமான முழுமுதற்பொருளாக, ஒவ்வொரு ஆன்மாவின் மையத்தில் வாசம் செய்யும் பரசிவம். மேலும் தகவலுக்கு: *பரமாத்துமன், பரசிவம்*.

சுயமாக அறிவித்துக்கொண்ட சந்நியாசி (self-declared *sannyāsin*): பரமதேசி சந்நியாசின். மேலும் தகவலுக்கு: *சந்நியாசி*.

அடக்கம் (self-effacement): பணிவு, எளிமை; ஒருவர் தனது சாதனைகளுக்கு கிடைக்கும் புகழை தானே ஏற்காமல் கடவுள், சத்குரு மற்றும் மற்ற நபர்களுக்கு காணிக்கையாக்குதல்.

தன்முனைப்பு மற்றும் அடிமனதில் பதிந்து இருக்கும் கடந்த கால கழிவுகளை அழித்தல் அல்லது நீக்குதல் (self-erasement).

ஆத்ம ஞானம் (Self Realization): பரமாத்துமா, பரசிவத்தை நேரடியாக அறிதல். ஆத்ம ஞானம் சமஸ்கிருதத்தில் *நிர்விகல்ப சமாதி* என்று அறியப்படுகிறது; "உருவம் அல்லது விதை இல்லாத சமாதி;" முடிவான ஆன்மீக *சித்தி* (*அசம்பிரஞாத சமாதி* என்றும் அழைக்கப்படுகிறது). உச்சந்தலையில் இருக்கும் *சஹஸ்ரஹார சக்கரத்தை* சூட்சுமமான *குண்டலினி சக்தி* துளைக்கும் போது, இந்நிலை மறைஞானரீதியாக சித்தியாகிறது. மேலும் தகவலுக்கு: *இறைவனை உணர்தல், முக்தி, குண்டலினி, பரசிவம், இராச யோகம், சமாதி*.

sentamarai: செந்தாமரை "Red lotus flower."

பிரிதல் (severance): துண்டித்தல்.

ஷாமன மதம் (Shamanism): இந்த சைபீரிய பழங்குடியினர் சொல், "துறவி" என்பதை குறிக்கும் சமஸ்கிருத சொல்லான *"ஸ்ரமன"* என்ற சொல்லை போன்று உள்ளது. சமஸ்கிருதத்தில் *ஸ்ரம்* என்றால் "கடுமுயற்சி செய்பவர்" என்று பொருள். மாற்றி அமைக்கப்பட்ட உணர்வு அல்லது நினைவு இழந்த நிலையில் இருக்கும் போது ஷாமன்கள் எனப்படும் பூசாரிகள், மனிதன் மற்றும் தெய்வீக சக்திகளுக்கு இடையில் செயல்பட்டு, நல்ல மற்றும் தீய சக்தியை தொடர்புக்கொண்டு, அவற்றின் மீது தாக்கம் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை கொண்ட சமயம். உலகின் பல்வேறு பழங்குடி மக்களின் நம்பிக்கைகள் மற்றும் தோன்றிய மண்ணில் வழக்கத்தில் இருக்கும் இறைநம்பிக்கைகளை விவரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *சாக்தம், சமாதி*.

Shaṇmukha: ಶಣ್ಮುಖ "Six-faced." ***சண்முகம்.*** முருகப்பெருமான் அல்லது கார்த்திகேயனிடம் இருக்கும் பல்வேறு தெய்வீக சக்திகளை குறிப்பிடும் பெயர். மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்*.

shaṭkoṇa: ಷಟ್ಕೋಣ "Six-pointed star" ***ஷட்கோணம்***. ஆறு முனைகளுடன் இருக்கும் வடிவம். இது ஒன்றோடு ஒன்று பிணைந்த இரண்டு முக்கோணங்கள் மூலம் உருவாக்கப்படுகிறது. இதில் மேல் முக்கோணம் சிவபெருமானின் யாவும் கடந்த தெய்வீக பண்பை குறிக்கிறது மற்றும் கீழிருக்கும் முக்கோணம் சிவபெருமானின் வெளிப்பட்ட ஆற்றலான சக்தியை குறிக்கிறது. முருகப்பெருமானது *யந்திரத்தின்*

அங்கமாக *ஷட்கோணம்* விளங்குகிறது. இதைப் போன்று யூத மதத்தில் இருக்கும் ஸ்டார் ஆப் டேவிட் காட்சி அளிக்கிறது. மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்.*

மூடிய (shrouded): மறைத்த, பாதுகாக்கப்பட்ட, தடுக்கப்பட்ட, புகலிடம் வழங்கப்பட்ட.

siddhānta: सिद्धान्त "Final attainments" or "conclusions." ***சித்தாந்தம்.*** அறிவை வழங்கும் எந்த ஒரு துறையிலும் முடிவாக கிடைக்கும் புரிதல் சித்தாந்தம் என்று அழைக்கப்படுகிறது.

siddha: सिद्ध. ***சித்தர்.*** "பூரணமானவர்" அல்லது சிறப்பாக தேர்ச்சி பெற்ற *யோகி*, மிகப்பெரிய ஆன்மீக *சித்தி* அல்லது சக்திகளை பெற்ற நபர். மேலும் தகவலுக்கு: *சித்தி, சித்த யோகம்.*

siddha yoga: सिद्धयोग "Yoga of perfected attainment or of supernatural powers." **சித்த யோகம்.** முழுமையான சித்தி அல்லது தெய்வீக சக்திகளின் யோகம்." 1) பரசிவத்தை அடைந்த சாதகர்களின் வாழ்முறையை விளக்க *திருமந்திரம்* மற்றும் சைவ சாத்திரங்கள் பயன்படுத்தும் சொல். சித்த யோகம் என்பது அட்டமா சித்திகளை போன்று மந்திர வித்தை அல்லது சூட்சும சக்திகள் அல்லது *சித்திகள்* வளர்த்துக்கொள்வதை குறிக்கிறது. குறையில்லாத இறை உணர்வில் வாழ வேண்டும் என்பதற்காக, இந்த மிகவும் உன்னதமான யோகமானது உடல், மனம் மற்றும் உணர்ச்சிகளின் வலுவான நிலைமாற்றத்தை நாடுகிறது. 2) சில இரசவாதிகள் மேற்கொள்ளும் மிகவும் மேம்பட்ட பயிற்சிகள். மேலும் தகவலுக்கு: *சித்த யோகி, சித்தி.*

siddhi: सिद्धि "Power, accomplishment; perfection." **சித்தி**. "ஆற்றல், சாதனை; பூரணத்துவம்." இது வழக்கமாக தொடர்ச்சியான தியானத்துடன் திட்டமிட்டு, உடலை வருத்தி, பெரும்பாலும் அசௌகரியமான *தபஸ்* மூலம் வளர்க்கப்பட்ட அல்லது ஆன்மீக பக்குவம் மற்றும் *யோக சாதனா* மூலம் இயல்பாக தூண்டப்பட்ட ஆன்மாவின் விசேஷமான சக்திகளை குறிப்பிடுகிறது. தொடர்ந்து ஆத்ம ஞானத்தை அனுபவிப்பதால், ஒருவரது தேவைகளுக்கு ஏற்ப *சித்திகள்* தானாக விரிவாக்கம் பெறுகின்றன. சித்திகள் அகங்காரத்தை வளர்ப்பதுடன் இறைவன், மகாதேவர்கள் மற்றும் குருவின் விருப்பத்திற்கு முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும் *பிரபத்தி* நிலை அடைவதை எதிர்ப்பதால், இவற்றை ஆத்ம ஞானம் பெறுவதற்கு முன்பாக பயன்படுத்துவது அல்லது வளர்ப்பது ஒருவரது பாதையில் மிகப்பெரிய தடையாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *அஷ்டவிபூதி.*

Siddhi* and *Buddhi: सिद्धि बुद्धि "Attainment and Wisdom;" ***சித்தி*** மற்றும் ***புத்தி.*** அன்பான விநாயகரின் இரு அடையாள சக்திகள்.

Siddhidātā: सिद्धिदाता "Giver of success, fulfillment," ***சித்திதாதா.*** "வெற்றி, சித்தியை வழங்குபவர்." அன்பான விநாயகரை குறிக்கும் பெயர்.

Siddhi Gaṇapati: सिद्धिगणपति ***சித்தி கணபதி.*** பாரம்பரிய விநாயகர் *மூர்த்தி* அல்லது உருவத்தின் பெயர். சித்தி கணபதி தனது கைகளில் ஒரு பூங்கொத்து, கோடாரி, மாம்பழம், கரும்பு மற்றும் துதிக்கையில் இனிய எள் உருண்டையை வைத்து இருக்கிறார்.

Sikhism: "Discipleship." ***சீக்கிய சமயம்.*** சீக்கியர்கள் என்றால் குருவின் "மாணவர்கள் அல்லது சீடர்கள்" என்று பொருள். சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய, இந்த சமயத்தை குரு நானக் தோற்றுவித்தார். இதை ஒன்பது மில்லியன் மக்கள் பின்பற்றுகிறார்கள். சீர்திருத்தங்கள் நிறைந்த இந்த சமயத்தில் உருவ வழிபாடு மற்றும் சாதிகள் இல்லை. இதன் புனித நூலாக ஆதி கிரந்த் விளங்குகிறது, மற்றும் சீக்கியர்களின் புண்ணிய தலமாக அம்ரித்சரஸ் பொற்கோயில் விளங்குகிறது.

பாபம் (sin): தெய்வீக விதியை திட்டமிட்டு மீறுதல். இந்து சமயம் பாபத்தை தெய்வத்திற்கு எதிரான குற்றமாக கருதாமல், தர்மம் என்ற ஒழுங்குமுறை மற்றும் தனது ஆத்மாவிற்கு எதிரான செயலாக கருதுகிறது. இளம் ஆத்மாக்கள் *அவித்யை* என்ற அறியாமை இருளில் வாழ்வதால், அவர்கள் தவறு செய்வது துர்பக்கியமாக இருந்தாலும், அது அவர்களின் இயற்கை என்று இந்து தர்மம் கருதுகிறது. பாபம் என்கிற அதர்ம செயலுடன் எதிர்மறை விளைவுகளும் தோன்றுகின்றன. இந்து சமயத்தில் *இயல்பான பாவம்* அல்லது *கொடும் பாவம்* போன்ற கோட்பாடுகள் இல்லை. மேலும் தகவலுக்கு: *ஒளிஉடல், தீவினை, கர்மவினை, பாபம்.*

sindūra: सिन्दूर "Red lead, vermillion." *(Sindūr* in Hindi.) ***சிந்தூரம்.*** செந்தூரம். தெய்வீக சிலையின் நெற்றியில் இடும் சைவ நிறப்பொட்டு அல்லது திலகம். மேலும் தகவலுக்கு: *திலகம்.*

Siṅha Gaṇapati: सिंहगणपति "The lionine one" ***சிம்ம கணபதி.*** ஒரு சிங்கத்தை வாகனமாக கொண்டு, இன்னொரு சிங்கத்தை கையில் பிடித்துக்கொண்டு இருக்கிறார். இவர் கையில் ஒரு *வீணை*, ஒரு தாமரை மற்றும் இரத்தின கலசத்தை தரித்து இருக்கிறார்.

śishya: शिष्य "A pupil or disciple." ***சிஷ்யன்*** அல்லது **சீடன்.** குறிப்பாக அந்த சீடன் தனது திறமைகளை நிரூபித்து, ஒரு *குருவால்* ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்கவேண்டும்.

Śiva: शिव "The auspicious, gracious or kindly one." **சிவபெருமான்**. "மங்களகரமானவர்," "கருணை நிறைந்தவர்," அல்லது "கனிவானவர்." சைவ சமயத்தின் பரமனாக விளங்குகிறார். சிவபெருமான் எல்லாமாக இருந்து, ஒரேசமயத்தில் படைப்பவராகவும் படைப்பாகவும், உள்ளார்ந்தும் எல்லாம் கடந்தும் இருக்கிறார். தனிப்பட்ட தெய்வமாக இருக்கும் இவர் படைப்பவராக, காப்பவராக மற்றும் அழிப்பவராக இருக்கிறார். ஒரு தெய்வீக சக்தியாக இருக்கும் இவர், மூன்று முழுமைகளாக அறியப்படுகிறார்: பரமேசுவரன் (ஆதி ஆன்மா), பராசக்தி (தூய உணர்வு) மற்றும் பரசிவம்

(முழுமுதற்பொருள்). மேலும் தகவலுக்கு: *நடராசர், பரமேசுவரன், பராசக்தி, பரசிவம், சைவம்*.

Śivāchārya: शिवाचार्य ***சிவாச்சாரியார்.*** சைவ சித்தாந்த பரம்பரையைச் சேர்ந்த பாரம்பரிய பூசாரிகள். *சிவாச்சாரிய* என்றால் "சிவனை நோக்கி முன்னேறுகிற" என்று பொருள். ஆதிசைவ பிராமணர்களுக்கு வழங்கப்படும் பட்டம். ஆகமதத்தில் *நித்திய பரார்த்த பூஜை* என்று அழைக்கப்படும் பொதுமக்கள் சிவன் கோயில் சடங்குகளை செய்ய தேவையான பயிற்சி *தீட்சைகளை* பெற்ற ஒரு ஆதிசைவ பூசாரி. முழுமையாக தேர்ச்சி பெற்ற சிவாச்சாரியார், *அர்ச்சகர்* என்று அழைக்கப்படுகிறார். இந்த பூசாரி பாரம்பரியத்தின் குலமும் *சிவாச்சாரியார்* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பிரம்மா*.

சிவ உணர்வு (Śiva consciousness): Śivachaitanya. சிவ சைதன்யம். பின்வரும் தியானத்தில் வழங்கப்பட்டுள்ள ஐவகை விளக்கத்தைப் போன்று, பல வழிகளில் சிவனையே நினைத்துக்கொண்டு இருக்கும் அனுபவம் அல்லது நிலையை குறிக்கும் ஒரு பொதுப்படையான சொல். **முக்கிய மூச்சுக்காற்று** (***பிராணன்)*** **(Vital Breath *(prāṇa)):*** சிவபெருமானின் விருப்பமாக உடலுக்குள் ரேச்சகம் மற்றும் பூரகம் நடைபெறுகிறது என்று கருதுங்கள். அவரது தெய்வீக விருப்பமின்றி ஒரு அணுவும் அசையாது என்பதை நினைவில் வைத்து, நித்தியமாக இருக்கும் பிரபஞ்ச துடிப்புடன் இணக்கத்தை பெறுதல். **எங்கும் வியாபித்து இருக்கும் ஆற்றல் (சக்தி) (All-Pervasive Energy (śakti)):** உடலுக்குள் பாய்ந்து செல்லும் உயிர் மீது உணர்வை பெறுங்கள். அதே பிரபஞ்ச சக்தி ஒவ்வொரு உயிரிலும் இருக்கிறது என்பதை உணருங்கள். இன்னொருவரின் கண்களில் இருக்கும் உயிர்சக்தியை காண பயிற்சி மேற்கொள்ளுங்கள். **வெளிப்பட்ட புனிதமான உருவம் *(தரிசனம்)* Manifest Sacred Form *(darśana):*** நடராசர், சிவலிங்கம் அல்லது சத்குருவின் தூல உருவில் இருக்கும் சதாசிவத்தைப் போன்ற ஒரு புனிதமான உருவத்தை மட்டும் உங்கள் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு உருவத்தையும் நமது சிவபெருமானின் உருவமாக கருதுங்கள். **அகத்தில் இருக்கும் ஒளி *(ஜ்யோதி)* Inner Light *(jyoti):*** சிந்தனைகளை ஒளிர்விக்கும் ஒளி மீது கவனம் செலுத்துங்கள். ஒரு தொலைக்காட்சி திரையில் மாறிக்கொண்டு இருக்கும் படங்கள் மீது கவனம் செலுத்தாமல் அதன் ஒளி மீது அதிக கவனம் செலுத்துவதில் நீங்கள் பயிற்சி மேற்கொள்வதைப் போல, அந்த அகத்தின் ஒளி மீது மட்டும் கவனத்தை ஒருமுகப்படுத்துங்கள். **புனிதமான ஒலி *(நாதம்)* Sacred Sound *(nāda):*** தலையில் ஈஈ என்று தொடர்ந்து உயர் ஸ்ருதியில் ஒலித்துக் கொண்டிருப்பதை கேளுங்கள். இது ஒரு மின்சார மின்மாற்றி, தூரத்தில் இசைக்கப்படும் நூறு *தம்புராக்கள்*, ஒரு தேனீக்கள் திரளில் இருந்து வரும் முரல் ஒலியைப் போன்ற தொனியுடன் இருக்கும். மேலும் தகவலுக்கு: *ஞானம், மனம் (ஐந்து நிலைகள்)*.

Śivaliṅga: शिवलिङ्ग "Mark (or sign) of Śiva." ***சிவலிங்கம்.*** மிகவும் பிரபலமாக இருக்கும் இந்த சிவபெருமானின் வடிவம், பெரும்பாலும் எல்லா சிவன் கோயில்களிலும் காணப்படுகிறது. சிவபெருமான் மற்றும் குறிப்பாக உருவங்கள் மற்றும் பண்புகளை கடந்து இருக்கும் பரசிவத்தின் மிகவும் பழமையான மற்றும் எளிமையான உருவமாக சிவலிங்கம் விளங்குகிறது. சிவலிங்கத்தை *பீடம்* மற்றும் *லிங்கம்* என்று இரு வகையாக பிரிக்கலாம். இதில் மேற்புறத்தில் இருக்கும் உருளை, லிங்கம் என்று அழைக்கப்பட்டு, எல்லா உருவங்கள் மற்றும் பண்புகளை கடந்து இருந்து பரசிவத்தை குறிப்பிடுகிறது. லிங்கத்தில் கீழிருந்து மேலே எழும்பி இருக்கும் பகுதி பீடம் என்று அழைக்கப்படுகிறது, மற்றும் இது இறைவனின் ஆற்றலை வெளிப்படுத்தும் பராசக்தியை குறிப்பிடுகிறது. லிங்கம் வழக்கமாக கல்லில் (செதுக்கப்பட்டு இருக்கும் அல்லது விரைந்து ஓடும் ஆற்றை போன்ற இயற்கையின் செயல்களால் தோன்றும் *சுயம்புலிங்கம்*) உருவாக்கப்பட்டாலும் உலோகம், ரத்தினம், படிகம், மரம், மண், உருகும் தன்மையுடைய பனிக்கட்டியாலும் உருவாக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *மூர்த்தி, சைவ சமயம்.*

Śivaloka: शिवलोक "Realm of Śiva." ***சிவலோகம்.*** மேலும் தகவலுக்கு: *லோகம்.*

Śiva-Śakti: शिवशक्ति. ***சிவசக்தி.*** தந்தையாகவும் தாயாகவும் இருக்கும் கடவுள், உள்ளார்ந்தும் யாவும் கடந்த நிலையிலும் இருக்கிறார். இந்த பெயர் வெளிப்படாத தனது தெய்வீக சக்தியையும், வெளிப்பட்ட ஆற்றலையும் சிவபெருமான் உள்ளடக்கி இருப்பதை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *பரமேசுவரன், சிவபெருமான்.*

Śivāya: शिवाय "To Siva." ***சிவாய.*** "சிவபெருமானுக்கு." நான்காம் வேற்றுமையுடன் இருக்கும் சிவபெருமானின் பெயர்.

Skanda: स्कन्द "Quicksilver; leaping one." ***ஸ்கந்தன்.*** கந்தன். கார்த்திகேயனை குறிப்பிடும் மிகவும் பழமையான பெயர்களில் ஒன்று. இவர் ஒண்சிவப்பு சாயலுடன் தேவர்கள் படைத்தலைவராக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்.*

śloka: श्लोक "Verse," from the verbal root, *ślok,* "to compose." ***சுலோகம்.*** வழக்கமாக ஒரு குறிப்பிட்ட எழுத்துக் கணக்கில் அமைந்து இருக்கும் ஒரு செய்யுள், சொற்றொடர், பழமொழி அல்லது துதிப்பாடல். இது குறிப்பாக இரண்டு வரிகளில், ஒவ்வொரு வரியும் பதினாறு எழுத்துக்களை கொண்டு அமைந்து இருக்கிறது. இது *வேதங்கள்* மற்றும் *சம்ஸ்கிருத* இதிகாசங்களான *இராமாயணம்* மற்றும் *மகாபாரதத்தின்* அடிப்படை செய்யுள் வடிவமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சூத்திரம்.*

Smārta: स्मार्त "Of or related to *smṛiti,"* the secondary Hindu scriptures. ***சுமார்த்த.*** "ஸ்ம்ரிதி தொடர்பான." இந்து மத சாத்திரங்கள். மேலும் தகவலுக்கு: *சுமார்த்த சமயம்.*

Smārtism (smārta): ***சுமார்த்த சமயம்***. இவர்கள் ஸ்ம்ரிதியை தங்களது அடிப்படையாக கொண்டவர்கள். நான்கு இந்து பிரிவுகளில் சுமார்த்த சமயத்தை சேர்ந்தவர்கள், ஆறு கடவுளையும் முழுமுதற் கடவுளாக கொண்டு, ஷண்மத உபாசகர்களாக இருக்கிறார்கள். இவர்கள் பழங்கால வைதீக பிராமண பாரம்பரியத்தை சேர்ந்தவர்கள் (சுமார் கி.மு. 700). 9 ஆம் நூற்றாண்டில் இருந்து இந்த சமயத்தின் மீது, ஆதி சங்கரரின் அத்வைத வேதாந்த போதனைகள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி வழிநடத்தி வந்துள்ளன. இதனை பின்பற்றுபவர்கள் குறிப்பாக பழங்கால இதிகாசங்களை சார்ந்து இருக்கிறார்கள். இந்த *இதிகாசங்களில்* இராமாயணம், மகாபாரதம் மற்றும் அதன் அங்கமான *பகவத் கீதை, புராணங்கள்* மற்றும் *தர்ம சாத்திரங்கள்* அடங்கும். இவை *வேதங்களை* புரிந்துக்கொள்வதற்கு பயன்படும் துணை நூல்களாக கருதப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *தாசனாமி, சங்கர*.

smṛiti: स्मृति That which is “remembered;” the tradition. ***ஸ்ம்ருதி***: “நினைவில் வைத்திருக்கும்;” பாரம்பரியம். மனிதனின் நுண்ணறிவு மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட, இந்து சமயத்தின் துணை நூல்களாக இருந்தாலும் மிகவும் வலுவாக மதிக்கப்படும் சாத்திரங்கள். அறிவியல், சட்டம், வரலாறு, விவசாயம் போன்ற மதசார்பற்ற விஷயங்களுடன், தினசரி விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளில் இருந்து மெய்ஞ்ஞான வெளிப்பாடுகள் வரையிலான தலைப்புகளில், ஆன்மீக புலமைகளை எடுத்துரைக்கிறது. 1) *ஸ்ம்ருதி* என்ற சொல் பழங்கால சமஸ்கிருத நூல்களின் ஒரு குறிப்பிட்ட தொகுப்பை குறிக்கிறது. 2) பொதுவாக *ஸ்ம்ருதி* என்பது *சுருதியைத்* தவிர ஒரு குறிப்பிட்ட சம்பிரதாயத்தால் சாத்திரமாக மதிக்கப்படுகிற ஒரு நூலை குறிக்கிறது.

snāna: स्नान “Bathing.” ***ஸ்நானம்***. இது கங்கைப் போன்ற புனிதமான நதிகளில் நீராடுவதை குறிக்கிறது. இது வழக்கமாக இந்துக்களுக்கு ஒரு கட்டாயக் கடமையாக பரிந்துரைக்கப்படுகிறது.

ஆன்மா (soul): உடல், மனம் மற்றும் உணர்ச்சிகளாக இல்லாத மனிதனின் உண்மையான உயிர்சக்தி. *ஆத்மன்* அல்லது *புருஷனாக* அழைக்கப்படும் ஆத்மா, இரண்டு அம்சங்களின் கூட்டுத்தொகையாக விளங்குகிறது. 1) ஆன்மாவின் உருவம் அல்லது உடல் மற்றும் 2) ஆன்மாவின் *சாரமாக* விளங்கும் தூய உணர்வு (*பராசக்தி* அல்லது *சச்சிதானந்த*) மற்றும் *பரசிவ* ஆகியவை அந்த இரண்டு அம்சங்கள் ஆகும். மேலும் தகவலுக்கு: *ஆத்மன், பரமாத்துமன், ஆன்மீக விரிவாக்கம்*.

போலியான (specious): உண்மையாகவும், வெளிப்படையாகவும், நல்லதாகவும் தோன்றுகிற.

ஆன்மீக விரிவாக்கம் (spiritual unfoldment): ஆன்மாவின் வளர்ச்சி. உள்ளார்ந்து இருக்கும் மனிதனின் தெய்வீக ஆன்மாவின் விரிவாக்கம். *சுஷும்னா* வழியாக *குண்டலினி சக்தி* மெதுவாக எழுச்சி பெறும் போது, உணர்வு மிகவும் மெதுவாக விரிவாக்கம் பெறுவதை குறிப்பிடுகிறது. ஒரு மொட்டில் இருந்து பிரகாசமான மற்றும் அழகான தாமரை மலர்வதை போன்று, ஆன்மீக விரிவாக்கம் என்பது இந்த மெதுவான, மிகவும் நுட்பமான செய்முறையை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, முக்தி, பாதம், சாதனை*.

பொய்யான (spurious): சட்ட விரோதமான, உண்மையற்ற.

śraddhā: श्रद्धा "Faith; belief." ***சிரத்தை***. "நம்பிக்கை." மேலும் தகவலுக்கு: *பஞ்ச சிரத்தை*.

śrāddha: श्राद्ध "Memorial." ***சிரார்தம்.*** திவசம். இறந்தவருக்கு வாரம் ஒரு முறை, மாதம் ஒரு முறை மற்றும் அதன் பிறகு வருடம் ஒரு முறை என்று சம்பிரதாயத்திற்கு ஏற்ப செய்யும் சடங்கு. மேலும் தகவலுக்கு: *மரணம், சம்ஸ்காரம்*.

Śrī Chakra: श्रीचक्र "Venerated wheel." ***ஸ்ரீ சக்ரம்.*** மேலும் தகவலுக்கு: *யந்திரம்*.

Śrī Rudram: श्रीरुद्रम्. ***ஸ்ரீ ருத்திரம்.*** "அற்புத சக்திகளை பிரயோகம்" செய்பவர் பற்றிய ஸ்தோத்திரம். அழிக்கும் கடவுளாக சிவபெருமானை குறிப்பிடும் இந்த முதன்மையான வேத ஸ்தோத்திரம், இந்தியா முழுவதும் உள்ள சிவன் கோயில்களில் ஒலிக்கிறது. முதல் மூன்று வேதங்களின் மத்தியில் இருக்கும் *யஜுர் வேத, தைத்தரீய சம்ஹிதையில்* அமைத்துள்ள இந்த நீளமான பிரார்த்தனையில் தான், சைவ சமயத்தை சார்ந்த மந்திரமான நமச்சிவாய முதல் முறையாக தோன்றுகிறது.

sṛishṭi: सृष्टि "Creation." ***ஸ்ருஷ்டி.*** "படைப்பு."

Sṛishṭi Gaṇapati: सृष्टिगणपति "The creator God." ***ஸ்ருஷ்டி கணபதி***. அவர் ஒரு மூஞ்சூறை வாகனமாக கொண்டிருக்கிறார். அவர் தனது கைகளில் பாசம், அங்குசம், (சுயநலமற்ற தியாகத்தை பிரதிபலிக்கும்) தனது தந்தம் மற்றும் ஒரு மாம்பழத்தை ஏந்தியிருக்கிறார்.

śruti: श्रुति "That which is heard." ***சுருதி***. "காதால் கேட்கப்பட்டவை." செவி வழியாக அல்லது புலன்கடந்த கேள்வி ஆற்றல் மூலம் வெளிப்பட்ட சாத்திரம். உயர்வான வேதசாத்திர வலிமை மற்றும் ஆன்மீக மதிப்புடன், மனிதனுக்கு வெளியிடப்பட்ட இந்து சமய சாத்திரங்கள். காலவரம்பற்ற இந்த போதனைகள், பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு, சிவபெருமான் மற்றும் மகாதேவர்கள் மூலமாக *ரிஷிகளுக்கு* நேரடியாக உபதேசிக்கப்பட்டன. இதனால் சுருதி *அபௌருஷேய*, "மனிதனால் இயற்றப்படாத" அல்லது "அசாதாரண மனிதனின் சக்திகளை கடந்த" என்று அழைக்கப்படுகிறது. *சுருதி* என்பது *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களை* கொண்டுள்ளது, மற்றும் அது குரு சிஷ்ய பரம்பரை மூலமாக பாதுகாக்கப்பட்டு, இறுதியாக சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது. இந்து

தர்மத்தில் இருக்கும் பல புனிதமான நூல்களில், இந்த இரண்டு அறிவுப் பிரிவுகளும் மிகவும் உயர்வாக மதிக்கப்படுகின்றன. பல நூற்றாண்டுகளாக தத்துவ விவாதங்கள், ஆராய்ச்சி மற்றும் விளக்க உரைகளுக்கு சுருதி அடிப்படையாக விளங்கி வருகிறது. சுருதி மீது செலுத்தப்பட்ட கூடுதல் கவனம் காரணமாக எண்ணற்ற கருத்துக்கள் தோன்றின. அகத்திலுள்ள ரிஷிகள் வழங்கிய விவேகத்தை உணர்வதற்கு, இது வலுவான ஆராய்ச்சி மற்றும் தியானத்தின் கருப்பொருளாகவும் இருக்கிறது. சுருதியில் இருந்து பெறப்பட்டு இருக்கும் பெரும்பாலான மந்திரங்கள், பொதுமக்கள் மற்றும் வீட்டு வழிபாடுகள், தனிப்பட்ட பிராத்தனை மற்றும் ஜபத்தில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *ஆகமம், ஸ்ம்ருதி, வேதம்*.

sthapati: स्थपति From *stha,* "building" or "place," and *pati,* "lord or father." ***ஸ்தபதி***. *ஸ்த* என்பது "கட்டிடம்" அல்லது "இடத்தை" குறிக்கிறது. *பதி* என்பது "தலைவன் அல்லது தந்தையை" குறிக்கிறது. ஆகம கோயில் கட்டமைப்பு, சிற்பம், நகர்புற திட்டமிடுதல் மற்றும் மற்ற பாரம்பரிய கட்டிடக்கலைகளில் வல்லுநர். *ஸ்தபதி* என்பவர் *சிற்ப சாத்திரங்களில்* தேர்ச்சி பெற்று இருப்பதோடு கோயில் கட்டுமானத்தின் அனைத்து அம்சங்களிலும் நல்ல அனுபவத்தை பெற்று, தெய்வ பக்தியுடன், ஆன்மீக பயிற்சி பெற்று நல்ல நிர்வாகியாக விளங்க வேண்டும். இத்துடன் அவர் *சிற்பிகள்*, கல் வெட்டுபவர்கள், செதுக்குபவர்கள், தச்சர்கள் அடங்கிய ஒரு குழுவை வழிகாட்டி இயக்கும் திறமையும் பெற்று இருக்கவேண்டும்.

sthūla: स्थूल "Gross; physical." ***ஸ்தூல.*** "பருமனான; தூல." மேலும் தகவலுக்கு: *வாக்*.

strī* dharma*: स्त्रीधर्म "Woman's duty." ***ஸ்த்ரீ தர்மம்***. "பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய தர்மம்." ஆன்மீக நிறைவேற்றம் மற்றும் சமூகத்திற்கு ஸ்திரத்தன்மையை வழங்கும் பாரம்பரிய ஒழுக்கம், அனுட்டானங்கள், தொழில் மற்றும் ஆன்மீக வழக்கங்கள். இதன் பண்புகளாக அடக்கம், அமைதியான வலிமை, மத ஈடுபாடு, கண்ணியம் மற்றும் குடும்பப் பராமரிப்பு ஆகியவை விளங்குகின்றன. பெண் என்பவள் மிகவும் முக்கியமாக இல்லத்தை உருவாக்குவதிலும், தனது குழந்தைகளை நாளைய உன்னத குடிமக்களாக வளர்க்க தேவையான கல்வியை வழங்குவதிலும் மிகவும் முக்கியமானவளாகவும் ஈடு செய்ய முடியாதவளாகவும் இருக்கிறாள்.

அணுவிற்குள் இருக்கும் பருப்பொருள் (subatomic): அணுக்களுக்குள் இருக்கும் பகுதிகள்; ஒரு அணுவை காட்டிலும் சிறியதாக இருக்கும் ஒன்று.

subconscious mind: *Saṁskāra chitta*. **அடிமனம்.** *சமஸ்கார சித்த*. மேலும் தகவலுக்கு: *ஒளிஉடல், மனசாட்சி, மனம் (ஐந்து நிலைகள்)*.

Sub-subconscious mind: *Vāsanā chitta.* **மறைந்திருக்கும் பண்புகளின் மனம்**. *வாசன சித்த.* கடந்த கால அனுபவங்கள் கலந்து, புதிய உருவங்கள், எதிர்வினைகள் மற்றும் நம்பிக்கைகளாக மாறும் அடியுணர்வின் பகுதி. மேலும் தகவலுக்கு: *மனம் (ஐந்து நிலைகள்).*

ஆதாரம் (substratum): ஒன்றுக்கு கீழே இருந்து அதற்கு துணையாக இருக்கும் ஒரு பொருள் அல்லது அம்சம்.

துணை மெய்ஞ்ஞான மனம் (subsuperconscious mind): *Anukāraṇa chitta. அனுகரண சித்த.* மேலும் தகவலுக்கு: *மனம் (ஐந்து நிலைகள்).*

śuddhi: शुद्धि "Purification." Also, *śraddha śuddhi,* "purification of faith." ***சுத்தி***. "சுத்திகரிப்பு." "இறைநம்பிக்கையை சுத்தம் செய்யும்" *சிரத்தா சுத்தியையும்* குறிப்பிடுகிறது. வேற்று மதங்களுக்கு மாறிய அல்லது மற்ற காரணங்களால் மீண்டும் இந்து சமூகத்தில் சேர்வதற்கு சுத்திகரிப்பு தேவைப்படும் நபர்களை மீண்டும் ஏற்றுக்கொள்ள நடைபெறும் சடங்கு. இது *வ்ராத்யஸ்தோம* ("விரதத்தை உறுதிப்படுத்துதல்") என்றும் அழைக்கப்படுகிறது.

śūdra: शूद्र "Worker, servant." **சூத்திர**. "ஊழியர், சேவகன்." திறமையான கைவினைஞர்கள், ஊழியர்கள் மற்றும் தொழிலாளிகளின் சமூகப் பிரிவு. மேலும் தகவலுக்கு: *வர்ண தர்மம்.*

வியாபித்தல் (suffuse): கீழே கொட்டுதல், கீழே பரவுதல். மேகம் வழியாக ஒளி பரவுவது போல. பூஜை அல்லது தெய்வீக புருஷரிடம் இருந்து தெய்வீக சக்தி வெளிவருவது போல.

śuka: शुक "Parrot." ***சுக***. "கிளி."

sukarma: सुकर्म "Good actions." ***சுகர்மா***. "நல்ல செயல்கள்." மேலும் தகவலுக்கு: *கர்மவினை, புண்ணியம்.*

sukhāsana: सुखासन "Pleasant, easy pose." ***சுகாசனம்***. "சுகமான, எளிமையான ஆசனம்." இது வசதியாக அமர்ந்திருக்கும் ஏதாவது ஒரு ஆசனத்தை குறிக்கிறது. இது குறிப்பாக *ஸ்வஸ்திகாசனத்தில்* பயன்படுத்தப்படுகிறது. இந்த ஆசனத்தில் வலது காலை மடித்து பாதங்களை இடது தொடையின் பக்கவாட்டில் படும்படி வைக்கவேண்டும். அதேபோல் இடது காலை மடக்கி இரண்டு கைகளால் மெதுவாக பிடித்து தொடைக்கும் இடைப்பட்ட இடைவெளியில் நுழைக்கவேண்டும்.

sūkshma: सूक्ष्म "Subtle." ***சூட்சுமமான***. "நுணுக்கமான." மேலும் தகவலுக்கு: *வாக்.*

śuṇḍī: शुण्डा "Elephant trunk." ***தும்பிக்கை***.

Sundarar: சுந்தரர் "Beautiful." நான்கு சமயக் குரவர்களில் ஒருவர். வாழ்ந்த காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு. இவர் சிவபெருமானை போற்றிப் பாடிய பாடல்கள், *திருமுறையில்*

ஏழாவதாக இடம்பெற்றுள்ளது. இதில் அவர் சிவபெருமானிடம் லௌகீக மற்றும் ஆன்மீக வளத்தைப் பற்றி பிராத்தனை செய்கிறார். மேலும் தகவலுக்கு: *நாயனார்.*

superconscious mind: *Kāraṇa chitta.* **மெய்ஞ்ஞான மனம்**. *காரண சித்த.* மேலும் தகவலுக்கு: மனம் (*இந்து நிலைகள்; மூன்று அம்சங்கள்*).

மன்றாடுதல் (supplicate (supplication)): பணிவுடன் கேட்டல். சிரத்தையுடன் பிரார்த்தனை செய்தல்.

மிகவும் உயர்வான (supreme): தரம், ஆற்றல், அதிகாரத்தில் மிகவும் உயர்ந்து இருக்கிற.

பரமன் (Supreme God): மற்ற தெய்வங்கள், உயிர்சக்திகள் மற்றும் எல்லா வெளிப்பாடுகளின் மூலம் அல்லது ஸ்ருஷ்டிகர்த்தாவாக இருக்கும் மகாதேவர்.

சரணாகதி (surrender): இணங்குதல். தெய்வீகத்திடம் முழுமையாக சரண் அடைவது *பிரபத்தி* என்று அழைக்கப்படுகிறது. முழு விசுவாசத்துடன் ஒருவர் தன்னை இறைவனிடம் ஒப்படைப்பதை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *பக்தி, பிரபத்தி, தியாகம்.*

Sūrya: सूर्य "Sun." ***சூரியன்.*** *வேதங்களில்* முக்கிய தெய்வங்களில் ஒன்றாக விளங்கி, இதிகாசங்கள் மற்றும் *புராணங்களில்* முதன்மையானவராகவும் விளங்குகிறார். சூரியன், சூரிய பகவானை சைவர்கள் தினமும் சிவ சூரியனாக வழிபடுகிறார்கள். சுமார்த்த சமயம் மற்றும் வைணவ சமயத்தை சேர்ந்தவர்கள் இந்த பொன்னிற கோளத்தை சூரிய நாராயணனாக வழிபடுகிறார்கள். ஒளியின் மூலமாக விளங்கும் சூரியன், மனிதனுக்கு எளிதில் புலப்படும் தெய்வீக உருவமாக விளங்குகிறது. பயிர்களையும் உயிர்களையும் காக்கும் கடவுளான சூரியனுக்கு பொங்கல் திருநாளன்று உலகெங்கும் பல்வேறு பெயர்களில் பண்டிகைகள் கொண்டப்படுகின்றன. சூரியன் மறைஞானரீதியாக வெளிப்பட்ட மற்றும் வெளிப்படாது உலகங்கள் சந்திக்கும் அல்லது இணையும் இடத்தை பிரதிபலிக்கிறார். சூரியன் யோகத்தில் ஆணின் பண்புடன் இருக்கும் *பிங்கலாவை* பிரதிபலிக்கிறார். சூரியன் அகத்தில் இருக்கும் பரமாத்துமாவையும் குறிப்பிடுகிறது.

sushumṇā nāḍī: सुषुम्णानाडी "Most gracious channel." ***சுஷும்னா நாடி.*** முதுகுத்தண்டில் மையமாக இருக்கும் சூட்சுமமான நரம்பு ஓட்டம். மேலும் தகவலுக்கு: *குண்டலினி, நாடி, சமாதி.*

sushupti: सुषुप्ति "Deep sleep." ***சுஷுப்தி.*** "ஆழ்ந்த உறக்கம்." இது சாதாரண உறக்க நிலையை காட்டிலும் மிகவும் புனிதமான நிலையாக விளங்குகிறது, மற்றும் விழித்துக்கொண்டதும் நினைவில் வைத்துக்கொள்ள முடியாத அளவிற்கு இதன் புலனுணர்வுகள் மிகவும் நுணுக்கமாக இருக்கின்றன. இது தீர்க்கதரிசன கனவுகள்

தோன்றும் நிலை ஆகும். *மண்டூக்ய உபநிடதத்தில்* குறிப்பிடப்பட்டுள்ள நான்கு *அவத்தைளில்* ஒன்றாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *அவத்தை, உணர்வு.*

sutala: सुतल "Great abyss." ***சுதளம்***. "படுபாதாளம்." வெறித்தனமான பொறாமை மற்றும் பழிவாங்கும் பகுதி. மூலதாரத்திற்கு கீழே மூன்றாவது சக்கரமாக, முழங்கால்களின் மையத்தில் அமைந்திருக்கிறது. *சம்ஹாத* ("நிராகரிக்கப்பட்ட") அல்லது *சுதள* என்று அழைக்கப்பட்டு, பூமிக்கு அடியில் இருக்கும் மூன்றாவது சூட்சும நரகலோகத்துடன் பொருந்துகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், நரகம், லோகம்.*

sūtra: सूत्र "Thread." ***சூத்திரம்***. ஒரு முதுமொழி போன்ற செய்யுள் அல்லது அத்தகைய முதுமொழிகளைக் கொண்ட இலக்கிய நடையை இது குறிப்பிடுகிறது. கி.பி. 500 ஆம் ஆண்டில் இருந்து இந்த நடையை இந்திய தத்துவ ஞான அமைப்புக்கள் பரவலாக ஏற்றுக்கொண்டு இறுதியில் சட்டம், இலக்கணம், மருத்துவம், கவிதை, கைவினைகள் தொடர்பான படைப்புக்களில் பயன்படுத்தவும் தொடங்கின.

svadharma: स्वधर्म "One's own way." ***ஸ்வதர்ம.*** சுய தர்மம். மேலும் தகவலுக்கு: *தர்மம்.*

svādhishṭhāna: स्वाधिष्ठान "One's own base." ***ஸ்வாதிஷ்டானா.*** "ஒருவருக்கு சொந்தமான இடம்." மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

svādhyāya: स्वाध्याय "Self-reflection; scriptural study." ***ஸ்வாத்யாய.*** "தன் உளஆய்வு; சாத்திர விசாரம்." மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

svapna: स्वप्न "Dream." ***ஸ்வப்ன***. "கனவு." சூட்சும உணர்வு. சூட்சும உணர்வு மற்றும் அனுபவத்தை கொண்ட உறங்கிக்கொண்டு கனவு காணும் நிலை. *மாண்டூக்ய உபநிடதம்* குறிப்பிடும் நான்கு அவத்தைகளில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *அவத்தை, உணர்வு.*

svayambhū mūrti: स्वयम्भूमूर्ति "Self-existent image." ***சுயம்பு மூர்த்தி***. இது மனிதனின் கைகளால் வடிவமைக்கப்படாமல் இயற்கையாக கண்டு எடுக்கப்பட்ட ஒரு தெய்வத்தின் சிலையை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மூர்த்தி.*

swāmī: स्वामी "Lord; owner." **சுவாமி**. "கடவுள்; எசமான்." எல்லாம் அறிந்தவராக அல்லது தனக்கு ஆசிரியராக விளங்குகிறார். இது வழக்கமாக ஒரு *சந்நியாசிக்கு* வழங்கப்படும் ஒரு மரியாதைக்குரிய பட்டம். *சுவாமி* என்கிற சொல் மரியாதையின் சின்னமாக விளங்கி, சிலசமயங்களில் துறவறம் சாராமல் ஆன்மீக பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டோருக்கும் பயன்படுப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *துறவி, சந்நியாசி.*

swastika: स्वस्तिक "Sign of auspiciousness," From *su* ("wellness," "auspiciousness") and *astu,* "be it so." **சுவஸ்திக்.** இது சூரியனை பிரதிநிதித்துவம் செய்து பெரும்பாலும் விநாயகருடன் அடையாளம் காணப்படும் பழங்கால இந்து சமயத்தின் மங்களம் மற்றும்

சௌபாக்கியத்தின் சின்னமாக விளங்குகிறது. அறிவுணர்வு மூலமாக அல்லாமல் இயலுணர்வு மூலம் தெய்வீகத் தன்மையை அடைவதற்கு, இந்த சின்னத்தின் செங்கோண கோடுகள் ஒரு மாற்று வழியை குறிப்பிடுகின்றன. இது பல கலாச்சாரங்களில் ஒரு முக்கிய சின்னமாக விளங்கி வருகிறது. (*ஸ்வஸ்து* என்கிற வாழ்த்துக்கள் "ஆசிகள்," "உடல் ஆரோக்கியம்," அல்லது "உங்களுக்கு நன்மை உண்டாகட்டும்" என்ற பொருளை தருகிறது.) மேலும் தகவலுக்கு: *மூர்த்தி*.



taijasa: तैजस "Full of light." ***தைஜச.*** "ஒளி நிரம்பிய." கனவு காணும் "*ஸ்வப்ன*" அவத்தையை குறிப்பிடும் சொல். மேலும் தகவலுக்கு: *அவத்தை, ஸ்வப்ன*.

tala: तल "Plane or world; level; base, bottom; abyss." ***தளம்.*** "உலகம் அல்லது பகுதி; சமதளம்; அடிப்பகுதி; படுப்பாதாளம்." *மூலாதார* சக்கரத்திற்கு கீழிருக்கும் ஏழு சக்கரங்களில் மையங்கொண்டு இருக்கும் கீழ்நிலை உணர்வின் ஏழு லோகங்களை குறிப்பிடும் வேர்ச்சொல். மேலும் தகவலுக்கு: *சக்கரம், நரகம், லோகம்*.

tāla: ताल "Time measure." ***தாளம்***. இந்திய இசையில் கால அளவுகளை ஒழுங்குமுறையில் அமைப்பதற்கு தாளம் பயன்படுகிறது. இது ஏழு வகை தாளங்களை மூலமாகவும், சில சமயங்களில் சிக்கலான உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது. தாளத்தைப் போன்று மேற்கத்திய இசைக்குறியீடு இருந்தாலும், தாளத்தில் பிரத்யேகமான உணர்ச்சி அல்லது ஆன்மீக மனநிலை கலந்து இருக்கும்.

talātala **chakra:** तलातल चक्र "Lower region." ***தளாதள சக்கரம்***. இது *மூலாதாரத்திற்கு* கீழே நான்காவது *சக்கரமாக*, காலின் பின்பகுதியில் மையம் கொண்டு இருக்கிறது. இது நீடித்த மனக்குழப்பம் மற்றும் தேவையற்ற பிடிவாதத்தின் பகுதி ஆகும். தளாதள அல்லது தாமிஸ்ரா ("இருள்") என்று அழைக்கப்பட்டு, பூமியின் கீழிருக்கும் நான்காவது சூட்சும நரகலோகத்துடன் பொருந்துகிறது. இந்த உணர்வு தன்னுயிர் காப்பை மட்டும் தூண்டுதலாக கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், லோகம், நரகம்*.

tambūrā: तंबूरा (Hindi) ***தம்புரா***. இந்த தந்தி வாத்தியம், நான்கு கம்பிகளை கொண்டு, குடம் போன்ற அடிப்பகுதியும் நீண்ட கழுத்தையும் கொண்டதாக இருக்கும். இது செங்குத்தாக நிறுத்தி விரல்களால் மீட்டப்படுகிறது. இது பாடகர் அல்லது இசைக்கருவி வாசிப்பவருக்கு பின்னிசையாக இசைக்கப்படுகிறது.

Tamil: தமிழ். தென்னிந்தியா மற்றும் வடக்கு இலங்கையில் இருக்கும் தமிழர்களின் மொழி.

Tamil Nadu: தமிழ் நாடு. இந்த தென்னிந்திய மாநிலம் 50,000 சதுர மைல்கள் பரப்பளவு, 55 மில்லியன் மக்கள்தொகையை கொண்டுள்ளது. இந்த மாநிலம் எண்ணற்ற புனிதமான சாத்திரங்கள், மகான்கள், முனிவர்கள் வாழ்ந்த இடமாகவும் சிதம்பரம், மதுரை, பழநி மலை மற்றும் ராமேசுவரம் உட்பட 40,000 க்கும் மேற்பட்ட சிறந்த கோயில்களுக்கு இருப்பிடமாகவும் உள்ளது.

tanmātrā: तन्मात्रा "Primal matter." ***தன்மாத்திரை***. ஐந்து பருபொருட்கள் அல்லது *மகாபூதங்களின்* அடிப்படையாக விளங்கும் ஐந்து சூட்சுமமான "பொருட்கள்." ஐந்து தன்மாத்திரைகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பூதங்களின் பட்டியல் பின்வருமாறு. 1) *சப்த* (ஒலி), *ஆகாச* (ஆகாயம்); 2) *ஸ்பர்ச* (தொட்டுணர்வு), *வாயு* (காற்று); 3) *ரூபம்* (உருவம்), *தேஜஸ்* (நெருப்பு); 4) *ரச* (சுவை), *அபஸ்* (நீர்); 5) *கந்த* (நாற்றம்), *பிரத்வி* (பூமி).

tantra: तन्त्र "Loom, methodology." ***தந்திர.*** தந்திரம். 1) பொதுவாக *சாத்திரத்தை* குறிப்பிட பயன்படுகிறது. 2) சமயம், சூட்சும ஞானம் மற்றும் அறிவியல் தொடர்பான எல்லா அம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கத்தை வழங்கும் இந்து சாத்திரத்தின் ஒரு பிரிவான, சாக்த சமயத்தை மட்டுமே பெரும்பாலும் சார்ந்திருக்கும் ஆகம உரைகளை குறிப்பிடும் இன்னோரு சொல். 3) இது சைவ மற்றும் சாக்த பாரம்பரியங்களில் ஒரு குறிப்பிட்ட செய்முறை, யுத்தி அல்லது ஆன்மீக பயிற்சியை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *தாந்த்ரீகம்.*

tantric ***(tāntrika):*** तान्त्रिक ***தாந்த்ரீக.*** தந்திர பாரம்பரியத்தில் பரிந்துரைக்கப்பட்ட பயிற்சிகளை குறிப்பிடும் உரிச்சொல். ஏதாவது ஒரு தாந்த்ரீக பாரம்பரியங்களை பின்பற்றுபவரை குறிப்பிடும் சொல். மேலும் தகவலுக்கு: *தந்திர, தாந்த்ரீக சமயம்.*

தாந்த்ரீக சமயம் (tantrism): தந்திர சாத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஞானோதய பாதை. 1) தாந்த்ரீக சமயம் என்பது சிலசமயங்களில் இந்து சமயத்தில் தனித்து இயங்கி, மெதுவாக வைதீக *பிராமண* பாரம்பரியத்துடன் கலக்கும் சம்பிரதாயமாக கருதப்படுகிறது. 2) தாந்த்ரீக சமயம் என்பது முக்கியமாக சைவ மற்றும் சாக்த பாரம்பரியங்களை குறிப்பிடுகிறது. இது குண்டலினி சக்தியை எழுப்புவதில் கவனம் செலுத்துகிறது. இது மனித உடலை தெய்வீக வாகனமாகவும், முக்தி பெறுவதற்கான கருவியாகவும் கருகிறது. மரணத்தின் முன்பாக அல்லது மரணத்தின் போது *குண்டலினி* சக்தியை *சுஷும்னா* வழியாக மேலே எழுப்பி, *சஹஸ்ரஹார* சக்கரம் மற்றும் அதற்கு மேலே *பிரம்மரந்திரம்* வழியாக சென்று பரசிவத்தில் நுழைவதே தாந்த்ரீக சமயத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். உணர்வு, ஆன்மீகம், மனோஉணர்வு, உணர்ச்சி மற்றும்

லௌகீக லோகங்களில் நிலைமாற்றம் செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது *சாதனையின்* பாதையாக விளங்குகிறது. 3) —***சாக்த தாந்த்ரீக சமயம்*** ***(Śākta Tantrism):*** பெண்மை சக்தியின் வழிபாட்டிற்கு வலுவான முக்கியத்துவம் வழங்குகிறது. இந்த சமயத்தின் உட்பிரிவை பொறுத்து, பாலுறவு போன்றவை அடங்கிய சடங்குகள் உருவகமாக அல்லது உண்மையாக இருக்கக்கூடும். லௌகீகத்தை பயன்படுத்தி ஆன்மீகத்தை அடைவதே சாக்த தாந்த்ரீக சமயத்தின் முக்கிய அடிப்படை ஆகும். கீழ்நிலை உணர்வை அடையாமல் யாவும் கடந்த உணர்வை அடைவதற்காக வழக்கமாக தடை செய்ப்பட்டதை ஏற்றுக்கொண்டு, அதன் சக்திகளை சாமர்த்தியமாக கையாள்வதை சில சமய உட்பிரிவுகளின் கடந்தகால நிகழ்வுகள் குறிக்கின்றன. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, இராச யோகம், சாக்த சமயம், தந்திர.*

tapas: तपस् "Warmth, heat," hence psychic energy, spiritual fervor or ardor. Austerity, asceticism, penance. *தபஸ்.* உடலை விரும்பி வருத்துதல், துறவறம், தவம். விரைவுப்படுத்தப்பட்ட விரிவாக்க நிலை மற்றும் ஆன்மீக பயிற்சிகள் மூலமாக, சக்திகளுடன் இணைந்து செயல்படுதல். தெய்வீக சக்திகள் முன்பாக பணிவாக கீழ்ப்படியும் நிலை மற்றும் பெரும்பாலும் சில நிலைகளில் தானாக நடைபெறும் உட்புற சுத்திகரிப்பின் செய்முறைகளுக்கு சரணடைதல். இது ஆச்சாரமாக இருத்தல், தீவிர தியானம், தவம், விரதம், விசேஷ கடமைகளை குறிப்பிடுகிறது; மேலும் இது இறை உணர்வு பெறுவதை தடுக்கும் அசுத்தங்கள், தன்முனைப்பு, மாயைகள் மற்றும் முற்பிறவி கர்மவினைகளை "எரிக்கும்" ஒரு "பொறி பறக்கும் செய்முறையாக" ஆன்மீக சுத்திகரிப்பு மற்றும் உருமாற்றத்தை தெரியப்படுத்துகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, பிராயச்சித்தம், சாதனை.*

Taruṇa Gaṇapati: तरुणगणपति. ***தருண கணபதி.*** பாரம்பரிய விநாயகர் மூர்த்தி அல்லது வடிவத்தை குறிக்கும் ஒரு பெயர். "இளமையோடு" காட்சியளிக்கும் *தருண கணபதி,* தனது எட்டு திருக்கரங்களில் பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவல் பழம், உடைந்த தனது தந்தம், நெற்கதிர் மற்றும் ஒரு கரும்புத் தண்டை வைத்து இருக்கிறார்.

tattva: तत्त्व "That-ness" or "essential nature." ***தத்துவம்.*** *தத்துவங்கள்* என்பது பிரபஞ்சத்தின் முக்கிய அலகாக இருக்கும் உள்பொருளின் அடிப்படை கோட்பாடுகள், பாகங்கள், நிலைகள் அல்லது பிரிவுகள் ஆகும். நுட்பமாகவும் பருமனாகவும் தங்களது மூலத்தை கொண்டுள்ள, இந்த வெளியிடும் செய்முறையை, முப்பத்தி ஆறு *தத்துவங்களின்* விரிவாக்கம் அல்லது வெளிப்பாட்டு நிலைகள் அல்லது பிரிவுகளாக *ரிஷிகள்* விளக்குகிறார்கள். அவை *மஹாபிரளயம்* என்கிற பிரபஞ்ச பேரழிவின் போது, தங்களது

மூலத்தில் மடிந்துக்கொள்வதால், *மஹாபிரளயத்திற்கு* பிறகு முதல் இரண்டு *தத்துவங்கள்* மட்டுமே நிலைத்து இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *மஹாபிரளயம்*.

temple: கோயில். கடவுள் அல்லது தெய்வங்களை வழிபாட்டிற்காக, பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்தில் இருக்கும் ஒரு வளாகம். இந்துக்கள் புனிதமாகவும், விசேஷமானதாகவும் மதிக்கும் இந்த இடங்கள், மூன்று லோகங்கள் அதிக விழிப்புடன் தொடர்புகொள்ளும் இடமாக, அந்தர்லோகத்தில் இருக்கும் உயிர்சக்திகளின் நுணுக்கமான ஆன்மீக ஆற்றல்களை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட இடமாக விளங்குகின்றன. தொடர்ந்து பூஜை செய்து, தெய்வத்தை ஆவாகனம் செய்வதன் மூலம் கோயிலின் சூட்சுமமான சூழல் பராமரிக்கப்படுகிறது. அந்த தெய்வம் பிரதிஷ்டை செய்யப்பட்ட தனது *மூர்த்தியை* தற்காலிக உடலாக பயன்படுத்தி, உலகில் இருக்கும் உயிரினங்களுக்கு அருள் செய்கிறார். மேலும் தகவலுக்கு: *தரிசனம், தீர்த்த யாத்திரை*.

கோட்பாடு (tenet): ஒரு குழு உண்மை என்று நம்பியிருக்கும் ஒரு கொள்கை, நம்பிக்கை அல்லது அபிப்ராயம்.

ஈசுவரவாதம் (theism): இது இறைவன் ஒரு உண்மையான, உணர்வுள்ள, தனிப்பட்ட பரமாத்துமாவாக, ஸ்ருஷ்டிகர்த்தாவாக பிரபஞ்சத்தில் ஆட்சி செய்கிறார் என்ற நம்பிக்கை. இது மகாதேவர்களின் மீது இருக்கும் நம்பிக்கையையும் குறிப்பிடுகிறது.

நெற்றிக்கண் (third eye): இரு தூல கண்களுக்கு மத்தியிலும் மேலாகவும், *ஆக்ஞா* சக்கரம் அமைந்த இடத்தில் இருக்கும் மனோஉணர்வு பார்வையின் உட்புற உறுப்பு. மேலும் தகவலுக்கு: *ஆக்ஞா சக்கரம், சக்கரங்கள்*.

மூன்றாவது லோகம் (Third World): மேலும் தகவலுக்கு: *லோகம்*.

மூன்றாவது லோகங்கள் (three worlds): உள்பொருளின் மூன்று உலகங்களை குறிப்பிடும் *திரிலோகா*, அண்டத்தின் அடிப்படை படிநிலை பிரிவுகளாக விளங்குகின்றன. 1) *பூலோக*: "பூலோகம்," தூல உலகம். 2) அந்தரலோக: "உட்புற" அல்லது "மத்தியில் இருக்கும் உலகம்," நுணுக்கமான அல்லது சூட்சும உலகம். 3) சிவலோகம்: "சிவபெருமானின் உலகம்," மற்றும் தெய்வங்கள் மற்றும் அதிக முதிர்ச்சியை பெற்ற ஆன்மாக்களின் உலகம்; காரண லோகம். மேலும் தகவலுக்கு: *லோகம், உலகம்*.

tila gola: तिलगोल "Sesame ball." ***திள கோல.*** எள்ளு உருண்டை. ஒரு இந்திய இனிப்பு வகை.

tilaka: तिलक "Sesamum-like mark," from *tila,* "sesame seed." ***திலகம்.*** இந்து சமய உட்பிரிவை குறிப்பிடும் விதமாக நெற்றி அல்லது புருவத்தில் சாம்பல், களிமண் அல்லது சந்தனம் கொண்டு பூசும் சின்னங்கள். வைணவர்கள் மைகா, மஞ்சள் மற்றும் சுண்ணாம்பு கலந்த

ஸ்ரீ சூரணத்தை செங்குத்தாக இட்டுக்கொள்கிறார்கள். சைவர்கள் நீரில் விபூதியை குழைத்து மூன்று கோடுகளாக நெற்றியில் தரிப்பதற்கு *திரிபுண்டரம்* என்று பெயர். பெரும்பாலும் நெற்றியின் மையத்திற்கு சிறிது கீழே, ஒரு சிவப்பு நிறப்பொட்டு வைத்துக்கொள்ளும் வழக்கமும் உள்ளது. மேலும் தகவலுக்கு: *பிந்து, இந்து சமயம்*.

tīrtha: तीर्थ "Passageway; ford." *தீர்த்தம்*. குறிப்பாக புனிதமான நதிக்கரையில் அமைந்து இருக்கும் புண்ணிய க்ஷேத்திரம் அல்லது நீராடும் துறை. இது பூஜையில் பயன்படுத்தப்படும் நீரையும் குறிப்பிடுகிறது.

tīrthayātrā: तीर्थयात्रा "Journeying to a holy place." ***தீர்த்த யாத்திரை.*** இந்தியா அல்லது மற்ற நாடுகளில் இருக்கும் எண்ணற்ற *புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு* அவ்வப்போது பயணம் மேற்கொள்வது என்பது இந்துக்களின் *பஞ்ச நித்திய கர்மாக்களில்* ஒன்றாக விளங்குகிறது. தீர்த்த யாத்திரைக்கு முன்பாக உபவாசம் மற்றும் சுயக்கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகிறது. *தீர்த்த யாத்திரை* செல்லும் போது விரதம் மேற்கொண்டு சுத்தமாக இருந்து, லௌகீக கவலைகள் அனைத்தையும் மறந்து, இறைவன் மீது முழுமையாக கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பஞ்ச நித்திய கர்மாக்கள், பஞ்ச சிரத்தா*.

Tirukural: ***திருக்குறள்*** "Holy couplets." "புனிதமான ஈரடிச் செய்யுட்கள்." இது தமிழ்மொழியின் ஒரு மாபெரும் இலக்கிய படைப்பாகவும், இந்து சமய நன்னெறி பற்றிய நுண்ணறிவை வழங்கும் ஒரு போக்கிஷமாகவும் விளங்குகிறது. இது (இன்றைய) சென்னைக்கு அருகில் வாழ்ந்த, சைவத்துறவி திருவள்ளுவரால் (கி.மு. 200) இயற்றப்பட்டது. மேலும் தகவலுக்கு: திருவள்ளுவர். மேலும் தகவலுக்கு: *திருவள்ளுவர்*.

Tirumantiram: **திருமந்திரம்** "Holy incantation." "திருமொழிகள்." சுமார் கி.பி.200 ஆம் ஆண்டு திருமூலர் ரிஷியால் அருளப்பட்ட, நந்திநாத சம்பிரதாயத்தின் மிகப்பழமையான தமிழ் சாத்திரம். இது *திருமுறை* தொகுப்பில் மிகவும் பழமையானதாக இருக்கிறது. இது மறைஞான யோக மற்றும் தாந்த்ரீக தகவலின் சேமிப்புக் கிடங்காக விளங்குகிறது. அது *இராச யோகம்* மற்றும் *சித்த யோகத்தின்* சாரம், மற்றும் தொல் பழங்கால சைவ சமய பாரம்பரியங்களின் சொத்தாக விளங்கும் 28 *சைவ சித்தாந்த ஆகமங்களை* கொண்டுள்ளது. இந்த *ஆகமங்கள்* சைவ சமயத்தின் பண்டையகால பாரம்பரியங்களின் வழக்கமாக விளங்குகிறது.

Tirumular: **திருமூலர்**. நந்திநாத சம்பிரதாயத்தை சார்ந்த கைலாச பரம்பரையின் ஒரு புகழ்பெற்ற *சித்த யோகி* மற்றும் *ரிஷி*. இவர் இமயமலையில் இருந்து *திருமந்திரம்* இயற்றுவதற்காக தமிழ்நாடு (சுமார் கி.மு. 200) வந்தார். இந்த சாத்திரத்தில், அவர் தனது சொந்த உணர்தல் மற்றும் *சைவ ஆகமங்கள்* மற்றும் *வேதங்களில்* இருக்கும் அவரது

புலமையின் அடிப்படையில், சைவ சமய கோட்பாடுகளை துல்லியமான மற்றும் நுணுக்கமான பாடல் வடிவில் பதிவு செய்துள்ளார். திருமூலர் மஹரிஷி நந்திநாதரின் சீடர்களில் ஒருவராக இருந்தார். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, திருமந்திரம், வேதாந்தம்*.

Tirumurai: திருமுறை "Holy book." தென்னிந்திய நாயன்மார்கள் சிவபெருமானை போற்றிப் பாடிய பாடல்கள் மற்றும் இலக்கியங்களின் பன்னிரண்டு புத்தகத் தொகுப்பு. இதை சைவத்துறவி நம்பியாண்டார் நம்பி (சுமார் கி.பி. 1000) தொகுத்தார்.

Tiruvalluvar: திருவள்ளுவர் "Holy weaver." இவர் தென்னிந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்து வந்தார். இவர் சைவசமயத்தை சார்ந்தவர். நெசவுத்தொழில் செய்து வந்தார். இவர் உலகப்பொதுமறை, பொய்யாமொழி மற்றும் பல பெயர்களுடன் அழைக்கப்படும் திருக்குறளை இயற்றினார். மேலும் தகவலுக்கு: *திருக்குறள்*.

யாவும் கடந்த (transcendent): அனுபவம் அல்லது வெளிப்பட்ட வடிவத்தின் எல்லைகளை கடந்து இருக்கிற. சைவ சித்தாந்தத்தில் முழுமுதற்பொருளாக, பரசிவமாக, பரமாத்துமாவாக இருக்கும் சிவபெருமானின் ஒரு பண்பு. இது உள்ளார்ந்த என்று சொல்லில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *பரசிவ*.

ஒலிப் பெயர்ப்பு, எழுத்துப் பெயர்ப்பு (transliteration): ஒரு மொழியின் சொற்களை மற்றொரு மொழியில் ஒலி மாறாமல் எழுதுவது.

குறைவாக ஒளி ஊடுருவுகிற (translucent): குறைவாக ஒளி புகவல்ல.

tribhaṅga: त्रिभंग "Three bends." ***த்ரிபங்க.*** நின்றுக்கொண்டு இருக்கும் சிலையின் மையக்கோடு இடது (அல்லது வலது) கண், நெஞ்சின் மையம் மற்றும் குதிக்கால்களின் மையம் வழியாக செல்கிறது. இதில் இடுப்புப் பகுதி வலது புறமாக (அல்லது இடது புறமாக) திரும்பி இருக்க, முண்டத்தின் மேல் பகுதி இடது புறம் (அல்லது வலது புறமாக) திரும்பி இருந்து, தலை வலது புறமாக (அல்லது இடது புறமாக) சாய்ந்து இருக்கிறது.

குல மரபு சார்ந்த (tribal): வம்சம், இனம் அல்லது விசுவாசம் மூலம் ஒரு பொதுவான தலைவர் அல்லது பரம்பரையுடன் தொடர்பில் இருக்கும் ஒரு குழு, ஒரு குலம் அல்லது கிராமம். இது பழங்குடி மக்களின் நடத்தையை குறை கூறவும் பயன்படுத்தப்படுகிறது. இது உலகெங்கும் ஆதி வாசிகளாக இருக்கும் மக்களை பொதுவாக குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது.

Trimukha Gaṇapati: त्रिमुखगणपति The contemplative "three-faced." ***மும்முக கணபதி.*** ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் மும்முக கணபதி ஒரு தாமரை மலர் மீது அமர்ந்து,

ஜபமாலையை ஜபித்துக்கொண்டு, அபய மற்றும் வரத முத்திரையுடன் காட்சி அளிக்கிறார்.

tṛiṇa: तृण "Grass." ***த்ருண***. "புல்."

tripuṇḍra: त्रिपुण्ड्र "Three marks." ***திரிபுண்டரம்***. சைவர்கள் நீரில் விபூதியை குழைத்து மூன்று கோடுகளாக நெற்றியில் தரிப்பதற்கு திரிபுண்டரம் என்று பெயர். பெரும்பாலும் மூன்றாவது கண்ணில் ஒரு போட்டு வைத்துக்கொள்ளும் வழக்கமும் உள்ளது. அந்த மூன்று கோடுகள் *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* என்ற மும்மலங்களை குறிப்பிடுகின்றன. மாட்டு சாணத்தை எரித்து தயாரிக்கப்படும் விபூதி, தூல உடலின் தற்காலிக இயல்பையும், விரைவாக ஆன்மீக சித்தியை பெற முயற்சி செய்து இறைவனிடம் நெருங்க வேண்டிய அவசியத்தை நினைவூட்டுகிறது. மேலும் தகவலுக்கு: *பிந்து, திலகம், விபூதி*.

திரிசூலம்: त्रिशूल "Trident." சிவபெருமான் மற்றும் சில சைவ துறவிகள் பயன்படுத்தும் முத்தலைச்சூலம். இதை விநாயகரும் தனது கையில் தரித்து இருக்கிறார். *இச்சாசக்தி* (ஆசை, விருப்பம், அன்பு), *கிரியாசக்தி* (செயல்பாடு) மற்றும் *ஞானசக்தி* (ஞானம்) என்கிற கடவுளின் மூன்று அடிப்படை சக்திகள் அல்லது ஆற்றல்களை குறிப்பிடுகிறது.

Tṛitīyākshi: तृतीयाक्षि "The third eye." ***த்ருதியாக்ஷி***. "மூன்றாவது கண்." மேலும் தகவலுக்கு: *நெற்றிக்கண்*.

Tryakshara Gaṇapati: त्र्यक्षरगणपति "The Lord of three letters" (A-U-M). ***த்ரயக்ஷர கணபதி***. அவரது பெரிய நெகிழ்வான காதுகள் அவருக்கு சாமரம் வீசுகின்றன. அவர் பெரும்பாலும் தனது துதிக்கையில் ஒரு ருசியான *மோதகத்தை* ஏந்தியிருக்கிறார்.

turīya: तुरीय "The fourth." ***துரிய***. "நான்காவது." விழித்திருக்கும், கனவு காணும் மற்றும் ஆழ்ந்த உறக்கத்தை கடந்த மெய்ஞ்ஞான நிலை. *மண்டூக்ய உபநிடதத்தில்* குறிப்பிடப்பட்டுள்ள உணர்வின் நான்கு நிலைகள் அல்லது அவத்தைகள். மேலும் தகவலுக்கு: *அவத்தை, உணர்வு*.

turīyātīta: तुरीयातीत "Beyond the fourth." ***துரியாதீத***. முற்றிலும் கடந்த மெய்ஞ்ஞான நிலை. ஒரு *சமாதி* நிலை. மேலும் தகவலுக்கு: *அவத்தை, உணர்வு*.



எங்கும் நிறைந்திருக்கிற (ubiquitous): ஒரே சமயத்தில் எங்கும் மற்றும் எதிலும் இருக்கும் தன்மை. நீக்கமற.

உச்சிஷ்ட (ucçishṭa): उच्छिष्ट "Leavings; remainder." "மீதம் இருப்பவை." குரு உண்ணும் தட்டு அல்லது அவர் பாதங்கள் அல்லது பாதுகைகளை அபிடேகம் செய்த புனித நீரை பக்தர்கள் சிரத்தையுடன் *பிரசாதமாக* ஏற்றுக்கொள்கிறார்கள். மேலும் தகவலுக்கு: *பிரசாதம், சத்குரு.*

உச்சிஷ்ட கணபதி (Ucçishṭa Gaṇapati): उच्छिष्टगणपति. ஒரு பாரம்பரிய விநாயகர் *மூர்த்தி* அல்லது வடிவத்தை குறிக்கும் பெயர். *உச்சிஷ்ட* என்றால் "எச்சில் பட்ட" என்று பொருள். "படையலின் கடவுள்." ஆறு கைகளுடன் இருக்கும் இவர் மடியில் சக்தியை அமர்த்திக்கொண்டு, கைகளில் ஒரு வீணை மற்றும் ஜப மாலையை தரித்து இருக்கிறார்.

udarabandha: उदरबन्ध "Waistband." ***உதரபந்த.*** "ஒட்டியாணம்."

Uddaṇḍa Gaṇapati: उद्दण्डगणपति "The enforcer of dharma." ***உத்தண்ட கணபதி.*** "தர்மத்தை நிலைநிறுத்துபவர்." பத்து கரங்களுடன் இருக்கும் இந்த *மூர்த்தியின்* கரங்களில் இரத்தின கலசம், கரும்பு, தாமரை, கதை மற்றும் வேறு சில பொருட்கள் உள்ளன.

Umā: उमा "O do not." ***உமா.*** சக்தியை குறிப்பிடும் பெயர். தவம் செய்வதை நிறுத்து என்று பார்வதியின் தாயார் தன் மகளிடம் மன்றாடி கேட்டுக்கொண்டு கொண்டதே உமா என்ற பெயர் உருவாக காரணமாகியது என்று சிவ புராணம் குறிப்பிடுகிறது. தென்னிந்திய மொழியில் தாயை குறிப்பிடும் "அம்மா" என்ற சொல்லோடு "உமா" என்ற சொல்லை தொடர்புப் படுத்துகின்றனர்.

Umāsundarī: उमासुन्दरी "Goddess of Beauty," or "Beauteous Mother." ***உமாசுந்தரி.*** "அழகான தாய்."

Umāganesh (Umāgaṇeśa): उमागणेश "Motherly Lord of Hosts." ***உமாகணேஷ்.*** "தாயின் பண்புகளுடன் இருக்கும் விநாயகர்." விநாயகரை குறிக்கும் ஒரு பெயர்.

வெளிப்படாத (unmanifest): தெளிவாக இல்லாத அல்லது புலனாகாத. தத்துவரீதியாக யாவும் கடந்த நிலை போன்ற பொருளை தருகிறது. பரசிவ என்ற தனது உருவமற்ற முழுமையில் சிவபெருமான் வெளிப்படாமல் இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *பரசிவ.*

upadeśa: उपदेश "Advice; religious instruction." ***உபதேசம்.*** "அறிவுரை; சமயம்சார்த அறிவுறுத்தல்." இது பெரும்பாலும் *குருவிடம்* இருந்து சிஷ்யனுக்கு கேள்வி-பதில் ரூபத்தில் வழங்கப்படும். *சத்குருவின்* ஆன்மீக பிரசங்கங்கள்.

upanayana: उपनयन "Bringing near." ***உபநயனம்.*** "சமீபத்தில் அழைத்து செல்வது." இது ஒரு சிறுவன் வழக்கமாக ஒரு குருவிற்கு அருகில் அழைத்து செல்லப்பட்டு, அவரிடம் இருந்து வேதம் கற்றுக்கொள்வது மற்றும் முப்புரி நூலை (*யக்ஞோபவீதம்* அல்லது *உபவீதம்*)

தரிப்பதை குறிக்கிறது. இதன் மூலம் அந்த சிறுவன் உயர்குடியில் நுழைகிறான். தர்ம சாத்திரங்களில் பரிந்துரைக்கப்பட்டு, *க்ரிஹ்ய சூத்திரங்களில்* விளக்கப்பட்டுள்ள பன்னிரண்டு *சமஸ்காரங்களில்* ஒன்றாக உபநயனம் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம்.*

Upanishad: उपनिषद् "Sitting near devotedly." ***உபநிடதம்.*** அருகில் பக்தியுடன் அமர்தல்." இது வேதங்களின் நான்காவது மற்றும் இறுதி பகுதியாக விளங்கி, வேத மந்திரங்களின் இரகசிய, தத்துவ பொருளை விளக்குகிறது. உபநிடதங்கள் என்பது வேதாந்தத்தின் மூலமாக விளங்கும் ஆழமான உரைகளின் தொகுப்பாகும் மற்றும் அவை பல்லாயிரம் வருடங்களாக இந்திய சிந்தனையின் மீது ஆதிக்கம் செலுத்தியுள்ளன. அவை கடவுள், ஆன்மா மற்றும் அண்டத்தின் இயல்பு மற்றும் மிகவும் ஆழமான இந்து சிந்தனையின் பிரத்யேக வெளிப்பாடுகளை விளக்கும் *ரிஷிகளின்* தத்துவ பதிவாக விளங்குகின்றன. மேலும் தகவலுக்கு: *சுருதி, வேதம், வேதாந்தம்.*

Ūrdhva Gaṇapati: ऊर्ध्वगणपति "The elevated one." ***ஊர்த்துவ கணபதி.*** அவர் தனது இடது மடியில் தனது சக்திகளில் ஒருவரை அமர்த்தி இருக்கிறார். அவர் தனது ஆறு கரங்களில் ஒரு நெற்கதிர், ஒரு தாமரை மற்றும் வேறு சில பொருட்களையும் தரித்து இருக்கிறார்.

utkuṭakāsana: उत्कटकासन "Sitting on the hams." ***உட்குடாசனம்.*** ஒன்று அல்லது இரண்டு முழங்கால்களை உயர்த்திய வண்ணம் இருக்கும் இந்த ஆசனம், விநாயகரின் *பங்கிமா* தோரணையை குறிப்பிடுகிறது.

utsava: उत्सव "Festival." ***உற்சவம்.*** வீடு மற்றும் கோயிலில் நடைபெறும் சமயம் சார்ந்த கொண்டாட்டங்கள் அல்லது பண்டிகைகள் மற்றும் அதன் அனுட்டானங்கள். *உற்சவம்* என்பது *பஞ்ச நித்திய கர்மாக்களில்* ஒன்றாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பண்டிகை, பஞ்ச நித்திய கர்மாக்கள்.*

uttarāyaṇa: उत्तरायण "Northern way." ***உத்தராயணம்.*** சூரியன் வடக்கு நோக்கி நகர்வதாக தோன்றும் ஆறு மாத காலம்.



vāhana: वाहन "Bearing, carrying" or "conveying." ***வாகனம்.*** "தாங்கி இருப்பது, சுமந்து இருப்பது அல்லது ஏற்றிச் செல்வது." ஒவ்வொரு இந்து கடவுளும் தனது பண்புகளுக்கு ஏற்ப ஒரு விலங்கு அல்லது பறவையை வாகனமாக கொண்டு அமர்ந்து இருப்பதாக

சித்தரிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு சிவபெருமான் காளையையும், முருகப்பெருமான் மயிலையும், விநாயகர் மூஞ்சூறையும் வாகனமாக கொண்டு இருக்கிறார்கள்.

vaidyuta: वैद्युत "Proceeding from lightning." ***வைத்யுத.*** மின்சார சக்தி.

vaikharī vāk: वैखरी वाक् "The faculty of speech." ***வைகரி வாக்.*** "பேசும் புலன்." மேலும் தகவலுக்கு: *வாக்.*

Vaishṇava: वैष्णव "Way of Vishṇu." ***வைஷ்ணவ.*** விஷ்ணுவுடன் தொடர்புடைய. விஷ்ணு அல்லது கிருஷ்ணர் அல்லது ஸ்ரீ ராமரைப் போன்ற அவரது அவதாரங்களை தெய்வமாக வணங்குபவர்கள். மேலும் தகவலுக்கு: *வைணவம்.*

Vaishṇavism *(Vaishṇava):* वैष्णव. ***வைணவம்.*** இந்து தர்மத்தில் இருக்கும் நான்கு முக்கிய சமயங்கள் அல்லது பிரிவுகளில் ஒன்று. உலகில் இருக்கும் ஒரு பில்லியன் இந்துக்களில் ஐம்பது சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் வைணவர்களாக இருக்கிறார்கள். வைணவ சமயம் பகவான் ஸ்ரீ விஷ்ணுவை தனது தனிப்பட்ட கடவுளாக, அவரது அவதாரங்கள் மற்றும் அவர்களது சக்திகளை மையமாக கொண்டு அமைந்து இருக்கிறது. வைணவ சமயம் கடவுளின் தனிப்பட்ட தன்மைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, முக்தி பெறுவதற்கு உறுதியான பாதையாக *பக்தியை* குறிப்பிடுகிறது. வைணவ சாத்திரங்களில் முதன்மையானதாக *வைணவ ஆகமங்கள், இராமாயணம், பகவத் கீதை* மற்றும் *பாகவத புராணம்* விளங்குகின்றன.

Vaishṇavite: வைணவர். விஷ்ணு அல்லது அவரது அவதாரங்களில் ஒன்றை தனது தெய்வமாக கொண்டிருப்பவர். மேலும் தகவலுக்கு: *வைணவம்.*

vaiśvānara: वैश्वानर "Referring to all human beings." ***வைஷ்வாநர.*** "மனிதர்கள் அனைவரையும் குறிப்பிடுகிறது." உயிர் சக்திகளின் விழிப்பு நிலையை குறிக்கும் இந்த சொல் பொதுவாக பிரபஞ்ச மனதின் பிரபஞ்ச ஆன்மாவை குறிக்கிறது. *வைஷ்வாநர* என்பது நான்கு *அவத்தைகளில்* ஒன்றாக விளங்குகிறது. இது விழிப்பு நிலையில் உடல், மனம் மற்றும் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் *அக்னியை* குறிப்பிடுகிறது. இது *ஜாகரத்* என்கிற விழிப்புநிலையை குறிப்பிடவும் பயன்படுகிறது. மேலும் தகவலுக்கு: *அவத்தை, ஜாக்ரத்.*

vaiśya: वैश्य "Landowner; merchant." **வைசியர்.** "நில உரிமையாளர்; வணிகர்." வங்கியாளர்கள், வியாபாரிகள், தொழில் அதிபர்கள் சமூகம்; முதலாளிகள். வர்த்தகம் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கும் வணிகர் குலம். மேலும் தகவலுக்கு: *வர்ண தர்மம்.*

vajra: वज्र "Lightning bolt." ***வஜ்ரம்*** அல்லது ***வஜ்ரத்ரிசூல.*** ஆன்மீக சக்தியின் சின்னம். இதில் தண்டம் ஏதும் இல்லாமல் இரண்டு திரிசூலங்கள் (முத்தலைசூலங்கள்)

இணைந்து இருக்கும். அதில் மூன்று கூர்முனைகளின் இரண்டு ஜோடி நேர் எதிர் திசைகளில் அமைந்து இருக்கும். *வஜ்ரம்* என்பது ஒரு முத்தலைசூலத்தையும் குறிப்பிடக்கூடும்.

vāk: वाक् "Speech." ***வாக்.*** வாக்கு. இறையியல் ரீதியாக, *வேதங்களின்* மிகவும் உயர்வான *பரவாக்* மற்றும் அதன் பல்வேறு அம்சங்களில் இருந்து படைப்பு வெளிவருகிறது. வாக் என்பது நான்கு பிரபஞ்ச படிகள் அல்லது நிலைகளில் இறக்கம் பெறுவதாக கூறப்படுகிறது. *மகாகாரணம்; காரணம்* என்கிற மனக் கோட்பாடு; சூட்சும என்கிற உயிர் சக்தி; *தூல* என்கிற பருப்பொருள் என்பதே அந்த நான்கு நிலைகள் ஆகும். இவை விழிப்புநிலை என்கிற *ஜாக்ரத்*, கனவு காணும் *ஸ்வப்ன*, ஆழ்ந்த உறக்கம் என்கிற *சுஷுப்தி*, நான்காவதாக இருக்கும் *துரிய* நிலையுடன் தொடர்பில் உள்ளன. வாக் என்பது தாந்த்ரீக பாரம்பரியத்தில் மனித நுண்ணுலகத்தில் இருக்கும் சக்கரங்களுடன் தொடர்புப்படுத்தப்படுகின்றன. பரவாக் என்கிற *மகாகாரணம்*, முதுகுத்தண்டின் அடிப்பகுதியில், பிரம்மனஸ்பதியாக இருக்கும் விநாயகரின் இருப்பிடமான *மூலாதார* சக்கரத்தில் மையம்கொண்டு இருப்பதாக கருதப்படுகிறது. *பஷ்யன்தி வாக்* என்கிற "புலனால் உணரும் வாக்", தொப்புள் மையத்தில் இருக்கும் *மணிப்பூரக* சக்கரத்தில் மையம் கொண்டிருக்கிறது. மத்தியில் இருக்கும் *மத்யம வாக்*, தொப்புள் மற்றும் தொண்டையின் மையத்தில் அமைந்து இருக்கிறது. இங்கிருந்து *வைகரி வாக்* என்கிற பேச்சு வெளிப்படுத்தப்படுகிறது. பிரம்மனஸ்பதியாக இருக்கும் கணபதி, சத்திய மந்திரத்தின் கடவுளாக இருக்கிறார். அவர் உயிர்சக்திகளின் *மூலாதாரத்தில்* தனது இருப்பிடத்தை கொண்டு இருப்பதாக *தந்திரம்* கருதுகிறது. இங்கிருந்து பரவாக் வடிவில் பேச்சு தோன்றுகிறது.

Vakratuṇḍa: वक्रतुण्ड "He of crooked trunk." ***வக்ரதுண்ட.*** *மத்சர* என்கிற பொறாமையை வெற்றிகொண்ட விநாயகரின் அம்சம் என்று *முத்கல புராணத்தில்* குறிப்பிடப்பட்டுள்ளது.

valampuri: वलम्पुरि "Right-turning." ***வலம்புரி.*** மிகவும் அரிதாக காணப்படும் இந்த விநாயகர் சிலையின் துதிக்கை வலது புறமாக திரும்பி இருக்கும். ஒப்பிடுவதற்கு: *இடம்புரி.*

vāma: वाम. ***வாம.*** 1) "அருமையான; அழகான; நன்மை செய்கிற; கடும் முயற்சி செய்தல்" என்ற பொருளுடன் சிவபெருமானின் குறிக்கும் *வாமதேவ* என்ற சொல்லில் இருப்பதைப் போல. 2) "இடது; நேராக இல்லாத; எதிராக செயல்படுகிற" என்ற பொருளுடன் *வாம மார்க்கம்* என்ற சொல்லில் இருப்பதைப் போல. மேலும் தகவலுக்கு: *வாம மார்க்கம், தாந்த்ரீக சமயம்.*

vanakkam: **வணக்கம்**. *நமஸ்கார* என்ற சமஸ்கிருத சொல்லுக்கு நிகரான தமிழ் சொல்.

Varada Gaṇapati: वरदगणपति "The boon-giver." "வரம் அளிக்கும்" ***வரத கணபதி***. இந்த மூர்த்தியின் அடையாளமாக நன்றாக தெரியும் நெற்றிக்கண், அமுத கிண்ணம் மற்றும் மகுடமாக இருக்கும் பிறை சந்திரனும் விளங்குகின்றன.

varada **mudrā:** वरदमुद्र "Boon-giving gesture." ***வரத முத்திரை***. "வரம் அளிக்கும் முத்திரை." மகாதேவர்கள் அல்லது ஒரு குரு கைகள் மூலம் காண்பிக்கும் இந்த முத்திரையில், உள்ளங்கை மணிக்கட்டில் மடிந்து எதிரில் உள்ள பக்தரை நோக்கி இருக்க, விரல்கள் வழக்கமாக நீட்டப்பட்ட நிலையில் கீழ்நோக்கி இருக்கும்.

Varada Vināyaka: वरदविनायक "Lord of boons." ***வரத விநாயகர்***. மகாராஷ்டிராவின் மஹாட் குக்கிராமத்தில் கோயில் கொண்டிருக்கும் விநாயக மூர்த்தியின் பெயர்.

Vārāṇasī: वाराणसी. **வாரணாசி.** இது காசி அல்லது பனாரஸ் என்றும் அழைக்கப்படுகிறது. (இங்கே வருணா மற்றும் அசி என்ற இரண்டு ஆறுகள் ஒன்று கூடுதல் இந்த பெயரைப் பெற்றது) இது சைவ சமயத்தின் மிகவும் புனிதமான தலமாகவும், உலகில் மிகவும் பழமையான நகரங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இது வட இந்தியாவில் கங்கை நதிக்கரையில் அமைந்து இருக்கிறது. இந்து இந்த இடத்தை *மோக்ஷத்தின்* நுழைவாயிலாக மதித்து, இந்த இடத்தில் உயிர் துறப்பதை மிகவும் புனிதமாக கருதுகிறார்கள்.

varṇa **dharma:** वर्णधर्म "The way of one's kind." ***வர்ண தர்மம்.*** பழங்கால இந்தியாவில் தோன்றிய இந்த சமூக படிநிலை அமைப்பானது பொதுவாக ஜாதி என்று அழைக்கப்படுகிறது. மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை வரையறுக்கும் எண்ணற்ற சமயம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த நெறிமுறைகள் வர்ண தர்மத்திற்குள் அமைந்து இருக்கின்றன. *வர்ண தர்மம்* என்பது பொதுவாக குடும்ப தொழிலை அடிப்படையாகக் கொண்ட, ஒருவரின் சமூகத்தின் நன்னடத்தை கோட்பாடுகளுக்கு ஏற்ப அமைந்த சமூக கடமை ஆகும். இது ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இரண்டு சமூக படிநிலைகளை கொண்டது. 1) பிராமண, சத்திரிய, வைசிய மற்றும் சூத்திர என்ற நான்கு பிரிவுகளை குறிப்பிடும் வர்ணம் மற்றும் 2) எண்ணற்ற தொழில் குழுக்களை குறிக்கும் *ஜாதி*. இந்தியாவில் 3,000-க்கும் மேற்பட்ட ஜாதிகள் இருப்பதாக கருதப்படுகிறது.

varṇāśrama **dharma:** वर्णाश्रमधर्म. ***வர்ணாசிரம தர்மம்***. "The way of one's caste and stage of life." இது சமூக அமைப்பில் இருக்கும் நான்கு பிரிவுகள் *(வர்ணம்)*, நூற்றுக்கணக்கான ஜாதிகள் மற்றும் வாழ்க்கையின் நான்கு நிலைகளை *(ஆசிரமங்கள்)* குறிப்பிடுகிறது. இது *வர்ண தர்மம்* மற்றும் *ஆசிரம தர்மத்தின்* கூட்டு கோட்பாடுகள் ஆகும். மேலும் தகவலுக்கு: *ஆசிரம தர்மம், தர்மம்.*

vāsanā: वासना "Abode." ***வாசனா***. அடியுணர்வு விருப்பங்கள். இது "வசிக்கும், மிகுதி, மீதம்," என்பதை குறிக்கும் *வாஸ்* என்ற சொல்லில் இருந்து உருவானது. இயக்கும் சக்திகளாக மறைந்திருக்கும் ஆசைகள் மற்றும் பழக்க மாதிரிகள் விளங்கி, ஒருவரின் அணுகுமுறைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தி தூண்டி விடுகின்றன. அனுபவத்தின் மூலமாக உருவாக்கப்படும் அடியுணர்வு பதிவுகளின் (*சம்ஸ்காரங்கள்*) ஒருங்கிணைந்த விளைவாக *வாசனாக்கள்* விளங்குகின்றன. அனுபவ பதிவுகளாக இருக்கும் *சம்ஸ்காரங்கள்*, அடியுணர்வில் ஒன்று சேர்ந்து *வாசனாக்களாக* உருமாறியதும், *விரித்தி* என்கிற மனநிலை மாற்றங்களை ஏற்படுத்துவதில் பங்குபெறுகின்றன. *வாசன சித்த* என்று அழைக்கப்படும் மறைந்திருக்கும் பண்புகள் மனதில், மிகவும் சிக்கலான மற்றும் உணர்ச்சிகள் நிரம்பிய *வாசனாக்கள்* காணப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம், மனம் (ஐந்து நிலைகள்).*

Vasishṭha: वसिष्ठ "Most excellent." வசிஷ்டர். இவரும் பதஞ்சலி முனிவரும், வியாக்ராபாதாவும் (பணினியின் இலக்கண புத்தகக் குறிப்பின் படி) மகரிஷி நந்திகேசவரின் (நந்திநாதா) (சுமார் கி.மு. 250) சீடர்களாக இருந்தனர். மேலும் இந்த பெயர் *ரிக் வேதத்தின்* ஏழாவது மண்டலத்தின் பாடல்களை இயற்றியவர், சில *புராணங்கள்* மற்றும் *உபநிடதங்களில்* முக்கிய பங்கு வகித்தவர், மூன்றாவதாக *யோக வசிஷ்ட* என்ற பெயரில் 29,000 செய்யுட்களுடன் ஸ்ரீ ராமரின் *யோக ஞானத்தை* விளக்குபவரையும் சேர்த்து, மற்ற பிரபலமான முனிவர்களின் பெயராகவும் விளங்குகிறது.

Veda: वेद "Wisdom." **வேதம்.** இது ரிஷிகளால் அருளப்பட்டு, இந்து தர்மத்தின் அதிகாரப்பூர்வமான சாத்திரமாக விளங்குகிறது. *வேதங்களும் ஆகமங்களும்* சேர்ந்து, *சுருதி* என்று அழைக்கப்படுகிறது. *சுருதி* என்றால் "காதால் கேட்கப்பட்டவை" என்று பொருள். பல புனிதமான சாஸ்திரங்களின் தொகுப்பாக *வேதம்* விளங்குகிறது. *ரிக், யஜுர், சாம* மற்றும் *அதர்வண* என்று *வேதங்கள்* நான்கு வகைப்படும். இவை கூட்டாக 1,00,000 மந்திரங்கள் மற்றும் கூடுதலாக உரையையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு *வேதமும்* நான்கு பிரிவுகளாக *சம்ஹிதைகள்* (மந்திரத் தொகுப்புக்கள்), *பிராமணம்* (சடங்கு வழிமுறைகள்), *ஆரண்யகம்* (அமைதியாக காட்டில் சென்று கற்கவேண்டியவை) மற்றும் *உபநிடதங்களை* (ஞானோபதேசங்கள்) கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *ஆரண்யகம், பிராமண, சுருதி, உபநிடதம்.*

Vedānta: वेदान्त "Ultimate wisdom" or "final conclusions of the *Vedas."* ***வேதாந்தம்.*** "வேதங்களின் அந்தம்." வேதாந்தம் என்பது உபநிடதங்களில் (கி.மு. 1500-600) உள்ளடக்கியுள்ள சிந்தனை முறை ஆகும், மற்றும் இது *வேதங்களின்* இறுதியான

முடிவுரைகளை வழங்குகின்றன. சுத்த துவைதத்தில் தொடங்கி முழுமையான அத்வைதம் வரை, வரலாறு முழுவதும் பல வேதாந்த பிரிவுகள் உருவாகியுள்ளன. நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த *ரிஷி திருமூலரால்* (சுமார் கி.மு. 250) அருளப்பட்டு, *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களின்* ஒரு முழுமையான சுருக்கமாக விளங்கும் *திருமந்திரத்தில்* உள்ள வேதாந்த-சித்தாந்தத்தில் இருக்கும் "ஒருமைவாத-கடவுள் நம்பிக்கை", *அத்வைத ஈசுவரவாதம், அன்பான விநாயகர்* புத்தகத்தில் வேதாந்த கண்ணோட்டமாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *அத்வைத ஈசுவரவாதம், திருமந்திரம்.*

வேத ஆகமம் சார்ந்த (Vedic-Āgamic): வரலாறு மற்றும் பாரம்பரியத்தில் ஒன்றுக்கு ஒன்று ஆதரவாக இருந்து பின்னிப்பிணைந்த இரண்டு பிரிவுகளை பிரதிபலித்து, இந்து சமயத்தின் *சுருதியாக* விளங்கும் *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களில்* இருந்து, ஒரே நேரத்தில் தகவல்களை பெற்று அவற்றை பின்பற்றுதல். அதில் சித்தாந்தம் மற்றும் வேதாந்த வேறுபாடு பாரம்பரிய முறையில் விளக்கப்பட்டுள்ளது. அதில் மனிதன் இறைவனை நினைத்து வேண்டுவதாக *வேதங்களும்,* இறைவன் மனிதனுக்கு உதவி செய்ய அவனை கவனித்துக்கொண்டு இருப்பதாக *ஆகமங்களும்* அமைந்து உள்ளன.

vegetarian: *Śākāhāra. ஷாகாஹார.* சைவ உணவு. இறைச்சி, மீன், கோழி மற்றும் முட்டைகள் இல்லாத ஒரு உணவு. உடல் ஆரோக்கியம் மற்றும் சுற்றுப்புற நெறிமுறைகளுக்கு ஒரு அடிப்படையாக சைவ உணவு விளங்குகிறது. இது ஆயிரம் ஆண்டுகளாக இந்திய வாழ்க்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. சைவ உணவுகளில் தானியங்கள், பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள் மற்றும் பால் பொருட்கள் அடங்கும். சைவ உணவை உண்பவர் *ஷாகாஹாரி* என்று அழைக்கப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *குணம், அசைவம் சார்ந்த, சைவம் சார்ந்த, இயம-நியமம்.*

சைவம் சார்ந்த (veggie): காய்கறி. சைவ உணவு உண்பவர். மேலும் தகவலுக்கு: *அசைவம் சார்ந்த, சைவ உணவு உண்பவர்.*

மறைக்கும் சக்தி (veiling grace): *Tirobhāva* śakti. ***திரோபாவ சக்தி.*** ஆன்மா ஒரு தனிப்பட்ட உயிர்சக்தியாக வளர்ந்து பரிணாம வளர்ச்சி பெறுவதற்காக ஆணவம், கர்மவினை மற்றும் மாயை என்று மூன்று மலங்களில் ஆன்மாவை பிணைத்து அல்லது பொருத்தி, அதன் புலனுணர்வை கட்டுப்படுத்தும் தெய்வீக சக்தி. மேலும் தகவலுக்கு: *அருள்.*

vel: வேல் "Spear, lance." யோகத்தின் தலைவனாகவும் தேவர்கள் படைத்தலைவனாகவும் இருக்கும் முருகப்பெருமானின் தெய்வீக அதிகாரத்தை தெரியப்படுத்தும் சின்னம். (இது சமஸ்கிருதத்தில் *சூல* என்று அழைக்கப்படுகிறது).

பெருமதிப்பு வழங்குதல் (venerate): போற்றி பாராட்டுதல்.

சிந்தூரம், செந்தூரம் (vermillion).

வஸ்திரம் (vestments): சமயப்பணியில் இருக்கும் மக்கள், தங்கள் ஆன்மீக நிலை அல்லது தாங்கள் பெற்ற தீட்சையை குறிப்பிடும் விதமாக அணியும் அதிகாரப்பூர்வமான அங்கிகள் அல்லது உடைகள்.

vibhūti: विभूति Powerful," "pervading," "appearing." From *bhū* "existence," or "manifestation" and *vi,* "apart." ***விபூதி.*** திருநீறு. "ஆற்றல்மிக்க," "வியாபித்து இருக்கிற," "காட்சி அளிக்கிற." இது "உள்பொருள்," அல்லது "வெளிப்பாட்டை" குறிப்பிடும் *பூ,* மற்றும் "பிரிந்து இருக்கும்" என்பதை குறிக்கும் *வி* என்ற சொல்லில் இருந்து தோன்றியது. பால், நெய், தேன் போன்ற விசேஷமான பொருட்களுடன் மாட்டு சாணத்தை எரித்து உருவாக்கப்படும் ஒரு வெள்ளை நிறப்பொடி. இது புனிதத்தன்மையை குறிப்பிடுகிறது மற்றும் எல்லா சிவாலயங்கள் மற்றும் மற்ற சிறிய கோயில்களில் பூஜைக்கு பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும் முக்கிய பிரசாதங்களில் ஒன்றாக விளங்குகிறது. சைவ சமயத்தை சேர்ந்தவர்கள், சுமார்த்த சமயத்தை சேர்ந்தவர்களை போல, ஒரு தனிப்பட்ட பிரிவின் சின்னமாக, தங்களது நெற்றியில் மூன்று விரல்களால் இடைவெளி விட்டு மூன்று கோடுகளாக விபூதியை தரித்துக்கொள்கிறார்கள். யோகப்பியாசம் மூலம் பெறும் சித்திகளை குறிப்பிடவும் விபூதி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *திலகம், திருபுண்டரம்.*

vidyā: विद्या "Knowledge, learning, science." ***வித்யை.*** "அறிவு, கல்வி, அறிவியல்." கல்வி மற்றும் தியானத்தின் மூலம் பெறுகிற புரிதலின் சக்தி. *அவித்யா,* அறியாமையில் இருந்து மாறுபட்டு இருக்கிறது.

vidyārambha: विद्यारंभ "Commencement of learning." ***வித்யாரம்ப.*** "கல்வி கற்கும் செய்முறையின் தொடக்கம்." மேலும் தகவலுக்கு: *சமஸ்காரம்.*

Vighnarāja Gaṇapati: विघ्नराजगणपति "The Lord of Obstacles." ***விக்னராஜ கணபதி.*** "விக்கினங்கள் மீது ஆட்சி புரியும் கணபதி." இவர் ஆபரணங்களை அணிந்து இருக்கிறார். இவர் சங்கு, சக்கரம் மற்றும் மலர்களால் செய்த அம்பை தனது ஆயுதமாக கொண்டிருக்கிறார். விக்னராஜ என்பது *மமதை* மீது வெற்றிகொள்ளும் விநாயகர் அம்சத்தை குறிக்கிறது.

Vighneśvara: विघ्नेश्वर "Lord of Obstacles." ***விக்னேசுவரன்.*** ஆன்மாக்களை சரியான பாதையில் இயக்க, அவர்களின் பாதையில் தடைகளை நீக்க மற்றும் உருவாக்க விநாயகர் பயன்படுத்தும் சக்தியை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *கணேஷா.*

Vijaya Gaṇapati: विजयगणपति "The victorious one." ***விஜய கணபதி.*** மூஞ்சூறை தனது வாகனமாக கொண்டிருக்கும் இவர் உடைந்த தந்தம், அங்குசம், பாசக்கயிறு மற்றும் மாம்பழம் என்று நான்கு முக்கிய சின்னங்களை கைகளில் ஏந்தி இருக்கிறார்.

Vikaṭa: विकट "Deformed; having an unusual size or aspect." ***விகட***. இது காமத்தின் மீது வெற்றிகொள்ளும் விநாயகர் அம்சம் என்று *முத்கல புராணம்* குறிப்பிடுகிறது.

vīṇā: वीणा. ***வீணை***. தென்னிந்தியாவில் மிகவும் பிரபலமான மீட்டும் கருவி. இது ஏழு தந்திகளை கொண்டிருக்கும். பலா மரத்தினால் வீணை செய்யப்படுகிறது. இதில் ஒரு பக்கம் குடமும், இன்னொரு பக்கம் யாளியின் முகமும் பொருத்தப்பட்டு இருக்கும்.

Vināyaka: विनायक "Remover." ***விநாயகர்***. "நீக்குபவர்." (இதற்கு முன்பாக "விக்கினம்" என்ற சொல்லும் பொருத்தப்பட்டு இருக்கும்) விக்கினங்களை நீக்குபவர் என்று குறிப்பிடும் விநாயகரின் பெயர். மேலும் தகவலுக்கு: *கணேஷா.*

Vināyaka Ahaval: விநாயகர் அகவல் "Ode to Vināyaka." விநாயகரைப் போற்றி (கி.மு 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த) ஔவையார் பாடிய பிரபல தமிழ் பாடல்.

Vināyaka Vratam: ***விநாயக விரதம்***. நவம்பர்-டிசம்பர் மாத பௌர்ணமி அன்று தொடங்கி 21 நாட்கள் நடைபெறும் விநாயகர் பண்டிகை. தமிழ்நாடு மற்றும் உலகெங்கும் இருக்கும் தமிழ் மக்கள் கொண்டாடும் ஒரு முக்கிய பண்டிகை. இந்த பண்டிகையின் போது விநாயகர் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன மற்றும் பக்தர்கள் தாங்கள் தினமும் பூஜையில் பங்குபெறுதல் அல்லது தினமும் ஒரு வேளை உபவாசம் இருத்தலைப் போன்ற விரதம் மேற்கொள்கிறார்கள்.

Vīra Gaṇapati: वीरगणपति "The valiant warrior." ***வீர கணபதி***. பதினாறு திருக்கரங்களுடன் அடையாளம் காணப்படும் இந்த மூர்த்தியிடம் கதை, வில், கோடாரிகள் மற்றும் மேலும் பல ஆயுதங்கள் காணப்படுகின்றன.

visarjana: विसर्जन "Departure." ***விசர்ஜனம்***. "புறப்பாடு." மேலும் தகவலுக்கு: *விநாயகர் சதுர்த்தி.*

Vishṇu: विष्णु "The All-Pervasive." **விஷ்ணு.** "எங்கும் வியாபித்து இருக்கிற." வைணவர்களின் பரமாத்துமா. தனிப்பட்ட தலைவனாக மற்றும் ஸ்ருஷ்டிகர்த்தாவாக, சர்வவல்லமையுடன் எல்லாம் அறிந்த உதார குணமுள்ள தெய்வமாக, தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியம் இருக்கும் போது ஒரு முழுமையான மனித வாழ்க்கையை வாழ்வதற்காக, அவ்வப்போது அவதாரம் எடுக்கும் கடவுளாக இருக்கிறார். சைவ சமயத்தில், சிவபெருமானின் காக்கும் பண்புடன் விஷ்ணு இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *வைணவம்.*

கற்பனை செய்தல் (visualize (visualization)): மனதில் காட்சிகளை கற்பனை செய்தல் அல்லது உருவாக்குதல். எதிர்காலத்தை திட்டமிட அல்லது வடிவமைக்க சிந்தனை சக்தியை பயன்படுத்துதல்.

viśvagrāsa: विश्वग्रास "Total absorption." ***விஷ்வகிராசா.*** "முழுமையாக ஒடுக்கிக்கொள்ளுதல்." ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி நிறைவேறியதும், சிவபெருமானின் அருளின் மூலம், அவருடன் ஆன்மாவின் முடிவான ஐக்கியம் அல்லது ஒடுக்கம். ஆன்மா முதலில் தோற்றம் அளித்த சிவலோகத்தில், சிவபெருமானின் உடலான பரமேசுவரனுடன் தனிப்பட்ட *ஆனந்தமய கோசத்தின்* முடிவான ஐக்கியத்தை குறிப்பிடுகிறது. இது ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியின் முடிவில் *அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம்* மற்றும் *விஞ்ஞானமய கோசம்* என்கிற நான்கு வெளிப்புற உறைகளை கைவிட்ட பிறகு நடைபெறுகிறது. இறுதியில் ஆதி ஆன்மாவில் *ஆனந்தமய கோசம்* ஐக்கியமாகிறது. படைப்பவர், காப்பவர், அழிப்பவர், மறைப்பவர் மற்றும் வெளிப்படுத்துபவராக இருக்கும் சிவபெருமானாக ஆன்மா மாறுவதால், அது தன் தனித்தன்மையை இழக்கிறது. தனிப்பட்ட அடையாளம் பொதுவான தன்மையாக விரிவாக்கம் பெறுகிறது. இதற்கு முன்பு ஆன்மா *சமாதி* நிலைகளில் பரசிவம் மற்றும் பராசக்தியில் ஐக்கியம் அடைந்திருந்து, தற்போது பரமேசுவரனுக்குள் முழுமையாக ஐக்கியம் அடைவதால், அது சிவபெருமானின் மூன்று முழுமைகளிலும் இணக்கத்தை பெறுகிறது. *ஜீவன்* முழுமையாக சிவபெருமானாக மாறுகிறது மற்றும் இதனால் ஒரு புதிய தன்னிறைவான சிவபெருமான் உருவாவதாக தோன்றினாலும், அவ்வாறு உருவாவதில்லை ஏனென்றால் ஒரு சிவபெருமான் மட்டுமே பரமனாக இருக்க முடியும். மேலும் தகவலுக்கு: *ஆத்ம, ஆன்மாவின் வளர்ச்சி, சமாதி, ஆன்மா.*

vitala: वितल "Region of negation." ***விதள.*** "எதிர்மறையான பகுதி." சீற்றம் மற்றும் முரட்டுத்தனத்தின் பகுதி. *மூலதாரத்திற்கு* கீழிருக்கும் இரண்டாவது சக்கரம். இது தொடைகளில் மையம் கொண்டு இருக்கிறது. அவிச்சி ("சந்தோஷம் இல்லாத") என்ற பெயரில், பூமிக்கு அடியில் இருக்கும் இரண்டாவது நரகலோகத்துடன் பொருந்தி இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், லோகம், நரகம்.*

vivāha: विवाह "Marriage." ***விவாகம்.*** "திருமணம். மேலும் தகவலுக்கு: *சமஸ்காரங்கள்.*

Vivekānanda, Swāmī: विवेकानन्द "Of blissful discrimination." **விவேகானந்தர்**. இவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர். அவருக்கு இந்து சமயத்தின் மீது ஒரு தீவிரமான அன்பு ஏற்பட்டது மற்றும் சமய பிரச்சாரகரின் உற்சாகம் அவரை முன்னோக்கி அழைத்து சென்றது. அவர் தனது 39 ஆவது வயதில் *மகாசமாதி* (1863-1902) அடைந்தார். அவர் உலகெங்கும் பயணம் மேற்கொண்டு மக்களுக்கு அறிவுப்பூர்வமான உபதேசங்களை

வழங்கினார். அது அவரது குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாக விளங்குகிறது. அவர் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் வழங்கிய சொற்பொழிவுகள் காரணமாக இந்து சமயத்தின் மீது மக்களுக்கு மதிப்பு கூடியது. அவர் அன்று நிறுவிய இராமகிருஷ்ணா இயக்கம், இன்று உலகெங்கும் 100 மையங்கள் மற்றும் சுமார் 1,000 சந்நியாசிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தற்போதுள்ள இந்துசமய மறுமலர்ச்சிக்கு விவேகானந்தர், ராதாகிருஷ்ணன், தாகூர், அரபிந்தோ மற்றும் மேலும் பலர் தூண்டுதலாக இருந்துள்ளனர்.

விரதம் (vow).

vrata: व्रत "Vow, religious oath." ***விரதம்.*** தவம், உபவாசம், குறிப்பிட்ட மந்திரங்களை ஜபம் செய்தல், வழிபாடு அல்லது தியானத்தை போன்று குறிப்பிட்ட காலத்திற்கு சில பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரு சபதத்தை பெரும்பாலும் குறிப்பிடுகிறது. விரதங்கள் என்பது சாதாரண உறுதிமொழியில் இருந்து கடவுள், தெய்வங்கள், *குரு* மற்றும் சமூகம் முன்பாக மேற்கொள்ளப்படும் மாற்றமுடியாத சபதங்கள் வரை பல்வேறு வகைகளில் உள்ளன.

vrātyastoma: व्रात्यस्तोम "Vow pronouncement." ***வ்ராத்யஸ்தோம.*** *தாண்ட்ய பிராமணத்தில்* விவரிக்கப்பட்டுள்ள இந்த பாரம்பரிய சுத்திகரிப்பு சடங்கின் மூலம், தூய்மை இழந்தவர்கள் மீண்டும் ஒரு இந்து சம்பிரதாயத்தில் வரவேற்கப்படுகிறார்கள். இந்த சடங்கு வெளிநாட்டில் இருந்து இந்தியா திரும்பும் அல்லது வேற்று மதத்தை ஏற்றுக்கொண்ட இந்துக்களுக்கு செய்து வைக்கப்படுகிறது.

vṛiksha: वृक्ष "Tree." ***வ்ருக்ஷ.*** "மரம்."



wealth: *Artha*. **செல்வம்.** ஏராளம்; மிகுதியான செல்வம். மேலும் தகவலுக்கு: *புருஷார்த்த*.

wood apple: The *kapittha* fruit. **விளாம்பழம்**. மேலும் தகவலுக்கு: *கபித்த*.

உலகம், லௌகீகம் (world): இந்து தர்மத்தில், உலகம் என்பது 1) ***லோகம் (loka):*** உணர்வில் ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது உள்பொருள் இருக்கும் பகுதி. 2) ***மாயை (māyā):*** காட்சியளிக்கும் உள்பொருள் முழுவதும்; புலனாகும் பிரபஞ்சம்; அல்லது அண்டம். இது இந்த அர்த்தத்துடன், தூல உண்மைப்பொருளை கடந்து இருக்கிறது மற்றும் இது தன் பயன்பாட்டை பொருத்து உணர்ச்சி, மனம் மற்றும் ஆன்மீக, தூல உலகங்களை குறிப்பிடலாம். இது *பிரகிருதி* மற்றும் *பிரம்மாண்ட* என்ற சொற்கள் மூலம்

குறிப்பிடப்படுகிறது. 3) ***பாசம்*** *(pāśa):* சைவ சமயத்தில், மூன்று அடிப்படைகளாக விளங்கும் "கடவுள், ஆன்மா, உலகை," குறிப்பிடும் *பதி, பசு, பாசத்தில்* இருக்கும் *பாசத்தை* குறிப்பிடுவதற்கு பெரும்பாலும் உலகம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதனால் இது ஆன்மாவை கட்டுப்படுத்தி, அதன் உண்மையான இயல்பை மறைத்து, ஒரு தனிப்பட்ட உயிர்சக்தியாக அனுபவத்தின் மூலம் பரிணாம வளர்ச்சி பெறுவதற்கு உதவி செய்யும் "தடையாக" (*பாசம்*) தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உலகம் அல்லது *பாசம்* என்பது *ஆணவம்* (தன்முனைப்பின் சக்தி), *கர்மவினை* (காரண காரிய கோட்பாடு) மற்றும் *மாயை* (வெளிப்பாடு, பருப்பொருளின் கோட்பாடு, சிவபெருமானின் அற்புதமான சக்தி, ஆறாவது *தத்துவம்*) என்ற மூன்று பண்புகளை கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *பிரம்மாண்டம், லோகம், மாயை, நுண்ணுலகம்-பேரண்டம், பாசம், தத்துவம்.*

லௌகீகம் சார்ந்த (worldly): பொருள்முதல்வாதம், ஆன்மீகம் சாராத. உலக விவகாரங்கள் அல்லது இன்பங்களுக்கு அர்பணிக்கப்பட்ட அல்லது அவற்றுடன் தொடர்புடைய. இது முக்கியமாக சமயம் சாராத சிந்தனை மற்றும் வாழ்க்கையில் அதீத நாட்டத்தை குறிப்பிடுகிறது. பொறாமை, பேராசை, சுயநலம், கோபம், வஞ்சனை போன்றவற்றின் இருப்பிடமாக விளங்கும், கீழ்நிலை *சக்கரங்களில்* இருந்து உருவானதை குறிப்பிடுகிற. —**லௌகீக பண்பு (worldliness):** லௌகீகத்தில் ஈடுபட்டுள்ள நிலை அல்லது குணம்.



yajña: यज्ञ "Worship; sacrifice." ***யக்ஞம்*** அல்லது **யாகம்.** "வழிபாடு; தியாகம்." அக மற்றும் புற வழிபாட்டின் மூலம் தியாகம் செய்து சரண் அடைவதை குறிப்பிடும் யாகம், இந்து தர்மத்தின் மிகவும் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. 1) வைதீக காலங்களில் இருந்து நடைபெற்று வரும் இந்த வழிபாட்டில் வேத மந்திரங்களின் உச்சரிப்புடன் நெய், தானியங்கள், நறுமணப் பொருட்கள் மற்றும் மூலிகை சுள்ளிகள் அக்னி பகவானுக்கு சாத்திர முறைப்படி வழங்கப்படுகின்றன. தேவ தூதராக கருதப்படும் அக்னி பகவான், படையல்கள் மற்றும் பிரார்த்தனைகளை மகாதேவர்களிடம் கொண்டு சேர்க்கிறார்.

yajñopavīta: यज्ञोपवीत "Sacred thread." ***யக்ஞோபவீதம்.*** மேலும் தகவலுக்கு: *உபநயனம்.*

Yajur Veda: यजुर्वेद "Wisdom of sacrificial formulas." ***யஜுர் வேதம்***. சுருதியில் அங்கம் வகிக்கும் நான்கு வேத (*ரிக், யஜுர், சாம* மற்றும் *அதர்வண)* தொகுப்புகளில் ஒன்று. *யஜுர் வேதம்* என்று தனியாக குறிப்பிடும் போது, இது வேதத்தின் மையமாகவும் பழமையான பகுதியாகவும் இருக்கும் *சம்ஹிதையை* குறிப்பிடுகிறது. இதில் 1) *கிருஷ்ண ("கிருஷ்ணம்* என்றால் கருப்பு") *யஜுர் வேதம்* (இதில் கருத்துரைகள், பிராமண மற்றும் மந்திரங்கள் கலந்து இருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது). (2) *சுக்ல ("சுக்ல* என்றால் வெளுப்பு") *யஜுர் வேதம்* (கருத்துரைகள் ஏதும் கலக்காமல் தனித்தனியே தூய்மையாக இருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது) என்று இரண்டு மாபெரும் பிரிவுகள் உள்ளன. மேலும் தகவலுக்கு: *வேதங்கள்*.

yama-niyama: यमनियम "Restraints-observances." **இயம நியமம்**. *இயமம்-நியமம். இயமங்கள்* மற்றும் *நியமங்கள் இராச யோகத்தின்* எட்டு அங்கங்களில் முதல் இரண்டு அங்கமாக விளங்கி, இந்து சமயத்தின் அடிப்படை நெறிமுறைகளை உள்ளடக்கி, அனைத்து ஆன்மீக முன்னேற்றத்திற்கும் அத்தியாவசிய முக்கிய அடிப்படையாக விளங்குகிறது. *இயமங்கள்* என்பது நெறிமுறை கட்டுப்பாடுகள்; *நியமங்கள்* என்பது சமயம் தொடர்பான பயிற்சிகள் ஆகும். பத்து பாரம்பரிய *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. —***இயமங்கள்*** (***yamas):*** 1) **அகிம்சை:** "கொல்லாமை." 2) **சத்யம்:** "வாய்மை." 3) **அஸ்தேயம்:** "கள்ளாமை." 4) **பிரம்மச்சரியம்:** "புலன் அடக்கம்." 5) **க்ஷமை:** "பொறுமையுடைமை." 6) **த்ருதி:** "உறுதியான தன்மை." 7) **இரக்கம்:** "கருணை." 8) **ஆர்ஜவம்:** "நேர்மை, வெளிப்படையாக இருக்கும் தன்மை." 9) **மிதகாரம்:** "அளவு உணவு." 10) **சௌச்சம்:** "தூய்மை." —***நியமங்கள் (niyamas):*** 1) ***ஹ்ரி:*** "தவறுக்கு வருந்துதல்." 2) ***சந்தோஷம்:*** "ஆத்ம திருப்தி." 3) ***தானம்:*** "நன்கொடை." 4) ***ஆஸ்திக்ய:*** "கடவுள் நம்பிக்கை, ஆத்திகம்." 5) ***ஈஸ்வரபூஜன:*** "இறைவனை வழிபடுதல்." 6) ***சித்தாந்த ஸ்ரவண:*** "சாத்திரங்களை கேட்டறிதல்." 7) ***மதி:*** "அறிவெழுச்சி." 8) ***விரதம்:*** "புனிதமான விரதங்கள்." 9) ***ஜபம்:*** "மந்திரங்களை ஜபித்தல்." 10) ***தபஸ்:*** "உடலை விரும்பி வருத்துதல், விரதத்துவம்." மேலும் தகவலுக்கு: *இராச யோகம்*.

yantra: यन्त्र "Restrainer," "limiter." ***யந்திரம்***. வடிவவியல் மற்றும் அகரவரிசை வடிவங்களை உள்ளடக்கிய ஒரு மறைபொருளான சித்திரம். இது வழக்கமாக தங்கம், வெள்ளி அல்லது செம்பு தகடுகளில் செதுக்கப்படுகிறது. இது சிலசமயங்களில் கல் அல்லது உலோகத்தில், முப்பரிமாணங்களில் வழங்கப்படுகிறது. உடல் ஆரோக்கியம், செல்வம், குழந்தைப்பேறு அல்லது ஒரு தெய்வத்தை ஆவாகனம் செய்தல் அல்லது வேறு எதுவாக இருந்தாலும், கணினியைப் போன்ற ஒரு *யந்திர* மாதிரிக்கு ஏற்ப ஆன்மீக மற்றும் உள்ளத்தின் சக்திகளை ஒருங்கிணைப்பது ஒரு *யந்திரத்தின்* நோக்கம் ஆகும். இது

வழக்கமாக கோயிலில் இருக்கும் தெய்வத்திற்கு அருகே அல்லது அதன் அடிப்பகுதியில் அமைக்கப்பட்டு இருக்கும்.

yoga: योग "Union." From *yuj,* "to yoke, harness, unite." **யோகம்.** "சங்கமம்." "கட்டுப்படுத்துதல், இணைதல்" என்பதை குறிப்பிடும் *யுஜ்* என்ற சொல்லில் இருந்து உருவானது. எல்லாம் கடந்த அல்லது தெய்வீக உணர்வுடன், தனிப்பட்ட உணர்வை கட்டுப்படுத்துவதே இதன் தத்துவம், செய்முறை, கட்டுப்பாடுகள் மற்றும் பயிற்சிகளின் நோக்கம் ஆகும். ஆச்சாரமான இந்து தத்துவத்தில் இருக்கும் ஆறு *தரிசனங்கள்* அல்லது அமைப்புக்களில் ஒன்றாக விளங்குகிறது. பதஞ்சலி தனது *யோக சூத்திரத்தில், யோகத்தை இராச யோகத்தின்* எட்டு அங்கங்களாக (*அட்டாங்க*) தொகுத்துள்ளார். இது அடிப்படையில் ஒரு செய்முறையாக இருந்தாலும், உண்மையில் *இராச யோகத்தின்* ஒவ்வொரு அங்கமும் *யோகங்களாக* வளர்க்கப்பட்டு வலியுறுத்தப்பட்டுள்ளன. யோகங்கள் பல வடிவங்களில் *ஹட யோகம்* (தியானத்திற்காக தயார் செய்துக்கொள்ளும் போது உடல்ரீதியான பூரணத்துவத்தை வலியுறுத்துகிறது), *கிரியை யோகம்* (சுவாசக் கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறது), மற்றும் *கர்ம யோகம்* (சுயநலமற்ற சேவை) மற்றும் *பக்தி யோகம்* (பக்தியில் இருக்கும் பழக்கங்கள்) முக்கியமானதாக விளங்குகின்றன, மற்றும் இவற்றை *இராச யோகத்தின்* முதல் இரண்டு அங்கங்களின் (இயமங்கள் மற்றும் நியமங்கள்) வெளிப்பாடாக கருதலாம். மேலும் தகவலுக்கு: *பக்தி யோகம், ஹட யோகம், இராச யோகம்.*

yogadaṇḍa: योगदण्ड "Meditation staff." ***யோகதண்டம்.*** தியானத்தின் போது கை வைக்க பயன்படும் ஒரு ஊன்றுகோல். இது வழக்கமாக இரண்டு அடி நீளத்துடன் மரத்தில் செய்யப்பட்டு இருக்கும்.

Yoga Gaṇapati: योगगणपति "The meditator." ***யோககணபதி.*** இது விநாயகரின் ஒரு விசேஷமான மூர்த்தி. இந்த கணபதி யோகாசனத்தில் அமர்ந்து, கையில் ஒரு யோக தண்டம் மற்றும் ஜப மாலையை தரித்து இருக்கிறார்.

Yogaswami: யோகசுவாமி "Master of yoga." "யோகத்தின் குரு." இலங்கையின் மிகவும் பிரபலமான ஆன்மீக குரு (1872-1964). நந்திநாத சம்பிரதாயத்தின் கைலாச பரம்பரைச் சேர்ந்த ஒரு சித்தர். இவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிக்கு 1949 ஆம் ஆண்டு தீட்சையை வழங்கினார். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை.*

yogī: योगी. **யோகி.** *யோக* பயிற்சி மேற்கொள்பவர், அதிலும் குறிப்பாக *குண்டலினி* அல்லது *இராச யோகத்தில்* பயிற்சி செய்பவர். (முறையான சமஸ்கிருத ஆண்பால் சொல்: *யோகின்.* பெண்பால்: *யோகினி.*)

yuga: �yUga “Eon,” “age.” **யுகம்**. *யுகம்*. இந்து சமயத்தின் கால கணிப்பு முறையில், காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று. அவை: சத்ய (அல்லது கிருத), திரேதா, துவாபர மற்றும் கலியுகம். முதல் யுகத்தில், *தர்மம்* தழைக்கிறது, ஆனால் யுகங்களின் சுழற்சியில், நற்பண்பு குறைந்து அறியாமை மற்றும் அநீதி ஆதிக்கம் செலுத்துகிறது. நாம் தற்போது கலியுகத்தில் இருக்கிறோம். இந்த யுகத்தின் முடிவில், புதிய சத்ய யுகத்தின் சுழற்சி தொடங்குகிறது.



சமஸ்கிருத உச்சரிப்பு

சமஸ்கிருத உச்சாரணம்

संस्कृतम् उच्चारणम्

உயிர் எழுத்துக்கள்

குறில் உயிர் எழுத்துக்களை காட்டிலும் நெடில் உயிர் எழுத்துக்கள் இரு மடங்கு நீண்டு ஒலிக்கின்றன. ◌, ◌, ◌, ஒள ஆகிய எழுத்துக்கள் எப்போதும் நெடிலாக இருக்கும். இவை ஈருயிரெழுத்துக்களாக (Diphthongs) அறியப்படுகின்றன.

अ	◌	“அம்மா, அருமை” என்ற சொற்களில் இருக்கும் “அ” போல
आ ा	◌	“ஆமை, ஆத்மா” என்ற சொற்களில் இருக்கும் “ஆ” போல
इ ि	இ	“இலை, இறக்கை” என்ற சொற்களில் இருக்கும் “இ” போல
ई ी	◌	“ஈட்டி, ஈகை” என்ற சொற்களில் இருக்கும் “ஈ” போல
उ ु	உ	“உறக்கம், உடுக்கு” என்ற சொற்களில் இருக்கும் “உ” போல
ऊ ू	ஊள	“ஊர், ஊடுருவல்” என்ற சொற்களில் இருக்கும் “ஊள” போல
ऋ	ரு	தமிழில் "ரு" என்ற சொல்லைப் போல
ॠ	ரூ	தமிழில் "ரூ" என்ற சொல்லைப் போல
ऌ	ல்ரூ	“ல்ரூ” என்று உச்சரிக்கப்படுகிறது
ए े	◌	“ஏணி, ஏற்றம்” என்ற சொற்களில் இருக்கும் “ஏ” போல
ऐ ै	◌	“ஐந்து, ஐயம்” என்ற சொற்களில் இருக்கும் “ஐ” போல
ओ ो	◌	“ஓடம், ஓநாய்” சொற்களில் இருக்கும் “ஓ”

		போல
ఆ ా ౌ	ஔ	“மௌனம்” என்ற சொல்லில் இருக்கும் “ஔ” போல

மெல்லண்ண ஒலி மெய் எழுத்துக்கள் (GUTTURAL CONSONANTS)

இவை தொண்டையில் உச்சரிக்கப்படுகின்றன.

క్	க்	“வாக்கு, நாக்கு” சொற்களில் இருக்கும் “க்" போல
ఖ్	க்2	“துக்கம்” என்ற சொல்லில் இருக்கும் “க்க” போல
గ్	க்3	“இராகம்” எந்த சொல்லில் “க” ஒலிப்பதைப் போல
ఘ్	க்4	“மேகம், துரோகம்” சொற்களில் “க” ஒலிப்பதைப் போல
ఙ	ங்	“செங்கல், சிங்கம்” என்ற சொற்களில் இருக்கும் “ங்” போல

அண்ணநிலை ஒலி மெய் எழுத்துக்கள் (PALATAL CONSONANTS)

மேல்வாயில் இருந்து தோன்றும் ஒலி.

చ్	ச்	“சக்கரம்” என்ற சொல்லில் “ச்” போல
ఛ్	ச்ச	“இச்சாசக்தி” என்ற சொல்லில் “ச்ச” போல
జ్	ஜ்	“ஜவ்வாது, ஜபம்” என்ற சொல்லில் “ஜ்" போல
ఝ్	ஜ்2	ஜார்கண்ட் (இந்தியாவில் இருக்கும் ஒரு மாநிலம்) என்ற சொல்லில் “ஜ்” போல.
ఞ్	ஞ்	“மெய்ஞ்ஞானம்” என்ற சொல்லில் “ஞ்” போல

வளை நாவோலி மெய் எழுத்துக்கள் (CEREBRAL CONSONANTS)

நாக்கு மேல்நோக்கி மேல்வாய்க்கு எதிராக திருப்பப்பட்டு உச்சரிக்கப்படுகிறது.

ట్	ட்	“உட்புறம், அட்டகாசம்” என்ற சொற்களில்

		இருக்கும் “ட்” போல
ட்	ட்2	“பாடம்” என்ற சொல்லில் இருக்கும் “ட” போல
ட்	ட்3	“நாடி” என்ற சொல்லில் இருக்கும் “டி” போல
ட்	ட்4	“திடகாத்திரம்” என்ற சொல்லில் இருக்கும் “ட” போல
ண்	ண்	“மண்” என்ற சொல்லில் இருக்கும் “ண்” போல

பல்லோலி மெய் எழுத்துக்கள் (DENTAL CONSONANTS)

மேற்புறத்தில் இருக்கும் முன் பற்களின் பின்புறமாக, நுனி நாக்கின் மூலம் உச்சரிக்கப்படுகிறது.

த்	த்	“தாத்தா” என்ற சொல்லில் இருக்கும் “த்” போல
த்	த்2	“அர்த்தம்” என்ற சொல்லில் இருக்கும் “த்” போல
த்	த்3	“தரிசனம்” என்ற சொல்லில் இருக்கும் “த” போல
த்	த்4	“தானம், வியாதி” என்ற சொல்லில் இருக்கும் “த” போல
ந்	ன்	“பின்புறம்” என்ற சொல்லில் இருக்கும் “ன்” போல

இதழின ஒலி மெய் எழுத்துக்கள் (LABIAL CONSONANTS)

உதடுகளில் உருவாகும் ஒலி.

ப்	ப்	“காப்பு” என்ற சொல்லில் இருக்கும் “ப்” போல
ஹ்	ப்2	ஹ சொல்லுக்கு நிகரான சொல் பழம் என்றாலும், இரண்டிற்கும் உச்சரிப்பு சற்று மாறுபடுகிறது
ப்	ப்3	“பந்தம்” என்ற சொல்லில் இருக்கும் “ப” போல

्प्	प्4	“பக்தி” என்ற சொல்லில் இருக்கும் “ப” போல
्म्	म्	“அம்மா” என்ற சொல்லில் இருக்கும் “ம்” போல

முடிவில் வரும் மெய்யெழுத்துக்கள் (SEMIVOWELS)

्य्	य्	(அண்ணநிலை ஒலி) “காய்” என்ற சொல்லில் இருக்கும் “ய்” போல
्र्	र्	(வளை நாவோலி) “பார்” என்ற சொல்லில் இருக்கும் “ர்” போல
्ल्	ल्	(பல் ஒலி) “பால்” என்ற சொல்லில் இருக்கும் “ல்” போல
्व्	व्	(இதழின ஒலி) “செவ்வாழை” என்ற சொல்லில் இருக்கும் “வ்” போல

***உஸ்மன்* - “ஷ்” சப்தத்தை உருவாக்கும் சொற்கள் (SIBILANTS)**

्श्	◌	(அண்ணநிலை ஒலி) “சாந்தி” என்ற சொல்லில் இருக்கும் “சா” போல
्ष्	ष्	(வளை நாவோலி) “வருஷம்” என்ற சொல்லில் இருக்கும் “ஷ” போல
्स्	स्	(பல் ஒலி) “வஸ்திரம்” என்ற சொல்லில் இருக்கும் “ஸ்” போல

***சோஷ்மதா* - மூச்சொலிகள் (ASPIRANT)**

्ह्	ह्	“ஹரே ராம்” என்ற சொல்லில் இருக்கும் “ஹ” போல

அணுஸ்வாசர (ANUSVĀRA \ (ṁ))

தேவநாகிரி எழுத்துக்கள் மீது இருக்கும் புள்ளி, அதன் பின் வரும் எழுத்து மூக்கொலி சார்ந்த எழுத்து என்பதை குறிப்பிடுகிறது. உ.தா. ◌ं = *அங்க*. அது “ம்” அல்லது உண்மையான மூக்கொலியாக (ங், ஞ், ந், ன், ம்) ஒலிபெயர்க்கப்படுகிறது. அது சிலசமயங்களில், சொற்களின் இறுதியில் ◌ (ம்) என்று தோன்றுகிறது.

அயோகவாஹ (AYOGAVAHA “ ं)

சமஸ்கிருதத்தில் உயிர் எழுத்து மற்றும் மெய் எழுத்து பிரிவை சேராத *அணுஸ்வார* (அம்) மற்றும் *விசர்க* (அஹ) எழுத்துகள் *அயோகவாஹ* என்று அழைக்கப்படுகின்றன. இதில் *அணுஸ்வாரமானது* य र ल व ष श स ह எழுத்துக்களுக்கு முன்பாக தோன்றும் போது, அது தன் இயல்பு மாறாமல் ஒலிக்கிறது.

விசர்க (VISĀRGA (:) ஹ

விசர்க எழுத்து ஒரு உயிர் எழுத்துடன் சேர்ந்து வரும் போது “ஹ” என்ற ஒலியை தருகிறது. உ.தா. பா3லக: - பாலகஹ (க்+:) என்று உச்சரிக்கப்படுகிறது. ஆனால் அது உயிர்மெய்யுடன் சேர்ந்து வரும் போது, ஹ என்ற எழுத்து உயிர் எழுத்தின் ஓசையை உயிர்மெய்யுடன் இணைக்கிறது.

உ.தா. க[1]வி: -கவிஹி என்றும், க[1]வே:- கவேஹே என்றும், குரு:- குருஹு என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

அவக்ரகஹ (AVAGRAHA) “ऽ”

சந்தி காரணமாக '*ए*' அல்லது '*ओ*' பின்பு வரும் '*அகாரம்*' மறைவதை இது குறிக்கிறது. உ.தா: तेऽवन

தண்ட DAṆḌA ('I')

'I' என்பது ஒரு வாக்கியத்தின் முடிவை குறிக்கிறது.

'II' என்பது ஒரு பத்தியின் முடிவை குறிக்கிறது.

விசேஷமான சொற்கள் (SPECIAL CHARACTERS)

ज् (ज + ञ) ஞ ...*ஞானத்தில் வருவதை போன்று ஒரு மூச்சொலி.*

क्ष (क + ष) க்ஷ (வேத மந்திரங்களில் 'க்ஷ்' வருவதைப் போல)

மரபுகள் (CONVENTIONS)

1. (ஆங்கில புத்தகத்தில்) மந்திரங்களுக்கு IAST ஒலிபெயர்ப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. (இதில் அணுஸ்வாரத்தில் 'ம' எழுத்துக்கு மேல் புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது). புத்தகத்தில் மற்ற பகுதிகளில், பின்வரும் விதிவிலக்குகள் பின்பற்றப்பட்டுள்ளன.

ॹ் என்பது ச்ச2, மற்றும் ॷ் ச்ச என்று ஒலிபெயர்க்கப்படுகிறது

ष् = ஷ், ॠ = ரு,

2. பூகோளம் மற்றும் தனிநபர்களின் பெயர்கள் (உ.தா. *இமாலய*) போன்றவை, ஒலி வேறுபாடுகள் இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளன.


அருள் மிகு முருகனுக்கு திருக்கோவில் ஆறாவது படைவீடு
ஒளவைக்குச் சுட்டபழம் வேண்டுமா?
சுடாத பழம் வேண்டுமா என்று கேட்டுக்காட்சி
கொடுத்த நாவல் மரம்




முடிவுரை

நிர்வாஹணம்

निर्वाहणम्

விநாயகர் பற்றிய தகவல்களை புத்தக வடிவில் வழங்கியுள்ள எங்களுக்கு பிரபல அறிஞர்கள், சுவாமிகள், சத்குருமார்கள் மற்றும் இந்துக்களிடம் இருந்து கனிவான மதிப்புரைகள் வெகுமதிகளாக வந்துள்ளன. இவர்கள் வழங்கிய பல பங்களிப்புக்கள் மற்றும் குறிப்புக்கள் காரணமாக, இந்த புத்தகம் 99 சதவீத முழுமையை பெற்று இருக்கிறது. மேலும் ஒரு சதவீதம் சிறப்பாக செய்து இருக்கலாம் என்பதை நாங்கள் அறிந்து இருந்தாலும், நாங்கள் பணிவோடு சிறப்பாக செயலாற்றினோம் என்ற மன நிறைவோடு இருக்கிறோம். இந்துக்கள் மற்றும் அர்த்த இந்துக்கள் தங்கள் நடவடிக்கைகளில் வெற்றியுடன் நிலைத்து இருப்பதற்கு அன்பான விநாயகர் வழிபாடு முக்கியமாக விளங்குகிறது. எதிர்காலத்தை பற்றி தீவிரமாக ஆய்வு செய்யும் இந்த அன்பான கடவுள் குடும்பத்தின் செல்வ வளம் தற்காலிகமாக இல்லாமல் நிரந்தரமாக பல தலைமுறைகளுக்கு நீடித்து இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். அதனால் அவ்வப்போது பிரார்த்தனை செய்து வருவது நல்ல பலன்களை வழங்கும். ருத்திரன்-பிரம்மா-விஷ்ணுவின் அங்கீகாரம் மற்றும் நன்மதிப்பைப் பெற்ற இந்த இந்து தர்மத்தின் முழுமுதற்கடவுள் பற்றிய அறிவுவளம் மகத்தானதாக விளங்குகிறது. இந்த புத்தகத்தில் இருக்கும் சில பக்கங்கள் மூலம் அவருடைய மகத்தான நுணுக்கங்கள் அனைத்தையும் வழங்க முற்படுவது கடினம் என்பதை அறிந்த நாங்கள், அவரை வழிபட்டு அவரது அன்பிற்கு பாத்திரமாகி அவரது அருளோடு நன்றாக திட்டமிட்ட செயல்களை தொடங்குவதற்கு இந்த புத்தகம் போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறோம். இந்த மறைபொருளான கடவுளுக்கு எல்லைகள் ஏதும் இல்லை. இவர் முப்பத்தி முக்கோடி தேவர்கள் மற்றும் *வேதங்கள்* குறிப்பிடும் பிரம்மனுக்கு பாதையாக விளங்குகிறார். எல்லை இல்லாமல் இருக்கும் விநாயகர் புவியீர்ப்பு போன்று எங்கும் பரவி இருந்து, நமது தேவைகளை ஒளியை விட சற்று வேகமாக பூர்த்தி செய்கிறார் என்பதில் நம்பிக்கை வையுங்கள். அவர் கலாச்சாரத்தின் காவலனாக, பயணிகளின் பாதுகாவலனாக, வாயில் காவலனாக மற்றும் விதியின் இரட்சகனாக இருந்து

தர்மத்தின் எதிர்காலத்தை வழிநடத்துகிறார் என்பதை நினைவில் நிறுத்தி, இந்த *அன்பான விநாயகர்* புத்தகத்தை அன்போடு நிறைவு செய்கிறோம்.





விநாயகர் தொடர்பான கூடுதல் புத்தகங்கள்

கிரந்தவித்யா

ग्रन्थविद्या

இந்த புத்தகங்கள் வெளியீட்டாளர்களிடம் நேரடியாக கிடைக்கும் அல்லது அவற்றை விநியோகஸ்தர்களிடம் இருந்து பெறலாம். பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள் ஒரு நட்சத்திர குறியீட்டுடன் வழங்கப்பட்டுள்ளன. *அன்பான விநாயகர்* புத்தகத்தில் மேற்கோளாக பயன்படுத்தப்பட்ட புத்தகங்கள் இரண்டு நட்சத்திர குறியீடுகளுடன் வழங்கப்பட்டுள்ளன.

விநாயகப்பெருமான்

அக்ரவாலா, பி.கே. *காடஸ் விநாயகி: தி பிமேல் கணேஷா*. பனாரஸ்: 1978.

அக்ரவாலா, வி.எஸ். “மீனிங் ஆப் கணபதி.” *ஜர்னல் ஆப் ஓரியண்டல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்* 13 (1963): 1-4.

அரவாமுதன், டி. டி. “கணேஷா: க்ளூ டு எ கல்ட் அண்டு எ கல்சர்.” *ஜர்னல் ஆப் ஓரியண்டல் ரிசர்ச்* 18 (1949): 221-45.

பிரவுன், ராபர்ட் எல்., தொகுப்பு ஆசிரியர், *கணேஷ்: ஸ்டடிஸ் ஆப் அன் ஏசியன் காட்*. நியூ யார்க்: ஸ்டேட் யுனிவர்சிட்டி ஆப் N.Y. பிரஸ், 1991.

சின்மயானந்த, சுவாமி. *குளோரி ஆப் கணேஷா*. பாம்பே: சென்ட்ரல் சின்மயா மிஷன் ட்ரஸ்ட், 1991.

கோர்ட்ரைட், பால். *கணேஷா: லார்ட் ஆப் அப்ஸ்டகுள்ஸ், லார்ட் ஆப் பிகினிங்ஸ்*. ஆக்ஸ்போர்டு: ஓ. யுனிவர்சிட்டி. பிரஸ், 1985.

எட்கர்டன், பிராங்க்ளின். *தி எலிபன்ட் லார்ட் ஆப் இந்துஸ்: தி எலிபன்ட் ஸ்போர்ட் (மதங்க லீலா) ஆப் நீலகண்டா*. நியூ ஹேவன்: ஏல் யுனிவர்சிட்டி பிரஸ், 1931.

கெட்டி, அலைஸ், *கணேஷா: எ மோனோகிராப் ஆன் தி எலிபண்ட்-பேஸ்ட் காட்*. புது டில்லி: முன்ஷிராம் மனோகர்லால், 1971.

ஹஸ்ரா, ஆர். சி. "கணபதி ஒர்ஷிப் அண்டு தி உபபுராணாஸ் டீலிங் வித் இட்." *ஜர்னல் ஆப் தி கங்கநாத் ஜா ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்* 5 (1948): 263-76.

ஹேராஸ், ஹெச். *தி பிராப்ளம் ஆப் கணபதி*. டில்லி: இந்தோலாஜிகல் புக் ஹவுஸ், 1972.

ஜெகந்நாதன், சகுந்தலா மற்றும் நந்திதா கிருஷ்ணன், *கணேஷா: தி ஆஸ்பிசியஸ்... தி பிகினிங்*. பம்பாய்: வகில்ஸ், பெப்பர் & சிமொன்ஸ், 1992.

கருணாகரன், ரங்கோரத், *தி ரிட்டில் ஆப் கணேஷா*. பம்பாய்: புக் க்வெஸ்ட், 1992.

கிருஷ்ணன், யுவராஜ், *கணேஷா, அன்ராவெலிங் அன் எனிக்மா*. டில்லி: மோதிலால் பனாரசிதாஸ், 1999.

**கேஷவதாஸ், சத்குரு சந்த், *லார்ட் கணேஷா*. ஒக்லாண்டு, கலிபோர்னியா: விஷ்வ தர்ம பப்ளிகேஷன், 1988.

கிருஷ்ணசுவாமி, உமா. *தி பிரோகன் டஸ்க் அண்டு அதர் ஸ்டோரீஸ்*. கனெக்டிகட்: லின்னெட் புக்ஸ், 1996.

கிஷோர், பி. ஆர். *கணேஷா: தி காட் ஆப் பிரஸிடென்ஸ்*. புது டில்லி: டைமண்டு பாக்கெட் புக்ஸ்.

லால், லட்சுமி, *கணேஷா பியாண்டு தி பார்ம்*. பம்பாய்: IBH பப்ளிஷிங், 1991.

மணி, வி. ஆர். *சன்ஸ் ஆப் சிவா: எ ஸ்டடி இன் தி ரிலிஜியஸ் கல்ட்ஸ் ஆப் கணேஷா அண்டு கார்த்திகேயா*. டில்லி: சாரதா பிரகாசன், 1990.

மார்டின்-டுபோஸ்ட், பால், கணேஷா, *தி என்சாண்டர் ஆப் தி த்ரீ வர்ல்டுஸ்*. மும்பை: பிரான்கோ-இந்தியன் ரிசர்ச், 1997.

**நவரத்தினம், ரத்னா மா, *ஓம் கணேஷா, தி பீஸ் ஆப் காட்*. யாழ்ப்பாணம்: வித்யா பவன், 1978.

பார்த்தசாரதி, *ஏ. சிம்பாலிசம் ஆப் காட்ஸ் & ரிசுவல்ஸ்*. பம்பாய்: வேதாந்தா லைப் இன்ஸ்டிட்யூட், 1989.

**ராமச்சந்திரன், டி. ஆர்., தொகுப்பு ஆசிரியர், *ஸ்ரீ கணேஷா;* தொகுப்பு 12, எண் 6 *தத்துவலோகா, தி ஸ்ப்லென்டர் ஆப் ட்ருத்*. பம்பாய்: ஸ்ரீ அபினவ வித்யாதீர்த்த மகாசுவாமிகள் கல்வி அறக்கட்டளை, 1990.

இராமசுப்ரமணியம், வி. "தி கணபதி-விநாயக கஜானன ஒர்ஷிப்: அனாலிசிஸ் ஆப் அன் இன்டக்ரேட்டிவ் கல்ட்." இன்ஸ்டிட்யூட் ஆப் ட்ரெடிஷனல் கல்சர்ஸ் புல்லெடின், 1971, ப. 97-153.

ராவ், எஸ். கே. ராமச்சந்திரா, *கணேஷ கோஷ*. பெங்களூர்: கல்பதரு ரிசர்ச் அகாடமி, 1992.

ராவ், உ. வெங்கடகிருஷ்ணா. “தி கணபதி கல்ட்.” *க்வாட்டர்லி ஜர்னல் ஆப் தி மிதிக் சொசைட்டி* 41 (1949): 92-99.

ரெட்டி, களிவெட்டி ரங்கா. *ஸ்ரீ கணேஷா: ஸ்தோத்திராஸ் அண்டு ஸ்டோரீஸ்*. மதராஸ்; பத்மினி பப்ளிகேஷன்ஸ், 1981.

சோமயாஜி, கே. என். *கான்செப்ட்ஸ் ஆப் கணேஷா*. பெங்களூர்: கல்பதரு ரிசர்ச் அகாடமி, 1983.

ஸ்ரீகாந்த். *ஸ்ரீ கணேஷா: அல்பபெட் ஆப் ரியாலிட்டி*. மதராஸ்: இன்டகிரல் புக்ஸ், 1980.

த்ரிவேதி, பி. கே., *கணேஷ்*. அகமதாபாத்: ஆனந்த பிரகாசன், 1986.

யோரோய், கியோஷி, *கணேஷ கீதா: எ ஸ்டடி, டிரான்ஸ்லேஷன் வித் நோட்ஸ், அண்டு எ கண்டன்ஸ்டு ரெண்டரிங் ஆப் தி கமெண்டரி ஆப் நீலகண்டா*. தி ஹேக்: மூடான், 1968.

தெய்வீக இலக்கியம்

*ஹியும், ராபர்ட் எர்னஸ்ட், *தி தெர்டீன் பிரின்சிபல் உபநிஷத்ஸ்*. ஆக்ஸ்போர்டு: ஓ. யுனிவர்சிட்டி பிரஸ், 1958.

*கிங்ஸ்புரி, எப்., மற்றும் பிலிப்ஸ், ஜி. இ., *ஹிம்ன்ஸ் ஆப் தி தமிழ் சைவைட் சைன்ட்ஸ்*. கல்கத்தா: அசோசியேஷன் பிரஸ், 1921.

*மஸ்காரோ, ஜீஆன், *தி உபநிஷத்ஸ்* (குறிப்பிட்ட சில). நார்மண்டுஸ்வொர்த்: பெங்குயின் புக்ஸ், 1965.

*நடராஜன், பி. (மொழிபெயர்ப்பாளர்), *திருமந்திரம், எ தமிழ் ஸ்கிரிப்சுரல் கிளாசிக் பை திருமூலர்*. மதராஸ்: ஸ்ரீ இராமகிருஷ்ணா மடம், 1991.

நவரத்தினம், ரத்னா செல்லையா, *சைன்ட் யோகசுவாமி அண்டு தி டெஸ்டமெண்ட் ஆப் ட்ருத்*. கொழும்புத்துறை: திரு காசிப்பிள்ளை நவரத்தினம், 1972.

பண்டிட், எம். பி., *குலார்ணவ தந்திர*. டில்லி: மோதிலால் பனாரசிதாஸ், 1984.

*பணிக்கர், ரைமொன், *தி வேதிக் எக்ஸ்பிரியன்ஸ்*. டில்லி: மோதிலால் பனாரசிதாஸ், 1989.

*பீட்டர்சன், இந்திரா விஸ்வநாதன், *போயம்ஸ் ஆப் சிவா, தி ஹிமன்ஸ் ஆப் தி தமிழ் சைன்ட்ஸ்*. டில்லி: மோதிலால் பனாரசிதாஸ், 1991.

*போப், ஜி. யூ. (மொழிபெயர்ப்பாளர்), *திருக்குறள்*. மதராஸ்: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வோர்க்ஸ் பப்ளிஷிங் சொசைட்டி, 1981.

ராமானுஜம், ஏ. கே., *ஸ்பீகிங் ஆப் சிவா*. பால்டிமோர்: பெங்குயின், 1973.

**சுப்பிரமுனியசுவாமி, சிவாய, *வீவர்ஸ் விஸ்டம்* (*திருக்குறளின்* ஆங்கில மொழிபெயர்ப்பு), இமாலயன் அகாடமி, 1999.

யோகசுவாமி, *நற்சிந்தனை*. யாழ்ப்பாணம்: சிவதொண்டன் நிலையம், 1974.

இந்து சமயம் பற்றிய மூலப் புத்தகங்கள்

அருணாச்சலம், ம., *பீப்ஸ் இண்டு தி கல்சுரல் ஹெரிடெஜ் ஆப் இந்துயிசம்*. திருப்பனந்தாள்: காசி மடம், 1987.

*டை, ஜோசப் எம்., *வேஸ் டு சிவா—லைப் அண்டு ரிச்சுவல் இன் இந்து இந்தியா*. பிலடெல்பியா: பிலடெல்பியா மியூசியம் ஆப் ஆர்ட், 1980.

*க்ளோஸ்டர்மேயர், கிளாஸ் கே., *எ சர்வே ஆப் இந்துயிசம்*. அல்பனி: ஸ்டேட் யுனிவர்சிட்டி ஆப் N.Y., 1998.

*நவரத்தினம், கே., *ஸ்டடீஸ் இன் இந்துயிசம்*. யாழ்ப்பாணம்: மகேஸ்வரி நவரத்தினம், 1963.

*இராதாகிருஷ்ணன், எஸ்., *தி இந்து வியூ ஆப் லைப்*. நியூ யார்க்: மாக்மில்லன், 1975.

சிங், Dr. கரண், *எஸ்சேஸ் ஆன் இந்துயிசம்*. டில்லி: ரத்னா சாகர், 1990.

சிவானந்த, சுவாமி, *ஆல் அபவுட் இந்துயிசம்*. சிவானந்தநகர்: தி டிவைன் லைப் சொசைட்டி, 1988.

*சுப்பிரமுனியசுவாமி, சிவாய, *சிவபெருமானுடன் ஒரு திருநடனம்*. காப்பா, ஹவாய்: இமாலயன் அகாடமி பப்ளிகேஷன்ஸ், 1996.

கலாச்சாரம் மற்றும் வழிபாடு

அருணாசலம், ம., *பெஸ்டிவல்ஸ் ஆப் தமிழ்நாடு*. திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம், 1980.

பர்த், அகஸ்தே. *தி ரிலிஜியன் ஆப் இந்தியா*. லண்டன்: கீகன் பால், 1921.

பாண்டே, ராஜ் பாலி, *இந்து சமஸ்காராஸ்*. டில்லி: மோதிலால் பனாரசிதாஸ், 1969.

*சுப்பிரமுனியசுவாமி, சிவாய, *சிவனோடு வாழ்தல்*. காப்பா, ஹவாய்: இமாலயன் அகாடமி பப்ளிகேஷன்ஸ், 1991.

மகாதேவர்கள், கோயில்கள் மற்றும் கலை

*எக், டயானா எல்., *தர்சன், சீயிங் தி டிவைன் இமேஜ் இன் இந்தியா,* 2-ஆவது பதிப்பு. சாம்பர்ஸ்பர்க், பென்சில்வேனியா: அனிமா புக்ஸ், 1985.

*க்ரம்ரிச், ஸ்டெல்லா, *மானிபெஸ்டெஷன்ஸ் ஆப் சிவா*. பிலடெல்பியா: பிலடெல்பியா மியூசியம் ஆப் ஆர்ட், 1981.

நவரத்தினம், ரத்னா மா, *கார்த்திகேயா, தி டிவைன் சைல்ட்*. பம்பாய்: பாரதீய வித்யா பவன், 1973.

**சிவானந்த, சுவாமி, *லார்ட் சண்முகா அண்டு ஹிஸ் ஒர்ஷிப்*. ரிஷிகேஷ்: டிவைன் லைப் சொசைட்டி, 1990.

சிவானந்த, சுவாமி, *லார்ட் சிவா அண்டு ஹிஸ் ஒர்ஷிப்*. ரிஷிகேஷ்: டிவைன் லைப் சொசைட்டி, 1989.

வாகோர்ன், ஜோயன் புன்சோ, மற்றும் சிலர், *காட்ஸ் ஆப் பிளேஷ், காட்ஸ் ஆப் ஸ்டோன்*. சாம்பர்ஸ்பர்க், பென்சில்வேனியா: அனிமா, 1985.

பத்திரிகைகள் போன்றவை

**காப்ரா, ப்ரிட்ஜாப், *தாவ் ஆப்*

**சாரி, சேஷாத்திரி, (தொகுப்பு ஆசிரியர்), *ஆர்கனைசர்* (வாராந்திர இதழ்), புது டில்லி: பாரத் பிரகாசனுக்காக ஹேமன்தாஸ் மோட்வானி.

**ராமச்சந்திரன், டி.ஆர்., *தத்துவலோகா*, பெங்களூர்: ஸ்ரீ அபினவ வித்யாதீர்த்த மகாசுவாமிகள் கல்வி அறக்கட்டளை, மாதம் இருமுறை, பிப்ரவரி/மார்ச் 1990.

**சுப்பிரமுனியசுவாமி, சிவாய, *இந்துயிசம் டுடே* (காலாண்டு பத்திரிகை), காப்பா, ஹவாய்: இமாலயன் அகாடமி.

**வில்சன், தாமஸ், *தி சுவஸ்திகா, தி ஏர்லியேஸ்ட் நோன் சிம்பல் அண்டு இட்ஸ் மைகிரேஷன்*, 506 Uun31. தொகுப்பு 41 *ரிப்போர்ட் ஆப் தி யு.எஸ். நேஷனல் மியூசியம்*, வாஷிங்டன், டி.சி., ஸ்மித்சோனியன் இன்ஸ்டிட்யூட், 1894.

ஒலி மற்றும் ஒளி

சந்தனம், மகாராஜபுரம், (ஒலி): *க்ரித்திஸ் ஆன் விநாயகா*. ஒண்டாரியோ: ஓஎம்ஐ மியூசிக் இன்கார்போரேஷன், 1985.

பல்வேறு கலைஞர்கள், (ஒலி): *ஸ்ரீ கணேஷாய நம:* நியூ ஜெர்சி: ஏசியா ஒன் ஸ்டாப், இன்கார்போரேஷன், 1994.

பல்வேறு கலைஞர்கள், (ஒலி): *பக்திமாலா, கணேஷா, தொகுப்புக்கள் 1 மற்றும் 2*. புது டில்லி: மியூசிக் டுடே, 1991.

குழந்தைகள் புத்தகங்கள்

கார், ரசெல், *பி எ பிராக், எ பெர்ட், ஆர் எ ட்ரீ*. நியூ யார்க்: ஹார்பர் கோலோபோன் புக்ஸ், 1977.

கார்கெரி, பாரஸ்ட் மற்றும் மார்டி முல்லர், *எ சைல்ட் அண்டு எ ட்ரீ*. ஆரோவில், இந்தியா: ஆரோவில் பிரஸ், 1989.

தேவி தாசி, திலக் மற்றும் ரசகிரஹ தேவி தாசி, *ஏ•பி•சி கலரிங் புக்*. லின்ப்ருக், நியூ யார்க்: பாலா புக்ஸ், 1982.

கண்ட்பூர், ஸ்வார்ன், *லெட் அஸ் நோ இந்தியா* (24 தொகுப்புக்கள்). பம்பாய்: இந்தியா புக் ஹவுஸ், 1978.

நிவேதிதா, சிஸ்டர் (மார்கரெட் இ. நோபில்), *கிரெடில் டேல்ஸ் ஆப் இந்துயிசம்*. அல்மொரா, இந்தியா: அத்வைத ஆசிரம, 1972.

*பத்மநாபன், சந்திர, *தட்சின், வெஜிடேரியன் க்விசின் ப்ரம் சவுத் இந்தியா*. சிட்னி, ஆஸ்திரேலியா: அங்கஸ் மற்றும் ராபர்ட்சன், 1992.

பிரகாஷநந்தா, சுவாமி, *டோண்ட் திங்க் ஆப் எ மங்கி அண்டு அதர் ஸ்டோரீஸ் மை குரு டோல்ட் மீ*. கலிபோர்னியா: சரஸ்வதி புரொடக்ஷன்ஸ், 1995.

ரோஸ்மான், தேபோராஹ், *மெடிடேட்டிங் வித் சில்ட்ரன், தி ஆர்ட் ஆப் கான்சென்ட்ரேஷன் அண்டு சென்டரிங்*. கலிபோர்னியா: பிளானடரி பப்ளிகேஷன்ஸ், 1994.

ரைடர், ஆர்தர் டபிள்யு., *தி பஞ்சதந்திர*. சிகாகோ: யுனிவர்சிட்டி ஆப் சிகாகோ பிரஸ், 1972.

ஷெப்பர்ட், ஆரோன், *சாவித்திரி*. இல்லினாய்ஸ்: ஆல்பர்ட் விட்மென் அண்டு கம்பனி, 1992.

*சர்க்கார், மாணிக் (இயங்குபடங்கள்): *தீபா அண்டு ரூபா* (1990); *தி சேஜ் அண்டு தி மவுஸ் அந்த ஸ்னிப்* (1993); *தி வுட்கட்டர்ஸ் டாட்டர்* (1995). டென்வர், கொலராடோ: மாணிக் சர்க்கார் புரொடக்ஷன்ஸ்.

விஜய்கர், மோனா, *தி வீ பேமிலி: லிட்டில் வீ வாண்ட்ஸ் டு பி டாம், நிக் ஆர் ஹாரி*. கலிபோர்னியா: ட்ரை கலர் புக்ஸ், 1991.

விஷ்வஷ்ரயானந்தா, சுவாமி, *இராமகிருஷ்ணா பார் சில்ட்ரன்*. கல்கத்தா: உபோதன் அலுவலகம், 1990.

*வுட், டக்லஸ், *ஓல்டு டர்டில்*. டுலூத், மினசோட்டா: ஃபைஃபர்-ஹாமில்டன், 1992.

இணைய வளங்கள்

www.himalayanacademy.com/resources/ இமாலயன் அகாடமி பப்ளிகேஷன்ஸ், சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி மற்றும் மற்ற ஆசிரியர்கள் இயற்றிய நவீன இந்து நூல்கள். இதைத் தவிர மற்ற நூல்களும் உள்ளன.

www.himalayanacademy.com/academy/ இமாலயன் அகாடமி முகப்புப் பக்கம். இதில் சத்குரு போதிநாத வேலன்சுவாமியுடன் கலந்தாய்வு செய்வது பற்றிய தகவலும் உள்ளன.

www.positivediscipline.com/ நேர்மறை கட்டுப்பாடு என்பது குழந்தைகள் வளர்ப்புப் பற்றிய நவீன அட்லெரியன் தத்துவம் ஆகும். இதை Dr. ஜேன் நெல்சன் வடிவமைத்தார். இது குழந்தைகள் உட்பட அனைவரும் மதிப்பு மற்றும் மரியாதைக்கு தகுதியானவர்கள் என்ற அணுகுமுறையை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் தூண்டுகிறது. இந்த பாடத்திட்டம் வழிமுறைகளாகக் கற்றுத்தரும் அன்பு, இரக்கம் மற்றும் மனஉறுதியை பயன்படுத்தி குழந்தைகளுக்கு கற்றுத் தர முடிகிறது. இது இத்துடன் குழந்தைகளை ஒழுங்குபடுத்துவதில் அதிக கண்டிப்பாக செயல்படும், இசைந்து கொடுக்கும் அல்லது சித்திரவதை செய்யும் பெற்றோர்களுக்கு ஊக்கமளித்து வழிகாட்டலையும் வழங்குகிறது.



புத்தகக் குறிப்பு

அந்த்யவசனம்


अन्त्यवचनम्

அன்பான விநாயகர்: இந்து சமயத்தின் நேயமான ஆனைமுகக் கடவுள் புத்தகத்தை ஹவாய் தீவில் இருக்கும் கார்டன் ஐலாந்தில் அமைந்துள்ள கவாயின் இந்து மடத்தில் செயல்படும் சைவ சித்தாந்த யோகா சமூகத்தின் சுவாமிகள் மூலம் வடிவமைக்கப்பட்டு படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது. அன்பான விநாயகரின் இந்த மூன்றாவது பதிப்பு இன்டிசைன் மூலம் தொகுக்கப்பட்டுள்ளது. பல வருடங்கள் முன்பு கள அலுவலகமாக விளங்கிய வின்னேபாகோ வாகனத்தில், ஈதர்நெட்டில் இயங்கிய மாகிந்டோஷ் பவர்புக்ஸ் சங்கிலியில் பாரலோன்ஸ் டிம்புக்டுவை பயன்படுத்தி முதல் பதிப்பு மற்றும் ஆசிரியரின் தொகுப்பு உருவாக்கப்பட்டது.

இந்த புத்தகத்திற்கு ஓவியம் வரையும் பொறுப்பு தென் இந்தியாவின் சென்னையை சேர்ந்த ஸ்ரீ எஸ். ராஜம் என்பவருக்கு 1997 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அவர் நீர்வண்ணத்தில் மேலுறையின் ஓவியத்தை வரைந்துள்ளார். இதே ஓவியர் தலைப்புப் பக்கம் மற்றும் ஆசிரியர் அறிமுகத்திற்கு பின்னர் வரும் தெய்வத்தின் ஓவியங்களையும் வரைந்து இருக்கிறார். நல்ல மதிப்பைப் பெற்று ஒரு தேசிய பொக்கிஷமாக விளங்கிய இந்த தென்னிந்திய கலைஞர், ஒரு இசையமைப்பாளர் மற்றும் பாரம்பரிய தமிழ் சைவ ஓவியராகவும் இருந்தார், மற்றும் இவரது ஓவியங்கள் லண்டனில் இருக்கும் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் நிரந்தரமான காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் பிரபல ஓவியர் மற்றும் தேசிய பொக்கிஷமான ஸ்ரீ இந்திரா சர்மா கவாயில் 1997 வருட இறுதியில் குறுகிய காலம் தங்கியிருந்த போது, அவர் பின்பக்க அட்டையில் எண்ணெய் சாயத்தில் வரைந்த குருதேவாவின் தெளிவான உருவப்படத்தை பரிசாக வழங்கினார். அவருக்கு நான்காவது பக்கத்தில் இருக்கும், ஞானகுரு யோகசுவாமியின் உருவப்படத்தை வரையும் பொறுப்பும் வழங்கப்பட்டது. அவருக்கு நன்கு பரிச்சயமான பெங்களூரின் ஸ்ரீல ஸ்ரீ சிவரத்னபுரி திருச்சிசுவாமிகள், அந்த உருவப்படத்தை பார்த்து, யோகசுவாமியை நேரில் பார்த்ததை போல இருப்பதாக குறிப்பிட்டார். 1999 ஆம் ஆண்டு இரண்டாவது பதிப்பிற்காக நியமிக்கப்பட்ட

இந்தியா சென்னையின் திரு ம. ஆறுமுகம் மூலம் பல விளக்கப் படங்கள் வரையப்பட்டன.

ஜான் குசிச் என்ற சான் பிரான்சிஸ்கோ ஓவியர் மூலம் அட்டைப்பட வடிவமைப்பு மற்றும் இமாலயன் அகாடமி சின்னம் உருவாக்கப்பட்டன. சான் டியாகோவில் இருக்கும் அமெரிக்க வைதீக பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகரான பண்டிட் சத்ய பால் சர்மா, அமெரிக்க சமஸ்கிருத கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகரான வியாஸ் ஹூஸ்டன், நியூயார்க் வுட்சைடில் இருக்கும் பாரதீய வித்யா பவனின் நிர்வாக இயக்குனர் Dr. பி. ஜெயராமன், கலிபோர்னியா பிரிமொண்ட்டை சேர்ந்த பண்டிதர் மற்றும் ஜோதிட சாஸ்திரி லட்சுமிசங்கர் த்ரிவேதி மற்றும் அவரது மகன் தேவேந்திரா மற்றும் டல்லாஹஸ்ஸியில் இருக்கும் புளோரிடா ஸ்டேட் யுனிவர்சிட்டியைச் சேர்ந்த பேராசிரியர் ஜெயராம் சேதுராமன் மூலம் முதல் பதிப்பிற்கு தேவையான சமஸ்கிருத மொழி சரிபார்ப்பு மற்றும் வழிகாட்டல் சிரத்தையுடன் வழங்கப்பட்டது. புளோரிடாவின் ஆர்லாண்டோ நகரைச் சேர்ந்த அமெரிக்க இந்து பல்கலைக்கழகத்தின் Dr. தீனதயால் கண்டேல்வால் மற்றும் நியூ இங்கிலாந்து இந்து கோயிலின் ஸ்ரீ ஸ்ரீ பைரவசுந்தரம் சிவாச்சாரியார் மூலம் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன. (டெக்சாஸ் மாகாணத்தின் ஹூஸ்டன் நகரைச் சேர்ந்த திருமதி சுந்தரி பெருமான், இடாஹோ மாகாணத்தின் போய்ஸ் நகரைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணா மோகன், கவாயைச் சேர்ந்த திருமதி சாமுண்டி சபானாதன் மற்றும் நமது சைவ சித்தாந்த தேவாலயம் வாய்லுவா மிஷனில் அங்கம் வகிக்கும் குடும்ப உறுப்பினர்கள் மூலம் விரிவாக சரிபார்க்கப்பட்டது).



ஸ்ரீ டி. ஆர். இராமச்சந்திரன் மூலம் தொகுக்கப்பட்டு, இந்திய மாநிலம் கர்நாடகாவில் இருக்கும் ஸ்ரீ சாரதா பீடத்தின் ஜகத்குரு சங்கராச்சாரியாரின் வழிகாட்டலுடன் தயாரிக்கப்படும் *தத்துவலோகா* என்கிற மாதாந்திர இந்து சமய

பத்திரிகையில் இருந்து பெறப்பட்ட சிறிய பகுதிகளுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். ஓங்காரம் பற்றிய பகுதிகள், ஔவையார் வழங்கிய போதனைகள் ஆகியவை பிரபல கல்வியாளர், ஆசிரியர் மற்றும் எனது சத்குருவான ஆசான் யோகசுவாமியின் ஆத்மார்த்த சீடரான ரத்னா மா நவரத்தினம் எழுதிய *ஓம் கணேஷா, தி பீஸ் ஆப் காட்* என்ற புத்தகத்தில் இருந்து பெறப்பட்டன. நாங்கள் இவருடன் சேர்ந்து இலங்கையில் 30 வருடங்களுக்கும் மேலாக தர்மத்தை ஊக்குவிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருந்தோம். எனது அருமை நண்பரான சத்குரு சந்த் கேஷவதாஸ், தான் இயற்றிய *லார்டு கணேஷா* புத்தகத்தில் இருந்து "விநாயக மந்திரங்களின் ஒரு விசேஷ தொகுப்பை" வழங்கினார். (ஆங்கில புத்தகத்தில் இடம்பெற்று இருக்கும்) "இன் பிரைஸ் ஆப் பிள்ளையார்" ("பிள்ளையார் துதிப்பாடல்களின்") என்ற தெய்வீக பாடல்களின் பாடத்தை மலேஷியாவை சேர்ந்த பிரபல இந்து சமயப் பண்டிதர் மற்றும் சிவபக்தரான சங்காரத்னா Dr. எஸ். எம். பொன்னையா ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இருந்தார். அவரது உன்னதமான, சிறப்பான மற்றும் சுயநலமற்ற சேவைக்கு, நாங்கள் எங்களது இதயம் கனிந்த பாராட்டை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த புத்தகம் உருவாக காரணமாக இருந்த எல்லோர் மீதும் இறைவன் தனது அருளை பொழியட்டும் என்றும் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

சமஸ்கிருதத்தை மீண்டும் சரிபார்த்து, வண்ணமயமான இந்த இரண்டாவது பதிப்பிற்கு தேவையான வழிகாட்டலை புளோரிடா மாகாணம் டாம்பா நகரை சேர்ந்த அதைத்யானந்த சரஸ்வதி (ஆடம் வெல்ச்) வழங்கினார். பிரபல இந்திய ஓவியரான கைலாஷ் ராஜ் அவர்களின் பல ஓவியங்களை எங்களுக்கு வழங்கி உதவி செய்ததற்கு Exoticindia.com இணையதளத்திற்கு நன்றியை தெரிவத்துக் கொள்கிறோம்.

இந்து "வீட்டினர் வழிபாடு" பற்றிய பாடத்தில் இந்து சமய வழிபாட்டு முறையின் யதார்த்தமான மற்றும் மறைஞான அம்சங்கள் பற்றிய விளக்கம் தொடர்பாக தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தின் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் வழங்கிய உதவியை, எங்களுக்கு கிடைத்த பெரும் பாக்கியமாக கருதுகிறோம். இவர் 80 களின் மத்தியில் இரண்டு தேர்ச்சி பெற்ற பூசாரிகளான குமாரசுவாமி குருக்கள் மற்றும் சண்முக குருக்களை ஹவாய் தீவுகளுக்கு அனுப்பி வைத்து, அவர்கள் மூலம் எனது சைவ சுவாமிகள் சைவ பூஜை செய்ய தேவையான பயிற்சியை வழங்கினார்.

தென்னிந்தியாவின் சிதம்பரம் கோயிலை சேர்ந்த Dr. ஏ. ஆனந்தநடராஜ தீட்சிதர் மற்றும் பழங்கால பாரம்பரிய தீட்சிதர் சமூகத்தின் மற்ற புரோகிதர்கள், அந்தர்லோகங்களின் ஆசிகளை ஆவாகனம் செய்து, இந்த பணிக்கு அவர்களின் அருளை வேண்டி பல வருடங்கங்களுக்கு, மாதம் ஒரு முறை பூஜை (பின்வரும் பக்கத்தில் புகைப்படத்தை காணலாம்) செய்து வந்தனர். பூமியில் வெகுதொலைவில் உள்ள ஹவாய் தீவுகளில் இருக்கும் கவாய் தீவில் அமைந்துள்ள கவாய் ஆதீனத்தின் கடவுள் இந்து கோயிலில், இந்த புத்தகம்

தயார் செய்ய தேவைப்பட்ட இரண்டு வருடங்களின் போது, எனது மடவாசிகள் நாள் முழுவதும் தொடர்ச்சியாக (இது இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது) மூன்று மணிநேரம் விழித்து இருந்து, இரவும் பகலும் தவறாமல் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை பூஜை செய்து வந்தனர்.




நன்றி சாஸ்தா, போட்டோ பிளாஷ்

வரலாற்றில் மேலும் பின்னோக்கி சென்று, இலங்கையின் யாழ்ப்பாண பகுதியின் கலாச்சாரம் மற்றும் அதன் புனிதமான மக்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி, குறிப்பாக என்னை எனது சத்குருவான யோகசுவாமியை சந்திக்க ஏற்பாடு செய்த, கந்தையா செட்டியார் என்ற அற்புத ஆன்மாவிற்கு என்றென்றும் நன்றி கலந்த மரியாதை எனது உள்ளத்தில் நிலைத்து இருக்கிறது. எங்களது பயணத்திற்கு துணையாக விநாயகர் அருளும் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. கொழும்புவில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் எனது வழிகாட்டியாகவும், யோகசுவாமி நியமித்த ஆலோசகராகவும் செயலாற்றிய செட்டியார் அவர்கள், முறிகண்டியில் தெரு ஓரமாக இருந்த ஒரு சிறிய சந்நிதியில் எங்கள் வாகனத்தை நிறுத்தினார். கவனமாக பாதுகாக்கப்பட்ட வடக்கு சைவ தீபகற்பத்தின் சூட்சுமமாக காக்கப்பட்ட பகுதிக்குள் பயணிகள் பாதுகாப்புடன் நுழைவதற்கு, அவர்கள் இங்கே வாகனத்தை நிறுத்தி வழிபடவேண்டிய அவசியத்தை செட்டியார் விளக்கினார்.

நாங்கள் வாகனத்தை விட்டு இறங்கிய போது, பொழுது சாய்ந்து கொண்டு இருந்தது. எங்கள் கண்களுக்கு தெய்வத்தை காட்டிலும், வந்திருந்த பயணிகள் கூட்டம் ஏற்றிய கற்பூர வெளிச்சம் மிகவும் பிரகாசமாக தெரிந்தது. அந்தி சாயும் வேளையில், பயணிகள் பாதுகாப்பாக பயணம் செய்ய பிரார்த்தனை செய்து

சிதறு தேங்காய் உடைக்கும் சத்தம் மட்டுமே காதில் விழுந்தது. எங்கள் வாகனத்திற்கு அருகில் இருந்த அந்த சிறிய பிள்ளையார் சந்நிதி முன்பாக நான் பிரமிப்பில் நின்று இருந்தது மட்டுமே எனக்கு நினைவில் இருக்கிறது. எனது சஹஸ்ரஹார சக்கரம் வலுவாக சுற்றத் தொடங்கியது, மற்றும் எனது உச்சந்தலையில் உட்புறமாக மூன்று முதல் நான்கு அங்குல உயரத்தில் ஒரு சுடர் ஒளிர்வதை என்னால் காணமுடிந்தது. அது எனது அகத்தில் சுமார் ஒரு வார காலம் நீடித்து இருந்தது. விநாயகரின் அருளும் ஆசியும் எனக்கு என்றென்றும் கிடைக்கும் என்பதை நான் அப்போது புரிந்துகொண்டேன். எனக்கு அப்போது இருபத்தி இரண்டு வயது. ஐம்பது வருடங்கள் கழித்து, அது உண்மை என்பது நிரூபணமாகி இருக்கிறது. வரவிருக்கும் காலங்களில் விவேகமான அந்த ஆனைமுக தெய்வம், எங்களுக்கு எந்த கதவுகளை திறக்க இருக்கிறார் என்பது, அந்த 1949 வருடத்து கோடைக்கால மாலை பொழுதில், எங்களுக்கு சிறிதும் தெரியாது.

எல்லோருக்கும் பொதுவான இந்த கடவுளைப் பற்றிய சுயசரிதையை எழுதுவதில் பங்குபெற்ற அவரது பக்தர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு *அன்பான விநாயகர்* புத்தகத்தை நிறைவு செய்கிறோம். ஆத்ம ஞான பாதையில் நுழைபவர் எல்லோருக்கும், அவரது அருளால் மட்டுமே அங்கே நுழைய அனுமதி கிடைக்கிறது. எனது வாழ்க்கையில் பலநாள் அனுபவம் மூலமாக, இது உண்மை என்பது நிரூபணமாகி இருக்கிறது.



வலதுபுறம் இருக்கும் ஓவியம்: 1949 ஆம் ஆண்டு இலங்கையில், விநாயகருடன் குருதேவாவிற்கு ஏற்பட்ட இரண்டு சந்திப்புக்களை ஓவியர் எஸ். ராஜம் சித்தரித்து இருக்கிறார். மேலே இருக்கும் படத்தில், கொழும்புவில் அமெரிக்க சாதகர் வழிபடும் சிறிய கோயிலில் அவருக்கு கந்தையா செட்டியாருடனான சந்திப்பு நிகழ்ந்தது. அந்த கோயிலில் கூடிய சான்றோர்கள் குழு, அந்த அமெரிக்க பக்தர் அவ்வப்போது கோயிலுக்கு வரலாம் என்று அனுமதி வழங்கியது. யாழ்ப்பாண தீபகற்பத்தில் குருதேவா முதல் முறையாக நுழைந்த போது, அவருக்கு விநாயகப்பெருமான் வரவேற்ற தருணத்தை கீழிருக்கும் படம் விளக்குகிறது.

ஆசிரியர் குறிப்பு

தனது பாரம்பரியத்தை நேர்மையாகவும் முழுமையாகவும் பின்பற்றி வாழ்ந்து, தனது பாதையை சீர் செய்துக்கொண்டு, உலகிற்கு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கும் ஒரு ஆன்மா, இந்த பூமியில் மிகவும் அரிதாக தோன்றுகிறார். விழிப்புணர்வு மற்றும் ஞானத்திற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக, இந்து தர்மத்தின் முன்னணி மதகுருமார்களில் ஒருவராக விளங்கிய சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி (1927-2001), அத்தகைய ஒரு ஆன்மாவாக விளங்கினார். ¶1947 ஆம் ஆண்டில், 20 வயது இளைஞனாக இருந்த அவர் இந்தியா மற்றும் இலங்கை பயணம் சென்றார். அவர் இரண்டு வருடம் கழித்து, 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த ஆன்மீகவாதியாக கருதப்பட்ட இலங்கையின் ஞானகுரு யோகசுவாமியிடம் இருந்து *சந்நியாச* தீட்சையை பெற்றார். யோகசுவாமி ஒரு பிரபல *சித்த யோகி* மற்றும் சிவபக்தானாகவும் இருந்தார். குருதேவா என்று அன்புடன் அழைக்கப்பட்ட சுப்பிரமுனியசுவாமி, சுமார் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இந்துக்கள் மற்றும் இந்து மதத்தைப் பற்றி அறிய விரும்பிய மற்ற மதத்தவர்களுக்கும், இந்து மதத்தைப் பற்றி கற்றுத் தந்தார். உலகில் மிகவும் கண்டிப்பான குருமார்களில் ஒருவராக கருதப்பட்ட அவர், நந்திநாத கைலாச பரம்பரையின் 162 ஆவது வாரிசாகவும், ஹவாய் தீவுகளில் கார்டன் ஐலான்ட் என்று அழைக்கப்படும் கவாய் தீவில் 458 ஏக்கர் நிலப்பரப்பில் மடம் மற்றும் கோயில் ஒன்றாக அமைந்துள்ள கவாய் ஆதீனத்தை ஸ்தாபனம் செய்த *சத்குருவாகவும்* விளங்கினார். ஒரு அணைந்த எரிமலை அடிவாரத்திற்கு அருகில் ஒரு நதிக்கரையில் அமைந்து இருக்கும் இந்த பாலிநேசிய *ஆசிரமத்தில்* இருந்து அவரது மடவாசிகள், அவருக்கு பின் பதவியேற்ற சத்குரு போதிநாத வேலன்சுவாமியின் தலைமையில், ஆழ்ந்த சிந்தனை மற்றும் மகிழ்ச்சியான வாழ்முறையை பின்பற்றிக்கொண்டும், வெள்ளை கருங்கல்லில் ஒரு ஆபரணத்தைப் போன்று பிரகாசிக்கும் சிவன் கோயிலை நிர்மாணம் செய்துக்கொண்டும், அதிகாலையில் ஒன்றாக தியானம் செய்துக்கொண்டும், பிறகு சைவ சித்தாந்த தேவாலயம், இமாலயன் அகாடமி மற்றும் இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் மூலமாக *தர்மத்தை* ஊக்குவிக்க ஒன்றாக செயல்பட்டுக்கொண்டும், தாங்கள் விரும்பிய கனவை தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். ¶அவருடைய தேவாலயம் ஐந்து கண்டங்களில் தனது உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பணிகளை பேணி வளர்த்து, நேரடியான முறையிலும் புத்தகம் மற்றும் பயிற்சி வகுப்பு மூலமாகவும் இந்து சமூகத்தின் அனைத்து உட்பிரிவுகளுக்கும் சேவை செய்கிறது. கோயில்கள், *சத்குருமார்கள்* மற்றும் சாத்திரம் என்று மூன்று தூண்கள் மூலம் தெரியப்படுத்தி இருப்பதைப்

போல, சைவ இந்து சமயத்தை பாதுகாத்து, பராமரித்து மேம்படுத்துவதே அதன் நோக்கம் ஆகும். இந்த குழு பல்வேறு நாடுகளில் கட்டுப்பாட்டுடன் வாழும் தீட்சை பெற்ற குடும்பத்தினர்கள், மடவாசிகள் மற்றும் மாணவர்களை அங்கத்தினர்களாக கொண்டுள்ளது. அவர்களுக்கு யோகாப்பியாசம் மற்றும் தனிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும் பாதையான *சாதனா மார்கத்தை* பின்பற்ற கற்றுத்தரப்படுகிறது. 2.5 மில்லியன் இலங்கை இந்துக்களின் பாரம்பரிய குருவாக அங்கீகரிக்கப்பட்ட குருதேவா தனது தேவாலயத்தை யாழ்பாணத்தை தலைமையகமாகக் கொண்ட ஒரு தமிழ் நிறுவனம் என்று அறிவித்தார். அது இந்த நூற்றாண்டில் வளர்ந்து வரும் இந்து புலம்பெயர்ந்தோரின் தேவைகளை பூர்த்தி செய்ய, அளவெட்டியின் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமத்தில் இருந்து பல்வேறு இடங்களுக்கு விரிவாக்கம் பெற்றுள்ளது. அது உலகெங்கும் இருக்கும் சுமார் 40 கோயில்களை அன்போடு நிர்வகிக்கிறது. ¶மக்களின் செல்வாக்கையும் பல விருதுகளையும் பெற்ற இந்துயிசம் டுடே என்ற காலாண்டு பத்திரிகையை, குருதேவா 1979 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார். அவரது மடவாசி சமூகம் செய்யும் இந்த சமூக சேவை, உலகெங்கும் *தர்ம நெறியை* பின்பற்றுபவர்களை ஊக்குவித்து தேவையான தகவலை வழங்கி, இந்து பாரம்பரியங்கள் அனைத்தையும் வலுப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. இந்து மீமெய்யியல், ஆன்மீகம், கலாச்சாரம், தத்துவம் மற்றும் யோகம் பற்றி குருதேவாவின் பிரத்யேக மற்றும் யதார்த்தமான கருத்துக்களை, அவர் எழுதிய எண்ணற்ற புத்தகங்கள் வெளிப்படுத்துகின்றன. அவர் எழுதிய *சைவைட் இந்து ரிலிஜன்* பல பள்ளிகளில் பாடமாக கற்பிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மனதில் உபதேசங்களை பாதுகாத்து வருகிறது. இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் என்ற சமூக சேவை அறக்கட்டளை, 1995 ஆம் ஆண்டு குருதேவா மூலம் தொடங்கப்பட்டது. அது உலகெங்கும் இருக்கும் இந்து அமைப்புக்களுக்கு நிரந்தர வருமானங்களை அமைத்து, அவற்றை பராமரிக்க தீவிர முயற்சி செய்து வருகிறது. ¶அவர் 1986 ஆம் ஆண்டு மொரீஷியஸ் தீவில் *ஸ்பிரிட்சுவல் பார்க்கை* (ஆன்மீக பூங்கா) அமைத்தார். அதே வருடம் புது டில்லியில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில், அவர் இந்து சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கும் வண்ணம், அவருக்கு நவீன ஐந்து ஜகதாச்சார்யாக்களில் ஒருவராக பட்டம் சூட்டப்பட்டது. அதன் பிறகு 1995 ஆம் ஆண்டு டில்லியில் நடந்த மாநாட்டில், அவர் பிரசுரித்த சிறந்த வெளியீடுகளுக்காக, அவருக்கு தர்மசக்ரா பட்டம் வழங்கப்பட்டது. ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்களுக்கான சர்வதேச மன்றம் நடத்திய சிறப்பு மாநாடுகளில், அந்த மன்றம் இந்து சமயத்தின் பிரதிநிதியாக சுப்பிரமுனியசுவாமியை தேர்ந்தெடுத்தது. செப்டம்பர் 1993, சிகாகோவில் நடைப்பெற்ற வரலாற்று சிறப்புமிக்க உலக சமயங்களின் நூற்றாண்டு மாநாட்டில், தலைவர்கள் குழுவில் இந்து சமயத்தை பிரதிநிதித்துவம் செய்த மூன்று தலைவர்களில் ஒருவராக சுப்பிரமுனியசுவாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

25 ஆண்கள் மற்றும் பெண்களைக் கொண்ட அந்த தனிக்குழு உலக மதங்களின் தேவைகளுக்கு ஆதராவாக குரல் கொடுத்தது. 1996 ஆம் ஆண்டு குருதேவா இந்துயிசம் டுடே நாளிதழை ஒரு பத்திரிகையாக மாற்றி அமைத்தார். இது பல்வேறு நாடுகளின் பத்திரிகை கடைகளில் இடம்பிடிக்க பேருதவியாக விளங்கியது. 1996 முதல் 2001 வரை, குருதேவா விஷன் கவாய் 2020 என்ற குழுவில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தார். மக்களுக்கு தூண்டுதலாக விளங்கிய அந்த குழுவில் மேயர், நகராட்சி உறுப்பினர், வணிகத்துறை மற்றும் கல்வித்துறை தலைவர்கள் அங்கம் வகித்தனர். அந்த குழு ஆன்மீக கொள்கைகளின் அடிப்படையில், கவாய் தீவின் எதிர்காலத்தை வடிவமைக்கும் நோக்குடன் செயல்பட்டு வந்தது. நியூ யார்க் நகரில் ஆகஸ்ட் 25, 2000 பெருமைக்குரிய யு தாண்ட் அமைதிப் பரிசை குருதேவா பெற்றார். அந்த பரிசை அதற்கு முன்பு தலாய் லாமா, நெல்சன் மண்டேலா, மிகைல் கோர்பச்சேவ், போப் ஜான் பால் மற்றும் அன்னை தெரசா பெற்று இருந்தனர். அவர் ஐ.நா. மில்லினியம் அமைதி மாநாட்டில் 1,200 ஆன்மீகத் தலைவர்கள் முன்பாக உரையாற்றினார். ¶அக்டோபர் 9, 2001 தனது குடலில் புற்றுநோய் முற்றிய நிலையில் இருக்கிறது என்பதை அறிந்ததும், *பிரயோபவேச* என்று சமஸ்கிருத சாத்திரத்தில் அழைக்கப்படும் இந்திய யோகப்பயிற்சியை குருதேவா பின்பற்றி, அன்றில் இருந்து உணவு எதையும் உட்கொள்ளாமல் நீரை மட்டுமே குடிக்க முடிவு செய்தார். அவர் உபவாசம் இருந்த முதல் சில வாரங்களில், தன்னிடம் 37 வருடங்கள் சீடனாக இருந்த, சத்குரு போதிநாத வேலன்சுவாமியிடம் (59) தனது பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை மனப்பூர்வமாக ஒப்படைத்தார். அவரை அவரது முப்பத்தி இரண்டு மடவாசிகள் சூழ்ந்து இருக்க நவம்பர் 12, 2001 இரவு 11:54 மணி அளவில், சுயமாக மேற்கொண்ட உபவாசத்தின் 32 ஆவது நாளில் தனது உயிரை அமைதியாக துறந்தார். ¶குருதேவாவைப் பற்றி மிகவும் விசேஷமானது என்ன என்று அன்பர்களிடம் கேட்டால், மற்றவர்களை இறைவனை நோக்கி வரவழைக்க ஊக்கத்தை தந்து, அவர்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்து, இறைவனை நோக்கி அவர்கள் செல்லும் பாதையில் ஒரு ஒளி விளக்காக விளங்கி, தன்னை நாடி வந்தவர்களுக்கு தாயும் தந்தையுமாக விளங்கும் அவரது வியக்கத்தக்க ஆற்றலே விசேஷமானது என்பார்கள்.

இணையத்தில் குருதேவா பற்றிய மேலும் தகவலுக்கு: www.gurudeva.org

லௌகீக வாழ்க்கையில் மனநிறைவு அடைந்த சில அபூர்வமான மனிதர்கள், இந்து சந்நியாசிகளாக

சிவபெருமானுடன் நடனமாட, வாழ மற்றும் ஐக்கியமாக விரும்புகிறார்கள்.



ந்த அபூர்வமான ஆன்மாக்கள் பாரம்பரிய இந்து சந்நியாச பாதையை பின்பற்றி, ஏழ்மை, பணிவு, கீழ்ப்படிதல், தூய்மை மற்றும் நம்பிக்கையுடன் இருக்க உறுதிமொழி எடுக்கிறார்கள். அவர்கள் ஆத்மஞானத்தை நோக்கி அழைத்து செல்லும் *சரியை, கிரியை, யோகம்* மற்றும் *ஞானத்தின்* கட்டுப்பாடுகளை பின்பற்றுகிறார்கள். இறைவனை அறிவது மட்டுமே அவர்கள் வாழ்க்கையின் குறிக்கோளாக விளங்குகிறது, மற்றும் அந்த சக்தி அவர்களை அதிக ஆற்றலுடன் இயக்கி செல்கிறது. அவர்கள் வழிபடுவதற்கு, தியானம் மற்றும் சேவை செய்வதற்கு மற்றும் *வேதங்கள்* மற்றும் *சைவ ஆகமங்களின்* உண்மைகளை உணர்வதற்கு, தங்களை போன்று மடத்தில் வாசம் செய்யும் மற்ற மடவாசிகளை போல, லௌகீக வாழ்க்கையில் இருந்து விலகி வாழ்கிறார்கள்.

சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமிக்கு பிறகு, சத்குரு போதிநாத வேலன்சுவாமியின் வழிகாட்டலுடன், அமெரிக்காவின் ஹவாயில் கவாய் அதீனத்தை தலைமையகமாகக் கொண்டு, அழகான கார்டன் ஐலாண்டான கவாயில் அமைந்திருக்கும், சைவ சித்தாந்த யோக சமூகம் உலகில் பாரம்பரிய முறைப்படி செயல்படும் சைவ இந்து அத்வைத சமூகங்களில் முன்னோடியாக திகழ்ந்து, உலகில் இருக்கும் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் சாதகரை ஏற்றுக்கொள்கிறது. இது முதலில் இந்தியாவில் தோன்றி, சமீபத்திய நூற்றாண்டுகளில் இலங்கையை தலைமையகமாக கொண்டு, தற்போது இயங்கிக்கொண்டு இருக்கும் பழங்கால நந்திநாத சம்பிரதாயத்தை சார்ந்த, ஒரு *அத்வைத* சைவ சித்தாந்த சமூகம் ஆகும். இந்த பரம்பரையில் தங்களுக்கு வலுவான ஆன்மீகத் தூண்டுதல் இருப்பதை அறிந்து, துறவற பாதையை பற்றிய ஆழமாக சிந்தித்துக்கொண்டு இருக்கும் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்கள், தங்களைப் பற்றிய சொந்த தகவல், ஆன்மீக எதிர்பார்ப்புகள், சிந்தனைகள் மற்றும் அனுபவங்களை பற்றிய சத்குரு போதிநாதாவிற்கு கடிதம் எழுதலாம். பத்து அல்லது பன்னிரண்டு வருட பயிற்சிக்கு பிறகு தகுதி பெறுவோருக்கு, *சந்நியாசத்தின்* புனிதமான ஆணைகள் வழங்கப்படக்கூடும். இதைப்பற்றி எழுதவேண்டிய முகவரி:

சத்குரு போதிநாத வேலன்சுவாமி

குரு மகாசன்னிதானம், கவாய் ஆதீனம்
107 கஹோலலேலே ரோடு, காப்பா, ஹவாய் 96746-9304 USA
மின்னஞ்சல்: bodhi@hindu.org; இணையதள முகவரி www.gurudeva.org

அன்பின் உருவமாக இருக்கும் சந்நியாசிக்கு வணக்கம்! அன்பை தவிர்த்து வேறேதும் சக்தி இருக்கிறதா? ஆனந்தம் நிரம்பிய உலகம் முழுவதிலும் உங்களை வியாபித்துக் கொள்ளுங்கள். வலிகளை தரும் மாயை நிறைவுபெற்று மீண்டும் திரும்பாமல் இருக்கட்டும். இரவும் பகலும் தொடர்ந்து இறைவனின் துதி பாடுங்கள். கல்லும் உருகுமாறு பாடல்கள் உள்ளத்தில் இருந்து வெளிவரட்டும். இரவு அல்லது பகல் அல்லாத இடத்தில் கவனத்தை பெறுங்கள். எங்கும் சிவபெருமானை கண்டு பேரின்பத்தில் அமைதி கொள்ளுங்கள். லௌகீக இன்பத்தில் பற்றின்றி வாழுங்கள். இங்கே எப்போதும் போல நிறைவாக நிலைத்து இருங்கள்.

சத்குரு சிவ யோகசுவாமி

இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல்

பெரும்பாலும் இந்த பூமியில் இருக்கும் ஒவ்வொரு நாகரிகத்திலும், இந்து சிந்தனை மற்றும் கலாச்சாரம் தனது தாக்கத்தை ஏற்படுத்தி, உயர்வான தத்துவம் மற்றும் யதார்த்தமான, நடைமுறைகேற்ற ஞானத்தை உள்ளடக்கிய ஒரு நுணுக்கமான ஓவியத்திரையை உருவாக்கியுள்ளது. இந்து சமயம் யாருடைய வாழ்க்கையில் தனது தாக்கத்தை ஏற்படுத்தவில்லை? இந்தியாவில் வளர்க்கப்பட்ட சிலர், பழங்கால *மந்திரங்கள்* எதிரொலிக்கும் அமைதியான கோயில்கள் மற்றும் பாசம் நிரம்பிய பெரிய குடும்பங்களின் சந்தோஷமான நினைவுகளை நினைத்து மகிழ்கிறார்கள். மற்றவர்கள் இந்து *யோக* பயிற்சிகளில் அமைதியை நாடுகிறார்கள். பலர் தங்களது சுய முடிவுகள் மற்றும் நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் *கர்மவினை, தர்மம்* மற்றும் மறுபிறவியின் கோட்பாடுகளில் அமைதியை தேடிக்கொள்கிறார்கள். நீங்கள் இந்து தர்மத்தின் சிந்தனை மற்றும் கலாச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு இருந்தால், உலகெங்கும் பல நாடுகளில் பரவியிருக்கும் சனாதன தர்மத்திற்கு நன்றிக்கடனை செலுத்தி, எதிர்கால சந்ததியர்களுக்கு அந்த தர்மத்தின் வளமான பாரம்பரியத்தை பாதுகாக்க உதவி செய்து, உங்கள் வாழ்வை மேலும் மேம்படுத்த விரும்பலாம். ¶இந்து பாரம்பரிய

நன்கொடை நிறுவல் (HHE) அத்தகைய ஒரு வாய்ப்பை வழங்குகிறது. உலகெங்கும் நடைபெறும் இந்து சமய திட்டப்பணிகள் மற்றும் அதன் சங்கங்களுக்கு நிரந்தரமாக நன்கொடைகளை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட HHE, அமெரிக்க அரசால் அங்கீகரிக்கப்பட்ட பொதுமக்கள் நலன் காக்கும் தொண்டு நிறுவனம் ஆகும். இது வழங்கும் நன்கொடைகள் அனாதைகள், குழந்தைகள் காப்பகங்கள், *ஆசிரமங்கள்* மற்றும் கோயில்கள் பயன் அடைகின்றன. அவை பூசாரிகளுக்கு ஆதரவு வழங்கி புத்தகங்களை வெளியிடுகின்றன, மற்றும் அவை பல வருடங்களுக்கு, பல நூற்றாண்டுகளுக்கு தொடர்ந்து உதவி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. HHE யில் பணிபுரியும் ஊழியர்கள், அங்கீகரிக்கப்பட்ட நன்கொடைகள் சரியான நோக்கத்திற்கு முழுமையாக பயன்படுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். நன்கொடை வழங்கப்படுவதற்கு முன்பு, HHE யில் இருந்து பெறப்பட்ட வருவாய்க்கு, ஒரு விரிவான ஆண்டு அறிக்கை மற்றும் அடுத்த ஆண்டு நிதி செலவிடும் திட்டம் அடங்கிய ஒரு அட்டவணையை ஒவ்வொரு பயனாளியும் வழங்கவேண்டும். நீங்கள் வழங்கும் பரிசுகள் அதன் குறிக்கோளை சென்று அடைவதை, நாங்கள் ஒரு *சாதனையாக* மேற்கொள்கிறோம். பாரம்பரிய நன்கொடை நிறுவலை உங்களது உயிலில், வருடக்கடைசியில் வழங்கும் நன்கொடை மற்றும் உங்களது மாதாந்திர வரவு செலவு திட்டத்தில் தயவு செய்து சேர்த்திடுங்கள். அநாதை ஆசிரமங்களுக்கு சில டாலர்களை வழங்கும் ஆவல் இருந்தால் அல்லது பல மில்லியன் டாலர்களை உயிலில் எழுத விரும்பினால், எங்களுக்கு கடிதம் எழுதவும் அல்லது அழைப்பு விடுக்கவும் அல்லது இணையதளம் மூலம் தொடர்பு கொள்ளவும். தற்போது வாழ்ந்துக்கொண்டு இருக்கும் மற்றும் வரவிருக்கும் சந்ததியர்களுக்கு, ஒரு மிகப்பெரிய பாரம்பரியத்தின் பொக்கிஷங்களை பாதுகாக்க உதவுவதன் மூலம், உங்கள் வாழ்கையை மேம்படுத்திக் கொள்ளும் முறையை தெரிந்துக்கொள்ளுங்கள்.


சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி



இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல், கவாயின் இந்து மடாலயம்,
107 கஹோலலேலே ரோடு, காபா, ஹவாய், 96746-9304, USA.
தொலைபேசி: (800) 890-1008;
அமெரிக்காவிற்கு வெளியே: (808) 822-3012, நீட்டிப்பு எண் (ext). 224;
தொலைநகலி: (808) 822-3152
மின்னஞ்சல்: hhe@hindu.org இணையதளம்: http://www.hheonline.org/

மினி மேளா புத்தகக்கடை

எங்களது புத்தகங்களைப் பற்றி அறிய www.minimela.com




மேர்ஜிங் வித் சிவா (சிவபெருமானுடன் ஐக்கியமாதல்)

இந்து மதத்தின் தற்கால மீமெய்யியல்,
தி மாஸ்டர் கோர்ஸ் டிரைலாஜியில் மூன்றாவது புத்தகம்
ஆசிரியர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

இது தீவிரமாக இருக்கும் ஒரு சாதகனுக்குரிய புத்தகம் ஆகும். இது உலக மொழிகளில், தியானம் மற்றும் ஆத்ம ஞானம் பற்றி வாசகரை மிகவும் சிறப்பான முறையில் ஊக்குவிக்கும் தலைசிறந்த புத்தகமாக வரலாற்றில் இடம் பிடிக்கக்கூடும். அதே சமயத்தில் இது பயன்படுத்துவதற்கு மற்றும் பின்பற்றுவதற்கு வசதியாக, யதார்த்தமாக மற்றும் முறையான கல்வி சாராததாக இருக்கிறது! தினசரி படிப்பதற்கு என்று 365 பாடங்களைக் கொண்ட *மேர்ஜிங் வித் சிவா* புத்தகம், உங்களது சொந்த இருப்பின் மையத்தைப் பற்றி

விளக்குகிறது. அது இறைவன், பதினான்கு *சக்கரங்கள்* பற்றிய ஆன்மீக உலகம், மனித ஒளி உடல், *கர்மவினை*, விசைப் பகுதிகள், சிந்தனை மற்றும் மனநிலைகள், இரண்டு பாதைகள், *சமாதி* பற்றியும், மேலும் பல தகவல்களையும் வழங்குகிறது. அது ஐம்பது தென்னிந்திய மூல ஓவியங்களுடன் விளக்குகிறது. இரண்டாவது பதிப்பு, 2002, 1,000 பக்கங்கள், 7" x 10", தடித்த அட்டை (ISBN 0-945497-99-7), US$59.95.




டான்சிங் வித் சிவா (சிவபெருமானுடன் ஒரு திருநடனம்)

இந்து சமயத்தின் தற்கால வினா-விடை புத்தகம்,
தி மாஸ்டர் கோர்ஸ் டிரைலாஜியில் மூன்றாவது புத்தகம்
ஆசிரியர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

1,000 பக்கங்களை கொண்ட இந்த விசேஷமான மூலப் புத்தகம், ஒவ்வொரு விஷயத்தையும் அலசி, ஒவ்வொரு கேள்விக்கும் பதில் அளித்து, இறைவன் மற்றும் பரமாத்துமா பற்றி ஒவ்வொரு ஆன்மாவிற்கு இருக்கும் அறிவுப்பசியை தணிக்கிறது. தெளிவாக எழுதப்பட்டு மற்றும் பகட்டாக விளக்கப்பட்ட இந்த புத்தகத்தில் *வேதங்கள், ஆகமங்கள்* மற்றும் புனித நூல்களில் இருந்து 600 மந்திரங்கள், 165 தென்னிந்திய ஓவியங்கள், 40 அசல் வரைகலைகள், இந்திய வரலாறு பற்றிய ஒரு 25-பக்க காலவரிசை, மற்றும் 100 க்கும் அதிகமான பக்கங்களில் ஆங்கில, சம்ஸ்கிருத மற்றும் தமிழ் அகராதி ஆகியவை

நேர்த்தியாக இணைக்கப்பட்டுள்ளன. நல்ல தரம் மற்றும் பொருத்தமான விலையுடன், இது ஒரு ஆன்மீக பொக்கிஷமாக விளங்குகிறது. “இயங்கிக்கொண்டு இருக்கும் இந்து சமயத்தின் ஆன்மீக பாரம்பரியத்திற்கு, மிகவும் விரிவான மற்றும் நுணுக்கமான அறிமுகம்...இதயம் மற்றும் மனதிற்கு ஒரு பெரிய விருந்தாக இருக்கிறது (ஜார்ஜ் ஃபியூயர்ஸ்டீன்).” ஆறாவது பதிப்பு, 2001, 7” x 10”, தடித்த அட்டை (ISBN 0-945497-96-2) US$59.95.




லிவிங் வித் சிவா (சிவனோடு வாழ்தல்)

இந்து சமயத்தின் தற்கால கலாச்சாரம்
பிரதான பயிற்சி வகுப்பின் முத்தொகுப்பில் இரண்டாவது புத்தகம்
ஆசிரியர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

இந்த புத்தகத்தில், குருதேவா *சிவபெருமானுடன் ஐக்கியமாதலை* போன்று தைரியமான, வெளிப்படையான பாணியை கையாண்டுள்ளார். மேலும் வலுவாக பயன்படுத்தும் போது வாழ்க்கையில் ஒரு ஒழுங்குமுறையை கொண்டுவந்து ஆன்மீகம், தியானம் மற்றும் உணர்தலுக்கு ஒரு அஸ்திவாரத்தை அமைக்கும் இந்து சமயத்தின் இயம மற்றும் நியமங்கள் மீது அவர் கவனம் செலுத்தி இருக்கிறார். அவர் வெளிப்படையாக விரிவுரையை வழங்கி, இன்றைய வாழ்க்கையில் இருக்கும் சிக்கல் நிறைந்த விவகாரங்களுக்கு நல்ல பயனுள்ள அறிவுரையை வழங்குகிறார். இந்த புத்தகம் மிகவும் பொருத்தமாக 365 தினசரி பாடங்களுடன் அமைந்து, ஒரு நிறைவான

ஆன்மீக வாழ்வை வாழ்வதற்கு குடும்பம், பணம், உறவுகள், தொழில்நுட்பம், உணவு, வழிபாடு, யோகம் மற்றும் *கர்மவினையை* எப்படி அணுகுவது என்பதை தெரியப்படுத்துகிறது. இரண்டாவது பதிவு முழுவதும் அழகான பலவண்ண ஓவியங்கள் நிறைந்து இருக்கின்றன. இரண்டாவது பதிவு, 2001, 7" x 10", தடித்த அட்டை (ISBN 978-0-945497-98-1), US$59.95.




ஒரு இந்துவாக மாறுவது எப்படி (How to Become a Better Hindu)

சாதகர்கள் மற்றும் இந்துவாக பிறந்தவர்களுக்கான கையேடு
ஆசிரியர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

பல்லாயிரக்கணக்கான அர்த்த இந்துக்கள், தங்களுக்கு *யோகா* கற்பிக்கும் ஆசிரியர் அல்லது ஒரு *சுவாமியிடம்* இருந்து, ஒரு மகாதேவர் அல்லது அம்மனின் பெயரை பெற்று, முழுமையாக இந்து சமயத்தில் நுழைய விரும்புகின்றனர். இந்து சமயத்தின் முற்போக்கான கோட்பாடு காரணமாக, அந்த தனிநபர் “தானே மதமாற்றத்தை" செய்துக்கொள்ளலாம். மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய நாடுகளில் எவ்வாறு பலரது வாழ்க்கையை, ஆறு நிலைகளை கொண்ட ஒழுங்குமுறையான மதமாற்றம் மேம்படுத்தியுள்ளது என்பதை *ஒரு இந்துவாக மாறுவது எப்படி* என்ற புத்தகம் விளக்குகிறது. இந்த புத்தகத்தில் மேற்கத்திய கடவுள் நம்பிக்கையில் இருந்து இந்து சமயத்திற்கு பயணம் செய்த பாதையை பற்றி அமெரிக்கர்கள், கனடா நாட்டை சேர்ந்தவர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் தங்களது அனுபவத்தை பகிர்கிறார்கள். இந்த புத்தகம் இந்து சமயத்தை சாராதவர்கள், இந்துவாக மாறுவது பற்றிய சர்ச்சையை

எழுப்பி, அதற்கு நல்ல முறையில் தீர்வும் காண்கிறது. “இந்து சமயத்தில் சேர விரும்புவோருக்கும், இந்தியாவிற்கு வெளியே வாழும் இளைய சமுதாயத்தினருக்கும், விரிவாக விளக்கும் இந்த புத்தகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்” (பூரி சங்கராச்சாரியா). முதல் பதிப்பு, 2000, 496 பக்கங்கள், 5½” x 8½, மென்மையான அட்டை (ISBN 0-945497-82-2), US$27.95.




வீவர்ஸ் விஸ்டம் (திருக்குறளின் ஆங்கில மொழிப்பெயர்ப்பு)

ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கு துணைபுரியும் பழங்கால கோட்பாடுகள்
சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

2,200 வருடங்களுக்கு முன்பாக திருவள்ளுவர் எழுதிய *திருக்குறளின்* நேர்த்தியான அமெரிக்க ஆங்கில வடிவம். அதன் கருத்துக்கள் வியாபாரம், குடும்பம், உறவுகள், பணம், எதிரிகள், தனிப்பட்ட அச்சங்கள், சூதாட்டம், அரசியல், உணவுமுறை மற்றும் உடல்நலம் என்று இன்றைய உலகிற்கு பொருத்தமானதாக இருக்கிறது. இது உலகப் பொதுமறை என்று அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் நகைச்சுவை உணர்வுடன் சுருக்கமாக இருக்கும் இதன் குறட்பாக்கள், மனித இயல்பு பற்றி வெளிப்படையான ஆய்வை வழங்குகிறது. இது தென் இந்திய நீதிமன்றங்களில் உறுதிமொழி எடுக்க பயன்படுத்தப்படுகிறது. இதை செலவில்லாமல் மேற்கோளாக பயன்படுத்த

முடிகிறது. உங்கள் குழந்தைகளின் மனதை பழக்கப்படுத்தி அவர்களை *தர்ம* நெறியில் அழைத்து செல்வதற்கு, குறட்பாக்களை அவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். 100க்கும் மேற்பட்ட விளக்கப்படங்கள், 1,080 குறட்பாக்கள். முதல் பதிப்பு, 1999, 408 பக்கங்கள், 5½" x 8½", மென்மையான அட்டை (ISBN 0-945497-76-9), US$19.95. தடித்த அட்டை பதிப்பு, US$29.85. ஆங்கில மற்றும் நவீன தமிழ் மொழிபெயர்ப்புக்களுடன் தடித்த அட்டையில் முழு வண்ணப்பதிப்பு, 600 பக்கங்கள் (ISBN 81-7017-390-6), US$49.95.



தி குரு கிரோனிக்குள்ஸ் (குருமார்களின் சரித்திரங்கள்)

ஆசிரியர்: கவாய் இந்து மடத்தின் சுவாமிகள்

இந்த புத்தகத்தின் மூலம் அற்புத கதைகள், கருத்துக்கள் மற்றும் ஆன்மீக அனுபவங்கள் நிரம்பிய ஆன்மீக ஆசிரியர்கள் பற்றி அதிகம் அறியாத உலகில் பயணம் செய்யலாம். இதன் மையத்தில் இந்துயிசம் டுடே பத்திரிகையை நிறுவிய சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி, மற்றும் அவரது குருவான சிவ யோகசுவாமி மற்றும் ஆன்மீக பரம்பரையில் அவருக்கு முன்பிருந்த ஐந்து குருமார்களின் வாழ்க்கை பற்றி மக்களுக்கு அதிகம் தெரியாத தகவல்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இதற்கு தென்னிந்திய ஓவியரான எஸ். ராஜம் விளக்கப் படங்களை வரைந்து இருக்கிறார். “வாசகரை வலுவாக கவரும் வகையில் அமைந்து இருக்கிறது. இது மதி மயக்கும் இசையோடும், ஒரே நேரத்தில் கடந்தகாலம் மற்றும் நிகழ்காலத்தில் நடைபெறும் அழகான பாடல்

வரிகள் அடங்கிய கதையோடும், வாசகருக்கு எதிர்காலத்தில் தொடர்ந்து வலுவான விழிப்புணர்வை தரும் உறுதியோடும் இருக்கிறது. இது இந்தியா மற்றும் இலங்கையின் எளிய வாழ்க்கை மற்றும் வலுவான ஆன்மீக கலாச்சாரத்திற்கு அதிக சக்தி வாய்ந்த உயிரூட்டத்தை வழங்குகிறது. எஸ். ராஜத்தின் படைப்பு லயத்துடன் உணர்ச்சியை வெளிப்படுத்தி, இந்த புத்தகத்தின் இசை அமைப்பிற்கு மெருகூட்டுகிறது" (காயத்ரி ராஜன், கலிபோர்னியா) முதல் பதிப்பு, 2011, 832-பக்கங்கள், 7" x 10", தடித்த அட்டை, முழுமையான விளக்க படங்களுடன், $59.95, (ISBN 978-1-934145-39-5). இது தற்போது ஆடியோ புக் (ஒலி நூல்) வடிவிலும் கிடைக்கிறது! மேலும் தகவலுக்கு: himalayanacademy.com/tgc




இந்துயிசம் டுடே (Hinduism Today)

சர்வதேச பத்திரிகை

சனாதன தர்மம் பற்றி சத்குரு போதிநாத வேலன்சுவாமி மற்றும் சைவ சித்தாந்த யோக சமூகத்தின் *சுவாமிகளால்* வெளியிடப்பட்ட, முன்னோடி சர்வதேச பத்திரிக்கையுடன் ஆன்மீக அனுபவத்தை பெற்று பயன்பெறுங்கள். விரைவுச் செய்திகள், பழங்கால ஞானம், புதிய போக்குகள், சிறந்த புகைப்படங்கள், குடும்பத்திற்கு தேவையான வளங்கள் மற்றும் நகைச்சுவை உணர்வுடன் இருக்கும் ஒவ்வொரு இதழையும் நீங்கள் ஒரு பொக்கிஷமாக வைத்திருக்க விரும்புவீர்கள்! "ஊடகத்தை நேர்மறையாக பயன்படுத்த முடியும் என்பதற்கு இந்துயிசம் டுடே ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கி, அறியாமை நிறைந்த உலகில் ஒரு பிரகாசமான ஒளிக்கதிராக இருக்கிறது" (ஆன் ஷானன், போர்ட்லேண்ட்). அறிமுக சலுகை (அமெரிக்காவில் மட்டும்): ஒரு வருட சந்தா,

கண்ணை கவரும் 4 இதழ்கள், விலை US$35! ஆமாம், இந்த புத்தக ஆசிரியர் இந்த சர்வதேச பத்திரிகையை தொடங்கி, 20 வருடங்களுக்கு அதன் வழிகாட்டியாக இருந்தார். ISSN 0896-0801; UPC: 0-74470-12134-3. மேலும் தகவலுக்கு: www.hinduismtoday.com




லெமூரியன் ஸ்க்ரோல்ஸ் (Lemurian Scrolls0

மனிதநேயத்தின் மூலங்களை வெளிப்படுத்தும் தேவதூத தீர்க்கதரிசனங்கள்
ஆசிரியர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

ஆன்மாவின் விரிவாக்கத்தை ஊக்குவிக்க, பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, ப்ளியடிஸ் மற்றும் மற்ற கிரகங்களில் இருந்து, பூமி நோக்கி மனிதநேயம் மேற்கொண்ட பயணம் பற்றிய இந்த தீர்க்கதரிசன வெளிப்பாட்டின் மூலம், உங்கள் ஆன்மீக ஈடுபாட்டை உற்சாகப்படுத்துங்கள். ஒளியால் உருவான ஆன்மீக உடல்களில் இருந்து மனித உருவாக பரிணாம வளர்ச்சி அடைவதில் இருந்த சவால்கள் மற்றும் அனுபவங்கள், மற்றும் பழங்கால லெமூரியாவில் பின்பற்றப்பட மிகச்சிறந்த பழக்கங்கள் மற்றும் அவர்கள் பெற்ற விழிப்புணர்வுகள் பற்றி தெரிந்துக்கொள்ளுங்கள். இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டு, *ஆகாச* பதிவுகளில் இருந்து சிவாய சுப்பிரமுனியசுவாமி மூலம் படிக்கப்பட்ட, இந்த தேவதூத தீர்க்கதரிசனங்களால், உங்களது தெய்வீக மூலம், குறிக்கோள் மற்றும் விதி பற்றிய ஒரு உணர்வு

உங்களை ஆட்கொண்டு, உங்களது ஆன்மீக வேட்கைக்கு தேவையான ஒரு தீவிரமான மறு அர்ப்பணிப்பிற்கு ஊக்கத்தை வழங்கும். இது ஒரு விசேஷமான மீமெய்யியல் புத்தகமாக விளங்கி, “நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் எங்கே சென்று கொண்டு இருக்கின்றேன்?” போன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கிறது. இரண்டாவது பதிவு, 2006, 7" x 10", 400 பக்கங்கள், அசல் வண்ண ஓவியங்களுடன் அழகாக விளக்கப்பட்டுள்ளது, தடித்த உறை (ISBN 0-945497-79-2),US$39.95.




தி ஹிஸ்டரி ஆப் இந்து இந்தியா (History of Hindu India)

பழமை முதல் புதுமை வரை
படைப்பு: இந்துயிசம் டுடே பத்திரிகையின் ஆசிரியர்கள் மற்றும் Dr. சிவா பாஜ்பாய்

பலவகைகளில் மிகவும் பெரியதாகவும், பழங்கால நாகரிங்கங்களில் மிகவும் மேம்பட்டதாகவும் விளங்கிய சிந்து-சரவஸ்தி நாகரிகத்தில் தெளிவாக காட்சியளிக்கும் இந்து பழக்கங்களின் கருப்பொருளை, இந்த புத்தகம் எடுத்துரைக்கிறது. அந்த நாகரிகத்தில் தொடங்கி அறிவியல், கட்டிடக்கலை, கலை மற்றும் இலக்கியத்தில் இந்தியாவின் ஆரம்பகால சாம்ராச்சியங்கள் மூலம் மிகப்பெரிய முன்னேற்றங்களை பெற்ற இந்து சமயத்தின் வளர்ச்சியை நாம் விசாரம் செய்கிறோம். அதன் பிறகு படையெடுப்பு மூலம் பல வருடங்களுக்கு சோதனை, அதன் பிறகு குடியேற்றம் மற்றும், இறுதியாக 20 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய அரசிடம் இருந்து விடுதலை. வரலாற்றின் இந்த காலகட்டங்கள் முழுவதும், நாம் இன்றைய இந்து சமயத்திற்கு முக்கியமாக விளங்கிய மக்கள், தத்துவ சிந்தனைகள் மற்றும் சமய பழக்கங்கள் மீது கவனம் செலுத்துகிறோம். இதன் உரை அமெரிக்காவில் இருக்கும் ஆறாம் வகுப்பு சமூக

அறிவியல் பாடத்திற்கு எழுதப்பட்டு இருந்தாலும், இது உயர்நிலைப்பள்ளி வகுப்புக்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது. இது உலகின் மிகவும் பழமையான சமயம் பற்றி சுருக்கமாக மற்றும் விரிவான விளக்க உரையை கொண்டு இருப்பதால், இது கல்லூரி பாடத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதல் பதிப்பு, 2011, 128 பக்கங்கள், 8½" x 10½", தடித்த அட்டை (ISBN 978-1-934145-38-8), US$25.00.



சிவனை அடையும் வழி (பாத் டு சிவா)

இளைஞர்களுக்கான இந்து சமய வினாடி வினா
ஆசிரியர்: சத்குரு போதிநாத வேலன்சுவாமி

சிவனை அடையும் வழி புத்தகம், சைவ சமயத்தின் முக்கிய போதனைகளை 68 ஒரு பக்க பாடங்கள் மூலம் வழங்குகிறது. இந்த புத்தகம் இளைஞர்களை கருத்தில் கொண்டு எழுதப்பட்டு இருந்தாலும், சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமியின் 3,000 பக்க மாஸ்டர் கோர்ஸ் பயிற்சி வகுப்பின் சுருக்கமான பதிவை விரும்புவோருக்கு இது பொருத்தமாகவும் விளங்குகிறது. இந்த புத்தகத்தில் சிவபெருமான், விநாயகர், முருகப்பெருமான், தேவர்கள் பற்றிய கேள்விகளுக்கு தக்க பதில்களையும், அவர்களால் நம் வாழ்வில் எவ்வாறு உதவ முடியும் என்பதையும், கோயில் வழிபாடு, வீட்டு வழிபாடு மூலம் நாம் எப்படி அவர்களைத் தொடர்பு கொள்ளமுடியும் என்பதையும் அறிந்து கொள்ளலாம். கர்மவினை, தர்மம், மறுபிறப்பு போன்றவைகளுக்கு மிகத் தெளிவான விளக்கத்தை நீங்கள் காணலாம். ஜபம், தியானம் மற்றும் உறுதிமொழிகள் உங்கள் வாழ்க்கையை எப்படி மேம்படுத்த உதவுகின்றன என்ற விளக்கங்களையும் காணலாம். உங்களின் மிக முக்கியமான

இலட்சியங்களை அடைய எப்படி வாழ்க்கையை சிறப்பான முறையில் நடத்தலாம் என்றும் நீங்கள் இதில் கற்றுக்கொள்ளலாம். இல்லறத்தின் உட்பார்வை, மற்றவர்களோடு புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளுதல், பிறசமய சகிப்பு, சைவ உணவு உண்ணுதல், சுற்றுச்சூழலை மதித்தல் போன்ற தகவல்கள் இந்த அத்தியாயங்களில் அடங்கியுள்ளன. இறப்பு, இறக்கும் தருவாய், மறுபிறவி, பாவம், தீமை போன்ற கடினமான தத்துவார்த்த அங்கங்களையும் அவை விவாதிக்கின்றன. வாரம் ஒருமுறை குடும்பத்துடன் ஒரு பாடத்தை விவாதிப்பதன் மூலம், அந்த விவாதம் ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்து வலிமை பெறுகிறது. முதல் பதிப்பு, 2018, 96 பக்கங்கள், 81/4” x 10½”, தடித்த அட்டை (ISBN 978-1-934145-72-2), US$25.00.

இலவச வளங்கள்



டுடே அட் கவாய் ஆதீனம் என்கிற டாகா (TAKA) என்பது சொற்கள், படங்கள், ஒலிகள் மற்றும் காணொளிகள் வடிவில், எங்களது மடத்தின் தினசரி நடவடிக்கைகளின் நிகழ்ச்சிப் பதிவாக விளங்குகிறது. எங்கள் கோயிலில் நடைபெறும் அபிவிருத்திகள், இங்கே வரும் பக்தர்கள் அல்லது என்ன நடக்கிறது என்பதைப் பற்றி தெரிந்துக்கொள்ள, அணுகவேண்டிய மின்னஞ்சல்: www.gurudeva.org/taka/.



குருதேவா மற்றும் போதிநாதா வழங்கிய 800க்கும் மேற்பட்ட உபதேசங்களை எங்களது ஆடியோ லிப்ரரியில் (ஒலித் தரவகம்) பிரவுஸ் செய்யுங்கள். குடும்பம், தனிப்பட்ட மாற்றம், யோகம், ஆன்மீக வழக்கங்கள், உறவுகள் போன்றவற்றைப் பற்றிய உபதேசங்களை கேளுங்கள். மேலும் தகவலுக்கு: www.himalayanacademy.com/looklisten/talksindex.
எங்களது சிறிய வீடியோ லைப்ரரிக்கு (ஒளித் தரவகம்): www.youtube.com/user/kauaiaadheenam/videos.

எங்களது வெளியீட்டு வளம் பற்றிய பக்கத்தில் குருதேவா நமக்காக வழங்கிய ஆன்மீக போதனைகள், 3,000 பக்கங்களைக் கொண்ட மாஸ்டர் கோர்ஸ் ட்ரைலாஜி, முப்பது வருடங்களாக வெளிவந்துள்ள சர்வதேச பத்திரிகை, குழந்தைகள் பயிற்சி புத்தகங்கள், *வேதங்கள்* மற்றும் மேலும் பல படைப்புக்களை உங்களால் காண முடியும். மேலும் தகவலுக்கு: www.himalayanacademy.com/readlearn/books. இந்த இணையத்தில் இருக்கும் எங்களது வெளியீடுகள் அனைத்தையும் வாசகர்கள் இலவசமாக படிக்கலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பின்வரும் தலைப்புக்கள் உங்களுக்கு விருப்பமானதாக இருக்கலாம். இந்து சமயம் பற்றி 14 கேள்விகள் (*14 Questions People Ask About Hinduism),* விநாயகர் எனது நண்பர் *(My Friend Lord Ganesha),* வீட்டு பூஜை *(Home Puja),* ஹட யோகம் *(Hatha Yoga),* நான்கு உண்மைகள் (*Four Facts),* ஒன்பது நம்பிக்கைகள் (*Nine Beliefs),* நான்கு உட்பிரிவுகள் (*Four Denominations),* இந்து சமயம் என்றால் என்ன? (*What Is Hinduism?),* இந்து இந்தியாவின் வரலாறு *(The History of Hindu India),* பத்து கதைகள் (I & II) *(Ten Tales (I & II)),* இந்துவாக பக்குவம் அடைதல் *(Growing Up Hindu),* இந்து பதின்ம வயதினருக்கு தேவையான வாழ்வியல் திறன்கள் *(Life Skills for Hindu Teens),* நற்பண்புகளை வளர்க்கும் பணிப்புத்தகம் (*A Character Building Workbook).*

பின்வரும் இலவச மின்னஞ்சல் வளங்களை பெறுவதற்கு: www.himalayanacademy.com/email-news/.

- தி மாஸ்டர் கோர்ஸ் தினசரி பாடம்
- மனித நேயத்தின் மிகவும் பழமையான சாத்திரமான வேதங்களில் இருந்து ஊக்கமளிக்கும் தினசரி மந்திரங்கள்
- இந்து சமயத்தில் தலைசிறந்த ஒழுங்குநெறி சாத்திரங்களில் ஒன்றான *திருக்குறளில்* இருந்து குறட்பாக்கள்.
- செய்தியாளர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் உலகெங்கும் ஆர்வத்துடன் இருக்கும் இந்துக்களுக்கு தினசரி செய்தி சுருக்கத்தை வழங்கும் *இந்து பிரஸ் இன்டர்நேஷனல்*
- கவாய் இந்து மடத்தின் மாதாந்திர செய்திமடல்
- இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் பற்றிய செய்திகள்






ஸ்ரீ ஸ்ரீ பரம்ஹன்ஸ் சுவாமி மகேசுவரானந்தா, இன்டர்நேஷனல் ஸ்ரீ டீப் மாதவானந்த ஆசிரம் பெல்லோஷிப்; வியன்னா, ஆஸ்ட்ரியா

லவிங் கணேஷா (அன்பான விநாயகர்) புத்தகத்தை படிக்கும் போது, நான் ஒரு தெய்வீக லோகத்திற்குள் நுழைவதை உணர்ந்தேன் மற்றும் அதிக துடிப்புடன் இருக்கும் இந்த பேரானந்தம் நிரம்பிய தெய்வத்தின் இருப்பு மற்றும் பிரகாசத்தின் மீதும் விழிப்புடன் இருந்தேன். இந்த புத்தகத்தில் சத்குரு சிவாயசுப்பிரமுனியசுவாமி தனது வலுவான அறிவு, தனது ஆழமான இயலுணர்வு மற்றும் விவேகத்தை நிரூபித்து இருக்கிறார். இத்துடன் அவர் சனாதன தர்மத்தின் பாதுகாவலனாகவும், விக்கினங்களின் ஈசுவரனாகவும், கலைகள் மற்றும் அறிவியல்களின் இரட்சகனாகவும், மனிதன் மற்றும் இறைவனுக்கு மத்தியில் நடுவராகவும் இருக்கும் விநாயகரின் மீது தனக்கு இருக்கும் ஆத்மார்த்த பக்தி மற்றும் அன்பையும் நிரூபித்து இருக்கிறார். அவர் நம்முடன் இருக்கும் கடவுளாகவும், நமது உண்மையான நண்பனாகவும், நமது பாதுகாவலர் மற்றும் நலம் விரும்பியாகவும் இருக்கிறார். ஒரு சிறப்பான, தெளிவான மற்றும் பண்பட்ட பாணியில், எளிமையான சொற்கள் மற்றும் புத்துணர்வு அளிக்கும் நுணுக்கமான நகைச்சுவையுடன் வாசகருக்கு விநாயகபெருமான் அறிமுகப்படுத்தப்படுகிறார். விநாயகரின் ஒவ்வொரு அம்சம், தொடர்பு, சின்னம் மற்றும் அதன் பொருள் விரிவாக சிறந்த முறையில் விளக்கப்பட்டுள்ளன. இத்துடன் இரக்க குணமுடைய ஆனைமுக கடவுளுக்கு மரியாதை செலுத்தும் *மந்திரங்கள், பிரார்த்தனைகள்* மற்றும் பூஜைகளும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. பெரிய தொந்தி, சிறிது பருத்த உடல் மற்றும் பகட்டாக ஆனைமுகத்துடன் இருக்கும் விநாயகப்பெருமானைப் பற்றி முழுமையாக அறியாத பலருக்கு, அவர் இந்து சமய தெய்வங்களுள் விசித்திரமானவராக தோன்றலாம். நீங்களும் அந்த பலருள் ஒருவராக இருந்தால், அனைத்து அறிவுகளின் பொருளாளராகவும், பிரபஞ்ச பேரரசராகவும் இருக்கும் அற்புதமான மற்றும் அழகான கணபதியுடன் நெருக்கமான உறவை பெற்று உங்களது கேள்விகள் அனைத்திற்கும் சரியான பதில்களை வழங்குவதற்கு, *அன்பான விநாயகர்* புத்தகம் உங்களுக்கு சரியான நேரத்தில் வந்தடைந்துள்ளது. மிகுதியான தெய்வீக அமுதம், விவேகம் மற்றும் பேரின்பம் பொங்கி வழியும் இந்த அற்புதமான புத்தகத்தை வழங்கிய சத்குருஜி சுப்பிரமுனியசுவாமிக்கு, எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் வாசகர்கள் அனைவரும் மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் இரக்க குணமுள்ள அன்பான விநாயகரின் தெய்வீக பாதுகாப்பிற்கு பாத்திரமாகட்டும்!



ஒய்பி டத்தோஸ்ரீ எஸ்.சாமி வேலு, மலேசிய இந்திய காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர், பொதுப்பணி அமைச்சர்; கோலாலம்பூர், மலேசியா

நான் குருதேவா எழுதிய *அன்பான விநாயகர்* என்ற புதிய புத்தகத்தை வலுவான மனநிறைவுடன் படித்து முடித்தேன். உலகெங்கும் இந்துக்கள் உதவி மற்றும் வழிகாட்டலை வேண்டி விநாயகரை பிரார்த்தனை செய்கிறார்கள். சம்பிராயத பேதமின்றி இந்துக்கள் அனைவரும், அந்த விநாயகரை தங்களது இஷ்ட தேவதையாக கருதி, அவரது உதவியை அனைத்து விஷயங்களிலும் நாடுகின்றனர். இந்த புத்தகத்தில் குருதேவா விசேஷ விளக்கங்களுடன் கூடிய நுண்ணறிவை, ஒரு வலுவான வற்புறுத்தும் பாணியில் வழங்கி இருக்கிறார். இது வலுவாக உணர்ந்து, திடமாக திட்டமிட்டு அழகாக விலக்கப்பட்ட படைப்பு ஆகும். இதை இந்து சமயத்தில் ஆர்வம் உள்ள மாணவர்கள் அனைவரும் படிக்கவேண்டும் என்று பரிந்துரைக்கிறேன். இது வரவிருக்கும் காலங்களில் இந்துக்களின் அறிவு மற்றும் ஆன்மீக வாழ்க்கையில் ஒரு முக்கிய இடம் பிடிக்கும்.



ஸ்ரீ மாதா அம்ரிதானந்தமயி, தலைவர்/நிறுவனர்,
மாதா அம்ரிதானந்தமயி அறக்கட்டளை; கேரளா, இந்தியா

இந்த புத்தகம் விநாயகர் பக்தர்களுக்கு தூண்டுதலை வழங்கி, அவர்களுக்கு அவர்களின் மதத்தின் மீது சிரத்தை மற்றும் அவர் மீது அன்பை வலுப்படுத்தபட்டும்.



பண்டித் சத்யபால் சர்மா, சமஸ்கிருத பண்டிதர், துணை வேந்தர், வேதிக் யுனிவர்சிட்டி ஆப் அமெரிக்கா; சான் டியாகோ, கலிபோர்னியா.

அன்பான விநாயகர் பற்றிய ஒரு வசீகரமான தகவல் களஞ்சியம் மற்றும் அழகான படங்கள், பாடல்கள் மற்றும் கவிதைகள் நிரம்பிய இந்த ஒரு அற்புத புத்தகம், பூமியில் சொர்க்க லோகமாக விளங்கும் ஹவாய் கவாய் ஆதீனத்தின் மதிப்பிற்கரிய சத்குரு மூலம் எழுதப்பட்டது. இந்து உலகின் பிரத்யேக மையமாக விளங்கும் இந்த ஆதீனம், உலகின் பழமையான மற்றும் செழிப்பான சமயமாக இந்து சமயம் விளங்கவேண்டும் என்பதற்காக, சமூகத்தில் இருக்கும் சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கு புதிய ஊட்டம் மற்றும் சக்தியை வழங்க தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. ஆன்மீகம் மற்றும் அறிவியல் ரீதியாக, விநாயகர் மற்றும் அவரது சின்னங்கள் பற்றி குருதேவா வழங்கியுள்ள அழகான ஆய்வு ஈடு இணையற்றதாக விளங்குகிறது. இந்த புத்தகத்தில் ஸ்ரீ சத்குரு தனது இதயத்தில் இருக்கும் கருத்துக்களை தெரியப்படுத்தி இருக்கிறார், மற்றும் இதில் இருக்கும் ஒவ்வொரு சொல்லும் விநாயகர் மற்றும் ஒவ்வொரு மனிதன் மீது இருக்கும் அளவுகடந்த அன்பை முழுமையாக வெளிப்படுத்துகிறது. அவர் இந்து சமயத்தை தவறாக சித்தரிக்கும் தவறான கோட்பாடுகள் அனைத்தையும் அச்சமின்றி நிராகரித்து, தெளிவான மற்றும் திருப்திகரமான பதில்கள் மூலம் சந்தேகங்கள் அனைத்தையும் நீக்குகிறார். அந்த சொற்கள் உண்மையில் அவரது சொந்த அனுபவத்தை பிரதிபலித்து மகிழ்ச்சி, அமைதி மற்றும் பேரின்ப மழையில் ஸ்ரீ விநாயகர் பக்தர்களின் மனங்களை நனைக்கிறது. இது உண்மையில் ஸ்ரீ கணேஷா பற்றிய "தகவல்கள் அனைத்தையும் ஒரு புத்தகத்தில்" அடக்கியுள்ளது. ஆசிரியர் *மந்திரங்களின்* அர்த்தத்துடன், விநாயகர் வழிபாடு மற்றும் சுலோகங்களையும் விளக்கி இருக்கிறார். விநாயகர் மீது அன்பை செலுத்தும் ஒவ்வொரு இந்துவும் ஒரு உண்மையான இந்துவாக உணவுமுறை, உடை, பெயர் மற்றும் கலாச்சாரத்தில் விளங்கவேண்டும் என்று அவர் மனப்பூர்வமாக விரும்புகிறார். அவர் இந்து பெயர்களின் முக்கியத்துவத்தை அழகாக விளக்கி, ஒரு உண்மையான இந்துவாக மாறுவதற்கு கலாச்சாரம் தொடர்பான நேரடி மற்றும் மறைமுக குறிப்புக்களை வழங்கி இருக்கிறார். இந்துவாக மாற விரும்புவோரை வரவேற்கும் ஸ்ரீ சத்குரு, இந்து தர்மத்திற்கு

மாறுவதற்கு வழியையும் விளக்கி இருக்கிறார். சிறு குழந்தைகளுக்கான விநாயகர் பற்றிய புதிர்கள், இந்த புத்தகத்திற்கு அழகு சேர்கிறது. ஆனால் குருதேவாவிற்கு இறைவனால் வெளிப்படுத்தப்பட்டு, புத்தகத்தின் ஆன்மாவாக விளங்கும் அந்த மூன்று கடிதங்கள், மனித நேயத்திற்கு பலன் தரும் பொருட்டு சொல் பிறழாமல் படியெடுக்கப்பட்டுள்ளன. “எனது பார்வையை கடந்த
லோகத்தில் இருக்கும் அரக்க உலகங்களில் நீங்கள் பின்வாங்கும் போது திகைத்து நிற்கும் நான், நீங்கள் திரும்புவீர்கள் என்ற நம்பிக்கையுடன் காத்து இருக்கிறேன்.” விநாயகரின் இந்த வார்த்தைகள் ஊக்கமளித்து, தூண்டுதலை வழங்கி உறுதி அளிப்பதாக இருக்கின்றன! இந்த கடிதங்கள் இதயத்தை உருக்கி கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றன.



திரு ம. ஆறுமுகம், தலைவர், சிவ தொண்டன் நிலையம் (யோகசுவாமி மையம்); லண்டன், ஐக்கிய இராச்சியம்.

விளக்கப்படங்கள் நிரம்பிய இந்த புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள விநாயகர் உருவங்கள், சின்னங்கள் மற்றும் பண்டிகைகளின் தத்துவம் மற்றும் பொருளை புரிந்துகொள்ளும் இந்துவிற்கு, தனது மதம் மற்றும் விநாயகர் மீது பக்தி கூடுகிறது. இந்துவாக மாற விரும்புபவர்கள் மற்றும் மேற்கத்திய நாடுகளில் இருக்கும் மற்ற மதத்தவர்கள் சைவ உணவு, அகிம்சை, கர்மவினை, மறுபிறவி மற்றும் இந்து மதத்தின் மற்ற கோட்பாடுகளைப் பற்றி அறியும் ஆர்வத்துடன் இருக்கிறார்கள் மற்றும் இந்த குழுவினரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இந்த புத்தகம் அவர்களுக்கு பயனுள்ள தகவலை வழங்கி, இந்து மதம் மற்றும் இந்து மத வழிபாடு பற்றிய தவறான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், அவற்றை நீக்க விளக்கங்களையும் வழங்குகிறது. இந்தியா மற்றும் இலங்கையில் இருக்கும் தொடர்புகளை துண்டித்துக்கொண்டு, மேற்கத்திய உலகில் வாழும் பெருந்திரளான இந்துக்கள் தங்கள் மதத்தைப் பற்றி தங்களை புதுப்பித்துக்கொள்ளவும், வளம் பொருந்திய தங்கள் கலாச்சாரத்தை நினைத்து பெருமிதம் அடையவும் இந்த புத்தகம் துணை புரிகிறது. வேதங்கள், பகவத் கீதை, மகாபாரதம், திருமந்திரம், திருக்குறள், ஔவையார், யோகசுவாமி மற்றும் மற்ற சாத்திரங்களில் இருந்து பெறப்பட்ட பல

மேற்கோள்கள் மூலம், இந்த புத்தகம் பண்டிதர்கள் மட்டும் அறிவாளிகள் படிப்பதற்கு உகந்த இந்து சமய புத்தகமாகவும் ஒரு இலக்கிய படைப்பாகவும் விளங்குகிறது. பல சொற்கள் மற்றும் சொற்றொட்களுடன் இருக்கும் சொற்களஞ்சியம் பகுதி, இந்த நூலை நன்றாக புரிந்துகொள்வதற்கு துணை புரிகிறது. இந்த புத்தகம் ஒவ்வொரு இந்து வீடு மற்றும் நூலகத்தில் நிச்சயம் இடம் பிடிக்கவேண்டும்.




டாக்டர் தீன்தயாள் கண்டேல்வால், தலைவர், இயக்குனர் குழுமம், இந்து யுனிவர்சிட்டி ஆப் அமெரிக்கா, ஆர்லாண்டோ, புளோரிடா

இந்த புத்தகத்திற்கு தேவையான தகவல்களை ஒன்று திரட்டியதன் மூலம், சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி ஒரு சிறப்பான தகவல் களஞ்சியத்தை தயார் செய்து இருக்கிறார். இது குறிப்பாக இந்து சமயத்தில் ஆர்வம் இருக்கும் மேற்கத்திய நாட்டவர்கள் மற்றும் மேற்கத்திய நாடுகளில் வளரும் இரண்டாம் தலைமுறை இந்திய இந்துக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். பலருக்கு தெரியாத விநாயகரின் பல்வேறு அம்சங்கள், இந்த புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் விநாயகர் மீது வாசகர்களின் நம்பிக்கை வலுப்பட்டு, அகத்தின் ஆழத்தில் இருந்து அந்த தெய்வத்தை பிரார்த்திப்பதால், அவர்களுக்கு நல்ல பலன்களும் கிடைக்கின்றன. விநாயகர் பற்றிய பல்வேறு தகவல்களுடன், மக்களுக்கு பொதுவாக தேவைப்படும் மற்ற விஷயங்கள் மீதும் சுவாமிஜி கவனம் செலுத்தி இருக்கிறார். இவை அனைத்தும் வாசகர்கள் மனங்களில் தெளிவான இந்து சமய சிந்தனையை வளர்த்து, அன்றாட வாழ்க்கைகளில் அவர்கள் அதிக முக்கியமான விஷயங்களை ஏற்றுக்கொள்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.



ஜார்ஜ் ஃபியூயர்ஸ்டீன், Ph.D., *என்சைக்கிலோபிடிக் டிக்சனரி ஆப் யோகா அண்டு ஹோல்நெஸ் அண்டு டிரான்சென்டன்ஸ்* என்ற புத்தகத்தின் ஆசிரியர், லோயர் லேக், கலிபோர்னியா

உலகெங்கும் மில்லியன் கணக்கான இந்துக்கள் விக்கினங்களின் ஈசுவரனாக இருக்கும் விநாயகரை ஆவாகனம் செய்கிறார்கள். இந்த புத்தகத்தை மில்லியன் கணக்கில் இருக்கும் இந்துக்கள் படித்து, மதிப்பிற்குரிய ஆசிரியரின் அறிவு, விவேகம் மற்றும் மனிதாபிமான அன்பின் மூலம் பயன்பெற வேண்டும். விநாயகர் பற்றி தங்களது புரிதலையும், அவர் மீது தங்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும் வலுப்படுத்த விரும்புவோருக்கு இது செழிப்பை சித்தரிக்கும் ஒரு அற்புத சின்னமாக விளங்கும். இது ஒரு உயர் தரமான, யதார்த்தமான மற்றும் படிப்பதற்கு இனிய தொகுப்பாக இருக்கும்.



ஸ்ரீ ஓம் பிரகாஷ் சர்மா, தலைவர், நேஷனல் கவுன்சில் ஆப் இந்து டெம்பிள்ஸ்; வால்வர்ஹாம்ப்டன், ஐக்கிய இராச்சியம்.

சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி எழுதிய *அன்பான விநாயகர்* என்ற புதிய புத்தகத்தை நான் முழுமையாக படித்து முடித்த போது, அது நமது சாத்திர சம்பிரதாயத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பில் இருப்பதாக தோன்றியது. சிறப்பாக எழுதப்பட்டு இருக்கும் இந்த புத்தகம் இந்து சமயத்தை வாசகருக்கு ஒரு எளிய முறையில் வழங்குகிறது. அன்பான விநாயகர் புத்தகம் ஒவ்வொரு நூலகம் மற்றும் இந்து வீட்டில் கண்டிப்பாக இருக்கவேண்டும். இந்த புத்தகத்தை பெருமளவில் வாங்கி பக்தர்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்று ஐக்கிய இராச்சியத்தில் இருக்கும் இந்து கோயில்களின் மன்றத்திற்கு பரிந்துரைக்க இருக்கிறேன்.



திருமதி பாட்ரிசியா மொனாகோ, எம் ஏ, ரேவியூயர் பார் NAPRA ரேவியூ (நியூ ஏஜ் பப்ளிஷிங் அண்டு ரிடைலர்ஸ் அல்லியன்ஸ்), ஓர்காஸ், வாஷிங்டன்

தான் கற்பிக்கும் விஷயத்தில் தனக்கு இருக்கும் உண்மையான பேரார்வத்தை தனது மாணவர்களுக்கு வழங்கும் திறமையை, அரிய மற்றும் மதிப்பிற்குரிய ஆசிரியரான

சத்குரு பெற்று இருக்கிறார். அவர் ஆற்றல்மிக்க மென்மையான ஆனைமுக கடவுளாக இருக்கும் விநாயகர் மீது இந்துவின் பக்தியை எளிமையாகவும் சரளமாகவும் விளக்குகிறார். இதை ஒரு அறிவுறுத்தலாக அல்லது ஒரு அன்புள்ள அஞ்சலியாக கருதலாம். ஆனால் இந்து தெய்வங்களில் முதன்மையானவரைப் பற்றி வெறும் தகவலை மட்டுமின்றி, அறிவையும் பெற விரும்புவோருக்கு அன்பான விநாயகர் புத்தகம் ஒரு விசாலமான மூலப்புத்தகமாக விளங்குகிறது.



ஸ்ரீ ஸ்ரீ சுவாமி பிரஞானந்த், நிறுவனர் மற்றும் உபயதாரர், சாய் பிரஞா தம், விஷ்வ மாதா காயத்ரி அறக்கட்டளை, டில்லி, இந்தியா; பிரஞா மிஷன் இன்டர்நேஷனல; புது டில்லி, இந்தியா

சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி எழுதிய *அன்பான விநாயகர்* புத்தகம், விநாயகருக்கு எழுதப்பட்ட படைப்புக்களில் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. இது அவரைப் பற்றிய ஒவ்வொரு அம்சத்தையும் கருத்தையும் தவறாமல் விளக்கி இருப்பதால் மிகவும் விசாலமாக இருக்கிறது. விநாயகர் தனது பல்வேறு கடமைகளை செய்ய எதை பயன்படுத்துகிறார் மற்றும் ஒரு வாசகர் தனது தேவை நிறைவேறுவதற்கும் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கும் எந்த வடிவத்தை தேர்ந்து எடுக்கவேண்டும் என்பதையும் ஒவ்வொரு விளக்கப்படமும் விளக்குகிறது. அதனால் விநாயகரின் பல்வேறு தோரணைகள் மற்றும் *பாவனைகளை* சித்தரிக்கும் 32 வடிவங்களின் விளக்கப்படங்கள் காரணமாக, இந்த புத்தகம் வாசகர் மனதை கவர்வதோடு பயனுள்ளதாகவும் இருக்கிறது. மற்ற படங்கள் மற்றும் விளக்கங்களுக்கு மத்தியில் இருக்கும் ஜப மந்திரங்கள் மூலம் இந்த புத்தகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த புத்தகம் எல்லாம் ஒன்றாக கலந்து, கைக்கு அடக்கமாக, வசீகரமாக, அற்புதமாக மற்றும் அதிக பயன்கள் நிரம்பியதாக இருக்கிறது. இந்து மதம் உலகின் தலைசிறந்த மதமாக விளங்குகிறது என்ற விசாரம் காரணமாக வாசகர் மனங்களில் இருக்கும் சந்தேகங்கள் நீங்குகின்றன. இது உண்மையாகவும், ஊக்கம் தருவதாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகிறது. “இந்து சமயத்தில் எல்லோருக்கும் ஒரு இடம் இருக்கிறது,” என்ற விளக்கம், இந்து சமயத்தைப் பற்றிய மிகவும் துல்லியமான மற்றும் பொருத்தமானதாக இருக்கிறது. அந்த விளக்கம் பிரபஞ்சம் முழுவதற்கும்

பொருந்துகிறது. சனாதன தர்மம் என்கிற இந்து தர்மமானது முழுமையான மன அமைதி, பொறுமை, அகிம்சை, பரஸ்பர பகிர்வு, தியாகம் மற்றும் சமூக ஒருமையை பரிந்துரைக்கிறது. இது "வசுதைவ குடும்பகம்" அல்லது "பிரபஞ்சம் முழுவதும் ஓர் குடும்பம்" என்பதை வலியுறுத்துகிறது. இறைவன் என்பவர் எங்கும் நீக்கமற நிறைந்து, வால்றிவனாக மற்றும் சர்வவல்லமை படைத்தவராக இருக்கிறார். *ஆத்மன்* மற்றும் பரமாத்துமன், ஆன்மா மற்றும் மகாதேவர்கள் பற்றிய உண்மை மற்றும் மரணத்திற்கு பிறகு இறைவனை அடையும் முறையைப் பற்றி அறிவதற்காக, இந்து ரிஷிகள் தங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார்கள். இந்து சமயம் என்பது சுய-ஒழுக்கம் மற்றும் சுயநலமின்மையை குறிக்கிறது. அதிக வேதனை தருவதாக இருக்கும் பிறப்பு மற்றும் இறப்பு அல்லது *ஜென்ம* மற்றும் *ம்ருத்யுவில்* இருந்து விடுதலை அளிக்கும் *மோக்ஷம்* என்கிற முடிவான இலக்கை அடைவதற்காக, இந்து சமயம் பல்வேறு வழிகளை வழங்குகிறது. இந்த புத்தகத்தை முழுமையாக படித்த பிறகு, குருதேவா சுப்பிரமுனியசுவாமி ஒரு சாதாரண எழுத்தாளர் இல்லை என்பதையும், அவர் ஈடு இணையற்ற அறிவோடு நவீன சாதுக்களின் மத்தியில் ஒரு அரிய சாதுவாக இருக்கிறார் என்பதையும் நான் உணர்ந்தேன். அவர் எனக்கு கடந்த பதினைந்து ஆண்டு காலமாக ஒரு நண்பராக இருக்கிறார். அவர் சைவ சமயத்திற்கு தன்னை அர்பணித்துக்கொண்டு, பூலோகம் முழுவதும் சைவ சமயம் பரவுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார். அவர் சிவபெருமானின் உருவமாக இருப்பதால், அவர் இதயத்தில் சிவபெருமானும் விநாயகரும் வாசம் செய்கின்றனர். விநாயகருடன் ஐக்கியமாகி, அவருடன் நேரடி தொடர்பை பெற்ற ஒருவரால் மட்டுமே இத்தகைய ஒரு பெரிய புத்தகத்தை எழுத முடியும்.



திரு ஆர். ராஜதுரை, உலக இந்து சம்மேளனத்தின் செயலாளர், நேபால், சமய போதகர் மற்றும் பதிப்பாளர்; சிங்கப்பூர்

ஹவாயைச் சேர்ந்த சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, தனது சீடர்களில் குறிப்பாக இளைஞர்களுக்கு சமயம் சார்ந்த கல்வியை வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். சமயம் சார்ந்த கல்வியை வழங்குவது,


உலகமெங்கும் இந்து சமூகங்கள் எதிர்கொள்ளும் ஒரு முக்கிய பிரச்சனையாக விளங்குகிறது. இளைஞர்களிடம் இன்று காணப்படும் இந்து சமயம் பற்றிய அறியாமை கவலை தருவதாக இல்லை, ஆனால் அவர்களின் அக்கறையின்மை மற்றும் தாராண்மைவாதம் கவலை தருவதாக இருக்கின்றன. மேற்கத்திய இளைஞர்களைப் போல அல்லாமல், கிழக்கத்திய நாட்டை சேர்ந்தவர்கள் பழங்கால இந்து சமய பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தில் வளர்ந்ததால், அந்த சூழல் அவர்களுக்கு சாதகமாக அமைந்தது. இருந்தாலும் பலர் மேற்கத்திய வாழ்முறைக்கு அடிமையாகி தங்கள் மதம் மற்றும் கலாச்சாரத்திற்கு சிறிதும் பொருத்தமில்லாத ஒரு வாழ்வை வாழ்கிறார்கள். இவற்றை எல்லாம் அறிந்திருந்த சத்குரு, இந்து சமூகத்தின் அனைத்து பிரிவினரின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், பொருத்தமான சமய இலக்கியம் மற்றும் நூல்களை வெளியிட்டு, அதன் மூலம் இந்து தர்மத்தை ஊக்குவிக்க, அவர் தனது வாழ்க்கையில் பெரும்பகுதியை பயன்படுத்தி இருக்கிறார். அவர் துண்டு பிரசுரங்கள், புத்தகங்கள் மற்றும் படங்களை இலவசமாக விநியோகம் செய்யவும் அதிக அளவில் செலவு செய்து இருக்கிறார். இந்த பின்னணியில், *அன்பான விநாயகர்* புத்தகத்தை வெளியிடுவதற்கு சத்குரு கடுமுயற்சி செய்திருப்பார் என்று எனக்கு தோன்றுகிறது. நான் இந்த புத்தகத்தை படிக்கத் தொடங்கியதும், எனக்கு மற்ற விஷயங்களில் ஈடுபாடு ஏற்படவில்லை. இந்த புத்தகம் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருப்பதோடு, அதில் இருக்கும் பெரும்பாலான பக்கங்களில் இருந்து விநாயகரின் தயாள குணம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. குடும்பத்தினர் அனைவரும் படிப்பதற்காக, இந்துக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் இந்த புத்தகத்தை வைத்திருக்க வேண்டும். அதிக சிந்தனை மற்றும் ஆராய்ச்சியின் பலனாக வெளிவந்து இருக்கும் இந்த புத்தகம், விநாயகரின் அனைத்து அம்சங்களை குறிப்பிடுவதோடு இந்து சமயத்தின் முக்கிய அம்சங்களையும் குறிப்பிடுகிறது. இந்த புத்தகத்தில் விசேஷமாக காணப்படும் “ஆசிரியர் அறிமுகத்தைப்” போன்று மற்ற புத்தகங்களில் காண முடியாது. சத்குரு தனது ஆன்மீக அனுபவம் பற்றிய நுண்ணறிவை நமக்கு வழங்கி, விநாயகரை அணுகி அதிக பலன்களை பெறுவதற்கான பாதையை நமக்கு காண்பித்து இருக்கிறார். விநாயகரிடம் இருந்து பெற்றதாக சத்குரு குறிப்பிடும் மூன்று கடிதங்கள் இன்னொரு சிறப்பு அம்சமாக விளங்குகிறது. “விசேஷமான தகவல்கள், ஏற்ற இறக்கத்துடன் கூடிய உரைநடை மற்றும் ஆன்மீக தத்துவம்” என்று அவர் அவற்றை தனது சொந்த வார்த்தைகளால் விளக்கி இருக்கிறார். இதைத் தவிர, இந்த புத்தகம் இந்துக்கள் அறியவேண்டிய பல்வேறு விஷயங்களை வழங்கி இருக்கிறது. இதன் காரணமாக உலகெங்கும் ஆர்வமுள்ள மக்களின் மூலம், இந்த புத்தகம் பரவலாக விரும்பப்படும். நானும் ஒரு ஆசிரியராக கல்வித்துறையில் முப்பது வருடங்களுக்கும் மேலாக பணிபுரிந்து இருக்கிறேன். நான்

வழக்கமாக பள்ளிகளில் பாடம் கற்பித்தது மட்டுமல்லாமல், வாரக்கடைசி மற்றும் விடுமுறை நாட்களின் போது இளைஞர்களுக்கு ஒழுக்கம் மற்றும் சமயம் சார்ந்த கல்வியை கற்றுத்தருவது மற்றும் சமயம் சார்ந்த கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் ஏற்பாடு செய்வதில் பேரார்வத்துடன் ஈடுபட்டு இருந்தேன். *அன்பான விநாயகர்* புத்தகம் விநாயகர் பற்றிய தகவல்களை மட்டும் வழங்காமல், இந்து சமயம் பற்றிய வேறு பல தகவல்களையும் வழங்குவதாக எனக்கு தோன்றுகிறது. சிறப்பாக எழுதப்பட்டு இருக்கும் *அன்பான விநாயகர்* புத்தகம், ஆன்மீக சிந்தனை முத்துக்களை வழங்குகிறது. ஆன்மீக பாதையில் இருக்கும் ஒவ்வொரு சாதகன் மற்றும் இந்து சமயத்தைப் பற்றி அதிகம் அறிய விரும்புவரும், இந்த புத்தகத்தை படிக்க வேண்டும். சத்குருவின் அறிவுறுத்தல்களை தொடர்ந்து படித்து பின்பற்றுவதால், ஒருவரது வாழ்க்கையில் அமைதியும் இணக்கமும் நிச்சயமாக பிறக்கும். விநாயகர் மீது அன்பு செலுத்தி, விநாயகருடன் வாழ்வதால் ஆன்மா அறிவூட்டம் பெறுகிறது, மற்றும் அது அந்த நபருக்கு எல்லோரும் நாடும் அமைதி மற்றும் பெருமகிழ்ச்சியை வழங்குகிறது.



பண்டித் ரீபு தமன் பெர்சாத், விவசாயத் துறை அமைச்சர், கையானா; தலைவர், கையானா இந்து தார்மீக சபை; ஜார்ஜ் டவுன், கையானா

அன்பான விநாயகர் புத்தகம் விநாயகரின் உண்மையான சாரத்தை வெளிப்படுத்தி, இந்து சமய மரியாதையில் அவருக்கு இருக்கும் மதிப்புமிக்க ஆதரவு பற்றிய அறிவியல் மற்றும் ஆன்மீக விளக்கத்தை வழங்கியுள்ளது. சைவ உணவுமுறை மற்றும் ஆயுர்வேதத்தை விளக்கும் பக்கங்கள் பாராட்டுக்குரியவை. சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி மேற்கொண்ட இந்த அற்புத முயற்சிக்கு நான் எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். விலைமதிப்பற்ற இந்த வெளியீடு இந்து உலகில் ஒரு பொக்கிஷமாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.



வாமதேவ சாஸ்திரி (Dr. டேவிட் ஃப்ராவ்லி), வேதாச்சர்யா; *ஆயுர்வேதிக் ஹீலிங், தி ஆஸ்ட்ரோலாஜிக் ஆப் தி சீர்ஸ், காட்ஸ், சேஜஸ் மற்றும் கிங்ஸ்* புத்தக ஆசிரியர்; சாண்டா பே, நியூ மெக்சிகோ

இந்துக்கள் பெரும்பாலும் மற்ற மதம் சேர்ந்தவர்களை புண்படுத்தாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அல்லது நவீனமாக தென்படவேண்டும் என்பதற்காக, தங்கள் தெய்வங்களை மறைத்து வைக்கின்றனர். இதனால் அவர்கள் தங்களது சொந்த மதநம்பிக்கையில் பலவீனம் அடைவது மட்டுமல்லாமல், பிரம்மத்துடன் ஆத்மார்த்த மற்றும் தனிப்பட்ட இணக்கத்தை வழங்கும் ஒப்புயர்வற்ற தெய்வீக பண்பின் இந்த வெளிப்பட்ட சக்திகளின் தொடர்பு, ஆன்மீகரீதியாக ஏங்கிக்கொண்டு இருக்கும் உலகிற்கு மறுக்கப்படுகிறது. *அன்பான விநாயகர்* புத்தகம் இந்த போக்கை சிறப்பாக மாற்றி அமைப்பது மட்டுமில்லாமல், அதை அழிக்கவும் செய்கிறது. இந்த புத்தகம் இந்து சமய தெய்வங்களில் மிகவும் சிறந்தவராகவும் பிரியமானவராகவும், புத்தி மற்றும் சித்திக்கு துணை நிற்கும் கடவுளாகவும், ஆத்மா ஞானம் என்கிற முடிவான ஆன்மீக குறிக்கோள் உட்பட வாழ்க்கையின் அனைத்து குறிக்கோள்களையும் அடைய தேவையான அறிவு மற்றும் திறமையை வழங்கும் விநாயகரை உறுதியாகவும் விவேகமாகவும் அறிமுகப்படுத்தப்படுத்துகிறது. விநாயகர் அவதாரத்தின் அன்பு மற்றும் விநாயகரது ஞானத்தின் வெளிப்பாட்டைப் போன்று *அன்பான விநாயகர்* புத்தகம் அமைந்துள்ளது. இந்த புத்தகம் வாயிலாக விநாயகர் தானே, வாசகருடன் ஒரு கண்டிப்பான ஆசிரியராக இல்லாமல் ஒரு பாசம் நிறைந்த நன்பரைப் போல பேசுகிறார். இந்த புத்தகம் விநாயகரைப் போன்று, ஒருவரது வாழ்க்கை மற்றும் ஆன்மீக பாதையில் இருக்கும் தடைகளை நீக்கி, ஒருவர் தனது சுய *தர்மத்தில்* அச்சமின்றி முன்னேறுவதற்கு தேவையான நுண்ணறிவை வழங்கும் சக்தியை பெற்று இருக்கிறது. இந்த புத்தக பக்கங்களின் வாயிலாக விநாயகர் சரியான தருணத்தில் பூமியில் அவதரித்து இருக்கிறார். விநாயகர் அறிவு மற்றும் சக்தியின் அனைத்து வடிவங்கள் மீதும் வல்லுநராகும் திறமையை வழங்குகிறார். மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படாத தகவல்களின் அதிகரிப்பு மற்றும் தவறாக பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் காரணமாக உலகம் தேக்கநிலையை சந்திக்கும் இந்த தருணத்தில், நம்மை முன்னேற்றி செல்வதற்கும் இந்த சக்திகளை வெளிப்பாட்டின் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லவும் மிகவும் பொருத்தமான தெய்வீக சக்தியாக விநாயகர் விளங்குகிறார். இந்த புத்தகம் தெளிவாக குறிப்பிடுவதைப் போல, இந்து சமயத்தின் விண்வெளிக்காலத்தின் கடவுளாக விநாயகர் விளங்குகிறார். அவரது பிரபஞ்ச அறிவு உலகின் சிறந்த கணினியை மிஞ்சுவதாக இருக்கிறது. அவரது பிரபஞ்ச சக்தி முன்பாக எந்த ஒரு

தொழில்நுட்பமும் துரும்பாக தோன்றுகிறது. அவரது பிரபஞ்ச விளையாட்டு முன்பாக தலைசிறந்த பொழுதுபோக்கும் மந்தமாக பயனற்றதாக தோன்றுகிறது. இருந்தாலும் *அன்பான விநாயகர்* புத்தகமானது விநாயகர் பற்றிய ஒரு புத்தகமாக இல்லாமல், மனிதநேயத்திற்கான நிலையான மதமாக இருக்கும் சனாதன தர்மம் என்கிற இந்து சமயம் பற்றிய புத்தகமாக விளங்குகிறது. இந்த மதம் தற்போது தனது பல்லாண்டு காலத் துயிலில் இருந்து விழித்து எழுந்து, உலகை முறையான ஆன்மீக பாதையில் அழைத்து செல்ல தயாராக இருக்கிறது. குறிப்பாக “ஒரு இந்துவாக மாறுவது எப்படி” என்ற பாடத்தை போன்று, இந்து சமயத்தைப் பற்றி சிறந்த முறையில் அறிமுகத்தை பெறுவதற்கு, இந்த புத்தகம் பல வழிகளை பரிந்துரைக்கிறது. சிவாய சுப்பிரமுனியசுவாமி இந்த புத்தகத்தின் மூலம் இந்து சமயத்தின் நவீன இலக்கியத்திற்கு மேலும் ஒரு பங்களிப்பை வழங்கி இருக்கிறார் மற்றும் இந்து சமயத்தின் தற்போதைய மறுமலர்ச்சியில் அவரது அயராத உழைப்பும் ஒரு பெரும் காரணமாக விளங்குகிறது.

